ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமத் வரவரமுநயே நம:

பேரருளாளன் பெருந்தேவித் தாயார் திருவடிகளே சரணம்

எம்பெருமானார் ஆயிரம்

பகவத் இராமாநுஜர் விஷயமாக ஸ்ரீ உ.வே. காஞ்சீ மஹாவித்வான் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி அருளிச்செய்த வ்யாஸங்களின் தொகுப்பு



ஸ்ரீ ராமாநுஜர் - ஸ்ரீபெரும்பூதூர்

வெளியீடு: ஸ்ரீ காஞ்சீ P.B.A. ஸ்வாமி ட்ரஸ்ட்,
✆ : 98405 78410

ஸ்ரீ :

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்



ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

எம்பெருமானார் ஆயிரம்

ஸ்ரீமதுபயவேதாந்த மஹாவித்வான் காஞ்சீ பிரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசார்ய ஸ்வாமி

எம்பெருமானாரைப் பற்றி எழுதியருளிய

ஆயிரம் விஷயங்களின் தொகுப்பு

வெளியீடு:

ஸ்ரீ காஞ்சீ P.B.A. ஸ்வாமி டிரஸ்ட்,

15/1, பேயாழ்வார் கோயில் தெரு, மனோரஞ்சிதம் அடுக்ககம்,

திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

தொலைபேசி : 044 - 28440311.

விச்வாவஸு மீன விசாகம் (5-4-2026)

விலை : ரூ. 300.00

புத்தகம் அச்சிட நிதி உதவி:
திவான்பகதூர் எம்.ஓ. பார்த்தஸாரதி ஐயங்கார்
சாரிடீஸ், சென்னை

வெளியீடு:
ஸ்ரீ காஞ்சீ **P.B.A.** ஸ்வாமி டிரஸ்ட்,
15/1, பேயாழ்வார் கோயில் தெரு,
மனோரஞ்சிதம் அடுக்ககம்,
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
தொலைபேசி : 044 - 28440311.

அச்சிட்டோர்:
ஆர். என். ஆர். அச்சகம்
19, தாண்டவராயன் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை 600 005
போன் : 044-28441856

எம்பெருமானார் ஆயிரம்

ஸ்ரீமதுபயவேதாந்த மஹாவித்வான் காஞ்சீ பிரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசார்ய ஸ்வாமி

எம்பெருமானாரைப் பற்றி எழுதியருளிய ஆயிரம் விஷயங்களின் தொகுப்பு

1. ஆளவந்தார் திருவடிகளில் ஆச்ரயித்த முதலிகளில் பெரிய திருமலைநம்பி யென்னுமாசிரியர் திருமலை திருப்பதியிலே திருவேங்கடமுடையானடிக் கீழ்க் கைங்கரியஞ் செய்துக் கொண்டு வாழ்ந்து வருகின்றார். அவருடன் பிறந்த பெண் பிள்ளைகள் இருவர். அவர்களுள் ஸ்ரீபூமிப்பிராட்டியாரென்கிற மூத்தவள் ஸ்ரீபெரும்பூதூரில் ஆஸூரி கேசவப் பெருமாளுக்கு வாழ்க்கைப்பட்டிருந்தாள். பெரிய பிராட்டியாரென்கிற இளையவள் மழலை மங்கலத்தில் கமலநயந பட்டரைத் திருமணம் புணர்ந்தாள். இவ்விருவரும் தம்தம் புக்ககங்களிலே வாழுங் காலையில் ஆதிசேஷன் இவ்விருள் தருமா ஞாலத்தைத் தெருள் தருமா ஞாலமாக்குவதற்காக இந்நிலவுலகத்திலே அவதரிக்க வேண்டி, ஸ்ரீபெரும்பூதூரில் ஸ்ரீபூமிப் பிராட்டியாருடைய திருமருவு கருவிலே புகுந்து 'கலியுங் கெடுங் கண்டு கொண்மின்' என்ற ஆழ்வார் பாசுரத்தை ஸார்த்தகமாக்குவதற்குப் பிங்களவாண்டு சித்திரையில் செய்ய திருவாதிரை நன்னாளில் திருவவதரித்தனன்.

2. அறுசமயச் செடியதனை யடியறுக்கவும், அடர்ந்துவரும் குதிட்டிகளை அறத் துறக்கவும், செறுகலியைச் சிறிதுமறத் தீர்த்துவிடவும், தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்தி வைக்கவும், மறையதனில் பொருளனைத்தும் வாய் மொழியவும், மாறனுரை செய்த தமிழ் மறை வளர்க்கவும் அழகாரும் அனந்தாழ்வான் அறமிகுநற் பெரும்பூதூரில் இங்ஙனே ஏழ்பாருமுய்ய வுதித்தருளின நன்னாளானது ஆழ்வார்கள் தாங்களவதரித்த நாட்களிலும் வாழ்வானநாள் நமக்கென்று நாற்றிசையும் கொண்டாட நின்றது.

3. இத்திரு நன்னாளின் சிறப்பை மணவாள மாமுனிகளின் ஒரு சீரிய செய்யுளினால் வெளியிட்டருளியுள்ளார்; அதாவது:–

"சங்கர பாக்கரயாதவபாட்டப்ரபாகரர் தங்கள் மதம்
சாய்வுறவாதியர் மாய்குவரென்று சதுமறை வாழ்ந்திடுநாள்
வெங்கலியிங்கினி வீறு நமக்கிலை யென்று மிகத் தளர்நாள்
மேதினி நஞ்சுமையாறு மெனத்துயர் விட்டு விளங்கியநாள்
மங்கையராளி பராங்குச முன்னவர் வாழ்வு முளைத்திடு நாள்
மன்னிய தென்னரங்காபுரி மாமலை மற்று முவந்திடுநாள்
செங்கயல் வாவிகள் சூழ்வயல் நாளுஞ்சிறந்த பெரும்பூதூர்ச்
சீமானிளையாழ்வார் வந்தருளிய நாள் திருவாதிரை நாளே."

4. இங்ஙனம் தோன்றிய பேராசிரியர் ஆதிசேஷனுடைய அபராவதாரமென்றும் பஞ்சாயுதாழ்வார்களின் ப்ராதுர்ப்பாவமென்றும் விஷ்வக்ஸேநருடைய தோற்றமென்றும் இப்படிப் பலவாறாகப் பெரியோர் பணிப்பர். நூற்றந்தாதியில் "அடையார் கமலத்தலர் மகள்

கேள்வன் கையாழியென்னும் படையோடு நாந்தகமும் படர்தண்டும் ஒண் சார்ங்க வில்லும் புடையார் புரிசங்கமுமிந்தப் பூதலங் காப்பதற்கென்றிடையே யிராமானுசமுனியாயின இந்நிலத்தே" என்னும் இராமானுசநூற்றந்தாதிப் பாசுரத்திலும், "ப்ரதயந் விமதேஷு .... வவ்ருதே பஞ்சபிராயுதைர் முராரே:" என்கிற யதிராஜ ஸப்ததி ஸூக்தியிலும் ஸ்வாமி பஞ்சாயுதாழ்வார்களின் திருவவதாரமென்னும் விஷயம் காட்டப்பட்டுள்ளது.

5. 'விஷ்வக்ஸேநோ யதிபதிரபூத்' என்கிற யதிராஜ ஸப்ததி ஸூக்தியொன்றில் விஷ்வக்ஸேந அவதாரமென்னும் விஷயம் கூறப்பட்டுள்ளது. திருவனந்தாழ்வானுடைய திருவவதார மென்னும் விஷயத்தைப் பற்பல ஆசிரியர்கள் பேசியுள்ளார்கள். ஸ்வாமியின் அந்தரங்க சிஷ்யர்களில் ஒருவரான திருமலை அனந்தாழ்வான் தாமருளிய 'வேங்கடாசல இதிஹாஸமாலா' என்னும் திவ்யக்ரந்தத்தில் திருவனந்தாழ்வானே ஸ்ரீராமானுஜராகத் திருவவதரித்தானென்பதை மிக விரிவாக அருளியுள்ளார். 'ஸ்ரீமத்யாம் பூதபுர்யாம் அதிதரணிதலம் சேஷ ஆவிர்ப்பபூவ' இத்யாதிகள் காண்க.

6. எம்பெருமான் தனது அத்தாணிச் சேவகனும் படுக்கையுமான திருவனந்தாழ்வானை நோக்கி 'நீ நிலவுலகத்திற் சென்று பிறந்து எவ்வுயிரையும் ஸம்ரக்ஷிக்கக் கடவை' என்று நியமித்தருள, அந்த நியமனத்தைச் சிரமேற் கொண்ட ஆதிசேஷன் ஸ்ரீகேசவ ஸோமயாஜிகளுக்குப் புதல்வராகப் பிறந்தானென்பது அவ்விடத்து ஸ்ரீஸூக்திகளின் பொருள்.

7. இப்படியே மற்றொரு சிஷ்யரான வடுகநம்பி அருளிச் செய்த ச்லோகரூபமான யதிராஜவைபவ க்ரந்தத்தில் "சேஷாம்சக: கேசவ யஜ்வதேவ்யாம்" என்றுள்ளது. வேதாந்த தத்துவப் பொருள்களை நிலைநாட்டுதற்காகவும் துர்மதங்களைத் தொலைப்பதற்காகவும் திருவனந்தாழ்வானுடைய அம்சபூதராய்த் தேஜோநிதியான ஒரு மஹான் கேசவ ஸோமயாஜிகளின் தேவியாரிடத்தில் அவதரித்தார் என்பது இந்த ச்லோகத்தின் பொருள்.

8. இவ்வடுகநம்பிகள் தாமே அருளிச் செய்த ஸ்ரீராமாநுஜ அஷ்டோத்தர சதநாம ஸ்தோத்ரத்தில் "பௌத்தத்வாந்த ஸஹஸ்ராம்சு: சேஷரூப ப்ரதர்சக: என்பது இருபத்து மூன்றாம் ச்லோகம். எம்பெருமானுடைய பூர்ண கடாக்ஷ பாத்ர பூதராய் அவர் திறத்துத் தேவு மற்றறியாதே யீடுபட்டிருந்த மஹா ப்ராஜ்ஞரான கருடவாஹந பண்டிதர் பணித்த திவ்யஸூரிசரிதமென்னும் மஹா காவ்யத்தில் பதினேழாவது ஸர்க்கத்தில் ஸ்ரீராமாநுஜ வைபவம் சொல்லுமிடத்து 'பௌஜங்கம் வபுரபஹாய சேஷபோகீ யத்ரூபம் த்ரிபுவநவந்திதம் ஜகாம' (திருவனந்தாழ்வான் தனது உரகவுடலை விட்டொழித்து இராமாநுசமுனியாந் திருவுருவத்தை யடைந்தான்) என்றும் மேலே யாதவப்ரகாசனை நோக்கி ப்ரஹ்மரக்ஷஸ்ஸு கூறினதைக் கூறுமிடத்து "உமது பக்கத்திலிருப்பவனும் லோக ஸம்ரக்ஷணார்த்தமாகத் திருவனந்தாழ்வானுடைய அம்சமாக வந்து திருவவதரித்தவனுமான (ராமாநுஜனென்கிற) இந்த மஹானிடத்தில் நான் அஞ்சுகின்றேன்" என்றும் சொல்லப்பட்டது.

9. வேதாந்ததேசிகன் திருவடியான ப்ரஹ்மதந்த்ர ஜீயர் பணித்த திவ்யஸூரி ஸ்தோத்ரத்தில் 'சைத்ரார்த்ரா ஸம்பவம் விஷ்ணோ: தர்சநஸ்தாபநோத்ஸுகம், துண்டிரமண்டலே சேஷமூர்த்திம் ராமாநுஜம் பஜே' (எம்பெருமானுடைய தர்சனத்தை

ஸ்தாபித்தருளச் சித்திரை மாதத் திருவாதிரையில் தொண்டை நாட்டில் அவதரித்த ஆதிசேஷ மூர்த்தியாகிய ஸ்ரீராமாநுஜரைத் தொழுகின்றேன்) என்று சொல்லிற்று.

10. இராமாநுச நூற்றந்தாதியில் 'நல்லார் பரவு மிராமாநுசன்' என்ற எண்பதாம் பாசுரத்தின் பிள்ளை லோகஞ்சீயர் வியாக்கியானத்தில் 'அநந்த: ப்ரதமம் ரூபம் லக்ஷ்மணஸ்து தத:பரம், பலபத்ரஸ் த்ருதீயஸ்து கலௌ ராமாநுஜ: ஸ்ம்ருத:' என்கிற ஆர்ஷவசனம் உதாஹ்ருதமாகக் காண்கிறது. ('கலௌ! கச்சித் பவிஷ்யதி' என்பதுமொரு பாடம்)

(இங்ஙனே பல ஆசிரியர்கள் ஸ்வாமியை ஆதிசேஷாவதாரமாக அருளிச் செய்திருக்க நூற்றந்தாதியிலும் யதிராஜஸப்ததியிலும் பஞ்சாயுதாவதாரம் விஷ்வக்ஸேநாவதாரம் என்றிப்படி அருளிச் செய்தது ஏன்? என்று சங்கை தோன்றும்; இதற்குப் பெரியார் பகரும் ஸமாதானமாவது–சரித்திர நூல் என்பது வேறு, ஸ்தோத்ரநூல் என்பது வேறு. சரித்திர நூல்களில் அவதார ரஹஸ்யம் உள்ளது உள்ளபடி உரைக்கப்படும்; ஸ்தோத்ர நூல்களிலோவென்னில் கவிகளின் புத்தி சமத்காரத்திற்குத் தக்கபடியும் ஆசிரியரின் ப்ரபாவ விசேஷங்களுக்கு ஏற்றபடியும் பலவகையான வர்ணனைகள் இருக்கக் கூடும். சரித்திர நூல்களால் அறுதியிடப்படுகிற அவதார ரஹஸ்ய தத்துவங்களை ஸ்தோத்ர நூல்களிலுள்ள உக்திகள் உபமர்த்திக்க மாட்டாவென்று.)

11. நாமகரணமும் சாஸ்த்ராப்யாஸமும் க்ருஹஸ்தாச்ரமப்ரவேசமும்: ஆஸூரி கேசவப் பெருமாள் இங்ஙனே தமக்குத் தோன்றிய திருக்குமாரர்க்குத் யதாவிதி ஜாதகர்மம் செய்தருளினார். இச்செய்தியைப் பெரிய திருமலைநம்பி கேட்டருளிப் பரமஸந்தோஷத் துடனே திருமலையில் நின்றும் ஸ்ரீபெரும்பூதூரேற வெழுந்தருளி ஸர்வ லக்ஷண ஸம்பந்நமான திவ்ய சிசுவின் முகவொளியைக் கண்டு வியந்து உள்ளம் பூரித்துப் பன்னிரண்டாம் நாளில் 'ஸ்ரீராமாநுஜன்–இளையாழ்வான்' என்று நாமகரணஞ் செய்தருளினார். மற்றும் அந்நப்ராசன–சௌள– உபநயநாதி ஸம்ஸ்காரங்களுமெல்லாம் காலாகாலங்களிலே நடைபெற்றது. "சொல்லார் தமிழொரு மூன்றும் சுருதிகள் நான்கும் எல்லையில்லா வறநெறி யாவுந்தெரிந்தவன்" என்று அமுதனார் நூற்றந்தாதி யிலருளிச் செய்கிறபடியே ஸாங்கோபாங்க ஸகல வித்யா பாரங்கதராய் ப்ராப்த காலத்திலே க்ருஹஸ்தாச்ரமத்தையும் ஸ்வீகரித்து, பெருமாள் கோயிலுக்கருகான திருப்புட்குழியிலே யாதவப்ரகாசன் என்பானொரு ஏகதண்டி ஸம்ந்யாஸி பூர்வபக்ஷ வேதாந்த க்ரந்த ப்ரவசனம் செய்து போருகிறாரென்று கேட்டு இளையாழ்வார் தாமும் அங்கே யெழுந்தருளி அவர்பக்கல் ச்ரோதாவாய் அந்வயித்திருந்தார்.

12. கோவிந்த பட்டருடைய வரலாறு (எம்பாரைப்பற்றி): இப்படி யாதவப்ரகாசரிடத்தில் ஸ்வாமி வேதாந்தச்ரவணம் செய்து கொண்டிருக்கையில் மழலை மங்கலத்திலிருந்து ஸ்ரீ கோவிந்த பட்டரென்கிற ஆசிரியரும் ஸஹாத்யாயியாக ஸ்வாமியோடே வந்து சேர்ந்தார். இவரே எம்பார் என்று ப்ரஸித்தி பெற்றவர். ஸ்வாமியின் மாதுலரான திருமலைநம்பிக்கு இரண்டு ஸஹோதரிகளென்றும் ஒரு சகோதரி மதுரமங்கலமென்னும் அக்ரஹாரத்தில் வாழ்க்கைப் பட்டிருந்தாளென்றும் கீழே சொன்னோம். தை மாதத்துப் புனர்வஸூ

நக்ஷத்திரத்தில் இப் பிராட்டியீன்ற புதல்வரே எம்பாரென்கிற கோவிந்த பட்டர். இவர் ப்ராப்த காலங்களிலே உபநயநாதி ஸம்ஸ்காரங்கள் பெற்று வேத வேதாங்கங்களை யதிகரித்து மஹாவித்வானாயிருந்தார். ஸ்வாமிக்குத் சிறியதாயார் திருக்குமாரரானவிவர், திருப்புட்குழியில் தமையனார் யாதவப்ரகாசரிடத்தில் வேதாந்தமதிகரிக்கிறாரென்று கேட்டுத் தாமுங்கூட அதிகரிக்க விரும்பி அவ்விடம் வந்து சேர்ந்தாராயிற்று.

13. யாதவப்ரகாசர் அபார்த்தங்கள் கூறுதல்: யாதவப்ரகாசர் மாயாவாதி மதஸ்தராகையாலே வேதாந்த வாக்கியங்களுக்குப் பலவிடங்களில் பொருந்தாத பொருள்களை ப்ரவசனம் செய்து கொண்டிருந்தார். அவற்றைக் கேட்கும் போது பரிதாபம் பொறுக்க முடியாததாயிருக்கும். 'பொருந்தும் பொருள் இதுவன்றோ' என்று இளையாழ்வார் எடுத்துரைப்பதுண்டு. அப்போது ஹுங்காரம் பண்ணி நிற்பர் யாதவர். இப்படியிருக்கையில் ஒருநாள் 'கப்யாஸம் புண்டரீக மேவ மக்ஷிணீ' என்கிற ச்ருதிவாக்யத்திற்குப் பொருள் கூறாநின்ற யாதவர் "குரங்கின் ப்ருஷ்டம் போல் சிவந்த கண்கள்" என்று இகழ்வான பொருளைச் சொல்ல, அது கேட்டுச் சிறிதும் பொறுக்ககில்லாத ஸ்வாமி மிக உஷ்ணமான கண்ணீர் பெருக நின்று "கப்யாஸமென்பதற்கு இப்படியோ பொருள் கூறுவது? கம்பீராம்பஸ்ஸமுத்பூத–ஸும்ருஷ்டநாள–ரவிகரவிகஸிதமானதோர் செந்தாமரைப்பூப் போன்ற திருக்கண்கள் படைத்தவன் என்றன்றோ பொருள்" என்று வ்யுத்பத்திகளை விசதமாகக் கூறி உபபாதிக்க, அதுகேட்ட யாதவர் மிகச் சினந்து "நாம் சொன்னபடியே கேட்டுக் கொண்டிருக்க முடியுமானால் வாசித்திரும்; இல்லையாகில் விட்டுப்போம்" என்ன ஸ்வாமியும் சிந்தை கலங்கி விலகியிருந்தார்.

14. ஸ்வாமியை மாய்க்கும் விரகுபார்த்தல்: இப்படியிருக்கையில் அந்த யாதவப்ரகாசருக்கு ஓர் எண்ணம் தோன்றியது. அதாவது இந்த ராமாநுஜன் விலக்ஷணமான மேதையும் அந்யாத்ருசமான ப்ரதிபையும் பொலிய நின்றான்; இவனால் அத்வைத தர்சநம் குன்றும் போலும்; ஆகவே இவன் முடியும் விரகு செய்வது நன்று– என்று. இதைப்பற்றிப் பலவாறு ஆலோசிக்கையில் இவ்விளையாழ்வானைக் கங்கையில், மணிகர்ணிகையிலே தள்ளி ம்ருத்யு வசமாக்குவதே பாதகமற்ற பணியென்று அறுதியிட்டு, ஒருநாள் ராமாநுஜரை வரவழைத்து 'நீர் இல்லாமல் எங்களுக்கு ஆற்றவொண்ணாதாயிருந்தது. முன்போல் வந்திருந்து மனமொத்து வாசித்து க்ரந்தத்தை அவிச்சிந்நமாக நடத்திப் போரும்' என்று ஸதுபாயமாகச் சொல்லி ஸ்வகோஷ்டியிலே சேரவிட்டுக் கொண்டு பாட ப்ரவசநம் நடத்தி வந்தார் யாதவர். ஏற்கெனவே தாம் எண்ணியிருந்தபடி நிறைவேற்றிக் கொள்வதற்காக ஒரு நாள் கோஷ்டியிலே கங்கா யாத்திரைப் புறப்பாட்டை பிரஸ்தாவித்து ஸ்வாமியுட்பட எல்லாருமிசைந்தவாறே ஸபரிவாரராய்ப் புறப்பட்டார் யாதவர். இளையாழ்வாரும் கோவிந்தபட்டரும் கூடவே செல்லா நின்றார்கள்.

15. கடுகவே யாத்திரை நடவா நிற்கையில் விந்த்ய ப்ரதேசத்தில் போம்போது சில இங்கிதங்களாலே இந்த யாத்திரையின் நிமித்த மின்னதென்றுணர்ந்த கோவிந்தபட்டர் ஓரிடத்திலே இளையாழ்வாரும் தாமுமாய்ப் பின்தங்கி நின்று, செய்தியை ரஹஸ்யமாக ஸ்வாமிக்குத் தெரிவித்து அகன்று போம்படி ஸூசிப்பிக்க, ஸ்வாமியும் அங்கு நின்றும்

அப்போதே தனியே மீண்டெழுந்தருளினார் (யாதவப்ரகாசர் செய்தியைப் பிறகு சொல்வோம்).

16. ஸ்வாமி ஓரிரவிலே கச்சிப்பதி சேர்தல்: நிர்ஜனமும் நிர்ஜலமுமான நீள் காட்டிலே பிரிந்து திரும்பின ஸ்வாமி, அவ்வழியை விட்டுக் குறுக்கே நெடுந்தூரஞ் சென்று ஒரு மரத்தடியிலே நின்று பார்க்க, கண்ணுக்கெட்டினவளவு 'அங்கோர் நிழலில்லை நீருமில்லை' என்னும்படியான நிலைமையாய் ஒருவரும் துணையின்றிக்கே ஆவாரார் துணையென்று அலைநீர்க் கடலுள் அழுந்தும் நாவாய் போல் துளங்கி நின்று வழிதிகைக்கையிலே, எம்பெருமான் இப்படிப்பட்ட பரம ஸாத்விகர்களை விட்டுக் கொடுக்க மாட்டாதானொருவனாகையாலே இவர்க்குத் துணை செய்ய விரும்பி ஒரு வில்லியின் வேடம் பூண்டு வாளும் வில்லுங்கொண்டு மனைவியுடனே முன்னே வந்து தோன்ற, ஸ்வாமியும் அந்த தம்பதிகளைக் கண்டு கலக்கந்தீர்ந்து உள்ளம் தேறிநின்று "நீங்கள் எங்கு நின்றும் வருகிறீர்கள்? எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு அவர்கள் விடை கூறினதாவது – "நாங்கள் உத்தரதேசத்து ஸித்தாச்ரமத்தில் நின்றும் வருகிறோம். ஸத்யவ்ரத க்ஷேத்திரத்தை நோக்கிச் செல்கின்றோம்" – என்று. அது கேட்டு மகிழ்ந்த ஸ்வாமி "ஆகில் நானும் உங்களுடனே அவ்விடத்திற்கு வர நினைக்கின்றேன்; எனக்குத் துணையாயிருக்க முடியுமோ?" என்று கேட்க, "நல்லது, அப்படியேயாகலாம்" என்று அவர்கள் சொல்லி முன்னடியிட ஸ்வாமியும் அவர்களைப் பின் செல்ல, விந்த்யாடவி நீங்கி மாலைப் பொழுதாயிற்று. அப்போது ஓரிடத்திலே தங்கி அநுஷ்டானங்களை முடித்துக் கொண்டு நெடுந்தூரம் நடந்து சென்று பின்பு நள்ளிருளாயிருந்ததனால் மேலே வழி நடந்து செல்ல மாட்டாமல் அங்கே அவர்களோடு கூடவே உபவாஸமாகத் தங்கியிருந்தார் ஓர் மரத்தடியின் கீழ்.

17. ஸ்வாமி கச்சிப்பதி சேர்தல்: அப்போது வில்லியின் மனைவி தாஹம் மேலிட்டுத் 'தண்ணீர் தண்ணீர்' என்று கணவனிடம் கூற, அவனும் "இப்போது தண்ணீர் கிடைக்கவில்லையே; சிறிது போது ஆறியிரு; விடிந்தவாறே நல்ல மதுரமான தீர்த்தம் கிடைக்கும்" என்று சொல்லித் தேற்றினான். அப்போது ஸ்வாமியின் திருவுள்ளம் மிகவும் வருத்தமுற்றது. 'ஐயோ! நமக்கு மஹோபகாரிகளான இவர்களுக்கு நாம் விடாய் தீர்க்கும்படியான தேசமாக இல்லையே!' என்கிற நிர்வேதத்தோடேயே சிறிதுபோது திருக்கண் வளர்ந்திருந்தார். பின்பு கனவிருளகன்று கீழ்வானம் வெள்ளென்று காலையம்பொழுதானவாறே மூவருமெழுந்து வழி நடக்கத் தொடங்க, அந்தத் தம்பதிகளிருவரும் அருகே ஒரு கிணற்றங்கரையிலே அழைத்துக் கொண்டு போய் விட்டு இவரைப் பார்த்து 'அருள்முகிலே! மிகவும் விடாய்த்திருக்கின்றோம்; இக்கிணற்றிலே யிறங்கி அள்ளித் தீர்த்தம் தருவீராக' என்ன, அவரும் உடனே கிணற்றிலிறங்கி இரண்டு திருக்கையாலும் தீர்த்தம் வாரியெடுத்து மூன்று தரம் கொடுக்க, அவர்களும் வாங்கி விடாய் தீரப் பருகி உருக்காட்டாதே யொளிக்க, இவரும் கரையேறி வந்து பார்த்தவாறே எங்குத் தேடியும் அவர்களைக் காணாமல் சுற்றிலுங் கூப்பிட்டுத் திசைகளையுற்றுப் பார்க்கையில் மாடமாளிகைகளும் கோபுரங்களும் விசேஷஜன சஞ்சாரங்களும் காணப்பட

முன்னே, தோற்றின சிலரை நோக்கி இவ்விட மெவ்வூரென்று கேட்க, "புண்யகோடி விமானம் முன்னே தோற்றா நிற்க எவ்வூரென்று கேட்பதென்கொல்? இது சாலக் கிணறன்றோ, கச்சிப்பதியன்றோ" என்று அவர்கள் சொல்ல, ஸ்வாமி மிகவுமாச்சரியப்பட்டு வழித் துணையான வில்லிகளைப் பெருமாளும் பிராட்டியுமாக ப்ரதிபத்திபண்ணி, 'என்கொலம்மான் திருவருள்கள்!' என்று தலைசீய்த்து, 'உருக்காட்டாதே ஒளிப்பாயோ' என்று பலவாறு கூறிப் புலம்பி ஒருவாறு உள்ளந்தேறியெழுந்து சென்று தென்னத்தியூரர் கழலிணைக் கீழ் ஸேவித்து அப்பெருமானது திருவுள்ளத்திற்குப் பாங்காக நித்தியமும் சாலைக் கிணற்றில் நின்றும் திருவாராதனத்திற்குத் தீர்த்தங்கொணர்ந்து ஸமர்ப்பித்து வாரா நின்றார். (சாலைக் கிணறு சாலக்கிணறு–இரண்டுமொக்கும்.)

18. யாதவப்ரகாசரது மேற் செய்தி: இளையாழ்வார் செய்தி இங்ஙனேயிருக்க, இனி யாதவப்ரகாசருடைய செய்தி கேண்மின்; நடுவழியிற் பிரிந்து போன இளையாழ்வாரும் கோவிந்தபட்டரும் வரக்காணோமேயென்று யாதவர் திரளுடனே ஓரிடத்திலே தங்கியெதிர் பார்த்திருக்க, சிறிது போது கழித்து கோவிந்தபட்டர் வந்து சேர, 'வந்தீரோ? இளையாழ்வார் எங்கே?' என்று அவரைக் கேட்க, 'அவரை நான் காணவில்லையே' என்று கூற, யாதவர் சிலவிடங்களில் தேடிப் பார்த்துக் காணாமல், ஐயோ! காட்டிலே என்ன தீங்கு வந்ததோவென்று அனைவரும் வியாகுலராய், பகவத் ஸங்கல்பப்படியாகிறதென்று சொல்லிக் கொண்டே மேலே நடந்து சென்று வழியடைவே கங்கைக்கரை சேர்ந்தார்கள்.

19. கோவிந்த பட்டர் லிங்கங் கொணர்தல்: ஒருநாள் கோவிந்தபட்டர் கங்கையில் நீராடுகையில், அவரது கையிலே ஒரு லிங்கம் வந்து சேர, வியப்படைந்து இஃது என்னென்று யாதவர்க்குக் காட்ட, அதற்கு அவர் பரம ஸந்தோஷத்துடனே 'நீர் தைவஜ்ஞாகையாலே கங்கா ஸ்நாநபலன் கை சேர்ந்தாற்போலே: கங்காதரக் கடவுளே கைபுகுந்தபடி காணும்' என்று சொல்லி இவரிடத்திலே விசேஷ ப்ரதிபத்தியுடனிருந்தார். அன்று முதல் எல்லாரும் கோவிந்த பட்டரை 'உள்ளங்கை கொணர்ந்த நாயனார்' என்று பேரிட்டழைக்கத் தொடங்கினார்கள் (உள்ளங்கை குளிர்ந்த நாயனார் என்பாருமுளர்).

20. யாதவரும் கங்காஸ்நாநம் பண்ணி யாத்திரையை முடித்து மீண்டு ஸ்ரீஜகந்நாதம் அஹோபிலம் வழியாக வர, கோவிந்தர் "இந்த லிங்கத்தை ஒரு உசித ஸ்தலத்திலே பிரதிஷ்டை செய்வித்து வருகிறேன்" என்ன, "அவரும் அப்படியே செய்யும்" என்று விடை கொடுத்தனுப்பி விட்டுத் தாம் பரிவாரங்களுடனே பெருமாள் கோயிலேற வந்து சேர்ந்தார். கோவிந்தரும் தம்முடைய ஜன்மபூமியான மழலை மங்கலஞ் சென்று சேர்ந்து அந்த லிங்கத்தை அங்கே பிரதிஷ்டிப்பித்து, பிறகு காளஹஸ்தி யென்கிற சிவஸ்தலத்திலே சென்று அவ்விடத்திலே சிவபிரானுடையவும் சைவர்களுடையவும் பஹுமானங்களைப் பெற்று அங்கே ஆலய வழிபாடு செய்பவர்களுள் தலைவராய் நின்றார்.

21. யாதவப்ரகாசரும் ராமாநுஜரும்: ஸ்ரீ காஞ்சீபுரியிலே யாதவர் இளையாழ்வாரைக் கண்டு வியந்து மகிழ்ந்து "வாரீர்! விந்த்யாடவியிலே உம்மைக் காணாமையாலே பலவாறு அதிசங்கித்துக் கனக்க க்லேசித்திருந்தோம்; எப்படியோ சுகமாக வந்து சேர்ந்தீரே! இவ்வளவு காணப்பெற்றோமே!" என்று குரல் தழுத்துக் கூற, இவரும் வந்து சேர்ந்த

வரலாற்றை (வில்லிகளின் செய்தியை) உள்ளபடியே யுரைக்க யாதவருங்கேட்டு இவருடையபடி லோக விலக்ஷணமாயிருந்ததென்று உகந்து அவ்விராமாநுசனை மீண்டும் ஸ்வகோஷ்டியிலே கூட்டிக் கொண்டு க்ரந்த ப்ரவசம் நடத்தி வாரா நின்றார்.

22. ஆளவந்தார் கச்சிக்கெழுந்தருளி மீளுதல்: யாத்திரையடைவாகக் காஞ்சீபுரியில் நின்றும் நம்பெருமாள் ஸன்னிதிக்கு இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் சென்று பெருமாளைத் தொழுது ஆளவந்தார் திருவடிகளிலே ஸேவித்து நிற்க, அவரும் வார்த்தா ப்ரஸங்கத்திலே பெருமாள் கோயிலில் விசேஷங்கள் என்னென்று கேட்க, அவர்களும் இளையாழ்வருடைய ஞானப் பெருமை முதலிய வைபவங்களையும் கப்யாஸச்ருதி முதலானவற்றிலே யாதவப்ரகாசரை மேலிட்டுப் பொருள் பணித்த வகைகளையும் எடுத்துரைக்க, ஆளவந்தார் உள்ளம் பூரித்து, இந்தளத்திலே தாமரை பூத்தாற்போலே இவ்விருள் தருமா ஞாலத்திலும் இப்படியொரு மஹாநுபாவர் தோன்றப் பெறுவதே! என்று வியந்து அப்பொழுதே அவரைக் காண வேணுமென்னும் ஆவலுடனே திவ்யதேசங்களை மங்களாசாஸனஞ் செய்து கொண்டே கச்சிப் பேரருளாளன் ஸன்னிதிக் கெழுந்தருளித் திருமலையிலே மங்களாசாஸனம் செய்து, கீழே திருப்புற்றினருகே திருவனந்தாழ்வானையும் கரியமாணிக்கப் பெருமாளையும் ஸேவியா நிற்க, அங்கே யாதவப்ரகாசர் தம் திரளுடனே பெருமாளை ஸேவித்து அவ்விடத்தே ப்ரதக்ஷிணமாக வாரா நிற்க, ஆளவந்தார் தம் அருகேயிருந்த திருக்கச்சி நம்பியை நோக்கி "இத்திரளிலே இளையாழ்வர் யாவர்?" என்று கேட்க, அவரும் "அதோ சிவந்து நெடுகி ஆஜாநுபாஹுவாக வருகிறவர்" என்று காட்ட, ஆளவந்தாரும் திருவுள்ளம் பூரிப்பக் குளிர நோக்கியருளி 'ஆம் முதல்வனிவன்' என்று விசேஷ கடாக்ஷம் செய்தருளி, பேரருளாளப் பெருமாளை நோக்கி 'யஸ்ய ப்ரஸாதகலயா' என்றொரு ச்லோகத்தால் இளையாழ்வார் நம் தர்சந ஸ்தாபகராம்படி அருள் புரிகைக்காகச் சரணாகதி செய்து அப்போது இளையாழ்வார்க்கு ஒரு நல்வார்த்தை சொல்ல அவஸரம் காணாமையாலே மீண்டும் முதலிகளும் தாமுமாகக் கோயிலேற வெழுந்தருளினார்.

23. ப்ரஹ்மரக்ஷஸ்ஸு காட்டின ராமாநுஜர் பெருமை: அக்காலத்தில் கச்சிநகர்ப் பல்லவ மன்னனுடைய பெண் பிள்ளையை ப்ரஹ்மரக்ஷஸ்ஸு பிடிக்க, அதற்கு ஒருபடியாலும் பரிஹாரம் காணாமல் யாதவப்ரகாசர் சிறந்த மந்திரவாதி யென்று கேட்டு ராஜபுருஷர்கள் இவரிடம் வந்து செய்தி கூற, இவரும் 'அந்த ப்ரஹ்மரக்ஷஸ்ஸை நான் போகச் சொன்னதாகச் சொல்லுங்கோள்' என்று நியமிக்க அவர்களுஞ் சென்று அப்படியே சொல்ல, 'நான் தான் அவனைப் போகச் சொன்னதாகச் சொல்லுங்கோள்' என்று ப்ரஹ்ம ரக்ஷஸ்ஸு திரஸ்காரமாகச் சொல்லிவிட அஃதுணர்ந்த யாதவர் சீற்றங் கொண்டு தம் திரளுடனே அரசன் மனையிலே வந்து மஹா மந்த்ரத்தை ஜபித்துக் கொண்டு ப்ரஹ்ம ரக்ஷஸ்ஸருகில் நின்று முஷ்டிபிடிக்க ப்ரஹ்ம ரக்ஷஸ்ஸும் முடக்கின காலை நீட்டி, 'அட யாதவா! நீ ஜபிக்கிற மந்த்ரம் நானறியேனோ?' என்று அந்த மந்திரத்தையுஞ் சொல்லி "அப்பா உன் பிறப்பு வரலாறு நான் சொல்லுகிறேன் கேளாய்; நீ மதுராந்தகத்து ஏரிக்கரையிலேயிருப்பதொரு புற்றிலே ஓர் உடும்பாய் இருந்தாய்; கோயில்

ஸ்ரீவைஷ்ணவர்கள் திருமலைக்கெழுந்தருளும்போது, அங்கே நீராடி யமுது செய்கிற விடத்திலே சிந்தின ப்ரஸாதத்தையும் தீர்த்தத்தையும் நீ உட்கொள்ளப் பெற்றாய். அதனால் வித்வானான ஜன்மம் பெற்றனை. நானோ முற்பிறப்பில் அந்தணனாயிருந்து அரிய பெரிய வேள்வி நிகழ்த்தினவன்; உன் மந்திரத்திற்கா நான் போவேன்? உன் பக்கலில் வீற்றிருக்கின்ற ஆதிசேஷாம்சமான இளையாழ்வார் போகச் சொன்னால் போவேனத்தனை'' என்று சொல்லிற்று. அதுகேட்ட யாதவர் முகத்தில் தேசுகுன்றி இளையாழ்வாரை நோக்கி "நீர் தாம் போகச் சொல்லும்'' என்று கூற, அப்படியே ஸ்வாமி நியமிக்க, அந்த ப்ரஹ்மரக்ஷஸ்ஸு "உமது திருவடித் தாமரைகளை என் தலைமீது வைத்தாலொழிய போவேனல்லேன்'' என்று சொல்லி, அப்படியே ஸ்வாமி திருவடிகளைச் சிரமேற்கொண்டு மகிழ்ச்சியெய்தி தண்டனிட்டு இதோ போகிறேன் என்று சொல்லிக் கொண்டே, போனமைக்கு ஓரடையாளங்காட்டிப் போயற்றது. யாதவரும் இளையாழ்வாரை மிகவும் புகழ்ந்து கொண்டாடிக் கொண்டே மடம் சென்று சேர்ந்தார்.

24. ஸ்ரீரங்கத்தில் ஆளவந்தாருடைய சிந்தனை: நம்பெருமாள் ஸந்நிதியில் ஆளவந்தார் திருவாய்மொழி காலக்ஷேபம் நிர்வஹித்தருளா நிற்கையில் 'ஒன்றுந்தேவிலே' 'இலிங்கத்திட்ட புராணத்தீரும்' என்கிற பாசுரம் நடவாநிற்க, 'நமக்குப் பின்பு இத்தர்சனம் நிர்வஹிப்பாரொருவரையும் காணப் பெற்றிலோமே!' என்கிற விசாரம் அப்போது அதிகமாகி இளையாழ்வாரிடத்திலே திருவுள்ளஞ் சென்று "இவரை யாதவ ப்ரகாசனோடே உறவறுத்து நம்மோடே சேர்க்கும் உபாயமொன்றில்லையே!'' என்று கோஷ்டியிலே நிர்வேதத்தோடே யருளிச் செய்து பின்னையும் பேரருளாளனைக் குறித்து திக்கு நோக்கி அஞ்சலி செய்து "ஏற்கனவே அடியேன் பண்ணின ப்ரபத்தியை ஸபலமாக்கியருள வேணும்'' என்று மிகவும் வேண்டினர்.

25. ராமாநுஜர் யாதவரை விட்டு விலகித் திருக்கச்சிநம்பிக்கு அணுக்கராயிருத்தல்: ஆளவந்தாருடைய அந்தரங்க ப்ரபத்தி விரைவில் பலிக்க வேண்டிய காலம் வந்து விட்டபடியால் ஒரு நாள் யாதவப்ரகாசருக்கும் இளையாழ்வார்க்கும் உபநிஷதர்த்த விசாரத்தில் போராட்டம் வலுத்தது. அன்று விசிஷ்டாத்வைத ஸித்தாந்தக் கோட்பாட்டை ஸ்வாமி வெகு அற்புதமாக எடுத்து உபந்யஸிக்க வாய்த்தது. அப்போது யாதவர் ப்ரத்யாக்யான மொன்றும் பண்ண முடியாத தன்மையினால் அளவிறந்த சீற்றங் கொண்டு 'இன்று தொடங்கி நீர் என்னிடம் வாசிக்க வேண்டா: உம்முடைய புத்திக்குத் தகுதியானவிடத்தே சென்று வாசித்துக் கொள்ளும்' என்று மறுத்துவிடவே, இதையே சுபநிமித்தமாகத் திருவுள்ளம்பற்றி உவந்த வுள்ளத்தரான இளையாழ்வார் தமது திருத்தாயார் பக்கலிலே இச்செய்தியைத் தெரிவிக்க அவளும் நெஞ்சு கனிந்து 'பிள்ளாய்! இதுகாறும் வாசித்தது போதும்; திருக்கச்சி நம்பிகள் பேரருளாளப் பெருமாளுக்கு அணுக்கராயிரா நின்றார்; அவரை யநுவர்த்தித்துக் கொண்டு அவர் சொல்வழுவாது ஒழுகுவது பாங்கு' என்று நியமிக்க, ஸ்வாமியும் அப்படியே நம்பிகளை அடிபணிந்து அவருடைய நியமனத்தினால் பண்டு போல சாலக் கிணற்றில் நின்றும் நாடோறும் ஒரு குடம் திருமஞ்சனம் கொணர்ந்து தேவப் பெருமாளுக்கு ஸமர்ப்பித்து வருபவராயிருந்தார்.

26. ராமாநுஜரை ஸ்ரீரங்கத்திற்கழைத்துச் செல்லப் பெரிய நம்பி வருதல்: கோயிலில் ஆளவந்தார் திருமேனி நோவு சாத்தி 'சாயலொடு மணிமாமை தளர்ந்தேன் நான் இனியுனது வாயலகிலின்னடிசில் வைப்பாரை நாடாயே' என்ன வேண்டும்படியான நிலைமை யெய்தியிருந்தார். அப்போது ஸ்ரீகாஞ்சீபுரியில் நின்றும் யாத்திரை யடைவே அவ்விடத்திற்கு வந்த இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்களை நோக்கி இளையாழ்வாருடைய செய்தி என்னவென்று விசாரிக்க, ஸ்ரீராமாநுஜர் சில நாளாக யாதவப்ரகாசரை வெறுத்து விட்டிட்டுத் திருக்கச்சிநம்பி பக்கலிலே ப்ரவணராய்த் தேவப் பெருமாளுடைய கைங்கர்யத்திலே ஊன்றி யிருக்கிறாரென்று அவர்கள் சொல்லக் கேட்டு ஆளவந்தார் மிகவும் திருவுள்ளமுகந்து தம்முடைய அந்தரங்க ப்ரபத்தியைப் பேரருளாளன் விரைவிலே ஸபலமாக்கியருளினபடிக்கு உவந்து தமது அந்தரங்க சிஷ்யரான பெரியநம்பியையழைத்து இச்செய்தியைச் சொல்லி 'நீர் சடக்கெனத் தென்னத்தியூரர் கழலிணைக்கீழே சென்று எப்படியாவது இளையாழ் வாரை யிங்கே யழைத்து வரவேணும்' என்று நியமித்து, ஸ்தோத்ர ரத்நத்தின் அநுஸந்தானத்தைத் துணை கொள்ளும்படிக்கும் ஸூசிப்பித்துப் பெருமாள் கோயிலுக்குப் போக விட்டார். பெரிய நம்பியும் ஸ்வாசார்ய நியமனத்தை சிரஸாவஹித்து உடனே புறப்பட்டுக் காஞ்சீபுரி வந்து சேர்ந்தார்.

27. பெரிய நம்பியும் ராமாநுஜரும்: தமக்கு ஸப்ரஹ்மசாரியான திருக்கச்சி நம்பி அவ்விடத்தில் எழுந்தருளியிருக்கின்றமை யறிந்து அவர் பக்கலிலே சென்று சேர்ந்து தாம் வந்த காரணத்தைத் தெரிவித்து அவரை முன்னிட்டுக் கொண்டு பேரருளாளன் ஸந்நிதிக்குச் சென்று மங்களாசாஸனம் செய்து அப்போது இளையாழ்வார் சாலக் கிணற்றுக்குச் சென்றிருப்பதாகவும் தீர்த்த கும்பத்துடனே திரும்பி வருகிற ஸமயமணித்தென்றும் தெரிந்து கொண்டு அபிமுகமாக வெழுந்தருளி அவர் வரும் வழியிலே ஓரிடத்திலிருந்து கொண்டு செவிக்கினிய கம்பீர மதுரஸ்வரத்துடனே ஸ்தோத்ர ரத்னத்தை அநுஸந்தித்துக் கொண்டிருக்கையில், இளையாழ்வாரும் திருமுடிமேல் திருநீர்க்குடத்துடன் வருபவராய் அப்போது பெரியநம்பியின் அநுஸந்தானத்திலிருந்த 'ப்ரஹ்மா சிவச் சதமக: பரமஸ்வராடிதி ஏதேபி யஸ்ய மஹார்ணவ விப்ருஷஸ்தே' என்கிற ச்லோகத்தைத் திருச்செவிசாத்தி 'இது யாருடைய திவ்ய ஸூக்தி?' என்று நம்பியை நோக்கிக் கேட்க, அவரும் 'இது ஆளவந்தாருடைய திவ்யஸூக்தி' யென்றுரைக்க, 'ஆகில் அவரை அடியேன் ஸேவிக்க வேணுமே' என்று இளையாழ்வார் கூற, 'ஆகலாம்; நம்மோடே வந்து ஸேவிக்கலாம்' என்று பெரிய நம்பி பணிக்க, இருவரும் தொல்லையின்பத்திறுதி கண்டவர்களாய் வார்த்தையாடிக் கொண்டே ஸன்னிதியிற் சென்று சேர்ந்தார்கள். இளையாழ்வார் திருமஞ்சனத்தைப் பெருமாளுக்கு ஸமர்ப்பித்துவிட்டு நியமனமும் பெற்றுக் கொண்டு திருக்கச்சி நம்பியின் அநுமதியையும் பெற்றுப் பெரிய நம்பியுடனே புறப்பட்டுத் திருவரங்கம் பெரிய கோயிலேறச் செல்லாநின்றார்.

28. ஆளவந்தார் திருநாட்டுக்கெழுந்தருளுதல்: பெரிய நம்பியைப் பெருமாள் கோயிலுக்குப் போகவிட்ட பிறகு சில நாளளவிலே ஆளவந்தார் திருமேனியிலே அநாரோக்யம் அதிகரித்துத் திருநாட்டுக்கெழுந்தருளும் ஸந்நிவேசமாயிற்று. மிக்க

தளர்ச்சியோடே ஸன்னிதிக்கெழுந்தருளி அமலனாதிபிரானனுஸந்தானத்துடனே பெரிய பெருமாளைத் திருவடித்தொழுது வரிசைகளும் பெற்று நலமந்த மில்லதோர் நாடுபுக நியமனமும் பெற்று மடமேற யெழுந்தருளி உபநிஷத்துக்களையும் அருளிச் செயல்களையும் முதலிகள் ஸேவிக்கத் திருச்செவி சாத்திக் கொண்டேயிருந்து அந்தமில் பேரின்பத்தடியரோடிருந்து களிக்க வேண்டி மணக்கால் நம்பிகளின் திருவடிகளைச் சிந்தித்துக் கொண்டே ப்ரஹ்மரந்த்ரத்தாலே திருநாட்டுக்கு எழுந்தருளினார். திருவரங்கப் பெருமாளரையர் முதலான எல்லாரும் வேரற்ற மரம்போல விழுந்து துடிக்க, அங்குள்ளார் இவர்களைத் தேற்றி ஆளவந்தார் குமாரரான பிள்ளைக்கரசு நம்பியை நோக்கி மேல் நடைபெறவேண்டிய கைங்கரியங்களுக்கு உத்யோகிப்பிக்க, ஆளவந்தர்படியென்று இன்றைக்கும் வழங்கி வருகிற விலக்ஷண ப்ரக்ரியையிலே சடங்குகளையெல்லாம் நடத்தி, திருக்கரம்பன் துறையிலே திருப்பள்ளிப் படுத்துவதாக திவ்யமங்கள விக்ரஹத்தை ப்ரஹ்மரதத்திலே யெழுந்தருளப் பண்ணிக் கொண்டு வந்தாயிற்று. பெரியநம்பி இளையாழ்வாருடனே திருக்காவிரியின் ஸமீபமாக எழுந்தருளுகிற ஸமயமும் மேலே குறித்த ஸந்தர்ப்பமும் ஒத்திருந்தது.

29. ராமாநுஜர் ஆளவந்தாருடைய சரமத் திருமேனியை ஸேவித்தல்: பெரியநம்பி திருக்கரம்பன் துறையிலே பெரிய திரளைக் கண்டு எதிரே வருகிறவர்களை நோக்கி என்ன விசேஷமென்று கேட்க, அவர்களும் ஆளவந்தார் திருநாட்டுக் கெழுந்தருளினாரென்ன, அது கேட்ட இருவரும் மூர்ச்சித்து கிலேசித்து, 'விமலசரம விக்ரஹத்தையாகிலும் ஸேவிக்கப் பெற்றோமே' யென்று தேறியெழுந்து அருகே வந்து சேர்ந்து கண்பனி சோர நின்று ஸேவிக்கையில், இளையாழ்வார் அந்த சரமத் திருமேனியை ஆபாதசூடமாக ஸேவித்து வருபவர், திருக்கையில் மூன்று விரல்கள் முடங்கியிருக்கக் கண்டு "முன்னும் இப்படியுண்டோ? இப்போது தானோ?" என்று முதலிகளைக் கேட்க, அவர்களும் "முன்பில்லை; இப்போது கண்டதித்தினை" என்ன; இளையாழ்வாரும் இவர் திருவுள்ளத்திலே ஏதேனும் குறைகளுண்டாயிருக்க வேணுமென்று கருதி, முதலிகளைப் பார்த்து "முன் வியாக்கியான ஸமயங்களிலே அபிமத ஸல்லாபங்களைக் கேட்டிருப்பீர்களே: திருவுள்ளத்திலோடியிருப்பன சில அறியப் பெற்றதுண்டோ?" என்று கேட்க, அவர்களும் மூன்று விஷயங்களைத் தெரிவித்தார்கள் – 1. ப்ரஹ்மஸூத்ரத்திற்கு விசிஷ்டாத்வைத மதாநுஸாரியான பாஷ்யம் அவதரிக்க வேணுமென்கிற விருப்பமும், 2. நம்மாழ்வாருடைய திருவாய்மொழிக்கொரு வியாக்கியானமவதரிக்க வேணுமென்கிற விருப்பமும், 3. வ்யாஸபராசரர்களிடத்திலே க்ருதஞ்ஜதாநுஸந்தானம் நெடுகச் செல்லும்படியான காரியமொன்று நடைபெற வேணுமென்கிற விருப்பமும் ஆக இம்மூன்று வாஞ்சைகளே திருவுள்ளத்தில் குடிகொண்டிருந்தனவாக அறிவோம்; வேறொன்றுமறியோம்–என்றார்கள்:

30. ராமாநுஜர் காஞ்சீபுரம் சேர்ந்து வாழ்தல்: ஸ்வாமி இதைக் கேட்டதும் தண்டனிட்டுக் கைகூப்பி நின்று "இவ்வுடல் திடமாய் ஆசார்யக்ருபையும் அடியேனிடத்தில் பரிபூரணமாயிருந்து ஸர்வேச்வரன் அடியேன் நினைத்தபடி கூட்டுவானாகில் இம்மூன்றையும் நிறைவேற்றக் கடவேன்" என்ன; முடங்கியிருந்த மூன்று திருவிரல்களும்

உடனே நிமிர, இதனை அனைவருங் கண்டு ஆச்சரியப்பட்டு "இளையாழ்வீர்; இவ்வாசார்ய க்ருபையும் உம்மிடத்திலே கூடும்; நீரே இந்த தர்சனத்திற்கு நிர்வாஹகராவீர்" என்று மங்களாசாஸனம் செய்து கூறினார்கள். ஸ்வாமியும் அந்த திவ்யமங்கள விக்ரஹத்தைக் கண்ணிலும் நெஞ்சிலும் தேக்கிக் கொண்டு திருவடிகளை ஸேவிக்கப் பெற்றமையாலே ஸகலார்த்தங்களும் தமக்குச் சேம நிதியாக லபித்தனவாகக் கொண்டு ஆகிலும் இரண்டொரு நாளாவது கூடியிருந்து திவ்யஸூக்திகளைச் செவியாரப் பருகப் பெற்றிலோமே யென்கிற க்லேசம் மேலிட்டு "பணவாளரவணைப் பற்பல காலமும் பள்ளிகொள் மணவாளர் நம்மைவைத்த பரிசிது காண்மின்" என்று கூறிக்கொண்டே அவப்ருத ஸ்நாநம் செய்தருளிப் பெரியநம்பியிடம் விடைபெற்றுக் கொண்டு பெருமாளையும் திருவடி தொழாதே அவரை வெறுத்து மீண்டும் பெருமாள் கோயிலேற வெழுந்தருளினார். "ஆளவந்தாரோடே நான் கூடியிருந்து குளிரப் பெற்றிருப்பேனாகில் பரமபதத்திற்குப்படி கட்டியிருப்பேனே" என்று அப்போது பலகாலும் இளையாழ்வார் பணித்தபடி.

31. பிறகு ஆளவந்தாருடைய சரம கைங்கரியங்கள் குறையற நடந்தேறின. இளையாழ்வாரும் பெருமாள் கோயில் சேர்ந்து திருக்கச்சி நம்பிக்குச் செய்தியறிவிக்க, அவரும் க்லேசித்து ஸ்ரீசூர்ண பரிபாலனாதிகள் நடத்தினார். ஸ்வாமி முன்பு போலவே பேருளாளனுடைய திருமஞ்சன கைங்கரியத்தில் நிரதராயிரா நின்றார்.

32. திருக்கச்சி நம்பியிடம் ராமானுஜருடைய ப்ரதிபத்தி விசேஷம்: திருக்கச்சி நம்பிகளிடத்திலே மிகவும் பக்தி கொண்டு அவர் திருவடிகளிலே ஆச்ரயிக்க வேணுமென்று கருதி அக்கருத்தை அவரிடத்தே விஜ்ஞாபிக்க, இது வர்ணாச்ரமத்துக்கு அடுத்த வைதிக மர்யாதைக்குப் போந்திராது என்று அவர் மறுத்திட்டார். ஆச்ரயிக்கும் பாக்கியந்தான் இல்லையானாலும் போனகஞ்செய்த சேடமாவது பெற்றுப் புனிதராவோமென்றெண்ணி ஒரு நாள் நம்பியிடம் சென்று 'இன்று அடியேனது குடிசையிலே அமுது செய்ய எழுந்தருளவேணும்' என்று வேண்ட அவரும் இசைந்தருள, ஸ்வாமி மிக்க மகிழ்ச்சி கொண்டு தம் திருமாளிகைக் கெழுந்தருளி இச்செய்தியைத் தேவியாரிடம் தெரிவித்து அறுசுவை யடிசிலும் அதிமதுர பக்ஷ்யவர்க்கங்களும் பண்ணும்படி நியமித்து, தமது நித்ய கைங்கர்யமான திருமஞ்சனத் திருப்பணியையும் விரைவாகத் தலைக்கட்டித் திருமாளிகையிற் போந்து திருவாராதனமும் கண்டருளப் பண்ணி, அவ்வளவிலும் திருக்கச்சிநம்பி யெழுந்தருளக் காணாமையாலே அவரை யழைத்து வருவதற்குத் தெற்குத் திருவீதியாலே மேற்கே எழுந்தருளினார். அத்தருணத்திலேயே நம்பிகள் வடக்குத் திருவீதியாலே ஸ்வாமி திருமாளிகைக்கெழுந் தருளி, திருவால வட்டத் திருப்பணிக்காக விரைந்து செல்ல வேண்டியிருப்பதை யறிவித்து நின்ற வளவிலே, ஸ்வாமி தேவிகள் இவரை ஒரு மூலையிலே உட்கார வைத்து அமுது செய்யப் பண்ணுவித்து அனுப்பிவிட்டு அமுது செய்த விடத்தைக் கோமயத்தாலே சுத்திபண்ணித் தெளித்துத் தாமும் தீர்த்தமாடி நிற்கிற வளவிலே நம்பியை யழைத்துவரச் சென்றிருந்த இளையாழ்வார் அவர் இங்கே போந்தமையறிந்து மீண்டுவந்து நம்பியைக் காணாமல், மனைவி நீராடியிருந்தபடியைக்

கண்டு 'இதுவென்?' என்று கேட்க; "அந்த ஸ்ரீவைஷ்ணவர் வந்து கைங்கர்யத்திற்கு விரைந்து செல்ல வேண்டியிருப்பதைத் தெரிவித்தார்; உடனே அவரை அமுது செய்யப் பண்ணுவித்தனுப்பினேன்; அவர் நிஹீந வர்ணஸ்தராகையாலே இலையைக் கோலாலே தள்ளிக் கோமயத்தாலே மெழுகினேன். அதனால் சரீரம் அலம்ப வேண்டிற்று" என்றாள். அதுகேட்டு ஸ்வாமி மிகவும் நொந்து வருந்தி எம்பெருமான் திருவுள்ளமிருந்தபடிக்கு நாமென் செய்வதென்று மனம் தளர்ந்திருந்தார்.

33. திருக்கச்சிநம்பி யாறுவார்த்தை: மறுநாள் திருக்கச்சிநம்பிக்கலிற் சென்று "அடியேன் சில நினைவுகள் நினைத்திருந்தேன்; அவை விஷயமான நிர்ணயத்தைத் தேவரீர் பேரருளாளன்பாடே தெரிந்து கொண்டு அடியேனுக்கு நியமித்தருளவேணும்" என்று ஸ்வாமி ப்ரார்த்திக்க, நம்பியும் "அப்படியேயாகுக" என்று இசைந்து அன்றிரவு பெருமாளிடத்திலே விண்ணப்பஞ்செய்து மறுமாற்றம் பெற்று மறுநாள் இளையாழ்வார்க்கு அறிவித்த ஆறுவார்த்தைகள்:–1. பரதத்வம் நாமே. 2. சிதசித்ச்வரபேதமே தர்சனம். 3. ப்ரபத்தியே தஞ்சம். 4.அந்திமஸ்ருதியில் ஒரு நிர்பந்தமில்லை. 5. சரீராவஸானத்திலே மோக்ஷம். 6. பெரியநம்பி திருவடிகளிலே ஆச்ரயிப்பது–என்பன. இங்ஙனே ஆறு வார்த்தைகளை அருளிச் செய்யக் கேட்ட இளையாழ்வார் இவ்விஷயமான நிர்ணயமே தாம் அறிய விருந்தமையால் இவற்றைத் தெளிய அறியப் பெற்றதற்கு உவந்து, பெரியநம்பி திருவடிகளிலே ஆச்ரயித்து உஜ்ஜீவிப்பதற்காக அறுதியிட்டுத் திருவரங்கம் பெரிய கோயிலுக்குப் புறப்பட்டருளினார்.

34. ராமாநுஜர் மதுராந்தகத்தில் பெரிய நம்பிகளை யாச்ரயித்தல்: அக்காலத்திலே கோயில் தர்சந நிர்வாஹத்திற்காக இளையாழ்வாரை அங்கே வரவழைத்து நிலைநிறுத்த வேணுமென்று ஆவல் கொண்ட முதலிகள் பெரியநம்பியை நோக்கி இது உம்மாலாகக் கூடிய காரியமாதலால் நீரே காஞ்சீபுரிக்குச் சென்று காரியம் பார்க்கக்கடவீரென்று நியமிக்க அவரும் அப்போதே ஸகுடும்பமாகப் புறப்பட்டு நம்பெருமாளிடம் விடைபெற்றுக் கொண்டு தேவப் பெருமாள் ஸன்னிதியை நோக்கி எழுந்தருளா நிற்கையில் இடையில் மதுராந்தக க்ஷேத்திரத்திலே ஏரிகாத்த ராமன் ஸன்னிதியிற் சேர்ந்து நின்றார். இளையாழ்வாரும் (திருக்கச்சிநம்பிகளின் திருவாக்குப்படியே பெரிய நம்பி திருவடிகளிலே ஆச்ரயிப்பதாகப் புறப்பட்டுத்) திருவரங்கம் பெரிய கோயிலை நோக்கிச் செல்லா நின்று மதுராந்தகத்திலே சேர்ந்தவாறே அங்குப் பெரிய நம்பியை யாத்ருச்சிகமாக ஸேவிக்க நேர்ந்து ஆச்சரியப்பட்டு 'எண்ணின பலன் எதிரே வந்து வாய்த்தது போல இப்படி நமது பாக்கியம் பரிபக்குவமாவதே!' என்று உகந்து இனிக் கால விளம்பம் பொறுக்கலாகாதென்று அப்போதே திருவிலச்சினை ஸாதித்துத் தம்மை உய்விக்குமாறு வேண்ட, அவரும் இவருடைய ஆர்த்தியின் கனத்தைக் கண்டு அப்போதே அவ்விடத்திலேயே பஞ்சஸம்காரங்களை ப்ரஸாதித்தருளி ஆளவந்தார் திருவடிகளே தஞ்சமென்று கொண்டிருக்கும்படி நியமித்தருளினார். பிறகு அங்கு நின்றும் புறப்பட்டுப் பெருமாள் கோயிலே வந்து சேர்ந்தார்கள். இளையாழ்வார் தம்முடைய திருமாளிகையிலேயே மேல் பாதியிலே பெரிய நம்பி ஸகுடும்பமாக வஸிக்க இடமளித்துத்

தளிகைக்கு வேண்டும் பதார்த்தங்களும் ஸமர்ப்பித்து ஆராதித்துக் கொண்டு அவர் ஸந்நிதியிலே அருளிச் செயல்களை கற்பதும் தர்சந ரஹஸ்யார்த்த விசேஷங்களைக் கேட்பதுமாயிருந்து வந்தார்.

35. பெரிய நம்பி கோயிலுக்கெழுந்தருளல்: இங்ஙனேயிருந்து வருகையில் பெரியநம்பி தேவிகளுக்கும் இளையாழ்வாருடைய தேவிகளுக்கும் மனப்பொருத்தமின்றிக்கே வைரஸ்யமுண்டாகத் தொடங்கிற்று. இருவருக்கும் கிணற்றின் கரையிலே தாம்பு விஷயமான விவாதமுண்டாகி வார்த்தைகளும் விஞ்சின: இதைப் பெரியநம்பி யுணர்ந்து தமது தேவிகளை கோபித்து, இனி நாம் இங்கு வாழ்வது தகுதியற்றதென்றெண்ணி உடனே கோயிலுக்குப் புறப்படத் திருவுள்ளமாய் இளையாழ்வார் பக்கலிலும் அறிவியாமல் அவர் அநுஷ்டானத்திற்குச் சென்றிருந்த ஸமயம் பார்த்து ஸகுடும்பமாக மீண்டு கோயிலுக்கெழுந்தருளினார். ஸ்வாமி அனுஷ்டாநம் பண்ணி யெழுந்தருளிப் பெரியநம்பியை ஸேவிக்கப்பெறாமல் விசாரித்துச் செய்தியறிந்து திருவுள்ளம் மிகவும் உடைகுலைப்பட்டு நின்றார்.

36. ஸ்வாமி ஆச்ரமஸ்வீகாரம் செய்தருளுதல்: நம்மாழ்வார் ஒரு திருவாய்மொழிக்குப் பலச்ருதியருளிச் செய்யாநின்றவர் 'நல்ல பதத்தால் மனைவாழ்வர் கொண்ட பெண்டிர் மக்களே' என்று க்ருஹஸ்தாச்ரம வாழ்ச்சியையும் பலனாக அருளிச் செய்தார். ஸர்வோபகார க்ஷமமான இந்த ஆச்ரம வாழ்க்கை நன்றேயாயினும் 'நல்ல பதத்தால் மனைவாழ்வர்' என்றபடிக்குப் பாங்காக இராவிடில் பரித்யாஜ்யமே யாதலால் ஸஹதர்மசாரிணியான தேவியாருடைய மனம் அனுகூலமாயிராதபோது இவ்வாச்ரம வாழ்க்கையில் ஜிஹாஸையுண்டாக ப்ராப்தம்; ஸ்வாமி தமது தேவியாரிடத்தில் மூன்று அபசிதங்கள் கண்டார். 1. திருக்கச்சி நம்பி பக்கலிலே தமதுதிருவுள்ளத்திற்கு மாறாக நடந்து கொண்டது. 2. ஒரு நாள் ஒரு ஸ்ரீவைஷ்ணவருக்கு ப்ரஸாதமிடும்படி நியமிக்க, உள்ளே ப்ரஸாதம் இருந்தும் இல்லையென்று சொல்லி மறுத்தொழித்தது. 3. ஆசார்ய தேவிகளோடே ஸ்பர்த்தித்து அபசாரப்பட்டது. ஆக இம்மூன்று செய்கைகளும் அஸஹ்யாபசாரமாக ஸ்வாமிக்குத் தோன்றினபடியால் உடனே ஸம்ந்யாஸாச்ரமம் ஸ்வீகரிக்கத் திருவுள்ளமாய் அன்றே தேவிகளைப் பிறந்தகத்துக்குப் போக விட்டுப் பேரருளாளன் திருமுன்பே திருவனந்தஸரஸ்தீரத்தில் தண்ட காஷாயங்களைப் பரிக்ரஹித்து ராமாநுஜமுநி யென்றும் யதிராஜரென்றும் உலகமெலாம் போற்ற நின்று உலகேத்துமாழியானத்தியூரானுடைய அந்தரங்க வுகப்புக்குக் கொள்கலமாய் மடத்தே வாழ்ந்து கொண்டு அத்தாணிச் சேவகம் புரிந்து வந்தார்.

37. ஆழ்வானும் ஆண்டானும் வந்து பணிதல்: ஸ்வாமி இங்ஙனே ஆச்ரமஸ்வீகாரம் செய்தருளி நின்றபடியை முதலியாண்டானும் கூரத்தாழ்வானும் கேள்விப்பட்டு ஸ்வாமி திருவடிகளிலே வந்து ஆச்ரயித்துப் பஞ்ச ஸம்ஸ்காரங்களும் பெற்று மீமாம்ஸா சாஸ்த்ரயுக்மச்ரமஞ் செய்து கொண்டு வாழ்ந்திருந்தார்கள். இந்த கோஷ்டியிலே அந்வயித்து வாழ வேண்டிய கோவிந்தபட்டர் காளஹஸ்தியிலே விபரீத வ்ருத்தராயிரா நின்றாரேயென்று திருவுள்ளம் நொந்து இக்குறையைத் திருமலைநம்பி பக்கலிலே

தெரிவித்து 'அவனைத் திருத்திப் பணிகொள்ள வேண்டியது உம்முடைய பாரம்' என்று விஜ்ஞாபித்திருந்தார் ஸ்வாமி யெம்பெருமானார்.

38. யாதவப்ரகாசன் ஸ்வாமியையாச்ரயித்து வாழ்தல்: ஸ்வாமியினுடைய ப்ரபாவம் நாள்தோறும் வளர்ந்து செல்லாநின்றது. அதனைக் கண்டு யாதவப்ரகாசனது தாயார் 'நம்முடைய குமாரனும் இவரையடி பணிந்து வாழலாமே' என்று நினைத்து இந்த மநோரதத்தை மகனிடம் பலகாலும் தெரிவித்து வந்தாள். அவன் ஏற்கெனவே ஸ்வாமியின் விலக்ஷணமேதாப்ரதிபா விலாஸங்களைக் கண்டவனாதலாலும், ப்ரஹ்மரக்ஷஸ்ஸின் மூலமாக வைபவத்தை விசேஷித்து அறிந்தவனாதலாலும், தான் நிர்வஹித்துப் போருகிற தர்சனத்திலே மிகவும் அருசி தோன்ற நின்றதனாலும் பகவத்கடாக்ஷம் பலிக்க ப்ராப்த காலமானதாலும் தாயாருடைய நல்வார்த்தையில் அன்பு தோன்றி அப்படியே யென்றிசைந்து, இதுவரையில் சிகாயஜ்ஞோபவீத த்யாகம் பண்ணியிருந்த பாபத்திற்கு ப்ராயச்சித்தமாக பூப்ரதக்ஷிணம் பண்ண வேண்டியிருந்ததனால் வயது முதிர்ச்சி காரணமாக அது செய்ய முடியாமைக்கு வருந்தியிருக்கையிலே தேவப் பெருமாள் கனவிலே காட்சி தந்து 'நம்மிராமானுசனை ஒரு ப்ரதக்ஷிணம் பண்ணுவது பூப்ரதக்ஷிணத்திலும் மேம்பட்டது. ஆகவே அது செய்து உள்ளம் தேறுவாயாக' என்று நியமிக்க, திருக்கச்சி நம்பி மூலமாகவும் இந்த நியமனத்தைத் திடமாக விச்வஸித்து ஸ்வாமி திருவடிகளிலே வந்து வேரற்றமரம் போலே விழுந்து கண்ணுங் கண்ணீருமாய் நின்று பழுதே பலபலகாலும் போனமைக்கு அநுதபித்துப் பேசி இனியாகிலும் இவ்வாத்மா உஜ்ஜீவிக்கும் நல்விரகு பார்த்தருள வேணுமென்று கனக்க ப்ரார்த்தித்து ஸ்வாமியின் திருவருளுக்கிலக்காகி ஸ்ரீவைஷ்ணவ யதிவேஷம் பூண்டு விளங்கி வாழ்ந்து போனான். இவ்விஷயத்தை வேதாந்த தேசிகனும் யதிராஜ ஸப்ததியில் 'ஸ்வபலாத் உத்த்ருதயாதவப்ரகாச:' என்றருளினார்.

39. திருவரங்கப் பெருமாளரையரும் தேவப் பெருமாளும்: ஸ்வாமி காஞ்சீபுரியிலே ஆழ்வான் ஆண்டான் முதலான சிஷ்யவர்க்கங்களுக்கு உபய வேதாந்த க்ரந்த ப்ரவசனம் செய்து போரா நிற்கையில், நம்பெருமாள் ஸன்னிதியில் தர்சந நிர்வாஹகர் ஒருவருமில்லாத குறைதீர இவரை அவ்விடத்திற்கெழுந்தருளச் செய்ய வேணுமென்று பாரிப்புக் கொண்ட கோயில் முதலிகள் ஓர் ஸதுபாயம் கண்டனர்; பேரருளாளப் பெருமாள் ஆழ்வாரருளிச் செயல்களிலே போரவும் பித்தராயிருப்பாராகையாலே நம் அரையரைக் கொண்டு பாட்டுக் கேட்பித்து உகப்பித்து வரப்ரஸாதமாக ஸ்ரீராமாநுஜரைப் பெற்று இங்கேயெழுந்தருளப் பண்ணிக் கொண்டு வரலாமென்று.

40. அக்காலத்து இசைபாடி விண்ணப்பம் செய்வதில் மிக வல்லவராயிருந்த ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையரைப் பேரருளாளப் பெருமாள் ஸன்னிதிக்கு விடை கொண்டு இக்காரியத்தைச் செவ்வனே தலைக்கட்டிக் கொண்டு வரும்படி பெரிய பெருமாள் நியமித்தருள, அந்த நியமனத்தை சிரஸாவஹித்த அரையர் பேருளாளன் ஸன்னிதிக்கு வந்து சேர்ந்து அங்குள்ள வரந்தரும் பெருமாளரையரையும் திருக்கச்சி நம்பியையும் முன்னிட்டுக் கொண்டு தேவப்பெருமாளைத் திருவடித் தொழுது 'அத்தியூரான் புள்ளையூர்வான்', 'என்னெஞ்ச மேயான்', 'துணிவினியுனக்குச் சொல்லுவன்',

'உரந்தருமெல்லணைப் பள்ளி கொண்டான்' முதலான பாசுரங்களைத் தேவ கானத்திலேயிட்டுத் துதிக்க, தேவப் பெருமாள் திருவுள்ளம் பூரித்து, 'வாரீர் அரையரே! உம்முடைய பாட்டுக்குப் போரவுகந்தோம்; நீர் எது கேட்டாலும் தரக் கடவோம்' என்று ஒரு காலைக்கிருகால் உறுதியருளிச் செய்ய அரையரும் அருகேயிருந்த இயைாழ்வாரைக் காட்டி 'நம் இராமாநுசனை நம்பெருமாளுக்குத் தந்தருளவேணும்' என்று பிரார்த்திக்க, அது கேட்டுத் தேவப் பெருமாள், திடுக்கிட்டு ஒன்றும் தோன்றாமே நிற்க, சொன்னசொல் தவறாதே தந்தருளவேணுமென்று அரையர் வேண்ட, 'நம்மிராமாநுசனைத் தவிர மற்றதைக் கேளுமென்று நாம் முதலிலேயே சொல்லத் தவறினோம்: சொற்படியே இராமாநுசனைப் போகவிட வேண்டியதே' என்று துணிந்து, "அரையரே! நம்மை இங்ஙனே வஞ்சித்து ஸர்வஸ்வமும் கொள்ளை கொள்ள வந்தீர் போலும். நாமும் உமது வஞ்சனையிலே அகப்பட்டோம். இனி என் செய்வது? விரும்பினபடியே கொண்டு போகக் கடவீர்" என்று தேவப் பெருமாள் விடை கொடுத்தருள அன்றே அப்போதே ஸ்வாமி, ஆழ்வான் ஆண்டான் முதலான சிஷ்ய வர்க்கங்களுடனே புறப்பட்டு அரையரை முன்னிட்டுக் கொண்டு பெருமாள் ஸன்னிக்கு வந்து சேர்ந்து தெண்ணீர்ப் பொன்னியிலே தீர்த்தமாடி ஆஹ்னிகங்களை முடித்துக் கொண்டு அரவணைமேல் பள்ளி கொண்ட முகில் வண்ணனைக் கண்ணாரக் கண்டு 'அடியேன் மீது இப்படியும் அருள் வெள்ளம் பெருகுவதே!' என்று ஈடுபட்டு நிற்கையில், பெரிய பெருமாள் தமது திருப்பொலிந்த சேவடியை இவரது சென்னிமேல் பொறித்து "இளையாழ்வீர்! பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகு மென்கிற உபயவிபூதிச் செல்வத்தையும் உமக்கும் உம்முடையார்க்கும் தந்தோம். இனி நம்முடைய கோயிலைத் திருத்திப் பணிகொள்ளக் கடவீர்" என்று நியமித்தருளி யாயிற்று. அன்று முதலாக ஸ்வாமிக்கு உடையவர் என்கிற திருநாமம் வழங்கி வந்தது (உடையவர்–உபய விபூதியையும் தம் கையிலேயுடையவர் என்றபடி.)

41. இங்ஙனே பெரிய பெருமாளுடைய பேரருளைப் பெற்றதும், அருகேயிருந்த பெரிய நம்பியை நோக்கி 'பெரியார்க்கு ஆட்பட்டக்கால் பெறாத பயன்பெறுமாறு வரிவாள் வாயரவணைமேல் நம்பெருமாள் காட்டினரே'யென்று பாசுரஞ் சொல்லி, "தேவரீருடைய திருவடி ஸம்பந்தம் பெற்ற கோயின்மையாலே பெரிய பெருமாள் அடியேனை யிப்படி விஷயீகரித்தருளினார்" என்று ஆனந்தக் கண்ணீர் பெருக நின்று விண்ணப்பஞ் செய்ய, பெரிய நம்பியும் " கலியுங் கெடுங் கண்டு கொண்மினென்று அன்று ஆழ்வாரருளிச் செய்த எதிர்காலச் செய்தி இன்று பலிக்கக் கண்டோம்; நல்லது; இனி பெருமாள் நியமனப்படியே இவ்விடத்துப் பணிகளெல்லாம் பாங்காகப் பார்த்தருளீர்" என்றருளிச் செய்ய, அன்று முதலாகவே "தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்தி வைத்தான் வாழியே" என்கிற வாழ்த்து அந்வர்த்தமாம்படி அனைத்தும் ஆராய்ந்தருளி நித்யோத்ஸவ பக்ஷோத்ஸவ மாஸோத்ஸவ ஸம்வத்ஸரோத்ஸவங்களெல்லாம் குறையற நடைபெறுமாறு சேமஞ் செய்தருளி வந்தார். அப்போது அகளங்க நாட்டாழ்வானென்பவனும் ஸ்வாமிக்கு அணுக்கனான அடியவனாகிக் கைங்கரியங்கள் துணைபுரிந்து வந்தான்.

42. திருவரங்கத்தமுதனாரைத் திருத்திப் பணிகொள்ளுதல்: திருவரங்கத்தமுதனார் என்பவர் கோயில் கொத்திலுள்ளவர்கட்குத் தலைவரா யிருந்தவர். அவர் ஒருநாள் உடையவரை வந்து பணிந்து 'பாவங்கள் கூடுபூரித்துக் கிடக்கிற அடியேனைத் திருத்தி ஸ்வாமிக்கு சேஷமாக்கும்படி தேவரீர் திருவடிவாரத்திலுள்ளாரில் ஒருவர்க்கு நியமித்தருளவேணும்' என்று விண்ணப்பஞ் செய்ய, உடனே ஸ்வாமி ஆழ்வானையழைத்து அமுதனாரைக் காட்டி 'இவர், நம்முடைய முதலான நம்பெருமாளுடைய ஸ்ரீகார்யத்துக்குப் பரிபவராயிருப்பவர்; இவரது தாழ்வுகளைப் பாராமல் இவரை அநுவர்த்தித்து அநுகூலராக்கி நம்பக்கலிலே கொண்டு வந்து சேரும்' என்று நியமித்தருள, ஆழ்வானும் ஆறுமாதம் அவரை அநுவர்த்தித்துப் பரிபக்வராக்கி உடையவர் திருவடிகளிலே கொண்டு வந்து காட்டிக் கொடுக்க உடையவரும் அவ்வமுதனாரை ஆழ்வான் திருவடிகளிலே ஆச்ரயிப்பித்தருளினார்.

43. அமுதனார் க்ருஹத்திலே ஏகாஹம் அமுதுசெய்ய ஆழ்வானைப் போகவிடுதல்: இப்படி அமுதனார் ஆழ்வான் திருவடிகளில் அந்தரங்கராய்க் காலக்ஷேபஞ் செய்து வருகிற நாளிலே அவருடைய தாயார் ஆசாரியன் திருவடியடைந்தாள். தசாஹம் கடந்தபின்பு 'ஏகாஹத்துக்கு நிமந்த்ரண ஸ்வாமியாக ஒருவரை நியமித்தருள வேணும்' என்று உடையவர் பக்கலிலே வந்து விண்ணப்பஞ் செய்தார் அமுதனார். அப்போது உடையவர் ஆழ்வானை நோக்கி 'நீர் போய் வாரும்' என்ன, ஆழ்வானும் சிறிதும் முகம் கன்றாமல் ஸ்வாமியின் அந்தரங்கக் கருத்தை க்ரஹித்துக் கொண்டு எழுந்தருளி ஏகாஹத்திலே ஸ்தானம் வஹித்து அமுது செய்தருளினார். முடிவில் 'ஸகலம் ஸம்பூர்ணம்' என்று சொல்ல வேண்டிய தருணத்தில் அமுதனாருடைய அதீனத்திலிருந்த நம்பெருமாள் ஸன்னிதித் திறவுகோலைப் பெற்றுக் கொண்டு பிறகு புக்திருப்தி சொல்லி ச்ராத்த பூர்த்தி செய்து, அந்தத் திறவு கோலை ஸ்வாமி திருவடிகளிலே கொணர்ந்து ஸமர்ப்பித்தார். அன்று முதல் 'ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம்' என்று கடல் சூழ்ந்த மண்ணுலக முற்றும் போற்றும்படி எம்பெருமானார் நம்பெருமாள் ஸன்னிதியின் கைங்கரியங்களைப் பரிஷ்கரித்தருளினார்.

44. எம்பார் திருந்தின செய்திகேட்டு மகிழ்தல்: பண்டு யாதவப்ரகாசருடைய கங்கா யாத்திரையிலே கோவிந்தபட்டர்(எம்பார்) லிங்கங் கொணர்ந்து சிவபக்தராகி ஸ்ரீவைஷ்ணவ ஸஹவாஸத்தையிழந்து காளஹஸ்தியிலே சிவபூஜாநிரதராயிருந்தாரென்று சொன்னோம். அவரைத் திருத்திப் பணி கொள்ளும்படி ஸ்வாமி தம் மாதுலரான திருமலை நம்பியை வேண்டிக் கொண்டிருந்தார். முன்னமே அவரும் திருமலையில் நின்றும் காளஹஸ்திக்கு எழுந்தருளி கோவிந்தரைத் திருத்தப் பார்த்தவளவிலே இரண்டு பர்யாயங்களில் ஸமீஹிதஸித்தியாகாமல் மூன்றாவது பர்யாயத்தில் மநோரதம் நிறைவேறி மகிழப் பெற்றபடியை ஒரு ஸ்ரீவைஷ்ணவர் வந்து ஸ்வாமி திருவடிகளிலே விண்ணப்பம் செய்ய, அது கேட்டு ஸ்வாமி மிகவுகந்தருளினார். அந்தச் செய்தி வருமாறு. திருமலைநம்பி சில சிஷ்யர்களுடனே காளஹஸ்திக் கெழுந்தருளி, நாடோறும் கோவிந்தபட்டர் சிவபிரானுக்குப் பூப்பறிக்க வருமிடத்திற்கு அருகேயிருந்து, திருவாய்மொழியில் திருமால்

பரத்துவத்தை நன்குரைத்த 'திண்ணன்வீடு' பதிகத்தைத் தொடங்கி வியாக்கியானித்தருளா நின்றார்; கோவிந்தர் அங்கு ஒரு பாதிரி மரத்தின் மீதேறிப் பூப்பறியா நின்றவர், மூன்று பாட்டளவும் பூப்பறிக்கை தவிர்ந்து கேட்டுக் கொண்டிருந்து நாலாம் பாட்டிலே 'தேவனெம்பெருமானுக்கல்லால் பூவும் பூசனையும் தகுமே' என்றவிடத்திற்கு கங்கா ப்ரவாஹ நிர்விசேஷமாகவருளிச் செய்த வியாக்கியானம் செவியிற் புகுந்தவாறே கோவிந்தர் அந்த மரத்தினின்றும் திடுக்கெனக் குதித்துக் கையிலிருந்த பூக்குடலையைச் சுழற்றியெறிந்து, தரித்திருந்த ருத்ராக்ஷத்தையும் கழற்றியெறிந்து, 'பூவும் பூசனையும் தகுமே' என்ற சந்தைக்குச் சேர 'தகாது தகாது தகாது' என்று சொல்லிக் கொண்டே நம்பி திருவடிகளிலே வேரற்ற மரம்போலே விழுந்து,

'உபயவிபூதி நாதனிருக்க விரிதலையானை விரும்பி நின்றேனே!
புதுக்கணிப்புடைய புண்டரீகாக்ஷனிருக்கப் பொறிபறக்குங் கண்ணனைப்
பூசித்தேனே!
கடல் மண்ணுண்ட கண்டனிருக்கக் கறை கொண்ட கண்டனைக் காமித்தேனே!
கல்லெடுத்துக் கன்மாரிகாத்த கற்பக மிருக்கக் கையார் கபாலியைக்
காதலித்தேனே!
திருவிருந்த மார்பன் சிரீதரனிருக்கத் திருவில்லாத் தேவனைத் தொழுதுநின்றேனே!
பீதகவாடைப்பிரானாரிருக்கப் புலியுரியானைப் பின் தொடர்ந்தேனே!
சதிரானகங்கையடியானிருக்கச் சுடுகாட்டுக் காவலனைச் சுற்றி வலம் வந்தேனே!
பெருந்துழாய் வனமிருக்கப் பெருங்கையாற் பேய்ச் சுரைக்கு வார்த்தேனே!

என்றினைய பலவும் சொல்லிப் புலம்பி 'இனியாகிலும் இவ்வாத்மாவை உய்விக்க வேணும்' என்று தண்டனிட்டு எழுந்திராமலிருந்தார். நம்பியும் முடிபிடித்தெடுத்து உடம்பைத் தடவிக் கொடுத்துக் குளிரப் பேசி யருளா நிற்கையில் இச்செய்தியை இங்குள்ள சிவபக்தர்கள் கேள்விப்பட்டு வந்து இப்படி நீர் செய்யத் தகுமோவென்று நம்பியோடே போராடிப் பிறகு ஸமாதானமடைந்து திரும்பிப் போக, கோவிந்தபட்டரும் தம் வசத்திலிருந்த கருவூலத் திறவுகோல் இலச்சினை மோதிரம் முதலானவற்றைப் பொகட்டு 'இனி உங்களுக்கும் நமக்கும் பணியில்லை' என்று ஒட்டறுத்துக் கொண்டு நம்பியோடே திருப்பதிக்கு வந்து சேர்ந்து ப்ராயச்சித்த புரஸ்ஸரமாக ஸம்ஸ்காரங்களைப் பெற்று திவ்யப்ரபந்தங்களையோதி அர்த்த பஞ்சக ஞானத்தையும் பெற்றுத் தேவுமற்றறியாதே அவர் திருவடிகளே தஞ்சமென்றிருந்து போருகின்றார்–என்னுமிச் செய்தியை அந்த ஸ்ரீவைஷ்ணவர் விண்ணப்பஞ் செய்யக் கேட்டுப் பேரின்ப வெள்ளத்தே மூழ்கி நின்றார் உடையவர்.

45. உடையவருடைய பஞ்சாசார்ய பதாச்ரிதத்வம்: ஸ்வாமி ஆசாரியர்கள் ஐவரையடி பணிந்து அர்த்த விசேஷங்களைக் கேட்டவராதலால் பஞ்சாசார்ய பதாச்ரித ரென்று ப்ரஸித்தராயிருப்பவர். பெரிய நம்பி, திருக்கோட்டியூர் நம்பி, திருமாலை யாண்டான், திருமலைநம்பி, ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் ஆக இவ்வைவர் அவ்வாசிரியர்களாவர். பெரியநம்பி பஞ்ச ஸம்ஸ்காரமிட்டருளினவராதலால் தலைமையாசிரியர். திருக்கோட்டியூர்நம்பி ரஹஸ்யார்த்தங்கள் சிக்ஷித்துக் கொடுத்தவர்.

திருமாலையாண்டான் திருவாய்மொழிப் பொருள் உபதேசித்தவர். திருமலை நம்பி ஸ்ரீராமாயணார்த்தங்கள் ஸ்தோத்ரங்கள் நல்வார்த்தைகள் அளித்தவர். வேதாந்தவாசிரியர் பணித்த குருபரம்பரா ஸாரத்தில், "எம்பெருமானார் திருக்கோட்டியூர் நம்பி ஸ்ரீபாதத்திலே ரஹஸ்யார்த்தங்கள் சிக்ஷித்தார்; திருமாலையாண்டான் ஸ்ரீபாதத்திலே திருவாய்மொழிக்கு அர்த்தம் கேட்டருளினார்; ஆளவந்தாராழ்வார் ஸ்ரீபாதத்திலே திருவாய்மொழியுமோதி ஸ்தோத்ராதிகளும், அருளிச் செய்யும் நல்வார்த்தைகளும் கேட்டருளினார். திருமலை நம்பி ஸ்ரீ பாதத்திலே ஸ்ரீமத்ராமாயணம் கேட்டருளினார்" என்றுள்ளது இங்கே அறியத்தக்கது. ஆளவந்தாராழ்வார் என்பவரே ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர்.

46. ஸ்வாமியும் திருக்கோட்டியூர் நம்பியும்: பெரியநம்பி பரமப்ரீதியோடே உடையவர்க்கு ரஹஸ்யார்த்தங்களை யருளிச் செய்து போருகையில், "திருக்கோட்டியூர் நம்பி பக்கலிலே சில அர்த்த விசேஷங்களுண்டு; ஆளவந்தாருடைய விசேஷாபிமானத்திற்கு அவர் இலக்காயிருந்த படியாலே அவரிடத்திலே நிதிபோல நின்றிருக்கும் அர்த்த விசேஷங்களையும் கேட்டு உய்யக் கடவீர்" என்று அருளிச் செய்ய, ஸ்வாமி அதுகேட்க ஊற்றமுடையராய்த் திருக்கோட்டியூர்க் கெழுந்தருளி அங்குள்ளாரை நோக்கி "நம்பி திருமாளிகை எங்கே?" என்ன அவர்களும் "அதோ காண்கிற கூரை" என்று காட்ட அவ்விடந் தொடங்கி நம்பி திருமாளிகையளவும் தெண்டன் ஸமர்ப்பித்துக் கொண்டே யெழுந்தருளி நம்பி திருமாளிகை சேர்ந்தார். பிறகு ஸ்வாமி நம்பி திருவடிகளிலே தெண்டனிட்டு "தேவரீர் அடியேனுக்கு ரஹஸ்யார்த்த விசேஷங்களை ப்ரஸாதித்தருள வேணும்" என்று கூப்பிய கையராய்ப் பிரார்த்திக்க, அவரும் இவருடைய அத்யவஸாய விசேஷமறியாமல் உபதேசிக்கலாகாதென்றெண்ணி வாளாவிருந்தார்.

47. ஸ்வாமி சிலநாள் காத்திருந்தும் மநோரதம் நிறைவேறப் பெறாதே மீண்டு கோயிலுக்கெழுந்தருளினார். இங்ஙனே பதினெட்டு பர்யாயம் கோயிலில் நின்றும் திருக்கோட்டியூர்க்கு எழுந்தருளியும் பிரார்த்தித்தும் பயன் படவில்லையாக, பிறகு ஸ்வாமியின் அளவுகடந்த ஆர்த்தியையும் அபிநிவேசாதிசயத்தையும் தெரிந்து கொண்ட திருக்கோட்டியூர் நம்பிகள் எம்பெருமானுடைய நியமனத்தையும் பெற்று இனி அவர்க்கு உபதேசிப்பதென்று தேறி ஒரு ஸ்ரீவைஷ்ணவரைக் கோயிலுக்குப் போகவிட்டார்; 'தண்டும் பவித்ரமுமாகத் தாம் ஒருவரே வந்து கேட்டுப் போகும்படி' சொல்லியனுப்பினார். அவரும் வந்து அப்படியே சொல்ல ஸ்வாமி மிகவுகந்து கூரத்தாழ்வானையும் முதலியாண்டானையும் கூட்டிக் கொண்டு மிக விரைந்து திருக்கோட்டியூரேறச் சென்று நம்பி திருவடிகளிலே தெண்டனிட்டு நிற்க, "தனித்தன்றோ உம்மை நாம் வரச்சொன்னோம்; கூட இருவரைக் கூட்டி வந்தது ஏன்?" என்று நம்பி கேட்க, "தண்டும் பவித்ரமுமாக வன்றோ தேவரீர் வரச்சொல்லியருளிற்று; இவர்களைத் தண்டும் பவித்ரமுமென்றே கூட்டி வந்தேன்" என்று சொல்லி ஆண்டானைத் தண்டாகவும் ஆழ்வானைப் பவித்ரமாகவும் காட்டி நிற்க "ஆனால் இவ்வர்த்தம் உங்கள் மூவரளவிலே நிற்கக் கடவது, மற்றொருவர்க்கும் சொல்லாதே கொள்ளும்" என்று நம்பிகள் நியமித்தருளி அங்ஙனே சபதமும் பெற்று சரமச்லோகத்தின் பரமரஹஸ்யார்த்த விசேஷங்களைப் பேரருள் கொண்டு உபதேசித்தருளினார்.

48. (இங்கே ஒரு ஆராய்ச்சி, உடையவர்க்குத் திருக்கோட்டியூர் நம்பி உபதேசித்தது திருவஷ்டாக்ஷர மஹாமந்த்ரத்தின் பொருளென்று ஆறாயிரப்படி குரு பரம்பராப்ரபாவத்தில் காண்கிறது. மணவாளமாமுனிகளின் முமுக்ஷுப்படி வியாக்கியானத்தில் சரமச்லோக ப்ரகரணத்தின் அவதாரிகையில்–''இதினர்த்தம் கேட்கைக்காகவிறே எம்பெருமானார் பதினெட்டு பர்யாயம் திருக்கோட்டியூர் நம்பிபக்கல் எழுந்தருளிற்று. நம்பி தாமும் இதில் அர்த்தத்தினுடைய கௌரவத்தையும் இதுக்கு அதிகாரிகளில்லாமையையும் பார்த்திறே இவருடைய ஆஸ்திக்யாதர பரீக்ஷார்த்தமாகவும் பலகால் நடந்து துவளப்பண்ணிச் சூளுறவு கொண்டு மாஸோபவாஸங்கொண்டு அருமைப்படுத்தி அருளிச் செய்தருளிற்று..... அதிகாரி துர்லபத்வத்தாலும் அர்த்த கௌரவத்தாலும் இத்தை வெளியிடாதே மறைத்துக் கொண்டு போந்தார்கள் எம்பெருமானார்க்கு முன்புள்ளார். ஸம்ஸாரிகளின் துர்க்கதி கண்டு பொறுக்கமாட்டாதபடி க்ருபை கரைபுரண்டிருக்கையாலே அர்த்தத்தின் சீர்மை பாராதே அநர்த்தத்தையே பார்த்து வெளியிட்டருளினார் எம்பெருமானார்'' என்றருளிச் செய்துள்ள ஸ்ரீஸூக்திகள் ப்ரஸித்தம். ஆகவே சரமச்லோகார்த்தம் கேட்டருளினாரென்பதே யுக்தமாயிருக்த வடுப்பது. முதலில் திருமந்த்ரார்த்தத்தையருளிச் செய்து பிறகு மற்றொரு கால் சரமச்லோகார்த்தத்தையுமருளிச் செய்ததாக குருபரம்பரா ப்ரபாவத்தில் காண்கையாலே அப்படியே கொள்ளலாகாதோ வென்னில், மேலே எடுத்துக் காட்டியுள்ள மணவாள மாமுனிகள் ஸ்ரீஸூக்திகளின் ஸ்வாரஸ்யத்தை நோக்குமளவில் சரமச்லோகார்த்தம் கேட்கைக்காகவே ஸ்வாமி பதினெட்டு பர்யாயம் திருக்கோட்டியூர்க்கு நடந்ததாகவும்; கேட்ட அதனையே அங்கு ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு வெளியிட்டதாகவும் ஸ்பஷ்டமாக விளங்குகையாலே மற்றைப்படி சொல்லுகை மாண்புடைத்தாகத் தோன்றவில்லை. ஸம்பிரதாயம் வல்ல பெரியார்வாய்க் கேட்டுத் தெளிவது.)

49. திருக்கோட்டியூர் நம்பி பக்கலிலே ரஹஸ்யார்த்த விசேஷங்கள் கேட்டருளி ஸ்வாமி க்ருதார்த்தராய் அப்போதே மறுநாளில் அவ்வூர்ப் பெருமாள் ஸந்நிதியில் ச்ரத்தாளுக்களான சில பல ஸ்ரீவைஷ்ணவர்களை ஒலக்கமாக விருத்தி அப்பரமரஹஸ்யார்த்தத்தை உபதேசித்தருளினார்.

50. ஸ்வாமி, எம்பெருமானார் என்கிற விருது பெறுதல்: திருக்கோட்டியூர் நம்பி தம்மிடத்திலே சபதம் செய்ததைக் கடந்து ஸ்வாமி இங்ஙனே ஸந்நிதியில் அர்த்தங்களை வர்ஷித்து விட்டார் என்று உடனே கேள்விப்பட்டு அவரையழைத்து "இப்படியும் செய்யத் தகுமோ? ஏதற்காக இப்படி நியமநோல்லங்கனம் செய்தீர்? இதன் பலன் என்னாகுமென்று அறிவீரோ" என்று கேட்க உடையவரும் "ஆசார்ய நியமனத்தை அதிலங்கனம் செய்த பாவியேனுக்கு நரகமே யாயிற்று பலன்; இதனையறிந்தும் அடியேன் அர்த்தங்களை வெளியிட்டது அடியேனொருவன் நரகம் புகுந்தாலும் இவ்வாத்மகோடிகளெல்லாம் தேவரீர் திருவருளாலே உஜ்ஜீவித்துப் போவார்களென்கிற கருத்தினால்" என்று விண்ணப்பஞ் செய்ய நம்பியும் இதைக் கேட்டு 'இப்படி பரஸம்ருத்தியே பேறான நிலை நமக்குக் கூடிற்றில்லையே! இவர்க்கு இது கூடினபடி என்னே!' என்று மிக வியந்து உவந்து அவ்வுகப்பின் பரிவாஹரூபமாக 'எம்பெருமானார்' என்று அவர்க்கு விருது சாத்தினார்.

'எம்பெருமான் கருணைக் கடலென்று கேட்டிருந்தோமத்தனை, அதை இவர் பக்கலிலே இன்று ஸாக்ஷாத்கரிக்கப் பெற்றோமாதலால் இவர்க்கு இந்த விருது ஏற்கும்' என்று திருவோலக்கத்திலே விவரணமும் செய்தருளினார். 'எமக்கெல்லார்க்கும் தலைவர்' என்கிற பொருளையுடைய எம்பெருமானாரென்கிற சொல் ஸ்வாமிக்கே ஏற்குமது. பரம கருணை பொருந்தியவரே தலைவராயிருக்கத் தகுமாதலாலும் அந்த பரமகருணை இராமாநுசர் திறத்திலேயே ஸகலருமறிய ஸாக்ஷாத்க்ருதமாதலாலும்.

51. ஆழ்வானையும் ஆண்டானையும் பற்றின இதிஹாஸம்: (ஸ்வாமி திருக்கோட்டியூர் நம்பி திருவடிகளிலே சரம ச்லோகார்த்தம் கேட்ட போது ஆழ்வானுமாண்டானும் தண்டும் பவித்ரமுமாக உடனிருந்து கேட்டதாகவே கீழ் அறிவிக்கப்பட்டது. ஆனால் இவ்விடத்து வரலாறு குருபரம்பரா ப்ரபாவத்தோடு சிறிது மாறுபடுதலால் அதில் காண்கிறபடியாகவும் இங்கு எழுதப்படுகிறது) ஸ்வாமி தண்டும் பவித்ரமுமான இவ்விருவருடனேயிருந்து நம்பி பக்கலிலே கேட்டது திருமந்திரப் பொருள் என்று வைத்துக் கொள்ளுவது. பிறகு அவர்க்கு சரமச்லோகார்த்தத்தையும் உபதேசித்தருளத் திருவுள்ளங்கொண்ட நம்பிகள் 'எம்பெருமானாரே! உமக்கு இன்னமுமொரு சரம ரஹஸ்யார்த்த விசேஷம் சொல்லுவதாக எண்ணியிருக்கிறோம்: இப்போது கோயிலுக்குச் சென்று பின்பு ஏகாந்தமாக நீர் ஒருவருமே வாரும்' என்றருளிச் செய்ய, அப்படியே ஸ்வாமி அப்போது கோயிலேற வெழுந்தருளி மீண்டுமொரு கால் தனித்து நம்பிகளின் ஸ்ரீபாதத்திலே சென்று தெண்டனிட்டு நிற்க, நம்பி இவர் கையைப் பிடித்துக் கொண்டு போய் ஏகாந்தமாக மேல் தளத்திலேயேறிப் படிக்கதவை மூடியெழுந்தருளியிருந்து ஒருவர்க்குஞ் சொல்லாதபடி தம் திருவடிகளைத் தொடுவித்துச் சூளுறவுக் கொண்டு நிர்ஹேதுக க்ருபையாலே பரம ரஹஸ்யமான சரமச்லோகப் பொருளையருளிச் செய்து, இதை அநதிகாரிகளுக்கு இடாதபடி பேணிக் கொண்டு போரும் என்று நியமித்தருள, எம்பெருமானார் "அடியேன் அப்படிப்பட்டவர்களுக் குச் சொல்லேன்; கூரத்தாழ்வானொருவர்க்குச் சொல்லாதிருக்க வொண்ணாதே" என்ன "ஆகில் ஒரு ஸம்வத்ஸரம் சுச்ரூஷை கொண்டு சொல்லும்" என்று நியமித்தருள, ஸ்வாமியும் விடைபெற்றுக் கோயிலேற வெழுந்தருளினார்.

52. அப்போது ஆழ்வான் அவர் திருவடிகளிலே தண்டனிட்டு நிற்க, உடையவரும் "வாராய் ஆழ்வான்! சரமச்லோக பரம ரஹஸ்யார்த்தத்தை நம்பிகள் எனக்கு உபதேசித்தருளி இவ்வர்த்த விசேஷத்தை ஒருவர்க்கும் செவிப்படாதபடி பேணிக் கொண்டிருக்குமாறு நியமித்தருளினபோது ஆழ்வானொருவர்க்கு மாத்திரம் அடியேன் இதனை வெளியிடாதிருக்க முடியாதேயென்று நான் விண்ணப்பஞ் செய்ய, ஆழ்வானுக்கு இவ்வர்த்தம் கேட்க அதிகாரமுண்டேயாகிலும் பல்வகையாலும் அவருடைய அத்யவஸாயத்தைப் பரீக்ஷித்தறிந்து ஒரு ஸம்வத்ஸரம் சுச்ரூஷை கொண்டு செல்லும் என்று நியமித்தருளினார்" என்று ஆழ்வானை நோக்கி யருளிச் செய்ய, அது கேட்ட ஆழ்வானும் 'மின்னின்னிலையில மன்னுயிராக்கைகள்' என்ற பாசுரத்தைத் திருவுள்ளம் பற்றி ஒரு ஸம்வத்ஸரம் இவ்வுடலுக்கு நிலையுண்டோ இல்லையோவென்று வியாகுலப்பட்டு

ஆலோசித்து இவ்வர்த்த விசேஷத்தைப் பெற்றாலல்லது தரித்திருக்க முடியாத தன்மையாலே ஆசார்யனது திருமாளிகை வாசலிலே ஒரு மாஸம் பட்டினி கிடக்கை ஸம்வத்ஸர சுச்ருஷையோடொக்குமென்று சாஸ்த்ரமுண்டென்று அறிந்து அங்ஙனமே மாஸோபவாஸம் கிடந்து அவ்வர்த்த விசேஷத்தைப் பெற்றார்.

53. பிறகு முதலியாண்டானும் வந்து தொழுது பிரார்த்திக்க, "நான் ஆழ்வானொருவர்க்கே சொல்ல நியமனம் பெற்று வந்தேன். நீர் நம்பி பக்கலில் சென்று கேளும்" என்று விடை கொடுத்தருள, அவரும் திருக்கோட்டியூரேறச் சென்று ஆறுமாஸம் காத்திருந்தும் அருள் பெறாமலிருந்து ஒருநாள் கனக்க ப்ரார்த்திக்கையில் "முக்குறும்பும் போனால் எம்பெருமானார் தாமே ப்ரஸாதிப்பர், போய்க் கேளும்" என்று விடை தந்தனுப்பிவிட ஆண்டானும் கனத்த ஆர்த்தியோடே உடையவர் திருவடிகளிலே வந்து விழ மிகவும் உகப்போடே ஆண்டானுக்கும் அதையுபதேசித்தருளினார்.

54. திருமாலையாண்டானிடத்துத் திருவாய்மொழி கேட்டல்: சில நாளைக்குப் பின்பு திருக்கோட்டியூர்நம்பி, கோயிலுக்கெழுந்தருளித் தம்முடைய ஸப்ரஹ்மசாரியான திருமாலை யாண்டானை எம்பெருமானாரிடத்தே கொண்டு நிறுத்தி இவர் பக்கலிலே திருவாய்மொழிக்கு அர்த்தம் கேளுமென்று ஸ்வாமிக்கு நியமித்துத் தாம் புறப்பட்டெழுந்தருளினார். அன்று தொடங்கித் திருவாய்மொழி காலக்ஷேபம் நடந்துவாரா நின்றது. ஆண்டான் ஆளவந்தார் திருவடிகளிலே கேட்ட அர்த்தங்களை யருளிச் செய்து வருகையில் எம்பெருமானார் ஆங்காங்குச் சில அர்த்த விசேஷங்களையும் யோஜநா விசேஷங்களையும் பணித்துவர, இவர் விச்வாமித்ர ஸ்ருஷ்டியாக ஸ்வச்சந்தமாய் ஏதோ சொல்லி வருகின்றாரென்று திருவுள்ளம் புண்பட்ட ஆண்டான் இடையிலே காலக்ஷேபத்தை நிறுத்திவிட, இதையறிந்த திருக்கோட்டியூர்நம்பி கோயிலேற வந்து ஆண்டானை விசாரிக்கையில் உடையவர் சொன்ன சில மாறு பொருள்களை யெடுத்துரைத்து மநஸ்தாபஹேதுவை விளக்க, அப்போது நம்பி சொன்னபடி – "இவ்வர்த்தமும் ஆளவந்தாரருளிச் செய்ய நாம் கேட்டிருக்கிறோம்; ஸாந்தீபநி பக்கலிலே க்ருஷ்ணன் வேதமோதினாப் போலே காணும் உம்மிடத்திலே உடையவர் திருவாய்மொழி கேட்கிறதும்; ஆளவந்தார் திருவுள்ளத்திலுள்ள அர்த்தமொழிய இவர்க்கு வேறொன்றும் தோன்றாது காணும், இவர்க்கு நீர் அஞ்ஜாத ஜ்ஞாபநம் பண்ணுவதாக நினையாதேயிருக்க ப்ராப்தம்" என்று.

55. பிறகு நம்பி அவ்வாண்டானையும் பெரிய நம்பியையும் கூட்டிக் கொண்டு உடையவர் மடத்தேறவெழுந்தருள, ஸ்வாமியும் உள்ளம் பூரித்துத் தொழுது நிற்க, பெரிய நம்பியும் திருக்கோட்டியூர் நம்பியும் திருமாலையாண்டானை நோக்கி "திருவாய்மொழி விட்டவிடம் தொடங்கி நீரே பலகால் அநுவர்த்தித்தாகிலும் ப்ரபந்தத்தைத் தலைக்கட்டும்" என்று நியமித்தருள, அன்று தொடங்கி அப்படியே நடந்து போந்தது. "ஆளவந்தார்க்கு நான் ஏகலவ்யன் காணும்" என்று இடையிடையே ஆண்டானை நோக்கி உடையவர் அருளிச் செய்யும்படியாயிருந்தது. ஆளவந்தார் பக்கலில் கேளாத அர்த்தங்களும் இங்கே கேட்கப் பெற்றோமென்று ஆண்டானும் போர உகக்கும்படியாயிற்று.

56. ஸ்வாமி மாதுகரத்தை நிறுத்திக் கிடாம்பி யாச்சானைப் பணிகொள்ளுதல்: 'தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்தி வைத்தான் வாழியே' என்கிறபடியே ஸ்ரீரங்கநாத திவ்யாலய ஸாம்ராஜ்ய நிர்வாஹதுரந்தரராய் ஸ்வாமி வாழ்ந்தருளுங் காலத்திலே கோயில் கைங்கர்யபரர்கள் ஸதாசாரமில்லாமலிருக்கக் கண்டு அவர்களைத் திருத்திப் பணிகொள்ளத் திருவுள்ளம்பற்றி நெருக்கிக் கொண்டு போரா நிற்கையில், அவர்களிலே சிலர் 'இவர் கோற்கீழே நம்மால் குடிவாழ முடியாது. இவரை மாய்ப்பதே நலம்' என்று கொண்டு ஸ்வாமி மாதுகரத்திற்கெழுந்தருளுமிடத்து விஷங்கலந்த ப்ரஸாதமிடும்படி பற்பல நிர்ப்பந்தத்தாலே செய்விக்க, அப்படியே ஒரு நாள் கிடைத்த ப்ரஸாதத்தின் தீமையை யறிந்து அதைத் திருக்காவேரியிலே கரைத்திட்டு அன்று தொடங்கிச் சிலநாள் வரையில் உபவாஸமாகவே யெழுந்தருளியிருக்க, இதைத் திருக்கோட்டியூர் நம்பி கேட்டருளி அப்போதே புறப்பட்டுக் கோயிலுக்கெழுந்தருளி, ஸ்வாமியினுடைய சிஷ்யவர்க்கங்களிலே கிடாம்பியாச்சானொருவரே திருமேனிக்கு மிகவும் பரிவரான கிங்கரர் என்றறிந்து அவரைத் திருமடைப்பள்ளிக் கைங்கர்யத்திலே நியமித்து மீண்டெழுந்தருளினார். அன்று முதலாக ஆச்சானே ஸ்வாமி திருவுள்ளத்திற்குப் பாங்கான பரிசாரகராக இருந்து வந்தார். வேதாந்த வாசிரியர் 'எதிவரனார் மடைப்பள்ளி வந்த மணமெங்கள் வார்த்தையுள் மன்னியதே' என்ற பாசுரத்தினாலும் 'இதி யதிராஜ மஹாநஸபரிமள பரிவாஹ வாஸிதாம்' என்ற ச்லோகத்தினாலும் இவ்வரலாற்றை ஸூசிப்பித்தருளினார்.

57. யஜ்ஞமூர்த்தியைத் திருத்தி அருளாளப்பெருமாளெம்பெருமானாராக ஆட்கொள்ளுதல்: யஜ்ஞமூர்த்தி யென்னுமொரு மாயாவாதி ஸம்ந்யாஸி எம்பெருமானாருடைய வைபவங்களைக் கேட்டு அவரோடே தர்க்கித்து வெற்றிபெற வேணுமென்று விரும்பிக் கோயிலிலே ஸ்வாமி மடத்திலே வந்து ஸேவித்து "நான் கேட்கிற கேள்விகளுக்கெல்லாம் நீர் விடை கூறவேணும்; த்ருப்திகரமாக விடைபெற்றேனாகில் உமக்கு சிஷ்யனாகக் கடவேன்" என்று சொல்ல ஸ்வாமியும் இசைந்தருள, பதினேழு நாள்வரையில் வெற்றி தோல்வியின்றியே வினாவிடை செல்லாநிற்க, முடிவில் உத்தரம் அருளிச் செய்ய வேண்டிய பொறுப்பு ஸ்வாமிபக்கலிலே வந்து நின்று விஷயம் தோன்றாமே யிருக்கையில் 'நாளைக்கு ஆகிறது' என்று சொல்லி ஸபா விஸர்ஜநமாயிற்று. பிறகு ஸ்வாமியின் திருவுள்ளம் மிகவும் வியாகுலப்பட்டு, தம் திருவாராதனமான பேரருளாளரைத் திருவடி விளக்கி அமுது செய்யப் பண்ணி "ஆழ்வார் தொடங்கி ஆளவந்தாரளவாக இத்தனை காலம் ஒரு குறையுமின்றியே விளங்கி வந்த இந்த தரிசனம் இன்று அடியேனால் பங்கமடையக் கடவதோ? இப்படியும் ஒரு லீலை கொண்டாடத் திருவுள்ளமாயிற்றோ?" என்று விண்ணப்பஞ் செய்து தாம் அமுது செய்யாமலே கண் வளர்ந்தருளினார்.

58. அன்றிரவு பேரருளாளர் கனவிலே யெழுந்தருளிக் காட்சி தந்து மாயாவாதியின் வாயடங்கும்படியான சில அர்த்த விஷேங்களை ஸ்புரிக்கச் செய்து மறைய, ஸ்வாமியும் சிற்றஞ் சிறுகாலை யெழுந்து பரமஸந்துஷ்டராய் நித்யாநுஷ்டானங்களை முடித்துக் கொண்டு ப்ரஸன்ன கம்பீரராய் விசாரகோஷ்டிக்கு எழுந்தருள, அவ்வளவிலேயே யஜ்ஞமூர்த்தி இன்று நமக்குத் தோல்வியே திண்ணமென்று நிச்சயித்து

அப்போதேயெழுந்து ஸ்வாமி திருவடிகளிலே ஸாஷ்டாங்க ப்ரணாமம் பண்ணி நின்று "அடியேனை அங்கீகரித்தருளவேணும்" என்று கைகூப்பிப் பிரார்த்திக்க, "மேலே விஷய விசாரம் நடைபெற வேண்டியிருக்க இதுவென்?" என்று ஸ்வாமி கேட்க; அதற்கு யஜ்ஞமூர்த்தி "ஸ்வாமிந்! தேவரீருக்குப் பெரிய பெருமாள் ப்ரத்யக்ஷமான பின்பு தேவரீரென்றும் பெருமாளென்றும் வாசியுண்டோ? இனி அடியேன் தேவரீர் ஸந்நிதியில் வாய்திறந்து ஒரு வார்த்தை சொல்ல ப்ராப்தியில்லை; இந்த ஆத்மா இதுவரையில் அநர்த்தப்பட்டது போதும்; இனியும் அநர்த்தப்படாதபடி நோக்கியருள வேணும்" என்று கனக்க ப்ரார்த்தித்து ஸ்வாமியின் இசைவும் பெற்று அப்போதே ஏகதண்டத்தை முறித்தெறிந்து ப்ராயசித்த பூர்வகமாய் சிகாயஜ்ஞோபவிதங்களையும் பஞ்சஸம்ஸ்காரங் களையும் பெற்று முக்கோல் பிடித்த முனியாகி சாஸ்த்ரப்படி ஆசார்யனுடைய நாமத்தையே வஹிக்க விரும்பி பிரார்த்தித்தார்.

59. ஸ்வாமியும் பேரருளாளனுடைய ப்ரஸாதமடியாகவே இவர் ஆட்பட்டாரென்கிற உபகார ஸ்ம்ருதி உலகப்ரஸித்தமாம்படி அருளாளப்பெருமாளெம்பெருமானார் என்று திருநாமம் சாத்தியருளினார். உடனே அவரை யழைத்துக் கொண்டு போய்ப் பெரிய பெருமாளை ஸேவிக்கப் பண்ணிச் சிறப்புகளும் பெறுவித்து, அன்று முதலாகவே திருப்பல்லாண்டு தொடங்கி நாலாயிரமும் ஓதுவித்து, மற்றும் தத்வசிக்ஷைகளும் செய்தருளினார்.

60. அக்காலத்திலே, அனந்தாழ்வான் எச்சான், தொண்டனூர்நம்பி, மருதூர்நம்பி என்னுமிவர்கள் எம்பெருமானார் திருவடிகளிலே ஆச்ரயிக்க வேணுமென்று வர, ஸ்வாமி அவர்களை அருளாளப்பெருமாளெம்பெருமானார் திருவடிகளிலே ஆச்ரயிப்பித்தருளினார். அப்போது அவர் அஞ்சி நடுங்கி அவ்வடியார்களை நோக்கி "குருவியின் கழுத்திலே பனங்காயைக் கட்டினாற்போலே ஸ்வாமி செய்தருளினாராகிலும், நீங்கள் ஸ்வாமி திருவடிகளே சரணமென்றிருங்கள்" என்று நியமித்தருளினார்.

61. அனந்தாழ்வான் திருமலையில் வழுவிலா அடிமைக்கு நியமனம் பெறுதல்: எம்பெருமானார் பகவத் விஷய காலக்ஷேபம் நடத்தி யருளுகையில் 'ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி'யென்கிற திருவாய்மொழி நடவா நிற்க, கோஷ்டியில் திருமுன்பேயிருந்த சிஷ்யர்களை நோக்கி "ஆழ்வார் 'திருவேங்கடத் தெழில் கொள் சோதி யெந்தை தந்தை தந்தைக்கு ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலாவடிமை செய்ய வேண்டு நாம்' என்று பாரித்த குறைதீரத் திருவேங்கடமுடையான் பரிஸரத்திலே யிருந்து நித்ய கைங்கர்யம் பண்ண விருப்பமுடையார் ஆரேனுமுளரோ?" என்று வினவியருள, குளிரருவி வேங்கடமாகையாலே எல்லாரும் குளிருக்கு அஞ்சி விடை கூறாதிருக்க, அனந்தாழ்வான் எழுந்து "அடியேனுக்கு நியமித்தருள வேணும்" என்றார். அது கேட்டு உகந்த எம்பெருமானார் "நீரொருவரே ஆண்பிள்ளை" என்று போரவும் கொண்டாடித் தழுவியருளி விடை கொடுத்தருளினார்.

62. அது முதலாக அனந்தாண்பிள்ளை என்று அவர்க்கு ப்ரஸித்தியாயிற்று. அன்றே அவர் திருமலைக்கு விடை கொண்டு திருவேங்கடமுடையானைத் திருவடி தொழுது

திருநந்தவனஞ் செய்து அதற்கு இராமாநுசன் என்று திருநாமஞ் சாத்தி அநேகவிதமான கைங்கரியங்களை அற்புதமாக நடத்திக் கொண்டிருக்கையில் அதை நேரில் கண்டு மகிழவேணுமென்கிற திருவுள்ளம் எம்பெருமானார்க்குண்டாக பகவத்விஷய காலக்ஷேபத்தை விரைவாக நடத்திச் சாத்தியருளினார்.

63. உடையவர் திருமலையாத்திரையும் திருமலை நம்பியிடம் ஸ்ரீராமாயணம் கேட்டலும்: பெருமாள் கோயில் திருமலை முதலான சில திருப்பதிகளை ஸேவித்துவரப் பெரிய பெருமாளிடத்தில் விடைபெற்றுக் கொண்டு சிஷ்ய வர்க்கங்களுடனே புறப்பட்ட எம்பெருமானார் வழியடைவே திருப்பதிகளையெல்லாம் தொழுது கொண்டு திருமலையடிவாரத்தே திருப்பதியிற் சேர்ந்து திருமலையை மிதித்தேறத் திருவுள்ளம் பற்றாமல் கீழேயேயிருந்து விடுவதாகத் திருவுள்ளம் பற்றியிருக்கையில் அனந்தாழ்வான் முதலானோர் இதையறிந்து வந்து, "இப்படியும் திருவுள்ளம் பற்றலாமோ? நாங்களும் இனித் திருமலையை விட்டு இங்கே தான் படுகாடு கிடக்க வேண்டும் போலும்" என்ன; அதையே திருமலையப்பனுடைய நியமனமாகக் கொண்டு புறப்பட்டுத் திருமலை மேலெழுந்தருளிக் கோனேரியிலே நீராடி அப்பனைக் கண்களாரளவும் நின்று ஸேவித்து அனந்தாழ்வானுடைய திருப்பணிகளையும் கடாக்ஷித்து உள்ளம் பூரித்து 'வளர்த்ததனால் பயன் பெற்றேன் வருக'வென்று அவரை மிகவுகந்து மூன்று நாள் அவ்விடத்தில் அமுது செய்யாமலே யெழுந்தருளியிருந்து விடைபெற்றுக் கொண்டு கீழேயிறங்கி மாதுலரான திருமலைநம்பி திருமாளிகையிலேயே ஒரு ஸம்வத்ஸரமிருந்து, இதிஹாஸச்ரேஷ்டமான ஸ்ரீராமாயணத்தின் விசேஷார்த்தங்களை அதிகரித்தார்.

64. உடையவர் எம்பாரைப் பெற்றுக் கொண்டு காஞ்சீபுரி வருதல்: உடையவர் ஸ்ரீராமாயண காலக்ஷேபம் முடித்துப் புறப்படுகையில் மாதுலரான திருமலை நம்பி உவவப்பின் மிகுதியினால் இவர்க்கு ஏதாவது கொடுக்க வேணுமென்கிற பாரிப்புத் தோற்ற இருக்கையில் அதனையறிந்த உடையவர் "ஸ்வாமிக்கு அடியேன் ஸமர்ப்பிக்க வேண்டியது போக, அடியேனுக்கு ஸ்வாமி கொடுப்பதென்று ஒன்றுண்டோ? அப்படி ஒன்று கொடுக்கத் திருவுள்ளமாகில் நம் கோவிந்தப் பெருமாளைத் தந்தருள வேணும்" என்று விண்ணப்பஞ் செய்ய; நம்பியும் அதற்கிசைந்து உடனே கோவிந்தப் பெருமாளை (எம்பாரை) அழைத்து "கோவிந்தா! இனி நம் உடையவரை அநுவர்த்தித் திருப்பாயாக" என்று சொல்லி உதகதாராபூர்வமாகக் கொடுத்தருளினார். வெகு ஆனந்தத்துடன் உடையவர் அவரைக் கூட்டிக் கொண்டு திருக்கடிகை முதலான திவ்ய தேசங்களை ஸேவித்துக் கொண்டு கச்சிப் பேரருளாளன் திருவடிவாரத்தில் வந்து சேர்ந்தார்.

65. எம்பார் திரும்பவும் திருப்பதிக்குச் சென்று மீளுதல்: கோவிந்தப் பெருமாளுடன் கச்சியில் வாழ்ந்திருக்கையில், ஸ்வாசார்யரான திருமலை நம்பியைப் பிரிந்த கிலேசத்தினால் உடம்பு வெளுத்து முகம் உறாவியிருந்தார் கோவிந்தர். அதுகண்ட உடையவர் அவருடைய கருத்தையறிந்து "கோவிந்தரே! திருப்பதிக்குச் சென்று நம்பியை ஸேவித்து வாரும்" என்று இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்களைக் கூட்டி யனுப்பிவிட்டுத் தாம் திருக்கச்சி நம்பியுடனே பேரருளாளனை ஸேவித்துக் கொண்டிருந்தார். திருப்பதிக்குச்

சென்ற எம்பார் அங்குத் திருமலைநம்பி திருமாளிகை வாசலிலே தெண்டன் ஸமர்ப்பித்து நிற்க, அங்குள்ளார் அவரைக் கண்டு உள்ளே சென்று நம்பிக்கு அறிவிக்க, அவரும் திருவுள்ளங் கலங்கி ''பித்தனைப் போகச் சொல்லுங்கோள்'' என்ன: ''இத்தனை தூரம் சிரமப்பட்டு வந்தவரை யழைத்து ஸேவையும் ஸ்ரீபாத தீர்த்தமும் தளிகை ப்ரஸாதமும் தந்தருள வேண்டாவோ?'' என்று தேவிகள் சொல்லவும் ''விற்ற பசுவுக்குப் புல்லிடுவாருண்டோ?'' என்று சொல்லி விமுகராயேயிருந்து விட்டார் நம்பிகள். இப்படியாகவே கோவிந்தப்பெருமாள் அங்கு நசையற்றுத் திருவாசலிலே தெண்டனிட்டு, வந்த ஸ்ரீவைஷ்ணவர்களிருவரோடு கூடவே பெருமாள் கோயிலில் உடையவரிடம் வந்து சேர, நாளடைவில் எல்லாருமாய்த் தென்னரங்கம் சென்று சேர்ந்தனர். கோவிந்தப்பெருமாள் வைராக்யம் முற்றி ஸம்ந்யாஸாச்ரமத்தை ஸ்வீகரித்து ஆசார்யருடைய நாமைகதேசமாக எம்பார் என்கிற திருநாமத்தைப் பெற்று உபய வேதாந்த க்ரந்த பரிச்ரமத்திலே தலை சிறந்து வாழா நின்றார்.

66. ஸ்ரீபாஷ்யமருளிச் செய்ய முயலுதல்: எம்பெருமானார் ப்ரஹ்மஸூத்ரத்திற்கு ஸ்ரீபாஷ்யம் செய்தருளி ஆளவந்தார் திருவுள்ளக் குறையை நீக்கக்கருதி அதற்காக பகவத் போதாயந மஹர்ஷியின் வ்ருத்தி க்ரந்தத்தைக் கடாக்ஷிக்கத் திருவுள்ளமாய் அந்த ஸ்ரீகோசம் காச்மீர மண்டலத்தில் சாரதாபீடத்தி லுள்ளதென்றுணர்ந்து ஆழ்வான் முதலானாரையும் கூட்டிக் கொண்டு யாத்திரை யடைவிலே அங்கேற எழுந்தருளித் தம்முடைய வைபவங்களைக் காட்டி வசீகரிக்கப்பட்ட ஸரஸ்வதீ பண்டாரத் தலைவரிடத்தில் நின்றும் அந்த போதாயந வ்ருத்தீக்ரந்தத்தை வாங்கி அங்கேயிருந்து கடாக்ஷித்துக் கொண்டிருந்தார். மஹா மேதாவியான ஆழ்வானும் தாம் ஒரு பக்கத்தில் வீற்றிருந்து இரண்டாவது அத்யாயம் முதலாக மேலுள்ள பகுதியையெல்லாம் கடாக்ஷித்து நெஞ்சில் தேக்கிக் கொண்டார். உடையவர் முதலத்யாயம் கடாக்ஷித்துத் தலைக்கட்டினவுடனே அங்குள்ள புறமதத்து வித்வான்களின் துர்ப்போதனையினாலே மனம் மாறின ஸரஸ்வதீ பண்டாரத் தலைவர் அந்த கோசத்தை நிர்ப்பந்தித்து வாங்கி உள்ளே வைத்திட, 'குறையும் காணப் பெற்றிலோமே!' என்று உடையவர் சிந்தித்திருக்க அதுகண்ட ஆழ்வான் மேற் பகுதிகளைத் தாம் பார்த்துத் தரித்துக் கொண்டிருக்கிறபடியை விஜ்ஞாபித்து ஸ்வாமியைத் தேற்றினார். பிறகு பயணகதியிலே தென்னரங்கத் திருப்பதி சேர்ந்து ஆழ்வானை உசாத் துணையாகக் கொண்டு ஸ்ரீபாஷ்யமிட்டருளித் தலைகட்டினார் இதற்கு ஸங்க்ரஹமாக வேதாந்த தீபம், வேதாந்த ஸாரம் என்னுமிரண்டு க்ரந்தங்களையுமருளிச் செய்தார்.

67. சோழ ராஜனுடைய உபப்லவத்திற்கு அஞ்சி ஸ்வாமி மேல் நாட்டுக்கெழுந்தருளல்: ஆழ்வான் உடையவர்க்கு உசாத் துணையாயிருந்து தர்சந நிர்வாஹம் பண்ணியருளுகிற காலத்திலே, ராஜேந்த்ர சோழபுரத்தில் அரசாண்டுவந்த குலோத்துங்க சோழ ராஜன் துஷ்ட சைவனாகையாலே கள்ளப் பொய்ந் நூல்களை மெய்ந்நூலாகக் கொண்டு தானும் தன் புரோஹிதனுமாக நாட்டிலுள்ள வித்வான்களையெல்லாந் திரட்டி ''சிவாத் பரதரம் நாஸ்தி'' என்று எழுத்திடச் சொல்லி நிர்ப்பந்திக்க, சிலர் அவனுக்கு அஞ்சியும் சிலர் பொருட்கும் பூமிக்குமாசைப்பட்டும் அப்படியே யெழுத்திட்டார்கள். அப்போது அவ்வரசனிடத்துச் சிறிது

மேன்மை பெற்றிருந்த நாலூரான் என்னுமொரு வைஷ்ணவன் அவ்வரசனை நோக்கி "எங்களின் ராமாநுசன் எழுத்திட்டாலன்றோ எழுத்திட்டதாவது; மற்றையோர் இட்டாலென்ன? இடாவிடிலென்ன?" என்று கூற, அது கேட்ட அரசனும் அப்போதே இராமாநுசனை யழைத்து வரும்படி ஆள்களை அனுப்பினான்.

68. அவர்களும் உடையவர் மடத்தேறச் சென்றவளவிலே இந்தச் செய்தியையுணர்ந்து ஆழ்வான் 'ஸ்வாமி ராஜசபைக்கு எழுந்தருள்வராகில் அவர்க்கு அங்கு ஏதாவது அபாயம் விளையக் கூடும்; உலகுக்கெல்லாம் உயிரான அவரைக் காட்டிக் கொடுக்கத் தகாது. நாமே அவருடைய கோலம் பூண்டு ஸபைக்குச் செல்வோம்; கெடுதல் ஏதாவது நேர்ந்தாலும் நம்மோடே போகட்டும்' என்று கருதி, அப்போது எம்பெருமானார் நீராட்டத்திற்கு எழுந்தருளியிருப்பதறிந்து அவருடைய காஷாயத்தையும் த்ரிதண்டத்தையும் தரித்துக் கொண்டு அந்த ராஜபுருஷர்களுடனே போகப் புறப்படும்போது பெரிய நம்பியும் சில முதலிகளும் தாமுங் கூட வருவதாகப் புறப்பட, அவர்களுடன் ஆழ்வான் ராஜ ஸபைக்கெழுந்தருளினர்.

69. பிறகு உடையவர் நீராட்டஞ் செய்து எழுந்தருளி த்ரிதண்ட காஷாயாதிகளைத் தேடின வளவிலே "கூரத்தாழ்வான் தரித்துக் கொண்டு ராஜ புருஷர்களுடனே யெழுந்தருளினார்" என்று முதலியாண்டான் விண்ணப்பஞ் செய்ய, ஆகில் அவருடைய வெள்ளையைத் தாருங்கள் என்று ஆழ்வானுடைய திருப்பரிவட்டத்தை வாங்கித் தாம் சாத்திக் கொண்டு ஆழ்வானுக்கும் பெரிய நம்பிக்கும் என்ன தீங்கு நேருமோவென்று சிந்தித்துத் துவண்டிருக்க "இனி ஸ்வாமி இவ்விடத்தில் எழுந்தருளியிருக்கை உசிதமன்று" என்று அனைவரும் விஜ்ஞாபிக்க, உடையவரும் உடனே புறப்பட்டெழுந்தருளித் திருநாராயணபுரம் சேர்ந்தார்.

70. (எம்பெருமானார் காலத்திலேயே யெழுந்தருளியிருந்த ப்ராமாணிக பண்டித சிகாமணியான கருடவாஹந பண்டிதர் செய்தருளின திவ்யஸூரி சரிதத்தில் பதினெட்டாம் ஸர்க்கத்திலும், எம்பெருமானார்க்கு அத்தாணிச் சேவகராயிருந்த வடுகநம்பி பணித்த யதிராஜ வைபவத்தின் தொண்ணூற்றைந்தாம் சுலோகத்திலும் இக்கதை விளக்கமாக வுரைக்கப் பட்டிருத்தலால் இதில் யார்க்கும் விப்ரதிபத்தியுண்டாகக் காரணமில்லை. உடையவர்க்குத் தெரியாமலே ஆழ்வான் ஸ்வபுத்தியாலே த்ரிதண்ட காஷாயங்களைத் தரித்து ஸபைக்கெழுந்தருளினதாகவும், சோழ ராஜனிடத்தில் நின்றும் ஆட்கள் வந்தவுடனே எம்பெருமானார் ஆழ்வான் ஆண்டான் முதலானார் பலருங் கூடிக் கலந்து யோசித்து, உடையவர் வெள்ளை சாத்திக் கொண்டு வெளியேறிவிட வேண்டியதென்றும் ஆழ்வான் யதிராஜ வேஷம் பூண்டு ஸபைக்கு எழுந்தருள வேண்டியதென்றும் நிஷ்கர்ஷிக்கப்பட்டு அப்படி நடந்ததாகவும்–இங்ஙனே இரண்டு வகையாக நூல்களிற் காணப்படுவதுண்டு. இவ்விரண்டு வகையும் ஸம்பாவிதமேயாகையால் இவற்றில் விப்ரதிபத்திக் கிடமில்லையென்க.)

71. ராஜ ஸபையில் நடந்த செய்திகளும் பின்பு நடந்த செய்திகளும்: ஆழ்வானும் பெரியநம்பியும் சோழராஜன் ஸதஸ்ஸிலேயெழுந்தருளின பிறகு அங்கு விசேஷமாக

சாஸ்த்ர விசாரங்கள் நடைபெற்று 'சிவாத் பரதரம் நாஸ்தி' என்ற ராஜ வாக்யத்தின் மீது இகழ்ந்துரைக்கப்பட, சோழன் கடுஞ் சினத்தனனாய் "இவ்விருவருடைய கண்ணையும் கீண்டு விடுங்கள்" என்று சேவகர்கட்குக் கட்டளையிட, ஆழ்வான் சோழனைக் குறித்து "நீ மஹாபாதகியாகையால் உன்னைப் பார்த்த கண்கள் எனக்கு ஆகாது" என்று சொல்லித் தாமே தமது திருவுகிர்களாலே கீறிக் கண்ணை வாங்கியெறிய, பின்பு ராஜ ஸேவகர்கள் பெரிய நம்பியைப் பிடித்துக் கொண்டு போய்ச் சோழன் சொற்படி செய்து ராஜத்வாரத்தில் நின்றும் புறப்படவிட, ஆழ்வான் 'தர்சநத்துக்காக தர்சனம் கொடுக்கப் பெற்றோமே!' என்று மகிழ்ந்திருக்க, பெரிய நம்பி வ்ருத்தராகையாலே அவ்வேதனை பொறுக்க மாட்டாமல் அங்கேயொரு கொல்லைத் தலைமாட்டிலே ஆழ்வான் மடியிலே திருமுடியும் தம் திருமகளான அத்துழாய் மடியிலே திருவடிகளுமாய் இளைத்துக் கண் வளர்ந்தருளி ஆளவந்தார் திருவடிகளை த்யானித்துக் கொண்டு அங்கேயே திருநாட்டுக்கெழுந்தருளினார்.

72. பின்பு ஸ்ரீபராந்தகபுரமென்னும் அக்ரஹாரத்தில் நின்றும் வந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் பெரியநம்பியை அங்கே ஸம்ஸ்கரித்துத் திருப்பள்ளிப் படுத்து ஆழ்வானை எழுந்தருள்வித்துக் கொண்டு போய்த் தங்கள் ஊரிலே யிருத்தித் திருக்கண் வேதனை தீரமாறு சிலகாலம் உபசரித்துப் பிறகு திருவரங்கம் பெரிய கோயிலிலே கொண்டு சேர்த்தார்கள். தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்தி வைத்த எம்பெருமானாரைப் பிரிந்து அங்கே வாழகில்லாமல் கோயில் வாஸத்தை விட்டிட்டுத் திருமாலிருஞ்சோலையில் வாஸத்தை விரும்பிப் பயணகதியாகப் புறப்பட்டெழுந்தருளினார். வழியிடையே எழுந்தருளும்போது தம்முடைய மனத்துயரங்கள் நினைவுக்கு வாராதிருக்கும்படி எம்பெருமானுடைய ஸ்வரூப ரூபகுண விபூதிகளை நினைந்து நெஞ்சு கனிந்திருக்கக் கருதி ஸ்ரீவைகுண்டஸ்தவம் அதிமாநுஷஸ்தவம் என்ற அற்புதமான இரண்டு ஸ்தோத்ரங்களையருளிச் செய்து கொண்டே திருமாலிருஞ்சோலைக்கு எழுந்தருளி அங்கே பலவாண்டுகளெழுந்தருளி யிருந்து ஸுந்தரபாஹுஸ்தவமும் அருளிச் செய்தார். அவ்வளவிலே அந்த மஹாபாதகியான சோழன் கழுத்திலே புண்ணாகிப் புழுத்து மாண்டானென்ற செய்தி கேள்விப்பட்டு ஆழ்வான் அழகர் ஸன்னிதியிலே விடைபெற்று மீண்டும் கோயிலேறவெழுந்தருளினார்.

73. எம்பெருமானார் மேல் நாட்டில் பன்னிரண்டு ஸம்வத்ஸரமளவும் எழுந்தருளி யிருந்து அவ்விடத்தில் திருநாராயணனைத் திருப்ரதிஷ்டை செய்தருளியும், ஐம்பத்திருவர் என்னும் ஸ்ரீவைஷ்ணவ வகுப்பை நியமித்தருளியும், மற்றும் பலபல அதிமாநுஷக்ருத்யங்களைச் செய்தருளியும், திருநாராயணனுக்கு ஆழ்வார் பாடல் இல்லையென்கிற குறை தோன்றாதபடிக்கு 'திருநாரணன்தாள் காலம் பெறச் சிந்தித்து உய்மினோ' என்னுமடியைக் கொண்ட ஒரு நாயகப் பதிகத்தை ஸமர்ப்பித்தருளினதும், அவ்வளவிலே மஹா பாதகியான சோழன் புழுத்துமாண்டு திருவரங்கச் செல்வம் குறையற்றிப்பதைக் கேட்டருளி ஸ்ரீரங்கத்திற்குப் புறப்பட்டருளினதும் முதலான வைபவ விஸ்தாரங்கள் ஸ்ரீராமாநுஜார்ய திவ்ய சரிதையிலும் மற்றும் பலபல வைபவக்ரந்தங்களிலும் காணத்தக்கன.

மேன்மை பெற்றிருந்த நாலூரான் என்னுமொரு வைஷ்ணவன் அவ்வரசனை நோக்கி ''எங்களின் ராமாநுசன் எழுத்திட்டாலன்றோ எழுத்திட்டதாவது; மற்றையோர் இட்டாலென்ன? இடாவிடிலென்ன?'' என்று கூற, அது கேட்ட அரசனும் அப்போதே இராமாநுசனை யழைத்து வரும்படி ஆள்களை அனுப்பினான்.

68. அவர்களும் உடையவர் மடத்தேறச் சென்றவளவிலே இந்தச் செய்தியையுணர்ந்து ஆழ்வான் 'ஸ்வாமி ராஜசபைக்கு எழுந்தருள்வராகில் அவர்க்கு அங்கு ஏதாவது அபாயம் விளையக் கூடும்; உலகுக்கெல்லாம் உயிரான அவரைக் காட்டிக் கொடுக்கத் தகாது. நாமே அவருடைய கோலம் பூண்டு ஸபைக்குச் செல்வோம்; கெடுதல் ஏதாவது நேர்ந்தாலும் நம்மோடே போகட்டும்' என்று கருதி, அப்போது எம்பெருமானார் நீராட்டத்திற்கு எழுந்தருளியிருப்பதறிந்து அவருடைய காஷாயத்தையும் த்ரிதண்டத்தையும் தரித்துக் கொண்டு அந்த ராஜபுருஷர்களுடனே போகப் புறப்படும்போது பெரிய நம்பியும் சில முதலிகளும் தாமுங் கூட வருவதாகப் புறப்பட, அவர்களுடன் ஆழ்வான் ராஜ ஸபைக்கெழுந்தருளினர்.

69. பிறகு உடையவர் நீராட்டஞ் செய்து எழுந்தருளி த்ரிதண்ட காஷாயாதிகளைத் தேடின வளவிலே ''கூரத்தாழ்வான் தரித்துக் கொண்டு ராஜ புருஷர்களுடனே யெழுந்தருளினார்'' என்று முதலியாண்டான் விண்ணப்பஞ் செய்ய, ஆகில் அவருடைய வெள்ளையைத் தாருங்கள் என்று ஆழ்வானுடைய திருப்பரிவட்டத்தை வாங்கித் தாம் சாத்திக் கொண்டு ஆழ்வானுக்கும் பெரிய நம்பிக்கும் என்ன தீங்கு நேருமோவென்று சிந்தித்துத் துவண்டிருக்க ''இனி ஸ்வாமி இவ்விடத்தில் எழுந்தருளியிருக்கை உசிதமன்று'' என்று அனைவரும் விஜ்ஞாபிக்க, உடையவரும் உடனே புறப்பட்டெழுந்தருளித் திருநாராயணபுரம் சேர்ந்தார்.

70. (எம்பெருமானார் காலத்திலேயே யெழுந்தருளியிருந்த ப்ராமாணிக பண்டித சிகாமணியான கருடவாஹந பண்டிதர் செய்தருளின திவ்யஸூரி சரிதத்தில் பதினெட்டாம் ஸர்க்கத்திலும், எம்பெருமானார்க்கு அத்தாணிச் சேவகராயிருந்த வடுகநம்பி பணித்த யதிராஜ வைபவத்தின் தொண்ணூற்றைந்தாம் சுலோகத்திலும் இக்கதை விளக்கமாக வுரைக்கப் பட்டிருத்தலால் இதில் யார்க்கும் விப்ரதிபத்தியுண்டாகக் காரணமில்லை. உடையவர்க்குத் தெரியாமலே ஆழ்வான் ஸ்வபுத்தியாலே த்ரிதண்ட காஷாயங்களைத் தரித்து ஸபைக்கெழுந்தருளினதாகவும், சோழ ராஜனிடத்தில் நின்றும் ஆட்கள் வந்தவுடனே எம்பெருமானார் ஆழ்வான் ஆண்டான் முதலானார் பலருங் கூடிக் கலந்து யோசித்து, உடையவர் வெள்ளை சாத்திக் கொண்டு வெளியேறிவிட வேண்டியதென்றும் ஆழ்வான் யதிராஜ வேஷம் பூண்டு ஸபைக்கு எழுந்தருள வேண்டியதென்றும் நிஷ்கர்ஷிக்கப்பட்டு அப்படி நடந்ததாகவும்–இங்ஙனே இரண்டு வகையாக நூல்களிற் காணப்படுவதுண்டு. இவ்விரண்டு வகையும் ஸம்பாவிதமேயாகையால் இவற்றில் விப்ரதிபத்திக் கிடமில்லையென்க.)

71. ராஜ ஸபையில் நடந்த செய்திகளும் பின்பு நடந்த செய்திகளும்: ஆழ்வானும் பெரியநம்பியும் சோழராஜன் ஸதஸ்ஸிலேயெழுந்தருளின பிறகு அங்கு விசேஷமாக

சாஸ்த்ர விசாரங்கள் நடைபெற்று 'சிவாத் பரதரம் நாஸ்தி' என்ற ராஜ வாக்யத்தின் மீது இகழ்ந்துரைக்கப்பட, சோழன் கடுஞ் சினத்தனனாய் "இவ்விருவருடைய கண்ணையும் கீண்டு விடுங்கள்" என்று சேவகர்கட்குக் கட்டளையிட, ஆழ்வான் சோழனைக் குறித்து "நீ மஹாபாதகியாகையால் உன்னைப் பார்த்த கண்கள் எனக்கு ஆகாது" என்று சொல்லித் தாமே தமது திருவுகிர்களாலே கீறிக் கண்ணை வாங்கியெறிய, பின்பு ராஜ ஸேவகர்கள் பெரிய நம்பியைப் பிடித்துக் கொண்டு போய்ச் சோழன் சொற்படி செய்து ராஜத்வாரத்தில் நின்றும் புறப்படவிட, ஆழ்வான் 'தர்சநத்துக்காக தர்சனம் கொடுக்கப் பெற்றோமே!' என்று மகிழ்ந்திருக்க, பெரிய நம்பி வ்ருத்தராகையாலே அவ்வேதனை பொறுக்க மாட்டாமல் அங்கேயொரு கொல்லைத் தலைமாட்டிலே ஆழ்வான் மடியிலே திருமுடியும் தம் திருமகளான அத்துழாய் மடியிலே திருவடிகளுமாய் இளைத்துக் கண் வளர்ந்தருளி ஆளவந்தார் திருவடிகளை த்யானித்துக் கொண்டு அங்கேயே திருநாட்டுக்கெழுந்தருளினார்.

72. பின்பு ஸ்ரீபராந்தகபுரமென்னும் அக்ரஹாரத்தில் நின்றும் வந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் பெரியநம்பியை அங்கே ஸம்ஸ்கரித்துத் திருப்பள்ளிப் படுத்து ஆழ்வானை எழுந்தருள்வித்துக் கொண்டு போய்த் தங்கள் ஊரிலே யிருத்தித் திருக்கண் வேதனை தீரமாறு சிலகாலம் உபசரித்துப் பிறகு திருவரங்கம் பெரிய கோயிலிலே கொண்டு சேர்த்தார்கள். தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்தி வைத்த எம்பெருமானாரைப் பிரிந்து அங்கே வாழகில்லாமல் கோயில் வாஸத்தை விட்டிட்டுத் திருமாலிருஞ்சோலையில் வாஸத்தை விரும்பிப் பயணகதியாகப் புறப்பட்டெழுந்தருளினார். வழியிடையே எழுந்தருளும்போது தம்முடைய மனத்துயரங்கள் நினைவுக்கு வாராதிருக்கும்படி எம்பெருமானுடைய ஸ்வரூப ரூபகுண விபூதிகளை நினைந்து நெஞ்சு கனிந்திருக்கக் கருதி ஸ்ரீவைகுண்டஸ்தவம் அதிமாநுஷஸ்தவம் என்ற அற்புதமான இரண்டு ஸ்தோத்ரங்களையருளிச் செய்து கொண்டே திருமாலிருஞ்சோலைக்கு எழுந்தருளி அங்கே பலவாண்டுகளெழுந்தருளி யிருந்து ஸுந்தரபாஹுஸ்தவமும் அருளிச் செய்தார். அவ்வளவிலே அந்த மஹாபாதகியான சோழன் கழுத்திலே புண்ணாகிப் புழுத்து மாண்டானென்ற செய்தி கேள்விப்பட்டு ஆழ்வான் அழகர் ஸன்னிதியிலே விடைபெற்று மீண்டும் கோயிலேறவெழுந்தருளினார்.

73. எம்பெருமானார் மேல் நாட்டில் பன்னிரண்டு ஸம்வத்ஸரமளவும் எழுந்தருளி யிருந்து அவ்விடத்தில் திருநாராயணனைத் திருப்ரதிஷ்டை செய்தருளியும், ஐம்பத்திருவர் என்னும் ஸ்ரீவைஷ்ணவ வகுப்பை நியமித்தருளியும், மற்றும் பலபல அதிமாநுஷக்ருத்யங்களைச் செய்தருளியும், திருநாராயணனுக்கு ஆழ்வார் பாடல் இல்லையென்கிற குறை தோன்றாதபடிக்கு 'திருநாரணன்தாள் காலம் பெறச் சிந்தித்து உய்மினோ' என்னுமடியைக் கொண்ட ஒரு நாயகப் பதிகத்தை ஸமர்ப்பித்தருளினதும், அவ்வளவிலே மஹா பாதகியான சோழன் புழுத்துமாண்டு திருவரங்கச் செல்வம் குறையற்றிப்பதைக் கேட்டருளி ஸ்ரீரங்கத்திற்குப் புறப்பட்டருளினதும் முதலான வைபவ விஸ்தாரங்கள் ஸ்ரீராமாநுஜார்ய திவ்ய சரிதையிலும் மற்றும் பலபல வைபவக்ரந்தங்களிலும் காணத்தக்கன.

74. எம்பெருமானார் மேல்நாட்டில் நின்று கோயிலுக்கெழுந்தருளி ஆழ்வானை உசாவுதல்: சோழனுடைய உபப்லவங்களுக்கு அஞ்சி மேல் நாட்டுக்கெழுந்தருளியிருந்த எம்பெருமானார், கோயிலில் நின்றும் அங்கு வந்த ஒரு ஸ்ரீவைஷ்ணவராலே, சோழராஜ ஸதஸ்ஸில் ஆழ்வானுக்கும் பெரிய நம்பிக்கும் நேர்ந்த ஆபத்தைக் கேள்விப்பட்டுச் சாலவும் திருவுள்ளம் நொந்து 'ஆழ்வானாகிலும் உயிர் வாழ்ந்திருக்கப் பெற்றோமே' என்று திருவுள்ளம் தேறி, அப்போது தம்மிடத்தில் கைங்கரியம் செய்து கொண்டிருந்த மாறொன்றில்லா மாருதிச் சிறியாண்டானை "மிகவும் விரைவாகக் கோயிலுக்குச் சென்று ஆழ்வானையும் ஆராய்ந்து அங்குள்ள விசேஷங்களையும் அறிந்து வாரும்" என நியமித்தருள, அவரும் மிக விரைந்து கோயிலுக்கு வந்து சோழன் புழுத்து மாண்ட செய்தியுட்பட எல்லாவற்றையும் ஆழ்வான் ஸன்னிதியிலே அறிந்து கொண்டு மீண்டு திருநாராயணபுரம் போய் எம்பெருமானார் திருவடிகளிலே இவற்றை விண்ணப்பஞ்செய்ய, அதுகேட்டு அவர் பெருமகிழ்ச்சி கொண்டு உடனே அங்கு நின்று புறப்பட்டுக் கோயிலுக்கெழுந்தருளி முதலிகளுடன் ஆழ்வான் திருமாளிகைக் கெழுந்தருள ஆழ்வானும் எதிரேயெழுந்தருளி உடையவர் திருவடிவாரத்திலே வேரற்ற மரம்போலே விழுந்து ஸேவித்துத் திருவடிகளைப் பிடித்துக் கொண்டு கிடக்க, உடையவரும் ஆழ்வானை யெடுத்தணைத்துக் கொண்டு சோக வேகத்தாலே ஒரு வார்த்தையும் அருளிச் செய்யமாட்டாமல் உள்ளெலாமுருகிக் குரல் தழுத்து "வாரீர் ஆழ்வான்! இத்தர்சனத்திற்கு த்ருஷ்டி பூதரான உமக்கு இப்படி கண்போவதே! இது என்னுடைய தீவினையின் பயனன்றோ?" என்றிப்படி பலவாறாக அருளிச் செய்து ஆழ்வானைத் தேற்றி, பண்டுபோலே திருவரங்கச் செல்வத்தை வளர்த்துக் கொண்டு வாழ்ந்து வந்தார்.

75. திருமலையப்பனுக்குத் திருவாழி திருச்சங்கு அளித்தது: பண்டொரு காலத்தில் திருவேங்கடமுடையான் தன் பக்கல் பரமபக்த சிகாமணியாயிருந்த தொண்டைமான் சக்ரவர்த்திக்கு ஒரு காரணார்த்தமாகத் தன் திருவாழி திருச்சங்குகளைத் தந்தருளி, இப்படி ஆச்ரித பக்ஷபாதத்தாலே தனது திவ்யாயுதங்களையும் தந்து உபகரிக்கும் ஔதார்யகுணம் உலகில் பரவுவதற்காகச் சிறிது காலம் ஸுதர்சந பாஞ்சஜந்ய சூந்யனாகவே இருந்திட்டான். அக்காலம் கலியின் கொடுமையால் வர்ணாச்ரம தர்மங்கள் குலைந்து தேவாலயங்களும் சீர்கெட்டுப் பாஷண்டிகள் தலையெடுக்கும் காலமாயிருந்தது, திருமலையில் அர்ச்சகர்களாயிருந்த வைகாநஸர்கள் எம்பெருமானுக்கு முறைப்படி உபசாரங்கள் பண்ணாமல் அச்ரத்தை காட்டியிருந்த காரணத்தினால் தேசாதிபதியான யாதவராஜனால் அடிக்கடி தண்டிக்கப்பட்டு அங்கு வாழகில்லாமல் வெளிநாடு சென்றனர்; வ்ருத்தர்களாயிருந்த அர்ச்சகர்கள் இங்ஙனம் ஒருவரொருவராக வெளியேற ப்ரபலர்களான ஸ்ரீவைஷ்ணவர்களும் இங்கு இலராக, விரல் நுழைக்க இடம் தேடிக் கொண்டிருந்த சைவர்கள் இதுவே நல்ல சமயமென்று கொண்டு அந்த யாதவ மன்னன் பக்கல் சென்று அவனுடைய ப்ரீதியைச் சிறிது சிறிதாக ஸம்பாதித்து ஒருநாள் அவனிடம் சொன்னார்கள். "திருமலையில் ஸ்வாமிபுஷ்கரிணியின் தென்கரையில் திகழும் தேவன் முருகக் கடவுள் தான். அவர்க்குக் குமாரசாமியென்றும் பெயர் வழங்குவதுண்டாகையால் அந்த

நாமைகதேசத்தை யிட்டு ஸ்வாமி புஷ்கரிணியென்று அத்தடாகம் வழங்கப் பெற்றது. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்ம்யம் கூறவந்த வாமந புராணப் பகுதியில் இரண்டாவது அத்யாயத்தில் ஸுப்ரஹ்மண்யன் வேங்கடமலையில் ஒரு குளத்தின் கரையில் தவம் புரிந்து கொண்டிருந்தானென்று சொல்லப்பட்டிருத்தலாலும் அப்பெருமான் முருகக்கடவுளே. அவர்க்கு அஸாதாரண ஆயுதங்களானபாசமும் அங்குசமும் தவநிலைக்கு உரியவையல்லாமையால் தரிக்கப்பட வில்லை. இன்னும் பல ஹேதுக்களாலும் அம்மலை சைவக்ஷேத்ரமேயாம். இப்போது தான் சிறிது காலமாகச் சில வைஷ்ணவர்கள் கூடிப் புராணார்த்தங்களை மனம் போனபடி சொல்லி அப்பெருமான் விஷ்ணுவே யென்றுரைத்து ராஜாவை வசப்படுத்திக் கொண்டு சில வைஷ்ணவ விக்ரஹங்களையும் கோவிலில் ஸ்தாபித்து உத்ஸவங்களை நடத்தத் தொடங்கினார்கள். உண்மையில் இது சைவ க்ஷேத்ரமாகையால் சைவ விதிப்படி இனி இக்கோவிற் காரியங்கள் நடைபெறுமாறு மஹாப்ரபு செங்கோல் செலுத்த வேணும்'' என்றார்கள்.

76. இதைக் கேட்ட அவ்வரசன் 'இந்தச் சைவர்கள் சொல்லுவதெல்லாம் அநுபவவிருத்தமா யிருக்கின்றதே: ஆராயாமல் நாம் எதையும் ஸாஹஸமாகச் செய்துவிடக் கூடாது; தக்கபடி ஆராய்ச்சி செய்ய வேணும்' என்றெண்ணி யிருந்தான். அக்காலத்தில் அங்கு நிபுணர்களான ஸ்ரீவைஷ்ணவர்கள் யாருமில்லாமையால் ஸாமாந்யராயிருந்த சிலர் திருவரங்கம் பெரிய கோயிலில் மிக்க சிஷ்யஸம்பத்துடனே எழுந்தருளி யிருந்த எம்பெமானார்க்கு இச்செய்தியை அறிவித்தனர். இச்செய்தியை அறிந்த உடையவர் கடுநடையாகத் திருப்பதிக் கெழுந்தருளி ஸம்சயாக்ராந்தனாயிருந்த அரசனை நோக்கி, "சைவர்களால் உனது நெஞ்சில் உண்டாக்கப்பட்ட சங்காகளங்கத்தை நீக்கி உன்னைத் தெளிவிப்பதற்காகவே நெடுந்தூரத்தில் நின்றும் இங்கே வந்தோம்; உனக்குப் பரிபூரண த்ருப்தி உண்டாகும்படி யாம் தெளிவாகச் சொல்ல வல்லோம்; கேளாய் கொற்றவனே!'' என்று சொல்லத் தொடங்கினார்.

77. அவ்வரசன், முன்பு கொக்கரித்த சைவர்களையும் வரவழைத்து பெரிய ஸபையாக்கி சைவ வைஷ்ணவர்களுக்கு வாதயுத்தம் நடக்குமாறு நியமித்துத் தான் தடஸ்தனாயிருக்க, வெகு காலம் வரை வாதப் போர் நடந்ததில் சைவர்களுடைய துர்வாதங்களையெல்லாம் எம்பெருமானார் ப்ராமாணிகமாகக் கண்டித்து வெற்றி பெற்று விளங்கினார்.

78. (இந்த வாதப்ரதிவாதங்களின் விவரணம் திருமலையனந்தாழ்வான் பணித்த ஸ்ரீவேங்கடாசல இதிஹாஸமாலையில் அறுபத்தைந்து பக்கம் நிறையப் பெரிய வாக்யார்த்த ஸரணியில் குறிப்பிட்டுள்ளன; அங்கே கண்டு கொள்வது) எம்பெருமானாருடைய அற்புதமான உபபாதனங்க ளைக் கேட்ட மன்னவன் கலக்கம் நீங்கி மிக்க தெளிவுபெற்று, திருவேங்கடமலை விஷ்ணு க்ஷேத்ரமேயென்றும் அங்குள்ள பெருமான் திருமாலே யென்றும் அறுதியிட்டு 'இந்த ஸ்ரீராமாநுஜர் ஸாமாந்ய புருஷரல்லர்; அவதார புருஷரேயாவர்; இவர் மனம் வைத்தால் அதிமாநுஷமான காரியங்களையும் செய்து ஸர்வ ஜனங்களுக்கும் திண்ணிய நம்பிக்கை யுண்டாகும்படி செய்யவும் வல்லவர்; அங்ஙன் செய்ய இவரை

நாமைகதேசத்தை யிட்டு ஸ்வாமி புஷ்கரிணியென்று அத்தடாகம் வழங்கப் பெற்றது. ஸ்ரீவேங்கடாசல மாஹாத்ம்யம் கூறவந்த வாமந புராணப் பகுதியில் இரண்டாவது அத்யாயத்தில் ஸுப்ரஹ்மண்யன் வேங்கடமலையில் ஒரு குளத்தின் கரையில் தவம் புரிந்து கொண்டிருந்தானென்று சொல்லப்பட்டிருத்தலாலும் அப்பெருமான் முருகக்கடவுளே. அவர்க்கு அஸாதாரண ஆயுதங்களானபாசமும் அங்குசமும் தவநிலைக்கு உரியவையல்லாமையால் தரிக்கப்பட வில்லை. இன்னும் பல ஹேதுக்களாலும் அம்மலை சைவக்ஷேத்ரமேயாம். இப்போது தான் சிறிது காலமாகச் சில வைஷ்ணவர்கள் கூடிப் புராணார்த்தங்களை மனம் போனபடி சொல்லி அப்பெருமான் விஷ்ணுவே யென்றுரைத்து ராஜாவை வசப்படுத்திக் கொண்டு சில வைஷ்ணவ விக்ரஹங்களையும் கோவிலில் ஸ்தாபித்து உத்ஸவங்களை நடத்தத் தொடங்கினார்கள். உண்மையில் இது சைவ க்ஷேத்ரமாகையால் சைவ விதிப்படி இனி இக்கோவிற் காரியங்கள் நடைபெறுமாறு மஹாப்ரபு செங்கோல் செலுத்த வேணும்'' என்றார்கள்.

76. இதைக் கேட்ட அவ்வரசன் 'இந்தச் சைவர்கள் சொல்லுவதெல்லாம் அநுபவவிருத்தமா யிருக்கின்றதே: ஆராயாமல் நாம் எதையும் ஸாஹஸமாகச் செய்துவிடக் கூடாது; தக்கபடி ஆராய்ச்சி செய்ய வேணும்' என்றெண்ணி யிருந்தான். அக்காலத்தில் அங்கு நிபுணர்களான ஸ்ரீவைஷ்ணவர்கள் யாருமில்லாமையால் ஸாமாந்யராயிருந்த சிலர் திருவரங்கம் பெரிய கோயிலில் மிக்க சிஷ்யஸம்பத்துடனே எழுந்தருளி யிருந்த எம்பெமானார்க்கு இச்செய்தியை அறிவித்தனர். இச்செய்தியை அறிந்த உடையவர் கடுநடையாகத் திருப்பதிக் கெழுந்தருளி ஸம்சயாக்ராந்தனாயிருந்த அரசனை நோக்கி, "சைவர்களால் உனது நெஞ்சில் உண்டாக்கப்பட்ட சங்காகளங்கத்தை நீக்கி உன்னைத் தெளிவிப்பதற்காகவே நெடுந்தூரத்தில் நின்றும் இங்கே வந்தோம்; உனக்குப் பரிபூரண த்ருப்தி உண்டாகும்படி யாம் தெளிவாகச் சொல்ல வல்லோம்; கேளாய் கொற்றவனே!'' என்று சொல்லத் தொடங்கினார்.

77. அவ்வரசன், முன்பு கொக்கரித்த சைவர்களையும் வரவழைத்து பெரிய ஸபையாக்கி சைவ வைஷ்ணவர்களுக்கு வாதயுத்தம் நடக்குமாறு நியமித்துத் தான் தடஸ்தனாயிருக்க, வெகு காலம் வரை வாதப் போர் நடந்ததில் சைவர்களுடைய துர்வாதங்களையெல்லாம் எம்பெருமானார் ப்ராமாணிகமாகக் கண்டித்து வெற்றி பெற்று விளங்கினார்.

78. (இந்த வாதப்ரதிவாதங்களின் விவரணம் திருமலையனந்தாழ்வான் பணித்த ஸ்ரீவேங்கடாசல இதிஹாஸமாலையில் அறுபத்தைந்து பக்கம் நிறையப் பெரிய வாக்யார்த்த ஸரணியில் குறிப்பிட்டுள்ளன; அங்கே கண்டு கொள்வது) எம்பெருமானாருடைய அற்புதமான உபபாதனங்க ளைக் கேட்ட மன்னவன் கலக்கம் நீங்கி மிக்க தெளிவுபெற்று, திருவேங்கடமலை விஷ்ணு க்ஷேத்ரமேயென்றும் அங்குள்ள பெருமான் திருமாலே யென்றும் அறுதியிட்டு 'இந்த ஸ்ரீராமாநுஜர் ஸாமாந்ய புருஷரல்லர்; அவதார புருஷரேயாவர்; இவர் மனம் வைத்தால் அதிமாநுஷமான காரியங்களையும் செய்து ஸர்வ ஜனங்களுக்கும் திண்ணிய நம்பிக்கை யுண்டாகும்படி செய்யவும் வல்லவர்; அங்ஙன் செய்ய இவரை

வேண்டிக் கொள்வோம்' என்றெண்ணி, "ஸ்வாமிந்! யோகீச்வரே!! தேவரீர் நிரூபித்துக் காட்டிய சாஸ்த்ரார்த்தங்களைக் கேட்டுப் பரமானந்தமடைந்தேன்; திருமாலே திருமலைக்கு இறைவர் என்று நன்கு துணிந்தேன்; ஸம்சயலேசமுமில்லாமல் சிக்கெனத் தெளிவும் பெற்றேன்; ஆயினும் மஹாபுருஷராயும் அதிமாநுஷ சேஷ்டிதராயுமிராநின்ற தேவரீர், பண்டிதரோடு பாமரரோடு வாசியற எல்லாரும் தெளியுமாறு ஸமாதாநோபாயம் ஏதாவது செய்தருளக் கூடுமேல் நன்று" என்று கைகூப்பி விண்ணப்பஞ் செய்தான்.

79. அதனைக் கேட்ட எம்பெருமானார் 'புராணப் பொருள்களைப் பலவாறாக எடுத்து உபந்யஸித்துக் காட்டினவளவிலும் இவ்வரசனுடைய மனம் பரிபூர்ண த்ருப்தியை அடையவில்லை போலும்; அதிமாநுஷமானதொரு கார்யம் செய்து காட்ட வேணுமென்கிறான்; ஆயிடுக; இங்ஙனே செய்வோம்;–

80. ப்ரஹ்மாண்ட புராணத்தில் பதினோராவது அத்யாயத்தில் எம்பெருமான் தானே சோதிவாய் திறந்து பிரதிஜ்ஞை செய்தருளியிருக்கிறபடியே கலியுகத்தில் விமான மண்டபாதிகளைப் போல் சங்கு சக்கரங்களையும் பக்தர்கள் செய்து ஸமர்ப்பித்தால் ஸ்வீகரித்தே தீருவனாதலால் நாம் செய்து ஸமர்ப்பிக்கும் திவ்யாயுதங்களையும் எம்பெருமான் ஸ்வீகரிக்கக் கூடுமே; ப்ரார்த்தித்தாகிலும் ஸ்வீகரிக்கச் செய்திடுவோம்; இல்லையேல் மஹத்தான அநர்த்தம் நேரிடும் போலிருக்கிறதே! இவ்வரிய செயலினால் தான் அனைவரும் விச்வஸிக்க வேணும்' என்று திருவுள்ளத்திற் சிந்தித்து அப்படியே செய்திடுவது என்று அறுதியிட்டு, மன்னவனை நோக்கி, "நான் எம்பெருமானுக்கு அஸாதாரண சிஹ்நங்களான திருவாழி திருச்சங்குகளைச் செய்வித்துக் கொணர்ந்து பகவத் ஸந்நிதியிலே வைத்திடுகிறேன்; இந்தச் சைவர்கள் தாமும் தங்கள் தெய்வத்துக்குரிய பாசம் அங்குசம் முதலிய ஆயுதங்களைச் செய்வித்துக் கொணர்ந்து வைத்திடுக; எந்த ஆயுதங்களை எம்பெருமான் எடுத்து அணிந்து கொள்கிறானோ பார்ப்போம்" என்றருளிச் செய்தார்.

81. இதைக் கேட்ட அரசன் மகிழ்ச்சி கொண்டு "இப்படியாகில் இது சிறந்த உபாயமே. பிறகு ஒருவர்க்கும் ஆக்ஷேபம் இருக்க ப்ரஸக்தியில்லையன்றோ; நல்லது; அப்படியே இருவகுப்பினரும் செய்யக்கடவது" என்று சொல்ல; உபயவாதிகளும் தங்கள் தங்கள் தெய்வத்தின் அஸாதாரண ஆயுதங்களைச் செய்வித்துக் கொணர்ந்து ஒரு நாள் அவ்வரசனுடனே திருமலைக்கு வந்து இரவில் திருவேங்கடமுடையானுடைய ஸந்நிதி கர்ப்பக்ருஹத்தினுள்ளே அவற்றை வைத்து விட்டுக் கதவுகளைப் பூட்டி மன்னவன் கையால் அரக்கிலச்சினை செய்வித்துக் காலையளவும் கோவிலைச் சுற்றி காவலிருந்து கொண்டு தங்களுக்கே வெற்றியுண்டாகும்படி தங்கள் தங்கள் தெய்வத்தைச் சிந்தை செய்து கொண்டிருந்தனர்.

82. எம்பெருமானார் தமது யோகமஹிமையினால் உள்ளேபுக்கு எம்பெருமானை ஸாக்ஷாத்கரித்து "பரமபுருஷ! முன்பு நீ வாயோலை செய்து கொடுத்த ப்ரதிஜ்ஞையின் படியே உனது அஸாதாரண சிஹ்நங்களைப் பேணி அணிந்துகொண்டு அடியோங்களைக் காத்தருள வேணும்" என்று பிரார்த்தித்து அப்படியே திருவாழி திருச்சங்குகளை அணிந்து

கொள்வித்து க்ருக்ருத்யராயினர். பிறகு பொழுது விடிந்தவாறே யாதவமன்னன் நித்யாநுஷ்டானங்களை முடித்துக் கொண்டு உபயவாதிகளுடனும் ஸந்நிதிக்குச் சென்று திருக்காப்பு நீக்குவித்துப் பெருமாளை ஸேவிக்குமளவில் பாச அங்குசாதி ஆயுதங்களை அப்பால் தள்ளிவிட்டுத் திருவாழி திருச்சங்குகளை யணிந்து கொண்டு பரமபோக்யமாக ஸேவை ஸாதிக்கக் கண்டு மிகவும் சரணமடைந்து க்ருதார்த்தனாகி, குத்ஸிதவாதம் பண்ணிக் கொக்கரித்துக் கிடந்த சைவர்களையும் த்ருணீகரித்து ராஜ்யத்தில் நின்றும் துரத்திவிட்டு இனிது வாழ்ந்தான்.

83. எம்பெருமானாரும் சிறப்புடனே சிஷ்ய வர்க்கங்களுடன் தென்னரங்கம் சென்று சேர்ந்து 'வையம் மன்னி வீற்றிருந்து விண்ணுமாள்வர் மண்ணூடே' என்கிறபடியே நித்ய விபூதிச் செல்வத்தையும் இங்கிருந்தே ஆண்டு கொண்டு 'தமிழ்மறைகளாயிரமும் ஈன்ற முதல் தாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த இதத்தாய் இராமாநுசன்' என்றபடியே அருளிச் செயல்களைப் பல வகைகளாலும் வளர்த்துக் கொண்டு வாழ்ந்தருளா நின்றார்.

84. நிகமனம்: எம்பெருமான் வைபவம் போலே எம்பெருமானார் வைபவமும் பேசியும் எழுதியும் தலைக்கட்ட வொண்ணாதது, அன்பர்கள் அனுதினமும் அனுஸந்திக்கப் பாங்காக இது சுருக்கமாக வரைந்தபடி. ஸ்வாமியருளிச் செய்த திவ்ய க்ரந்தங்கள் நவநிதிகள் போலவும் நவரத்னங்கள் போலவும் ஒன்பதாம்: வேதார்த்த ஸங்க்ரஹம், ஸ்ரீபாஷ்யம், வேதாந்ததீபம், வேதாந்த ஸாரம், சரணாகதி கத்யம், ஸ்ரீரங்ககத்யம், ஸ்ரீவைகுண்ட கத்யம், நித்யம் என்பவை.

85. ஸ்ரீமதே ராமாநுஜாய நம: என்கிற இந்த வாக்கியத்திலுள்ள பத்து அக்ஷரங்களையும் முற்கொண்ட சுலோகங்களினாலும் பாசுரங்களினாலும் எம்பெருமானார் வைபவத்தையுரைக்கின்றேன்.

ஸ்ரீமாதவாங்க்ரிஜலஜத்வயநித்யஸேவா ப்ரேமாவிலாசயபராங்குச பாதபக்தம்
காமாதி தோஷஹரமாத்மபதாச்ரிதாநாம் ராமாநுஜம் யதிபதிம் ப்ரணமாமி மூர்த்நா
(யதிராஜவிம்சதி–1.)

அழகு பொலிந்த எம்பெருமானது திருவடித் தாமரையிணைகளை நிச்சலும் தொழுகையில் உண்டான ப்ரேமத்தினால் கலங்கின திருவுள்ளம் உடையரான நம்மாழ்வாருடைய திருவடிகளிலே அன்பு பூண்டவரும், தமது திருவடிகளைப் பணிந்தவர் களுக்குக் காமம் முதலிய குற்றங்களைக் களைந்தொழிப்பவரும் யதிகளுக்குத் தலைவருமான எம்பெருமானாரைத் தலையால் வணங்குகின்றேன். நம்மாழ்வார் திருவடிகளில் அன்பு பூண்டவரும், தமது திருவடிகளைப் பணிந்தவர்களது குற்றங்களை நீக்கி நற்றங்களை வளர்ப்பவருமான எம்பெருமானாரைத் தொழுகின்றேன் என்றவாறு. எம்பெருமானார்க்கு அத்யாச்சர்யாவஹமான வைபவங்கள் பல்லாயிரம் இருந்தாலும் ஆழ்வார் திருவடிகளில் ப்ராவண்யத்தையே அவர் தமக்குப் பெரிய வைபவமாக அத்யவஸித்திருந்தாராதலால் அவருடைய அத்வஸாயத்திற்குப் பொருந்த "பராங்குச பாதபக்தம்" என்றார். அமுதனாரும் "மாறனடி பணிந்துய்ந்தவன்" என்றே தொடங்கினர். "தமிழ் மறைகளாயிரமும் ஈன்ற முதல் தாய் சடகோபன், மொய்ம்பால்

வளர்த்தவிதத்தாய் இராமாநுசன்'' என்ற திருவாய்மொழித் தனியனாலும், ''பாஷ்யகாரர் இது கொண்டு ஸூத்ர வாக்யங்களொருங்க விடுவர்'' என்ற ஆசார்ய ஹ்ருதய சூர்ணையாலும் ஸ்வாமிக்கு ஆழ்வார் பக்கலிருந்த ப்ராவண்யாதிசயம் அறியற்பாலது. ஸ்வாமியின் ப்ராவண்யத்திற்குப் பாத்ரபூதரான நம்மாழ்வார் எப்படிப்பட்டவரென்னில், (ஸ்ரீமாதவாங்க்ரி ஜலஜத்வய நித்யஸேவா ப்ரேமாவிலசயர்) எம்பெருமானுடைய திருவடிகளிலே காதலடியாகக் கலங்கின திருவுள்ளமுடையவர் என்கை. 'தெளிந்த சிந்தையர்' என்று சொல்லிப் புகழ்வது ப்ராப்தமாயிருக்க, 'ஆவிலாசய' என்று கலங்கின திருவுள்ளமுடையவர் என்று விசேஷணமிடுவது பெருமைக்கு ஒக்குமோ வென்னில்; கர்ம நிபந்தனமான கலக்கம் ஹேயமே யல்லது ப்ரேமநிபந்தனமான கலக்கம் ஹேயமன்று, மிகவும் உபாதேயம், உத்தேச்யம் என்கிற சாஸ்த்ரார்த்தம் இங்கு அறியத் தக்கது. ப்ரேம பரவசர்க்கு அவத்யமன்று; ''ஜ்ஞாந விபாக கார்யமான அஜ்ஞாநத்தாலே வருமவையெல்லாம் அடிக்கழஞ்சு பெறும்'' என்கிற ஸ்ரீவசநபூஷண திவ்யஸூக்தியும் அதன் வியாக்கியான ஸ்ரீஸூக்திகளும் இங்கே அநுஸந்தேயம். ஸித்தோபாயமான அவன் பண்ணின க்ருஷி பலமாய் விளைவது இக்கலக்கமென்று கொள்ள வேணும். பராங்குசரென்கிற திருநாமத்திற்கு இரண்டு வகையான வ்யுத்பத்தியுண்டு. பரர்களுக்கு அங்குசமாயிருப்பவரென்றும் பரனுக்கு அங்குசமா யிருப்பவரென்றும். (அதாவது) பரர்களாகிறார்–எம்பெருமானுக்கு குணமில்லை விக்ரஹமில்லை யென்னும் புறச்சமயிகள்; அவர்களுக்குத் தம்முடைய திவ்யஸூக்திகளாலே அங்குசமாயிருப்பவர்–அவர்களது செருக்கு மொழிகளை யடக்குபவர் என்கை முதல் வ்யுத்பத்தியின் கருத்து. இனி பராத்பரனான எம்பெருமானுக்கு அங்குசம் போன்றவர் என்கிற இரண்டாவது வ்யுத்பத்தியின் கருத்தாவது – வலக்கையாழி இடக்கைச் சங்கமிவையுடை மால் வண்ணனை, ''மலக்கு நாவுடையேற்கு'' (திருவாய்மொழி 6–4–9) என்று ஆழ்வார் அருளிச் செய்தபடி தம் வசப்படுத்தி நடத்திக் கொள்ள வல்லரென்கை. (காமாதிதோஷஹரம்) இங்கு ஆதிசப்தத்தாலே க்ரோதம் லோபம் மோஹம் மதம் மாத்ஸர்யம் அஜ்ஞாநம் அஸூயை இவை கொள்ளத்தக்கன. 'காமாதிஹரம்' என்னாமல் 'காமாதி தோஷஹரம்' என்கையாலே காமம் முதலானவை நியமேந தோஷமல்ல வென்றும் குணகோடியிலே கைக் கொள்ளத் தக்க காமாதிகளுமுண்டென்றும் தெரிவிக்கப்பட்டதாம். பகவத்விஷயத்திலே உண்டாகிற காமமோஹாதிகளும் பகவத்பாகவத விரோதிகள் திறத்திலேயுண்டாகிற க்ரோத மாத்ஸர்யாதிகளும் குணமேயல்லது தோஷமன்றே. அவை விலக்கத்தக்கவை யல்லவே. தோஷமான காமாதிகளே விலக்கத் தக்கவையாதலால் தோஷ ஹரமென்றது.

86. ம–மண்மிசை யோனிகள் தோறும் பிறந்து எங்கள் மாதவனே கண்ணுறநிற்கிலும் காணகில்லா உலகோர்களெல்லாம் அண்ணல் இராமாநுசன் வந்து தோன்றியவப் பொழுதே நண்ணரு ஞானந்தலைக் கொண்டு நாரணற்கு ஆயினரே. (இராமாநுச நூற்.–41.)

நமக்கு நாதனான திருமால் தானே இப்பூமியிலுள்ள (மனுஷ்யாதி) யோனிகள் தோறும் அவதரித்தது. எல்லாருடைய கண்ணுக்கும் தன்னை இலக்காக்கிக் கொண்டு நின்ற விடத்திலும் (அவனை நம்முடைய நாதனென்று) காண மாட்டாதிருந்த

இவ்வுலகத்தாரெல்லாரும் ஸர்வஸ்வாமியான எம்பெருமானார் இங்கே வந்தவரித்தவுடனே பெறுதற்கரிதான ஞானம் அதிகரிக்கப் பெற்று ஸ்ரீமந்நாராயணனுக்கு சேஷப்பட்டனரென்கை. எம்பெருமானுடைய அவதாரத்திற் காட்டிலும் எம்பெருமானாருடைய அவதாரமே சிறப்புற்றதென்கிறார். "அஜாயமாநோ பஹுதா விஜாயதே" என்றும் "உயிரளிப்பான் எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாயிமையோர் தலைவா" என்றும் சொல்லுகிறபடியே எம்பெருமான் பல பல யோனிகளிற் பலவகைப் பிறவி பிறந்து கண்காண வந்து நின்று உபதேசங்களாலே ஸ்வஸ்வரூபத் தைக் காட்டிக் கொடுத்த விடத்திலும் யாரும் அவனை லக்ஷ்யம் பண்ண வில்லை; "அவஜாநந்தி மாம் மூடா:" (என்னை எல்லாரும் அவமானப்படுத்துகின்றனர்) என்று அவன்றானே சொல்லிக் கொண்டு வருத்தப்பட வேண்டிற்றாயிற்று. ஆகையாலே பகவானுடைய அவதாரம் ஸம்ஸாரிகளுடைய தெள்ளறிவுக்கு உறுப்பாகவில்லை. எம்பெருமானாருடைய அவதாரமோவென்னில், பயன் பெற்றது. இவர் தாம் திருவவதரித்தவுடனே எல்லா வுலகத்தாரும் ஆச்சரியமான ஞானத்தைப் பெற்று உஜ்ஜீவித்தார்கள்–என்றாராயிற்று.

87. தே – தேரார் மறையின் திறமென்று மாயவன் தீயவரைக் கூராழி கொண்டு குறைப்பது கொண்டலனையவண்மை ஏரார் குணத்தெமிராமாநுசன் அவ்வெழில் மறையில் சேராதவரைச் சிதைப்பது அப்போதொரு சிந்தைசெய்தே. (இதுவும் நூற்றந்தாதி 74.)

(இப்பாவிகள்) வேதஞ்சொல்லுகிற வழியை நிரூபித்தறிகிறதில்லை யென்று பாவிகளை எம்பெருமான் தண்டிப்பது கூர்மையான தனது திருவாழியாலே; மேகம் போன்ற ஔதார்ய குணமுடையவரும் (மற்றும் பல) நல்ல குணங்கள் உடையவருமான ஸ்வாமி எம்பெருமானார் அந்தச் சிறந்த வேதத்தில் அந்வயமில்லாதவர்களை பங்கப் படுத்துவது (எப்படியென்றால்) அப்போதப்போது ஒவ்வொரு யுக்தியைக் கொண்டாம். எம்பெருமான் தனது ஆஜ்ஞாரூபமான வேதங்களின் கட்டளைப்படி நடவாத கொடியவர்களைத் தனது திருவாழியைக் கொண்டு த்வம்ஸம் பண்ணிவிடுவன்; எம்பெருமானாரோவென்னில் அவ்வளவு ஆயாஸம் எடுத்துக் கொள்வதில்லை; வேதங்களை அடியோடு ஒப்புக் கொள்ளாத பாஹ்யர்களையும், வேதங்களைப் பிராமாணமாக ஒப்புக் கொண்டு அவற்றில் அபார்த்தங்களைப் பண்ணுகிற குத்ருஷ்டிகளையும் வாதப் போரில் அப்போதப்போது திருவுள்ளத்தில் ஸ்புரிக்கின்ற நல்ல யுக்திகளைக் கொண்டு கண்டித்துவிடுவர். இதனால், துஷ்டர்களை நிரஸிக்கும் வகையில் எம்பெருமானாருடைய சாதுரியம் ஒப்பற்றதென்று சொல்லிற்றாயிற்று.

88. ரா – ராமாநுஜமுநிர் ஜீயாத் யோ ஹரேர் பக்தியந்த்ரத:, கலிகோலாஹல க்ரீடாமுதாக்ரஹ மபாஹரத் (ஸ்ரீரங்கராஜஸ்தவம்–1–3)

யாவரொரு எம்பெருமானார் எம்பெருமானிடத்து உண்டான பக்தியாகிற யந்த்ரத்தினால் கலிபுருஷனுடைய கோலாஹல விளையாட்டாகிற பாழும் பிசாசை துரத்தினாரோ, அந்த எம்பெருமானாருக்குப் பல்லாண்டு பல்லாண்டு. இதனால் ஜகதாசார்யரான எம்பெருமானாரை வாழ்த்துகிறார். "கலியுங்கெடுங் கண்டு கொண்மின்" என்று மயர்வற மதிநலமருளப் பெற்ற ஆழ்வார் ஸூசிப்பித்தபடியே இவ்வுலகில்

திருவவதரித்துக் கலியின் கொடுமைகளைத் தொலைத்தருளுளின எம்பெருமானார் வாழ்க என்கை. ''இராமாநுசன் மறை தேர்ந்துலகில் புரியும் நன்ஞானம் பொருந்தாதவரைப் பொருங்கலியே'' என்கிறபடியே இராமாநுசன் திருவடி ஸம்பந்திகளைக் கலிபுருஷன் அணுகவும் மாட்டானென்பது அறியத் தக்கது. ''இராமாநுசன் இத்தலத்துதித்து–ஆனது செம்மையறநெறி, பொய்ம்மை யறுசமயம் போனது பொன்றி, இறந்தது வெங்கலி'' என்ற நூற்றந்தாதிப் பாசுரமுமிங்கே அநுஸந்திப்பது. கலியின் கோலாஹலம் நிரம்பிய விளையாட்டைப் பேயாடலாகப் பேசினதற்கேற்ப ராமாநுசனுடைய பகவத் பக்தியாகிற யந்திரத்தினால் கலிவிலாஸ மாகிற பிசாசை ஓட்டினாரென்கிறது. ''கலௌ க்ருதயுகம் தஸ்யகலிஸ் தஸ்ய க்ருதேயுகே–ஹ்ருதயே யஸ்ய கோவிந்தோ யஸ்ய சேதஸி நாச்யுத:, என்றது காண்க. (எவனுடைய உள்ளத்தில் எம்பெருமான் ஸுப்ரதிஷ்டிதனாக வாழ்கிறானோ அவனுக்குக் கலியுகமே க்ருதயுகமாம்: என்கை.) இரண்டாம் பாதத்தின் முடிவில், ''யந்த்ரத:, யந்த்ரித:, யந்த்ரிதாத்'' என்பன பாடபேதங்கள்.

89. மா – மாதவ! முகுந்த! மதுஸூதந! முராரே! தாவகபதாப்ஜயுகளேஹமிஹ யாசே லக்ஷ்மண முநீந்த்ர சரணாப்ஜயுகலே மே பக்திரபிவ்ருத்தி முபயாது நிரவத்யா (ப்ர–அ)

இஷ்டப்ராபண அநிஷ்டநிவர்த்தநஸமர்த்தனான லக்ஷ்மீநாதா! தேவரீருடைய திருவடித் தாமரையிணைகளில் அடியேன் பிரார்த்திப்பதாவது – எம்பெருமானாருடைய திருவடித் தாமரையிணைகளில் எனக்கு நிஷ்கல்மஷமான பக்தி மேன்மேலும் வளர வேணுமென்பதே.

90. நு – நுதிரஸ்து ஸததஞ்ச மம வாசி யதிராட் குணராசிமதிக்ருத்ய குணராசி பரிதா, நதிரஸ்து மம தஸ்ய பதபத்மயுகளே மதிரஸ்து யதிராஜகதிதாஸு க்ருதிஷு(ப்ர–அ)

எனது வாக்கில் எம்போதும் எம்பெருமானார் திருக்கல்யாணகுண விஷயமாய்ச் சிறந்த ஸ்துதிகள் நிகழ வேணும். அவருடைய திருவடித்தாமரை இணைகளிலேயே எனது புத்தி செல்லவேணும்.

91. ஜா – ஜாயா ஜநநீ ஜநகஸ் தநயஸ் தநயேதி விமோஹவசாம்ஸி ஸதா, ப்ரலபந் பவ ஸிந்துநிமக்நமநா: அஹமத்ய யதீந்த்ர கடாக்ஷணபாக். (ப்ர–அ)

ஆசைவாய்ச் சென்ற சிந்தையராகிப்படியே பாந்தவாபாஸலோலனாய்க் கிடந்த அடியேன் இன்று எம்பெருமானாருடைய திருக்கண்ணோக்கத்திற்குஇலக்காகப்பெற்றேன்.

92. ய – யதிப்ரவரபாரதீரஸபரேண நீதம் வய: ப்ரபுல்லபலிதம் சிர: பரமிஹ க்ஷமம் ப்ரார்த்தயே:, நிரஸ்தரிபுஸம்பவே க்வசந ரங்க முக்ய்யே விபோ! பரஸ்பரஹிதைஷிணாம் பரிஸரேஷு மாம் வர்த்தய. (அபீதிஸ்தவே)

திருவரங்கம் பெரிய கோயிலில் நித்யவாஸம் செய்தருளத் திருவுள்ளம்பற்றிய ஸ்ரீவேதாந்த தேசிகன், திருப்பேர் நகர் ப்ராந்தம் எழுந்தருளினவாறே கோயிலில் துருஷ்க யவநாதிகளால் நேர்ந்த உபப்லவத்தைக் கேட்டு அங்கு எழுந்தருளாதே ஸத்யமங்கலத்தில் சிலகாலம் எழுந்தருளியிருந்தபோது அருளிச் செய்த அபீதிஸ்தவத்தின் முடிவிலுள்ள சுலோகமிது. (கருத்து) எம்பெருமானார் திவ்யஸ்ரீ ஸூக்திகளின் ரஸாநுபவத்தினால் என் வாழ்நாளைப் போக்கினேன்; முதுமை அடைந்திட்டேன். இந்நிலையில் அடியேன்

வேண்டுவதொன்றே. விரோதிவர்க்கம் தொலையப் பெற்றுத் திருவரங்கம் பெரிய கோயிலில் ஒரு மூலையில் பரஸ்பர ஹிதைஷிகளான பாகவதோத்தமர்களின் திருவடி நிழலிலே அரங்கா! என்னை வாழச் செய்தருள்.

93. ந – ந சேத் ராமாநுஜேத்யேஷா சதுரா சதுரக்ஷரீ, காமவஸ்தாம் ப்ரபத்யந்தே ஜந்தவோ ஹந்த மாத்ருச: (முதலியாண்டான் முக்தகம்)

உலகுக்கெல்லாம் சேமவைப்பான ராமாநுஜ என்கிற நான்கெழுத்து இல்லையாகில் அந்தோ! நம்போன்ற பிராணிகளின் நிலைமை என்னாகும்!

94. ம: – மஸ்தகமஸ்து மதீயம் நிஸ்துல யதிராஜபாதபத்மதரம், வதநம் ஹ்ருதயஞ்ச ஸதா தத்குண கீர்த்தந விசிந்தநப்ரவணம். (ப்ர–அ)

எம்பெருமானாருடைய நிகரில்லாத் திருவடியிணைகள் எனது சென்னிக்கு அணியாகுக. எனதுவாய் அவருடைய திருக்கல்யாண குண கீர்த்தனத்திலும், எனது இதயம் அவருடைய குணசிந்தனத்திலும் ஊன்றியிருக்குமாக.

95. "ஸ்ரீமதே ராமாநுஜாய நம:" என்கிற புராதன வாக்யத்திலுள்ள பத்தெழுத்துக்கு சுலோகங்களாலும், பாசுரங்களாலும் எழுத்தடைவே விவரணம் கீழே கண்டீர். இப்போது அந்தப் பத்தெழுத்துக்களுக்கும் புதிய பத்து சுலோகங்களினால் விவரணம் காணீர். புதிய பத்து சுலோகங்கள் எப்படிப்பட்டவை யென்னில் ஒவ்வொரு பாதத்திலும் பத்தெழுத்துக்கள் கொண்டவையான சுலோகங்களை இயற்றியநுபவிக்க வேணுமென்று ஒரு பெரியார் கனவிலே கட்டளையிட்டதனால் அந்த வகையில் இந்த தசகம் ப்ராதுர்ப்பவிக்கின்றது.

ஸ்ரீபாஷ்யாதீந் நவநிதிகல்பாந் திவ்ய க்ரந்தாந் நவ விரசய்ய,
அஸ்மாஸு ப்ராக் பரமக்ருபாம் ய: ஸ்பஷ்டீசக்ரே ஜயது யதீந்த்ர:

நவநிதிகளோ! நவரத்னங்களோ! என்னலாம்படியான ஸ்ரீபாஷ்யம் முதலிய ஒன்பது திவ்ய க்ரந்தங்களை யருளிச் செய்து நம்மீது பரம க்ருபையை வெளியிட்டருளின எம்பெருமானார் வாழி வாழி.

96. மந்தாநாமப்யநவதிமோதம் தாதும் சக்தாந் பணிதிவிசேஷாந்
ப்ரோசே மோசாபலரஸகல்பாந் ஸ்ரீமாந் ராமாவரஜமுநீந்த்ர:

நம் போன்ற மந்தர்களுக்கும் எல்லையற்ற மகிழ்ச்சியைத் தரக்கூடியவையாய் ரஸ்தாளி வாழைக்கனியின் சுவை போன்று இனிய ஸூக்திகளை எம்பெருமானார் அளித்தருளினர். (அவர் இந்நிலவுலகில் நீடுழி வாழ்ந்தருள்க.)

97.தேஜ:புஞ்ஜஸ் ஸகலவிதோபி க்ஷோண்யாமஸ்யாம் யதிபதிரூபம்
த்ருத்வா ப்ராதுர்ப்பவநமயாஸீத் இத்யுக்தஞ் சேத் ந கலு ம்ருஷோக்தி:

அக்நி ஸூர்யன் சந்திரன் வித்யுத் முதலான தேஜோராசிகளெல்லாம் நிலவுலகில் எம்பெருமானாராக வடிவெடுத்து ப்ராதுர்ப்பாவமடைந்த தென்றால் மிகையாகாது.

98. ராம: க்ருஷ்ணோ நரஹரிரூப: மத்ஸ்ய: கூர்ம: கிடிரிதி சாபூத்
யோயம் விஷ்ணுர் யதிபதிரூபம் த்ருத்வா ஸத்யம் ஜகதி ஸமாகாத்

எந்த ஸ்ரீ மஹாவிஷ்ணு ராமக்ருஷ்ண நரஸிம்ஹ மத்ஸ்ய கூர்மவராஹாதி ரூபேண அவதரித்தாரோ, அவரே எம்பெருமானாராகவும் வடிவெடுத்து இந்நிலத்தில் போந்தருளினார்.

99. மாதா வந்த்யா மம இதி வதத்பிர் மூர்க்கைஸ் துல்யா ய இஹ பபூவு:
தேஷாம் ஜல்பாந் நிரஸிதுமாகாத் சேஷ: ஸ்ரீமாந் யதிபதி மூர்த்யா
'மம மாதா வந்த்யா' (என் தாய் மலடி) என்னும் மூர்க்கர்களைப் போன்றவர்களின் ப்ரலாபங்களைக் கண்டிக்க ஆதிசேஷன் எம்பெருமானாராக அவதரித்தார்.

100. நுத்வா நத்வா யதிபதிபாதௌ போ! போ! மர்த்யாஸ் ஸபதி லபத்வம்
ச்ரேயோ பூயோ புவந இதீஹ க்ஷேமாயோக்திம் வததி ந கோபி
'ஓ உலகர்களே! எம்பெருமானார் திருவடிகளைத் துதித்தும் தொழுதும் இந்நிலத்தில் நல்ல நன்மைகளைப் பெறுங்கள்' என்று உபதேசிப்பாரில்லையே!

101. ஜாயாதோஷைர் விக்ருதமநாஸ் ஸந் யஸ் ஸ்வீசக்ரே யதிபதிபாவம்
ஸோயம் யோகீ பணிபதிரூபீ கோபீநாதாதபி மம ஹ்ருத்ய:
திருக்கச்சிநம்பி பக்கல் தாழ்வு நினைத்தது, பெரியநம்பி தேவியாரோடு பிணங்கியது முதலிய தேவியாரது குற்றங்களைக் கண்டு திருவுள்ளம்நொந்து ஆச்ரமஸ்வீகாரம் செய்து கொண்ட சேஷரூபியான எம்பெருமானார் எமக்கு கண்ணபிரானிற் காட்டிலும் பரமபோக்யர்.

102. யஸ்ய ஸ்ரீஸூக்த்யதிசயபோதாத் ப்ராபத் பாதௌ விமதஜநோபி
ஸோயம் ராமாநுஜமுநிரேக: தத்வஜ்ஞாநீத்யபஜத கீர்த்திம்
யாதவப்ரகாசர், யஜ்ஞமூர்த்தி முதலான பிறரும் யாவரொருவருடைய ஸ்ரீஸூக்தி நலங்களைக் கண்டு திருவடி பணிந்தார்களோ, அந்த எம்பெருமானாரொருவரே ('தத் வித்தி ப்ரணிபாதேந' என்ற கீதாச்லோகத்திற் சொன்ன) தத்வதர்சியாவர்.

103. நக்ஷத்ரேசப்ரதிமமுகம் தே ஸ்ரீமத்ராமா வரஜ முநீந்தர!
பாக்யாதிக்யாத் ய இஹ மஹாந்த: ஸேவந்தே ஸ்மைதாந் ஹ்ருதி கலயே
எம்பெருமானாரே! சந்த்ரமண்டலம் போன்ற தேவரீருடைய திருமுக மண்டலத்தை நேரில் (விபவத்தில்) ஸேவிக்கப் பெற்ற பாக்யசாலிகளான ஆழ்வானாண்டான் முதலானாரையே நெஞ்சில் நினைப்பேன்.

104. மஸ்தம் தத்தாம் யதிபதிபாதௌ ஹஸ்தோ லிகதாத் தத்க்ருதி ப்ருந்தம்
வக்த்ரம் ப்ருயாத் யதிபதிஸூக்தீ: நித்யஞ்சைவம் விரமது கால:
எமது சென்னி எம்பெருமானார் திருவடிகளையே தரித்திடுக: கை அவருடைய திவ்யக்ரந்தங்களையே எழுதுக: வாய் அவருடைய ஸ்ரீஸூக்திகளையே சொல்லுக. நிச்சலும் எமது போது இப்படியே கழியட்டும்.

105. மற்றொரு வகையான அநுபவம் காணீர்.
"பூமன்னுமாது பொருந்திய மார்பன் புகழ்மலிந்த
பாமன்னு மாறனடிபணிந்துய்ந்தவன்–பல்கலையோர்
தாம் மன்னவந்த விராமானுசன் சரணாரவிந்தம்
நாம் மன்னிவாழ நெஞ்சே! சொல்லுவோமவன் நாமங்களே

(இராமானுச நூற்றந்தாதி–முதற்பாசுரம்)

இப்பாசுரத்தில் மொத்தம் இருபத்தெட்டு சொற்கள் அமைந்துள்ளன. பூ, மன்னு, மாது, பொருந்திய, மார்பன் ...என்றிப்படிப் பிரித்துக் கணக்கிட்டால் இருபத்தெட்டு பதங்கள்

தேறும். இப்பதங்களின் முதலெழுத்தையோ, சில எழுத்துக்களையோ, பரிபூரண பதத்தையோ கொண்டு சில விசேஷங்கள் விளம்புவோம்.

பூ – இஃது ஓரெழுத்தாயும் ஒருபதமாயுமுள்ளது. புஷ்பமென்று பொருள். வடசொல் திரிபாகக் கொண்டால் பூமியென்று பொருள். திருச்சந்தவிருத்தத் தொடக்கத்தில் (பூநிலாய வென்பதில்) பூமியென்று பொருள். புஷ்பமென்கிற பொருளில் சிறியதோர் உபந்யாஸம் கேளீர். ஆழ்வார்களின் அநுபவத்தில் மூன்று வகைப் புஷ்பங்கள் காணப்படுகின்றன. திருவிருத்தத்தில் 'வண்டுகளோ! வம்மின், நீர்ப்பூ, நிலப்பூ மரத்திலொண்பூ உண்டுகளித்துழல்வீர்க்கு' என்ற பாசுரத்தில் சொல்லப்படுகிற மூவகை தவிர, மற்றொரு மூவகை கேண்மின். 1. எம்பெருமான் திருமேனியில் சாத்திக் கொண்டிருப்பவை; 2. நிலத்திலும் தடாகத்திலும் பூத்திருப்பவை. 3. எம்பெருமானுக்குச் சாத்துவதற்காக பக்தர்களின் கையிலுள்ளவை. ஆக இம்மூவகைகளுக்கும் பாசுரங்கள் வருமாறு; (1) 'பூந்தண்மாலைத் தண்டுழாயும்', 'தூய்மையோகமாயினாய் துழாயலங்கள் மாலையாய்', 'தோளிணை மேலும் நன்மார்பின் மேலும்' .....இவை போன்ற பாசுரங்கள் முதல்வகைக்குச் சேரும். (2) 'பூவையுங் காயாவும் நீலமும் பூக்கின்ற காவிமலரென்றும் காண்தோறும்', 'கள்ளார் துழாயும் கணவலரும் கூவிளையும் முள்ளார் முளரியும் ஆம்பலும் முன்கண்டக்கால்', 'தாமுளரே–தாமரையின் பூவுளதே' இவை போன்ற பாசுரங்கள் இரண்டாம் வகைக்குச் சேரும். (3) 'இண்டை கொண்டு தொண்டரேத்த', இண்டையாயினகொண்டு தொண்டர்களேத்துவார்' 'வானவர் வானவர்கோனொடும் சிந்துபூமகிழும்' 'வரைச்சந்தனக்குழம்பும்–விரைப்பொலிந்த வெண்மல்லிகையும்' இவை போன்ற பாசுரங்கள் மூன்றாம் வகைக்குச் சேரும்.

106. மன்னு – 'மன்னுபெரும் புகழ் மாதவன்' என்கிற நாச்சியார் திருமொழிப் பதிகம் குயிற்பத்து எனப்படும். குயிலைப்பார்த்து எம்பெருமானைக் கூவும்படி வேண்டுகிறது. இதில், குயிலைப் பற்றிய விசேஷார்த்தங்கள் கேண்மின். (ஸ்வாபதேசார்த்தம்) (1) 'போற்றியானிரந்தேன் புன்னை மேலுறை பூங்குயில்காள்!' என்று நம்மாழ்வாரும், 'புன்னை குருக்கத்தி நாழல் செருந்திப் பொதும்பினில் வாழுங்குயிலே!' என்று ஆண்டாளும் மற்றும் பலரும் புன்னை மரத்தைக் குயில்களுக்கு உறைவிடமாகச் சொல்லுகிறார்கள். இங்ஙனம் சொல்லுகிற விதனால் 'புந்நாகதல்லஜம் அஜஸ்ரஸஹஸ்ரகீதிஸேகோத்த திவ்யநிஜஸௌரப மாமநாம:' என்று ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் பட்டர் அருளிச் செய்தபடி திருவாய்மொழியின் சொற்சுவையும் பொருட்சுவையுமூறின கோயிற் புன்னை மரத்தின் கீழே அமர்ந்து விசேஷார்த்தங்கள் கேட்டு வளருமவர்கள் விவக்ஷிதர்கள். திருவரங்கம் பெரியகோயிலில் பூருவாசாரியர்களின் காலந்தொடங்கித் திருப்புன்னைமரம் ஸுப்ரஸித்தம். நம் முதலிகள் அதன் கீழேயிருந்து திருவாய்மொழியின் அர்த்தங்களைச் சிந்தனை செய்வார்களென்பது ஸ்ரீவசநபூஷண வ்யாக்யாநாதிகளில் ப்ரஸித்தம். திருவாய்மொழியில் (3–5–4) 'தம் பிறப்பால் பயனென்னே சாதுசனங்களிடையே' என்றவிடத்து ஈட்டிலும் "திருப்புன்னைக் கீழே ஒருவரிருக்கு மிடத்திலே நம் முதலிகள் பத்துப் பேர்கூட நெருக்கிக் கொண்டிருக்கச் செய்தே" என்றருளிச் செய்யப் பட்டுள்ளது. மேலே யெடுத்துக் காட்டிய பட்டருடைய

ஸ்ரீஸூக்தியில் 'அஜஸ்ர ஸஹஸ்ரகீதி ஸேகோத்த திவ்யநிஜ ஸௌரபம் புந்நாகதல்லஜம்' என்று அந்த திருப்புன்னையின் பெருமை நன்கு விசதமாக்கப் பட்டது. ஆகவே அந்த திருப்புன்னையின் நிழலிலேயிருந்து, 'குயில் நின்றால் பொழில்சூழ் குருகூர்நம்பி பாவினின்னிசை' பாடிக் களிக்குமவர்கள் குயிலாக விவக்ஷிதர்கள். (2) 'மாம்பொழில் தளிர் கோதிய மடக்குயில் வாயது துவர்ப்பு எய்தத் தீம் பலங்கனிதேனதுநுகர்' (பெரிய திருமொழி) என்று குயில்களின் ஓர் இயற்கை கூறப்பட்டது (அதாவது) முதலில் மாந்தளிர்களிலே வாய் வைத்ததனால் வாய் துவர்த்துப் போக அந்தத் துவர்ப்பு நீங்குதற்காகப் பலாப்பழத் தேனைப் பருகுமியல்வு சொல்லிற்று. இதனால், முதலில் ஸாமாந்ய சாஸ்திரங்களிலே வாய் வைத்துப் பிறகு விசேஷ (அத்யாத்ம) சாஸ்திரங்களிலே மிகப் பேரின்பமாகப் போதுபோக்கும் பக்தர்களின்படி சொல்லிற்றாகிறது. (3) வநப்ரிய: பரப்ருத: பிக: என்கிற அமர கோசத்தின் படி குயில்களுக்கு வடமொழியில் பரப்ருதமென்று பெயர். காக்கையின் கூட்டிலே கொண்டுவிடப் பெற்று அவற்றால் போஷிக்கப்பட்டு வளருமவை குயில்கள்; அதுபோல பரனான ஆசார்யனால் போஷிக்கப்பட்டு வளரும் குருகுல வாஸிகளைச் சொல்லிற்றாகிறது. (4) 'வஸந்தகாலே ஸம்ப்ராப்தே காக: காக: பிக: பிக:' என்கிறபடியே சில கால விசேஷங்களில் குயில் தன் மிடற்றோசை காட்டி வீறுபெறும். அது போல ஆசாரியர்களும் ஸமய விசேஷங்களிலே கம்பீரமாக வாய்விட்டு உபந்யஸித்து மற்றையாரிற் காட்டில் தமது வைலக்ஷண்யத்தை விளக்குவார்கள். (5) 'பிக: கூஜதி பஞ்சமம்' என்று, குயில் கூவும் இசையானது பஞ்சமமெனப்படும். அப்படியே ஆசாரியர்கள் வாய் விட்டு அருளிச் செய்யுமது நான்கு வேதங்களுக்கு அடுத்தபடியாக ஐந்தாவது வேதமோ! என்னலாம்படியிருக்கும். ''அல்லிமலர்ப்பாவைக்கு அன்பரடிக்கன்பர் சொல்லுமவிடு சுருதியாம்'' என்ற ஞானஸாரப் பாசுரமும் காண்க. (அவிடு–ஸாமான்யமான வார்த்தை)

107. **மாது** – இச் சொல்லுக்கு அழகு என்றும் பெண் என்றும் சில பொருள்களுண்டேயன்றி, பிராட்டியென்றே பொருள் கிடையாது. முன்னும் பின்னுமுள்ள சொற்சேர்த்தியைக் கொண்டு பிராட்டியென்று பொருள் கொள்ளலாகிறது. ஸாமான்ய பதத்திற்கு விசேஷத்தில் பர்யவஸான மென்றுணர்க. இது தமிழ் நூற்களில் பெரும்பான்மையாகவுள்ளது. 'கோவை வாயாள் பொருட்டு' என்கிறார் நம்மாழ்வார். அவள் யார்! என்றால் 'ஏற்றினெருத்த மிறுத்தாய்' என்று அடுத்த வாக்யத்தைக் கொண்டு நப்பின்னையென்று அறிகிறோம். 'வம்பவிழ்கோதை பொருட்டா' என்றவிடமும் இத்தகைத்தே. 'தையலாள் மேல் காதல் செய்த' என்கிறார் திருமங்கையாழ்வார் அவள் யாவளென்னில், 'வாளரக்கன்'...என்று மேலுள்ளதைக் கொண்டு ஸீதாபிராட்டி யென்றறிகிறோம். 'ஐவர்' என்று அடிக்கடி வருகிறது; சில விடங்களில் பஞ்ச பாண்டவர்களையும், சிலவிடங்களில் பஞ்சேந்திரியங்களையும் பொருளாகக் கொள்ளுகிறோம். இதுவும் முன்பின் சொற் செறிவைக் கொண்டே. இந்த மரியாதை தமிழ் நூல்களில் மட்டுமே காண்கிறோம்; வடநூல்களிற் காண்கின்றிலோம்.

108. **பொருந்திய** – 'பொருந்தியதேசும் பொறையும் திறலும் புகழும் நல்ல திருந்திய ஞானமும் செல்வமும் சேரும், செறுகலியால் வருந்திய ஞாலத்தை வண்மையினால்

வந்தெடுத்து அளித்த அருந்தவன் எங்களிராமானுசனை யடைபவர்க்கே'' (இராமானுச நூற்றந்தாதி–22) கலிகலுஷ நிவர்த்தகரான நம்மிராமானுசரைப் பணிபவர்களுக்கே ஸ்வரூபாநுரூபமான மதியும், களிப்புங் கவர்வு மற்றிருக்கையாகிற க்ஷமாகுணமும் ஜிதேந்தரியத்வமாகிற மிடுக்கும் குணசாலிகளென்கிற கீர்த்தியும் தத்வஹித புருஷார்த்தங்களில் தெளிந்த ஞானமும் பக்திச் செல்வமும் சேரும் என்றவாறு.

109. மார்பன் – ஸ்ரீரங்கநாதனுடைய திருமார்பை ஸ்ரீரங்கராஜஸ்தவ பூர்வ சதகத்தில் பட்டர் அற்புதமாக வருணிக்கிறார்–'வக்ஷஸ்ஸ்தல்யாம் துளஸி கமலாகெஸ்துபைர் வைஜயந்தீ ஸர்வேசத்வம் கதயதிராம் ரங்கதாம்நஸ் ததாஸ்தாம்; கூர்மவ்யாக்ரீநக பரிமிலத்பஞ்சஹேதீ யசோதாநத்தா மௌக்த்யாபரணமதிகம் நஸ் ஸமாதிம் திநோதி' என்கிற சுலோகம் பரம போக்யமானது. திருத்துழாயலங்கல், திருமாமகள், குருமாமாமணிப்பூண், வனமாலை ஆகிய இத் திருவாபரணங்கள் நம்பெருமாளுடைய ஸர்வேச்வரத்தை விளக்குகின்றன. இஃது இருக்கட்டும். ஆமைநகம் புலிநகம் பஞ்சாயுதஹாரம் என்னுமித் திருவாபரணங்கள் (க்ருஷ்ணாவதாரத்தில்) யசோதைப்பிராட்டி சாத்தினவை இன்னமும் திருமார்பிலே திகழாநின்று ஸௌலப்ய காஷ்டையை விளங்கச் செய்கின்றனவாதலால் இத்திருவாபரணங்களே நமது சிந்தனைக்கு இனியவை என்றாராயிற்று – அமலனாதிபிரானில் ''கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணையுண்ட வாயன்–அணியரங்கன்'' என்ற பாசுரத்தைக் கண்டவர்கள் 'பெரிய பெருமாளேயோ வெண்ணெய் உண்டது' என்று கேட்க, ''நம் பெரிய பெருமாளுடைய கொறுட்டையை மோந்து பார்த்தால் தெரியும்'' என்றருளிச் செய்தவரன்றோ பட்டர்.

110. புகழ் – குறளாசிரியர் 'தோன்றில் புகழொடு தோன்றுக, அஃதில்லார் தோன்றலில் தோன்றாமை நன்று' என்றார். கீர்த்தியை அடியோடு பெறாதவர்களும், அபகீர்த்தியை அபரிமிதமாகப் பெற்றவர்களும் மலிந்த இவ்வுலகில் ''நர: பதிதகாயோபி யச: காயேந ஜீவதி'' என்னும்படியாகப் புகழுடம்புடனே ஜீவித்திருக்குமவர்கள் மிகச் சிலரேயன்றோ? அவர்களில் 'ஸர்வதேசதசா காலேஷ்! அவ்யாஹத பராக்ரமா, ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம், திகந்தவ்யாபிநீ பூயாத் ஸாஹி லோக ஹிதைஷிணீ' என்று தொள்ளாயிரம் வருடங்களுக்கு முன்பு தோன்றிய மங்களாசாஸந ச்லோகம் ஈஷத்தும் பழுதுபடாதபடி இற்றைக்கும் நாளைக்கும் எற்றைக்கும் செழித்தோங்கும் புகழ் எம்பெருமானார் ஒருவர்க்கேயன்றோ? ''ரடதிதிசாமுகேஷு யதிராஜயச:படஹ:'' என்ற யதிராஜஸப்ததி ஸூக்தியை ஸ்மரிப்பது.

111. மலிந்த – ''மலிபுகழ்க் கணபுரமுடைய வெம்மடிகளை வலிகெழு மதிளயல் வயலணி மங்கையர் கலியன தமிழிவை விழுமிய விசையினொடு ஒலிசொலுமடியவருறுதுயரிலரே'' திருமங்கையாழ்வாருடைய திருக்கண்ணபுரப் பதிகங்கள் பத்தினுள் 'வியமுடை விடையினமுடை தர மடமகள்' என்கிற பாசுரத்தை முதலிற் கொண்ட பதிகம் (8–7) திருவாய்மொழியில் 'உயர்வறவுயர்நல முடையவன் யவனவன்' என்கிற முதற் பதிகத்தின் சாயையிலே அமைந்தது. பெரும்பாலும் குறிலெழுத்துக்களையிட்டே அமைத்தபதிகங்கள் இவையிரண்டே. பட்டர்

ஸ்ரீரங்கராஜஸ்தவ பூர்வ சதகத்தில்–''த்ருதகநஜகிரி பரிமிலதுததி–ப்ரசலித லஹரிவதஹமஹமிகயா, ஸ்நபயதி ஜநமிமமபஹரதி தம: பணிசய மரதகமணி கிரணகண:'' என்கிற ச்லோகத்தை இந்தச் சாயையிலேயே (ஹ்ரஸ்வாக்ஷரமயமாகவே) அருளிச் செய்தார்.

112. பா – ''பாட்டுக் கேட்குமிடமும் கூப்பீடு கேட்குமிடமும் குதித்தவிடமும் வளைவித்தவிடமும் ஊட்டுமிடமுமெல்லாம்வகுத்தவிடமேயென்றிருக்கக் கடவன்'' என்பது ஸ்ரீவசநபூஷண சூர்ணை. (450) நித்யமுக்தர்களின் ஸாமகானம் கேட்குமிடமான திருநாடும், அஸுர ராக்ஷஸாதி பீடிதர்களான அமரர்களின் ஆர்த்தநாதம் கேட்கச் செவி கொடுத்துக் கொண்டு கண் வளருமிடமான திருப்பாற்கடலும், அங்கு நின்றும் வந்து அவதரித்த விபவாவதார ஸ்தலங்களும், நினைத்தது தலைக்கட்டுமளவும் மலையாளர் வளைப்புப் போலே இட்ட அடிபேராமல் வளைத்துக் கொண்டிருக்கிற அர்ச்சாவதார ஸ்தலங்களும், ஹ்ருதய கமலத்திலே யிருந்து தானுகந்தார்க்குத் தன்னழகை புஜிப்பிக்கிற அந்தர்யாமித்வ ஸ்தலமுமாகிற இந்த ப்ராப்யஸ்தலங்களெல்லாம் ஆசார்ய விஷயமேயென்று துணிந்திருக்க வேணுமென்கை.

113. மன்னு– 'மன்னுமதுரை தொடக்கமாக வண்டு வராபதி தன்னளவும் தன்னைத் தமருய்த்துப் பெய்ய வேண்டித் தாழ்குழலாள் துணிந்ததுணிவைப் பொன்னியல்மாடம் பொலிந்து தோன்றும் புதுவையர் கோன் விட்டுசித்தன்கோதை இன்னிசையால் சொன்ன செஞ்சொல்மாலை ஏத்தவல்லார்க்கிடம் வைகுந்தமே' – இது நாச்சியார் திருமொழியில் பன்னிரண்டாவது பதிகத்தின் நிகமனப்பாசுரம். இப்பதிகத்தில் ஆண்டாளுடைய அநுபவம் மிக அற்புதமானது. கண்ணபிரான் 'ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதந:, நாகபர்யங்க முத்ஸ்ருஜ்ய ஹி ஆகதோ மதுராம் புரீம்' என்றபடி வடமதுரையில் வந்து திருவவதரித்தானென்று கேட்டு (அவதாரஸமாப்தியாய் விட்டதென்பதை மறந்து) தன்னை உடனே வடமதுரையில் கொண்டு சேர்க்கும்படி உற்றாருறவினரை வேண்ட, அவர்களும் அப்படியே மதுரையில் கொண்டு சேர்த்துக் கண்ணபிரான் எங்கே? என்று விசாரிக்க, அவதரித்தவுடனே அப்போதே நள்ளிருளிலேயே திருவாய்ப்பாடிக்குச் சென்று சேர்ந்துவிட்டாரே! என்ன; ''அங்கே கொண்டு போங்கோள்'' என்று ஆண்டாள் கூற, அப்படியே கொண்டு சென்று 'கண்ணபிரான் எங்கே'? என்று கேட்க, ''தீரஸமீரே யமுநாதீரே வஸதி வநே வநமாலீ, கோபீபீந பயோதரமர்தந நிர்தய கரயுகசாலி'' யமுனைக் கரையிலே விளையாடுகிறானென்று கூற, ஆண்டாளை அவ்வாற்றின் கரையிலே கொண்டுவிட்டு, கண்ணபிரான் எங்கே விளையாடுகிறானென்று கேட்க, 'காளியகாட்' என்னுமிடத்தில் காளியமர்த்தனத்திற்குச் சென்றிருப்பதாகச் சொல்ல, ஆண்டாளை அங்கே யழைத்துச் சென்று விசாரிக்க மஹர்ஷிபத்தினிகளின் அடிசிலுண்கைக்காக பக்தவிலோசனத்திற்கு எழுந்தருளியிருப்பதாகக் கூற, அங்கேயழைத்துச் சென்று விசாரிக்க, ப்ரலம்பாஸுரனையழிக்கப் பலராமன் பாண்டிவடமென்கிற இடத்திற்குச் செல்ல, கண்ணனும் அவனைப் பின்தொடர்ந்து போயினனென்று கூற, அங்கே யழைத்துச் சென்று விசாரிக்க; கோவர்த்தனமலையைக் கொற்றக் குடையாக ஏந்தி ஏழுநாள் நின்றிருந்து

புறப்பட்டு போய் வெகுநாளாயிற்றே. இப்போது த்வாரகா புரியில் எழுந்தருளியிருக்கக் கூடுமென்று கூற, ஆகில் என்னை த்வாரகாபுரிக்குக் கொண்டு போய்ச் சேருங்கள் என்று ஆண்டாள் கட்டளையிட்டதாக இப்பதிகம் தலைக்கட்டுகிறது. கோதையின் ஆற்றாமையைக் கண்ட கண்ணபிரான் த்வாரகாபுரியிலே ஸம்ச்லேஷித்துப் பிரிந்தனன் போலும்.

114. மாறன்–திருவாய்மொழியில் நம்மாழ்வார் திருவாக்கினால் "நம்மாழ்வார்க்கு மேற்படவும் ஒரு தெய்வமுண்டோ?" என்று கேட்பதாக ஒரு பாசுரமுள்ளதே, அந்தப் பாசுரம் சொல்ல முடியுமா? என்று ஒருகால் ஒரு பெரியவரை வினவினேன்; இது அஸம்பாவிதமான கேள்வியாயிருக்கிறதே. "நம்மாழ்வார் தாமே, 'நம்மாழ்வார்க்கு மேற்பட்ட தெய்வமுளதோ?' என்று கேட்டிருக்கிறாரென்றால் இதனில் மிக்கோர் அயர்வுண்டே? என்றார் அந்தப் பெரியார். அப்போது (திருவாய்மொழியில்) திண்ணன் வீட்டுப் பதிகத்தில் 'ஏறனைப்பூவனை' (2–2–3) என்று தொடங்கும் பாசுரத்தில் (ஈற்றடி) 'மாறனில் மிக்குமோர் தேவுமுளதே?' என்று இல்லையா? என்றேன். அவர் பரமரஸிகராகையாலே ஆக்ஷேபம் ஒன்றும் சொல்லாமல் புன்முறுவல் காட்டிப்போனார்.

115. இங்கே ஒரு மருமம் கேளீர். சாரீரக மீமாம்ஸையில் 'ஸ்ம்ருத்யநுவகாச தோஷப்ரஸங்க இதிசேந் ந அந்ய ஸ்ம்ருத்யநவகாசதோஷ ப்ரஸங்காத்' என்ற ஸூத்ரத்தின் பாஷ்யத்தில் 'யத் வை கிஞ்ச மநூரவதத் தத்பேஷஜம்' என்கிற தைத்திரீயஸம்ஹிதாச்ருதி வாக்யத்தை உதாஹரித்து, மநு என்பதற்கு ஸம்ருதிகர்த்தாவான மநுமஹர்ஷியைப் பொருளாக உரைத்திருக்கின்றார்கள் (ஸூத்ர) பாஷ்யகாரர்கள். ஆனால் (ச்ருதியில்) அந்த விடத்திற்கு மநுமஹர்ஷியென்னும் பொருள் ப்ரஸக்தமன்று. அதுபோல் இதனைக் கொள்க. பெரியாழ்வார் திருமொழியில் (4–2–7) 'கொன்னவில் கூர்வேல்கோன் நெடுமாறன் தென்கூடல்கோன் தென்னன் கொண்டாடும் தென் திருமாலிருஞ்சோலையே' என்ற பாசுரத்தில் காணும் மாறனுக்கு இந்தப் பொருளை நினைப்பாரில்லை.

116. அடிபணிந்து உய்ந்தவன்– (இந்த மூன்று சொற்களுக்கும் தனித்த விவரணம் மேலே வரும். மாறனடி பணிந்துய்ந்தவன் என்கிற சொற்றொடரைச் சிறிது அனுபவிக்கிறேன்.) இராமானுச நூற்றந்தாதியில் எம்பெருமானாருடைய பெருமை பலபல விதமாகப் பேசப்பட்டிருந்தாலும் அவையெல்லாம் ஒன்று கூடினாலும் 'மாறனடி பணிந்துய்ந்த இராமானுசன் என்றவிந்த ஒரு வாக்கியத்திற்கு ஈடாகாது. மணவாளமாமுனிகள் யதிராஜவிம்சதி தொடங்கும்போது "ஸ்ரீமாதவாங்க்ரி ஜலஜத்வய நித்யஸேவா ப்ரேமாவிலாசய பராங்குச பாதபக்தம்" என்றருளிச் செய்தது இதனை யடியொற்றியே. திருவாய்மொழித் தனியன்களில் "ஏய்ந்த பெருங்கீர்த்தி யிராமாநுசமுனிதன், வாய்ந்த மலர்ப்பாதம் வணங்குகின்றேன்–ஆய்ந்த பெருஞ் சீரார் சடகோபன் செந்தமிழ் வேதம் தரிக்கும், பேராத வுள்ளம் பெற" என்னும் தனியனொன்று போதுமே.

117. அடி – திவ்யப்ரபந்தங்களில் திருவடியைப் பற்றி ஒரு விசேஷம் கேண்மின். பொய்கையாழ்வார் முதல் திருமங்கையாழ்வாரளவும் ஒவ்வோராழ்வாரும் பிரபந்தம் தொடங்கும் போதோ முடிக்கும் போதோ (இரண்டிடத்திலுமோ) திருவடியைப் பேசுவதை

விரதமாகக் கொண்டிருக்கின்றனர். இதை அடைவே விவரிக்கின்றேன். (பொய்கையாழ்வார்) 'செய்ய சுடாராழியானடிக்கே' என்று தொடங்கினார். 'ஓரடியும் சாடுதைத்த ஒண்மலர்ச் சேவடியும், ஈரடியுங் காணலாமென்னெஞ்சே! ஓரடியில் தாயவனைக் கேசவனை' என்று திருவடிமயமாகவே பேசித் தலைக்கட்டினார். (பூதத்தாழ்வார்) தம்முடைய திருவந்தாதியைத் தலைக்கட்டும் போது 'அறைகழல சேவடியான் செங்கணடியான்' என்றருளிச் செய்தார். (பேயாழ்வார்) இவர் தொடங்கும்போது 'இன்றே கழல் கண்டேன்' என்றருளிச் செய்து, பிரபந்தம் தலைக்கட்டும் போதும் 'சக்கரத்தான் தாள்முதலே நங்கட்குச் சார்வு' என்றருளிச் செய்தார். (திருமழிசையாழ்வார்) 'திருச்சந்த விருத்தம் தலைக்கட்டும் போது உன்னபாதமென்ன நின்ற ஒண்சுடர்க் கொழுமலர்' என்றருளிச் செய்தார். (நம்மாழ்வார்) திருவிருத்தம் தொடங்கும் போது 'அடியேன் செய்யும் விண்ணப்பமே' என்று சொல்லி உடனே 'தொழு நீரிணையடிக்கே அன்பு சூட்டிய' என்றருளிச் செய்தார். திருவிருத்தம் தலைக்கட்டும் போது 'அடிக்கண்ணி சூடிய மாறன்' என்றருளிச் செய்தார். அடுத்தபடி திருவாசிரியம் தொடங்கும் போது 'மூவுலகளந்த சேவடியோயே' என்றார். பெரிய திருவந்தாதி தலைக்கட்டும் போது 'மொய்கழலே ஏத்த முயல்' என்றருளிச் செய்தார். திருவாய்மொழித் தொடக்கம் 'துயரறு சுடரடி தொழுதெழென் மனனே' என்பது. (குலசேகராழ்வார்) பெருமாள் திருமொழி தொடங்கும் போது 'திரைக்கையால் அடிவருடப் பள்ளிகொள்ளும்' என்றருளிச் செய்து, முடிவிலும் 'நலந்திகழ் நாரணனடிக்கீழ் நண்ணுவாரே' என்றருளிச் செய்தார். (பெரியாழ்வார்) திருப்பல்லாண்டுத் தொடக்கம் 'உன் சேவடி செவ்வி திருக்காப்பு'. பெரியாழ்வார்திருமொழி தலைக்கட்டும் போது 'திருப்பொலிந்த சேவடி என் சென்னியின் மேல் பொறித்தாய்' என்றருளிச் செய்தார். (தொண்டரடிப்பொடிகள்) இவருடைய திருநாமமே அடிபட்டுக் கிடக்கிறது. (திருப்பாணாழ்வார்) 'திருக்கமலபாதம் வந்து என் கண்ணினுள்ளன வொக்கின்றவே'. (திருமங்கையாழ்வார்) இவ்வாழ்வார் வயலாளி மணவாளன் திருவடியில் வாய் வைத்தே பிரபந்தம் தொடங்கினார் என்றுணர்க. சரமப்பிரபந்தம் தலைக்கட்டும் போதும் 'நெடியானை அடிநாயேன் நினைந்திட்டேனே' என்றார். (மதுரகவிகள்) 'முயல்கின்றேன் உன்றன் மொய்கழற்கு அன்பையே' (ஆண்டாள்) 'உன் பொற்றாமரையடியே போற்றும் பொருள் கேளாய்' . நாச்சியார் திருமொழி முடிவில் 'பெருந்தாளுடைய பிரானடிக்கீழ்ப் பிரியாதென்றுமிருப்பாரே' (இராமாநுச நூற்றந்தாதி) 'மாறனடி பணிந்துய்ந்த–இராமானுசனடிப் பூமன்னவே'.

118. நம்மாழ்வாருடைய திருவாய்மொழியில் (6–10) 'உலகமுண்ட பெருவாயா' பதிகத்தில் குறிக்கொள்ளத்தக்க விசேஷம் கேண்மின்; அப்பதிகத்தின் பதினொரு பாசுரங்களின் திருவடி ப்ரயோகம் தவறாமலுள்ளது. 1. உனபாதம் கூடுமாறு. 2. உன்னடி சேர்வண்ண மருளாயே. 3. அண்ணலே! உன்னடிசேர. 4. பூவார் கழல்களருவினையேன். 5. திணரார் சார்ங்கத்துனபாதம். 6. உன்னடிக்கண் அடியேன் மேவுவதே. 7. நொடியார் பொழுது முன்பாதங்காண. 8.நோலாதாற்றேனுனபாதங் காண. 9. அந்தோ அடியேனுனபாதம். 10. உன்னடிக் கீழமர்ந்து புகுந்தேனே. 11. அடிக்கீழமர்ந்துபுகுந்து.

(இங்கு மற்றொன்றும் குறிக்கொள்ள வேணும்.) இவ்வுலகமுண்டபதிகத்தில் பாசுரந்தோறும் திருவடி பேச்சுவருவது போல (பாசுரந்தோறும்) அடியேன் என்பதும் வருவது காணலாம். நான்காவது பாட்டில் மட்டும் அடியேனுக்குப் பதிலாக 'அருவினையேன்' என வந்துள்ளது.

119. பணிந்து – 'பணிந்துயர்ந்த பௌவப் படுதிரைகள் மோதப் பணிந்த பணமணிகளாலே அணிந்து, அங்கு அனந்தனணைக் கிடக்குமம்மான். அடியேன் மனந்தனணைக் கிடக்கும் வந்து'. இது மூன்றாந் திருவந்தாதியில் பதினைந்தாம் பாட்டு. கீழ்ப்பதினான்காம் பாட்டில் "மாற்பால் மனஞ்சுழப்ப மங்கையர் தோள் கைவிட்டு நூற்பால் மனம் வைக்க நொய்விதாம்" என்றருளிச் செய்த ஆழ்வாரை நோக்கி, சாஸ்த்ரங்களில் மனம் வைத்து அவ்வழியால்தான் எம்பெருமான்படிகளை அறிய வேணுமென்றீரே: நீர் அவ்விதமாகத்தான் அறிந்தீரோ?' என்று சிலர் கேட்க; "எம்பெருமானு டைய நிர்ஹேதுகமான விஷயீகாரத்திற்கு இலக்கானவர்கள் சாஸ்த்ரங்களில் சிரமப்பட வேணுமோ? அவன் தானே ஒருவரை விஷயீகரிக்கத் திருவுள்ளம்பற்றினால் எல்லை கடந்த அன்பு கொண்டு அவன் செய்யும் காரியங்களைத் தடுப்பாருண்டோ? திருப்பாற் கடலிலே பரமஸுகமாகக் கண் வளர்ந்தருளுமவன் அதனை விட்டிட்டு என்னெஞ்சிலே வந்து கிடக்கிறானே; இது அவனுடைய நிர்ஹேதுக கிருபையினால் வந்ததன்றோ? இங்ஙனமே அவன் நிர்ஹேதுகமாக விஷயீகரிக்க விரும்பப் பெறுமவர்க ளுக்கு யாதொரு சாஸ்த்ர பரிச்ரமும் வேண்டா; நான் பெற்றபேறு அவர்களும் பெறுவர்கள்" – என்ற கருத்தையடக்கி இப்பாசுரமருளிச் செய்தபடி.

120. உய்ந்தவன் – வடமொழியில் ஜீவநம் உஜ்ஜீவநம் என்று இரண்டு சொற்களுண்டு. வயிறு வளர்த்து வாழ்வது ஜீவனமென்றும், ஆத்மா கடைத்தேறப் பெறுவது உஜ்ஜீவனமென்றும் சொல்லப்படும். ஜீவனம் என்கிற சொல்லுக்கு இவ்விரண்டு பொருள்களையும் கொள்ளுவாரும் உளரெனினும், உஜ்ஜீவனமென்கிற சொல்லுக்கு வயிறு வளர்த்து வாழ்தலைப் பொருளாகச் சொல்லுவாரில்லை. தமிழில் (உய்தல்) என்கிற சொல்லுக்கு ஜீவனமும் உஜ்ஜீவனமுமாகிய இரண்டும் பொருளாம். 'திருநாரணன் தாள் காலம் பெறச் சிந்தித்து உய்ம்மினோ' என்றவிடத்து 'உஜ்ஜீவியுங்கோள்' என்று பொருள். 'உய்ம்மின் திறைகொணர்ந்தென்றுலகாண்டவர்' என்கிற அடுத்த பாசுரத்தில் 'ஜீவித்துப் போங்கள்' என்று பொருள்.

121. பல்கலையோர் இத்யாதி– (பல்) இதைக் கலையிலும் அந்வயிக்கலாம், கலையோரிலும் அந்வயிக்கலாம். பலவகைப்பட்ட கலைகளையுங் கற்றவர்கள்–என்பது முந்தின அந்வயத்திற் பொருள்; கூரத்தாழ்வான், முதலியாண்டான், எம்பார், அனந்தாழ்வான், திருக்குருகைப்பிரான் பிள்ளான், கிடாம்பியாச்சான் போல்வாரான எண்ணிறந்த 'ஸம்யமி ஸப்தசத்யா' என்று யதிராஜ வைபவத்தில் வடுகநம்பி பணித்தபடியே பன்னீராயிரம் ஸ்ரீவைஷ்ணவர்களும் எழுநூறு உத்தமாச்ரமிகளுமன்றோ எம்பெருமானார் பக்கலிலே மண்டிக் கிடந்தது.

122. இராமானுசன் சரணாரவிந்தம்– எம்பெருமானார் திருவடியிணைகளின் பெருமையை மட்டும் நூற்றந்தாதியில் ஒரு பாட்டாலே யருளிச் செய்கிறார் அமுதனார்.

அப்பாட்டு வருமாறு:– ''உதிப்பனவுத்தமர் சிந்தையுள், ஒன்னலர் நெஞ்சமஞ்சிக் கொதித்திட மாறிநடப்பன, கொள்ளைவன் குற்றமெல்லாம் பதித்தவென் புன்கவிப் பாவினம் பூண்டன பாவுதொல்சீர் எதித்தலைநாதனி ராமானுசன் தன்னிணையடியே (50). இதன் கருத்தாவது–உலகமெங்கும் பரவின திருக்கல்யாண குணங்களையுடையவரும் யதிஸார்வபௌமருமான எம்பெருமானாருடைய திருவடியிணைகள் (எப்படிப்பட்டவை யென்றால்); உத்தமாதிகாரிகளாயிருப்பார் நிரந்தரம் சிந்திக்கும் படியாயிருப்பவை; சங்கரபாக்கரயாதவ பாட்ட ப்ரபாகராதிகளான புறமதத்தவர்கள் அஞ்சி நடுங்கும்படி அவர்களது தலைகள் மீதே நாவலிட்டுழிதருமவை; மஹாபாபியான என்னுடைய இளைய புன்கவிதைகளையும் பெற்றுக் கொண்டவை. (என்னால் துதிக்கப்பட்டவை யென்றபடி.)

123. நாம் – 'நாமே யறிகிற்போம் நன்னெஞ்சே' என்கிற பொய்கையாழ்வாருடைய திருவந்தாதிப் பாசுரம் நினைவுக்கு வருகிறது. அந்தப் பாசுரத்தில் அபூர்வமான கதையொன்று ஆழ்வாரால் அநுஸந்திக்கப்பட்டுள்ளது. பாசுரமாவது–'ஆமேயமரர்க்கறிய அது நிற்க, நாமே யறிகிற்போம் நன்னெஞ்சே!, பூமேய. மாதவதோன் தான் பணிந்த வாளரக்கன் நீண்முடியைப் பாதமத்தால் எண்ணினான் பண்பு' என்பதாம். இதிலுள்ள அபூர்வ கதையாவது–முன்பு இராவணன் தனது பத்துத் தலைகளையும் மறைத்துக் கொண்டு நான்முகனிடஞ் சென்று வரம் வேண்டிக் கொள்ளுமளவில் எம்பெருமான் ஒரு சிறு குழந்தை வடிவாய் அப்பிரமனுடைய மடியில் உறங்குவான் போற்கிடந்து ''இவன் பத்துத் தலைகளை யுடையனான இராவணன்; ஸ்வஸ்வரூபத்தை மறைத்துக் கொண்டு உன்னை வஞ்சித்து வரம் வேண்டிக் கொள்ள வந்திருக்கிறான்; இவனுக்கு நீ வரமளித்தால் பெருந்தீங்காக முடியும்'' என்று தெரிவிப்பவன் போன்று தன் திருவடியால் அவ்விராவணனுடைய பத்துத் தலைகளையும் எண்ணிக் காட்டினன்–என்பதாம். இக்கதை மூன்றாந் திருவந்தாதியில் 'ஆய்ந்த வருமறையோன் நான் முகத்தோன் நன்குறங்கில் வாய்ந்த குழவியாய் வாளரக்கன்–ஏய்ந்த, முடிப்போது மூன்றேழென்று எண்ணினான் ஆர்ந்தவடிப்போது நங்கட்கரண்' என்ற (77) பாட்டிலும், நான்முகன் திருவந்தாதியில் 'கொண்டு குடங்கால் மேல் வைத்த குழவியாய், தண்டவரக்கன் தலை தாளால் பண்டெண்ணிப் போங்குமரன்' என்ற (44) பாட்டிலும் பேயாழ்வாராலும் திருமழிசைப்பிரானாலும் அநுஸந்திக்கப்பட்டுள்ளது. இக்கதை இதிஹாஸ புராணங்களில் உள்ளவிடம் தெரியவில்லை. பெரியாழ்வார் திருமொழியில் 'சீமாலிகனவனோடு தோழமைக் கொள்ளவும் வல்லாய், சாமாறவனை நீ யெண்ணிச் சக்கரத்தால் தலைகொண்டாய்' என்றும், 'எல்லியம்போதினி திருத்தலிருந்ததோரிட வகையில், மல்லிகை மாமாலை கொண்டு அங்கார்த்தது போரடையாளம்' என்று மருளிச் செய்த கதைகள் வ்யாஸபராசர வால்மீகி ப்ரப்ருதிகளால் ஸாக்ஷாத்கரிக்கப்படாமல் ஆழ்வாரால் மட்டும் பகவந் நிர்ஹேதுக கருணையடியாக ஸாக்ஷாத் கரிக்கப்பட்டனவென்று நம் பூருவாசாரியர்கள் நிர்வஹித்திருப்பது போலவே இக்கதையும் கொள்ளத்தக்கதென்று பெரியோர் பணிப்பர்.

124. மன்னி – 'மாரிமலைமுழஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்' என்கிற திருப்பாவைப் பாசுரம் நினைவுக்கு வருகின்றது. திருப்பாவை முப்பது பாட்டும் திருப்பாவை ஜீயரான

எம்பெருமானாருடைய வைபவத்தைத் தெரிவிப்பனவாயினும் இப்பாசுரம் விசேஷித்து எம்பெருமானார் பெருமையைப் பேசுவதாம். திருப்பாவை நறுமணமென்னும் நமது விசேஷவுரையிற் காண்க.

125. வாழ – வாழ்வது பலவிதம். 'நலமந்தமில்லதோர் நாட்டில் வாழ்வதும் நரக பர்யாயமான சுவர்க்கத்தில் வாழ்வதும் வாழ்ச்சியன்று. ஆழ்வார் திருவாய்மொழியில் 'வாழ்வர் வாழ்வெய்தி ஞாலம்புகழவே' என்றும் 'இங்கே காண இப்பிறப்பே மகிழ்வர் எல்லியுங் காலையே' என்றும் பயனுரைத்தருளினபடி இவ் விபூதியிலே அகமகிழுந் தொண்டரோடு திவ்யதேச அநுபவம் பண்ணிக் கொண்டு வாழ்வதே வாழ்வாம்.

126. நெஞ்சே! சொல்லுவோம்– நெஞ்சின் காரியம் நினைப்பதே யொழியச் சொல்லுகையன்றே; 'நெஞ்சே! நினைப்போம்' என்ன வேண்டிருக்க, நெஞ்சே சொல்லுவோமென்றது மநஸ்ஸஹகாரமின்றி எதுவும் நடைபெறாதாதலால். 'மந:பூர்வோ வாகுத்தர:' என்றது வேதமும்.

127. அவன் நாமங்களே–எம்பெருமான் திருநாமங்களைச் சொல்லுவதிற் காட்டிலும் எம்பெருமானார் திருநாமங்களைச் சொல்லுகையே சிறக்குமென்க. 'மதுரகவி சொற்படியே நிலையாகப் பெற்றோம் என்றார் மணவாளமாமுனிகளும்.

128.நம்முடைய ஸம்ப்ரதாயத்தில் எம்பெருமானார்க்குத் திருப்பாவை ஜீயரென்று ஸுப்ரஸித்தமான வ்யபதேசமுள்ளது. திருப்பாவையில் மிக்க ஈடுபாடுகொண்டு அதையநுஸந்திப்பதில் போர அபிநிவிஷ்டராயெழுந்தருளியிருந்தது பற்றி அங்ஙனே வ்யபதேச முண்டாயிற்று என்பது தவிர மற்றுமோர் சிறந்த ஹேதுவுமுண்டு. அதாவது, திருப்பாவையில் ஒவ்வொரு பாசுரத்திலும் எம்பெருமானாரைச் சிந்திக்க வேண்டும்படியான சொற்றொடர்கள் அமைந்திருக்கின்றன வென்பதே, இஃது ஏறிட்டுரைக்கும் முறையிலன்றிக்கே ஏற்ற முறையில் விவரிக்கப் படுமாறு காண்க. மீமாம்ஸா சாஸ்திரத்தில் விநியோகப்ருதக்த்வம் என்கிற நியாயம் ஈண்டு பெரும்பாலும் அநுஸந்திக்கத் தக்கதாம்.

129. மார்கழி திங்கள்: மதிநிறைந்த நன்னாள் என்பதற்கு சந்திரன் நிறைந்த நன்னாள். பரிபூர்ண சுக்லபக்ஷம் என்பது ஒரு பொருள். மதி – ஞானம்; அது நிறையப் போகிற நல்லநாள் என்பது உள்ளுறை பொருள். எம்பெருமானார் அவதரித்த நாள் இருள் தருமா ஞாலத்தவர்களுக்கு ஞானம் நிறைவதற்கு ஹேதுவான நன்னாளன்றோ? 'நிறையப் போகிற' என்ன வேண்டுமிடத்து (நிறைந்த) என்றது காலவழுவமைதி யென்பர் தமிழர். "ஆசம்ஸாயாம் பூதவச்ச" என்பது வடமொழி வியாகரணம். யதிராஜ ஸப்ததியில் 'அநபாய விஷ்ணுபத ஸம்ச்ரயம் பஜே' என்கிற சுலோகத்தினால் எம்பெருமானார் விலக்ஷண சந்திரனாக ப்ரதிபாதிக்கப் பட்டுள்ளார். அந்த யதிராஜசந்திரன் தோன்றிய நன்னாள் என்னவுமாம். சித்திரைத் திங்களானது மனிதர்களுக்கு முதல்மாதம். மார்கழித் திங்களானது தேவர்களுக்கு முதல்மாதம் என்னும் பொருத்தமுளது. இது வியாக்கியானங்களிலும் விசதம். ஆகவே, ஸ்வாமியின் அவதாரம் முதல் மாதத்திலென்கிற ப்ரஸித்திக்குக் குறையில்லை.

130. வையத்து வாழ்வீர்காள்: (பாற்கடலுள் பையத் துயின்ற பரமன்) திருப்பாற் கடலிலே துயின்ற பரமபுருஷன் க்ஷீராப்திநாதன். நம்மாழ்வார் "உனது பாலே போல் சீரில் பழுத்தொழிந்தேன்" என்கிற பாசுரத்தினால் பகவத் குணங்களைப் பாலாகப் பேசினார். அவர் தாமே அக்குணங்களைக் கடலாகவும் பேசினார் "சீர்க்கடலையுள் பொதிந்த" என்ற பாசுரத்தினால் இவற்றுக்குச் சார்பாக "அநந்த குணஸாகரம் ப்ரஹ்ம" (அனந்தமான குணஸாகரத்தையுடையவர்) பரமபுருஷர் என்றருளினார் ஸ்ரீபாஷ்யகாரர். அவ்வளவோடு நில்லாமல் அக்குணங்களையே தமது திவ்யக்ரந்தங்களில் வாய்வெருவுவதும் செய்கின்றார். ஏவஞ்ச, பகவத் குணஸாகரத்திலே அஸ்தமிதாந்ய பாவராய் இன்புறும் பரமர் எம்பெருமானாரென்க.

131. ஓங்கியுலகளந்த உத்தமன்: "மண்மிசை யோனிகள் தோறும் பிறந்து" "ஞானங் கனிந்த நலங்கொண்டு" இத்தியாதிகளான நூற்றந்தாதிப் பாசுரங்களிற்படியே எம்பெருமானை விட ஓங்கி – அதிசயித்து, உலகத்தையெல்லாம் ஸ்வாதீனமாக்கிக் கொண்ட உத்தமர் ஸ்ரீராமாநுஜர் ஒருவரே. ஒருவர்க்கும் ஒன்றுஞ் சொல்லாதவர் அதமர். நிர்ப்பந்தத்தினால் சொல்லுபவர் மத்யமர். தம்முடைய கருணையினால் தாமே சொல்லுமவர் உத்தமர். 'ஓராண்வழியா யுபதேசித்தார் முன்னோர்' என்கிற உபதேசரத்தினமாலையின்படி உத்தமர் ஸ்ரீராமாநுஜரொருவரேயாவர். நூற்றந்தாதியில் 'மற்றொரு பேறுமதியாது' என்கிற பாசுரத்தில் உத்தமனாகவும் கூறப்பட்டுள்ளார்.

132. ஆழி மழைக்கண்ணா: இப்பாட்டில் எம்பெருமானுடைய ஆழியும் சங்கும் சார்ங்கமும் வருவதனால் "அடையார் கமலத்து அலர்மகள் கேள்வன்" என்கிற நூற்றந்தாதிப் பாசுரப்படிக்கும், "வவ்ருதே பஞ்சபிராயுதைர் முராரே:" என்கிற யதிராஜ ஸப்ததிப்படிக்கும் பஞ்சாயுதாழ்வார்களின் ப்ராதுர்ப்பாவ விசேஷமான எம்பெருமானார் நினைப்பூட்டப்படுகிறார். (ஒன்றும் நீ கைகரவேல்) அருமையாகப் பெற்ற அர்த்த விசேஷங்களை ஒன்றும் ஒளித்திடாமல் வர்ஷித்த மேகம் இராமானுச னென்னுஞ் சீர்முகிலே. (ஆழியுள் புக்கு) என்றவிடத்து "உபநிஷத் துக்தாப்தி மத்யோத்த்ருதாம்" என்கிற ஸ்ரீபாஷ்யகார திவ்ய ஸூக்தி மிகப் பொருத்தமாக அநுஸந்திக்கத்தகும்.

133. மாயனை மன்னு வடமதுரை: 'ஆயர் குலத்தினில் தோன்றுமணிவிளக்கு' எம்பெருமானார். இடக்கை வலக்கை யறியாத இடையர்கள் வாழ்ந்தவிடம் திருவாய்ப்பாடி. அதில் தோன்றிய அணிவிளக்கு 'ஆயர்பாடிக் கணிவிளக்கே!' என்று யசோதைப் பிராட்டியா லழைக்கப்படுகிற அச்யுதபாநுவான கண்ணபிரான். 'ந்ருபசு:' என்று ஆளவந்தாரும், 'வ்ருத்த்யா பசுர் நரவபு:' என்று மணவாளமாமுனிகளும் அருளிச் செய்தபடி பசுப்ராயர்களான அஸ்மதாதிகள் வர்த்திக்குமிடமும் ஆயர்குலமாதலால் இருள்தருமா ஞாலமாகிற இவ்வாயர் குலத்திலே தோன்றிய அணிவிளக்கு – ராமாநுஜ திவாகரர்: என்ன கடவதிறே.

134. புள்ளுஞ் சிலம்பினகாண்: "புள்ளரையன் கோயில் வெள்ளை விளிசங்கு" என்பது எம்பெருமானார்க்கு மிகச் சிறந்த ப்ரத்யபிஜ்ஞாபகம். "பாலன்ன வண்ணத்துன் பாஞ்ச சன்னியமே" என்றபடி பால் போன்ற நிறத்தது சங்கு; ஸ்வாமி யெம்பெருமானாரும்

"துக்தோதந்வத் தவளமதுரம் சுத்தஸத்வைகரூபம் ரூபம் யஸ்ய ஸ்புடயதிதராம் யம் பணீந்த்ராவதாரம்" என்றபடி பால் போன்ற திருநிறத்தவர். இந்தச் சங்கு எங்கு வாழ்ந்ததென்னில் (புள்ளரையன் கோயில்) "பூமருவிப் புள்ளினங்கள் புள்ளரையன் புகழ் குழறும் புனலரங்கமே" என்று பெரியாழ்வார் புள்ளரையன் கோயிலாகக் கூறிய திருவரங்கத்தில் வாழ்ந்தது. சக்கரம் சங்கு என்ற இரண்டு திவ்யாயுதங்களில் சக்கரமானது "கருதுமிடம் பொருது" என்ற அருளிச் செயலின்படியே காசீவிப்லோஷாதி நாநா கார்ய விசேஷங்களுக்காக பாஹ்ய ஸஞ்சாரங்கள் செய்து கொண்டேயிருக்கும். திருச்சங்கு அப்படியன்றியே "உண்பது சொல்லில் உலகளந்தான் வாயமுதம், கண்படை கொள்ளல் கடல்வண்ணன் கைத் தலத்தே" என்னும்படி யிருக்கும். ஸ்வாமி தாமும் "யாவச் சரீர பாதம் அத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகமாஸ்வ" (சரணாகதி கத்யே) என்ற ஸ்ரீரங்கநாதன் கட்டளையைப் பெற்றுக் கோயிலே கதியாயிருந்தவர். ஆகவே 'கோயில் சங்கு' என்றது ஸ்வாமி யெம்பெருமானாருக்கு மிகப் பொருத்தம்.

135. கீசுகீ சென்றெங்கும்: (கலந்து பேசின பேச்சரவம்.) பூர்வாசார்ய ஸூக்திகளோடே கலந்திருக்கும்படி. (அவற்றுக்கு முரண்படாதபடி) ஸ்ரீஸூக்தி யருளிச் செய்தவர் ஸ்ரீராமாநுஜர் என்பது இவருடைய திவ்யஸூக்தியினால் ஸித்தம். ஸ்ரீபாஷ்யம் தொடங்கும்போதே "பகவத் போதாயந க்ருதாம் விஸ்தீர்ணாம் ப்ரஹ்மஸூத்ர வ்ருத்திம் பூர்வாசார்யாஸ் ஸஞ்சிக்ஷிபு:, தந்மதாநு ஸாரேண ஸூத்ராக்ஷராணி வ்யாக்க்யாஸ்யந்தே" என்றருளிச் செய்தவர் ஸ்வாமி யொருவரேயன்றோ. அன்றியும் கலந்து பேசுவதாவது வடமொழி தென்மொழிகளைக் கலந்து மணிப்ரவாளமாகப் பேசுவது. இத்தகைய க்ரந்தம் முதன்முதலாகத் திருவாறாயிரப்படியே தோன்றியது. அது பிள்ளானருளியதாயினும் "எதிராசர் பேருளால்" என்று மணவாள மாமுனிகளருளிச் செய்தபடியே ஸ்வாமி கற்பித்த நடையேயாம் அது. ஆகவே இரு மொழிகளைக் கலந்து பேசின பேச்சுக்கு நிதான பூதர் ஸ்வாமியென்று குறிப்பிட்டவாறு.

136. கீழ்வானம் வெள்ளென்று: "மிக்குள்ள பிள்ளைகளும் போவான் போகின்றாரைப் போகாமல் காத்து" என்றதில் ஸ்வாமியின் ப்ரபாவமே நன்கு ஸ்புரிக்கும். "அர்வாஞ்சோ யத்பத ஸரஸிஜத்வந்த்வமாச்ரித்ய, பூர்வே மூர்த்நா யஸ்யாந்வயமுபகதா தேசிகா முக்திமாபு:" என்ற பட்டர் ஸ்ரீஸூக்திப்படிக்கும், "பாத கோடீரயோஸ் ஸம்பந்தேந ஸமித்யமாந விபவாந்" என்ற நிகமாந்த மகா குருஸூக்திப்படிக்கும் திருவடி ஸம்பந்தத்தாலே பின்னோர்களையும் திருமுடி ஸம்பந்தத்தாலே முன்னோர்களையும் வாழ்வித்தவர் ஸ்வாமி யெம்பெருமானார். மிக்குள்ள பிள்ளைகள் என்றது ஸ்வாமிக்கும் பூஜ்யர்களாயிருந்த பூருவர்களை. அவர்களை நற்கதி யெய்துவித்த படியைக் காட்டுமதாம்.

137. தூமணி மாடத்து: (மணிக்கதவம் தாள் திறவாய்) மணியென்று ரத்னத்திற்குப் பெயர். நவரத்னங்களாகையாலே ஒன்பது என்கிற ஸங்கியை ஸூசிதமாகிறது. கதவு என்பது பதார்த்தங்களைச் சேமித்து வைப்பது. ஸ்வாமியினுடைய திவ்யக்ரந்தங்களே இங்குக் கதவென்பன. ஸ்வாமி யருளிச் செய்தவை ஸ்ரீபாஷ்யம், வேதாந்ததீபம், வேதாந்தஸாரம், வேதார்த்த ஸங்க்ரஹம், கீதாபாஷ்யம், சரணாகதி கத்யம், ஸ்ரீரங்க கத்யம்,

ஸ்ரீவைகுண்ட கத்யம், நித்யம் என்று ஒன்பது திவ்ய க்ரந்தங்களாகையாலே அவையே இங்கு மணிக்கதவமெனப்படுகிறது. அவற்றைத் திறக்க வேணுமென்றது – அவற்றிலுள்ள அர்த்த விசேஷங்கள் எங்களுக்கும் நிலமாம்படி விளக்கியருள வேணுமென்றபடி.

138. நோற்றுச் சுவர்க்கம்: 'நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற வம்மனாய்! அருங்கலமே!' என்ற இரண்டு விளிகளிலும் ஸ்வாமியின் ப்ரத்யபிஜ்ஞை நன்கு உண்டாகும். நோற்று என்றது மஹாபாக்ய வசத்தாலே என்றபடி. ஸுவர்க்கம் புகுகின்றஃ வர்க்கமென்று ஸமூஹத்திற்குப் பெயர்; ஒரு வகுப்பு என்றபடி. (ஸு) என்பதனால் மிகச் சிறந்த வகுப்பு என்றதாகும். யாதவ ப்ரகாசரிடத்திலே வாசித்துக் கொண்டிருந்து அவர் சாயையிலே ஒதுங்கியிருந்த ஸ்வாமி அவருடைய கருத்தின்படியே ஆபத்துக்க ளையடைந்து போகாமல் நம்போலியர்களின் பாக்யவசத்தாலே பெருந்தேவி மணவாளனான பேரருளாளனது பரமக்ருபைக்கு இலக்காகி ஸ்ரீவைஷ்ணவ வகுப்பிலே புகுந்து அனைவர்க்கும் தாயாயிருந்தவர். சுவர்க்கம் என்பதற்கு ஸ்வர்க்கம் என்றே பொருளானாலும் "யஸ் த்வயா ஸஹ ஸ ஸ்வர்க்கோ நிரயோயஸ் த்வயா விநா" என்ற ஸ்ரீராமாயணத்தின்படி எம்பெருமானோடு கூடப் பெற்றவரென்றதாகும். ஸித்தாச்ரமத்தில் நின்றும் வருகிறோமென்று சொல்லிக் கொண்டு வந்த வேடனும் வேடுவிச்சியுமான பகவத் தம்பதிகளோடே கூடப் பெற்றமை கூறினபடி. அருங்கலமே! என்றது அருமை பெருமை வாய்ந்த ஆபரணமே! என்றும் உத்தம ஸத்பாத்ரமே! என்றும் பொருள்படும். நம்முடைய குருபரம்பரையிலே மஹாபூஷணமாக விளங்குமவர் ஸ்வாமி.

139. கற்றுக் கறவைக் கணங்கள்: இப்பாசுரத்தில் கற்றுக் கறவை யென்று தொடங்கி கோவலர்தம் பொற்கொடியே! என்னுமளவுமுள்ள விளி பூர்த்தியாக எம்பெருமானார் தன்மையையே தெரிவிக்குமதாயிருக்கும். கற்று – 'சொல்லார் தமிழொரு மூன்றும், சுருதிகள் நான்கும் எல்லையில்லா வறநெறியாவும் தெரிந்தவன்' என்ற நூற்றந்தாதிப் பாசுரப்படியே எல்லாக் கல்விகளையும் கற்று; (கறவைக் கணங்கள் பல கறந்து) 'பஞ்சாசார்ய பதாச்ரித:' என்று யதிராஜ வைபவத்தில் கூறியுள்ளதை விவரிக்கிறபடி. "கவாமங்கேஷு திஷ்டந்தி புவநாநி சதுர்தச" என்கிறபடியே கோக்கள் பதினான்கு லோகங்களையும் தம்முள் வஹிக்குமாபோலே சதுர்தச வித்யைகளையும் தம்முட்கொண்டு நன்றாகக் கறக்கும் ஆசாரியர்கள் பலரிடத்திலும் ஸத்ஸம்ப்ரதாயார்த்தங்கள் கேட்டு உய்ந்தவர் ஸ்வாமி. பெரியநம்பி பக்கலிலே பஞ்ச ஸம்ஸ்காரம் பெற்று மந்த்ரார்த்தங்கள் கேட்டும், பெரிய திருமலைநம்பி பக்கலிலே ஸ்ரீராமாயணார்த்தம் கேட்டும், திருக்கோட்டியூர் நம்பி பக்கலிலே ரஹஸ்யார்த்தங்கள் சிக்ஷித்தும், திருமாலையாண்டான் பக்கலிலே திருவாய்மொழிப் பொருள் கேட்டும், ஆளவந்தாராழ்வார் ஸ்ரீபாதத்திலே அருளிச் செயல் கற்றும் நல்வார்த்தைகள் கேட்டும் போந்தவராகையாலே 'கறவைக் கணங்கள் பல கறந்து' என்றது ஸ்வாமிக்கு மிகப் பொருத்தம். அதற்கு மேல் (செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்) எம்பெருமானை நிர்க்குணனென்றும் நிர்விபூதிக னென்றும் நிர்லக்ஷ்மீகனென்றும் திவ்யமங்கள விக்ரஹ சூந்யனென்றும் சொல்லுமவர்கள் – செற்றார்; அவர்களுடைய திறலழிய – வாக்கு மிடுக்குத் தொலையும்படியாக திசைதொறும்

எழுந்தருளி வாதப்போர் நிகழ்த்தியவர் ஸ்வாமி. "விப்ரம் நிர்ஜித்ய வாதத:" என்கிறபடியே இது குற்றமாகையன்றிக்கே ஸித்தாந்த ரக்ஷணார்த்த மாகச் செய்ததாகையாலே நற்றமேயாயிற்றென்று காட்ட 'குற்றமொன்றில்லாத' என்றது. கோ என்னும் வடசொல் நாநார்த்தகமாகையாலே ஸ்ரீஸூக்தியை யும் சொல்லக்கடவது; "யத்கோஸஹஸ்ரமபஹந்தி தமாம்ஸிபும்ஸாம்" என்றவிடத்திலுமிது காணலாம். கோ வல்லவர்–மஹாவித்வான்கள். அவர்தம் பொற் கொடி–ஸ்வாமி. கோ அ(ல்)லர்–ஸ்வதந்திரரல்லர்.

140. கனைத்திளங் கற்றெருமை: ஸ்வாமியின் திருவவதார ஸ்தலமான ஸ்ரீபெரும்பூதூரில் இரட்டித்து ஸேவிக்கும் பாசுரமிது. பூர்வாசாரியர்களும் தங்கள் வியாக்கியானங் களின் முடிவிலே எம்பெருமானாரை ப்ரஸ்தாவித்திருக்கும் பாசுரமுமிது. இங்கு இவ்வளவே நாமெழுதப் போதும். ஆயினும் சிறிது விவரிக்கலாகிறது. இப்பாட்டில் நற்செல்வனென்றது ஸ்வாமியைக் கருதி. நற்செல்வனென்பதை வடமொழியிற் கூறவேணுமானால் 'லக்ஷ்மி ஸம்பந்ந:' என்னப்பட்ட இளையபெருமாளே யன்றோ இளையாழ்வாராகத் திருவவதரித்தவர். அவர் "அஹம் ஸர்வம் கரிஷ்யாமி" என்று விபவாவதாரத்திலே அடிமை செய்யப் பெற்றார்; இவர் "நித்ய கிங்கரோ பவாநி" என்று அர்ச்சாஸ்தலங்களிலே ஒப்புயர்வற்ற அடிமைகள் செய்யப் பெற்றார். "மன்னிய தென்னரங்காபுரி மாமலைமற்று மூவந்திடுநாள்."

141. புள்ளின்வாய் கீண்டானை: இப்பாட்டில் கள்ளந் தவிர்ந்து கலந்தென்றது உயிரான சொற்றொடர். "கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா" என்றபடி ஆத்மாபஹாரக் கள்வமொன்றுண்டு; அது தவிர மற்றொரு கள்வம் கேண்மின்; "ஏகஸ் ஸ்வாது ந புஞ்ஜீத புஞ்ஜீத பஹுபிஸ் ஸஹ" "இன்கனி தனியருந்தான்" என்கிறபடியே போக்ய பதார்த்தங்களைப் பலரோடுங் கூடி யநுபவித்துக் களிக்கையன்றிக்கே அசலறியாதபடி யநுபவிக்கை கள்வம்; எம்பெருமானார்க்கு முற்பட்ட ஆசாரியர்களிடத்து இத்தகைய கள்வமிருந்தது; அதனைத் தவிர்ந்தவர் ஸ்வாமி யொருவரே. தவிர்ந்து எல்லாரோடுங் கலந்து அநுபவித்தவர். "பிள்ளைகளெல்லாரும் பாவைக்களம் புக்கார்" என்றதும் ஸ்வாமியின் பெருமையை நினைப்பூட்டும். பாவைக்கள மென்பது காலக்ஷேப மண்டபம்; அதில் எல்லாரும் புகப் பெற்றது ஸ்வாமிக்கு முன்பு இல்லை; அதிகார பரீக்ஷை பண்ணிப் பலர் விலக்கப் பட்டிருந்தார்களன்றோ. ஆசைக்கு மேற்பட அதிகார ஸம்பந்தி யில்லையென்று கொண்ட ஸ்வாமியின் காலத்தில் தான் பிள்ளைகளெல்லாரும் பாவைக் களம் புக்கார். அதனை நன்கு காட்டினபடி.

142. உங்கள் புழைக்கடை: இப்பாட்டில் "செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பின" என்பதில் ஸ்வாமியின் திவ்யப்ரபாவமொன்று நினைவுக்கு வரும். ஸ்வாமி யாதவப்ரகாசரிடத்திலே பூர்வபக்ஷ வேதாந்தம் வாசித்த போது 'ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம' 'ஐததாத்ம்யமிதம் ஸர்வம்' 'தத் த்வமஸி' இத்யாதி ச்ருதி வாக்யங்களுக்கு அவர் அபார்த்தம் கூற, ஸ்வாமி 'இப்படியன்றோ பொருள்' என்று உபபந்நமான அர்த்தமருளிச் செய்ய, மேல் வாய் திறக்கமாட்டாதே ஹுங்காரமே பண்ணிப் போந்ததாக வைபவ நூல்கள் விளம்புகின்றன. அது இங்கு நினைவுக்கு வரும். ஸ்வாமி திருவாய் மலர்ந்தருளியது

செங்கழுநீர் வாய் நெகிழ்ந்தமை; யாதவர் மறு மாற்றம் சொல்ல மாட்டாமே வாய் மூடிக் கிடந்தது ஆம்பல்வாய் கூம்பினமை. மேலே 'செங்கல்பொடிக் கூறை வெண்பல் தவத்தவர் தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்' என்றதும் ஸ்வாமிக்கு மிகப் பொருத்தம். 'செங்கல் பொடிக் கூறை = காஷாயேண க்ருஹீத பீதவஸநா' என்று ஸப்ததியில் போற்றப்பட்ட திவ்ய மூர்த்தி. வெண்பல் = 'அச்யுத பதாம்புஜ யுக்மருக்மவ்யாமோஹதஸ் ததிதராணி த்ருணாய மேநே' என்னும்படி மஹாவிரக்த ஸார்வபௌமராகையாலே "யத் தஸ்மை திஷ்டதேந்ய: க்ருபண மசரணோ தர்சயந் தந்தபங்க்தி" என்னும்படி பிறர்பாடே பல்லைக் காட்டப் பெறாதவர். தவத்தவர் = மம, மம என்னாதே 'தவ,தவ' என்று சேஷத்வம் பரிமளிக்க நிற்பவர். தங்கள் திருக்கோயில் = அமுதனாருடைய அதீனத்தி லிருந்த கோயில் தங்கள் திருக்கோயிலென்னும்படி தம்மதீனமாகப் பெற்றவர். சங்கிடுவான்–'சங்க:' என்ற வடமொழி சங்கு என்று திரிவது போல் 'சங்கு:' என்ற வடமொழியும் சங்கு எனத் திரியும். இச்சொல் திறவுகோல் என்னும் பொருளைத் தரும். ஆறாயிரப்படியில் இப்பொருளும் பணிக்கப் பெற்றது. ஆழ்வான் மூலமாத் திருக்கோயில் திறவுகோலைப் பெற்ற இதிஹாஸம் இச்சொற்றொடரில் அநுஸந்திக்கலாகிறது. ...

143: எல்லே யிளங்கிளியே: இப்பாட்டில் "உனக்கென்ன வேறுடையை" என்னுஞ் சொற்றொடர் நிதியானது. உமக்கு மட்டும் அஸாதாரணமான பெருமை என்னே! என்று வியந்து கூறப்பட்டுள்ளது. ஸ்வாமிக்கு முன்னே நம்மாழ்வாரும் ஸ்ரீமந்நாத முனிகளும் ஆளவந்தாரும் நம் தர்சனத்திற்கு நிர்வாஹகர்களாயிருக்கச் செய்தேயும் 'நம்மாழ்வார் தரிசனம்' என்றோ, 'நாதமுனிகள் தரிசனம்' என்றோ 'ஆளவந்தார் தரிசனம்' என்றோ வ்யவஹாரம் வாராமே 'எம்பெருமானார் தரிசனம்' என்றே வ்யவஹாரம் நிகழ்ந்துவருகைக்கீடான ஸ்வாமியின் அஸாதாரண மான பெருமை இங்கு அநுஸந்திக்க வுரியது. மாற்றாரை மாற்றழிக்க வல்லானென்ற விடத்தில்–"பாஷண்ட த்ருமஷண்ட தாவதஹநச் சார்வாக சைலாசநி: பௌத்த த்வாந்தநிராஸ வாஸரபதிர் ஜைநேப கண்டீரவ: மாயாவாதி புஜங்கபங்க கருட:" "தற்கச் சமணரும் சாக்கியப் பேய்களும்...... நீசரும் மாண்டனர்" "சாறுவாகமத நீறு செய்து" இத்யாதிகள் நினைவுக்கு வரும்.

144. நாயகனாய் நின்ற: யதிராஜ ஸப்ததியில் "அமுநா தபநாதிசாயி பூம்நா யதிராஜேந நிபத்த நாயகஸ்ரீ:, மஹதீ குருபங்க்தி ஹாரயஷ்டி:" என்று பணித்தபடியே நம்முடைய குருபரம்பரா ஹாரத்தில் நாயகமணியாய் விளங்குமவர் ஸ்வாமி. (நந்தகோபன்) தனக்கு ஔரஸ புத்திரனில்லாமல் 'ஆயர் புத்திரனல்லன் அருந்தெய்வம்' என்னப்பட்டவொரு தெய்வத்தைப் புதல்வனாகக் கொண்ட நந்தகோபன் போலே ஸ்வாமியும் "யதிராஜ ஸம்பத் குமாரா!" என்னும்படி செல்வப் பிள்ளையைத் தம் புத்திரராகப் பெற்றவர். (உடைய) உடையவரென்கிற திருநாமம் ஸூசிதமாகிறது என்று கொள்ளக் குறையில்லை. (கோயில் காப்பான்) 'ஸ்ரீரங்கச்ரிய மநுபத்ரவா மநுதிநம் ஸம்வர்த்தய' என்னும்படி ஸ்ரீரங்க ஸ்ரீயைக் காத்தருளினவர் ஸ்வாமி. (கொடித் தோன்றும் தோரண வாசல் காப்பான்) "உபய விபூதி ஸாம்ராஜ்ய பட்டாபிஷிக்தா!" என்பது ஸ்வாமிக்குக் கட்டியம். கீழ் 'கோயில் காப்பானே' என்பதனால் லீலாவிபூதி ஸாம்ராஜ்ய பட்டாபிஷேகம்

சொல்லிற்று. இங்கு நித்யவிபூதி ஸாம்ராஜ்ய பட்டாபிஷேகம் சொல்லுகிறது. "கொடியணி நெடுமதிள் கோபுரம் குறுகினர்" "நெடுவரைத் தோரணம் நிறைத்து எங்கும் தொழுதனருலகே" என்னும்படி கொடித் தோன்றும் தோரணவாசல் நித்ய விபூதிவாசல்; அதையும் பிறர் புகாதபடி காத்தருள்பவர் ஸ்வாமி.

145. அம்பரமே தண்ணீரே: அம்பரத்தையும் தண்ணீரையும் சோற்றையும் அறம் செய்தவர் ஸ்வாமி. "அம்பரம் வ்யோம வஸ்த்ரயோ:" என்ற நிகண்டின்படி அம்பரமாவது ஆகாசம்; பரமாகாச மெனப்படுகிற பரமபதம். அதையும், விரஜையாகிற தண்ணீரையும், 'அந்நம் ப்ரஹ்மேதி வ்யஜாநாத்' என்று உபநிஷத்தில் அன்னமாகச் சொல்லப்பட்ட பரப்ரஹ்மாநுபவத்தையும், அறஞ் செய்யுமெம்பெருமான் க்ருபாமாத்ரப்ரஸந்நாசார்யராய் உபகரித்தருளினவர் எம்பெருமானார். மேலே "அம்பர மூடறுத்து ஓங்கியுலகளந்தவும்பர் கோமான்" என்றதும் எம்பெருமானாரை நன்கு நினைப்பூட்டும். ஆளவந்தாருடைய சரம திருமேனியை ஸ்வாமி ஸேவிக்கப் பெற்றபோது "ஆளவந்தாரோடே நான் சேர்ந்து வாழப் பெறில் பரமபதத்திற்குப் படிகட்டியிருப்பேனே!" என்று ஸ்வாமி பணித்ததாக ப்ரஸித்தி. ஆளவந்தாரோடே சேர்ந்து வாழப் பெறாமற் போனாலும் 'யத்பதாம் போருஹத்யாந' ச்லோகப்படியும் "ஏகலவ்யனன்றோ நான்" என்ற ஸூக்திப்படியும் அவருடைய விலக்ஷண அநுக்ரஹ பாத்ரமாயிருக்கப் பெற்ற பெருமையினால் நித்யவிபூதிக்கும் லீலாவிபூதிக்கும் இடைச்சுவர் தள்ளி உபய விபூதியையும் ஒரு போகி யாக்கினவர் நம் ஸ்வாமியென்று ப்ரஸித்தமாயிற்று. "மதுரகவி சொன்ன சொல் நம்புவார்பதி வைகுந்தங் காண்மினே" என்ற விடத்து வியாக்கியானத்தில் உபய விபூதிக்கும் இடைச்சுவர் தள்ளின பெருமை பட்டருடையதாக அருளிச் செய்யப்பட்டிருந்தாலும் அப்பெருமை ஸ்வாமிக்கு கிம்புநர்ந்யாய ஸித்தமே. அம்பரத்தை – பரமாகாசத்தை, ஊடறுத்தவர் என்றதாயிற்று.

146. உந்துமதகளிற்றன்: இப்பாசுரம் மூலமாகவே ஸ்வாமிக்குத் திருப்பாவை ஜீயரென்று வ்யபதேச முண்டாயிற்றென்றும் ப்ரஸித்தமாதலால் இங்கு நாம் வேறு எதுவும் விவரிக்க வேண்டிற்றில்லை. ஆனாலும் கீழும் மேலுமுள்ள விவரணங்களுக்குச் சேர இங்குமொன்றுரைப்போம். 'கந்தங்கமழுங்குழலீ!' என்று கேச பாசத்தை யிட்டுச் சொன்னது ஸ்வாமியின் திருவுள்ளத்திற்கு மிகவுகப்பான ஸம்போதனமாம். மதாந்தரஸ்தர்களான யதிகள் சிகையை வஹியாதே முண்டனம் செய்து போருவர்கள்; அங்ஙனன்றிக்கே "காரிசுதன் கழல் சூடிய முடியும் கன நற்சிகை முடியும்" என்றும் "கமநீய சிகாநிவேசம்" என்றும் "சிகயா சேகரிணம் பதிம் யதீநாம்" என்றும் நம் முதலிகள் உள் குழைந்து பேசும்படி கமநீய சிகாபந்தத்தோடு ஸ்வாமி ஸேவை ஸாதித்தவழகு நெஞ்சுகுளிர அநுபவிக்கப்பட்டதாயிற்று.

147. குத்து விளக்கெரிய: திருக்கோட்டியூர் நம்பி பக்கலிலே எம்பெருமானார் பதினெட்டு பர்யாயம் எழுந்தருளி ரஹஸ்யார்த்தம் விசேஷம் பெற்று அவ்விடத்திலேயே அதைச் சிலர்க்கு உபதேசித்தருளின இதிஹாஸம் இப்பாட்டில் நன்கு ஸூசிதமாகிறது. தோரண விளக்கு, குத்துவிளக்கு என்று இருவிளக்குண்டு. தோரண விளக்கு ஸ்தாவரமாயிருக்கும். குத்து விளக்கு ஜங்கமமாயிருக்கும். ஸ்வஸ்தானத்திலேயே

ஸ்தாவரராகவிருந்த திருக்கோட்டியூர் நம்பி தோரண விளக்காவர். பலகால் கதாகதம் செய்தருளின எம்பெருமானார் குத்து விளக்காவர். இந்த குத்து விளக்கு எரிய – நம்பிபக்கலிலே அர்த்த விசேஷம் கேட்டு ஜ்வலிக்க என்றபடி. (கோட்டு) ''ஏகதேச விக்ருதம் அநந்யவத் பவதி'' என்கிற வடமொழி வியாகரண முறையின்படி கோட்டி என்றதாகக் கொள்க. கோஷ்டீ என்னும் வடசொல் கோட்டியென்று தானே திரியும். திருக்கோட்டியூ ரென்றதாயிற்று. அவ்விடத்திலே (கால்கட்டு) ரஹஸ்யார்த்தமுபதேசித்தருளா நின்ற நம்பிகள் தம் திருவடியைத் தொட்டு சபதம் செய்து கொடுக்கும்படி நியமித்தாரன்றோ; அந்த கால்கட்டு ஸூசிதமா கிறது. (மேலேறி) ஏற்கெனவே தம்மை அநுவர்த்தித்துக் கொண்டிருந்த சில விலக்ஷணர் களுக்கு உபதேசிக்கத் திருவுள்ளம் பற்றிய ஸ்வாமி, ஸன்னிதியின் மேல் தளத்திலேறினபடியைக் காட்டுகிறது. இப்படி ஆசார்ய திவ்யாஜ்ஞையைக் கடந்து உபதேசித்திருப்பரோ சாஸ்த்ர வச்யரான ஸ்வாமி? என்கிற சங்கைக்குப் பரிஹாரம் செய்கிறது (மலர் மார்பா!) என்னும் விளி. ஸ்வாமியினுடைய ஹ்ருதய வைசால்யமே அதற்குக் காரணமென்று காட்டினபடி மலர்ந்தஹ்ருதய முடையவரே! என்று விளித்தபடி.

148. முப்பத்து மூவர்: இப்பாட்டில் 'செப்பமுடையாய்! திறலுடையாய்! செற்றார்க்கு வெப்பங் கொடுக்கும் விமலா!' என்னும் விளிகள் ஸ்வாமிக்கு மிகவும் ஏற்றிருப்பவை. வடமொழியில் ஆர்ஜவமெனப்படும் குணம் தமிழில் செப்பம் எனப்படும். மநோவாக்காயங்களின் ஒற்றுமையாகிற கரணத்ரய ஸாரூப்யமே ஆர்ஜவம்; அதுதான் செப்பம். ஸ்வாமியினுடைய திவ்ய ஸ்ரீஸூக்திகளை ஸேவிக்கும் போது ஒவ்வோரக்ஷரமும் அவருடைய ஆர்ஜவத்தையன்றோ தெரிவிக்கின்றது. பரநிந்தை முதலியவற்றை நெஞ்சாலும் நினையாமலும் வாக்கிலும் காட்டாமலுமிருந்த பெருமை ஸ்வாமிக்கும் ஸ்வாமியின் புநரவதார பூதரான மணவாளமாமுனிகளுக்கும் அஸாதாரணமன்றோ. (திறலுடையாய்!) திறலாவது பராபிபவந ஸாமர்த்யம். நீறுபூத்த நெருப்புப் போலேயிருந்து இதர வாதிகளின் துர்வாதங்கள் தலையெடுக்க வொட்டாதபடி செய்தருளுமாற்றலும் ஸ்வாமிக்கு அஸாதாரணம். (செற்றார்க்கு வெப்பம் கொடுக்கும்) செற்றாராகிறார் எம்பெருமானுடைய பெருமையை ஸஹியாதே ''குணிநம்பி குணைஸ் தம் தரித்ராணம்– ஆஹு:'' என்ற பட்டர் ஸ்ரீஸூக்திப் படியே அப்பெருமானை ஸர்வ தரித்ரனாகப் பேசி வைத்தவர்கள்; அவர்களுக்கு வெப்பம் கொடுத்தவர் ஸ்வாமி. வெப்பமாவது ஜ்வரம். பீதி ஜ்வரம். தஸ்மை ராமாநுஜார்யாய நம: பரம யோகிநே, ய: ச்ருதி ஸ்ம்ருதி ஸூத்ராணாம் அந்தர் ஜ்வரமசீ சமத் என்று ஸ்வாமி ச்ருதி ஸ்ம்ருதி ஸூத்ரங்களுக்கிருந்த அந்தர் ஜ்வரத்தைப் போக்கடித்தாகச் சொல்லிற்று. அதை எங்கே போகவிட்டார் தெரியுமோ? செற்றாருடைய உள்ளத்திலே போக விட்டாராயிற்று. திருவடி இலங்கையைக் கொளுத்தினாரே, எந்த நெருப்பைக் கொண்டு கொளுத்தினாரென்று கேட்க, வாலில் அரக்கர் பற்ற வைத்த நெருப்பினால் என்றார்களாம்; அன்று அன்று; ''சோக வஹ்நிம் ஜநகாத்மஜாயா:, ஆதாய தேநைவ ததாஹ லங்காம்' என்று, பிராட்டி திருவயிற்றிலே மண்டிக்கிடந்த சோகாக்னியை அங்கு நின்றும் கிளப்பி அதனாலேயே இலங்கையைக்

கொளுத்தினாரென்றார் மர்மஜ்ஞர். அது போலவே யிங்கும். ச்ருதி ஸ்ம்ருதி ஸூத்ரங்களின் அந்தர் ஜ்வரத்தையெடுத்துச் செற்றார் வயிற்றிலெறிந்தபடி.

149.ஏற்றகலங்கள்: "வள்ளல் பெரும் பசுக்கள் ஆற்றப் படைத்தான்" என்னும் போது ஸ்வாமியின் பெருமை தவிர வேறு எதுவும் நினைவுக்கு வாராது. ஸ்வாமிக்கு முன்பிருந்த ஆசார்யர்களை யெடுத்துக் கொண்டு அவர்களுக்கு எத்தனை சிஷ்யர்கள்? என்று கேட்டால் இருவர் மூவர் நால்வர் ஐவர் என்ன வேண்டுமத்தனை; ஸ்வாமியின் சிஷ்யவர்க்கங்க ளைப் பற்றிக் கேட்டாலோ "ஏகாந்திபிர் த்வாதசபிஸ் ஸஹஸ்ரை: ஸம்ஸேவிதஸ் ஸம்யமிஸப்தசத்யா" என்று உடனிருந்தவர்கள் பேசும்படியாயிருக்கும். அன்றியும், மஹாஜ்ஞான நிதிகளாகத் தேர்ந்தெடுத்து எழுபத்து நான்கு ஸிம்ஹாஸநாதி பதிகளென்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் தாம் எப்படிப்பட்டவர்களென்னில்; (ஏற்றகலங்கள்) ஆசார்ய ஸார்வபௌமர்க்கு ஏற்றிருக்குந் தன்மையையுடைய ஸத்பாத்ர பூதர்களான ஸச்சிஷ்யர்கள். பின்னையும் எப்படிப் பட்டவர்களென்னில்; (எதிர்பொங்கி மீதளிப்ப) "சிஷ்யாதிச்சேத் பராஜயம்" என்னும்படி ஆசார்யரையும் விஞ்சினவர்களா யிருப்பர்கள். காச்மீரத்தில் சாரதாபீடத்தில் ஸ்வாமியும் ஆழ்வானும் போதாயநவ்ருத்தியைக் கடாக்ஷியா நிற்க அதற்கு இடையூறு விளைந்தபோது 'க்ரந்தத்தைப் பூர்த்தியாகப் பார்க்க முடியவில்லையே!' என்று ஸ்வாமி க்லேசிக்க, ஹ்ருதி தரித்துக் கொண்டிருந்த ஆழ்வான் "இங்கே விண்ணபப்ஞ் செய்யவோ? இரண்டாற்றின் நடுவே விண்ணப்பஞ் செய்யவோ?" என்று பணித்தாரென்று ப்ரஸித்தம். இப்படியேயன்றோ மேன்மேலுமுள்ள சிஷ்யவர்க்கங்களின் சரித்திரமும். அவர்கள் இன்னமும் எப்படிபட்டவர்களென்னில்; (மாற்றாதே பால் சொரியும்) அவ்வாசாரியர்களின் பரம்பரை பெரும்பாலும் அநுஸ்யூதமாக நிகழ்ந்து வந்து பால் சொரிந்து கொண்டிருக்கும்படி சொன்னவாறு, இத்தகைய வள்ளல் பெரும்பசுக்களை ஆற்றப் படைத்தவர் ஸ்வாமி. ஆற்ற—அபரிமிதமாக. மேலே "மாற்றாருனக்கு வலி தொலைந்து உன் வாசற்கண்" என்ற விடத்து யாதவப்ரகாசர் வந்து பணிந்த விருத்தாந்தம் மிகப் பொருத்தம்.

150. அங்கண்மா ஞாலத்தரசர்: "திங்களுமாதித்தியனு மெழுந்தாற்போல் அங்கண் இரண்டுங் கொண்டு" என்றதில் ஸ்வாமியினுடைய உபயவேதாந்தக்ரந்தப்ரவசந படுத்வம் பேசப்படுகிறது. திங்களும் ஆதித்தியனும் ஏககாலத்தில் எழுவது அஸம்பாவிதம். ஆதித்யனெழும்போது தீக்ஷ்ணதையும், திங்கள் எழும்போது தண்ணளியும் அநுபவிக்கலாயிருக்கும். உபய வேதாந்தப்ரவர்த்தகரான ஸ்வாமி காலை வேளைகளில் (ஸ்ரீபாஷ்யகாலக்ஷேபம் ஸாதிப்பதும், மாலை வேளைகளில் அருளிச் செயல் (பகவத்விஷய) காலக்ஷேபம் ஸாதிப்பதுமாயிருப்பர். மதாந்தர ப்ரத்யாக்க்யாநதத்பரமான ஸ்ரீபாஷ்யத்தின் அர்த்தங்கள் அநுபவிக்கப்படும்போது தீக்ஷ்ணதையும், செவிக்கினிய செஞ்சொல் சீர் கலந்த சொல் ஈரச்சொல்' என்ன நின்ற அருளிச் செயல்களின் அர்த்தங்கள் அநுபவிக்கப்படும் போது ஸௌம்யதையும் காணலாயிருக்கும். "இரண்டிலும் இரண்டு முண்டானாலும், "இப்படிச் சொல்லுகிறதும் ஊற்றத்தைப் பற்ற" என்ற ஸ்ரீவசநபூஷண ப்ரக்ரியையிலே கொள்ளக் கடவது. மேலே 'அங்கணிரண்டுங் கொண்டு எங்கள் மேல்

நோக்குதியேல்' என்றவிடத்திலும் உபய வேதாந்தப் பொருள்களையும் எங்களுக்குக் கடாக்ஷித்தருள வேணுமென்ற பிரார்த்தனையுள்ளது. "சக்ஷுஷ்மத்தாது சாஸ்த்ரேண" என்றபடி கண் என்பது சாஸ்த்ரமேயாம். உபய வேதாந்தங்களும் ஸ்வாமிக்கு இரண்டு திருக்கண்களென்க. ஒன்றில் ஆதரமும் மற்றொன்றில் அநாதரமும் கொண்டிருக்கையே சாபமாகும். அது தொலைய வேணுமென்றவாறு. ஸ்வாமி பக்கலிலே சிஷ்யர்கள் பிரார்த்திப்பது இது.

151. மாரிமலைமுழஞ்சில்: "அறிவுற்றுத் தீவிழித்து வேரிமயிர் பொங்க எப்பாடும் பேர்ந்து உதறிமூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்படும் சீரியசிங்கம்" நம் யதிஸார்வ பௌமஸிம்ஹம் தவிர வேறுண்டோ? நூற்றந்தாதியில் "கலிமிக்க செந்நெல் கழனிக்குறையல் கலைப்பெருமான் ஒலிமிக்க பாடலையுண்டு தன்னுள்ளம் தடித்து அதனால் வலிமிக்க சீயமிராமாநுசன்" என்று சீரிய சிங்கமாகச் சொல்லப்பட்டவர் ஸ்வாமி. உலகில் சிங்கம் ஹேயமான வுணவையுண்டு செருக்கி யிருக்கும்; யதிராஜஸிம்ஹம் திருமங்கையாழ்வா ருடைய திவ்ய ஸூக்திகளையுண்டு அதனால் தடித்திருக்கு மென்கிறார் அமுதனார். இதற்கு மலையும் முழஞ்சும் விலக்ஷணமாயிருக்கும். முந்நூறாண்டு வேதமோதின பரத்வாஜமஹர்ஷிக்கு தேவேந்திரன் வேதங்களை மலையாகக் காட்டினனென்று வேதமே சொல்லுகையாலே வேதமே மலையாகக் கொள்ளவுரியது. அதில் முழஞ்சாவது 'தர்மஸ்ய தத்வம் நிஹிதம் குஹாயாம்' என்னும்படி. தர்மஸூக்ஷ்மங்கள் பொதிந்திருக்கு மிடம். அதிலே மன்னிக் கிடந்து லௌகிக விஷயங்களில் திருக்கண் செலுத்தாதே 'ஆத்மந்யேவ ஆத்மாநம் பச்யந்' ஸுகித்திருப்பவர் ஸ்வாமி. (அறிவுற்று) நாம் அவதரித்தது எதற்காக? என்று தம் அவதார ப்ரயோஜனத்தைக் குறிக் கொண்டு என்றபடி. (தீ விழித்து) (அமரகோசே) 'புத்திர் மநீஷா திஷணா தீ:' என்றவிடத்து புத்திபர்யாயமாகப் படிக்கப்பட்ட (தீ:) என்பது இங்குத் தீயென நிற்கின்றது. அது விழித்திருப்பது – விகஸித்திருப்பது ஸ்வாமிக்கே யென்க. (எப்பாடும் பேர்ந்து உதறி.) 'ஸ்ரீரங்கம் கரிசைலமஞ்ஜநகிரிம் தார்க்ஷ்யாத்ரிஸிம்ஹாசலௌ ஸ்ரீகூர்மம் புருஷோத்தமஞ்ச பதரீ நாராயணம் நைமிசம், ஸ்ரீமத் த்வாரவதீப்ரயாக மதுராயோத்யா கயா புஷ்கரம் ஸாளக்ராம கிரிம் நிஷேவ்ய ரமதே ராமாநுஜோயம் முநி:' என்கிறபடியே எண்டிசையும் பாதசாரத்தாலே ஸஞ்சரித்து, ஆங்காங்கு விபக்ஷர்களுண்டாகில் அவர்களை உதறியருளினவர் ஸ்வாமி.

152. அன்றிவ்வுலகமளந்தாய்: இதில் "வென்று பகை கெடுக்கும் நின் கையில் வேல் போற்றி" என்றதை உயிராகக் கொள்க. கொல்வது கோல் என்னுமா போலே வெல்வது வேல் எனப்படும். கண்ணபிரான் திருக்கையில் வேலாகச் சொல்லப் படுவது திருவாழியாழ்வான். ஸ்வாமி திருக்கையில் வேலாகச் சொல்லப்படுவது த்ரிதண்டம். ஸப்ததியில் "விஷ்வக்ஸேநோ யதிபதிரபூத் வேத்ரஸாரஸ் த்ரிதண்ட:" என்று, சேனையர்கோன் ஸ்வாமியாகத் திருவவதரிக்க, உபயவிபூதி நிர்வாஹ நிபுணமாய் அவருடைய திருக்கையிலுள்ள திருப்பிரம்புதானே த்ரிதண்டமாயிற்று என்னப்பட்டது. அந்தத் திருப்பிரம்புக்கு எவ்வளவு சக்தியோ அவ்வளவும் ஸ்வாமியின் த்ரிதண்டத்துக்கு

முண்டென்க. தாடீ பஞ்சகத்தில் ஸ்வாமிக்குப் பேச வேண்டிய பெருமைகளெல்லாம் த்ரிதண்டத்தின் மேலும் யஜ்ஞ ஸூத்ரத்தின் மேலும் ஏறிட்டுப் பேசப்பட்டுள்ளன. அங்ஙனம் பேசுகையில் ''பாஷண்டஷண்ட கிரிகண்டந வஜ்ரதண்டா:– ராமாநுஜஸ்ய விலஸந்தி முநேஸ் த்ரிதண்டா:'' என்றும், ''தத்தே ராமாநுஜார்ய: ப்ரதிகதக சிரோ வஜ்ரதண்டம் த்ரிதண்டம்'' என்றும் பேசப்பட்டதுண்டே, அது தான் வென்று பகை கெடுக்குமென்றதற்கு விவரணம். அப்படிப்பட்ட கையில் வேலாகிய முக்கோலுக்கு மங்களாசாஸனம் செய்தது முக்கோல் பிடித்த முனிக்கே மங்களாசாஸனம் செய்தபடியாமென்றுணர்க...

153. ஒருத்திமகனாய்ப் பிறந்து: தரிக்கிலானாகித் தான் தீங்கு நினைந்த கஞ்சன் கருத்தைப் பிழைப்பித்து அவன் வயிற்றில் நெருப்பென்ன நின்றவர் ஸ்வாமி. கம்ஸன் கண்ணனிடத்திலே அனர்த்தம் விளைக்க வழி தேடியிருந்தது போல, நம் ஸ்வாமிக்கு அனர்த்தம் விளைக்க வழிதேடியிருந்தவர் ஒருவர் ப்ரஸித்தர். அவருடைய கருத்தைப் பிழைப்பித்து (பிழைபடச் செய்து) ஓரிரவில் ஒளித்து வளர்ந்தவர் ஸ்வாமி. விந்த்யாடவியெங்கே! ஸத்யவிரத க்ஷேத்ரமெங்கே! ஓரிரவில் அங்கு நின்றும் இங்கு வந்து சேர்ந்தவர் தம் ப்ரபாவங்களையெல்லாம் ஒளித்து வைத்திருந்தாரத்தனையன்றோ. அன்னவர் ஆஸுர ப்ரக்ருதிகளின் வயிற்றில் நெருப்பென்ன நின்றார். ''பாஷண்ட த்ருமஷண்ட தாவதஹந:'' ''பாஷண்ட ஸாகர மஹாபடபாமுகாக்நி:'' என்று நெருப்பாகவே யன்றோ பேசப்பட்டார் ஸ்வாமி. (நெடுமால்) வியாமோஹங் கொண்டவர். ''அச்யுத பதாம்புஜ யுக்ம ருக்ம வ்யாமோஹத:''

154. மாலே மணிவண்ணா: இதில் 'ஆலினிலையாய்!' என்ற விளி இன்சுவை மிக்கது. 'ஆலின் இலையதன் மேல் பையவுயோகு துயில் கொண்ட பரம்பரன்' கண்ணன். (ஆலின் நிலையாய்!) ஆலமரத்தின் நிலைமை போன்ற நிலைமையுடையவர் ஸ்வாமி. எம்பெருமான் ''பாஹுச்சாயா மவஷ்டப்தோயஸ்ய லோகோ மஹாத்மந:'' என்கிறபடியே தன் பாஹுச்சாயையிலே ஒதுங்கினவர்களுக்கு நிழல் கொடுத்துத் தாபம் தீர்ப்பவன். ஸ்வாமியோவென்னில் 'ப்ராப்தாநாம் பாதமூலம் ப்ரக்ருதி மதுரயாச்சாயயா தாபஹ்ருத்வ:'' என்றாப்போலே அடி பணிந்தார்க்குத் திருவடிநிழல் கொடுத்துத் தாபம் தணிப்பவர். இதுதானே ஆலின் நிலைமை. நூற்றந்தாதி தொடங்கும் போதே ''பல்கலையோர் தாம் மன்னவந்த விராமாநுசன் சரணாரவிந்தம்'' என்றன்றோ தொடங்கிற்று. 'பல்கலையோர் தாம் மன்ன வந்த' என்ற விசேஷணத்தை இராமானுசனுக்கு ஆக்குவது போலவே அவருடைய சரணாரவிந்தத்திற்கும் ஆக்கலாமே. ''ந்யக்ரோதோ பஹுபாத்வட:'' என்ற அமரகோசம் ஆலமரத்திற்கு பஹுபாத் என்று பெயர் படித்தது. உண்மையில் ஆலமரமானது மற்ற மரங்களைப் போலன்றிக்கே அபரிமிதமான பாதங்களையுடைத்தாயிருக்கும். ஸ்வாமிக்கும் திருவடிகள் அபரிமிதங்கள். (சிஷ்யர்களே திருவடிகள்) இப்பாட்டில் சொன்ன 'சங்கம் பெரும்பறை பல்லாண்டிசைப்பார் கோலவிளக்கு கொடி விதானம்' என்னுஞ் சொற்களை ஊன்றி நோக்கினால் இவையெல்லாம் ஸ்வாமியே யென்னப் பொருந்தும். (சங்கம்) த்ருவனிடஞ் சென்ற பகவான் சங்க ஸ்பர்சத்தினால் அவனை ஸர்வஜ்ஞன் ஆக்கினதாகப் புராணங் கூறும்; அதுபோல, ஸ்வஸம்பந்தத்தாலே

ஆழ்வான், ஆண்டான், அனந்தாழ்வான், எம்பார், பிள்ளான் முதலானாரை ஸர்வஜ்ஞராக்கினவர் ஸ்வாமி. (பறை) பகவத் குணங்களை எங்கும் பறை சாற்றினவராகையாலே தாமே பறையென்னத் தகுவர். (பல்லாண்டிசைப்பார்) பெரியாழ்வார் போலே எம்பெருமானுக்குத் தாம் பல்லாண்டு பாடினது மட்டுமன்றியே பல்லாயிரவரைப் பாடுவிக்கவும் வல்லராயிருந்தார். (கோலவிளக்கு) ஸ்ரீவைஷ்ணவ குல ப்ரதீபமாயிருந்தவர். (கொடி) 'ஸ்ரீமல்லக்ஷ்மண யோகீந்த்ர ஸித்தாந்த விஜயத்வஜ' மென்று பிறரைச் சொல்லும் போது ஸ்வாமிக்குச் சொல்ல வேணுமோ? விசிஷ்டாத்வைத ஸித்தாந்த விஜயத்வஜமென்க. (விதானம்) கண்ணன் வடமதுரையிலிருந்து திருவாய்ப்பாடிக் கெழுந்தருளும் போது "தொடுத்து மேல் விதானமாய பௌவநீரராவணை" என்ற திருச்சந்தவிருத்தத்தின்படியே விதானமாயிருந்தவர் ஆதிசேஷனான திருவனந்தாழ்வான்; அவரே யன்றோ ஸ்வாமியாக வடிவெடுத்தார்.

155. கூடாரைவெல்லுஞ்சீர்: யஜ்ஞமூர்த்தி போல்வாரான பல பல அத்வைதிகள் முதலிலே ஸ்வாமியோடு எதிரம்பு கோப்பவர்களாய் (கூடாதவர்களாய்) இருந்து பிறகு கூடினவர்களாய் ஸ்வாமிக்கு வெற்றியைத் தந்தார்கள். அவர்களை வெல்வதற்கு உறுப்பாயிருந்த சீர்களையுடையவர் ஸ்வாமி. அந்தச் சீர்கள் எவையென்னில்; கேவலம் வைதுஷ்யம் மட்டுமல்ல; திவ்ய மங்கள விக்ரஹ குணங்களும், திவ்யாத்ம குணங்களும் பல பல. ஸ்வாமியின் வடிவழகை ஸேவித்த மாத்திரத்திலேயே யீடுபட்டவர்கள் பல பலர். (கோவிந்தா) பசுக்களை மேய்ப்பதனாலே கண்ணன் கோவிந்தனாயினன்; ஸ்ரீஸூக்திகளும் கோசப்தார்த்தமென்று கீழே காட்டினோமாகையாலே ஸகல ப்ரமாணங்களையும் "பிபேத்யல்பச்ருதாத் வேதோ மாமயம் ப்ரதரிஷ்யதி" என்னும்படியான பீதியைப் போக்கி ரக்ஷித்தமையாலே ஸ்வாமியும் கோவிந்தர். பசுப்ராயர்களான நம்மைக் காத்தவரென்றுமாம்.

156. கறவைகள் பின் சென்று: "குறையொன்று மில்லாத கோவிந்தா! உன்றன்னைப் பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்" என்னும் வார்த்தை ஸ்வாமி யெம்பெருமானாரை நோக்கி ஸ்ரீவைஷ்ணவ குலத்தவர்கள் யாவரும் சொல்லத் தக்கது. ஞானம் அனுட்டானம் பரஸம்ருத்தயேக ப்ரயோஜநத்வம் ஆகிய மூன்றும் ஆசார்ய பீடஸ்தர்களுக்கு அவச்யாபேக்ஷிதங்கள். ஞானமிருந்து அநுஷ்டானம் இல்லையானாலும் பயனில்லை; அனுஷ்டானம் இருந்து ஞானமில்யானாலும் பயனில்லை; இவை யிரண்டு மிருக்க வேணுமென்பர்; இவையிரண்டும் இருந்தாலுங்கூட, பரஸம்ருத்தியே பேறாயிருக்கை யில்லையாகில் பயனில்லை; இவை மூன்றும் நன்கு நிறையப் பெற்றவர் ஸ்வாமியே. குறையில்லாத – குறையொன்றில்லாத – குறையொன்றுமில்லாத என்று யோஜித்து மேற் சொன்ன மூன்றாலும் குறையற்றிருப்பவர் ஸ்வாமியே யென்று கொள்வது. கூரத்தாழ்வான் ஸ்வாமிக்கிட்ட தனியனில் "தயைகஸிந்தோ:" என்று விசேஷணம் இட்டது பரஸம்ருத்த்யேகப்ரயோஜநத்வத்தையே காட்டினபடி. இத்தகைய பெருமை வாய்ந்த ஸ்வாமி நமக்குக் குல கூடஸ்தராகித் திருவவதரிக்கப் பெற்றது வாசாமகோசரமான நமது பெரும் பாக்கியமன்றோ. த்வீபாந்தரங்களிற் பிறவாதே ஜம்பூத்வீபத்திற் பிறந்தது,

பசுபக்ஷிக்ரிமிகீடாதி யோனிகளிற் பிறவாதே மானிடப் பிறவியிற் பிறந்தது, அதிலும் பகவத் பாகவதபக்தி முதலியவற்றுக்கு நிலமல்லாத மநுஷ்யவர்க்கத்தில் பிறவாதே ஆஸ்திக குடும்பத்தில் பிறந்தது, இவையெல்லாவற்றுக்கும் மேற்படவன்றோ "ததநுபந்த மதாவலிப்தே" என்று பேரறிவாளர் பேசும்படியான பெருமை வாய்ந்த எம்பெருமானார் திருவடி ஸம்பந்தம் பெற்ற ஸ்ரீவைஷ்ணவ ஸந்தானத்திலே நாம் பிறக்கப் பெற்றது. இந்த ஹர்ஷப்ரகர்ஷத்தைக் காட்டுவதாம் உன்றன்னை யென்பதற்கு 'உன்றன்னைக் கொண்டு' என்று பொருள் கொள்வது மிகச் சிறக்கும். உன்றன்னால் என்றபடி. (உருபுமயக்கம்) 'ஸ ஹி வித்யாதஸ் தம் ஜநயதி தத் ச்ரேஷ்டம் ஜந்ம' என்கிறபடியே நாங்கள் ச்ரேஷ்டமான வித்யாஜன்மத்தை தேவரீர் திருவருளாலன்றோ பெற்றிருக்கிறோம். "யதீச்வர ஸரஸ்வதீ ஸூரபிதாசயாநாம் ஸதாம் வஹாமி சரணாம்புஜம் ப்ரணதிசாலிநா மௌலிநா" என்று மஹாசார்யர்கள் ஆசைப்படுவதற்குறுப்பானார் திரளிலேயன்றோ ஜனித்திருக்கிறோமென்றவாறு. ஸ்வாமி திருவம்சத்திலே நாம் பிறக்கப் பெற்றது, நம் குல விளக்காக ஸ்வாமி அவதரிக்கப் பெற்றது ஆகிய இரண்டும் இங்கு விவக்ஷிதமென்க.

157. சிற்றஞ்சிறுகாலேவந்து: 'எற்றைக்கு மேழேழ் பிறவிக்கு முன்றன்னோடு உற்றோமேயாவோம் உனக்கே நாமாட் செய்வோம்' என்பது நாமெல்லோரும் ஸ்வாமியை நோக்கியே சொல்லத் தகுந்த வார்த்தை. ஆழ்வார்கள் 'இருள் தருமா ஞாலத்துளினிப் பிறவியான் வேண்டேன்' என்றும், 'இயக்கறாத பல்பிறப்பிலென்னை மாற்றி' என்றும், 'ஆதலால் பிறவி வேண்டேன்' என்றும் புநர்ஜன்மத்தை வெறுத்துப் பேசுவர்கள். நாம் அப்படி வெறுக்க வேண்டா; எத்தனை ஜன்மங்களும் யதேஷ்டமாக நேரட்டும்; நேருகிற ஜன்மங்கள் தோறும் இப்போது நமக்கு வாய்த்திருப்பது போலவே எம்பெருமானார் திவ்யஸூக்தி ஸுதைகளையே பருகும் பாக்கியம் வாய்த்திடுமானால் பிறவியில் வெறுப்பு நமக்கேதுக்கு? ஒரு பிறப்பன்று, ஒன்பதினாயிரம் பிறப்புமெடுப்போமாக. அதற்குச் சளைப்போ மல்லோம்; ஆனால் அப்பிறவிதோறும் (உன்றன்னோடு உற்றோமேயாவோம்) 'இராமானுசனடியார்' என்னும் விருதுக்கு லோபமின்றிக்கே யிருக்கக் கடவோம். (உனக்கே நாம் ஆட்செய்வோம்) "வடுக நம்பி ஆழ்வானையும் ஆண்டானையும் இருகரையரென்பர்" என்கிற ஸ்ரீவசனபூஷண ஸூக்தியின்படியே இருகரையர் ஆகாமே வடுக நம்பியைப் போலே ஸ்வாமிக்கே அடிமை செய்து கொண்டிருக்கக் கடவோம். ஆனால் "வாழி யெதிராசன் வாழி யெதிராசன், வாழி யெதிராசனென வாழ்த்துவார் தாளிணையில் தாழ்த்துவார் விண்ணோர்தலை" என்று மாமுனிகளருளிச் செய்தபடியே நமக்குப் புநர் ஜன்ம மின்றிக்கே முக்தி ஸாம்ராஜ்யம் ப்ராப்தமாய் விடமானாலும் ஏரார் முயல்விட்டுக் காக்கைப் பின் போவதே என்கிற திருமங்கையாழ்வாரநுஸந்தான மேயாயிருக்கக் கடவோம். 'கையில் கனியென்னக் கண்ணனைக் காட்டித்தரினும், உன்றன் மெய்யில் பிறங்கிய சீரன்றி வேண்டிலன் யான்' என்ற அமுதனாரநுஸந்தானமே உறைத்திருக்கக் கடவது நமக்கு.

158. வங்கக்கடல் கடைந்த: திருப்பாவை முப்பதுக்கும் வங்கக்கடல் கடைந்த மாதவன் தான் லக்ஷ்யபூதன். கண்ணபிரானை லக்ஷ்ய பூதனாகக் கொள்ளுமவர்கள் தேவர்களின் ப்ரார்த்தனையினால் கடலைக் கடைந்து அமுதங் கொடுத்து "பலேக்ரஹிர் ஹி

கமலாலாபேந ஸர்வச் ச்ரம:'' என்று பட்டரருளிச் செய்தபடியே பிராட்டியையும் பெற்று மகிழ்ந்த எம்பெருமானைப் பொருளாகக் கொள்க. திருப்பாவை ஜீயரென்ற திருநாமத்திற் கேற்ப எம்பெருமானாரையே திருப்பாவைக்கு லக்ஷ்ய பூதராகக் கொள்ளுமவர்கள் இங்ஙனே பொருள் காண்க;- 'நிர்மத்ய ச்ருதி ஸாகராத்' என்றும் 'நமாம்யஹம் த்ராவிடவேத ஸாகரம்'' என்றும் சொல்லப்படுகிற உபய வேதங்களையும் திருநாவின் மந்தரத்தால் கடைந்து ''வசஸ்ஸுதாம்...ஸுமநஸோ பௌமா: பிபந்த்வந்வஹம்'' என்று ஸ்வாமி தாமே யருளிச் செய்தபடி நிலத்தேவர்கள் நித்யாநுபவம் பண்ண அமுதமளித்தவர் ஸ்வாமி. (மாதவனை) மா–மஹத்தான, தவனை–தவத்தை (தபஸ்ஸை) யுடையவரை; மஹாதபஸ்வியை யென்றபடி. தபஸ்விகளில் தலைவரன்றோ ஸ்வாமி எம்பெருமானார். (இங்கு இப்பரிசுரைப்பார்) இங்ஙனே முப்பது பாசுரங்களுக்கும் நாம் காட்டின நிர்வாஹமும் அணி புதுவைப் பைங்கமலத் தண்டெரியல் பட்டர்பிரான் கோதை திருவுள்ள முகந்ததே யென்று கொண்டு உபந்யாஸ கோஷ்களிலெடுத்துரைக்குமவர்கள். ''செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலாலெங்குந் திருவருள் பெற்று இன்புறுவர்'' = 'பீதகவாடைப் பிரானார் பிரம குருவாகி வந்து' என்ற பெரியாழ்வாரருளிச் செயலின்படியும், 'ஸா மூர்த்திர் முரமர்தநஸ்ய ஜயதி' என்ற ஸப்ததிஸூக்திப்படியும் ஸாக்ஷாத் ஸ்ரீமந் நாராயணாவதாரமான எம்பெருமானாருடைய திருவருளை எங்கும் பெற்று 'அம்ருதஸாகராந்தர்நிமக்ந ஸர்வாவயவாஸ் ஸுகமாஸீரந்' என்று தலைக்கட்டிற்றாயிற்று.

159. அனந்தாழ்வான், எம்பார், பட்டர் வெளியிட்ட எம்பெருமானார் பெருமைகள்: ஆழ்வார்களருளிச் செய்த ஸகல திவ்யப் பிரபந்தங்களுக்கும் தனியன்கள் ஸ்ரீமந்நாத முனிகள் காலந்தொடங்கி பட்டர் காலம் வரையில் அவதரித்தவை நெடுநாளாக எங்கும் ஏக ரூபமாக அநுஸந்திக்கப்பட்டு வருகின்றன. சில பிரபந்தங்க ளுக்கு ஒன்றிரண்டு தனியன்களும் சில பிரபந்தங்களுக்கு ஐந்தாறு தனியன்களும் அமைந்திருக்கின்றன. நம்மாழ்வாரருளிய திருவாய்மொழியாயிரத்திற்கு ஸம்ஸ்க்ருதத் தனியன் ஒன்றும், தமிழ்த் தனியன்கள் ஐந்துமாக ஆறு தனியன்கள் உலகமெங்கும் அநுஸந்திக்கப் பட்டு வருகின்றன. மாறன் பணித்த தமிழ் மறைக்கு ஆறங்கங்கூறவவதரித்த திருமங்கையாழ்வாரருளிச் செய்த பெரிய திருமொழி யாயிரத்திற்கு ஸம்ஸ்க்ருதத் தனியன் ஒன்றும் தமிழ்த் தனியன்கள் மூன்றுமாக நான்கு தனியன்கள் அநுஸந்திக்கப் பட்டு வருகின்றன. பெரும்பாலும் தனியன்களில் அந்தந்த திவ்யப்பிரபந்தங்களின் பெருமை. அவற்றையருளிச் செய்தவர்களின் பெருமை, அவர்களவதரித்த தலத்தின் பெருமை முதலியன சொல்லப்படுகின்றன. திருவாய்மொழித் தனியன்களில் ஒன்றும், பெரிய திருமொழித் தனியன்களில் ஒன்றும் வெகு விலக்ஷணமாக அவதரித்திருக்கின்றன. எங்ஙனேயென்னில், திருவாய்மொழித் தனியன்களில். (அனந்தாழ்வான் பணித்தது)

ஏய்ந்த பெருங்கீர்த்தி யிராமானுச முனிதன்
வாய்ந்த மலர்ப்பாதம் வணங்குகின்றேன் ஆய்ந்தபெருஞ்
சீரார் சடகோபன் செந்தமிழ் வேந்தரிக்கும்
பேராத வுள்ளம் பெற.''

என்கிற தனியனானது எம்பெருமானார் திருவடிகளிலே பண்ணுகிறவொரு பிரார்த்தனையாக அமைந்திருக்கின்றது. இந்த வெண்பாவின் பொருளாவது, மிகச் சிறந்த கல்யாண குணசாலியான நம்மாழ்வாரருளிச் செய்த திருவாய்மொழியாயிரத்தை நன்கு தரித்துக் கொள்ளவல்ல நெஞ்சுதன்னைப் பெறுவதற்காக, பெரும் புகழ் படைத்த எம்பெருமானாருடைய திருவடித்தாமரைகளை வணங்குகின்றேனென்பதாம். ஸ்வாமிந்! எம்பெருமானாரே! திருவாய்மொழியாயிரத்தையும் மறவாமல் தரிக்கத்தக்க ஸாமர்த்தியத்தை வரப்ரஸாதமாகத் தந்தருள வேணுமென்று அவர் தம்மையே நோக்கிப் பிரார்த்திக்கிறது. பெரிய திருமொழித் தனியன்களுள், (எம்பார் பணித்தது)

எங்கள் கதியே யிராமானுச முனியே!
சங்கை கெடுத்தாண்ட தவராசா! – பொங்குபுகழ்
மங்கையர்கோனீந்த மறையாயிரமனைத்தும்
தங்குமனம் நீயெனக்குத் தா.''

என்கிற இந்தத் தனியனும் அதேரீதியாக அமைந்திருக்கின்றது. இது எம்பெருமானாரை முன்னிலைப் படுத்தியே கூறியுள்ளது. திருமங்கையாழ்வாரருளிச் செய்த பெரிய திருமொழி யாயிரத்தையும் தரிக்கவல்ல மனத்தைத் தந்தருள வேணுமென்று எம்பெருமானாரை நோக்கிப் பிரார்த்திப்பது.

160.ஆக இவ்விரண்டு தனியன்களையும் விசேஷித்து மனதில் மனனம் செய்யுங்கால் தனிச்சிறப்பு வாய்ந்தவொரு பரமானந்தம் விளைவதோடு எம்பெருமானாருடைய ஒப்பற்ற பெருமையும் அறியலாகிறது. பிரபந்தங்களைத் தரிக்கும்படியான நெஞ்சைத் தந்தருள வேணுமென்கிற பிரார்த்தனையை அந்தந்த ஆழ்வார்களை நோக்கியே செய்திருக்கலாம்; அவர்களுக்கு அந்தரங்கர்களான மதுரகவிகள் ஸ்ரீமந்நாதமுனிகள் போல்வாரை நோக்கியாவது செய்திருக்கலாம்; பரமோதாரனான எம்பெருமானை நோக்கிச் செய்திருக்கலாம். ஸகலவித ஸம்பத்துக்க ளையும் அளிக்கவல்ல பெரியபிராட்டியாரை நோக்கிச் செய்திருக்கலாம். (இராமானுச நூற்றந்தாதியின் ஈற்றுப் பாசுரத்தோடு மிகப் பொருந்துமிது.)

161. இப்படிப்பட்ட வழிகளை விட்டு எம்பெருமானாரை நோக்கி இந்தப் பிரார்த்தனை செய்திருப்பது எதனாலென்று விமர்சிக்க வேண்டியது ஆவச்யகமன்றோ? புதிதாக நாம் என்ன விமர்சிக்கப் போகிறோம்? அக்காலத்தில் ஆழ்வாரருளிச் செயல்களெல்லாம் எம்பெருமானார் இட்ட வழக்காயிருந்தன வென்று இதனால் நிஸ்ஸந்தேஹமாக அறியக் கிடக்கின்றது. வெகு சிரமப்பட்டு அதிகரித்துப் பலகால் உருச்சொல்லித் தரிக்க வேண்டிய இந்த மஹத்தான ப்ரஹ்மவித்தையை ஸ்வாமி யெம்பெருமானார் ஒருவரே கலியுங்கெடுங் கண்டு கொண்மினென்று ஆசாஸித்த ஆழ்வாருடைய பரமக்ருபையினாலும், ஆமுதல்வன் இவனென்று அநுக்ரஹித்த ஆளவந்தா ருடைய அற்புதமான அநுக்ரஹாதியத்தினாலும் அநாயாஸமாக க்ரஹித்து ஒரிடத்திலும் ஒரு விதமான ஸந்தேஹமும் விஸ்மரணமும் இன்றிக்கே தரித்தருளியிருந்தாரென்பது ஸுஸ்பஷ்டமாகின்றது. இல்லையேல் இந்தத் தனியன்கள் இவ்வண்ணமாக அவதரித்திருக்க அவகாசமில்லையன்றோ.

162. முன்னம் விவரித்த ஏய்ந்த பெருங்கீர்த்தி தனியனுக் கடுத்ததாக ''வான் திகழுஞ் சோலை'' என்ற தனியன் அனுஸந்திக்கப்படுகிறது.

வான் திகழுஞ் சோலை மதிளரங்கர் வண் புகழ்மேல்
ஆன்ற தமிழ் மறைகளாயிரமும் – ஈன்ற
முதல்தாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த
இதத்தா யிராமா னுசன். (பட்டர் பணித்தது)

மேலே காட்டின தனியனில் ''தமிழ் மறைகளாயிரமும் ஈன்ற முதல் தாய் சடகோபன்' மொய்ம்போல் வளர்த்த இதத்தாய் இராமானுசன்'' என்று சொல்லப்பட்டிருக்கின் றது. திருவாய்மொழி யைப் பெற்ற தாயார் நம்மாழ்வாரென்றும், வளர்த்த தாயார் எம்பெருமானாரென்றும் அக்காலத்திலிருந்த ஆப்ததமர்களான ஆசிரியர்கள் அருளிச் செய்தார்களென்றால் திவ்யப் பிரபந்தங்களிலே எம்பெருமானார் எவ்வளவு ஈடுபாடு கொண்டவ ராக இருக்க வேண்டும்! திவ்ய ப்ரபந்தங்களைக் கற்க ருசியில்லாமலிருந்தவர்களை வலிய அழைத்துக் கற்க நியமித்தருளினார். வியாக்கியானங்கள் அவதரிக்க நியமனம் தந்தருளினார். ஆங்காங்கு அருமை பெருமை வாய்ந்த நிர்வாஹங்களை வெளியிட்டருளினார். திவ்ய தேசங்களில் அருளிச் செயல் பிரசாரங்களை ப்ரபலப்படுத்தியருளினர். இவ்வண்ணமாகச் செய்தருளின செயல்களைக் கொண்டே ''மொய்ம்பால் வளர்த்த இதத்தாய் இராமானுசன்'' என்று பணித்தார்கள். அக்காலத்தில் எம்பெருமானார் அவ்வளவு ச்ரத்தை கொண்டருளி யிராவிடில் திவ்யப்ரபந்தங்கள் ஸ்ரீமந்நாத முனிகளின் காலத்திற்கு முன்னேயிருந்த விதமாகவே லோபமடைந்திருக்கும். அப்படியாகாத படிக்கு ஸ்வாமி யெம்பெருமானார் செய்தருளின சேமக்காப்பு வாசாமகோசரம். ''ஸர்வதேச தசா காலேஷு...... ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம்.....திகந்தவ்யாபிநீ பூயாத் ஸா ஹி லோக ஹிதைஷிணீ'' என்கிற ச்லோகத்தை நாடு நகரமெங்கும் திவ்யப்ரபந்த ஸேவா காலங்களிலேயே அநுஸந்தித்து வருவதனால் அந்த ராமானுஜார்ய திவ்யாஜ்ஞையானது திவ்யப்ரபந்த விஷயமேயல்லது வேறு விஷயமன்றென்பது நன்கு விளங்கும்.

163. எம்பெருமானாரைப் பற்றினவொரு ச்லோகரத்தம் ஈடு முப்பத்தாறாயிரப்படியில் அடைய வளைத்தானரும்பத வுரை முதலான க்ரந்தங்களில் காணப்படுகிறது; அதாவது–

புரா ஸூத்ரைர் வ்யாஸ: ச்ருதிசதசிரோர்த்தம் க்ரதிதவாந்
விவவ்ரே தத் ச்ராவ்யம் வகுளதரதாமேத்ய ஸ புந:,
உபாவேதௌ க்ரந்தௌ கடயிது மலம் யுக்தி பிரஸௌ
புநர் ஜஜ்ஞே ராமாவரஜ இதி ஸ ப்ரஹ்மமுகுர:

என்பதாம். இந்தச் ச்லோகத்தின் கருத்தாவது–உபநிஷத்துக்களின் பொருள்களை முதன்முதலாக வியாஸ பகவான் சாரீரக மீமாம்ஸையென்னும் ப்ரஹ்ம ஸூத்ரத்தினால் தொகுத்தார்; அந்த வியாஸர் தாமே மீண்டும் வகுளாபரணப் பெருமாளாக (நம்மாழ்வாராக) வடிவெடுத்து செவிக்கினிய செஞ்சொற்களாலே அந்த ப்ரஹ்ம ஸூத்ரத்தை விவரித்தார். இவ்வுபய திவ்ய க்ரந்தங்களையும் பொருத்தமாக

ஸமந்வயப்படுத்தி நிர்வஹிக்க அவரே மீண்டும் ஸ்வாமி எம்பெருமானாராகத் திருவவதரித்தார்—என்பதாம். இந்த ச்லோகம் எம்பார் அருளிச் செய்ததாகவும் முதலியாண்டானருளிச் செய்ததாகவும் சொல்லப்பட்டு வருகிறது. ச்லோகமோ கம்பீரமானது; விஷயமோ யதார்த்தமானது. இது கொண்டே ஆசார்ய ஹ்ருதயத்தில் "பாஷ்யகாரர் இது கொண்டு ஸூத்ரவாக்யங்களொருங்க விடுவர்" என்றருளிச் செய்யப்பட்டது.

164. ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் ஜனிக்கப் பெற்றவர்கள் ஸ்ரீமதுபயவே. என்கிற விருதை வஹிப்பது மாத்திரம் போராது; உபய வேதாந்தங்களையும் ஸமரூபமாகப் பரிசீலனைச் செய்து உபய வேதாந்த திவ்யார்த்தங்களையும் தாமநுபவித்துப் பிறரையும் அநுபவிக்கச் செய்ய வேணும். எம்பாரருளிய ச்லோகரத்னமொன்று;

வேதோத்தம்ஸகுஹாவிஹாரபடுநாஸ்ரீசைலச்ருங்கோல்லஸந்
மாயா கேஸரி மாநிதேந கஹநந்யாயாடவீசாரிணா,
கம்பீரேண பராத்மபேதநமஹாநாதேந நாதேந மே
குப்தோஹம் யதிஸார்வபௌமஹரிணா வர்த்தே ப்ருசம் நிர்ப்பய::

இந்த சுலோகம் வெகு அற்புதமாக அமைந்திருக்கின்றது. இதனைச் சிறிது விவரிக்கிறோம். இராமாநுச நூற்றந்தாதியில் "கலிமிக்க செந்நெல் கழனிக்குறையல் கலைப்பெருமான், ஒலிமிக்க பாடலையுண்டு தன்னுள்ளந்தடித்து, அதனால் வலிமிக்க சீயமிராமானுசன்" என்று எம்பெருமானார் சீரிய சிங்கமாக அருளிச் செய்யப்பட்டுள்ளார்; அதனையடியொற்றி இந்த சுலோகத்திலும் ஸ்வாமி ஸிம்ஹமாக ரூபிக்கப்படுகிறார். ஸிம்ஹத்தோடே ஸ்வாமிக்கு ஸாம்யம் ஐந்து விசேஷணங்களினால் அற்புதமாக நிர்வஹிக்கப்படுகிறது. விவரணம் கேளீர்;

165. (வேதோத்தம்ஸ குஹா விஹார படுநா) "மலைமுழஞ்சில் மன்னிக்க கிடந்து உறங்கும் சீரிய சிங்கம்" என்ற திருப்பாவையின் படியே சிங்கம் பர்வத குஹைகளில் விஹரிக்கும். ஸ்ரீராமாநுஜஸிம்ஹமோ வென்னில்; வேதங்களாகிற பர்வதங்களின் உபநிஷத் பாகமாகிற குஹைகளில் விஹரிக்கும். தைத்திரீய யஜுர் ப்ராஹ்மண—காடகத்தில் "பரத்வாஜோ ஹ த்ரிபிராயுர்ப்பீர் ப்ரஹ்மசர்யமுவாஸ" என்று தொடங்கியுள்ள உபாக்கியானத்தில் தேவேந்திரன் பரத்வாஜ முனிவர்க்கு வேதங்களை மலைகளாகக் காட்டினனென்று ஓதியிருக்கையாலே வேதம் மலையாகக் குறையில்லை. "தர்மஸ்ய தத்த்வம் நிஹிதம் குஹாயாம்" என்ற மஹாபாரத ச்லோகத்தின்படி தருமநுட்பம் பொதிந்திருக்கு மிடம் குஹையாகக் கருதப்படுகையாலே உபநிஷத் பாகங்களை குஹையாகக் கூறினது பொருத்தம். அதிலே விஹாரம் செய்கிறார் ஸ்வாமியென்றது. "க்ரீடார்த்தமபி யத் ப்ரூயுஸ் ஸ தர்ம: பரமோ மத:" என்றும் "சொல்லுமவிடு சுருதியாம்" என்றும் சொல்லுகிறபடியே விளையாட்டாகச் சொல்லும் வார்த்தையும் சிறப்புற்றிருக்குமென்றவாறு.

166. (ஸ்ரீசைலச்ருங்கோல்லஸந் மாயா கேஸரி மாநிதேந) ஸிம்ஹத்தைக் கொண்டாடவல்லது ஸிம்ஹமேயாகும். அப்படியே இந்த ராமாநுஜ ஸிம்ஹத்தைக்

கொண்டாடவல்ல ஸிம்ஹம் திருவேங்கடமுடையானாகிற ஸிம்ஹமேயாம். திருமங்கையாழ்வார் ''தூணாயதனூடு அரியாய் வந்து தோன்றிப் பேணாவவுணனுடலம் பிளந்திட்டாய், சேணார் திருவேங்கட மாமலைமேய, கோணாகணையாய்'' என்கிற பாசுரத்தினால் திருவேங்கடமுடையானை ஸிம்ஹமாகவநுபவித் திருப்பது காண்க. அந்த ஸிம்ஹம் இந்த ஸிம்ஹத்தை பஹுமானித்த விஷயம் ஸ்ரீவேங்கடாசல இதிஹாஸ மாலையில் பரக்கக் காணத்தக்கது.

167. (கஹந ந்யாயாடவீ சாரிணா) ஸிம்ஹம் பெருங்காட்டில் ஸஞ்சரிக்குமேயொழிய நாட்டில் காணக்கிடைக்காது. இந்த யதிராஜ ஸிம்ஹமோ வென்னில்; சாஸ்த்ரீய ந்யாயங்களாகிற அடவிகளிலே ஸஞ்சரிக்குமது.

168. (கம்பீரணே) சிங்கத்தின் தோற்றம் அதிகம்பீரமென்னுமிடம் சொல்ல வேண்டா. ஸ்வாமியினுடைய காம்பீர்யம் ஸ்ரீஸூக்திகளிலும் திருவுருவத்திலுமாகும்.

169. (பராத்மபேதந மஹாநாதேந) இந்த விசேஷணத்தில் சிலேடை அமைந்துள்ளது. ஸிம்ஹபக்ஷத்தில் ''பரேஷாம் ஆத்ம: தம்பிநத்தீதி பராத்ம பேதந: தாதாவித: மஹாநாதோ யஸ்ய'' என்கிற வ்யுத்பத்தி கொள்ளத்தக்கது. ஸிம்ஹத்தின் பெரு முழக்கம் இதர ஜந்துக்களின் உயிரை மாய்க்கவல்ல தென்கை. இனி யதிராஜ ஸிம்ஹபக்ஷத்திலோ வென்னில், ''பரச்ச ஆத்மாநச் ச பராத்மாந;; தாந் பிநத்தீதி பராத்ம பேதந:; ததாவிதோ மஹாநாதோ யஸ்ய'' என்று வ்யுத்பத்தி கொள்ளக் கடவது. பரமபுருஷனுக்கும் ஜீவாத்மாவுக் கும் ஐக்கியம் சொல்லுகிற விமத வாதிகளைக் கண்டித்து ஜீவபர பேதத்தை ஸாதிக்கவல்ல திருமிடற்றோசையையுடையவர் அன்றோ பகவத் ராமாநுஜர். நூற்றந்தாதியில் ''உயிர்கள்மெய்விட்டு ஆதிப் பரனோடு ஒன்றாமென்று சொல்லுமவ்வல்ல லெல்லாம் வாதில் வென்றான் எம்இராமானுசன் மெய்ம்மதிக்கடலே'' என்றருளியது இங்கு நோக்கத்தக்கது. ஆக இத்தகைய பொருத்தங்களினால் ஸிம்ஹமென்று போற்றத் தக்க எம்பெருமானா ருடைய அபிமானத்திலே ஒதுங்கிக் கிடக்கிற நாம் நிர்ப்பயமான வாழ்ச்சியையுடையோம் என்றதாயிற்று.

170. திருக்கச்சி நம்பிகளின் தனியனில் ''ராமாநுஜமுநேர் மாந்யம்'' என்றிருப்பது ஸுப்ரஸித்தம். 'எம்பெருமானார்க்கு பஹுமாந்யர்' என்றபடி. உண்மையில் ஸ்வாமிக்கு நம்பிகளிடமிருந்த கௌரவ ப்ரதிபத்தி ஒப்பற்றதே. நம்பிகள் எந்த வருணத்தைச் சேர்ந்தவர்? என்ற விசாரம் பலர் செய்வதுண்டு. அந்த விசாரத்தில் இறங்க நமக்கு விருப்பமில்லை. எக்குலத்தினும் மிகச் சிறந்ததான தொண்டக்குலமே இவருடைய குலமாகும். ''கிமப்யத்ராபிஜாயந்தே யோகிநஸ் ஸர்வயோநிஷு, ப்ரத்யக்ஷிதாத்மநாதாநாம் நைஷாம் சிந்த்யம் குலாதிகம்'' என்றொரு ப்ரமாணவசனம் நம் ஆசாரியர்களால் எடுத்துக்காட்டப் பட்டுள்ளது. 'யோகிகள் எல்லா எல்லா யோனிகளிலுமே ஜனிக்கின்றார்கள்; இவர்கள் எம்பெருமானை ஸாக்ஷாத்கரித்தவர்களாதலால் இவர்களின் குலம் முதலியவற்றைப் பற்றி ஆராய்வது கூடாது. எம்பெருமான் எப்படி தேவமநுஷ்யதிர்யக் யோநிகளெல்லாவற்றிலும் திருவவதாரம் செய்தருள்கின்றானோ அப்படியே அவன் அடியார்களும் எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்து பெருமை பொலிய நிற்கிறார்கள்.

"ப்ராதுர்ப்பாவைஸ் ஸுரநரஸமோ தேவதேவஸ் ததீயா:" என்கிற ச்லோகத்தில் இவ்வர்த்தம் மிக விளங்கக் காட்டப்பட்டது.

171. அப்படி எம்பெருமானோடொப்பப் பெருமைபெற்ற மஹாகுல ப்ரஸூதர்களில் திருக்கச்சிநம்பிகள் தலைவராய் விளங்கினர். மாசிமிருகசீருஷத்தில் பூவிருந்தவல்லியில் இவரது திருவவதாரம். இவர் திருவரங்கம் பெரிய கோயிலில் ஆளவந்தாருடைய திருவடி நிழலிலே யொதுங்கி ஸாமான்ய விசேஷ சாஸ்த்ரங்களை யெல்லாம் கற்றுணர்ந்து, எம்பெருமானுக்குக் கைங்கர்யம் பண்ணுவதே பரம புருஷார்த்த மென்று கடைப்பிடித்தார். அர்ச்சாவதார எம்பெருமானுக்குத் திருவாலவட்டத் திருத்தொண்டு செய்வதில் இவர்க்கு இயற்கையான குதூஹல மிருந்தது. கோயிலில் அழகிய மணவாளனுக்கு அந்தத் திருத்தொண்டு செய்யத் தொடங்கினார். உபயகாவேரீ மத்யத்தில் சயனித்திருக்கின்ற அப்பெருமாளுக்குத் தாபம் சிறிதுமில்லாமையாலே திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி திரைக்கையால் அடிவருடப் பள்ளி கொள்ளாநின்ற நமக்கு இத்தொண்டு அபேக்ஷிதமாக இல்லையே என்று அப்பெருமாள் அருளிச் செய்ய, அவ்விடம் விட்டுத் திருவேங்கட மலையேற வந்து சேர்ந்து அங்கே திருவேங்கட முடையானுக்கு அந்தக் கைங்கர்யத்தைச் செய்ய ஆரம்பித்தார்.

172. அந்தப் பெருமானும் "குளிரருவி வேங்கடத்தில் குளிர நிற்கும் நமக்கு இந்தத் திருத்தொண்டு அபேக்ஷிதமாக இல்லையே; அத்திகிரியருளாளப் பெருமாள் நான்முகன் செய்த அயமேத வேள்வியில் தீயினில் தோன்றியவ ராதலால் அவர்க்குத் தாபம் மிக்கிருக்கும்; இக்கைங்கரியம் அவர்க்கு மிக அபேக்ஷிதமா யிருக்கும்; அங்கேறச் சென்று தொண்டு செய்து வாய்வீராக" என்று நியமிக்க, அந்த நியமனத்தைச் சிரமேற் கொண்டு அங்கு நின்றும் புறப்பட்டு ஸ்ரீஹஸ்திசைல சிகரோஜ்ஜ்வல பாரிஜாதனான பேரருளாளனுடைய திருவடிவாரத் திலே விடை கொண்டு திருவாலவட்டமும் கையுமாய் ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலாவடிமை செய்து வந்தார். இக்கைங்கரியம் பேரருளாளனுக்குப் பரமப்ரீதிகரமாக இருந்த படியாலே அர்ச்சாவதார ஸமாதியைக் குலைத்துக் கொண்டும் நம்பியோடு வார்த்தை யாடுவதென்கிற முறை ஏற்பட்டது. 'தேவப்பெருமாள் திருக்கச்சி நம்பியோடு வார்த்தையாடுகிறார்' என்கிற ப்ரஸித்தி ஊரெங்கும் பரவியது. (சிலர் இது அஸம்பாவித மென்றும் கல்பிதமான ஐதிஹ்யமென்றும் சொல்லத் தலைப் பட்டிருக்கிறார்கள். மணவாளமாமுனிகள் அருளிச் செய்த தேவராஜமங்களத்தில் "ஸ்ரீகாஞ்சீ பூர்ணமிச்ரேண ப்ரீத்யா ஸர்வாபிபாஷிணே, அதீதார்ச்சா வ்யவஸ்தாய ஹஸ்த்யத்ரீசாய மங்களம்" என்றுள்ளது ப்ரஸித்தம். அர்ச்சாவதார வரம்பைக்கடந்து பரமப்ரீதியினால் திருக்கச்சி நம்பியோடு எல்லா வார்த்தைகளையும் அருளிச் செய்தவரான தேவப்பெருமாளுக்கு மங்களம் – என்பது இந்த ச்லோகத்தின் கருத்து. பொய்யிலாத மணவாளமாமுனி புந்தியிலே புகுந்த விஷயத்தில் அவிச்வாஸமுண்டாக ப்ரஸக்தியில்லை யென்று இவ்வளவோடு நிற்போமிப்போது.)

173. இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த நம்பிகளின் ஜ்ஞாநானுஷ்டானச் செல்வச் சிறப்பையும் பக்திவிரக்திகளின் விலக்ஷண பரிபாகத்தையும் கண்டு வியந்த

எம்பெருமானார், தாம் இவருடைய திருவடிகளிற் பணிந்து உய்வு பெறவேணுமென்று பாரித்தார்; பலவாறு அநுவர்த்தித்தார். நம்பிகள் இதற்குச் சிறிதும் இசைவு காட்டவில்லை. போனகம் செய்த சேடமாவது இவரிடத்தில் பெற்று உய்வோமென்று முயன்றார்; அதுவும் கைகூடவில்லை யென்பது சரித்திரம் உணர்ந்தார்க்கு விசதம். பின்பு எவ்வாசிரியர் திருவடிகளில் ஆச்ரயிப்பது என்கிற விசாரம் ஸ்வாமிக்குப் பெரிதும் உண்டாயிற்று. அதை நம்பிகளிடத்தில் விண்ணப்பம் செய்து தேவப் பெருமாளுடைய திருவுள்ளத்தை அவர் மூலமாகத் தெரிந்து கொள்வோமென்று தோன்றி, அத்தோடு வேறு சில சாஸ்த்ரார்த்த விசிகித்ஸைகளையும் தீர்த்துக் கொள்ள விரும்பித் திருக்கச்சி நம்பிகள்பாடே விஜ்ஞாபித்துக் கொண்டார்.

174. "அடியேனுடைய உள்ளத்தில் சில ஜிஜ்ஞாஸைகள் இருக்கின்றன; தேவப் பெருமாள் மூலமாக தேவரீர் தெரிந்து க்ருபை செய்தருள வேணும்" என்று விண்ணப்பஞ் செய்தார். நம்பிகளும் அன்றிரவு தேவப் பெருமாளுடனே வார்த்தையாடு மடைவில் ஸ்வாமியின் கோரிக்கையை விண்ணப்பம் செய்து பெருமாள் பக்கலிலே ஆறு வார்த்தைகள் பெற்று ஸ்வாமியிடத்தே வெளியிட்டதாக ப்ரஸித்த மான வார்த்தைகளை முன்னோர்கள் ஸங்க்ரஹித் தருளி யுள்ளார்கள்; தமிழ்ப் பாசுரமிரண்டு கேளீர்;–

செப்புகின்ற பரதத்வம் யானேயென்னச் செப்புதி, வே
றொப்பிலாதாய்! தரிசனமும் பேதமென்றே யுரைத்திடுக
தப்பிலாத வுபாயமதும் ப்ரபத்தியென்றே சாற்றிடுக
அப்புகல்க விவையன்றி நினைவும் வேண்டா அந்திமத்தில்;
இந்தச்சரீர வவதானந்தன்னி லிசையும் மோக்கமது
அந்தமில்லாக் குணத்தினனுக் காசாரியனும் பெரியநம்பி
சிந்தையுள்ளே இவையெல்லாம் தெளிந்து நோக்கி யிளையாழ்வான்
முந்தநினைந்தா னிவையிவையே மொழிந்துவருக போயென்றான்."

175. இவ்விஷயத்தில் வடமொழி ச்லோகங்களுமிவை காணீர்:–

அஹமேவ பரம் தத்வம் தர்சநம் பேத ஏவ ச,
மோக்ஷோபாய: ப்ரபத்திஸ் ஸ்யாத் அந்திமஸ்ம்ருதி வர்ஜநம்,
தேஹாவஸாநே முக்திஸ் ஸ்யாத் பூர்ணாசார்யஸமாச்ரய:,
வார்த்தாஷ்டகமிதம் லேபே காஞ்சீபூர்ணமுகாத் குரு:

இவ்வாறு வார்த்தைகளைத் திருக்கச்சி நம்பி மூலமாக ஸ்வாமி பெற்றது ஏக காலத்திலேயே என்பது ஒரு பக்ஷம்; அவ்வப்போதுகளில் தனித்தனியே பெற்ற வார்த்தைகள் ஒன்று சேர்த்து ஆறு வார்த்தைகளாக அநுஸந்திக்கப்பட்டு வருகின்றன வென்பது மற்றொரு பக்ஷம். இது எங்ஙனேயாயினுமாகுக, இவ்வாறு வார்த்தைகளில் தேறுகின்ற அர்த்தங்கள் ஸகல சாஸ்த்ரார்த்த தத்வங்களையும் கையிலங்கு நெல்லிக்கனியாக வுணர்ந்திருக்கும். எம்பெருமானார்க்குத் தெரியாதவையோ? நன்கு தெரிந்திருக்கக் கூடிய அர்த்தங்களேயன்றோ இவை; இவற்றை இந்த முகமாகப் பெறவேண்டிய அவச்யமென்ன? என்று சிலர் கேட்பது நேர்மையன்று. தெரிந்த அர்த்தங்களா யிருந்தாலும் அவற்றை

நிஸஸந்தேஹமாக த்ருடப்படுத்திக் கொள்ளுதல் ப்ராப்தமன்றோ. இவ்வாறு வார்த்தைகளின் விவரணம் வருமாறு:

176. அஹமேவ பரம் தத்வம் – ஸ்ரீமந் நாராயணனே பரதத்வமென்பது முதல் வார்த்தை. எது ஜகத்காரண வஸ்துவோ அதுவே உபாஸ்யமென்றும் அதுவே முழு முதற்கடவுள் என்று உபநிஷத்துக்களின் கொள்கையாகும். எது ஜகத்தகாரண வஸ்துவென்று ஆராயப் புகுமளவில், சாந்தோக்ய உபநிஷத்தில் “ஸதேவ ஸோம்ய! இதமக்ர ஆஸீத் ஏகமேவ அத்விதீயம்” என்று ஸத் என்ற சப்தத்தாலே மூலப்பொருள் ஓதப்பட்டது. அதனால் ஒரு நிஷ்கர்ஷம் பிறக்க வழியில்லை. மற்றும் உபநிஷத்துக்களை ஆராயுமிடத்தில் வாஜஸநேயகத் தில் “ப்ரஹ்ம வா இதம் ஏகமேவ அக்ர ஆஸீத்” என்று ஓதப்பட்டது. முற்காட்டிய உபநிஷத்தில் மூலப்பொருள் ஸத் சப்தத்தாலே கூறப்பட்டு; இதில் ப்ரஹ்ம சப்தத்தாலே கூறப்பட்டது. அந்த வஸ்து மிகவும் பெரிது என்று இதனால் ஏற்பட்டது. இன்னமும் உபநிஷத்துக்களை ஆராயுமளவில் ஐதரேயத்தில் ‘ஆத்மா வா அயமேக ஏவாக்ர ஆஸீத்’ என்றுள்ளது. இதனால் அந்த மூலப்பொருள் அறிவுடையது என்று மாத்திரம் ஏற்பட்டது. இந்திரன் சந்திரன் ஸூர்யன் யமன் வாயு வருணன் குபேரன் சிவன் பிரமன் என்று சொல்லப்படுகின்ற ஆத்மவர்க்கங்களில் ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஸ்ருஜ்யத்வமே சாஸ்த்ரங்களில் கூறப்பட்டிருத்தல் குறிக்கொள்ளத் தக்கது. ஸர்வேச்வரனுடைய ஆஜ்ஞைக்கு அஞ்சி நடப்பாருமாய், அவனை ஆராதித்துப் பதவிகள் பெற்றாருமாய், சாஸ்த்ரங்களின் அநுவர்த்தந அதிவர்த்தநங்களாலே புண்யபாபங்களைப் பெற்று அவ்வவற்றின் பயனாகிய சுகதுக்கங்களை அநுபவிப்பாருமாய். ஓரளவுபட்ட ஐச்வர்யங்களை யுடையவர்களாகச் சொல்லப்படுகையாலே அஸ்மதாதிகளைப் போன்ற, அல்லது நம்மைக் காட்டிலும் சிறிது மேம்பட்டவர்களாகவுள்ள தேவர்கள் ஜகத்காரணபூதர்க ளாயிருக்கத் தகுதியுடையாரல்லர். “ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் ந ப்ரஹ்மா நேசாந:” இத்யாதியாகவுள்ள மஹோபநிஷத் வாக்யத்தில் நாராயணனே மூலப் பொருள் என்று ஸுஸ்பஷ்டமாக ஓதப்பட்டுள்ளது. முந்துற உதாஹரிக்கப்பட்டுள்ள ச்ருதி வாக்யங்களில் ஸத், ப்ரஹ்ம, ஆத்ம பதங்களால் விவக்ஷிக்கப்பட்ட வஸ்து நாராயணனேயாக வடுக்கும். ஏன்? ஸர்வசாகாப்ரத்யய ந்யாயத்தாலே காரண வாக்யங்களெல்லாவற்றுக்கும் ஏக விஷயத்வம் வேண்டுகையாலே “பசுமாலபேத” என்து நாற்கால் விலங்குகளை யெல்லாம் சொல்லக் கடவதான (ஸாமாந்யமான) பசுசப்தம் “சாகோ வா மந்த்ரவர்ணாத்” என்கிற ஸூத்ரத்தின்படி ஆடாகிற பசுவிசேஷத்திலே பர்யவஸிக்குமா போலே ஸத் ப்ரஹ்ம ஆத்ம பதங்கள் நாராயணானாகிற விசேஷத்திலே பர்யவஸித்து நிற்கும். இந்தத் தெளிவைத் தேவப் பெருமாள் ‘அஹமேவ பரம் தத்வம்’ என்ற முதல் வார்த்தையினாலுண்டாக்கினர்.

177. தர்சநம் பேத ஏவ ச –இது நம் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு அந்தரங்கமான தொரு வார்த்தையாகும். உபநிஷத்துக்களில் “நேஹ நாநாஸ்தி கிஞ்சந”, “ஸர்வம் கலு இதம் ப்ரஹ்ம” இத்யாதிகளான வாக்யங்கள் ப்ரஹ்மமொன்றே யுள்ளதென்றும் வேறு எந்தப் பொருளும் இல்லையென்றும் தெரிவிக்கின்றன. “க்ஷரம் ப்ரதாநம் அம்ருதாக்ஷரம் ஹர: க்ஷராத்மாநா வீசதே தேவ ஏக:” “த்வா ஸுபர்ணா ஸயுஜா”

இத்யாதிகளான உபநிஷத் வாக்யங்களோ வென்னில் சித்து அசித்து ஈச்வரன் என்ற மூன்று தத்வங்களும் உள்ளனவென்று தெரிவிக்கின்றன: சங்கராசார்ய ப்ரப்ருதிகள், முந்துறக் காட்டிய அபேத ச்ருதிவாக்யங்களையே முக்கியமாகக் கொண்டு அத்வைதக் கொள்கையை ப்ரவசனம் செய்தார்கள். அவர்களுடைய கொள்கையின்படி உண்மையில் ஒரு தத்துவமே உள்ளதென்றும் சேதந–அசேதந–ஈச்வரர்களென்று தத்வத்ரயம் கிடையாதென்றும் தேறுகிறது. அது தவறு என்று காட்டுவது இந்த வார்த்தை. சேதநாசேதங்கள் ஈச்வரனுக்கு சரீரங்களாகையாலே உலகத்தில் சரீர சரீரிகளை ஒற்றுமை நயத்தினாற் கூறும் வழக்கில் அபேத ச்ருதிகள் அவதரித்தனவே அல்லது உண்மையில் தனியே மூன்று தத்துவங்கள் இல்லையென்று மறுக்க வந்தவையல்ல. சரீராத்ம பாவத்தாலே அபேதம் நிர்வஹிக்கப்படுகிறது. ஸம்ஸார தசையோடு முக்தி தசையோடு வாசியற எங்கும் பாரமார்த்திகமாகவே ஜீவ பரபேதம் உண்டு என்று இவ்வார்த்தையினால் விளக்கிற்றாயிற்று.

178. உபாயேஷு ப்ரபத்திஸ் ஸ்யாத் – பகவத்கீதை முதலியவற்றில் கர்மயோகம், ஜ்ஞாநயோகம், பக்தியோகம் எனப் பல உபாயங்கள் எம்பெருமானைப் பெறுதற்கு வழியாக வகுக்கப் பட்டுள்ளன. ப்ரபத்தி தவிர மற்ற உபாயங்கள் ஆகிஞ்சந்யமும் அநந்யகதித்வமுமே வடிவாகவுள்ள ஸ்ரீவைஷ்ணவாதிகாரிக்கு ஸ்வரூபவிருத்தங்க ளாகையாலே ஸ்வரூபஜ்ஞர்களான அதிகாரிகள் அவ்வுபாயங் களை அனுட்டிக்கத் தகுதியுடையர் அல்லர்; "ப்ராபகாந்தர பரித்யாகத்துக்கு அஜ்ஞாந அசக்திகளன்று, ஸ்வரூப விரோதமே ப்ரதாநஹேது" என்று ஸ்ரீவசந பூஷணத்தில் பிள்ளையுலகாசிரியர் அருளிச் செய்தபடிக்கு சரணாகதியே ஸ்வரூபோசிதமான உபாயம் என்பது இந்த வார்த்தையின் கருத்து. முமுக்ஷுப்படியில் சரமச்லோக ப்ரகரணத்தின் உபக்ரமத்தில் "கீழே சில உபாய விசேஷங்களை யுபதேசிக்க" என்று தொடங்கி அருளிச் செய்துள்ள சூர்ணையும் இங்கு நோக்கத்தக்கது. இதை நிகமாந்தகுரு பல ஸூக்திகளால் திடப்படுத்தினர்.

179. அந்திமஸ்ம்ருதி வர்ஜநம் – ப்ரபந்நாதிகாரிகள் சரீரவியோகமடையுங்காலத்தில் "மடிவழி வந்து நீர்ப்புலன் சோர வாயிலட்டிய கஞ்சியும் மீண்டே; கடைவழி வாரக் கண்டமடைப்பக் கண்ணுறக்கமதாவது" இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே மனமொழி மெய்களாகிய கரணத்ரயமும் சிதிலமாகி எம்பெருமானை நினைக்கவும் முடியாதபடி யிருந்து அப்படியே பிராணவியோகமாய்விட்டால் அன்னவர்க ளுக்கு ஸத்கதி கிடையாதோ? என்று சங்கிக்க வேண்டா; வராஹசரமச்லோகப் படிக்கும் 'எய்ப்பென்னைவந்து நலியும் போது அங்கேதும் நானுன்னை நினைக்க மாட்டேன் அப்போதைக் கிப்போதே சொல்லி வைத்தேன் அரங்கத்தரவணைப் பள்ளியானே' என்ற அருளிச் செயலின் படிக்கும், யோக்ய காலங்களில் மநோவாக்காயங்களை நல்வழிப்படுத்தின மஹான்களுக்கு சரீராவஸாந காலத்தில் நல்லஸ்மரணமில்லையாயினும் குறையில்லை யென்பது இந்த வார்த்தையின் கருத்து. "அந்திம ஸ்ம்ருதிவர்ஜநம்" என்றிருப்பதால் அந்திம காலத்தில் ஸ்மரணம் இருக்கவே கூடாதென்று நிஷேதிப்பதாகச் சிலர் பொருள் கொள்ளக்கூடும். அது தவறு; அந்திம காலத்தில் நல்ல ஸ்மரணம் இல்லையாயின் அதனால் ஸத்கதிக்கு ஹாநி

யுண்டாகுமோவென்று கவலைப்பட வேண்டா வென்பது மாத்திரமே இங்கு விவக்ஷிதம். அந்திமஸ்ம்ருதி நிர்ப்பந்த வர்ஜனம் என்றபடி.

180. தேஹாவஸாநேமுக்திஸ் ஸ்யாத் – செய்த பாபங்கள் அநுபவிக்கப்பட்டுக் கழிந்தாலல்லது பெற வழியில்லை. பாபங்களோ எத்தனை ஜன்மமெடுத்து அநுபவித்தாலும் இன்னமும் மேன்மேலும் அவை வளரும்படியாகவுள்ளதேயன்றிக் கழியும்படியாக இல்லையே; ''வாயினாற் பாடி மனத்தினால் சிந்திக்கப் போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்'' என்கிறபடியே வித்யா மாஹாத்ம்யத்தினால் பாபங்கள் கழிவதாகக் கொண்டால் உடனே மோக்ஷம் கிடைத்துத் தீரவேணுமே; அப்படி கிடைப்பதாகத் தெரிய வில்லையேயென்று தோன்றும் சங்கைக்குப் பரிஹாரம் இந்த வார்த்தையினால் கிடைக்கிறது. பாபங்கள் ப்ராரப்தமென்றும் ஸஞ்சிதமென்றும் இருவகைப்படும்; பலன் கொடுக்கத் தொடங்கின பாவங்கள் ப்ராரப்தம் எனப்படும். இங்ஙனல்லாதவை ஸஞ்சிதம் எனப்படும். வித்யா மாஹாத்மியத்தினால் ஸஞ்சித கருமங்கள் தொலையும். ப்ரபந்நாதிகாரி களுக்கு ப்ராரப்த கர்மாநுபவத்தை இந்த தேஹத்தள வோடே செய்வித்து முடித்து மறுபடியும் தேஹ ஸம்பந்த முண்டாகாதபடி எம்பெருமான் செய்தருள்வனாதலால் ''மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்'' என்கிறபடியே இந்த தேஹத்தின் அவஸானத்திலே மோக்ஷம் திண்ணம் என்பது இந்த வார்த்தையின் கருத்து. ஆர்த்த ப்ரபந்நன் என்றும் த்ருப்த ப்ரபந்நன் என்றும் ப்ரபந்நன் இருவகைப் படுவன். வர்த்தமாந தேஹத்தை ஒருபடி பொறுத்திருக்க வல்லவன் த்ருப்த ப்ரபந்நன். இதையும் பொறுத்திருக்க முடியாதபடி ஆர்த்தி கனத்தவன் ஆர்த்தப்ரபந்நன். அன்னவனுடைய ஆர்த்தி மிகுதியை யறிந்தவாறே எம்பெருமான் அப்போதே முக்தியளிப்பனென்பதும் அறியத்தக்கது.

181. பூர்ணாசார்ய ஸமாச்ரய: – எம்பெருமானார் தாம் எவரை ஆசார்யராகப் பற்றுவதென்று விசாரமுற்றிருந்தபடியாலே அதற்குப் பரிஹாரம் இந்த ஆறாவது வார்த்தையினாலாகிறது. ஆளவந்தாருடைய சிஷ்யர்களில் தலைவரான பெரிய நம்பியை ஆச்ரயிக்கும்படி இதனால் நியமன மாயிற்றென்று அறிவது. ''பஞ்சாசார்ய பதாச்ரித:'' என்றபடி ஸ்வாமி ராமாநுஜர் ஐந்து ஆசார்யர்களை ஆச்ரயித்தவராயினும் ஸ்ரீவசனபூஷணத்தில் ''நேரே ஆசார்யனென்பது ஸம்ஸார நிவர்த்தகமான பெரிய திருமந்த்ரத்தை யுபதேசித்தவனை'' என்றருளிச் செய்திருக்கையாலே அப்படிப்பட்ட ஆசார்யர் இவர்க்குப் பெரிய நம்பியேயாவர். ஆண்டாள், திருப்பாவையில் பாசுரந்தோறும் எம்பெருமானுடைய பெருமையை (ஸ்வாபதேசார்த்த மர்யாதையில்) வெளியிடுவதுண்டே; அதில் 'வையத்து வாழ்வீர்காள்!' என்கிற இரண்டாம்பாட்டில் ஈற்றடி 'உய்யுமாறு எண்ணி உகந்தேலோரெம்பாவாய்' என்பது. 'உய்யும் ஆறு எண்ணி' – உஜ்ஜீவநமான ஆறு வார்த்தைகளைச் சிந்தித்து உகந்தமை கூறினதாக இங்கு ரஹஸ்யார்த்தம் அறியத்தக்கது.

182.பஞ்சாசார்யபதாச்ரித:(ஆசார்யர்கள் ஐவரின் திருவடிகளை ஆச்ரயித்தவர்) என்று போற்றப்படுகின்ற ஸ்வாமி யெம்பெருமானார்க்குத் திருக்கோட்டியூர் நம்பிகளும் ஒரு ஆசாரியர் என்பதை உலகமறியும். ''கோஷ்டீபூர்ண குருபஸத்தி குசலோ யாம் சச்வதாஸேதிவாந்'' என்று தொடங்கி பட்டர் அருளிச் செய்தபடியும், குருபரம்பராப்ரபாவம்

முதலிய சரித்திர நூல்களில் உள்ளபடியும், ஸ்ரீவசந பூஷண வியாக்கியானம் முமுக்ஷுப்படி வியாக்கியானம் முதலியவற்றில் மணவாளமாமுனிகள் அருளிச் செய்தபடியும் ஸ்வாமி யெம்பெருமானார் திருக்கோட்டியூர்க்குப் பல கால் நடந்து துவண்டு நிதியான பொருளைப் பெற்றிருந்தார் என்பது விவாதமற்ற விஷயம். அப்படிப் பெற்ற பொருளை உடனே ஆசார் நியமனத்தைக் கடந்தும் அவ்வூரிலேயே சிலபல ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு வாரி யிறைத்து விட்டு எம்பெருமானாரென்கிற சிறப்புப் பெயர் பெற்றார் என்பதும் தேசமெல்லாம் வழங்கும் இதிஹாஸமாக வுள்ளது. இது நிற்க.

183. சாஸ்த்ரங்களில் ஒரு கட்டளையான வசனம் நம்பூருவாசாரியர்களால் ரஹஸ்ய க்ரந்தங்களில் அடிக்கடி கையாளப் பட்டிருக்கக் காண்கிறோம்; அதாவது – ''குரும் ப்ரகாசயேத் தீமாந் மந்த்ரம் யத்நேந கோபயேத், அப்ரகாச ப்ரகாசாப்யாம் க்ஷீயேதே ஸம்பதாயுஷீ'' என்பதாக. இதன் பொருள் என்னென்னில்; விவேகியாயிருக்கும் சிஷ்யன் ஸ்வாசார்யனை நன்றாக வெளியிடக் கடவன்; ஆசார்யன் உபதேசித்த மந்த்ரத்தை மாத்திரம் அப்படி வெளியிடாமல் வெகு ஜாக்ரத்தையுடன் மறைத்து வைத்துக் கொள்ளக் கடவன். இப்படியல்லாமல் வேறு விதமாக நடந்து கொள்ளும் பக்ஷத்தில் (அதாவது) ஸ்வாசார்யனை ப்ரகாசப் படுத்தாமலிருக்கை, மந்த்ரத்தை மனம் போனபடி வெளியிட்டுவிடுகை ஆகிய இப்படிப்பட்ட விபரீத காரியங்களைச் செய்யும் பக்ஷத்தில் ஸம்பத்தும் ஆயுளும் குன்றும்–என்பது மேலேயெடுத்துக் காட்டிய ச்லோகத்தின் பொருள். இவ்விரண்டு வகையான குறைகளும் ஸ்வாமி யெம்பெருமானார் பக்கலிலே ஏறிக்கிடப்பதாகச் சங்கிக்க இடமுள்ளது. (1) தமக்கு ஆசாரியர்களாக அமைந்த பெரியார்கள் ஐவரில் ஒருவர்க்கும் ஒரு தனியன் கூட ஸ்வாமி ஸாதிக்கவில்லை. தமக்கு நேரே ஆசார்யர் அல்லாத ஆளவந்தார்க்கே தனியன் இட்டிருக்கிறார். ஆகவே 'குரும் ப்ரகாசயேத் தீமாந்' என்ற முதல் கட்டளை நிறைவேற்றப் படவில்லையென்று தேறிற்று. (2) திருக்கோட்டியூரில் தாம் யதேஷ்டமாக நடத்தினதொரு செய்கையினால் 'மந்த்ரம் கோபயேத்' என்கிற இரண்டாவது கட்டளையும் நிறைவேற்றப்படவில்லையென்று தேறிற்று. சிறந்த ஆசார்ய பதவியில் வீற்றிருந்து உலகம் போற்ற நின்ற இப்பேராசிரியர் பக்கலில் இவ்வகைக் குறைகள் இடம் பெறலாமா? என்று ப்ரதிபக்ஷிகளோ ஜிஜ்ஞாஸுக்களோ கேட்டால் என்ன விடையிறுப்பதென்று சிலர் சிந்திக்கின் றனர். அன்னவர்களுக்குத் தெளிவு பிறப்பிக்க வேண்டியே இந்த வியாஸம் எழுதப் படுகின்றது.

184.மேலே சங்கித்த இரண்டு குறைகளுக்கும் ஸ்வாமி பக்கலில் அவகாச லேசமும் இல்லையென்பது ஈண்டு நிரூபிக்கப் படுகிறது. இரண்டாவது விஷயத்திற்கு முன்னம் பரிஹாரம் தெரிவித்து, பின்னை முதல் விஷயத்திற்கு பரிஹாரம் தெரிவிக்கிறோம். 'மந்த்ரம் யத்நேந கோபயேத்' என்ற கட்டளைக்கு விபரீதமாகத் திருக்கோட்டியூரில் கோவில் கோபுரத்தின் மேலேறி வாரியிறைத்து விட்டார் என்று சிலரோ பலரோ நினைத்திருப்ப தும் சொல்வதும் முறையல்ல. அங்கு நடந்த வ்ருத்தாந்தத்தின் உண்மை யாதெனில்; கேளீர்.

185. ஸ்வாமி முதன் முதலாகத் திருக்கோட்டியூர்க்கு எழுந்தருளின போது அங்கு ஓரிடத்தில் நின்று ''நம்பி திருமாளிகை யெது?'' என்று சிலரைக் கேட்க, அவர்கள் ''அதோ

தெரிகிற கூரை'' என்று அவருடைய திருமாளிகையைக் காட்ட, அங்கிருந்து அந்தத் திருமாளிகை வரையில் திருவடியால் நடந்து செல்லாமல் அங்கிருந்து தெண்டன் ஸமர்ப்பித்து கொண்டே (ப்ரணாம பரம்பரைகளினாலேயே) நம்பி திருமாளிகையைச் சென்று சேர்ந்தார் ஸ்வாமி. இதைக் கண்ட அவ்வூரார்க்கு அப்போது தான் நம்பியினுடை வைபவம் தெரிய வந்தது. சதுச்சாஸ்த்ர வித்வத் ஸார்வபௌமரான ஸ்வாமி இப்படி ஆதரிக்கும் படியான பெருமை வாய்ந்த மஹாநுபாவர் நீறுபூத்த நெருப்புப் போல மிகவும் ஏகாந்த சீலராகவே அவ்வூரில் எழுந்தருளி யிருந்தார். ஸ்வாமியின் உபஸர்ப்பண விசேஷங்களினால் நம்பியினுடைய இப்படிப்பட்ட பெருமையை அவ்வூரார் அப்போதாகத் தெரிந்து கொண்டாலும் அவரை அவர்கள் அணுகிச் சென்று அர்த்த விசேஷங்கள் கேட்க அவகாசமில்லாமலிருந்தது. ஸ்வாமியே பலகால் நடந்துது துவண்டு கேட்க வேண்டியிருந்ததென் றால், மற்றையோர்கள் கேட்பதற்கும் பெறுவதற்கும் ப்ரஸக்தியேது? அவர்கள் நம்பிபக்கலில் அணுகுவதற்கு அவகாசமில்லாம லிருந்தது. ஸ்வாமி நம்பெருமாள் ஸன்னிதி யிலிருந்து அடிக்கடி அவ்வூர் வருவதும் போவதுமாயிருந்தபடியாலே அவர்கள் விசாரித்து ஏதோ விசேஷார்த்தங்கள் பெறுவதற்கு ஸ்வாமி இங்ஙனே வருவதும் போவதுமாயிருக்கின்றார் என்பதைக் கொண்டு ஒரு ஸமயத்தில் ஸ்வாமியிடத்திலே மிகவும் விநயமாக வணங்கி நின்று இங்ஙனே விஜ்ஞாபித்தார்கள்;– ''ஸ்வாமிந்! நாங்கள் இவ்வூரிலேயே பிறந்து நம்பி திருமாளிகை ஸமீபத்திலேயே வர்த்தித்தாலுங் கூட 'தண்டாமரையினுடன் பிறந்தே தண்டேன் நுகரா மண்டுகம்' என்றாப்போலே நம்பியிடத்து உள்ள விசேஷங்களை க்ரஹிக்க சக்தியற்றவர் களாயிருக்கின்றோம்; தேவரீர்தாம் 'வண்டே கானத்திடைப் பிறந்தும் வந்தே கமலமது வுண்ணும்' என்றாப்போலே நெடுந்தூரத்தி லிருந்து வந்தும் அந்த விசேஷங்களை க்ரஹிக்கும் பாக்கியமுடையீர்; இப்படி பலகால் துவண்டு நடந்து கொண்டிருக்கின்ற தேவரீர்க்கு அவசியம் நிதி கிடைத்தே தீரும்; அப்படி கிடைக்கும்போது அறிவிலிகளான அடியோங்க ளையும் சிறிது கடாக்ஷித்தருள வேணும்; 'கனைத்திளங் கற்றெருமை கன்றுக்கிரங்கி நினைத்து முலைவழியே நின்று பால்சோர' என்னும்படியான பெருமை வாய்ந்த தேவரீர் திருவுள்ளமிரங்கி எமக்கு அருள் செய்தாலொழிய வேறு விதமாக நாங்கள் அவ்வர்த்தங்களைக் கேட்டு உஜ்ஜீவிப்பதற்கு ஈஷத்தும் இடமில்லை. நம்பிபக்கலில் நாங்கள் அணுகவோ பிரார்த்திக் கவோ, பெறவோ ப்ரஸக்தியே யில்லாமையால் ஏழையரான வடியோங்களை ஸமயவிசேஷத்தில் திருவுள்ளத்தில் கொண்டிருந்து கடாக்ஷித்தருள வேணும்.''– என்று.

186. இப்படி பலகால் வேண்டிக் கொண்டிருந்த ஸ்ரீவைஷ்ணவர்களின் ச்ரத்தா பக்தி அதிசயங்களைத் திருவுள்ளம் பற்றியிருந்த ஸ்வாமி 'பாருலகிலாசை உடையோர்க்கெல்லாம் ஆரியர்காள் கூறுமென்று, பேசி வரம்பறுத்தார் பின்' என்று தாமே மற்றோர் அவதாரத்தில் பேசி வைக்கும்படியான பெருமை பொருந்தியவர் ஆதலால், அப்படிப்பட்ட ச்ரத்தாளுக்களான ஸ்ரீவைஷ்ணவர்களை ஸன்னிதியின் மேல் தளத்திலே ஏகாந்தமாக அழைத்துச் சென்று அவர்களுக்கும் பரமக்ருபையுடன் உபதேசித்தருளினார். இப்படி

யல்லாமல், அங்கே, மேல் கோபுரத்தருகே நின்று கொண்டு வீதியில் போகிறவர்களையெல்லாம் வம்மின் கொண்மின் என்றழைத்து அர்த்தங்களை வாரியிறைத்து விட்டார் என்று சிலர் நினைப்பதும் சொல்லுவதும் வஸ்துஸ்திதியன்று. அப்படி வாரியிறைத்திருந் தால் அதனால் யார்க்கும் யாதொருபயனுமில்லை. ஏனெனில்; 'பத்ரே க்ஷிதோ வா வ்யர்த்தஸ் ஸ்யாத் யத்ருச்சா ச்ருத ஏவ வா' என்பது ப்ரஸித்தமான சாஸ்த்ரம்; சிரமப்பட்டு ஆசார்ய ஸந்நிதியின் நிதியாகப் பெறவேண்டிய மஹார்த்தம் ஏடு பார்த்து க்ரஹிக்கப்பட்டாலும், அபேக்ஷையில்லாதிருக்க யாத்ருச்சிகமாகக் காதில் விழப் பெற்றாலும் அது பயனற்றதே—என்பது மேலே குறித்த வசனத்தின் பொருள். இதனை ஸ்வாமி யறிந்திலர் என்பது அஸம்பாவிதம். அறிந்து வைத்தும் கருணாதிசயத்தாலே தம்மைமறந்து வாரி யிறைத்து விட்டார் என்னில், இப்படிச் சொல்லுகிறவர்கள் இதையொரு மஹாகுணமாக நினைக்க வேண்டுமேயொழிய, குறையாக நினைத்துச் சங்கிக்க இடமில்லை. உண்மையில் அங்ஙனம் நடந்ததில்லை. ச்ரத்தாளுக்களும் ப்ரார்த்தித்திருந்தவர்களுமான ஸ்ரீவைஷ்ணவர்க ளுக்கே அருமருந்தாக உபதேசித்தருளப்பட்டது.

187. 'மந்த்ரம் யத்நேந கோபயேத்' என்பதற்கு – ஸர்வாத்மநா ஒருவர்க்குமே உபதேசிக்காமல் மூடி மூடியே வைத்துக் கொள்ள வேணும் என்பதாகப் பொருள் என்று நினைப்பது பொருந்தாது. அப்போது உபதேசபரம்பரையே இல்லையாய்விடும். எந்த மந்த்ரமும் யாருக்குமே ப்ராப்தமாகாமலிருக்க வேணும். மற்ற ஆசார்யர்கள் அநுவ்ருத்தி ப்ரஸந்நாசார்யர்கள் என்றும், ஸ்வாமி எம்பெருமானார் க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யர் என்றும் சொல்லுவதற்குச் சாலவும் இடமுண்டு. நம்பியின் திருவாணையை மீறி யுபதேசித்தார் என்பது உண்டு. அந்தக் குற்றத்தை ஸ்வாமி தாமே யிசைந்து மறுமொழி கூறினது ப்ரஸித்தமாயிருப்பதால் அதில் இப்போது விசாரமொன்றும் இல்லை. அநதிகாரிகளுக்கும் வாரியிறைத்து விட்டார் என்று கொண்டு கூறும் ஆக்ஷேபத்திற்கே இங்குப் பரிஹாரமுரைக்கப்பட்டது. "மனமுடையீர் என்கிற ச்ரத்தையே அமைந்த மர்மஸ்பர்சிக்கு காணும் நமருமென்னும்படி ஸர்வரும் அதிகாரிகள்" என்கிற ஆசார்ய ஹ்ருதய ஸ்ரீஸூக்தியின்படி அதிகாரிகளான ஸச்சிஷ்ய லக்ஷண பூர்த்தியுள்ள ஸ்ரீவைஷ்ணவர் களுக்கே ஸ்வாமி உபதேசித்தருளி னார் என்கிற பரமார்த்தத்தை நிரூபித்தோமானோம்.

188. இனி, 'குரும் ப்ரகாசயேத் தீமாந்' என்ற முதற் கட்டளை ஸ்வாமி பக்கலிலே கண்டதில்லையே யென்கிற சங்கைக்குப் பரிஹாரமுணர்த்துகிறோம். இதற்கு பஹிரங்க ஸமாதானமென்றும் அந்தரங்க ஸமாதான மென்றும் இரண்டுண்டு. இரண்டையும் தெரிவிக்கிறோம். பஹிரங்க ஸமாதானத்தை முன்னே தெரிவிக்கிறோம். 'குரும் ப்ரகாசயேத் தீமாந்' என்ற கட்டளையை மற்றையாசிரியர்க ளெல்லாரும் எவ்விதமாகப் பரிபாலனம் செய்திருக்கிறார்களோ அவ்விதமாகவேதான் எம்பெருமானாரும் பரிபாலனம் செய்திருக்கிறார். ஸ்ரீமந் நாதமுனிகள் முதலான பூர்வாசார்யர் களும் தம்தம் ஆசிரியர்களுக்குத் தனியன் இயற்றி யநுஸந்திப்பது, காலக்ஷேப ப்ரஸங்கங் களில்

அவ்வாசார்யர்களின் பெருமைகளைப் பன்னியுரைப்பது என்று இவ்விதமாகத் தானே நடந்து கொண்டார்கள். ஸ்வாமியும் அவ்விதமாகவே நடந்து கொண்டார். பெரியநம்பி முதலான தம் ஆசாரியர்களுக்கு இன்றைக்கும் வழங்கிவரும் தனியன்களெல்லாம் ஸ்வாமி பணித்தவையே. தம்முடைய வாழ்நாளில் அவ்வாசியர்களின் பெருமைகளை “போற்றி யுகப்பதும் புத்தியிற் கொள்வதும் பொங்குபுகழ் சாற்றி வளர்ப்பதும்” செய்து கொண்டே யிருந்தாரென்பதில் என்ன ஸந்தேஹம்? வேறு எவ்விதமாக குருப்ரகாசநம் பண்ணுவது? பண்ணத்தகுந்தமுறையில் பண்ணியேயிருக்கிறார் – என்கிறவிது பஹிரங்க ஸமாதானம். எல்லாரும் சொல்லிப்போருகின்ற ஸமாதானம் இதுவே.

189. இனி அந்தரங்க ஸமாதானமாவது, கேண்மின். ஸ்வாமி தமக்கு ஸாக்ஷாத் ஆசார்யர்களான ஐவர்களில் ஒருவர்க்கும் தாம் தனியன் இடமில்லை. அந்த தனியன்களெல்லாம் வேறு சிலர் இட்டவையே என்றே வைத்துக் கொள்வோம். ஆளவந்தார் விஷயமாக ஸ்வாமி தனியனிட்டிருக்கிறாரென்பதில் ஸந்தேஹமோ விவாதமோ இல்லையே. ‘யத்பதாம்போருஹ த்யாந வித்வஸ்தாசேஷ கல்மஷ:, வஸ்துதாம் உபயாதோஹம் யாமுநேயம் நமாமி தம்’ என்கிற இந்தத் தனியன் கீதாபாஷ்யத்தின் தொடக்கத்தில் இருப்பதால் இது ஸ்வாமியின் ரசனையேயென்பது நிர்விவாதம். ஆளவந்தாருடைய திருவடிகள் இரண்டை மாத்திரம் சிந்திப்பதாக இங்குக் கூறுகின்றதன்று. இங்குள்ள பதாம்போருஹ பதத்தினால் பதினான்கு திருவடிகள் உத்தேசிக்கப்படுகின்றன. அவை எவை யென்னில்; ஆளவந்தாருடைய இரண்டு திருவடிகள் தெரிந்தேயிருக்கின்றன. அவர் ஆதரித்த இரண்டு திருவடிகள் (நம்மாழ்வாருடைய திருவடிகள்) ஆக நான்கு. அவ்வாளவந்தாருடைய திருவடிகளை ஆச்ரயித்திருந்து ஸ்வாமிக்கு ஆசார்யர்களான ஐவருடைய திருவடிகள் பத்து; ஆக இப்பதினான்கு திருவடிகளைச் சிந்திப்பதாகத் தெரிவிப்பது இந்த ச்லோகம். விவரித்துக் காட்டுகிறோம், காண்மின்.

190. யஸ்ய பதாம்போருஹே–யத்பதாம் போருஹே; என்று ஸமாஸம்.(ஸம்பந்த ஸாமாந்யே ஷஷ்டீ என்று அறிக.) ஆளவந்தாருடைய திருமேனியிலுள்ள பாதாரவிந்தங்களைச் சொன்னபடி. மறுபடியும் ‘யஸ்ய பதாம் போருஹே’ என்றால் – ஆளவந்தார்தாம் ‘மாதாபிதா யுவதய:’ என்கிற ச்லோகத்தில் ‘ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுளாபிராமம் ஸ்ரீமத் ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா’ என்று தம்முடைய சென்னிக்கு அணியாக பரிக்ரஹித்த நம்மாழ்வாருடைய உபயபாதங்களும் ‘யத்பதாம்போருஹ சப்தத்தினாலே எளிதாகத் தெரிவிக்கப்படும். மீண்டும் ‘யஸ்ய பதாம்போருஹாணி யத்பதாம்போருஹாணி’ என்று கொள்க. உலகில் சிஷ்யர்களைத் திருவடிகளென்றே ஸம்ப்ரதாயஜ்ஞர்கள் வழங்குவராதலால் ஆளவந்தாருடைய சிஷ்யர்கள் ஐவரையே ஆளவந்தாருடைய திருவடிகளாகச் சொன்னபடி. ‘பதாம்போருஹ’ என்பதில் இரண்டு பதங்கள் உள்ளனவன்றோ; (பத–என்றும், அம்போருஹ என்றும்) திருவடிக்கு வாசகமானபத சப்தத்தி னால் அவருடைய சிஷ்யர்களைச் சொல்லி, தாமரைக்கு வாசகமான அம்போருஹ சப்தத்தி னால் அவர்களுடைய திருவடிகளைச் சொல்லுகிறதென்றும் கொள்ளலாம். அம்போருஹமென்றால் திருவடிகளைச்

அவ்வாசார்யர்களின் பெருமைகளைப் பன்னியுரைப்பது என்று இவ்விதமாகத் தானே நடந்து கொண்டார்கள். ஸ்வாமியும் அவ்விதமாகவே நடந்து கொண்டார். பெரியநம்பி முதலான தம் ஆசாரியர்களுக்கு இன்றைக்கும் வழங்கிவரும் தனியன்களெல்லாம் ஸ்வாமி பணித்தவையே. தம்முடைய வாழ்நாளில் அவ்வாசியர்களின் பெருமைகளை "போற்றி யுகப்பதும் புத்தியிற் கொள்வதும் பொங்குபுகழ் சாற்றி வளர்ப்பதும்" செய்து கொண்டே யிருந்தாரென்பதில் என்ன ஸந்தேஹம்? வேறு எவ்விதமாக குருப்ரகாசநம் பண்ணுவது? பண்ணத்தகுந்தமுறையில் பண்ணியேயிருக்கிறார் – என்கிறவிது பஹிரங்க ஸமாதானம். எல்லாரும் சொல்லிப்போருகின்ற ஸமாதானம் இதுவே.

189. இனி அந்தரங்க ஸமாதானமாவது, கேண்மின். ஸ்வாமி தமக்கு ஸாக்ஷாத் ஆசார்யர்களான ஐவர்களில் ஒருவர்க்கும் தாம் தனியன் இடமில்லை. அந்த தனியன்களெல்லாம் வேறு சிலர் இட்டவையே என்றே வைத்துக் கொள்வோம். ஆளவந்தார் விஷயமாக ஸ்வாமி தனியனிட்டிருக்கிறாரென்பதில் ஸந்தேஹமோ விவாதமோ இல்லையே. 'யத்பதாம்போருஹ த்யாந வித்வஸ்தாசேஷ கல்மஷ:, வஸ்துதாம் உபயாதோஹம் யாமுநேயம் நமாமி தம்' என்கிற இந்தத் தனியன் கீதாபாஷ்யத்தின் தொடக்கத்தில் இருப்பதால் இது ஸ்வாமியின் ரசனையேயென்பது நிர்விவாதம். ஆளவந்தாருடைய திருவடிகள் இரண்டை மாத்திரம் சிந்திப்பதாக இங்குக் கூறுகின்றதன்று. இங்குள்ள பதாம்போருஹ பதத்தினால் பதினான்கு திருவடிகள் உத்தேசிக்கப்படுகின்றன. அவை எவை யென்னில்; ஆளவந்தாருடைய இரண்டு திருவடிகள் தெரிந்தேயிருக்கின்றன. அவர் ஆதரித்த இரண்டு திருவடிகள் (நம்மாழ்வாருடைய திருவடிகள்) ஆக நான்கு. அவ்வாளவந்தாருடைய திருவடிகளை ஆச்ரயித்திருந்து ஸ்வாமிக்கு ஆசார்யர்களான ஐவருடைய திருவடிகள் பத்து; ஆக இப்பதினான்கு திருவடிகளைச் சிந்திப்பதாகத் தெரிவிப்பது இந்த ச்லோகம். விவரித்துக் காட்டுகிறோம், காண்மின்.

190. யஸ்ய பதாம்போருஹே–யத்பதாம் போருஹே; என்று ஸமாஸம்.(ஸம்பந்த ஸாமாந்யே ஷஷ்டீ என்று அறிக.) ஆளவந்தாருடைய திருமேனியிலுள்ள பாதாரவிந்தங்களைச் சொன்னபடி. மறுபடியும் 'யஸ்ய பதாம் போருஹே' என்றால் – ஆளவந்தார்தாம் 'மாதாபிதா யுவதய:' என்கிற ச்லோகத்தில் 'ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுளாபிராமம் ஸ்ரீமத் ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா' என்று தம்முடைய சென்னிக்கு அணியாக பரிக்ரஹித்த நம்மாழ்வாருடைய உபயபாதங்களும் 'யத்பதாம்போருஹ சப்தத்தினாலே எளிதாகத் தெரிவிக்கப்படும். மீண்டும் 'யஸ்ய பதாம்போருஹாணி யத்பதாம்போருஹாணி' என்று கொள்க. உலகில் சிஷ்யர்களைத் திருவடிகளென்றே ஸம்ப்ரதாயஜ்ஞர்கள் வழங்குவராதலால் ஆளவந்தாருடைய சிஷ்யர்கள் ஐவரையே ஆளவந்தாருடைய திருவடிகளாகச் சொன்னபடி. 'பதாம்போருஹ' என்பதில் இரண்டு பதங்கள் உள்ளனவன்றோ; (பத–என்றும், அம்போருஹ என்றும்) திருவடிக்கு வாசகமானபத சப்தத்தி னால் அவருடைய சிஷ்யர்களைச் சொல்லி, தாமரைக்கு வாசகமான அம்போருஹ சப்தத்தி னால் அவர்களுடைய திருவடிகளைச் சொல்லுகிறதென்றும் கொள்ளலாம். அம்போருஹமென்றால் திருவடிகளைச்

சொல்லுமோவென்னில்; 'தாவி வையங்கொண்ட தடந் தாமரைகட்கே' (திருவாய்மொழி 6–9–9) என்கிற ஆழ்வார் பிரயோகத்தை யறிந்தவர்கள் இதில் விப்ரதிபத்தி பண்ணமாட்டார்கள். "தாவி வையங் கொண்ட தடந்தாளிணை" என்ன வேண்டுமிடத்தில் திருவடிக்குப் பர்யாயமாகத் தாமரையையே சொல்லி யிருப்பது காண்க. இந்த நடை வடமொழியிலும் உண்டு. அபஹ்நுதி யலங்கார மென்பர்கள்.

191. ஆக, பரமாசார்யரான நம்மாழ்வாரை யும் ப்ராசார்யரான ஆளவந்தாரையும் ஸ்வாசார்யர்களையும் ப்ரகாசப்படுத்தியே தனியனிட்டிருக்குமழகு ஸஹ்ருதயைக ஹ்ருதயங்கமம். "குரும் ப்ரகாசயேத் சிஷ்ய:" என்னாமல் "குரும் ப்ரகாசயேத் தீமாந்" என்று மூல பிரமாணத்தில் இருக்கையாலே மஹாமேதாவிகள் எவ்விதமாக ஆசார்ய ப்ரகாசநம் பண்ணலாமோ அவ்விதமாகவே ஸ்வாமி தாமும் தம்முடைய மேதாவைபவம் விளங்க இங்ஙனே ச்லோகரத்நம் தொடுத்திருப்பது மிகவற்புதம். மஹான்களு டைய திருநாவின்வீறு இங்ஙனேயன்றோ இருப்பது. இதுதான் அந்தரங்க ஸமாதான மென்பது. இப்படி நுட்பமாகத் தெரிந்து கொள்ள வேண்டும்படி எதுக்கு ச்லோகமியற்ற வேணும்? எல்லாரும் ஸுஸ்பஷ்ட மாகவே நன்கு தெரிந்து கொள்ளும்படி இயற்றலாகாதோ வென்று கேட்பவர்கள் யாவஜ்ஜீவம் அப்படியே கேட்டுக் கொண்டிருக்கலாம். அன்னவர்கள், முந்துற முன்னம் வெளியிட்ட பஹிரங்க ஸமாதாநத்தைக் கொண்டு த்ருப்திபெறுக.

192. யத்பதாம் போருஹேத்யாதியான மேற் குறித்த தனியனில் மற்றொரு விசேஷமும் நுட்பமாக உய்த்துணரத் தக்கதுண்டு; அதாவது–(பதாம்போருஹ) என்று ஐந்து எழுத்துக்களை யிட்டு ஆளவந்தார் திருவடிகளை நிர்தேசித்திருப்பதானது ஆளவந்தாருடைய ஐந்து திருவடிகள் (அதாவது, ஐந்து சிஷ்யர்கள்) தம்முடைய சிந்தனைக்கு இலக்கானவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டதாகிறது. அதுதன்னிலும் முதலிலே 'ப'காரத்தை யிட்டிருப்பதானது அந்த ஆசாரியர்கள் ஐவருள் தலைமையாசிரியரே தமக்குத் தலைவரான ஆசார்யராக வாய்த்தார் என்பதற்கு ஸூசகமாகிறது. எங்ஙனே யென்னில்; ஸ்வாமிக்குத் தலைமையாசிரியர் பெரிய நம்பி; அவருடைய நிஜநாமதேயம் பராங்குசதாஸர் என்பது. வாக்யகுருபரம்பரையில் "ஸ்ரீமதே ராமாநுஜாயநம:, ஸ்ரீமத் யாமுநமுநயே நம:" என்ற வாக்யங்களுக்கிடையில் 'ஸ்ரீபராங்குசதாஸாய நம:' என்றிருப்பது கொண்டும் பெரிய நம்பியினுடைய திருநாமம் பராங்குச தாஸரென்பதே யென்றறியலாம். 'பதாம்போருஹ' என்றதில் முதலிலுள்ள பகாரம் பராங்குச தாஸராகிற தம் முதலாசிரியரை ப்ரத்யபிஜ்ஞாபநம் பண்ணவல்லது என்றுணர்க. இதற்குமேல் ஒன்று கேட்கக் கூடும்; முதல் எழுத்தினால் பெரிய நம்பி ஸூசிதராகிறாரென்னில், மற்றை நான்கெழுத்துக்களினாலும் நான்கு ஆசார்யர்கள் ஸூசிதர்களாகிற படியையும் காட்ட வேண்டாவோ? என்று. கேண்மின்; தலைவரான ஆசிரியரைக் காட்டுமளவே போதுமானது. ஒவ்வோராசிரியரை யும் இங்ஙனே காட்டியாகவேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை. மஹாவிவேகிகளான சதுரர்கள் இன்னமும் உட்புகுந்து ஆராய்ந்து பார்த்தால் அந்த வழியும் புலப்படக் கூடும்.

193. ஸ்வாமி யெம்பெருமானார் க்ருஹஸ்தாச்ரமத்தை விட்டு ஸந்ந்யாஸாச்ரமம் பூண்டதற்குச் சில காரணங்கள் சரித்திர நூல்களில் கூறப்பட்டுள்ளன. (1) ஸ்வாமி தாம்

பெரியநம்பி திருவடிகளில் ஆச்ரயித்து அவரைப் பெருமாள் கோயிலென்கிற காஞ்சீபுரியிலே தம்முடைய திருமாளிகையிலேயே எழுந்தருளியிருக்கச் செய்து காலக்ஷேபம் செய்து வருகிறநாளிலே தம்முடைய தேவியார் நம்பிகளின் தேவியாரோடு மனம் மாறுபட்டிருந்ததாகவும், அஃதறிந்த நம்பிகள் ஸ்வாமியிடம் சொல்லிக் கொள்ளாமலே புறப்பட்டு எழுந்தருளி விட்டதாகவும் இதனால் ஸ்வாமிக்குத் தேவியாரிடத்திலுண்டான சீற்றமே முதற்காரணம். (2) ஸ்வாமி தாம் திருக்கச்சி நம்பிகளிடத்தில் பரமப்ரவண்யங் கொண்டு அவர் பக்கலிலே ப்ரஸாதப்ரதிபத்திக்கு ஆசைப்பட்டு அவரைத் தம் திருமாளிகையில் அமுதுசெய்ய அழைத்திருந்தபோது தேவியார் செய்த அபசரிதத்தினாலுண்டான சீற்றம் இரண்டாவது காரணம். (3) ஒருநாள் மிக்க பசியுடன் வந்திருந்தவொரு பாகவதர்க்கு ப்ரஸாதமிடும்படி ஸ்வாமி தேவியாருக்கு நியமித்தருள, உள்ளே ப்ரஸாதமிருந்தும் இல்லையென்று போய் சொல்லிப் போகவிட்டதனாலுண்டான சீற்றம் மூன்றாவது காரணம்.

194. இப்படிச் சில காரணங்களைக் கொண்டே ஸ்வாமி தேவியாரைப் பிறந்தகத்திற்குப் போகவிட்டருளி உத்தமாசிரமம் ஸ்வீகரித்தருளி னதாக ப்ரபாவ நூல்களில் வாசிக்கிறோம். இதைக் கண்டு இக்காலத்தவர்கள் சிலர் கூறுவது என்னவென்றால், ஸந்ந்யாஸாச்ரம ஸ்வீகாரத்திற்கு வைராக்யமன்றோ முக்கியமான காரணம்; குடும்பத்தில் மனஸ்தாபமேற்படுவது எங்குமுள்ளது. அதனால் ஸந்ந்யாஸாச்ரமத்தை ஸ்வீகரித்தாரென்பது யுக்தமாகுமோ? அந்தத் தேவியார் குணஹீநையா யிருந்தால் குணவதியான மற்றொரு தேவியைப் பாணிக்ரஹணம் செய்து கொண்டு இல்லற வாழ்க்கையை நடத்த வேண்டுமன்றோ. தேவியாருடைய குணங்கள் அனுகூலமாக இல்லை யென்பதற்காக விஷய வைராக்யம் உண்டாய் விடுமோ? மனைவி மக்களோடே சண்டையிட்டுத் தேசாந்தரம் போய்விடுவது போல், குடும்ப மநஸ்தாபத்தினால் ஸந்ந்யாஸியாய் விடுவது தகுதியோ? என்றிப்படிச் சிலர் கேள்வி கேட்க முற்படுகிறார்கள். இதற்கு த்ருப்திகரமான ஸமாதானத்தைத் தெரிவிக்கவல்லவர்கள் பெரியார்கள். நாம் நம்முடைய சிற்றறிவுக்கு எட்டியவளவு சிறிது தெரிவிக்கிறோமிங்கு. உத்தமாச்ரம ஸ்வீகாரத்திற்கு விஷய வைராக்யந்தான் முக்கியமான காரணமென்பது மறுக்க முடியாததே. “யதஹரேவ விரஜேத் ததஹரேவ ப்ரவ்ரஜேத்” என்கிற ப்ரமாண வசனத்தை ஆசாரியர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள். ஸ்வாமி எம்பெருமானார் தாமும் வைராக்யம் அடியாகவே ஆச்ரம ஸ்வீகாரம் செய்தருளினார். வைராக்யம் உண்டாவதற்குப் பல ஹேதுக்கள் உண்டு. அப்படிப்பட்ட ஹேதுக்களில் சிலவற்றைச் சரித்திர நூல்களில் காண்கிறோம். அந்த ஹேதுக்களினால் விரக்தி யுண்டாகி ஆச்ரம ஸ்வீகாரம் செய்து கொண்டார் என்றால் இதில் என்ன பிசகு?

195. ஸ்வாமியின் வைராக்யம் எப்படி பட்டதென்பதைப் பல ப்ரமாணங்கள் கொண்டு அறியலாம். “காமாதிதோஷஹரம் ஆத்ம பதாச்ரிதாதம் ராமாநுஜம் யதிபதிம்” என்கிறார் மணவாளமாமுனிகள். ஸ்வாமி தாம் விரக்தராயிருந்ததோடு தம் அடியார்களையும் பரமவிரக்தர்களாக்கி யருளினவர் என்றபடி. தேசிகன் யதிராஜ ஸப்ததியில் “வஹதி

மஹினாம் ஆத்யோ வேதாஸ் த்ரயீமுகரைர் முகை: வரதநுதயா வாமோ பாகச் சிவஸ்ய விவர்த்தே ததபி பரமம் தத்வம் கோபீஜநஸ்ய வசம்வதம் மதநகததநைர் ந க்லிச்யந்தே யதீச்வர ஸம்ச்ரயா:" என்கிறார். இதன் கருத்தாவது – நான்முகன் தன் தேவியைப் பிரிந்திருக்க மாட்டாமல் தனது நான்கு முகங்களினாலும் அவளைச் சுமந்து கொண்டிருக்கிறான். சிவனோவென்னில் தன்னுடலில் பாதி பாகத்தைப் பத்னீமயமாக ஆக்கி விட்டான். பரம்பொருளான ஸ்ரீமந் நாராயணனோ வென்னில் கோபிகளுக்கு அடிமைப்பட்டுக் காமமயனாயினன். எம்பெருமானார் திருவடிகளைப் பற்றின மஹான்களோ வென்னில் காமக்லேசங்களுக்குச் சிறிதும் ஆட்படமாட்டார்கள் என்பதாம். இங்ஙனே பல ப்ரமாணங்களினால் ஸ்வாமியின் வைராக்யாதிசம் நன்கு அறியப்படுகின்றது. இதற்கு மேல் சிலருடைய வாதம் என்ன வென்றால், வைராக்யமுண்டானாலும் ஆச்ரம ஸ்வீகாரம் செய்து கொள்ள வேணுமோ? "நிவ்ருத்தராகஸ்ய க்ருஹம் தபோவதம்" என்று ப்ரமாணமில்லையோ? கூரத்தாழ்வான் போல்வார் மஹா விரக்தர்களாயிருக்கச் செய்தேயும் க்ருஹஸ்தாச்ரமத்திலேயே ஊன்றியிருக்க வில்லையோ? அப்படியே ஸ்வாமி தாமும் இருந்துவிடலாகாதோ? எதற்காகத் துரீயாச்ரம ஸ்வீகாரம் செய்ய வேணும்? என்று கேட்கிறார்கள் சிலர். இதற்கு, நாம் என்ன விடையிறுப்பது?

196.சாஸ்த்ரங்களில் நான்கு ஆச்ரமங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சிலர் முதல் ஆச்ரமத்திலேயே (ப்ரஹமசர்யத்திலேயே) யாவஜ்ஜீவம் இருந்து விடுகிறார்கள். பலர் அதற்கு மேற்பட்ட ஆச்ரமத்தில் பிரவேசித்து 'நல்ல பதத்தால் மனைவாழ்வர் கொண்ட பெண்டிர் மக்களே' என்று ஆழ்வார் மங்களாசாஸனம் செய்தபடி வாழ்கின்றார்கள். காளிதாஸர் ரகுவம்சத்தில் "வார்த்தகே முநி வ்ருத்தீநாம்" என்று கூறியபடி வாநப்ரஸ்த ஆச்ரமத்திலே ஊன்றியிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் தேடிப் பிடிக்க வேண்டியிருப்பர்கள். இல்லற வாழ்க்கையில் பொருந்தமற்றவர்கள் "சிற்றெயிற்று முற்றல் மூங்கில் மூன்று தண்டரொன்றினர், அற்றபற்றர் சுற்றிவாழும் அந்தணீரரங்கமே" (திருச்சந்தவிருத்தம்) என்று திருமழிசைப் பிரான் மங்களாசாஸனம் செய்தருளின படியே துறவறம் பூண்டு உத்தமாச்ரமிகளாக வாழ்கின்றனர். 'வைராக்யம் உண்டானாலும் க்ருஹஸ்தாச்ரமத்திலேயே யிருந்துவிட கூடாதா? எதுக்கு ஸந்ந்யாஸாச்ரமம் ஸ்வீகரிக்க வேணும்!" என்கிற கேள்விக்கு நாம் என்ன விடையிறுப்பது?

197.நஞ்சீயரென்கிற மஹாசார்யர் பூர்வாச்ரமத்தில் மஹாதனிகராயிருந்தவர், மேல் நாட்டில் வாழ்ந்தவர். அவர் பட்டரால் திருத்திப் பணிகொள்ளப்பட்ட பின்பு சிலநாள் பொறுத்து ஸ்வஸ்தானத்தை விட்டுத் தென் திருவரங்கத்திலே பட்டர் திருவடிநிழலிலே வாழ விரும்பிப் புறப்படும் போது உத்தமாச்ரம ஸ்வீகாரம் செய்து கொண்டு புறப்பட்டார். ஸ்ரீரங்கம் வந்து கொண்டிருக்கிறார்.அப்போது வழியிடையில் சிறுப்புற்றூரில் எழுந்தருளியிருந்த அனந்தாழ்வான் அவரை நோக்கி "வேர்த்தபோது குளித்து விடாய்த்த போது புஜித்து பட்டர் திருவடிகளே சரணம் என்றிருந்தால் உம்மைத் திருநாட்டில் நின்றும் தள்ளி விடுவாருண்டோ? எதுக்கு இந்தக் கோலம் பூண்டீர்?" என்று கேட்டதாக வாசிக்கிறோம். இது ஆக்ஷேபித்துக் கேட்ட கேள்வியன்று. ரஸகனமான கேள்வி. பட்டர்

திருவடிகளில் கைங்கர்யம் செய்யப் பாரித்த விவர்க்கு இவ்வளவாக ஸம்ஸார வைராக்யம் உண்டாயிற்றேயென்று திருவுள்ளம் பூரித்து விநோதமாகக் கேட்ட கேள்வியிது. பலர் க்ருஹஸ்தாச்ரமத்திலேயே யிருப்பதும் சிலர் உத்தமாச்ரம ஸ்வீகாரம் செய்வதும் அவரவர்களுடைய ருசியைப் பொறுத்தத்தனை. இன்னாரின்னார்க்கு ஸந்ந்யாஸாச்ரம ப்ராப்தியுளதென்பதை சோதிடர்கள் ஜாதகம் பார்த்தே சொல்லிவிடுவதையும் நாம் காண்கிறோம். ஆகவே பகவத் ஸங்கல்பிதமான பலவகை ப்ராப்திகளுள் இதுவுமொன்று என்று தெரிய வருகிறது. ஸ்வாமி யெம்பெருமானார் தேவியாரிடத்தில் வெறுப்பினால் மாத்திரம் ஆச்ரம ஸ்வீகாரம் செய்து கொண்டவரல்லர்; விரக்தியின் கனத்தினாலேயே உத்தமாச்ரமியானார் என்பதைக் கூறி நிற்போமிப்போது.

198. ஆண்டாள் அருளிச் செய்த நாச்சியார் திருமொழியிலே 'விண்ணீல மேலாப்பு' என்கிற எட்டாவது பதிகத்தில் பரமபக்தர்களான மஹாசார்யர்களையே மேகமாக மறைத்துச் சொல்லுகிறாளென்று ஸ்வாபதேசார்த்தங் காணவேணும். ஒவ்வொரு பாட்டிலுமுள்ள மேக விசேஷணங்களை உற்று நோக்குமிடத்து ஆசார்ய சிகாமணியான எம்பெருமானாரே தூது விடப்படுகிறாரென்று அறிய வெளிதாம்; அந்த விவரணம் இப்போது ஆகின்றது.

199. முதற்பாட்டில் மேகத்திற்கும் விசேஷணம் 'மேலாப்பு விரித்தாற்போல்' என்றுள்ளது. மேலாப்பாவது விதானம்; மேற்கட்டி. இதினுடைய ஸாம்யம் மேகத்திற் சொல்லியிருப்பதானது ஸ்வாமி எம்பெருமா னாருடைய அவதார ரஹஸ்யத்தைத் தெரிவிப்பதாகும். எங்ஙனே யென்னில்; ஸ்வாமி ஆதிசேஷனுடைய அபராவதாரபூதர் என்பது ப்ரஸித்தம். விதானமாயிருக்குந் தன்மை ஆதிசேஷனுக்கு ப்ரஸித்தம். கண்ணபிரான் வடமதுரையில் திருவவதரித்தவுடனே திருவாய்ப்பாடியிற் சென்று சேர்வதற்காக வஸுதேவரால் வஹிக்கப்பட்டு மழையிலே எழுந்தருளுகை யில் மழைத்துளி மேலே விழாதபடி திருவனந்தாழ்வான் விதானமாக இருந்த வரலாற்றை நினைப்பது. ''தொடுத்து மேல் விதானமாய பௌவநீர் அராவணை'' என்று (திருச்சந்த விருத்தத்தில்) திருமழிசைப் பிரானருளிச் செய்துள்ள பாசுரமும் நினைக்கத் தக்கது. ஸுதர்சந சதகத்தில் (5)'' ச்யாமம் தாமப்ரஸ்ருத்யா'' என்னும் ச்லோகத்தில் ''வ்யாதந்வாநம் விதாநச்ரியம்....சக்ரபாநம்'' என்று திருவாழியாழ்வானுடைய ஜ்வாலையையும் விதானமாகச் சொல்லி யிருப்பதனால் இங்கு மேலாப்பென்கிற சொல்லால் திருவாழியாழ் வானை நினைத்து உபலக்ஷண வகையினால் பஞ்சாயுத ஆழ்வார்களையும் கொண்டு, இராமாநுச நூற்றந்தாதியில் 'அடையார் கமலத்து அலர்மகள் கேள்வன்' என்கிற பாசுரத்தின் படிக்கும் 'வவ்ருதே பஞ்சபிராயுதைர் முராரே:' என்ற யதிராஜஸப்ததி ச்லோகப் படிக்கும் எம்பெருமானார் பஞ்சாயுதாழ்வார் களின் திருவவதாரம் என்று வழங்குவதொரு ப்ரஸித்தியும் இங்கு ஸூசிதமாகிறதென்று கொள்ளலாம்.

200. இரண்டாம் பாட்டில் 'மாமுத்த நிதி சொரியும் மாமுகில்காள்' என்றுள்ளது. நிதிகளைச் சொரிகின்ற மேகங்களே! என்று விளித்தது ஸ்வாமி விஷயத்தில் மிகப் பொருத்தம். நவநிதிகளென்று ப்ரஸித்தமாதலால் நிதிகளின் எண்ணிக்கை ஒன்பதாகும்.

ஸ்வாமியருளிச்செய்த திவ்ய க்ரந்தங்களே இங்கு மாமுத்தநிதியாகச் சொல்லப் படுகின்றன. அந்த திவ்ய க்ரந்தங்கள் எண்ணிக்கையில் ஒன்பதாகவே அமைந்துள்ளன; 1.ஸ்ரீபாஷ்யம், 2. வேதாந்ததீபம். 3. வேதாந்தஸாரம், 4. கீதாபாஷ்யம், 5. வேதார்த்த ஸங்க்ரஹம், 6. சரணாகதி கத்யம், 7. ஸ்ரீரங்ககத்யம், 8. ஸ்ரீவைகுண்டகத்யம், 9. நித்யம். ஆக ஒன்பது. ஆகவே மாமுத்தநிதி சொரியும் மாமுகில் எம்பெருமானாரே யென்க.

201. மூன்றாம் பாட்டில் 'அளியத்த மேகங்காள்!' என்றுள்ளது. கருணை மிகுந்த மேகங்களே யென்றபடி. ஸ்வாமிக்கு முற்பட்டிருந்த பூர்வாசார்யர்கள் அநுவ்ருத்தி ப்ரஸந்நாசார்யர்க ளென்றும், ஸ்வாமியொருவரே க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்ய ரென்றும் சொல்லப்படுவர். இது ஸ்வாமிக்கு அஸாதாரணமாக உலகம் நிறைந்த புகழாகும். மணவாளமாமுனிகளும் உபதேசரத்தினமாலை யில் 'ஓராண் வழியாயுபதேசித்தார் முன்னோர், ஏரார் எதிராசரின்னருளால்–பாருலகில் ஆசை யுடையோர்க் கெல்லாம் ஆரியர்காள் கூறுமென்று, பேசி வரம்பறுத்தார் பின்' என்ற பாசுரத்தினால் இப்பெரும் புகழைப் பரவ விட்டருளினார். ஆக, அளியத்த மேகங்காள்! என்றது–பரமக்ருபையையே நிரூபகமாகக் கொண்ட எம்பெருமானாரே என்றபடியாயிற்று.

202. நான்காவது பாசுரத்தில் 'மின்னாகத் தெழுகின்ற மேகங்காள்!' என்றுள்ளது. ஆகத்து மின் எழுகின்ற மேகங்காள்–உடலிலே மின்னல் தோன்றப்பெற்ற மேகங்களே! என்றபடி. மின்னலானது மழைபெய்ய ஸித்தமா யிருக்கின்ற மேகத்திலே தோன்றுமேயல்லது சரத்கால மேகத்தில் தோன்றாது. இத்தால் மழைபெய்ய ஸித்தமாயிருக்கின்ற மேகமே! என்றதாயிற்று. ஸ்ரீஸூக்தியம்ருதவர்ஷங் களை எப்போதும் சிஷ்யவர்க்கங்களுக்கு அளித்துக் கொண்டிருக்கும் ஸ்வாமியே! என்றவாறு. அன்றிக்கே ஸ்வாமியின் திருமார்பிலே திகழ்கின்ற யஜ்ஞஸூத்ர மானது 'ஸௌதாமநீ ஸவர்ண ஸௌவர்ண யஜ்ஞஸூத்ரமும்'' என்கிறபடியே வித்யுத் ஸந்நிபமாய் விளங்குகின்றபடியால் அந்த வழகை யநுபவித்துச் சொன்னதாகவுங் கொள்ளலாம். இதர மதங்களிலே ஸந்ந்யாஸிகளாக வுள்ளவர்கள் சிகா யஜ்ஞோபவீதங்களை யறுத்தெறிந்து கிடப்பர்; ஸ்வாமி அப்படி யன்றிக்கே ''உபவீதிநமூர்த்வபுண்ட்ரவந்தம்'' ''தண்டத்ரயோஜ்ஜ்வலகரம் விமலோபவீதம்'' ''ஜயதி யதிபதேர்வக்ஷஸி ப்ரஹ்மஸூத்ரம்'' ''முப்புரிநூலொடு முன்கையிலேந்திய முக்கோல் தன்னழகும்'' என்று ஈடுபட்டுப் பேசும்படி யஜ்ஞஸூத்ர ஸநாதராய் ஸேவை ஸாதிக்குமழகு அவசியம் அநுபவிக்கத் தக்கதாதலால் இங்கு அதனைச் சொல்லிற் றென்று கொள்வது உசிதம். அன்றிக்கே, திருவரையில் காஷாயம் விளங்குமழகை நோக்கி ''மின் ஆகத் தெழுகின்ற'' என்றதாகவுங் கொள்ளலாம். ''காஷாயேண க்ருஹீதபீதவஸநா'' என்ற யதிராஜஸப்ததி ஸூக்தியை இங்கே ஸ்மரிப்பது. ஆக மூன்று வகைகள் விவரிக்கப்பட்டன இங்கு. இவற்றை விகல்பமாகக் கொள்ளாமல் ஸமுச்சயமாகவே கொள்ளலாம்.

203. ஐந்தாவது பாட்டில் ''வான் கொண்டு கிளர்ந்தெழுந்த மாமுகில்காள்!'' என்றுள்ளது. ஆகாசத்தைக் கபளீகரித்துக் கொண்டு கிளர்ந்தெழுந்த மேகங்களே என்றபடி. இங்கு ஆகாசமென்று பரமாகாசத்தைச் சொன்னபடியாகும். அதாவது பரமபதம். எம்பெருமானாருடைய திருவடி ஸம்பந்த மில்லாதவர்களுக்குப் பரமபதப்ராப்தியில்லை

யென்று ஸம்ப்ரதாயம். பங்குனி யுத்தரத் திருநாளில் ஸ்ரீரங்கநாச்சியாரும் ஸ்ரீரங்க நாதனுமான சேர்த்தியிலே கத்யமநுஸந்தித்து "அஸ்து தே, தயைவ ஸர்வம் ஸம்பத்ஸ்யதே" இத்யாதிகளான அநுக்ரஹ வாக்யங்களினால் தமக்கும் தம்மடியார்க்குமாகப் பரமபதத்தைப் பெற்றுக் கொண்டு கிளர்ந்தெழுந்த மேகம் எம்பெருமானாரே யாவர். அன்றிக்கே, "அர்வாஞ்சோ யத்பதஸரஸிஜத்வந்த்வமாச்ரித்ய, பூர்வே மூர்த்நா யஸ்யாந்வயமுபகதா தேசிகா முக்திமாபு: ஸோயம் ராமாநுஜமுநிரபி ஸ்வீயமுக்திம் கரஸ்தாம் யத்ஸம்பந்தாத் அமநுத கதம் வர்ணயதே கூரநாத:" என்கிற கூரத்தாழ்வானது தனியனில் அநுஸந்திக்கப் பட்டு வருகிற ஐதிஹ்யத்தின்படியே ஆழ்வானுடைய ஸம்பந்தத்தினால் தமக்கும் மோக்ஷமுள்ளதாக அறிந்து மகிழ்வெய்தின எம்பெருமானாரே! என்றதாகவும் கொள்ளலாம். இப்பொருளில், வான் கொண்டு–பரமபத ப்ராப்தியுள்ளதாக அறிந்து கொண்டு என்க.

204.ஆறாம்பாட்டில் 'சலங்கொண்டு கிளர்ந்தெழுந்த தண்முகில்காள்!' என்றுள்ளது. சலமாவது ஜலம்; தீர்த்தத்தை யெடுத்துக் கொண்டு கிளர்ந்தெழுந்த மேகமே! என்றதாயிற்று. மேகமானது ஜலத்தை முகந்து கொண்டு கிளர்ந்தெழுவது போல எம்பெருமானாரும் விந்த்யாடவியில் நின்றும் புண்யகோடி விமானச் சாயையிலே தம்மை ஓரிரவிலே கொண்டு சேர்த்த பெருந்தேவி மணவாளனான பேரருளாளனுக்குச் சாலக் கிணற்றின் நின்றும் தீர்த்தங்கொண்டு கிளர்ந்தெழுந்தமை வைபவ நூல்களில் விசதம். "தத்தம் யேந தயாஸுதாம்புநிதிநா பீத்வா விசுத்தம் பய: காலே ந: கரிசைல க்ருஷ்ணஜலத: காங்க்ஷாதிகம் வர்ஷதி" என்ற யதிராஜஸப்ததி ஸூக்தி இங்கே அநுஸந்தேயம். சிலேடையினால் மற்றொரு பொருளும் இங்கே விவக்ஷிதம். அதாவது வடமொழியில் ச$_2$லம் என்னும் சொல் தமிழில் சலமெனத் திரியும். சலமாவது கபடம்; அதைத் தெரிந்து கொண்டு கிளர்ந்தெழுந்த மேகம் எம்பெருமானார் யாதவப்ரகாசரிடத்தில் ஸ்வாமி வேதாந்த ச்ரவணம் பண்ணாநிற்கையில் வேதாந்தப் பொருள் விஷயமான வாதவிவாதங் கள் அடிக்கடி நேருவதுண்டு; அப்போது அஸூயை மிகுந்து யாதவர் ஸ்வாமியை மாய்க்கவெண்ணிக் கபட புத்தியுடன் கங்கா யாத்திரை புறப்பட்டார்; அந்த யாத்திரையில் ஸ்வாமியும் எம்பாரும் அந்வயித்திருந்தனர். விந்த்யாடவீப்ராந்தம் செல்லுகையில் இந்தச் சூழ்ச்சியை எம்பாரால் தெரிந்து கொண்டு ஸ்வாமி கிளர்ந்தெழுந்து திரும்பின வரலாறு ப்ரஸித்தம். அதுவும் இங்கு சொல்லப்படுவதாகக் கொள்க. சலம்–(யாதவப்ரகாசருடைய) சூழ்ச்சியை, கொண்டு – தெரிந்து கொண்டு, கிளர்ந்தெழுந்த மேகமே! என்றதாயிற்று.

205. ஏழாம்பாட்டில் 'சங்கமாகடல் கடைந்தான் தண்முகில்காள்!' என்றுள்ளது. சங்குகள் மிகுந்த பெரியகடலைக் கடைந்த எம்பெருமானுடைய ஸம்பந்தம் பெற்ற மேகமே! என்று பொருள். தமிழ்ச் சங்கத்திலே பெருமை பெற்றதாம்படி வேதக்கடலைக் கடைந்து அமுதமளித்தவரான நம்மாழ்வாருடைய திருவடி ஸம்பந்தம் பெற்ற மேகம் ஸ்வாமி எம்பெருமானார். பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பணித்த பாசுரமொன்று– 'மறைப்பாற்கடலைத் திருநாவின் மந்தரத்தால் கடைந்து, துறைப்பால் படுத்தித் தமிழாயிரத்தின் சுவையமிர்தம் கறைப்பாம்பணைப் பள்ளியானன்பரீட்டங் களித்தருந்த

நிறைப்பான் கழலன்றிச் சன்மவிடாய்க்கு நிழலில்லையே' என்பது நினைக்கத்தக்கது. பகவான் அமரர்கட்கு அமுதங் கொடுப்பதற்காகக் கடலைக் கடைந்தான்; நம்மாழ்வார் 'தொண்டர்க்கு அமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்' என்று தாமே பணித்தபடியே நிலத்தேவர்களான தொண்டர்கட்கு அமுதமளிக்கவேண்டி வேதக் கடலைக் கடைந்தவராயிற்று. அவருடைய ஸம்பந்தமே எம்பெருமானாராகிற மேகத்திற்கு நிரூபகம். "புகழ்மலிந்த பாமன்னுமாறனடிபணிந்துய்ந்தவன்–இராமாநுசன்" என்றார் திருவரங்கத்தது அமுதனார். "ஸ்ரீமாதவாங்க்ரி ஜலஜத்வய நித்ய ஸேவா ப்ரேமாவிலாசய பராங்குச பாதபக்தம்– ராமாநுஜம் யதிபதிம்" என்றார் மணவாளமாமுனிகளும். ஆக, சங்கமாகடல் கடைந்தவரான நம்மாழ்வாருடைய ஸம்பந்தம் பெற்ற ஸ்வாமிந்! என்றதாயிற்று. "பாஷ்யகாரர் இது கொண்டு ஸூத்ர வாக்யங்களொருங்கவிடுவர்" என்ற ஆசார்ய ஹ்ருதய ஸூக்தியும் இங்கே அநுஸந்தேயம்.

206. எட்டாம் பாட்டில் 'கார்காலத்து எழுகின்ற கார்முகில்காள்!' என்றுள்ளது. மழைக்காலத்தில் தோன்றுகின்ற காளமேகமே! என்றபடி. ஸ்ரீராமாநுஜமேகமும் இப்படிப்பட்டதே. 'அவிவேக கநாந்ததிங்முகே பஹுதா ஸந்தத துக்கவர்ஷிணி, பகவந் பவதுர்திநே' என்று ஆளவந்தாரருளிச் செய்தபடியே யாவரும் நிச்சலும் அனுபவிக்குமதான ஸாம்ஸாரிக துக்க வர்ஷா காலத்தில் அதைப் போக்குவதற்காக எழுந்த மேகம் ஸ்வாமி. அன்றிக்கே, 'தேவராஜ தயாஸிந்தோ! தேவதேவ ஜகத்பதே, த்வதீக்ஷண ஸுதா ஸிந்து வீசி விக்ஷேபசீகரை:, காருண்ய மாருதாநீதைச் சீதலைரபிஷிஞ்சமாம்' என்று திருக்கச்சி நம்பிகளும் 'ஹஸ்தீச! த்ருஷ்ட்யம்ருத வ்ருஷ்டிபிராபஜேதா:' என்று கூரத்தாழ்வானும் பணித்தபடியே ப்ரஸித்தமான பகவத் கடாக்ஷாம்ருத வர்ஷா காலத்திலே அதனைப் பெருகச் செய்வதற்காக எழுந்தது ஸ்வாமியாகிற மேகம் – என்னவுமாம்.

207. ஒன்பதாம் பாட்டில் 'மதயானை போலெழுந்த மாமுகில்காள்!' என்றுள்ளது. 'கரிய மாமுகிற்படலங்கள் கிடந்தவை முழங்கிடக் களிறென்று" (பெரிய திருமொழி 1–2–10) என்ற திருமங்கையாழ்வாரருளிச் செயலின் படியே யானைக்கும் மேகத்திற்கும் வாசி தெரிவரிதாதலால் மதயானை போலெழுந்த மேகமென்னத்தகும். ஸ்வாமியும் நூற்றந்தாதியில் "எங்களிராமாநுச முனிவேழம்" என்று யானையாகச் சொல்லப்பட்டுள்ளார். இங்கு விசேஷித்து அறியவேண்டியதுமொன்றுண்டு. ஸ்வாமி ஒருகால் திருமலைக்கெழுந்தருளி பக்தர்களின் வேண்டுகோளுக்கிணங்கி அங்கு த்வயார்த்தமுபந்யஸித்தருளத் தொடங்கி அத்தோடு திருமந்த்ரார்த்தத்தையும் சரம ச்லோகார்த்தத்தையும் சேர்த்து உபந்யஸித்துத் தலைக் கட்டினவாறே அந்த மஹாகோஷ்டியில் அனந்தாழ்வான் எழுந்து,

"பெருகுமதவேழம் மாப்பிடிக்கு முன்னின்று
இருக ணிளமூங்கில் வாங்கி – அருகிருந்த
தேன்கலந்து நீட்டும் திருவேங்கடங்கண்டீர்
வான்கலந்த வண்ணன் வரை." (இரண்டாந்திருவந்தாதி–75)

என்ற பூதத்தாழ்வார்பாசுரத்தை ஸ்வாமிவிஷயமாக நிர்வஹித்துப் பேசியருளினாரென்பதோர் இதிஹாஸம் உண்டு. அதனாலும் 'மதயானை போலெழுந்த மாமுகில்'

எம்பெருமானாரே யென்பது அறிய வெளிதாகும். ஆக இவ்வளவு பொருத்தங்களாலும் ஆண்டாள் தூதுவிட்ட மேகம் எம்பெருமானாரே யென்று திண்ணமாக எண்ணத்தகும்.

208. ஸ்ரீராமநுஜர்க்கு இந்தத் திருநாமம் எதனால் இடப்பட்டதென்று ஆராயுமளவில், முன்னோர்களுடைய நூல்களிலிருந்து இங்ஙனே அறியலாகிறது;– ஸ்ரீராமாநுஜன் என்னுஞ் சொல் ஸ்ரீராமபிரானுடைய தம்பி யென்னும் பொருள் கொண்டது. தசரதாத்மஜனான இராமபிரானுக்கு இளையோனாக அவதரித்த லக்ஷ்மணன் என்றபடி. அவன் இடைவீடின்றிக் கைங்கரியமே போது போக்காக இருந்தது போல ஸ்வாமி உடையவரும் கைங்கர்யத்தையே பெருஞ் செல்வமாகக் கொண்டிருக்கப்போகிறார் என்பதை அவதார ஸமயத்திலேயே யோகத்ருஷ்டியினாலறிந்தவரும் இவர் தமக்கு மாதுலருமான திருமலை நம்பியென்னுமாசிரியர் இவர்க்கு இராமாநுசனென்று நாமகரணஞ் செய்தருளினர்–என்பதாக.

209. ஸ்ரீராமபிரான் கைகேயின் வரப்ரார்த்தனையை நிறைவேற்றும் வியாஜமாகக் கானகஞ் செல்லப் புறப்படும் போது இளையோனான இலக்குமணன் தானும் நிர்ப்பந்தித்துத் தன்னையும் உடனழைத்துச் செல்லும்படி வேண்டினன். தானும் காட்டுக்கு வர விரும்பியது எதற்காகவென்னில்; 'பவாம்ஸது ஸஹ வைதேஹ்யா கிரி ஸாநுஷுரம்ஸ்யதே, அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதஸ் ஸ்வபதச் ச தே' என்பது அப்போது இவ்விளையபெருமாளு டைய வார்த்தையாக ஸ்ரீ ராமாயணத்தில் உலகறிய நிற்கும் ச்லோகம். "தேவரீர் பிராட்டியோடு கூட சித்திரகூடத்தாழ்வாரை முதலானவிடங்களில் இன்புறும்போது அடியேன் ஒழிவில் காலமெல்லாம் உடனாய்மன்னி வழுவிலாவடிமைகள் செய்யப் போகிறேன்" என்பது மேலே குறித்த ச்லோகத்தின் கருத்து. அப்படியே அவ்விளையோன் தன்னுடைய வாழ்நாள் முழுவதையும் அடிமையெனும் அத்தாணிச் சேவகஞ் செய்தே கழித்தனன். அதுபோலவே ஸ்வாமி உடையவரும் தம் வாழ்நாள் முழுவதையும் தொண்டு பூண்டமுதமுண்டே கழித்தருளினரென்பது அவரது திவ்விய சரிதையினால் மிகப் பிரசித்திபெற்ற விஷயம். தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்தி வைத்ததும் மாறனுரை செய்த தமிழ்மறை வளர்த்ததும் முதலானவை ஒப்புயர்வற்ற கைங்கரியங்களன்றோ. ஆக இக்காரணம் பற்றியே ஸ்வாமிக்கு ராமாநுஜனென்னுந் திருநாமமிடப்பட்டதென்று மிகப் பொருத்தம். லக்ஷ்மண முநி யென்றும் இளையாழ்வா ரென்றும் வழங்குகின்ற இவரது திருநாமங்களும் இதனை வற்புறுத்தி நிற்கும்.

210. இனி, ராமாநுஜனென்ற திருநாமம் லக்ஷ்மணனுக்குப் போலவே கண்ணபிரானுக்கும் பொருந்தியதே. 'பலராமனுடைய தம்பி' என்னும் காரணத்தினால் கண்ணபிரானை ராமாநுஜன் என்னக் குறையில்லையன்றோ. ஆனது பற்றியே முகுந்தமாலை யென்னும் உலகமறிந்த ஸ்தோத்திரத்தில் "ஹேகோபாலக" எனும் ச்லோகத்தில் "ஹே ராமாநுஜ"னென்ற திருநாமத்தினாலேயே கண்ணபிரான் அழைக்கப்பட்டுள்ளான். ஆகவே கண்ண பிரானுடையதான அந்தத் திருநாமமே ஸ்வாமி உடையவர்க்குச் சாத்தப்பட்டதென்று கொள்ளுகிற ஸம்பிரதாயமும் ஒன்றுண்டு. ஸ்ரீநிகமாந்த தேசிகன் பணித்த யதிராஜ ஸப்ததியில் "சமிதோதய சங்கராதிகர்வ:

ஸ்வபலாத் உத்த்ருத யாதவப்ரகாச:, அவரோபிதவாந் ச்ருதோபார்த்தாந் நநு ராமாவரஜஸ் ஸ ஏஷ பூய:'' என்ற ச்லோகம் இதற்கு ஆதாரமாக அவதரித்ததாகும்.

211. கண்ணபிரானுக்கும் உடையவர்க்கும் பல படிகளாலும் ஸாம்யமுண்டு. கண்ண பிரானாகத் தோன்றின பகவான் செய்த செயல்களும் ஸ்ரீராமாநுஜர் செய்தருளின செயல்களும் ஒத்திருக்கையாகிற ஒற்றுமை நயம் ஈண்டு நிரூபிக்கப்படுகிறது. மேலே யெடுத்துக் காட்டிய 'சமிதோதய சங்கராதிகர்வ:' இத்யாதியான யதிராஜஸப்ததி ச்லோகரத்னத்தில் கண்ணனுக்கும் உடையவர்க்கும் ஸாம்யம் ச்லேடையினால் நிர்வஹிக்கப்பட்டுள்ளது: அது வடமொழிக்கடலில் ஆழ்ந்தவர்கட்கே ரஸிக்கக்கூடியது. இங்கு நாம் நிரூபிக்கும் ஒற்றுமை சரித்திரப் போக்கில் ஸம்பந்தப் பட்டதாகும். கேண்மின்; கண்ணபிரான் திருவவதாரஞ் செய்த இடம் சிறைக்கூடம் என்பது உலகமறிந்தது. ஸ்ரீராமாநுஜர் அவதரித்த இடமும் சிறைக்கூடமே. எப்படியெனில்; 'அமரரோடு உயர்விற் சென்று அறுவர் தம் பிறவி யஞ்சிறையே' (திருவாய்மொழி 1–3–11) என்ற நம்மாழ்வார் திருவாக்கின்படி இந்த ஸம்ஸார மண்டலமே ஒரு சிறைக் கூடமன்றோ. இஃது 'இருள்தருமா ஞாலம் ஆதலால் இருள் மலிந்த விடத்தே வந்து பிறந்தார் ஆசாரியர், கண்ணனும் 'இருள் நாள் பிறந்த வம்மான்' என்ற திருமங்கையாழ்வார் பாசுரத்தின்படியும் 'வேண்டித் தேவரிரக்க வீங்கிருள்வாய் வந்து பிறந்ததும்' என்ற நம்மாழ்வார் பாசுரத்தின்படியும் இருள்மலிந்த போழ்தன்றோ பிறந்தது.

212. கண்ணபிரான் அவதரித்தபோது 'ஜாதோஸி தேவதேவேச! சங்கசக்ரகதாதர!' என்றபடியே சங்கொடு சக்கரமேந்தும் தடக்கையனாகவே சுடர்விளக்கத்தோடு திருவவதரித்தான். ஆசாரியர் அவதரிக்கும் போதும் நம் போலியரைப் போலே அழுதல் அரற்றுதல் செய்யாதே மிக்க ஞான வெள்ள சுடர் விளக்கத்தையே காட்டிக் கொண்டு அனைவரும் வியப்புறுமாறு அவதரித்தார். கண்ணபிரான் பிறந்தவிடம் ஒன்று; இளமையில் வளர்ந்தவிடம் வேறொன்று; பிறகு வளர்ந்தவிடம் மற்றொன்று. (அதாவது) வடமதுரையிலே பிறந்தது; திருவாய்ப்பாடியிலே இளமையில் வளர்ந்தது; பிறகு முதுமையில் த்வாரகை முதலான விடங்களில் வளர்ந்தது. ஆசாரியரும் பிறந்தது ஸ்ரீபெரும்பூதூரில் இளமையில் வளர்ந்தது காஞ்சீபுரியில்: பிறகு வளர்ந்தது ஸ்ரீரங்கம், திருநாராயணபுரம் முதலான விடங்களில் (மற்றொரு வகையுமுண்டு;) ''திருமந்திரத்திலே பிறந்து த்வயத்திலே வளர்ந்து'' என்கிற நம் முன்னோர்களின் முதுமொழியின்படியே திருவஷ்டாக்ஷர மஹா மந்திரத்தினால் ஸ்வரூபவுணர்ச்சி பெறுதலாகிற பிறவியைப் பெற்று, த்வயம் என்கிற மந்த்ரத்தின் அநுஸந்தானத்தையும் அதன்படி அனுட்டானத்தையுமே செவ்வாழ்ச்சியாகக் கொண்டிருப்பவரென்க பிறக்குமிடம் திருமந்த்ரம்; வளருமிடம் த்வயம்–ஆகையாலே இதனால் கண்ணனோடு ஒப்புமை.

213. கண்ணபிரான் பிறந்த வயிற்றில் இவனொருவன் மட்டுமே பிறக்கவில்லை: 'மக்களறுவரைக் கல்லிடை மோத இழந்தவள் தன் வயிற்றில், சிக்கன வந்து பிறந்து நின்றாய்' (பெரியாழ்வார் திருமொழி 5–3–1) என்கிறபடியே மற்றும் பல மக்கள் பிறந்தாருண்டு; ஆனால் அந்தப் பிள்ளைகளினால் உலகுக்கு யாதோருதவியும்

நேர்ந்ததில்லை; அவர்கள் பிறந்ததும் இறந்ததுமே தெரியவருகின்றது. இதுபோல, ஆசாரியர் திருவவதரித்த இவ்வுலகத்தில் மற்றும் பலபேர்களும் ஒக்கப் பிறக்கின்றார்களெனினும் அவர்களால் உலகுக்கொரு நன்மையுமில்லையாயிற்று. அவர்களின் பிறப்பும் இறப்புமே தான் உலகுக்குத் தெரியும்.

214.கண்ணபிரான் வடமதுரையில் நின்றும் திருவாய்ப்பாடிக்கு எழுந்தருளும்போது "வஸுதேவோ வஹந் க்ருஷ்ணம் ஜாநுமாத்ரோதகோ யயௌ" என்னும்படி பேராழமான பெருவெள்ளமும் முழந்தாளளவாக வற்றிப் போயிற்றென்று தெரியவருகிறது. அதுபோல, ஆசாரியர் சிறிது ஸஞ்சரிக்கத் தொடங்கும் போதே "பிறவியென்னுங் கடலும் வற்றிப் பெரும்பதமாகின்றதால்" என்ற பெரியாழ்வார் திருவாக்கின்படியே ஸம்ஸார மாகிற பெருங்கடலும் வற்றத் தொடங்குமென்க.

215.பராத்பரனான பெருமான் தனது பெருமைகளை யெல்லாம் மறைத்து அடக்கிக் கொண்டு நீறுபூத்த நெருப்புப் போலேயாகி இடக்கை வலக்கை யறியாத ஆயர்களோடே கலந்து பழகினான்: அதுபோல ஆசாரியரும் மிகுஞானச் சிறு குழவியாய்த் தமது ஞான சக்திப் பெருமைகளையெல்லாம் மறைத்துக் கொண்டு அறிவிலா மனிசரோடே கலந்து பழகியிருந்தனர். கண்ணன் இடையர்களோடு மாத்திரம் கலந்து பழகியிருந்தானல்லன்; தன்னை வதைக்க வழிபார்த்திருந்த ஆஸுரப்ரக்ருதிகளோடும் கலந்திருந்து காலங் கழித்தனன். ஆசாரியரும் தம்மை மாய்க்க எண்ணின யாதவ ப்ரகாசர் போல்வாரிடத்திலும் கலந்திருந்து காலங்கழித்ததுண்டே.

216. வளர்ந்தருளுமிடத்தில் தீயபுந்திக் கஞ்சனால் ஏவப்பட்ட பூதனை, தாய்வேஷம் பூண்டுவந்து நஞ்சு தீற்றிய முலையை உண்ணக் கொடுத்துக் கண்ணனைக் கொல்ல முயன்று தானே முடிந்து போனாள். இந்தப் பூதனையின் வரலாற்றைப் பேசுகின்ற தேசிகர் யாதவாப்யுதயத் தில் 'கம்ஸப்ரயுக்தா கில காபி மாயா' என்று மாயையென்கிற சொல்லால் கூறினர். மாயை யென்று மூலப்ரக்ருதிக்குப் பெயர். அது உண்மையில் விஷம் போன்றதாயிருக்கச் செய்தேயும் தன்னிடத்தில் போக்யதா புத்தியை யுண்டுபண்ணிக் கொண்டு தன் பக்கலிலே யீடுபடுத்தி நம்போல்வாரை முடிக்கப் பார்க்கிறது. இப்படியே ஆசாரியரையும் முடிக்கப் பார்க்கை யில் அவரை முடிக்கமாட்டாமல் அவரது அளவற்ற பெருமையினால் தானே முடிந்து நிற்கிறது.

217. 'கள்ளச் சகடங் கலக்கழியக் காலோச்சி' (திருப்பாவை–6) என்றபடி அஸுராவேசம் பெற்றவொரு சகடத்தைக் கண்ணன் திருவடி ஸ்பர்சத்தால் நொறுக்கி முறித்து முடித்தனன் என்பது ப்ரஸித்தம். ஆசாரியரும் தமது திருவடி ஸ்பர்சத்தினால் சகடபங்கஞ் செய்தவரே. (எப்படியென்னில்) ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டு போகும் ஸாதனம் சகடமெனப்படுவது. இங்கிருந்து நாம் அப்பால் செல்லப் பல வழிகளுண்டு; நரகம் சுவர்க்கம் முதலானவற் றின் வழிகளிற் கொண்டு செல்லுவது கள்ளச் சகடமாகும்; ஆசாரியருடைய திருவடி ஸம்பந்தத் தினால் அது தொலைந் தொழிந்ததேயாம் அர்ச்சிராதி மார்க்கமாகிய நல்வழியிற் செல்லும் ஸாதனமே மேம்பட்டுத் தீயவழிகளிற் செல்லும் ஸாதனம் சிதைந்தொழியுமென்க.

218. கயிற்றினால் கட்டி ஒருரலிலே பிணித்துவிடப் பெற்ற கண்ணன் அவ்வுரலையுமிழுத்துக் கொண்டு தவழ்ந்து இரட்டை மருத மரங்களின் நடுவே யெழுந்தருளியபொழுது அவ்வுரல் குறுக்காய் நின்று இழுக்கப்பட்டபடியினாலே அந்த இரட்டை மரங்களிரண்டும் முறிந்து விழுந்தனவாக யமளார்ஜுனபங்க விருந்தாந்தமுள்ளது. இணைபிரியாதே நின்ற இரட்டை மருத மரங்கள் போல இணைபிரியாது நின்று நம்மை நலியுமவை பலவுண்டு. பகவத் கீதையில் நான்காவது அத்யாயத்தில் 'த்வந்த்வாதீதோ விமத்ஸரா:' என்றும், ஏழாவது அத்தியாயத்தில் "த்வந்த்வமோஹேந பாரத" என்றும், பதினைந்தாமத்யாயத்தில் "த்வந்த்வைர் விமுக்தாஸ் ஸுக து:க்கஸம்ஜ்ஞை:" என்றும் இப்படி பலவிடங்களில் த்வந்துவம் (இரட்டை) என்று பல சொல்லப்பட்டுள்ளன; இன்பு துன்பு, அஹங்கார மமகாரம், காமக்ரோதம், புண்ணிய பாபம்..... என்னு மிவையெல்லாம் இரட்டைகளாம். இவையெல்லாம் ஆசாரியர் திருவடி ஸம்பந்தம் பெற்றவளவிலே இற்றொழிந்தனவென்க.

219. 'வையமேழுங் கண்டாள் பிள்ளை வாயுளே' என்றும் 'வாயுள் வையகங் கண்ட மட நல்லார்' என்றும் சொல்லுகிறபடியே கண்ண பிரான் தனது திருவாயில் ஏழுலகங்களையும் அன்பர்களுக்குக் காட்டினன். அதுபோல ஆசாரியரும் 1.ச்ருதிகள், 2.ஸ்மிருதிகள், 3. இதிஹாஸங்கள், 4. புராணங்கள், 5. பாஞ்சராத்ரங்கள், 6. ஆழ்வாரருளிச் செயல்கள், 7. ஆசார்ய திவ்யஸூக்திகள் ஆகிய ஏழையும் தமது திருவாக்கில் அன்பர்கட்குக் காட்டினர்.

220. யமுனையாற்றில் ஓர் மடுவில் இருந்து கொண்டு அம்மடு முழுவதையும் தன் விஷாக்னியினால் கொதிப்படைந்த நீருள்ளதாக்கிப் பெருங்கேடு விளைத்த காளிய னென்னும் கொடிய நாகத்தைக் கண்ணபிரான் கொழுப்படக்கினன். இவ்வரலாற்றை யாதவாப்யுதய காவியத்தில் தேசிகர் கூறுமிடத்து (4–125) ஸ்ரீராமானுஜர் செய்தருளின செயலையே உவமையாகக் காட்டியருளினர். ஐந்தலைவாய் நாகமாகிய காளியன் யமுனையாற்றைக் கலக்கிக் கெடுத்தது–விஷவாக்குக்களான புறமதத்தவர்கள் மனம் போனபடியெல்லாம் கூறும் தவறான பொருள்களாலே வேதங்களைக் கெடுத்தபடியாம். அந்தக் கெடுதியைக் கண்ணபிரான் நீக்கி யமுனையை எல்லாரும் இனிமையாகப் பருகும்படி செய்தது –ஆசாரியர் தவறான பொருள்களை நீக்கி நல்ல பொருள்களை வெளியிட்டு வேதத்தை ஸத்துகளுக்கு உபஜீவ்யமாக ஆக்கினபடியாம். யமுனையின் ஸ்தானத்தில் வேதம்; காளியன் ஸ்தானத்தில் குதர்க்கவாதிகள்; கண்ணன் ஸ்தானத்தில் ஆசாரியர். 'தூயபெரு நீர் யமுனைத் துறைவனை' என்னும்படி யமுனை ஆறு இடையறாத பகவத் ஸம்பந்தத்தை யுடையதாயிருந்தது போல வேதமும் பகவத் ஸம்பந்தத்தை நியதமாக வுடைத்தாயிருக்கும். காளியன் ஐந்து தலைகளாலும் நஞ்சை யுமிழ்ந்து நாசம் விளைவித்தது போல புறமதத்தவர்கள், ஐந்து விதமான துர்வாதங்களாலே நாசத்தை விளைவிக்கின்றனர்; (எப்படி யென்னில்) 1. ஈச்வரனேயில்லையென்னுதல், 2. ஈச்வரன் உண்டெனினும் அவன் அனுமானத்தால் ஸித்திப்பவனேயன்றி சாஸ்த்ரத்தால் ஸித்திப்பவ னல்லன் என்னுதல் 3. சாஸ்த்ரங்களைக் கொண்டே ஈச்வரனை யங்கீகரித்துக் அவனுக்குக் குணங்களும் விக்ரஹமும் இல்லையென்னுதல். 4. ஈச்வரன் ஒருவனே யென்பதில்லை.

பல ஈச்வரர்கள் உண்டு என்னுதல், 5. பிரபஞ்சமேயில்லை–ஸர்வம் சூன்யம் எனல். ஆக இப்படிப்பட்ட ஐவகையான அபார்த்தங்களினால் புறமதத்தவர்கள் வேதங்களைக் கெடுக்க, அந்தக் கெடுதல்களை ஆசாரியர் போக்கியருளினர். காளியன் தலையிலே கண்ணபிரான் அடியிட்டு நடனம் புரிந்தாப் போலவே 'நாவலிட்டுழி தருகின்றோம் நமன் தமர் தலைகண்மீதே' (திருமாலை–1) என்ற கணக்கிலே கூத்தாடப் பெறுதலுங்காண்க.

221. குதிரை வடிவங்கொண்டு மஹா பயங்கரனாகவந்த கேசியென்னுமஸுரனைக் கண்ணபிரான் தொலைத்தருளினன்; அதுபோல நம் பேராசிரியர் 'இந்த்ரியாணி ஹயாநாஹு:' என்ற உபநிஷத்தின்படியே குதிரைகளாகச் சொல்லப்பட்ட இந்த்ரியங்களின் வலியையடக்கி ஜிதேந்த்ரியராய் 'காமாதிதோஷ ஹரமாத்ம பதாச்ரிதாநாம்' என்றும் 'மதநகதநைர் நக்லிச்யந்தே யதீச்வரஸம்ச்ரயா:' என்றும் சொல்லும்படி வாழ்ந்தவர்.

222.கம்ஸனால் ஏவப்பட்ட அசுரர்களில் ஓரசுரன் விளாமரத்தின் வடிவமாய், தன் கீழே கண்ணன் வரும்போது மேல்விழுந்து கொல்வதாக எண்ணிவந்து நிற்கவும், மற்றோரசுரன் கண்ணனை முட்டிக் கொல்லும் பொருட்டு கன்றின் வடிவம் கொண்டு நிற்கவும் இவற்றையறிந்த கண்ணபிரான் 'விளவின்காய் கன்றினால் வீழ்த்தவனே'' ''கன்று கொண்டு விளங்கனி யெறிந்து'' என்கிறபடியே கன்றைச் சுழற்றி விளவின் மீதெறிந்து இரண்டையும் ஒருசேர முடித்தருளினன் என்ற வரலாறு முள்ளைக் கொண்டே முள்ளைக் களைகின்ற படியைக் காட்டுகின்றது. இதுபோலவே ஸ்வாமி ஸ்ரீபாஷ்யகாரர் புறமதங்களைக் கண்டிக்கு மிடத்து அவை பரஸ்பரவ்யாஹதங்களாயிருக்கும் படியை நன்கு நிரூபித்துக் காட்டி அவைகளைக் கொண்டே அவற்றை மறுத்தொழிப்பவர்.

223. இடையர்கள் வழக்கப்படி இந்திரனுக் குப் பூஜை செய்யப் பற்பல வண்டிகளில் சோறும், தயிரும், நெய்யும், காய்கறிகளும் சேகரிப்பதைக் கண்டு கண்ணன் அப்பூசனையனைத்தையும் கோவர்த்தனமலைக்கே இடும்படி கட்டளை யிட்டுத் தானே ஒரு தேவதா ரூபங்கொண்டு அவற்றை முற்றும் அமுது செய்தருள, இந்திரன் பசிக் கோபத்தினால் மேகங்களை ஏவிக் கடூரமான கல்மழையை ஏழு நாள் பெய்விக்க, அதனால் யார்க்கும் யாதொரு தீங்கும் நேரிடாதபடி கண்ணன் அம்மலையையே குடையாக வெடுத்துப் பிடித்து நின்றனன் என்பது ப்ரஸித்தமான கதை. தேவதாந்தரத்திற்கு வழிபாடு செய்வதைப் பொறாத தன்மையும் அந்த வழிபாடுகளையெல்லாம் தானே யேற்றுக் கொள்ளுந்தன்மையும், அதனால் எதிரி என்ன தீங்கு செய்ய நினைத்தாலும் அதற்குப் பிரதியாகத் தீங்கிழைக்க நினையாத பெருந்தகவும், தன்னையடுத்தவர்களைத் தான் ரக்ஷித்துக்கொண்டு நிற்றலுமாகிய விஷயங்கள் இவ்விதிஹாஸத்தில் கிடைக்கின்றன. 'மறந்தும் புறந்தொழாமாந்தர்' என்றிருக்குமாசிரியர் தேவதாந்தரபஜனத்தைச் சிறிதும் ஸஹியார். ''திருவில்லாத்தேவரைத் தேறேல்மின் தேவு'' என்று துணிந்து உபதேசிப்பர். 'ஸாக்ஷாந் நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும், மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாத் சாஸ்த்ரபாணிநா' என்றும் 'பீதகவாடைப் பிரானார் பிரமகுருவாகிவந்து' என்றுஞ் சொல்லுகிறபடியே எம்பெருமானே ஆசாரியனாக வந்து பிறந்ததனால் ஆராதனைகளெல்லாம் ஆசார்யனுக்கே சேரும். ''குற்றஞ் செய்தவர்கள் பக்கல்

பொறையும் க்ருபையும் சிரிப்பும் உகப்பும் உபகாரஸ்ம்ருதியும் நடக்க வேணும்'' (ஸ்ரீவசனபூஷணம் 365) என்றிருப்பவர் ஆசார்யராகையாலே தீங்கிழைப்பார் திறத்திலும் பிரதியாகத் தீங்கிழைக்க நினையார். பெருமழையில் நின்றும் கண்ணன் காத்தருளினது போல 'அவிவேக கநாந்த தீங்முகே பஹுதா ஸிந்தத து:க்கவர்ஷிணீ பவதுர்த்திநே' (ஸ்தோத்ராத்நம்–49) என்னப்பட்ட பெருமழையில் நின்றும் (அதாவது, ஸம்ஸாரத் துயர்ப் பெருமழையினின்றும்) காத்தருளினர். கண்ணன் ஏழுநாள் காத்தனன். ஆசாரியர் காப்பது ஏழேழ் பிறவிக்கும்.

224.கண்ணன் நப்பின்னைப் பிராட்டியை மணஞ்செய்து கொள்ளுதற்காக, அவளது தந்தை கந்யாசுல்கமாகக் குறித்தபடி அஸுராவேசம் பெற்ற ஏழு எருதுகளை வலியடக்கி அப்பிராட்டியை மணஞ் செய்து கொண்டனன். நம் பராமாசார்யர் ''எட்டிழையாய் மூன்று சரடாயிருப்பதொரு மங்கள ஸூத்ரம் போலே திருமந்த்ரம்'' (முமுக்ஷுப்படி 113) என்கிறபடியே திருமந்த்ரமாகிற திருமாங்கலியத்தை சேதநர்களுக்குக் கட்டி விவாஹம் நடத்துகைக்கு அங்கமாக, காமம், குரோதம், லோபம், மோஹம், மதம் மாத்ஸர்யம் அஸூயை என்கிற ஏழு விரோதிகளையும் தொலைத்தருளினர்.

225.கண்ணன் இரண்டு மல்லர்களை மடித்தது போல ஆசிரியர் 'நீர்நுமதென்றிவை வேர்முதல் மாய்த்து' என்கிறபடியே அஹங்கார மமகாரங்களை யடியறுத்தவர்.

226. கண்ணன் குவலயா பீடமென்கிற மதயானையை முடித்தாப்போலே ''மதக்களிறைந்தினையும் சேரி திரியாமல் செந்நிறீஇ'' என்கிற பொய்கையார் பாசுரத்தின்படியே மதக்களிறாகிய இந்திரியத்தின் துஷ்டத்தன்மையைத் தொலைத்தவர்.

227.கண்ணன் மாலாகாரர் திருமாளிகைக் கெழுந்தருளி அவர் தந்த பூவைப் பெற்று உகந்தது போல நம் ஆசிரியர் 'அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம் புஷ்பமிந்த்ரிய நிக்ரஹ:, ஸர்வபூததயா புஷ்பம் க்ஷமாபுஷ்பம் விசேஷத: ஜ்ஞாநம் புஷ்பம் தப:புஷ்பம் த்யாநம் புஷ்பம் ததைவச, ஸத்யமஷ்டவிதம் புஷ்பம் விஷ்ணோ: ப்ரீதிகரம் பவேத்' என்னப்பட்ட எண்பகர் பூவையும் சிஷ்யர்கள் பக்கலிலே செழித்து வளரக் காணப் பெற்றுக் களித்தமையறிக.

228. கண்ணபிரான் கம்ஸ சிசுபால கௌரவ ப்ரப்ருதிகளை முடித்துப் பஞ்ச பாண்டவாதிகளை வாழ்வித்தது போல நம் பரமாசார்யர் 'தற்கச் சமணரும் சாக்கியப் பேய்களும் தாழ்சடையோன் சொற்கற்ற சோம்பரும் சூனியவாதரும் நான்மறைமை நிற்கக் குறும்பு செய்நீசரும் மாண்டனர்' என்னும்படியாக நாட்டிய நீசச் சமயங்களை மாள்வித்து அர்த்த பஞ்சகம் முதலிய விசேஷார்த்தங்களை எங்கும் விளங்கச் செய்தனர். இங்ஙனே மற்றும் பலவுங் காண்க.

229. ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த யதிராஜஸப்ததியில் முதல் ஒன்பது ச்லோகங்கள் குருபரம்பராநுபவத்தில் சென்றன. 1. பெரிய பெருமாள், 2. பெரிய பிராட்டியார், 3. ஸேனை முதலியார், 4. நம்மாழ்வார், 5. ஸ்ரீமந்நாதமுனிகள், 6. உய்யக் கொண்டார், 7. மணக்கால் நம்பி, 8. ஆளவந்தார், 9. பெரிய நம்பி. ஆக இப்படி குருபரம்பராநுபவஞ் செய்து தலைக் கட்டியபின் 'ப்ரணாமம் லக்ஷ்மணமுநி:' என்கிற ச்லோகம் முதலாக எம்பெருமானாருடைய குணாநுபவத்திலே இறங்கியுள்ளார். மேற்குறித்த

ஆரம்ப ச்லோகத்தில் லக்ஷ்மணமுநி: என்று ஸ்வாமியின் திருநாமத்தை வ்யபதேசித்தபடியினால், ஸ்வாமிக்கு அமைந்த ராமாநுஜர் என்னுந் திருநாமம் தசரதாத்மஜனான ஸ்ரீராமனுடைய தம்பியாகிய இளைய பெருமாளைக் குறிக் கொண்டதாமென்று விளக்கப்பட்டதாயிற்று. ராமாநுஜனென்கிற திருநாமம் "செம்பொற் கழலடிச் செல்வாபலதேவா!" என்னப்பட்ட நம்பிமூத்தபிரானென்னும் பலராமனுடைய தம்பியான கண்ணனையும் சொல்லக்கடவ தென்பது முகுந்த மாலையில் 'ஹேராமாநுஜ ஹே ஜகத்ரய குரோ ஹேபுண்டரீகாக்ஷ' என்கிற ஸுப்ரஸித்தமான ச்லோகத்தினால் அனைவரும் அறிந்ததேயாம். ஆகவே ஸ்வாமிக்கு அமைந்த ராமாநுஜரென்னுந் திருநாமம் கண்ணபிரானைக் குறிக் கொண்டதாகவும் கொள்வதற்கு இடமிருப்பதால் கண்ணபிரானுக்கும் ஸ்ரீராமாநுஜர்க்குமுள்ள ஒற்றுமையை வேதாந்த தேசிகன் யதிராஜ ஸப்ததியில் சப்தச்லேஷ வகையினால் நிரூபித்தருளின ஸாம்யம் ஈண்டு விவரிக்கப்படுகிறது. அந்த ச்லோகம் வருமாறு:–

சமிதோதய சங்கராதி கர்வ: ஸ்வபலாத் உத்த்ருதயாதவப்ரகாச:,

ஆவரோபிதவாந் ச்ருதேரபார்த்தாந் நநு ராமாவரஜஸ் ஸ ஏஷ பூய:

230. இந்த ச்லோகத்தில் மூன்று வகைகளி னால் கண்ணபிரானுக்கும் எம்பெருமானார்க்கும் ஸாம்யம் வடமொழி வல்லுநர்க்கு மிகவும் ரஸிக்கக் கூடிய ச்லேஷாலங்கார மரியாதையினால் (சிலேடையணியில்) அருளிச் செய்யப்பட்டுள்ளது. பல பொருள்படச் சொல்லுவது ச்லேஷம் (சிலேடை) எனப்படும். அது அபங்கச்லேஷமென்றும் ஸபங்கச்லேஷ மென்றும் இருவகைப்படும். பதங்களை யொடித்துப் பொருள் கொள்ள வேண்டாமல் நாநார்த்த பதங்களையிட்டுப் பல பொருள்களைப் பெறுவிப்பதானது அபங்க ச்லேஷமெனப்படும். அப்படியல்லாமல் பதங்களை யொடித்துப் பல பொருள் கொள்ளுமாறு பிரயோகஞ் செய்வதானது ஸபங்கச்லேஷ மெனப்படும். இப்போது நாமெடுத்துக் கொண்டு 'சமிதோதய' என்னும் யதிராஜ ஸப்ததிச்லோக ரத்நத்தில் முதலிரண்டு பாதங்களில் அபங்கச்லேஷம்; மூன்றாவது பாதத்தில் மாத்திரம் ஸபங்கச்லேஷம். இனி ச்லோகத்தின் கருத்து விவரிக்கப்படுகிறது;

231. சமிதோதய சங்கராதி கர்வ: – இது கண்ணனுக்கும் உடையவர்க்கும் பொதுவான விசேஷணம். சங்கரன் முதலானாருடைய செருக்கையடக்கினவர் என்பது பொருள். கண்ணபிரான் பரமாகப் பொருள் கொள்ளும் போது சங்கரன் என்பதற்குச் சிவபிரானென்று அர்த்தம். ஆதி பதத்தினால் அப்பிரானைச் சேர்ந்த கார்த்திகையான் கரிமுகத்தான் முதலானாரை (ஸுப்ரஹ்மண்ய விநாயகாதி களை)க் கொள்வது. கண்ணபிரான் பாணாஸுர யுத்தத்தில் சங்கரன் முதலானாருடைய செருக்கையடக்கினது இதிஹாஸ புராண ப்ரஸித்தம். உடையவர் 'சங்கர பாக்கர யாதவபாட்ட ப்ரபாகரர் தங்கள் மதஞ் சாய்வுற' என்றும் 'கா சங்கா சங்கராதே' என்றும் சொல்லுகிறபடியே சங்கரகுருப்ரப்ருதிகளான புறமதத்தவர்களின் செருக்கைப் போக்கினவர் என்பது சரித்ரப்ரஸித்தம். ஆகவே இந்த விசேஷணம் கண்ணனுக்கும் உடையவர்க்கும் ஸாம்யத்தை நிரூபித்ததாயிற்று.

எம்பெருமானார் சங்கராதி கர்வசமநம் பண்ணினது ஸ்ரீ பாஷ்யாதிக்ரந்த ரசனையினாலும் அத்வைதிப்ரப்ருதிகளை வாதப் போரில் வென்று ஆட்படுத்திக் கொண்டதனாலும் என்றுணர்க. இவ்விஷயம் மேலே மூன்றாவது பாதத்தின் விவரணத்தினாலும் விளங்கும்.

232. ஸ்வபலாத் உத்த்ருதயாதவப்ரகாச:– கண்ணபிரான் பரமான அர்த்தத்தில்– யாதவர்களின் பிரகாசம் யயாதி சாபத்தினால் மங்கிக் கிடக்கையில், "கோபாலோ யாதவம் வம்சம் மக்நமப்யுத்தரிஷ்யதி" என்கிறபடியே அந்த ப்ரகாசத்தைத் தனது வலிமையினால் புநருத்தாரம் செய்தவன் என்று கொள்ளக் கடவது. யதுகுலத்திலே பிறந்து யாதவர்களை விளக்கமுறச் செய்தருளினவன் கண்ணபிரான் என்க. உடையவர்பரமான அர்த்தத்தில் 'யாதவப்ரகாச' என்று முழுச்சொல்லாகக் கொண்டு, அப்பெயர் பூண்ட மாயாவாதி குருவைத் தம்முடைய க்ருபாபலத்தினால் உத்தரிப்பித்தவர் என்று கொள்க. முதலில் தமக்கு உபாத்யாயராயிருந்த யாதவ ப்ரகாசரையும் தமக்கு அடிமைப்படுத்திக் கொள்ளும்படியான ப்ரபாவமுடையவர் எம்பெருமானார் என்க. இவ்வரலாறு உடையவர் சரிதையில் விரிவாகக் காணத்தக்கது.

233. அவரோபிதவாந் ச்ருதே: அபார்த்தாந்– 'அபார்த்தாந் ச்ருதே: அவரோபிதவாந்' என்று அந்வயம். இதில் ஸபங்கச்லேஷமுள்ளது. அபார்த்தாந் என்னும் பதம். (அ–பார்த்தாந்) என்றும் (அப–அர்த்தாந்) என்றும் பிரியும். பார்த்தனென்று அர்ஜுநனைச் சொல்லி, பார்த்தனல்லாத (அர்ஜுந விரோதிக ளான) துர்யோதநாதிகளை அபார்த்தர்களென்று சொல்லுவதாகக் கண்ணன் பரமான அர்த்தத்தில் கொள்ள வேண்டும். ச்ருதி யென்று கீர்த்திக்கும் பெயர், வேதத்திற்கும் பெயர், கண்ணபிரான் அபார்த்தர்களான துர்யோதநாதிகளைக் கீர்த்தியிலிருந்து கீழேயிறக்கி விட்டான்; பாண்டவ பக்ஷபாதியாயிருந்து 'மலைபுரைதோள் மன்னவரும் மாரதரும் மற்றும் பலர் குலைய நூற்றுவரும் பட்டழியச் செய்து அவர்களைக் கீர்த்தியிழந்தவர்களாகச் செய்தானென்றபடி. ஸ்வாமி ராமாநுஜரோவென்னில்; (ச்ருதே: அபார்த்தாந் அவரோபிதவாந்) இதர மதஸ்தர்கள் வேதங்களுக்குச் செய்த அபார்த்தங்களை ஸமீசீநார்த்த ப்ரதர்சநத்தினால் நிரஸித்தருளினவர்; ஆனது பற்றியே 'சமிதோதய சங்கராதி கர்வாராக முதல் பாதத்தில் கூறப்பட்டாரென்று உணர்க.

234."அவரோபிதவாந் ச்ருதேரபார்த்தாந்" என்கிற மூன்றாவது பாதத்தினால் ஸ்ரீராமாநுஜர் வேதத்திற்குப் பிறர் கூறின அபார்த்தங்களைத் தள்ளி உண்மைப் பொருள்களையுரைத் தருளினதாகத் தெரிவிக்கப்படுகிறது. எந்த ச்ருதி வாக்யத்திற்கு எவ்விதமாகப் பிறர் ஏலாத பொருளைக் கூறினர்? அங்கு எம்பெருமானார் எவ்விதமான அர்த்தங் கூறியருளினார்? ஈண்டு ஒரு விஷயத்தை யெடுத்துக் கொண்டு விவரிக்கின்றோம்:–

235. உபநிஷத்துக்களில் சில வாக்கியங்களில் ஒரு தத்துவமே உள்ளதாகவும் பல தத்துவங்கள் இல்லையென்பதாகவும் பேசப்பட்டுள்ளது. 'நேஹ நாநாஸ்தி கிஞ்சந' என்பது ஒரு ச்ருதி வாக்யம். 'ந இஹ நாநா அஸ்தி கிஞ்சந' என்று பதம் பிரியும். இஹ நாநா கிஞ்சந நாஸ்தி இவ்வுலகில் பலவென்று சொல்லக் கூடியது எதுவுமில்லை என்பது இந்த ச்ருதி வாக்கியத்தின் பொருள். 'ஏகமேவ அத்விதீயம்' என்கிற மற்றொரு ச்ருதி வாக்யமும்

மேற்கூறிய பொருளை (அதாவது, பல தத்துவங்கள் கிடையாது, ஒரே தத்துவந்தான் உள்ளது என்னும் பொருளை)த் திடப்படுத்தி யுள்ளது. இப்படி பல வாக்கியங்கள் உபநிஷத்துக்களில் உள்ளன வென்று வைத்துக் கொள்வோம்.

236. அந்த உபநிஷத்துக்களிலேயே மற்றுஞ் சிலவிடங்களில் பல தத்துவங்கள் உள்ளன வென்று காட்டுகின்ற வாக்கியங்களையும் காணாநின்றோம்; அப்படிப்பட்ட வாக்கியங்கள் சிலவற்றை ஈண்டெடுத்துக் காட்டுவோம்:–

(1)'க்ஷரம் ப்ரதாநம் அம்ருதாக்ஷரம்ஹர: க்ஷராத்மாநௌ ஈசதே தேவ ஏக:' இதுவொரு ச்ருதி வாக்கியம். இதனால், அசேதநப் பொருளும் சேதநப் பொருளும் இவ்விரண்டுக்கும் இறைவனானவொரு பகவானும் ஆக மூன்று தத்துவங்களுள்ளனவாகச் சொல்லப்படுகிறது.

(2)'ஜ்ஞாஜ்ஞௌ த்வாவஜா வீச நீசௌ'– இதுவும் ஒரு ச்ருதி வாக்கியம். இதனாலும், ஒரே தத்வமல்ல, வெவ்வேறுபட்ட தத்துவங்களுண்டு என்பது காட்டப்படுகிறது.

(3)'த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே தயோரந்ய: பிப்பலம் ஸ்வாது அத்தி அநச்நந்நயோ அபிசாகசீதி.' – இதுவும் அப்படிப்பட்ட ச்ருதி வாக்கியம். இரண்டு பக்ஷிகள் ஒன்றோடொன்று இணங்கிக் கொண்டு ஒரு விருக்ஷத்தில் (அசேதநமான சரீரத்தில்) அணைந்து கிடக்கின்றனவென்றும், அவ்விரண்டு பறவைகளுள் ஒரு பறவையானது (ஜீவாத்மா) புண்ய பாப ரூபகரும பலன்களை இனிதாக உண்டு களிக்கின்றதென்றும், மற்றொரு பறவையானது (பரமாத்மா) ஒன்றுமுண்ணாமல் மிக விளங்குகின்றதென்றும் இந்த ச்ருதி வாக்கியத்தினால் கூறப்படுகின்றது. இதனால் சேதந அசேதந ஈச்வரர்களாகிற மூன்று தத்துவங்களுள்ளன வென்பது தெளிவாக விளங்கிற்று. இப்படிப்பட்ட ச்ருதி வாக்யங்களும் உபநிஷத்துக்களில் பலவுள்ளனவென்று வைத்துக் கொள்வோம்.

237. பல தத்துவங்கள் கிடையாது. ஒரே தத்துவந்தானுள்ளதென்று கூறுவதாக முதலில் எடுத்துக்காட்டப்பட்ட ச்ருதி வாக்கியங்களானவை அபேதச்ருதி என வழங்கப் பெறும். அத்வைத ச்ருதி யென்பதும் மறுபெயர். பிறகு, பல தத்துவங் களுள்ளனவென்று கூறுவதாக எடுத்துக் காட்டப்பட்ட ச்ருதி வாக்கியங்களானவை பேத ச்ருதி அல்லது த்வைத ச்ருதியென்று வழங்கப் பெறும். இவை ஒன்றோடொன்று முரண்படுகிற வார்த்தைகளாக இருக்கின்றன. 'பல தத்துவங்கள் கிடையா, ஒன்றே தான்' என்று ஓரிடத்திற் சொல்லுவதும் பல தத்துவங்கள் உண்டென்று பிறிதோரிடத்தில் விவரித்துக் காட்டிக் கூறுவதும் பரஸ்பரம் முரண்பட்டதே யன்றோ. ஒன்று தான் தத்துவம் என்று சொல்லி விட்டால் பல தத்துவங்களுள்ளனவாகச் சொல்வது கூடாது; பல தத்துவங்கள் உண்டென்றால் ஒன்றே தத்துவமென்பது பொருந்தாது; ஆகவே முரண்பாடு மூதலிக்கப்பட்டதாயிற்று.

238. "வேத நூல் ஓதுகின்றதுண்மையல்ல தில்லை மற்றுரைக்கிலே" என்ற திருமழிசை யாழ்வார் திருவாக்கின்படி யதார்த்தமே யுரைக்கவல்ல உபநிஷத்துக்கள் பரஸ்பர விருத்தமாகவோ அஸங்கதமாகவோ சொல்ல மாட்டாவாதலால் மேலே யெடுத்துக் காட்டின ச்ருதி வாக்கியங்களை முரண்பாடு சிறிதுமின்றியே ஸங்கதமாகப் பொருந்த

விடுகிற வழி என்ன? என்பது ஆராயப்பட வேண்டும். ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள், ஒரு தத்வமே யுள்ளதென்று ஓதுகின்ற அத்வைத ச்ருதிகளாக நாம் மேலே எடுத்துக் காட்டிய அபேத ச்ருதிகளை முக்கியமாகக் கொண்டு ஒன்றே தான் தத்துவமென்று நிர்வஹித்தார்கள், பல தத்துவங்களுண்டென்றோதுகின்ற த்வைத ச்ருதிகளாக நாம் மேலே யெடுத்துக் காட்டிய பேத ச்ருதிகளை ஒருவாறு ஔபசாரிகமாக நிர்வகிக்கலாமென்றும் அவர்கள் கருதினார்கள். சேதனப் பொருள்களும் அசேதனப் பொருள்களுமுள்ளனவாகத் தோற்றுவது மாயையின் தோற்றமேயாதலால் அப்படிப்பட்ட தோற்றத்தை நோக்காகக் கொண்டு பேதச்ருதிகள் அவதரித்ததாக நிர்வஹித்துவிடலாமென்பது இவ்வத்வைதிகளின் கருத்து. ஆகவே த்வைதச்ருதிகளைத் தள்ளி அத்வைதச்ருதிகளையே முக்கியமாகக் கொண்டபடியால் இவர்கள் அத்வைதிகளென்று வழங்கப் படுகிறார்கள். பேதம் மாயைத் தோற்றம் என்கிறார்களாதலால் மாயாவாதிகளென்றும் வழங்கப்படுகிறார்கள்.

239. ஸ்ரீமத் ஆனந்த தீர்த்த ஸ்வாமிகள் த்வைத ச்ருதிகளான பேதச்ருதிகளை முக்கியமாகக் கொண்டு அத்வைத ச்ருதிகளை ஔபசாரியாக நிர்வஹிக்கலாமென்று கருதுகின்றாகளாதலால் அவர்கள் (மத்வாசார்ய ஸம்பிரதாயஸ்தர்கள்) த்வைதிகள் என வழங்கப்படுகின்றார்கள்.

240. ஆக மேற்கூறிய (அத்வைதம் த்வைதம் என்கிற) இரண்டு ஸம்பிரதாயங்களிலும் ஒரு வகையான உபநிஷத் வாக்கியங்கள் ஒதுக்கப்பட்டு ஒருவகையான உபநிஷத் வாக்கியங்கள் ஒதுக்கப்பட்டு ஒருவகையான உபநிஷத் வாக்யங்களே முக்கியமாகக் கொள்ளப்படுகின்றன வென்பது தேறுகின்றது. சித்து அசித்து ஈச்வரன் என மூன்று தத்துவங்கள் ஸத்தியமாகவுள்ளன வென்கிற அர்த்தம் ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகட்கும் அவரைச் சார்ந்தவர்கட்கும் உடன்பாடன்று. ஒரே தத்துவந்தானுள்ளது என்கிற அர்த்தம் ஸ்ரீமத்வாசார்ய ஸ்வாமிகட்கும் அவரைச் சார்ந்தவர்கட்கும் உடன்பாடன்று.

241. அத்வைதிகள் சில ச்ருதி வாக்கியங்க ளைத் தள்ளவும், த்வைதிகள் சில ச்ருதிவாக்யங் களைத் தள்ளவும் நேர்ந்திருக்கின்றதென்பதை இதுவரையில் விவரித்தோமானாம். இனி, ஒரு ச்ருதி வாக்கியத்தையும் தள்ளாமல் உபநிஷத் வாக்கியங்களெல்லா வற்றையுமே ஸமரஸப்படுத்தி ஒன்றையுமொதுக்காமல் மிகவும் பொருத்தமாகவே நிர்வஹித்தருளினவர்கள் நம் பூருவாசாரியர்கள்; அவர்களில் தலைவர் பகவத் ராமாநுஜர். ஒரே தத்துவந்தானுள்ளது என்று தெரிவிக்கிற ச்ருதி வாக்யங்களையும், பல தத்துவங்களுண்டென்று தெரிவிக்கிற ச்ருதி வாக்யங்களையும் எப்படி பொருந்தவிட முடியுமென்னில்; நம் பேராசிரியர் எப்படி பொருந்த விட்டிருக்கிறாரென்பது இனி உபபாதிக்கப்படுகிறது.

242. உலகத்தில் ஒரு வஸ்துவைப் பலவென்றும் ஒன்றே என்றும், சொல்வதற்குப் பொருத்தமுண்டு. உதாஹரணமாக ஒரு கடியாரத்தை யெடுத்துக் கொள்வோம்; அஃது ஒன்றாபலவா? என்று கேட்டால், கையில் ஒரு கடியாரமே உள்ளதாகையால் ஒன்றே என்று சொல்லுவோம். ஆனால் அதை நாம் ஊன்றிப் பார்க்குங்கால் அதில் பலபல வஸ்துக்கள் அவயவங்களாக (உறுப்புகளாக)ச் சேர்ந்திருப்பது புலப்படாமற் போகாது. பல

அவயவங்களோடு கூடிய அவயவியான வஸ்து ஒன்றே என்று ஏற்படுமேயல்லது ஒரு வஸ்துவுக்கு மேல் வேறொரு வஸ்துவே இதில் கிடையாதென்று சொல்வதாக ஒரு காலும் ஏற்படாது. இப்படி கடியாரமென்கிற ஒரு வஸ்துவேயல்ல; உலகிற்காணும் எந்த வஸ்துவையெடுத்துக் கொண்டு பார்த்தாலும் இப்படி ஒருவிதத்தில் ஐக்கியமும் மற்றொரு விதத்தில் அநேகத்வமும் தோன்றியே தீரும். படுக்கை, தலையணை, வண்டி, வீடு முதலிய ஒவ்வொரு வஸ்துவும் ஸ்தூல த்ருஷ்டியில் ஒரே வஸ்துவாகவும், உறுப்புக்களை உற்றுக் காணுமிடத்துப் பல வஸ்துக்களாகவும் கொள்ளப்படுவது அநுபலஸித்தம்.

243. நம்மையே யெடுத்துக் கொள்வோம் 'ராமாநுஜனென்பவன் ஒருவன்' என்று சொல்லுகிறோம். செவி வாய் கண் மூக்கு முதலான பல உறுப்புகளோடு கூடின ஆத்மாவாகிய அந்த வ்யக்தி ஒருவன் என்று சொன்னதாகத் தேறுமேயல்லது அவனிடத்தில் பல வஸ்துக்கள் இல்லை என்று சொன்னதாகத் தேறமாட்டாதன்றோ. இன்னமுமொன்று பாருங்கள். 'ராமாநுஜன் சிவப்பாயிருக்கிறான்' என்றும், 'ராமாநுஜன் மேதாவியாயிருக்கிறான்' என்றும் வழங்கி வருகிறோம். இவ்விரண்டு வார்த்தைகளிலும் 'ராமாநுஜன்' என்கிற சொல் உள்ளது. சிவப்பாயிருக்கிறானென்னும் போது அந்தச் சொல் சரீரத்தை நோக்கியது. மேதாவியாயிருக்கிறானென்னும் போது அந்தச் சொல் ஆத்மாவை நோக்கியது. ஏன்? சிவப்பு நிறம் சரீரத்திற்கு ஏற்குமேயல்லது ஆத்மாவுக்கு ஏலாது. மேதாவித்வம் (அதாவது அறிவுடைமை) ஆத்மாவுக்கு ஏற்குமேயல்லது சரீரத்திற்கு ஏலாது. ஆகவே ஒரே பதம் சில மையங்களில் ஆத்மாவைக் குறிப்பதாயும் சில ஸமயங்களில் உறுப்பைக் குறிப்பதாயும் தேறுகின்ற தென்பது தெற்றென விளங்கிற்று.

244. இனி, நாம் முன்னே காட்டிய பேத ச்ருதிகளையும் அபேத ச்ருதிகளையுமெடுத்துக் கொள்வோம். சித்து அசித்து ஈச்வரனென மூன்று தத்துவங்களுள்ளனவாகச் சொல்கிறது. ச்ருதி வாக்கியங்கள் (பேதச்ருதிகளானவை), உண்மையாக அப்படிப்பட்ட மூன்று பொருள்கள் இருப்பதைச் சொல்லுகின்றனவாதலால் பொருந்தும். ஒன்றேயுள்ளது என்று சொல்லுகிற ச்ருதி வாக்யங்கள் (அபேத ச்ருதிளானவை), சேதந அசேதநப் பொருள்களை சரீரமாகக் கொண்ட பரம் பொருள் ஒன்றே. என்கிற உண்மையைக் காட்டுகின்றனவாதலால் இவையும் பொருந்தும். இப்படி ஸமந்வயப் படுத்திக் காட்டுவதற்குத் துணைபுரியும் ச்ருதி வாக்யங்கள் "யஸ்ய ப்ருதிவீ சரீரம்....... யஸ்ய ஆத்மா சரீரம்" இத்யாதியாகவுள்ளவைகளாம். இவை சரீர சரீரிபாவத்தை விளக்கவல்ல வாக்யங்களாகும். பேதத்தையும் அபேதத்தையும் பொருந்த விடுகிற வாக்யங்களாதலால் கடக ச்ருதியென்று வழங்கப் பெறுமிவை. இப்படிப்பட்ட ச்ருதி வாக்யங்களில் த்வைதிகளும் அத்வைதிகளும் கண் செலுத்தாமையினாலேயே அவர்கள் ஸகல ச்ருதி வாக்யங்களையும் ஸமரஸப்படுத்த அவகாசமில்லை யாயிற்று. நம்முடைய ஸம்பிரதாயத்திற்கு இந்த யுகாதியில் ப்ரதமப்ரவர்த்தகரான நம்மாழ்வார் தமது திருவாய்மொழியில் "உடன்மிசையுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்" என்கிற அருமருந்தன்ன ஸ்ரீஸூக்தியினால் சரீராத்ம பாவத்தை நிதியாகக் காட்டி, யருளினபடியால் ஸ்ரீமந்நாதமுனிகள் ஆளவந்தார் எம்பெருமானார் முதலான நம் ஆசார்ய சிகாமணிகள்

அந்த திவ்ய ஸ்ரீஸூக்தியையே பின் பற்றி ஸகல ச்ருதி வாக்யங்களையும் ஸமரஸமாக நிர்வகிக்க வல்லவர்களாயினர். அப்படிப்பட்ட ஆசார்யர்களில் தலைவரான ஸ்வாமி ராமாநுஜரைப் பற்றி "அவரோபிதவாந் ச்ருதேரபார்த்தாந்" என்று கூறியது மிக பொருத்தமானதென்று உணரத்தக்கது.

245. இவ்வர்த்தங்களையெல்லாம் ஸாரமாகவும் சுருக்கமாகவும் நெஞ்சிற் பதிய வைத்துக் கொள்ள ஸ்ரீ வேதாந்த தேசிகர் தாமே ஸங்கல்பஸூர்யோதயத்தில் அருளிச் செய்த ச்லோக ரத்னமொன்றுண்டு; அதைக் கண்ட பாடம் செய்வது நலமென்று கருதிக் கீழே குறிப்பிடுகிறோம்.

"மிதோ பேதம் தத்வேஷ்வபிலபதி பேதச்ருதிரதோ
விசிஷ்டைக்யாத் ஐக்யச்ருதிரபி ச ஸார்த்தா பவதி,
இமாவர்த்தௌ கோப்தும் நிகிலஜகதந்தர்யமயிதா
நிரீசோ லக்ஷ்மீச: ச்ருதிபிரபராபி: ப்ரணிததே."

246. நம்முடைய ஸித்தாந்தத்திற்கு சரீராத்மபாவமே உயிரானதென்றும், அதைத் திடமாகத் தெரிந்து கொள்ளப்பெறில் எந்த மதாந்தரஸ்தர்களையும் எளிதில் வென்று விடலாமென்று ஸ்ரீதேசிகர் தாமே ஸ்ரீமத்ரஹஸ்த்ரய ஸாரத்தில் ஒரு ச்லோகரத்ந மருளியுள்ளார்; அதுவும் கண்ட பாடஞ் செய்து கொள்ளத் தக்கதென்று கீழே குறிப்பிடலாகிறது.

யத்யேதம் யதிஸார்வபௌமகதிதம் வித்யாதவித்யாதம:
ப்ரத்யூஷம் ப்ரதிதந்த்ரமந்திமயுகே கச்சித் விபச்சித்தம:
தத்ரைகத்ர ஜடித்யுபைதி விலயம் தத்தந்மதஸ்தாபநா
ஹேவாகப்ரதமாந ஹைதுக்ககதாகல்லோல கோலாஹல:

247. மணவாளமாமுனிகளுக்கு யதிவரபுநரவதார பூதரென்னும் ப்ரஸித்தி தொன்று தொட்டு விளங்கி வருகின்றது. எம்பெருமானாரே மீண்டும் மணவாள மாமுனிகளாகத் திருவவதரித் தருளினர் என்றபடி. இதற்குரிய உபபத்திகள் பலவுண்டு. அதை முன்னம் ச்லோக ரூபேண விஜ்ஞாபித்துப் பிறகு வியாக்கியானமிட்டு விளக்குகின்றேன்.

வ்யாக்க்யாநக்ரந்த தாநாத் பரிவதநகதாகந்தவைதேசிகவாத்
நாநாசாஸ்த்ரார்த்தப்ருந்தப்ரசுரபணிதிபி: ப்ராஜ்ஞஹ்ருரஞ்ஜகத்வாத்
பூர்வாசார்யோக்திராகாத் சடரிபுமுநிராட்ஸூக்திஸம்வர்த்தகத்வாத்
பீடாதீசப்ரதிஷ்டாபநக்ருதிகரணாத் திவ்யதேசாபிமாநாத்
பணிராஜாவதாரத்வாத் ஸ்ரீரங்க ஸ்ரீவிவர்த்தநாத்
யதீந்த்ரப்ரவணஸ் ஸாக்ஷாத் யதீந்த்ரோ பாஷ்யக்ருத் த்ருவம்

இதற்கு ஸம்க்ஷேபமான வியாக்கியானம் காண்மின்.

248. வ்யாக்க்யாநக்ரந்த தாநாத் = பெரும்பாலும் வியாக்கியானங்களருளிச் செய்வதிலேயே ஊக்கம் எம்பெருமானார்க்கும் மாமுனிகளுக்குமொக்கும். ஸ்ரீபாஷ்யம் வேதாந்த தீபஸாரங்கள், கீதாபாஷ்யம் என்னுமிவை வியாக்கியான க்ரந்தங்களேயன்றோ. மாமுனிகளின் வியாக்கியான க்ரந்தங்களும் ப்ரஸித்தங்கள். வேதார்த்த ஸங்க்ரஹம்

கத்யத்ரயம் – என்று சில மூலக்ரந்தங்களும் ஸ்வாமி ஸாதித்தது போலே மாமுனிகளும் யதிராஜ விம்சதி உபதேசரத்தினமாலை முதலிய மூலக்ரந்தகளும் அருளிச் செய்ததும் ப்ரஸித்தம்.

249.பரிவதநகதாகந்தவைதேசிகத்வாத் = பரிவதநமாவது பரீவாதம்; நிந்தையென்றபடி. அஸ்தாநே நிந்தாபரிஹாஸங்களை நிரப்பி நூல்களெழுதுவாரு முளரே; அங்ஙனம் நிந்தையையோ பரிஹாஸத்தையோ அணுவளவும் புகவிடாமல் பரமபவித்திர ஸ்ரீஸூக்திகளையருளுந் தன்மை ஸ்வாமிக்கும் மாமுனிகளுக்குமே யொக்கும்.

250. நாநா சாஸ்த்ரார்த்தப்ருந்தப்ரசுர பணிதிபி: ப்ராஜ்ஞஹ்ருத் ரஞ்ஜகத்வாத் = தொட்ட தொட்டவிடமெங்கும் பலபல சாஸ்த்ரார்த்தத் திரள்களே மலிந்த ஸ்ரீஸூக்திக ளினாலே பண்டிதர்களின் உள்ளத்தை உகப்பிக்குந் தன்மை ஸ்வாமிக்கும் மாமுனிகளுக்குமே யொக்கும்.

251.பூர்வாசார்யோக்திராகாத் = எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யம் தொடங்கும் போதே "பகவத் போதாயநக்ருதாம் விஸ்தீர்ணாம் பூர்வாசார்யாஸ் ஸஞ்சிக்ஷிபு; தந்மதாநுஸாரேண ஸூத்ராக்ஷராணி வ்யக்க்யாஸ்யந்தே" என்றருளிச் செய்து பூர்வாசார்ய ஸூக்திகளில் தமக்குள்ள அபிநிவேசாதிசயத்தை விளங்கக் காட்டியருளினார். மாமுனிகளும் 'முன்னோர் மொழிந்த முறை தப்பாமல் கேட்டு', 'முன்னவராம் நங்குரவர் மொழிகள் உள்ளப் பெற்றோம், முழுதும் நமக்கவை பொழுது போக்காகப் பெற்றோம்' இத்யாதிகளாலே தமக்குள்ள பூர்வாசார்யஸூக்தி பஹுமானத்தைக் கட்டியருளினதோடு நில்லாமல். தம்முடைய வியாக்கியான க்ரந்தங்களைப் பூர்வாசார்ய ஸூக்திமயமாகவே அவதரிப்பித்தருளினார்.

252. சடரிபுமுநிராட்ஸூக்தி ஸம்வர்த்தகத்வாத் = ஸ்வாமியின் வாழி திருநாமத்திலே 'மாறனுரை செய்த தமிழ் மறை வளர்த்தோன் வாழியே' என்று ஓதா நின்றோம். 'ஆய்ந்த பெருஞ்சீரார் சடகோபன் செந்தமிழ் வேதந்தரிக்கும் பேராதவுள்ளம் பெற – ஏய்ந்த பெருங் கீர்த்தி யிராமானுச முனிதன் வாய்ந்த மலர்ப்பாதம் வணங்குகின்றேன்' என்று அக்காலத்து சிஷ்யவர்க்கங்கள் பணிக்கக் காணா நின்றோம். இதுபற்றி மாமுனிகள் திறத்திலே சொல்ல வேணுமோ? 'சேற்றுக் கமல வயல் சூழரங்கர் தம்சீர் தழைப்பப் போற்றித் தொழு நல்லவந்தணர்வாழ விப்பூதலத்தே, மாற்றற்ற செம்பொன் மணவாளமாமுனி வந்திலனேல், ஆற்றில் கரைத்த புளியல்லவோ தமிழாரணமே' என்றவொரு பாசுரம் போதுமே.

253. பீடாதீசப்ரதிஷ்டாபநக்ருதி கரணாத் = ஸ்வாமி எழுபத்து நான்கு ஸிம்ஹாஸநாதிபதிகளை ஸ்தாபித்தருளி அவர்கள் வழியாக தர்சந நிர்வாஹம் செய்தருள்வது ஸுப்ரஸித்தம். 'லக்ஷ்மீ நாதாக்ய ஸிந்தௌ சடரிபுஜலத:' இத்யாதி ச்லோக ரத்னத்தினாலும் இது ஸுவ்யக்தம். மாமுனிகளும் "திரமாக திக்கஜங்கள் இட்டருளும் பெருமாள்" என்கிறபடியே அஷ்ட திக்கஜாசாரியர்களை ஸ்தாபித் தருளி அவர்கள் வழியாக தர்சந நிர்வாஹம் செய்தருள்வது நாடு நகரமும் நன்கறிந்தது.

254. திவ்யதேசாபிமாநாத் = (இதற்கு இரண்டு வகையாகப் பொருள்.) 'மன்னிய தென்னரங்காபுரி மாமலை மற்றுமுவந்திடு நாள்' என்றும், 'ஸ்ரீரங்கம் கரிசைல மஞ்ஜநகரிம்

தார்க்ஷ்யாத்ரி ஸிம்ஹாசலௌ.....', 'ஸ்ரீரங்கேச ஜயத்வஜோ விஜயதே ராமாநுஜோயம் முநி:' என்றும் சொல்லுகிறபடியே ஸ்வாமி ஸகல திவ்ய தேசங்களிலும் அபிமானம் காட்டியருளினவர். மாமுனிகளும் 'அடைவுடனே திருப்பதிகள் நடந்த வேர்வையாறவோ' என்கிறபடியே திவ்யதேச யாத்திரைகள் செய்தருளி அவற்றில் அபிமானம் காட்டியருளினபடி ஸுப்ரஸித்தம். (அதவா) திவ்ய தேசாபிமாநமாவது–திவ்யதேசச்ரேணியில் சேராதிருந்த ஸ்தலத்தை திவ்யதேசமாக அபிமானித்தல். ஸ்வாமி திருநாராயணபுரத்திற்கு 'ஒரு நாயகமாய் என்கிற திருவாய்மொழியை ஸமர்ப்பித்து அத்தலத்தை திவ்யதேசமாக அபிமானத்தருளினதும், மாமுனிகள் ராஜமன்னார் ஸன்னிதிக்கு 'தீர்ப்பாரையாமினி' என்கிற திருவாய்மொழியை ஸமர்ப்பித்து அப்பதியை திவ்யதேசமாக அபிமானித்தருளின தும் அநுஸந்தேயம்.

255. **பணிராஜாவதாரத்வாத்** = ஸ்வாமி சேஷாவதாரமென்பது ஸுப்ரஸித்தம். கருடவாஹன பண்டிதர் பணித்த திவ்யஸூரி சரிதத்திலும், வடுகநம்பி பணித்த யதிராஜ வைபவத்திலும் மற்றும் பல பிரபந்தங்களிலும் இது விசதம். மாமுனிகள் வரவரமுநி சதகத்திலே 'துக்தோதந்வத்தவள மதுரம் சுத்தஸத்வைகரூபம் ரூபம் யஸ்ய ஸ்புடயதிதராம் யம் பணீந்த்ராவதாரம்' என்றருளிச் செய்தபடியும் மற்றும் சரித்ர ப்ரஸித்தியின்படியும் திருவனந்தாழ்வான் திருவவதாரமென்பது ஸுவ்யக்தம்.

256. **ஸ்ரீரங்க ஸ்ரீவிவர்த்தநாத்** = ஸ்வாமி 'தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்தி வைத்தான் வாழியே' என்று எண்டிசையும் வாழ்த்துகிறபடியும், கோயிலொழுகு முதலானவற்றில் காண்கிற இதிஹாஸ விஸ்தாரப்படியும் ஸ்ரீரங்கஸ்ரீயை வளர்த்தருளினவர் என்பது விச்வவிதிதம். மாமுனிகள் திறத்து மிங்ஙனமேயன்றோ? "அரங்கநகர்வாழ இன்னுமொரு நூற்றாண்டிரும்" என்றன்றோ நிச்சலும் வாழ்த்துகின்றதுலகம்!

ஆக இத்தன்மைகளாலே, **யதீந்த்ரப்ரவண: ஸாக்ஷாத் யதீந்த்ரோ பாஷ்ய க்ருத் த்ருவம்**–யதீந்த்ரப்ரவணரென்று திருநாமம் பெற்ற மணவாளமாமுனிகள் ஸாக்ஷாத் எதிராசரே யென்னத் தட்டில்லையென்றதாயிற்று.

257. ஆழ்வார்களில் திருமங்கை யாழ்வாரையும், ஆசாரியர்களில் எம்பெருமானாரையும் சேர்த்து அனுபவிப்பதில் ருசி கிளர்ந்து இதனை வரைகின்றேன். இச்சேர்த்தியை முன்னோர்களின் திவ்ய ஸூக்திகளில் கண்டதனால் இந்த ருசி விளைந்தது. இராமாநுச நூற்றந்தாதி, ஆசார்ய ஹ்ருதயம், அதனுடைய வியாக்கியானம், பெரிய திருமொழி வியாக்யானம் இந்த திவ்யக்ரந்தங்களை மூலமாகக் கொண்டு அநுபவிக்கின்றேன். இராமானுச நூற்றந்தாதி யில் (பா.2) "குறையல் பிரானடிக் கீழ் விள்ளாத அன்பனிராமாநுசன்", "கலிமிக்க செந்நெல் கழனிக்குறையல் கலைப் பெருமானொலி மிக்க பாடலையுண்டு தன்னுள்ளம் தடித்து அதனால் வலிமிக்க சீயம் இராமானுசன்" என்ற இரண்டு பாசுரங்களைக் கொள்வோம். 'மண்ணியில் நீர் தேங்குங் குறையலூர் சீர்க்கலியன் தோன்றியவூர்' என்ற உபதேசரத்தினமாலையின் படி திருமங்கை யாழ்வார் திருவவதரித்த தலம் திருக்குறையலூர் ஆதலால், குறையல்பிரான் என்பதும், குறையல் கலைப்பெருமானென்பதும் அவ்வாழ்வாருடைய திருநாமமாகும். அவருடைய

திருவடிகளிலே எம்பெருமானார் அன்பு பூண்டவர் என்றது ஸாதாரணோக்தியாகும். அவ்வாழ்வா ருடைய 'ஒலிமிக்க பாடலையுண்டு தன்னுள்ளம் தடித்து அதனால் வலிமிக்க சீயமிராமாநுசன்' என்றது பரமவிலக்ஷண உக்தியாகும்.

258. கீழே 'பண்டரு மாறன் பசுந்தமிழ் ஆனந்தம் பாய்மதமாய் விண்டிட எங்கள் இராமானுசமுனி வேழம்' என்கிற பாசுரத்தில், எம்பெருமானார் திருவாய்மொழியை யதிகரித்து மதயானையாய் விளங்கினபடி சொல்லிற்று. இதில் திருமங்கையாழ்வாரருளிச் செயல்களை அதிகரித்து மத்த கண்டீரவமாய் விளங்கினபடி சொல்லுகிறது. சீயம்–சிங்கம். வடமொழியில் (தாடீ பஞ்சகத்தில்) ஜைநேப கண்டீரவ: என்றது. ஜைநர்களாகிய மதயானைகளுக்குச் சிங்கம் போல் துயர் தருமவர் என்றது. அமுதனார் அநுபவிக்கும் ஸ்ரீராமாநுஜஸிம்ஹம் அங்ஙனே துயரம் தருமதன்று, பயங்கரமுமன்று. இந்த சீயத்திற்கு ஏற்ற சீயம் எதுவென்றால் 'அங்கமலத்தடவயல் சூழாலிநாடன் அருள்மாரி அரட்டமுக்கி அடையார் சீயம் கொங்குமலர்க் குழலியர் வேள் மங்கை வேந்தன் கொற்ற வேற்பரகாலன் கலியன்'. ஆக சீயமாயிருக்குந் தன்மையில் பரகாலனுக்கும் பெரும்பூதூர் மாமுனிக்கும் ஒற்றுமை உரைக்கப்பட்டதாயிற்று.

259. ஆசார்ய ஹ்ருதயத்திலிருந்து சில ஒற்றுமை நயங்கள் காட்டுவோம். அதில் முதற் பிரகரணத்தில் "விப்ரர்க்கு கோத்ரசரணஸூத்ர கூடஸ்தர் பராசர பாராசர்ய போதாயநாதிகள்; ப்ரபந்நஜந கூடஸ்தர் பராங்குச பரகால யதிவராதிகள்"(37) என்கிற சூர்ணையில் பரகாலரான திருமங்கையாழ்வாரையும், யதிவரரான எம்பெருமானாரையும் சேர எடுத்திருப்பது காண்க.

260. அது தன்னிலேயே இரண்டாம் பிரகரணத்தில் (5) "தமிழ் மாமுனி திக்கு சரண்யமென்றவர்களாலே. க்வசித் க்வசித் என்று இவராவிர்ப்பாவம் கலியுங்கெடும் போலே ஸூசிதம்" என்ற சூர்ணையின் வியாக்கியானத் திலே மணவாள மாமுனிகள். "(கலியுங்கெடும் போலே ஸூசிதம்) இவர் தாம் மயர்வற மதிநலம் பெற்றவராகையாலே 'கலியுங்கெடும்' என்று திருமங்கையாழ்வார் உடையவர் போல்வார் அவதரித்துக் கலியுக ஸ்வபாவமும் கழியுமென்று மேல்வரும் அம்சத்தை தர்சித்து அருளிச் செய்தாப் போலே" என்று இவ்விருவரையும் சேர்த்து அருளிச் செய்தமை காண்க.

261. அது தன்னிலேயே மூன்றாம் ப்ரகரணத்தில் மேகமாகச் சொல்லுமதற்கு ஸ்வாபதேசமருளிச் செய்கிற (6) 'பூண்டநாள் சீர்க்கடலையுட்கொண்டு' இத்யாதி சூர்ணையில் "புயற்கையருள்மாரி குணந்திகழ் கொண்டல் போல்வாரை மேகமென்னும்" என்று மூலகாரர் தாமே மேகஸாம்யத்திலே திருமங்கை ஆழ்வாரையும் எம்பெருமானாரையும் சேர்த்துப் பேசினர். 'காரார் புயற்கைக் கலிகன்றி' என்றும், 'அங்கமலத்தடவயல் சூழாலி நாடன் அருள்மாரி' என்றும் திருமங்கையாழ்வார் தாமே ஔதார்யத்திலே தம்மை மேக துல்யராகச் சொல்லிக் கொண்டனர். நூற்றந்தாதியில் அமுதனார் 'குணந்திகழ் கொண்டல் இராமானுசன்' என்றும் 'இராமானுசா எம் செழுங்கொண்டலே!' என்றும், 'காரேய் கருணை இராமானுசா!' என்றும் பலவிடங்களில் எம்பெருமானாரை ஔதார்யத்திலேயே மேகமாகப் பணித்தார்.

262. திருமங்கையாழ்வாரருளிச் செயலில் எம்பெருமானார் ஸ்ரீஸூக்தியநுவாதம் சில காட்டுவோம்; பெரிய திருமொழியில் (3–7–3) 'அஞ்சுவன் வெஞ்சொல் நங்காய்! அரக்கர் குலப்பாவை தன்னை வெஞ்சின மூக்கரிந்த விறலோன் திறங்கேட்கில்' என்றவிடத்து எம்பெருமானார் நிர்வாஹம் அற்புதமானது. திருவாய்மொழியில் (6–7) 'உண்ணுஞ்சோறு பருகுநீர்'ப்பதிகம் போலே படுக்கைத் தலையில் நின்றும் பிரிந்து போன மகளின் பிரிவுக்கு ஆற்றாத தாயின் பாசுரமாக அமைந்தது பெரிய திருமொழியில் 'கள்வன்கொல்' பதிகம். உண்ணுஞ் சோற்றுப் பதிகத்தில் பராங்குச நாயகிக்கு (எம்பெருமானோடு கூடவல்லாமல்) தனிப்போக்கு; கள்வன்கொல் பதிகத்தில் வயலாலி மணவாளனோடு உடன் போக்கு என்கிற வாசி நினைவிலிருக்க வேண்டும். இதில் அரக்கர்குலப் பாவை தன்னை வெஞ்சின மூக்கரிந்த விறலோன் திறங்கேட்கில்–அஞ்சுவன் என்றிருப்பதன் உண்மைப் பொருள் விளங்குவது அரிது. சூர்ப்பணகையின் அங்கபங்கம் செய்த கதையைச் சொல்லி, அஞ்சுகின்றேனென்று கூறுகின்ற பரகால ஜநனியின் கருத்து என்ன? வயலாலி மணவாளன் அரக்கியின் மூக்கை அறுத்தது போல என் மகளின் மூக்கையும் அறுத்து விடுவனோவென்று தாம் அஞ்சுவதாகவன்றோ பொருள் தோன்றுகின்றது. குணக்கடலாகிய எம்பெருமான் விஷயத்தில் இங்ஙனே நினைத்து அஞ்சுதல் கூடுமோ? இது குணஹாநி சொல்லுகிறபடியாகுமன்றோ? என்று பூருவர்கள் விசாரஞ் செய்யுமிடத்து, கிடாம்பியாச்சான் "துடுப்பிருக்கக் கைவேக வேணுமோ? எம்பெருமானார் இனிதாக நிர்வஹித்துப் பொருள் அருளிச் செய்து வைத்திருக்க நாம் ஏன் வருந்த வேண்டும்? என்று சொல்லி அப்பொருளையும் வெளியிட்டார்; அதாவது 'அரக்கர் குலப்பாவைதன்னை மூக்கரிந்த விறலோன்' என்றதனால் பெருமாளுக்கும் பிராட்டிக்கும் நேர்ந்த பிரிவு நினைவூட்டப் படுகிறது. இராவணன் ஸீதையைக் கவர்ந்து சென்றதற்கு மூலகாரணம் அரக்கியின் அங்க பங்கமேயாதலால் இந்த அங்க பங்கத்தை ப்ரஸ்தாவிக்கும் முகத்தால் ஸ்ரீராம ஸீதைகளின் பிரிவு தான் தெரிவிக்கப்பட்டதாகும். ஆகவே முன்பு இருவருமாய்ப் புறப்பட்டுச் சென்று ஒருவரை யொருவர் பிரிந்து பலநாள் வருந்திக் கிடக்க நேர்ந்ததே. அங்ஙனே இப்போதும் இத்தம்பதிகளுக்கு ஏதேனும் விதிவசத்தாலே பிரிவு நேர்ந்து பரிதபிக்க நேருமோவென்று அஞ்சுகின்றேனென்று தாய் வருந்துவதாக எம்பெருமானார் நிர்வஹித்தருளினபடி. ஆற்புதமான நிர்வாஹமிது.

263. மற்றொன்றும் கேளீர்; பெரிய திருமொழி ஆறாம்பத்து ஏழாந்திருமொழி (பாட்டு 4) 'ஒளியா வெண்ணெயுண்டானென்று உரலோடாய்ச்சி ஒண் கயிற்றால் விளியாவார்க்க வாப்புண்டு விம்மியழுதான்' என்றவிடத்து வியாக்யானத்தில் பெரியவாச்சான்பிள்ளை எம்பெருமானார் விஷய மாக ஓர் ஐதிஹ்யமருளிச் செய்கிறார் அதாவது– வங்கிப்புரத்து நம்பி எம்பெருமானார் ஸ்ரீபாதத்திலே பலகாலும் அநுவர்த்தித்து 'அடியேனுக்குத் திருவாராதன ப்ரயோகம் உபதேசிக்க வேணும்' என்று பிரார்த்தித்துக் கொண்டிருந்தார். ஆனாலும் உபதேசிக்க அவகாசப்படாமலே போயிற்று. இப்படி யிருக்கையில் ஒரு நாள் கூரத்தாழ்வானுக்கும் ஹநூமத்தாஸர்க்கும் திருவாராதனக்ரமம் உபதேசிக்க நேர்ந்து உபதேசித்து முடிகிற ஸமயத்திலே வங்கிபுரத்து நம்பி அங்கே வந்து சேர்ந்தார். அவரைக்

கண்டவுடனே ஸ்வாமி திருவுள்ளம் அஞ்சி நடுங்கிற்று. 'இவர் பலகால் கேட்டுக் கொண்டிருந்தும் இவர்க்கு உபதேசியாதொழிந் தோம்; இன்று இவ்விருவர்க்கு உபதேசிக்கும் போதாவது இவரையும் கூட்டிக் கொண்டு உபதேசித்திருக்கலாம். அதுவும் செய்யப் பெற்றிலோம். இவ்விருவகைக் குற்றங்களுக்கு ஆளானோமே! என்று அஞ்சி நடுங்கின உடையவர் வங்கிப்புரத்து நம்பியை நோக்கி அழகாக ஒரு வார்த்தையருளிச் செய்தார்; அதாவது "எனக்கு நெடுநாளாக இருந்த ஒரு ஸந்தேஹம் இன்று தீரப்பெற்றது; 'ஒளியா வெண்ணெயுண்டானென்று உரலோடாய்ச்சி யொண்கயிற்றால், விளியா வார்க்க ஆப்புண்டு விம்மியழுதான்' என்றும் 'எழில் கொள் தாம்பு கொண்டடிப்பதற்கு எள்கு நிலையும்... அழுகையுமஞ்சி நோக்குமந் நோக்கும்' என்றும் ஆழ்வார்களருளிச் செய்கிறார்களே, உண்மையில் இப்படி யிருக்குமோ, நியாமகனான எம்பெருமான் நியாம்யரானாரிடத்தில் அஞ்சி வருந்தக் கூடுமோ என்று ஸந்தேஹம் உண்டா யிருந்தது. இப்போது உம்மிடத்தில் நான் அஞ்சி வருந்தினேன் ஆகையால் அது ஸம்பாவிதமே என்று துணியப் பெற்றேன்'' என்றாராம். இப்படிப்பட்ட ரஸோக்தி கள் அருளிச் செயல் வியாக்கியானங்களிலே பலபல காணலாம்.

264. முடிவாக ஒரு பெரியவாச்சான் பிள்ளை ஸ்ரீஸூக்தி கேளீர்: ''தன்குடிக்கேதும்'' (2-76) ''நம்குடி என்னாதே 'தன்குடி' என்கிறாளாயிற்று ''எம்பெருமானார் தர்சனம்'' என்னுமாபோலே. நம் ப்ரதிபத்தியாலே சொன்னோமாகை யன்றிக்கே பெருமாள் 'இராமாநுசனுடையார்' என்றே அருளிச் செய்வர். ''பெருவிலையனான ரத்னத்தை நடுவே இட்டுக் கோத்தால் முன்னும் பின்னும் ஒக்க விலை போமாபோலே காண்'' என்று பிள்ளான்.''

265. மார்கழி நீராட்டமாவது மார்க்கசீர்ஷ அவகாஹநம், அதாவது மார்க்கங்களுக்குள்ளே சீர்ஷமான உபாயங்களுக்குள் தலையான) ஆசார்ய அபிமானத்தில் அவகாஹிப்பதேயாகும். அப்படிப்பட்ட மார்க்க சீர்ஷாவகாஹனத்தில் தான் ஆண்டாள் மிகுந்த அபிநிவேசமுடையவள் என்பது நாச்சியார் திருமொழிப் பாசுரங்களினால் விசதம். பிள்ளைலோகாசார்யரும் ஸ்ரீவசநபூஷண திவ்ய சாஸ்த்ரத்தின் முடிவில் ஆண்டாள் பாசுரத்தைக் கொண்டே சரமோபாய வைபவ ஸ்தாபநம் செய்தருளியிருக்கையாலே அவ்விஷயத்தில் இன்னமும் விரிவாக நிரூபிக்கவும் தெளிவு பிறப்பிக்கவும் அவசியமில்லை. ''ஆழிமழைக்கு அண்ணா! நாங்களும் மகிழ்ந்து நீராட வாழவுலகினில் பெய்திடாய்'' என்றதற்குச் சேர எம்பெருமானார்க்கு இது தன்னிலுள்ள அந்வயம் நிரூபிக்கப்பட வேண்டுவது மிக அவசியமாதலால் அஃது இப்போது நிரூபிக்கப்படுகிறது.

266.உபாயங்களில் தலையான ஆசார்யாபிமானத்தின் ப்ரஸ்தாவம் வந்தபோதே ஸ்ரீவைஷ்ணவவுலகுக்கு எம்பெருமானாருடைய நினைவு வந்தே தீருமென்பதில் விவாதம் உண்டோ? எம்பெருமானார்க்கு முன்னேயும் சில ஆசாரியர்கள் அவதரித்தருளியிருந்தாலும் நம்முடைய உஜ்ஜீவநஹேதுவாக அவர்களுடைய அபிமானத்தை நாம் கண்டிடுவோம். எம்பெருமானார் திருவவதரித்தபின்புதான் ஆசார்யாபிமாநம் என்கிற சொல்வடிமே தோன்றியது என்று சொல்லவும் பொருத்தம் உண்டு. இப்படிச் சொல்லுவதற்குண்டான

262. திருமங்கையாழ்வாரருளிச் செயலில் எம்பெருமானார் ஸ்ரீஸூக்தியநுவாதம் சில காட்டுவோம்; பெரிய திருமொழியில் (3–7–3) 'அஞ்சுவன் வெஞ்சொல் நங்காய்! அரக்கர் குலப்பாவை தன்னை வெஞ்சின மூக்கரிந்த விறலோன் திறங்கேட்கில்' என்றவிடத்து எம்பெருமானார் நிர்வாஹம் அற்புதமானது. திருவாய்மொழியில் (6–7) 'உண்ணுஞ்சோறு பருகுநீர்'ப்பதிகம் போலே படுக்கைத் தலையில் நின்றும் பிரிந்து போன மகளின் பிரிவுக்கு ஆற்றாத தாயின் பாசுரமாக அமைந்தது பெரிய திருமொழியில் 'கள்வன்கொல்' பதிகம். உண்ணுஞ் சோற்றுப் பதிகத்தில் பராங்குச நாயகிக்கு (எம்பெருமானோடு கூடவல்லாமல்) தனிப்போக்கு; கள்வன்கொல் பதிகத்தில் வயலாலி மணவாளனோடு உடன் போக்கு என்கிற வாசி நினைவிலிருக்க வேண்டும். இதில் அரக்கர்குலப் பாவை தன்னை வெஞ்சின மூக்கரிந்த விறலோன் திறங்கேட்கில்–அஞ்சுவன் என்றிருப்பதன் உண்மைப் பொருள் விளங்குவது அரிது. சூர்ப்பணகையின் அங்கபங்கம் செய்த கதையைச் சொல்லி, அஞ்சுகின்றேனென்று கூறுகின்ற பரகால ஜநனியின் கருத்து என்ன? வயலாலி மணவாளன் அரக்கியின் மூக்கை அறுத்தது போல என் மகளின் மூக்கையும் அறுத்து விடுவனோவென்று தாம் அஞ்சுவதாகவன்றோ பொருள் தோன்றுகின்றது. குணக்கடலாகிய எம்பெருமான் விஷயத்தில் இங்ஙனே நினைத்து அஞ்சுதல் கூடுமோ? இது குணஹாநி சொல்லுகிறபடியாகுமன்றோ? என்று பூருவர்கள் விசாரஞ் செய்யுமிடத்து, கிடாம்பியாச்சான் "துடுப்பிருக்கக் கைவேக வேணுமோ? எம்பெருமானார் இனிதாக நிர்வஹித்துப் பொருள் அருளிச் செய்து வைத்திருக்க நாம் ஏன் வருந்த வேண்டும்? என்று சொல்லி அப்பொருளையும் வெளியிட்டார்; அதாவது 'அரக்கர் குலப்பாவைதன்னை மூக்கரிந்த விறலோன்' என்றதனால் பெருமாளுக்கும் பிராட்டிக்கும் நேர்ந்த பிரிவு நினைவூட்டப் படுகிறது. இராவணன் ஸீதையைக் கவர்ந்து சென்றதற்கு மூலகாரணம் அரக்கியின் அங்க பங்கமேயாதலால் இந்த அங்க பங்கத்தை ப்ரஸ்தாவிக்கும் முகத்தால் ஸ்ரீராம ஸீதைகளின் பிரிவு தான் தெரிவிக்கப்பட்டதாகும். ஆகவே முன்பு இருவருமாய்ப் புறப்பட்டுச் சென்று ஒருவரை யொருவர் பிரிந்து பலநாள் வருந்திக் கிடக்க நேர்ந்ததே. அங்ஙனே இப்போதும் இத்தம்பதிகளுக்கு ஏதேனும் விதிவசத்தாலே பிரிவு நேர்ந்து பரிதபிக்க நேருமோவென்று அஞ்சுகின்றேனென்று தாய் வருந்துவதாக எம்பெருமானார் நிர்வஹித்தருளினபடி. ஆற்புதமான நிர்வாஹமிது.

263. மற்றொன்றும் கேளீர்; பெரிய திருமொழி ஆறாம்பத்து ஏழாந்திருமொழி (பாட்டு 4) 'ஒளியா வெண்ணெயுண்டானென்று உரலோடாய்ச்சி ஒண் கயிற்றால் விளியாவார்க்க வாப்புண்டு விம்மியழுதான்' என்றவிடத்து வியாக்யானத்தில் பெரியவாச்சான்பிள்ளை எம்பெருமானார் விஷய மாக ஓர் ஐதிஹ்யமருளிச் செய்கிறார் அதாவது– வங்கிப்புரத்து நம்பி எம்பெருமானார் ஸ்ரீபாதத்திலே பலகாலும் அநுவர்த்தித்து 'அடியேனுக்குத் திருவாராதன ப்ரயோகம் உபதேசிக்க வேணும்' என்று பிரார்த்தித்துக் கொண்டிருந்தார். ஆனாலும் உபதேசிக்க அவகாசப்படாமலே போயிற்று. இப்படி யிருக்கையில் ஒரு நாள் கூரத்தாழ்வானுக்கும் ஹநூமத்தாஸர்க்கும் திருவாராதனக்ரமம் உபதேசிக்க நேர்ந்து உபதேசித்து முடிகிற ஸமயத்திலே வங்கிபுரத்து நம்பி அங்கே வந்து சேர்ந்தார். அவரைக்

கண்டவுடனே ஸ்வாமி திருவுள்ளம் அஞ்சி நடுங்கிற்று. 'இவர் பலகால் கேட்டுக் கொண்டிருந்தும் இவர்க்கு உபதேசியாதொழிந் தோம்; இன்று இவ்விருவர்க்கு உபதேசிக்கும் போதாவது இவரையும் கூட்டிக் கொண்டு உபதேசித்திருக்கலாம். அதுவும் செய்யப் பெற்றிலோம். இவ்விருவகைக் குற்றங்களுக்கு ஆளானோமே! என்று அஞ்சி நடுங்கின உடையவர் வங்கிப்புரத்து நம்பியை நோக்கி அழகாக ஒரு வார்த்தையருளிச் செய்தார்; அதாவது "எனக்கு நெடுநாளாக இருந்த ஒரு ஸந்தேஹம் இன்று தீரப்பெற்றது; 'ஒளியா வெண்ணெயுண்டானென்று உரலோடாய்ச்சி யொண்கயிற்றால், விளியா வார்க்க ஆப்புண்டு விம்மியழுதான்' என்றும் 'எழில் கொள் தாம்பு கொண்டடிப்பதற்கு எள்கு நிலையும்... அழுகையுமஞ்சி நோக்குமந் நோக்கும்' என்றும் ஆழ்வார்களருளிச் செய்கிறார்களே, உண்மையில் இப்படி யிருக்குமோ, நியாமகனான எம்பெருமான் நியாம்யரானாரிடத்தில் அஞ்சி வருந்தக் கூடுமோ என்று ஸந்தேஹம் உண்டா யிருந்தது. இப்போது உம்மிடத்தில் நான் அஞ்சி வருந்தினேன் ஆகையால் அது ஸம்பாவிதமே என்று துணியப் பெற்றேன்'' என்றாராம். இப்படிப்பட்ட ரஸோக்தி கள் அருளிச் செயல் வியாக்கியானங்களிலே பலபல காணலாம்.

264. முடிவாக ஒரு பெரியவாச்சான் பிள்ளை ஸ்ரீஸூக்தி கேளீர்: "தன்குடிக்கேதும்" (2–76) "நம்குடி என்னாதே 'தன்குடி' என்கிறாளாயிற்று "எம்பெருமானார் தர்சனம்" என்னுமாபோலே. நம் ப்ரதிபத்தியாலே சொன்னோமாகை யன்றிக்கே பெருமாள் 'இராமாநுசனுடையார்' என்றே அருளிச் செய்வர். "பெருவிலையனான ரத்னத்தை நடுவே இட்டுக் கோத்தால் முன்னும் பின்னும் ஒக்க விலை போமாபோலே காண்'' என்று பிள்ளான்."

265. மார்கழி நீராட்டமாவது மார்க்கசீர்ஷ அவகாஹநம், அதாவது மார்க்கங்களுக்குள்ளே சீர்ஷமான உபாயங்களுக்குள் தலையான) ஆசார்ய அபிமானத்தில் அவகாஹிப்பதேயாகும். அப்படிப்பட்ட மார்க்க சீர்ஷாவகாஹனத்தில் தான் ஆண்டாள் மிகுந்த அபிநிவேசமுடையவள் என்பது நாச்சியார் திருமொழிப் பாசுரங்களினால் விசதம். பிள்ளைலோகாசார்யரும் ஸ்ரீவசநபூஷண திவ்ய சாஸ்த்ரத்தின் முடிவில் ஆண்டாள் பாசுரத்தைக் கொண்டே சரமோபாய வைபவ ஸ்தாபநம் செய்தருளியிருக்கையாலே அவ்விஷயத்தில் இன்னமும் விரிவாக நிரூபிக்கவும் தெளிவு பிறப்பிக்கவும் அவசியமில்லை. "ஆழிமழைக்கு அண்ணா! நாங்களும் மகிழ்ந்து நீராட வாழவுலகினில் பெய்திடாய்'' என்றதற்குச் சேர எம்பெருமானார்க்கு இது தன்னிலுள்ள அந்வயம் நிரூபிக்கப்பட வேண்டுவது மிக அவசியமாதலால் அஃது இப்போது நிரூபிக்கப்படுகிறது.

266.உபாயங்களில் தலையான ஆசார்யாபிமானத்தின் ப்ரஸ்தாவம் வந்தபோதே ஸ்ரீவைஷ்ணவவுலகுக்கு எம்பெருமானாருடைய நினைவு வந்தே தீருமென்பதில் விவாதம் உண்டோ? எம்பெருமானார்க்கு முன்னேயும் சில ஆசாரியர்கள் அவதரித்தருளியிருந்தாலும் நம்முடைய உஜ்ஜீவநஹேதுவாக அவர்களுடைய அபிமானத்தை நாம் கண்டிடுவோம். எம்பெருமானார் திருவவதரித்தபின்புதான் ஆசார்யாபிமாநம் என்கிற சொல்வடிமே தோன்றியது என்று சொல்லவும் பொருத்தம் உண்டு. இப்படிச் சொல்லுவதற்குண்டான

உபபத்தியைக் கேளீர்;- ஸ்வாமி எம்பெருமானார் ஒருநாள் விபீஷண சரணாகதி ப்ரகரணத்தை உபந்யஸித்தருளா நின்றார்; 'த்யக்த்வா புத்ராம்ச்ச தாராம்ச்ச ராகவம் சரணம் கத:' 'ஸர்வலோக சரண்யாய ராகவாய மஹாத்மநே, நிவேதயத மாம் க்ஷிப்ரம் விபீஷணமுபஸ்திதம்' என்று சொல்லி வானரமுதலிகளைப் பிரார்த்திக்க, அவர்கள் இவ்விபீஷணனை அநுகூலனாகக் கொள்ளாமல் பிரதிகூலனாகவே கொண்டு பலவகைத் தீங்குகளைச் செய்யத் தொடங்கினார்கள்-என்கிறவிதனை ஸ்வாமி விரிவாக உபந்யஸித்தருளா நிற்கையில், அப்போது ஆனந்தமாகக் கேட்டுக் கொண்டிருந்தவர்களில் ஒருவரான பிள்ளையுறங்காவில்லிதாஸர் கோஷ்டியில் நின்று எழுந்திருந்து விக்கி விக்கியழுது தம்முடைய வொரு பெரிய ஸந்தேஹத்தை விண்ணப்பஞ் செய்து இதைப் பரிஹரித்தருளினாலொழிய மேலே கதை கேட்க விருப்ப மில்லாமையைக் கூறுகின்றார். அவர் விஜ்ஞாபித்த ஸந்தேஹ மாவது-விபீஷணாழ்வானுக்கு ஆர்த்தி முதலிய அதிகார பூர்த்தியில் யாதொரு குறையுமில்லை; ஆகிஞ்சந்யமும் அநந்யகதித்வமும் கபடமாக வல்லாமல் உண்மையாகவேயுண்டாகி நெஞ்சு கனிந்த பக்தியுடன் வந்து சேர்ந்த இவனுக்கே பகவத் கோஷ்டியில் ப்ரவேசம் எளிதாகக் கிடைக்கவில்லையென்றும், பகவானுக்கு அந்தரங்க மந்திரிகளாக இருந்தவர்களால் மிகுந்த பரிபவமும் ஆக்ஷேபமும் விளைந்தது என்றும் கண்டால், அவ்விபீஷணாழ்வானுடைய அதிகாரத்தில் நூற்றிலொன்று கூட இல்லாத எம்போலியர்க்கு பகவதங்கீகாரத்தைக் கனவில்கூடக் காண்பதற்கு ப்ரஸக்தி யில்லை யன்றோ; ஆகவே எம்போலியர் உஜ்ஜீவிக்க வழியுண்டோ இல்லையோ? என்பதாக.

267. இதைக் கேட்ட எம்பெருமானார் உடனே அவர்க்குப் பரம த்ருப்திகரமாக ப்ரத்யுத்தரமருளிச் செய்தார்; "விபீஷணாழ்வானைப் போலே நாம் எம்பெருமானைப் பற்றினாலன்றோ இப்படி ஸந்தேஹித்து இடிவிழுந்து நிற்கவேண்டும்; நாம் எம்பெருமானைக் கை பார்த்திருக்குமவர்களல்லோங் காணும்; உமக்கு நானுண்டு, எனக்குப் பெரிய நம்பியுண்டு" என்று.

268. இதன் கருத்தாவது-எம்பெருமான் மோக்ஷமளிக்கவும் வல்லவன், ஸம்ஸாரத்திலே தள்ளவும் வல்லவன், நிக்ரஹாநுக்ரஹங்களுக்குப் பொதுவான ஸ்வாதந்திரியமுடையவனாகையாலே அவனைப் பற்றினார்க்கு நெஞ்சுதளும்பியேயிருக்க நேரும்; அவனைப் போலன்றிக்கே அநுக்ரஹமே வடிவெடுத்த ஆசார்யர்களைப் பற்றினார்க்கு ஸந்தேஹ கந்தமுமின்றிக்கே மார்விலே கைவைத்து உறங்கலாம்படியிருக்கும் என்கை. இவ்வர்த்தம் மஹர்ஷிகளின் வசனத்தாலும் தேறிநின்றது; "ஸித்திர் பவதி வா நேதி ஸம்சய: அச்யுதேன விநாம், ந ஸம்சயோஸ்தி தத்பக்தபரிசர்யாரதாத்மநாம்" என்கிற ப்ரமாணத்தை இங்கே அநுஸந்திப்பது. (இதன் பொருள்;- எம்பெருமானைப் பற்றினார்க்கு ஸத்கதிப்ராப்தியாகிற ஸித்தியுண்டோ இல்லையோ வென்கிற ஸந்தேஹ முள்ளது; தத்பக்தர்களாகிற பாகவதர்களைப் பற்றினார்க்கு அப்படிப்பட்ட ஸந்தேஹம் உதிக்கவே மாட்டாது என்பதாம்.)

269. இங்ஙனே அவரவர்கள் தம் தம் ஆசாரியர்களைப் பணிந்து உஜ்ஜீவித்தல் என்பது இருக்கச் செய்தேயும் 'தஸ்மிந் ராமாநுஜார்யே குருரிதி ச பதம் பாதி நாந்யத்ர'

என்கிறபடியே ஆசார்யரென்கிற சொல்லுக்குப் பொருளா யிருக்குந்தன்மை எம்பெருமானாரொருவர்க்கே உரித்தாக வுள்ளதாதலால் அவருடைய திருவடிஸம்பந்தம் பெற்றவர்களுக்கே ஸத்கதி ப்ராப்தியில் ஸந்தேஹமற்றிருக்க ப்ராப்தம்.

270. திருவடிஸம்பந்தமென்று விசேஷித் துச் சொல்லவேண்டிய அவச்யமுமில்லை; ஏதேனுமொரு ஸம்பந்தமிருந்தாலும் போதும். திருவடி ஸம்பந்தம் தவிர வேறு என்ன ஸம்பந்தமிருக்க முடியுமென்று சிலர் கேட்கவும் சிந்திக்கவுங் கூடும்.

271. திருவடி ஸம்பந்தம் போல் திருமுடி ஸம்பந்தமும் ஒன்றுண்டே; முற்பட்டவர்களுக்குத் திருமுடி ஸம்பந்தம், பிற்பட்டவர்களுக்குத் திருவடி ஸம்பந்தம் என்று நம்பூருவர்களே பிரித்துக் காட்டியுள்ளார்கள். கூரத்தாழ்வா னுடைய பெருமையைப் பேசப் பிறந்ததான 'அர்வாஞ்சோ யத்பதஸரஸிஜத்வந்த்வ மாச்ரித்ய பூர்வே மூர்த்நா யஸ்யாந்வய முபகதா தேசிகா முக்திமாபு:, ஸோயம் ராமாநுஜமுநிரபி' என்னும் ச்லோகத்தில் இவ்விஷயம் வ்யக்தமாகக் கூறப்பட்டுள்ளது.

272. எம்பெருமானார்க்கு முன்புள்ள முதலிகள் அவருடைய திருமுடி ஸம்பந்தத்தினால் முக்தி பெற்றார்களென்றும், பிற்பட்டவர்கள் அவருடைய திருவடி ஸம்பந்தத்தினால் முக்தி பெற்றார்கள்–பெறுகிறார்கள்–பெறுவார்கள் என்று சொல்லப் படுகிற இவ்விஷயம் வேதாந்த தேசிகனுடைய திருவாக்கிலும் ஸுவ்யக்தமாகவுள்ளது; அவர் தாம் பணித்த ந்யாயபரிசுத்தியில் எம்பெருமானாரைப் பற்றியவதரித்த மங்கள ச்லோகத்தில் இது காணத்தக்கது. அஃது எங்ஙனே யென்னில்; "பத்யுஸ் ஸம்யமிநாம் ப்ரணம்ய சரணௌ தத்பாதகோடீரயோஸ் ஸம்பந்தேந ஸமித்யமாநவிபவாந் தந்யாந் ததா அந்யாந் குருந்" என்பது அந்த மங்கள ச்லோகம்.

273. இதன் பொருளாவது–ஸம்யமிநாம் பத்யு: – யதிராஜரான எம்பெருமானாருடைய, சரணௌ – திருவடிகளை, ப்ரணம்ய –வணங்கியும், தத்பாத கோடீரயோ: ஸம்பந்தேந– அந்த எம்பெருமானாருடைய திருவடியென்ன திருமுடியென்ன இவற்றினுடைய ஸம்பந்தத் தினால், ஸமித்யமாநவிபவாந்–மிகப் பெருமை பெற்றவர்களாய், தந்யாந்– க்ருதார்த்தர்களான, குருந் ப்ரணம்ய–ஆசார்யர்களை வணங்கியும்..............ந்யாய பரிசுத்தியென்கிற இந்த க்ரந்தம் செய்யப் படுகிறது– என்கை. இதில் 'தத்பாத கோடீரயோஸ் ஸம்பந்தேந' என்றது உயிரான ஸ்ரீஸூக்தி. கோடீரமென்று திருமுடிக்குப் பெயர். பிற்பட்டவர்களுக்குத் திருவடி ஸம்பந்தம் போலே முற்பட்டவர்களுக்குத் திருமுடி ஸம்பந்தம் உத்தாரகமென்று இதனால் நன்கு காட்டப் பட்டதாயிற்று.

274."பிற்பட்டவர்களுக்கு ஸ்வாமியின் திருவடி ஸம்பந்தத்தினால் மோக்ஷமென்றால் இது நெஞ்சில் நன்கு பொருந்துகின்றது. முற்பட்டவர்களுக்குத் திருமுடி ஸம்பந்தத் தினால் மோக்ஷமுண்டாயிற்றென்றால் இந்த வார்த்தை அந்வயிக்கவேயில்லையே; ஸ்ரீமந் நாதமுனிகள் உய்யக்கொண்டார் மணக்கால் நம்பி போல்வார் தானே ஸ்வாமிக்கு முற்பட்டவர்கள்; அவர்கள் என்றைக்கோ பரமபதம் போய்ச் சேர்ந்தவர்களன்றோ; அவர்களது காலத்தில் ஸ்வாமி யெம்பெருமானார் அவதரித்திருந்தாலன்றோ இவருடைய திருமுடி ஸம்பந்தம் அவர்களுக்கு நேர்ந்ததென்று சொல்ல இடமுண்டு. இவருடைய

அவதாரமே நடந்திலாத ஸமயத்தில் இவருடைய திருமுடி ஸம்பந்தம் அவர்களுக்கு எப்படி ப்ராப்தமாகக் கூடும்? இது அஸம்பாவிதமான வார்த்தையாக இருக்கின்றதே!'' என்று சிலர் சங்கிக்கக் கூடும்.

275. இதற்குச் சொல்லுகிறோம்; சாஸ்த்ரங்களில் உத்தம புருஷர்களின் பிரபாவங்களைச் சொல்லுமிடத்து 'தச பூர்வாந் தச அபராந்..............புநாதி' என்றும் 'ஸப்த ஸப்த ச ஸப்த ச' என்றும் சொல்லப்பட்டிருப்பது ப்ரஸித்தம். ஒரு வம்சத்தில் ஒரு மஹநீய புருஷன் தோன்றினால் அவனுடைய பெருமேன்மையினால் முன்னே பல தலைமுறையாரும் பின்னே பல தலைமுறையாரும் வாழ்ச்சி பெறுவதாகச் சொல்லப்படுகிறது. நம்மாழ்வாரும் திருவாய்மொழியில் 'செடியார் நோய்களெல்லாந் துறந்து எமர் கீழ்மேலெழுபிறப்பும் விடியா வெந்நரகத்து என்றுஞ் சேர்தல்மாறினரே' என்றும் 'கேசவன்தமர் கீழ்மே லெமரேழெழு பிறப்பும் மாசதிரிது பெற்று நம்முடை வாழ்வு வாய்க்கின்றவா' என்றுமருளிச் செய்தார். ஆகவே முற்பட்டவர்களையும் ஸத்கதி பெறுவிக்கும் பெருமை பிற்பட்டவர்களுக்கு விளைகின்றதென்பது சாஸ்த்ர ஸம்மதமே யென்றுணர்க.

276. நமது ஸ்ரீபாஷ்யகாரர் பெரும்பாலும் ஆழ்வாருடைய திவ்ய ஸூக்திகளைத் தழுவியே ஸ்ரீ பாஷ்யம் கீதாபாஷ்யம் முதலியவற்றை அருளிச் செய்ததாக நம்முன்னோர்கள் திருவுள்ளம் பற்றியிருக்கின்றார்கள். ''பாஷ்யகாரர் இது கொண்டு ஸூத்ரவாக்யங்கள் ஒருங்கவிடுவர்'' என்று ஆசார்ய ஹ்ருதயத்தில் ஸ்பஷ்டமாகவும் பணிக்கப்பட்டுள்ளது. இதற்குச் சான்றாக இப்போது ஒன்றிரண்டிடம் காட்டுகின்றோம்.

277. பகவத் கீதையில் (15–18) 'யஸ்மாத் க்ஷரமதீதோஹம்' என்கிற ச்லோகத்தில் 'அதோஸ்மி லோகே வேதேச ப்ரதித: புருஷோத்தம:' என்றுள்ளதன்றோ! இங்கு 'லோகே வேதே ச' என்றதற்கு லோகத்திலும் சாஸ்த்ரத்திலும் என்று பொருள் ஸாதாரணமாக எல்லார்க்கும் தோன்றக்கூடியது. இதர பாஷ்யகாரர்கள் இப்படித்தான் அர்த்தம் செய்திருக்கக் காண்கிறோம். ஸ்வாமி எம்பெருமானாரோ வென்னில் தமது கீதா பாஷ்யத்தில் அங்ஙனம் பொருள் பணிக்கவில்லை. ''வேதார்த்தாவலோகநாத் லோக இதி ஸ்ம்ருதிரிஹோச்யதே; ச்ருதௌ ஸ்ம்ருதௌச இதி அர்த்த:'' என்பது கீதாபாஷ்ய ஸ்ரீஸூக்தி. லோகம் என்பதற்கு கரணே வ்யுத்பத்தியினால் சாஸ்த்ரமென்றே பொருள் கொள்ளப் பட்டிருக்கிறது. இப்படித்தான் கொள்ளவேணுமென்று தாத்பர்யசந்த்ரிகையில் வேதாந்த தேசிகனும் உபபாதநம் செய்தருளியிருக்கிறார். லோக சப்தத்திற்கு இப்படி சாஸ்த்ரபரத்வம் கொண்டவர்கள் வேறு யாருமில்லை. லோகசப்தத்திற்கு சாஸ்த்ரமென்று அர்த்தமுள்ளதாக கோசங்களிலும் காணப்படவில்லை. ''லோகஸ்து புவநே ஜநே'' என்று தான் அமரகோசத் தில் உள்ளது. இதர கோசங்களிலும் இங்ஙனமே காண்கிறது. இப்படியிருக்க, ஸ்வாமி லோக பதத்தை சாஸ்த்ரபர்யாயமாகக் கொண்டு பொருளருளிச்செய்ததற்கு நிதாநமென்ன? என்று பராமர்சிக்க வேணும். நம்மாழ்வாருடைய வொரு ஸ்ரீஸூக்தியே இதற்கு மூலகாரண மென்று பெரியோர்களின் கொள்கையை இங்கு நாம் நிரூபிக்க விரும்புகிறோம்.

278. நம்மாழ்வார் திருவாய்மொழியில் 'ஒன்றுந் தேவுமுலகுமுயிரும்' என்று தொடங்கும் பதிகத்தில் (4–10–6) 'போற்றி மற்றோர் தெய்வம்' என்னும் பாசுரத்தில்

'எல்லீரும் வீடு பெற்றால் உலகில்லையென்றே' என்று அருளிச் செய்துள்ளார். இப்பதிகத்தில் ஸ்ரீமந் நாராயணனுடைய பரத்துவத்தை உபபாதித்து வந்த ஆழ்வாரை நோக்கி "ஸ்ரீமந் நாராயணனே ஸர்வேச்வரனாகில் அவன் தன்னையே ஆச்ரயிக்கும்படி எங்களைப் பண்ணாமல் இதர தெய்வங்களைத் தொழுமாறு எங்களைச் செய்துவைத்தது ஏன்?" என்று சிலர் கேட்பதாகக் கொண்டு அவர்களுக்கு விடை கூறுவதாக இப்பாசுரமமைக்கப் பட்டுள்ளது.

279. இப்பாசுரத்தில் "எல்லீரும் வீடுபெற்றால் உலகில்லை யென்றே" என்பது தான் உயிராகவுள்ளது. எல்லாரும் ஸ்ரீமந் நாராயணனையே தொழப்பெற்றால் எல்லாருமே வீடு பெறுவார்கள்; அப்படி எல்லாரும் வீடு பெற்றுவிட்டால் உலகு இல்லையாய்விடும் (அதாவது லீலாவிபூதி அடியற்றுப் போய்விடும்); அங்ஙனம் போகாமைக்காகவே எம்பெருமான் உங்களை இதர தேவதாபஜனம் பண்ணி ஸம்ஸாரிகளாய்த் தொலைந்து போம்படி செய்து வைத்தான்–என்பதாக இப்பாசுரத்திற்கு ஆபாதப்ரதீதியில் பொருள் தோன்றக்கூடும். தசோபநிஷத் பாஷ்யகாரரான ரங்கராமாநுஜ ஸ்வாமி வடமொழியில் தாம் பணித்த ஒன்பதினாயிரப்படி வியாக்கியானத் தில் இவ்விதமான பொருளையே எழுதி யுள்ளார். "பவாத்ருசாநாம் ஸர்வேஷாம் பகவதா ஸ்வவிஷயபக்திமநுத்பாத்ய தேவதாந்தரவிஷயே பக்திருத்பாதிதேதி பாவ:" என்பவை அந்த ஸ்வாமியினுடைய வியாக்கியான பங்க்திகள்.

280. ஆனால், திருக்குருகைப்பிரான் பிள்ளான் நம்பிள்ளை முதலான பூருவாசாரியர்கள் தம் வியாக்கியானங்களில் வெளியிட்டருளின பொருள் இங்ஙனேயல்ல. எங்ஙனே யென்னில்; உலகில்லையென்றே யென்ற விடத்தில் உலகு என்பதற்கு சாஸ்த்ரம் என்று பொருள். ப்ரபல பாபம் செய்து வைத்த நீங்களும் ப்ரபல ஸுக்ருத லப்யமான மோக்ஷத்தைப் பெற்றுவிட்டீர்களாகில் சாஸ்த்ரமரியாதையே அழிந்து போய்விடு மென்று நினைத்தே எம்பெருமான் உங்களை தேவதாந்தர ப்ரவணர்களாக ஆக்கி வைத்திருக்கிறான்; அவரவர்கள் பண்ணின புண்யபாப ரூபகருமங்களுக்குத் தக்கபடியே பலன் கொடுப்பதென்று ஒரு சாஸ்த்ர மரியாதை ஏற்பட்டிருக்கிறது; நீங்கள் முற்பிறவிகளில் பிரபலமான தீவினைகளை செய்திருக்கிற படியால் அவற்றின் பலனாக இப்பிறப்பில் க்ஷுத்ர தேவதா பஜனம் பண்ணும்படியாக உங்களை உபேக்ஷித்திடலாயிற்று; கொடிய பாவங்கள் செய்த உங்களையும் புண்யாத்மாக்களைப் போலே ஸ்ரீமந் நாராயண ஸமாச்ரயணமே செய்யும்படி பண்ணி விடுவதானல் அப்போது முன்சொன்ன சாஸ்த்ரமர்யாதை அழிந்து விடுமன்றோ. அங்ஙனம் அழியாமைக்காகவே உங்களை இங்ஙனே நிறுத்தி வைத்தது–என்பதாகவே ஆழ்வார் திருவுள்ளம் பற்றிய பொருளென்று பூருவாசாரியர்கள் உபபாதித் தருளுகிறார்கள். வேதாந்த தேசிகனும் த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியில் "தத்தத் கர்மாநுரூபம் பலவிதரணத:" என்று இவ்வர்த்தத்தையே வெளியிட்டருளினார்.

281. ஆகவே, ஆழ்வார் திருவுள்ளத்தால் உலகு என்பதற்கு சாஸ்த்ரமென்னும் பொருள் தேறிவிட்டபடியால் இதையடியொற்றியே ஸ்வாமி பாஷ்யகாரர் 'அதோஸ்மி லோகே வேதே ச' என்றவிடத்தில் லோக சப்தத்தை சாஸ்த்ரபரமாக நயிப்பித்தருளினாரென்று அறியக் கிடக்கிறது. இந்த கீதாச்லோகத்தை அப்பாசுரத்தின் வியாக்கியானத்தில்

பெரியவாச்சான்பிள்ளையும் வடக்குத் திருவீதிப்பிள்ளையும் எடுத்துக் காட்டியருளியு மிருக்கிறார்கள்.

282. எம்பெருமானார்க்கு முன்னே ஆளவந்தாரும் லோகசப்தத்தை சாஸ்த்ரபரமாக ப்ரயோகம் செய்தருளினார்; ஸ்தோத்ரரத்நத்தில் (23) 'ந நிந்திதம் கர்ம ததஸ்தி லோகே' என்றவிடத்திற்கு வியாக்கியானஞ் செய்தருளாநின்ற பெரியவாச்சான்பிள்ளை– "ஆயிரமடங்கு என்னால் பண்ணப்படாதது யாதொரு நிந்திதகர்மமுண்டு, அதிபாதக மஹா பாதகாதிகள், அது சாஸ்த்ரத்திலுமில்லை; .... அநுஷ்டாதாக்கள் பக்கலில்லாத நிஷித்தங்களும் சாஸ்த்ரத்தில் காணலாமிறே." என்று அருளிச் செய்திருக்கிறார். தேசிகனும் ஸ்தோத்ர பாஷ்யத்தில்–"லோக்யத அநேநேதி லோக: – ப்ரமாணம்; தஸ்மிந் நாஸ்தி; அப்ராமாணிகமித்யர்த்த: அத்ர சாஸ்த்ரரூப ப்ரமாணவிசேஷே விவக்ஷா" என்றருளிச் செய்தனர். இவற்றால் ஆளவந்தாரும் லோகசப்தத்தை சாஸ்த்ரபரமாகவே கொண்டாரென்று விளங்கா நின்றது. இப்படி ஆளவந்தாரும் எம்பெருமானாரும் கொண்டது ஆழ்வாரருளிச் செயலை யடியொற்றியே யென்பது நிஸ்ஸந்தேஹம். இதனை மற்றுமொரு நிரூபணத்தினால் நிலை நாட்டுகிறோம்.

283. உபநிஷத்து பரப்ரஹ்மலக்ஷணம் கூறும்போது 'யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே'இத்யாதி வாக்யத்தினால் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்கள் மூன்றைமாத்திரமே சொல்லி வைத்திருக்கிறது. ஆனால் ஸ்வாமி எம்பெருமானாரும் ஆளவந்தாரும் மோக்ஷ ப்ரதத்வ மென்னும் ஒரு தொழிலையும் தனிப்பட அருளிச் செய்கிறார்கள்; எங்கே யென்னில்; ஸ்ரீ பாஷ்யத்தின் மங்கள ச்லோகத்தில் 'அகில புவந ஜந்ம ஸ்தேம பங்க' என்று ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்கள் மூன்றையுஞ் சொல்லி வைத்து உடனே இரண்டாவது பாதம் 'விநதவிவித பூதவ்ராதரக்ஷைகதீக்ஷே" என்பதாக அருளிச் செய்கிறார். இதனால் மோக்ஷ ப்ரதத்வம் சொல்லப்படுவதாக ச்ருதப்ரகாசிகாசார்யர் விவரித்தருளுகிறார்.

284. ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்நத்தில் (ச்லோ.20) 'ஜகதுத்பவஸ்திதி ப்ரணாச ஸம்ஸார விமோசந" என்று, ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களைச் சொல்லிவைத்து, மேலே ஸம்ஸாரவிமோசந பதத்தினால் மோக்ஷப்ரதத்வத்தைத் தனிப்பட அருளிச் செய்கிறார். "யதோ வா இமாநி பூதாநி" இத்யாதியான உபநிஷத் வாக்யத்தில் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களை மாத்திரமே சொல்லி வைத்துவைத்து மோக்ஷ ப்ரதத்வத்தைச் சொல்லாதது ஏனென்னில், இதை ரக்ஷணத்திலோ ஸம்ஹாரத்திலோ அடக்கி விடலாமென்கிற எண்ணத்தினாலேயே. ஆளவந்தாரும் எம்பெருமானாரும் அதைத் தனிப்பட அருளிச் செய்வது எதனாலென்னில்;

285. திருவாய்மொழியில் நம்மாழ்வார் 'பத்துடையடியவர்க் கெளியவன்' என்னும் பதிகத்தில் இரண்டாம் பாட்டில் 'வீடாந் தெளிதருநிலைமைய தொழிவிலன்' என்பதனால் மோக்ஷப்ரதவத்தைச் சிறப்பாக அருளிச்செய்தார். மோக்ஷமாகிற தெளிந்த நிலத்தைத் தருதலாகிற மோக்ஷப்ரதத்வ நிலைமையை எப்போதும் உடையவன் என்பது இந்தப் பாசுரத்தின் பொருள். தவிரவும் மோக்ஷப்ரதத்வத்தை உபதேசிப்பதற்கென்று தனியே ஒரு பதிகமும் அருளிச்செய்துள்ளார் நம்மாழ்வார்; அது 'அணைவதரவணைமேல்' (2–8) என்பது.

ஆகவே நம்மாழ்வாருடைய திருவுள்ளத்தில் எம்பெருமானுக்குச் சிறந்த லக்ஷணமாக மோக்ஷப்ரதத்வம் குடிகொண்டிருக்கின்றதென்பதையறிந்தே ஆளவந்தாரும் உடையவரும் அதுதன்னைச் சிறப்பாக வெடுத்தருளிச் செய்கிறார்களென்று அறியத்தக்கது.

286. மணவாளமாமுனிகள் யதிராஜ விம்சதியில் இரண்டாவது ச்லோகத்தில் எம்பெருமானாரை ஹம்ஸமாகவும் வண்டாகவும் அருளிச் செய்துள்ளார். 'ஸ்ரீரங்கராஜசரணாம்புஜ ராஜஹம்ஸம் என்றும் 'ஸ்ரீமத்பராங்குசபதாம்புஜ ப்ருங்கராஜம் என்றும். (அதாவது) ஸ்ரீரங்கநாதனுடைய திருவடித் தாமரைகளிலே ராஜஹம்ஸமாயிருப்பவர்; நம்மாழ்வாருடைய திருவடித் தாமரைகளிலே சிறந்த வண்டாக இருப்பவர் என்று கூறியவாறு. எம்பெருமானார் 'தென்னத்தியூரர் கழலிணைக்கீழ்ப் பூண்டவன்பாளன்' (இராமாநுச நூற்றந்தாதி–31) என்கிறபடியே தேவப் பெருமாள் திருவடிவாரத்திலே பேரன்பு பூண்டவராயிருந்தும் ஸ்ரீரங்கநாதனால் விசேஷகடாக்ஷம் செய்தருளப் பெற்றுத் தென் திருவரங்கம் சென்று சேர்ந்து 'யாவச்சரீரபாதம் அத்ரைவ' ஸ்ரீரங்கே ஸுகமாஸ்வ' (இவ்வுடல் விழுந்தனையும் இந்தத் திருவரங்கம் பெரிய கோயிலிலேயே இனிது வாழக்கடவீர்–சரணாகதிகத்யம்–19) என்று திருவரங்கச் செல்வனாரால் அநுக்ரஹிக்கப்பட்டு அப்பெருமானுடைய திருவடிவாரத்தின் கீழேயே இனிது வாழ்ந்தபடியினால் ஸ்ரீரங்கராஜ சரணாம்புஜ ராஜஹம்ஸம் என்றருளிச் செய்யலாயிற்று. இனி ஸ்ரீமத் பராங்குச பதாம்புஜப்ருங்கராஜம் என்ற விசேஷணத்தினால்– ஸ்வாமி நம்மாழ்வாரது திருவடித் தாமரைகளிலே வண்டுபோல் படிந்திருப்பவரென்றது.

287. ஆகவிப்படி ஸ்வாமியை ஹம்ஸமாக வும் வண்டாகவும் கூறினதிலிருந்து தேறுகின்ற ஸ்வாமியின் பெருமைகளை ஸ்வாபதேசார்த்த அநுபவப்ரணாளியாலே வெளியிடுகிறோம் இங்கு. ஆழ்வார்கள் தமது திவ்யப்ரபந்தங்களிலே அன்னங்களையும் வண்டுகளையும் தூதுவிடுவதாக அருளிச் செய்வதுண்டே; அங்கு எம்பெருமானார் போல்வாரான மஹாசார்யர்களையே தூதுவிடுவதாக உள்ளுறை பொருளாகையாலே அதைத் திருவுள்ளம்பற்றி ஸ்வாமியை யிங்கு அன்னமாகவும் வண்டாகவுமருளிச் செய்தது மிகப் பொருத்தம். அன்னத்தின் படிகளும் வண்டின் படிகளும் ஸ்வாமி பக்கலிலேல நிரூபிக்கப்படுகிறபடியைக் காணீர். ஹம்ஸத்திற்குள்ள தன்மைகள் ஸ்வாமிபக்கலிலே குறையற்றிருக்கின்றன. எங்ஙனே யென்னில்;

288. நீரையும் பாலையும் கலந்து வைத்தால் அவற்றைப் பிரிக்கவல்லமை யுடையது ஹம்ஸம் என்று பிரமாணங்களினால் அறிகின்றோம்; 'ஹம்ஸோ யதா க்ஷீரமீவ அம்புமிச்ரம்' என்பது முதலான வசனங்கள் காண்க. இதனால் ஹம்ஸமானது ஸாராஸார விவேகத்தில் மிகுந்தவல்லமையுடையது என்பது தேறும். ஸ்வாமிதாமும் 'அஸாரம் அல்பஸாரஞ் ச ஸாரம் ஸாரதரம் த்யஜேத், பஜேத் ஸாரதமம் சாஸ்த்ரே' என்றபடி ஸாராஸார மிச்ரமாயிருந்த சாஸ்த்ரங்களிலே அஸாரமாயும் அல்பஸாரமாயுமுள்ளவற்றை யெடுத்து தள்ளி மிகவும் ஸாரமானவற்றையே கைக்கொண்டவர். பாஹ்யமதங்களையும் குத்ருஷ்டிமதங்களையும் நிரஸித்து ஸ்ரீமத்வேத மார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய உபய வேதாந்த ப்ரவர்த்தந ப்ரவீணராயெழுந்தருளியிருந்து ரஹஸ்யார்த்தங்களில் பஹிரங்கமான அர்த்தங்களைத்

தள்ளி அந்தரங்கமான அர்த்தங்களைக் கொண்டருளினவர் என்பது இங்கு விவக்ஷிதம்.

289. அப்படிப்பட்ட அர்த்தங்களில் ஒன்று இங்கு எடுத்துக் காட்டுவோம்;– திருவாய்மொழி வியாக்கியானத்தில் பல இடங்களில் எம்பெருமானாருடைய நிர்வாஹம் என்று விலக்ஷணமான அர்த்தங்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன. அவற்றுள் ஒன்று கேண்மின்; 'உயர்வறவுயர்நலம்' என்கிற முதற் பாட்டினீற்றடியில் 'துயரறுசுடரடி' என்ற இடத்திற்கு "அடியார்களுடைய துக்கங்களை யெல்லாம் அறுக்கிற (அதாவது போக்கடிக்கிற) திருவடி" என்று எம்பெருமானார்க்கு முன்புள்ள ஆசாரியர்கள் அருளிச் செய்தார்களாகவும், எம்பெருமானார் அப்படியன்றிக்கே (அதாவது, துயரறுக்குஞ் சுடரடியென்று கொள்ளாமல்) 'துயரறும் சுடரடி' யென்று கொண்டு தனக்குண்டான துயரைத் தான் தவிர்த்துக் கொள்ளுந் திருவடிகள் என்று பொருளருளிச் செய்ததாகவும் வியாக்கியானமுள்ளது. பூருவர்கள் பணித்த அர்த்தத்திற் காட்டிலும் ஸ்வாமி பணித்த அர்த்தத்தில் என்ன சிறப்பு? என்பதை ஆராய்ந்து அறியவேணும்.

290. எம்பெருமான் அடியார்கள் படுந்துயரைத் தீர்க்கிறானென்பது இதிஹாஸ புராணாதிகளில் தேறின அர்த்தமே. அது மறுக்கத்தக்கதன்று. எம்பெருமானார் அதைத் தள்ளி வேறு பொருள் பணித்ததானது அப்பொருள் அஸம்பத்தம் என்கிற திருவுள்ளத்தினாலன்று; அதிற்காட்டிலும் மிகுந்த ஸ்வாரஸ்யம் பெற்று நெஞ்சையுருக்கும் படியான அர்த்தம் இது–என்பதே ஸ்வாமியின் திருவுள்ளம்.

291. அடியார்கள் துயருறுங்காலத்தில் எம்பெருமான் தானும் துயருற்றிருப்பதாக இதிஹாஸங்களினாலறிகின்றோம். துயர் உறுவது என்பது ஹேயகுணமாயிற்றே; ஸமஸ்த கல்யாண குணாத்மகனான எம்பெருமானிடத்தில் இந்த ஹேயகுணமிருப்ப தாக இசையலாமோ வென்று சங்கிப்பாருடைய சங்கையைப் போக்கிக் கொண்டே வால்மீகி பகவான் ஸ்ரீராமாயணத்தில் அயோத்யா காண்டத்தில் நகரத்து ஜனங்கள் இராமபிரானுடைய திருக்குணங்களைப் புகழ்ந்து கூறுவதாக இட்ட ஸந்தர்ப்பத்தில் 'பஹவோ ந்ருப கல்யாண குணா: புத்ரஸ்ய ஸந்தி தே' என்று திருக்கல்யாணகுணங்க ளையே தாங்கள் தாங்கள் தசரத சக்கரவர்த்தியிடம் எடுத்துக் கூறப்போவதாக ப்ரதிஜ்ஞை செய்வதை முன்னம் காட்டிவிட்டு, மேலே "வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருசம் பவதி துக்கித:" என்று (மனிதர்கள் துயர் உறுமிடத்து இராமபிரான்தான் துயருறுவ தாகச்) சொல்லி இதையொரு கல்யாண குணமாக காட்டி வைத்தார்.

292. அடியார்கள் படுந்துயரை அறுக்கிறான் பகவான் என்பது இருக்கட்டும்; அவ்வடியார்கள் துயர் தீரும் வரையில் தானும் துயருற்றவனாகவேயிருந்து அவர்கள் துயரற்ற பிறகே தானும் துயர் அற்றவனாகுகை என்னுமிப்பொருள் பகவத் குணாநுபவரஸிகர்களுடைய நெஞ்சை உருக்குமதாதலால் இச்சிறந்த பொருளை எம்பெருமானார் திருவுள்ளம் பற்றினாரென்க.

293. இத்திருக்குணத்தை வால்மீகி பகவான் ஸ்ரீராமாயணத்தில் ஒரிடத்திலன்று, பலவிடங்களிலும் மூதலிக்கிறபடி காணீர்;' 'அபிஷிச்யச லங்காயாம் ராக்ஷஸேந்த்ரம்

விபீஷணம், க்ருதக்ருத்யஸ் ததா ராமோ விஜ்வர: ப்ரமுமோத ஹ' (ஸம்க்ஷேபரா–185) என்ற ச்லோகத்தில் 'விஜ்வர:' என்கிற பதம் உயிரானது; விபீஷணாழ்வான் துயர் தீர்ந்து முடிசூடும்வரையில் பெருமாள் தாம் துயர் உற்றிருந்ததாகவும் அவனை முடிசூட்டியே தாம் துயர்தீரப் பெற்றதாகவும் நன்கு விளங்குகின்றதன்றோ விஜ்வர: என்னும் இப்பதம். இப்படிப்பட்ட ஸாரப்பொருள்களை விவேகித்து வெளியிடுவதனால் ஸ்வாமி ஹம்ஸமென்னத் தகுந்தவர்.

294. இன்னமும், சாந்தோக்ய உபநிஷத்தில் ஜாநச்ருதியின் உபாக்கியானம் ஒன்று ஓதப்பட்டிரா நின்றது. ஜாநச்ருதி யென்கிற க்ஷத்ரியன் மிக்க பெருஞ்செல்வம் படைத்தவனாகையாலே அன்னதானம் முதலியன விசேஷமாகச் செய்து கொண்டிருந்தான். ஆனால் அவனுக்கு ப்ரஹ்ம ஜ்ஞானமென்பது சிறிதுமில்லாமலிருந்து பல்லபல்லாக்ஷரென்கிற இரண்டு மஹரிஷிகள் அவனிடத்திலே இரக்கங்கொண்டு இவனுக்கு ப்ரஹ்மஜ்ஞானத்தையுண்டாக்க வேணுமென்றெண்ணி இரண்டு ஹம்ஸரூபிகளாய் அவன்மேலே பறந்து கொண்டு போகையில், பல்லனென்கிற ஹம்ஸம் பல்லாக்ஷனென்கிற ஹம்ஸத்தைப் பார்த்து 'ஜாநச்ருதிமஹாப்ரபுவின் மேலே நிழல் படாதபடி கவனித்துப்போ' என்று சொல்லிற்று. அது கேட்ட அந்த ஹம்ஸம், "இவன்மேல் நிழல் பட்டாலென்ன? அதனாலென்ன கெடுதல்? இவன் ரைக்வரைப் போல் ப்ரஹ்மஜ்ஞாநியா என்ன? ஞானஹீநனானவிவனை நாம் கௌரவிக்க வேணுமோ?" என்று அவஹேளனமாகச் சொல்லிற்று. அதைக் கேட்ட ஜாநச்ருதி துக்கங் கொண்டவனாய் அந்த ரைக்வரைத் தேடிச் சென்று அநுவர்த்தித்து ப்ரஹ்மவித்யையை உபதேசிக்கவேணுமென்று பிரார்த்தித்து அவரிடத்தில் உபதேசம் பெற்றானென்பது அவ்வுபாக்கியானத்தின் ஸாரம்.

295. இக்கதையின் படி ப்ரஹ்மஜ்ஞான ப்ராப்திக்கு ஹம்ஸம் ப்ரேரகமானது போல எம்பெருமானார் தாமும் அதற்கு ப்ரேரகர் என்பது அறியத் தக்கது. "பாருலகிலாசையுடையோர்க்கெல்லாம் ஆரியர்கள் கூறுமென்று பேசிவரம்பறுத்தார் பின்" என்று உபதேசரத்தினமாலையிலருளிச் செய்தபடி ஸ்வாமி நியமனம் தந்தருளாவிடில் இவ்வுலகில் ப்ரஹ்மஜ்ஞானப்ரசாரத்திற்கு வழியேயில்லையாமன்றோ.

296.எம்பெருமான் வேத சாஸ்திரங்களை வெளியிடத் திருவுள்ளம் பற்றியபோது ஹம்ஸரூபத்தைப் பரிக்ரஹித்தருளினதாக சாஸ்த்ரங்களினாலறிகிறோம்; 'அன்னமாய் நூல்பயந்தான்' என்றும் 'அன்னமதாயிருந்து அங்கு அறநூலுரைத்த' என்றும் ஆழ்வார்களும் அருளிச் செய்கிறார்கள். சாஸ்த்ரோபதேசத்திற்கு ஹம்ஸமாயிருத்தல் அவசியமாயினபடியாலே சாஸ்த்ரங்களை யுபதேசித்தவர்களில் தலைவரான எம்பெருமானாரை ஹம்ஸமென்றது பொருத்தமே.

297. ஹம்ஸத்தினுடைய இயல்வைச் சொல்லுமவர்கள் 'ந பத்நாதி ரதிம் ஹம்ஸ: கதாசித் கர்தமாம்பஸி' என்கிறார்கள்; அதாவது ஹம்ஸம் ஒருகாலும் சேற்று நீரில் கால் பொருந்தாதென்றபடி. அப்படியேயன்றோ எம்பெருமானார் படியும். திருவிருத்தத்தின் முடிவுப் பாசுரத்தில் "அழுந்தார் பிறப்பாம் பொல்லாவருவினை மாயவன் சேற்றள்ளல்

பொய்ந்நிலத்தே'' என்று இந்த ஸம்ஸார நிலமே சேற்று நிலமாகச் சொல்லப்பட்டுள்ளது; இதில் கால் பொருந்தாதவர்களில் தலைவராயிற்று எம்பெருமானார்.

298. திவ்ய தேசங்களை வருணிக்கும் போது ஆழ்வார்கள் அன்னம் மாதர்களின் நடையைப் பின்சென்று நடப்பதாகக் கூறுகிறார்கள்; 'பெடையோடன்னம் பெய்வளையார்தம் பின் சென்று நடையோடியலி' என்று திருமங்கையாழ்வார் திருநறையூர்ப்பதிகமொன்றில் கூறியுள்ளது காண்க. ஸ்வாமிதாமும் 'அன்னநடைய அணங்கான பிராட்டியினுடைய நடையைப் பின் செல்பவர். (அதாவது) பிராட்டியின் நடையாவது நடத்தை; சேதர்களைக் குறித்து எம்பெருமானிடத்தில் மன்றாடிப் பேறு பெறுவிப்பதே பிராட்டியினுடைய முக்கியமான நடத்தையாகும். அதை ஸ்வாமி தாம் அநுசரிக்கையாவது–தாமும் அப்படியே எம்பெருமானிடத்தில் மன்றாடி இன்றிருக்கும் நம்போல்வார்க்கும் பேறு பெறுவித்ததேயாம். இவ்விஷயத்தை ஸ்ரீமத் வேதாந்ததேசிகன் ந்யாஸதிலகத்தில் 'உக்த்யா தநஞ்ஜய விபீஷண லக்ஷ்யயா தே ப்ரத்யாய்ய லக்ஷ்மணமுநேர் பவதா விதீர்ணம், ச்ருத்வா வரம்' என்ற ச்லோகத்தினாலும், மணவாள மாமுனிகள் யதிராஜ விம்சதியில் 'காலத்ரயேபி ....க்ஷேமஸ் ஸ ஏவ ஹி யதீந்த்ர, பவத் ச்ரிதாநாம்' என்ற ச்லோகத்தினாலும் வெளியிட்டருளினார்கள். அவற்றின் வியாக்கியானங்களிலே விரியவுரைத்தோம், கண்டு கொள்வது. பொதுவாகவே ஆசார்யர்களின் புருஷகாரமில்லாமல் எம்பெருமான் பேறு தரமாட்டானென்பதை 'தத்தே ரங்கீ நிஜமபி பதம் தேசிகாதேச காங்க்ஷீ' (ந்யாஸதிலகே) என்ற ஸ்ரீஸூக்தியினால் கல்வெட்டாக வருளிச் செய்தார். எம்பெருமானார்க்கு இது விசேஷ நிரூபகமென்றுணர்க.இங்ஙனே மற்றும் பலவகையான பொருத்தங்களும் உய்த்து உணர்க. இனி ''ஸ்ரீமத் பராங்குச பதாம்புஜ ப்ருங்கராஜம்'' என்று வண்டாக அருளிச் செய்ததன் பொருத்தங்களை நிரூபிப்போம்.

299. வண்டு மதுவ்ரத மென்று பேர் பெற்றிருக்கும். தேன் தவிர வேறொன்றைக் கொள்ளாது என்றபடி. அதுபோல, 'உளங்கனிந்திருக்குமடியவர் தங்களுள்ளத் துளூறிய தேன்' என்றும், 'தேனை நன்பாலைக் கன்னலையமுதை' என்றும், 'எனக்குத் தேனே பாலே கன்னலே அமுதே' என்றும் பலவிடங்களிலும் தேனாகச் சொல்லப்பட்ட எம்பெருமானையே விரும்பி மற்றொன்றைக் கண்ணெடுத்துப் பாராமல் பகவதநுபவத்தையே வ்ரதமாகக் கொண்டிருந்தவர் எம்பெருமானார்.

300. 'வண்டினங்கள் காமரங்களிசை பாடும்' என்று குலசேகராழ்வாரும், 'யாழினிசை வண்டினங்கள் ஆளம் வைக்கும்' என்று பெரியாழ்வாரும், 'வரிவண்டுதேதெனவென்று இசைபாடும்' என்று திருமங்கையாழ்வாரும் இப்படி மற்றும் பலரும் பணித்தபடியே யாழினிசை போன்ற இசைகளைப் பாடுவதையே இயல்வாகவுடையதாயிருக்கும் வண்டு; ஸ்வாமி தாமும் ' யாழினிசை வேதத்தியல் 'பண்ணார் பாடலாயிரம்' என்னப்பட்ட திருவாய்மொழி முதலிய திவ்யப்ரபந்தங்களின் கானத்தையே போது போக்காக வுடையராயிருந்தவர். ''தமிழ் மறைக ளாயிரமும் மொய்ம்பால் வளர்த்த இதத்தாய் இராமானுசன்'' ''பண்டருமாறன் பசுந்தமிழ் ஆனந்தம் பாய்மதமாய் விண்டிட எங்கள் இராமானுசமுனிவேழம்'' என்றவை காண்க.

301. வண்டு வடமொழியில் சஞ்சரீக மென்று பேர் பெற்றிருக்கும்; ஓரிடத்தில் தங்கியிராது; மதுவுள்ளவிடமெங்கும் பறந்து திரியுமது. அதுபோல ஸ்வாமிதாமும் "ஸ்ரீரங்கம் கரிசைலமஞ்ஜநகிரிம் தார்க்ஷ்யாத்ரி ஸிம்ஹாசலௌ ஸ்ரீகூர்மம் புருஷோத்தமஞ் ச பதரீநாராயணம் நைமிசம், ஸ்ரீமந்த்வாரவதி ப்ரயாக மதுராயோத்யா கயா: புஷ்கரம் ஸாலக்ராமகிரிம் நிஷேவ்ய ரமதே ராமாநுஜோயம் முநி:" என்கிறபடியே 'பதியே பரவித் தொழுந்தொண்டர்களில் தலைவராயிருந்தார்.

302. வண்டு எந்த ஸமயத்தில் எங்குச் செல்ல வேணுமென்று நினைத்தாலும் தட்டுத் தடங்கலின்றியே புகுந்து ரமிக்கும்; ஸன்னிதிகளில் கர்ப்பக்ருஹங்களினுள்ளும் எம்பெருமான் திருமுடிமீதும் தாராளமாகப் புகக்காணா நின்றோம். அதுபோல, 'பின்னிட்ட சடையானும் பிரமனுமிந்திரனும் துன்னிட்டுப் புகலரிய' என்னும்படி திருவாசல்களிலே ஸேவாபரரானவர்கள் நிறைந்து தலை நுழைக்க வொண்ணாதபடிநெருக்க 'மன்னிய தென்னரங்காபுரி மாமலை மற்றுமுவந்திடுநாள்' என்னும்படியவதரித்தருளின எம்பெருமானார் கோயில் திருமலை பெருமாள் கோயில் முதலான எந்த திவ்யதேசங்களிலும் தடையும் சங்கையுமொன்றுமின்றிக்கே அதிகாரச் செல்வத்துடனே உள்ளே புகுந்து ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலா வடிமை செய்து வாழ்ந்தவர் காண்மின்.

303. வண்டு சோலைகளிலேயே சுழலமிடும்; எம்பெருமானார் தாமும் 'ஆராமஞ் சூழ்ந்தவரங்கம்', 'சிந்து பூ மகிழுந் திருவேங்கடம்', 'விரையார் பொழில் வேங்கடம்' என்னும்படியாகச் சோலைகள் மிக்க தலங்களிலேயே சுழலமிட்டவர்

304. இராமானுச நூற்றந்தாதியில் 'உணர்ந்த மெய்ஞ்ஞானியர் யோகந்தொறும்' என்கிற பாட்டின் ஈற்றடி "குணந்திகழ் கொண்டலிராமானுசனெங் குலக் கொழுந்தே" என்றுள்ளது. இதனால் ஸ்வாமி ஒரு காளமேகமாகக் கூறப்பட்டுள்ளார். காளமேகத்திற்கும் ஸ்வாமிக்குமுள்ள உவமைப் பொருத்தங்கள் சில நிரூபிக்கப் படுகின்றனவிங்கு.

305. மேகமானது கடல் நீரைப் பருகி யெழுந்து வர்ஷிக்கின்ற தென்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன. எம்பெருமானாராகிற மேகம் 'நிர்மத்ய ச்ருதிஸாகராத்' என்கிற ப்ரமாணத்தில் ஸாகரமாகச் சொல்லப்பட்ட வடமொழி வேதத்தையும், 'நமாம்யஹம் த்ராவிட வேதஸாகரம்' என்கிற ப்ரமாணத்தில் ஸாகரமாகச் சொல்லப்பட்ட தென்மொழி வேதத்தையும் அவகாஹித்து அவ்வுபய வேதார்த்தங்களாகிற தீர்த்தங்களை வர்ஷித்தபடி.

306. காளமேகமானது, 'மேகங்களோ வுரையீர், திருமால் திருமேனியொக்கும் யோகங்களுங்களுக்கு எவ்வாறு பெற்றீர்' என்கிற திருவிருத்தப் பாசுரப்படிக்கும் 'கண்ணன்பால் நன்னிறங்கொள் கார்' என்கிற பெரிய திருவந்தாதிப் பாசுரப்படிக்கும் திருமாலின் திருமேனியோடொத்த நிறத்தையுடைத்தாயிருக்கும்; ஆதிசேஷாவதாரபூதரான ஸ்வாமியின் திருமேனி பால் போன்றதாயிருக்கச் செய்தேயும் 'க்ஷீராம்போதேர் ஜடரமபிதோ தேஹபாஸாம் ப்ரரோஹை: காலோந்மீலத் குவலயதளரத்வைத மாபாதயந்தம்' (சம்பூ ராமாயணம்) என்று போஜன் சொன்னபடியும், 'அபி பணிபதிபாவாத்சுப்ரம் அந்தச் சயாலோர் மரதகஸுகுமாரை: ரங்கபர்த்துர் மயூகை:, ஸகல ஜலபதிபாந

ச்யாமஜீமூதஜைத்ரம் புலகயதி விமாநம்' (ஸ்ரீரங்கராஜஸ்தவே) என்று பட்டர் அருளிச் செய்தபடியும் கார்முகில் வண்ணனான கண்ணனை இடைவீடின்றி உள்ளே கொண்டிருக்கையாலே அந்தக் கரிய திருமேனியின் நிழலீட்டாலே (எம்பெருமானா ருடைய திருமேனியும்) கார்முகில் வண்ணமாகவே காணப்படுமென்றுணர்க.

307. மேகமானது ஸகல தேசங்களி லுமுள்ள ஸகல ப்ராணிகளையும் ஸம்ரக்ஷிக்கக் கடமைப்பட்டதாகையாலே 'மேகங்களோ!......... உயிரளிப்பான் மாகங்களெல்லாந்திரிந்து நன்னீர்கள் சுமந்து' என்று திருவிருத்தத்தில் அருளிச் செய்தபடியே ஆகாசப்பரப்பெங்கும் ஸஞ்சரிக்கும்; ஸ்வாமி தாமும் ஸகல தேசங்களிலுமுள்ள ஸகலாத்மாக்களையும் ஸம்ரக்ஷிக்க வேண்டி 'ஸ்ரீரங்கம் கரிசைலம் அஞ்ஜநகிரிம் தார்க்ஷ்யாத்ரி ஸிம்ஹாசலௌ ஸ்ரீகூர்மம் புருஷோத்தமஞ்ச பதரீநாராயணம் நைமிசம், ஸ்ரீமத் த்வாரவதீ ப்ரயாக மதுராயோத்யா கயா புஷ்கரம் ஸாலக்ராமகிரிம் நிஷேவ்ய ரமதே ராமாநுஜோயம் முநி:' என்கிறபடியே தென்னாட்டிலும் வடநாட்டிலும் உள்ள ஸகல திவ்யதேச திவ்ய க்ஷேத்ரங்களி லும் ஸஞ்சரித்து ஸ்ரீஸூக்தி அம்ருதவர்ஷங்க ளினால் ஸகல ப்ராணிஸஸ்யங்களையும் செழித்தோங்கி வளரச் செய்தருளினர்.

308. கடலிலுள்ள நீரானது நம்மால் ஸாக்ஷாத்தாகக் கொள்ளப்படுமாயின் க்ஷார ஜலமாகையாலே ஒன்றுக்குமுதவாததாயிருக் கும்; அதுதானே மேகம் வாயிலாக வருமாயின் பரம போக்யமாயிருக்கும். ஆகவே, மேகமானது அபோக்யமான நீரையும் பரம போக்யமாக்கித் தருமது என்பது தேறிற்று. அதுபோல சாஸ்த்ரங்களாகிற கடல்களிலுள்ள அர்த்தங் களை (வேதார்த்தங்களை) நாம் ஸாக்ஷாத்தாக ஸ்வீகரிக்கப் பார்த்தோமானால் அவை நமக்கு மதுரமாயிருக்கமாட்டா; அவற்றையே நாம் வேதார்த்த ஸங்க்ரஹம் ஸ்ரீபாஷ்யம் முதலிய ஸ்வாமியின் ஸ்ரீஸூக்திவாயிலாகக் கொள்வோ மாயின் அவை பரம போக்யமாயிருக்கும் படியைக் காணாநின்றோம். ஆகவே, க்ஷாரஜலம் போன்ற சாஸ்த்ரார்த்தங்களைப் பரமமதுரமாக்கியளிக்கும் விலக்ஷண மேகம் நம் ஸ்வாமி என்றதாயிற்று.

309. மேகமானது ஒருவருடையவோ சிலருடையவோ வேண்டுகோளினாலல்லாமல் இயல்பாகவே உலகுக்கு உதவி செய்யுமது. அதுபோல எம்பெருமானார் அநுவ்ருத்தி ப்ரஸந்நாசார்ய்களென்னப்பட்ட மற்ற ஆசாரியர்களைப் போலல்லாமல் க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யரென்று அஸாதாரணமான விருதைப் பெற்றவராய், 'ஓராண்வழியாய் உபதேசித்தார் முன்னோர், ஏராரெதிராசர் இன்னருளால்–பாருலகில், ஆசையுடையோர்க் கெல்லாமாரியர்காள் கூறுமென்று பேசி வரம்பறுத்தார் பின்' (உபதேசரத்தினமாலை) என்று மணவாள மாமுனிகளருளிச் செய்யும் படியாக அபேக்ஷாநிரபேக்ஷமாகவே ஸம்ஸாரி சேதநஸமுஜ்ஜீவனத்தில் ஊற்றமுடையவர் என்பது உணரத்தக்கது.

310. ஏரி குளம் குட்டைகளில் தீர்த்தம் எவ்வளவு நிரம்பியிருந்தாலும் சாதகபக்ஷிக ளானவை அங்கு வாய் வைக்கமாட்டா; ஸாக்ஷாத்தாக மேகத்தின் வாயினின்றும் வரும் நீரையே பருகி விடாய் தீரப்பெறும். அதுபோல் ஆழ்வான் ஆண்டான் எம்பார் முதலான சாதகவ்ருத்திகளான அடியார்கள் ஸ்வாமி திருவாக்கில் நின்று வெளிவருகின்ற

திவ்யார்த்தங்களையே எதிர்பார்த்திருந்து அவற்றையே அநுபவித்து ஆனந்திப்பர்கள். ஸ்வாமி ஸூக்தியநுபவமே ஸகல சாஸ்த்ர அநுபவமென்றிருப்பர்கள்.

311. மேகமானது கடலின் நீரைப்பருகிக் கொண்டு அந்தக் கடல் தன்னிலும் பெய்யும்படியைக் காண்கிறோம். 'நாம் கொண்டவிடத்தில் எதற்காக வர்ஷிக்க வேணும்' என்றிராமல் கொண்டவிடத்திலும் பெய்யுமது மேகம் என்றதாயிற்று. எம்பெருமானாருமப்படியே; ஸ்வாமி தாம் திருமாலை யாண்டானிடத்தில் திருவாய்மொழிக்குப் பொருள் கேட்டு வந்தாரென்பது பிரஸித்தம். கொண்டவிடமாகிய அந்தவிடத்திலும் இந்த மேகம் பெய்தது. அதாவது, 'அறியாக் காலத்துள்ளே அடிமைக்கண் அன்பு செய்வித்து, அறியாமாமாயத்தடியேனை வைத்தாயால்' என்பது முதலான திருவாய் மொழிப் பாசுரங்களுக்கு அரியபெரிய அழகிய பொருளை ஸ்வாமிதாம் திருமாலை யாண்டானுக்கே எடுத்துரைக்கும்படி யானமை காண்க.

312. வயல்களுக்கு நதியிலிருந்தும் ஏரிகளிலிருந்தும் எவ்வளவு நீர் பெருகினாலும் ''பைங்கூழ்கள் மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும்'' என்று குலசேகராழ்வாரருளிச் செய்தபடி மேகம் பெய்யாவிடில் பயிர் செழிப்புறாது; மழை பெய்தாலல்லாது லோக க்ஷேமம் நன்கு அமையாது; அது போல, ச்ருதி ஸ்மிருதீதிஹாஸ புராணங்களும் ஆழ்வார் அருளிச் செயல்களும் ஸ்ரீமந்நாதமுனிகள் ஆளவந்தார் போன்ற ஆசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளுமிருந்தாலும் எம்பெருமானார் ஸ்ரீஸூக்திகளினாலேயே உலகம் க்ஷேமம் அடைந்துள்ளது. இங்கு, 'எம்பெருமானார் தரிசனமென்றே யிதற்கு, நம்பெருமாள் பேரிட்டு நாட்டி வைத்தார், அம்புவியோர் இந்தத் தரிசனத்தை யெம்பெருமானார் வளர்த்த, அந்தச் செயலறிகைக்கா' என்ற உபதேசரத்தினமாலைப்பாசுரமும் 'த்ராதம் ஸம்யக் யதீந்த்ரைரிதமகிலதம: கர்சநம் தர்சநம் ந:' என்கிற தேசிகஸூக்தியும் ஸ்மரிக்கத்தகும்.

313. ''மாமுத்த நிதி சொரியும் மா முகில்காள்'' என்று ஆண்டாளருளிச் செய்தபடியே மேகம் முத்துக்களையும் நவநிதிகளையும் வர்ஷிக்கும். ஸ்வாமியும் முத்துப் போன்ற ஸ்ரீஸூக்திகளை நவ நிதிகளென்னும்படி அநுக்ரஹித்தருளினார். நிதிகள் ஒன்பதாயிருப்பது போல ஸ்வாமி ஸாதித்த திவ்ய க்ரந்தங்களும் ஒன்பதேயாகும்; ஸ்ரீபாஷ்யம், வேதாந்ததீபம், வேதாந்தஸாரம், கீதாபாஷ்யம், வேதார்த்தஸங்க்ரஹம், சரணாகதிகத்யம், ஸ்ரீரங்ககத்யம், ஸ்ரீவைகுண்ட கத்யம், நித்யம்–என்று.

314. மேகம் வர்ஷிப்பதனால் உலகங்கட்கு நன்மையாவது போலவே பல பொருள்களுக்குத் தீமையுண்டாவது முண்டு; 'த்வயி வர்ஷதி பர்ஜந்ய! ஸர்வே பல்லவிதா த்ருமா:, அஸ்மாக மர்க்கவ்ருக்ஷாணாம் பூர்வபத்ரேஷு ஸம்சய:' என்கிற ச்லோகம் ப்ரஸித்தம். ஆண்டாளும் நாச்சியார் திருமொழியில் 'நீர்காலத்து எருக்கில் அம்பழவிலை போல் வீழ்வேனை' என்றருளிச் செய்தாள். எருக்கஞ்செடி முதலானவை மழையினால் அழிந்தொழியும்படியைக் காணாநின்றோம்; அப்படியே எம்பெருமானா ராகிற மேகத்தின் ஸ்ரீஸூக்தி வர்ஷங்களினால் ''நாரணனைக் காட்டிய வேதம் களிப்புற்றது, தென்குருகை வள்ளல் வாட்டமிலா வண்டமிழ் மறை வாழ்ந்தது'' என்று பேசும்படியான வாழ்ச்சியைப் போலவே, ''நாட்டிய நீசச் சமயங்கள் மாண்டன'' என்றும், ''தற்கச் சமணரும் சாக்கியப்

பேய்களும் தாழ்சடையோன் சொற்கற்ற சோம்பரும் சூனிய வாதரும், நான்மறையும் நிற்கக் குறும்பு செய் நீசரும் மாண்டனர்'' என்றும், ''சாருவாகமத நீறு செய்து சமணச் செடிக்கனல் கொளுத்தியே'' என்றும் பேசும்படியாகப் பல புறச் சமயிகளின் அழிவையும் காணா நின்றோமே. இங்ஙனே மற்றும் பல உவமைப் பொருத்தங்களும் உய்த்துணர்க.

315. பரவ்யூஹ விபவ அந்தர்யாமி அர்ச்சாவதாரங்களென்கிற எம்பெருமானது பஞ்ச ப்ரகாரங்களில் விபவாவதாரத்தைப் பற்றிப் பலர் ஆக்ஷேபங்கள் செய்வதுண்டு; மத்ஸ்ய கூர்ம....... ராமக்ருஷ்ணாதியவதாரங் களே விபவாவதாரங்களெனப்படுகின்றன. இவ்வவதாரங்களை எம்பெருமான் செய்து பல பல சேஷ்டிதங்களை ப்ரகாசிப்பித்தருளி யிருப்பதை நாம் இதிஹாஸபுராணாதிகளாலே அநுபவித்து ஆனந்தியாநிற்கிறோம். வெண்ணெயுண்டான், மண்ணையுண்டான், எருதடர்த்தான்; மருதிறுத்தான் என்றிப்படி பல சேஷ்டிதங்களை நாம் அநுபவித்து உன் குழையாநின்றோம். இதைப் பரிஹஸிக்கின்ற பிறர் கூறுவதென்ன வென்றால், ''பகவான் அவதாரம் செய்தானென்பதே பெரும் பொய்யாயிருக்க அவதார சேஷ்டிதங்கள் என்பது அடியோடு அஸம்பாவிதம்'' என்கிறார்கள். அவதாரம் செய்தானென்பது எதனால் பொய்! என்று கேட்டால் அதற்குச் சொல்லுகிறார்கள்–பிறப்பு கருமத்தினால் ஏற்படுகிறது; ஸம்ஸாரிகளான நாம் கருமங்களைப் பண்ணி அவற்றின் பலனாகப் பிறக்கிறோம்; கருமங்களுக்கு வசப்படாதவ னான பகவான் எதற்குப் பிறக்க வேணும்? நாமும் பிறக்கிறோம்; அவனும் பிறக்கிறான் என்றால் நம்மில் அவனுக்கு என்ன ஏற்றம்? பிறவாமலே அவன் எதையும் செய்ய வல்லவனாயிருக்க; பிறந்து செய்யக் கூடிய காரியந் தான் என்ன இருக்கிறது? என்று இங்ஙனே பலவும் சொல்லுகிறார்கள். வைதிகர்களும் ஆஸ்திகர்களுமானவர்கள் 'அஜாயமாநோ பஹுதாவிஜாயதே' என்பது முதலான ச்ருதிப்ரமாணங்களையும் அவற்றுக்கு உபப்ரும்ஹணங்களான இதிஹாஸ புராணங்களையும் தஞ்சமாகக் கொள்ளக் கடமைப் பட்டவர்களாதலால் அவதாரங்களைப் பொய்யென்று கனவிலும் நினைக்க ப்ரஸக்தியில்லை. பொய்யென்பவர் கள் கூறும் துராக்ஷேபங்களுக்கு த்ருப்திகரமாக ஸமாதானங்களும் சொல்லவல்லோம்.

316. புண்யபாபரூப கருமங்களின் பலனாகவே பிறக்க வேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை; ஸம்ஸாரிகளின் பிறப்புக்குக் கருமம் காரணமாகிறாப்போலே ஸர்வேச்வரனுடைய பிறவிக்குக் கருணை காரணமாகின்றது. உலகத்திலே கரும பலனாகத் தரித்ர ஜன்மம் பெற்றவன் தன் வயிறு வளர்க்கைக்காக மூட்டை சுமக்கிறான், மற்றும் பலவும் செய்கிறான்; அக்காரியங்க ளையே ஸமய விசேஷங்களில் தனிகர்களும் உதாரர்களுமான மஹா புருஷர்கள் கேவலம் கருணையினாலே செய்வதை எங்கும் காணாநின்றோம். இதை யாரும் அபலாபம் செய்யமுடியாது. எங்கும் யாவரும் அநுபவத்திற் காணலாமிதனை. ஆகவே கருமந் தூண்டச் செய்யுங் காரியங்கள் கருணை தூண்டச் செய்யப்படுவதும் ஸம்பாவிதமேயொழிய அஸம்பாவிதமன்றென்பது தெளியலாம். இவ்வடைவில் எம்பெருமானுடைய பிறவிகளும் கருணையடியாகத் தோன்றுகின்றன வென்று சாஸ்த்ரங்கள் சொல்லுவதானது நன்கு நம்பத் தகுந்ததேயாகும்.

317. அவாப்தஸமஸ்தகாமனான அச்சுதன் பிறந்து படைக்கவேண்டிய பேறு என்ன இருக்கிறது? ஏதாவது இருந்தாலும், ''ஸத்யகாம:, ஸத்யஸங்கல்ப:' என்று போற்றப்பட்ட அப்பெருமானுக்கு ஸங்கல்பத்தால் ஸாத்யமாகாதது எதுவுமிருக்க மாட்டாதே. அப்படி ஸங்கல்பத்தால் ஸாத்யமாகாதது ஏதாவதிருந்தாலன்றோ அதற்காகப் பிறக்க வேணும். ஸங்கல்பத்தால் ஸாத்யமாகாததவையும் சிலவுண்டென்று கொண்டால் அப்போது அவனை ஸத்யஸங்கல்பனென்று கொள்வதற்கே இடமில்லையே என்கிற ஆக்ஷேபங்கள் தோன்றுகின்றன. விவேகிகள் ஆராய்ந்து பார்த்தால் இவையுக்தமான ஆக்ஷேபங்களே யென்று கொள்ள நேரும். ராமாவதாரத்திற்கு அவதாரிகை கூறுகின்ற ஸ்ரீராமாயணம் என்ன கூறுகிறதென்னில், தேவர்களெல்லாரும் இராவணனால் தாங்கள் படுமிடர்களை ஸ்ரீமந்நாராயணமூர்த்தியிடம் முறையிட்டுக் கொண்டதாகவும், அப்பெருமான் தான் தசரதாத்மஜனாயவதரித்து ராவணஸம்ஹாரம் செய்யத் திருவுள்ளம்பற்றி அத்தேவர்க ளுக்கு ஏதோ கட்டளையிட்டு அபயமளித்து அனுப்பினதாகவும் கூறுகின்றது. இதைக் காணும்போது நமக்குங் கூடவொன்று தோன்றுகின்றது; அது யாதெனில், 'பொல்லா அரக்கனைக் கிள்ளிக்களைந்தானை' என்று ஆண்டாளருளிச் செய்கிறபடி அவலீலையாகத் தொலைக்கத் தக்க இராவணனுக்காக நாட்டிற் பிறந்துபடாதனபட வேணுமோ? தேவர்கள் தங்கள் கிலேசங்களை விண்ணப்பஞ் செய்தவுடனே தன்னுடைய ஸத்யஸங்கல்பத்வசக்தியினாலே அந்த க்ஷணத்திலேயே ராவண ஸம்ஹாரத்தை ஸங்கல்பித்து ''ஓ தேவர்களே! இராவணன் தொலைந்தான்; சுகமாக வீடுபோய்ச் சேருங்கள்'' என்று சொல்லியிருக்கலாமே, ஸர்வசக்தனான ஸர்வேச்வரனுக்கு இது அரிதன்றே. எளிதாகச் செய்து முடிக்கத்தக்க இக்காரியத்திற்காக நாட்டிற் பிறந்தும் படாதன பட்டும் செய்ததெல்லாம் எதற்காக? ஒரு காரியத்தை மிகவெளிதாகச் செய்து தலைக்கட்டவல்ல சக்தி வாய்ந்த வொருவன் அதனை அருமைப்பட்டுச் செய்ய முயல்வனா? அருமைப்பட்டுச் செய்ததாக ஒருவர் எழுதி வைத்தால் அதை நம்ப முடியுமோ?—என்றிப்படி யெல்லாம் மனத்தில் தோன்றிவிடக்கூடும்.

318. அயோத்யாகாண்டத்தின் உபக்ரமத்தில் 'ஸ ஹி தே வைருதீர்ணஸ்ய ராவணஸ்ய வதார்த்திபி:, அர்த்திதோ மாநுஷே லோகே ஜஜ்ஞே விஷ்ணுஸ் ஸநாதந:' என்று சொல்லப்படுகிறது. செருக்கிக் கிளர்ந்த இராவணனை வதை செய்ய வேண்டிய தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்கியே விஷ்ணுபகவான் இராமனாகத் திருவவதரித்தானென்பது இந்த ச்லோகத்தின் பொருள். ''யா கம்ஸமுக்க்யந்ருப கீட நிபர்ஹண'' (அதிமாநுஷஸ்தவே) என்று ஆழ்வானருளிச் செய்தபடியே ஈ யெறும்பு கொசு முதலியவற்றை நசுக்குதல் போன்ற ராவணகம்ஸ சிசுபாலாதி வதத்திற்காக ஸர்வசக்தன் ஓடிவந்து அவதாரங்கள் செய்கிறானென்றால் இது மனஸ்ஸமாதனமற்ற விஷயமாகத் தானிருக்கிறது. இதைப் பற்றி ஸ்வாமி யெம்பெருமானார் திருவுள்ளம்பற்றி யிருக்கின்ற விஷயம் இங்குத் தெரிவிக்கப் படுகிறது.

319. பகவத்கீதையில் நான்காவது அத்யாயத்தில் தன்னுடைய அவதாரத்தைப் பற்றி அர்ஜுனனுக்குச் சில மருமங்களை யுணர்த்த வெண்ணிய கண்ணபிரான்

ஏதோவொன்றைப் பேசி அர்ஜுனனைக் கேள்விகேட்கப் பண்ணி ''பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம், தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகேயுகே'' என்றருளிச் செய்தான். ஸாதுக்களை ரக்ஷித்தல், துஷ்டர்களைச் சிக்ஷித்தல், அறநெறி குலையாது காத்தல் ஆகிய மூன்றும் தன்னுடையவதாரத்திற்கு ப்ரயோஜநமாக இந்த ச்லோகத்தில் பணிக்கப்பட்டுள்ளது. இவை மூன்றும் ஸங்கல்பத்தாலே நிர்வஹிக்க முடியாதவையோ?

320. ''ஸாதவ: பரித்ராதா பவந்து, துஷ்க்ருதோ விநஷ்டா பவந்து, தர்மஸ் ஸம்ஸ்தாபிதோ பவது'' என்று ஸங்கல்பித்தருளினால் ஆகாததுண்டோ? ஸகலப்ரபஞ்சங்களினுடையவும் ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களையெல்லாம் ஸங்கல்ப மாத்திரத்தினால் நிர்வஹித்துக் கொண்டு போருவதாகத் தானே வேதாந்த சாஸ்த்ரம் முறையிடுகின்றது. ''அகிலபுவநஜந்மஸ்தேம பங்காதிலீலே'' என்பது தான் ஸ்ரீபாஷ்ய மங்களச்லோகம். 'ஸ்வஸங்கல்பமாத்ராவக்லப்த ஜகஜ்ஜந்மஸ்திதி த்வம்ஸாதிகே ஸ்ரீமதி விஷ்வக்ஸேநே' என்பது ஸ்ரீ வைகுண்ட கத்யஸூக்தி. விஷ்வக்ஸேநனே தன்னுடைய ஸங்கல்பமாத்ரத்தினால் ஜகத் ஸ்ருஷ்டிஸ்திதி லயாதிகளை நடத்திக் கொண்டு போகிறானென்றால் ஸர்வேச்வரனைப் பற்றிச் சொல்ல வேணுமோ? ஆகவே ஸாது பரித்ராணாதிகளுக்காக நேரே ஓடிவந்து பிறக்கிறானென்றால் இந்த வீண் ப்ரயாஸம் எதற்காக? என்றெழுகிற ஆக்ஷேபத்தை ஸ்வாமி யெம்பெருமானார் அற்புதமாகப் பரிஹரித்தருளுகிறார்.

321. துஷ்க்ருத் விநாசநமென்பது(துஷ்ட ஜநஸம்ஹாரம்) ஸங்கல்பஸாத்யமாலகலாம்; ஸாது பரித்ராணம் ஒருகாலும் ஸங்கல்ப ஸாத்யமாகாது என்றருளிச் செய்கிறார் ஸ்வாமி. ஸாது பரித்ராணம் ஏன் ஸங்கல்ப ஸாத்யமாகாதென்னில்; ஸாதுக்களாவார் யாவர்? அவர்களின் பரித்ராணமென்பது யாது? என்று விமர்சித்தால் இது ஸங்கல்ப ஸாத்யமாகதென்னுமிடம் தன்னடையே விளங்கிற்றாகுமென்று கீதாபாஷ்யத்தில் ஸாதுக்களின் ஸ்வரூபத்தை நன்கு விவரித்தருளுகிறார்; ஸ்ரீபாஷ்யத்தில் ('அந்தஸ் தத்தர்மோபதேசாத்' என்ற ஸூத்ரபாஷ்யத்தில்) ஸாது பரித்ராணம் ஸங்கல்பஸாத்யமாகாது என்று முக்தகண்டமாகாவருளிச் செய்கிறார். எம்பெருமானைக் கண்ணாரக் காணவேணும், அவனோடு வாயாரப் பேசவேணும், அவனது அமுதமொழிகளைச் செவியாரப் பருகவேணும். அவனைத்தழுவி முழுசிப் பரிமாற வேணும்– என்றிப்படியெல்லாம் பாரிப்பவர்களே ஸாதுக்களாவார் என்கிறார். இங்ஙனே குதூஹலமுள்ளவர்களை எம்பெருமான் ஸங்கல்பத்தாலே எங்ஙனம் பரித்ராணம் பண்ண முடியுமென்று விமர்சிக்க வேணும். இவற்றுக்காக நேரில் வந்துதானேயாக வேண்டும்.

322. இது கஜேந்திராழ்வானுடைய கதையினால் ஸுஸ்பஷ்டமாகிறதென்று நம்மாழ்வார் திருவுள்ளம்பற்றி ''மழுங்காத வைந்நுதிய சக்கர நல்வலத்தையாய், தொழுங்காதல்களிறளிப்பான் புள்ளூர்ந்து தோன்றினையே, மழுங்காத ஞானமே படையாக மலருலகில், தொழும் பாயார்க்கு அளித்தால் உன் சுடர்ச்சோதி மறையாதே'' (திருவாய்மொழி 3–1–9) என்ற பாசுரமருளிச் செய்தார். முதலைதன்னாலடர்ப்புண்ட கஜேந்திராழ்வானுடைய இடரை ஸங்கல்பத் தாலே போக்கியிருக்கலாம்; அல்லது, கருது

மிடம் பொருது கையிலே வந்து நிற்கவல்ல திருவாழியாழ்வானைப் போகவிட்டுப் போக்கி யிருக்கலாம்; அரை குலையத் தலை குலைய மடுவின் கரைக்கு ஓடி வரவேண்டிய அவச்யமேயில்லை: மடுவின் கரைக்கு எழுந்தருளியும் "க்ராஹம் சக்ரேணமாதவ:" "குட்டத்துக் கோள்முதலை துஞ்சக் குறித்தெறிந்த சக்கரத்தான்" "ஆனையின் துயரம் தீரப்புள்ளூர்ந்து சென்று நின்றாழிதொட்டானை" என்கிறபடியே திருவாழியாழ்வானைச் செலுத்தியேயன்றோ யானையினிடரைத் தீர்த்தருளிற்று. அத் திருவாழியாழ்வானைப் பரமபதத்திலிருந்தே நியமித்தருளினால் ஒரு கணப்பொழுதில் காரியத்தை நிறைவேற்றி மீளமாட்டாமை யில்லையே. "பகவதஸ் த்வராயை நம:" என்னும்படியும் எதற்காகத் தானே நேர்பட ஓடிவந்தானென்கிற சங்கைக்கு நம்மாழ்வார் 'தொழுங்காதல்களிறளிப்பான்' என்பதனால் நன்கு ஸமாதானம் தெரிவித்தருளினாராயிற்று. 'நாஹம் களேபரஸ்யாஸ்ய த்ராணார்த்தம் மதுஸூதந, கரஸ்த கமலாந்யேவ பாதயோரர்ப்பிதும் தவ' என்று கஜேந்திராழ்வான் விண்ணப்பஞ் செய்தது கொண்டு இவ்வளவு சாஸ்த்ரார்த்தங்கள் ஸூசிதமாயின. நம்மாழ்வார் காட்டியருளின சீரிய பொருளையே நம் ஸ்ரீ பாஷ்யகாரர் நிதியாகக் கொண்டு அருளிச் செய்தாராயிற்று. ஆகவே அவதாரங்களுக்கு முக்ய ப்ரயோஜநம் ஸாதுபரித்ராணமே யென்றும், அதுதான் ஸங்கல்ப ஸாத்ய மல்லவென்றும், ராவணாதி ஸம்ஹாரரூபமான துஷ்க்ருத விநாசநமானது ஆநுஷங்கிக ப்ரயோஜனமே யொழிய முக்ய ப்ரயோஜன மன்றென்றும் "ஸாதுபரித்ராணமேவ முக்யவ்ருத்த: ஆநுஷங்கிகஸ்து துஷ்க்ருத் விநாசநம்" என்று அந்தரதிகரண ஸ்ரீபாஷ்யத்தில் எம்பெருமானார் ஸாதித்தருளினார்.

323. நாடு நகரமும் நன்கறிய எங்கும் அநுஸந்திக்கப்பட்டு வருகின்ற ஆண்டாள் வாழித் திருநாமத்தில் "பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே" என்றுள்ளது. இதனால், பெரியாழ்வார் திருமகளாரான சூடிக்கொடுத்த நாச்சியார் எம்பெருமானார்க்குத் திருத்தங்கையாரென்று தெரியவருகின்றது. பெரியாழ்வாருடைய காலத்திற்கும் எம்பெருமானார் காலத்திற்கும் இடையே எவ்வளவோ காலவ்யவதாநமுள்ளது என்பதை உலகமறியும். ஆண்டாளுக்குப்பின் ஆயிரக்கணக்கான வருஷங்கள் கடந்தபிறகு அவதரித்தவரான எம்பெருமானார் அவ்வாண்டாளுக்குத் திருத்தமையனாராக எப்படியாக முடியும்? என்கிற சங்கை ஸம்ப்ரதாய இதிஹாஸவிசேஷ மறியாதவர்க ளுக்குத் தோன்றக் கூடியது. அவ்விதிஹாஸ மறிந்தவர்களுக்கு இந்த சங்கை தோன்ற நியாயமில்லை. அவ்விதிஹாஸத்தை இங்குச் சுருக்கமாக வரைகின்றோம்;–

324. எம்பெருமானார் திருவரங்கம் பெரிய கோயிலில் உபயவேதாந்த க்ரந்த காலக்ஷேபம் நிர்வஹித்தருளுகிற நாளிலே நாச்சியார் திருமொழி காலக்ஷேபம் நடவாநிற்க, அதில் "நாறு நறும்பொழில் மாலிருஞ் சோலை நம்பிக்கு நான், நூறு தடாவில் வெண்ணெய் வாய்நேர்ந்து பராவி வைத்தேன், நூறு தடா நிறைந்த அக்கார வடிசில் சொன்னேன், ஏறுதிருவுடையான் இன்று வந்திவை கொள்ளுங் கொலோ" (9–6). என்கிற பாசுரத்தின் பொருளை விவரித்தருளுகையில் "திருமாலிருஞ் சோலையழகர்க்கு நூறு தடா நிறைந்த வெண்ணெயும் அக்காரவடிசிலும் ஸமர்ப்பிக்க ஆண்டாள் மநோரதித்துப் பாசுரம் பாடினாள்;

அதை நாம் அநுஷ்டாந பர்யவஸாயியாக நிறைவேற்றி வைப்போம்'' என்று கோஷ்டியிலேயருளிச் செய்து உடனே ஸகல சிஷ்யர்களையும் கூட்டிக் கொண்டு மதுரைக் கெழுந்தருளி அங்கே ஸம்பாரங்களைச் சேகரித்துக் கொண்டு திருமாலிருஞ்சோலைக்கு எழுந்தருளிப் பாசுரப்படியே நிறைவேற்றி வைத்து அழகருடைய பேரருளைப் பெற்றுமகிழ்ந்து, அங்கு நின்றும் ஸ்ரீவில்லிபுத்தூரிலே ஆண்டாளையும் மங்களாசாஸனஞ் செய்து வருவதாகத் திருவுள்ளம்பற்றி அங்கேறவெழுந் தருளி ஸன்னிதிக்குள் செல்லுகையில் ஆண்டாள் ஆனந்தம் பூரித்து அர்ச்சாவதார ஸமாதியைக் கடந்து எதிர்கொண்டு வந்து ''எம் அண்ணரோ நீர்'' என்று சோதிவாய் திறந்தருளிச் செய்து ஆரத்தழுவியருளினாள். தான் மநோரதித்து வாசிகமாகச் சொல்லி வைத்ததை ஸ்வாமி ஸாக்ஷாத்தாக நிறைவேற்றி வைத்தபடியினால், தங்கை மநோரதித்ததைத் தமையனார் நிறைவேற்றி வைக்கிற கணக்கிலேயானதாகக் கொண்டு ஆண்டாள் இங்ஙனம் கூறியது மிகவும் பொருத்தமானது. அன்று முதலாக எம்பெருமானார்க்கு அண்ணரென்கிற ப்ரஸித்தியும் ஆண்டாளுக்குப் 'பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாளென்கிற ப்ரஸித்தியுமுண்டாயிற்று.

325. இவ்விஷயம் ஆண்டாளுடைய அருளிச் செயலாலும் நன்கு நாட்டப் படுகின்றது. திருப்பாவையிலும் நாச்சியார் திருமொழியிலும் பல பாசுரங்களில் ஆண்டாள் எம்பெருமானாருடைய பெருமைகளை உள்ளுறை பொருள் வகையில் ஆச்சரியமாக வெளியிட்டருளியிருக்கின்றமையை க்ரமேண நிரூபிப்போம். மேலே விவரித்த இதிஹாஸ விசேஷத்தினால் ஆண்டாள் எம்பெருமா னார்க்குப் பின்னானாளாக ஆய்விட்டாலும் உண்மையில் நெடுநாளைக்கு முன்னே அவதரித்திருந்து, எம்பெருமானாருடைய விஷயமொன்றையும் அறியாதிருந்தவளான ஆண்டாளுடைய திருவாக்கில் மிகவும் பிற்பட்டவரான ஸ்வாமியினுடைய விஷயங்கள் எப்படி வரமுடியும்? இது ஸம்பாவிதமாக இல்லையே; ஏதோ அபிநிவேசத்தினால் ஏறிட்டுச் சொல்கிறதாக இருக்குமேயல்லது உண்மையாய் ஆண்டாள் திருவுள்ளம்பற்றிப் பேசினதாக யிருக்குமோ? என்று சிலர் சங்கிக்கக் கூடும்.

326. இதற்கு இங்கு யுக்தமான பரிஹாரமளிக்கின்றோம். அறிவிலிகளான நமக்கும் அறிவிற் சிறந்த பெரியார்க்குமுள்ள நெடுவாசியை மறக்கலாகாது ; இன்று நேற்று நடந்த விஷயங்களைக் கூட நாம் உள்ளபடி யறிந்து உரைக்க சக்தியற்றவர்களாயிருக்கின் றோம். அஜ்ஞாநமும் அந்யதாஜ்ஞானமும் ஸம்சயமும் மறப்புமே வடிவெடுத்திருக்கிற நமக்கு இது ஸஹஜமே. அறிவிற் சிறந்த முன்னோர்களையும் நம்மைப் போலவே நினைத்துவிடலாமா? அதீந்த்ரியங்களான விஷயங்களையும் பல்லாயிரமாண்டுகளுக்குப் பிறகு நிகழப்போகும் விஷயங்களையும் கையிலங்கு நெல்லிக் கனியாகக் கண்டறிந்து கூறுமாற்றல் நிரம்பியவர்களன்றோ ஆண்டாள் போல்வார். இதனை பவபூதிமஹாகவி உத்தரராம சரித நாடகத்தில் 'லௌகிகாநாம் ஹி ஸாதூநாம் அர்த்தம் வாகநுவர்த்ததே, ருஷீணாம் புநராத்யாநாம் வாசம் அர்த்தோநு தாவதி' என்கிற ச்லோகத்தினால் தெளிய வுரைத்தார். (இதன் கருத்தாவது – ஏதாவதொரு விஷயம் நடந்துவிட்டதே யானால் அப்படி நடந்ததைச்

சொல்ல வல்லவர்கள் லௌகிக ஸாதுக்கள்; மஹர்ஷி கல்பர்களான முன்னோர்கள் தங்கள் வாக்கினால் எது சொல்லிவைத்தாலும் அது பிற்காலத்தில் அப்படியே நடந்து தீரும் என்பதாம்.) முராரி மஹாகவியும் அநர்க்க ராகவ நாடகத்தில் 'ஜ்ஞாநமய த்ருஷ்டிபாத ப்ரமுஷித காலாத்வ விப்ரகர்ஷேஷு, விஷயேஷு நைஷ்டிகாநாம் ஸர்வபதீநா மதி: க்ரமதே' என்று சொல்லி வைத்தார். ஜ்ஞாந த்ருஷ்டிப்ரபாவ முள்ளவர்களின் புத்தியானது எந்த தேசத்திலும் எந்த காலத்திலும் நடக்கக் கூடிய எப்படிப்பட்ட விஷயங்களையும் க்ரஹிக்க வல்லது – என்பது இந்த ச்லோகத்தின் தாற்பரியம். இவற்றுக்கெல்லாம் சிகரமாக ஆளவந்தாரருளிச் செய்த ஸ்ரீஸூக்தி ரத்நம்–'விதயச் ச வைதிகாஸ் த்வதீய கம்பீர மநோநுஸாரிண:' என்பது. இந்த ஸ்ரீஸூக்தி யின் அரிய பெரிய பொருளை வியாக்கியானங் களிற் கண்டு கொள்க. ஆகவே, பிற்காலத்தவையான விஷயங்கள் முன்னமே ஆண்டாளுக்கு எப்படி தெரியும்? என்கிற சங்கைக்கு அவகாசலேசமுமில்லை யென்க.

327. இனி ப்ரக்ருத விஷயத்தில் செல்லுவோம்: ஆண்டாள் திருப்பாவையில் பாசுரந்தோறும் தம் அண்ணரான எம்பெருமானாருடைய பெருமைகளைப் பொழிந்திருக்கின்றமை நமது திருப்பாவை ஜீயர் என்ற நூலில் காணத்தக்கது. இப்போது நான்காவது பாசுரமான 'ஆழிமழைக்கண்ணா' என்கிற பாசுரத்தை யெடுத்துக் கொண்டு நிரூபணம் செய்கிறோம். இப்பாசுரம் மார்கழி நீராட்ட நோன்பு நோற்கப் புகுந்த ஆய்ச்சிகள் மழைத் தெய்வத்தை நோக்கி மழை பெய்யக் கட்டளையிடுவதாக அமைக்கப்பட்டது. இது மேலெழுந்த பொருள். ஏனென்னில்; முதற் பாட்டில் "நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்" என்று அழைத்தவர்களுக்கு மெய்யாக நீராடப் போவதே உத்தேச்யமானால் இவர்களெல்லாருங்கூடி ஒரு பொய்கைக் கரைக்குச் சென்றிருக்க வேண்டுமல்லவா? அப்படி ஒரு நீர் நிலைக்குச் சென்றதாகக் காணவில்லையே; எல்லாருந் திரண்டு கண்ணபிரானுடைய ஸன்னிதானத்திற்குச் சென்று நித்ய கைங்கர்யத்தை வேண்டி அவ்வளவோடு தங்கள் நோன்பு தலைக் கட்டினதாகக் கூறி முடித்திருப்பதால் 'நீராடப் போதுவீர்' என்றதும் 'நாங்களும் மார்கழி நீராட உலகினில் பெய்திடாய்' என்றதும் அந்யாபதேச மாகவே சொல்லப்பட்டதாம். இவற்றின் தாற்பரியம் அதுவன்று, உள்ளுறை பொருள் வேறுதான் என்று எளிதில் நிர்ணயிக்கத் தட்டில்லை. பெரியவாச்சான்பிள்ளை முதலான பூருவாசாரியர்கள் உள்ளுறை பொருளைக் குருகுல வாஸம் பண்ணியே கேட்டுணர வேணுமென்கிற திருவுள்ளத்தினால் பெரும்பாலும் அதைத் தொடாமலே மேலெழுந்த பொருளையே இனிமைப்படுத்தி வியாக்கியானித்தருளியுள்ளார்கள். நாமும் அப்படி மறைத்து வைக்க முடியாமல், ருசியுள்ள ஆஸ்திகர்களுக்கு ருசியோடு வெளியிட ப்ராப்தமாகிறது.

328.ஸ்ரீராமாயணம் கதைப்போக்கில் ஒருவிதமான பொருளைக் கொண்டதாயிருக் கச் செய்தேயும் ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் தேசிகன் 'தர்ப்போதக்ர தசேந்த்ரியாநந.........' இத்யாதி ச்லோகத்தினால் சிறந்ததொரு தத்வார்த்தத்தை உள்ளுறை பொருளாகக் கூறியிருக்கிறாரன்றோ. அது கொண்டு நாம் கதைப் போக்கான பொருளைத் தள்ளி விடுவதில்லையே. கதைப் பொருளையே ப்ரகாசமாக அநுபவித்து தத்துவப்பொருளை

ரஹஸ்யமாக அநுபவிக்கிறோம். அதுபோலவே இத்திருப்பாவையிலும் இரண்டு வகையான அநுபவமும் ந்யாயமாகும். 'ஆழிமழைக் கண்ணா' என்கிற இப்பாசுரத்தினால் எம்பெருமானாரை விளித்து, தேவரீர் உபய வேதாந்த ப்ரவர்த்தகாசார்யரென்கிற விருது பொலிய உபய வேதாந்தப் பொருள்களையும் ஸர்வலோகோஜ்ஜீவனமாம்படி வர்ஷிக்க வேணுமென்று பிரார்த்திப்பதோ நியமிப்பதோ செய்யப்படுகிறதென்று உணர்க. இதற்குச் சார்பான விவரணம் காணீர்;–

329. ஆழிமழைக்கண்ணா! = ஆழி மழைக்கு அண்ணா! என்று பிரித்துக் கொள்க. பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானவளான ஆண்டாள் தனது திருத்தமையனாரை அண்ணாவென்று விளிக்கப்ராப்தமே யன்றோ.

330. ஆழி மழைக்கு அண்ணா! நீ ஒன்றும் கைகரவேல் = உலகில் மழையானது அனுகூலமாகவும் காணப்படுகிறது, பிரதிகூலமாகவும் காணப்படுகிறது. அதுபோல இரண்டு வகையான மழை வேதாந்த நூல்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றது. பிரதிகூலமான மழையை ஆளவந்தார் அருளிச் செய்துள்ளார்; அனுகூலமான மழையைத் திருக்கச்சிநம்பிகளும் கூரத்தாழ்வானும் கூறியுள்ளார்கள். எங்ஙனே யென்னில்; ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்னத்தில் (49) 'அவிவேக கநாந்ததிங்முகே பஹுதா ஸந்தத து:க்கவர்ஷிணி, பகவந் பவதுர்திநே' என்று அருளிச் செய்தது பிரதிகூலமான மழையைப் பற்றி. (அவிவேகமாகிற மப்புமூடி இருண்டு கிடக்கிற திசைகளையுடையதும் பலவிதமாக இடைவிடாமல் பெருகுகின்ற துக்கங்களை வர்ஷித்துக் கொண்டிருப்பதுமான ஸம்ஸார மாகிற வர்ஷா காலத்தில் தாம் சருக்கி விழுவதாகக் கூறியுள்ளார்.) இனி அனுகூலமான மழையைப் பற்றிக் திருக்கச்சி நம்பிகள் தேவராஜாஷ்டகத்தில் 'தேவராஜ தயாஸிந்தோ தேவ தேவ ஜகத்பதே, த்வதீக்ஷணஸுதாஸிந்து வீசி விக்ஷேபசீகரை:, காருண்ய மாருதாநீதை: சீதலைரபிஷிஞ்சமாம்' என்று கூறினார். இதனால் பகவத் கடாக்ஷாம்ருத வர்ஷதாரைகளைச் சொன்னபடி. கூரத்தாழ்வானும் வரதராஜ ஸ்தவத்தில் 'தாபத்ரயீமயதவாநல தஹ்யமாநம் ....ஹஸ்தீச! த்ருஷ்ட்யம்ருத வ்ருஷ்டிபி: ஆபஜேதா:' என்ற ச்லோகத்தினால் அந்த அனுகூல வ்ருஷ்டியையே அருளிச் செய்துள்ளார். ஆக இங்ஙனம் நிரூபிக்கப் பட்டவற்றில் பிரதிகூலமான ஸம்ஸாரதுக்க வ்ருஷ்டியைப் போக்கி அநுகூலமான பகவத் கடாக்ஷாம்ருத வ்ருஷ்டியைப் பெறுவிக்கும் விஷயத்தில் எம் அண்ணரான உடையவரே! நீர் நன்றாகக் கை கொடுக்க வேணும் என்றபடி.

331. ஒன்றும் கைகரவேல் = ஸம்ஸாரிகளுக்கும் கை கொடுக்க வேணும், ஸர்வேச்வரனுக்கும் கை கொடுக்க வேணும் என்றதாக ஸபஷ்டமாய்த் தெரிகிறது. 'ஞானக்கை தா' என்று ஆழ்வாரருளிச் செய்த கணக்கிலேயும் 'மக்நாந் உத்தரதே லோகாந் காருண்யாத் சாஸ்த்ரபாணிநா' என்று மஹர்ஷிகள் கூறின கணக்கிலேயும் ஸம்ஸாரிகளுக்குக் கை கொடுப்பது ஸஹஜம்; ஸர்வேச்வரனுக்கு இவர் கை கொடுக்கை யாவது என்? என்னில்; இதை தேசிகன் யதிராஜஸப்ததியில் வெகு அழகாக அருளிச் செய்கிறார்காண்மின்;– 'குத்ருஷ்டி குஹநாமுகே நிபதத: பரப்ரஹ்மண: கரக்ரஹ விசக்ஷணோ ஜயதி லக்ஷ்மணோயம் முநி:' என்றார். குத்ருஷ்டிகள் மாயக் கோலாஹலங்

கள் பண்ணினவாறே அவற்றைப் பரிஹரிக்க வல்லார் ஆருமில்லாமையாலே எம்பெருமான் அத: பாதாளத்திலே விழுந்திட்டானாம்; அப்படிப்பட்டவனைக் கை தூக்கிப் பிடித்தெடுத்தாராம் எம்பெருமானார். ஆகவே, ஸம்ஸாரிகளுக்குப் போல ஸர்வேச்வரனுக்கும் கை கொடுத்தவர் ஸ்வாமி என்னதட்டில்லை.

332. ஆழிமழைக்கண்ணா! என்றது–மழையைக் கண்ணிலேயுடையவரே! என்றபடியுமாம். 'ஆஹ்லாத சீத நேத்ராம்பு:' என்றும், 'வண்பொன்னிப் பேராறு போல் வருங் கண்ணநீர் கொண்டு அரங்கன் கோயில் திருமுற்றம் சேறு செய் தொண்டர்' என்றுஞ் சொல்லுகிறபடியே பகவத்குண சேஷ்டிதங் களை நினைந்து கண்ணுங் கண்ணீருமா யிருப்பவரே! என்றபடி. அன்றிக்கே, ஆழி மழைக்கண்ணா! என்றது மழைத்தெய்வமே! (அதாவது மேகமே!) என்றதேயாய் 'குணந்திகழ் கொண்டல் இராமாநுசன்' என்ற நூற்றந்தாதிப் பாசுரப்படியே உலகமறிந்த மேகமான எம்பெருமானாரைச் சொன்னதாகவுமாம். இவ்வாண்டாளே நாச்சியார் திருமொழியில் மேகவிடு தூதாக அமைத்தருளின 'விண்ணீல மேலாப்பு விரித்தாற் போல் மேகங்காள்' என்ற பதிகத்திலே எம்பெருமானாரையே மேகமாக விளித்ததாய் மிகவும் பொருத்தமாக அடுத்தபடி நிரூபிக்கப் போகிறோமாதலால் இங்கு மேகமே! என்றழைப்பதாக வைத்து உரை செய்வதிலும் குறையில்லை. எனினும் "ஆழிமழைக்கு அண்ணா" என்று பிரித்து அண்ணராக உரைப்பதே இந்த வியாஸத்திற்கு உயர் நிலையாகும்.

333. அண்ணா! நீ ஒன்றும் கைகரவேல் = உமக்கு முற்பட்ட ஆளவந்தார் முதலான ஆசாரியர்கள் பலரும் 'ஓராண் வழியாய் உபதேசித்தார் முன்னோர்' என்கிறபடியே தங்களுடைய ஔதார்யத்தை மறைத்துப் போந்தார்கள்; நீர் அப்படி மறைத்திடாமல் 'ஏராரெதிராசரின்னருளால் பாருலகிலாசை உடையோர்க் கெல்லாம் ஆரியர்காள் கூறுமென்று வரம்பறுத்தார் பின்' என்னும்படியாக உம்முடைய ஔதார்யத்தை நாடுநகரமும் நன்கறிய விளங்கச் செய்யக்கடவீர்.

334. ஆழியுள் புக்கு முகந்து கொடு = ஆழியாவது ஸமுத்ரம். 'நிர்மத்ய ச்ருதிஸாகராத் என்னப்பட்ட வடமொழி வேதக்கடலென்ன, 'நமாம்யஹம் த்ராவிட வேத ஸாகரம்' என்னப்பட்ட தமிழ் வேதக் கடலென்ன ஆகிய உபய வேதக் கடலினுள்ளும் அவகாஹித்து அவற்றிலுள்ள அர்த்த விசேஷங்களைக் கொள்ளை கொண்டு என்றபடி. "ஆழியில் புக்கு" என்னாமல் 'ஆழி உள் புக்கு" என் கையாலே ஸ்வாமி எம்பெருமானார் சாஸ்த்ரக் கடல்களில் மேலெழுந்த நோக்கின்றிக்கே மிகவும் ஆழ்ந்த நோக்குடையவராய், கடலினுள்ளே புகுந்து மணி மாணிக்கங்களைக் கொண்டு வருவாரைப் போலே சீரிய பொருள்களை கொணர்ந்து வர்ஷித்தவரென்பது விளங்கும். ஸ்ரீ பாஷ்யத்தின் முகப்பில் "பாராசர்ய வசஸ் ஸுதாம் உபநிஷத் துக்தாப்தி மத்யோத்த்ருதாம் – பௌமா: பிபந்து அந்வஹம்" என்று ஸ்வாமி தாமே யருளிச் செய்திருக்கையாலே "ஆழியுள் புக்கு" என்பதற்கு இங்கு விவரிக்கப்பட்ட பொருள் அவர் தம்முடைய திருவுள்ளத்திலும் உறைந்ததே யென்று கொள்ளத்தகும். ஆர்த்து–கர்ஜித்து என்றபடி. ஸிம்ஹம் கர்ஜிக்குமாபோலே கர்ஜித்துக்கொண்டன்றோ ஸ்வாமி தாம் அர்த்தங்களை வர்ஷித்தது.

ஏறி = 'பஜதி யதிபதௌ பத்ரவேதீம் த்ரிவேதீம்' என்று யதிராஜஸப்ததியில் பணித்தபடியே சீரிய சிங்காசனத்தின் மீதேறி என்றபடி. அன்றியே, திருக்கோட்டியூர் நம்பி பக்கலிலே நிதியாகப் பெற்ற அர்த்த விசேஷங்களை அவ்வூரிலே கோவிலில் மேல்தளத்திலே ஏறி வர்ஷித்தாரே; அது தன்னை ஸூசிப்பிக்கின்றது என்னலாம்.

335. ஊழிமுதல்வனுருவம் போல் மெய்கறுத்து = இதனால் ஸ்வாமியினுடைய அவதாரரஹஸ்யம் ஸூசிப்பிக்கப்படுகிறது. ஸ்வாமி தாம் திருவனந்தாழ்வானுடைய திருவவதாரமாகையாலே "துக்கோதந்வத் தவளமதுரம் சுத்த ஸத்வைகரூபம் ரூபம் யஸ்ய ஸ்புடயதிதராம் யம் பணீந்த்ராவதாரம்" என்கிறபடியே பாலன்ன திருமேனியை யுடையராயிருப்பர். அப்படியிருக்கச் செய்தேயும் தேவபிரானுடைக் கரிய கோலத் திருவுருவைத் தம்முள்ளேயடக்கியிருக்கையாலே அந்த நீலமேனியின் நிழலீட்டாலே ஸ்வாமி திருமேனியும் முடிவில்லதோரெழில் நீலமேனி யாகவே அடியார்களுக்கு ஸேவை ஸாதிக்க வேணுமென்று சொல்லுகிறது. பட்டர் ஸ்ரீரங்க விமானத்தை வருணிக்கும்போது ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்தில் "அபி பணிபதி பாவாத் சுப்ரம் அந்தச் சயாலோர் மரகதகஸுகுமாரை: ரங்கபர்த்துர்மயூகை:, ஸகலஜலதிபாநச்யாம ஜீமூதஜைத்ரம் புலகயதி விமாநம் பாவநம் லோசநே ந:' என்றருளிச் செய்தார். இந்த ச்லோகத்தின் கருத்தாவது திருவனந்தாழ்வானே ஸ்ரீரங்க விமானமாக வடிவெடுத்திருப்பதனால் அத்திருவனந்தாழ் வானுடைய நிறம் வெளுத்ததாகையினாலே இவ்விமானமும் வெண்ணிறமுடையதே யாயினும் உள்ளே திருக்கண் வளர்ந்தருளா நின்ற காளமேகத்திருவுருவரான பெரிய பெருமாளுடைய திருமேனியின் நிழலீட்டாலே கறுத்துத் தோன்றுகின்றது என்கை. போஜசம்பூ என்கிற சம்பூராமாயணத்தில் (பாலகாண்டம்–23) "க்ஷீராம்போதேர் ஜடரமபிதோ தேஹபாஸாம்–ப்ரரோஹை: காலோந் மீலத் குவலயதளாத்வைத மாபாதயந்தம்" என்று கூறியுள்ளதும் இவ்விடத்திற்கு மிகப் பொருத்தமாக நினைக்கத் தக்கது. ஆக, எம் அண்ணரே! நீர் பால் போன்ற திருமேனியோடு பிறந்திருந்தா லும் 'முந்நீர் ஞாலம் படைத்த எம்முகில் வண்ணனான ஊழிமுதல்வனது திருவுருவை உள்ளேயடக்கிக் கொண்டு தத்ஸாதர்ம்யத் தைப் பெற்றிருப்பீர் என்றதாயிற்று.

336. பாழியந்தோளுடை பற்பநாபன் கையிலாழிபோல்மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து=இதனாலும் அவதாரரஹஸ்யமே ஸூசிதமாகிறது. இராமாநுச நூற்றந்தாதியில் (33) 'அடையார் கமலத்தலர்மகள் கேழ்வன் கையாழி யென்னும் படையோடு' என்கிற பாசுரத்தினாலும், யதிராஜஸப்ததியில் "விமதேஷு தீக்ஷ்ணபாவம்" என்ற ச்லோகத்தில் "வவ்ருதே பஞ்சபிராயுதைர் முராரே:' என்றதனாலும் ஸ்வாமி பஞ்சாயுத ஆழ்வார்களின் திருவவதாரபூதர் என்பதும் பேசப்பட்டிருக்கையாலே அவ்விஷயம் இங்குத் தெரிவிக்கப்பட்டதாகிறது, மேலே காட்டிய நூற்றந்தாதிப் பாசுரத்தில் "கையாழி யென்னும் படையோடு" என்று திருவாழியை முன்னே சொல்லி "புடையார்புரிசங்கமும்' என்று திருச்சங்கை முடிவிலே சொல்லியிருக்கிற படிக்குச் சேர இங்கும் ப்ரத்யாஹார ந்யாயத்தாலே "கையிலாழிபோல் வலம்புரி போல்" என்று அருளிச் செய்யப்பட்டதென்று கொள்க.

337. இதற்கு மற்றொருபடியாகவும் கருத்துரைக்கலாம்; திருவாழியாழ்வான் விரோதிகளுள்ளவிடமெங்குஞ் சென்று வியாபரித்து 'காசீவிப்லோஷ' (ஸுதர்சந சதகம்) என்பது முதலான ச்லோகங்களிலும், 'கீழுலகிலசுரர்களைக் கிழங்கிருந்து கிளராமே ஆழி விடுத்து அவருடைய கருவழித்த அழிப்பன்' என்பது முதலான பாசுரங்களிலும் சொல்லுகிறபடியே விரோதி நிரஸநங்களைப் பண்ணிவருவதுபோல ஸ்வாமி தாமும் பாஷண்டசார்வாகஜைநபௌத்தமாயாவாதி ப்ரப்ருதிகளான பாஹ்யர்களும் குத்ருஷ்டி களும் உள்ளவிடங்களிலெங்குமெழுந்தருளிக் கொடிய தர்க்கசரம்விட்டு வென்று வந்தபடியை சொல்லுகின்றதாக. 'அருளார் திருச் சக்கரத்தால் அகல்விசும்பும் நிலனும் இருளார்வினை கெடச்செங்கோல் நடாவுதிர்' (திருவிருத்தம்) என்கிறபடியே திருவாழியாழ் வான் உபய விபூதி நிர்வாஹகனாயிருப்பது போல ஸ்வாமிதாமும் "உபய விபூதியையும் தம் கையிலேயுடையவர்" என்பதே பொருளாக 'உடையவர்' என்று திருநாமம் பெற்றிருக்கும் பரிசும் இங்கு அநுஸந்திக்கத்தக்கது.

338. வலம்புரிபோல் நின்று அதிர்ந்து = பாரதப் போர்த் தொடக்கத்தில் 'படை போர் புக்கு முழங்குமப் பாஞ்ச சன்னியம்' என்றபடியே சங்கு முழங்க, அவ்வொலிகேட்ட எதிரிகள் யாவரும் 'ஸ கோஷோ தார்த்தராஷ்ட்ராணாம் ஹ்ருதயாநிவ்யதாரயத்' என்கிறபடியே குடல் குமுறிச் செத்தது போல ஸ்வாமியின் திருமிடற்றோசை கேட்டவாறே 'தற்கச் சமணரும் சாக்கியப் பேய்களும் தாழ் சடையோன் சொல்கற்ற சோம்பரும் சூனியவாதரும் நான்மறைம் நிற்கக் குறும்பு செய் நீசரும் மாண்டனராதலால் இப் பெருமையைத் தெரிவிக்கின்றதென்க. அன்றியும் 'உண்பது சொல்லில் உலகளந்தான் வாயமுதம், கண்படை கொள்ளில் கடல்வண்ணன் கைத்தலத்தே' என்று இவ்வாண்டாள் தாமே அருளிச் செய்தபடியே எம்பெருமானுடைய திருக்கைத்தலத்தை ஒரு நொடிப்பொழுதும் விட்டு அகலாதே யிருந்து அமுதமுண்டுகளிக்கும் சங்கு போலே "த்வயம் அர்த்தாநு ஸந்தாநேந ஸஹ ஸதா ஏவம் வக்தா யாவச் சரீரபாதம் அத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகமாஸ்வ' என்று திருவரங்கச் செல்வனாருடைய திருவருள் பெற்று அப்பெருமாள் பரிஸரத்திலேயே இணை பிரியாதிருந்து தூயவமுதைப் பருகிப்பருகி மகிழ்ந்தவர் நம் ஸ்வாமி என்பது மிங்குத் தெரிவிக்கப்பட்டதாகும்.

339. தாழாதே சார்ங்கமுதைத்த சரமழைபோல் பெய்திடாய், வாழப் பெய்திடாய்=என்று இரண்டு வாக்யார்த்தமாகக் கொள்ளவேணும். பெய்யும் மழையினாலே நன்மையும் விளைவதுண்டு, தீமையும் விளைவதுண்டு, சிலர்க்கு நன்மையாகும், சிலர்க்குத் தீமையாகும். 'த்வயிவர்ஷதி பர்ஜந்ய ஸர்வே பல்லவிதா த்ருமா:, அஸ்மாக மார்க்க வ்ருக்ஷாணாம் பூர்வ பத்ரேஷு ஸம்சய:' என்பது ப்ரஸித்தமான ஸுபாஷிதம். 'நீர்காலத்து எருக்கிலம் பழவிலை போல் வீழ்வேனை' என்று ஆண்டாள் தானுமருளிச் செய்தாள். அதுபோல ஸ்வாமியின் திவ்ய ஸ்ரீஸூக்தி வர்ஷங்களாலே வாழ்ந்து போவாருமுண்டு, மாய்ந்து போவாருமுண்டு. 'நாரணனைக் காட்டிய வேதம் களிப்புற்றது தென்குருகை வள்ளல் வாட்டமிலாவண்டமிழ் மறை வாழ்ந்தது' என்று அமுதனார் பணித்தபடியே உபயவேதங்களும் தத்ப்ரவீணர்களும் வாழ்ந்து போக, 'நாட்டிய நீசச்சமயங்கள் மாண்டன'

என்கிறபடியே புலையறமாகிநின்ற புத்தொடு சமணமெல்லாம் பாறியொழிந்தனவன்றோ. சார்ங்கமுதைத்தசரமழையானது அஸுர ராக்ஷஸர்களை அடியறுத்தொழித்தது போல' அரக்கரசுரர் போல்வாரான பாஹ்யகுத்ருஷ்டி களை ஸ்வாமியின் ஸ்ரீஸூக்திவர்ஷம் மாய்த் தொழிந்தது. 'தம் த்ருஷ்ட்வா சத்ருஹந்தாரம்' என்றவுடனே 'மஹர்ஷீணாம் ஸுகாவஹம்' என்றாப்போலே விரோதிகள் ஒழிந்தால் நல்லார்கள் வாழப்ராப்தமாகையாலே இங்கும் அவ்விரண்டும் தெரிவிக்கப்பட்டது. ஸ்ரீபாஷ்ய ப்ரவசநமுகத்தாலே விரோதி நிரஸநமும் பகவத் விஷய ப்ரவசநமுகத்தாலே ஆச்ரித ஸமுஜ்ஜீவநமும் செய்து கொண்டு எழுந்தருளி யிருந்தமை தெரிவிக்கப்பட்டதாயிற்று.

340. (சார்ங்கமுதைத்தசரமழை) சரமழையானது சார்ங்கவில்லில் நின்றும் தோன்றுவது இயல்பு. ப்ரக்ருதத்தில் முன்னே யெடுத்துக் காட்டிய' அடையார்கமலப் பாசுரப்படியே ஸ்வாமிதாமே சார்ங்க வில்லாகக் கூறப்பட்டா ரென்றுணர்க. அந்த நூற்றந்தாதிப் பாசுரத்தில் 'ஒண்சார்ங்கவில்லும்' என்கிற சொல்லால் ஸ்வாமியே சார்ங்க வில்லாகச் சொல்லப்பட்டிருக்கின்றமையறியத் தக்கது. அன்றிக்கே, 'தன்கைச் சார்ங்கமதுவே போல் புருவவட்டமழகிய' என்று ஆண்டாள் தாமே அருளிச் செய்திருக்கையாலே சார்ங்கம் என்றது புருவமென்றபடி. புருவமுதைத்த சரமழையாவது – ஸ்வாமிதாம் ஆழ்வான் ஆண்டான் போல்வாரை நோக்கிப் புருவம் நெறித்துவிட்டால் உடனே அவர்கள் சரமழை போன்ற வாதங்களைச் செய்து நிற்பர்களே, அதைச் சொன்னபடியாகவுமாம்.

341. உலகினில் வாழப் பெய்திடாய் = 'உலகமென்பது உயர்ந்தோர்மாட்டே' என்பது தமிழர் வழக்காதலால், உயர்ந்த அதிகாரிகளை வாழச் செய்தருளவேணு மென்றபடி. (தாழாதே பெய்திடாய்) ஏககாலத்திலே ஆயிரக் கணக்கான துர்வாதிகள் மிடைந்தாலும் பின் வாங்குகிறவரல்லரே ஸ்வாமிதாம். 'கொண்டல் அனையவண்மை யேரார் குணத்தெம் இராமானுசன் அவ்வெழில் மறையில் சேராதவரைச் சிதைப்பது அப்போதொரு சிந்தை செய்தே' என்கிற நூற்றந்தாதிப் பாசுரமும் இங்கே அநுஸந்திக்கத்தகும்.

342. நாங்களும் மகிழ்ந்து மார்கழி நீராட = திருப்பாவையில் மார்கழி நீராட்டமென்று கூறுவதற்கு உள்ளுறை பொருள் இதுகேளீர்; வடமொழியிலுள்ள மார்க்கசீர்ஷம் என்கிற சொல்லே தமிழில் மார்கழியென விகாரப்பட்டது. ம்ருகசீர்ஷ நக்ஷத்திரமும் பௌர்ணமி திதியும் கூடிவரும் மாஸம் மார்க்கசீர்ஷமெனப்படும். இது உலகமறிந்த வெளிப்படையான அர்த்தம். அந்தரங்கமான அர்த்தம் எது வென்னில்; மார்க்க–சீர்ஷம் என்கிற பிரிவிலே நோக்கு. மார்க்கம்–வழி; அதாவது உபாயமென்றபடி. சீர்ஷமாவது தலை. உபாயங்களில் தலையானது எதுவோ அதுவே மார்க்கசீர்ஷமென்றதாயிற்று. ஸ்ரீவசநபூஷண திவ்யசாஸ்த்ரத்தில் ஆசார்யாபிமாநமே உபாயங்களில் தலையாகச் சொல்லப் பட்டிருத்தலால் அதுவே மார்க்கசீர்ஷமாகி, அச்சொல்லின் சிதைவாய் மார்கழியெனப் பட்டது. மார்க்கசீர்ஷாவாகஹநமே மார்கழி நீராட்டம். ஆசார்யாபிமாநமென்கிற சிறந்த உபாயத்தை நாங்கள் கடைப்பிடித்து மகிழ்ந்து வாழும்படியாக எம் அண்ணரே! அருள் செய்ய வேணும் என்றதாயிற்று.

343. ஆண்டாள் அடுத்த பிரபந்தமாகிய நாச்சியார் திருமொழியில் 'கொல்லையரக்கியை மூக்கரிந்திட்ட குமரனார் சொல்லும் பொய்யானால், நானும் பிறந்தமை பொய்யன்றே' என்ற பாசுரத்தினாலும், 'நல்லவென் தோழி! நாகணைமிசை நம்பரர், செல்வர் பெரியர் சிறுமானிடவர் நாம் செய்வதென், வில்லி புதுவை விட்டுசித்தர் தங்கள் தேவரை, வல்ல பரிசுவருவிப்பரேல் அது காண்டுமே' என்ற பாசுரத்தினாலும் உபாயங்களில் தலையான உபாயமாகிய ஆசார்யாபிமானத்திலேயே தனக்கு நிஷ்டையுள்ளதென்பதை ஸ்பஷ்டமாகக் கூறியிருக்கையாலே 'நாங்களும் மார்கழி நீராட' என்றதற்கும் 'மார்கழித் திங்கள் நீராடப் போதுவீர் என்றதற்கும் இதுவே உள்ளுறை பொருளாகும். மேலேயெடுத்துக் காட்டிய ஆண்டாள் பாசுரங்களில் முந்திய பாசுரத்தில் 'நானும் பிறந்தமை பொய்யன்றே' என்றதன் உட்கருத்தை பெரியார் பக்கல் பணிந்து கேட்டறிவது.

344. பகவத்கீதைக்கு நமது பாஷ்யகாரரான எம்பெருமானார் அருளிச் செய்திருக்கின்ற பாஷ்யத்தை ஆழ்ந்து நோக்கினால் அதனுடைய அருமை பெருமைகள் பேச்சுக்கு நிலமல்ல. ஸம்க்ஷேபமாக அருளிச்செய்திருந்தாலும் வியாக்கியானசைலியானது அமுதிலும் ஆற்ற இனிதே. இப்போது ஒரு ச்லோகத்தின் பாஷ்ய பங்க்திகள் சிலவற்றை யெடுத்துக்கொண்டு அவற்றிலுள்ள ரஸவிசேஷங்களை அநுபவிக்கவும் அநுபவிப்பிக்கவும் விரும்பியெழுதுகின்றேன். எட்டாவது அத்யாயத்தில் பதினான்காவது ச்லோகம் –

"அநந்ய சேதாஸ் ஸததம் யோ மாம் ஸ்மரதி நித்ய:
தஸ்யாஹம் ஸுலப: பார்த்த! நித்யயுக்தஸ்ய யோகிந:".

"ஜ்ஞாநீ து ஆத்மைவ மே மதம்" என்று பகவான் தான் தனக்கு உயிர் நிலையாகக் கொண்டாடும் ஞானியானவன் தன்னை உபாஸிக்க வேண்டியபடியையும் பேறு பெறும் பரிசையும் அருளிச் செய்கிறான் (கண்ண பிரான்) – என்று அவதாரிகையிட்டு சுலோகத்தை வெகு அழகாக வியாக்கியானித்தருளியுள்ளார்.

345. இந்த சுலோகத்தின் கருத்து என்ன வென்றால், 'அர்ஜுநா!, எவன் இடைவிடாமல் எப்போதும் வேறொன்றிலும் நெஞ்சைச் செலுத்தாதவனாய் என்னையே ஸ்மரிக்கி றானோ, என்னோடு நித்ய ஸம்ச்லோகத்தை விரும்பியிருக்கின்ற அந்த பக்தனுக்கு நான் ஸுலபன்– என்பதேயாம். இதில் 'தஸ்ய அஹம் ஸுலப:' – 'அவனுக்கு நான் ஸுலபன்' என்ற பகுதிக்கு பாஷ்யம் செய்தருளியிருக் கின்ற அழகுதான் இங்கு ஸத்ஸம்ப்ரதாய ரஸிகர்களால் அநுபவிக்கத் தக்கது. முந்துற பாஷ்ய பங்க்திகளை உதாஹரித் துக் காட்டிவிட்டுப் பிறகு விவரிப்போம். தஸ்ய நித்யயுக்தஸ்ய – நித்யயோகம் காங்க்ஷமாணஸ்ய யோகிந:, அஹம் ஸுலப: – அஹமேவ ப்ராப்ய: ந மந்தபாவ ஐ வர்யாதிக: ஸுப்ராப ச. தத்வியோகமஸஹமாந: அஹமேவ தம் வ்ருணே. மத்ப்ராப்த்யநு –குணோபாஸந விபாகம் தத்விரோதி–நிரஸநமத்யர்த்த மத்ப்ரியத்வாதிகம் ச அஹமேவ ததாமி இத்யர்த்த: 'யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய:' இதி ஹி ஸ்ரூயதே. வக்ஷ்யதே ச 'தேஷாம் நித்யயுக்தாநாம் பஜதாம் ப்ரீதி பூர்வகம், ததாமி புத்தியோகம் தம் யேந மாம் உபயாந்தி தே. தேஷாமேவாநுகம்பார்த்த – மஹமஜ்ஞாநஜம் தம: நாசயாம்யாத்ம– பாவஸ்தோ ஜ்ஞாநதீபேந பாஸ்வதா' இதி.

இவ்வளவும் கீதாபாஷ்ய ஸ்ரீஸூக்திகள். (இவற்றின் பொருளாவது) என்னோடு எப்போதும் கூடியிருக்க வேணுமென்கிற விருப்ப முடையவனுக்கு அடையத்தகுந்தவன் நானேயாகிறேன். மிக எளிதாக அடையத் தகுந்தவனுமாகிறேன் நான். (அதாவது) அவனுடைய பிரிவைப் பொறுக்க மாட்டாதவனாய் (அவனைப் பிரிந்து தரித்திருக்க மாட்டாதவனாய்) நானே அவனை வரிக்கிறேன். என்னை யடைவதற்கான உபாஸனத்தின் பரிபக்குவ நிலைமையையும், அதற்குற்ற இடையூறுகள் நீங்குதலையும், என்னிடத்தில் அதிகமான ப்ரீதி முதலியவைகளையும் நானே கொடுக்கிறேன். 'நாயமாத்மா' ச்ருதியில் இவ்வர்த்தம் ப்ரஸித்தமாயிருப்பதோடு இந்த கீதையிலே மேலே பத்தாவது அத்யாயத்தில் 10,11 ச்லோகங்களாலும் சொல்லப்படுகிறது–என்பதாம்.

346. இவ்வளவும்...

347. ஆரியர்காள்! ஸத்ஸம்ப்ரதாய ஸாரார்த்தம் இங்கே பொதிந்திருக்குமழகை என் சொல்லுவோம்!. ஸ்வகத ஸ்வீகார மென்றும் பரகதஸ்வீகாரமென்றும் இரண்டு சொல்வதுண்டு; சேதநன் தான் எம்பெருமானைப் பற்றுவதானது ஸ்வகத ஸ்வீகார மென்றும்; எம்பெருமான் தானே சேதநனை வரிப்பதானது பரகத ஸ்வீகாரமென்றும் சொல்லப்படும். ஸத்ஸம்பிரதாயச் சுவடறியாத சிலர் பரகத ஸ்வீகாரமென்பதன் சுவையைச் சிறிது மறியாதே "இது ஒரு தான்தோன்றி ஸம்பிரதாயம்" என்று தூஷிப்பதுமுண்டு. ஸ்ரீவசன பூஷணத்தில்–"இவன் அவனைப் பெற நினைக்கும்போது இந்த ப்ரபத்தியும் உபாயமன்று; அவன் இவனைப் பெற நினைக்கும் போது பாதகமும் விலக்கன்று" என்று அருளிச் செய்தவிடத்தில் வியாக்கியானத்தில் மணவாள மாமுனிகள்

"உடைமையை உடையவன் சென்று கைக்கொள்ளுமாபோலே ஸ்வாமியான அவன் தானே வந்து அங்கீகரிக்கக் கண்டிருக்கக் கடவ பரதந்த்ரனான இச்சேதநனானவன் தான் பலியாய் தன் ஸ்வீகாரத்தாலே ஸவதந்த்ரனான அவனைப் பெற நினைக்குமளவில் அவன் நினைவுகூடாதாகில், இப்படி விலக்ஷணை யாயிருக்கி ப்ரபத்தியும் தல்லாப ஸாதனமாகாதென்றபடி. ....ஸ்வாமியாய் ஸ்வதந்த்ரனான அவன் ஸ்வம்மாய் பரதந்த்ரனாயிருக்கிற இவனை ஸ்வேச்சையாலே பெற நினைக்குமளவில் பாதகமும் ப்ரதிபந்தகமாக மாட்டா தென்கை. இவையிரண்டாலும் ஸ்வகத ஸ்வீகார அநுபாயத்வமும் பரகதஸ்வீகார உபாயத்வமும் காட்டப்பட்டது."

என்றருளிச் செய்திருக்கும் ஸ்ரீஸூக்திகள் மேலே காட்டிய கீதாபாஷ்ய ஸ்ரீஸூக்தி களையே அடியாகக் கொண்டவையென்று நன்கு புலப்படுகின்றது. தாம் முன்பு ஒரு வேஷத்தாலே கீதா பாஷ்யத்தில் ஸம்ஸ்க்ருதத்தாலே அருளிச் செய்ததை பின்பு மற்றொரு வேஷத்தாலே ஸ்ரீவசநபூஷண வியாக்கியானத்தில் த்ராவிடத்தாலே அருளிச் செய்தாரென்று அறுதியிடத் தட்டில்லை.

348. கீதாபாஷ்ய ஸ்ரீஸூக்தியை ஒவ்வொன்றாக எடுத்து விமர்சிப்போம். 'தத் வியோகமஸஹமாந: அஹமேவ தம் வ்ருணே' – ஞனியான சேதநனைப் பிரிந்திருப்பதை எம்பெருமான் தான் பொறுத்திருக்க மாட்டாதவனாய் தானே அந்த சேதநனை வரிப்பதாகக் கூறுகின்றவிது தான் பரகத ஸ்வீகார மென்பது.

349. 'மத்ப்ராப்த்யநுகுணோபாஸந விபாகம் தத்விரோதிநிரஸநமத்யர்த்த மத்ப்ரியத்வாதிகம் ச அஹமேவ ததாமி இத்யர்த்த:' – இந்த வாக்கியமானது ஸ்வஸ்வீகாரப் பற்றாசை நன்றாகக் கழிக்கிறது. இத்தலையில் விளைவது எல்லாம் எம்பெருமானுடைய க்ருஷிபலமாக விளைகின்றதேயன்றி இவன் தலையாலே விளைவித்துக்கொள்ளுமது ஒன்றில்லை என்கிற ஸத்ஸம்பிரதாய ஸாராத்தம் தெளிவிக்கப்பட்டது. இந்த இடத்தில் நாயமாத்மா ச்ருதியையும் எடுத்துக் காட்டியருளின பாஷ்யகாரர், பரகத ஸ்வீகாரத்திற்கு அதுவே பிரமாணமென்று நிரூபிக்கிற முகத்தாலே பலருடைய அசட்டு வாதங்களை அகற்றினாராயிற்று.

350. இவ்விடத்தில் தாத்பர்ய சந்த்ரிகையில் ஸ்வாமி தேசிகன் அருளிச் யுள்ள திவ்யஸூக்திகளும் தேனே பாலே கன்னலே யமுதேயத்தனை. '**உக்தஸ்ய அதிவாத மாத்ரத்வசங்காவ்யுதாஸாய ச்ருதிமூலதாமாஹ யமேவேதி**' என்றருளிச் செய்திருப்பது ஆழ்ந்து நோக்கத் தக்கது.

351. நம்முடைய குரு பரம்பராப்ரபாவம் முதலிய நூல்களில், ஸ்வாமி ராமாநுஜர் யாதவப்ரகாசரிடம் வேதாந்தார்த்த ச்ரவணம் பண்ணினதாகச் சொல்லப்படும் இதிஹாஸத்தில் சிலர்க்குச் சில ஆசங்கைகள் தோன்றுகின்றனவாம். எங்ஙனேவென்னில்;

352. ஸ்வாமி இயற்கையிலேயே மிகச் சிறந்த ஸ்ரீவைஷ்ணவோத்தமர் என்பது நிர்விவாதம். ஆளவந்தார் திருவடிகளில் ஆச்ரயித்து உய்ந்தவரான பெரிய திருமலை நம்பியின் ஸஹோதரீ புத்ரரான ஸ்வாமி ஆஜாநபாவந ரென்பதில் யாருக்கும் விப்ரதிபத்தி யிருக்க நியாயமில்லை; அக்காலத்தில் ஆளவந்தார் சதுச்சாஸ்த்ர மஹாவித்வானாயும் ஸகலதர்சநார்த்த ப்ரவசந ஸமர்த்தராயு மெழுந்தருளியிருக்க, அவரிடத்திலே சென்று சேர்ந்து வேதாந்த ச்ரவணம் பண்ணலாமாயிருக்க, சாஸ்த்ர விருத்தமாக ஏகதண்டியாயும் முண்டித மஸ்தகராயும் யஜ்ஞோபவீத ரஹிதராயு மிருக்கிற வொரு விமதரிடத்திலே சென்று உபநிஷத்துக்களை அதிகரித்தது எதனாலே?

353. யாதவ ப்ரகாசர்க்கு ஸ்வாமி எண்ணெய் தேய்த்ததாகச் சொல்லப்படுகிறது. மஹா ஜ்ஞாநாதிகரான அவர் ஜ்ஞானத்துக்குத் தக்கபடி அனுஷ்டாநசீலராயுமிருந்திருப்பரே; அவர் ஆச்ரம விருத்தமாக எண்ணெய் தேய்த்துக் கொள்ளுவாரா? அப்படி அவர் எண்ணெய் தேய்த்துக் கொண்டாலும் அவருடைய இனத்தார்கள் பலரிருக்க அந்தத் தொழிலை ஸ்வாமி செய்வானேன்?

354. மேலும், வேதாந்தார்த்த விசாரணைக்கு அதுவா ஸமயம்? அரையில் காஷாயமு மின்னிறக்கே கௌபீந மாத்ர மணிந்து கொண்டு எண்ணெயும் தலையுமாயிருக்கிற காலத்தில் வேதாந்தார்த்த விசாரத்திற்கு ஔசித்யமேது?

355. கப்யாஸ ச்ருதிக்கு யாதவ ப்ரகாசர் சொன்ன மர்க்கட ப்ருஷ்டப் பொருள் ஏற்கெனவே த்ரமிடாசார்யருடைய க்ரந்தத்திலிருக்கையாலே அதை அநுவதித்து யாதவர் சொல்லியிருந்தால் அதற்காக உஷ்ணோஷ்ணமான கண்ணீர் பெருக ப்ரஸக்தி யுண்டோ? என்று இங்ஙனே சங்கைகளாம். இந்த நான்கு சங்கைகளுக்கும் வரிசையாக விடையிறுப்போம்.

356. ஆளவந்தார் சதுச்சாஸ்த்ரங்களிலும் அத்விதீய மஹா வித்வானாயும் ஸகலதர்சநார்த்த ப்ரவசந ப்ரவீணராயு மெழுந்தருளியிருந்தா ரென்பது வாஸ்தவம். இதில் யாதொரு விப்ரதிபத்தியுமில்லை. ஆனால் அவர் உத்தமாச்ரமியாகையாலே குத்ருஷ்டிகளின் க்ரந்தங்களை ப்ரவசநம் செய்யத் தகாதென்று விட்டிட்டனர். மேலும் ஸ்ரீராமாநுஜருடைய இளமைப் பருவத்தில் அவர் மிகவும் வயோவ்ருத்தராயிருந்தார். அவர் காஞ்சீபுரத்திற் கெழுந்தருளித் தேவப்பெருமாளுடைய திருமடைப்பள்ளி ப்ரதக்ஷிண வீதியிலேயே ஸ்வாமியை ஆமுதல்வனிவனென்று கடாக்ஷித்து அநுக்ரஹித்தருளுகிற காலத்திலே ஸ்வாமி மிகவும் இளவயதிலிருந்தவர். இப்படிப்பட்ட காரண விசேஷங்களினாலே ஸ்வாமி ஆளவந்தாரிடம் அந்தேவாஸியாயிருக்க ப்ராப்தமாக வில்லை.

357. யாதவப்ரகாசர் சிகாயஜ்ஞோபவீதாதிகளை வர்ஜித்தவரா யிருந்தாலும் அவர்களுடைய மதாசாரப் படிக்கு அது கிடக்கட்டுமென்று ஸ்வாமி அந்த வேஷத்திலே கண் செலுத்தாம லிருந்தார். அக்காலத்தில் மதத்வேஷ மென்பது தலையெடுத்தாடாமலிருந்தது. மதத்வேஷம் மிகமிக முற்றின இக்காலத்திலுங் கூட மதபேதங்களையும் வேஷ வேற்றுமைக ளையும் பாராமல் அவரவர்கள் யதேச்சமாக வித்யாக்ரஹணம் செய்து போருவதை எங்கும் காணா நின்றோம். முக்கியமாக, ஸ்வாமி யாதவப்ரகாசருடைய பாண்டித்ய ப்ரபாவங்களைக் கண்டு அவரைத் திருத்திப் பணி கொள்ள வேணுமென்கிற திருவுள்ளத்தை முதலிலேயே கொண்டு விட்டார். அதனாலேயே இரண்டு மூன்று தடைவ அவரைவிட்டுத் தாம் விலக நேர்ந்துங் கூட அவரோடொட்டிக் கொண்டேயிருந்தார். யதிராஜஸப்ததியில் "ஸ்வபலாதுத்த்ருதயாதவ ப்ரகாச:" என்று அக்காலத்திலேயே ஸ்பஷ்டமாகக் கூறப் பட்டிருத்தலால், யாதவப்ரகாசரை ஸ்வாமி திருத்திப் பணி கொண்ட கதை அவிச்வஸநீயமென்று இக்காலத்திலே சிலர் சொல்லுவது உண்மைக்கு மாறானது. அக்காலத்தில் யாதவர் ஸகல விதத்திலும் மஹா ப்ரக்க்யாதராயிருந்தவர். அவரை அடிமைப்படுத்திக் கொள்ளும் முகத்தால் ஸ்ரீவைஷ்ணவ தர்சனத்திற்கு மிக்க பெரும்புகழ் விளைக்க வேண்டியே ஸ்வாமி அவரை அநுவர்த்தித்திருந்தா ரென்பது தத்துவம். ஸ்வாமியின் ப்ரபாவமும் அவருடைய ஸம்பந்தத்தாலே மிகமிக விளங்கிற்று. எங்ஙனே யென்னில்;

358. ராஜபுத்ரியை ப்ரஹ்ம ரக்ஷஸ்ஸு நலிந்து கொண்டிருக்கையில் அதை யோட்டுவதற்காக யாதவர் சிஷ்யபரிவார ஸமேதராய் ராஜக்ருஹத்திற்குச் சென்ற வளவிலே அங்கு நடந்த கதை ஸுப்ரஸித்தமானது. "த்ரஸ்தோஹம் தவ ஸவிதோஷிதாதமுஷ்மாத் சேஷாம்சாஜ் ஜநமவிதும் க்ருதாவதாரத்" (திவ்ய ஸூரி சரிதே) என்று சொல்லிற்று ப்ரஹ்ம ரக்ஷஸ்ஸு. "யாதவா! உனக்கு நான் அஞ்சமாட்டேன்; இவ்வுலகை ரக்ஷிக்க ஆதிசேஷாம்சமாய்த் திருவவதரித்திருப் பவரும் உன்னருகே நிற்பவருமான ஸ்ரீராமாநுஜர்க்கே நான் அஞ்சுவன்" என்று சொல்லிற்று. விந்த்யாடவியிலிருந்து ஒரே ராத்ரியில் ஸத்யவ்ரத க்ஷேத்திரம் வந்து சேரும்படியான பெருமையும் யாதவ ப்ரகாசரோடு ஸம்பந்தித்திருந்த காலத்தில் வெளியாயிற்று. இவ்வாறு அநேக ப்ரபாவாதிசயங்கள்

வெளியாவதற்குப் பாங்காகவும், இத்தகைய வைபவங்களைக் காட்டி யாதவரை யீடுபடுத்திக் கொள்வதற் காகவுமே ஸ்வாமி அவரை அநுவர்த்தித்து இருந்தாரென்பது வஸ்துஸ்திதி.

359. உத்தமாச்ரமியாய் அநுஷ்டாந சீலருமான யாதவர் எண்ணெய் தேய்த்துக் கொள்ளுகிற வழக்கம் வைத்துக் கொண்டிருப்பாரா வென்கிற சங்கை மிகச் சிறிது. "சரீரமாத்யம் கலு தர்மஸாதநம்" ஆகையாலே உத்தம ச்ரமிகளும் சரீரரக்ஷணம் செய்து கொள்ள ப்ராப்தமாகிறது. நாட்டாரோடியல்வொழிந்து வநேசார்களாயிருப்பார் அப்யஞ்ஜந – வபந விரேசநாதிகளை விட்டிருந்தாலும் ஸம்ஸாரிகளினிடையே போது போக்குவார்க்கு அவை அநுவர்த்தநீயங்களாகிற படியைக் காணா நின்றோம். உபாத்யாயர்க்குக் கைங்கர்யம் செய்வதில் சிஷ்யர்களுக்குக் குநூஹலமிருப்பது ஸஹஜ மாகையாலே, அப்யஞ்ஜநத்தை அவர்க்கு ஸ்வாமி செய்தாரென்பதில் விப்ரதிபத்தி தோன்ற விரகில்லை.

360. அப்யஞ்ஜநகாலத்தில் வேதாந்த ப்ரவசநம் நடந்ததாகவோ வேதாந்தார்த்த விசாரம் நடந்ததாகவோ யாரும் சொல்லவில்லை. ப்ரஸக்தாநுப்ரஸக்தமான வார்த்தா லாபங்கள் எந்த ஸமயத்திலும் நேரலாம். ஏதோ வார்த்தையடைவில் எம்பெருமானுடைய திருக்கண்களைப் பற்றி யாதவர் ஹேயமாகச் சொல்லியிருக்கிறாரென்பது தெரிய வருகிறது. 'பகவானுக்கு விக்ரஹமே கிடையாதென்றும், விக்ரஹ முள்ளதாகக் கொண்டாலும் அவனுக்கு மர்க்கட ப்ருஷ்டம் போன்ற கண்ணே யுள்ளதென்றும் ஏச்சான பேச்சு யாதவர் வாக்கில் வெளிவந்தது என்பதில் ஸந்தேஹமில்லை. அது கேட்டுப் பொறுத்திருக்க மாட்டாமையினாலேயே ஸ்வாமிக்கு உஷ்ணமான கண்ணீர் பெருகிற்று.

361. மர்க்கட ப்ருஷ்டப் பொருள் த்ரமிடாசார்யருடைய க்ரந்தத்திலும் இருந்தாலும் அங்கிருக்கிற விதம் வேறு; யாதவர் அதை அநுவதித்த விதம் வேறு. 'மச்சொடு மாளிகையேறி மாதர்கள் தம்மிடம் புக்குக் கச்சொடு பட்டைக் கிழித்துக் காம்பு துகிலவை கீறி நிச்சலும் தீமைகள் செய்வாய்' என்று ஆழ்வார்கள் திருவாக்கில் வருமவையே சிசுபால ஸஹோதரர்களின் வாக்கில் வந்தால் அஸஹ்யமாகிறபடியை அநுபவத்தில் காணா நின்றோமல்லவா?

362. ஸ்ரீ சக்ரவர்த்தி திருமகன் பருவம் நிரம்பின பின்பு செய்த ஜடாயு மோக்ஷ ப்ரதாநத்திலே ஆக்ஷேப ஸமாதானங்கள் வர்த்தியா நின்றன; கண்ணபிரான் நான்கு பிராயத்திலே செய்த ததிபாண்ட மோக்ஷ ப்ரதாநத்திலே ஆக்ஷேபிப்பாருமில்லை, ஸமாதானம் சொல்லுவாருமில்லை. இதை நாம் காட்டுவதன் கருத்தை உய்த்துணர்க.

363. 'பஞ்சாசார்ய பதாச்ரித:' என்று, ஐந்து ஆசார்யர்களிடத்திலே அர்த்தங்கள் கேட்டவராகச் சொல்லப்படுகிற எம்பெருமானார் உபநிஷத்துக்களின் அர்த்தங்களை ஓராசார்யரிடத்திலும் கேட்டதாகத் தெரியவில்லையேயென்று சிலர் சொல்லுவதுண்டு 'வேதவேத்யே பரே பும்ஸி ஜாதே தசரதாத்மஜே, வேத: ப்ராசேதஸாதாஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மநா," என்கிறபடியே ஸாக்ஷாத் வேதப்ராதுர்ப்பாவமான ஸ்ரீராமாயணத்திற்கும் வேதந் தமிழ் செய்த மாறன் சடகோபன் சொல்லாயிரத்திற்கும் பொருள் கேட்ட விடத்தில் வேதாந்தார்த்தங்கள் தவிர வேறு என்ன கேட்கலாகும்?

364. 'ஆளவந்தார்க்கு ஏகலவ்யன் காணும் நான்'' என்றருளிச் செய்த எம்பெருமானார் எந்த ஆசார்யரிடத்திலும் எதுவும் கேட்டிருக்கத் தேவையில்லை யென்பது பரமார்த்தம். வேதாந்த தேசிக விரசித கீதாபாஷ்யதாத்பர்ய சந்த்ரிகையில் 'யத்பதாம்போருஹ ச்லோக வியாக்கியானத் தில் 'ஆளவந்தார்க்கு நான் ஏகலவ்யன் என்று ஸ்வாமி ஸாதித்ததாக ஸ்பஷ்டமா யெழுதப் பட்டிருப்பதும் காண்க.

365. ஆகவே ''யஸ்ய தேவே பராபக்திர் யதா தேவே ததா குரௌ தஸ்யைதே அகதிதா ஹ்யர்த்தா: ப்ரகாசந்தே மஹாத்மந:'' என்று கிலருக்கில் சொன்னபடி ஆசார்ய பக்தி விசேஷத்தாலே ஸகலார்த்தங்களும் ஸ்புரிக்கப் பெறுகிற உத்தமாதிகாரிகளுக்குள் அக்ரகண்யரான ஸ்வாமி உபநிஷத்துக்களின் ஸித்தாந்தப் பொருள்களை எந்த ஆசார்யரிடத்தில் க்ரஹித்தாரென்று கேட்பதுதானும் அநுசித மென்னக் குறையில்லை.

366. சில ஆசார்யர்களின் பக்கலிலே சில கேட்டதாகச் சொல்லியிருப்பதும் லோகமர்யாதைக்குச் சேரவாமத்தனை. வ்யாஸ பராசர வால்மீகி ப்ரப்ருதிகளான மஹர்ஷிகள் ஸம்ஸ்க்ருதம் யாரிடத்தில் வாசித்தார்களென்றும், ஆழ்வார்கள் தமிழ் யாரிடத்தில் கற்றார்களென்றும் கேட்பது போன்ற கேள்விகளுக்குச் செவி கொடுப்பது தானும் அபசாரமாகும்.

367. ஸ்ரீ பாஷ்யத்தின் உபக்ரமத்தில் ப்ரஹ்மசப்தார்த்த விசாரம் செய்யாநின்ற ஸ்ரீபாஷ்யகாரர் ஸ்வரூபத்தாலும் குண கணங்களாலும் ஒப்புயவர்வற்ற மேன்மை பெற்ற வஸ்துவுக்கே ப்ரஹ்மசப்த வாச்யத்வம் பொருந்துமென்றும், அப்படி மேன்மை பெற்றவன் பரமபுருஷனொருவனே யாகையாலே அவனிடத்தில்தான் ப்ரஹ்ம சப்தப்ரயோகம் முக்க்ய வ்ருத்த்யா சேரும் என்றும், சுகப்ரஹ்மம் வ்யாஸப்ரஹ்மம் என்று சொல்லுவது உண்டாகிலும் அவ்விடங்களில் ப்ரஹ்மசப்தப்ரயோகம். ஔபசாரிகமேயல்லது முக்கிய வ்ருத்தமன்று என்றும் அருளிச் செய்து, பகவச் சப்தத்திற்கும் இதே நியாயந்தானென்று முடித்திருக்கிறார்.

368. இவ்விஷயங்களை உள்ளபடி க்ரஹிக்கில்லாதவர்கள் ஒரு ஆக்ஷேபம் செய்கிறார்கள். இப்படி எழுதின பாஷ்யகாரர் ஸ்ரீபாஷ்யம் தொடங்கும் போதே ''பகவத்போதாயநக்ருதாம்'' என்று ஸாதித்திருக்கிறார். போதாயனரென்னும் ஒரு வ்யக்தியை பகவச்சப்தத்தையிட்டு எப்படி குறிக்கலாம்? அன்றியும், ஸ்ரீபாஷ்யத்தின் முடிவில் ''இதி ஸ்ரீபகவத் ராமாநுஜவிரசிதே'' என்று கூரத்தாழ்வான் ஸாதித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவர் தம்முடைய திருக்கையால் ஸ்ரீபாஷ்ய மெழுதினவராய் இருந்துவைத்து பகவச் சப்தத்தைப் பற்றி ஸ்வாமி ராமாநுஜர் அருளிச் செய்ததற்கு முரணாக ''பகவத் ராமாநுஜ'' என்று எப்படி பணிக்கிறார் என்று (ஆக்ஷேபம் செய்கிறார்கள்).

369. ஸ்ரீ பாஷ்யத்தில் என்ன சொல்லி யிருக்கிறதென்பதை விசதமாகத் தெரிந்து கொள்ளாமல் செய்யும் ஆக்ஷேபமிது. ப்ரஹ்மசப்தத்தையோ பகவச்சப்தத்தையோ பரமபுருஷாத் அந்யத்ர ப்ரயோகிக்கவே கூடாதென்று ஸ்வாமி நிஷேதித்திருக்கவில்லை. அப்படி ப்ரயோகிப்பது அஸாதுவென்று தூஷித்திருக்கவுமில்லை. ''தஸ்மாதந்யத்ர

தத்குணலேச யோகாத் ஔபசாரிக:'' என்று ஸ்ரீபாஷ்ய ஸூக்தி ஸுஸ்பஷ்டமாகவுள்ளது. உலகில் முக்யப்ரயோகமென்றும் ஔபசாரிக ப்ரயோகமென்றும் இருவகை யுண்டு. பரமபுருஷனிடத்தில் முக்ய்ய ப்ரயோக மென்றும் இதரர்களிடத்தில் ஔபசாரிக ப்ரயோகமென்றும் வ்யவஸ்தை செய்யப் பட்டிருக்கிறது. ஆக அந்யத்ர ப்ரயோகத்தை நிஷேதிப்பதோ தூஷிப்பதோ செய்யாமை யாலே ''பகவத்போதாயந'' ''பகவத் ராமாநுஜ'' இத்யாதி ப்ரயோகங்கள் பொருந்தக் குறையில்லை, முக்க்யவ்ருத்தியில்லை, ஔபசாரிகமத்தனை என்று முடிந்தது.

370. இதற்கு மேல் ஒரு விஷயம் விசாரத்திற்கு வருகிறது. ருத்ரனுக்கு மஹாதேவனென்று வ்யபதேசமுள்ளது. மஹாதேவ: என்று ஸமஸ்தபதமாகவே சொன்னால்தான் ருத்ரப்ரதீதி வருமென்றும், மஹாந்தேவ:– மஹாந்தம் தேவம்– மஹதே தேவாய–மஹதிதேவே என்றிப்படி வ்யஸ்தமாகச் சொன்னால் ருத்ரப்ரதீதி வரமாட்டாதென்றும் பூருவர்கள் நிஷ்கர்ஷித் திருக்கிறார்கள். இவ்விடத்திலும் ப்ரஹ்ம சப்த பகவச்சப்தங்களிற் போலே முக்க்யவ்ருத்தி, கௌணவ்ருத்தியென்று கொண்டு, மஹாதேவ: என்று ஸமஸ்தமாகச் சொல்லுமிடங்களில் ருத்ரப்ரதீதியானது முக்க்யவ்ருத்த்யா வரும், மஹாந்தேவ:, மஹதிதேவே என்றாற் போலே வ்யஸ்தமாகச் சொல்லுமிடங்கில் அது கௌணவ்ருத்த்யாவரும் என்று வ்யவஸ்தை பண்ணக்குறையில்லை என்று சிலர் சொல்லப் பார்க்கிறார்கள்.

371. இது பொருத்தமற்றது. மஹாதேவபதமும் மஹாவ்ருக்ஷபதமும் ஸமதுலையில் வைக்கப்பட்டிருக்கிறது. கள்ளிச் செடிக்கு மஹாவ்ருக்ஷமென்று பெயர். மஹாவ்ருக்ஷமென்று ஸமஸ்தமாகச் சொன்னால்தான் கள்ளிச் செடிக்கு ப்ரதீதி வரும். மஹாந் வ்ருக்ஷ: என்று வ்யஸ்தமாகச் சொன்னால், உண்மையில் பெரிதாயிருக் கின்ற மரம் எதுவோ அதற்கு ப்ரதீதி வருமேயொழிய கள்ளிச் செடிக்கு ஒருநாளும் ப்ரதீதி வரமாட்டாது. மஹாதேவ பதத்திலுமிப்படியேதான். இங்கு முக்க்ய வ்ருத்தி கௌணவ்ருத்தி என்கிற வார்த்தைக்கு அவகாசமே கிடையாது.

372. மஹாதேவபதம் ஸமஸ்தபத மாயிருந்தால் தான் ருத்ரப்ரதீதிவரும் என்று சொல்வது பிசகு; ஸமஸ்தமாயிருந்தாலும் வ்யஸ்தமாயிருந்தாலும் ருத்ரப்ரதீதி யுண்டாகத் தடையில்லை என்னில்; இதற்கு நாம் ஒரு மறுப்பும் சொல்லவருகின்றிலோம். ஸமஸ்தபதம் வ்யஸ்தபதம் என்கிறவிஷயமே இல்லையென்று தேறிவிட்டால் இங்கு விவாத ப்ரஸக்தியே கிடையாதன்றோ, முக்க்யவ்ருத்தி, கௌணவ்ருத்தி என்கிற பேச்சுக்கும் அவகாசமில்லையன்றோ.

373. இனி, ஸமஸ்தபதமாயிருந்தால் தான் ருத்ரப்ரதீதிவரும், வ்யஸ்தமாயிருந் தால் அது வாராது தான் என்கிற நியமத்தை மாற்றாமல் ஒப்புக் கொண்டு, ப்ரகரணபலாத் சிலவிடங்களில் வ்யஸ்தப்ரயோகத்திலும் ருத்ரப்ரதீதிவரலாமென்று வாதம் வரின், இது ஏற்கத்தக்கதன்று. ப்ரகரணபலாத் அந்த சக்திக்கு ப்ரச்யுதி வருவதாகச் சொல்லுவதானது சாஸ்த்ரஜ்ஞர்கள் ஆமோதிக்கத் தக்கதன்று. 'பங்கஜம் ராத்ரௌ விகஸதிஸ்ம' என்று ஒருவன் ப்ரயோகம் செய்து, இந்த பங்கஜபதத் திற்குத் தாமரை மலர் பொருளானாலும்

ராத்ரியில் விகஸித்ததாகச் சொல்லுகிற ப்ரகரண பலத்தாலே குமுதந்தான் இங்குப் பொருளாக விலக்ஷிதம் என்று சொன்னால் இதையும் ஆமோதிக்க நேரும். ப்ரகரண பலாத் அர்த்த விசேஷபோதம் என்பது ரூடிஸ்தலத்திலன்று;நாநார்த்தகஸ்தலத்தில். போஜந ப்ரகரணத்தில் 'ஸைந்தவமாநய' என்றால் உப்பு கொண்டு வா என்று பொருள்; அந்த வாக்யத்தையே ப்ரயாண ப்ரகரணத்தில் சொன்னால் குதிரை கொண்டுவா என்று பொருள் என்பதாகத் தெரிவிப்பர் சாஸ்த்ரஜ்ஞர். ஆக, ப்ரகரண பலாத் அர்த்தவிசேஷ ப்ரதீதி யென்று சொல்ல நினைக்கு மிடங்களில் ரூடிவாதம் அநுபபந்நம் என்று முடிந்தது.

374. வ்யஸ்தப்ரயோகத்தில் ரூடிசக்தி யினால் எப்போதுமே ருத்ரபோதம் வரமாட்டாது; வேறு வகையாலே சிலவிடங்களில் அது வரக்கூடும்; சிலவிடங்களில் வராமலும் போகும். அதற்கு ப்ரகரணம் நியாமகம் என்று சிலர் நிஷ்கர்ஷிப்பதாகத் தெரிவிப்பதானது பண்டிதகோஷ்டிகளில் சிறிதும் பரிசு பெறாது. 'ரூடி சக்த்யா' என்பதும் 'ப்ரகரணபலாத்' என்பதும் பரஸ்பரவ்யாஹதங்கள். ஸாமாந்யசப்தங் கள் ப்ரகரண பலாத் விசேஷோபஸ்தாபக மாவதுண்டு. நாநார்த்தக சப்தங்களும் அப்படியே. ப்ரஹ்மசப்தமோ பகவச் சப்தமோ மஹாதேவ சப்தமோ ஸாமாந்ய சப்தமுமன்று, நாநார்த்தக சப்தமுமன்று, ப்ரஹ்மசப்த பகவச்சப்தங்கள் நாராயண சப்தாபேக்ஷயா ஸாமாந்ய சப்தந்தானே யென்று ஒரு சோத்ய முண்டாகலாம். அது வேதாந்த ஸிந்துவில் ஒரு ஆழ்ந்த விஷயம். பகவாந் ஸேவித:, ப்ரஹ்ம ஸேவிதம் என்றால் 'போதாயந பகவாந் ஸேவிதோ வா? சுகப்ரஹ்ம ஸேவிதம் வா?' என்று ஒருவர்க்கும் விசிகித்ஸையுண்டாகாது. ஆகவே ப்ரஹ்மசப்த பகவச் சப்தங்களுக்கு பரப்ரஹ்மந்தவிர வேறிடங்களில் ஔபசாரிக ப்ரயோகமிருப்பது போல் மஹாந்தேவ: என்பதற்கும் – என்று நெஞ்சால் நினைக்கவும் தகாது.

375. இக்காலத்தில் பகவத்கீதையின் அருமையை யறியாதார் இல்லை. எந்த மதத்தினரும் கீதையில் விசேஷமான ஆதரவு காட்டுகிறார்கள். எழுதக் கற்றவர்கள் பெரும்பாலும் கீதைக்கு வ்யாக்கியான மெழுதியே க்ருதக்ருத்யர்க ளாகிறார்கள். தற்காலம் உலகில் எத்தனை பாஷைகள் நடையாடுகின்றனவோ அத்தனை பாஷைகளிலும் கீதைக்குப் பலவாயிரக் கணக்கில் வியாக்கியானங்கள் தோன்றியிருப்பதாக விமர்சகுசலர்கள் சொல்லுகிறார்கள். ஒவ்வொரு பாஷையிலும் உள்ள வியாக்கியானங்கள் எண்ணிறந்தன என்கிறார்கள். பிற் காலத்தவர்கள் எழுதிய வியாக்கியானங்கள் கிடக்கட்டும். புராதனர்களாய் வைதிகர்களென்று கொண்டாடப்பட்டவர்களான மஹான்க ளால் இயற்றப்பட்ட வியாக்கியானங்களும் பல இருப்பதாகத் தெரிகிறது. அவற்றுள் 'மதத்ரய பாஷ்யம்' என்று குலவாப்படுவன சங்கரபாஷ்யமும் ராமாநுஜ பாஷ்யமும் மத்வ பாஷ்யமுமாகும்.

376. இவற்றுள் மத்வாசார்யருடைய பாஷ்யம் மிகவும் சுருக்கமாகவுள்ளது. அவருடைய ப்ரஹ்மஸூத்ர பாஷ்யமே அதிஸம்க்ஷிப்தமென்னும் போது கீதா பாஷ்யத்தைப் பற்றிச் சொல்ல வேண்டாவே. இம்மஹாசார்யர் பல பல அபூர்வமான உபநிஷத் ப்ரமாணங்களை மேற்கோளாக எடுத்துக் காட்டுகிறாரென்பது இவருடைய பாஷ்யத்திற்குள்ள விசேஷமாகும். சங்கரபாஷ்யத்தின் பெருமை உலகறிந்ததே.

377. பகவத் ராமாநுஜ பாஷ்யத்தை அநுபவிக்க அநுபவிக்க, அதனுடைய அருமை பெருமைகள் 'நெஞ்சால் நினைப்பரிதால்' என்ன வேண்டியதாகிறது. நமது ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்திற்கு கீதாபாஷ்யம் ஒரு சிறந்த மஹாநிதி யென்றே சொல்ல வேண்டும். இதற்கு வேதாந்த தேசிகனுடைய டீகையான தாத்பர்ய சந்த்ரிகை அவதரிக்க வில்லையாகில் இது அவதரித்தும் நிஷ்ப்பலமே யென்று சொல்ல வேண்டியதாகும். தேசிகனுடைய ஸகல க்ரந்தங்களுக்குள்ளும் கீதாபாஷ்ய தாத்பர்ய சந்த்ரிகை தனிப்பட்ட பெருமை வாய்ந்த தென்றால் இது மிகையாகாது. கீதாபாஷ்யத்திற்கு அந்யூநாநதிரிக்தமான டீகையன்றோ தாத்பர்ய சந்த்ரிகை. பாஷ்யத்தின் அருமை பெருமைகளை இந்த டீகையினாலேயே அறிய வேண்டியதாகிறது. மூலத்திற்கு ஸம்பந்தப்படாமல் ஸ்வதந்திரமாகப் பல விஷயங்களை வளர்த்தி க்ரந்தத்தைப் பெருக்குகிற முறை இதில் அடியோடு கிடையாது. அபேக்ஷித விஷயங்களை விடாமலும் அநபேக்ஷித விஷயங்களைத் தொடாமலும் அற்புதமாக எழுதப்பட்ட டீகையன்றோ இது. ஒரு விஷயமிங்கெடுத்துக் காட்டுகிறோம்.

378. கீதை பத்தாவது அத்யாயத்தில் பத்தாவது ச்லோகம்– "தேஷாம் ஸததயுக்தாநாம் பஜதாம் ப்ரீதிபூர்வகம், ததாமி புத்தியோகம் தம் யேந மாமுப யாந்தி தே" என்பது. இங்கு 'பஜதாம் ப்ரீதி பூர்வகம்' என்பதற்கு எப்படிப்பட்ட பண்டிதர்களுடைய புத்தியிலும் 'ப்ரீதி பூர்வகம் பஜதாம்' என்கிற அந்வயம் தோன்றுமே யொழிய வேறுவிதமான அந்வயம் தோன்றவே மாட்டாது. பஜிப்பதாவது வந்தடைவது; வந்தடைகிறவர்களெல்லாருமே ப்ரீதியோடு வந்தடைகிறார்களென்று சொல்ல முடியாது. அப்ரீதியோடு வந்தடைபவர்களும் இருக்கக் கூடுமாதலால் அப்படிப்பட்டவர்களை வ்யாவர்த்திக்கைக்காக 'ப்ரீதிபூர்வகம் பஜதாம்' (ப்ரீதியோடு பஜிப்பவர்கள்) என்கிற அந்வயந்தான் காட்டப்பட்டது. 'ஸ்நேஹத்தோடு பஜிக்கின்றவர்களுக்கு' என்று பொருள் கூறப்பட்டுள்ளது.

379. ஸ்வாமி ராமாநுஜரோவென்னில்; அப்பொருளைக் கண்டனம் செய்யாமலும் அப்படிப் பொருள் கொள்ளுகிற விதம் ஒன்றிருப்பதாகக் கூடக் காட்டிக் கொள்ளாமலும் "தமேவ புத்தியோகம் ப்ரீதிபூர்வகம் ததாமி" என்று ஆச்சரியமான அந்வயக்ரமத்தைக் காட்டி பாஷ்யமிட்டருளினார். பூர்வார்த்தத்திலுள்ள பதத்தை உத்தரார்த்தத்தில் அந்வயிப்பதென்பது அஸம்பாவிதமுமன்று. அபூர்வமுமன்று. "பஜதாம் ப்ரீதிபூர்வகம் ததாமி" (பஜிப்பவர்களுக்கு ப்ரீதியோடு கொடுக்கிறேன்) என்று ஸ்வாமி அந்வயித்தவிது அதிசயிக்கக் கூடியதன்று, ஆச்சரியப்படக் கூடியதன்று. ஆனாலும் இங்ஙனே யந்வயம் வித்வான்களுக்கும் ஸ்புரிக்கமாட்டாது. 'பஜதாம் ப்ரீதிபூர்வகம்' என்று பூர்வார்த்தம் முடிந்தபடியாலே 'ப்ரீதி பூர்வகம் பஜதாம்' என்கிற அந்வயமே யாவர்க்கும் ஸ்வரஸமாகத் தோன்றக் கூடியது. கீழே ஒன்பதாம் அத்யாயத்தில் (29) "ஸமோஹம் ஸர்வ பூதேஷு" என்றவிடத்தில் 'பக்த்யா பஜந்தி' என்றிருப்பதனாலே அங்குப் போலவே இங்கும் 'ப்ரீதிபூர்வகம் பஜதாம்' என்று இருப்பது யுக்தந்தானென்று க்ரஹிப்பதற்கே பண்டிதர்கள் ஸஜ்ஜர்களாயிருக்கிறார்கள். சங்கராசார்ய ஸ்வாமிகளும் அப்படித்தானே க்ரஹித்தார்கள்.

ஸ்வாமி எம்பெருமானாரு டைய மேதை விலக்ஷண மாக ப்ரஸரித்தது. ப்ரீதிபூர்வகம் க்ரியையிலே அந்வயிப்பது ரஸவத்தரம் என்பது தோன்றவே அப்படி அந்வயித்து பாஷ்யமிட்டருளினார்.

380. மஹாஜ்ஞாநநிதியான சங்கரா சார்ய ஸ்வாமிகள் காட்டியிருக்கிற அந்வயத்தைத் தள்ளி இங்ஙனே விலக்ஷணாந்வயம் காட்டினதால் என்ன லாபம் கிடைக்கிறதென்று கௌதஸ்குதர்கள் கேட்கக்கூடுமே. இதற்கு நம்போல்வாரால் என்னை விடை கூற முடியும்? ஸாமாந்யமாக கீதாபாஷ்யத்தை ஸேவித்துக் கொண்டு போமவர்கள், 'இங்குப் பிறர்களின் அந்வயக்ரமம் வேறு; ஸ்வாமியின் அந்வயக்ரமம் வேறு' என்பதைக் கூட க்ரஹிப்பதில்லை. சிலர் க்ரஹித்தாலும் இதிலுள்ள ரஸ விசேஷம் இன்னதென்பதை அடியோடு க்ரஹிக்க சக்தராவதில்லை.

381. இவ்விடத்தில் ஸ்வாமி தேசிகன் தாத்பர்ய சந்த்ரிகையில் நிதியெடுத்துக் கொடுத்தருளுகிறார். சங்கராசார்ய ஸ்வாமிகள் 'ப்ரீதி பூர்வகம் பஜதாம்' என்று அந்வயித்திருக்கவும் ஸ்வாமி இப்படி விலக்ஷணாந்வயம் செய்தருளி யிருப்பதற்கு யாது காரணம்? இதில் என்ன விசேஷம்? என்று ஆராய்ந்தார் தேசிகன். ஆராய்ச்சியில் தேறினதை அழகாக எழுதி வைத்திருக்கிறார்.

382."....ப்ரீதிபூர்வகமித்யஸ்ய பஜநாந்வயே ப்ரயோஜநம் மந்தம்; ததாமீத்யநேநாந்வயே து .... பரமோதாரத்வாதி பகவத்குணப்ரகாசேந மஹத்ப்ரயோஜநமித்யபிப்ராயேண ப்ரீதிபூர்வகம் ததாமீத்யந்வய உக்த:" என்பன சந்த்ரிகா ஸ்ரீஸூக்திகள். இதனால் தெரிவிக்கப்படுகிறதென்ன வென்றால், (ப்ரீதி பூர்வகம் பஜதாம்) என்று அந்வயிப்பதில் அநுபபத்தியொன்றும் சொல்ல முடியாது; ஆனால் அவ்வந்வயத்திற் காட்டிலும் ப்ரீதி பூர்வகம் ததாமி யென்னுமந்வயத்தில் அதிசயித்த ப்ரயோஜனமுள்ளது. அதாவது எம்பெருமானுடைய பரமோதாரத்வம் முதலான திருக்குணங்களை வெளியிடுவது தான்– என்றதாயிற்று. உலகத்தில் தானம் செய்பவர்கள் வெறுப்புனும் அழுகையுடனும் கொடுப்பதுமுண்டாகையால் எம்பெருமான் அப்படி கொடுப்பவனல்லன்; ஸத்பாத்ரத்தில் கொடுக்கப் பெற்றோமே! என்று உள்ளம் பூரித்துக் கொண்டே கொடுப்பவன் – என்று இப்படிப்பட்ட மஹாகுணம் இவ்வந்வயத்தில் தேறுகையாலே இதுதான் ஆதரிக்கத்தக்க அந்வயம் என்று காட்டியருளினாராயிற்று.

383. ஸ்வாமி பாஷ்யகாரர் 'ப்ரீதி பூர்வகம் ததாமி' என்று அந்வயித்ததற்கு முக்யமான காரணம் ஆழ்வார் ஸ்ரீஸூக்தியேயாகும். திருவாய்மொழியில் (8–7–8) 'அறியேன் மற்றருள்' என்றபாட்டில் "அருள் செய்வர் செய்வார்கட்கு உகந்து' என்றுள்ளது. எம்பெருமான் தானருள் செய்ய நினைத்தவர்கட்கு உகந்து அருள் செய்வதாக ஆழ்வாருளிச் செய்ததற்கு இணங்கியிருக்க வேணுமென்று திருவுள்ளம் பற்றியே ஸ்வாமி விலக்ஷண அந்வயம் காட்டியருளினாரென்பதை அறியவல்லார் ஆர்கொல்?

384. இதிலிருந்து ஒரு ந்யாய சிக்ஷண மும் செய்யப்பட்டதாகிறது. அதாவது, எந்த அந்வயத்தில் பகவத் குணாதிசயம் விளங்குகிறதோ அந்த அந்வயந்தான் சிறந்ததாகக் கொள்ளத்தக்க தென்பதாம்.

385. இவ்வண்ணமாகவே 'பூயிஷ்டாம் தே நமஉக்திம் விதேம' என்ற ச்ருதியிலும் 'பூயிஷ்டாம் நம உக்திம் தே விதேம' என்று காட்டு மந்வயம் அதுஷ்டமேயாகிலும் மந்தப்ரயோஜநகம்: தே பூயிஷ்டாமென்று கொள்ளுமந்வயத்தில் பகவத் குணாதிசய ப்ரகாசநேந ப்ரயோஜநாதிசயமுண்டு.

386. ஸ்ரீமத் பகவத்கீதையில் "யத்யதாசரதி ச்ரேஷ்டஸ் தத் ததேவேதரோ ஜந:; ஸ யத்ப்ரமாணம் குருதே லோகஸ்ததநுவர்த்ததே." (3–21) என்னும் ச்லோகம் சிஷ்டாசாரத்தின் சிறப்பைத் தெரிவிப்பது ஸம்ஸ்க்ருதஜ்ஞர்களுக்கு அநாயாஸமாகப் பொருள்படக் கூடிய ச்லோகமிது. இதன் உத்தரார்த்தத்திற்கு பாஷ்யமிட்ட சங்கராசார்ய ஸ்வாமிகள் "ஸ: ச்ரேஷ்ட: யத் ப்ரமாணம் குருதே லௌகிகம் வைதிகம் வா; லோக: தத் அநுவர்த்ததே–ததேவ ப்ரமாணீகரோதீதி அர்த்த:" என்று உரைத்தார். ச்ரேஷ்டராயிருப்பார் யாதொன்றை ப்ரமாணமாகக் கொள்ளுகிறார்களோ அது தன்னையே லோகமும் ப்ரமாணமாகக் கொள்ளுகிறது என்பதாகப் பொருள் காட்டப்பட்டதாயிற்று. மத்வாசார்யரான ஆனந்த தீர்த்த ஸ்வாமிகளும் இவ்வண்ணமாகவே பொளுரைத்தார். "ஸ: யத் வாக்யாதிகம் ப்ரமாணீகுருதே–யதுக்த ப்ரகாரேண திஷ்டதீத்யர்த்த:" என்பது அவருடைய பாஷ்யபங்க்தி. ஆக இவற்றால் "யத்ப்ரமாணம்" என்றவிடத்தில் பதச்சேதம் இவர்களுக்கு விவக்ஷிதம் என்று தேறிற்று. யத் என்பது தனிப்பதமென்று முடிந்தது. நம் பாஷ்யகாரர் இங்கு இரண்டு பதங்களாகத் திருவுள்ளம் பற்றாமல் (யத்ப்ரமாணம்) என்று பஹுவ்ரீஹி ஸமாஸங்கொண்ட ஒரே பதமாகத் திருவுள்ளம் பற்றி பாஷ்யம் இட்டருளியுள்ளார். பூர்வார்த்தத்தில் "ச்ரேஷ்ட: யத்யத் ஆசரதி" என்றதற்கு ச்ரேஷ்டராயிருப்பார் எந்தெந்த கருமத்தை யநுஷ்டிக்கிறாரோ என்பதாகப் பொருளாதலால் அந்த கருமத்தைப் பற்றியே உத்தரார்த்தமும் சொல்லுகிறதென்று ஸ்வாமியின் திருவுள்ளம். சிஷ்டர்கள் தாங்களனுஷ்டிக்கிற கருமத்திற்கு எவ்வளவு அவதி வைத்துக் கொள்ளுகிறார்கள் என்றபடி. இதை தாத்பர்யசந்த்ரிகையில் வேதாந்த தேசிகன் விவரித்துள்ளார். 'பெரியோர்கள் அநுஷ்டிக்கிற கருமத்தையே பிறரும் அநுஷ்டிக்கிறார்கள்' என்று இவ்வளவு மாத்திரமே சொன்னால் போதாது. அவர்கள் அக்கருமத்தை எந்த விதமாக அநுஷ்டிக்கிறார்களோ அந்த விதமாகவே பிறரும் அநுஷ்டிக்கிறார்கள் என்றும் சொல்ல வேண்டியது இங்கு ஆவச்யகமாதலால் அதற்குச் சேர ஸ்வாமியின் பாஷ்யம் மிகப் பொருத்தமாக அவதரித்துள்ளது. பெரியார் எதை ப்ரமாணமாகக் கொள்ளுகிறாரோ அதையே பிறரும் ப்ரமாணமாகக் கொள்ளுகிறாரென்பது ப்ரக்ருதத்தில் அநபேக்ஷிதமாதலால் இதர பாஷ்யகாரர்களை நம் ஸ்வாமி பின் செல்லவில்லை.

387. இதர பாஷ்யகாரர்களுக்குத் தோன்றாத அர்த்தம் இங்கு நம் ஸ்வாமிக்குத் தோன்றினது எதனால் என்னில்; ஸ்வாமி திருப்பாவை ஜீயரென்று ப்ரஸித்தி பெற்றிருந்ததனாலேயே என்க. திருப்பாவையில் "மாலே மணிவண்ணா என்கிற பாசுரத்தில் "மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்" என்றுள்ளது; இங்கு மேலையார் செய்வனகள் கேட்டியேல்' என்னுமளவே போதுமாயிருக்க இடையில் 'வேண்டுவன' என்று

ப்ரயோகித்தது குறிக்கொள்ளத் தக்கது. அதை நோக்கியே யத்ப்ரமாண மென்றதை ஸமஸ்தமாகக் கொண்டு பாஷ்யமிட்டருளினார் திருப்பாவை ஜீயர்.

388. கீதையில் 'பரித்ராணாய ஸாதூநாம்' (4–8) என்ற விடத்திற்கு பாஷ்யமருளிச் செய்யா நின்ற ஸ்வாமி, ஸாதுக்கள் யாவர்? என்பதை விவரிக்கு மிடத்து ஆழ்வார்களே ஸாதுக்களென்று ஸுஸ்பஷ்ட சப்தங்களால் விளக்கியருளி னார்; 'காணவாராயென்றென்று கண்ணும் வாயும் துவர்ந்து, ஒரு பகலாயிரமூழியாலோ வென்று தளர்ந்து, 'நினைந்துநைந்துள் கரைந்துருகி நிற்குமாழ்வார்களே ஸாதுக்களென்கிறார். அங்கு அருளிச் செய்திருக்கிற பரமபோக்யபங்க்திகள் சங்கரபாஷ்யாதிகளில் அணுவளவும் காணக்கிடையா; இவற்றை திவ்யஸூக்தி ரஸிகர்கள் நிச்சலும் சிந்தனை செய்யவேணும். அவ்விடத்து ஸ்ரீஸூக்திகள் வருமாறு– "ஸாதவ: உக்த லக்ஷண தர்மசீலா: வைஷ்ணவாக்ரேஸரா: மத்ஸமாச்ரயேண ப்ரவ்ருத்தா: மந்நாம கர்மஸ்வரூபாணாம் வாங்மநஸாகோசரதயா மத்தர்சநேந விநா ஸ்வாத்மதாரண போஷணாதிகம் அலபமாநா: க்ஷணமாத்ர காலம் கல்பஸஹஸ்ரம் மந்வாநா: ப்ரசிதில ஸர்வகாத்ரா பவேயுரிதி மத்ஸ்வரூப சேஷ்டிதாவலோகந ஆலாபாதிதாநேந தேஷாம் பரித்ராணாய" என்று. இந்த கீதாபாஷ்ய பங்க்திகள் ஆழ்வார்களின் தன்மைகளை அவர்களின் திவ்ய ஸூக்திகளை கொண்டேயருளிச் செய்தவை, (பதங்களின் மேலே சிறிது விவரிக்கிறோம்.)

389. 'வைஷ்ணவாக்ரேஸரா: என்பது இங்கு விசேஷ்யவாசகபதம். ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திலே முன்னிற்பவர்கள் ஆழ்வார்களே யென்பது நிர்விவாதம். மற்றுமுள்ள விசேஷணங்கள் எல்லாம் அவர்களுக்கே பொருந்துமவை யாயும் அவர்களையே சுட்டிக்காட்டு மவையாவும் அமைந்திருக்கின்றன. எங்ஙனேயென்னில்; (உக்தலக்ஷண தர்மசீலா;) 'யதாயதாஹி தர்மஸ்ய' என்கிற கீழ்ச்லோகத்தில் "தர்மஸ்ய– வேதோதிதஸ்ய சாதுர்வர்ண்ய சாதுராச்ரம்ய வ்யவஸ்தயா அவஸ்திதஸ்ய" என்று தாமருளிச் செய்திருக்கையாலே அதுவே 'உக்தலக்ஷணதர்ம' என்பதனால் பராமர்சிக்கப்படுகிறது. ஆழ்வார்கள் வேதோக்தங்களான வர்ணாச்ரம தருமங்களை எள்ளளவும் கடவாதவர்கள் என்றதாயிற்று. (மத்ஸமாச்ரயணே ப்ரவ்ருத்தா:) "துயரறுசுடரடி தொழுதெழென் மனனே" என்றும் "ஆழிவண்ண! நின்னடியிணையடைந்தேன்" என்றும் சொல்லி பகவதாச்ரயணத்திலே ஒருப்பட்டவர்கள் என்றபடி. (மந்நாமகர்ம ஸ்வரூபாணாம் வாங்மநஸ அகோசரதயா), எம்பெருமானுடைய திருநாமங்களையும் சேஷ்டிதங்களையும் ஸ்வரூபத்தையும் பேசப்புகுந்து 'என்சொல்லிச் சொல்லுகேன்' என்றும், 'நெஞ்சால் நினைப்பரிதால் வெண்ணெயூணென்னுமீனச்சொல்லே' என்றும் வாக்குக்கும் மநஸ்ஸுக்கு மெட்டாதவையென்று சொன்னவர்களும் ஆழ்வார்களே.

390. (மத்தர்சநேந விநா ஸ்வாத்ம தாரண போஷணாதிகம் அலபமாநா:) 'தொல்லைமாலைக் கண்ணாரக்கண்டு கழிவதோர் காதலுற்றார்க்கும் உண்டோ கண்கள் துஞ்சுதலே' என்றும்' காணவாராய் என்றென்று கண்ணும் வாயும் துவர்ந்து........' என்றும் சொல்லிக் கண்ணாரக் கண்டாலல்லது தரிப்பும் பெறாதவர்களும் ஆழ்வார்களே. (க்ஷணமாத்ரகாலம் கல்பஸஹஸ்ரம் மந்வாநா:) 'ஒரு பகலாயிர மூழியாலோ', 'ஊழியில்

பெரிதால் நாழிகை யென்னும்', 'ஓயும் பொழுதின்றி ஊழியாய் நீண்டதால்' என்று பேசி 'அவனை விட்டகன்று உயிராற்றகில்லாதவர்களும் ஆழ்வார்களே. (ப்ரசிதில ஸர்வகாத்ரா:) 'காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்' காலுமெழா கண்ணதீரும் நில்லா உடல் சோர்ந்து நடுங்கிக் குரல் மேலுமெழா மயிர்கூச்சுமறா', 'உள்ளெலாமுருகிக் குரல் தழுத்தொழிந்தேன் உரோம கூபங்களாய்க் கண்ணநீர்கள் துள்ளஞ் சோரத் துயிலணை கொள்ளேன்' என்று சொல்லி ஸர்வாவயவ சைதில்யத்தைக் காட்டினவர்களும் ஆழ்வார்களே.

391. இப்படிப்பட்ட ஆழ்வார்க ளுக்கு விலக்ஷணாநுபவம் தந்து ரக்ஷணம் செய்வதற்காகவே எம்பெருமான் திருவவதாரங்கள் செய்தருள்வதாக எம்பெருமானாருடைய பாஷ்ய ப்ரக்ரியை. (அவதார ரஸங்களை நன்கு அநுபவித்தவர்கள் ஆழ்வார்களேயென்று கருத்து.) இப்படிப்பட்ட பங்க்திகள் இதரபாஷ்யகாரர்களிடத்திலே லவலேசமும் காணக் கிடைப்பதில்லை; ஆழ்வார்களைப் பற்றியும் அவர்களின் தன்மைகளைப் பற்றியும் சங்கராசார்ய மத்வாசார்யாதி களுக்கு வ்யுத்பத்தியேயில்லாமைதான் அதற்குக் காரணம்.

392.பகவத்கீதை (7–19) 'பஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்யதே, வாஸுதேவஸ்ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப:' என்னுமிந்த ச்லோகத்தில் சங்கரபாஷ்யத்தையும் ஸ்ரீஸ்வாமி பாஷ்யத்தையும் உற்று நோக்க வேணும். ஸ்ரீசங்கரர் கீழே 'ஆர்த்தோ ஜிஜ்ஞாஸு: அர்த்தார்த்தீ ஜ்ஞாநீ' என்ற இடத்தில் எவ்வாறு வியாக்யானம் செய்தாரோ அவ்விதமான அர்த்தமே 'ஜ்ஞாநவாந்' என்பதற்கும் அவர் செய்யலாவது. ஸ்வாமியோவென்னில் கீழே செய்தருளின படியே இங்கும் "மச்சேஷதைகரஸ ஆத்மயாதாத்ம்யஜ்ஞாநவாந்" என்றே செய்தருளினார். இந்த ச்லோகத்தில் இதுவன்று முக்கியமான விஷயம்; 'வாஸுதேவஸ் ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப:' என்கிற உத்தரார்த்தத்திற்கு சங்கரர் பணித்த பொருள் 'ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம' இத்யாதி ஸ்தலங்களில் போலவே அத்வைதமாகவுள்ளது: 'வாஸுதேவ ஏவ மம ஸர்வம்" என்பதாகக் கொள்ளப்படவே யில்லை. பரப்ரஹ்மத்திற் காட்டில் வேறுபட்ட பொருள் எதுவுமேயில்லையாகையாலே, எல்லாம் ப்ரஹ்மமேயென்று கொண்டு என்னைப் பணிகின்ற மஹாத்மா துர்லபன் என்று கீதாசார்யன் சொல்லுவதாக சங்கரபாஷ்ய ப்ரக்ரியை. இதை நமது பாஷ்யகாரர் கண்டித்திருக்கிறாரென்பது (அயமேவார்த்த:) என்கிற ததீய பாஷ்ய ஸூக்தியாலும், தாத்பர்யசந்த்ரிகா ஸூக்தியாலும் அறியவெளிது.

393. இங்கு சங்கரர் பணித்த பொருளானது அவசியம் கண்டிக்கத் தகுந்தது தானோவென்று பார்க்க வேணும். ஸர்வவஸ்து ஸாமாநாதிகரண்யார்ஹத்வ ரூப வஸ்துபரிச்சேதராஹித்யத்தை ப்ரஹ்மத்தினிடத்தில் விசிஷ்டாத்வைதி களான நாமும் இசைந்தே யிருக்கிறோம். தாத்பர்யத்தில் வாசியேயொழிய சப்தஸந்தர்ப்பத்தில் ஒருவாசியுமில்லை நமக்கும். இங்கே சங்கரர் எழுதிவைத்த பொருள் அஸம்பாவிதமன்று. 'ஸப்ரஹ்மா ஸ சிவஸ்ஸேந்த்ரஸ்ஸோக்ஷர: பரமஸ் ஸ்வராட்' என்கிற வடமொழி வேதத்தையும், 'அவனே யவனுமவனுமவனும். அவனே மற்றெல்லாமுமறிந்தனமே' என்கிற தமிழ் வேதத்தையும் நிர்வஹிக்கிற ரீதியிலே வாஸுதேவஸ் ஸர்வமென்கிற விதையும்

சங்கரர்க்கு அபிமதமான பொருளிலே எளிதாக நிர்வஹிக்கலாமாயிருக்க இங்கே கண்டனம் அவச்யமன்றேயென்று ப்ரத்யவஸ்தாநம் ப்ராப்தமாகும்.

394.குறிக்கொண்மின்: சங்கரருடைய அத்வைதாபிப்ராயத்தை ஸ்வாமி கீழே வெகு விரிவாகக் கண்டித்தேயிருக்கிறார். (1–12 பாஷ்யம் ஸேவிப்பது. 13–2, பாஷ்யத்திலும் மிகமிக விரிவாக ஸேவிப்பது.) அதை இங்கும் கண்டிக்க வேண்டிய அவச்யமில்லை தான். இங்குக் கண்டிக்கிற விதம் வேறு. இவ்வர்த்தம் இந்த ப்ரகரணத்திற்குச் சேராதென்று திருவுள்ளம் பற்றியே இவ்விடத்தில் ப்ரதிக்ஷேபமுள்ளது. இங்கே ஸ்வாமியருளிச் செய்த பொருள் என்னவென்று பார்ப்போம்.

395. 'வாஸுதேவஸ் ஸர்வ'மென்பதற்கு ஸ்வாமியருளிய பொருள் இதுவே–என்பது கீதாபாஷ்யஸூக்தி. இதை தாத்பர்ய சந்த்ரிகையில் விவரிக்கும்போது தாரகபோஷக போக்யங்களும் பகவானே யென்று கொள்ளுகிற மஹாத்மாவை விவக்ஷிப்பதுதான் இவ்விடத்திற்குச் சேரும் என்று ஸ்பஷ்டமாக எழுதியுள்ளார். திருவாய்மொழியில் 'உண்ணுஞ் சோறு பருகுநீர்த் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன்' என்று ஆழ்வாரருளிச் செய்தது 'வாஸுதேவஸ்ஸர்வமென்கிற இத்தை அநுஸரித்தேயென்று ஆளவந்தார் முதலானார் நிர்வஹித்து வந்தார்கள். திருவாய்மொழியின் வ்யாக்யாதாக்களான பூர்வாசார்யர்களும் அங்கு இந்த கீதா வசனத்தை யுதாஹரித்தே வியாக்கியானம் செய்தருளியுள்ளார்கள். சங்கரருக்குத் திருவாய்மொழியில் ப்ரவேசமில்லாமையால் அவர் வேறு வகையாக பாஷ்யமிட்டாலும் திருவாய்மொழி யமுதக்கடலில் ஆழ்ந்தவரான ஸ்வாமி அவ்வர்த்தத்தை எங்ஙனே இசையக்கூடும்?

396. 'வாஸுதேவஸ் ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப;' என்று சொல்கிற கீதாசார்யனும் நம்மாழ்வாரை நெஞ்சில் கொண்டே அது சொல்லியிருக்க, அதற்கு இணங்காத பொருள் ஸ்வாமிபாஷ்யத்தில் எப்படி இடம் பெறும்? அப்பொருளை ஸ்வாமி எப்படி ஸஹிப்பர்? தமக்கு 'எல்லாங் கண்ணன்' என்று சொல்லுகிற மஹாத்மா வாகிய நம்மாழ்வார், அந்தோ! என் கண்ணுக்குக் கிடைக்கவில்லையேயென்று அழுது கொண்டேயன்றோ கீதாசார்யன் இந்த ச்லோகம் பணித்தான். கண்ணன் தன்னடிச் சோதிக்கு எழுந்தருளின பின் சில நாளிலே ஆழ்வாருடைய திருவவதாரம், கண்ணன் ஆழ்வாரை ஸேவித்து விட்டுத் தன் அவதார ஸமாப்தியைச் செய்து கொள்ள மிகவும் ஆசைப்பட்டிருந்தான்; அந்த பாக்யம் அவனுக்கு துர்லபமாயிற்று; அது இந்த ச்லோகத்தில் "ஸ மஹாத்மா ஸுதுர்லப:" என்பதனாலே ஸூசிதமாகிறது என்று ஆசார்யர்கள் நிர்வஹித்துப் போருவது ஸோபபத்திகமென்று கீதாபாஷ்ய ஸூக்திகளாலறிகிறோம்.

397. ஆக, 'ஜகத் ஸர்வம் வாஸுதேவ:' என்பதாக சங்கரர் கொண்டார்; அங்ஙனன்றிக்கே 'மம ஸர்வம் வாஸுதேவ:' என்பதாக நம் ஸ்வாமி கொண்டார். இது தான் திருவாய் மொழிக்குச் சேர்ந்ததும், திருவாய்மொழியிலிருந்து தெரிந்து அருளிச் செய்யப்பட்டதுமான மிகச் சிறந்த பொருள் என்று தெளிவிக்கப்பட்டதாயிற்று.

398.ஸ்வாமி, ஸ்ரீபாஷ்யம் முதலான திவ்ய க்ரந்தங்களில் எம்பெருமானுக்கு இட்டருளும் விசேஷணங்களில் 'அநந்த குணஸாகரம்' என்றும் 'அபரிமிதோதார

குணஸாகரம்' என்றும் விசேஷணமருளிச் செய்யக் காண்கிறோம். குறிப்பாக ஓரிடமெடுத்துக் காட்டுகிறோம்—

399. இரண்டாமத்யாயத்தின் தொடக்கத்தில் ஸ்ரீபாஷ்யத்தில் 'அபரிமித உதார குணஸாகரம் பரம் ப்ரஹ்ம வேதாந்த வேத்ய மித்யுக்தம்'' என்றுள்ளது. இங்கு பரப்ரஹ்மசப்தம் ப்ரதமாவிபக்தியேயொழிய த்விதீயாவி பக்தியன்று. இதற்கு விசேஷண மான 'அபரிமிதோதாரகுணஸாகரம்' என்பதும் ப்ரமாந்தமாகவே கொள்ளப்பட வேண்டியதாயிற்று. ஸாகர சப்தம் நித்ய பும்லிங்கமாகையாலே குணஸாகரோ ப்ரஹ்ம என்று சொல்லத்தகுமேயொழிய குணஸாகரம் ப்ரஹ்ம என்று சொல்லத் தகாது. எம்பெருமான் திருக்கல்யாண குணங்களுக்குக் கடலாகவுள்ளவனென்று இப்படிப்பட்ட பொருளே ஸ்வரஸமாகத் தோன்றுமாதலால் "குணாநாம்ஸாகர:" என்று தத்புருஷ் ஸமாஸத்தைவிட்டு பஹுவ்ரிஹி ஸமாஸம் கொண்டால் (அதாவது) "அநந்த: குணஸாகர: யஸ்ய தத்" என்றும், "அபரிமித: உதாரகுண ஸாகர: யஸ்ய தத்" என்றும் ஸமாஸம் கொண்டால் .....ஸாகரம் என்று நபும்ஸகலிங்கமாகப் பொருந்தும். ச்ருதப்ரகாசிகாசார்யர் இப்படி பஹுவ்ரீஹி ஸமாஸத்தையே ஸ்பஷ்டமாக அருளிச் செய்திருக்கின்றார்.

400. எம்பெருமான் குணங்க ளுக்குக் கடல் போன்றிருப்பவன் என்று எங்கும் எல்லாரும் சொல்லி வருவதும் அநேக க்ரந்தங்களிலுள்ளதுமான இந்த ரீதியை விட்டு, குணங்களைக் கடலாகச் சொல்லி அக்கடலை எம்பெருமான் உடையவன் என்று இங்ஙனே சொல்லுவதில் என்ன விசேஷம்? என்று சிலர் சங்கிப்பதுண்டு. எம்பெருமானார் ஸ்ரீஸூக்தியொன்று தவிர வேறு எந்த க்ரந்தத்திலும் இப்படி பஹுவ்ரீஹி ஸமாஸத்தினால் நிர்வஹிக்கப் பட வேண்டியதான ப்ரயோகம் ஓரிடத்தில் கூடக் காணக் கிடைப்பதில்லை. தேடிப் பார்த்தால் ஸ்ரீவைஷ்ணவாசார்யர்களின் க்ரந்தங்களில் கிடைக்குமேயொழிய மற்றையோருடைய க்ரந்தங்களில் அடியோடு கிடைக்க மாட்டதென்று உறுதியாகக் கூறலாம். இப்படி விலக்ஷணமாக ஸ்வாமி அருளிச் செய்ததற்கு ப்ரபலமான மூலமுண்டு.

401. 'தமிழ் மறைகளாயிரமும் ஈன்ற முதல் தாய் சடகோபன், மொய்ம்பால் வளர்த்த இதத்தாய் இராமானுசன்' என்கிறபடியே ஆழ்வாருடைய திவ்ய ஸூக்திகளை வளர்ப்பதற்கே அவதரித்தவ ரான நம் பாஷ்யகாரர் ஆழ்வாருடைய திவ்ய ஸூக்திகளைத் தழுவியே அருளிச் செய்பவர் என்பதை நாம் பல சான்றுகள் காட்டி நிரூபித்திருக்கிறோமே. ப்ரக்ருத ஸ்தலமும் அதில் தலையான சான்று. நம்மாழ்வார் பெரிய திருவந்தாதியில் (69) 'மிகுந் திருமால் சீர்க்கடலையுள் பொதிந்த சிந்தனையேன்' என்று அருளிச் செய்துள்ளார். இப்பாசுரத்தில் குணங்களா னவை கடலாகக் கொள்ளப்பட்டிருக்கின் றன. வண்டமிழ்மாமுனியான அகஸ்த்ய மஹர்ஷியானவர் உப்புக்கடலையுட் கொண்டவரென்று ப்ரஸித்தி பெற்றவர்; நம்மாழ்வாரென்னும் அருந்தமிழ் மாமுனியான தாம் உப்புக்கடலையுட் கொள்ளாமல் பகவத் குணமாகிய அமுதக் கடலையுட்கொள்ளப் பெற்றவரென்று காட்டிக் கொண்டபடி. இந்த ஸ்ரீஸூக்தியை யே அவலம்பித்து ஆசார்ய ஹ்ருதயத்திலும் (3–6) மேகாபதேச சூர்ணையில் 'பூண்ட நாள் சீர்க்கடலையுட் கொண்டு' என்றருளிச் செய்யப்பட்டது. மேகமானது கடலை க்ரஸிப்பது போல, மேகமாகச் சொல்லப்படுகிற

ஆசார்யர்களும் எம்பெருமானுடைய திருக்குணங்களாகிற கடலை க்ரஸிப்பவர்கள் என்றாராயிற்று.

402. ஆக ஆழ்வார் திருவுள்ளத்தில் பகவத் குணங்கள் கடலாகத் தோன்றினபடியாலே அந்தச் சாயையிலேயே அருளிச் செய்ய வேணுமென்று திருவுள்ளம் பற்றிய எம்பெருமானார் பஹுவ்ரீஹி ஸமாஸத்தை யிட்டு நிர்வஹிக்கப்பட்ட வேண்டியதான ப்ரயோகத்தைச் செய்தருளி குணங்களுக்கு ஸாகரத்வத்தை நிலைநாட்டியருளினாராயிற்று. இங்கு வேறு காரணமெதுவும் சொல்ல முடியாது.

403. கீதாசார்யன் தன்னுடைய அவதாரத்திற்கு ப்ரயோஜநம் சொல்லும் போது "பரித்ராணாய ஸாதூநாம் விநாசாயச துஷ்க்ருதாம், தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகேயுகே" என்று ஸாது பரித்ராணமும் துஷ்க்ருத் விநாசநமும் தர்ம ஸம்ஸ்தாபநமுமாக மூன்று ப்ரயோஜனங்களைச் சொல்லி வைத்தான். இந்த ப்ரயோஜனங்களுக்காக எம்பெருமான் இவ்விருள் தருமா ஞாலத்தில்''துயரில் மலியும் மனிசர் பிறவியில் கண் காண வந்து பிறக்க வேணுமோ? "நாட்டில் பிறந்து படாதன பட்டு மனிசர்க்காய்" என்று ஆழ்வாருளிச் செய்தபடியே கர்மவச்யர்களான ஸம்ஸாரிகளும் படாத கஷ்டங்களைப்பட்டு இந்நிலவுலகில் எம்பெருமான் வந்து அவதரிக்க வேணுமோ? ஸத்யஸங்கல்பனான தான் தன்னுடைய ஸங்கல்பசக்தியைக் கொண்டே எதுவும் செய்யலாமன்றோ? எத்தனை ஸாதுக்களை ரக்ஷிக்க வேணுமானாலும் எத்தனை துஷ்டர்களை சிக்ஷிக்க வேணுமானாலும் தன்னுடைய அவ்யாஹத சக்திகமான ஸங்கல்பத்தினாலே செய்து தலைக்கட்ட என்ன தடை? ஸாது பரித்ராணத்திற்காகவும் துஷ்க்ருத் விநாசநத்திற்காகவும் தர்மஸ்தாபனத்திற் காகவும் அவ்வப்போதுகளில் தானே வந்து பிறக்கிறேனென்கிறானே, எதற்காகப் பிறக்க வேணும்? என்று பிரபலமான ஓர் ஆக்ஷேபம் தோன்றக் கூடியதிங்கு. இதற்கு சங்கர பாஷ்யத்தில் பரிஹாரமொன்றும் கிடையாது. மத்வ பாஷ்யத்தில் மூலத்திற்கு ஸம்பந்தமின்றிக்கே ஏதோ எழுதப்பட்டுளது. அதாவது, பகவான் ஸாதுபரித்ராணாதி களை அவதரித்தே செய்தாக வேணு மென்கிற நிர்ப்பந்தமில்லை; ஆனாலும் விளையாட்டாக அவதரிக்கிறான். ப்ரஹ்ம ஸூத்ரத்திலும் "லோகவத்து லீலா கைவல்யம்" என்று சொல்லப்பட்டிருக்கிற தன்றோ' என்பது மத்வ பாஷ்ய பங்க்தியின் பொருள். ஸாதுபரித்ராணாதிகளுக்காக நான் வந்து பிறக்கிறேனென்று மூலத்தில் ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்க, அதற்குக் கண்டனம் செய்கிற முறையில் இந்த பாஷ்யம் அவதரித்திருக்கின்றது. "லோகவத்து லீல கைவல்யம்" என்கிற பரஹ்மஸூத்ரமானது பகவான் செய்கிற ஜகத்ஸ்ருஷ்டியைப் பற்றினதே யொழிய பகவதவதாரத்தைப் பற்றியதன்று என்பது நிர்விவாதம். அதை இங்கெடுத்தெழுதுவது ஸுதராம் அப்ரஸக்தம். அது கிடக்கட்டும். நம் ஸ்வாமியின் பாஷ்யத்திலுள்ள இன்சுவைப் பொருள்களை அநுபவிப்போம்.

404. அந்தரதிகரண ஸ்ரீபாஷ்யத்தில் "அந்தஸ்தத்தர்மோபதேசாத் (1–1–2), என்கிற ஸூத்ரத்தின் பாஷ்யத்தில் 'பரித்ராணாய ஸாதூநாம்" என்கிற ச்லோகத்தை ப்ரஸக்தாநுப்ரஸக்தமாக உதாஹரித்து அங்கு அருளிச் செய்திருப்ப தாவது, ஸாது

பரித்ராணத்திற்காகவே முக்யமாக அவதாரம் செய்தருளிற்றென்றும் துஷ்டநிரஸனமானது ஸங்கல்பத்தாலுங்கூட ஸாத்யமாகக் கூடியதாதலால் அவதாரத் திற்கு அது ப்ரதாநோத்தேச்யமன்று என்றும் தெரிவிக்கப்படுகிறது. ஸாதுபரித்ராணம் மாத்திரம் ஏன் ஸங்கல்பத்தினாலாகக் கூடாது? என்று ஒருவர் ஸ்ரீபாஷ்யஸூக்தி யின் மேலும் ஆக்ஷேபம் செய்தால் அதற்கு என்ன பரிஹாரம்? மேலும், 'துஷ்க்ருத் விநாசநம் ஸங்கல்பஸாத்யமாகலாம். ஸாதுபரித்ராணம் ஸங்கல்ப ஸாத்யமாக மாட்டாது' என்று ஸ்வாமி துணிந்து ஸாதித்திருப்பது எந்த ஆதாரத்தைக் கொண்டு? என்று ஒருவர் கேட்டால் இதற்கு த்ருப்திகரமான ஸமாதானம் சொல்ல வேண்டும். திருவாய்மொழியமுதக்கடலில் அவகாஹநமில்லாதவர்கள் மேலே குறித்த கேள்விகளுக்கு விடையிறுக்க முடியாது.

405. நம்மாழ்வார் திருவாய்மொழியில் (3–1–9) "மழுங்காத வைந்நுதிய சக்கர நல்வலத்தையாய், தொழுங்காதல் களிறு அளிப்பான் புள்ளூர்ந்து தோன்றினையே, மழுங்காத ஞானமே படையாகமலருலகில் தொழும் பாயார்க்கு அளித்தால் உன் சுடர்ச் சோதிமறையாதே" என்றொரு பாசுரம் அற்புதமாக அருளிச் செய்துள்ளார். இப்பாசுரத்தில் மூன்றாமடியில் 'மழுங்காத ஞானம்' என்றது எம்பெருமானுடைய ஸங்கல்ப ஞானம். 'எம்பெருமானே! நீ ஸாது பரித்ராணம் பண்ண வேண்டி நேரே வந்து திருவவதாரம் செய்யாமல் ஸங்கல்பத்தினாலேயே அது பண்ணுவதா னால் உனது சோதி குன்றும்; ஸங்கல்பத்தினால் செய்திடாமல் நேரே வந்து அவதாரம் செய்தருளினபடியால் தான் உனது சோதி விளக்கம் பெற்றது' என்று அப்பாசுரத்தின் பின்னடிகளிலருளிச் செய்தாராழ்வார். இதனால் ஸாதுபரித்ராணம் ஸங்கல்பஸாத்யமாகாது என்பது ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டது. அது ஸங்கல்பஸாத்யமாகாது தான் என்பதை அப்பாசுரத்திலேயே முன் இரண்டடிகளில் ஒரு கதை சொல்லுகிற முகத்தால் சிலாலிகிதம் செய்வித்தார் ஆழ்வார்: "தொழுங்காதல் களிறளிப்பான் புள்ளூர்ந்து தோன்றினையே" என்று கஜேந்த்ராழ்வானுடைய கதையை யெடுத்துக் காட்டித் தம்முடைய விவக்ஷிதத்தை நிலைநாட்டியுள்ளராழ்வார். கஜேந்திர மோக்ஷ கதை யாவருமறிந்ததே; முதலைவாய்க் கோட்பட்ட மதவாரணம் ஆதிமூலமேயென்றழைக்க, எம்பெருமான் திருநாட்டிலிருந்து அரைகுலையத் தலை குலையப் பெரிய திருவடியை மேற்கொண்டு பொய்கைக் கரையேறவந்து யானைக்கு அருள் செய்ததாகக் கதையுள்ளது. திவ்ய தேசங்கள் தோறும் இது பெரிய உத்ஸவமாக இன்றைக்கும் கொண்டாடப்பட்டு வருகிறது. இதைப்பற்றி புத்திமான்கள் சிறிது ஆராய வேண்டும். ஆனைக்கு அருள் செய்யத் திருவுள்ளமானால் பரமபதத்திலிருந்து பொய்கைக் கரைக்கு ஓடிவந்து தான் அருள் செய்ய வேணுமோ? இடத்தை விட்டுப் பெயராமலே இரண்டுபடியாக அருள் செய்திருக்கலாமே. (அதாவது)

406. "விச்வம் தியைவ விரசய்ய நிசாய்ய பூயஸ் ஸஞ்ஜஹ்ருஷ:" (ஸ்ரீவைகுண்டஸ்தவே) என்று ஆழ்வான் அருளிச் செய்தபடி ஸகலப்ரபஞ்சங்களினு டையவும் ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களை யெல்லாம் அவலீலையாக நடத்துவதற்குக் கருவியாயிருக்கின்ற ஸங்கல்பம் எங்கே போய்விட்டது? கஜேந்த்ர: ரக்ஷிதோ பவது–

"கஜேந்திராழ்வான் ரக்ஷைபெறுக" என்று ஸங்கல்பித்தால் ஆகாததுண்டோ? ஆகாதென்று யாரும் சொல்ல முடியாது. இந்த ஸங்கல்பத்தைக் கொண்டே எளிதாககஜேந்திரரக்ஷணம் செய்திருக்க லாமே. இது தவிர மற்றொரு ப்ரகாரமுண்டு; அதாவது, விடுத்த திசைக் கருமம் திருத்தவல்ல திருவாழியாழ்வான் கைங்கரியத்திற்கு ஸஜ்ஜனாயிரா நின்றான்; 'கருதுமிடம் பொருது கைந்நின்ற சக்கரத்தன்' (திருவாய்மொழி 10–6–8) என்கிறபடியே இன்ன திக்கில் இன்ன காரியமாக வேணுமென்று நினைத்த மாத்திரத்திலேயே அதை நிறைவேற்ற வல்லவனவன். "கீழுலகிலசுரர்களைக் கிழங்கிருந்து கிளராமே ஆழிவிடுத்து அவருடைய கருவழித்த வழிப்பன்" என்று பெரியாழ்வாரருளிச் செய்தபடி பாதாள லோகத்திலுஞ் சென்று இறைப்பொழுதில் அரிய பெரிய காரியம் செய்துவந்த அந்த ஸுதர்சநாழ்வானுக்கு அஸாத்ய மானதுண்டோ? மேலும், பரமபதத்திலிருந்து பொய்கைக்கரைக்கு வந்துங்கூட "க்ராஹம் சக்ரேண மாதவ:" "கைந்நாகத்திடர்கடிந்த கனலாழிப் படையுடையான்" "குட்டத்துக் கோள்முதலை துஞ்சக்குறித்தெறிந்த சக்கரத்தான்" என்கிறபடியே அந்த ஸுதர்சநாழ்வானை யிட்டுத் தானே காரியம் செய்தது; பொய்கைக்கரையளவு மெழுந்தருளித்தான் அவனுக்கு நியமிக்க வேணுமோ? பரமபதத்திலிருந்தே நியமித்தாலாகாதோ? நியமிக்கத் தான் வேணுமோ? கருத்தறிந்து செய்ய வல்லவனே அவன்; ஆக, அப்ரதிஹத சக்திகமான ஸங்கல்பத்தைக் கொண்டும், "வாணீ பௌராணிகீ யம் ப்ரதயதி மஹிதம் ப்ரோக்ஷணம் கைடபாரே:" (ஸுதர்சநசதகே) என்கிறபடியே ஸங்கல்ப பர்யாய பூதனான திருவாழியாழ்வானைக் கொண்டும் எளிதாகச் செய்யக்கூடிய கஜேந்த்ர ரக்ஷணத்தை எம்பெருமானே! ஏன் நீ அப்படிச் செய்தருளவில்லை? என்று நம்மாழ்வார் எம்பெருமானைக் கேள்வி கேட்டிருக்கிறார். இப்பாட்டில் இவ்வளவு கேள்வி இருக்கிறதா? என்று ஐயுற வேண்டா; "மழுங்காத வைநுதிய சக்கர நல்வலத்தையாய்!" என்கிற முதலடியினால் திருவாழியாழ்வானை ஏவியே ஏன் இந்த காரியத்தைச் செய்து கொள்ளவில்லை? என்றும் "மழுங்காத ஞானமே படையாக" என்ற மூன்றாமடியினால் ஸங்கல்பத்தைக் கொண்டே ஏன் இந்த காரியத்தைச் செய்து கொள்ளவில்லை? என்றும் கேட்டிருக்கிறார் என்று ஸுஸ்பஷ்டம்.

407. இக்கேள்விக்கு எம்பெருமான் தவிர வேறு யாராலும் விடை கூற முடியாதாகையாலே அவனே வந்து ஆழ்வாருடைய திருச்செவியிலே, ஆனைக் கருள் செய்ய தான் நேரே ஓடிவந்த காரணத்தையுரைத்தான்; அது கேட்டு ஸமாஹிதரான ஆழ்வார் எம்பெருமான் தமக்கு ரஹஸ்யமாகவருளிச் செய்த விடையை உலகறிய வெளியிட வேணுமென்றும் ஸ்ரீபாஷ்யத்திலு மேற வேணுமென்றும் திருவுள்ளம்பற்றி அப்பாட்டிலேயே இரண்டாமடியினால் அதனை வெளியிட்டருளினார் (தொழுங் காதல் களிறளிப்பான் புள்ளூர்ந்து தோன்றினையே") என்று, களிறு –கஜேந்திராழ்வான்; அவனுக்கு 'தொழுங் காதல்' என்று விசேஷண மிட்டது தான் எம்பெருமானருளிச் செய்த விடையினால் ஆயது. இங்கே குறிக்கொள்ளத்தக்க விஷயமிது;– கஜேந்திரனுக்கு முதலையைத் துணிக்க வேண்டியதே உத்தேச்யமாகில் ஸங்கல்பத்தாலோ திருவாழியாழ்வானை யிட்டோ அது

செய்யக் கூடியதேயாகும். முதலையைத் துணித்தல் இங்கு உத்தேச்யமன்று. அப்போது எம்பெருமானை நோக்கி கஜேந்திராழ்வான் விண்ணப்பம் செய்கிறான்–

408. “நாஹம் களேபரஸ்யாஸ்ய த்ராணார்த்தம் மதுஸூதந, கரஸ்த கமலாந்யேவ பாதயோரர்ப்பிதும் தவ’ என்று; பெருமானே! இப்பாழுமுடலை முதலை தின்றுவிடகிறதேயென்று இதற்காக நான் கரைந்திலேன்; கையிற்பறித்தபூக்களை உன் திருவடிவாரத்தில் நேராகப் பணிமாற வேணுமென்று இஃதொன்றையே ஆசைப் பட்டேன்; ‘உள்ளுவார்ருள்ளிற் றெல்லாம் உடனிருந்தறியும் நீ இதைத் தெரிந்து கொண்டு நேரில் எழுந்தருளினாயே! ஹா ஹா, உன்னுடைய ஸர்வஜ்ஞதையும் கருணையுமென்னே! என்று கஜேந்திரன் வியந்து உகந்து விஜ்ஞாபித்தது புராண ஸித்தம். “பரித்ராணாய ஸாதூநாம்” என்கிற விடத்தில், இப்படிப்பட்ட தொழுங்காதலை யுடையவர்களே ஸாது சப்தவாச்யர்க ளென்றும், அவர்களுக்குப் பரித்ராணமாவது அவர்கள் கோருகிறபடியே நேரே யெழுந்தருளி ஸேவை ஸாதித்தலும் தழுவி முழுசி வார்த்தையாடுதலுந்தான் என்றும் நிர்ணயித்து இது ஸங்கல்ப ஸாத்யமாகாதென்று ஸ்வாமியருளிச் செய்தது பொருத்தமாயிற்று.

409. கீதாபாஷ்யத்திலோ ஸ்ரீபாஷ்யத் திலோ ஸ்வாமியருளிச் செய்யும் ஸ்ரீஸூக்திகளில் நெஞ்சையுருக்கும்படியான ஒரு அதிசயம் அடியேனுடைய அநுபவத்தில் காண்கிறது. இவ்வதிசயம் வேறு எந்த பாஷ்யத்திலும் காண முடியாது. அஃது என்னென்னில், மூலத்தில் பரமபுருஷனு டைய ப்ரஸ்தாவம் வருமிடங்களில் ஆழ்வார்களுடைய திவ்ய ஸூக்திச்சாயை யிலே அவனுடைய ஸ்வரூபரூபகுண விபூதிப் பெருமைகளை விளக்கிப் பல விசேஷணங் களை அருளிச் செய்தாலொழிய ஸ்வாமிக்குத் தரிப்பு உண்டாவதில்லை. இங்கு ஓரிடமெடுத்துக் காட்டுகிறேன். கீதையில் ஒன்பதாமத்யாயத்தில் முடிவு ச்லோகம் “மந்மநாபவ மத்பக்த:” என்பது. இதில் ‘மந்மநா பவ’ என்பதற்கு என்னிடத்தில் மனத்தை வைத்திடு என்ற பொருள் யாவர்க்கும் தெரிந்ததே. எளிதில் தெரியக்கூடியதே என்கிற கருத்தினால் மத்வபாஷ்யகாரர் அடியோடு அர்த்தம் செய்யவேயில்லை. சங்கராசாரியர் “மயி வாஸுதேவே மந: யஸ்ய தவ ஸ: த்வம் மத்மநா பவ” என்று உரைத்தார். என்னிடத்தில் என்பதற்கு வாஸுதேவனா கிய என்னிடத்தில் என்று அர்த்தம் என்பதாக விவரித்தாராயிற்று. இனி ஸ்வாமியின் பாஷ்யத்தை யெடுத்துக் கொள்வோம்: அவ்விடத்துப் பங்க்திகளை ஸேவித்தால் கல்நெஞ்சினனுக்கும் கண்ணீர் பெருகும்.

410. “மந்மநா பவ–மயி ஸர்வேச்ரே நிகிலஹேயப்ரத்யநீககல்யாணைகதாநே ஸர்வஜ்ஞே ஸத்யஸங்கல்பே நிகில ஜகதேககாரணே பரஸ்மிந் ப்ரஹ்மணி புருஷோத்தமே புண்டரீக தலாமலாய தேக்ஷணே ஸ்வச்சநீலஜீமூத ஸங்காசே யுகபதுதித திநகரஸஹஸ்ர ஸத்ருசதேஜஸி லாவண்யாம்ருதமஹோததௌ உதாரபீவர சதுர்பாஹௌ அத்யுஜ்ஜ்வல பீதாம்பரே அமலகிரீட மகரகுண்டலஹாரகேயூர கடகபூஷிதே அபார காருண்ய ஸௌசீல்ய ஸௌந்தர்ய மாதுர்யகாம்பீர் யௌதார்ய வாத்ஸல்ய ஜலதௌ அநாலோசித விசேஷாசேஷலோகசரண்யே ஸர்வ ஸ்வாமிநி தைலதாராவத் அவிச்சேதேந நிவிஷ்டமநா பவ” என்கிற இவ்வளவும் அதிகம்பீரமான ஸ்வாமி ஸ்ரீஸூக்தியாகும்.

411. இந்த மஹாவாக்யத்தில் எம்பெருமானைப் பற்றின விசேஷணங்கள் பதினெட்டுள்ளன. இத்தனை விசேஷணங் கள் இங்கு அவசியமோ வென்று சிலர் நினைக்கக் கூடும். உண்மையில் அவச்யமன்றென்றும் சொல்லலாம். விஸ்தரத்தில் ருசியில்லாதவரான ஸ்வாமி இவ்வளவு ஏன் அருளிச் செய்தாரென்று ஆலோசிக்க வேண்டும். ஸ்வாமி எம்பெருமானார் 'பண்டருமாறன் பசுந்தமிழ் ஆனந்தம் பாய்மதமாய் விண்டிட வெங்களிராமானுசமுனி வேழம்' என்றும் 'கலிமிக்க செந்நெற் கழனிக்குறையல் கலைப்பெருமானொலி மிக்க பாடலை யுண்டு தன்னுள்ளம் தடித்து அதனால் வலிமிக்க சீயமிராமானுசன்' என்றும் நூற்றந்தாதியில் அமுதனார் அருளிச் செய்தபடியே ஆழ்வாரருளிச் செயற்கடலில் அநவரதம் அவகாஹித்தவராதலால் அதன் பலனாகவே இப்படிப்பட்ட ஸ்ரீஸூக்திகளை ஸ்வாமி பலகாலும் அருளிச் செய்ய ப்ராப்தமாகிறது. கண்ணபிரான் தன்னிடத்தில் பக்தி பண்ணும்படி விதிக்கிற இவ்விடத்தில் தன்னுடைய இத்தனை விசேஷங்களையெடுத்துக் காட்டாவிடில் எங்ஙனே பக்தியுண்டாகும்? அவனுடைய ஸ்வரூப வைலக்ஷண்யத்தையும் திவ்ய மங்கள விக்ரஹ ஸௌந்தர்யத்தையும் திவ்ய பூஷணாதி வைசிஷ்ட்யத்தையும் திருக்கல்யாண குணபௌஷ் கல்யத்தையும் எடுத்துக் காட்டுவதானது கண்ணபிரான் தானே இவற்றையெடுத்துரைத்து இவற்றிலேயீடுபடும்படி சொல்லுவதாக வன்றோவுள்ளது. இதர பாஷ்யகாரர்களுக்கு திவ்யப்ரபந்த ஸம்பத்து சிறிதும் இல்லாமையினாலேயே அவர்கள் இப்படிப் பட்ட விசேஷணங்களை ஓரிடத்தில் கூட எழுதிவைக்க ப்ரஸக்தியில்லையாயிற்று.

412. இதேபோல் ஸ்ரீபாஷ்யத்திலும் காட்டுகிறேன். அதில் கடைசியான ஸூத்ரம் (அநாவ்ருத்திச் சப்தாத் அநாவ்ருத்திச் சப்தாத்) என்பது. இங்கு மூலத்தில் பரமபுருஷனுடைய ப்ரஸ்தாவமேயில்லை. பரமபதத்தைச் சென்றடைந்த முக்தர்கள் மீண்டும் இந்நிலத்தில் திரும்பி வருவது உண்டா இல்லையா? என்கிற சங்கைக்குப் பரிஹாரமாக இந்த ஸூத்ரம் அவதரித்துள்ளது. 'புநராவ்ருத்தி கிடையாது என்று சாஸ்த்ரம் சொல்லியிருக்கையாலே அது இல்லை' என்றிவ்வளவே ஸூத்ரம் சொல்லி நின்றது. இதை விவரிக்குமிடத்து ஸ்வாமி யெம்பெருமானார், பகவான் ஒருவனுளனென்று எந்த சாஸ்த்ரம் அறிவிக்கின்றதோ அந்த சாஸ்த்ரமே பகவானை அடைந்தவர்க்குப் புநராவ்ருத்தி யில்லை யென்றும் தெரிவிக்கின்றது'' என்றருளிச் செய்கிறார். இங்கு ''யதா பரமபுருஷ: அஸ்தீதி சப்தாத் அவகம்யதே ....'' என்றிவ்வளவே அருளிச் செய்தால் போதுமானது; ஆயினும் ஸ்வாமி இங்கே அருளிச் செய்வது பாரீர்;– ''யதா நிகில ஹேயப்ரத்யநீக கல்யாணைகதாந: ஜகஜ் ஜந்மாதிகாரணம் ஸமஸ்தவஸ்துவிலக்ஷண: ஸர்வஜ்ஞ: ஸத்யஸங்கல்ப: ஆச்ரிதவாத்ஸல் யைகஜலதி; நிரஸ்த ஸமாப்யதிகஸம்பாவந: பரமகாருணிக: பரப்ரஹ்மாபிதாந: பரமபுருஷ:........'' என்று இவ்வளவு விசேஷணங்களையருளிச் செய்கிறார்.

413. இங்ஙனே ஓரிடமன்று இரண்டிடம் மட்டுமன்று; பலவிடங்கள் காணலாம். மற்ற பாஷ்யகாரர்களுக்கு இப்படிப்பட்ட வாக்விந்யாஸம் பண்ணத் தெரியாமல் இல்லை. பகவானிடத்தில் பக்தியில்லாமையு மில்லை. ஆயினும் அவர்களுடைய கையிலிருந்து இப்படிப்பட்ட ஸ்ரீஸூக்தி களில் ஏகதேசமும் அவதரிக்க காண்கிறிலோம். 'செந்தாமரைத்

தடங்கண் செங்கனிவாய் செங்கமலம் செந்தாமரை யடிக்கள் செம்பென் திருவுடம்பே' என்றும் 'கைவண்ணம் தாமரைவாய் கமலம் போலும் கண்ணிணையுமரவிந்தமடியுமஃதே' என்றும் 'செங்கமலத்தலர்போலும் கண் கைகால் செங்கனிவாய் அக்கமலத்திலை போலுந் திருமேனியடிகளுக்கே' என்றும் வாய்வெருவுகின்ற ஆழ்வார்களின் ஈரச் சொற்களிலே ஆழங்காற்பட்டிருக்கும் ஆசிரியர்களுக்கே இப்படிப்பட்ட ஸ்ரீஸூக்தி விந்யாஸ வைபவம் வாய்க்கின்றது.

414. கப்யாஸம் என்று சாந்தோக்ய உபநிஷத்திலுள்ள விலக்ஷணமான சொல்லுக்கு மூன்று வகையான வ்யுத்பத்திகளைக் கொண்டு மூன்று அர்த்தங்கள் அவதரித்தன. அவ்வர்த்த விசேஷங்களைக் காட்டுகின்ற ஸ்வாமி ஸ்ரீஸூக்தியாவது– 'கம்பீராம்பஸ்ஸமுத்பூத–ஸூம்ருஷ்டநாள–ரவிகரவிகஸித புண்டரீக தலாமலாயதேக்ஷண:' என்பது. ஆழ்ந்த தண்ணீரில் வாழ்வதும், நாளமென்கிற தண்டோடு கூடியிருப்பதும், இரவியின் கதிர்களால் மலரப் பெற்றதுமான புண்டரீகத்தின் இதழ்போல் நீண்ட திருக் கண்களையுடையவனென்கை. கப்யாஸம் என்கிற இச்சிறு சொல்லால் இவ்வளவு அர்த்தங்கள் எங்ஙனே தோற்றுவிக்கப் படுகின்றனவென்று ஸந்தேஹம் எழக்கூடும். அந்த ஸந்தேஹத்தைத் தீர்க்க கப்யாஸம் என்பதற்குச் செய்யக் கூடிய வ்யுத்பத்திகளை விவரிக்க வேண்டியதாகும். அது கடினமான ஸம்ஸ்க்ருத சாஸ்த்ரப்ரக்ரியையாக இருப்பதால் அதை நாம் ஸம்ஸ்க்ருத பாஷையிலெழுதிய சில நூல்களில் விவரித்துள்ளோம். அங்குக் கண்டு கொள்வது. எம்பெருமானார் ஆதரித்தருளின அர்த்தங்கள் மூன்றும் கப்யாஸம்என்கிற சப்தஸந்நிவேசத்தில் கிடைத்தவையேயென்பதை பகவத்ராமாநுஜ பக்தர்கள் திடமாகக் கொண்டிருப்பர்கள்.

415. கம்பீராம்பஸ்ஸமுத்பூதமாயும், ஸூம்ருஷ்டநாளமாயும், ரவிகரவிகஸிதமாயு மிருக்கிற புண்டரீகத்தை எம்பெருமானு டைய திருக்கண்களுக்கு உவமையாகச் சொல்லுவது பொருத்தமென்று எம்பெருமானாருடைய திருவுள்ளத்திலே தோன்றினது திவ்யப்பிரபந்தங்களில் அவர் ஆழ அவகாஹித்திருந்ததனாலேயே. ஆழ்வார்கள் எம்பெருமானுடைய திருக்கண்ணழகைப் பற்றிப் பேசுமிடங்க ளில் மேலே காட்டிய மூன்று விசேஷணங்க ளையும் வெகு அற்புதமாகப் பேசியுள்ளனர். அதை அடைவே விவரிக்கிறேன்.

416.(கம்பீராம்பஸ்ஸமுத்பூத புண்டரீக) ஜலஜலெமன்றும் அம்புஜமென்றும் அம்போஜ மென்றும் நீரஜமென்றும் பேர்பெற்ற புண்டரீகமானது நீரில் நின்றுமுண்டாகமல் மற்றொன்றினின்று உண்டாக ப்ரஸக்தி யில்லாமையாலே "அம்பஸ்ஸமுதபூத்" என்றதன் கருத்து, நீரைவிட்டுப் பிரியாமலிருக்கையைச் சொல்லுவதேயாம். "தாமரையை அலர்த்தக்கடவ ஆதித்யன் தானே நீரைப் பிரிந்தால் அத்தை உலர்த்துமாபோலே" என்கிற ஸ்ரீவசன பூஷண ஸ்ரீஸூக்தியும், "கமலம் ஜலாதபேதம் சோஷயதி ரவிர் ந தோஷயதி" என்கிற ப்ரமாணமும் இங்கே அநுஸந்தேயம். நீரைவிட்டுப் பிரியாமலிருக்கிற தாமரை போன்ற திருக்கண்களையுடையவன் என்றதாயிற்று. "நீரார் கமலம்போல் செங்கண்மாலென்றொருவன்" என்கிற சிறிய திருமடற் பாசுரத்திலும், "அழறலர்

தாமரைக்கண்ணன்''(58) என்ற திருவிருத்தப் பாசுரத்திலும் ஆழ்வார்கள் திருவுள்ளம் பற்றிய அர்த்தமென்றே இஃது எம்பெருமானாரால் ஆதரிக்கப்பட்டது. ''நீரார் கமலம் போல்'' என்றவிடத்தில் (நீரார்) என்ற விசேஷணம் எதுகை யின்பத்திற்காக மாத்திரம் இடப்பட்டதன்று. ''அழறலர் தாமரைக் கண்ணன்'' என்றவிடத்து நம்பிள்ளையீட்டில் ''கப்யாஸ ச்ருதி ஸ்பஷ்டமாகவே உதாஹரிக்கப் பட்டுள்ளது. அவ்விடத்து ஸ்ரீஸூக்தி வருமாறு– (அழலறர் தாமரைக்கண்ணன்) அழற்றிலே நின்றலர்ந்த தாமரைப்பூப் போலேயிருந்துள்ள திருக்கண்களை யுடையவன். ''யதா கப்யாஸம் புண்டரீக மேவமக்ஷிணீ' என்னக் கடவதிறே.'' இங்கு வாதிகேஸரியின் ஸ்வாபதேசவுரை வருமாறு – ''அழறு என்று அளறு; நீரிலும் சேற்றிலும் நின்று அலர்ந்து செவ்விமாறாத தாமரை போன்ற கண்ணையுடையவனென்றபடி.''

417. ஆக, 'நீரார் கமலம் போல் செங்கண் மாலென்றொருவன்'' என்ற சிறிய திருமடற்பாசுரத்தையும், ''அழறலர் தாமரைக்கண்ணன்'' என்ற திருவிருத்தப் பாசுரத்தையும் ''தண்பெருநீர்த் தடந் தாமரை மலர்ந்தாலொங்கும் கண் பெருங் கண்ணன்'' என்கிற திருவாய்மொழிப் பாசுரத்தையும் திருவுள்ளம்பற்றியே 'கம்பீராம்பஸ்ஸமுத்பூத'' என்ற விசேஷணத்தை ஸ்வாமியிட்டருளினா ரென்றது பொருத்தமாக முடிந்தது.

418. (ஸூம்ருஷ்ட நாள புண்டரீக) நீரைவிட்டு பிரிந்த தாமரைக்கு சோபையில்லாதது போலவே நாளத்தை விட்டு நீங்கின தாமரைக்கும் சோபையில்லாமையாலே தாமரைக்கு நாளத்திலிருப்பும் அவச்ய வக்தவ்யமாயிற்று. இதுவும் ஆழ்வாரருளிச் செயலிலுள்ளது. திருவிருத்தத்தில் ''வன்காற்றறைய'' என்கிற பாட்டிலே ''எம்பிரான் தடங்கண்கள் – மென்கால் கமலத்தடம் போல் பொலிந்தன'' என்றருளிச் செய்யப் பட்டிருக்கிறது. கமலத்திற்கு இடப்பட்டிருக் கிற 'மென்கால்' என்னும் விசேஷணத்திற்கு 'மெல்லிய நாளத்திலேயிருக்கின்ற' என்பது பொருள். (நாளமாவது தண்டு). கமலத்திற்கு அது கால் போன்றிருத்தலால் (கால்) என்னுஞ் சொல்லால் குறிக்கப்பட்டது. நாளமென்கிற பொருளையே பூருவர்களும் உரை செய்துள்ளார்கள். ஆக இந்த திவ்ய ஸூக்திக்குச்சேர (ஸூம்ருஷ்டநாள) என்றருளிச் செய்யப்பட்டது.

419. (ரவிகரவிகஸித புண்டரீக) தாமரை நீரிலிருந்தாலும் நாளத்திலிருந் தாலும் ஸூர்ய கிரணங்களால் அலர்த்தப் பட்ட நிலையில் தான் எம்பெருமானுடைய திருக்கண்களுக்கு ஒப்பாகுமாதலால் இந்த விசேஷணமும் ஆவச்யகமாயிற்று. இதுவும் ஆழ்வாரருளிச் செயலிலுள்ளது. திருவாய்மொழியில் (5–4–9) ''செஞ்சுடர்த் தாமரைக் கண் செல்வன்'' என்றுள்ள பாசுரம் இங்கே கொள்ளக்கடவது. இவ்விடத்து ஈட்டிலும் கப்யாஸ ச்ருதியை உதாஹரித்தருளியுள்ளார். இதில் (செஞ்சுடர்த்தாமரை) என்பதற்கு செவ்விய சுடரையுடைய தாமரை என்று பொருளாகிறது. அச்செவ்விய சுடர் அதற்கு எங்ஙனம் வந்ததென்னில், அதற்கு முன்னடியில் '' அஞ்சுடர வெய்யோன்'' என்று ஸூர்யனை ப்ரஸ்தாவித்திருக்கை யாலே தததீநமென்று காட்டப்படுகிறது. ஆக ஸூர்ய ப்ரகாசமடியாக வந்த செவ்வியசுடரை யுடைய தாமரைப் பூப்போன்ற திருக்கண்களையுடையவன் என்றதாயிற்று. இந்த ஸ்ரீஸூக்தியைத் திருவுள்ளம் பற்றியே,

“ரவிகரவிகஸித புண்டரீக” என்றருளிச் செய்தது. “செந்தண் கமலக்கண்...சிவந்த வாயோர் கருநாயிறு அந்தமில்லா கதிர் பரப்பி அலர்ந்ததொக்குமம்மானே” என்கிற திருவாய்மொழிப் பாசுரமும் இங்கு யோஜிக்கவுரியது. (“செங்கமலம் அந்தரஞ்சேர் வெங்கதிரோற் கல்லால் அலராவால்” என்கிற பெருமாள் திருமொழிப் பாசுரமும் இங்கு நினைக்கத் தக்கது. ஆனால் அப்பாசுரத்தில் திருக்கண் ப்ரஸ்தாவமில்லாமையுணர்க).

420. மூல ச்ருதியில் “புண்டரீகமேவ மக்ஷிணீ” என்றிருக்கிறதேயொழிய வேறில்லை; உள்ள மூலத்திற்குச் சேர ‘புண்டரீகேக்ஷண;’ என்றிவ்வளவே அருளச் செய்திருக்க வேண்டும்; அதிகப்படியாக மூன்று பதங்களைச் சேர்த்திருக்கிறார். (1) தள, (2) அமல, (3) ஆயத என்னுமிந்த மூன்று சொற்கள் எந்த ஆதாரத்தைக் கொண்டு ஸ்வாமியாலருளிச் செய்யப் பட்டனவென்று விசாரம் செய்யுமளவில், ஆழ்வார்களின் திவ்யஸூக்திகளை ஆதாரமாகக் கொண்டு தானென்று நிர்ணயிக்க ப்ராப்தம்.

421. ஆழ்வார்கள் ‘தாமரைக் கண்ணன்’ என்று சிலவிடங்களிலும் “தாமரைத் தடங்கண்ணன்” “கமலத்தடம் பெருங்கண்ணன்” என்று பலவிடங்களிலு மருளிச் செய்து போருகிறார்கள். வடமொழியிலுள்ள லகரமும் ளகரமும் தென்மொழியில் டகரமாக மாறுபடுவது உண்டு; “லடயோரபேத:” என்கிற நியாயம் ஸமஸ்க்ருத சாஸ்த்ரஜ்ஞர்களுமிசைந்ததே. தமிழர்கள் எழுத்துப் போலி யென்பர்கள். ஏவஞ்ச, “பத்ரம் பலாசம் சதநம் தளம் பர்ணம் சத: புமாந்” என்ற அமர கோசத்தில் படிக்கப்பட்ட தளமென்கிற வடசொல்லே தமிழில் தடமென்றாயிற்று என்று திருவுள்ளம் பற்றிய எம்பெருமானார் ‘கமலத் தடங்கண்ணன்’ ‘தாமரைத் தடங்கண்ணன்’ என்னுமிடங்களிலே தளமென்னும் பொருளிலே தடமெனவந்ததென்று கொண்டு “புண்டரீகதள” என்றருளிச் செய்தார். தடமென்னுஞ் சொல்லுக்கு விசாலமென்கிற பொருளும் தளமென்கிற பொருளும் தடாகமென்கிற பொருளும் ஆங்காங்கு வியாக்கியான கர்த்தாக்களால் ஆதரிக்கப்படுகின்றன. “நீலத்தடவரைமேல் புண்டரீக நெடுந்தடங்கள் போல.............. எம்பிரான் கண்ணின் கோலங்களே” என்ற திருவிருத்தம் பாசுரத்தில் தடமென்பதற்கு தடாகமென்பது பொருள்.

422. “கமலக்கண்ணன்............ அமலங்களாக விழிக்கும்” என்கிற நம்மாழ்வார் பாசுரத்தையுட் கொண்டே “புண்டரீகதளாமல....... ஈக்ஷண:” என்றார் ஸ்வாமி. கீழே காட்டிய பாசுரங்களையும், “கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்ட வப்பெரியவாய கண்கள்” என்கிற அத்வீதீயமான திருப்பாணாழ்வார் பாசுரத்தையு மநுஸந்தித் துக் கொண்டே “புண்டரீக...... ஆயதேக்ஷண:” என்றார்.

423. ஸ்ரீபாஷ்ய மங்களச்லோகமான ‘அகில புவநஜந்மேத்யாதி ச்லோகத்தில் இரண்டாவது பாதம் “விநதவிவித பூதவ்ராத ரக்ஷைகதீக்ஷே” என்பது. முதல் பாதத்திலேயே ரக்ஷணார்த்தக மான ஸ்தேம சப்தத்தினால் எம்பெருமான் ஸர்வ ரக்ஷகனென்னுமிடம் சொல்லப்பட்டிருக்க, மீண்டும் அந்த ரக்ஷகத்வத்தையே தெரிவிக்கு மதான இரண்டாவது பாதமிட்டிருப்பது விசேஷ ரக்ஷணமான மோக்ஷப்ரதாநத்தைப் பற்ற என்னுமிடம் ஸம்ப்ரதாயதத்வஜ்ஞர்களுக்கு விவரண நிரபேக்ஷம். விநத—வணங்கின,

விவித–பலவகைப்பட்ட, பூதவ்ராத–பிராணி ஸமூஹங்களை, ரக்ஷா–ரக்ஷிப்பதையே, ஏகதீக்ஷே – முக்கியமான விரதமாக கொண்டவன் எம்பெருமான் என்பது சப்தார்த்தம்.

424. இங்கு பூதவ்ராத என்ற இடத்தில் ச்ருத ப்ரகாசிகையில் பட்டரும், தத்வடீகையில் நிகமாந்தமஹாகுருவும் நிரூபித்தருளியுள்ள விசேஷார்த்தம் விசேஷித்து நோக்கத்தக்கது. பூதவ்ராத மென்பதற்கு ப்ராணிஸமூஹமென்று பொருளானாலும் இதில் சிறிது உட்புகுந்து ஆராய்ந்தருளுகிறார் ச்ருதப்ராகாசிகா பட்டர். ப்ராஹ்மண ஸமாஜ, ராஜபரிஷத் என்னுமிரண்டு வ்யவஹாரங்களை யெடுத்துக் காட்டி, இவற்றிலுள்ள வாசியையுங் காட்டி விசேஷார்த்த நிஷ்கர்ஷம் செய்தருளுகிறார். ப்ரஹ்மண ஸமாஜமென்று சொன்னால் அந்த ஸமாஜத்தில் பிராமணர்கள் மட்டுமே கூடியிருப்பதாகவும் இதர ஜாதியர்களின் சேர்க்கை அங்கு இல்லையாகவும் உலகத்தில் ஸ்பஷ்டமாகக் காண்கிறது. ராஜபரிஷத் தென்று சொன்னால் இப்படி காணப்படுவதில்லை. கேவலம் ராஜாக்கள் மட்டுமே கூடுகிற கூட்டத்தையா ராஜபரிஷத்தென்கிறோம்? இல்லை; மந்த்ரிகளும் ப்ரஜைகளுமாகிய இதரர்களும் அரசனோடு கூடியிருக்குமிருப்பையே 'ராஜபரிஷத்' தென்கிறோம். 'ப்ராஹ்மண ஸமாஜ:' என்ற விடத்திலும் ராஜபரிஷத் என்ற விடத்திலும் அவிசேஷண ஷஷ்டீ தத்புருஷ ஸமாஸமே கொள்ளுகிறோம். ஸமாஸத்தில் வாசில்லையாயினும் பொருளில் நெடுவாசியுள்ளது.

425. ச்ருதப்ராகாசிகாபட்டர் இவற்றை யெடுத்துக்காட்டி விரிவாக அருளிச் செய்துள்ளார். விநத ப்ராணிகளுக்கு மட்டும் மோக்ஷமளிக்கையன்றிக்கே அந்த ப்ராணிகளோடு ஸம்பந்தம் பெற்றவர் களுக்குங்கூட அந்த விநதப்ராணிகளின் விநதியே காரணமாக மோக்ஷமளிக்கிறான் எம்பெருமானென்று அருளியுள்ளார். இங்கு 'தத ஏவ காரணாத்' என்கிற ஸ்ரீஸூக்தி ஜீவநாடியாகவுள்ளது.

426. இவ்வர்த்தத்தை வேதாந்த வாசிரியர் தத்வடீகையில் வெகு அழகாக உபபாதித்துப் பொருந்த வைக்கிறார். அவ்விடத்து ஸ்ரீஸூக்தி கள் நன்கு காணத்தக்கன. மூலத்தில் ரக்ஷா பதத்தாலே விவக்ஷிதமான ரக்ஷணம் அஸாதாரணஸ்ய பரமப்ரயோஜநஸ்ய மோக்ஷஸ்யைவ ப்ரதாநம்' என்று நிர்ணீதமா யிருக்கையாலே இந்த மோக்ஷப்ரதாநம் விநதபூதங்களுக்கு மட்டுமன்று, தத்ஸம்பந்தி ஸம்பந்திகளுக் கும் அப்ரதிஹதம் என்கிற அர்த்தமே தத்வடீகாஸூக்திகளாலும் விசதீக்ருதமாயிற்று. சரணாகதிகத்யத்தில் 'பகவந் நாராயணாபிமதேத்யாதி சூர்ணையினால் புருஷகாரப்ரபத்தி செய்தருளின எம்பெருமானார்க்கு ப்ரதிவசநமிட்டருளின ஸ்ரீரங்கநாச்சியார் "அஸ்து தே" என்றவளவோடு நில்லாமல் "தயைவ ஸர்வம் ஸம்பத்ஸ்யதே" என்று மருளிச் செய்த விடத்தில் அவ்விடத்து ச்ருதப்ரகாசிகையில் "ஸம்பந்தி ஸம்பந்தி நிஸ்தரணமயி, ஸர்வசப்தாபிப்ரேதம்" என்று அருளிச் செய்யப்பட்டிருப்பதும் இங்கு அநுஸந்தேயம்.

427. ஸ்வாமி சரணாகதிகத்யமருளிச் செய்தபிறகு ஸ்ரீரங்கநாதன் எம்பெருமானார்க்கு ஒரு வரம் தந்தருளினதாக ப்ரஸித்தியுள்ளது. இதனை வேதாந்தவாசிரியர் நியாஸதிலகத்தில் ஒரு ச்லோகத்தினால் வ்யக்தமாகப் பணித்துள்ளார். அந்த ச்லோகமாவது,

உக்த்யா தநஞ்ஜய விபீஷண லக்ஷ்யயா தே
ப்ரத்யாய்ய லக்ஷ்மணமுநேர் பவதா விதீர்ணம்
ச்ருத்வாவரம் ததுநபந்த மதாவலிப்தே
நித்யம் ப்ரஸீத பகவந் மயி ரங்கநாத.

என்பதாம். சரணாகதி கத்யத்தின் முடிவில் திருத்தேர்த் தட்டிலே அர்ஜுநனை யுத்தேசித்துச் சொன்ன ஸர்வதர்மாந் இத்யாதியையும், கடற்கரையிலே விபீஷணாழ்வானை யுத்தேசித் துச் சொன்ன 'ஸக்ருதேவ ப்ரபந்நாய இத்யாதியையும் எடுத்துரைத்து "இதி மயைவ ஹி உக்தம்" என்றுமருளிச் செய்து இவ்வகையாலே எம்பெருமானார்க்கு ஒரு ப்ரத்யயத்தைப் பண்ணுவித்தபடியை "உக்த்யா தநஞ்ஜய விபீஷணலக்ஷ்யயா தே ப்ரத்யாய்ய லக்ஷ்மணமுநே:" என்னுமளவால் அருளிச் செய்தாராயிற்று. அதற்குமேல் "பவதா விதீர்ணம் வரம் ச்ருத்வா" என்று ஸாதித்திருப்பது நிதியான வார்த்தை. ஸ்ரீரங்கநாதன் ஸ்ரீராமாநுஜர்க்கு ஒரு வரமளித்ததாகவும், அதை தேசிகன் தாம் பரம்பரையில் கேட்டறிந்ததாகவும் சொல்லப் பட்டுள்ளது. அந்த வரத்தின் ப்ரகாரம் எப்படிப்பட்டதென்பதை (ந்யாஸதிலக) வ்யாக்யாதாக்கள் வெளியிட்டுள்ளார்கள். எங்ஙனேயென்னில்; திருக்குடந்தை தேசிக ஸம்ப்ரதாய விவர்த்திநீ ஸபாத்யக்ஷர்களான மஹநீய மஹா வித்வான்கள் பலர் பரிஷ்கரித்து வெளியிட்ட வியாக்கியானத் தில் "எம்பெருமானாரே! உம்முடைய ஸம்பந்த ஸம்பந்திகளுக்கும் மோக்ஷம் தந்தோம் என்பது தான் வரம்" என்று விளக்கப்பட்டுள்ளது. வரம் இப்படிப்பட்டதே யொழிய வேறு விதமன்று என்பது மூலத்திலேயே ஸ்பஷ்டமாகக் காட்டப் பட்டுமிருக்கிறது. (அதாவது) "ச்ருத்வா வரம்" என்றவுடனே "ததநுபந்தமதாவ லிப்தே மயி" என்று ஸாதித்திருப்பதானது வரத்தின் ப்ரகாரத்தை ஸ்பஷ்டமாகக் காட்டுகின்றது அன்றோ. தேசிகன் தாம் எம்பெருமானாருடைய ஸம்பந்தம் பெற்று அதனால் செருக்குற்று இருப்பதாகவன்றோ இங்குச் சொல்லுகிறது. தேசிகனுக்கு எம்பெருமானாரோடு ஸாக்ஷாத் ஸம்பந்தமில்லையென்பதும் பரம்பரா ஸம்பந்தமேயுள்ளதென்பதும் நிர்விவாதம். பரம்பராஸம்பந்தமுடைய தமக்குச் செருக்கு உண்டாயிருப்பதாகச் சொல்லும்போது ஸ்ரீராமாநுஜரோடு பரம்பராஸம்பந்தமுடை யார்க்கும் மோக்ஷம் தந்தோமென்று ஸ்ரீரங்கநாதன் வரமளித்திருப்பது நிஸ்ஸந்தேஹமாக விளங்குமதன்றோ. இல்லையேல் "ததநுபந்தமதாவலிப்தே" என்று தமக்கிட்டுக் கொண்ட விசேஷணம் கேவலம் பாதபூரணார்த்தமாகுமத்தனை யன்றோ.

428. பரம்பரா ஸம்பந்திகளுக்கும் பேறு கைபுகுமோ! என்கிற ஸந்தேஹம் "விநதவிவிதபூத வ்ராதரக்ஷைகதீக்ஷே" என்ற விடத்து ச்ருதப்ரகாசியாலும் தத்வடீகை யினாலும் நிரஸ்தமான வளவேயன்றிக்கே இந்த 'உக்த்யாதநஞ்ஜய' ச்லோகத்திற்கு அடுத்த முந்தின ச்லோகத்தினாலும் நிரஸ்தமாயிற்று. எங்ஙனேயென்னில்;

அந்தோநந்த க்ரஹண வசகோயாதி ரங்கேச யத்வத்
பங்குர் நௌகா குஹர நிஹிதோ நீயதே நாவிகேந,
புங்க்தே போகாந் அவிதித ந்ருபஸ் ஸேவகஸ்யார்ப்பகாதி:
த்வத்ஸம்ப்ராப்தௌ ப்ரபவதி ததா தேதிகோ மே தயாளு:

என்ற ச்லோகத்தில் மூன்று த்ருஷ்டாந்தங் கள் காட்டப்பட்டுள்ளன. கண் தெரியாதவன் கண் தெரிந்தவனது கையைப் பற்றிக் கொண்டு நடந்து செல்லுகிறானென்றும், காலில்லாத முடவன் தோணிக்காரனால் தோணியில் உட்கார வைக்கப்பட்டு அக்கரை சேர்க்கப்படுகிறான் என்றும் காட்டின இவ்விரண்டு த்ருஷ்டாந்தங் களும் ஸாக்ஷாத் ஸம்பந்தமுள்ள விடத்தில் பேறு தப்பாதென்கைக்குச் சார்பானவை. இனி "புங்க்தே போகாத் அவிதிதந்ருபஸ் ஸேவகஸ்ய அர்ப்பகாதி:" என்று காட்டின மூன்றாவது த்ருஷ்டாந்தம் அத்யந்த வ்யவஹித ஸம்பந்தம் உள்ளார்க்கும் பேறு தப்பாது என்கைக்குச் சார்பானது. என்றைக்கோ இருந்த ஒரு அரசனிடம் என்றைக்கோ இருந்தவொரு அமாத்யன் ஸேவைபண்ணி நிதிபெற்று அந்நிதியைத் தன் பரம்பரையில் வருமவர்கள் உபஜீவிக்கும்படி வைத்திட்டால் அந்த நிதியைக் காலதத்வமுள்ளதனையும் அவனது பரம்பரையைச் சேர்ந்தவர்கள் தாங்கள் ஒரு ராஜஸேவையும் செய்ய வேண்டாமே, ஸேவைபண்ணினவருடைய ஸம்பந்தஸம்பந்த ஸம்பந்தமே ஹேதுவாக நெடுங்காலம் இடையறாதே பூஜித்து வருகிறார்களென்பதை நிர்விவாதமாகக் கண்டு வருகிறோம். இந்த உதாரணத்தை தேசிகன் காட்டியிருப்பதானது வ்யவஹித ஸம்பந்த முடையார்க்கும் பேறுதப்பா தென்பதை மூதலிக்கவேயன்றோ.

429. ஆக, எம்பெருமானாருடைய குடல் துடக்கு உடையோமான நாம் அவருடைய அநர்க்கமான ஸம்பந்தத்தை அநுதினமும் நினைந்து நைந்துள் கரைந்துருகி "நிர்ப்பரோ நிர்ப்பயோஸ்மி" என்றிருக்க ப்ராப்தம்.

430. மணவாளமாமுனிகள் யதிராஜ விம்சதியில் அருளிச் செய்துள்ள (18)

"காலத்ரயேயி கரணத்ரய நிர்மிதாதி பாபக்ரியஸ்ய சரணம் பகவத்க்ஷமைவ
ஸாசத்வயைவகமலாரமணோர்த்திதா யத் க்ஷேமஸ் ஸ ஏவஹி யதீந்த்ர பவத் ச்ரிதாநாம்."

என்கிற ச்லோகமானது கீழே விவரித்த அர்த்தவிசேஷங்களையெல்லாம் உட்கொண்டு அவதரித்ததாகும்.

431. பகவத் விஷயம் (ஈடு), ஸ்ரீவசந பூஷண வியாக்கியானம், குருபரம்பரா ப்ரபாவம் முதலான க்ரந்தங்களிலே காண்பதோரிதிஹாஸத்தைச் சுருக்கமாகக் கேண்மின்; எம்பெருமானார் உபய வேதாந்தப்ரவசநம் நடத்தியருளா நிற்க "ஆத்மாவுக்கு ஜ்ஞாநாநந்தங்களும் சேஷத்வமும் நிரூபமாகச் சொல்லப்படா நின்றதே, இவற்றினுள் அந்தரங்க நிரூபகம் எது?" என்கிற ப்ரஸ்தாவம் திருவோலக்கத்திலே நிகழ, ஸ்வாமி ஸர்வஜ்ஞராயெழுந்தருளியிருக்கச் செய்தேயும் இதனை ஆசார்யமுகேந வெளியிடுவிக்க வேணுமென்று திருவுள்ளம்பற்றி, திருக்கோட்டியூர் நம்பி பக்கலிலே சென்று ஸேவித்து இதனையறிந்து வரும்படி ஆழ்வானையனுப்பியருள, ஆழ்வானும் திருக்கோட்டியூர்க்குச் சென்று நம்பிபக்கலிலே ஆறுமாஸம் காத்திருந்து 'அடியேனுள்ளானுடலுள்ளான்' (8–8–2) என்கிற திருவாய்மொழிப் பாசுரத் துணுக்கையைப் பெற்றுக் கொண்டு எம்பெருமானாரிடம் வந்து சேர்ந்து அதை விஜ்ஞாபிக்க, மஹாநிதியான இந்த ஸ்ரீஸூக்தியினுட்பொருளை ஸ்வாமி திருவோலக்கத்திலே விவரித்தார்.

432. அடியேனென்கிற சொல் நாலாயிர திவ்யப்ரபந்தத்தினுள் நூற்றுக் கணக்கான விடங்களிலுண்டு; நம்மாழ்வார் பாசுரம் பேசத் தொடங்கும் போதே 'அடியேன் செய்யும் விண்ணப்பமே' என்று அடியேன் சொல்லையிட்டே பேசுகிறார். இப்படி பல நூறிடங்களில் அடியேன் சொல் இருக்கவும் அவற்றையெல்லாம் விட்டுத் திருவாய்மொழியில் ஒரு மூலையிலிருக்கும் பாசுரத் துணுக்கொன்றைத் திருக்கோட்டியூர்நம்பி எடுத்துக் கொடுத்தனுப்பியிருக்கிறார்: அது எட்டாம் பத்தின் எட்டாம் பதிகத்தின் இரண்டாம் பாட்டிலுள்ளது. அங்கேயே முதற்பாட்டின் முடிவிலும் 'ஒருவனடியேனுள்ளானே' என்று

அடியேன் சொல்லுள்ளது; அதையும் விட்டு அடுத்த பாட்டினடியை யெடுத்துக் காட்டியுள்ளார். இதில் என்ன விசேஷம் என்பது நுண்ணுணர்வினர் நுண்மதிக்கே கோசரமாகக் கூடிய விஷயம். கேண்மின்: எந்த இடத்திலும் அடியேனென்கிற சொல்லுக்கு தேஹவிசிஷ்டனான ஆத்மாவே பொருளாகும். 'அடியேன் செய்யும் விண்ணப்பமே' என்னுமிடத்தை யெடுத்துக் கொள்வோம்; தேஹமின்றிக்கே வெறும் ஆத்மா விண்ணப்பம் செய்ய முடியாதன்றோ. தேஹவிசிஷ்டனான ஆத்மாவே விண்ணப்பஞ் செய்ய முடியுமாதலால் இங்கு வெறும் ஆத்மாவை அர்த்தமாகக் கொள்வதற்கில்லை: 'அடியேன் சிறிய ஞானத்தன்' என்கிற மற்றோரிடத்தையும் (1–5–7) எடுத்துக் கொள்வோம்; இங்கு 'ஞானத்தன்'என்று ஞானமுடைமை சொல்லியிருப்பதனால் அது தேஹத்திற்கு அஸம்பாவிதமாய் ஆத்மாவுக்கே ஸம்பாவிதமாகையாலே இங்கு அடியேனென்பது வெறும் ஆத்மா வையே சொல்லியாக வேண்டுமென்று சிலர் ப்ரமிக்க கூடும்; அப்படியில்லை; இங்கும் அடியேனென்கிற சொல் தேஹவிசிஷ்ட னான ஆத்மாவையே சொல்லுகிறது; ஏனென்னில், "காண்பான் அலற்றுவன்" என்கிற க்ரியையிலே அச்சொல் அந்வயிக்க வேண்டும்; வெறும் ஆத்மாவே அடியேன் சொல்லுக்கு அர்த்தமாக வேண்டியது அவசியமாயிற்று. இப்படி எந்தவிடத்திலும் தேஹ விசிஷ்டனான ஆத்மாவையே அடியேன் என்ற பதம் சொல்லி நிற்கும் என்பது திண்ணமாயிற்று. 'ஒண் சங்கதை வாள் ஆழியானொருவன் அடியேனுள் ளானே' என்கிறவிடத்திலும் அப்படியே.

433. இனி 'அடியேனுள்ளான் உடலுள்ளான்' என்கிறவிடத்தில் மட்டும் அடியேனென்பதற்கு வெறும் ஆத்மாவே அர்த்தமாக வேண்டிய நிர்பந்தமுள்ளது. ஆத்மாவுக்கு விசேஷண பூதமான தேஹத்திற்கு வாசகமான சொல் உடலென்பது தனிப்பட இருப்பதனால் அடியேனில் தேஹத்தைச் சேர்த்து அர்த்தங்கொள்ள வேண்டிய அவச்யம் இல்லை; எம்பெருமான் ஜீவாத்மாவையும் உடல் பொருளையும் அநுப்ரவேசித்திருக்கு மவன்' என்று சொல்ல வேண்டுவது இங்கு விவக்ஷிதம். உடலிலுள்ளானென்பதனால் ஜடப்பொருளை அநுப்ரவேசித்திருக்குமவன் என்பது சொல்லிற்றாயிற்று. 'ஜீவாத்மாவை அநுப்ரவேசித்திருக்குமவன்' என்று விவக்ஷிதமான பொருளுக்கு 'அடியேன் உள்ளான்' என்று வாசகமிடப்பட்டிருக்கிறது. ஆத்மா அஹமர்த்தமாகையாலே என்னுள்ளானென்று சொல்லியிருக்கலாம்: அப்போதும் ஆத்மாவிலுள்ளானென்னும் பொருள் தேறிவிடும். ஆனால் ஆழ்வார் அப்படியருளிச்செய்யாமல்' அடியேனுள்ளான் என்றருளிச் செய்திருக்கையாலே, ஆத்மா என்றும் அடியேன் என்றும் பர்யாயம்–(அதாவது)

ஆத்மாவுக்கு சேஷத்வமே அந்தரங்க நிரூபகம்—என்பது ஆழ்வார் திருவுள்ளமாக அறுதியிடலாகிறது.

434. இப்படி எம்பெருமானார் நிர்ணயித்ததாகச் சொல்லுமைதிஹ்யம் உண்மையாயிருக்க வேண்டுமாகில் இது அந்த ஸ்ரீபாஷ்யகாரதிவ்யஸூக்திகளில் எங்கோவது ஏறியிருக்க வேணும். இல்லையாகில் இந்த ஐதிஹ்யத்திற்கு கௌரவமில்லை. ஸ்ரீபாஷ்யத்தில் 'ஜ்ஞோத ஏவ'' என்கிற ஸூத்ரத்தின் விவரணத்தில் இது தெரிவிக்கப்படவில்லை. அங்கு "அயமாத்மா ஜ்ஞாத்ருஸ்வரூப ஏவ'' என்று இவ்வளவே முடிவாகத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. ஆகவே மேலே விவரித்த ஐதிஹ்யம் யதார்த்தமாயிருக்கத் தகுதி யில்லையென்று குருகுலவாஸ பாக்யம் இல்லாதார் சிலர் சொல்லுவதுண்டு. அன்னவர்களை "எண்ணாத மானிடத்தை எண்ணாத போதெல்லாமினியவாறே'' என்கிற ரீதியில் விட்டிட்டு தத்வஜிஜ்ஞாஸுக்களான ஸுக்ருதிகளுக்கு மருமமுணர்த்துகிறேனிங்கு. இந்த மஹார்த்தம் எம்பெருமானார் திருவுள்ளத் திலே நன்கு ஊறியிருந்து கீதா பாஷ்யத்தில் தகுந்த இடத்தில் வெளியிடப் பெற்றது. கீதையில் (7–16) 'சதுர்விதா பஜந்தா மாம் ஜனாஸ் ஸுக்ருதி நோர்ஜுந!, ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்தீ ஜ்ஞாநீ ச பரதர்ஷப!' என்றவிடத்தில் சங்கர பாஷ்யத்தை முன்னம் நோக்கிப் பிறகு ஸ்வாமி பாஷ்யத்தை நோக்குமின். 'ஜ்ஞாநீ—விஷ்ணோஸ் தத்த்வவித்' என்றார் சங்கராசார்யர்; நம் ஸ்வாமி அப்பொருளை ஒன்றாக எண்ணாது "பகவச் சேஷைதைகரஸ ஆத்ம ஸ்வரூபவித் ஜ்ஞாநீ'' என்று அருளிச் செய்துள்ர். இப்படி ஓரிடமன்று. ஜ்ஞாநீ என வருமிடங்களில் எல்லாம் இங்ஙனேயருளிச் செய்கிறார். ஜீவாத்மாவின் ஜ்ஞானத்திற்கு ப்ரயோஜனம் தன்னுடைய சேஷத்வத்தை யறிவதுதான் என்று ஸ்வாமியின் திருவுள்ளம் தேறுகிறது. ஆழ்வார் ஸ்ரீஸூக்தியில் அவகாஹநம் இல்லாமல் இங்ஙனே யருளிச் செய்ய இயலாது.

435. நம்முடைய விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தில் சரீராத்மபாவமென்பது ப்ரதாந ப்ரதிதந்த்ரார்த்தமென்று குலாவப்படுகிறது. உபநிஷத்துக்களில் சேதந அசேதந ஈச்வரர்களுக்கு அபேதம் சிலவிடங்களிலும், பேதம் பல விடங்களிலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அத்வைதிகள் அபேதம் தெரிவிக்கப்படுமிடங்களை மட்டும் முக்கியமாகக் கொண்டு பேதம் தெரிவிக்கப்படுமிடங்களை கௌணமாக்கி நிர்வஹிக்கிறார்கள். த்வைதிகளோ வென்னில் பேதம் தெரிவிக்கப் பெறும் இடங்களை மட்டும் முக்கியமாகக் கொண்டு அபேத ச்ருதிகளை கௌணமாக்கி நிர்வஹிக்கிறார்கள். ஸ்ரீவைஷ்ணவர்களான நாம் அப்படியன்றிக்கே உபய ச்ருதிகளையும் ஸமப்ரதாநமாகவே கொண்டு நிர்வஹித்து விசிஷ்டாத்வைதிகள் என்று பேர்பெற்று வருகிறோம். பேதம் அபேதம் ஆகிய இரண்டையும் தெரிவிக்கிற உபயச்ருதி களையும் ஸமப்ரதாநமாக எப்படி நிர்வஹிக்கிறோமென்றால் சரீராத்ம பாவத்தைக் கொண்டு நிர்வஹிக்கிறோம். இதை இங்கு நாம் விரிவாக விவரிக்க வேண்டிய ஆவச்ய கதையில்லை. ஸுபாலோபநிஷத்து அந்தர்யாமி ப்ராஹ்மணம் முதலான உபநிஷத்துக் களைக் கொண்டே ஆளவந்தார் எம்பெருமானார் முதலான ஆசார்யர்கள் இந்த நிர்வாஹ ப்ரக்ரியையைப்

பேணி வருகிறார்களென்று நம்மவர்கள் சொல்லி வருகிறார்கள். இதை நாம் மறுப்போமல்லோம். ஆனால் இங்கு ஒன்று நாம் ஆலோசிக்க வேண்டும். அந்தர்யாமி ப்ராஹ்மணாதிகள் நமக்கு மாத்திரமே தோன்றினவையல்ல; அவை மதாந்தரஸ்தர் களுக்குமுண்டே; ஆகிலும் அவர்கள் அந்த உபநிஷத் பாகங்களில் ஆதரமின்றிக்கே யிரா நின்றார்கள்; ஆளவந்தார் எம்பெருமானார் முதலான நம் ஆசார்ய வர்யர்களே அவற்றில் விசேஷ த்ருஷ்டியைச் செலுத்தியிருக்கிறார்கள். இதற்கு என்ன காரணமென்னில், 'அருளினான் அவ்வரு மறையின் பொருள் அருள் கொண்டு ஆயிரமின் தமிழ் பாடினான், அருள் கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே' என்கிறார் ஸ்ரீமதுரகவிகள்; 'ததாதௌ காதபிர் முநிரதிக விம்சாபிந: க்ருதீ ஸாரக்ரஹம் வ்யதரதிஹ க்ருபயா' இத்யாதிகளாலே தேசிகன் த்ரமிடோபநிஷத்ஸார தாத்பர்ய ரத்நாவளிகளில் விரிவாக அருளிச் செய்தார். இங்கு இருபது பாசுரங்களினால் என்னாமல் அதிக விம்சாபி: என்றும், ரத்நாவளியில் "விம்சதிர்வக்தி ஸாக்ரா" என்றும் சொச்சமும் கூட்டியருளிச் செய்திருக்கையாலே திருவாய்மொழியில் முதலிரண்டு தசகங்களும் மூன்றாம் தசகத்தில் இரண்டு பாசுரங்களும் பாஷ்யகாரருடைய வேதாந்தார்த்த நிஷ்கர்ஷங்களுக்கு மிகவும் ஹஸ்தாவலம்பமாயிருந்தனவென்று நம் ஆசார்ய கோஷ்டியில் ப்ரஸித்தமாகச் சொல்லி வருமது ப்ரதிஷ்டாபிதமாயிருக்கிறது. ஆசார்யர்களெல்லாரும் இதில் ஸமகண்டர்களே யாவர்.

436. முக்கியமாக பேதாபேத ச்ருதிகளை சரீரசரீரிபாவத்தாலே நம் ஆசார்யர்கள் பொருந்தவிட்டது ஆழ்வார் ஸ்ரீஸூக்தியைக் கொண்டேயாம். திருவாய்மொழியில் (1–1–7). 'உடன்மிசை உயிரெனக்கரந்தெங்கும் பரந்துளன்' என்கிற பாசுரத்திலிருந்தே நிதிகண்டு பெற்று நிர்மலஹ்ருதயரானார்கள். அப்பாசுரத்திற்குப் பிள்ளானுடைய ஆறாயிரப்படி வியாக்கியானம் வெகு விரிவாக அவதரித்திருக்கின்றது. அவ்வளவு விரிவு ஆயிரத்தினுள் வேறு எந்த பாசுரத்திற்கும் கிடையாது. நம் பாஷ்யகாரர்க்கு அந்த பாசுரமே நிதிகாட்டிக் கொடுத்ததென்பதை பிள்ளான் தம்முடைய விசதவ்யாக்யான முகத்தாலே தெளிவித்தாராயிற்று.

437. இவ்விஷயம் போலவே, நிர்க்குணச்ருதிகளுக்கு ஹேயகுண ராஹித்ய ப்ரதிபாதனத்திலே நோக்கென்று ஒதுக்கி எம்பெருமானை அநந்த கல்யாண குணமஹோததியாக ஆளவந்தாரும் எம்பெருமானாரும் நிஷ்கர்ஷித்தருளினதும் ஆழ்வார் ஸூக்திகளைக் கொண்டே தான்; சாரீரகமீ மாம்ஸையின் முதல் ஸூத்ரம் 'அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா' என்பது. இதில் ப்ரஹ்ம சப்தத்திற்கு சங்கராசார்யரும் அர்த்தம் செய்கிறார், நமது ஸ்ரீபாஷ்யகாரரும் விவரணம் செய்தருளுகிறார். இரண்டிடங்களையும் பார்ப்போம். "ப்ரஹ்ம ச வக்ஷ்யமாண லக்ஷணம் ஜாமாத்யஸ்யயத இதி" என்றிவ்வளவேயுள்ளது சங்கரபாஷ்யம். ஸ்ரீபாஷ்ய ஸூக்தியோ வென்னில்; 'ப்ரஹ்ம சப்தேந ஸ்வபாவதோ நிரஸ்தநிகில தோஷ: அநவதிகாதிசயாஸங்க்யேய கல்யாண குணகண: புருஷோத்தம: அபிதீயதே' என்றுள்ளது. ஆழ்வார் திருவாய்மொழி தொடங்கும் போதே 'உயர்வறவுயர் நலமுடையவன்' என்றருளிச் செய்த சந்தையையே ஸ்வாமி நேராக மொழி பெயர்த்திருக்கிறார். உயர்வு அற = அநவதிகாதிசய, உயர் – அஸங்க்கேயய,

நலமுடையவன் – கல்யாணகுணகண:, யவனவன் – புருஷோத்தம:– ஆழ்வார் ஸ்ரீஸூக்திகள் முழுதும் பகவத்குணகண மயமேயாதலால் அந்த அம்ருத ஸாகரத் திலே யூறின ஸ்ரீராமாநுஜர் அதற்குத் தகுந்தபடியேயருளிச் செய்கிறார் என்பதில் வியப்பொன்று மில்லையிறே.

438. ஸ்வாமி ராமாநுஜர் நவரத்நமாக வருளிச் செய்த ஒன்பது திவ்யக்ரந்தங்களில் சரமமென்று சொல்லப்பட்டு வருகிற நித்யக்ரந்தத்திலிருந்து ஒரு நிதியை யெடுத்துக் காட்டுகிறேனிங்கு, ஸ்ரீவைஷ்ணவர்கள் தினப்படி செய்யும் திருவாராதனத்தில் ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளை யநுஸந்தித்தே தலைக்கட்ட வேண்டுமென்றும் ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளின் அநுஸந்தானமில்லாத திருவாராதனத்தினால் எம்பெருமானுடைய திருவுள்ளம் உகவாதென்றும் ஸத்ஸம்ப்ரதாய வ்ருத்தர்களின் அத்யவஸாயமுள்ளது. அநுஷ்டானமும் இவ்வண்ணமாகவே அநாதிகாலமாக எங்கும் நிகழ்ந்து வருகின்றது. இதுபற்றி ஸ்வாமியெம்பெருமானாரருளிச் செய்த திருவாராதந ப்ரயோகத்தில் (நித்ய க்ரந்தத்தில்) ''ச்ருதிஸுகை: ஸ்தோத்ரை ரபிஷ்டுய'' என்கிற ஸ்ரீஸூக்தியுள்ளது.

439. ஆழ்வார்களின் திவ்யஸூக்திக ளுக்கு ''செவிக்கினிய செஞ்சொல்'' என்றே வ்யபதேசம். ''கேட்டாரார் வானவர்கள் செவிக்கினிய செஞ்சொல்லே'' (திருவாய்மொழி 10–6–11) என்று ஆழ்வார் தாமேயருளிச் செய்யும்படியாயிற்று. 'செவிக்கினிய' என்றதற்குப் பர்யாயமாகவே ஸ்வாமி (ச்ருதிஸுகை:) என்றருளிச் செய்தது. 'வைதிக ஸூக்தை:' என்றோ வேறுவிதமாகவோ அருளிச் செய்யாமல் இங்ஙனே யருளிச் செய்தது ஸ்வாமிக்கே அஸாதாரணமான கம்பீர ஸரணி. 'ச்ருதிஸுகை: ஸூநை:'' என்றும் சில ஸ்ரீகோசங்களிற் பாடங் காண்கிறது. அதுவும் மிகப் பொருந்தும். எம்பெருமானா ருடைய இத்தகைய கம்பீரஸூக்தி ஸரணியைப்பற்றி ஸாரமாகச் சில விஷயங்கள் தெரிவிப்போம் மேலே.

440.சரணாகதிகத்யத்தில் 'அகிலஹேயேத்யாதி (5) சூர்ணையில் ''மஹா விபூதே! ஸ்ரீமந்நாராயண! ஸ்ரீவைகுண்டநாத!'' என்கிற ஸம்போதநங்க ளுக்குப் பிறகு ''அபார காருண்ய ஸௌசீல்ய வாத்ஸல்யௌதார்யைச்வர்ய ஸௌந்தர்ய மஹோததே!'' என்கிற ஸம்போதநத்தில் வாத்ஸல்ய குணமும் சேர்த்துப் படிக்கப்பட்டிருக்கச் செய்தேயும் மறுபடியும் (அவ்விடத்திலேயே) 'ஆச்ரித வாத்ஸல்யைக ஜலதே!' என்று மற்றொரு ஸம்போதநமும் அருளிச் செய்யப்பட்டிருக் கிறது. கீழுள்ள ஸம்போதநத்திலேயே வாத்ஸல்யகுணமும் சேர்ந்திருக்கவும் மீண்டும் வாத்ஸல்யத்தை மாத்திரமிட்டுத் தனியே ஒரு ஸம்போதநமருளிச் செய்திருப் பது எதற்காகவென்று விமர்சிக்க வேணும்.

441. கீழ் ஸம்போதநத்தில் வாத்ஸல்யத்தை மற்றும்பல திருக்குணங்களோடே சேர்த்துப் படித்ததில் த்ருப்தியில்லாமல் வாத்ஸல்யத்தை மாத்திரமே தனிப்பட எடுத்துரைக்க வேணுமென்று திருவுள்ளமுண்டாகி இங்ஙனேயருளிச் செய்திருப்பதாக ஸ்பஷ்டமாய்த் தெரிகிறது. பெருவிடாய்ப் பட்டவன் நீரிலே விழுந்து நீரைப் பலமுகமாக உபயோகங்கொள்ளுமாபோலே பகவத்குண கண கீர்த்தனத்திலே அத்விதீயமான உத்கண்டையையுடைய எம்பெருமானார் அலமாப்பின் மிகுதியாலேயருளிச் செய்யுமதுக்கு நாம் ஒரு அடைவு தேடவேண்டாவாகிலும், இந்த புநருக்தி வாத்ஸல்ய

குணத்திலேயானபடியாலே நம் ஆசார்யர்கள் இவ்விடத்தில் விசேஷ அவதானம் செலுத்தி வெளியிட்டிருக்குமது இங்குத் தெரிவிக்கலாகிறது. வெகு நுட்பமான விஷயமிது.

442. திருவாய்மொழியில் (6–10–10) 'அகலகில்லேனிறையுமென்று அலர்மேல் மங்கையுறைமார்பா!' என்று ஆழ்வார் பெரிய பிராட்டியாரை முன்னிட்டுத் திருவேங்கட முடையான் திருவடிகளிலே ப்ரபத்தி பண்ணுகிறபோது அடுத்த இரண்டாமடியில் எம்பெருமானை 'நிகரில் புகழாய்!' என்று ஸம்போதித்திருக்கிறார். ஒப்பற்றவொரு திருக்குணத்தை யுடையவனேயென்கிறார். அந்த திருக்குணம் எதுவாக இருக்கு மென்று ஆராய்ந்தால் ப்ரகரணத்தை யநுஸரித்து வாத்ஸல்யமே அது–என்று எம்பெருமானார் திருவுள்ளம் பற்றுகிறார்.

443. தோஷபூயிஷ்டனான சேதநன் பெரிய பிராட்டியாரைப் புருஷகாரமாக வரிப்பது எதற்காக வென்னில்; தன்னுடைய தோஷங்களைக் கண்டு எம்பெருமான் தன்னை நிக்ரஹித்தருளாமைக்காவன்றோ; அப்பிராட்டியினுடைய புருஷகாரபலத்தாலே எம்பெருமானிடத்தில் முதன் முதலாக எந்த திருக்குணம் விகாஸமடைகின்றதென்னில்; வாத்ஸல்யகுணமே யென்பது நிர்விவாதம்.

444. வாத்ஸல்யமாவது தோஷ அதர்சித்வமா? தோஷபோக்யத்வமா? என்கிற விசாரம் இவ்விடத்தில் சிறிதும் கொள்ளப்படவில்லை. எதுவாயினுமாகுக. தோஷாதர்சநமே வாத்ஸல்யமென்று கொள்வோம். அக்குணம் எம்பெருமானுக்கு உள்ளதேயானாலும் சேதநனுடைய அபராத பாஹுள்யத்தாலே அது உள்ளே அமுங்கிக் கிடந்ததென்றும், பிராட்டியின் புருஷகார பலத்தாலே அது தலையெடுக்கிறதென்றும் ஆசார்யர்கள் கண்டறிந்து கூறுகிறார்கள். இவ்விஷயத்தை தேசிகனும் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் த்வயாதிகாரத்திலும் மற்றும் சிறு ரஹஸ்யங்களிலும் ஸுஸ்பஷ்டமாக வெளியிட்டுள்ளார்.

445. 'நிகரில்புகழாய்!' என்கிற ஆழ்வார் ஸ்ரீஸூக்தியில் விவக்ஷிதமான குணம் வாத்ஸல்யமே யென்பது பிள்ளை லோகாசார்யருடைய ரஹஸ்யங்களோடு தேசிகனுடைய ரஹஸ்யங்களோடு வாசியற எல்லாவற்றிலும் விளக்கமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆக, இந்த வாத்ஸல்ய குணத்தை ஆழ்வார் நிகரற்றதாகத் திருவுள்ளம்பற்றின படியாலே, ஸ்வாமி ராமாநுஜர் இதை மற்ற திருக்குணங்களோடு சேர்த்துப் படித்த வளவால் த்ருப்திபெறாமல் தனிப்படவும் ஒரு சூர்ணிகை இதற்காக இட்டருளினார். இதனால் ஆழ்வாரருளிச் செயலில் எம்பெருமானார் வைத்திருந்த கௌரவாதிசயம் விசதமாகும்.

446. எம்பெருமானார் அருளிச் செய்த ஸ்ரீரங்ககத்யத்தின் ஆரம்பம் ('ஸ்வாதீந த்ரிவிதசேதநாசேதநஸ்வரூபஸ்தி ப்ரவருத்திபேதம்') என்பது. சேதநர்களி னுடையவும் அசேதநங்களினுடையவும் ஸ்வரூபமென்ன, ரக்ஷணமென்ன, ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளென்ன இவை தன்னதீனமாயிருக்கப் பெற்றவன் எம்பெருமான்– என்பது மேலெடுத்த ஸ்ரீஸூக்தியின் கருத்து. திருவாய்மொழியில் முதற்பதிகத்தில் 4,5,6 ஆம் பாட்டுக்களில் முறையே நம்மாழ்வாரருளிச் செய்த அர்த்தத்தையே திரட்டி ஸ்வாதீநேத்யாதி ஸ்ரீஸூக்தியை ஸ்வாமி யருளிச் செய்தாரென்று அறுதியிடப்படுகின்றது.

447. 'நாமவனிவனுவன்' என்கிற நாலாம் பாட்டில் நாம் முதலான தன்மைப் பொருள்களும், அவன் இவன் உவன் என்கிற ஆண்பால் சுட்டுப் பொருள்களும், அவள் இவள் உவள் என்னும் பெண்பால் சுட்டுப் பொருள்களும், எவள் என்கிற பெண்பால் வினாப்பொருளும், அவர் இவர் உவர் என்னும் பலர்பால் சுட்டுப் பொருள்களும், அது இது உது என்னும் ஒன்றன்பால் சுட்டுப் பொருள்களும், எது என்னும் ஒன்றன்பால் வினாப்பொருளும், நசிக்குந் தன்மையுள்ள பொருள்களும், இவை உவை அவை என்னும் பலவின்பால் சுட்டுப் பொருள்களும், நல்ல வஸ்துக்களும் கெட்ட வஸ்துக்களும் எதிர்காலப் பொருள்களும் இறந்தகாலப் பொருள்களும் ஆகின்ற எல்லாப் பொருள்களும் அந்த ஸர்வேச்வரனேயாம் (அதாவது) ஸர்வேச்வரனிட்ட வழக்கேயாம் என்றது. உலகத்திலுள்ள சேதநா சேதநப் பொருள்களெல்லாம் இந்தச் சிறிய பாட்டில் உக்தி வைசித்திரியாலே அடக்கப்பட்டு, இவையெல்லாவற்றினுடையவும் ஸ்வரூபம் பகவானுடைய அதீனம் என்று தெரிவிக்கப்பட்டபடியால் இது தன்னையே 'ஸ்வாதீநத்ரிவித சேதநா சேதந ஸ்வரூப'' என்றார் ஸ்வாமி யெம்பெருமானார்.

448. இதற்கடுத்த பாட்டு 'அவரவர் தமதமது' என்பது. இதன் கருத்தாவது, உலகில் பலவகைப்பட்ட அதிகாரிகள் இருக்கின்றார்களே; அவரவர்கள் தம்தமது உணர்ச்சிக்கு எட்டியபடியே ஒரோ தெய்வங்களை ஸ்வாமிகளாக வெண்ணி ஆச்ரயிப்பர்கள்; இப்படி அவரவர்களால் தொழப்படுகின்ற அந்தந்த தெய்வங்கள் அவரவர்கள் விரும்பின பலன்களைக் கொடுப்பதில் குறையற்றே யிருக்கின்றன; எதனாலே யென்னில்; ஸர்வஸ்வாமியான ஸ்ரீமந் நாராயணன் அவரவர் தம்தமது அத்ருஷ்டாநுஸாரமாய்ப் பலன் பெறும்படியாக அந்தந்த தெய்வங்களுக்கு அந்தர்யாமியா யெழுந்தருளியுள்ளான்; அதனாலேதான்—என்பதாம்.

449. இதனால் சொல்லிற்றாவதென் என்னில்; உலகத்தில் நடக்கிற ரக்ஷணத் தொழில் யாவும் எம்பெருமானுடையதே; பிரமன் சிவனிந்திரன் முதலிய இதர தெய்வங்களைக் குறித்தும் மற்றும் அதிக்ஷுத்ர தெய்வங்களைக் குறித்தும் அவரவர்கள் வழிபாடுகள் செய்து தாம் தாம் கோரின பலன்களைப் பெறுவதாகக் கண்டாலும் அதுவும் எம்பெருமான் தானே அத்தெய்வங்களுக்கு உள்ளீடாக விருந்து நடத்துகிற ரக்ஷணமே யன்றி அத்தெய்வங்களே சுதந்திரமாகச் செய்து விடுகிற ரக்ஷணமன்று என்றதாயிற்று. ('நஹி பாலந ஸமார்த்த்யம் ருதே ஸர்வேச்வரம் ஹரிம்') என்றும், ('ந ஸம்பதாம் ஸமாஹாரே விபதாம் விநிவர்த்தநே, ஸமர்த்தோத்ருச்யதே கச்சித் தம் விநா புருஷோத்தம்') என்றுமுள்ள பிரமாணங்களை யடியொற்றி யருளிச் செய்ததாமிது. ஆக இந்தப் பாசுரத்தின் ப்ரமேயத்தையும் சேர்த்துக் கொண்டு ஸ்வாதீநத்ரிவித சேதநாசேதந ஸ்வரூப ஸ்திதி'' என்றார் ஸ்வாமி. (ஸ்திதியாவது ரக்ஷணம்.) சேதநாசேதந ரக்ஷணத்தையும் தன்னதீனமாக வுடையவனென்கை.

450. இனி, இதற்கடுத்த ஆறாவது பாட்டு 'நின்றனர் இருந்தனர்' என்பது. இப்பாட்டின் கருத்தாவது, நிற்பவர்கள் இருப்பவர்கள் கிடப்பவர்கள் ஆக இப்படிப்பட்ட ப்ரவ்ருத்தி சீலர்களும், நில்லாதவர்கள் இராதவர்கள் கிடவாதவர்கள் திரியாதவ[illegible] ஆக

இப்படிப்பட்ட நிவ்ருத்தி சீலர்களும் எம்பெருமானிட்ட வழக்கேயென்பதாம். இதில், ப்ரவ்ருத்தி சீலர்களையும் நிவ்ருத்தி சீலர்களையும் சொல்லியிருந்தாலும் அவர்கள் இங்கு விவக்ஷிதர்களல்லர்; கீழ் 'நாமவனிவனுவன்' என்கிற பாட்டிலேயே தர்மிகளான ஸகலரையும் சேரப் பிடித்தெடுத்து அவர்கள் யாவரும் எம்பெருமானிட்ட வழக்கேயென்பது சொல்லி முடித்த விஷயமாதலால் இப்பாட்டு அத்தோடு புநருக்தமாகக் கூடாது; அதில் சொல்லப்படாத விஷயமே இங்குச் சொல்லப்பட்டதாக வேண்டும். ஆகவே, ப்ரவ்ருத்தி நிவ்ருத்திமான்கள் எம்பெருமன் இட்ட வழக்கு என்று சொல்லுகிற இப்பாசுரமானது, அவரவர்களின் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளாகிற தர்மங்கள் எம்பெருமானிட்ட நிற்றல் இருத்தல் கிடத்தல் திரிதலாகிற ப்ரவ்ருத்திகளும், நில்லாமை இராமை கிடவாமை திரியாமையாகிற நிவ்ருத்திகளும் எம்பெருமானதீனமே யென்கையல்லது வேறல்ல. இது ஸகல பூர்வாசார்ய வ்யாக்கியான ஸித்தம். ஆக இந்தப் பாசுரத்தின் ப்ரமேயத்தையும் சேர்த்துக் கொண்டு "ஸ்வாதீந த்ரிவித சேதநாசேதந ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்தி பேதம்" என்றருளிச் செய்தார் ஸ்வாமி. எனவே, திருவாய்மொழிப் பாசுரங்கள் மூன்றின் ஸாரார்த்த ஸங்க்ரஹமாக ஸ்வாதீநேத்யாதி சூர்ணையை எம்பெருமானார் அருளிச் செய்தார் என்றதாயிற்று.

451. ஸ்வாமி அருளிச் செய்த சரணாகதி கத்யத்தில் 'அகிலஹேய ப்ரத்யநீக இத்யாதியான பெரிய சூர்ணையில், திவ்ய ரூபவர்ணனம், திவ்யகுண வர்ணனம், திவ்யபூஷண வர்ணனம், திவ்யாயுத வர்ணனம், திவ்ய மஹிஷீ வர்ணனம் முதலான பல வர்ணனங்கள் ஆச்சர்யமாக செய்யப் பட்டுள்ளன. அவற்றுள் திவ்யபூஷண வர்ணன பரமான 'ஸ்வோசித விவித விசித்ராநந்தேத்யாதி வாக்யத்தில் "கிரீட மகுட சூடாவதம்ஸ" என்றுள்ள ஸ்ரீஸூக்தியின் ஆழ்பொருளைப் பற்றிச் சிறிது விமர்சிப்போமிங்கு.

452. கிரீடமென்றும் மகுட மென்றும் சூடாவதம்ஸமென்றும் தனித்தனியாக மூன்று சொற்கள் இருந்தாலும் இவை மூன்றும் திருமுடியிலணியும் ஆபரணத் தையே சொல்லும். அந்த ஆபரணம் ஒரே விதமாக இருப்பதில்லை; திருவபிஷேக மென்றும், கொண்டையென்றும், தொப்பாரமென்றும் மூன்று விதமாக வழங்கி வருவதுண்டாதலால் அம்மூவகைத் திருவாபரணங்களுக்கும் வாசகமாக கிரீடமென்றும் மகுடமென்றும் சூடாவதம்ஸ மென்றும் மூன்று பதங்கள் இங்கு ப்ரயோகிக்கப்பட்டனவென்னலாம் முக்கியமாயும் உபதேச பரம்பராப்ராப்தமாயு முள்ள ரஸ்யரஹஸ்யார்த்த மொன்று இங்கு அறிய வேண்டியதுண்டு. நம்மாழ்வாருடைய திவ்ய ஸூக்தியொன்றைத் திருவுள்ளம் பற்றியே "கிரீட மகுடசூடாவதம்ஸ" என்று மூன்று சிரோபூஷணங்களைப் பேசியுள்ளார் எம்பெருமானார்.

453. அந்த திவ்ய ஸூக்தியெது வென்னில், திருவிருத்தத்தில் 'பாரளந்த பேரரசே! எம்விசும்பரசே! எம்மை நீத்து வஞ்சித்தவோரரசே!' என்றுள்ள பாசுரமாம். இதில், அரசே! அரசே! அரசே! என்று மூன்று விசை விளித்தருளுகிறார். பாரளந்த பேரரசே! என்பதனால், உலகளக்கிற வியாஜத்தினால் எல்லார் தலையிலும் திருவடியை வைக்கையாகிற ஸௌலப்யகுணம் அநுபவிக்கப்பட்டது. விசும்பரசே! என்பதனால்

நித்யஸூரி நாதத்வமாகிற பரத்வம் அநுபவிக்கப் பட்டது. எம்மை நீத்து வஞ்சித்த ஓரரசே! என்பதனால் தம்மோடு ஸம்ச்லேஷ விச்லேஷங்கள் பண்ணிப் போருகையாகிற ப்ரணயித்வகுணம் அநுபவிக்கப்பட்டது.

454. ஆக, ஸௌலப்யத்துக்காகக் கவித்த முடியும், பரத்வத்துக்காதக் கவித்த முடியும், ப்ரணயித்வத்துக்காகக் கவித்த முடியுமாக மூன்று முடிகள் நம்மாழ்வாரால் எம்பெருமானுக்குச் சூட்டப்பட்டனவாயின. இவ்விஷயம் ஆசார்யஹ்ருதயத்தில் ''பாரளந்த வென்னும் மூன்று முடிக்குரிய இளவரசுக்கு'' என்பதனால் காட்டப் பட்டுள்ளது. இங்ஙனே எம்பெருமானுக்கு மூன்று ஸாம்ராஜ்யாபிஷேகம் ஆழ்வார் திருவுள்ளத்தினால் நேர்ந்திருப்பதைத் திருவுள்ளம்பற்றியே ஸ்வாமி எம்பெருமானார் கிரீட, மகுட, சூடாவதம்ஸமென்கிற மூன்று சொற்களாலே மூன்று முடிகளை யருளிச் செய்தாரென்று திண்ணமாகக் கொள்ளக் கடவது.

455. இனி, இதில் ஒரு சிறிய கேள்வியுண்டாகும்; ப்ரணயித்வகுணமென்பது ஸௌலப்ய குணத்திலே அந்தர்ப்பவியாதோ? அதைத் தனிப்படச் சொல்லி அதற்காக வொரு திருவபிஷேகம் சூட்டினதாகச் சொல்ல வேணுமோ? என்று. இதற்குக் கேண்மின்;

456. அந்தரங்க பக்தர்களிடத்தில் அஸாதாரணமாகக் காட்டும் ப்ரணயித்வ குணத்தை ஸர்வ ஸாதாரணமான ஸௌலப்யகுணத்திலே அந்தர்ப்பவித்த தாகக் கொள்ளுவது பொருந்தாது. ஸ்ரீபாஷ்ய மங்கள ச்லோகமான 'அகிலபுவந ஜந்மேத்யாதியில் முதல் பாதத்தில் ஸ்தேமசப்தத்தினால் ரக்ஷணம் சொல்லப் பட்டிருக்கச் செய்தேயும் மீண்டும் இரண்டாவது பாதத்தில் 'விநதவிவிதபூத வ்ராத ரக்ஷை' சொல்லப்பட்டிருக்கின்றது. இது தனிப்படச் சொல்லவேணுமோ? முதல் பாதத்தில் சொன்ன ஸ்தேம சப்தார்த்தமான ரக்ஷணத்திலேயே இதுவும் அந்தர்ப்பவியாதோ? என்று கேட்டால் 'அது ஸாமாந்ய ரக்ஷணம் சொன்னபடி, இது விசேஷ ரக்ஷணம் சொல்லுகிற படி' என்று ஸமாதானம் சொல்ல ப்ராப்த மாகிறது.

457. புபுக்ஷுக்களின் ரக்ஷணம் வேறாய், முமுக்ஷுக்களின் ரக்ஷணம் வேறாயிரு யிருப்பது. அது போலவே 'உண்டியே உடையே உகந்தோடும் இம் மண்டலத்தாரிடத்தில் காட்டும் ஸௌலப்யமும் 'உண்ணுஞ்சோறு பருகு நீர்த் தின்னும் வெற்றிலையுமெல்லாங் கண்ணன் எம்பெருமானென்றேயிருக்கும் ஆழ்வார் போல்வார் பக்கலிலே காட்டும் ஸௌலப்யமும் நெடுவாசி பெற்றதாகையாலே ஒன்றாய் விடாது. அதற்கு ஸௌலப்யம் மென்று பெயர்; இதற்கு ப்ரணயித்வ மென்று பெயர். ஆகவே மூன்று திருக் குணங்களுக்கான ஸாம்ராஜ்ய அபிஷேகத்துக்காக மூன்று முடிகள் மிகப் பொருந்தும்.

458. ஆளவந்தார்க்குத் தனியனாக 'யத்பதாம் போருஹேத்யாதி ச்லோகம் ஸ்வாமியருளிச் செய்தது ஸுப்ரஸித்தம். இது கீதாபாஷ்யத்திலேயே சேர்ந்ததாதலால் ஸ்வாமி ஸூக்தி யென்பதில் விவாத லேசமுமில்லை. இந்த ச்லோகம் அமைந்திருக்குமழகை ஆராய்ந்தால் ஸ்வாமியின் உக்திஸரணி லோகவிலக்ஷண மான தென்பதை அல்ப ப்ரஜ்ஞர்களும் அறுதியிடக்கூடும். அந்த லோகத்திற்குப் பெரியார்கள் பரம்பரையாக உபதேசித்து வரும் அர்த்த விசேஷங்களை ஆஸ்திகர்களுக்கு உபகரிக்கிறோம்.

459. ''யத்பதாம் போருஹத்யாந வித்வஸ்தா சேஷகல்மஷ:, வஸ்துதாமுபயா தோஹம் யாமுநேயம் நமாமி தம்.'' என்பது அந்த ச்லோகம். இது ஆளவந்தாருடைய இரண்டு திருவடிகளை மாத்திரம் சிந்திப்பதாகச் சொல்லவந்ததன்று; 'யத்பதாம் போருஹ பதத்தினால் பதினான்கு திருவடிகள் உத்தேசிக்கப்படுகின்றன. (யத்பதாம்போருஹ) என்கிற ஆறு எழுத்துக்களுக்கு வர்ண க்ரமம் சொன்னால் பதினான்கெழுத்துக்கள் தேறும். யகார அகார, தகார, பகார, அகார, தகார, மகார, பகார, ஒகார, ரேப, உகார, ஹகார அகார = என்றாயிற்று வர்ணக்ரமம் சொல்லும் வழி. இவ்வகையில் தேறுகிற பதினான்கெழுத்துக்களும் பதினான்கு திருவடிகளைத் தெரிந்தேயிருக்கின்றன. அவ்வாளவந்தார் தமக்குப் பரமநிதியாகக் கொண்ட ('ஸ்ரீமத்ததங்க்ரி யுகளம் ப்ரணமாமி மூர்த்நா' என்ற) நம்மாழ்வாருடைய இரண்டு திருவடிகள்; ஆக நான்கு. அவ்வாளவந்தாருடைய திருவடிகளை ஆச்ரயித்திருந்து ஸ்வாமிக்கு ஆசார்யர்களான பஞ்சாசார்யர்களின் திருவடிகள் பத்து. ஆக இப்பதினான்கு திருவடிகளைச் சிந்தித்து ஸத்தை பெற்றதாகத் தெரிவிப்பது இந்த ச்லோகம். இதனை விவரித்துக் காட்டுகேன் காண்மின்.

460. யஸ்ய பதாம்போருஹே–யத்பதாம் போருஹே: என்று ஸமாஸம். (ஸம்பந்த ஸாமாந்யே ஷஷ்டீ என்று அறிக.) ஆளவந்தாருடைய திருமேனியிலுள்ள பாதாரவிந்தங்களைச் சொன்னபடி மறுபடியும் ''யஸ்ய பதாம் போருஹே, என்றால்– ஆளவந்தார்தாம் 'மாதா பிதா யுவதய:'' என்கிற ச்லோகத்தில் ''ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுளாபிராமம் ஸ்ரீமத் ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்தநா' என்று தம்முடைய சென்னிக்கு அணியாகப் பரிக்ரஹித்த நம்மாழ்வாருடைய உபயபாதங்களும் யத்பதாம் போருஹ சப்தத்தினாலேயே எளிதாகத் தெரிவிக்கப் படும். இப்போது ஷஷ்டிக்கு அர்த்தம்– பரிக்ராஹ்ய பரிக்ராஹக பாவரூபமான ஸம்பந்தம். மீண்டும் 'யஸ்ய பதாம் போருஹாணி' என்று கொள்க. உலகில் சிஷ்யர்களைத் திருவடிகளென்றே ஸம்ப்ரதாயஜ்ஞர்கள் வழங்குவராதலால் 'பதாம் போருஹ' என்பதில் இரண்டு பதங்கள் உள்ளனவன்றோ; (பத என்றும், அம்போருஹ என்றும்.) திருவடிக்கு வாசகமானது பத சப்தத்தினால் அவருடைய சிஷ்யர்களைச் சொல்லி, தாமரைக்கு வாசகமான அம்போருஹ சப்தத்தினால் அவர்களுடைய திருவடிகளைச் சொல்லுகிற தென்றும் கொள்ளலாம். அம்போருஹமென்றால் திருவடிகளைச் சொல்லுமோவென்னில்; 'தாவி வையங்கொண்ட தடந்தாமரைகட்கே 'மண்விண் முழுது மளந்த வொண்டாமரை' என்கிற ஆழ்வார் பிரயோகங்களை யறிந்தவர்கள் இதில் விப்ரதிபத்தி பண்ணமாட்டார்கள். ''தாவி வையங் கொண்ட தடந்தாளினை'' என்ன வேண்டுமிடத்தில் திருவடிக்குப் பர்யயாயமாகத் தாமரையையே சொல்லியிருப்பது காண்க. இந்த நடை வடமொழியிலுமுண்டு; அபஹ்நுதி யலங்கார மென்பார்கள். ரூபகாதிச யோக்தியுமாகும். ''பச்ய நீலோத்பலத்வந்த்வாத் நிஸ்ஸரத்தி சிதாச்சரா:'' இத்யாதி பரச்சதம் காண்க.

461. ஆக, பரமாசார்யரான நம்மாழ்வாரையும் ப்ராசார்யரான ஆளவந்தாரையும் ஸ்வாசார்யர்களான ஐவரையும் ப்ரகாசப்படுத்தியே தனியனிட்டிருக்கு மழகு ஸஹ்ருதய

ஹ்ருதயங்கமம். “குரும் ப்ரகாசயேத் சிஷ்ய:” என்னாமல் “குரும் ப்ரகாசயேத் தீமாந்” என்று மூலப்ரமாணத்தில் இருக்கையாலே மஹா மேதாவிகள் எவ்விதமாக ஆசார்ய ப்ரகாசநம் பண்ணலாமோ அவ்விதமாக ஸ்வாமி தாமும் தம்முடைய மேதா வைபவம் விளங்க இங்ஙனே ச்லோகரத்நம் தொடுத்திருப்பது மிகவற்புதம். மஹான்களுடைய திருநாவின் வீறு இங்ஙனே யன்றோ இருப்பது. இப்படி நுட்பமாகத் தெரிந்து கொள்ள வேண்டும்படி ஏதுக்கு ச்லோகமியற்ற வேணும்? எல்லாரும் ஸுஸ்பஷ்டமாகவே நன்கு தெரிந்து கொள்ளும்படி யியற்றலாகாதோ வென்று கேட்பவர்கள் யாவஜ்ஜீவம் அப்படியே கேட்டுக் கொண்டிருக்கலாம்.

462. “யத்பதாம் போருஹேத்யாதி யான மேற்குறித்த தனியனில் மற்றொரு விசேஷமும் நுட்பமாக உய்த்துணரத் தக்கதுண்டு; அதாவது–(பதாம்போருஹ) என்று ஐந்து எழுத்துக்களையிட்டு ஆளவந்தார் திருவடிகளை நிர்தேசித்திருப்ப தானது ஆளவந்தாருடைய ஐந்து திருவடிகள் (அதாவது, ஐந்து சிஷ்யர்கள்) தம்முடைய சிந்தனைக்கு இலக்கானவர்க ளென்றும் தெரிவிக்கப்பட்டதாகிறது. அது தன்னிலும் முதலிலே பகாரத்தையிட்டிருப்ப தானது அந்த ஐந்து ஆசிரியர்களுள் தலைமையாசிரியரே தமக்குத் தலைவரான ஆசார்யராக வாய்த்தார் என்பதற்கு ஸூசகமாகிறது.

463. எங்ஙனே யென்னில்; ஸ்வாமிக்குத் தலைமையாசிரியர் பெரிய நம்பி; அவருடைய நிஜநாமதேயம் பராங்குச தாஸர் என்பது. வாக்ய குருபரம்பரையில் “ஸ்ரீமதே ராமாநுஜாயநம:, ஸ்ரீமத்யாமுந முநயே நம:” என்ற வாக்கியங்களுக் கிடையில் “ஸ்ரீபராங்குச தாஸாய நம:” என்றிருப்பது கொண்டும் பெரிய நம்பியினுடைய திருநாமம் பராங்குசதாஸ ரென்பதே யென்றறியலாம். பதாம்போருஹ என்றதில் முதலலுள்ள பகாரம் பராங்குச தாஸராகிற தம் முதலாசிரியரை ப்ரத்யபிஜ்ஞாபநம் பண்ணவல்லது என்றுணர்க. இதற்குமேல் ஒன்று கேட்கக் கூடும்; முதலெழுத்தினால் பெரியநம்பி ஸூசிதராகிறாப்போலே, மற்றை நான்கு எழுத்துக்களினாலும் மற்ற நான்கு ஆசாரியர்கள் ஸூசிதர்களாகிறபடியையும் காட்ட வேண்டாவோ? என்று. கேண்மின்; தலைவரான ஆசிரியரைக் காட்டுமளவே போதுமானது. ஒவ்வோராசிரியரையும் இங்ஙனே காட்டியாக வேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை. மஹாவிவேகிகளான சதுரர்கள் இன்னமும் உட்புகுந்து ஆய்ந்து பார்த்தால் அந்த வழியும் புலப்படக் கூடும்.

464. ஆக இந்த உபபாதந ப்ரக்ரியை யினால் எம்பெருமானார் அரிய பெரிய விசேஷங்களை நுட்பமாகவே அருளிச் செய்யுமியல்வினர் என்பதை விவேகிகள் நிர்ணயிக்கக் குறையில்லை. திருமாலை யாண்டான் திருவடிகளிலே ஸ்வாமி திருவாய்மொழிப் பொருள் கேளாநிற்கை யில் “த்ரோணாசார்யர்க்கு ஏகலவ்யன் போலே ஆளவந்தார்க்கு நான்” என்றருளிச் செய்ததாக சரித்திர நூல்களிலே ப்ரஸித்தமாகவுள்ளது. இதை வேதாந்த வாசிரியர் அப்படியே ஸம்ஸ்க்ருதப்படுத்தி அருளிச் செய்கிறார்– “த்ரோணாசார்யஸ்ய ஏகலவ்ய இவ யாமுநாசார்யஸ்ய அஹமித்யபிப்ரா யேண” என்று யத்பதாம்போருஹ ச்லோக வியாக்கியானத்தில், ஆழ்வார் திருவடி களில் ப்ராவண்யமே வடிவெடுத்தவரான ஆளவந்தாருடைய திருவடிகளைச் சிந்தித்துத் தாம்

ஸத்தை பெற்றதாகச் சொல்லிக் கொள்ளுமெம்பெருமானார் ஆழ்வார் திருவடிகளிலும் அவருடைய திவ்ய ஸூக்திகளிலும் ஆளவந்தாரை விட அதிசயிதமான ப்ராவண்யமுடையவரே யென்பது சிலாலிகிதம்.

465. பகவத் கீதை பத்தாவது அத்யாயத் தில் ஒன்பதாவது ச்லோகம் (10.9) "மச்சித்தா மத்கதப்ராணா: போதாயந்த: பரஸ்பரம், கதயந்தச்ச மாம் நித்யம் துஷ்யந்தி ச ரமந்தி ச" என்பது. இந்த ச்லோகம் பாகவத சிகாமணிக ளின் அழகிய போது போக்கைப் பற்றிப் பகவான் (கீதாசார்யன்) பரமஸந்தோஷம் பொலியச் சொன்னது. பாகவதர்கள் இப்படி வர்த்திக்க வேணுமென்று சிக்ஷிக்கின்றதாகவும் அமைந்து உள்ளது இந்த ச்லோகம். இதை நெஞ்சில் ஆவ்ருத்தி பண்ணப் பண்ண விலக்ஷணமான வோர் ஆனந்தம் பக்தர்களுக்கு உண்டாகியே தீரும். கீதைக்குப் பல பாஷ்யங்கள் அவதரித்திருந்தாலும் நம் ஸ்வாமி எம்பெருமானாரருளிச் செய்திருக்கும் பாஷ்யத்தின் மாதுர்யமும் காம்பீர்யமும் ஒப்புயர்வற்றது. அதிகமான விரிவு இன்றிக்கே ஸம்க்ஷிப்தமாகவேயிருந்தாலும் அர்த்த புஷ்டி அந்யாத்ருச மென்பதை அநுபவரஸிகர்களே அறியமுடியும். அதற்கு முக்கியமான ஹேது ஸ்வாமிக்குண்டான திவ்யப்ரபந்தாவகாஹனமே யென்னத் தட்டில்லை. ப்ரக்ருத ச்லோகத்தின் முடிவில் "துஷ்யந்திச ரமந்திச" என்றுள்ளது. க்ரியாபதங்களிரண்டுக்கும் 'ஸந்தோஷிக்கிறார் கள்' என்பதொன்றே பொருளாகத் தேறுகின்றது. இந்த புநருக்தி எதற்காகவென்று ஆராயும்போது பாஷ்யங்களை யெடுத்துப் பார்க்க ஆவல் கிளர்கின்றது.

466. சங்கர பாஷ்யத்தைப் பார்த்தாலோ அதில், "துஷ்யந்தி – பரிதோஷமுபயாந்தி; ரமந்தி ச – ரதிம் ப்ராப்நுவந்தி, ப்ரியஸங்கத்யா இவ" என்றுள்ளது. பரிதோஷமாவது என்ன? ரதியாவது என்ன? என்பதை நுண்ணுணர்வினர் நுட்பமாக அறிவர் போலும். இனி மத்வ பாஷ்யத்தைப் பார்த்தாலோ, இங்கு 8,9,10,11, ஆகிய நான்கு ச்லோகங்களுக்கு பாஷ்யமே கிடையாது. "ஸந்தி ச பஜந்த: கேசிதித்யாஹ அஹமித்யாதிநா" என்று எட்டாவது ச்லோகத் திற்கு அவதாரிகையிட்டு, மேல் பதினோராவது ச்லோகம் வரையில் ஸ்பஷ்டார்த்தகமென்று முடித்திட்டார். அந்த பாஷ்யத்தின் ப்ரக்ரியை பெரும்பாலும் இத்தகையதே.

467. இனி நம் ஸ்வாமியின் பாஷ்ய ஸூக்திகள் காண்மின்:
"(துஷ்யந்தி ச ரமந்தி ச) வக்தார: தத் வசநேந அநந்யப்ரயோஜநேந துஷ்யந்தி. ச்ரோதாரச்ச தச்ச்ரவணேந அநவதிகாதிசய ப்ரியேண ரமந்தே" என்றுள்ளது. பகவத் கதைகளைச் சொல்லி மகிழ்வார் சிலர்; அவற்றைக் காதாரக் கேட்டு மகிழ்வார் சிலர். இவ்வகையான பேதத்தையிட்டு க்ரியாபத பேதம் செய்ததாக ஸ்வாமி திருவுள்ளம் பற்றுகிறார். மூலத்தில் "போதயந்த: பரஸ்பரம்" என்றிருப்பதனாலே வக்தாக்களும் ச்ரோதாக்களுமாக இரண்டு வகுப்பினர் அவசியம் தேறுகிறார்கள். அவ்விரு வகுப்பினரிடத்தும் அந்வயிக்குமாறு இரண்டு க்ரியாபதங்களை கீதாசார்யன் ப்ரயோகித்தி ருப்பதாக உரை செய்திருக்கிறார் ஸ்வாமி ராமாநுஜர். இதை தேசிகன் தாத்பர்ய சந்த்ரிகையில் விவரிக்கும் போது, இரண்டு க்ரியாபதங்கள் பொருந்துவதற்காக வ்யக்திபேதம் கொண்டால் ச்லோகத்தை அந்வயிக்க ச்ரமப்படுவார்களென்று கருதி "கதநச்ரவணயோரேகஸ்மிந்நேவ காலபேதேந ஸம்பாவிதத்வாத்" இத்யாதியால் ஒரே

அதிகாரி ஒரு ஸமயத்தில் ப்ரவசநம் செய்து ஸந்தோஷிப்பதும், அந்த அதிகாரியே மற்றொரு ஸமயத்தில் ச்ரவணம் பண்ணி ஸந்தோஷிப்பதும் உலகில் ஸம்பாவிதமேயென்று காட்டி அந்வய க்லேசத்தைத் தவிர்த்திருக்கிறார். உண்மையில் பாஷ்யகாரருக்கும் இதுவே திருவுள்ள மென்பது எளிதாக அறியக்கூடியதே. ஒரு வ்யக்திக்கே ஒருகால் வக்த்ருத்வமும் மற்றொருகால் ச்ரோத்ருத்வமும் ஸம்பாவிதமேயன்றோ. தாம் சொல்லுகிற காலத்திலே உண்டாகும் ஆனந்தம் ஒருவிதம்; தாம் கேட்குங் காலத்திலே உண்டாகும் ஆனந்தம் மற்றொருவிதம். இப்படி இரண்டு வகையான ஆநந்தத்தையும் காட்டுவதற்காகவே துஷ்யந்தி, பாஷ்யகாரர்க்கு ஸ்புரியாமல் நம் பாஷ்யகாரர்க்கு மாத்திரம் ஸ்புரித்ததற்குக் காரணம் திவ்யப்ரபந்தாவகாஹனமே.

468. எங்ஙனே யென்னில்; திருமழிசைப் பிரான் நான்முகன் திருவந்தாதியில் "தெரித்தெழுதி வாசித்துங் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன் போது" என்றருளிச் செய்துள்ளார். இதில், வக்த்ருத்வம் ச்ரோத்ருத்வமாகிய இரண்டும் ஆழ்வார் தமக்கே காலபேதேந இருப்பதாகக் காட்டப் பட்டிருக்கிறது. எப்படி யென்னில், 'தெரித்தெழுதி வாசித்துங் கேட்டும்' என்றவிதில் தெரிக்கை யாவது தெரிவிக்கை; அதாவது ப்ரவசநம் பண்ணுகை; அது ஒரு காலத்தில்; மற்றொரு காலத்தில் பிறர்சொல்ல ச்ரவணம் பண்ணுகையை (கேட்டும்) என்பதனால் தெரிவித்துள்ளார்.

469. ஒரு வ்யக்திக்கே வக்த்ருத்வமும் ச்ரோத்ருத்வமும் காலபேதேந ஸம்பவிக்கு மென்பதைத் தெரிந்து கொள்ள ஆழ்வார் பாசுரம் வேணுமோ? இது ஒவ்வொருவரும் ஸ்வத: தெரிந்து கொள்ளக் கூடியதன்றோ? என்று கேட்பீர்கள். இங்கு முக்கியமான விஷயம் என்னவென்றால், ஆழ்வார் அந்த பாசுரம் தொடங்கும் போதே "தரித்திருந்தேனாகவே" என்று தொடங்குகிறார்; தெரித்தும் கேட்டும் போதுபோக்குவது ஸ்வாத்மா தரிப்பதற்காகவே யென்றும், இல்லையாகில் ஸ்வாத்மதாரணம் துர்லபம் என்றும் காட்டினார். அதையே ஸ்வாமி ஸம்ஸ்க்ருதத்திலெழுதியுள்ளார் "மயா விநா ஆத்மதாரண மலபமாநா:" என்று. 'மத்கத ப்ராணா:' என்கிற மூலத்திற்கு "மயா விநா ஆத்மதாரண மலபமாநா:" என்று பொருளருளிச் செய்தது "தரித்திருந்தேனாகவே" என்கிற திருமழிசை யாழ்வார் பாசுரம் திருவுள்ளத்தில் ஊறிக் கிடந்ததனாலேயே என்பதில் ஐயமுண்டோ? சங்கராசார்யர்க்கு இப்பொருள் தோன்றவில்லையே; அவரெழுதியுள்ள பொருள் அருளிச் செயலமுதக் கடலிலூறின ஸ்வாமியின் திருவுள்ளத்திற்கு ருசிக்கவில்லையே.

470. சாரீரகமீமாம்ஸா – த்வீதியாத்யாய – த்விதீய பாதத்தில் ஸர்வதாநுபபத்தி யதிகரணத்தில் ஸர்வசூந்யவாதிகளான பௌத்த ஏகதேசிகனின் பக்ஷம் நிரஸிக்கப்படுகிறது. பரப்ரஹ்மமே ஜகத்காரண மென்று நன்கு நிலை நாட்டத் தோன்றிய இந்த அத்யாயத்தில் ஸர்வசூந்யத்வ வாதத்தை நிரஸிக்க என்ன ப்ரஸக்தியென்று சிலர் நினைக்கக் கூடும். ஜகத்காரண வஸ்து ப்ரதாநமா? பரமாணுவா? பரப்ரஹ்மமா? என்கிற விசாரம் எப்போது பொருந்துமென்னில்; உண்மையில் ஜகதுத்பத்தி யென்பதொன்று நிரூபிக்க முடியுமானால் அப்போது பொருந்தும். அடியோடு இல்லாதவொரு பிள்ளைக்கு மாதாபிதாக்களைப் பற்றி விசாரம் செய்வது உண்டோ? ஜகதுத்பத்தியே நிரூபிக்க

முடியாததா யிருக்க, எது ஜகத்காரணம்? என்கிற சர்ச்சை எதுக்கு? உத்பத்தியானது பாவத்திலிருந்து அங்கீகரிக்கப்படுகிறதா? அபாவத்திலிருந்து அங்கீகரிக்கப் படுகிறதா வென்று கேட்கிறோம். பாவத்திலிருந்து என்பது சேராது; மண்பிண்டத்திலிருந்து பானை முதலியன உண்டாகின்றன வென்றால் மண்பிண்டத்தை உபமர்த்தித்துக் கொண்டு தானே யுண்டாகின்றன. எந்தக் காரியப் பொருளும் காரணப் பொருளை உபமர்த்தியாமல் உண்டாவதில்லை யென்பதைக் காணா நின்றோம். காரணாகாரத்தின் விநாசந்தானே உபமர்த்தமாவது; அதுதான் அபாவமே. ஆக பாவத்தில் நின்றும் உத்பத்தியில்லை யென்று தேறிற்று. அபாவத்தில் நின்றுங் கூட உத்பத்தியில்லையென்பது அநாயாஸமாகத் தெரியவரும். அபாவத்திலிருந்து பாவோத்பத்தி ஸம்பவிக்கமாட்டாதன்றோ. ஆக உத்பத்தியே நிரூபிக்க முடியாதிருப்பதால் உத்பத்திக்குப் பிற்பட்டனவான விகாரங்கள் எதுவுமே கிடையாவென்பது ஸித்தம். லோகவ்யவஹார மெல்லாம் ப்ரம மூலகமே. (இது ஸர்வ சூந்யவாதிகளின் வாத ப்ரக்ரியை.)

471. இப்படி சூந்யமே தான் தத்துவம் என்பவர்கள் இங்கு நிரஸிக்கப் படுகிறார்கள். "ஸர்வாதாநுபபத்தேச்ச" என்பது ஸூத்ரம். ப்ரமேயங்களோ ப்ரமாணங்களோ எதுவும் உண்டாகிலுமாம், இல்லையாகிலுமாம், பூர்வபக்ஷிக்கு அபிமதமான சூந்யத்வம் ஒரு விதத்திலும் தேறாதாகையாலே மாத்யமிக தர்சநம் அஸமஞ்ஜஸ மென்றபடி. 'ஸர்வம் சூந்யம்' என்று சொல்லுபவர்கள் தங்களுக்கு அபிமதமான இவ்வர்த்தத்தை ஸாதித்துத் தரும்படியான ப்ரமாணமொன்று உண்டென்று இசையும் பக்ஷத்தில் ப்ரமாண ஸத்பாவத்தை யிசைந்தபோதே ஸர்வசூந்ய வாதம் தொலைந்தது. ப்ரமாணமில்லை யென்னும் பக்ஷத்தில், ப்ரமாணமில்லாமை யினாலேயே தங்களுக்கு அபிமதமான அர்த்தம் அஸித்தமென்று முடிந்தது. மேலும், 'ஸர்வம் சூந்யம்' என்கிறவிந்த வார்த்தை யினால் நாஸ்தித்வந்தானே விவக்ஷிதமாக வேணும். ஒரு ரூபத்தை விட்டு மற்றொரு ரூபத்தையடைவதே நாஸ்தி பதார்த்த மாகையாலே ரூபாந்தரத்தாலே அஸ்தித்வமே சொல்லப்பட்டதாக முடிகிறது. மண்ணுண்டையொன்று இருந்தது. பானை தோன்றும் போது அந்த ம்ருத்பிண்டம் நசிக்கிறது. அது நசித்தவளவிலே 'ம்ருத்பிண்டோ நாஸ்தி' என்று சொல்லுகிறான். இந்த வ்யவஹாரத்தில் பானையென்கிற அவஸ்தைதானே விஷயமாகிறது.

472. உலகில் அஸ்தி நாஸ்தித்வங் களை வழங்குகிறவர்கள். 'இப்போது மண்ணுண்டை யிருக்கிறது, இப்போது மண்ணுண்டையில்லை; இங்கு மண்ணுடை யிருக்கிறது, இங்கு மண்ணுண்டையில்லை' என்றிப்படி இடத்தையும் காலத்தையும் உட்படுத்தியே வ்யவஹரிக்கிறார் கள். தேச காலங்களைச் சேர்க்காமல் வெறுமனே 'மண்ணுண்டையில்லை' என்கிற ப்ரதீதியோ வ்யவஹாரமோ எங்கும் காண்பதில்லை. 'இப்போது ம்ருத்பிண்டமிருக்கிறது' என்றோ 'இங்கு ம்ருத்பிண்டமிருக்கிறது' என்றோ ஒருவன் வ்யவஹரித்தால் மண் என்னும் த்ரவ்யத்திற்கு பிண்டத்வாவஸ்தை விஷயம். 'இப்போது ம்ருத்பிண்டமில்லை' என்றோ 'இங்கு ம்ருத்பிண்டமில்லை' என்றோ வ்யவஹரித்தால் பிண்டத்வாவஸ்தையின் நாசமாகிய கடத்வ அவஸ்தை விஷயம். ஆக நாஸ்தித்வ வ்யவஹாரம் பண்ணினாலுங்கூட வேறொரு ஆகாரத்தாலே அஸ்தித்வமே தேறி

அதிகாரி ஒரு ஸமயத்தில் ப்ரவசநம் செய்து ஸந்தோஷிப்பதும், அந்த அதிகாரியே மற்றொரு ஸமயத்தில் ச்ரவணம் பண்ணி ஸந்தோஷிப்பதும் உலகில் ஸம்பாவிதமேயென்று காட்டி அந்வய க்லேசத்தைத் தவிர்த்திருக்கிறார். உண்மையில் பாஷ்யகாரருக்கும் இதுவே திருவுள்ள மென்பது எளிதாக அறியக்கூடியதே. ஒரு வ்யக்திக்கே ஒருகால் வக்த்ருத்வமும் மற்றொருகால் ச்ரோத்ருத்வமும் ஸம்பாவிதமேயன்றோ. தாம் சொல்லுகிற காலத்திலே உண்டாகும் ஆனந்தம் ஒருவிதம்; தாம் கேட்குங் காலத்திலே உண்டாகும் ஆனந்தம் மற்றொருவிதம். இப்படி இரண்டு வகையான ஆநந்தத்தையும் காட்டுவதற்காகவே துஷ்யந்தி, பாஷ்யகாரர்க்கு ஸ்புரியாமல் நம் பாஷ்யகாரர்க்கு மாத்திரம் ஸ்புரித்ததற்குக் காரணம் திவ்யப்ரபந்தாவகாஹனமே.

468. எங்ஙனே யென்னில்; திருமழிசைப் பிரான் நான்முகன் திருவந்தாதியில் "தெரித்தெழுதி வாசித்துங் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன் போது" என்றருளிச் செய்துள்ளார். இதில், வக்த்ருத்வம் ச்ரோத்ருத்வமாகிய இரண்டும் ஆழ்வார் தமக்கே காலபேதேந இருப்பதாகக் காட்டப் பட்டிருக்கிறது. எப்படி யென்னில், 'தெரித்தெழுதி வாசித்துங் கேட்டும்' என்றவிதில் தெரிக்கை யாவது தெரிவிக்கை; அதாவது ப்ரவசநம் பண்ணுகை; அது ஒரு காலத்தில்; மற்றொரு காலத்தில் பிறர்சொல்ல ச்ரவணம் பண்ணுகையை (கேட்டும்) என்பதனால் தெரிவித்துள்ளார்.

469. ஒரு வ்யக்திக்கே வக்த்ருத்வமும் ச்ரோத்ருத்வமும் காலபேதேந ஸம்பவிக்கு மென்பதைத் தெரிந்து கொள்ள ஆழ்வார் பாசுரம் வேணுமோ? இது ஒவ்வொருவரும் ஸ்வத: தெரிந்து கொள்ளக் கூடியதன்றோ? என்று கேட்பீர்கள். இங்கு முக்கியமான விஷயம் என்னவென்றால், ஆழ்வார் அந்த பாசுரம் தொடங்கும் போதே "தரித்திருந்தேனாகவே" என்று தொடங்குகிறார்; தெரித்தும் கேட்டும் போதுபோக்குவது ஸ்வாத்மா தரிப்பதற்காகவே யென்றும், இல்லையாகில் ஸ்வாத்மதாரணம் துர்லபம் என்றும் காட்டினார். அதையே ஸ்வாமி ஸம்ஸ்க்ருதத்திலெழுதியுள்ளார் "மயா விநா ஆத்மதாரண மலபமாநா:" என்று. 'மத்கத ப்ராணா:' என்கிற மூலத்திற்கு "மயா விநா ஆத்மதாரண மலபமாநா:" என்று பொருளருளிச் செய்தது "தரித்திருந்தேனாகவே" என்கிற திருமழிசை யாழ்வார் பாசுரம் திருவுள்ளத்தில் ஊறிக் கிடந்ததனாலேயே என்பதில் ஐயமுண்டோ? சங்கராசார்யர்க்கு இப்பொருள் தோன்றவில்லையே; அவரெழுதியுள்ள பொருள் அருளிச் செயலமுதக் கடலிலூறின ஸ்வாமியின் திருவுள்ளத்திற்கு ருசிக்கவில்லையே.

470. சாரீரகமீமாம்ஸா – த்வீதியாத்யாய – த்விதீய பாதத்தில் ஸர்வதாநுபபத்தி யதிகரணத்தில் ஸர்வசூந்யவாதிகளான பௌத்த ஏகதேசிகனின் பக்ஷம் நிரஸிக்கப்படுகிறது. பரப்ரஹ்மமே ஜகத்காரண மென்று நன்கு நிலை நாட்டத் தோன்றிய இந்த அத்யாயத்தில் ஸர்வசூந்யத்வ வாதத்தை நிரஸிக்க என்ன ப்ரஸக்தியென்று சிலர் நினைக்கக் கூடும். ஜகத்காரண வஸ்து ப்ரதாநமா? பரமாணுவா? பரப்ரஹ்மமா? என்கிற விசாரம் எப்போது பொருந்துமென்னில்; உண்மையில் ஜகதுத்பத்தி யென்பதொன்று நிரூபிக்க முடியுமானால் அப்போது பொருந்தும். அடியோடு இல்லாதவொரு பிள்ளைக்கு மாதாபிதாக்களைப் பற்றி விசாரம் செய்வது உண்டோ? ஜகதுத்பத்தியே நிரூபிக்க

முடியாததா யிருக்க, எது ஜகத்காரணம்? என்கிற சர்ச்சை எதுக்கு? உத்பத்தியானது பாவத்திலிருந்து அங்கீகரிக்கப்படுகிறதா? அபாவத்திலிருந்து அங்கீகரிக்கப் படுகிறதா வென்று கேட்கிறோம். பாவத்திலிருந்து என்பது சேராது; மண்பிண்டத்திலிருந்து பானை முதலியன உண்டாகின்றன வென்றால் மண்பிண்டத்தை உபமர்த்தித்துக் கொண்டு தானே யுண்டாகின்றன. எந்தக் காரியப் பொருளும் காரணப் பொருளை உபமர்த்தியாமல் உண்டாவதில்லை யென்பதைக் காணா நின்றோம். காரணாகாரத்தின் விநாசந்தானே உபமர்த்தமாவது; அதுதான் அபாவமே. ஆக பாவத்தில் நின்றும் உத்பத்தியில்லை யென்று தேறிற்று. அபாவத்தில் நின்றுங் கூட உத்பத்தியில்லையென்பது அநாயாஸமாகத் தெரியவரும். அபாவத்திலிருந்து பாவோத்பத்தி ஸம்பவிக்கமாட்டாதன்றோ. ஆக உத்பத்தியே நிரூபிக்க முடியாதிருப்பதால் உத்பத்திக்குப் பிற்பட்டனவான விகாரங்கள் எதுவுமே கிடையாவென்பது ஸித்தம். லோகவ்யவஹார மெல்லாம் ப்ரம மூலகமே. (இது ஸர்வ சூந்யவாதிகளின் வாத ப்ரக்ரியை.)

471. இப்படி சூந்யமே தான் தத்துவம் என்பவர்கள் இங்கு நிரஸிக்கப் படுகிறார்கள். "ஸர்வாதாநுபபத்தேச்ச" என்பது ஸூத்ரம். ப்ரமேயங்களோ ப்ரமாணங்களோ எதுவும் உண்டாகிலுமாம், இல்லையாகிலுமாம், பூர்வபக்ஷிக்கு அபிமதமான சூந்யத்வம் ஒரு விதத்திலும் தேறாதாகையாலே மாத்யமிக தர்சநம் அஸமஞ்ஜஸ மென்றபடி. 'ஸர்வம் சூந்யம்' என்று சொல்லுபவர்கள் தங்களுக்கு அபிமதமான இவ்வர்த்தத்தை ஸாதித்துத் தரும்படியான ப்ரமாணமொன்று உண்டென்று இசையும் பக்ஷத்தில் ப்ரமாண ஸத்பாவத்தை யிசைந்தபோதே ஸர்வசூந்ய வாதம் தொலைந்தது. ப்ரமாணமில்லை யென்னும் பக்ஷத்தில், ப்ரமாணமில்லாமை யினாலேயே தங்களுக்கு அபிமதமான அர்த்தம் அஸித்தமென்று முடிந்தது. மேலும், 'ஸர்வம் சூந்யம்' என்கிறவிந்த வார்த்தை யினால் நாஸ்தித்வந்தானே விவக்ஷிதமாக வேணும். ஒரு ரூபத்தை விட்டு மற்றொரு ரூபத்தையடைவதே நாஸ்தி பதார்த்த மாகையாலே ரூபாந்தரத்தாலே அஸ்தித்வமே சொல்லப்பட்டதாக முடிகிறது. மண்ணுண்டையொன்று இருந்தது. பானை தோன்றும் போது அந்த ம்ருத்பிண்டம் நசிக்கிறது. அது நசித்தவளவிலே 'ம்ருத்பிண்டோ நாஸ்தி' என்று சொல்லுகிறான். இந்த வ்யவஹாரத்தில் பானையென்கிற அவஸ்தைதானே விஷயமாகிறது.

472. உலகில் அஸ்தி நாஸ்தித்வங் களை வழங்குகிறவர்கள். 'இப்போது மண்ணுண்டை யிருக்கிறது, இப்போது மண்ணுண்டையில்லை; இங்கு மண்ணுடை யிருக்கிறது, இங்கு மண்ணுண்டையில்லை' என்றிப்படி இடத்தையும் காலத்தையும் உட்படுத்தியே வ்யவஹரிக்கிறார் கள். தேச காலங்களைச் சேர்க்காமல் வெறுமனே 'மண்ணுண்டையில்லை' என்கிற ப்ரதீதியோ வ்யவஹாரமோ எங்கும் காண்பதில்லை. 'இப்போது ம்ருத்பிண்டமிருக்கிறது' என்றோ 'இங்கு ம்ருத்பிண்டமிருக்கிறது' என்றோ ஒருவன் வ்யவஹரித்தால் மண் என்னும் த்ரவ்யத்திற்கு பிண்டத்வாவஸ்தை விஷயம். 'இப்போது ம்ருத்பிண்டமில்லை' என்றோ 'இங்கு ம்ருத்பிண்டமில்லை' என்றோ வ்யவஹரித்தால் பிண்டத்வாவஸ்தையின் நாசமாகிய கடத்வ அவஸ்தை விஷயம். ஆக நாஸ்தித்வ வ்யவஹாரம் பண்ணினாலுங்கூட வேறொரு ஆகாரத்தாலே அஸ்தித்வமே தேறி

நிற்கிறதென்பதை ஸர்வாநுபவ ஸாக்ஷிகமாகக் காணலாம். இன்ன வஸ்து இங்கில்லை என்றால் மற்றோரிடத்தி லுள்ளதாகத் தேறியே தீரும். இப்போதில்லையென்றாலும் மற்றொரு போதில் உண்டென்றதாகத் தேறியேவிடும். ஆகவே ஒருபடியாலும் ஸர்வசூந்யவாதம் ஸித்தியாது என்றதாயிற்று. ஸூத்ரத்தின் மேலே பொருள் காண்பது எங்ஙனே யென்னில்; ஸர்வதா – ஸர்வப்ரகாரத்தாலும், அநுபபத்தே:– ஸ்வாபிமதமான ஸர்வசூந்ய வாதம் உபபந்நமாகாமையினாலே என்றபடி. 'ஸர்வப்ரகாரத்தாலும்' என்றதை ஸ்ரீபாஷ்யத்தில் ஸ்வாமி விவரித்தருளும் போது 'ஸதிதி ப்ரதிஜ்ஞாயாம் அஸதிதி ப்ரதிஜ்ஞாயாம் ச' என்றருளிச் செய்கிறார். சங்கரபாஷ்யத்தில் இவ்விதமான வழியில் அர்த்தம் செய்யப்பட வில்லை. 'தேவதத்த: ஸர்வதா அயோக்ய: யஜ்ஞதத்த: ஸர்வதா மூர்க்க:' என்றால் இதற்கு எவ்விதமாகப் பொருள் கொள்ளுகிறோமோ அவ்விதமாகவே சங்கராசாரியார் பொருள் கொண்டார். நம் ஸ்வாமி கொண்ட பொருள் தான் உண்மையில் ஸமஞ்ஜஸமானது. ஸ்வாமிக்கு இப்பொருள் தோன்றினது எதனாலென்னில்; திருவாய்மொழியில் (1–1–9) 'உளன் எனிலுளன் அவனுருவ மிவ்வுருவுகள், உளனலனெனில் அவனருவமிவ்வருவுகள், உளனெனவிலனென விவைகுணம் உடைமையின், உளனிருதகைமையோடு ஒழிவிலன் பரந்தே' என்ற பாசுரங் கொண்டே இந்த ஸூத்ரத்தின் பொருளை ஸ்வாமி அறுதியிட்டருளினாரென்பது நிஸ்ஸந்தேஹம். அப்பாசுரத்தின் ஆறாயிரப்படியை ஸேவித்தால் இஃது எளிதிற் புலனாம். அப்பாட்டிற்குத் தமிழ் மொழியாலெழுதப்பட்டுள்ள பொருள்தான் ஸ்ரீபாஷ்யத்தில் வடமொழியாலெழுதப் பட்டுள்ளதென்பதை விசதமாக நிரூபித்துக் காட்டுகிறேன் காண்மின்;

திருவாய்மொழி ஸூக்தி: "உளனெனில் உளன்; அவனுருவம் இவ்வுருவுகள்"

ஸ்ரீபாஷ்ய ஸூக்தி: கிம் பவாந் ஸர்வம் ஸதிதி ப்ரதிஜாநீதே? (ததாஸதி) தவாபிப்ரேதம் துச்சத்வம் ந ஸம்பவதி.

திருவாய்மொழி ஸ்ரீஸூக்தி: உளனலனெனில் உளன்; அவனருவ மிவ்வருவுகள்; இருதகைமையோடு உளன்.

ஸ்ரீபாஷ்ய ஸூக்தி: கிம் பவாந் அஸதிதி ப்ரதிஜாநீதே (ததாபி) துச்சத்வம் ந ஸம்பவதி. சூந்யமிதி ப்ரதிஜாநதா ஸதிதி ப்ரதிஜாநதேவ ஸர்வஸ்ய வித்யமாநஸ்ய அவஸ்தாவிசேஷ யோகிதைவ ப்ரதிஜ்ஞாதா பவதீதி துச்சதா ந குதச்சிதபி ஸித்யதி.

473. நம்முடைய ஸம்ப்ரதாயமானது எம்பெருமானார் தர்சனமென்றும் ஸ்ரீராமாநுஜஸித்தாந்தமென்றும் வழங்கப் பட்டு வருகின்றது. 'ஸ்ரீராமாநுஜரால் புதிதாக ஏற்படுத்தப்பட்ட மதம்' என்று இதைக் கொண்டு சிலர் சொல்லுவர்கள். உண்மையில் அங்ஙனமன்று; ஸ்ரீபாஷ்யம் முதலிய க்ரந்தங்களை இயற்றி ஸ்ரீராமாநுஜரால் பரிபாலனம் செய்யப்பட்ட ஸித்தாந்தம் என்பதே இங்கு விவக்ஷிதம். இவ்வர்த்தத்தை மணவாளமாமுனிகள் உபதேசரத்தினமாலையில், "எம்பெருமானார் தரிசனமென்றே யிதற்கு, நம்பெருமாள் பேரிட்டு நாட்டி வைத்தார் அம்புவியோர் இந்தத் தரிசனத்தை எம்பெருமானார் வளர்த்த அந்தச் செயலறிகைக்கா." என்ற பாசுரத்தினால் வெளியிட்டருளினார்.

474. 'ஸ்ரீராமாநுஜமதம் நவீநம்' என்கிறவாதம் தேசிகனுடைய காலத்தி லேயே தோன்றியதாகத் தெரிகின்றது. யதிராஜ ஸப்ததியில் "யதிக்ஷ்மாப்ருத் த்ருஷ்டம் மதமிஹ நவீநம் ததபி கிம்?" என்கிற ச்லோகத்தில் அந்த வாதத்தை அநுவதித்து, பூர்வார்த்தத்தால் அதை அங்கீகரித்து ஸமாதானமும், உத்தரார்த்தத்தால் வஸ்துஸ்திதி ஸமாதான மும் அருளிச் செய்யப்பட்டிருக்கிறது.

475. காளிதாஸர் "புராணமித்யேவ ந ஸாது ஸர்வம் ந சாபி காவ்யம் நவமித்யவத்யம், ஸந்த: பரீக்ஷ்யாந்யதாத் பஜந்தே மூட: பரப்ரத்யயநேயபுத்தி:" என்று தமது நாடக மொன்றில் கூறியுள்ளார். ப்ராசீனமென்பது பற்றியே ஒன்றுக்கு ஏற்றமும் நவீனமென்பது பற்றியே ஒன்றுக்குத் தாழ்வும் சொல்லப்போகாது; குணபுஷ்கலமாக இராவிடில் ப்ராசீநமாயிருந்தாலும் ஹேயமாகும்; குண புஷ்கலமாகவுள்ளதாகில் நவீநமாயினும் உபாதேயமேயாகும். ஆகவே. குணம் உடைமை பரிக்ராஹ்யத்வத்திற்கு ஹேதுவாகவும், குணமின்மை பரித்யாஜ்யத்வத்திற்கு ஹேதுவாகவும் தோன்றுமேயல்லது, ப்ராசீநத்வ நவீநத்வங்களைக் கொண்டு பரிக்ராஹ்யத்வ பரித்யாஜ்யத்வங்களை வ்யவஸ்தை பண்ணுவது. புத்திமான்களின் பணியன்று என்பது மேற்குறித்த காளிதாஸ ச்லோகத்தின் தாற்பரியம். இந்த ரீதியைத் திருவுள்ளம் பற்றியே ஸ்வாமி தேசிகன் முந்துற ஒரு ஸமாதானமருளிச் செய்தார்.

476. மீமாம்ஸாபாதுகையிலும் "கிஞ்சித் கேநாபி த்ருஷ்டம்" என்கிற எட்டாவது ச்லோகத்தில் "ப்ரத்யேதவ்யம் ததர்த்த்யம் படுதரமதிபி: ப்ராக்தநம் நூதநம் வா" என்ற நான்காவது பாதத்தினால் இந்தத் திருவுள்ளத்தைக் காட்டியருளினார்.

477. யாதவாப்யுதய மஹாகாவ்யத்திலும் "ததாத்வே நூதநம் ஸர்வம் ஆயத்யாஞ்ச புராதநம், ந தோஷாயை தது‌பயம் ந குணாய ச கல்பதே" என்ற ச்லோகத் தினால் இத்திருவுள்ளமே பொலியும். நவீனமாகத் தான் இருக்கட்டுமே, இருந்தாலென்ன?' என்று அப்யுபகம்யவாத ப்ரணாளியிலே அருளிச் செய்து, உடனே "நிசாம்யந்தாம் யத்வா நிஜமதிதிரஸ்கார விகமாத் நிராதங்கா: டங்கத்ரமிடகுஹதேவ ப்ரப்ருதய:" (யதிராஜஸப்ததி–57) என்று வஸ்துஸ்திதி ஸமாதாநத்தையும் அருளிச் செய்தார். இந்த ஸ்ரீராமாநுஜமத்தை ப்ரவர்த்தநம் செய்தவர்கள் இதரமதப்ரவர்த்தகர்களிற் காட்டிலும் மிக முற்பட்டவர்கள் என்று இதனால் காட்டப் பட்டப் பட்டது.

478. ஸம்ப்ரதாய பரிசுத்தி என்கிற ரஹஸ்யத்தின் உபக்ரமத்திலும் "ஸர்வலோக ஹிதமான அத்யாத்மசாஸ்த்ர ஸம்ப்ரதாயத்திற்கு ப்ரதமப்ரவர்த்தகன் ஸர்வேச்வரன்; மற்றுள்ளாரெல்லாரும் அவன்தன்னாலே யாதல் சேதநாந்தர முகத்தாலேயாதல் மயர்வறமதிநலமருளப் பெற்று ப்ரவர்த்திப்பிக்கிறவர்கள். இந்த யுகாரம்பத்திலே ப்ரஹ்மநந்த்யாதிகளுக்குப் பின்பு நம்மாழ்வார் ப்ரவர்த்தகரானார்" என்று ஸ்வாமி அருளிச் செய்தவை இங்கு ஸ்மரிக்கத்தக்கன.

479. எம்பெருமானார் தாமும் ஸ்ரீபாஷ்யத்தின் உபக்ரமத்திலே, "பகவத் போதாயந க்ருதாம் விஸ்தீர்ணாம் பூர்வாசார்யா: ஸஞ்சிசிக்ஷிபு: தந்மதாநுஸாரேண ஸூத்ராக்ஷராணி வ்யாக்யாஸ்யந்தே" (போதாயநமஹரிஷி யினால் செய்யப்பட்ட விரிவான ப்ரஹ்ம

ஸூத்ரவ்ருத்தி க்ரந்தத்தைப் பூருவர்கள் சுருக்கியருளி னார்கள், அவர்களது கொள்கையைப் பின்பற்றி ப்ரஹ்மஸூத்ர வியாக்கியானம் செய்யப்புகுவோம்) என்று ஸ்பஷ்டமாக அருளிச் செய்திருக்கையாலும் இது அநாதிமதமேயன்றி நவீநமதமன்று என்பது தெற்றென விளங்கும்.

480. ஸ்ரீராமாநுஜபாஷ்யத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த மேற்றிசையாரும் ஸ்ரீராமாநுஜருடைய கொள்கையே மிகவும் ஏற்புடையது என்பதை நிரூபித்துள்ளாரென்று கேள்விப்படுகிறோம். அத்வைதம் த்வைதம் என்கிற மதம் இரண்டு தரிசனங்களிற் காட்டிலும் நமது விசிஷ்டாத்வைத தர்சனத்தின் வைலக்ஷண்யத்தை அறிந்து கொண்டால் இதுவே புராதனமாக இருக்கக்கூடியதென்றும் இதுவே உலக அநுபவத்திற்கு இணங்கியதென்றும் யாவருமிசையத்தக்கதாகும்.

481. உபநிஷத்துக்களில் சில வாக்கியங்கள் ஒரு தத்துவமே உள்ளதாக வும் பல தத்துவங்கள் கிடையாதென்பதா கவும் ஸ்பஷ்டமாகச் சொல்லப்படுகிறது. "ஏகமேவ அத்விதீயம்" "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம" "ஐததாத்ம்யமிதம் ஸர்வம்" என்றிவை முதலான வாக்கியங்களினால் ஒரே தத்துவமுள்ளதாகக் காட்டப்படுகிறது. இப்படிப்பட்ட வாக்கியங்களுள்ள உபநிஷத்துக்களிலேயே பல தத்துவங்கள் உண்டென்பதைக் காட்டுகின்ற வாக்கியங் களும் ஓதப்பட்டிருக்கின்றன. "க்ஷரம் ப்ரதாநம் அம்ருதாக்ஷரம் ஹர:" "த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா" என்றிவை முதலான வாக்கியங்களால், சித்து அசித்து ஈச்வரன் என்கிற மூன்று தத்துவங்கள் தனித்தனியே உள்ளனவாக ஸ்பஷ்டமாய்த் தெரிவிக்கப்படுகிறது.

இவை ஒன்றோடொன்று முரண் படுகிற வார்த்தைகளை இருக்கின்றன. ஒன்றுதான் தத்துவம் என்று சொல்லி விட்டால் பல தத்துவங்களுள்ளனவாகச் சொல்வது கூடாது. பல தத்துவங்கள் உண்டென்றால் ஒன்றே தத்துவமென்பது பொருந்தாது. யதார்த்தவாதிகளான உபநிஷத்துக்கள் அஸங்கதமாகச் சொல்ல மாட்டாதாகையால் முரண்பாடு சிறிதும் இன்றியே ஸங்கதமாகப் பொருந்தவிடுகிற வழி என்ன? என்பது ஆராயப்பட வேண்டும். ஒரு தத்துவமே உள்ளதென்று ஓதுகின்ற உபநிஷத்வாக்யங்கள் அத்வைதச்ருதி (அல்லது) அபேதச்ருதி என்று வழங்கப்படும். பல தத்துவங்களுண்டென்று ஓதுகின்ற உபநிஷத் வாக்கியங்கள் த்வைதச்ருதி (அல்லது) பேதச்ருதி என்று வழங்கப்படும்.

482. ஸ்ரீசங்கராசாரிய ஸ்வாமிகள் மேற்குறித்த அத்வைதச்ருதிகளை முக்கியமாகக் கொண்டு ஒன்றேதான் தத்துவமென்று நிர்வஹித்தார்கள். த்வைத்ச்ருதிகளான பேதச்ருதிகளை ஔபசாரிகமாக நிர்வஹிக்கலாமென்றும் கருதினார்கள். சேதனப் பொருள்களும் அசேதனப்பொருள்களும் உள்ளனவாகத் தோற்றுவது மாயையின் தோற்றமேயாதால் அப்படிப்பட்ட தோற்றத்தை நோக்காகக் கொண்டு பேதச்ருதிகளை நிர்வஹித்து விடலாமென்பது இவர்களின் கருத்து. ஆகவே, த்வைதச்ருதிகளைத் தள்ளி அத்வைச்ருதிகளையே முக்கியமாகக் கொண்டபடியால் இவர்கள் அத்வைதிகள் என்று வழங்கப்படுகிறார்கள்.

483. ஸ்ரீமத் ஆநந்ததீர்த்த ஸ்வாமிகள் த்வைதச்ருதிகளான பேதச்ருதிகளை முக்கியமாகக் கொண்டு அத்வைத ச்ருதிகளை ஔபசாரிகமாக நிர்வஹிக்கலா மென்று கருதுகின்றார்களாதலால் அவர்கள் (மத்வாசார்ய ஸம்ப்ரதாயஸ்தர்) த்வைதிகள் என்று வழங்கப்படுகின்றார்கள்.

484. ஆக மேற்கூறிய இரண்டு ஸம்ப்ரதாயங்களிலும் ஒருவகையான ச்ருதிவாக்யங்கள். ஒதுக்கப்பட்டு ஒருவகையானச்ருதிவாக்யங்களே முக்கியமாகக் கொள்ளப்படுகின்றன என்பது தேறுகின்றது. சித்து அசித்து ஈச்வரன் என மூன்று தத்வங்கள் ஸத்யமாக வுள்ளன என்கிற அர்த்தம் ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகளுக்கும் அவர்களைச் சார்ந்தவர்கட்கும் உடன்பாடன்று.

485. உபநிஷத் வாக்கியங்கள் எல்லாவற்றையுமே ஸமாஸப்படுத்தி ஒன்றையும் ஒதுக்காமல் மிகவும் பொருத்தமாகவே நிர்வஹித்தருளினர் ஸ்ரீவைஷ்ணவாசார்யர்கள். எங்ஙனே யென்னில்; உலகத்தில் ஒரு வஸ்துவைப் பலவென்றும் ஒன்றே யென்றும் சொல்லுவற்குப் பொருத்தமுண்டு. உதாரஹரணமாக ஒரு கடியாரத்தை எடுத்துக் கொள்வோம்; அஃது ஒன்றா? பலவா? என்று கேட்டால் ஒன்று என்றே சொல்வோம். ஆனால் அதை நாம் ஊன்றிப் பார்க்குங்கால் அதில் பலபல வஸ்துக்கள் அவயவங்களாகச் சேர்ந்திருப்பது புலப்படாமற் போகாது. பல அவயவங்க ளோடு கூடிய அவயவியான வஸ்து ஒன்றே என்று ஏற்படுமே யல்லது வேறுவிதமாக ஏற்படாது. இங்ஙனமே பல பல வஸ்துக்க ளையும் நாம் உதாஹரணமாகக் கொண்டு பார்க்கலாம். படுக்கை, தலையணை, வண்டி, வீடு முதலான ஒவ்வொரு வஸ்துவும் ஒரு விதத்தில் ஒரே வஸ்துவாகவும் மற்றொருவிதத்தில் பல வஸ்துக்களாகவும் கொள்ளப்படுவது அநுபவஸித்தம்.

486. நம்மையே எடுத்துக் கொள்வோம்; ராமாநுஜன் என்பவன் ஒருவன் என்று சொல்லுகிறோம். பல உறுப்புகளோடு கூடின ஆத்மாவாகிய அந்த வ்யக்தி ஒருவன் என்றதாகுமேயன்றி, அவனிடத்தில் பல வஸ்துக்கள் இல்லை யென்றதாக ஸித்திக்க மாட்டாதன்றோ? ராமாநுஜன் சிவப்பாயிருக்கிறான் என்று சொல்லும்போது அவனுடைய தேஹம் அர்த்தமாகிறது. ராமாநுஜன் மேதாவி என்று சொல்லும்போது ஆத்மா அர்த்தமாகிறது. ஏன்? சிவப்புநிறம் தேஹத்திற்கு ஏற்குமே யல்லது ஆத்மாவுக்கு ஏலாது. மேதாவித்வம் ஆத்மாவுக்கு ஏற்குமேயல்லது தேஹத்திற்கு ஏலாது. ஆகவே ஒரே பதம் சில ஸமயங்களில் ஆத்மாவைக் குறிப்பதாயும் சில ஸமயங்களில் உறுப்பைக் குறிப்பதாயும் தேறுகின்றதென்பது மறைக்க முடியாது.

487. இனி, முதற்காட்டிய பேதச்ருதி களையும் அபேதச்ருதிகளையும் எடுத்துக் கொள்வோம். சித்து அசித்து ஈச்வரன் என மூன்று தத்துவங்களுள்ளனவாகச் சொல்லுகிற வாக்கியங்கள் வாஸ்தவமாக அப்படிப்பட்ட மூன்று பொருள்கள் இருப்பதைச் சொல்லுகின்றனவாதலால் பொருந்தும். ஒன்றே என்று சொல்லுகிற வாக்கியங்கள் சேதநாசேதனப் பொருள்களைச் சரீரமாகக் கொண்ட பரம்பொருள் ஒன்றே என்கிற உண்மையைக் காட்டுகின்றனவாதலால் இவையும் பொருந்தும். இப்படி ஸமந்வயப்படுத்திக் காட்டுவதே நம் ஸித்தாந்தத்தின் முழு முதற்கொள்கை. இதை நம்மாழ்வார்

திருவாய்மொழியில் முதற்பதிகத்தில் "உடன்மிசை உயிரென" என்ற அருமருந்தன்ன ஸ்ரீஸூக்தியினால் காட்டியருளினார். அதை நிதியாகக் கொண்டே ஆளவந்தார் எம்பெருமானார் முதலிய ஆசார்ய சிகாமணிகள் உபபாதநம் செய்தருளினார்கள்.

488. எம்பெருமானாரைப் பற்றின ஒரு ச்லோகம் ஈடுமுப்பத்தாறாயிரப்படி அளைய வளைந்தான் அரும்பத உரை முதலான கிரந்தங்களில் காணப்படுகிறது. அதாவது,

புரா ஸூத்ரைர் வ்யாஸ: ச்ருதிசதசிரோர்த்தம் க்ரதிதவாந்
விவவ்ரே தத் ச்ராவ்யம் வகுளதராமேத்ய ஸ புந:
உபாவேதௌ க்ரந்தௌ கடயிதுமலம் யுக்திபிரஸௌ
புநர்ஜஜ்ஞே ராமாவரஜ இதி ஸ ப்ரஹ்மமுகுர:

489. இந்த ச்லோகத்தின் கருத்து – உபநிஷத்துக்களின் பொருள்களை முதன் முதலாக வ்யாஸபகவான் சாரீரகமீமாம்ஸை எனும் ப்ரஹ்ம ஸூத்ரத்தினால் தொகுத்தார். அந்த வ்யாஸர் தாமே மீண்டும் வகுளாபரணப் பெருமாளாக (நம்மாழ்வார் ஆக) வடிவெடுத்து செவிக்கினிய செஞ்சொற்களாலே அந்த ப்ரஹ்ம ஸூத்ரத்தை விவரித்தார். இவ்வுபய திவ்யக்ரந்தங்களையும் பொருத்தமாக ஸமந்வயப்படுத்தி நிர்வஹிக்க அவரே மீண்டும் ஸ்வாமி எம்பெருமானாராகத் திருவவதரித்தார் என்பதாம்.

490. இந்த ச்லோகம் எம்பார் அருளிச் செய்ததாகவும் முதலியாண்டான் அருளிச் செய்ததாகவும் சொல்லப்பட்டு வருகிறது. ச்லோகமோ கம்பீரமானது. விஷயமோ யதார்த்தமானது. இதுகொண்டே ஆசார்ய ஹ்ருதயத்தில் "பாஷ்யகாரர் இதுகொண்டு ஸூத்ரவாக்யங்கள் ஒருங்க விடுவர்" என்று அருளிச்செய்யப்பட்டது.

491. ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் ஜநிக்கப்பெற்றவர்கள் ஸ்ரீமதுபயவே. என்கிற விருதை வஹிப்பது மாத்திரம் போராது. உபய வேதாந்தங்களையும் ஸமரூபமாகப் பரிசீலனை செய்து உபயவேதாந்த திவ்யார்த்தங்களையும் தாமநுபவித்துப் பிறரையும் அனுபவிக்கச் செய்ய வேணும்.

492. எம்பார் அருளிச்செய்த ச்லோகம் ஒன்று:

வேதோத்தம்ஸகுஹாவிஹாரபடுநா ஸ்ரீசைலச்ருங்கோல்லஸந்
மாயா கேஸரி மாநிதேந கஹநந்யாயாடவீசாரிணா
கம்பீரேண பராத்மபேதேந மஹாநாதேந நாதேந மே
குப்தோஹம் யதிஸார்வபௌமஹரிணா வர்த்ததே ப்ருசம் நிர்ப்பய:

493. இந்த ச்லோகம் வெகு அற்புதமாக அமைந்திருக்கிறது. இதனைச் சிறிது விவரிக்கிறோம். இராமானுச நூற்றந்தாதியில் "கலிமிக்க செந்நெல் கழனிக் குறையல் கலைப்பெருமான் ஒலி மிக்க பாடலையுண்டு தன்னுள்ளம் தடித்து அதனால் வலிமிக்க சீயம் இராமானுசன்" என்று எம்பெருமனார் சீரிய சிங்கமாக அருளிச் செய்யப்பட்டுள்ளார். அதனை அடியொற்றி இந்த ச்லோகத்திலும் ஸ்வாமி ஸிம்ஹமாக ரூபிக்கப்படுகிறார். ஸிம்ஹத்தோடே ஸ்வாமிக்கு ஸாம்யம் ஐந்து விசேஷணங்களினால் அற்புதமாக நிர்வஹிக்கப் படுகிறது. விவரணம் கேளீர்:

494. (வேதோத்தம்ஸ குஹா விஹார படுநா) "மலை முழஞ்சில் மன்னிக் கிடந்து உறங்கும் சீரிய சிங்கம்" என்கிற திருப்பாவையின்படியே சிங்கம் பர்வத குஹைகளில் விஹரிக்கும். ஸ்ரீராமானுஜ ஸிம்ஹமோ என்னில், வேதங்களாகிற பர்வதங்களின் உபநிஷத் பாகமாகிற குஹைகளில் விஹரிக்கும்.

495. தைத்திரீய யஜுர்ப்ராஹ்மண–காடகத்தில் "பரத்வாஜோ ஹ த்ரிபிராயுர்ப்பிர் ப்ரஹ்மசர்யமுவாஸ" என்று தொடங்கியுள்ள உபாக்யானத்தில் தேவேந்த்ரன் பரத்வாஜமுனிவர்க்கு வேதங்களை மலைகளாகக் காட்டினான் என்று ஓதியிருக்கையாலே வேதம் மலையாகக் குறையில்லை. "தர்மஸ்ய தத்த்வம் நிஹிதம் குஹாயாம்" என்ற மஹா பாரத ச்லோகத்தின்படி தருமநுட்பம் பொதிந்திருக்குமிடம் குஹையாகக் கருப் படுகையாலே உபநிஷத்பாகங்களை குஹையாகக் கூறினது பொருத்தம். அதிலே விஹாரம் செய்கிறார் ஸ்வாமி என்றது "க்ரீடார்த்தமபி யத் ப்ரூயுஸ் ஸ தர்ம: பரமோ மத:" என்றும் "சொல்லுமவிடு சுருதியாம்" என்றும் சொல்லுகிறபடியே விளையாட்டாகச் சொல்லும் வார்த்தையும் சிறப்புற்றிருக்கும் என்றவாறு.

496. (ஸ்ரீசைல ச்ருங்கோல்லஸந் மாயா கேஸரி மாநிதேந) ஸிம்ஹத்தைக் கொண்டாடவல்லது ஸிம்ஹமேயாகும். அப்படியே இந்த ராமாநுஜஸிம்ஹத்தைக் கொண்டாடவல்ல ஸிம்ஹம் திருவேங்கடமுடையானாகிற ஸிம்ஹமேயாகும். திருமங்கையாழ்வார் "தூணாயதனூடு அரியாய் வந்து தோன்றிப் பேணா அவுணனுடலம் பிளந்திட்டாய், சேணார் திருவேங்கடமாமலை மேய கோணாகணையாய்" என்ற பாசுரத்தினால் திருவேங்கட முடையானை ஸிம்ஹமாக அனுபவித்திருப்பது காண்க. அந்த ஸிம்ஹம் இந்த ஸிம்ஹத்தை பஹுமாநித்த விஷயம் வேங்கடாசல இதிஹாஸ மாலையில் பரக்கக் காணத் தக்கது.

497. (கஹந ந்யாயாடவீ சாரிணா) ஸிம்ஹம் பெருங்காட்டில் ஸஞ்சரிக்குமே யொழிய நாட்டில் காணக் கிடைக்காது. இந்த யதிராஜஸிம்ஹமோ என்னில் சாஸ்த்ரீய ந்யாயங்களாகிற அடவிகளிலே ஸஞ்சரிக்குமது.

498. (கம்பீரேண) சிங்கத்தின் தோற்றம் அதி கம்பீரமென்னுமிடம் சொல்ல வேண்டா. ஸ்வாமியினுடைய காம்பீர்யம் ஸ்ரீஸூக்திகளிலும் திருவுருவத்திலுமாகும்.

499. (பரமாத்ம பேதநமஹா நாதேந) இந்த விசேஷணத்தில் சிலேடை அமைந்துள்ளது. ஸிம்ஹபக்ஷத்தில் "பரேஷாம் ஆத்மா தம் பிநத்தீதி பரமாத்ம பேதந:, ததாவித: மஹாநாதோ யஸ்ய" என்கிற வ்யுத்பத்தி கொள்ளத் தக்கது. ஸிம்ஹத்தின் பெருமுழக்கம் இதர ஜந்துக்களின் உயிரை மாய்க்க வல்லது என்கை. இனி யதிராஜ ஸிம்ஹபக்ஷத்திலோ என்னில், "பரச்ச ஆத்மாநச்ச பராத்மாந: தாந் பிநத்தீதி பராத்ம பேதந:, ததாவிதோ மஹாநாதோ யஸ்ய" என்று வ்யுத்பத்தி கொள்ளக் கடவது. பரமபுருஷனுக்கும், ஜீவாத்மாவுக்கும் ஐக்யம் சொல்லுகிற விமத வாதிகளைக் கண்டித்து ஜீவபர பேதத்தை ஸாதிக்கவல்ல திருமிடற்றோசையை உடையவரன்றோ பகவத் ராமாநுஜர்.

500. நூற்றந்தாதியில் "உயிர்கள் மெய் விட்டாதிப்பரனோடு ஒன்றாம் என்று சொல்லும் அவ்வல்லலெல்லாம் வாதில் வென்றான் எம் இராமானுசன் மெய்ம்மதிக் கடலே

என்றருளியது இங்கு நோக்கத் தக்கது. ஆக, இத்தகைய பொருத்தங்களினால்ஸிம்ஹமென் று போற்றத் தக்க எம்பெருமானாருடைய அபிமானத்திலே ஒதுங்கிக் கிடக்கிற நாம் நிர்ப்பயமான வாழ்ச்சியை உடையோம் என்றதாயிற்று.

501. எம்பெருமானார் நிலைநாட்டி யருளிய விசிஷ்டாத்வைத் ஸித்தாந்தத்தின் ஸாரம் கேண்மின். 'வணங்கும் துறைகள் பலபல ஆக்கி மதி விகற்பால் பிணங்கும் சமயம் பலபல ஆக்கி' என்று நம்மாழ்வார் அருளிச் செய்தபடியே உலகில் பலபல மதங்கள் தோன்றியிருந்தாலும், அவை வைதிக மதமென்றும், அவைதிக மதமென்றும் பொதுவாக இருவகுப்பாகும். வேதத்தைப் பிரமாணமாகக் கொள்ளும் மதம் வைதிக மதம். வேதத்தைப் புறக்கணித்து ஸ்வதந்த்ரமாகத் தோன்றிய மதம் அவைதிக மதம். அவைதிக மதங்களிற் காட்டில் வைதிகமதம் சிறந்தது என்னு மிடத்தை நாம் விவரிக்கவேணுமோ?

502. வைதிக மதங்களுள் பரம பவித்திரமான விசிஷ்டாத்வைத தரிசனம் மிகச் சிறந்து விளங்குகின்றது. திருவாய்மொழி தொடங்கும்போதே "உளன் சுடர் மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே" என்கிற பாசுரத்தினால் தாம் போதிக்கும் பரமபுருஷன் வேதங்களிலும் வேதாந்தங்க ளிலும் விளங்குபவன் என்றருளிச் செய்கையாலே கலியுகத்தில் அவ்வாழ்வார் தொடக்கமாகப் பரவியுள்ள விசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயம் பரம வைதிகம் என்னத் தட்டில்லை. ப்ரமாணம், ப்ரமாதா, ப்ரமேயம் என்ற மூன்று வகுப்புகளும் நம் தர்சனத்தில் சீர்மை பெற்று விளங்குவன.

503. "ஆழ்வார்கள் வாழி அருளிச் செயல் வாழி தாழ்வாதுமில் குரவர்தாம் வாழி ஏழ்பாருமுய்ய அவர்களுரைத்தவை கள் தாம் வாழி செய்யமறை தன்னுடனே சேர்ந்து" என்னும் உபதேசரத்தினமாலைப் பாசுரத்தில் ப்ரமாணங்களும், ப்ரமாதாக்க ளும், ஸாரமாகத் தெரிவிக்கப்பட்டார்கள். ஸம்ஸ்க்ருதத்ராவிட வேதங்களாகிற உபய வேதங்களும், ஸ்ரீபாஷ்யபகவத்விஷயாதிக ளும் நமக்கு ப்ரமாணம். யதார்த்தஜ்ஞான நிதிகளான ஸ்ரீமந்நாதமுனிகள், ஆளவந்தார், எம்பெருமானார் போல்வாரான மஹாசார்யர் களே ப்ரமாதாக்களில் தலை சிறந்து விளங்குவர். ஸகல சேதநாசேதநசரீரகனாய், ஸமஸ்த கல்யாண குணாத்மகனான ஸ்ரீமந் நாராயணனே பரதத்வம் என்றும், அவனுடைய திருவடித்தாமரைகளில் பண்ணும் ப்ரபத்தியே பரமஹிதமென்றும், நலமந்தமில்லதோர் நாட்டிலே நித்யாநந்த மயமான நித்யகைங்கர்யமே பரம புருஷார்த்தமென்றும், இங்ஙனே கூறப்படும் அர்த்தவிசேஷங்களே ப்ரமேயச்ரேஷ்டங்க ளாக விளங்குகின்றன. ஆக இத்தகைய ப்ரமாண ப்ரமாத்ரு ப்ரமேய வைசிஷ்ட்யமே நம்முடைய தர்சனத்தின் சிறப்புக்கு ஹேதுவாகா நின்றது.

504. பரமவைதிகர்கள் என்ற ஏற்றம் நமக்கே உரியது. ப்ரத்யக்ஷத்தாலோ அநுமாநத்தாலோ அறிந்துகொள்ளமுடியாத அர்த்த விசேஷங்களை அறிவிக்கும் வாங்மயமே வேதமெனப்படும். "ப்ரத்யக்ஷேணாநுமித்யா வா யஸ்தூபாயோ ந புத்த்யதே, யத் தம் விதந்தி வேதேந தஸ்மாத் வேதஸ்ய வேதநா" என்கிற ப்ரமாணம் இங்கே அநுஸந்தேயம்.

505. வேதத்தை ப்ரமாணமாக இசையாத சார்வாக ஜைந பௌத்தாதிகள் பாஹ்யர்கள் எனப்படுவர். வேதத்தை ப்ரமாணமாக இசைந்து வைத்தும் பரப்ரஹ்மம் குணசூந்யமென்றும், அலக்ஷ்மீகமென்றும், அசரீரமென்றும், விபூதி ரஹிதமென்றும் இங்ஙனே மனம் போனபடியெல்லாம் பேசுபவர்கள் குத்ருஷ்டிகள் எனப்படுவர். குத்ருஷ்டிகளா னாலும் வேதத்தை ப்ரமாணமாக இசையுமவர்கள் வேதபாஹ்யர் களைக் காட்டிலும் மேம்பட்டவர்களே யன்றோ என்று சிலர் நினைக்கக் கூடும். பாஹ்யர்களோடு குத்ருஷ்டிகளோடு ஒரு வாசியில்லை என்றருளிச் செய்கிறார் கூரத்தாழ்வான்.

506. (ஸ்ரீவைகுண்டஸ்தவே)"பாஹ்யா: குத்ருஷ்டய இதி த்விதயேபி அபாரம் கோரம் தமஸ் ஸமுபயாந்தி நஹீக்ஷஸே தாந், ஜக்தஸ்ய காநநம்ருகைர் ம்ருகத்ருஷ்ணி– கேப்ஸோ: காஸார ஸத்வநிஹதஸ்ய ச கோ விசேஷ:" என்கிற ச்லோகம் இங்குக் காணத் தக்கது. வேதபாஹ்யர்களும், வேத குத்ருஷ்டிகளும் துல்யயோக க்ஷேமகர்கள் என்பதற்கு ஒரு அற்புதமான த்ருஷ்டாந்தம் காட்டுகிறாரிதில். விடாய் மிகுத்துத் தண்ணீரைத் தேடியோட இரண்டு மிருகங்கள் புறப்பட்டன. அவற்றில் ஒரு மிருகமானது தடாகத்திற் புகாதே கானலைக் கண்டு பாநீய ப்ரவாஹமாக மயங்கி, ஓடிக்கொண்டேயிருக்கையில் வழியில் புலியின் வாயில் விழுந்து மாண்டொழிந்தது. இது இப்படியாக, மற்றொரு மிருகமானது விடாய் தீரப் பெறுவதற்கு உண்மையாகத் தண்ணீர் உள்ள தடாகத்திலேயே சேர்ந்தும் துறை தப்பி இழியவே அங்குக் கிடந்த முதலையினாலே கதுவப்பட்டு மாண்டு ஒழிந்தது. ஆக இரண்டு மிருகங்களும் தடாக ப்ரவேச அப்ரவேசங்க ளாலே சிறிது வைலக்ஷண்யம் பெற்றிருந்தா லும் விநாசம் இரண்டுக்கும் துல்யமே. அது போலவே குத்ருஷ்டிகளும் பாஹ்யர்களும் வேதப்ராமாண்ய அங்கீகார அநங்கீகாரங்களாலே சிறிது வாசி பெற்றிருந்தாலும் விநாசத்தில் வாசியற்றவர்களே யென்றதாயிற்று. அந்த பாஹ்யர்களும் குத்ருஷ்டிகளும் கிடக்கட்டும். வேதக் கடலில் நாம் உள்ளபடி அவகாஹித்து அர்த்தரத்நங்களைக் கொள்ளைகொண்டு அனுபவித்து ஆநந்திக்கக் கடவோம்.

507. வேதத்தில் காண்டமிரண்டு என்கை. வேதம் கர்மகாண்ட மென்றும் ப்ரஹ்மகாண்ட மென்றும் இரு வகுப்பாக வுள்ளது. பூர்வபாகம் கர்மகாண்ட மென்றும், உத்தரபாகம் ப்ரஹ்மகாண்டமென்றும் வழங்கப்படும். உபநிஷத்துக்களையே ப்ரஹ்மகாண்டமென்பது. பகவானுக்கு ஆராதன ரூபங்களான யஜ்ஞம் முதலிய கரும விசேஷங்களை விரிவாகக் கூறும் வேதபாகம் கர்ம காண்ட மென்றும், அக்கருமங்களினால் ஆராதிக்கப்படுகின்ற பகவானுடைய ஸ்வரூப ரூப குணங்களை விரிவாகக் கூறும் வேதபாகம் ப்ரஹ்ம காண்டமென்றும் சொல்லிற்றாயிற்று.

508. இதுவே உபநிஷத்தென்கிற பெயராலும் வழங்கும். உப–நிஷீததி என்கிற வ்யுத்பத்தி கொண்டது உபநிஷத்தென்கிற பதம், பகவானுடைய அருகேயுள்ள தென்கை "வேதைச்ச ஸர்வைரஹமேவ வேத்ய:" என்கிற கீதையின்படி கர்ம காண்டமுங்கூட பகவானை ப்ரதிபாதிக்க வல்லதேயாயினும் அந்த ப்ரதிபாதனம் வ்யவஹிதமாயிருக்கும். உபநிஷத்து அவ்யவதாநேந ப்ரதிபாதகமாயிருக்கும்.

509. கர்மகாண்டத்தில் தோன்றும் சங்கைகளைப் பரிஹரிப்பதற்காக ஜைமிநி யென்னும் மஹர்ஷி யெழுந்து பதினாறு அத்யாயங்களோடு கூடிய ஒரு சாஸ்த்ரத்தை யியற்றினார். அதற்குப் பூர்வமீமாம்ஸை யென்று பெயர். இதில் பன்னிரண்டு அத்யாயங்களே ஜைமினியால் இயற்றப்பட்டவை யென்றும் ஒரு பக்ஷமுண்டு. இதைப் பற்றி இங்கு விசார விரிவு வேண்டா. 'வ்ருத்திக்ரந்தே து ஜைமிந்யுபரசிததயா ஷோடசாத்யாய்யுபாத்தா' இத்யாதியான அதிகரணஸாராவளீ ச்லோகம் காண்க. "ஜைமிநீயம் ஷோடச லக்ஷணம்" என்பது பொதுவான வார்த்தை. போதாயந வ்ருத்திக் க்ரந்தத்தில் பதினாறு அத்யாயங்களும் ஜைமிநிப்ரோக்த மென்று கூறப்பட்டுள்ளது. (லக்ஷணமென்று அத்யாயத்திற்குப் பெயர்).

510.ப்ரஹ்மகாண்டமென்னும் உபநிஷத் பாகத்தில் தோன்றும் சங்கைகளைப் பரிஹரிப்பதற்காக வ்யாஸ மஹர்ஷி யெழுந்து நான்கு அத்யாயங்கள் கொண்டவொரு சாஸ்த்ரத்தை இயற்றினார். அதற்கே சாரீரகமீமாம்ஸை என்று பெயர். உத்தர மீமாம்ஸை என்றும் வழங்குவர். ப்ரஹ்மஸூத்ரம் என்பது இதனையே. ஒவ்வோரத்யாயத்திலும் நான்கு பாதங்களுள்ளன. ஆகவே பதினாறு பாதங்கள் கொண்டது சாரீரகமீமாம்ஸை யென்றதாயிற்று. இதில் ஒவ்வொரு விஷயத்தைப் பற்றி சர்ச்சை செய்து நிர்ணயிக்கும் பகுதிக்கு அதிகரணமென்று பெயரிடப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட அதிகரணங்கள் இந்த மீமாம்ஸையில் (156) நூற்றைம்பத்தாறு உள்ளன. சில அதிகரணங்களில் ஒரே ஸூத்ரமிருக்கும். பல அதிகரணங்களில் பல ஸூத்ரங்க ளிருக்கும். மொத்தம் ஸூத்ரங்களின் லக்கம் (545) ஐந்நூற்றுநாற்பத்தைந்து என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. ஆக, நான்கு அத்யாயங்களையும், பதினாறு பாதங்களை யும் நூற்றைம்பத்தாறு அதிகரணங்களை யும் ஐந்நூற்று நாற்பத்தைந்து ஸூத்ரங்க ளையும் கொண்டது ப்ரஹ்மஸூத்ர சாஸ்த்ரமென்றதாயிற்று.

511. தத்வஹித புருஷார்த்தங்களை நாம் தெரிந்து கொள்வதற்கு உபநிஷத்துக்களே தஞ்சமாகும். அவ்வுபநிஷத்துக்களின் பொருள்களை ஸம்சய விபர்யயமற நிஷ்கர்ஷித்து விளக்கக்கூடியது. இந்த ப்ரஹ்ம ஸூத்ர சாஸ்த்ரமேயாதலால் நிஷ்கல்மஷமாகவும் தெரிந்து கொண்டவர்களே வேதாந்திகள் என்றும் ப்ரஹ்மஜ்ஞானிகளென்றும் சொல்லத் தகுதியுடையார். மஹர்ஷிகள் இயற்றிய ஸூத்ரங்களின் பொருளை நம்போல்வார் சிறிதும் அறியகில்லார்க ளாதலால், நம்போன்ற அல்பமதிகளிடத்தில் பரமகருணை கொண்ட பூருவர்கள் அந்த ஸூத்ரங்களின் அர்த்தத்தை விளக்கி பாஷ்யங்கள் இயற்றியுள்ளார்கள். த்வைதம் அத்வைதம் விசிஷ்டாத்வைதம் என மூன்று மதங்கள் உலக ப்ரஸித்தமாக வழங்குமவை. இம்மூன்று மதங்களிலும் பாஷ்யங்கள் அவதரித்துள்ளன. அத்வைத மதத்திற்காக சங்கராசாரிய ஸ்வாமிகள் பாஷ்யம் இயற்றினார். நமது விசிஷ்டாத்வைத மதத்திற்காக பகவத் ராமானுஜாசார்யர் என்கிற ஸ்வாமியெம்பெருமானார் ஸ்ரீ பாஷ்யமருளிச் செய்தார்.

512. வட இந்தியாவில் அதிக ப்ரஸித்தி பெற்றுள்ள வல்லபமதம் நிம்பார்க்க மதம் முதலிய மதங்களுக்கா கவும் பாஷ்யங்கள் தோன்றியுள்ளன. சைவ மதத்திற்காக

நீலகண்ட பாஷ்யம் தோன்றியுள்ளது. இப்படி மற்றும் பல பாஷ்யங்களிருந்தாலும் மதத்ரயபாஷ்யம் என்று மூன்று பாஷ்யங்களே நமது நாட்டில் குலாவப்படுகின்றன. ஸ்ரீவைஷ்ணவர்கள் என்றும் விசிஷ்டாத்வைதிகளென்றும் பகவத் ராமாநுஜ தர்சநஸ்தர்களென்றும் வழங்கப்படுகின்ற நமக்கு ஸ்வாமியின் ஸ்ரீபாஷ்யமே ஜீவாதுவாகும். சங்கரபாஷ்யம் மத்வபாஷ்யம் நீலகண்ட பாஷ்யம் என்பவை போலல்லாமல் ஸ்ரீபாஷ்யமென்றே தோன்றியுள்ள ப்ரஸித்தி இதன் ஒப்பற்ற பெருமையைப் புலப்படுத்தும்.

513. உபநிஷத்துக்களின் உண்மைப் பொருளை ஸூத்ரகாரருடைய உள்ளத்திற்கு ஒத்ததாக நிஷ்பக்ஷபாதமாய் நிரூபிக்கப் பட்டது ஸ்ரீபாஷ்யமேயென்று மேனாட்டுப் புலவர்களும் மெச்சியுள்ளார்கள். அது நிற்க: ஸ்வாமி ஸ்ரீ பாஷ்யமருளிச் செய்யத் தொடங்கும் போதே "பகவத்போதாயந க்ருதாம் விஸ்தீர்ணாம் ப்ரஹ்ம ஸூத்ர வ்ருத்திம் பூர்வாசார்யாஸ்ஸஞ்சிக்ஷிபு:; தந்மதாநுஸாரேண ஸூத்ராக்ஷராணி வ்யாக்க்யாஸ்யந்தே என்று (முன்னோர் மொழிந்த முறை தப்பாமே வியாக்கியானிப்பதாக) அருளிச் செய்திருப் பதனால் ஸ்ரீபாஷ்யத்தின் ப்ராமாணிகத்வம் அசைக்க முடியாது விளங்குகின்றது.

514. இக்காலத்து அஸூயுக்கள் சிலர் மேலே உதாஹரித்த பங்க்தியின் மேல் வீணான விவாதத்தைக் கிளப்பி நாசம் அடைந்துபோனார்களென்பது நம்முடைய சதபூஷணீ வஜ்ரகுடார தத்விஜயத்வஜ – சாங்கரசிரோபூஷா தத்விபூஷணாதி க்ரந்தங்களினால் விசதமாதலால் அதனை ஈண்டு விவரித்துரைக்கின்றிலோம். ஆர்ஷ வ்யாக்க்யாந கவசிதமாயும் அதிப்ராசீநமா யும் பரம பவித்திரமாயுமுள்ளது விசிஷ்டாத்வைதமே யென்றும், அதைநிலை நாட்டவல்ல பாஷ்யம் ஸ்ரீபாஷ்யமேயென்றும் ப்ராமாணிக வைதிகோத்தமர்களின் கொள்கை.

515. விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம் என்னுஞ் சொல்லுக்குப் பொருள் விவரிக்கப் படுகிறது. ஸித்தாந்தமென்பதற்கு ப்ராமாணிகமாகப் பரிக்ரஹிக்கப்பட்ட அர்த்தமென்று தேர்ந்த பொருள். மதம் என்றவாறு. இரண்டாயிருக்கும் தன்மை (த்விதா) எனப்படும். த்வைதமென்றாலும் அதுவே பொருள். பேதம் என்றதாயிற்று. அத்தோடு நஞ் சேர்ந்தால் அத்வைதம் என்றாகிறது. அபேதமென்று பொருள். விசிஷ்டஸ்ய அத்வைதம் விசிஷ்டாத்வைதம். ஸமஸ்த சேதநாசேதந வஸ்துக்களோடு கூடின ப்ரஹ்மம் ஒன்று என்று அங்கீகரிக்கப்படுவதால் இந்த தரிசனம் விசிஷ்டாத்வைதமெனப்படுகிறது. சித்தும் அசித்துமாகிய இரண்டு தத்துவங்கள் உண்மையில் கிடையவே கிடையாதென்றும் ப்ரஹ்மமொன்றே உள்ளதென்றும் கொள்ளுகின்ற பிறருடைய மதத்தைத் தள்ளி, மூன்று தத்துவங்களும் உண்மையாகவுள்ளனவென்று கொள்ளுவதே இந்த தரிசனத்தில் ஸாரமானது.

516. விசிஷ்டாத்வைதமென்பதற்கு வேறுவிதமான பொருளின் பொருந்தாமை: 'விசிஷ்டஸ்ய அத்வைதம்–விசிஷ்டாத்வைம்' என்று கொள்ளுகையன்றிக்கே, 'விசிஷ்டம் ச விசிஷ்டம் ச விசிஷ்டே; விசிஷ்டயோ: அத்வைதம்–விசிஷ்டாத்வைதம்' என்று கொண்டு ஸூக்ஷ்மசிதசித்விசிஷ்ட ப்ரஹ்மத்திற்கும் ஸ்தூலசிதசித்விசிஷ்ட ப்ரஹ்மத்திற்கும் ஐக்கியம் கொள்ளுகை விசிஷ்டாத்வைதம்–என்பாருமுளர். இதில் உபபத்தி காண்பதரிது.

விசிஷ்டஸ்ய அத்வைதமென்பதே உபபந்நமாகும். 'ப்ரஹ்மத்தினிடத்தில் சிதசித்விசிஷ்டத்வத்தை ஒப்புக் கொள்வதில்லை. ப்ரஹ்மம் போலவே ஜகத்தும் ஸத்யமேயென்று அங்கீகரிக்கிற த்வைதிகளும் (மாத்வர்களும்) சேதநாசேதநங்களுக்கும் ப்ரஹ்மத்திற்கும் ரக்ஷ்யரக்ஷகபாவ ரூபமான ஸம்பந்தம் தவிர ஐக்யவ்யபதேசத்திற்குரிய ஸம்பந்த விசேஷமொன்றும் அங்கீகரிக்கின் றிலர். ஆகவே அவர்களும் ப்ரஹ்மத்தி னிடத்தில் சிதசித்வைசிஷ்ட்யத்தை ஏற்றுக் கொள்வதில்லையென்பது தேறிற்று.

517. நமது ஸித்தாந்தத்திலோ வென்னில், சேதநாசேதநாத்மகமான ப்ரபஞ்சத்தையும் ப்ரஹ்மத்தையும் ஸத்யம் என்று கொள்வதோடு அவற்றுக்கு ஐக்ய வ்யபதேசத்தை நிர்வஹிக்கக் கூடியதான சரீர சரீரிபாவ ரூபமான ஸம்பந்த விசேஷத்தையும் கொள்வதனாலே, உலகத்தில் உடலுக்கும் உயிருக்கும் வேற்றுமை அபலபிக்க முடியாததாயிருக்கச் செய்தேயும் "சைத்ர: ஏக:" என்கிற வியவஹாரம் எப்படி காணப்படுகிறதோ அப்படியே இங்கும் சேதநாசேதந சரீரகமான ப்ரஹ்த்திற்கு ஏகத்வேந வ்யபதேசமும் பரஸ்பரம் ஸ்வரூப பேதமும் பொருந்தக் குறையில்லை. இவ்வர்த்த தத்துவத்தைக் காட்டவல்லதான 'விசிஷ்டஸ்ய அத்வைதம் விசிஷ்டாத்வைதம்' என்னும் வ்யுத்பத்தியே யுக்தமானதென்று கொள்க.

518. த்வைதத்தையும் அத்வைதத்தை யும் பற்றின நிரூபணங்கள். ச்ருதிவாக்யங்களையுற்று நோக்கினால் அவற்றில் இருவகையான பாகுபாடு காணப்படும். (1) பேதத்தையே காட்டும் சில வாக்யங்கள். (2) அபேதத்தையே காட்டும் சில வாக்யங்கள். "க்ஷரம் ப்ரதாநம் அம்ருதாக்ஷரம் ஹர: க்ஷராத்மாநாவீசதே தேவ ஏக:" என்பது முதலான ச்ருதி வாக்யங்கள் சேதந அசேதந–ஈச்வரரூப தத்வத்ரயத்தின் உண்மையைத் தெரிவிக்கும் முகத்தால் பேதத்தைக் காட்டுகின்றன. "நேஹ நாநாஸ்தி கிஞ்சந", "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம", "தத் த்வமஸி" இத்யாதிகளான ச்ருதி வாக்யங்கள் பலவகைப்பட்ட வஸ்துக்களில்லாமையைத் தெரிவிக்கும் முகத்தால் அபேதத்தைக் காட்டுகின்றன. ஆக, ச்ருதிகளில் சிலவிடத்து பேதப்ரதி பாதகமும் சிலவிடத்து அபேதப்ரதிபாதநமு மிருப்பதாகத் தேறுகையாலே பரஸ்பர விரோதம் ஸ்பஷ்டமாகிறது.

519. விருத்தமான அர்த்தத்தைத் தெரிவிக்கையாகிற அவத்யம் ச்ருதிகளில் இடம் பெறத்தகாது. விரோதமோ உள்ளதென்று காட்டியாயிற்று. விரோதத்தைப் போக்கி ஸமந்வயம் காட்ட வேண்டிய பொறுப்பு விமர்சகுசலர்களான வைதிகர்களுக்குள்ளது. ப்ரஹ்மமொன்று தான் ஸத்யமென்று கொள்ளுகிற அத்வைதிகள் அபேதத்தைக் காட்டும் ச்ருதி வாக்யங்களை மட்டும் முக்கியமாகப் பரிக்ரஹித்து அபேதத்தைக் காட்டும் ச்ருதி வாக்யங்களை உபேக்ஷித்து விட்டார்கள்.

520. "யஸ்யாத்மா சரீரம், யஸ்ய ப்ருதிவீ சரீரம், ய ஆத்மநி திஷ்டந்" இத்யாதி வாக்யங்கள் பகவான் ப்ருதிவி முதல் ஆத்மா வரையிலுமுள்ள ஸகல வஸ்துக்களிலும் அந்தர்யாமியாயிருக்கிறா னென்பதை ப்ரதிபாதிக்கின்றன; இவற்றை த்வைதிகளும் அத்வைதிகளுமான இரு வகுப்பினரும் அறவே விட்டிட்டார்கள். ஸுபாலோபநிஷத்து முதலான அந்தர்யாமி ப்ராஹ்மணவாக்யங்களுக்கு உபய மதத்திலும் ஆதரவு

கிடையாதென்பது ஸ்பஷ்டம். ஆக, த்வைதாத்வைத மதங்களிரண்டிலும் அநேக ச்ருதி வாக்யங்களை அமுக்க்யார்த்தங்களாகக் கொள்ளுதல், உபேக்ஷித்தல் இத்யாதியான பலீயஸ்ஸான தோஷமுள்ளது. இத்தகைய தோஷம் சிறிதும் தட்டப் பெறாதது நமது மதமென்னுமிடம் அடுத்தபடியாக விவரிக்கப்படுகின்றது.

521. கீழே யெடுத்துக் காட்டிய மூன்று வகுப்பான ச்ருதிவாக்யங்களையும் ஒரு நிகராக ஆதரிப்பவர்கள் விசிஷ்டாத்வைதி களேயாவர். ஒரு ச்ருதி வாக்கியத்திலும் அமுக்க்யார்த்த கல்பநை யென்பது கிடையாது. எங்ஙனேயென்னில், கடைசியாக எடுத்துக் காட்டப்பட்ட "யஸ்யாத்மா சரீரமித்யாதிகளான ச்ருதி வாக்யங்களுக்கு கடக ச்ருதிகளென்று பெயர். பேதத்தையும் அபேதத்தையும் விரோத லேசமுமின்றிக்கே பொருந்தச் செய்ய வல்லவை அந்தர்யாமி ப்ராஹ்மண வாக்யங்கள் என்கிற காரணத்தினால் இவற்றுக்கு கடகச்ருதிகளென்னும் பெயர் மிகப் பொருத்தமானது.

522. "நேஹ நாநாஸ்தி கிஞ்சந" இத்யாதிகளான அத்வைத (அபேத) ச்ருதிகளினாலேற்பட்ட அபேதத்தையும் "க்ஷரம் ப்ரதாநமம்ருதாக்ஷரம் ஹர:" இத்யாதிகளான த்வைத (பேத) ச்ருதிகளினாலேற்பட்ட பேதத்தையும் பொருந்தவிடும் வழி கேண்மின். சேதநா சேதந விசிஷ்டமாய்க் கொண்டு ஒன்றே யாகிறபடியால் "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம" இத்யாதியான அபேதச்ருதிகளும் பொருந்தக் குறையில்லை. "யஸ்யாத்மா சரீரமித்யாதி அந்தர்யாமி ப்ராஹ்மண ச்ருதிகளானவை ஸர்வேச்வரனை ஸர்வாந்தர்யாமி யென்று தெரிவிக்கும் முகத்தால் பேதத்தையும் பொருந்த விடுகின்றன என்பது நம் ஆசாரியர்களின் நிரூபணம்.

523. சிதசிதீச்வரர்களாகிற மூன்று தத்துவங்களிலும் தனிப்படக் கண் செலுத்தினால் பேதம் க்ரஹிக்கப்படுகிறது. அசேதநமாகிய சரீரம் வேறு; அதனுள் உறையும் சேதநன் வேறு; அவனுக்கும் அந்தர்யாமியான பரமாத்மா வேறு என்று பேதப்ரதிபத்தி சாஸ்த்ர ஸம்மதமேயாகும். பல அவயவங்களின் கூட்டரவான சரீரத்திலே கை, கால், காது, மூக்கு முதலானவற்றைத் தனியே பார்க்குமிடத்து பேத ப்ரதிபத்தியும் 'அவயவஸங்காதம் ஒன்று' என்று பார்க்குமிடத்து அபேத ப்ரதிபத்தியும் பொருந்துகின்றது. தேவதத்தன் ஒருவன், யஜ்ஞதத்தன் ஒருவன் இத்யாதி வ்யவஹாரங்களில் தேவதத்தனுக்கும் யஜ்ஞதத்தனுக்கும் ஒருமை எங்ஙனம்? என்று விமர்சிக்க வேணும்.

524. தேவதத்த: க்ருச:, யஜ்ஞதத்த: ஸ்தூல: இத்யாதி வ்யவஹாரங்களில் க்ருசத்வமும் ஸ்தூலத்வமும் சரீர தர்மமாகையாலே தேவதத்த யஜ்ஞதத்த சப்தங்கள் சரீர பரங்களேயென்று அறுதியிடப்படுகிறது. 'தேவதத்தோ மேதாவீ, யஜ்ஞதத்த: ப்ரதிபாவாந் இத்யாதி வ்யவஹாரங்களில் மேதையும் ப்ரதிபையும் ஆத்ம தர்மமாகையாலே அந்த தேவதத்த யஜ்ஞதத்த சப்தங்களே ஆத்ம பரங்களென்று நிர்ணயிக்கப்படுகிறது. ஆத்மாவும் சரீரமும் ஒன்றல்ல வெவ்வேறு பட்டவை. ஆக அநேக வஸ்துக்களிருக்கச் செய்தேயும் ஏகத்வ வ்யவஹாரம் நிகழ்ந்து வருவது 'சரீர விசிஷ்டனான சரீரி ஒருவன்' என்னும் அபிஸந்தியாலத்தனையன்றோ. இவ்வண்ணமாகவே 'ப்ரஹ்ம ஏகமேவ' என்ற ச்ருதியும் விசிஷ்டைக்யத்தைச் சொல்லுவதாகக் கொள்ளக் குறையில்லையே.

525. ஏவஞ்ச பேதத்திற்கும், அபேதத் திற்கும் அபாயமொன்றுமில்லையென்ற தாயிற்று. சரீரங்களும் சரீரிகளுமாகிற நாநாவஸ்துஸத்பாவம் ப்ராமாணிகமாகை யாலே அபலபிக்க வொண்ணாததே. இங்ஙனே விசிஷ்டைக்யமும் அநுபவஸித்த மாகையாலே அபலபிக்க வொண்ணாததே. ஆக, சரீரி பாவ நிபந்தநமாகவே ஒன்றாக வழங்கப்படுவதாய் ஸித்திக்கையாலே அப்படிப்பட்ட சரீரசரீரி பாவத்தையுணர்த்து கின்ற அந்தர்யாமி ப்ராஹ்மணாதி ரூபங்களான ச்ருதி வாக்யங்களுக்கு நமது மதத்தில் மிகுந்த கௌரவமுள்ளது. அத்வைதிகள் பேதச்ருதிகளை அநாதரிப்பது போலவும், த்வைதிகள் அபேத ச்ருதிகளை அநாதரிப்பது போலவும் நாம் ஒருவகையான ச்ருதியிலும் அநாதரம் காட்டுகின்றிலோம். ஆகவே ஸர்வச்ருதி ஸாமரஸ்யம் நமக்கே யொழியப் பிறர்க்கு இல்லையென்பது கல்வெட்டாகத் தேறி நின்றது.

526. சரீராத்ம பாவமே ப்ரதாந ப்ரதிதந்த்ரார்த்த மென்பது: மதாந்தரஸ்தர் கள் ஒப்புக் கொள்ளாத பல அர்த்தங்களை நாம் ஒப்புக் கொண்டிருக்கின்றோம். நித்யஸூரிஸத்பாவம், எம்பெருமானுடைய கல்யாண குணாச்ரயத்வம், திவ்யமங்கள விக்ரஹ விசிஷ்டத்வம் முதலானவை அவை. இவற்றையெல்லாம் விட்டு சரீரசரீரி பாவத்தையே கொண்டு விசிஷ்டாத்வைத மென்று பெயரிடுவதில் என்ன விசேஷம் என்னில்,

527. கேண்மின், ஸித்தாந்தத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கின்ற அர்த்த விசேஷங்களுள் ஜகச்சரீரகத்வ மென்பதே ப்ரதாநமானது. ஆனது பற்றியே இது ப்ரதாந ப்ரதிதந்த்ரார்த்த மெனப்படுகிறது. இதுவே ப்ரதாந மென்பது எங்ஙனமென்னில் ஸர்வச்ருதிகளினுடையவும் முக்கியமான அர்த்தத்தைத் தெரிவிப்பதாய், ஸர்வ ச்ருதிகளுக்கும் ஸாமரஸ்யத்தை நிர்வஹித்து வாதி விஜய ப்ரயோஜகமா யிருப்பதனாலே, இதற்கு ப்ராதாந்ய மென்றுணர்க. இந்த சரீராத்ம பாவத்தைத் தெரிந்து கொள்ளாமையினாலன்றோ பிற மதத்தவர்கள் ஸர்வ ச்ருதிஸாமரஸ்யத்தை நிர்வஹிக்க மாட்டாமல் தளருகின்றார்கள். குத்ருஷ்டிகளின் குசோத்யங்களை அவலீலயா பரிஹரித்துத் தருவது இந்த சரீராத்மபாவமே யென்க.

528. இங்கு ''யத்யேதம் யதிஸார்வ பௌமகதிதம்'' இத்யாதியான வேதாந்ததேசிகர் ச்லோக ரத்நத்தைத் திடமாகக் கொள்க. இந்த ப்ரதாந ப்ரதிதந்த்ரார்த்தத்தை நன்கு தெரிந்து கொண்ட வொருவ்யக்தி நிற்குமிடத்தில் விமதர்கள் எத்தனை பேர்கள் கூடி எவ்வளவு வாத கோலாஹலங்களைச் செய்தாலும் அவர்களுக்கு பங்கமேதவிர வேறில்லை யென்பது இதன் கருத்து.

529. சரீராத்மபாவம் ஸூத்ரகார அபிமதமென்று விவரித்தல்: ஸித்தாந்தத்தில் சரீராத்ம பாவமே பிரதானமென்பது கீழே உபபாதிக்கப்பட்டது. ப்ரஹ்மஸூத்ரகாரருக்கும் இதுவே அபிமதம் என்பது மூதலிக்கப்படுகிறது. இவ்விஷயத் தில் சாரீரகமீமாம்ஸை முழுவதுமே பிரமாணமாகக் காட்டக் கூடியதாயினும் வ்யுத்பித்ஸுக்களின் புத்தியில் ஏறுவதற்காக ஸம்க்ஷேபமாய் நிரூபித்தல் நலமென்று கருதி அந்த சாரீரக மீமாம்ஸையில் ஒரு அதிகரணத்தை மட்டும் ஈண்டெடுத்துக் காட்டிப் பிராமாணிகர் களின் மனத்தில் பதியவைக்கிறோம். அதில் முதலத்யாயம் நான்காவது பாதத்தில்

வாக்யாந்வயாதிகரணமென்பது ப்ரஸித்தமானது. நான்கு ஸூத்ரங்கள் கொண்டது இவ்வதிகரணம். ப்ருஹதாரண்யகோபநிஷத்தில் ப்ரஸித்தமான மைத்ரேயீப்ராஹ்மணம் என்னும் பகுதியில் அம்ருதத்வோபாயம் ஏதென்று கேட்ட மைத்ரேயியைக் குறித்து யாஜ்ஞவல்க்யருடைய விடை: "ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ச்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:" என்பது. இதில் ஆத்மா என்னும் சப்தத்தால் குறிக்கப்பட்டவன் பரமாத்மாவா? ஜீவாத்மாவா? என்று விசாரம் ப்ரஸக்தமாக, பரமாத்மாவே யென்று நிர்ணயம் செய்வது இவ்வதிகரணத்தின் ப்ரமேயம்.

530. இது "வாக்யாந்வயாத்" என்கிற முதல் ஸூத்ரத்தினால் தேறியது. மைத்ரேயீ ப்ராஹ்மணத்திலுள்ள மஹாவாக்யம் ஸமஞ்ஜஸமாக அந்வயிக்க வேண்டுகை யாலே அந்த வாக்யத்தில் பிரதிபாதிக்கப் பட்ட ஆத்மா கருமபலனையநுபவிப்பவ னான ஜீவாத்மாவாக இருக்கமுடியாது, பரம புருஷனேயாகவடுக்கும் என்று சொல்லப்பட்டதாயிற்று.

531. இதற்குமேல் ஒரு கேள்வி எழுந்தது. அதாவது, இங்குப் பரமாத்மா விவக்ஷிதனாகில் ஜீவாத்மவாசகமான ஆத்மா என்கிற சொல்லையிட்டுச் சொல்லுவானேன்? பரமாத்மாவென்றே பிரயோகிக்கலாகாதா? என்று, இக் கேள்விக்கு ஸூத்ரகாரரான வியாஸரால் மேலே மூன்று ஸுத்ரங்களினால் ஸமாதானம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அடைவே ஆச்மரத்ய மதம், ஔடுலோமிமதம், காசக்ருத்ஸ்ந மதம் என மூவருடைய மதம் காட்டப்பட்டுள்ளது. முறையே ஸூத்ரங்கள்–

1. ப்ரதிஜ்ஞாஸித்தேர் லிங்கம் ஆச்மரத்ய:
2. உத்க்ரமிஷ்யத ஏவம்பாவாதித்யௌடுலோமி:
3. அவஸ்திதேரிதி காசக்ருத்ஸ்ந:

என்கிற இம்மூன்று ஸூத்ரங்களும் மூன்று மஹர்ஷிகளின் நிர்வாஹங்களைத் தெரிவிப்பனவாம். இவற்றை அடைவே சிறிது விவரிக்கிறோம்.

532. (ஆச்மரத்யமதம்) ஜீவாத்ம பரமாத்மாக்களுக்கு கார்ய காரண பாவம் ச்ருதியில் சொல்லப்பட்டிருக்கின்றது; அதனால் அவர்களுக்கு அபேதம் ஏற்படுகிறது. காரணமான மண்ணுக்கும் அதன் கார்யமான பானைக்கும் அபேதம் காண்கிறதன்றோ. ஆக இவ்வபேதத்தைத் தெரிவிப்பதற்காக பரமாத்ம ஜீவாத்மாக்களுக்கு ஐக்யோக்தி யுள்ளதென்றார் ஆச்மரத்யர்.

533. (ஔடுலோமிமதம்) கீழே காட்டிய ஆச்மரத்ய மதத்தில் ஜீவாத்மாவுக்குப் பரமாத்மாவினிடத்திலிருந்து உத்பத்தியைக் கொள்ளுகையாலே "ந ஜாயதே ம்ரியதே வா விபச்சித்" இத்யாதி ப்ரமாணங்களோடு அது விரோதிக்கையாலும் மற்றும் அநேக தோஷப்ரஸங்கத்தாலும் ஆச்மரத்ய மதம் ஸாதுவன்றென்று கொண்ட ஔடுலோமி யானவர்–முக்தி தசையில் பவிஷ்யத்தான ஜீவாத்ம பரமாத்ம அபேதத்தையவலம்பித்து ஐக்யம் சொல்லிற்றாக நிர்வஹித்தார்.

534. (காசக்ருத்ஸ்நமதம்) கீழே விவரித்த ஔடுலோமி மதத்தில் மோக்ஷம் வரையில் ஜீவாத்ம பரமாத்மாக்களுக்கு பேதமுள்ளதென்றும், முக்தி தசையில் அபேதமென்றும் கொள்ளப்படுகிறவிது, "பரமாத்மாத்மநோர்யோக:" என்கிற ஸ்ரீவிஷ்ணுபுராண

வசனவிருத்தம். வெவ்வேறுபட்ட பொருள்கள் ஒன்றோடு ஒன்று சேருமேயொழிய ஐக்கியத்தையடைய மாட்டாவென்று இதில் ஸ்பஷ்டமாகக் கூறியிருக்கின்றதன்றோ. முக்தி தசையில் ஜீவாத்மாவுக்கு அபஹதபாப்மத்வாதி ஸ்வரூபம் ஆவிர்ப்பவிக்குமதொழிய பரமாத்மாவோடு ஐக்யாபத்தியென்பதில்லை யென்னுமிடம் (4–4–1) ஸம்பத்யாவிர்ப்பாவ அதிகரணத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆக இத்தனைக்கும் முரணாக நிர்வஹிப்பது அநுசிதம் என்று கொண்ட காசக்ருத்ஸ்நர்– பரமாத்மா ஜீவாத்மாவினுள் அந்தராத்மாவாக இருப்பதும், ஜீவாத்மாவுக்குப் பரமாத்ம சரீரத்வமும் ''ய ஆத்மநி திஷ்டந்.....யஸ்யாத்மா சரீரம்'' இத்யாதி ச்ருதிஸித்தமாகையாலும், சரீர வாசகங்களான சப்தங்களுக்கு சரீரி பர்யந்த வாசகத்வம் ஆக்ருத்யதிகரண ஸித்தமாகையாலும் ப்ரக்ருதத்தில் ஜீவாத்மவாசியான ஆத்ம சப்தத்தைப் பரமாத்மபர்யந்த வாசகமாக நிர்வஹிப்பதுதான் உசிதமென்று கருதினார்.

535. இங்ஙனே வரிசையாக மூன்று மதங்களை உதாஹரித்த ஸூத்ரகாரர் மேலே நான்காவது மதத்தைச் சொல்லாமையினால் காசக்ருத்ஸ்ந மதமே ஸூத்ரகார அபிமதமென்று நிஸ்ஸந்தேஹமாக நிர்ணயிக்கப்படுகிறது. விசிஷ்டாத்வைத மதத்திற்கு இது விஜய த்வஜமானது.

536. காசக்ருத்ஸ்நமதத்தை நன்கு உபபாதித்தல்: இங்கே அத்வைதிகள் சொல்வதென்னவென்றால், காசக்ருத்ஸ்ந மதந்தான் ஸூத்ரகார அபிமதமென்பது எமக்கும் ஸம்மதம். ஆனால் அவஸ்திதே: என்பதற்கு– 'பரமாத்மாவானவர் ஜீவாத்மாவினிடத்தில் அந்தர்யாமியா யிருப்பதனாலே' என்று நீங்கள் கூறுகின்ற பொருள் ஸாதுவன்று. 'பரமாத்மாதானே ஜீவாத்மாவாக இருப்பதனாலே' என்கிற பொருள்தான் 'அவஸ்திதே:' என்பதற்கு ஸமஞ்ஜஸமாகும். ப்ரக்ருதத்தில் ஐக்யத்தைப் பொருந்தவிட வேண்டியது ப்ரதானம். இங்ஙனே பொருள் கூறினாலும் ஐக்யம் பொருந்திவிடுகின்ற தன்றோ. காசக்ருத்ஸ்நர் சரீராத்ம பாவத்தை யவலம்பித்தே ஐக்யத்தைப் பொருந்த விட்டாரென்று ஏதுக்குச் சொல்ல வேண்டும்? என்கிறார்கள் அத்வைதிகள்.

537. இது ஸமஞ்ஜஸமானவாதமன்று என்பதை நன்கு நிரூபிக்கிறோம். ''அத்தா சராசரக்ரஹணாத்'' என்கிற உபக்ரம ஸூத்ரத்தைக் கொண்ட அத்த்ரதிகரணத்தில் ''குஹாம் ப்ரவிஷ்டாவாத்மாநௌ ஹி தத்தர்சநாத்'' என்கிற ஸூத்ரத்தில் த்விவசநாந்தமான ஆத்மாநௌ என்கிற சப்தத்தினால் பரஸ்பரபிந்நஸ்வரூபசாலிகளான ஜீவாத்மா பரமாத்மாக்களுக்கு ஹ்ருதயகுஹாப்ரவேசம் ச்ருதி ஸித்தம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் ஜீவ ப்ரஹ்மங்களுக்கு நிருபாதிகமான பேதமே ச்ருதிக்கு அபிமதமென்று ஸூத்ரகாரர் அபிப்ராயப்பட்டிருப்பது ஸ்பஷ்டமாகத் தெரியவருகிறது.

538. ஆக ஜீவப்ரஹ்மங்களுக்கு ச்ருத்யபிமதமான ஸ்வரூப பேதம் பழுதுபடாதபடி நிர்வஹிப்பதுதான் ஸூத்ரகாராபிமதமென்று இசைந்து தீரவேணும். ஏவஞ்ச, ஜீவப்ரஹ்மங்களுக்கு ஸ்வரூபைக்யத்தை யவலம்பித்து நிர்வஹிக்க வந்தது ''அவஸ்திதேரிதி காசக்ருத்ஸ்ந:'' என்கிற ஸூத்ரமென்று சொல்லுவது பொருந்தமாட்டாது.

539. மேலும், அவஸ்திதி: என்கிற சப்தமானது "பூதலே கட: அவதிஷ்டதே, ப்ராஸாதே தேவதத்த: அவதிஷ்டதே" இத்யாதி வ்யவஹாரங்களிற்போல ஒரு வஸ்துவில் மற்றொரு வஸ்து இருப்பதைத்தான் சொல்லக்கடவது: "ப்ருதிவ்யாம் திஷ்டந் அப்ஸுதிஷ்டந் தேஜஸி திஷ்டந் வாயௌ திஷ்டந் ஆகாசே திஷ்டந் ஆத்மநி திஷ்டந்." இத்யாதிகளான உபநிஷத் வாக்யங்களில் பலகால் காணப்படுகிற ஷ்டாதாது ப்ரயோகத்தை அடியொற்றியே அவஸ்திதே: என்கிற ஸௌத்ர ப்ரயோகமுள்ளதென்பதை ப்ராமாணிகர்களின் உள்ளம் அநாயாஸமாக க்ரஹிக்கும்.

540. ஆக காசக்ருத்ஸ்ந மதம் அத்வைதிகள் கூறுகிறபடி பொருந்தாது. ஏவஞ்ச வாக்யாந்வயாதிகரணத்தில் விசிஷ்டாத்வைதமே ஸித்தாந்தீகரிக்கப் பட்டதென்று தெளிவாயிற்று. கீழ் சாரீரக மீமாம்ஸா சாஸ்த்ரத்திற்கு அத்வைதத்தில் நோக்கில்லை யென்பதும் அத்வைத கண்டனத்தில் தான் முழு நோக்கு என்பதும் பல பல ப்ரஹ்மஸூத்ரங்களைக் கொண்டே நிரூபிக்கப்பட்டது. இனி அந்த சாரீரக மீமாம்ஸா சாஸ்திரத்திற்கு நாராயண பாரம்ய ப்ரதிபாதனத்தில்தான் முழு நோக்கென்னுமிடம் மூதலிக்கப் படுகின்றது.

541. ஜகத்காரண வஸ்துவாதிகளான வேதாந்த வாக்யங்களெல்லாம் ஸ்ரீமந் நாராயணனிடத்திலே தான் பர்யவஸிக் கின்றன என்று ஸூத்ரகாரர் தாமே ஸித்தாந்தம் செய்திருக்கிறாரென்பதை நன்கு நிரூபித்துக் காட்டுகிறோம். "அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா" என்று ப்ரஹ்ம விசாரத்தை ப்ரஸ்தாவித்து "ஜந்மாத்யஸ்ய யத:" என்கிற அடுத்த ஸூத்ரத்தினாலே, 'எந்த வஸ்துவினிடத்தில் நின்றும் ஜகஜ் ஜந்ம ஸ்திதி லயங்கள் ஆகின்றனவோ அது ப்ரஹ்மம்" என்று ப்ரஹ்ம லக்ஷணம் காட்டினார் வியாஸர். வேதாந்தங்களில் ஜகத்காரண வஸ்துவைத் தெரிவிக்கின்ற வாக்யங்கள் ஒரே விதமாக இல்லை. பரஸ்பர விருத்தங்கள் போல் தோன்ற நின்றன என்பது பிரஸித்தமான விஷயம். ஏதோ ஒரு வஸ்துதான் ஜகத் காரணமாக இருக்க முடியுமே ஒழிய பல வஸ்துக்கள் அப்படியிருக்க முடியாதென்கிற நிச்சயம் ஆவச்யகமானது. பரஸ்பர வாக்யங்களாலே இந்த நிச்சயம் எப்படி உண்டாகுமென்று தோன்றக் கூடிய சங்கையை ஸூத்ரகாரர் பரிஹரித்தே யிருக்கிறார். எப்படி பரிஹரித்திருக் கிறாரென்றால், ஸகல காரண வாக்யங்களுக்கும் ஐககண்ட்யத்தைக் காட்டிப் பரிஹரித்திருக்கிறார். ஸாகாங்க்ஷ வாக்யங்களுக்கு நிராகாங்க்ஷ வாக்யங்களில் பர்யவஸானம் நியாயமென்பது யாவருமிசைந்த தொன்றாம். இதையே நெஞ்சில் கொண்ட வ்யாஸ மஹர்ஷியானவர் ஈக்ஷத்யதிகரணம் முதலானவற்றால் காரண வாக்யங்கள் எல்லாவற்றிற்கும் புருஷஸூக்த ப்ரதிபாத்யனான நாராயணனிடத்தில் பர்யவஸாநத்தைக் காட்டியுள்ளார். இது தன்னை இங்கு விளக்கமாக உபபாதிக்கிறோம்.

542. காரண வாக்யங்களில் ஸாகாங்க்ஷம் நிராகாங்க்ஷம் என்கிற பேதத்தை விவரித்தல்: ஜகத்காரண வஸ்துவை ப்ரஸ்தாவிக்கின்ற வாக்யங்கள் காரண வாக்யமெனப்படும். அந்த வாக்யங்களை ஸாகாங்க்ஷ வாக்யங்கள் என்றும், நிராகாங்க்ஷ வாக்யங்களென்றும் இருவகையாகப் பிரித்துக் கொள்ள வேண்டியது முதற் காரியம். ஸாகாங்க்ஷ வாக்யங்களென்பவை தாமும் இரு வகையா யிருக்கும். 1. ஸாமான்ய

சப்தத்தோடு கூடியிருந்து விசேஷ ப்ரதிபத்தியை அபேக்ஷித்திருக்குமவை; 2. அநுவாத ரூபமாய்க் கொண்டு புரோவாதத்தை அபேக்ஷித்திருக்குமவை – என்று. ''ஸதேவ ஸோம்ய இதமக்ர ஆஸித் ஏகமேவ அத்விதீயம்'' ''ஸேயம் தேவதைக்ஷத'' இத்யாதி வாக்யங்களில் 'ஸத்' என்றும் 'தேவதா' என்றும் ஸாமான்ய சப்தங்களே யிருக்கையாலே இவை விசேஷ ப்ரதிபத்தி ஸாகாங்க்ஷங்களென்பது ஸ்பஷ்டம். ஸாகாங்க்ஷ வாக்யங்களில் கீழ்ச்சொன்ன இரண்டு வகைகள் தவிர மூன்றாவது வகையும் ஒன்று சொல்ல வேண்டியதாகிறது.

543. அதாவது, அயோக்யமான அர்த்தத்தைத் தெரிவிக்கும் வாக்யங்கள் யோக்யார்த்த ப்ரதிபத்தி ஸாகாங்க்ஷமா யிருப்பதாம். ப்ரதர்தந வித்யையில் ''மாமுபாஸ்வ ஏததேவாஹம் மநுஷ்யாய ஹிததமம் மந்யே'' என்று இந்திரன் சொன்ன வாக்யம் போன்றவை இந்த வகுப்பில் சேரக் கடவன. ஆக மூவகுப்பாகப் பிரியலுற்ற ஸாகாங்க்ஷங்களான காரண வாக்யங்கள் வஸ்து விசேஷத்தை நிர்ணயிப்பதில் ஸ்வதந்திரமாக அசக்தங்களாகையாலே நிராகாங்க்ஷங்க ளான வாக்ய விசேஷங்களைக் கொண்டே வஸ்து விசேஷத்தை நிர்ணயிக்க வேண்டியதாகிறது. யோக்யார்த்த விசேஷ ப்ரதிபாதகங்களாய்க் கொண்டு இதர வாக்யங்களை எதிர்பாராத வாக்யங்களே நிராகாங்க்ஷ வாக்யங்களென்று தேறிற்று.

544. ''ஏகோ ஹவை நாராயண ஆஸீத் ந ப்ரஹ்மா நேசாந:'' இத்யாதி வாக்யங்களே அப்படிப்பட்டவை என்று ஸாரஜ்ஞர்கள் நிஷ்கர்ஷித்துள்ளார்கள். மேலே காட்டிய வாக்ய விசேஷத்தில் ஸாமாந்ய சப்தம் சேர்ந்திருக்கவில்லை. அநுவாத ரூபத்வமுமில்லை. அயோக்யார்த்த ப்ரதிபாதநமுமில்லை. ஸத், ப்ரஹ்ம, ஆத்மா, தேவதா இத்யாதிகளான பதங்களிருந்தாலன்றோ ஸாமான்ய சப்தம் சேர்ந்திருப்பதாக ஆகும். அவை இல்லையே, யச்சப்த கடிதமாயிருந்தா லன்றோ அநுவாத ரூபமாக ஆகும். அதுவுமில்லையே. அயோக்யார்த்தப்ரதி பாதகத்வமில்லாமையோடு கூடின அயோக்யார்த்த ப்ரதிபாதகத்வமே யுள்ள தென்பது நிரூபிக்கப்பட வேண்டியதாக நிற்கையாலே அது நிரூபிக்கப்படுகிறது அடுத்தபடியாக.

545.ஈக்ஷத்யதிகரணத்தினால் நாராயணனுக்கே ஜகத்காரணத்வம் விளக்கப்படுவது: சாரீரக மீமாம்ஸையில் சாஸ்த்ராரம்ப ஸமர்த்தநார்த்தமான சதுஸ்ஸூத்ரி முடிந்ததும் ஐந்தாவது அதிகரணம் ஈக்ஷத்யதிகரணம். இதில் விசேஷித்துக்குறிக் கொள்ளத்தக்க ஸூத்ரங்கள் இரண்டு; 'தந்நிஷ்டஸ்ய மோக்ஷோபதேசாத்' 'கதிஸாமாந்யாத்' என்னுமிவை;ஸாதாரணமான ஸச்சப்தத்தையும் தேவதா சப்தத்தையும் கொண்டிருக்கிற ஸத்வித்யையானது புருஷஸூக்த ப்ரதிபந்நனான ஸ்ரீமந் நாராயணன் பக்கலிலே பர்யவஸிப்பதாக இவ்விரண்டு ஸூத்ரங்களாலும் காட்டப்படுகிறது. 'தந்நிஷ்டஸ்ய மோக்ஷோபதேசாத்' என்கிற ஸூத்ரத்தின் பொருளை முன்னம் தெரிந்து கொள்ளவேணும். 'தந்நிஷ்டஸ்ய' என்கிற விடத்துள்ளதான தச்சப்தத்தின் முன்னால் –ஸூத்ரகாரர் கருதிய விஷய வாக்யத்திலுள்ள ஸச்சப்தவாச்யமான வஸ்து கொள்ளப்படுகிறது. ஆகவே, ஸத்தை உபாஸிப்பவனுக்கு முக்தி கிடைப்பதாக ஓதப்படுவதால் ப்ரக்ருத ஸச்சப்தவாச்யமான வஸ்து கொள்ளப் படுகிறது. ஆகவே, ஸத்தை உபாஸிப்பவனுக்கு என்பதாகப் பொருள்

தேறிற்று. ஸத்தை உபாஸிப்பவனுக்கு முக்தி கிடைப்பதாக ஓதப்படுவதால் ப்ரக்ருத ஸச்சப்த வாச்யமான வஸ்து ப்ரதானமாக மாட்டாது என்றதாக ஸூத்ரார்த்தம் தேறும். 'ப்ரதாநந்தான் ஜகத் காரணம்' என்பவர்களை நிரஸிப்பதன்றோ ப்ரஸ்துதம். புருஷஸூக்தத்திலும் உத்தர நாராயணத் திலும் "தமேவம் வித்வாநம்ருத இஹ பவதி நாந்ய: பந்தா அயநாய வித்யதே" என்றும், "நாந்ய: பந்தா வித்யதே அயநாய" என்றும் மோக்ஷோபாயமான உபாஸநத்திற்கு இலக்காகுந்தன்மை நாராயணனுக்கே ஓதப்பட்டுள்ளது.

546. இந்த ஸத்வித்யா ப்ரகரணத்திலும் (அதாவது, சாந்தோக்யத்தில்) "ஆசார்யவாந் புருஷோ வேத; தஸ்ய தாவதேவசிரம் யாவந்ந விமோக்ஷ்யே அத ஸம்பத்ஸ்யே" என்று ஸதுபாஸனமே மோக்ஷோபாயமாகச் சொல்லப்பட்டது. இந்த ச்ருதி வாக்யத்தின் பொருளாவது, எவனுக்கு உபதேஷ்டாவான ஆசார்யன் இருக்கிறானோ அவனே ப்ரஹ்ம வித்தாவான், சரம சரீரத்திலிருந்து விடுபடுமளவே அவனுக்குக் கால தாமதம்; சரம சரீரம் விழுந்தவுடனே ஸச்சப்த நிர்திஷ்டனாய் ஜகத் காரண பூதனான பரம புருஷனை அடைகின்றான். ஸதுபாஸன நிஷ்டனுக்கு சரீரம் விழுமளவுதான் மோக்ஷப்ராப்தியில் தாமதம்; சரீரம் தொலைந்தவுடனே முக்தனாகிறான்–என்பதாம். இதனால் நாராயணனே ஸச்சப்த வாச்யனென்று அறுதியிடப் படுவதனால் ப்ரக்ருதமான ஸத்து ப்ரதாநமன்று என்றதாக ஸூத்ர தாத்பர்யம் தேறுகிறது. "தமேவம் வித்வாநம்ருத இஹ பவதி" இத்யாதிகளான உதாஹ்ருத வாக்யங்களால் நாராயணோபாஸனந்தான் மோக்ஷோபாயமென்று நிச்சயிக்கப்பட்ட வளவில் "தந்நிஷ்டஸ்ய மோக்ஷோபதேசாத்" என்று ஸூத்ர மியற்றின மஹர்ஷியானவர் நாராயணோபாஸகனையே விவக்ஷித்தாரா கிறார் என்று நிர்ணயிப்பதில் தட்டுண்டோ?

547. "தந்நிஷ்டஸ்யேத்யாதி ஸூத்ரத்தின் விவரணம். கீழே நாம் விவரித்த விஷயத்தில் பிறர் சொல்லக்கூடியதொன்று உண்டு; அதாவது; தந்நிஷ்டஸ்ய மோக்ஷோபதேசமாகிற ஹேதுவைக் கொண்டு ப்ரதாநம் ஜகத்காரணமன்று என்று நிரஸிப்பது மட்டுமே இங்கு ஸூத்ரகாரருக்கு உத்தேச்யமானது; நாராயணனே ஜகத்காரணபூதனென்று ஸ்தாபிப்பதில் இங்கு நோக்கே கிடையாது. சப்தத்தினால் கிடைப்பதற்கு மேற்படக் கொள்ளத்தகாது என்று. (இதற்கு மறுப்பு) இங்ஙனம்: சொல்வது தவறு, இதர ப்ரதிக்ஷேபத்தில் மட்டுமே ஸூத்ர தாத்பர்யமென்று கொண்டால் ந்யூநதை யாகும். இந்த வேதாந்த சாஸ்த்ரம் எதற்காக ஆரம்பிக்கப்பட்டதென்று பார்க்க வேணும்; முமுக்ஷுவானவனை மோக்ஷோபாய பூதமான வஸ்துவை உபாஸிப்பதில் ப்ரவர்த்திக்கச் செய்வதன் பொருட்டு விசிகித்ஸையற்ற ப்ரஹ்மஜ்ஞாந உத்பாதநத்தின் பொருட்டு சாஸ்த்ரம் ஆரம்பிக்கப்பட்டது. சாஸ்த்ராரம்பத்திற்குப் பலன் இதுதானென்பதை வேதாந்திகள் யாவரும் ஸமரூபமாக இசைந்தே தீருவார்கள். 'ஜகஜ் ஜந்மாதி காரணம் ப்ரஹ்ம' என்று ப்ரஹ்ம லக்ஷணம் சொல்லி பிரதாநாதிகள் ஜகத்காரணமன்று என்று கண்டித்த வளவில் விசிகித்ஸையற்ற ப்ரஹ்மஜ்ஞாநோத்பாதனம் செய்ததாக ஆய்விடுமோ? ஒரு நாளுமாகாது. ப்ரஹ்ம ருத்ராதிகளிடையில் எந்த தேவதை ஜகஜ்

ஜந்மாதி காரணம்? என்கிற விசிகித்ஸை பரிஹரிக்கப்படாத அளவில் நிஸ்ஸம்சய ப்ரஹ்மஜ்ஞாநோத்பாதநம் செய்யப்பட்டதாக ஆகாமாட்டாது என்பதைப் பேதையரும் அறிவர். ஏவஞ்ச, இன்ன தேவதைதான் ஜகத்காரணமென்று நிஸ்ஸந்தேஹமாகத் தெரிவிக்கப்படாத அளவில் சாஸ்த்ராரம்ப ப்ரயோஜனம் தேறாமையாலே ந்யூநதைக்குப் பரிஹாரமே ஏற்படாது.

548. ஆகவே, ஜகத்காரண பூதப்ரஹ்ம சப்தவாச்யமான தேவதா விசேஷம் இன்னதென்று நிர்த்தாரணம் செய்வதிலும் சாஸ்த்ரம் தத்பரமானது என்று இசைந்து தீர வேண்டும். "தந்நிஷ்டஸ்ய மோக்ஷோபதேசாத்" என்கிற ஹேதூக்தி யின் ஸ்வாரஸ்யத்தினாலும் தேவதா விசேஷ நிர்ணயத்தை ஸூத்ரகாரர் செய்யக் கருதியுள்ளாரென்பது செவ்வனே விளங்கா நின்றது. மோக்ஷோபாய பூதமான வஸ்துவுக்கு உபாஸந விஷயத்வம் யாதொன்று இங்குச் சொல்லப்பட்டிரா நின்றதோ இது ப்ரதாநாதி ப்ரதிக்ஷேபக மாத்ரமே யன்று, தேவதா விசேஷ விஷயகத்வத்தை ஸாதிப்பதாகவுமாகிறது. "தமேவம் வித்வாந் அம்ருத இஹபவதி" என்கிற ச்ருதி வாக்கியத்திலுள்ளதான தச்சப்தமானது எந்த தேவதா விசேஷத்தைச் சொல்லுகின்றதோ, அதனையே "தந்நிஷ்டஸ்ய" என்கிற ஸூத்ரத்திலுள்ள தச்சப்தமும் சொல்லக் கடவதென்பது திண்ணம். "வாஸுதேவம் அநாராத்ய கோ மோக்ஷம் ஸமவாப்ஸ்யதி" என்பது முதலான பல ப்ரமாண வசனங்களை இங்கு அநுஸந்திப்பது.

549. ஆக, மோக்ஷ ஹேதுத்வமாகிற லிங்கத்தினால் ஸச் சப்தத்தில் பொருளை நிஷ்கர்ஷிப்பவரான வியாஸ முனிவர் தமது ஸூத்ரத்தில் நாராயணனையே கருதினார் என்பது நிச்சயம். ஸச்சப்த வாச்யன் நாராயணனே என்பது மற்றொரு ப்ரகாரத்தாலும், நிர்ணயிக்கத்தக்கதாம். அதாவது, புருஷஸூக்தத்திலும், உத்தர நாராயணத்திலும் "ஸர்வாணிரூபாணி விசித்ய தீர: நாமாநி க்ருத்வா அபிவதந் யதாஸ்தே" என்பதனால் நாமரூப வ்யாகர்த்தாவாக இருக்குந் தன்மை சொல்லப்பட்டது. இது ஸத்வித்யா ப்ரகரணத்திலும் "ஸேயம் தேவதா இமாஸ் திஸ்ரோ தேவதா அநேந ஜீவேநாத்மநா அநுப்ரவிச்ய நாமரூபே வ்யாக்ரோத்" என்றோதப்பட்டிருப்பது. ஸச்சப்தவாச்யன் நாராயணனே என்பதற்கு ப்ரத்யபிஜ் ஞாபகமாகும்.

550. 'கதிஸாமாந்யாத்' என்கிற ஸூத்ர விவரணம்: ஈக்ஷத்யதிகரணத்திலிருந்து மேலே நாமெடுத்துக் காட்டின இரண்டு ஸூத்ரங்களில் "தந்நிஷ்டஸ்ய மோக்ஷோபதேசாத்" என்கிற முந்தின ஸூத்ரத்தைப் பற்றிச் சொல்ல வேண்டுமவை சொன்னோம் கீழ்; இனி "கதிஸாமாந்யாத்" என்கிற அடுத்த ஸூத்ரத்தைப் பற்றிச் சொல்லுகிறோம். (கதிஸாமாந்யாத்) கதியாவது ப்ரவ்ருத்தி; அதாவது அர்த்த போதகத்வம். (ஸாமாந்யாத்) அது ஸமாநகமாயிருக்க வேண்டியது ஆவச்யகமாகையாலே என்று பொருள். காரண வாக்யங்களெல்லாம் ஒரு மிடறாயிருக்க வேண்டுகையாலே என்றபடி.

551. அதிகரணந்தோறும் விஷய வாக்யங்கள் நாராயண பரங்களே. பலசொல்லி என்? ஸாரமாகச் சொல்லலாவதிவ்வளவே. ஸூத்ரங்களின் பொருளை நிர்வஹிப்பதற்கு உபநிஷத்துக்க ளிலிருந்து விஷயவாக்யங்கள் கொள்ளப் படுகின்றனவென்பது

யாவருமறிந்ததே. சங்கர பாஷ்யத்திலும் ஸ்ரீபாஷ்யத்திலும் பெரும்பாலும் விஷயவாக்யங்கள் வெவ்வேறாகக் கொள்ளப்படாமலிருப்பதை யும் காண்கிறோம். அந்த விஷயவாக்யங்க ளிலெல்லாம் சொல்லப்படுகிற தன்மைகள் ஸ்ரீமந்நாராயணனுக்கே அஸாதாரணங்க ளென்பது ச்ருதிபுராணாதிகளில் ப்ரஸித்தம் – என்கிற விதனையும் முக்கியமாகக் குறிக்கொள்க. ஆனந்தமயத்வம், ஆதித்ய மண்டத்தினுள்ளிருத்தல், புண்டரீகாக்ஷத் வம், அபஹதபாப்மத்வம், மோக்ஷார்த்த உபாஸந விஷயத்வம், அக்நி இந்திரன் முதலிய ஸர்வ தேவதைகளுக்கும் அந்தர்யாமியாயிருத்தல், ஸர்வ பூதங்களுக் கும் அந்தர்யாமியாயிருத்தல் இத்யாதிக ளான தரும விசேஷங்களுக்கு இருப்பிடமான வஸ்துவே ஜகத்காரணமாகக் கூடியதென்று நிஷ்கர்ஷிக்கின்ற ஸூத்ரகார ருடைய உள்ளத்தில் ஸ்ரீமந் நாராயணனே உறைந்திருக்கின்றானென்பது பிராமாணிகர்களுக்கு அறிவரிதன்று. இனி ஆதிசங்கராசாரியர் நாராயண பாரம்யத் தையே ஸ்தாபித்தவர் என்பது நிரூபிக்கப் படுகிறது.

552. ஆதிசங்கராசார்யருடைய நாராயண பக்தியை விளக்குதல்: பகவத் பாதர் இயற்றிய விஷ்ணுஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் தேவதாந்தரர்களுக்கு அவரத்வத்தை நிலைநாட்டி ஸ்ரீமந் நாராயணனுக்குப் பரத்வம் ஸ்தாபித்திருப் பது கதிராயிரமிரவி கலந்தெறித்தாலொப்ப விளங்கா நின்றது. விஷ்ணுஸஹஸ்ர நாமத்திற்கு பாஷ்யம் செய்த பகவத் பாதர் சிவ ஸஹஸ்ரநாமத்திற்கு பாஷ்யம் செய்யவில்லை. "பிற்பட்ட காலத்தில்தான் அஃது உண்டாயிற்று; ஆதலால் தான் அதற்கு பாஷ்யம் செய்ய ப்ரஸக்தி யுண்டாகவில்லை" என்கிறார்கள். அது நிற்க. பாஞ்சராத்ராகம ப்ராமாண்யாதி கரணத்தில், "உத்பத்த்யஸம்பவாத்" என்கிற ஸூத்ரபாஷ்யத்தில் "தத்ர பாகவதா மந்யந்தே" என்று தொடங்கி பாஞ்சராத்ர ஆகம ப்ரமேயங்களான விஷயங்கள் மூன்றென்று ஸங்க்ரஹித்து, அவற்றுள் இரண்டு விஷயங்களில் தம்முடைய ஸம்மதியைக் காட்டி, மூன்றாவதான ஒரு விஷயத்தில் மட்டும் வைமத்யம் காட்டியுள்ளார். பகவத்பாதர், தமக்கு ஸம்மதமாகக் காட்டின இரண்டு விஷயங்கள் இவை;– (இங்கு அவருடைய பங்க்திகளையே உதாஹரிப்போம்). "தத்ர யத்தாவதுச்யதே யோஸௌ நாராயண: ப்ரஸித்த: பரமாத்மா ஸர்வாத்மா இதி, தத் ந நிராக்ரியதே. யதபி தஸ்ய பகவத: அபிகமநாதிலக்ஷணமாராதநம் அஜஸ்ர மநந்யசித்ததயா அபிப்ரேயதே, ததபி ந ப்ரதிஷித்யதே; ச்ருதி ஸம்ருத்யோரீச்வர ப்ரணிதாநஸ்ய ப்ரஸித்தத்வாத்" என்பன அவருடைய பாஷ்ய பங்க்திகள். இவற்றால், ஸ்ரீமந் நாராயணனுக்கே பாரம்ய ப்ரதிஷ்டாபநத்தில் பகவத் பாதர் ஊக்கமுடையவரென்பது மறக்கத் தக்கது அன்று.

ஈச்வராதி ஸாமாந்ய சப்தங்களுள்ளவிடங்களில் வாஸுதேவ நாராயணாதி விசேஷ சப்தங்களையிட்டு வியாக்கியானம் செய்யத் தொடங்கினவரும் பகவத்பாதரேயாவர். மேலேயெடுத்துக் காட்டின உத்பத்த்யஸம்பவாதிகரணபாஷ்யபங்க்தி யில் "பகவதோ நாராயணஸ்ய அபிகமநாதி லக்ஷணமாராதநமஜஸ்ரம்" என்றவிடத்தில் (அநந்யசித்ததயா) என்றெழுதப் பட்டுள்ளதில் இதாநீந்தனர்கள் கண்மூடிகளாயிருக் கின்றனர். ருத்ராதிகளான அந்யர்களிடத்திலும் சித்தத்தை வைத்துச் செய்யப்படுகிற

ஜந்மாதி காரணம்? என்கிற விசிகித்ஸை பரிஹரிக்கப்படாத அளவில் நிஸ்ஸம்சய ப்ரஹ்மஜ்ஞாநோத்பாதநம் செய்யப்பட்டதாக ஆகாமாட்டாது என்பதைப் பேதையரும் அறிவர். ஏவஞ்ச, இன்ன தேவதைதான் ஜகத்காரணமென்று நிஸ்ஸந்தேஹமாகத் தெரிவிக்கப்படாத அளவில் சாஸ்த்ராரம்ப ப்ரயோஜனம் தேறாமையாலே ந்யூநதைக்குப் பரிஹாரமே ஏற்படாது.

548. ஆகவே, ஜகத்காரண பூதப்ரஹ்ம சப்தவாச்யமான தேவதா விசேஷம் இன்னதென்று நிர்த்தாரணம் செய்வதிலும் சாஸ்த்ரம் தத்பரமானது என்று இசைந்து தீர வேண்டும். "தந்நிஷ்டஸ்ய மோக்ஷோபதேசாத்" என்கிற ஹேதூக்தி யின் ஸ்வாரஸ்யத்தினாலும் தேவதா விசேஷ நிர்ணயத்தை ஸூத்ரகாரர் செய்யக் கருதியுள்ளாரென்பது செவ்வனே விளங்கா நின்றது. மோக்ஷோபாய பூதமான வஸ்துவுக்கு உபாஸந விஷயத்வம் யாதொன்று இங்குச் சொல்லப்பட்டிரா நின்றதோ இது ப்ரதாநாதி ப்ரதிக்ஷேபக மாத்ரமே யன்று, தேவதா விசேஷ விஷயகத்வத்தை ஸாதிப்பதாகவுமாகிறது. "தமேவம் வித்வாந் அம்ருத இஹபவதி" என்கிற ச்ருதி வாக்கியத்திலுள்ளதான தச்சப்தமானது எந்த தேவதா விசேஷத்தைச் சொல்லுகின்றதோ, அதனையே "தந்நிஷ்டஸ்ய" என்கிற ஸூத்ரத்திலுள்ள தச்சப்தமும் சொல்லக் கடவதென்பது திண்ணம். "வாஸுதேவம் அநாராத்ய கோ மோக்ஷம் ஸமவாப்ஸ்யதி" என்பது முதலான பல ப்ரமாண வசனங்களை இங்கு அநுஸந்திப்பது.

549. ஆக, மோக்ஷ ஹேதுத்வமாகிற லிங்கத்தினால் ஸச் சப்தத்தில் பொருளை நிஷ்கர்ஷிப்பவரான வியாஸ முனிவர் தமது ஸூத்ரத்தில் நாராயணனையே கருதினார் என்பது நிச்சயம். ஸச்சப்த வாச்யன் நாராயணனே என்பது மற்றொரு ப்ரகாரத்தாலும், நிர்ணயிக்கத்தக்கதாம். அதாவது, புருஷஸூக்தத்திலும், உத்தர நாராயணத்திலும் "ஸர்வாணிரூபாணி விசித்ய தீர: நாமாநி க்ருத்வா அபிவதந் யதாஸ்தே" என்பதனால் நாமரூப வ்யாகர்த்தாவாக இருக்குந் தன்மை சொல்லப்பட்டது. இது ஸத்வித்யா ப்ரகரணத்திலும் "ஸேயம் தேவதா இமாஸ் திஸ்ரோ தேவதா அநேந ஜீவேநாத்மநா அநுப்ரவிச்ய நாமரூபே வ்யாக்ரோத்" என்றோதப்பட்டிருப்பது. ஸச்சப்தவாச்யன் நாராயணனே என்பதற்கு ப்ரத்யபிஜ்ஞாபகமாகும்.

550. 'கதிஸாமாந்யாத்' என்கிற ஸூத்ர விவரணம்: ஈக்ஷத்யதிகரணத்திலிருந்து மேலே நாமெடுத்துக் காட்டின இரண்டு ஸூத்ரங்களில் "தந்நிஷ்டஸ்ய மோக்ஷோபதேசாத்" என்கிற முந்தின ஸூத்ரத்தைப் பற்றிச் சொல்ல வேண்டுமவை சொன்னோம் கீழ்; இனி "கதிஸாமாந்யாத்" என்கிற அடுத்த ஸூத்ரத்தைப் பற்றிச் சொல்லுகிறோம். (கதிஸாமாந்யாத்) கதியாவது ப்ரவ்ருத்தி; அதாவது அர்த்த போதகத்வம். (ஸாமாந்யாத்) அது ஸமாநகமாயிருக்க வேண்டியது ஆவச்யகமாகையாலே என்று பொருள். காரண வாக்யங்களெல்லாம் ஒரு மிடறாயிருக்க வேண்டுகையாலே என்றபடி.

551. அதிகரணந்தோறும் விஷய வாக்யங்கள் நாராயண பரங்களே. பலசொல்லி என்? ஸாரமாகச் சொல்லலாவதிவ்வளவே. ஸூத்ரங்களின் பொருளை நிர்வஹிப்பதற்கு உபநிஷத்துக்க ளிலிருந்து விஷயவாக்யங்கள் கொள்ளப் படுகின்றனவென்பது

யாவருமறிந்ததே. சங்கர பாஷ்யத்திலும் ஸ்ரீபாஷ்யத்திலும் பெரும்பாலும் விஷயவாக்யங்கள் வெவ்வேறாகக் கொள்ளப்படாமலிருப்பதை யும் காண்கிறோம். அந்த விஷயவாக்யங்க ளிலெல்லாம் சொல்லப்படுகிற தன்மைகள் ஸ்ரீமந்நாராயணனுக்கே அஸாதாரணங்க ளென்பது ச்ருதிபுராணாதிகளில் ப்ரஸித்தம் – என்கிற விதனையும் முக்கியமாகக் குறிக்கொள்க. ஆனந்தமயத்வம், ஆதித்ய மண்டலத்தினுள்ளிருத்தல், புண்டரீகாக்ஷத் வம், அபஹதபாப்மத்வம், மோக்ஷார்த்த உபாஸந விஷயத்வம், அக்நி இந்திரன் முதலிய ஸர்வ தேவதைகளுக்கும் அந்தர்யாமியாயிருத்தல், ஸர்வ பூதங்களுக் கும் அந்தர்யாமியாயிருத்தல் இத்யாதிக ளான தரும விசேஷங்களுக்கு இருப்பிடமான வஸ்துவே ஜகத்காரணமாகக் கூடியதென்று நிஷ்கர்ஷிக்கின்ற ஸூத்ரகார ருடைய உள்ளத்தில் ஸ்ரீமந் நாராயணனே உறைந்திருக்கின்றானென்பது பிராமாணிகர்களுக்கு அறிவரிதன்று. இனி ஆதிசங்கராசாரியர் நாராயண பாரம்யத் தையே ஸ்தாபித்தவர் என்பது நிரூபிக்கப் படுகிறது.

552. ஆதிசங்கராசார்யருடைய நாராயண பக்தியை விளக்குதல்: பகவத் பாதர் இயற்றிய விஷ்ணுஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் தேவதாந்தரர்களுக்கு அவரத்வத்தை நிலைநாட்டி ஸ்ரீமந் நாராயணனுக்குப் பரத்வம் ஸ்தாபித்திருப் பது கதிராயிரமிரவி கலந்தெறித்தாலொப்ப விளங்கா நின்றது. விஷ்ணுஸஹஸ்ர நாமத்திற்கு பாஷ்யம் செய்த பகவத் பாதர் சிவ ஸஹஸ்ரநாமத்திற்கு பாஷ்யம் செய்யவில்லை. "பிற்பட்ட காலத்தில்தான் அஃது உண்டாயிற்று; ஆதலால் தான் அதற்கு பாஷ்யம் செய்ய ப்ரஸக்தி யுண்டாகவில்லை" என்கிறார்கள். அது நிற்க. பாஞ்சராத்ராகம ப்ராமாண்யாதி கரணத்தில், "உத்பத்த்யஸம்பவாத்" என்கிற ஸூத்ரபாஷ்யத்தில் "தத்ர பாகவதா மந்யந்தே" என்று தொடங்கி பாஞ்சராத்ர ஆகம ப்ரமேயங்களான விஷயங்கள் மூன்றென்று ஸங்க்ரஹித்து, அவற்றுள் இரண்டு விஷயங்களில் தம்முடைய ஸம்மதியைக் காட்டி, மூன்றாவதான ஒரு விஷயத்தில் மட்டும் வைமத்யம் காட்டியுள்ளார். பகவத்பாதர், தமக்கு ஸம்மதமாகக் காட்டின இரண்டு விஷயங்கள் இவை;– (இங்கு அவருடைய பங்க்திகளையே உதாஹரிப்போம்). "தத்ர யத்தாவதுச்யதே யோஸௌ நாராயண: ப்ரஸித்த: பரமாத்மா ஸர்வாத்மா இதி, தத் ந நிராக்ரியதே. யதபி தஸ்ய பகவத: அபிகமநாதிலக்ஷணமாராதநம் அஜஸ்ர மநந்யசித்ததயா அபிப்ரேயதே, ததபி ந ப்ரதிஷித்யதே; ச்ருதி ஸம்ருத்யோரீச்வர ப்ரணிதாநஸ்ய ப்ரஸித்தத்வாத்" என்பன அவருடைய பாஷ்ய பங்க்திகள். இவற்றால், ஸ்ரீமந் நாராயணனுக்கே பாரம்ய ப்ரதிஷ்டாபநத்தில் பகவத் பாதர் ஊக்கமுடையவரென்பது மறக்கத் தக்கது அன்று.

ஈச்வராதி ஸாமாந்ய சப்தங்களுள்ளவிடங்களில் வாஸுதேவ நாராயணாதி விசேஷ சப்தங்களையிட்டு வியாக்கியானம் செய்யத் தொடங்கினவரும் பகவத்பாதரேயாவர். மேலேயெடுத்துக் காட்டின உத்பத்த்யஸம்பவாதிகரணபாஷ்யபங்க்தி யில் "பகவதோ நாராயணஸ்ய அபிகமநாதி லக்ஷணமாராதநமஜஸ்ரம்" என்றவிடத்தில் (அநந்யசித்ததயா) என்றெழுதப் பட்டுள்ளதில் இதாநீந்தனர்கள் கண்மூடிகளாயிருக் கின்றனர். ருத்ராதிகளான அந்யர்களிடத்திலும் சித்தத்தை வைத்துச் செய்யப்படுகிற

ஸ்ரீமந்நாராயணாராதநம் அநந்யசித்த க்ருதமாக எப்படியாகுமென்பதை அவர்கள் ஆலோசிக்க மாட்டிற்றிலர். நாராயணனைப் பரிவாரத்தோடுங்கூட ஆராதிப்பதும் சிந்திப்பதும் செய்தால் இது அநந்யசித்தத்வத்திற்கு விரோதமாகுமோ! என்று அவர்கள் கேட்கக் கூடும். ருத்ராதிகளிடத்தில் ஸ்ரீமந்நாராயண பரிவாரத்வ ப்ரதிபத்தி குறையற்றதாகில் குசலமேயாகுமிவர்களுக்கு.

553. ஆதிசங்கராசார்யருடைய கீதாபாஷ்ய ஸூக்திவிசேஷங்களைக் காட்டுதல்: சங்கர பகவத்பாதர் விஷ்ணு பக்தரா? சிவ பக்தரா? என்று விசாரித்து நிர்ணயிக்க வேண்டுவது அவசியமானது. ச்ருதீதிஹாஸ புராணாதி ஸமஸ்தப்ரமாண விசேஷங்களுள் பகவத்கீதையே முன்னணியில் நிற்கின்றதென்பதில் யார்க்கும் விவாதமிராது. எம்பெருமான் தானே சோதிவாய் திறந்து பணித்தது என்கிற மிக்க சிறப்பன்றோ இதற்குள்ளது. அப்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே யென்றும் ஸ்ரீமஹாவிஷ்ணுவேயென்றும் இதில் வைதிகர்களும் ஏக கண்டர்களே யாவர். இதில் விப்ரதிபத்தி கொண்ட வைதிகர் ஒருவருமிலர். இத்தகைய நூலில் ஸ்ரீமஹாவிஷ்ணுவின் பரத்வமும் தேவதாந்தரங்களின் அவரத்வமும் அடிக்கடி விளக்கப்பட்டுள்ளது. (10–8) ''அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்தஸ்ஸர்வம் ப்ரவர்த்ததே'' என்றவிடத்தில் சங்கரபாஷ்ய பங்க்தி இது காணீர்;– அஹம் பரம் ப்ரஹ்ம வாஸுதேவாக்ய்யம், ஸர்வஸ்ய ஜகத: ப்ரபவ: – உத்பத்தி: மத்த் ஏவ ஸ்திதிநாச க்ரியாபலோபபோக லக்ஷணம் விக்ரியா ரூபம் ஸர்வம் ஜகத் ப்ரவர்த்ததே'' இத்யாதி. மூலத்தில் நாராயணபதமோ விஷ்ணு பதமோ காணப்படாதவிடங்களிலெல்லாம் நியமேந விஷ்ணு நாயண வாஸுதேவ பதங்களையிட்டே பாஷ்யம் இயற்றுகிறார் பகவத்பாதரென்பது வ்யபிசரியாத விஷயம். ''அநந்யாச் சிந்தயந்தோமாம்'' என்றவிடத்தில் ''பரம் தேவம் நாராயணம்... பர்யுபாஸதே–தேஷாம் பரமார்த்ததர்சிநாம்'' என்று பாஷ்யமிட்டிருக் கின்ற பகவத்பாதர் பரதேவதையான நாராயணனை உபாஸிப்ப வர்கள் யாவரோ அவர்களே உண்மை யறிவாளிகள் என்று காட்டினாராகிறார். ஸ்ரீமஹாவிஷ்ணுவுக்குப் போல ருத்ரனுக்கும் பாரம்யமுண்டு என்கிற வாதத்தை ஸஹிப்பவரல்லர் பகவத்பாதர்.

554. ஸ்ரீமந்நாராயண வ்யதிரிக்த தேவதைகளை பூஜிப்பவர்களைப் பற்றின ப்ரஸ்தாவம் கீதையில் இல்லாமற் போகவில்லை. (7–20) ''காமைஸ் தைஸ்தைர் ஹ்ருதஜ்ஞாநா: பரபத்யந்தே அந்யதேவதா:'' என்று தலைக்கட்டப் பட்டுள்ளது. இந்த ச்லோகத்தின் முடிவில் பகவத் பாதர் எழுதியுள்ள வாக்கியம் பரம பக்தர்களை அவசமாகவே கண்ணீர் பெருக்க வைக்கின்றது. அவ்விடத்திலுள்ள வாக்கியமீது காணீர்; ''ஏவம் ஸமாநே அப்யாயாஸே மாமேவ ந ப்ரபத்யந்தே அநந்தபலாய; அஹோ கலு கஷ்டதரம் வர்த்ததே இத்யநுக்ரோசம் தர்சயதி பகவான்'' என்று, ஸ்ரீமந்நாராயணனை பூஜிப்பவர்களுக்கே அநந்தாக்ஷயபலன் பெறுவதற்கு அவகாசமுள்ளதென்று அறிந்தவர்களுங்கூட க்ஷுத்ரபலன்களை விரும்பி தேவதாந்தர பஜனம் செய்கிறார்களே! என்று பகவான் தானே கண்ணீர் விட்டழுது கதறுவதாக ஸாக்ஷாத்கரித்தன்றோ பகவத்பாதர் இதை யெழுதியுள்ளார்.

555. பதினோராமத்யாயத்தில் விச்வருபக் காட்சி என்பது அமைந்திருப்பதானது தேவதாந்தரங்களின் அவரத்வத்தைக் கையிலங்கு நெல்லிக்கனியாகக் காட்டுவதற்கேயன்றோ. அதில் மூன்றாவது ச்லோகத்தில்–“பகவானே! நீயே பரமேச்வரனென்பது உண்மையே; அதைக் கட்கூடாகக் காண விரும்புமெனக்கு உன்னால் வைஷ்ணவ ரூபத்தைக் காட்டிக் கொடுக்க முடியுமா? என்று அர்ஜுனன் தனது கருத்தை ஸூசிப்பித்தவளவில் “பச்யாதித்யாந் வஸூந் ருத்ராநச்விநௌ மருதஸ்ததா” என்று தன்னுடைய திவ்யமங்கள விக்ரஹத்தினேகதேசத்திலொடுங்கியிருந்த ஸமஸ்த தேவர்களையும் காணுமாறு காட்டிக் கொடுத்தருளினன் ஸ்ரீமந்நாராயணன். பிறகு அவனருளிய திவ்ய சக்ஷுஸ்ஸாலே கண்ட அர்ஜுனன் “பச்யாமி தேவாந் தவ தேவ தேஹே” என்று தொடங்கி ப்ரஹ்மருத்ராதி ஸகல தேவதா கணங்களையும் அத்திருமேனியில் காண்பதாகப் பேசினன்.இதை இந்திரஜாலம் என்று சொல்லாமையினாலே அத்வைத வாதம் அடியறுப்புண்டது. தேவதாந்தர பாரம்யவாதமோ நெடுந்தூரத்தில் தள்ளப்பட்டொழிந்தது. நாராயணனில் வேறுபட்டதொரு தேவதை இங்ஙனே விச்வரூபம் காட்டித் தன் பக்கலில் நாராயணன் நிலீனனாயிருக்கும் படியைக் காட்டிற்றுண்டோ? காட்டத்தான் முடியுமோ? “ருத்ராதித்யா வஸவோ யே ச ஸாத்யா விச்வேச்விநௌ மருதச்சோஷ்மபாச்ச, கந்தர்வ யக்ஷாஸுரஸித்தஸங்கா வீக்ஷந்தே த்வாம் விஸ்மிதாச்சைவ ஸர்வே” என்னுமிந்த ச்லோகமானது விசேஷித்து ருத்ராதிகளின் அவரத்வத்தை அறுதியிடா நின்றதாயிற்று.

556. பகவத்பாத ஸூக்தி ஸார முணர்த்துதல்: பகவத் கீதை ஆறாம் அத்யாயத்தில் முடிவான சுலோகமிது. “யோகிநாமபி ஸர்வேஷாம் மத்கதேந அந்தராத்மநா, ச்ரத்தாவாந்பஜதே யோமாம் ஸ மே யுக்ததமோ மத:” என்பது. இங்கு சங்கர பாஷ்ய பங்க்தி வருமாறு– “யோகிநாமபி ஸர்வேஷாம் ருத்ராதித்யான் அபராணாம். மத்கதேந–மயி வாஸுதேவே ஸமாஹிதேந, அந்தராத்மநா அந்த: கரணேன, ச்ரத்தாவான்–ச்ரத்ததரஸ்ஸந், பஜதே–ஸேவதே, யோ மாம், ஸ மே–மம யுக்ததம: அதிசயேந யுக்த: மத அபிப்ரேத:” என்று. இதற்கு விவரணம் அநபேக்ஷிதம். பக்ஷபாத மற்றவர்கள் நற்றெளிவு பெறுவர்கள்.

557. சங்கராசாரியருடைய ஸஹஸ்ர நாம பாஷ்ய ஸூக்திகள் காட்டுதல்: பகவத்பாதர் ஸஹஸ்ரநாமபாஷ்யத்திலும் பல பல இதிஹாஸங்களை யெடுத்துக் காட்டி நாராயண பாரம்யத்தைத் திடப்படுத்தி யுள்ளார். விஷ்ணுவின் தாழ்வையோ, தேவதாந்தரத்தின் உயர்வையோ ஒரிடத்திலும் அவர் காட்டினதில்லை. கேசவநாம பாஷ்யத்தில் “கோ ப்ரஹ்மேதி ஸமாக்யாத ஈசோஹம் ஸர்வதேஹிநாம், ஆவாம் தவாங்கே ஸம்பூதௌ தஸ்மாத் கேசவநாமவாந்” என்று சொல்லிக் கொண்டே சிவபெருமான் இந்த கேசவ நாமத்தை ஸமர்ப்பித்ததாக ஹரிவம்சத்தில் சொல்லப்பட்டுள்ள இதிஹாஸத்தை உதாஹரித்துள்ளார் பகவத் பாதர். (அர்க்க:) என்னும் திருநாமத்தின் பாஷ்யத்தில் “ப்ரஹ்மாதிபி: பூஜ்யதமைரபி அர்ச்சநீயத்வாத் அர்க்க:” என்ற விவரணம் காட்டினார். இங்கு ஆதிசப்தத்தால் முந்துற முன்னம் க்ரஹிக்கக் கூடியவர் பார்வதீபதி அல்லவோ? ஏன்? ‘ஸப்ரஹ்மா ஸ சிவ: ஸேந்த்ர:’ என்றோதுகிற வேதபுருஷன் பிரமனுக்கடுத்தபடி

சிவபிரானைச் சொல்லி வைத்திருப்பது ப்ரஸித்தமன்றோ? (அமிதாசந:) என்னும் திருநாமத்தின் பாஷ்யத்திலும் ஸம்ஹாரஸமயே விச்வம் அச்நாதீதி அமிதாசந: “ என்று விவரித்தார் பகவத்பாதர். சிவபெருமான் விச்வபஹிர்ப் பூதனல்லனே. “நளிர்மதிச் சடைநனம் நான்முகக் கடவுளும்” என்கிற ஸூத்திரத் தில் க்ருத்ஸ்நமான சராசரத்தையும் உண்டவனென்று நிர்ணயிக்கப்பட்ட நாராயணன் சிவபெருமானை விட்டிட்டானென்ன ப்ரஸக்தியில்லையே. உட்கொள்ளப்பட்டவர்களில் சிவபெருமானே முதல்வனென்பது பகவத்பாத ஸித்தாந்தம். “ஸர்வவாகீச்வரேச்வர:” என்கிற நாம பாஷ்யத்திலும் “ஸர்வேஷாம் வாகீச்வராணாம் ப்ரஹ்மாதீநாமபி ஈச்வர:” என்றார் அவர் தாமே.

558. நிர்க்குண ப்ரஹ்ம வாதத்தை நிராகரித்தல்: பரப்ரஹ்மம் நிர்க்குணம் என்று பிறர் செய்யும் வாதம் மிகவும் வருந்தத்தக்கது. ஹேய குணமில்லாமை யைத் தெரிவிக்க வேண்டி உபநிஷத்து சில விடங்களில் ப்ரஹ்மத்தை நிர்குணமென்று சொல்லியிருப்பதுண்டு. எண்ணிறந்த திருக்கல்யாண குணமுடைமையை ஓதி யிருக்கின்ற ச்ருதிசதங்களுக்கு விரோதம் இன்றிக்கே நிர்வாஹம் செய்யவேண்டு மன்றோ; அங்ஙனே நிர்வஹிக்குமளவில் நிர்க்குண ச்ருதிகளுக்கு ஹேயகுணம் இல்லாமையைக் கூறுவதில் தாத்பர்யம் என்றே சொல்லித் தீர வேண்டும். ப்ரதாநம் முதலானவை ஜகத் காரணமாகக் கூடுமென்று நேர்ந்த சங்கைகளைப் பரிஹரியாநின்ற சாரீரக மீமாம்ஸையானது பெரும்பாலும் அதிகரணந்தோறும் பரப்ரஹ்மத்தினிடத்திலுள்ள திருக்குணங் களை யெடுத்துக் கொண்டே அத்தகைய குணங்களில்லாத வஸ்துக்களுக்கு காரணத்வம் ஸம்பவிக்கமாட்டாது' என்று தலைக்கட்டுகின்றது. இக்காலத்தவர்க ளான அத்வைதிகள் தங்கள் நூல்களில் “ஆதிசங்கராசாரியரும் ஸகுணப்ரஹ்மத் தையும் ஸசரீரப்ரஹ்மத்தையும் ஒப்புக் கொண்டிருப்பதுண்டு” என்றெழுதுகிறார் கள். இங்ஙனே யெழுதுமவர்களுக்கு அவ்யவஸ்தித சித்தத்வம் தவிர வேறொன்றும் தேறாது. நையாயிகர்கள் “உத்பந்நம் த்ரவ்யம் க்ஷணமகுணம் திஷ்டதி” என்பர்கள். பரப்ரஹ்மத்திற்கு உத்பத்தி ஒப்புக் கொண்டாலாவது அது க்ஷணகாலம் நிர்க்குணமாக இருக்கவு மாகும். முமுக்ஷுக்களும் முக்தர்களும் நித்யர்களுமான ஸ்மஸ்த ஜீவராசிகளையும் தன்னுடைய குணாநுபவத்தினாலேயே உஜ்ஜீவிப்பிக்குமதான பரப்ரஹ்மம் க்ஷணமாத்ரமும் நிர்க்குணமாக இருக்ககில்லாது.

559. கூரத்தாழ்வானருளிச் செய்த ஸ்ரீவைகுண்ட ஸ்தவத்தில் “தூரே குணாஸ் தவ து ஸத்வரஜஸ்தமாம்ஸி தேந த்ரயீ ப்ரதயதி த்வயி நிர்க்குணத்வம், நித்யம் ஹரே நிகில ஸத்குணஸாகரம் ஹி த்வாமாமநந்தி பரமேச்வரமீச்வராணாம்” என்றுள்ள ச்லோக ரத்நம் இங்கு நித்யானுஸந்தேயமாகக் கடவது. நாம் எழுதி வெளியிட்டுள்ள ஸ்ரீவைகுண்டஸ்தவ வியாக்கியானத்திலிருந்து சில பங்க்திகள் நிர்க்குணச்ருதிகளுக்கு என்ன கதியென்ன: அவற்றை நிர்வஹிக்க வேண்டும் வழி காட்டுகிறாரிதில் “நிர்குணம் நிரஞ்ஜநம்” இத்யாதி ச்ருதிகள் எம்பெருமான் பக்கலிலே குணங்களின் அத்யந்தாபாவத்தைச் சொல்லுகின்றன வல்ல. அப்படியாகில் “யஸ்ஸர்வஜ்ஞஸ் ஸர்வவித்” இத்யாதிகளான பரச்சத வாக்யங்களினால் எம்பெருமானுக்குச் சொல்லப்பட்ட குணபௌஷ்கல்யம்

வ்யாஹதமேயாகும். ஒரு ச்ருதியும் வ்யாஹதார்த்தமாகாதபடி நிர்வஹிக்க வேண்டுமே. நிர்க்குணத்வத்தைச் சொன்னவிடம் ஹேயகுணராஹித்யத்தைச் சொல்லிற்றாகக் கொள்ளுமளவில் ஒரு விரோதமுமில்லையே. உத்ஸர்க்காபவாத ந்யாயம் இதற்குக் கை கொடுக்குமே. "(ஸத்வ ரஜஸ் தமாம்ஸி குணாஸ் தவ தூரே)" ஸத்வ ரஜஸ் தமோ குணங்கள் தேவரீருக்கு நெடுந்தூரத்திலுள்ளன. எம்பெருமான் பக்கலில் ரஜஸ்தமோ குணங்கள் இல்லையென்று சொல்லலாம் அத்தனை போக்கி ஸத்வகுணமும் இல்லையென்று சொல்லலாமோவென்று ஒரு சங்கை தோன்றும். "பரம ஸத்வ ஸமாச்ரய: க: என்னும்படியுள்ள எம்பெருமான் பக்கலில் ஸத்வ குணமில்லை யென்னப் போகாது; ரஜஸ்தமோமிச்ரமான ஸத்வ குணமில்லை என்கிறதத்தனை. (தேந த்ரயீ ப்ரத்யதி த்வயி நிர்க்குணத்வம்) அதையிட்டே வேதத்தில் நைர்குண்ய வாதம் ப்ரவ்ருத்தமாயிற்று. குணஸாமான்ய அபாவத்தையே ச்ருதி விவக்ஷிக்கிறது என்ன வொண்ணாதோவென்னில்; ஒண்ணாமையை உபபாதிக்கிறது உத்தரார்த்தம். (நித்யம் ஹரே! நிகில ஸத்குண ஸாகர மித்யாதி) "பராஸ்ய சக்திர் விவிதைவ ச்ருயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாநபலக்ரியாச" ஸத்யகாமஸ் ஸத்ய ஸங்கல்ப:" இத்யாதி ச்ருதிகள் எம்பெருமானை ஸகல கல்யாண குண நிதியாக ஓதாநிற்க, அதற்கு முரணாகப் பொருள் கொள்ள வொண்ணாதிறே "அக்நீஷோமீயம் பசுமாலபேத" இத்யாதிகளில் விஹிதமான ஹிம்ஸையைத் தள்ளியன்றோ "மா ஹிம்ஸ்யாத் ஸர்வா பூதாநி" இத்யாதி நிஷேத ச்ருதிகளுக்குப் பொருள் நிர்வஹியா நின்றோம். அது போலவென்க.

560. இதரர்கள் ஸர்வாத்மநா ப்ரமாண வைதேசிகர்களென்று நிரூபித்தல்: முக்கியமாகக் குறிக்கொண்மின்; "பாஞ்சராத்ரம் அப்ரமாணம்" என்கிற பிறர் உபநிஷத்துக்கள் ப்ரஹ்ம ஸூத்ரங்கள் இதிஹாஸ புராணங்கள் முதலியவற்றை ப்ரமாணமாக ஒப்புக் கொள்பவர்கள் போலும். இது வாங்மாத்ரேண அங்கீகாரமேயொழிய வேறில்லை. "பாஞ்சராத்ரத்தை ப்ரமாணமாக வொப்புக் கொண்டால் என்ன ஹாநி விளைந்திடும்? ச்ருதீதிஹாஸ புராண ஸூத்ரங்களை ப்ரமாணமென்று ஒப்புக் கொண்டதனால் என்ன லாபம் விளைந்திட்டது? என்று இவர்களை வினவினால் இவர்கள் என்ன விடையிறுப்பர்களோ, பார்க்க வேணும்.

561. "வேத: ப்ராசேதஸாதாஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மநா" என்று வேத ப்ராதுர்ப்பாவ விசேஷமாகக் குலாவப்படுகிற ஸ்ரீராமாயணத்தில் ஆதியோடந்தமாகத் திருக்கல்யாண குணகண ப்ரஸ்தாவமே விளங்கா நின்றது. வான்மீகி முனிவர் தம்மிடம் வந்து சேர்ந்த நாரதமஹர்ஷி பக்கலில் கதைகேட்க விரும்பிற்றிலர்; திருக்குணங்கள் கேட்கவே விருப்பத்தை வெளியிட்டார். அதில், "கோந்வஸ்மிந் ஸாம்ப்ரதம் லோகே குணவாந்" என்றும், "ப்ஹவோ துர்லபாச் சைவ யே த்வயா கீர்த்திதா குணா:" என்றும் உபக்ரமத்தில் காணும் வினாவிடைகளினால் இஃது அறியலாகும்.

562. எம்பெருமானுடைய அவதாரங்க ளெல்லாம் குணபரீவாஹ ரூபங்களென்று ஸாரஜ்ஞர்கள் நிஷ்கர்ஷித்துள்ளார்கள். எம்பெருமான் ஸ்வாத்மாவிலே நிரம்பியுள்ள திருக்குணங்களை வெளியிட்டுத் தரிப்பதற்காகவே திருவவதாரங்கள்

செய்கிறானென்கை. ஸ்ரீராமக்ருஷ்ணாதி ரூபேண திருவவதரித்து வேதஸித்தங்களும் ஸ்வாபாவிகங்களுமான திருக்குணங்களை ஸகல பக்தர்களும் அநுபவிக்கும்படி செய்தருளினன் பகவான். இதை அறியாதாரில்லை. 'ப்ரஹ்மம் குணசூந்யமே' என்பவர்கள் ஸ்ரீராமாயணம் முதலான இதிஹாஸ புராணங்களுக்கும் அவற்றுக் கும் மூலமான ச்ருதிகளுக்கும் நெடுந் தூரத்திலிருக்கத் தக்கவர்கள் என்பது அதிவாதமுமன்று, ஆக்ரஹ வார்த்தையுமன்று. "இதிஹாஸ புராணாப்யாம் வேதம் ஸமுபப்ரும்ஹயேத்" என்று பொதுவாகவும் "வேதோபப்ரும்ஹணார்த்தாய தாவக்ராஹ யத ப்ரபு:" என்று சிறப்பாகவும் சொல்லியுள்ள மஹர்ஷிகள் வேதப் பொருள்களே இதிஹாஸ புராணங்களில் வெட்ட வெளிச்சமாகக் காணப்படுகின்றன வென்று ப்ரதிஜ்ஞை செய்தவர்கள் ஆகின்றனர்.

563. இவ்வகையில் அநுபவம் கேளீர். (சரணாகதிகத்யே பகவந் நாராயண அபிமதாநுரூப ஸ்வரூபரூபகுண விபவைச்வர்ய சீலாத்யநவதிகாதிசய அஸங்க்யேய கல்யாண குணகணாம்; பத்மவநாலயாம் பகவதீம் ச்ரியம் தேவீம் நித்யாநபாயிநீம் நிரவத்யாம் தேவதேவ திவ்யமஹிஷீம் அகில ஜகந்மாதரம் அஸமந்மாதரம் அசரண்யசரண்யாம் அநந்யசரண: சரணமஹம் ப்ரபத்யே.

564 அகிலஹேயப்ரத்யநீக கல்யாணைகதாந ஸ்வேதர ஸமஸ்த வஸ்து விலக்ஷணாநந்தஜ்ஞாநாநந்தைகஸ்வரூப!

565.ஸ்வாபிமதாநுரூபைக ரூபாசிந்த்ய திவ்யாத்புத நித்ய நிரவத்ய நிரதிசயௌஜ்ஜ்வல்ய ஸௌந்தர்ய ஸௌந்தர்ய ஸௌகந்த்ய ஸௌகுமார்ய லாவண்ய யௌவநாத்யநந்த குணநிதி திவ்யரூப!

566. ஸ்வோசித விவித விசித்ராநந் தாச்சர்ய நித்ய நிரவத்ய நிரதிசயஸுகந்த நிரதிசய ஸுகஸ்பர்ச நிரதிசயௌஜ்ஜ்வல்ய கிரீட மகுட சூடாவதம்ஸ மகரகுண்டல க்ரைவேயக ஹாரகேயூர கடக ஸ்ரீவத்ஸ கௌஸ்துப முக்தா தாமோதரபந்தந பீதாம்பர காஞ்சீகுண நுபுராத்யபரிமித திவ்ய பூஷண!

567. ஸ்வாநுரூப அசிந்த்யசக்தி சங்கசக்ரகதா (அஸி) சார்ங்காத்யஸங்க் யேய நித்ய நிரவத்ய நிரதிசய கல்யாண திவ்யாயுத!

568. ஸ்வாபிமத நித்யநிரவத்ய அநுரூபஸ்வரூப ரூப குண விபவைச்வர்ய சீலாத்ய நவதிகாதிசயாஸங்க்யே கல்யாண குணகண ஸ்ரீவல்லப! ஏவம் பூதபூமீநீளா நாயக!

569. ஸ்வச்சந்தாநுவர்த்தி ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்தி பேதாசேஷசேஷதைக ரதிரூப நித்ய நிரவத்ய நிரதிசய ஜ்ஞாநக்ரியைச்வர்யாத்யநந்த கல்யாண குணகணசேஷசேஷாசந கருடப்ரமுக நாநாவிதாநந்த பரிஜந பரிசாரிகா பரிசரித சரணயுகல!

570. ஸ்வஸங்கல் பாநுவிதாயி ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்தி ஸ்வஸேஷதைக ஸ்வபாவ ப்ரக்ருதி புருஷகாலாத்மக விவித விசித்ராநந்தபோக்ய போக்த்ருவர்க்க போகோபகரண போகஸ்தாநரூப நிகிலஜக துதய விபவலயலீல!

571. ஸத்யகாம! ஸத்யஸங்கல்ப! பரப்ரஹ்மபூத! புருஷோத்தம! மஹாவிபூதே! ஸ்ரீமந்! நாராயண! ஸ்ரீவைகுண்டநாத! அபாரகாருண்ய ஸௌசீல்யவாத்ஸல்ய ஔதார்ய–ஐச்வர்ய ஸௌந்தர்ய மஹோததே! அநாலோசித விசேஷாசேஷ லோக சரண்ய! ப்ரணதார்த்திஹர!

ஆச்ரிதவாத்ஸல்யைக ஜலதே! அநவரத விதிதநிகிலபூதஜாதயாதாத்ம்ய! அகில ஜகத் ஸ்வாமிந்! அஸ்மத் ஸ்வாமிந்! ஸத்யகாம! ஸத்யஸங்கல்ப! ஸகலேதர விலக்ஷண! அர்த்திகல்பக! ஆபத்ஸக! ஸ்ரீமந்! நாராயண! அஸரண்ய ஸரண்ய!

572.(ஸ்ரீரங்ககத்யே) ஸ்வாதீந த்ரிவித சேதநாசேதநஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்தி பேதம், க்லேசகர்மாத்யசேஷ தோஷா ஸம்ஸ்ப்ருஷ்டம், ஸ்வாபாவிகாநவதிகாதிசய ஜ்ஞாநபலைச்வர்ய வீர்ய சக்தி தேஜஸ் ஸௌசீல்ய வாத்ஸல்ய மார்த்தவார்ஜவ ஸௌஹார்த ஸாம்ய காருண்ய மாதுர்ய காம்பீர்யௌதார்ய சாதுர்யஸ்தைர்ய சௌர்ய பராக்ரம ஸத்யகாம ஸத்யஸங்கல்ப க்ருதித்வ க்ருதஜ்ஞதாத்யஸங்க்யேய கல்யாண குணகணௌக மஹார்ணவம் பரப்ரஹ்மபூதம் புருஷோத்தமம் ஸ்ரீரங்கசாயிநம் அஸ்மத் ஸ்வாமிநம்.

573.அபாரகருணாம்புதே! அநாலோசிதவிசேஷா சேஷலோகசரண்ய! ப்ரணதார்த்திஹர! ஆச்ரிதவாத்ஸல்யைக மஹோததே! அநவரதவிதிதநிகில பூதஜாத யாதாத்ம்ய! ஸத்யகாம! ஸத்யஸங்கல்ப! ஆபத்ஸக! காகுத்ஸ்த! ஸ்ரீமந் நாராயண! புருஷோத்தம! நமோஸ்துதே.

574.(ஸ்ரீவைகுண்டகத்யே) ஸ்வாதீந த்ரிவிதசேதநாசேதநஸ்வரூபஸ்திதிப்ரவ்ருத்தி பேதம், க்லேசகர்மாத்யசேஷதோஷாஸம் ஸ்ப்ருஷ்டம் ஸ்வாபாவிகாநவதிகாதிசய ஜ்ஞாநபலைச்வர்ய வீர்யசக்திதேஜ:ப்ரப்ருதி அஸங்க்யேய கல்யாணகுண கணௌக மஹார்ணவம் பரமபுருஷம் பகவந்தம் நாராயணம்.

575. (வேதார்த்த ஸங்க்ரஹே) தஸ்யைதஸ்ய பரஸ்ய ப்ரஹ்மணோ நாராயணஸ்ய அபரிச்சேத்ய ஜ்ஞாநாநந்த அமலத்வ ஸ்வரூபவத், ஜ்ஞாநசக்தி பலைச்வர்யவீர்யதேஜ: ப்ரப்ருத்யநவதிகாதி சயாஸங்க்யேய கல்யாணகுணவத், ஸ்வாபிமதஸ்வாநுரூபைகரூப திவ்யரூப-ததுசிதநிரதிசயகல்யாணவிவிதாநந்த பூஷணஸ்வசக்தி ஸத்ருசாபரிமிதாநந்த ஆச்சர்ய நாநாவித ஸ்வாபிமதஸ்வாநுரூப ஸ்வரூபகுணவிபவைச்வர்ய சீலாத்யநவதிக மஹிமமஹிஷீஸ்வாநுரூபகல்யாண ஜ்ஞாநக்ரியாத்யபரிமேயகுணாநந்த பரிஜநபரிச்சத-ஸ்வோசித நிகில போக்ய போகோபகரணாத்யநந்தமஹிஷீ பவாவாங்மநஸ கோசரஸ்வரூப ஸ்வாபாவ திவ்யாஸ்த்தாநாதி- நித்யதா நிரவத்யதா கோசராச்ச ஸஹஸ்ரச: க்ருதயஸ்ஸந்தி.

576–580. (வேதார்த்த ஸங்க்ரஹே) பரஸ்ய ப்ரஹ்மணோ ரூபத்வம் ஸூத்ரகாரச்ச வததி "அந்தஸ் தத்தர்மோப தேசாத்" இதி. யோஸாவதித்ய மண்டல அந்தர்வர்த்தீ தப்த கார்த்தஸ்வர கிரிவர ப்ரப: ஸஹஸ்ராம்சுசதஸஹஸ்ரகிரண:, கம்பீராம்பஸ்ஸமுத்பூதஸும்ருஷ்நால ரவிகரவிகஸிதபுண்டரீகதலாமலாயதேக்ஷண:, ஸுப்ருலலாட:, ஸுவாஸாஸுஸ்மிதாதர வித்ரும:, ஸுருசிரகோமல கண்டம், கம்புக்ரீவ:, ஸமுந்நதாம்ஸவிலம்பிசாருரூப திவ்யகர்ணகிஸலய:, பீநவ்ருத்த ஆயதபுஜ:, சாருதராதாம்ரகரதலாநுரக்த அங்குலீபி: அலங்க்ருத:,தநுமத்ய:, விசாலவக்ஷஸ்தல:, ஸமவிபக்தஸர்வாங்க:, அநிர்தேச்யதிவ்ய ரூபஸம்ஹநந:, ஸ்நிக்த வர்ண:, ப்ரபுத்த புண்டரீக சாருசரணயுகல:, ஸ்வாநுரூப பீதாம்பரதர:, அமலகிரீடகுண்டலஹார கௌஸ்துப

ஆச்ரிதவாத்ஸல்யைக ஜலதே! அநவரத விதிதநிகிலபூதஜாதயாதாத்ம்ய! அகில ஜகத் ஸ்வாமிந்! அஸ்மத் ஸ்வாமிந்! ஸத்யகாம! ஸத்யஸங்கல்ப! ஸகலலேதர விலக்ஷண! அர்த்திகல்பக! ஆபத்ஸக! ஸ்ரீமந்! நாராயண! அஸரண்ய ஸரண்ய!

572.(ஸ்ரீரங்ககத்யே) ஸ்வாதீந த்ரிவித சேதநாசேதநஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்தி பேதம், க்லோசகர்மாத்யசேஷ தோஷா ஸம்ஸ்ப்ருஷ்டம், ஸ்வாபாவிகாநவதிகாதிசய ஜ்ஞாநபலைச்வர்ய வீர்ய சக்தி தேஜஸ் ஸௌசீல்ய வாத்ஸல்ய மார்த்தவார்ஜவ ஸௌஹார்த ஸாம்ய காருண்ய மாதுர்ய காம்பீர்யௌதார்ய சாதுர்யஸ்தைர்ய சௌர்ய பராக்ரம ஸத்யகாம ஸத்யஸங்கல்ப க்ருதித்வ க்ருதஜஞதாத்யஸங்க்யேய கல்யாண குணகணௌக மஹார்ணவம் பரப்ரஹ்மபூதம் புருஷோத்தமம் ஸ்ரீரங்கசாயிநம் அஸ்மத் ஸ்வாமிநம்.

573.அபாரகருணாம்புதே! அநாலோசிதவிசேஷா ஸேஷலோகசரண்ய! ப்ரணதார்த்திஹர! ஆச்ரிதவாத்ஸல்யைக மஹோததே! அநவரதவிதிதநிகில பூதஜாத யாதாத்ம்ய! ஸத்யகாம! ஸத்யஸங்கல்ப! ஆபத்ஸக! காகுத்ஸ்த்த! ஸ்ரீமந் நாராயண! புருஷோத்தம! நமோஸ்துதே.

574.(ஸ்ரீவைகுண்டகத்யே) ஸ்வாதீந த்ரிவிதசேதநாசேதநஸ்வரூபஸ்திதிப்ரவ்ருத்தி பேதம், க்லேசகர்மாத்யசேஷதோஷாஸம் ஸ்ப்ருஷ்டம் ஸ்வாபாவிகாநவதிகாதிசய ஜ்ஞாநபலைச்வர்ய வீர்யசக்திதேஜ:ப்ரப்ருதி அஸங்க்யேய கல்யாணகுண கணௌக மஹார்ணவம் பரமபுருஷம் பகவந்தம் நாராயணம்.

575. (வேதார்த்த ஸங்க்ரஹே) தஸ்யைதஸ்ய பரஸ்ய ப்ரஹ்மணோ நாராயணஸ்ய அபரிச்சேத்ய ஜ்ஞாநாநந்த அமலத்வ ஸ்வரூபவத், ஜ்ஞாநசக்தி பலைச்வர்யவீர்யதேஜ: ப்ரப்ருத்யநவதிகாதி சயாஸங்க்யேய கல்யாணகுணவத், ஸ்வாபிமதஸ்வாநுரூபைகரூப திவ்யரூப-ததுசிதநிரதிசயகல்யாணவிவிதாநந்த பூஷணஸ்வசக்தி ஸத்ருசாபரிமிதாநந்த ஆச்சர்ய நாநாவித ஸ்வாபிமதஸ்வாநுரூப ஸ்வரூபகுணவிபவைச்வர்ய சீலாத்யநவதிக மஹிமமஹிஷீஸவாநுரூபகல்யாண ஜ்ஞாநக்ரியாத்யபரிமேயகுணாநந்த பரிஜநபரிச்சத-ஸ்வோசித நிகில போக்ய போகோபகரணாத்யநந்தமஹிஷீ பவாவாங்மநஸ கோசரஸ்வரூப ஸ்வாபாவ திவ்யாஸ்த்தாநாதி- நித்யதா நிரவத்யதா கோசராச்ச ஸஹஸ்ரச: க்ருதயஸ்ஸந்தி.

576-580. (வேதார்த்த ஸங்க்ரஹே) பரஸ்ய ப்ரஹ்மணோ ரூபத்வம் ஸூத்ரகாரச்ச வததி "அந்தஸ் தத்தர்மோப தேசாத்" இதி. யோஸாவதித்ய மண்டல அந்தர்வர்த்தீ தப்த கார்த்தஸ்வர கிரிவர ப்ரப: ஸஹஸ்ராம்சுசதஸஹஸ்ரகிரண:, கம்பீராம்பஸ்ஸமுத்பூதஸும்ருஷ்நால ரவிகரவிகஸிதபுண்டரீகதலாமலாயதேக்ஷண:, ஸுப்ருலலாட:, ஸுவாஸாஸுஸ்மிதாதர வித்ரும:, ஸுருசிரகோமல கண்டம், கம்புக்ரீவ:, ஸமுந்நதாம்ஸவிலம்பிசாருரூப திவ்யகர்ணகிஸலய:, பீநவ்ருத்த ஆயதபுஜ:, சாருதராதாம்ரகரதலாநுரக்த அங்குலீபி: அலங்க்ருத:,தநுமத்த்ய:, விசாலவக்ஷஸ்தல:, ஸமவிபக்தஸர்வாங்க:, அநிர்தேச்யதிவ்ய ரூபஸம்ஹநந:, ஸ்நிக்த வர்ண:, ப்ரபுத்த புண்டரீக சாருசரணயுகல:, ஸ்வாநுரூப பீதாம்பரதர:, அமலகிரீடகுண்டலஹார கௌஸ்துப

கேயூரகடகநூபுரோதர பந்தநாத்யபரிமிதாச்சர்யாநந்த திவ்ய பூஷண:, சங்கசக்ரகதாஸிசார்ங்க ஸ்ரீவத்ஸ வநமாலாலங்க்ருத:, அநவதிகாதிசய ஸௌந்தர்யாஹ்ருதாசேஷ மநோத்ருஷ்டி வ்ருத்தி;, லாவண்யாம்ருத பூரிதாசேஷ சராசரபூதஜாத:, அத்யத்புத அசிந்த்யநித்ய யௌவந:, புஷ்பஹாஸ ஸுகுமார:, புண்யகந்தவாஸிதாநந்த திகந்தரால:, த்ரைலோக்யாக்ரமண ப்ரவ்ருத்த கம்பீர பாவ:,கருணாநுராகமதுரலோகநாவலோகித ஆச்ரிதவர்க்க:, புருஷவரோ த்ருச்யதே ஸ: நிகில ஜகதுதயவிபவலயலீல:, நிரஸ்த ஸமஸ்தஹேய:, ஸமஸ்த கல்யாணகுணநிதி:, ஸ்வேதர ஸமஸ்தவஸ்துவிலக்ஷண:, பரமாத்மா, பரம்ப்ரஹ்ம, நாராயண இத்யவகம்யதே, "தத்தர்மோபதேசாத்"

581–590. கீதாபாஷ்யம்–அவதாரிகை: ச்ரிய:பதி: நிகிலஹேயப்ரத்யநீக கல்யாணைக தாந:, ஸ்வேதரஸமஸ்த வஸ்து விலக்ஷணாநந்த ஜ்ஞாநாநந்தைக ஸ்வரூபம் ஸ்வாபாவிகாநவதி காதிசய–ஜஞாநபலைச்வர்ய வீர்ய சக்தி தேஜ: ப்ரப்ருத்யஸங்க்யேய கல்யாணகுணகண மஹோததி:, ஸ்வாபிமதாநுரூபைகரூப அசிந்த்ய திவ்யாத்புத நித்யநிரவத்ய நிரதிசயௌஜ்வல்ய ஸௌந்தர்ய ஸௌகுமார்யலாவண்ய யௌவநாத்யநந்த குணநிதி திவ்யரூப:, ஸ்வோசிதவிவித விசித்ராநந்தாச்சர்ய நித்யநிரவத்யாபரிமித திவ்யபூஷண: ஸ்வாநுரூபாஸங்க்யேய அசிந்த்யசக்தி நித்ய நிரவத்யநிரதிசய கல்யாண திவ்யாயுத:, ஸ்வாபிமதாநுரூப நித்யநிரவத்யஸ்வரூபரூப குண விபவைச் வர்ய சீலாத்யநவதிகாதிசய அஸங்க்யேய கல்யாணகுணகணஸ்ரீவல்லப:, ஸ்வஸங்கல்பாநுவிதாயி ஸ்வரூபஸ்த்திதி ப்ரவ்ருத்திபேதாசேஷசேஷதைகரதிரூப நித்யநிரவத்ய நிரதிசய ஜ்ஞாநக்ரியைச்வர் யாத்யநந்தகுணகணாபரிமிதஸூரிபிரநவரத அபிஷ்க்ருதசரணயுகல:, வாங்மநஸாபரிச் சேத்ய ஸ்வரூபஸ்வபாவ:, ஸ்வோசித விவிதவிசித்ராநந்தபோக்யபோகோபகரண போகஸ்த்தாந ஸம்ருத்தாநதாச்சர்யாநந்த மஹாவிபவாநந்தபரிமாண நித்ய நிரவத்ய அசாக்ஷர பரமவ்யோம நிலய:, விவித விசித்ராநந்தயபோக்ய போக்த்ருவர்க்க பரிபூர்ண நிகில ஜகதுதயவிபவலயலீல:, பரமப்ரஹ்ம, புருஷோத்தம: நாராயண:, பரஹ்மாதி ஸ்தாவராந்தமகிலம் ஜகத் ஸ்ருஷ்ட்வா, ஸ்வரூபேணாவஸ்தித ப்ரஹ்மாதிதேவமநுஷ்யாணாம் த்யாநாராதநாத்யகோசர:, அபார காருண்ய ஸௌசீல்யவாத்ஸல்யௌதார்ய மஹோததி:, ஸ்வமே ரூபம் தத்தத்ஸஜாதீயஸம்ஸ்தாநம் ஸ்வஸ்வபாவமஜஹதேவ குர்வந் தேஷு தேஷு லோகேஷ்வவதீர்யாவதீர்ய தைஸ் தைராராதித: தத்ததிஷ்டாநுரூபம் தர்மார்த்த காமமோக்ஷாக்ய்ம் பலம் ப்ரயச்சந், பூபாராவதரணாபதேசேந அஸ்மதாதீநாமபிஸமாச்ரயணீயத்வாய அவதீர்யோர்வ்யாம் ஸகலமநுஜநயந விஷயதாம் கத:, பராவரநிகிலஜந மநோ நயநஹாரி திவ்யசேஷ்டிதாநி குர்வந், பூதநா சகடயமலார்ஜுநாரிஷ்டப்ரலம்பதேநுக காலியகேசிகுவலயா பீடசாணூரமுஷ்டிக தோஸலகம்ஸாதீந் நிஹத்ய, அநவதிகதயா ஸௌஹார்த்தாநுராககர்ப்பாவலோகந ஆலாபாம்ருதை: விச்வமாப்யாயயந், நிரதிசய ஸௌந்தர்யஸௌசீல்யாதி குண கணாவிஷ்டிதாரேண அக்ரூரமாலாகாரதீந் பரமபாகவதாந் (பூதாந்) க்ருத்வா.

591. கீதாபாஷ்யம். 9–26. (பத்ரம் புஷ்பம்) அஹம்–ஸர்வேச்வர: நிகிலஜகதுதய விபவலயலீல:, அவாப்த ஸமஸ்தகாம:, ஸத்யஸங்கல்ப:,அநவதிகாதிசயாஸங்க்யேய கல்யாணகுணகண, ஸ்வாபாவிகாநவதி காதிசய நந்தஸ் வாநுபவே வர்த்தமாநோபி மநோரதபததூரவர்த்தி ப்ரியம் ப்ராப்யேவ அச்நாமி.

592. (9–34) மந்மநா பவ. மந்மநா பவ–மயி ஸர்வேச்வரேச்வரே நிகிலஹேய ப்ரத்ய நீககல்யாணைகதாநே, ஸர்வஜ்ஞே ஸத்யஸங்கல்ப, நிகிலஜகதேககாரணே பரஸ்மிந் ப்ரஹ்மணி, புருஷோத்தமே, புண்டரீகதலாமலாயதாக்ஷே, ஸ்வச்சநீல ஜீமூதஸங்காசே, யுகபதுதிததிநகரஸஹஸ்ர ஸத்ருசதேஜஸி, லாவண்யாம்ருத மஹோததௌ, உதார பீவர சதுர்பாஹௌ, அத்யுஜ்வலபீதாம்பரே, அமலகிரீடமகர குண்டல ஹாரகேயூரகடக பூஷிதே, அபார காருண்ய ஸௌசீல்ய ஸௌந்தர்ய மாதுர்ய காம்பீர்யௌதார்ய வாத்ஸல்ய ஜலதௌ, அநாலோசித விசேஷாசேஷலோக சரண்யே, ஸர்வஸ்வாமிநி தைலதாராவத் அவிச்சேதேந நிவிஷ்டமநா பவ.

593. ஸ்ரீபாஷ்யம் (1–1–1) ஆரம்பத்தில் –''ப்ரஹ்மசப்தேந ச ஸ்வபாவதோ நிரஸ்த நிகிலதோஷ: அநவதிகாதிசயாஸங்க்யேய கல்யாணகுணகண: புருஷோத்தம: அபிதீயதே.

594. (1–1–2) அஸ்ய......ஜகத:, யத:– யஸ்மாத் ஸர்வேச்வராத் நிகிலஹேயப்ரத்ய நீக ஸ்வரூபாத் ஸத்யஸங்கல்பாத் ஜ்ஞாநாநந்தாத்யநந்த கல்யாணகுணாத் பும்ஸ: ஸ்ருஷ்டிஸ்த்திப்ரலயா: ப்ரவாத்தந்தே தத் ப்ரஹ்மேதி ஸூத்ரார்த்த:

595. (1–1–12) அத: ஸர்வஜ்ஞ: ஸர்வசக்தி: ஸர்வேச்வரேச்வர: நிரஸ்த நிகிலதோஷகந்த: அநவதிகாதிசயாஸங்க் யேய கல்யாணகுணகணௌக மஹார்ணவ: புருஷோத்தமோ நாராயண ஏவ நிகிலஜகதேக காரணம் ஜிஜ்ஞாஸ்யம் ப்ரஹ்மேதி ஸ்த்திதம்.

596. (1–2–12) த்ரய்யந்தநிஷ்ணாதா ஸ்து நிகிலஜகதேக காரணஸ்ய, அசேஷஹேயப்ரத்யநீகாநந்த ஜ்ஞாநாநந் தைகஸ்வரூபஸ்ய, ஸ்வாபாவிகாநவதிகா திசயாஸங்க்யேய கல்யாண குணாகரஸ்ய, ஸகலேதரவிலக்ஷணஸ்ய, ஸர்வாத்மபூதஸ்ய பரஸ்ய ப்ரஹ்மண:.......... ஜீவஸ்ய.......... பரமாத்மாநுபவமேவ மோக்ஷமாசக்ஷதே.

597.(1–2–12) உக்தம் பரமபுருஷார்த்த லக்ஷண மோக்ஷஸாதநதயா ஜிஜ்ஞாஸ்யம் ஜகஜ்ஜந்மாதி காரணம் ப்ரஹ்ம அசித் வஸ்துந: ப்ரதாநாத: சேதநாச்ச பத்தமுக்தோபயா வஸ்த்தாத் விலக்ஷணம் நிரஸ்தஸமஸ்தஹேயகந்தம் ஸர்வஜ்ஞம் ஸர்வசக்தி ஸத்யஸங்கல்பம் ஸமஸ்த கல்யாண குணாத்மகம் ஸர்வாந்தராத்ம பூதம் நிரங்குசைச்வர்யமிதி.

598. (2–1–1) ப்ரதமேத்யாயே ப்ரத்யக்ஷாதி ப்ரமாண கோசராத் அசேதநாத் தத்ஸம்ஸ்ருஷ்டாத் தத் வியுக்தாச்ச சேதநாதர்த்தாந்தரபூதம் நிரஸ்த நிகிலாவித்யாத்ய புருஷார்த்த கந்தம் அநந்தஜ்ஞாநாநந்தைகதாநம் அபரிமிதோதாரகுண ஸாகரம் நிகில ஜகதேக காரணம் ஸர்வாந்தராத்மபூதம் பரம்ப்ரஹ்ம வேதாந்த வேத்யமித்யுக்தம்.

599. (2–1–13) ஸர்வா ஹி ச்ருதய: ஸஸ்ம்ருதீதிஹாஸபுராணா: ஸர்வேச்வரேச்வரம் ஸதைவ ஸர்வஜ்ஞம் ஸர்வசக்திகம் ஸத்யஸங்கல்பம் நிரவத்யம் தேசகாலாநவச்சிந்நாநவதிகாதிசயாநந்தம் பரமகாரணம் ப்ரஹ்ம ப்ரதிபாதயந்தி.

600. (4-4-22) யதா நிகிலஹேய ப்ரத்யநீக கல்யாணைகதாந: ஜந்மாதி காரணம் ஸமஸ்தவஸ்து விலக்ஷண: ஸர்வஜ்ஞ: ஸத்யஸங்கல்ப: ஆச்ரித வாத்ஸல்யைகஜலதி: பரமகாருணிக: நிரஸ்த ஸ்மாப்ப்யதிக ஸம்பாவந: பரப்ரஹ்மாபிதாந: பரமபுருஷோஸ்தீதி சப்தாதவகம்யதே.

601. (எம்பெருமானார் அருளிச் செய்த கீதாபாஷ்யத்திலிருந்து நூறு விஷயங்கள் அனுபவிக்கப்படுகின்றன.) ஸர்வேச்வரன் உபயவிபூதிநாதனென்று கொண்டாடப் படுகிறான். லீலா விபூதியும் நித்ய விபூதியுமாகிய மண்ணுலகும் விண்ணுலகும் உபய விபூதிகளெனப்படும். "அருளார் திருச்சக்கரத்தால் அகல் விசும்பும் நிலனும் இருளார் வினைகெடச் செங்கோல் நடாவுதிர்" என்று (திருவிருத்தத்தில்) நம்மாழ்வாரும், "பொங்கோதஞ் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதுஞ் சோராமே யாள்கின்ற எம்பெருமான்" என்று (நாச்சியார் திருமொழியில்) ஆண்டாளும் எம்பெருமானுடைய உபயவிபூதி நிர்வாஹகத்தைப்பற்றிப் பேசின பாசுரங்கள் அறியத்தக்கன. நித்யவிபூதிக்கு எதிராயிருக்கின்ற இந்த லீலாவிபூதியை மாஞானிகள் 'இருள் தருமாஞாலம்' என்று வழங்குகிறார்கள். இம்மண்ணுலகம் இருளே மலிந்ததென்று சொல்லப்படுகிறது. ஸூர்யன் சந்திரன் அக்னி முதலிய சுடர்ப் பொருள்களால் போக்க முடியாத அகவிருள் (அஜ்ஞாநாந்தகாரம்) இங்கு இருளெனப் படுகிறது. "அந்தம் தம இவாஜ்ஞாநம்" என்று ஸ்ரீபராசரமஹர்ஷியும் சொல்லி வைத்தார்.

602. இப்படிப்பட்ட அகவிருளை அகற்றுவதற்காகப் பேரருளாளனான எம்பெருமான் "கலைகளும் வேதமும் நீதிநூலும் கற்பமும் சொற்பொருள் தானும் மற்றை நிலைகளும் வானவர்க்கும் பிறர்க்கும் நீர்மையினாலருள் செய்து" என்று திருமங்கையாழ்வாருளிச் செய்த படியே ச்ருதிஸ்ம்ருதீதிஹாஸ புராணாதிகளான நாநாசாஸ்த்ரங்களை யுபகரித்தருளினான். அப்படி உபகரித்த இடத்தில் ஸத்வாரகமாகப் பல நூல்களையும் அத்வாரமாகச் சில நூல்களையும் இவ்வுலகில் அவதரிப்பித்தருளினன். வ்யாஸ வால்மீகி ப்ரப்ருதிகளான மஹர்ஷிகளை த்வாரமாகக் கொண்டு அவர்கள் வாயிலாக வெளியிட்டவை ஸத்வாரக மெனப்படும். அப்படியன்றிக்கே தானே ஸாக்ஷாத்தாக வெளியிட்டவை அத்வாரக மெனப்படும். இப்படிப்பட்ட அத்வாரக சாஸ்த்ரங்களுள் பகவத் கீதாசாஸ்த்ரமென்பது தலை சிறந்து விளங்குகின்றது.

603. "வேதேஷு பௌருஷம் ஸூக்தம் தர்மசாஸ்த்ரேஷு மாநவம், பாரதே பகவத்கீதா புராணேஷு ச வைஷ்ணவம் "வேதங்களுக்குள்ளே புருஷஸூக்தமும், தர்மசாஸ்த்ரங்களுக்குள்ளே மநுஸ்ம்ருதி யும், மஹாபாரதத்திற்குள்ளே ஸ்ரீ கீதையும், புராணங்களுக்குள்ளே ஸ்ரீவிஷ்ணு புராணமும் சிறந்தவை யென்று சொல்லிற்று. பஞ்சம வேதமாகப் புகழப் படுகின்ற மஹாபாரதத்தினுள்ளே கீதோபநிஷத் என்று குலாவப்படுகின்ற பகவத்கீதையானது பெரும்பாலும் அனைத்து மதஸ்தர்களாலும் உச்சிமேல் வைத்து மெச்சப்படுகின்ற தென்பது உலகமறிந்தது. உபநிஷத்துக்களின் அரிய பெரிய பொருள்களெல்லாம் இது தன்னில் அடங்கிக் கிடக்கின்றமையால் எப்படிப்பட்ட பண்டிதர்களுக்கும் வியாக்கியானங்களின் உதவியின்றி இதன் பொருள் அறிய

முடியாததாயிருக்கும். ஆனதுபற்றியே பலபல மஹான்களும் மஹாசார்யர்களும் மேதாவிகளும் இதற்கு அனேக வியாக்கியானங்கள் இயற்றியுள்ளார்ள். மூலத்தின் மேல் ப்ரதிபதவியாக்கியான மாகவும் பொழிப்புரையாகவும், கருத்துரை யாகவும், உபந்யாஸ ரூபமாகவும், ஆராய்ச்சி யுருவமாகவும் மற்றும் பலவிதமாகவும் கீதைக்கு அமைந்திருக்கின்ற விவரணங்கள் எண்ணுதற்கரியன. இவை இரண்டொரு பாஷைகளிலல்ல; ஐந்தாறு பாஷைகளிலுமல்ல; உலகில் எத்தனை பாஷைகள நடையாடுகின்றனவோ, அத்தனை பாஷைகளிலும் தோன்றி யுள்ளன. இது கொண்டே இதன் ஒப்புயர்வற்ற மஹிமை அறியற் பாலது.

604. எத்தனை வியாக்கியானங்கள் அவதரித்திருந்தாலும் 'மதத்ரய பாஷ்யம்' என்று ப்ரஸித்தமாக வழங்கப்பட்டு வருகின்ற மூன்று பாஷ்யங்களே வைதிகவுலகில் அதிகமான ப்ரஸித்தியை யடைந்திருக்கின்றன. வட இந்தியாவில் வல்லப மதத்திற்கு அதிக ப்ரசாரம் காண்பதனால் ஆங்கே வல்லபாசார்ய வியாக்கியானமும் சிறந்ததாகக் குலாவப்படும். நமது நாட்டில் சங்கராசார்யர் இயற்றிய அத்வைதபரமான பாஷ்யமும் ஸ்வாமி எம்பெருமானாரியற்றியருளின விசிஷ்டாத்வைதபரமான பாஷ்யமும், ஸ்ரீமத் ஆனந்த தீர்த்தரென்னும் மத்வாசார்யர் இயற்றிய த்வைத பரமான பாஷ்யமும் இவற்றுக்கு சிஷ்யகோடிகள் இயற்றிய டீகைகளும் ப்ரஸித்தி பெற்று விளங்குகின்றன. பகவத்ராமானுஜர் அருளிச்செய்த பாஷ்யமும் அதற்கு வேதாந்ததேசிகனருளிய தாத்பர்ய சந்த்ரிகையென்னும் டீகையும் ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் மிகவுயர்ந்த ஸ்தானத்தை யலங்கரித்து வருகின்றன.

605. மதத்ரய பாஷ்யங்களென்று குலாவப்படுகின்ற மேலே குறித்த மூன்று பாஷ்யங்களும் ஸம்க்ஷேபமான முறையில் அவதரித்தவை யெனினும், மத்வாசார்ய பாஷ்யமாவது மிகவும் ஸம்க்ஷிப்தமாகத் தோன்றியது. சங்கராசார்ய பாஷ்யமானது அதைவிட சிறிது விரிவாகத் தோன்றியது. பகவத் ராமாநுஜ பாஷ்யமானது ஆவச்யக விஷயங்களைச் சிறிதும் விடாமலும் அநாவச்யக விஷயங்களை அடியோடு ஏற்றுக் கொள்ளாமலும் பரம போக்யமான பத்ததியில் அவதரித்துள்ளது. உலகில் அவரவர்கள் தம் தம் ஸம்பிரதாய நூல்களைப் புகழப் பிறந்தவர்களாதலால் அதற்குச் சேர நாம் பகவத் ராமாநுஜ பாஷ்யத்தை ப்ரசம்ஸிப்பதாகச் சிலர் நினைக்கவுங்கூடும். வஸ்து ஸ்திதியில், எந்த மதத்தைச் சேர்ந்தவரும் பகவத் ராமாநுஜ பாஷ்யத்தைக் கண்டு ஈடுபடுவதை நாம் காண்கிறோம். மூலத்திலுள்ள ஒரு பதத்திற்கும் அர்த்தம் செய்வதை விடாமலும் பொருத்தமான அந்வயக்ரமங்களையும் அர்த்தங்களையும் காட்டியும் அருளிச் செய்யப்பட்ட பாஷ்யம் இஃதொன்றே யென்று நாம் கூசாமல் கூறலாம். இது அபிமானத்தினால் சொல்லப்படுகிற வார்த்தை யென்று பிறர் நினைத்தாலும் நினைத்திடுக. விவேகிகளான யாவருடைய மனமும் ஒருங்கே இசையக் கூடிய வார்த்தையே இது என்பது வஸ்துஸ்திதி.

606. அடியேன் ஒரு ஸமயம் இம்மூன்று பாஷ்யங்களையும் டீகைகளுடனும் பூர்த்தியாக ஸேவிக்கவும் ஆராய்ச்சி செய்யவும் ப்ராப்தமாயிற்று. அப்போது பகவத் ராமாநுஜ பாஷ்யத்தை தாத்பர்ய சந்த்ரிகையுடன் ஆர அமர அநுபவிக்க நேர்ந்தது. மிக விரிவாக

எழுத வேண்டிய பலபல விஷயங்கள் நெஞ்சில் தோன்றி யிருந்தாலும், வாசகர்கள் எளிதாக வாசித்து உணர்ந்து இன்புறவேணுமென்னும் நோக்கத்தினால் அதிக ஸம்க்ஷேப விஸ்தரங்களின்றி யெழுதுகிறேன். ஒவ்வொரு க்ரந்தத்திற்கும் அவதாரிகை யுண்டு. ஆனால் அந்த அவதாரிகையானது பெரும்பாலும் வியாக்கியானகாரர்களால் விவரிக்கப்படும். அது மூலக்ரந்தத்தில் இல்லாமலிருக்கும். திருவாய்மொழிக்கு முதல் ச்ரிய: பதியென்றும் இரண்டாம் ச்ரிய: பதியென்றும் மூன்றாம் ச்ரிய: பதியென்றும் அவதரித்துள்ள அவதாரிகைகள் வியாக்கியானகாரர்களினால் அமைக்கப் பட்டவையேயன்றி மூலமான திருவாய்மொழியில் அவதாரிகையாக ஓரக்ஷரமும் கிடையாது. கீதையில் அப்படியின்றிக்கே முதலத்யாயம் முழுதும் அவதாரிகையாகவே தோன்றியுள்ளது. 'இந்த நூல் எதற்காக அவதரிக்கின்றது' என்பதை விசதமாக நிரூபிப்பது தானே அவதாரிகை. அதனை நாம் பிறர் வாயினால் தெரிந்து கொள்ள வேண்டாமல் கீதையைக் கொண்டே நன்கு தெரிந்து கொள்ளுகிறோமாதலால் இதற்கு அவதாரிகையும் இதிலேயே பொருந்தி யிருக்கிறதென்று சொல்லத் தட்டில்லை.

607. கண்ணபிரான் பாண்டவர்கட்காகத் துரியோதநாதியரிடம் தூது சென்று ஸமாதான வழிகள் பல பேசியும் "வீரபோக்யா வஸுந்தரா" ஆகையாலே போர்க்களத்தில் வீரத்தனத்தைக் காட்டி வெற்றி பெறுமவர்களே ராஜ்யமாளக் கடவர்கள் என்று த்ருதராஷ்ட்ர வகுப்பினர் கூற, பிறகு யுத்தமே நடத்தக் கடவதாக முடிவு பெற்றது. இரு வகுப்பினரும் படைத் துணை வேண்டிக் கண்ணபிரான் பக்கலில் வந்தார்கள். துரியோதனன் கண்ண பிரானைத் துணையாக விரும்பவில்லை.. "க்ருஷ்ணாச்ரயா: க்ருஷ்ண பலா: க்ருஷ்ணநாதாச்ச பாண்டவா:" என்னும் புகழ் பெற்ற பாண்டவர்களுக்கே கண்ணபிரான் துணைவனாக நிற்க வேண்டிற்று. பக்த பரதந்திரனான ஸ்ரீக்ருஷ்ணபரமாத்மா தன்னுடைய பரமபக்தனான அர்ஜுனனுக்குத் தேர்ப்பாகனாயிருந்து கொண்டு குருக்ஷேத்திரமென்னுமிடத்தில் வந்து போர் புரிய அணிவகுத்து நின்றனன். அப்பொழுது அர்ஜுனன் கண்ணபிரானை நோக்கி 'பெருமானே! இந்தப் போரில் யான் யாருடன் போர் புரிவது தகுதியானது? துர்ப்புத்தி வாய்ந்த துரியோதனனுக்குத் துணைபுரிவதற்காக யார் யார் வந்திருக்கிறார்களென்பதை நான் கண்டு தெரிந்து கொள்ளுமாறு தேரை இரண்டு சேனைகளினிடையில் நிறுத்த வேணும்' என்று கூற, அப்படியே கண்ணபிரான் இரண்டு படைகளினிடையே தேரை நிறுத்தி 'அர்ஜுநா! இவ்விரு படைகளிலுமிருக்கின் போர் வீரர்களைப் பாராய்' என்றனன்.

608. அப்போது அர்ஜுநன் போர்க் களத்தில் வந்து நின்றிருக்குமவர்கள் தந்தைகளாயும் புத்திரர்களாயும் பேரன்மார்களாயும் தோழன்மார்களாயு மிருப்பது கண்டு அவர்களிடத்து இரக்கங் கொண்ட மனத்தனாய் ஸ்ரீக்ருஷ்ணனை நோக்கி 'கண்ணா! போர் புரிய ஆயத்தர்களாயிரா நின்ற இந்த உற்றாருறவினரைக் காணவே எனது காண்டீவ தனுசு கையில் நின்றும் சோருகின்றது; என்னுடல் எரிகின்றது; மயிர்க் கூச்செறிகின்றது; தேஹம் நடுங்குகின்றது; நான் நிற்கமாட்டேன்; என் மனம் குழம்புகின்றது; அபசகுனங்கள் காண்கின்றன; அமர்க்களத்தில் இவ்வுறவினர்களைக் கொன்று நான் என்ன

நன்மையடைப் போகிறேன்? எனக்கு யுத்தமும் வேண்டா, யுத்தத்தில் வெற்றியும் வேண்டா; இராச்சியமும் வேண்டா, இன்பமும் வேண்டா; உற்றாருவினர்களோடு கூடிக் களித்து வாழ்வதற்காகவன்றோ பொருட் செல்வம் விரும்பப்படுகின்றது; அன்னவர்கள் அனைவரும் உடலையும் உயிரையும் செல்வத்தையும் பொருள்படுத்தாது போர்புரிய வந்து நிற்கின்றனரே. அவர்களை வென்று கொன்ற பின்பு இந்த ராஜ்யத்தினாலுண்டாகு மின்பம் யாதோ? பிறகு நான் பிழைத்திருந்து தான் என்ன பயன்? மூவுலகவின்பமும் கிடைப்பதா யிருந்தாலும் நான் இவர்களைக் கொல்ல மாட்டேன். இந்த அற்ப பூமிக்காக இவர்களைக் கொல்ல நினைப்பதும் ஏலாதது. நெருப்பிட்டுக் கொல்பவர்கள், விஷமிட்டுக் கொல்பவர்கள், பிறருடைய தனங்களையும் பூமியையும் மாதரையும் கொள்ளை கொள்பவர்களான ஆததாயிகளைக் கொலை செய்வதில் குற்றமில்லையாகையாலேஅப்படிப் பட்டவர் களில் தலைவர்களான இத்துரியோதனாதி யர் கொலை செய்யத் தகுந்தவர்களே யானாலும் இவர்களைக் கொல்ல நான் விரும்புகின்றிலேன். இந்த பந்துக்களைக் கொன்று நான் எப்படி ஸுகமடைவேன்? க்ருஷ்ணா! ராஜ்ய ஸுகங்களுக்காக உறவினரைக் கொல்வது பெரும்பாதகம் அல்லவோ? ஆகையால் அஸ்த்ர சஸ்த்ரங்களை நான் பிரயோகிக்கப் போகிறதில்லை! பிரயோகியாமல் வாளா நிற்கு மென்னைத் துரியோதனாதிகள் கொன்ற போதிலும் அதனால் எனக்கு வருத்தமில்லை; அது எனக்கு க்ஷேமமேயாகும்–என்று கூறி வில்லைக் கீழே பொகட்டு வருத்தமும் கலக்கமும் மிகப் பெற்றுத் தேரிடையே உட்கார்ந்து விட்டான்; என்கிற விதுவே நாற்பத்தேழு சுலோகங்கள் கொண்ட முதலத்யாயத்தின் பிரமேயம்.

609. இப்படி அஸ்தாநே கலங்கின அர்ஜுனனுடைய கலக்கத்தைப் போக்கி அவனை யுத்தத்திலே மூட்டுவதற்காகக் கண்ணபிரான் இரண்டாமத்யாயத்தி லிருந்து பல பல உபதேசங்களைச் செய்தருள அவனும் தெளிவு பெற்று "ஸ்திதோஸ்மி கதஸந்தேஹ: கரிஷ்யே வசனம் தவ" என்று சொல்லிப் போர் புரிய இசைந்தானென்பது கீதையின் முழுப்பொருள்.

610. இவ்விஷயத்தில் புத்திமான்கள் முக்கியமாக ஆலோசிக்கத் தக்கவை இரண்டு விஷயங்களுண்டு, யுத்தத்திற்குக் குதூஹலியாய் வந்து சேர்ந்த அர்ஜுநன் யுத்தாடம்பரம் செய்ய வேண்டியிருக்க அது செய்யாமல் தேர்ப்பாகனாயிரா நின்ற தேவனை நோக்கி உபயஸைன்யங்களிலு மிருக்கிற பந்துக்களை இன்னாரின்னா ரென்று பார்ப்பதற்காக இந்தத் தேரைச் சிறிது முன்னே கொண்டு போய் உபய ஸேனைகளின் முன்னே நிறுத்து என்றானே; இப்போது அர்ஜுனன் இப்படிச் சொல்ல வேண்டிய அவச்யமேயில்லை. ஏற்கெனவே இவன் தெரிந்து கொள்ளாத அம்சம் என்ன இருக்கிறது? யுத்தத்தில் எதிரிகளாக வரப் போகிறவர்கள் அல்லது வந்திருக்கிறவர்கள் இன்னாரின்னா ரென்பதை அர்ஜுனன் இதற்கு முன் தெரிந்து கொள்ளாமல் இனிமேலா தெரிந்து கொள்ளப் போகிறான்; இல்லையே. அவர்களை யெல்லாம் வதைத்தொழிக்க வேணுமென்கிற ஊக்கங் கொண்டே போர் புரிய ஆயத்தனாய் வந்து நின்றவன் இப்போது இன்னாரின்னார் போர் புரிய வந்திருக்கிறார்களென்பதைக் கண்டறிந்து கொள்ள வேணுமென்றது சிறிதும்

பொருத்தமாக இல்லையே. இது எப்படி பொருந்தும்? இது முதன்முதலாக ஆலோசிக்க வேண்டிய விஷயம்.

611. இனி மற்றொரு விஷயமானது, யுத்தம் பண்ணமாட்டேன் என்ற அர்ஜுநனை யுத்தஞ் செய்ய இசைவிக்க வேண்டியது தானே கண்ணபிரானுக்குக் கர்த்தவ்யம்; அதற்கு இவ்வளவு விஸ்தாரமான கீதாசாஸ்த்ரம் வேணுமோ? 'அப்பா! நீ க்ஷத்ரியனாகையாலே யுத்தஞ் செய்யக் கடமைப் பட்டவனாகிறாய்' என்கிற விவ்வளவை உபத்திகளுடன் சொன்னாற் போதும்; இதற்கு ஒரு அத்யாயமே அதிகம். அத்தனையத்யாயங்கள் வளர்த்தியிருப்பது எதற்காக? என்பது. ஆக இவ்விரண்டு விஷயங்களையும் ஆலோசித்துப் பொருத்தமான முடிவு கட்ட வேண்டியது அவச்யமாயிருக்கின்றது.

612. மேலே ப்ரஸ்தாவித்த இரண்டு விஷயங்களுள் முந்தின விஷயத்திற்கு முன்னம் ஸமாதானம் தெரிவிக்கின்றோம். பகவான் ஸ்ரீ ராமாவதாரஞ்செய்து "தசவர்ஷஸஹஸ்ராணி தச வர்ஷசதாநிச, ராமோ ராஜ்யமுபாஸித்வா" என்றபடி பதினோராயிரமாண்டு இந்நிலவுலகில் வாழ்ந்திருந்தும் ஸம்ஸாரி சேதநோஜ்ஜீவநார்த்தமாக ஒரு சாஸ்த்ரமும் இட்டருளவில்லை; தன்னடிச் சோதிக்கு எழுந்தருளின பிறகு திருவுள்ளத்தில் இக்குறை மிகவும் தோன்றிற்று. அப்போதே திடமாக ஸங்கல்பம் செய்து கொண்டான்–அடுத்தபடி மண்ணுலகில் அவதாரம் செய்யும் போது மிகச் சிறந்ததொரு சாஸ்த்ரத்தை அவதரிப்பித்தே தீருவேன் என்று. சாஸ்த்ரத்தை அவதரிப்பித்தல் என்றால் ஓலைப்புறத்திலே எழுதி வைப்பதன்று. அப்படியெழுதி வைத்தால் மஹர்ஷிப்ரணீதங்ளான இதிஹாஸ புராணாதிக்ரந்தங்கள் போலே இதுவும் ஒன்று என்று நினைக்கும்படியாகுமத்தனை. ஒரு உத்தமாதிகாரிக்குத் தன் திருவாக்காலே நேராக உபதேசித்து அம்முகத்தாலே உலகில் பரவ வைக்க வேணுமென்று திருவுள்ளம் பற்றியிருந்தான்.

613. ஸ்ரீவசநபூஷணத்தில் "ஜிதேந்த்ரியரில் தலைவனாய் ஆஸ்திக அக்ரேஸரனாய் "கேசவஸ்யாத்மா என்று க்ருஷ்ணனுக்கு தாரகனாயிருக்கிற அர்ஜுநனுக்கு..." என்று பிள்ளை லோகாசார்யர் புகழும்படியான பெருமை வாய்ந்த அர்ஜுனனையே உபதேச ஸத்பாத்ரமாகத் திருவுள்ளம் பற்றினான் கண்ணபிரான். அரும்பெரும் பொருள்களை சிஷ்யனானவனுக்கு உபதேசிக்கலாமே யல்லது மற்றையோர்க்கு உபதேசிக்கத் தகாது. அர்ஜுனன் இப்போது நண்பன் என்னும் முறையிலுள்ளானேயன்றி சிஷ்யனென்னும் முறையில்லை.

614. "அதிபரிசயாதவஜ்ஞா ஸந்ததகமநாத் அநாதரோ பவதி, மலயே பில்லபுரந்த்ரீ சந்தநதருகாஷ்டமிந்தநம் குருதே." என்று ஒரு ஸுபாஷிதமுண்டே. மலயபர்வதத்தில் வாழும் குறத்திகள் சந்தனக் கட்டைகளை விறகாக உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார்களாம்; எதனாலே? அவ்விடத்தில் சந்தனகாஷ்டங்கள் மலிந்து கிடக்கின்றன. அவற்றோடே அவர்களுக்குப் பரிசயம் அதிகம். அதிக பரிசயம் உள்ளவிடத்தில் அவஜ்ஞை தோன்றுவது இயல்வு. ஆகவே அவர்கள் சந்தனக் கட்டைகளின் பெருமையை யுணராமல் அவற்றையிட்டுச் சமையல் செய்வதும்

குளிர்காய்வதுமாயிருக்கிறார்கள். அதுபோல, கண்ணன் பக்கலில் அதிக பரிசயமுள்ள அர்ஜுனனுக்கு சிஷ்யத்வ மிருக்க ப்ரஸக்தியில்லையன்றோ. சிஷ்ய வ்ருத்தி செய்யாதவனுக்கு உபதேசிக்கக் கூடாதாதலால் இவ்வர்ஜுனனை எப்படியாவது சிஷ்யனாக்கிக் கொண்டு இவனுக்கே கீதாசாஸ்த்ரத்தை யுபதேசிக்க வேணுமென்று திருவுள்ளம் பற்றினான் கண்ணபிரான்.

615. "கண்ணபிரானே! உனக்கு நான் சிஷ்யனாயிருக்கின்றேன். எனக்குத் தத்வோபதேசம் செய்தருள வேணும்" என்று பிரார்த்திக்கும்படியாக அர்ஜுனனைச் செய்து பிறகு அவனுக்கு உபதேசிக்க வேணும். சிஷ்யத்வமென்பது எளிதாக உண்டாய்விடுமோ? "பரீக்ஷ்யலோகாந் கர்மசிதாந் ப்ராஹ்மணோ நிர்வேதமாயாத் .... தத்விஜ்ஞாநார்த்தம் குருமேவாபிகச்சேத் ......" இத்யாதி உபநிஷத்தின்படி நிர்வேதம் உண்டானாலல்லது சிஷ்யத்வ முண்டாக மாட்டாதாகையாலே அர்ஜுனனுக்கு சிஷ்யத்வ ப்ராப்திக்கு அங்கமாக நிர்வேதம் உண்டாக வேண்டியது அவசியமாயிற்று. அந்த நிர்வேதத்தை யுண்டாக்குவதற்கு ஸமயம் எதிர்பார்த்திருக்கிறான் கண்ணன்.

616. இப்பெருமான் ஸந்தி பண்ணி வைப்பதாகப் புகுந்து, முடிவில் போர் செய்வதையே திடப்படுத்திக் கொண்டு, ஸமயத்தில் கீதா சாஸ்த்ரத்தையுபதேசிக்க இடம் பெறுவதற்காக அர்ஜுநனோடு இருப்புப் பெறுவதற்குத் தேர்ப்பாகனாக இருக்க இசைந்து அவனோடும் அவனுடையாரோடுங் கூட. குருக்ஷேத்திரம் வந்து சேர்ந்து, யுத்தத்தைத் தொடங்குவ தற்கு முன்னே பந்துக்களைக் கண்டு மோஹிப்பதென்ன; அதனால் சோக விஷாதங்களை யடைவதென்ன ஆகிய இவற்றை யுண்டாக்கி, ஆக இவ்வளவால் சிஷ்யத்வத்திற்கு அங்கமான நிர்வேதத்தை யுண்டாக்குவதாகத் திருவுள்ளம் பற்றி மேலே பத்தாவது அத்தியாயத்தில் "அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்தஸ் ஸர்வம் ப்ரவர்ததே" என்று தானே யருளிச் செய்கிறபடியே தனக்கு அஸாதாரணமாக விருக்கும் சக்தியினால்– இப்போது போர் புரிய வந்து நிற்கும் உற்றாருறவினர்களைப் பார்க்க வேணுமென்பதோராசையை அர்ஜுனனுக்கு உண்டுபண்ணினானாயிற்று.

617. இரண்டாமத்யாயத்தில் பதினோராவது ச்லோகமாகிய "அசோச்யாந் அந்வசோசஸ்த்வம் ப்ரஜ்ஞாவாதாம்ச்ச பாஷஸே, கதாஸூந் அகதாஸூம்ச்ச நாநுசோசந்தி பண்டிதா:" என்கிற ச்லோகந்தான் உபதேசத்தின் உபக்ரமமாகவுள்ளது. இதற்கு முன்னே அர்ஜுனன் வாயில் "சிஷ்யஸ் தேஹம் சாதிமாம் த்வாம் ப்ரபந்நம்" என்று வெளிவந்திருக்கிறது. 'கண்ணா! எனக்கு தர்மாதர் மங்கள் தெரியவில்லை; எனக்கு ச்ரேயஸ்ஸென்று நீ அறுதியிட்ட பொருளை எனக்கு உரைப்பாயாக. உனக்கு நான் மித்திரன் மாத்திரமல்லேன்; சிஷ்யனுமா கிறேன்; இதோ உன் திருவடிகளில் வீழ்ந்து யாசிக்கிறேன் காண். எனக்கு ஹிதா ஹிதங்களை யுபதேசிப்பாயாக' என்று அர்ஜுநன் சொல்லும்படி செய்து விட்டான் கண்ணபிரான். இந்த ப்ரார்த்தனையைப் பெறாமல் சிறந்த சாஸ்த்ரத்தை யுபதேசிப்பது தகுதியன்றாதலாலும், நிர்வேதமில்லாதவனது வாயில் இந்த பிரார்த்தனை வெளிவராதாகையாலும் இத்தனையும் கண்ணபிரான் செய்து வைத்தவொரு நாடகம் என்பது அறியத் தக்கது. ஆகவே அர்ஜுனனுக்குண்டான வ்யாமோஹம்

அவன்றன்னுடைய ஸ்வபாவத்தாலுண்டானதன்று. மாயப் போர்த் தேர்ப்பாகனுடைய மாயமந்திரம் செய்வித்த செயல் என்றதாயிற்று. இல்லையாகில் கீதாசாஸ்த்ரம் அவதரிக்க அவகாசமே யிராதன்றோ.

618. போர் புரிய மாட்டேனென்ற அர்ஜுனனைப் போரில் மூட்டுவதற்கு இந்த கீதாசாஸ்த்ரத்தில் சொல்லப்படுகிற விஷயங்களித்தனையும் வேணுமோ? க்ஷத்ரிய தர்மோபதேசமொன்று போதுமே; ப்ரக்ருதத்திற்கு அநபேக்ஷிதங்களான அதிக விஷயங்களை இதில் பரக்கக் கூறி யிருப்பது ஏன்? என்கிற இரண்டாவதான ஆலோசனைக்கு இனிச் சொல்லுகிறோம். ஏதோவொரு வியாஜத்தையிட்டு அரிய பெரிய சாஸ்த்ரார்த்தங்களை வெளியிட வேணுமென்று துணிந்த கண்ணபிரானது திருவாக்கில் இது ஆவச்யகம், இது அநாவச்யகம் என்று வரையறுக்க நாமார்? விஷயங்களானவை ப்ரஸக்தம் அநுப்ரஸக்தம் என்று இருவகைப்படு மன்றோ. எந்த சாஸ்த்ரமும் ப்ரஸக்த விஷயங்களோடு மட்டும் நிற்காது. அநுப்ரஸக்த விஷயங்களும் சேர்ந்தே நிற்கும்.

619. ஸ்வாமி யெம்பெருமானார் தம்முடைய கீதாபாஷ்ய அவதாரிகையின் முடிவில் "பாண்டுதநய யுத்தப்ரோத்ஸாஹந வ்யாஜேந பரமபுருஷார்த்தலக்ஷண மோக்ஷ ஸாதநதயா வேதாந்தோதிதம் ஸ்வவிஷயம் ஜ்ஞாநகர்மாநுக்ருஹீதம் பக்தியோகம் அவதாரயாமாஸ" என்றருளிச் செய்துள்ள ஸ்ரீஸூக்திகளை இங்கே அநுஸந்திப்பது. அர்ஜுநனை யுத்தத்தில் உத்ஸாஹப் படுத்துவது என்பது வ்யாஜமாத்ர மென்றும், பரமபுருஷார்த்தமான மோக்ஷத்திற்கு ஸாதனமாக வேதாந்தங்களில் ஓதப் பட்டதாய் ஜ்ஞான கர்மங்களை அங்கமாக உடைத்தாயிருந்துள்ள பக்தியோகத்தை அவதரிப்பிப்பது தான் இந்த கீதா சாஸ்த்ரத்திற்கு ப்ரதாந லக்ஷ்யமென்றும் தெரிவித்தருளினாராயிற்று. ஆகவே முமுக்ஷுக்களுக்கு ஜ்ஞாதவ்யங்களான ஸகலார்த்த ஸாரங்களும் இந்த கீதா சாஸ்த்ரத்தில் தெள்ளமுதாக அமைந்துள்ள வென்றதாயிற்று.

620. இந்த கீதாசாஸ்த்ரமானது அர்ஜுனனுக்கும் கண்ணபிரானுக்கும் ஸம்வாதரூபமாக அவதரித்திருக்கச் செய்தேயும் த்ருதராஷ்ட்ரனுக்கும் ஸஞ்ஜயனுக்கும் ஸம்வாதரூபமாகவும் அவதரித்ததாயிற்று. கீதை தொடங்கும் போதே "த்ருதராஷ்ட்ர உவாச" என்று அவன் பெயரைத்தான் நினைக்கவும் சொல்லவும் ப்ராப்தமாகிறது. த்ருதராஷ்ட்ரன் ஸஞ்ஜயனை நோக்கிக் கேட்க, குருக்ஷேத்ரத்தில் நடந்த செய்திகளை யெல்லாம் அவனுக்கு ஸஞ்ஜயன் சொல்லுவதாகவும், கீதா சாஸ்த்ரமும் ஸஞ்ஜயன் வாயிலாகவே வெளிவருவதாகவும் அமைந்திருக்கின்றது. பதினெட்டாமத்தியாயத்தில் எழுபத்து மூன்றாவது ச்லோகத்தோடு க்ருஷ்ணார்ஜுநஸம்வாதம் முடிந்து விட்டது. அதற்குமேலுள்ள ஐந்து ச்லோகங்களும் த்ருதராஷ்ட்ரனுக்கு ஸஞ்ஜயன் சொல்லி முடிப்பதாக அமைந்திருக்கின்றன.

621. பாண்டவர்களும் கௌரவர்களுமாகிற இருவகுப்பினருடையவும் சேனைகள் போர்புரிய ஆயத்தமாயிருந்த வளவில் வேதவ்யாஸ பகவான் தன் புதல்வனான த்ருதராஷ்ட்ரனிடம் வந்து 'மன்னவனே! இனி நடக்கப் போகிற யுத்தத்தில் உனது புத்திரர்கள் தவறாது விநாசமடையப் போகிறார்கள்; அந்த யுத்தத்தை நீ நேரில் காண

விரும்புகின்றா யாகில் அதைக் காண்பதற்கீடான சக்ஷுஸ்ஸை உனக்கு அளிப்பேன்' என்றார். அது கேட்ட த்ருதராஷ்ட்ரன் 'நான் அதைக் காண விரும்புகின்றிலேன்; உள்ளபடி அனைத்தையும் கேட்பிக்க வேணும்' என்றான். அப்போது வேதவ்யாஸர் தம்முடைய சிஷ்யனும் த்ருதராஷ்ட்ர ஸாரதியுமான ஸஞ்ஜயனை யழைத்து யுத்த விஷயத்தில் அவன் ஸர்வஜ்ஞனாம்படி அநுக்ரஹம் செய்து, 'ஆதியோடந்தமாக யுத்த விருத்தாந்தங்கள் முழுவதையும் த்ருதராஷ்ட்ரனுக்கு நீ சொல்லக் கடவாய்' என்று நியமித்து (வியாஸர்) தம் இருப்பிடம் சென்று சேர்ந்தார். பிறகு ஸஞ்ஜயன் யுத்தரங்கத்தில் வந்து, அர்ஜுனனுக்கு கீதோபதேசம் செய்தருளா நின்ற ஸ்ரீ க்ருஷ்ணபரமாத்மாவின் முகாரவிந்தத்தில் நின்றும் கீதாம்ருதத்தை ஸாக்ஷாத்தாக ச்ரவணம் பண்ணி வியாஸருடைய அநுக்ரஹத்தினால் கிடைத்திருந்த திவ்யஜ்ஞானத்தாலே விவித விசித்ர யுத்த விருத்தாந்தங்களெல்லா வற்றையும் தனக்கு ஓர் அபாயமின்றிக்கே கரதலாமலகமாகக் கண்டுணர்ந்து அந்த யுத்தரங்கத்தில் நின்றும் போய் த்ருதராஷ்ட்ரனிடம் சேர்ந்து, யுத்தத்தைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்த அவனுக்கு யுத்தச் செய்திகளை முதலே பிடித்துச் சொன்னான். ஆக இந்த ஸம்வாதம் கீதாசாஸ்த்ரமாக உலகில் பரவி அனைவரையும் புனிதமாக்கிக் கொண்டு வருகின்றது.

622. ஸ்ரீக்ருஷ்ணபரமாத்மா வாஸ்தவமாகத் திருவவதாரம் செய்து, வாஸ்தவமான அர்த்தங்களை நிரப்பி வாஸ்தவமாக கீதாசாஸ்த்ரத்தை அவதரிப்பித்தருளினதாக ஸ்ரீபகவத் ராமாநுஜனடியார்களான நாம் நம்பி யிருக்கிறோம். ஸ்வாமியிட்டருளின கீதாபாஷ்யத்தின் அவதாரிகையிலும் மேலே பல ச்லோகங்களின் பாஷ்யத்திலும் இந்த நம்பிக்கையே நமக்கு ஊர்ஜிதமாக்கப் படுகின்றது.

623. ஸ்ரீமத்சங்கராசார்ய ஸ்வாமிகள் இயற்றிய பாஷ்யத்தின் ப்ரக்ரியை இதற்கு மாறாகவுள்ளது. அவர் தம்முடைய பாஷ்ய அவதாரிகையில் "பகவாந்..... ஸ்வமாயயா தேஹவாநிவ ஜாத இவ ச லோகாநுக்ரஹம் குர்வந் லக்ஷ்யதே" என்றெழுதி வைத்திருக்கக் காண்கிறோம். இதனால், பகவான் உண்மையில் தேஹபரிக்ரஹம் செய்தருளவில்லை யென்றும், மாயையினால் ஏதோ ஜனங்களை மயக்கிக் காட்டினதாகவும் சங்கராசாரியர் அபிப்ராயப் படுவதாக விளங்குகின்றது. இப்படி இவர் அபிப்ராயப்படுவதற்கு ஒரு காரணாபாஸ முண்டு; அதாவதென்னென்னில்;

624. மேலே நான்காமத்யாயத்திலே பகவான் தானே தன்னுடைய அவதாரத்தைப் பற்றிப் பேசிவருகையில் (4–6) "அஜோபிஸந் அவ்யயாத்மா பூதாநாமீச்வரோபி ஸந், ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாமி ஆத்மமாயயா" என்றதில் 'ஆத்ம மாயயா ஸம்பவாமி' என்றுள்ளது. இதற்கு உண்மையான பொருள் எதுவோ அது பகவத் ராமாநுஜ பாஷ்யத்தில் ப்ரமாண ப்ரதர்சந புரஸ்ஸரமாக நிரூபிக்கப் பட்டிருக்கின்றது. "ஆத்ம மாயயா – ஆத்மீயயா மாயயா. 'மாயா வயுநம் ஜ்ஞாநம்' இதி ஜ்ஞாநபர்யாயோ(அ)த்ர மாயா சப்த:. ததா சாபியுக்தப்ரயோக: 'மாயயா ஸததம் வேதி ப்ராணிநம் ச சுபாசுபம்' இதி ஆத்மீயேந ஜ்ஞாநேந – ஆத்மஸங்கல்பேந இத்யர்த்த:" என்பன கீதாபாஷ்யத்தில் அங்கு ஸ்வாமியருளிச் செய்துள்ள ஸ்ரீஸூக்திகள். வைதிகநிகண்டுவையும் அதையநுஸரித்த

அபியுக்த ப்ரயோகத்தையும் காட்டி ஸங்கல்பரூபஜ்ஞானமே இங்கு மாயா சப்தார்த்த மென்று ஸ்வாமி நிர்ணயித்திருக்கிறார்.இதுதான் மஹர்ஷிகளின் அபிப்ராயத்திற்கு மிகவும் இணங்கிய ப்ராமாணிகமான பொருள். ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் (6–5–84) ''இச்சா க்ருஹீத ாபிமதோரு தேஹ:'' என்று, மாயா சப்தஸ்தானத்தில் இச்சா சப்தத்தை நிஸ்ஸந்தேஹமாக இட்டு, பகவான் தன்னுடைய இச்சையினாலே தனக்கு அபிமதமான பல திவ்யமங்கள விக்ரஹங்களைப் பரிக்ரஹித்து கொண்டு அவதரிப்பதாகச் சொல்லப்பட்டுள்ளது.

625. இங்கு சங்கராசார்யர் ''ஸம்பவாமி – தேஹவாநிவ பவாமி; ஜாத இவ ஆத்மமாயயா – ஆத்மேந மாயயா, ந பரமார்த்தத: லோகவத்'' என்று எழுதியுள்ளார், கானலானது தன்னிடத்தில் தண்ணீர் இல்லாமலிருக்கச் செய்தேயும் அது இருப்பது போல் காட்டுகிறதல்லவா? அப்படியே பகவானும் தான் உண்மையில் தேஹபரிக்ரஹம் பண்ணாதவனாகையாலே தன்னிடத்தில் தேஹமில்லாதிருக்கச் செய்தேயும் இருப்பது போல் மாயையினால் காட்டிக் கொண்டு நிற்கிறான் என்பது சங்கராசார்யருடைய அபிப்ராயம். மாயா என்னுஞ் சொல்லுக்கு பொய்யென்பதே இவர் கொண்ட பொருளாகும். அந்த நாலாவது அத்யாயத்திலேயே மேல் ஒன்பதாவது ச்லோகத்தில் ''ஜந்ம கர்ம ச மே திவ்யம் ஏவம் யோ வேத்தி தத்த்வத: த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி ஸோர்ஜுந'' என்பதில் பகவான் தானே தன்னுடைய அவதாரத்தையும் அவதார சேஷ்டிதத்தையும் ஸத்யமாக எவன் அறிகிறானோ அவன் வர்த்தமாந தேஹத்தை விட்டொழித்து மறு பிறவியடையாமல் தன்னையே யடைவதாகச் சொல்லியிருக்கின்றான். 'மே ஜந்ம கர்ம ச ய: தத்த்வத: வேத்தி' என்றிருப்பதை ஸ்வமதப்ரதிகூலமாக நினைத்த சங்கராசார்யர் வெகு சாதுர்யமாய் வேறுவிதமாக அந்வயம் காட்டியுள்ளார். தத்த்வத: என்பதை 'யோ வேத்தி' என்பதில் கூட்டாமல் 'தத்த்வத: தேஹம் த்யக்த்வா' என்று உத்தரார்த்தத்திலே அந்வயித்துப் பொருள் உரைத்தார். அவர் இவ்வளவு ச்ரமம் எதற்காகப் படுகிறாரென்றால், 'ஸம்பவாமி ஆத்மமாயயா' என்றுள்ள விடத்தில் மாயா சப்தத்திற்குத் தாம் கொண்ட பொருளே பொருளென்கிறவொரு அபிநிவேசத்தினால் தான்.

626. ப்ராமாணிகர்கள் இங்கு மத்யஸ்த நிலையில் நின்று ஒன்று குறிக் கொள்ள வேண்டும். தைத்திரிய யஜுர் ப்ராஹ்மணத்தில் காடக (ஸம்ஸ்) ச்ருதியில் மூன்றாம் ப்ரச்நத்தில் ''யாவந்த: பாம்ஸவோ பூமே: ஸங்க்யாதா தேவமாயயா'' என்று ஓதப்பட்டிருக்கின்றது. பூமியிலுள்ள மண் துகள்களெல்லாம் தேவர்களின் மாயையினால் கணக்கிடப் பெற்றவையாக இதில் சொல்லப்படுகிறது. இங்கு மாயை யென்பதற்கு பிறர் கூறும் பொருள் பொருந்தமாட்டாதென்பது வெளிப்படை. பூமியிலுள்ள மண் துகள்கள் மனிதர்களின் ஞானத்தினால் கணக்கிட முடியாதவையாயினும் தேவர்களின் ஞானத்தினால் கணக்கிடக் கூடியவையேயாதலால் இங்கு 'தேவமாயயா' என்றதற்கு 'தேவர்களின் ஞானத்தாலே' என்பது தான் பொருளென்று யாவரும் நிரோக்ஷேபமாக இசையத் தக்கதாகும். வித்யாரண்யர் முதலான வேதபாஷ்யகாரர்களும் இப்படித் தான் இங்குப் பொருள் வரைந்துள்ளார்கள். ஆகவே (மாயா) என்பதற்கு 'மித்த்யா' என்று பொருள் கொள்வது பொருத்தமற்றதென்று தெளியக் கடவது.

627. அஸுரராக்ஷஸாதிகள் செய்கிற செயல்களை மாயை யென்று சொல்வதுண்டு. அங்கும் மித்யா என்கிற அர்த்தம் கிடையாது. ஆச்சர்யகரம் என்பது பற்றியே அங்கு மாயாசப்த ப்ரயோகம் பண்ணுவது. பிள்ளை லோகாசார்யர் தத்வத்ரயத்தில் அசித் ப்ரகரணத்தில் (10) "மாயையென்கிறது விசித்ரஸ்ருஷ்டியைப் பண்ணுகையாலே" என்றருளிச் செய்த விடத்து வியாக்கியானத்தில் மணவாள மாமுனிகள் "அஸுரராக்ஷஸாதி க்ரியைகளை ஆச்சர்யகரத்வத்தைப் பற்ற மாயா சப்தத்தாலே சொல்லுகிறாப்போலே இத்தையும் (ப்ரக்ருதியையும்) மாயை யென்கிறது விசித்ர ஸ்ருஷ்டியைப் பண்ணுகையாலே. அதாவது, ஒன்று போலொன்றன்றிக்கே விஸ்மயநீயங்களான கார்யங்களை ஜநிப்பிக்கை" என்றருளிச் செய்ததும் இங்கே அநுஸந்தேயம். "தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா" (7–14) என்ற கீதா ச்லோகத்தின் பாஷ்யத்தில் ஸ்வாமி வெகு விசதமாக நிரூபித்தருளுகிறார். "அஸ்யா மாயாசப்த வாச்யத்வம் அஸுரராக்ஷஸாஸ்த்ராதீநாமிவ விசித்ர கார்யகரத்வேந .... அதோ மாயா சப்தோ ந மித்யார்த்தவாசீ. ஐந்த்ரஜாலிகா– திஷ்வபி கேநசித் மந்த்ரௌஷதாதிநா மித்யார்த்தவிஷயாயா: பாரமார்த்திக்யா ஏவ புத்தேருத்பாதகத்வேந மாயாவீதி ப்ரயோக:. ததா மந்த்ரௌஷதாதிரேவ ச தத்ர மாயா" இத்யாதி திவ்ய ஸூக்திகள் அங்கு ஸேவிக்கத் தக்கவை. மாயா சப்தத்தின் உண்மைப் பொருளையுணராதே தவறான பொருளைக் கொண்டதன் பயனாகவே மாயாவாதிகளின் வாதங்கள் மிக மிக வளர்ந்து விட்டன.

628. கண்ணபிரான் அவதரித்ததும் பொய், தேஹபரிக்ரஹம் பண்ணினதும் பொய் என்று சொல்லும் பக்ஷத்தில் கீதாசாஸ்த்ரம் அவதரித்ததும் பொய் யென்றே சொன்னதாகத் தேறிவிடும். பொய்யான சாஸ்த்ரம் நம்முடைய உஜ்ஜீவனத்திற்கு எப்படி ஸாதனமாகும். வேங்கடாத்வரி இயற்றிய விச்வகுணாதர்சத்தில் வேதாந்தி வர்ணத்தில் "த்ருச்யம் மித்யா த்ருஷ்டி கர்த்தா ச மித்யா தோஷோ மித்யேத்யேவ யா தீரமீஷாம், ஸா(அ)திஷ்டாநாம்சே(அ)பி கிம் நேதி சிந்தா ஸாதிஷ்டாநம் பண்டிதாநுமுதேதி" என்றொரு ச்லோகம் வெகு அற்புதமாகக் காண்கிறது. 'பார்க்கப்படுகிற பொருள்களெல்லாம் பொய், பார்க்கிறவனும் பொய், அவித்யையாகிற தோஷமும் பொய் என்று கொள்ளுகிற இந்த மாயாவாதிகள், இவற்றுக்கு ஆச்ரய பூதமான ப்ரஹ்மமும் பொய்யென்று முடித்திருக்கலாமே; ஏன் அதை மாத்திரம் ஸத்யமென்று கொண்டார்களோ தெரியவில்லை – என்பதே இந்த ச்லோகத்தின் கருத்து, பொய்யன் சொல்லுகிற வார்த்தைகளும் பொய்யாகுமாகையாலே தம்மைப் பொய்யர் என்று நிலைநாட்டிக் கொள்ளுகின்ற இந்த மாயாவாதிகள் சொல்லுமதெல்லாம் பொய்யே என்பது இவர்கள் தம்மாலேயே ஸ்தாபிக்கப்பட்டுத் தீருவதனால் இவர்களைக் கண்டிக்க நாம் சிறிதும் ப்ரயாஸம் கொள்ள வேண்டியதில்லை யென்றும் ஒரு ரஸிக பண்டிதர் எழுதி வைத்திருக்கக் காண்கிறோம்.

629. கீதையின்இரண்டாமத்யாயத்தின் பன்னிரண்டாவது ச்லோகத்திலிருந்தே சாஸ்த்ராரம்பமென்று சொல்லலாம். அதற்குக் கீழுள்ள பாகங்களெல்லாம் அவதாரிகையாக நிற்கிறது. அந்த பன்னிரண்டாவது ச்லோகம் எவ்விதமாக உள்ளதென்று பார்க்கவேணும். "நத்வேவாஹம் ஜாது நாஸம் ந த்வம் நேமே ஜநாதிபா:, ந சைவ ந பவிஷ்யாமஸ்ஸர்வே

வயமத: பரம்" என்பதே அந்த ச்லோகம். இதன் பொருள் யாதெனில், ஸர்வேச்வரனாகிய நானும் இதற்கு முன்கழிந்த அநாதிகாலத்திலும் இருந்தவனே; அர்ஜுநா! நீயும் இந்த அரசர்களுமான க்ஷேத்ரஜ்ஞர்களுங்கூட முன்பும் இருந்தவர்களே. முன்பு இருந்தது மாத்திரமேயன்றிக்கே மேலுள்ள காலமு மெல்லாம் நானும் நீங்களும் இருக்கப் போகிறவர்களே என்பதாம். ஸர்வேச்வரனாய் பரமாத்மாவான நான் நித்யம் என்பதில் எப்படி ஸந்தேஹம் இல்லையோ, அப்படியே க்ஷேத்ரஜ்ஞர்களாய் ஜீவாத்மாக்களான நீங்களும் நித்யர்கள் என்பதில் ஸந்தேஹமில்லையென்று பகவான்தானே சோதிவாய்திறந்து பணித்துளன். இதனால் ஸர்வேச்வரனான பகவானிற் காட்டிலும் ஜீவாத்மாக்களுக்கு உண்டான பேதமும், அந்த ஜீவாத்மாக்களுக்குப் பரஸ்பர முண்டான பேதமும் பாரமார்த்திகமென்று பகவான் தானே வ்யக்தமாகத் தெரிவித்ததாய்த் தேறுகிறது. இந்த ச்லோகம் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு அடிப்படையாக வுள்ளதென்று நன்கு உணரலாம். நமது பாஷ்யகாரர் இந்த ச்லோகத்திற்கு இட்டருளியிருக்கின்ற பாஷ்யம் மிகவும் விபுலமாக வுள்ளது.

630. கீழே அர்ஜுனன் (2–7) "ப்ருச்சாமி த்வா தர்மஸம்மூடசேதா: யச்ரேயஸ்யாந் நிச்சிதம் ப்ரூஹி தந்மே சிஷ்யஸ்தேஹம் சாதிமாம் த்வாம் ப்ரபந்நம்" என்று, தத்வார்த்தம் தெரியாமையினாலே தான் தளும்பியிருப்பதாகவும் தன்னுடைய கலக்கம் தீர தத்வார்த்தத்தை அறுதியிட்டு அருளிச் செய்யவேணுமென்றும் சொல்லித் திருவடிகளில் விழுந்து யாசித்திருக்கிறான். அப்படிப்பட்டவனுக்கு தத்வோபதேசம் செய்யவே இந்த கீதாசாஸ்த்ரம் அவதரித்தது. கீதாசார்யன், கலங்கினவனுக்குச் சொல்லும் போது தெளிவான பொருளைச் சொல்லுவனே யல்லது கலங்கின பொருளையே சொல்லமாட்டானன்றோ. ஆகவே இந்த சாஸ்த்ரத்தில் கூறப்படும் பொருள்கள் யாவும் ஸர்வாத்மநா பாரமார்த்திகமென்றே வைதிகர்கள் கொள்ளக் கடவர்கள். அதிலும் ஆரம்ப ச்லோகமான விதனில் கூறப்படும் விஷயம் உபநிஷதாதிகளில் வடிகட்டின பொருளாகவே யிருக்கத்தகும். இதில் ஜீவாத்ம பரமாத்மபேதம் முதலியன தெரிவிக்கப்படுமவை அபாரமார்த்திகமாக இருக்கச் சிறிதும் ஔசித்யமில்லை. ஆக இந்த நிரூபணங்களினால் ஸ்வாமி எம்பெருமானார் உபநிஷத்து, ப்ரஹ்மஸூத்ரம், கீதை முதலானவற்றின் பொருள்களை ஆர்ஜவத்துடன் அறிந்து அறுதியிடுபவர் என்பது நிஷ்பக்ஷபாதர்களுக்குக் கையிலங்கு நெல்லிக்கனியாகும். இப்பெருமை பொலியவே யதிராஜ ஸப்ததியில் "யதாபூதஸ்வார்த்தா யதிந்ருபதிஸூக்திர் விஜயதே" என்று பொருத்தமாகப் பேசப்பட்டது.

631. இனி ப்ரக்ருதத்திலே செல்வோம்: "ந த்வேவாஹம் ஜாது நாஸம்" என்கிற ச்லோகத்திலே ஜீவாத்ம பரமாத்ம பேதமும் ஜீவர்களுக்குப் பரஸ்பரபேதமுமாகிறவிவை காட்டப்பட்டது போல அதற்கடுத்த (13) ச்லோகத்தில் "தேஹிநோஸ்மிந் யதா தேஹே கௌமாரம் யௌவநம் ஜரா, ததா தேஹாந்தரப்ராப்தி: தீரஸ்தத்ர ந முஹ்யதி" என்பதில் ப்ரக்ருத்யாத்ம விவேகமும் காட்டப்பட்டது. அசேதநம் வேறு, சேதநன் வேறு என்கிற பகுத்துணர்வே ப்ரக்ருத்யாத்ம விவேக மெனப்படும். நிர்விசேஷ சிந்மாத்ரமான ப்ரஹ்மமொன்று தவிர வேறு சேதநா சேதநங்கள் உண்மையில் கிடையா என்கிறவாதம்

இங்கு நிராகரிக்கப்பட்டதா கிறது. 'அந்தவந்த இமே தேஹா:', 'ந ஜாயதே ம்ரியதே வா கதாசித்', 'வாஸாம்ஸி ஜீர்ணாநி யதா விஹாய' இத்யாதிகளான ச்லோகங்களி னால் ஆத்மா நித்யனென்றும், தேஹம் அநித்யமென்றும் பரக்கச் சொல்லுகிற முகத்தாலும் சேதநாசேதநங் களின் ஸத்பாவம் பாரமார்த்திகமாகவே மூதலிக்கப்பட்டதாகிறது. ஆக, கீதாசாஸ்த்ரம் விசிஷ்டாத்வைதி களுக்கே நிதியானதென்றும் மற்றையோர்க்கு இது கொண்டு பணியில்லையென்றும் சொல்லிற்றாயிற்று. இனி அத்யாய க்ரமேண சில விசேஷார்த்தங்களை விளக்குவோம்.

632. (2–27) "ஜாதஸ்ய ஹி த்ருவோ ம்ருத்யு: த்ருவம் ஜந்ம ம்ருதஸ்ய ச, தஸ்மாத் அபரிஹார்யே அர்த்தே ந த்வம் சோசிதும் அர்ஹஸி" – உத்பந்நனுக்கு மரணம் நிச்சயம்; மரணமடைந்தவனுக்கு புநர்ஜன்மம் நிச்சயம்; ஆகவே பரிஹாரமற்ற இவ்விஷயத்தில் நீ சோகிக்கக் கடவையல்லை என்று இந்த ச்லோகத்தினால் சொல்லப்படுவதாகக் கொண்டு சிலர் சங்கிப்பதொன்றுண்டு; அதாவது, உத்பந்நனுக்கு மரணம் நிச்சயம் என்பது நிரோக்ஷேபமான விஷயந்தான்; ஆயினும் உடனே "த்ருவம் ஜந்ம ம்ருதஸ்ய ச" என்றிருக்கிறதே, இது எப்படி பொருந்தும்? மரணமடைந்தவனெல்லாம் மறுபடியும் பிறந்தே தீருகிறானென்று சொன்னால் அபுநராவ்ருத்தி லக்ஷணமான மோக்ஷம் இல்லையென்று தேறி விடுமல்லவா? "த்யக்த்வா தேஹம் புநர் ஜந்ம நைதி மாமேதி ஸோர்ஜுந" இத்யாதிகளான பல ச்லோங்களாலே கீதையில் பலகால் சொல்லப்படுவதும், "மீட்சியின்றி வைகுந்த மாநகர் மற்றது கையதுவே" இத்யாதிகளான பல பாசுரங்களும் பழுதாமே என்று சங்கிக்க நேர்கின்றது. இந்த சங்கை சிறிதும் யுக்த மன்று. 'ஜாதஸ்ய ஹி த்ருவோ ம்ருத்யு:' என்றதும் ஆத்மாவைப் பற்றினதன்று; 'த்ருவம் ஜந்ம ம்ருதஸ்ய ச' என்றதும் ஆத்மாவைப் பற்றியதன்று. ஆத்மாவுக்கு உத்பத்தி விநாசங்களிரண்டும் இல்லையென்று பலகால் சொல்லப்பட்டிருக்கிறது. (2–20) 'ந ஜாயதே ம்ரியதே வா கதாசித் நாயம் பூத்வா பவிதா வா ந பூய: அஜோ நித்ய: சாச்வதோயம் புராணோ ந ஹந்யதே ஹந்யமாநே சரீரே' என்கிற ச்லோகத் தி னால் ஜந்ம மரணாதிகள் எல்லாம் அசேதநமான தேஹத்தின் தருமங்களே ஒழிய நித்யனாய் அபரிணாமியாயிருக்கிற ஆத்மாவின் தருமங்களல்ல வென்று அறுதியிடப்பட்டிருக்கிறது. ஆகவே, 'ஜாதஸ்ய ஹி த்ருவோ ம்ருத்யு:' என்றதும் அசேதநமான தேஹத்திற்கே; 'த்ருவம் ஜந்ம ம்ருதஸ்ய ச' என்றதும் அதற்கே. ஆதலால் முன் சொன்ன சங்கைக்கு இடமில்லை.

633. "த்ருவம் ஜந்ம ம்ருதஸ்ய ச" என்றதில் மற்றொரு சங்கை தோன்றும். நஷ்டமாய்ப் போனது மறுபடியும் எப்படி உத்பத்தியை யடைய முடியும்? நம்முடைய சரீரமானது ஸ்மசானத்தில் கொளுத்தப் பட்டு நீறாகி யொழிகின்றது. அது மறுபடியும் உத்பத்தியடைகின்றதென்றால் இது எப்படி ஸம்பாவிதமாகும்? என்று சங்கிக்க நேரும். இதற்குச் சொல்லுகிறோம். உத்பத்தி யாவது என்ன? விநாசமாவது என்ன? என்பதை முதலில் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். புதிதாக ஒரு வஸ்து உண்டாவதும் கிடையாது, உள்ள வஸ்து அடியோடு நசித்துப் போவதும் கிடையாது. ஸத்தான த்ரவ்யத்திற்கு அவஸ்தா விசேஷங்களே உத்பத்தி விநாசங்களாகும். தேஹம்

உண்டாயிற்றென்றால் என்ன? ப்ருதிவி, அப்பு, தேஜஸ்ஸு, வாயு, ஆகாசம் என்கிற பஞ்ச பூதங்களின் அம்சங்கள் ஒன்று சேர்ந்து ஒருவிதமான அவஸ்தையையடைந்த தென்றபடி. "மண்ணாய் நீரெரிகால் மஞ்சுலாவும் ஆகாசமுமாம் புண்ணாராக்கை" என்றும், "மஞ்சுசேர் வானெரி நீர் நிலம் காலிவை மயங்கிநின்ற அஞ்சு சேராக்கை" என்றும் திருமங்கையாழ்வாராருளிச் செய்தபடியே பாஞ்ச பௌதிக பிண்டமான தேஹம் புதிதா ஆகாசத்தினின்றும் குதித்த விட்டதன்றே. ஸூக்ஷ்மாவஸ்தையை விட்டு ஸ்தூலாவஸ்தயை பஜிப்பதுதான் உத்பத்தி யாகும். ஸ்தூலாவஸ்தையை விட்டு ஸூக்ஷ்மாவஸ்தையை பஜிப்பதுதான் விநாசமாகும். வஸ்த்ரம் என்கிற ஒரு வஸ்துவை யெடுத்துக் கொள்வோம். நூல் முதலான சில த்ரவ்யங்களை ஏற்கெனவே இருந்தவைகளே ரசநாவிசேஷத்தாலே வஸ்த்ரமென்னும் பெயரையடைகின்றன. இங்கு நூற்களின் சேர்க்கை தவிர வேறொரு த்ரவ்யம் காண்பரிது. "உத்பத்தி விநாசதய: ஸதோ த்ரவ்யஸ்ய அவஸ்தா விசேஷா:' என்கிற கீதாபாஷ்ய ஸ்ரீ ஸூக்தியை இங்கே அநுஸந்திப்பது. தென்மொழியால் 'உள்ளது, இல்லது' என்றும், வடமொழியால் 'ஸத், அஸத்' என்றும் வ்யவஹரிக்கப்படுவன–ஸ்தூலாவஸ்தையைப் பற்றவும் ஸூக்ஷ்மாவஸ்தையைப் பற்றவுமே யென்று உணர்க. வேதாந்திகளுக்கு ஸத்கார்யவாதிக ளென்று பெயர். "ஸதேவ நீயதே வ்யக்திம்" என்கிற ப்ரமாணத்தைத் திடமாகக் கொள்க.

634. (2–45) (ஸம்ஸ்)'த்ரைகுண்ய விஷயாவேதா: நிஸ்த்ரைகுண்யோ பவார்ஜுந!ங – இங்கு சங்கராசார்யருடைய பாஷ்யத்தில், த்ரைகுண்யமாவது ஸம்ஸாரம் என்றும், 'நிஸ்த்ரைகுண்யோ பவ' என்பதற்கு (நிஷ்காமோ பவ) என்று பொருளென்றும் எழுதப்பட்டிருக்கிறது. ஸ்ரீராமாநுஜ பாஷ்யத்தில் மிக விளக்கமும் விரிவுமுள்ளது. ஸத்வம் ரஜஸ் தமஸ் என்கிற முக்குணங்கள் மலிந்த புருஷர்கள் இங்கு த்ரைகுண்ய சப்தத்தினால் சொல்லப்படுகிறர்கள். அன்னவர்களைப் பற்றியவை வேதங்கள் என்றபடி. வேதங்களானவை கேவலம் ஸாத்விகர்களுக்கே வழிகாட்டுகின்றன வென்றில்லை. உலகிலுள்ள சேதநர்கள் சிலர் ஸாத்விகர்களாயும் பலர் ராஜஸர்களாயும் தாமஸர்களாயுமிருக்கக் காண்கிறோம்; வேதங்கள் எல்லார்க்கும் வழிகாட்டியாக வேண்டும். பல சரக்குக் கடைகளில் சர்க்கரை வெல்லம் குங்குமப்பூ கடுகு மிளகு சீரகம் முதலிய எல்லாப் பொருள்களும் (நேர்வாளமுட்பட) விற்கப்படுவது போல, வேதங்கள் முமுக்ஷுக்களுக்கும் வழிகாட்டுகின்றன; புபுக்ஷுக்களுக்கும் வழிகாட்டுகின்றன; பரஹிம்ஸைக்குரிய உபாயங்களையும் காட்டுகின்றன. ஆனால் வேதம் காட்டுகின்றவற்றை யெல்லாம் நாம் கொள்ள வேணுமென்பது கிடையாது. கடையில் விற்கப்படுகிற விஷத்தையுமா நாம் வாங்கிக் கொள்கிறோம்; இல்லையே. அதுபோல, ராஜஸர்களுக்கும் தாமஸர்களுக்கும் வேதம் காட்டுகிற வழிகளை நாம் பற்றலாகாது. (நிஸ்த்ரைகுண்யோ பவ அர்ஜுந!) இதற்கு ஸ்வாமியினுடைய பாஷ்யம் அற்புதமானது. "இதாநீம் ஸத்வப்ரசுரஸ்த்வம் ததேவ வர்த்தய, நாந்யோந்ய ஸங்கீர்ணகுணத்ரய ப்ரசுரோ பவ, ந தத் ப்ராசுர்யம் வர்தயேத்யர்த்த:" என்பது பாஷ்ய ஸூக்தி. 'நிஸ்த்ரைகுண்யோ பவ' என்கிற மூலத்தை நோக்கும் போது "ஸத்வ குணமுட்பட ஒரு குணத்தையும் நீ கைக் கொள்ளாதே"

என்று கண்ணபிரானருளிச் செய்வதாகத் தோன்றும். "முக்குணத் திரண்டவை யகற்றி, ஒன்றினிலொன்றி நின்று" என்று திருமங்கையாழ்வார் திருவெழு கூற்றிருக்கையிலருளிச் செய்தபடியே ரஜஸ்தமோ குணங்களை விட்டு ஸத்வகுண மொன்றிலேயே ஊன்றியிருக்கக் கடவாய் – என்று ஸ்வாமி பாஷ்யமருளிச் செய்வதற்கு மூலத்தில் ஆதாரமில்லை போல் தோன்றும். மேலே உத்தரார்த்தத்தில் 'நித்ய ஸத்வஸ்த:' என்று ஸ்பஷ்டமாகச் சொல்லியிருப்பதற்குச் சேரவே ஸ்வாமி உரைத்தருளினாரென்று கொள்ள வேணும். ஆனாலும் 'நிஸ்த்ரைகுண்ய:' என்பதற்கு முக்குணங்களு மில்லாதவனென்று தானே பொருள்படும்; ஸத்வகுண ப்ரசுரன் என்று பொருள்பட வழியுண்டோ வென்று கேள்வி தோன்றும். கேண்மின், (நிஸ்த்ரைகுண்ய:) என்பதற்கு மூன்று குணங்களும் பிசிறியிருக்கப் பெறாதவன் என்பதே அக்ஷரலப்யமான பொருள். "அந்யோந்ய ஸங்கீர்ணகுணத்ரய ப்ரசுரோ ந பவ" என்று ஸ்வாமியருளிச் செய்தது பொருத்தமானதே. வேதங்களில் ராஜஸதாமஸர்களுக்குக் காட்டியுள்ள உபாயங்களில் கண் வையாதே ஸாத்விகர்களுக்குக் காட்டியுள்ள உபாயங்களில் மாத்ரமே நீ கண் வைக்கக் கடவாய் என்றதாகத் தேறி நின்றது.

635. (2–47)'கர்மண்யேவாதிகாரஸ்தே மா பலேஷு கதாசந' – நித்யம் நைமித்திகம் காம்யம் என்று சொல்லப்படுகிற கருமங்களைச் செய்வதில் மாத்திரம் நீ அதிகரிக்கலாமே யல்லது அவற்றின் பலனில் அதிகரிக்கலாகாது–என்பதாக இதற்குப் பொருள். பலனை விரும்பக் கூடாதென்று சொல்லப்படுகிறதா? அன்றி, பலன் கிடைத்தாலும் அதனை அநுபவிக்கலாகாதென்று சொல்லப் படுகிறதா வென்று இங்கு விமர்சிக்க நேர்கின்றது. "ப்ரயோஜநமநுத்திச்ய ந மந்தோபி ப்ரவர்த்ததே" என்று, பலனை விரும்பாமல் மூடன் கூட ஒரு காரியத்தில் கைவைக்க மாட்டானென்று சாஸ்த்ரமே சொல்லுகையாலே பலனை விரும்பக் கூடாதென்கை பொருந்தாது. பலன் கிடைத்தால் அதையநுபவியாமல் விட்டுவிடுவது புருஷதந்த்ரமன்றே, ஸுகமோ துக்கமோ எது நேர்ந்தாலும் அநுபவித்துக் கொண்டு தானே யிருக்கிறோம். அநுபவிப்பதும் விட்டிடுவதும் நம்மிஷ்டமன்றே. ஆகவே, பலன் கிடைத்தாலும் அதனை யநுபவிக்கலாகாதென்று சொல்லப் படுவதாகக் கொள்வதற்கும் ஔசித்யம் இல்லை. பின்னை யாது பொருளென்னில்; செய்கிற காரியங்களுக்குப் பலன் கிடைத்தே தீரும்; பலனை நீ கோலாதே. உன்னுடைய அற்ப புத்தியினால் நீ கோலுவாயாகில் க்ஷுத்ரபலனுக்கு மேற்பட உத்தம பலனைக் கோலுவதற்கு உனக்குத் தெரியாது. அந்தப் பொறுப்பை என்னிடமே விட்டிடுவாயானால், என் கருத்தால் உத்தமமான பலனே உனக்குக் கொடுக்கப் படும் – என்று இங்ஙனம் திருவுள்ளம் பற்றியே "மா பலேஷு கதாசந" என்று அருளிச் செய்ததாகக் கொள்க.

636. "யா நிசா ஸர்வபூதாநாம் தஸ்யாம் ஜாகர்த்தி ஸம்யமீ, யஸ்யாம் ஜாக்ரதி பூதாநி ஸா நிசா பச்யதோ முநே:" (2–69) என்னுமிந்த ச்லோகம் புதிர் போலுள்ளது. ஸர்வப்ராணிகளுக்கும் எது இரவோ அவ்விரவில் ஜிதேந்த்ரியனானவன் விழித்துக் கொண்டிருக்கிறான்; ஸர்வப்ராணிகளும் கண்விழித்து கொண்டிருக்கும்படியான பகலானது ஜிதேந்த்ரியனுக்கு இரவாகிறது, என்பது இந்த ச்லோகத்தின் கருத்து. நாம் கண்ணெடுத்து பார்க்க விரும்பாமல் வெறுத்திருக்கும் விஷயத்தை ஜிதேந்த்ரியர்கள்

விரும்பிப் பார்க்கிறார்க ளென்றும், நாம் விரும்பிப் பார்க்கும் விஷயங்களை அவர்கள் காணகில்லாமல் வெறுத்திருக்கிறார்களென்றும் சொல்லப் பட்டதாகிறது. பகவத் பாகவத விஷயங்களை நாம் விரும்பிப் பாராமல் வெறுப்புக் கொண்டிருக்கிறோம்; அவ்விஷயங்களையே ஸாதுக்ள் விரும்பி பார்க்கிறார்கள். லௌகீக விநோதங்களை நாம் விரும்பிப் பார்க்கிறோம்; அவற்றைக் காணக் கண் கூசியிருக்கிறார்கள் ஸாதுக்கள். நம்முடைய பகல் ஸாதுக்களுக்கு இரவாகிறது; ஸாதுக்களின் பகல் நமக்கு இரவாகிறது. ஸ்வரூபாநுரூபங்களான விஷயங்களில் கண்ணோட்டம் செலுத்தாமல் ஸ்வரூபநாசகங்களான விஷயங்களிலேயே நாம் கண்ணோட்டம் செலுத்தியிருப்பது வர்ஜிக்கத் தகுந்தது என்னுமிடம் இதனால் சிக்ஷிதமாகிறதென்று கொள்க.

637. யாவரும் தினப்படியாக தேவதாரதனம் செய்து நிவேதனம் செய்து தச்சேஷத்தைக் கொண்டே தேஹதாரணம் பண்ணவேணுமென்பது ஸகல சாஸ்த்ரங்களின் கொள்கை. இவ்வர்த்தம் மூன்றாமத்யாயத்தில் பலச்லோகங்களில் தெரிவிக்கப்படுகின்றது. 10,11,12 ச்லோகங்கள் இவற்றுள் மிக முக்கியமானவை. "ஸஹ யஜ்ஞை: ப்ரஜாஸ் ஸ்ருஷ்ட்வா புரோவாச ப்ரஜாபதி: அநேந ப்ரஸவிஷ்யத்வம் ஏஷ வோஸ்த்விஷ்ட காமதுக்". இந்த ச்லோகத்தில் "ஸஹயஜ்ஞா: ப்ரஜா:" என்று சங்கரபாஷ்ய பாடம். அப்பாடத்தில் 'ஸஹயஜ்ஞா:' என்பது ஏகபதம். 'யஜ்ஞஸஹிதா: ப்ரஜா:' என்று சங்கரபாஷ்யம். "ஸஹயஜ்ஞா இதி சங்கர யாதவப்ரகாசீயபாடஸ்து அப்ரஸித்தே ரநாத்ருத:" என்பது தாத்பர்ய சந்த்ரிகாஸூக்தி. அன்றியும் (ப்ரஜாபதி:) என்பதற்கு நான்முகனே பொருளாக சங்கரபாஷ்யம் காட்டுகிறது. ஸர்வேச்வரனே நிருபாதிக ப்ரஜாபதி யாகையால் ஸ்ரீமந் நாராயணனே இங்கு ப்ரஜாபதி சப்தார்த்தமென்று பகவத் ராமாநுஜ பாஷ்யமுள்ளது. இதில் ஸ்வாரஸ்யமேதென்னில்; இங்குச் சொல்லப்படுகிற அர்த்தம் நான்முகனுட்பட ஸம்ஸாரவசவர்த்திகளான ஸகல ப்ராணிகளையும் நோக்கியது. அவர்களையும் நோக்கியே இக்கட்டளை இடப்படுகிறபடியால் நான்முகனை ஆஜ்ஞாபக கோடியில் சேர்ப்பது உசிதமன்று; ஆஜ்ஞாப்ய கோடியில் சேர்ப்பதுதான் உசிதம் என்று ஸ்வாமியின் திருவுள்ளம். நான்முகனையும் இங்கு ப்ரஜைகளின் கோடியிலே சேர்த்துப் பொருள் செய்வது தான் பொருத்தமானது. ப்ரளயத்திற்கடுத்தபடியாக ஸ்ருஷ்டி காலத்தில் பகவான் யஜ்ஞங்களோடு கூடவே ப்ரஜைகளைப் படைத்து இங்ஙனே சொன்னான்– இந்த யஜ்ஞத்தைக் கொண்டே நீங்கள் அபிவிருத்தியைக் கடவீர்கள்; இந்த யஜ்ஞமானது உங்களுக்குப் பரம புருஷார்த்தமான மோக்ஷமென்கிற காமத்தையும் அதற்குச் சார்பான மற்ற காமங்களையும் பூர்த்திச் செய்யக் கடவது– என்று ச்லோகத்திற்குப் பொருள். "யஜ தேவபூஜாயாம்" என்று தாதுவாகையாலே பகவதாரதனந்தான் யஜ்ஞ மெனப்படுகிறது. பகவதாராதனம் செய்தே அவரவர்கள் அபிவிருத்தியடைய முடியுமென்றும், பகவதாராதனத்தினால் தான் அபீஷ்டகாமங்கள் நிறைவேறு மென்றும் சொல்லிற்றாயிற்று. இது தன்னை அடுத்த ச்லோகம் விவரிக்கிறது; "தேவாந் பாவயதாநேந தே தேவா பாவயந்து வ;, பரஸ்பரம் பாவயந்த: ச்ரேய: பரம் அவாப்ஸ்யத." பகவதாரதநமான இந்த யஜ்ஞத்தினாலே எனக்கு சரீர பூதர்களான தேவர்களை ஆராதியுங்கள்; அப்படி

ஆராதிக்கப்பட்ட அந்த தேவர்கள் மேன் மேலும் தங்களுடைய ஆராதனைக்கு வேண்டிய பொருள்களினால் உங்களைப் போஷிக்கக் கடவர்கள். இப்படி பரஸ்பரம் த்ருப்தி பெறுவித்துக் கொண்டு சிறந்த ச்ரேயஸ்ஸான மோக்ஷத்தை அடைவீர்கள் என்பது இந்த ச்லோகத்தின் கருத்து. இதில் பூர்வார்த்தம் இப்படியிருக்காலாமோ? வேறு விதமாக இருக்க வேண்டாவா? 'நீங்கள் என்னை ஆராதியுங்கள்; நான் உங்களை த்ருப்தி செய்விக்கிறேன்' என்று சொல்ல வேண்டியிருக்க, தன்னிற் காட்டில் நீசர்களான தேவதைகளை ஆராதிக்கும்படி நியமிப்பதும், அந்த தேவதைகள் உங்களுக்குப் பலன் கொடுப்பார்களென்று சொல்லுவதும் எதற்காக? என்று சங்கை தோன்றும். கேண்மின். விஷயங்களைப் படிப்படியாகத் தானே சொல்ல வேண்டியிருக்கிறது. மேலே ஒன்பதாம் அத்யாயத்தில் (22) "அநந்யாச் சிந்தயந்தோ மாம் யே ஜநா: பர்யுபாஸதே" என்கிற ச்லோகத்தினால் தன்னையே உபாஸிக்கும்படி சொல்லி, அதற்கடுத்த (23) ச்லோகத்தில் "யே த்வந்யதேவதா பக்தா யஜந்தே ச்ரத்தயாந்விதா:, தேபி மாமேவ கௌந்தேய யஜந்த்யவிதிபூர்வகம்" என்று. இதர தேவதைகளை பூஜிப்பவர்களும் ஒருவாறு தன்னையே பூஜித்து ஆராதனை செய்கிறார்களென்று சொல்லி, அதற்கடுத்த (24) ச்லோகத்தில் "அஹம் ஹி ஸர்வயஜ்ஞாநாம் போக்தா ச ப்ரபுரேவச" என்று. எந்த தேவதையை நோக்கி எந்த ஆராதனம் செய்தாலும் அதெல்லாம் தன்னையே சேருகிறதென்றும் அதற்குப் பலனும் தானே (ஸத்வாரகமாகக்) கொடுப்பதாகவும் சொல்லி யிருப்பதால் "தேவாந் பாவயதாநேந பாவயந்து வ:" என்றவிதில் யாதொரு குறையுமில்லை யென்றுணர்க.

638. இனி ப்ரக்ருத விஷயத்திற் செல்வோம். (3–12) "இஷ்டாந் போகாந் ஹி வோ தேவா தாஸ்யந்தே யஜ்ஞபாவிதா:, தைர்தத்தாந் அப்ரதாயைப்யோ யோ புங்க்தே ஸ்தேந ஏவ ஸ:" இந்த ச்லோகத்தின் கருத்தாவது–உங்களுடைய யஜ்ஞங்களாலே ஆராதிக்கப்பட்டவர்களும் என்னுடைய சரீர பூதர்களுமான தேவர்கள் உங்களுக்கு அபேக்ஷிதங்களான போகங்களைக் கொடுப்பர்கள். ஆராதந உபகரணங்களாக உங்களிடமுள்ள பொருள்களெல்லாம் அந்த தேவர்க ளாலேயே கொடுக்கப்பட்டவைகளாதலால் அவற்றை அவர்களுக்கு அர்ப்பணம் செய்யாமல் புஜிப்பவன் கள்வனேயாவன், நரகமேயவனுக்குப் பலிக்கும்–என்றபடி. இதில் (தைர் தத்தாந்) என்றது குறிக்கொள்ளத்தக்து. தைத்திரீய ஸம்ஹிதையில் மூன்றாவது காண்டத்தில் இரண்டாவது ப்ரச்நத்தில் "இத: ப்ரதாநம் தேவா: உபஜீவந்தி அமுத: ப்ரதாநம் மநுஷ்யா:" என்று ஓதப்பட்டுள்ளது. இதன் கருத்தாவது, தேவதைகளுக்கு ஆக வேண்டிய உணவு இங்கிருந்து செல்லுகிறது; மனிதர்களான நமக்கு ஆகவேண்டிய உணவு அங்கிருந்து வருகிறது என்பதாம். "முந்திவானம் மழைபொழிய மூவாவுருவின் மறையாளர், அந்திமூன்று மனலோம்புமணியார்வீதி யழுந்தூரே" என்று திருமங்கையாழ்வார் அருளிச் செய்தபடியே இங்கிருக்கும் நாம் யஜ்ஞபாகங்களைச் செய்து தேவர்களை ஸந்த்ருப்தி பண்ணி வைத்தால் திருப்தர்களான அவர்கள் அங்கிருந்து மழையை யனுப்பி நம்மை ஜீவிக்கச் செய்கிறார்களென்கை. ஆகவே நாம் தேவதாராதனம் பண்ணாமல் வெறுமனே வயிற்றை வளர்த்தால் ஜீவிப்பதும் அரிதாம் என்றதாயிற்று. பலபேர்கள் தேவதா

ஸத்பாவத்தையே அங்கீகரியாதவர்களாயும் அவர்களுக்கு ஆராதனம் செய்யாதவர்களாயும் உண்டுடுத்து திரியவில்லையா? அவர்கள் சுகமாக ஜீவிக்கவில்லையா? என்கிற ஆக்ஷேபத்தை இங்குச் சிலர் செய்யக்கூடும். அவர்கள் "அதர்மேணைர் தத்தே தாவத் ததோ பத்ராணி பச்யதி, சனைராவர்த்தமாநஸ்து கர்துர் மூலாநி க்ருந்ததி" என்கிற மநுமஹர்ஷி வசனத்தை நோக்கித் தெளியக் கடவர்கள். அதர்மம் செய்பவர்கள் மேன்மேலும் க்ஷேமங்களை யடைவதாக உலகில் நாம் காண நேர்ந்தாலும், அதர்மம் உடனே ஹாநியை விளைத்திடாமல் நாளடைவில் மூலஹாநியை விளைத்திடுமென்று கொள்ள வேணும். இதை மநுமஹர்ஷி பல ச்லோகங்களால் விரிவாகச் சொல்லியிருக்கிறார்.

639. இனி (3–21) "யத் யதாசரதி ச்ரேஷ்டஸ் தத்ததேவேதரோ ஜந: ஸ யத்ப்ரமாணம் குருதே லோகஸ் ததநுவர்த்ததே" என்னும் ச்லோகம் சிஷ்டாசாரத்தின் சிறப்பைத் தெரிவிப்பது. ஸம்ஸ்க்ருதஜ்ஞர்களுக்கு அநாயஸமாகப் பொருள்படக்கூடிய ச்லோகமிது. இதன் உத்தரார்த்தித்திற்கு பாஷ்யமிட்ட சங்கராசார்ய ஸ்வாமிகள் "ஸ: ச்ரேஷ்ட: யத் ப்ரமாணம் குருதே லௌகிகம் வைதிகம் வா லோக: தத் அநுவர்த்ததே, ததேவ ப்ரமாணீகரோதீத்யர்த்த:" என்றுரைத்தார். ச்ரேஷ்டரா யிருப்பார் யாதொன்றை ப்ரமாணமாகக் கொள்ளுகிறார்களோ. அது தன்னையே லோகமும் ப்ரமாணமாகக் கொள்ளுகிறது என்பதாகப் பொருள் காட்டப்பட்டதாயிற்று. மத்வாசார்யரான ஆனந்ததீர்த்த ஸ்வாமிகளும் இவ்வண்ணமாகவே பொருளுரைத்தார். "ஸ: யத்வாக்யாதிகம் ப்ரமாணீகுருதே யதுக்தப்ரகாரேண திஷ்டதீத்யர்த்த:" என்பது அவருடைய பாஷ்யபங்க்தி. ஆக இவற்றால் 'யத்ப்ரமாணம்' என்றவிடத்தில் பதச்சேதம் இவர்களுக்கு விவக்ஷிதம் என்று தேறிற்று. யத் என்பது தனிப்பதமென்று முடிந்தது.

640. இனி நம் ஸ்வாமியின் பாஷ்ய ப்ரக்ரியையைப் பார்ப்போம். அவர் இங்கு இரண்டு பதங்களாகத் திருவுள்ளம் பற்றாமல் 'யத்ப்ரமாணம்' என்று பஹுவ்ரீஹி ஸமாஸங் கொண்ட ஒரே பதமாகத் திருவுள்ளம் பாஷ்யமிட்டருளியுள்ளார். பூர்வார்த்தத்தில் "ச்ரேஷ்ட: யத்யத் ஆசரதி" என்றதற்கு, ச்ரேஷ்டராயிருப்பார். எந்தெந்த கருமத்தை யநுஷ்டிக்கிறாரோ என்பதாகப் பொருளாதலால் அந்த கர்மத்தைப் பற்றியே உத்தரார்த்தமும் சொல்லுகிறதென்று ஸ்வாமியின் திருவுள்ளம். சிஷ்டர்கள் தாங்களனுஷ்டிக்கிற கருமத்திற்கு எவ்வளவு அவதி வைத்துக் கொள்ளுகிறார்களோ அவ்வளவு அவதியையே பிறரும் வைத்துக் கொள்ளுகிறார்கள் என்றபடி. இதை தாத்பர்ய சந்த்ரிகையில் வேதாந்த தேசிகன் விவரித்துள்ளார். 'பெரியோர்கள் அனுஷ்டிக் கிற கருமத்தையே பிறரும் அனுஷ்டிக்கிறார் கள்' என்று இவ்வளவு மாத்திரமே சொன்னால் போதாது. அவர்கள் அக் கருமத்தை எந்த விதமாக அநுஷ்டிக் கிறார்களோ அந்த விதமாகவே பிறரும் அநுஷ்டிக்கிறார்கள் என்றும் சொல்ல வேண்டியது இங்கு ஆவச்யமாதலால் அதற்குச் சேர ஸ்வாமியின் பாஷ்யம் மிகப் பொருத்தமாக அவதரித்துள்ளது.

641. பெரியார் எதை ப்ரமாணமாகக் கொள்ளுகிறாரோ அதையே பிறரும் ப்ரமாணமாகக் கொள்கிறாரென்பது பிரக்ருதத்தில் அநபேக்ஷிதமாதலால் இதர பாஷ்யகாரர்களை நம் ஸ்வாமி பின் செல்லவில்லை. "யத்ப்ரமாணம் குருதே" என்றதற்கு

இங்ஙனே பொருள் கொண்டால் "லோகஸ் தத்துவர்த்ததே" என்ற மேல் வாக்யத்தில் தத் என்றது ஸ்வரஸமாகப் பொருள் தருமோவென்று ஒரு சங்கை தோன்றும். இதற்குத் தாத்பர்ய சந்த்ரிகையிலேயே தகுந்த பரிஹாரமுள்ளது கண்டு கொள்க. இதர பாஷ்யகாரர்களுக் குத் தோன்றாத அர்த்தம் இங்கு நம் ஸ்வாமிக்குத் தோன்றினது எதனால் என்னில்; திருப்பாவை ஜீயரென்று ப்ரஸித்தி பெற்றிருந்ததனாலேயே என்னலாம். திருப்பாவையில் "மாலே மணிவண்ணா" என்கிற பாசுரத்தில் "மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்" என்றுள்ளது. இங்கு "மேலையார் செய்வனகள் கேட்டியேல்" என்னுமளவே போதுமாயிருக்க இடையில் 'வேண்டுவன' என் ப்ரயோகித்தது குறிக்கொள்ளத் தக்கது.

642. இதற்கடுத்த ச்லோகம் (3–22) "ந மே பார்த்தாஸ்தி கர்த்தவ்யம் த்ரிஷு லோகேஷு கிஞ்சந, நாநவாப்தமவாப்தவ்யம் வர்த்த ஏவ ச கர்மணி" என்பது. இதில் பகவான் தானும் கர்மாநுஷ்டானத்தில் ஊன்றியிருப்பதாக வற்புறுத்திச் சொல்லப் பட்டுள்ளது. க்ருஷ்ணாவதாரத் திற்கு முந்தின அவதாரமான ஸ்ரீராமாவதாரத்தில் இது தன்னை ஸுஸ்பஷ்டமாகக் காணலாம். விச்வாமித்ர முனிவன் தசரத மன்னவனிடம் வந்து "அஹம் வேத்மி மஹாத்மாநம்" இத்யாதிகளைச் சொல்லி ஸ்ரீராமபிரானைக் கொண்டு சென்றான். "ஊந ஷோடச வர்ஷோ மே ராமோ ராஜீவ லோசந:" என்று சக்ரவர்த்தி சொன்னபடி, இராமன் செந்தாமரைக் கண்ணனாகை யாலே ஸூர்யன் அஸ்மித்தவாறே தாமரை முகுளிதமாகுங் கணக்கிலே இராமனும் கண் மூடினான். பிறகு ஸுப்ரபாத காலத்திலே முனிவன் "கௌஸல்யா ஸுப்ரஜா ராம! பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே" என்று சொல்லித் துயிலுணர்த்துகிறார். "இராமா! எழுந்திரு; நாம் சீக்கிரமாக ஆச்ரமம் சென்று சேர்ந்து யாகம் தொடங்க வேணும்' என்று சொல்ல வேண்டியிருக்க, அங்ஙனே சொல்லாதே "உத்திஷ்ட நரசார்தூல! கர்த்தவ்யம் தைவமாஹ்நிகம்" என்றான் முனிவன். ப்ராதஸ் ஸந்த்யாநுஷ்டானம் வழுவாமற் செய்ய வேண்டுமே, அதற்காக எழுந்திராய் என்று சொன்னவிதனால் எம்பெருமானு டைய அவதாரம் முக்கியமாக தர்மாநுஷ்டானத்திற்காகவே யென்பது நன்கு விளங்கும். மேலே பிராட்டியைப் பிரிந்து வருந்திக் கிடக்கிற காலங்களிலும் பெருமாள் ஸந்தியா காலங்களில் தவறாது ஸந்தியாவந்தனம் அனுட்டித்தபடியை வால்மீகி பகவான் அஸக்ருத் கூறியிருக் கின்றார். ஆகவே பகவான் 'வர்த்த ஏவ ச கர்மணி' என்று சொன்னது மிகப்பொருந்தும்.

643. இனி நான்காமத்யாயத்தைப் பற்றிச் சிறிது விரிவாக வுரைக்க விரும்புகிறோம். கீதையில் 'அர்ஜுந உவாச', 'ஸ்ரீபகவாநுவாச' என்னுமிவை மாறி மாறி வருவதைக் காணலாம். அர்ஜுனன் கேள்வி கேட்பன்; அதற்குக் கண்ணபிரான் விடை கூறுவன். வினாவுக்குப் பிறகு விடை, விடைக்குப் பிறகு வினா–என்றிப்படி மாறி மாறி நடந்து செல்லும். மூன்றாமத்யாயத் தொடக்கத்தில் 1,2 ச்லோகங்கள் விடை. அதன் பிறகு முப்பத்தாறாவது ச்லோகமொன்று அர்ஜுனனுடைய வினா. பிறகு 37 முதல் 42 வரை அத்யாயம் பூர்த்தியாக பகவானுடைய விடை. அவ்வளவோடு அத்யாயம் முடிந்திருக்கிறது. இனி மேல் விஷயம் நடைபெற வேணுமானால் நான்காம் அத்யாயத் தொடக்கத்தில் 'அர்ஜுந

இங்ஙனே பொருள் கொண்டால் "லோகஸ் தத்துவர்த்ததே" என்ற மேல் வாக்யத்தில் தத் என்றது ஸ்வரஸமாகப் பொருள் தருமோவென்று ஒரு சங்கை தோன்றும். இதற்குத் தாத்பர்ய சந்த்ரிகையிலேயே தகுந்த பரிஹாரமுள்ளது கண்டு கொள்க. இதர பாஷ்யகாரர்களுக் குத் தோன்றாத அர்த்தம் இங்கு நம் ஸ்வாமிக்குத் தோன்றினது எதனால் என்னில்; திருப்பாவை ஜீயரென்று ப்ரஸித்தி பெற்றிருந்ததனாலேயே என்னலாம். திருப்பாவையில் "மாலே மணிவண்ணா" என்கிற பாசுரத்தில் "மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்" என்றுள்ளது. இங்கு "மேலையார் செய்வனகள் கேட்டியேல்" என்னுமளவே போதுமாயிருக்க இடையில் 'வேண்டுவன' என் ப்ரயோகித்தது குறிக்கொள்ளத் தக்கது.

642. இதற்கடுத்த ச்லோகம் (3–22) "ந மே பார்த்தாஸ்தி கர்த்தவ்யம் த்ரிஷு லோகேஷு கிஞ்சந, நாநவாப்தமவாப்தவ்யம் வர்த்த ஏவ ச கர்மணி" என்பது. இதில் பகவான் தானும் கர்மாநுஷ்டானத்தில் ஊன்றியிருப்பதாக வற்புறுத்திச் சொல்லப் பட்டுள்ளது. க்ருஷ்ணாவதாரத் திற்கு முந்தின அவதாரமான ஸ்ரீராமாவதாரத்தில் இது தன்னை ஸுஸ்பஷ்டமாகக் காணலாம். விச்வாமித்ர முனிவன் தசரத மன்னவனிடம் வந்து "அஹம் வேத்மி மஹாத்மாநம்" இத்யாதிகளைச் சொல்லி ஸ்ரீராமபிரானைக் கொண்டு சென்றான். "ஊந ஷோடச வர்ஷோ மே ராமோ ராஜீவ லோசந:" என்று சக்ரவர்த்தி சொன்னபடி, இராமன் செந்தாமரைக் கண்ணனாகை யாலே ஸூர்யன் அஸ்மித்தவாறே தாமரை முகுளிதமாகுங் கணக்கிலே இராமனும் கண் மூடினான். பிறகு ஸுப்ரபாத காலத்திலே முனிவன் "கௌஸல்யா ஸுப்ரஜா ராம! பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே" என்று சொல்லித் துயிலுணர்த்துகிறார். "இராமா! எழுந்திரு; நாம் சீக்கிரமாக ஆச்ரமம் சென்று சேர்ந்து யாகம் தொடங்க வேணும்' என்று சொல்ல வேண்டியிருக்க, அங்ஙனே சொல்லாதே "உத்திஷ்ட நரசார்தூல! கர்த்தவ்யம் தைவமாஹ்நிகம்" என்றான் முனிவன். ப்ராதஸ் ஸந்த்யாநுஷ்டானம் வழுவாமற் செய்ய வேண்டுமே, அதற்காக எழுந்திராய் என்று சொன்னவிதனால் எம்பெருமானு டைய அவதாரம் முக்கியமாக தர்மாநுஷ்டானத்திற்காகவே யென்பது நன்கு விளங்கும். மேலே பிராட்டியைப் பிரிந்து வருந்திக் கிடக்கிற காலங்களிலும் பெருமாள் ஸந்தியா காலங்களில் தவறாது ஸந்தியாவந்தனம் அனுட்டித்தபடியை வால்மீகி பகவான் அஸக்ருத் கூறியிருக் கின்றார். ஆகவே பகவான் 'வர்த்த ஏவ ச கர்மணி' என்று சொன்னது மிகப்பொருந்தும்.

643. இனி நான்காமத்யாயத்தைப் பற்றிச் சிறிது விரிவாக வுரைக்க விரும்புகிறோம். கீதையில் 'அர்ஜுந உவாச', 'ஸ்ரீபகவாநுவாச' என்னுமிவை மாறி மாறி வருவதைக் காணலாம். அர்ஜுனன் கேள்வி கேட்பன்; அதற்குக் கண்ணபிரான் விடை கூறுவன். வினாவுக்குப் பிறகு விடை, விடைக்குப் பிறகு வினா–என்றிப்படி மாறி மாறி நடந்து செல்லும். மூன்றாமத்யாயத் தொடக்கத்தில் 1,2 ச்லோகங்கள் விடை. அதன் பிறகு முப்பத்தாறாவது ச்லோகமொன்று அர்ஜுனனுடைய வினா. பிறகு 37 முதல் 42 வரை அத்யாயம் பூர்த்தியாக பகவானுடைய விடை. அவ்வளவோடு அத்யாயம் முடிந்திருக்கிறது. இனி மேல் விஷயம் நடைபெற வேணுமானால் நான்காம் அத்யாயத் தொடக்கத்தில் 'அர்ஜுந

உவாச' என்று அர்ஜுநனுடைய வினா ஆரம்பமாக வேணும். கீழே பகவானுடைய விடை முடிந்திருப்பதால் அதற்கு மேல் அர்ஜுநன் வினாவினால் பகவான் விடை கூறவேணும். அப்ருஷ்டோத்தரமாகச் சொல்லக் கூடாதன்றோ! அர்ஜுநனோ ஒன்றும் கேட்டிலன், அப்படியிருந்தும் நான்காம் அத்யாயம் 'ஸ்ரீபகவாநுவாச' என்றே தொடங்குகிறது. இதை ஆழ்ந்து விமர்சிக்குமளவில் ஒன்று தோன்றுகிறது. கீழே கர்மயோகத்தைப் பற்றி விரிவாகச் சொல்லக் கேட்ட அர்ஜுநனுக்குத் தலைவேதனையுண்டாயிற்றுப் போலும். அதனால் கீதை கேட்டது போது மென்றெண்ணித் தலைகுனிந்து வாளாவிருந்தான்; 'நாம் ஏதாவது கேட்டால் தானே கண்ணன் வாய்திறக்கப் போகிறான், நாம் வாய்மூடிக் கிடந்தோமாகில் தானே நிற்கிறான்; கீதையும் ஸமாப்தமாகிறது' என்று நினைத்தான் போலுமர்ஜுநன். இன்னுமெவ்வளவோ அர்த்தவிசேஷங்க ளைச் சொரிய நினைத்திருக்கிற கண்ணபிரான் எங்ஙனம் வாய்மூடி நிற்பன்? இவ்வளவோடு கீதையை எப்படி முடித்திடுவன்? ''சாதகஸ்த்ரிசதுராந் பய:கணாந் யாசதே ஜலதரம் பிபாஸயா, ஸோபி பூரயதி விச்வம்பஸா ஹந்த ஹந்த மஹதாமுதாரதா''' என்கிறான் பண்டிதராஜன். கேட்பவர்கள் சிறிதே கேட்டாலும் மஹோதாரர்கள் தாளமாக வன்றோ கொட்டுவர்கள். அது போல் கண்ணபிரானும் ''யச்ரேயஸ்யாந்நிச்சிதம் ப்ருஹி தந்மே சிஷ்யஸ்தேஹம் சாதிமாம் த்வாம் ப்ரபந்நம்'' என்று முந்துற முன்னம் அர்ஜுநன் பிரார்த்தித்ததையே குவாலாக கொண்டு இடையிடையே அவனுடைய அபேக்ஷையை ப்ரதீக்ஷியாமல் திருவுள்ளத்தில் தோன்றுகிற அரும்பெரும் பொருள்களையெல்லாம் தானே ப்ரஸக்தி யிட்டுக் கொண்டு வெளியிடுகிறானாயிற்று. இப்படி மேலும் பல விடங்களிற் காணலாம். அர்ஜுநன் கேளாமலிருக்க பகவான் தானாகவே அடியிட்டுச் சொல்லுகிற அத்யாயங்கள் மேலேயும் பலவுள.

644. இப்போது நான்காமத்யாயத் தொடக்கத்தில் ''இமம் விவஸ்வதே யோகம் ப்ரோக்தவாநஹமவ்யயம், விவஸ்வாந் மநவே ப்ராஹ மநுரிக்ஷ்வாகவே அப்ரவீத். ஏவம் பரம்பராப்ராப்தமிமம் ராஜர்ஷயோ விது: ......'' என்று பகவான் சொன்னான். எப்படியாவது அர்ஜுநன் வாய் திறந்து கேள்வி கேட்கும்படி செய்யவேணுமென்றே கண்ணன் இது கூறினன். இந்த ச்லோகங்களின் பொருள் யாதெனில்; ''அப்பா அர்ஜுநா! இப்போது நான் உனக்குக் கர்மயோகத்தைப் பற்றி விரிவாகச் சொன்னேனே, இது கேவலம் யுத்த ப்ரோத்ஸாஹநத்திற்காக இப்போது புதிதாய் சொல்லப்பட்ட தென்று நினையாதே; மந்வந்தரத்தின் ஆதியிலேயே ஸகல ஜகதுத்தாரணார்த்தமாக பரம புருஷார்த்தமான மோக்ஷத்திற்கு ஸாதநமாய் இந்த யோகத்தை நானே விவஸ்வானுக்குச் சொன்னேன்; விவஸ்வான் மனுவுக்குச் சொன்னார்; மநு இக்ஷ்வாகுவுக்குச் சொன்னார்; இப்படியாக ஸம்ப்ரதாய பரம்பரயா ப்ராப்தமான இந்த யோகத்தை பூருவர்களான ராஜரிஷிகள் உபதேசமுறையில் தெரிந்து கொண்டார்கள்; அப்படிப்பட்ட யோகம் இடையில் நெடுங்காலம் தகுந்த அதிகாரிகள் இல்லாமையாலே விநஷ்டப்ராயமாயிருந்தது; அந்த புராதந யோகமே தான் இப்போது உன்னுடைய பக்தியும் நேசமும் காரணமாக உனக்கு என்னாலுபதேசிக்கப்பட்டது. இதை நான் தவிர வேறொருவரும் தெரிந்து கொள்ளவும்

சொல்லவும் முடியாது; இது வேதாந்தோதிதமான உத்தமரஹஸ்ய மன்றோ—என்பதாம். பகவான் இப்படி சொன்னதில் எவ்விதமான அநுபபத்தியு மில்லை; உண்மையான இவ்விஷயத்தில் எவ்விதமான ஆக்ஷேபமும் ஆஸ்திகர்கள் செய்ய ப்ரஸக்தியில்லை. ஆனாலும் அர்ஜுநன் இதில் ப்ரபலமான ஆக்ஷேபம் செய்திருக்கிறான். அது அடுத்த ச்லோகத்தில் தெரிவிக்கப்படுகிறது "அவரம் பவதோ ஜந்ம பரம்ஜந்ம விவஸ்வத: கதமேதத் விஜாநீயாம் த்வமாதௌ ப்ரோக்தவாநிதி" என்று, இதன் பொருள் யாதெனில்; கண்ணா! நீயோ என்னோடு ஸமகாலத்தில் ஜனித்து என்னைப் போலவே சிறு வயதுடையவனா யிராநின்றாய்; எந்த விவஸ்வானுக்கு நீ உபதேசித்ததாகச் சொல்லுகிறாயோ, அந்த விவஸ்வான் இருபத்தெட்டு சதுர்யுகங்களுக்கு முன்னே யிருந்தவனாதலால் மிகமிக முற்பட்டவன். அன்னவனுக் நீ உபதேசித்தா யென்பது அஸம்பாவிதமாக வன்றோ வுள்ளது. இதை நான் எப்படி நம்புவது? என்பதாம்.

645. மேலேயெடுத்த "அவரம் பவதோ ஜந்ம" என்கிற அர்ஜுந ப்ரச்நமான ச்லோகத்திற்கு பாஷ்யம் செய்யாநின்ற சங்கராசார்யரும் மத்வாசார்யரும் வாளாசென்றார்கள். நம் ஸ்வாமி யெம்பெருமானார் இங்கு தமது பாஷ்யத்தில் விசேஷ சர்ச்சை செய்தருளுகிறார். கண்ணபிரானை நோக்கி அர்ஜுநன் இப்படி கேள்வி கேட்டிருக்கிறானே, இது ஸம்பாவிதமான கேள்வியாக இல்லை. ஏனெனில்; அர்ஜுநனானவன் கண்ணபிரானை வெறும் இடைப்பிள்ளையாக நினைத்திருக்கிறானோ? அல்லது ஸாக்ஷாத் பரமபுருஷனாக நினைத்திருக்கிறானா? என்பதை முன்னம் விமர்சித்து முடிக்க வேண்டும். கேவலம் இடைப் பிள்ளையாகவே நினைத்திருந்தானாகில் இங்ஙனம் கேள்வி கேட்க ஔசித்யமுண்டு. ஸாக்ஷாத் பரமபுருஷனாகவே நினைத்திருக் கிறானென்று தேறுமாகில் இங்ஙனம் கேள்வி கேட்க இடமே கிடையாது. பரமபுருஷன் எப்போதுமுள்ளவ னாகை யாலே அவன் விவஸ்வானுக்கு உபதேசிப்பதில் அஸம்பவ மொன்றுமில்லை யாகையாலே 'அவரம் பவதோ ஜந்ம பரம் ஜந்ம விவஸ்வத:' என்று வாய்திறக்கவே வழியில்லை. ஆகவே அர்ஜுநன் கண்ணனை கேவலம் இடைப்பிள்ளை யாகவே கொண்டு இங்ஙனம் கேள்வி கேட்டிருக்கிறானென்று கொள்ள வேணும். இது முன்பின் ஸந்தர்ப்பங்களுக்கு அடியோடு ஒவ்வாது. தர்மபுத்ரருடைய ராஜஸூயாதிகளில் பீஷ்மர் போல்வாரிடத் தில் "க்ருஷ்ணஏவஹி லோகாநாம் உத்பத்திரபிசாப்யய: க்ருஷ்ணஸ்ய க்ருதே பூதமிதம் விச்வம் சராசரம்" இத்யாதிகள் பலவும் கேட்டிருக்கிறானர்ஜுனன். மேலே பத்தாவது அத்யாயத்தில் இவ்வர்ஜுநன் தானே கண்ணபிரானை நோக்கி "பரம் ப்ரஹ்ம பரம் தாம பவித்ரம் பரமம் பவாந், புருஷம் சாச்வதம் திவ்யமாதிதேவமஜம் விபும் ஆஹுஸ்த்வாம்ருஷயஸ் ஸர்வே தேவர்ஷிர் நாரதஸ் ததா அஸிதோ தேவலோ வ்யாஸ: ஸ்வயம் சைவ ப்ரவீமி தே" என்று கூறுகிறான். கண்ணன் பரமபுருஷன் என்பதைப் பலரிடத்தில் பலகால் தான் கேட்டிருப்பதாக ஸ்பஷ்டமாகக் கூறியுள்ளான். இப்படியிருக்கும் போது 'அவரம் பவதோ ஜந்ம' என்கிற கேள்வி உதிக்க ப்ரஸக்தியே கிடையாது என்பதை ஸ்வாமி உபபாதித்துக் காட்டியுள்ளார். அஸம்பாவிதமான ப்ரச்நம் எப்படி தோன்றிற்று? என்னில்; இதற்கு ஸமாதானமும் ஸ்வாமி வெகு பொருத்தமாக அருளியுள்ளார்;

646. இங்கு ஸ்வாமியின் கீதாபாஷ்ய ஸூக்தி பரமரஸகனமாகையாலே கண்டபாடம் செய்து தரிக்கப்பட வேண்டுமென்பதற்காக அதை அப்படியே எடுத்துக் காட்டுகிறோம்: "ஜாநாத்யேவாயம் பகவந்தம் வாஸுதேவஸூநும் பார்த்த:. ஜாநதோபி அஜாநத இவ ப்ருச்சத: அயமாசய:. நிகிலஹேயப்ரத்யநீக கல்யாணைகதாநஸ்ய ஸர்வேச்வரஸ்ய ஸர்வஜ்ஞஸ்ய ஸத்யஸங்கல்பஸ்ய அவாப்த ஸமஸ்தகாமஸ்ய கர்மபரவசதேவமநுஷ்யாதி ஸஜாதீயம் ஜந்ம கிமிந்த்ரஜாலாதிவ மித்த்யா? உத ஸத்யம்? ஸத்யத்வே ச கதம் ஜந்மப்ரகார:? கிமாத்மகோயம் தேஹ:? கச்ச ஜந்மஹேது:? கதாச ஜந்ம? கிமர்த்தம் ஜந்ம? இதி பரிஹாரப்ரகாரணே ப்ரச்நார்த்தோ விஜ்ஞாயதே" என்பன கீதாபாஷ்ய பங்க்திகள். இவற்றின் ஸாரமான கருத்து என்னவென்றால் அர்ஜுநன் கண்ணபிரானை ஸாக்ஷாத் பரமபுருஷனாகவே தான் உறுதி கொண்டிருக்கிறான். அப்படியிருந்தும் அவனது பெருமையை அறியாதவன் போல் கேள்வி கேட்டிருப்பது ஏனென்னில், மேலே கண்ணபிரான் இவனுக்கு விடை கூறுகின்ற ப்ரகாரங்களை நோக்குமிடத்து, அர்ஜுநன் என்ன அபிப்ராயங் கொண்டு இக்கேள்வி கேட்டிருக்கிறானென்பதை எளிதாக நிர்ணயிக்கலாம். மேலே பகவான் நாலைந்து ச்லோகங்களாலே விடை கூறுவதில் தன்னுடைய அவதாரம் இந்திர ஞாலாதிகள் போலே அஸத்யமன்று, ஸத்யமேயென்பதையும், தன்னுடைய அவதார ப்ரகாரத்தையும் திவ்ய மங்கள விக்ரஹத் தன்மையையும் அவதார ஹேதுவையும் அவதார காலத்தையும் அவதார ப்ரயோஜநத்தையும் அருளிச் செய்திருக்கிறான். இவையெல்லாம் அப்ருஷ்டோத்தரமாகக் கூடாது. அர்ஜுநன் கேளாத அம்சங்களுக்குக் கண்ணன் விடை கூறுவதாகத் தேறினால் அது மிகவும் அஸமஞ்ஜஸமாகும். இத்தனையும் அர்ஜுநனுடைய உள்ளத்திலுறைந்தவை; அவன் கேள்வி கேட்கத் தொடங்கினபோதே இவ்வளவும் இவன் கேட்க நினைத்திருக் கிறானென்று கண்ணபிரான் தெரிந்து கொண்டு அவனை வாயடக்கி தாம் விரிவாக விடையிறுக்கிறார். இல்லை யாகில் "பஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி" என்ற அடுத்த வாக்யமொன்றோடே கண்ணன் தன் விடையை முடித்திருக்க வேண்டுமே. 'அப்பா அர்ஜுநா! நீ நினைக்கிறபடி நான் இப்போதாகப் பிறந்தவனல்லேன்; அநாதிகாலமாகப் பல பிறப்பும் பிறந்து கொண்டிருக்கிறேன்; ஆகவே முன்னொரு பிறப்பில் விவஸ்வானுக்கு உபதேசித்தே னென்பது அஸம்பாவிதமன்று காண்' என்று இவ்வளவே யன்றோ சொல்லி முடித்திருக்க வேண்டும். அப்படியில்லையே. இதற்கு மேலுள்ள விஷயங்களைச் சொல்லுவதற்கு என்ன ப்ரஸக்தியென்று பார்க்க வேணுமே. பார்க்குமளவில், அர்ஜுநன் இவ்வளவையும் அறிந்துகொள்ள விரும்பியே அக்கேள்வி கேட்கத் தொடங்கினானென்பது அநாயாஸ லப்யமாகும் என்பது எம்பெருமானார்திருவுள்ளம்.

647. மேல் ச்லோகமானது (4–5) "பஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி தவ சார்ஜுந" என்றுள்ளது. இதனால் பகவானுடைய அவதாரம் இந்த்ரஜாலாதிக ளைப் போல் அஸத்யமன்று, ஸத்யந்தானென்பது தெரிவிக்கப்பட்டதாகிறது. இங்கே தேசிகனுடைய தாத்பர்ய சந்த்ரிகையில் நன்கு விளக்கமுள்ளது. "ஸத்யத்வே ஹி பஹுத்வாதீநி ஸ்வரஸாநி; ஜந்மாநீதி சோக்தம், ந ஜந்மப்ரதி பாஸா இதி; தவ சேதி

அப்ருஷ்டஸ்யார்த்தஸ்ய உபாதாநமபி ஏதத்ஸத்யத் வத்ருஷ்டாந்த அபிப்ராயமந்தரேண ந கடதே. ந ஹ்யர்ஜுநஸ்ய ஜந்ம மித்த்யா....." இத்யாதி தாத்பர்ய சந்த்ரிகா ஸூக்திகள் காண்க.

648. இதில் முக்கியமான விஷயம்– "அர்ஜுநா! எனக்கும் உனக்கும் பல ஜன்மங்கள் கடந்திருக்கின்றன" என்கிறான் கண்ணன். ஜன்மங்கள் என்று சொல்லப் பட்டிருக்கிறதேயொழிய ஜன்மப்ரதிபாஸங்க ளென்று சொல்லப்பட்டிருக்கவில்லை. தவிரவும், அர்ஜுநனுடைய ஜன்மத்தைப் பற்றி ப்ரஸ்தாவிக்க வேண்டுவது அப்ரஸக்தமா யிருக்க 'தவ சார்ஜுந' என்று அவனுடைய பிறப்புக்கள் த்ருஷ்டாந்தமாக வெடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. 'அப்பா! உன் பிறப்பு எப்படி ஸத்யமோ அப்படியே என் பிறப்பும் ஸத்யங்காண்' என்று தெரிவிக்கப்பட்டதாகத் தேறுகின்றது. இதற்கடுத்த (4–6) "அஜோபி ஸந்நவ்யயாத்மா பூதாநாம் ஈச்வரோபி ஸந், ப்ரக்ருதிம் ஸ்வாம் அதிஷ்ட்டாய ஸம்பவாமி ஆத்மமாயயா" என்கிற ச்லோகத்தினால் – அவதார ப்ரகாரமும், அவதாரங்களில் பரிக்ரஹிக்கிற திவ்யமங்கள விக்ரஹத்தின் உண்மைத் தன்மையும் அவதார ஹேதுவுமாகிற மூன்று விஷயங்கள் தெரிவிக்கப்படுகின்றன. அஜத்வம் அவ்யயத்வம் ஸர்வேச்வரத்வம் ஆகிற இந்த பரமேச்வரத் தன்மையை விடாமலே பிறக்கிறேனென்கையாலே அவதார ப்ரகாரம் சொல்லிற்று. 'ப்ரக்ருதிம் ஸ்வாம் அதிஷ்ட்டாய ஸம்பவாமி' என்று, அப்ராக்ருத திவ்யமங்கள விக்ரஹத்தையே கொண்டு அவதரிப்பதாகச் சொல்லுகை யாலே திவ்யமங்கள விக்ரஹத்தின் உண்மைத் தன்மை சொல்லிற்று. இனி 'ஆத்மமாயயா' என்றதைப் பற்றிக் கீழேயே மிக விரிவாக நிரூபணம் செய்திருக்கிறோம். என்னுடைய ஸங்கல்பத்தினாலேயே அவதரிக்கிறேன் என்று பொருளாகை யாலே இச்சைதான் அவதாரஹேது வென்று சொல்லிற்றாயிற்று. இதற்கடுத்த (4–7) "யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர்பவதி பாரத, அப்ப்யுத்தாநமதர்மஸ்ய ததாத்மாநம் ஸ்ருஜாம்யஹம்" என்கிற ச்லோகத்தினால் அவதாரகாலம் சொல்லிற்று.

649. இந்த ச்லோசத்தில் "ததா ஆத்மாநம் ஸ்ருஜாம்யஹம்" என்றவிடத்தில் ரஸ்யமும் ரஹஸ்யமுமான ஒரு விசேஷார்த்தமுண்டு. மேலே ஏழாம் அத்யாயத்தில் "ஜ்ஞாநீ து ஆத்மைவ மே மதம்" (18) என்று கீதாசார்யன்தானே ஜ்ஞானிகளைத் தனக்கு ஆத்மாவாகச் சொல்லுகையாலே இங்கு "ஆத்மாநம் ஸ்ருஜாமி" என்றதற்கு ஞானிகளை அவதரிப்பிக்கிறேன் என்பதும் அந்தரங்கமான பொருளாகும். அதர்மம் தலையெடுத்து தர்மம் தலைமடிந்து நிற்குங் காலங்களில் பகவான் தான் வந்து அவதரிப்பதிற்காட்டிலும் ஞானிகள் அவதரிப்பதில் ப்ரயோஜநாதிசயமுண்டு. இராமாநுச நூற்றந்தாதியில் (41) "மண்மிசை யோனிகள் தோறும் பிறந்து எங்கள் மாதவனே கண்ணுற நிற்கிலும் காணகில்லா வுலகோர்களெல்லாம் அண்ணலிராமனுசன் வந்து தோன்றிய அப்பொழுதே நண்ணரு ஞானம் தலைக்கொண்டு நாரணற்காயினரே" என்றுள்ள பாசுரம் இங்குப் பொருத்தமாக அநுஸந்திக்கத் தகும்.

650. அன்றியும் இந்த நான்காம் அத்யாயத்திலேயே மேல் (34) "தத்வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா, உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ் தத்வ தர்சிந:"

என்கிற ச்லோகத்தில் ஞானிகளின் உபதேசப் பெருமை நன்கு கூறப்பட்டிருக்கிறது. 'தத்வமாகிய நான் சொல்லுவதிற் காட்டிலும், தத்வமாகிய என்னை ஸாக்ஷாத்கரித்து தத்வதர்சிகள் என்று பேர் பெற்ற ஞானிகள் உபதேசிப்பது மிகச் சிறந்திருக்கும். அவர்களை யடிபணிந்தும் பலகால் அநுவர்த்தித்துக் கேட்டும் தெரிந்து கொள்' என்று அந்த ச்லோகத்தில் சொல்லப்படுகிறது. அப்படி யுபதேசித்துத் திருத்திப் பணிகொள்ளவல்ல ஞானிகளை ஸமய விசேஷங்களில் நானே அவதரிக்கச் செய்கிறேன் என்றானிங்கு. தன்னுடைய அவதாரத்தைப் பற்றிச் சொல்ல ப்ராப்தமான இந்த ப்ரகரணத்தில் ஞானிகளின் அவதாரத்தைப் பற்றிச் சொல்வதற்கு என்ன ப்ரஸக்தி யென்று நினைக்க வேண்டா; 'பீதகவாடைப் பிரானார் பிரமகுருவாகிவந்து" என்கிற பெரியாழ்வார் திருமொழிப்படியும் 'ஸாக்ஷாத் நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும், மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாத் சாஸ்த்ரபாணிநா" என்கிற ப்ரமாணப்படியும் ஞானிகளின் அவதாரமும் பகவதவதார விசேஷமேயாகையாலே. "சேமம் குருகையோ செய்ய திருப்பாற்கடலோ, நாமம் பராங்குசமோ? நாரணமோ?– தாமம் துளவோ வகுளமோ தோளிரண்டோ நான்கு முளவோ பெருமானுனக்கு" என்று நம்மாழ்வாரை நோக்கி ஒரு பரமபக்தர் பணித்த பாசுரமும் இங்கு அநுஸந்திக்கப் பொருந்தும். ப்ராஸங்கிகமானவிது நிற்க.

651. இனி அவதார ப்ரயோஜனம் சொல்லுகிற (4–8) "பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம், தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே" என்கிற ச்லோகத்தைப் பற்றி ஆராய்வோம். "துயரில் மலியும் மனிசர் பிறவியில் தோன்றிக் கண்காண வந்து" என்றும் "நாட்டில் பிறந்து படாதனபட்டு மனிசர்க்காய்" என்றும் சொல்லுகிறபடியே கர்மவச்யர்களான ஸம்ஸாரிகளும் படாத கஷ்டங்களைப்பட்டு இந்நிலவுலகில் எம்பெருமான் வந்து அவதரிக்க வேணுமோ? ஸத்யஸங்கல்பனான தான் தன்னுடைய ஸங்கல்பசக்தியைக் கொண்டே எதுவும் செய்யலாமன்றோ? எத்தனை ஸாதுக்களை ரக்ஷிக்க வேணுமானாலும் எத்தனை துஷ்டர்களை சிக்ஷிக்க வேணுமானாலும் தன்னுடைய அவ்யாஹத சக்திகமான ஸங்கல்பத்தினாலே செய்து தலைக்கட்ட என்ன தடை? ஸாதுபரித்ராணத்திற்காகவும் துஷ்க்ருத் விநாசத்திற்காகவும் அவ்வப்போதுகளில் நானே வந்து பிறக்கிறேனென்கிறானே, எதற்காகப் பிறக்கவேணும்? என்று பிரபலமான ஆக்ஷேபம் தோன்றக்கூடியதிங்கு. இதற்கு சங்கர பாஷ்யத்தில் யாதொரு பரிஹாரமும் கிடையாது. மத்வபாஷ்யத்தில் மூலத்திற்கு ஸம்பந்த மின்றிக்கே ஏதோ எழுதப் பட்டுள்ளது; அதாவது, "ந ஜந்மநைவ பரித்ராணாதி கார்யமிதி நியம:; ததாபி லீலயா ஸ்வபாவேந ச யதேஷ்டசாரீ.... லோகவத் து லீலாகைவல்யம்......" என்று எழுதப்பட்டிருக்கின்றது. 'பகவான் ஸாதுபரித்ராணாதிகளை அவதரித்தே செய்தாக வேணுமென்கிற நிர்பந்தமில்லை; ஆனாலும் விளையாட்டாக அவதரிக்கிறான். ப்ரஹ்மஸூத்ரத்திலும் "லோகவத்து லீலாகைவல்யம்" என்று சொல்லப்பட்டிருக்கிறதன்றோ" என்பது மத்வ பாஷ்யபங்க்தியின் பொருள். ஸாது பரித்ராணாதிகளுக்காக நான் வந்து பிறக்கிறேனென்று மூலத்தில் ஸ்பஷ்டமாகச்

சொல்லியிருக்க, அதற்குக் கண்டனம் செய்கிற முறையில் இந்த பாஷ்யம் அவதரித்திருக்கின்றது. "லோகவத் து லீலாகைவல்யம்" என்கிற ப்ரஹ்ம ஸூத்ரமானது பகவான் செய்கிற ஜகத்ஸ்ருஷ்டியைப் பற்றினதே யொழிய பகவதவதாரத்தைப் பற்றியதன்றென்பது நிர்விவாதம். அதை இங்கெடுத்தெழுவது ஸுதராம் அப்ரஸக்தம். இது கிடக்கட்டும்.

652. அந்தரதிகரண ஸ்ரீபாஷ்யத்தில் "அந்தஸ் தத்தர்மோபதேசாத்" (1–1–21) என்கிற ஸூத்ரத்தின் பாஷ்யத்தில் 'பரித்ராணாய ஸாதூநாம்' என்கிற இந்த ச்லோகத்தை ப்ரஸக்தாநுப்ரஸக்தமாக வுதாஹரித்து "ஸாதவோஹி உபாஸகா:; தத்பரித்ராணமேவோத்தேச்யம். ஆநுஷங்கிகஸ்து துஷ்க்ருதாம் விநாச: ஸங்கல்பமாத்ரேணாபி ததுபபத்தே:" என்றருளிச் செய்யப்பட்டிருக்கிறது. ஸாது பரித்ராணத்திற்காகவே முக்கியமாக அவதாரம் செய்தருளிற்றென்றும், துஷ்ட நிரஸநமானது ஸங்கல்பத்தாலுங் கூட ஸாத்யமாகக் கூடியதாதலால் அவதாரத்திற்கு அது ப்ரதாநோத்தேச்யம் அன்று என்றும் மேலெடுத்த ஸ்ரீபாஷ்ய ஸ்ரீஸூக்தியினால் தெரிவிக்கப்படுகிறது. ஸாது பரித்ராணம் மாத்திரம் ஏன் ஸங்கல்பத்தினாலாகக் கூடாது? "ஸாதவ: பரித்ராதா பவந்து" என்று ஸங்கல்பித்தால் ஆகமாட்டாதோ? என்று ஆக்ஷேபமுதிக்கக்கூடும். இதற்குப் பரிஹாரம் கீதாபாஷ்யத்தில் நன்கு உள்ளது. அதை விவரிக்கிறோம்.

653. 'ஸாதூநாம் பரித்ராணாய' என்றதில் ஸாதுக்களாவார் இன்னார் என்பதை விவரிக்கிற முகத்தால் அவர்களுடைய பரித்ராணம் ஸங்கல்ப ஸாத்யமாகாதென்றும் கண்காணவந்து தோன்றியே செய்யத்தக்காமென்றும் தெளிவித்தருளுகிறார் ஸ்வாமி. "ஸாதவ: – உக்தலக்ஷணதர்மசீலா: வைஷ்ணவ அக்ரேஸாரா: மத்ஸமாச்ரயணே ப்ரவ்ருத்தா: மந்நாமகர்மஸ்வரூபாணாம் வாங்மநஸ அகோசரதயா மத்தர்சநாத் விநா ஸ்வாத்ம தாரணபோஷணாதிகம் அலபமாநா: க்ஷணமாத்ரகாலம் கல்பஸஹஸ்ரம் மந்வாநா: ப்ரசிதிலஸர்வகாத்ரா பவேயுரிதி மத்ஸ்வரூபசேஷ்டிதாவலோகநாலாபாதிதாநேந தேஷாம் பரித்ராணாய" என்பன ஸ்ரீகீதாபாஷ்யஸ்ரீஸூக்திகள். இப்பங்க்திகளின் காம்பீர்யம் வாசாமகோசரம். ஸ்ரீவைஷ்ணவ அக்ரேஸரர்க ளான நம்மாழ்வார் போன்ற பரம பக்தர்களையே திருவுள்ளத்திற் கொண்டு இப்பங்க்திகள் அருளிச் செய்யப்பட்டிருக்கின்றன.

654. "எங்கே காண்கேன் ஈன்துழாய் அம்மான் தன்னை யானென்றென்று" என்றும் "காணவாரா யென்றென்று கண்ணும் வாயும் துவர்ந்து" என்றும் "கூராராழி வெண்சங்கேந்திக் கொடியேன்பால் வாராயொருநாள்" என்றும் "தாமரைநீள் வாசத்தடம் போல் வருவானே! ஒரு நாள் காணவாராயே" என்றும் கதறுகின்றவர்களாய் "ஒருபகலாயிர மூழியாலோ" என்றும் "தெய்வங்காளென் செய்கேன் ஓரிரவு ஏழ் ஊழியாய்" என்றும் "ஊழியில் பெரிதால் நாழிகையென்னும்" என்றும் ஒரு நொடிப் பொழுதைக் கல்ப ஸஹஸ்ரமாக நினைப்பவர்களாய், "காலுமெழா கண்ணநீரும் நில்லா உடல் சோர்ந்து நடுங்கிக் குரல்மேலு மெழா மயிர் கூச்சுமறா" என்றும், "காலாழும் நெஞ்சழியும் கண்

சுழலும்" என்றும் "உள்ளெலாமுருகிக் குரல் தழுத்தொழிந்தேன் உடம்பெல்லாம் கண்ணநீர் சோர" என்றும் ஸர்வாவயவ சைதில்யமுடையவர்களா யிருப்பவர்கள் ஆழ்வார்களைத் தவிர்த்து வேறு யாருமிலரே. அவர்களின் ஸ்ரீஸூக்திகளையேயன்றோ ஸ்வாமி ஸம்ஸ்க்ருதத்தில் மொழி பெயர்த்திருக்கிறார். அவர்கள் தன்னைக் காணவேணுமென்றும் தன்னோடு பேசவேணுமென்றும் தன்னைத் தழுவ வேணுமென்றும் காதலித்தால் எம்பெருமான் நேராக வந்தாலொழிய அவர்களின் காதல் நிறைவேறாதன்றோ. ஸங்கல்பம் இங்கு என்ன பண்ணக்கூடும்? "மழுங்காத வைந்நுதிய சக்கர நல்வலத்தையாய்! தொழுங்காதல் களிறளிப்பான் புள்ளூர்ந்து தோன்றினையே, மழுங்காத ஞானமே படையாக மலருகில், தொழும்பாயார்க்கு அளித்தால் உன் சுடர்ச்சோதி மறையாதே" (3–1–9) என்ற திருவாய்மொழிப் பாசுரத்தையே ஸ்வாமி நிதியாகக் கொண்டு பாஷ்யம் செய்தருளியிருக்கிறார். ஆக பரித்ராணாய ஸாதூநாம்' என்றவிடத்தில் ஸாது சப்தவிவக்ஷிதர்கள் ஆழ்வார்கள் போன்றவர்க ளென்றும், அவர்கள் எம்பெருமானை நேரில் கண்டாலல்லது தீராத காதலையுடையவர்க ளாகையாலே அவர்களுக்காக வந்து தோன்றியேயாக வேணுமென்றும், அவர்களுடைய காதல் ஸங்கல்பத்தினால் ஒருகாலும் தீர்க்க முடியாதென்றும் காட்டி சங்காபரிஹாரம் நன்கு செய்தருளினாராயிற்று.

655. "வித்யாவிநயஸம்பந்தே ப்ராஹ்மணே கவி ஹஸ்திநி, சுநிசைவ ச்வபாகே ச பண்டிதாஸ் ஸமதர்சிந:" (5–18). இதில் 'வித்யாவிநயஸம்பந்நே' என்பதை விசேஷணமாகக் கொண்டு 'ப்ராஹ்மணே' என்கிற விசேஷ்யத்தில் இதை அந்வயித்து, வித்யா விநயங்களோடு கூடியிருக்கிற உத்தம ப்ராஹ்மணனிடத்தில் என்பதாகப் பொருள் விவரித்தார் சங்கராசாரியர். ஒரு விதமான அர்த்தமும் செய்திலர் மத்வாசாரியர். நம் ஸ்வாமியோ வென்னில், 'வித்யா விநயஸம்பந்நே' என்பதைத் தனி விசேஷ்யமாகவும் 'ப்ராஹ்மணே' என்பதைத்தனி விசேஷ்யமாகவுங் கொண்டு பாஷ்யமிட்டருளினார். வித்யாவிநய ஸம்பந்நனான உத்தம ப்ராஹ்மணனொருவன்; அவனிடத்திலும், அவை யொன்றுமில்லாத கேவல ப்ராஹ்மணனொருவன்; அவனிடத்திலும்–என்று இரண்டு வார்த்தையாக ஸ்வாமி திருவுள்ளம்பற்றினபடி. இதுதான் மிகவும் உசிதமானதென்று தாத்பர்ய சந்த்ரிகையில் நன்கு காட்டப்பட்டிருக்கிறது. எங்ஙனே யென்னில், கவி, ஹஸ்திநி, சிநி, ச்வபாகே என்று மேலுள்ளவற்றில் ஒரு விசேஷணமும் இடப்படவில்லை. அப்படியிருக்க ப்ராஹ்மணே விசேஷணாவச்யகதை யில்லை. அன்றியும், வித்யாவிநயஸம்பந்த ப்ராஹ்மணனைச் சொல்லி இவனுக்கு எதிரிடையான ஒரு நபரை நிர்தேசியாம லிருப்பது குறையுமாகும். ஆகவே வித்யா விநய ஸம்பந்நனிடத்திலும் கேவல ப்ராஹ்மணனிடத்திலும் என்றுதான் பொருள் கொள்ளப் பொருந்தும் என்று. 'ஜாதிபேதம் முதலானவற்றையிட்டு ஏற்றத்தாழ்வு காண்பவர்கள் பண்டிதர்கள் அல்லர், பாமரர்களே' என்கிற அபார்த்தம் நவீந ஸம்ஸ்காரகர்களின் வாக்கில் உலாவி வருகிறது. அது சிறிதும் பொருந்தாது. "பண்டிதா: – ஆத்மயாதாத்ம்யவித:, ஜ்ஞாநைகாகாரதயா ஸர்வத்ர ஸம இதி பச்யந்தீத்யர்த்த:" என்பது பாஷ்யஸூக்தி. பசுவினாலாகிற காரியம் யானையினாலாகாது. யானையினாலாகிற காரியம் பசுவினாலாகாது. பால் வேண்டும்போது பசுவைத் தேடுவதும், மஹோத்ஸவங்க

ளுக்கு யானையைத் தேடுவதும் யாவரிடத்துங் கண்ட வியல்பு. "கவி ஹஸ்திநி ஸமதர்சனம்" என்றதற்கு நவீநர்கள் சொல்லுகிற பொருள் பொருந்த வேணுமாகில், யானைக்குச் செய்கிற அலங்காரங்களை நாய்க்குச் செய்ய வேண்டும்; நாய்க்குச் செய்யுமவற்றைக் குதிரைக்குச் செய்ய வேண்டும். இப்படிப்பட்ட ஆபத்திகளைப் பரிஹரிக்கைக்காக 'ஸர்வத்ர ஸமதர்சிந:' என்பதற்குப் பொருத்தமான பொருள் காண வேண்டும். அதுதான் ஸ்வாமிபாஷ்யத்தில் காண்பது.

656. அன்றியும், இதற்குமேல் மூன்றாவது ச்லோகத்தில் (5–20) "ந ப்ரஹ்ருஷ்யேத் ப்ரியம் ப்ராப்ய நாத்விஜேத் ப்ராப்ய சாப்ரியம்" என்று சொல்லப் பட்டிருக்கிறது. ப்ரியமானது கிடைத்தால் ஸந்தோஷிக்கக் கூடாது; அப்ரியமானது கிடைத்தால் வெறுப்புக் கொள்ளலாகாது என்று இதற்குப் பொருள். இப்படியிருக்க வல்லவனுக்குத் தான் ஸர்வத்ர ஸமதர்சந ரூபமான ஜ்ஞாநவிபாக முண்டாகுமென்று பாஷ்யகாரர் அருளிச் செய்கிறார். அப்படிப்பட்ட ஓர் அதிகாரி தேறுவனாகில் அவனுடைய ஸர்வத்ரஸமதர்சித்வம் எப்படிப்பட்ட தென்று நேராகக் கண்டு கொள்ளலாம்.

657. "உத்தரேதாத்மநாத்மாநம் நாத்மாநமவஸாதயேத், ஆத்மைவ ஹ்யாத்மநோ பந்து; ஆத்மைவ ரிபுராத்மந:" (6–5) என்கிற இந்த ச்லோகம் ஒவ்வொருவருடைய நெஞ்சிலும் அநவரதமும் ஊறியிருக்கத்தக்கது. தன்னைக் கொண்டே தான் கடைத் தேறவேணுமென்றும், தன்னைத் தானே கெடுத்துக் கொள்ளலாகாதென்றும், தனக்குத் தானே உறவு, தனக்குத் தானே பகைவன் என்றும் இந்த ச்லோகத்தில் சொல்லப்படுகிறது. ஒருவன் கடைத் தேறுவதற்குப் பலபல ஸாதனங்கள் வேண்டியிருக்கின்றன. ஸத்ஸஹவாஸம் வேணும். ஆசார்யோபஸேவை வேணும், பிராட்டியை முன்னிட்டு எம்பெருமான் திருவடிகளைத் தஞ்சமாகப் பற்றுதல் வேணும்.....என்றிப்படியாக உஜ்ஜீவனத்திற்கு வேண்டியவை பல இருந்தாலும் இவற்றுள் மிக முக்கியமான ஸாதனம் மனம் ஒன்றேயாம். அதை விஷயாந்தரங்களில் யதேஷ்டமாகச் செல்லவிட்டு வைத்தால் அது தன்னைத் தானே மாய்த்துக் கொண்டபடியாகும். மனத்தை விஷயக்ராமங்களில் புகவிடாமல் ஆத்மோஜ்ஜீவனத்திற்கு அபிமுகமாக்கு மளவில் அந்த மனத்தைக் கொண்டு தான் வாழ்ந்தவனாவான்; ஆகவே, மனமானது உறவாயுமிருக்கும், பகையாயுமிருக்கும். உறவாகக் கொண்டு வாழ்வதே விவேகிகளின் பணி; பகையாகக் கொண்டு பாழாய்ப் போக வேண்டாமென்று கீதாசார்யன் வெகு பொருத்தமாக உபதேசித்தருளுகின்றான்.

658. ஆனது பற்றியே ஆழ்வார்கள் அடிக்கடி நெஞ்சைக் கொண்டாடுகிறார் கள்; "நெஞ்சமே! நல்லை நல்லை உன்னைப் பெற்றா லென் செய்யோம். இனி யென்ன குறைவினம்?" என்றும், "ஊனில் வாழுயிரே! நல்லை போவுன்னைப் பெற்று" என்றும், "முயற்றி சுமந்தெழுந்து முந்துற்ற நெஞ்சே! இயற்றுவா யெம்மொடு நீ கூடி" என்றும் நம்மாழ்வாரருளிச் செய்கிறார். ஆனால் நெஞ்சை அனுகூலமாக்கிக் கொள்வதென்பது மிகவும் அரிதான செயல்: "நின்ற வாநில்லா நெஞ்சினையுடையேன் என் செய்கேன்" என்கிறார் திருமங்கை யாழ்வார். அது நிற்க. ஜிதேந்த்ரியரில் தலைவனான அர்ஜுனனே மனத்தை வசப்படுத்த வேணுமென்று அடிக்கடி கூறுகின்ற கண்ணபிரானை நோக்கிச்

சொல்லுகிறான்– (6–34). "சஞ்சலம் ஹி மந: க்ருஷ்ண! ப்ரமாதி பலவத் த்ருடம், தஸ்யாஹம் நிக்ரஹம் மந்யே வாயோரிவ ஸுதுஷ்கரம்" என்கிறான். கண்ணா! காற்றைப் பிடித்துக் கரகத்தினுள்ளே அடைக்க வேணுமென்னுமாபோலே மனத்தைப் பிடித்து நிலை நிறுத்த வேணுமென்கிறாய் நீ;மனமோ இயற்கையாகவே சஞ்சலமானது. ஒரு நொடிப்பொழுது கூட ஒரு விஷயத்தில் ஏகாக்ரமாக ஒருவனாலும் நிலைநிறுத்த முடியாது; விஷயாந்தரங்களிலுங்கூட ஒன்றினில் ஒன்றி நிற்கமாட்டாத நெஞ்சை நல்விஷயத்தில் ஒன்றவைப்பதென்பது மிகவுமரிது என்று நான் நினைக்கிறேன்; மநோநிக்ரஹத்திற்குரிய உபாயத்தை உரைக்க வேணும் என்றான் அர்ஜுநன். இதற்குக் கண்ணபிரான் கூறிய மறுமொழி என்னவென்று பார்த்தாலோ, (6–35) "அஸம்சயம் மஹாபாஹோ! மநோ துர்நிக்ரஹம் சலம், அப்யாஸேந து கௌந்தேய! வைராக்யேண ச க்ருஹ்யதே" என்பது தான் கண்ணனுடைய மறுமாற்றம். மனத்திற்கு சஞ்சலத்வம். இயற்கை குணமாதலால் அதைப் போக்கி அதனை ஒன்றினில் ஒன்றவைப்பதென்பது முடியாத காரியந்தான்; இதில் ஸந்தேஹமேயில்லை; ஆனாலும் விஷயதோஷங்களைக் காணக்காண வைராக்ய முண்டாகக் கூடுமாதலால் மனத்தை யடக்கப் பழக்கம் செய்து நாளடைவில் ஸாதிக்க வேணும்–என்பது கண்ணனுடைய பதில். இவ்விடத்தில் "அஸம்சயம்" என்பதற்கு சங்கரபாஷ்யம் "நாஸ்தி ஸம்சயே ஹி மஹாபாஹோ! மநோ துர்நிக்ரஹம் சலமித்யத்ர"என்றுள்ளது; அப்படியன்றிக்கே தாத்பர்ய சந்த்ரிகையில் "அஸம்சய மித்யேதத் ஸத்யமிதிவத் அர்த்தாங்கீகாரபரம்" என்றுள்ளது ரஸிக்கத்தக்கது.

659. ஏழாமத்யாயத்தை யிட்டு கீதைக்கு ஒரு அபக்யாதி விளைந்திருப்பதுண்டு; ஒரூரில் ஒரு பண்டிதர் கீதா ப்ரவசனம் செய்து கொண்டிருந்தாராம்; பலர் கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஒருவர் மாத்திரம் அந்த கோஷ்டியில் அந்வயிப்பதில்லை. ஆப்தர்கள் அவரை வெகு நிர்ப்பந்தித்து ஒருநாள் கீதா காலக்ஷேப கோஷ்டியில் அந்வயிப்பதில்லை. ஆப்தர்கள் அவரை வெகு நிர்ப்பந்தித்து ஒரு நாள் கீதா காலக்ஷேபகோஷ்டியில் அந்வயிப்பித்தனர். அவர் வந்து சேர்ந்த தினத்தில் ஏழாமத்யாயத்தில் பதினைந்தாம் ச்லோகம் ஆரம்பிக்கப்பட்டதாம். அதாவது "ந மாம் துஷ்க்ருதிநோ மூடா: ப்ரபத்யந்தே நராதமா:, மாயயா அபஹ்ருத ஜ்ஞாநா: ஆஸுரம் பாவமாச்ரிதா:" என்பது. இந்த ச்லோகம் முழுவதும் நிந்தையே நிறைந்திருப்பதால் பாஷ்யாதிகளையும் அநுஸரித்து அந்த நிந்தைகளை வெகு விரிவாக உபந்யஸித்தார் ப்ரவசநகாரர். அன்றே புதிதாகக் கேட்க வந்தவர். இந்த கீதையில் இப்படிப்பட்ட நிந்தைகள் தான் நிறைந்திருப்பன போலும் என்றெண்ணி மிகவும் வெறுப்படைந்தாராம். மறுநாளும் 'இன்றைக்கு விஷயம் எப்படியிருக்கிறது பார்ப்போம்' என்று பரீக்ஷார்த்தமாக காலக்ஷேப கோஷ்டிக்கு வந்தாராம்; அன்று அதற்கடுத்த சுலோகம் (7–16) "சதுர்விதா பஜந்தே மாம் ஜநாஸ் ஸுக்ருதிநோர்ஜுந! ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீ ஜ்ஞாநீ ச பரதர்ஷப!." என்பது விரிவாக உபந்யஸிக்கப்பட்டதாம். முன் ச்லோகத்தில் நிந்தை நிறைந்தது; இந்த ச்லோகத்தில் ஸ்துதி நிறைந்தது. இரண்டும் பிசகுதானே. அதனால் அந்த ச்ரோதா 'கீதையில் வீணான நிந்தையும் ஸ்துதியும் தவிர வேறு கிடையாது, என்று முடிவு செய்து கொண்டு மூன்றாநாள்

தொடங்கிக் காலக்ஷேபத்திற்கு வருவதை நிறுத்திக் கொண்டாராம். ஏன் வருவதில்லையென்று கேட்பவர்களுக்கு "கீதையில் என்ன இருக்கிறது? பரநிந்தை பத்தத்யாயம்; ஆத்மஸ்துதி ஆறாத்யாயம்; இன்னுமேதாவது விஷயங்கள் இரண்டத்யாயமிருக்கும்." என்றாராம். இது இவருடைய மருள் இருந்தபடி,

660. திருவாய்மொழியில் (3–5) "மொய்ம்மாம்பூம் பொழிற் பொய்கைப் பதிகமும் இந்த ஏழாமத்யாயமும் ஒரு நிகராக நினைக்கப்படலாம். அப்பதிகத்தின் ஸாரத்தை நூற்றந்தாதியிலருளிச் செய்த மணவாளமாமுனிகள் "அன்பாலாட் செய்பவரை யாதரித்தும், அன்பிலா மூடரை நிந்தித்தும் மொழிந்தருளும் மாறன்பால்" என்கிறார். நிந்திக்க வேண்டியவர்களை நிந்திப்பதும் ஸ்துதிக்க வேண்டியவர்களை ஸ்துதிப்பதும் ப்ராப்தமேயாம்.

661. அது நிற்க, "சதுர்விதா பஜந்தே மாம்" என்கிற சுலோகத்தில் ஆர்த்த:, ஜிஜ்ஞாஸு:, அர்த்தார்த்தீ, ஜ்ஞாநீ என்று நால்வகை யதிகாரிகள் கூறப்படுகிறார்கள். இவர்களை விவரிக்கின்ற சங்கராசார்யர் தமது பாஷ்யத்தில் "ஆர்த்த:– தஸ்கரவ்யாக்ரரோகாதிநா அபிபூத: ஆபந்ந:, ஜிஜ்ஞாஸு:– பகவத்தத்வம் ஜ்ஞாதுமிச்சதிய:. அர்த்தார்த்தீ–தநகாம: ஜ்ஞாநீ–விஷ்ணோஸ்தத்வவித்." என்று எழுதியுள்ளார். மத்வபாஷ்யகாரான ஆனந்ததீர்த்தர் ஒரு விவரணமுமெழுத வில்லை. சங்கராசாரியர்– திருடர் புலி பிணி முதலியவற்றால் துன்பமடைந்தவனை ஆர்த்தனென்றும், பகவானையறிய விரும்புகிறவனை ஜிஜ்ஞாஸுவென்றும், தனம் பெற விரும்புமவனை அர்த்தார்த்தி யென்றும், விஷ்ணுதத்வமறிந்தவனை ஞானி என்றும் இப்படி விவரித்திருக்கின்றார். நமது பாஷ்யகாரான ஸ்வாமியெம்பெருமானார்–ப்ரஷ்டைச்வர்ய காமனை ஆர்த்தனென்றும், அபூர்வ ஐச்வர்யகாமனை அர்த்தார்த்தி யென்றும், கைவல்ய காமனை ஜிஜ்ஞாஸுவென்றும், ஸ்வஸ்வரூபமுணர்ந்தவனை ஞானியென்றும் விவரித்தருளுகிறார். இவற்றுள் எந்த விவரணத்தில் பொருத்தமுள்ளதென்பதைப் பற்றி நாம் இங்கு விமர்சிக்க விரும்பவில்லை. இங்ஙனே விலக்ஷணமான விவரணத்தை நம் ஸ்வாமி செய்தருளியதற்கு மூல மென்ன? என்று விமர்சிக்க ப்ராப்தம்.

662. இதை விமர்சிக்குமளவில், ஆழ்வார்களின் ஸ்ரீஸூக்தியை அடியொற்றிப் பேசவேணு மென்று ஸ்வாமி கொண்டிருந்த உறுதிதான் இதற்கு மூலமென்று நன்கு புலப்படும். திருப்பல்லாண்டில், "வாழாட்பட்டு நின்றீருள்ளீரேல்" என்கிற பாசுரத்தினால் ஞானிகளை யழைத்தும் "ஏடுநிலத்தில் இடுவதன் முன்னம்" என்கிற பாசுரத்தினால் கைவல்யார்த்திகளை யழைத்தும், "அண்டக்குலத்துக்கதிபதி யாகி" யென்கிற பாசுரத்தினால் அபூர்வைச்வர்யகாமர்களையும் ப்ரஷ்டைச்வர்ய காமர்களையுமழைத்தும் உபதேசம் தந்தருளியிருப்பது ஸுஸ்பஷ்டம். இதுவன்றியும் திருவாய்மொழியில் "ஒரு நாயகமாய்" என்கிற பதிகத்தில் இந்நால்வகை யதிகாரிகளும் தெரிவிக்கப் பட்டிருப்பதும் ப்ரஸித்தம். கீதையிலுள்ள "சதுர்விதா பஜந்தே மாம்" என்னுமிந்த ச்லோகத்தை யடியொற்றியே அந்தப் பாசுரங்கள் திருவவதரித்தனவாக ஸம்ப்ரதாயமாகையாலே "மாறனுரை செய்த தமிழ்மறை வளர்த்தவரான ஸ்வாமி யெம்பெருமானார் திவ்யப்ரபந்தச்

சாயையிலேயே அருளிச் செய்தாரென்பது இங்கு குறிக்கொள்ள வேண்டிய பரமார்த்தம்.

663. மற்றுமொரு விசேஷமிங்கு நெஞ்சிற் பதிய வைத்துக் கொள்ளத் தக்கதுண்டு. ஸ்ரீவசநபூஷணத்தில் (73) "அஹமர்த்தத்துக்கு ஜ்ஞாநாநந்தங்கள் தடஸ்தமென்னும்படி தாஸ்யமிறே அந்தரங்க நிரூபகம்" என்ற சூர்ணையின் வியாக்கியானத்தில் "திருக்கோட்டியூர் நம்பி பாதத்தில் ஆழ்வான் ஆறுமாஸம் ஸேவித்து நின்று மஹாநிதியாகப் பெற்ற அர்த்தமிறேயிது" என்று மணவாள மாமுனிகள் அருளிச் செய்கிறார். எம்பெருமானாருடைய கோஷ்டியில் ஒரு நாள் "ஜீவாத்மாவுக்கு அந்தரங்க நிரூபகம் ஜ்ஞாத்ருத்வமா? சேஷத்வமா?' என்று விசாரமுண்டாக, எம்பெருமானார் கூரத்தாழ்வானைத் திருக்கோட்டியூர் நம்பி பக்கலில் விடை கொண்டு ஆறுமாஸம் ஸேவித்திருந்து சேஷத்வமே அந்தரங்க நிரூபகமென்று தெளிந்து மீண்டதாக ஐதிஹ்யமுள்ளது. அப்படி மஹாநிதியாகப் பெற்று வந்த மஹார்த்தத்தை ஸ்வாமி யெம்பெருமானார்–எவ்விடத்திலாவது பதிய வைத்திருப்பதுண்டோவென்று சிலர் கேட்பதுண்டு. அவர்களுக்குச் சொல்லுகிறோம்;

664. 'சதுர்விதா பஜந்தே மாம்" என்கிற இந்த கீதா ச்லோகத்தின் பாஷ்யத்தில் ஜ்ஞாநீ ச– 'இதஸ் த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே பராம்' இத்யாதிநா அபிஹித பகவச் சேஷதைகரஸாத்ம ஸ்வரூபவித்" என்றருளியுள்ளார். விஷ்ணு தத்த்வத்தையறிந்தவனை ஜ்ஞாநி யென்றார் சங்கராசாரியர்; ஜீவாத்ம ஸ்வரூபத்தை யறிந்தவனை ஜ்ஞாநி யென்கிறாா நம் ஸ்வாமி. அந்த ஜீவாத்மாவுக்கு விசேஷணமிடுகிறார் (பகவச்சேஷதைகரஸ) என்று. ப்ரஹ்மஸூத்ரகாரர் "ஜ்ஞோத ஏவ" என்கிற ஸூத்ரத்தினால் ஆத்மாவுக்கு ஜ்ஞாத்ருத்வத்தை ஸ்தாபித்திருக்கிறார். ஜ்ஞாதா என்பதற்கு 'அறியுமவன்' என்று பொருள். எதை அறியுமவன்? என்று கேள்வி வரில், தான் பகவச்சேஷபூதன் என்பதையறியுமவன் என்று பொருள் சொல்ல வேண்டுமென்பது ஸ்வாமி திருவுள்ளம் போலும். "பகவச்சேஷதைக ரஸாத்ம ஸ்வரூப" என்னும் சொல்தொடர் இதரர்களின் க்ரந்தங்களொன்றிலும் வர்ஷசதம் தேடினாலும் கிடைக்க மாட்டாது. இப்படி விலக்ஷணமான ஸ்ரீஸூக்தியை அஸக்ருத் அருளிச் செய்திருக்கின்ற நம் ஸ்வாமி, திருக்கோட்டியூர் நம்பி பக்கலில் நின்றும் ஆழ்வான் கொணர்ந்த நிதியைப் பெற்றவரென்பதில் ஸந்தேஹமுண்டோ?

665. இதற்கடுத்த (7–17) "தேஷாம் ஜ்ஞாநீ நித்யயுக்த:" என்னும் ச்லோகத்தின் உத்தரார்த்தம் "ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோத்யர்த்தமஹம் ஸ ச மம ப்ரிய:" என்று க்ரமாந்வயத்தையே திருவுள்ளம்பற்றி பாஷ்யமிட்டருளினார். இவ்வந்வயக்ரமத்தில் ஞானிக்குத் தன்னிடத்தில் ப்ரிதி அதிகம் என்றதாக விளங்குகிறது. உண்மையில், பகவானிடத்தில் ஞானி வைத்திருக்கும் ப்ரிதி தான் அதிக மென்னத்தகும். ஆகவே இந்த ச்லோகத்தில் (அத்யர்த்தம்) என்பதை 'அஹம் ப்ரிய:' என்பதிலே கூட்டுவதைவிட 'மம ப்ரிய:' என்பதில் கூட்டுவது ரஸவத்தரமென்று திருவுள்ளம் பற்றின ஸ்வாமி ஸ்ரீபாஷ்யத்தில் சரமஸூத்ரமான "அநாவ்ருத்தி ஸூத்ரத்தின் பாஷ்யத்தில் "அத்யர்த்த ப்ரியம் ஜ்ஞாநிநம்

லப்த்வா" என்கிற அநர்க்கமான வாக்யத்தினால் அந்த அந்வய க்ரமத்தையும் காட்டியருளினார். அந்த ஸ்ரீபாஷ்யஸூக்தி யின்படி ப்ரக்ருத கீதாச்லோகாந்வயக்ரமம்; "ஜ்ஞாநிந: அஹம் ப்ரிய:; ஸசமம அத்யர்த்தம் ப்ரிய:" என்றிங்ஙனே கொள்ளவேணும். அன்றிக்கே, (அத்யர்த்தம்) என்பதை மத்யமதீபந்யாயேந முன்னும் பின்னும் அந்வயிப்பதாகிற இரண்டு அந்வயக்ரமமும் கீதாபாஷ்யஸம்மதமே யென்று கொள்ளவுங் குறையில்லை.

666. (ஜ்ஞாநீ து ஆத்மைவ மே மதம்) என்றது அற்புதமான ஸ்ரீஸூக்தி, ஞானிகளிடத்தில் கண்ணபிரானுக்குள்ள மிகச் சிறந்த மதிப்பைக் காட்டுமிது, ஞானியைத் தனக்கு ஆத்மாவென்றால் பரமாத்மாவான தான் சரீரஸ்தானத்தில் நிற்க வேண்டியவனாகிறான். ஞானிக்குத் தான் ஸர்வாத்மநா விதேயன் என்றதாகிறது. "என்னதுன்னதாவியிலே அறிவாராத்மாவென்று அவன் மதம் தோன்றும்" என்ற ஆசார்யஹ்ருதய சூர்ணையின் மணவாளமாமுனிகளின் இங்ஙனே வியாக்கியானம் ஸேவிக்கத்தக்கது.

667. (வாஸுதேவஸ் ஸர்வம்) என்பதற்கு – காண்கின்ற இவையெல்லாம் வாஸுதேவன் – என்று நினைப்பவன் மஹாத்மா – என்றுரைத்தார் சங்கராசாரியர். "உண்ணுஞ்சோறு பருகநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன்" என்கிற ஆழ்வாருளிச் செயலை யடியொற்றி "தாரகபோஷக போக்யாதிகம் ஸர்வம் மம வாஸுதேவ:" என்றிருப்பவன் மஹாத்மா– என்று பொருள் திருவுள்ளம் பற்றினார் எம்பெருமானார். (அயமேவ அர்த்த:) என்றும் வற்புறுத்தியருளிச் செய்தார் (இதம் ஸர்வம் வாஸுதேவ:) என்று பொருளன்று. (மம ஸர்வம் வாஸுதேவ:) என்றே பொருள்.

668. எட்டாமத்யாயத்தில் முன்னம் ஒரு மஹாநிதி காட்டுவோம். ஸம்ஸாரிகளின் விஷயோபபோக ப்ரவ்ருத்தியானது நிஷித்த விஷயபோகமென்றும் விஹிதவிஷயபோக மென்றும் இரண்டாகப் பிரிக்கப்படுகிறது. சாஸ்த்ரங்ளில் கர்ஹிக்கப்பட்ட பரதார போகமானது விஹித விஷய போகமாகவும் கூறப்படுகிறது. விஹித விஷயபோகமானது க்ருஹஸ்தாச்ரம தர்மமாகையாலே ப்ராப்தமென்று கொள்ளப்படுகிறது. ஆனால் அநந்யார்ஹ சேஷத்வ அநந்ய சரணத்வங்களோடு கூட அநந்யபோக்யத்வ மென்கிற விலக்ஷணமான தன்மையையும் பெற்றிருக்கின்ற விசேஷாதிகாரிக்கு இந்த விஹித விஷயபோகமும் அருவருக்கத் தக்கதாய் த்யாஜ்யமேயாகு மென்பது ஸத்ஸம்ப்ரதாய நிஷ்டர்களின் ஸித்தாந்தம். சாஸ்த்ரங்களில் ஸ்வதார போகம் நியமமாக விதிக்கப்பட்டு, அது தவிர்ந்தால் தோஷமும் பிரதிபாதிக்கப்பட்டிருக்கையாலே விஹித விஷய நிவ்ருத்தி அசாஸ்த்ரீயமென்று பிறருடைய கொள்கை காண்கிறது. ஸ்ரீவசநபூஷணத்தில் இரண்டு மூன்றிடங்களில் உத்தமாதிகாரிக்கு விஹிதவிஷய நிவ்ருத்தியைத் தன்னேற்றமாக வருளிச் செய்கிறார் பிள்ளைலோகாசார்யர். அவ்விஷயம் இவ்விடத்தில் (8–3) ச்லோகத்தின் பாஷ்யத்தில் ஸ்பஷ்டமாக அருளிச் செய்யப்படுகிறது. அதனை விவரிப்போமிங்கு.

669. கீழ் ஏழாவது அத்யாயத்தின் முடிவில் கண்ணபிரான் "ஜராமரண மோக்ஷாய" என்கிற இருபத்தொன்பதாம் ச்லோகத்தில் "தே ப்ரஹ்ம தத் விது: க்ருத்ஸ்நமத்யாத்மம்

கர்ம சாகிலம்" என்று ஒரு வார்த்தை சொன்னான். அது கேட்ட அர்ஜுநன் அந்த வார்த்தைக்கு உண்மையான பொருளைத் தெரிந்து கொள்ள வேண்டிக் கண்ணனையே கேள்வி கேட்கிறான். எட்டாம் அத்யாயத்தின் 1, 2 ச்லோகங்களினால். "கிம் தத் ப்ரஹ்ம கிமத்யாத்மம் கிம் கர்ம புருஷோத்தம!' என்று தொடங்கிக் கேள்விகள் உள்ளன. மூன்றாவது ச்லோகம் தொடங்கி கண்ணபிரானுடைய விடை வெளிவருகின்றது. கிம் கர்ம? என்ற கேள்விக்குக் கண்ணனுடைய விடை "பூத பாவோத் பவகரோ விஸர்க்க: கர்மஸம்ஜ்ஞித:" என்பது. இங்கு விஷயமென்னவென்றால், கேண்மின்.

670. சிலவற்றை அறியவேண்டும் என்று பகவான் நியமித்து வருகையில் கருமத்தை அறிய வேண்டும் என்று சொல்லியிருந்ததனால் கருமமென்றால் எது? என்று அர்ஜுநன் கேட்க நேர்ந்தது. அதற்கு பகவான் விடை கூறியுள்ளார். ஒருவன் ஒன்றை யறிவதானது, பற்றுவதற்காகவும் ஆகலாம். விடுவதற்காகவும் ஆகலாம். நல்லதாயிருந் தால் பற்றுவது, கெட்டதாயிருந்தால் விடுவது. ஆகவே நல்லதையும் தெரிந்து கொள்ள வேண்டும், கெட்டதையும் தெரிந்து கொள்ள வேண்டும். இங்கே தெரிந்து கொள்ள வேண்டியதாகக் கூறப்பட்ட கருமம் நல்லதன்று. கெட்டது—என்பதாக பகவானுடைய விடையினால் தெரிகின்றது. "பூதபாவோத்பவகரோ விஸர்க: கர்ம ஸம்ஜ்ஞித:" என்பதற்கு நம்முடைய ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச் செய்திருக்கிற அர்த்தம் வருமாறு:– "பூதபாவ:– மநுஷ்யாதிபாவ:, தனுத்பவகரோ யோ விஸர்க:, 'பஞ்சம்யா மாஹுதாவாப: புருஷவசஸோ பவந்தீதி ச்ருதிஸித்தோ யோஷித் ஸம்பந்தஜ:; ஸ: கர்மஸஞ்ஜ்ஞித:; தச்ச அகிலம் ஸாநுபந்தம் உத்வேஜநீயதயா பரிஹரணீயதயா ச முமுக்ஷுபி: ஜ்ஞாதவ்யம். பரிஹரணீயதா ச அநந்தர மேவ வக்ஷ்யதே "யதிச்சந்தோ ப்ரஹ்மசர்யம் சரந்தீதி" என்பது கீதாபாஷ்ய ஸ்ரீஸூக்தி. இதன் கருத்தாவது—ஸ்த்ரீ புருஷஸம்யோக மென்பது தான் இங்கே கருமமென்கிறது. இது மிகவும் அருவருக்கத் தக்கதாகையால் விடத்தக்கதாக இதனையறிய வேண்டும். இதை விடவேண்டுமென்பது மேலே பதினோராவது சுலோகத்திலும் காட்டப்படுகிறது என்பதாம். இதனால் நாம் தெரிந்து கொள்வது க்ருஹஸ்தாச்ரம தருமமாக விஹித விஷயபோகம் ப்ராப்தமே யானாலும் அது விசிஷ்டாதிகாரிக்கு ஜுகுப்ஸநீயமேயென்று. ஆகவே இவ்விஷயத்தில் ஸ்ரீவசநபூஷண ஸித்தாந்தம் நிரவத்யமென்றுணர்க. இவ்விடத்தில் சங்கர பாஷ்யத்திலோ மத்வபாஷ்யத்திலோ இவ்வர்த்தம் காண ப்ரஸக்தியேயில்லை. இனி, மேலே சில ச்லோகங்களை யநுபவிப்போம்.

671. பதினான்காவது சுலோகமாகிய "அநந்யசேதாஸ் ஸததமித்யாதியின் ஸ்வாமி பாஷ்யம் மிகவற்புதம்; அவ்விடத்துப் பங்க்திகள் ஒவ்வொருவராலும் கண்டபாடம் செய்து கொள்ளத்தக்கவை. "தத்வியோகம் அஸஹமாந: அஹமேவ தம் வருணே; மத்ப்ராப்த்யநுகுண—உபாஸநவிபாகம் தத்விரோதிநிரஸநம் அத்யர்த்த மத்ப்ரியத்வாதிகஞ்ச அஹமேவ ததாமீத்யர்த்த:. யமே வைஷ வ்ருணுதே தேந லப்ய: இதி ஹி ச்ருயதே" என்னுமிந்த ஸ்ரீஸூக்திகள் ஏகதேசிகளுக்குண்டான கலக்கங்களை அறவே போக்கக் கூடியவை. இங்கு வேதாந்த தேசிகன் தாத்பர்ய சந்த்ரிகையில்— "உக்தார்த்தஸ்ய அதிவாத மாத்ரத்வஸங்காவ்யுதாஸாய ச்ருதி மூலதாமாஹ – யமேவேதி." என்றருளிச் செய்திருக்கும்

ஸ்ரீஸூக்திகளும் பரம போக்யமானவை. "நாயமாத்மா ச்ருதியின் அர்த்தத்தில் ஆந்தராளிகர்கள் கலங்கிப் பேசுமவையும் எழுதுமவையும் நிர்மூலங்க ளென்று நிர்ணயிக்கப்பட்டதாயிற்று.

672. "மாமுபேத்ய புநர்ஜந்ம" என்றும் "ஆப்ரஹ்மபுவநால்லோகா: புநராவர்த்திந:" என்றுமுள்ள 15,16 சுலோகங்கள்– 'முக்தாத்மா பரமபுருஷனோடு ஐக்யமடைந்து விடுவது தான் முக்தி" என்கிற அத்வைதிகளின் வாதத்தை அடியறுக்குமவை. (எங்ஙனே யென்னில்:) பரப்ரஹ்மத்தோடு ஐக்யமடைந்துவிட்டால் புநராவ்ருத்திசங்காநிஷேதங்கட்கு ப்ரஸக்தியேயில்லாமையாலே அப்ரஸக்த ப்ரதிஷேதம் பண்ணினதாக ஆகுமன்றோ.

673. இனி ஒன்பதாமத்யாயத்தில் ஸாரமானதைச் சிறிது அனுபவிப்போம். "பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி, ததஹம் பக்த்யுபஹ்ருதம் அச்நாமி ப்ரயதாத்மந:" (9–26). என்கிற ச்லோகத்தினால் கண்ணபிரான் தான் ஆராதனைக்கெளியன் என்னுமிடத்தை வெகு அழகாக அருளிச் செய்கிறான். இதர தெய்வங்களிற் காட்டில் எம்பெருமான் எத்தனையோ விதங்களால் நெடுவாசி பெற்றிருப்பது போல இவ்வகையாலும் நெடுவாசி பெற்றிருக்கிறான். 'ஆடு பலி கொடு, கோழி பலி கொடு' என்று அருந்தேவைகளையிட்டு மஹாபரிச்ரம ஸாத்யங்களான ஆராதனைகளை அபேக்ஷித்திருக்கும் தேவதாந்தரங்கள். எம்பெருமான்படியோ அப்படியன்று. நாம் இட்டது கொண்டு த்ருப்தியடைவதே அவனது ஸ்வரூபம். எம்பெருமானுக்கு நாம் சில பொருள்களை ஸமர்ப்பிப்பதானது அவனுக்கு ஏற்கெனவே யில்லாததொரு பூர்த்தியை யுண்டாக்குவதற்காகவா? நாம் ஸத்தை பெறுவதற்காகவா? என்று ஆராய வேண்டும். அவனோ அவாப்தஸமஸ்த காமன்; அன்னவன் குறையுற்றிருந்து நாமிட்டது கொண்டு பூர்த்தியடைகிறா னென்பது அஸம்பாவிதம். கடலிலே மேகம் வர்ஷிப்பது கடல் நிரம்புவதற்காகவன்றே. "வர்ஷ பிந்தோரிவாப்தெள ஸம்பந்தாத் ஸ்வாத்மலாப:" என்று (ஸ்ரீரங்கராஜஸ்தவே) பட்டர் அருளிச் செய்தபடியே மேகம் தான் ஸத்தை பெறுவதற்காகவே கடலிலும் வர்ஷிக்கின்ற தென்பது பரமார்த்தம். அது போலவே ஸ்வத: பரிபூர்ணனான பரமபுருஷன் திறத்தில் நாம் சில பொருள்களை ஸமர்ப்பிப்பது நமது ஸ்வரூபம் நிறம் பெறுவதற்கேயன்றி அவனை நிரப்புவதற்கன்று என்பது வெளிப்படை. ஆவே நாம் சிறந்த பெரும் பொருள்களைத் தேடியிட வேணுமென்பது இல்லை. இடுகிற பொருள் எதுவாயினும் இடுவது ப்ரேம பூர்வமாக வேணுமென்பது ஒன்றிலேயே நியதியுள்ளது.

674. திருமங்கை ஆழ்வார் "கள்ளார் துழாயும் கணவலரும் கூவிளையும் முள்ளார் முளரியுமாம்பலுமுன் கண்டக்கால் புள்ளாயோரேனமாய்ப்புக் கிடந்தான் பொன்னடிக் கென்று, உள்ளாதாருள்ளதை யுள்ளமாக் கொள்ளோமே" என்று பெரியதிருமொழியில் (11–7–6) அருளிச் செய்கிறார். திருத்துழாய் முதலிய எந்த வஸ்துவைக் கண்டாலும் 'இது எம்பெருமானுக்குச் சாத்தத் தக்கது' என்று அத்யவஸாயங் கொள்ளாதாருடைய நெஞ்சை நெஞ்சாகக் கொள்ள மாட்டோம் (நஞ்சாகவே கொள்ளுவோம்) என்று உரைக்கின்ற இப்பாட்டில், எம்பெருமானுக்கே உரித்தான திருத்துழாயோடு விஜாதீய வஸ்துக்களும் கூட்டியெடுக்கப் பட்டிருத்தலால், எம்பெருமானுக்கு ஸமர்ப்பிக்கவேணும் என்கிற சுத்த

கர்ம சாகிலம்" என்று ஒரு வார்த்தை சொன்னான். அது கேட்ட அர்ஜுநன் அந்த வார்த்தைக்கு உண்மையான பொருளைத் தெரிந்து கொள்ள வேண்டிக் கண்ணனையே கேள்வி கேட்கிறான். எட்டாம் அத்யாயத்தின் 1, 2 ச்லோகங்களினால். "கிம் தத் ப்ரஹ்ம கிமத்யாத்மம் கிம் கர்ம புருஷோத்தம!' என்று தொடங்கிக் கேள்விகள் உள்ளன. மூன்றாவது ச்லோகம் தொடங்கி கண்ணபிரானுடைய விடை வெளிவருகின்றது. கிம் கர்ம? என்ற கேள்விக்குக் கண்ணனுடைய விடை "பூத பாவோத் பவகரோ விஸர்க்க: கர்மஸம்ஜ்ஞித:" என்பது. இங்கு விஷயமென்னவென்றால், கேண்மின்.

670. சிலவற்றை அறியவேண்டும் என்று பகவான் நியமித்து வருகையில் கருமத்தை அறிய வேண்டும் என்று சொல்லியிருந்ததனால் கருமமென்றால் எது? என்று அர்ஜுநன் கேட்க நேர்ந்தது. அதற்கு பகவான் விடை கூறியுள்ளார். ஒருவன் ஒன்றை யறிவதானது, பற்றுவதற்காகவும் ஆகலாம். விடுவதற்காகவும் ஆகலாம். நல்லதாயிருந் தால் பற்றுவது, கெட்டதாயிருந்தால் விடுவது. ஆகவே நல்லதையும் தெரிந்து கொள்ள வேண்டும், கெட்டதையும் தெரிந்து கொள்ள வேண்டும். இங்கே தெரிந்து கொள்ள வேண்டியதாகக் கூறப்பட்ட கருமம் நல்லதன்று. கெட்டது–என்பதாக பகவானுடைய விடையினால் தெரிகின்றது. "பூதபாவோத்பவகரோ விஸர்க: கர்ம ஸம்ஜ்ஞித:" என்பதற்கு நம்முடைய ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச் செய்திருக்கிற அர்த்தம் வருமாறு:– "பூதபாவ:– மநுஷ்யாதிபாவ:, தது த்பவகரோ யோ விஸர்க:, 'பஞ்சம்யா மாஹுதாவாப: புருஷவசஸோ பவந்தீதி ச்ருதிஸித்தோ யோஷித் ஸம்பந்தஜ:; ஸ: கர்மஸஞ்ஜ்ஞித:; தச்ச அகிலம் ஸாநுபந்தம் உத்வேஜநீயதயா பரிஹரணீயதயா ச முமுக்ஷுபி: ஜ்ஞாதவ்யம். பரிஹரணீயதா ச அநந்தர மேவ வக்ஷ்யதே "யதிச்சந்தோ ப்ரஹ்மசர்யம் சரந்தீதி" என்பது கீதாபாஷ்ய ஸ்ரீஸூக்தி. இதன் கருத்தாவது–ஸ்த்ரீ புருஷஸம்யோக மென்பது தான் இங்கே கருமமென்கிறது. இது மிகவும் அருவருக்கத் தக்கதாகையால் விடத்தக்கதாக இதனையறிய வேண்டும். இதை விடவேண்டுமென்பது மேலே பதினோராவது சுலோகத்திலும் காட்டப்படுகிறது என்பதாம். இதனால் நாம் தெரிந்து கொள்வது க்ருஹஸ்தாச்ரம தருமமாக விஹித விஷயபோகம் ப்ராப்தமே யானாலும் அது விசிஷ்டாதிகாரிக்கு ஜுகுப்ஸநீயமேயென்று. ஆகவே இவ்விஷயத்தில் ஸ்ரீவசநபூஷண ஸித்தாந்தம் நிரவத்யமென்றுணர்க. இவ்விடத்தில் சங்கர பாஷ்யத்திலோ மத்வபாஷ்யத்திலோ இவ்வர்த்தம் காண ப்ரஸக்தியேயில்லை. இனி, மேலே சில ச்லோகங்களை யநுபவிப்போம்.

671. பதினான்காவது சுலோகமாகிய "அநந்யசேதாஸ் ஸததமித்யாதியின் ஸ்வாமி பாஷ்யம் மிகவற்புதம்; அவ்விடத்துப் பங்க்திகள் ஒவ்வொருவராலும் கண்டபாடம் செய்து கொள்ளத்தக்கவை. "தத்வியோகம் அஸஹமாந: அஹமேவ தம் வருணே; மத்ப்ராப்த்யநுகுண–உபாஸநவிபாகம் தத்விரோதிநிரஸநம் அத்யர்த்த மத்ப்ரியத்வாதிகஞ்ச அஹமேவ ததாமீத்யர்த்த:. யமே வைஷ வ்ருணுதே தேந லப்ய: இதி ஹி ச்ருயதே" என்னுமிந்த ஸ்ரீஸூக்திகள் ஏகதேசிகளுக்குண்டான கலக்கங்களை அறவே போக்கக் கூடியவை. இங்கு வேதாந்த தேசிகன் தாத்பர்ய சந்த்ரிகையில்– "உக்தார்த்தஸ்ய அதிவாத மாத்ரத்வஸங்காவ்யுதாஸாய ச்ருதி மூலதாமாஹ – யமேவேதி." என்றருளிச் செய்திருக்கும்

ஸ்ரீஸூக்திகளும் பரம போக்யமானவை. "நாயமாத்மா ச்ருதியின் அர்த்தத்தில் ஆந்தராளிகர்கள் கலங்கிப் பேசுமவையும் எழுதுமவையும் நிர்மூலங்க ளென்று நிர்ணயிக்கப்பட்டதாயிற்று.

672. "மாமுபேத்ய புநர்ஜந்ம" என்றும் "ஆப்ரஹ்மபுவநால்லோகா: புநராவர்த்திந:" என்றுமுள்ள 15,16 சுலோகங்கள்– 'முக்தாத்மா பரமபுருஷனோடு ஐக்யமடைந்து விடுவது தான் முக்தி" என்கிற அத்வைதிகளின் வாதத்தை அடியறுக்குமவை. (எங்ஙனே யென்னில்:) பரப்ரஹ்மத்தோடு ஐக்யமடைந்துவிட்டால் புநராவ்ருத்திசங்காநிஷேதங்கட்கு ப்ரஸக்தியேயில்லாமையாலே அப்ரஸக்த ப்ரதிஷேதம் பண்ணினதாக ஆகுமன்றோ.

673. இனி ஒன்பதாமத்யாயத்தில் ஸாரமானதைச் சிறிது அனுபவிப்போம். "பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி, ததஹம் பக்த்யுபஹ்ருதம் அச்நாமி ப்ரயதாத்மந:" (9–26). என்கிற ச்லோகத்தினால் கண்ணபிரான் தான் ஆராதனைக்கெளியன் என்னுமிடத்தை வெகு அழகாக அருளிச் செய்கிறான். இதர தெய்வங்களிற் காட்டில் எம்பெருமான் எத்தனையோ விதங்களால் நெடுவாசி பெற்றிருப்பது போல இவ்வகையாலும் நெடுவாசி பெற்றிருக்கிறான். 'ஆடு பலி கொடு, கோழி பலி கொடு' என்று அருந்தேவைகளையிட்டு மஹாபரிச்ரம ஸாத்யங்களான ஆராதனைகளை அபேக்ஷித்திருக்கும் தேவதாந்தரங்கள். எம்பெருமான்படியோ அப்படியன்று. நாம் இட்டது கொண்டு த்ருப்தியடைவதே அவனது ஸ்வரூபம். எம்பெருமானுக்கு நாம் சில பொருள்களை ஸமர்ப்பிப்பதானது அவனுக்கு ஏற்கெனவே யில்லாததொரு பூர்த்தியை யுண்டாக்குவதற்காகவா? நாம் ஸத்தை பெறுவதற்காகவா? என்று ஆராய வேண்டும். அவனோ அவாப்தஸமஸ்த காமன்; அன்னவன் குறையுற்றிருந்து நாமிட்டது கொண்டு பூர்த்தியடைகிறா னென்பது அஸம்பாவிதம். கடலிலே மேகம் வர்ஷிப்பது கடல் நிரம்புவதற்காகவன்றே. "வர்ஷ பிந்தோரிவாப்தௌ ஸம்பந்தாத் ஸ்வாத்மலாப:" என்று (ஸ்ரீரங்கராஜஸ்தவே) பட்டர் அருளிச் செய்தபடியே மேகம் தான் ஸத்தை பெறுவதற்காகவே கடலிலும் வர்ஷிக்கின்ற தென்பது பரமார்த்தம். அது போலவே ஸ்வத: பரிபூர்ணனான பரமபுருஷன் திறத்தில் நாம் சில பொருள்களை ஸமர்ப்பிப்பது நமது ஸ்வரூபம் நிறம் பெறுவதற்கேயன்றி அவனை நிரப்புவதற்கன்று என்பது வெளிப்படை. ஆவே நாம் சிறந்த பெரும் பொருள்களைத் தேடியிட வேணுமென்பது இல்லை. இடுகிற பொருள் எதுவாயினும் இடுவது ப்ரேம பூர்வமாக வேணுமென்பது ஒன்றிலேயே நியதியுள்ளது.

674. திருமங்கை ஆழ்வார் "கள்ளார் துழாயும் கணவலரும் கூவிளையும் முள்ளார் முளரியுமாம்பலுமுன் கண்டக்கால் புள்ளாயோரேனமாய்ப்புக் கிடந்தான் பொன்னடிக் கென்று, உள்ளாதாருள்ளதை யுள்ளமாக் கொள்ளோமே" என்று பெரியதிருமொழியில் (11–7–6) அருளிச் செய்கிறார். திருத்துழாய் முதலிய எந்த வஸ்துவைக் கண்டாலும் 'இது எம்பெருமானுக்குச் சாத்தத் தக்கது' என்று அத்யவஸாயங் கொள்ளாதாருடைய நெஞ்சை நெஞ்சாகக் கொள்ள மாட்டோம் (நஞ்சாகவே கொள்ளுவோம்) என்று உரைக்கின்ற இப்பாட்டில், எம்பெருமானுக்கே உரித்தான திருத்துழாயோடு விஜாதீய வஸ்துக்களும் கூட்டியெடுக்கப் பட்டிருத்தலால், எம்பெருமானுக்கு ஸமர்ப்பிக்கவேணும் என்கிற சுத்த

பக்தியுடனே கொள்ளுகிற புஷ்பம் எதுவாயிருந்தாலும் குற்றமில்லை; ''செண்பக மல்லியோடு செங்கழுநீர் இருவாட்சி'' என்று சிறப்பித்துச் சொல்லப்படுகிற புஷ்பங்களாகவே யிருக்க வேணுமென்கிற நியதியில்லை, ஏதேனும் ஒரு புஷ்பமாக இருக்கலாமென்பதும், பக்திப் பெருங்காதலே முக்கியமானதென்பதும் தோற்றுவிக்கப்பட்டது.

675. "பத்ரம் புஷ்பம்" என்று மேலே யெடுத்த கீதா ச்லோகமும், 'இடுகிற பொருள் வாசி பார்ப்பதில்லை; இடுகிறவன் நெஞ்சில் ஈரமுள்ளதா என்பதொன்றையே பார்ப்பேன்' என்று ஸ்பஷ்டமாகக் காட்டுகின்றது. பூர்வார்த்தத்தில் 'யோ மே பக்த்யா ப்ரயச்சதி' என்று சொல்லி வைத்து உத்தரார்த்தத்திலும் 'தத் பக்த்யுபஹ்ருதம்' என்று மீண்டும் சொல்லியிருக்கிற தல்லவோ? தத் என்றாலே போதுமாயிருக் 'பக்த்யுபஹ்ருதம்' என்றது அநாவச்யகமே யன்றோ. தாத்பர்யசந்த்ரிகையில் இஃது எடுத்துக் காட்டப்படுகிறது 'பக்த்யுபஹ்ருத மிதி புந: கீர்த்தநம் பகவதாதரணீயத்வே ஹேதுரயமேவேதி ஜ்ஞாபநார்த்தம்'' என்று.

676. இனி, பத்து பதினொன்று ஆகிய இரண்டத்யாயங்களின் ஸாரங்களைச் சேர்த்து அநுபவிப்போம். பத்தாவது அத்யாயத்திற்கு விபூத்யத்யாயமென்று பெயர்; பதினோராமத்யாயத்திற்கு விச்வரூபாத்யாய மென்று பெயர்; பத்தாமத்யாயத்திற்கு ஸ்வாமி எம்பெருமானாருடைய அவதாரிகை வருமாறு: – கீழே பக்தியோகம் ஸாங்கமாக விவரித்துரைக்கப்பட்டது; இப்பொழுது, பக்தியுண்டாவதற்காகவும் அது வளருவதற்காகவும் எம்பெருமானுடைய (தன்னுடைய) நிகரற்ற ஐச்வர்யம் முதலிய திருக்கல்யாண குணங்களின் திரள் அளவு கடந்திருக்கிறபடியையும், உலகமெல்லாம் தனக்கு சரீரமாயிருக்கையாலே அவனுருவாய் அவன் ஏவச் செல்லும்படியா யிருக்கின்றமையும் விஸ்தரித்துச் சொல்லப்படுகின்றன – என்று. இடையிடையில் அர்ஜுநன் கேள்வி கேட்டால் அதற்குமேல் கண்ணன் விடை கூறுவது என்கிற முறையை இவ்விடத்தில் வைத்துக் கொள்ளாமல் தானாகவே ''பூய ஏவ மஹாபாஹோ! ச்ருணு மே பரமம் வச:'' (10–1) என்று 'மீண்டும் நான் சொல்லுவதைக் கேளப்பா!' என்று ஆரம்பித்துச் சொல்லுகிறான்; இப்படி அப்ருஷ்டோத்தரமாககச் சொல்லுவது கூடுமோ வென்று சங்கிக்க இடமில்லாதபடி உத்தரார்த்தத்தில் 'யத் தேஹம் ப்ரீயமாணாய வக்ஷ்யாமி ஹிதகாம்யயா'' என்று, ச்ரோதாவான அர்ஜுநனுடைய முகத்தில் ப்ரீதி விசேஷத்தைக் கண்டு இவனுக்கு இன்னமும் விரிவாகச் சொல்லியேயாக வேண்டுமென்று திருவுள்ளம் பற்றிச் சொல்லுவதாகக் காட்டப்படுகிறது. விஷயம் கேட்கிறவன் சிறிது வெறுப்போடிருப்பதாகத் தெரியவந்தாலும் வக்தாவுக்கு மேன்மேலும் சொல்ல வாயெழும்பாது; ச்ரோதா ப்ரஸந்நமுகனாகத் தென்பட்டால் அபூர்வமான விஷயங்களும் 'என்னைக் கொள் என்னைக் கொள்' என்று முற்பட்டு நினைவுக்கு வந்து நிற்கும். அவற்றையெல்லாம் சொல்லியே தீர வேண்டியதாகும். இங்கு 10,11 ஆகிய இரண்டத்யாயங்களிலும் சொல்லப்புகுகிற விஷயங்கள் கீதா சாஸ்த்ரத்தினுள் ஸாரங்களாயிருப்பதால் இவற்றைச் சொல்லத் தொடங்கும்போதே அர்ஜுநன் தன்னுடைய அவாவை அதிகமாகக் காட்டினானென்பது "ப்ரீயமாணாய தே" என்பதனால் விளக்கப்படுகிறது. அவன்

ப்ரீதனாகத் தென்படாமற் போனாலும் கூட, அவனுடைய ஹிதத்தை யுத்தேசித்துத் தான் சொல்லியே தீரப் போகிறதாகக் காட்டப்படுகிறது 'வக்ஷ்யாமி ஹிதகாம்யயா' என்பதனால். ஆக, இவ்விரண்டத்யாயங்க ளிலும் தெரிவிக்கப்படுகிற அர்த்தங்கள் ப்ரியங்களுமாய் ஹிதங்களுமாயிருக்கும் என்று ஆரம்பத்திலேயே அறிவிக்கப்பட்ட தாயிற்று. (10–19).

677. "ஹந்த தே கதயிஷ்யாமி விபூதிராத்மநச் சுபா:, ப்ராதாந்யத: குருச்ரேஷ்ட! நாஸ்த்யந்தோ விஸ்தரஸ்ய மே" என்று, "அர்ஜுநா! என்னுடைய மிகவழகிய விபூதிகளை உனக்குச் சொல்லுகிறேன்; எல்லாவற்றையும் சொல்லுவதென்றால் அவற்றுக்கு முடிவே கிடையாமையாலே சொல்லப் போகாது; உன்னால் கேட்கவும் போகாது; ஆகையாலே முக்கியமாகச் சிலவற்றைச் சொல்லுகிறேன் கேளாய்" என்று சொல்லி, (21) "ஆதித்யாநாமஹம் விஷ்ணு:" என்று தொடங்கி முப்பத்தொன்பதாவது ச்லோகமளவும் சொன்னான். இவையெல்லாம் கேட்ட அர்ஜுநன் (11–1ல்) "யத் த்வயோக்தம் வசஸ் தேந மோஹோயம் விகதோ மம" என்று, 'கண்ணா நீ சொன்னவையெல்லாம் கேட்டு என்னுடைய மோஹமெல்லாம் தொலைந்தது என்று சொல்லி, (11–3ல்) "த்ரஷ்டுமிச்சாமி தே ரூபமைச்வரம் புருஷோத்தம" என்று பகவானுடைய அஸாதாரண ரூபத்தைக் காண்பதிலே தனக்கு விருப்பமிருப்பதாக வெளியிட்டான். அவனுக்குக் கண்ணபிரான் விச்வரூபம் காட்டியருளத் திருவுள்ளம் பற்றி அதை ஊனக் கண்ணாலே காண முடியாதாகையால் அது காண்கைக்காக திவ்ய சக்ஷுஸ்ஸைக் கொடுத்தருள விரும்பி, 'திவ்யம் ததாமி தே சக்ஷு: பச்ய மே யோகமைச்வரம்' என்று சொல்லி திவ்ய சக்ஷுஸ்ஸைக் கொடுத்து விச்வரூபத்தை அற்புதமாகக் காட்டியருளினான். ஆக, பத்தாமத்யாயத்தில் விபூதி விஸ்தாரத்தைப் பேசி, பதினோராமத்யாயத்தில் விச்வரூபத்தைக் காட்டியருளினானாயிற்று. இவையெல்லாம் எம்பெருமானுடைய உடைமைகள். இவை அஸத்யமென்பது அத்வைதிகளின் கருத்து. உண்மையாக அஸத்யமாகில், இவற்றைக் கண்ட அர்ஜுநன் முடிவாகச் சொல்லுகிற வார்த்தை அப்படியிருக்க முடியாது. அந்த வார்த்தை ஏனென்னில்: (11–40) 'அநந்த வீர்யாமிதவிக்ரமஸ்த்வம் ஸர்வம் ஸமாப்நோஷி ததோஸி ஸர்வ:' என்பது. இவ்விடத்திலே நம் ஸ்வாமியினுடைய பாஷ்யத்திலுள்ள ஸ்ரீஸூக்தியை மேலே யெடுத்துக் காட்டுவோம்; அந்த ஸ்ரீஸூக்தியாகட்டும்; மூலத்தை மாத்திரமே பார்ப்போம்; பார்க்குமளவில் "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம", "ஐததாத்ம்யமிதம் ஸர்வம்", "தத்த்வமஸிச்வேதகேதோ" என்பன முதலான உபநிஷத்வாக்யங்களை விசிஷ்டாத்வைதிகள் எவ்விதமாக நிர்வஹிக்கிறார்களோ அவ்விதமாகத் தான் நிர்வஹிக்க வேண்டும் என்பது கீதாசார்ய ஸம்மதமாகத் தெரிகிறது. மேலே குறித்த ச்ருதி வாக்யங்களை நம்மவர்கள் நிர்வஹிக்கும் ப்ரகாரத்தை பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவ–உத்தரசதகத்தில் (23) 'ஸ்தித்யுத்பத்தி ப்ரவ்ருத்தி' இத்யாதி ச்லோகத்தில் சுருங்கக் காட்டியுள்ளார். அங்கு எம்முடைய வியாக்கியானத்தில் விரிவு காணலாம். அந்த ச்லோகத்தின் உத்தரார்த்தத்தில் மேலே குறித்த உபநிஷத் வாக்யங்கள் மூன்றையும் அடைவே யெடுத்துக் காட்டி "ஏவமாத்யா வ்யாக்யாதா ரங்கதாமப்ரவண! விஜயிபிர்வைதிகைஸ் ஸார்வபௌமை:" என்று தலைக் கட்டியுள்ளார். ப்ரக்ருத கீதா

ச்லோகத்தில் ''ஸர்வம் ஸமாப்நோஷி ததோஸி ஸர்வ:'' என்றதற்குப் பொருள் யாதெனில்; பகவானே! உலகிலுள்ள ஸகல பதார்த்தங்களையும் நீயேயாக வேதங்களிற் சொல்லியிருப்பதற்குக் காரணம் எல்லாவற்றிலும் நீ ஆத்மாவாக வியாபித்திருப்பது தான்– என்பதாம். இங்கு கீதாபாஷ்ய ஸ்ரீஸூக்தி வருமாறு ''வாயுர் யமோ(அ)க்நிரித்யாதி ஸர்வஸாமாநாதி கரண்ய நிர்தேசஸ்ய ஆத்மதயா வ்யப்திரேவ ஹேதுரிதி ஸுவ்யக்தமுக்தம்'' என்று கண்ணபிரான் சொன்ன விபூதி விஸ்தரங்களைக் கேட்டும், காட்டின விச்வரூபத்தைக் கண்டும் நின்ற அர்ஜுநன் ''கண்ணா! உண்மையில் இல்லாதவற்றை யெல்லாம் எடுத்துச் சொல்லுகிறாயே, உண்மையாக இல்லாதவற்றை யெல்லாம் ஏறிட்டுக் காட்டுகிறாயே!'' என்று சொல்லியிருக்க வேண்டும் அத்வைதிகளின் கொள்கை உண்மையாயின். அர்ஜுநன் அப்படிச் சொல்லாமல், (ச்லோ. 38ல்) ''த்வயா ததம் விச்வமநந்தரூப'' என்றும், ''ஸர்வம் ஸமாப்நோஷி ததோஸி ஸர்வ:'' என்றும் சொல்லியிருக்கையாலே ப்ரபஞ்ச மெல்லாம் ஸத்யமென்றும் ஒன்று கூட பொய்யல்லவென்றும் நிர்ஸந்தேஹமாகத் தேறுகின்றது. ஆக இவ்வத்யாயங்கள் இரண்டும் அத்வைதிகளின் வாதத்தை நிராதாரமென்று நிரூபிக்கப் போதும்.

678. இனி பன்னிரண்டாமத்யாயத்திற் சிறிது அநுபவிப்போம். இதில் 18,19 ச்லோகங்கள் ஸாரமானவை. அவையாவன ''ஸமச்சத்ரௌ ச மித்ரே ச ததா மாநாவமாநயோ:, சீதோஷ்ணஸுக துக்கேஷு ஸமஸ் ஸங்கவிவர்ஜித:, துல்ய நிந்தாஸ்துதிர் மௌநீ ஸந்துஷ்டோ யேந கேநசித், அநிகேத: ஸ்திரமதிர் பக்திமாந் மே ப்ரியோ நர: என்பன. பகைவனிடத்திலும் நண்பனிடத்திலும் ஒரே விதமான பாவனையுள்ளவனும், பஹுமானம் நேர்ந்தாலும் அவமானம் நேர்ந்தாலும் அவற்றையும் துல்யமாகவே பாவிப்பவனும், சீதோஷ்ணங்களையும் ஸுகதுக்கங்களை யும் ஸமமாக நினைப்பவனும், எதிலும் பற்றில்லாதவனும், பிறர் நிந்திப்பதையும் துதிப்பதையும் துல்யமாக நினைப்பவனும், ஒருவரோடும் பேசாமலிருப்பவனும், ஏதேனுமொன்றினால் ஸந்துஷ்ட சித்தனாயிருப்பவனும் உறுதியும் பக்தியுமுடையவனுமானவன் எனக்குப் பரம ப்ரீதிபாத்ர பூதன் என்று சொல்லுகிறான் கண்ணபிரான். இப்படிப்பட்ட அதிகாரி உலகில் மிகவும் துர்லபனேயாயினும் இப்படியிருக்க ஆசைப்பட வேணும் என்பதற்காகவே இஃது அருளிச் செய்தபடி.

679. இனி பதின் மூன்றாமத்யாயத் தில் செல்வோம். இதில் முதல் ச்லோகமும் இரண்டாம் ச்லோகமும் சிறிது விபரீத வுணர்ச்சியை உண்டாக்குவது போலுள்ளது. இங்கு ஸ்வாமியினுடைய பாஷ்யமும் அதற்கு டீகையான தாத்பர்ய சந்த்ரிகையும் மிகமிக விரிவாக அமைந்திருக்கின்றது. மூல ச்லோகங்களாவன ''இதம் சரீரம் கௌந்தேய க்ஷேத்ரமித்யபிதீயதே, ஏதத் யோ வேத்தி தம் ப்ராஹு: க்ஷேத்ரஜ்ஞ இதி தத்வித:'' என்பது முதல் ச்லோகம். இனி இரண்டாவது ச்லோகமாவது ''க்ஷேத்ரஜ்ஞம் சாபி மாம்வித்தி ஸர்வக்ஷேத்ரேஷு பாரத!, க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞயோர் ஜ்ஞாநம் யத் தத் ஜ்ஞாநம் மதம் மம'' என்பது. இங்கு (ஆபாதப்ரதீதியில்) மேல் நோக்கில் என்ன தோற்றுகிறதென்றால், க்ஷேத்ரமென்னப் படுகிற அசேதநமும், க்ஷேத்ரஜ்ஞனென்னப் படுகிற சேதநனும் ஆகிய இரண்டையும் அர்ஜுநா! நானாக அறிந்து கொள் என்னப்படுகிறது பூர்வார்த்தத்தில்;

க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞர்களாகிற சேதந அசேதநங்களை யறிந்து கொள்வதென்பது யாதொன்றுண்டோ, அதுதான் என்னை யறிந்து கொள்வதாகும் என்கிறது உத்தரார்த்தத்தில். இவற்றால் அத்வைதவாதம் ஸித்திக்கிறதென்று கருதிய சங்கராசாரியர் தமது பாஷ்யத்தில் அக்கருத்தை விளக்கியிருக்கின்றார். அதற்கு விரிவான மறுப்பு ஸ்வாமியின் கீதாபாஷ்யத்திலுள்ளது; மிகமிக விரிவான மறுப்பு தாத்பர்யசந்த்ரிகையிலுள்ளது. அதன் ஸாரத்தை மிகவும் சுருக்கமாகத் தெரிவிக்கிறோமிங்கு.

680. தேஹத்திற் காட்டிலும் ஆத்மா வேறுபட்டவன் என்பது தெரிந்திருக்கச் செய்தேயும் 'தேவோஹம் மநுஷ்யோஹம்' என்று வ்யவஹாரம் செய்து வருகிறோம். அஹம் என்பதற்கு ஆத்மா அர்த்தமேயொழிய தேஹம் அர்த்தமன்று; தேவத்வமோ மநுஷ்யத்வமோ சரீரத்திலுள்ளதேயன்றி அஹமர்த்தமான ஆத்மாவிலுள்ளதன்று. அப்படியிருந்தும் 'தேவ: அஹம், மநுஷ்ய: அஹம்' என்று ஸமாநாதி கரணமாக ப்ரயோகிப்பது எப்படி பொருந்துகிறதென்றால் கேண்மின். ஆத்மாவும் சரீரமும் ஒன்றைவிட்டொன்று தனித்து நிற்பனவல்ல. தேஹமானது ஆத்மாவுக்கு அப்ருதக்ஸித்த விசேஷணமாய்க் கொண்டேயிருப்பதால் இந்தச் சேர்த்தியையிட்டு 'தேவ: அஹம், மநுஷ்ய: அஹம்' என்று வ்யவஹரிக்கப்பட்டு வருகிறது. இதற்கு அர்த்தம் என்ன வென்றால், தேவ சரீரக: அஹம், மநுஷ்ய சரீரக: அஹம் – என்பதேயாம். ஏவஞ்ச, சரீராத்மபாவரூபமான ஸம்பந்தத்தைக் கொண்டு பொருத்தப்பட்டதாயிற்று. இவ்வண்ணமாகவே "க்ஷேத்ரஜ்ஞஞ் சாபி மாம் வித்தி" என்றதும் சரீராத்ம பாவ ஸம்பந்த நிபந்தநமாகவே பொருந்தக் குறையில்லை. அசேதநமான தேஹமானது ஜீவாத்மாவுக்கு சரீரமாயிருப்பது போல, இவ்விரண்டும் சேர்ந்து பரமாத்மாவுக்கு சரீரமாயிருக்கும் விஷயம் ஸுபாலோபநிஷத்து முதலானவற்றில் ஸுப்ரஸித்தமா யிருப்பதால் க்ஷேத்ரஜ்ஞ னையும் பரமாத்மாவாக நினைப்பதென்பது 'க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞசரீரக: பரமாத்மா– க்ஷேத்ரத்தையும் க்ஷேத்ரஜ்ஞனையும் சரீரமாகக் கொண்டவன் பரமாத்மா' என்று நினைப்பதாகவே முடிந்து நிற்கும். இவ்விஷயம் பலபல உபபத்திகளுடன் ஸ்வாமி பாஷ்யத்தில் விரித்துரைக்கப் பட்டிருப்பது காண்க.

681. பதினான்காமத்யாயத்தில் (24,25ல்) "குணாதீதஸ் ஸ உச்யதே" என்று ஓர் உத்தமாதிகாரி சொல்லப்படுகிறான். இவனுக்கு குணாதீதனென்று பெயர். குணங்களைக் கடந்தவனென்று பொருள். ஸகல குணங்களுக்கும் கொள்கலமாக இருப்பவனன்றோ உத்தமாதிகாரி; குணங்களைக் கடந்தவன் எப்படி உத்தமாதிகாரியாவன்? என்று கேள்வி பிறக்கக்கூடும். இங்கு விவக்ஷிக்கப்படுகிற குணங்கள் சமதமாதிகுணங்களல்ல; ஸத்வ ரஜஸ் தமோகுணங்கள். "முக்குணத்து வாணியத்து இரண்டிலொன்றுநீசர்கள்" என்று திருமழிசைப்பிரானும். "முக்குணத்திரண்டவையகற்றி, ஒன்றினில் ஒன்றி நின்று" என்று திருமங்கை யாழ்வாரும் அருளிச்செய்கிற படி, ரஜஸ் தமோ குணங்களிரண்டுதானே ஹேயங்கள்; ஸத்வகுணம் உபாதேயம் தானே; அதுவுங்கூட ஹேயமென்று தோன்றும்படி யுள்ளதேயென்று நினைக்க வேண்டா; சுத்த ஸத்வம் என்பது உபாதேயமே. ரஜஸ் தமஸ்ஸுகளோடு கலசின ஸத்வம் உபாதேயமன்று, அது ஹேயமே.

ஆக, தமோகுணமும் ரஜோ குணமும் ரஜஸ்தமோ மிச்ர ஸத்வகுணமு மாகிய முக்குணங்களை யுங் கடந்தவன் குணாதீதனெனப்படுவான். இவனை நாம் எப்படித் தெரிந்து கொள்வது என்றால் அவனுடைய நிலைமையைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம். அந்த நிலைமை தெரிவிக்கப் படுகிறது இரண்டு ச்லோகங்களினால் ''ஸமதுக்கஸுகஸ் ஸ்வஸ்த: ஸமலோஷ்டாச்ம காஞ்சந:, துல்யப்ரியாப்ரியோ தீரஸ் துல்யநிந்தாத்ம ஸமஸ்துதி: மாநாவமாநயோஸ் துல்யஸ் துல்யோ நிந்தாரிபக்ஷயோ:, ஸர்வாரம்ப பரித்யாகீ குணாதீதஸ்ஸ உச்யதே'' என்னுமிவ்விரண்டு ச்லோகங்களும் அநவரதம் கண்டபாடம் செய்யத் தக்கன. ஸுகம் வந்தாலும் துக்கம் வந்தாலும் ஒரேவிதமான சித்தவ்ருத்தியை யுடையனாயிருக்க வேணுமென்கிறது 'ஸமதுக்கஸுக:' என்பதனால். அதன் மேல் ஸ்வஸ்த: என்கிறது.

682. இதற்கு இவ்விடத்தில் அபூர்வமான வ்யுத்பத்தியைக் காட்டியருளு கிறார் ஸ்வாமி எம்பெருமானார். ஸ்வஸ்மிந் ஸ்த்தித: ஸ்வஸ்த்த: (தன்னிடத்திலேயே யிருப்பவன்) என்கிறார். உடனே அதை விவரிக்கிறார்— ''ஸ்வாத்மைகப்ரியத்வேந தத்வ்யதிரிக்த புத்ராதிஜந்மமரணாதி ஸுகது:க்கயோ: ஸமசித்த இத்யர்த்த:'' என்று உலகில் ஸுகதுக்கம், ப்ரியாப்ரியம் என்னும் சப்தங்கள் விசேஷமான பொருள் வாசியையுடையனவல்ல; பர்யாயசப்தங்கள் போலவேகாணும். ஆனாலும் விஷய பேதத்தாலே பொருள் பேதித்திருக்கும். ஸ்வஸ்த: என்பதற்கு ''ஸ்வாத்மநி ஸ்த்தித: ப்ரஸந்ந:'' என்பது சங்கரபாஷ்யம், அதையே நன்கு விவரித்துக் காட்டுகிறது ராமாநுஜபாஷ்யம். இதற்குமேல் ''ஸமலோஷ்டாச்மகாஞ்சன:'' என்கிறது. லோஷ்டத்தையும் கல்லையும் பொன்னையும் துல்யமாக நினைப்பவன். இப்படியாக மேன்மேலும் சொல்லப்படுகிற தன்மைகள் இந்நிலத்தில் நம் போன்ற பாமரர்களுக்கு எவ்வளவு பழக்கம் செய்தாலும் வாய்க்கக் கூடியவையல்ல. இத்தகைய நலம் வாய்ந்தவர்கள் பூலோகம் முழுவதற்குள்ளும் ஒருவரிருவர் தேறுவதும் அருமையென்னலாம். ஆயினும் இப்படிப்பட்ட ச்லோகங்களை நாம் மனனம் செய்து கொண்டேயிருந்தால் பெரிதும் பயன்படும் என்றிவ்வளவே சொல்லலாம்.

683. இனி பதினைந்தாமத்யாயத்திற் புகுவோம். இதில் விமர்சதோரணையில் தெரிவிக்கும் ஸாரமான விஷயமொன்றைக் குறிக்கொண்மின். நமது ஸ்ரீபாஷ்யகாரர் பெரும்பாலும் ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்திக ளைத் தழுவிய ஸ்ரீபாஷ்யம் கீதாபாஷ்யம் முதலியவற்றை அருளிச் செய்ததாக நம் முன்னோர்கள் திருவுள்ளம்பற்றியிருக் கிறார்கள். 'பாஷ்யகாரர் இது கொண்டு ஸூத்ர வாக்யங்களொருங்கவிடுவர்'' என்று ஆசார்யஹ்ருதயத்தில் ஸ்பஷ்டமாகவும் பணிக்கப்பட்டுள்ளது. இதற்குச் சான்றாக நாம் பலவிடங்கள் காட்டியிருக்கிறோம். இப்போது இவ்வத்யாயத்தில் ஒரு நுட்பம் காட்டுகிறோம். இங்கு (15–18) யஸ்மாத் க்ஷரமதீதோஹம்'' என்கிற ச்லோகத்தில் ''அதோஸ்மி லோகே வேதே சப்ரதித: புருஷோத்தம:''என்றுள்ளது. இங்கு ''லோகே வேதே ச'' என்றதற்கு லோகத்திலும் சாஸ்த்ரத்திலும் என்று பொருள் சாதாரணமாக எல்லோர்க்கும் தோன்றக் கூடியது. இதர பாஷ்யகாரர்கள் இப்படித்தான் அர்த்தம் செய்திருக்கக் காண்கிறோமிங்கு.

ஸ்வாமி எம்பெருமானாரோவென்னில் தமது பாஷ்யத்தில் அங்ஙனம் பொருள் பணிக்கவில்லை. "வேதார்த்தாவலோகநாத் லோக இதி ஸ்ம்ருதிரிஹோச்யதே. ச்ருதெள ஸ்ம்ருதெள ச இத்யர்த்த:" என்பது கீதாபாஷ்ய ஸ்ரீஸூக்தி. லோகம் என்பதற்கு கரணே வ்யுத்பத்தியினால் சாஸ்த்ரம் என்றே பொருள் கொள்ளப்பட்டிருக்கிறது. இப்படித் தான் பொருள் கொள்ளவேணுமென்று தாத்பர்ய சந்த்ரிகையில் வேதாந்த தேசிகனும் உபபாதநம் செய்தருளி யிருக்கிறார். லோகமென்னும் சொல்லுக்கு இப்படி சாஸ்த்ரமென்கிற பொருளைக் கொண்டவர்கள் வேறுயாருமில்லை. லோக சப்தத்திற்கு சாஸ்த்ரம் என்று பொருள் உள்ளதாக கோசங்களிலும் காணப்பட வில்லை. "லோகஸ்து புவநே ஜநே" என்றுதான் அமரகோசத்திலுமுள்ளது. இதர கோசங்களிலும் இங்ஙனே காண்கிறது. இப்படியிருக்க நம் ஸ்வாமி பாஷ்யகாரர் லோக சப்தத்தை சாஸ்த்ரபர்யாயமாகக் கொண்டு பொருள் அருளிச்செய்ததற்கு நிதானம் என்ன? என்று பராமர்சிக்க வேண்டும். நம்மாழ்வாருடைய ஒரு ஸ்ரீஸூக்தியே இதற்கு மூலகாரணம் என்கிற தத்வத்தை இங்கு நாம் நிரூபிக்க விரும்புகிறோம்.

684. நம்மாழ்வார் திருவாய்மொழியில் 'ஒன்றும் தேவுமுலகுமுயிரும்' என்று தொடங்கும் பதிகத்தில், (4–10–6) 'போற்றி மற்றோர் தெய்வம்' எனும் பாசுரத்தில் 'எல்லீரும் வீடு பெற்றால் உலகில்லை என்றே' என்று அருளிச்செய்துள்ளார். இப்பதிகத்தில் ஸ்ரீமந்நாராயணனுடைய பரத்வத்தை உபபாதித்து வந்த ஆழ்வாரை நோக்கி, "ஸ்ரீமந்நாராயணனே ஸர்வேச்வரனாகில், அவன்தன்னையே ஆச்ரயிக்கும்படி எங்களைப் பண்ணாமல், இதர தெய்வங்களைத் தொழும்படி எங்களைச் செய்து வைத்தது ஏன்?" என்று சிலர் கேட்பதாகக் கொண்டு அவர்களுக்கு விடை கூறுவதாக இப்பாசுரம் அமைக்கப் பட்டுள்ளது. இப்பாசுரத்தில் 'எல்லீரும் வீடு பெற்றால் உலகில்லை என்றே' என்பதுதான் உயிராக உள்ளது. எல்லாரும் ஸ்ரீமந் நாராயணனையே தொழப்பெற்றால் எல்லாருமே வீடு பெறுவார்கள். அப்படி எல்லாரும் வீடு பெற்று விட்டால், உலகு இல்லையாய்விடும். (அதாவது லீலாவிபூதி அடியற்றுப் போய்விடும்.) அங்ஙனம் ஆகாமைக்காகவே எம்பெருமான் உங்களை இதரதேவதாபஜனம் பண்ணி ஸம்ஸாரிக ளாய்த் தொலைந்து போம்படி பண்ணி வைத்தான் – என்பதாக இப் பாசுரத்திற்கு ஆபாதப்ரதீதியில் பொருள் தோன்றும். தசோபநிஷத் பாஷ்யகாரரான ரங்கராமாநுஜ ஸ்வாமி வடமொழியில் (திருவாய்மொழிக் குத் தாம் பணித்த ஒன்பதினாயிரப்படி வ்யாக்யானத்தில் இவ்விதமான பொருளையே எழுதியுள்ளார்.

685. ஆனால், திருக்குருகைப்பிரான் பிள்ளான், நம்பிள்ளை முதலான பூருவாசாரியர்கள் தம் வியாக்கியானங் களில் வெளியிட்டருளின பொருள் இங்ஙனேயல்ல, எங்ஙனேயென்னில்; 'உலகில்லையென்றே' என்றவிடத்தில், உலகு என்பதற்கு சாஸ்த்ரமென்று பொருள்; ப்ரபல பாபம் செய்து வைத்த நீங்களும் ப்ரபல ஸுக்ருதிகளுக்கே பெறக் கூடியதான மோக்ஷத்தைப் பெற்று விட்டீர்களாகில் சாஸ்த்ர மர்யாதையே அழிந்து விடுமென்று நினைத்தே எம்பெருமான் உங்களை தேவதாந்தர ப்ரவணர்களாக ஆக்கி வைத்திருக்கிறான்; அவரவர்கள் பண்ணின புண்ய பாபரூப கருமங்களுக்குத் தக்க படியே

பலன் கொடுப்பதென்று ஒரு சாஸ்த்ர மர்யாதை ஏற்பட்டிருக்கிறது; நீங்கள் முற்பிறவிகளில் பிரபலமான தீவினை களைச் செய்திருக்கிறபடியால் அவற்றின் பலனாக இப்பிறப்பில் க்ஷுத்ர தேவதா பஜநம் பண்ணும்படியாக உங்களை உபேக்ஷித்திடலாயிற்று. கொடிய பாவங்கள் செய்த உங்களையும் புண்யாத்மாக்களைப் போலே ஸ்ரீமந்நாராயண ஸமாச்ரயணமே செய்யும்படி பண்ணி விடுவரானால் அப்போது முன் சொன்ன சாஸ்த்ர மரியாதை அழிந்து விடுமன்றோ; அங்ஙனம் அழியாமைக்காகவே உங்களை இங்ஙனே நிறுத்தி வைத்தது என்பதாகவே ஆழ்வார் திருவுள்ளம் பற்றிய பொருள் என்று பூருவாசாரியர்கள் உபபாதிக்கிறார்கள்.

686. வேதாந்த தேசிகனும் த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியில் "தத்தத் கர்மாநுரூபம் பலவிதரணத:" என்று இவ்வர்த்தத்தையே வெளியிட்டருளினர். ஆகவே ஆழ்வார் திருவுள்ளத்தால் உலகு என்பதற்கு சாஸ்த்ர மென்னும் பொருள் தேறிவிட்டபடியால் இதையடி யொற்றியே ஸ்வாமி பாஷ்யகாரர் ப்ரக்ருத கீதாச்லோகத்தில் "அதோஸ்மி லோகே வேதே ச" என்றவிடத்தில் லோக சப்தத்தை சாஸ்த்ரமாக நயிப்பித்தருளினா ரென்று அறியக் கிடக்கிறது. இந்த கீதா ச்லோகத்தை அப்பாசுரத்தின் வியாக்கியானத்தில் பெரியவாச்சான் பிள்ளையும் வடக்குத் திருவீதிப் பிள்ளையும் எடுத்துக் காட்டியுமிருக்கிறார்கள்.

687. எம்பெருமானார்க்கு முன்னே ஆளவந்தாரும் லோக சப்தத்தை சாஸ்த்ரமென்னும் பொருளின் ப்ரயோகம் செய்தருளினார். ஸ்தோத்ரரத்நத்தில் (23) "ந நிந்திதம் கர்ம ததஸ்தி லோகே" என்றவிடத்திற்கு வியாக்கியானஞ் செய்தருளா நின்ற பெரியவாச்சான்பிள்ளை ஆயிரமடங்கு என்னால் பண்ணப்படாத யாதொரு நிந்திதகருமமுண்டு அதிபாதக மஹாபாதகாதிகள் அது சாஸ்த்ரத்திலு மில்லை; அநுஷ்டாதாக்கள் பக்கல் இல்லாத நிஷித்தங்களும் சாஸ்த்ரத்தில் காணலாமிறே" என்று அருளிச் செய்திருக்கிறார். தேசிகனும் ஸ்தோத்ர பாஷ்யத்தில் அவ்விடத்தில், "லோக்யதே அநேந இதி லோக: – ப்ரமாணம்; தஸ்மிந்நாஸ்தி அப்ராமாணிகம் இத்யர்த்த: அத்ர சாஸ்த்ரரூபப்ரமாணவிசேஷ விவக்ஷா" என்றருளிச் செய்தார். இவற்றால் ஆளவந்தாரும் லோகபதத்தை சாஸ்த்ர பரமாகவே கொண்டாரென்று விளங்கா நின்றது. இப்படி ஆளவந்தாரும் எம்பெருமானாரும் கொண்டது ஆழ்வாரருளிச் செயலை அடியொற்றியே என்பது நிஸ்ஸந்தேஹம்.

688. பதினாறாமத்யாயத்தில் தேவாஸுரவிபாகம் முக்கியமானது. தைவப்பிறப்பு அஸுரப்பிறப்பு என்று பிறப்பிலேயே இருவகையுண்டு. "த்வௌ பூத ஸர்கௌ லோகேஸ்மிந் தைவ ஆஸுர ஏவ ச" உலகத்திலுள்ள பிராணி வர்க்கங்களை யெல்லாம் இரண்டே வகுப்பாக வகுக்கிறான் கீதாசார்யன். தைவவகுப்பு ஒன்று, அஸுர வகுப்பு மற்றொன்று. இதைப் பற்றிச் சுருக்கமாகத் தெரிந்து கொள்ள வேணுமானால் 'தைவீ ஸம்பத் விமோக்ஷாய நிபந்தாய ஆஸுரீமதா"(16–5) என்கிறவொரு பாதி ச்லோகத்தை மனனம் பண்ணினாற்போதும். ஸம்ஸாரபந்தத்தில் நின்றும் விடுபட்டு ஸத்கதியை யடையுயம் வழியைச் சிந்தனை செய்யும் வகுப்புதான் தெய்வ வகுப்பெனப்படுவது. அப்படிப்பட்ட

சிந்தனையின்றிக்கே அதோகதியை யடையும் வழியைத் தேடும் வகுப்புதான் ஆஸுர வகுப்பெனப்படுவது.

689. இங்ஙனே சொன்னதைக் கேட்டவுடனே அர்ஜுநனுடைய முகத்தில் துக்கக் குறி காணப்பட்டது. நம்மைக் கண்ணபிரான் தைவவகுப்பில் சேர்த்திருக்கிறானோ ஆஸுர வகுப்பில் சேர்ந்திருக்கிறானோ தெரியவில்லையே யென்று அர்ஜுநன் கவலையுற்று நின்றான். அதையறிந்த கண்ணபிரான் உடனே யருளிச் செய்கிறான்– "மா சுசஸ் ஸம்பதம் தைவீம் அபிஜாதோஸி பாண்டவ!" என்கிறான். அப்பா! நீ கவலை கொள்ளாதே. நீ தெய்வ வகுப்பில் சேர்ந்தவனே யென்று கூறி அவனைப் பரமானந்தப்படுத்துகிறான். தான் செய்யும் உபதேசங்களை அவன் ருசி விச்வாஸங்களோடு கேட்டுக் கொண்டிருப்பது பற்றியே அவனைத் தைவஸம்பத்து வாய்ந்தவனாக அறுதியிட்டருளினன் கண்ணபிரான்.

690. நமக்கு ஆஸ்திக்ய முள்ளதா? நாஸ்திக்ய முள்ளதா? என்பது உலகில் அவரவர்க ளுடைய நெஞ்சுக்குத் தெரியுமன்றோ. ஆஸ்திக்யமுண்டாகில் நம்முடைய பிறப்பு தெய்வப்பிறப்பு என்று தானே நிச்சயித்துக் கொள்ளலாம். அஃதில்லையாகில் ஆசுரப் பிறப்பே நமக்கு வாய்த்ததென்று நிச்சயித்துக் கொள்ள என்ன தடை? இத்திய பிறப்பின் தன்மைகளை மேலே பல ச்லோகங்களினால் கண்ணபிரான் தானே நன்கெடுத்துக் கூறுகின்றான். "ந சௌசம் நாபி சாசாரோ ந ஸத்யம் தேஷு வித்யதே, அஸத்யமப்ரதிஷ்டம் தே ஜகதாஹுரநீச்வரம்" இத்யாதிகள் காண்க.

691. இனி, பதினேழாமத்யாயத்திற் செல்வோம். இதில் மூவகையான தபஸ்ஸுக்களைக் கூறுகின்றான் கண்ணன். அவை சாரீர தபஸ்ஸென்றும், வாங்மய தபஸ் என்றும், மாநஸதபஸ் என்றும் வழங்கப்படுவன. ஊன்வாட வுண்ணா துயிர் காவலிட்டு உடலிற்பிரியாப் புவனைந்தும் நொந்து, தான்வாட வாடத் தவஞ் செய்ய" என்றும், "காயோடு நீடுகனியுண்டு வீசு கடுங்கால் நுகர்ந்து நெடுங்காலம் ஐந்து தீயூடு நின்று தவஞ் செய்ய" என்றும் ஆழ்வார்கள் ஒருவிதமான உடல் தவத்தை யருளிச் செய்துள்ளார்கள்.

692. கீதாசார்யன் அருளிச் செய்வது அதனில் வேறுபட்டது. "தேவத்விஜகுரு ப்ராஜ்ஞபூஜநம் சௌசம் ஆர்ஜ்வம் ப்ரஹ்மசர்யமஹிம்ஸா ச சாரீரம் தப உச்யதே" என்பது காயிகதபஸ்ஸைத் தெரிவிக்கும் ச்லோகம். பகவானையும் அந்தணர்களையும் ஆசாரியர்களையும் பண்டிதர்களையும் வழிபாடு செய்வது, புண்ய தீர்த்தங்களில் குடைந்தாடுவது, நெஞ்சில் நினைத்தபடியே அனுஷ்டித்துக் காட்டுவது, மாதர்களைக் கண்டு காதல் கொள்ளாமை, ப்ராணிபீடைகள் செய்யாமை ஆகிய இவை காயிகதபஸ் எனப்படும். "அநுத்வேககரம் வாக்யம் ஸத்யம் ப்ரியஹிதம் ச யத், ஸ்வாத்யாயாத்யயநம் சைவ வாங்மயம் தப உச்யதே" என்பது வாங்மயமான தபஸ்ஸைத் தெரிவிக்கும் ச்லோகம். பிறரை நோவச் செய்யாத வார்த்தைகளைச் சொல்லுவது, ப்ரியமும் ஹிதமுமானவற்றைச் சொல்லுவது, வேத மோதுவது ஆகியவிவை வாசிகதபஸ்ஸெனப்படும் "மந: ப்ரஸாதஸ் ஸௌம்யத்வம் மௌநமாத்மவிநிக்ரஹ: பாவஸம்சுத்திரித்யேதத் தபோ மாநஸமுசயதே"

கோபம் முதலியன கொள்ளாமையாகிற மனத்தெளிவு, பிறர்க்குத் தீங்கிழைக்க நினையாமையாகிற ஸௌம்யத்வம்; வாய்திறந்து பேசாமை, ஸதா தியானிக்கத் தகுந்த பரமபுருஷன் விஷயத்திலே நெஞ்சைச் செலுத்துகை வேற்று விஷயங்களில் சிந்தனை கொள்ளாமை ஆகிய இவை மாநஸதபஸ் ஸெனப்படும். இங்ஙனம் மூவகைப்பட்ட தபஸ்ஸு மறுபடியும் மூவகையாக வகுக்கப்படுகிறது; ஸாத்விகமென்றும் ராஜஸமென்றும் தாமஸமென்றும்.

693. இப்படி மூன்று மூன்றாக வகுக்கப்படும் விஷயங்கள் பதினெட்டாம் அத்யாயத்திலும் பல கூறப்படுகின்றன. அதில் ஸுகமானது ஸாத்விகமென்றும் ராஜஸமென்றும் தாமஸ மென்றும் மூன்றாகப் பிரிக்கப்படுகிறது. எந்த ஸுகமானது உபக்ரமதசையில் விஷம் போல விருந்து பரிணாமத்தில் அம்ருதம் போலாகிறதோ அது ஸாத்விக ஸுகமாம். யோகம் தொடங்கும் போது வெகு ஆயாஸஸாத்யமாகையாலே துக்கம் போல் தோற்றம் விபாகதசையில் அப்யாஸ பலத்தாலே அதுவே அம்ருதம் போலாகும். இதுதான் ஸாத்விகஸுகம். "யத் ததக்ரே விஷமிவ பரிணாமே அம்ருதோபமம், தத் ஸுகம் ஸாத்த்விகம் ப்ரோக்தம் ஆத்மசுத்தி ப்ரஸாதஜம்" (18–37) என்கிற ச்லோகத்தை இங்கே அநுஸந்திப்பது.

694. இதற்கடுத்த ச்லோகம்– "விஷயேந்த்ரியஸம்யோகாத் யத்ததக்ரே அம்ருதோபமம், பரிணாமே விஷமிவ தத்ஸுகம் ராஜஸம் ஸ்ம்ருதம்" என்பது. இந்த ச்லோகத்தை நம்மாழ்வார் திருவாய்மொழியில் (7–1–8)" "இன்னமுதெனத் தோன்றி ஓரைவர் யாவரையும் மயக்க" என்கிற பாசுரத்தினால் மொழி பெயர்த்திருக்கிறா ரென்னலாம். இந்திரியங்கள் சிற்றின்பங்களைப் பற்றி யநுபவிக்கும் ஸுகம் அநுபவ வேளையில் அமுதம் போல் தோன்றிப் பிறகு நரகஹேது வாகையாலே விஷமாகப் பரிணமிக்கும். இது தான் ராஜஸ ஸுகமென்பது.

695. இதற்கு மேல் தாமஸஸுக மென்பது எத்தகைத்தென்னில் "யதக்ரே சாநுபந்தே ச ஸுகம் மோஹநமாத்மந:, நித்ராலஸ்ய ப்ரமாதோத்தம் தத் தாமஸமுதாஹ்ருதம்" (18–39) இந்த ச்லோகத்தினால் தெரிவிக்கப்படுமது கீழ்ச்சொன்னவற்றில் அனுபவவேளை யிலோ விபாகதசையிலோ ஏதேனுமொரு போதிலே அமுதமாகுமாகார முண்டு. இஃது அங்ஙனன்றிக்கே இரண்டு தசையிலும் விஷமாகவே காண்பது. உறங்குவது, சோம்பேறியாயிருப்பது, செய்ய வேண்டியவற்றிலே கவனிப்பில்லாமலிருப்பது ஆகிய இவை உபயதசையிலும் விஷமானதே.

696. இப்படியாகச் சொல்லிக் கொண்டு போய், ப்ராஹ்மண ஜாதிக்குரிய தருமமின்னது, க்ஷத்ரிய ஜாதிக்குரிய தருமமின்னது, வைச்ய ஜாதிக்குரிய தருமமின்னது, சதுர்த்த ஜாதிக்குரிய தருமமின்னது என்று சொல்லுகையில் "ஶௌர்யம் தேஜோ த்ருதிர் தாக்ஷ்யம் யுத்தே சாப்யபலாயனம், தானமீச்வரபாவஸ்ச க்ஷாத்ரம் கர்ம ஸ்வபாவஜம்" என்கிற ச்லோகத்தினால் க்ஷத்ரிய தருமத்தை நெஞ்சிலே யூன்ற வருளிச் செய்தான்.

697. இதில் பூர்வார்த்தத்தில் ஐந்து குணங்கள் க்ஷத்ரியனுக்குச் சொல்லப் படுகின்றன. இவற்றுள் ஶௌர்யமாவது–போர்க்களத்தில் சிறிதும் கூசாமே புகுவதற்குரிய

வல்லமை. தேஜஸ்ஸாவது– பிறரால் அசைக்கவும் முடியாமை. த்ருதியாவது–தொடங்கின காரியத்தை எத்தனையிடை யூறுகள் மிடைந்தாலும் சிளைக்காமல் நிறைவேற்றியே தீரும்படியான மனவுறுதி, தாக்ஷ்யமாவது–எந்த காரியத்தையும் இனிது நிறைவேற்ற வல்லனாகை. (யுத்தே சாபி அபலாயநம்) போர் புரியவந்து நின்றபின் தனக்கு மரணமே ஸம்பவிக்குமென்று தோன்றினா லுங்கூட முதுகுகாட்டி யோடாமை.

698. அர்ஜுநன் க்ஷத்ரியஜாதியிலே பிறந்தவனாதலால் அவனுக்கு ஸ்வஜாதி தர்மமாகிய யுத்தத்தை வழுவறச் செய்கை ஆவச்யகமென்பதை மேன்மேலும் வற்புறுத்திச் சொல்லி, தான் சொன்னபடியே கேட்டாக வேண்டுமென்றும் தன்னையே தஞ்சமாகப் பற்றியாக வேண்டுமென்றும் வாழைப்பழத்தில் ஊசியேற்றுவது போலுரைத்து, கடைசியாக அவன் வாக்கி லிருந்து நஷ்டோ மோஹ: ஸ்ம்ருதிர்லப்தா த்வத்ப்ரஸாதாந் மயாச்யுத ஸ்திதோஸ்மி கதஸந்தேஹ: கரிஷ்யே வசநம் தவ என்று சொல்லுவித்துக் கீதையைத் தலைக் கட்டினானாயிற்று. கண்ணா! உனது திருவருளால் என்னுடைய விபரீதஜ்ஞான மெல்லாம் தொலைந்தது. உண்மைப் பொருளுணர்ச்சி உண்டாயிற்று; மனத்திலி ருந்த கல்மஷங்களெல்லாம் தீர்ந்து ஒரு நிலையில் நின்று விட்டேன்; இனி நீ சொன்னபடி கேட்கிறேன் என்று சொன்னா னென்கிற இவ்வளவையும் த்ருதராஷ்ட்ரனுக்கு ஸஞ்ஜயன் சொல்லி நின்றான்.

699. கீதையுபதேசம் கேட்பதற்கு முன்பு அர்ஜுநன் இருந்த இருப்பு என்ன? இப்போது நின்றநிலை என்ன? என்பதே ஸாரமாக இங்கு உய்த்துணரத் தக்கது. நான் யுத்தம் செய்யமாட்டேனென்று வில்லையும் அம்புகளையும் விட்டெறிந்து தேர்த் தட்டிலே உட்கார்ந்து விட்டான் என்பது முதலத்யாயத்தின் முடிவில் சொல்லப்பட்டது. அவரவர்களுக்கு ஸ்வதர்மத்தில் ருசியையுண்டாக்குவதே கீதையின் முழுநோக்கு என்றதாயிற்று. இந்த கீதாசாஸ்த்ரம் அவதரித்திருக்கிற ரீதியை ஊன்றி நோக்குமிடத்து வெகு ஆச்சரி யமாகவேயிருக்கிறது. திருவாய்மொழியில் (4–8–6) அறிவினால் குறைவில்லா அகல்ஞாலத்தவரறிய நெறியெல்லாமெடுத்துரைத்த நிறை ஞானத்தொரு மூர்த்தி'' என்கிற பாசுரத்தின் பெருமை ஸாரமாக அருளிச் செய்யப்பட்டது. இதன் அருமை பெருமையைக் கண்ணபிரான் தானே முடிவில் ''இதம் தே நாதபஸ்காய நாபக்தாய கதாசந, ந சாசுச்ரூஷவே வாச்யம் ந ச மாம் யோப்யஸூயதி'' என்கிற வொரு ச்லோகத்தினால் அற்புதமாகப் பேசினான். அர்ஜுநா! நான் உனக்குச் சொன்ன இந்த பரம குஹ்யமான சாஸ்த்ரத்தை அதபஸ்க னுக்குச் சொல்லாதே, அபக்தனுக்குச் சொல்லாதே, அசுச்ருஷுவுக்குச் சொல்லாதே, என்னிடத்தில் அஸூயை யுள்ளவனுக்குச் சொல்லாதே யென்று கட்டளையிடுகிறான் கண்ணபிரான்.

700. இங்கு ''ந ச மாம் யோப்யஸூயதி'' என்றவிடத்திற்கு நம் பாஷ்யகாரர் பாஷ்யமிட்டருளுகிறார்; காணக் கண்ணாயிரம் வேண்டும்; கேட்கக் காதாயிரம் வேண்டும். நவில நாவாயிரம் வேண்டும். ''மத்ஸ்வரூபே மதைச்வர்யே மத்குணேஷு ச கதிதேஷு யோ தோஷம் ஆவிஷ்கரோதி ந தஸ்மை வாச்யம்'' என்று பாஷ்ய ஸூக்தியுள்ளது. என்னுடைய ஸ்வரூபத்தையும் என்னுடைய ஐச்வர்யத்தையும் என்னுடைய குணங்களையும்

ஒருவர் எடுத்துரைத்தால் அவற்றில் தோஷாவிஷ்கரணம் செய்பவனே என்னிடத்தில் அஸூயை கொண்டவன், அவனுக்கு நீ ஒன்றும் சொல்லாதே—என்று கண்ணபிரான் கட்டளை யிடுவதாக ஸ்வாமி பாஷ்யம் செய்தருளுகிறார். பகவத் குணங்களை எத்தனை உயர்த்தியாகச் சொன்னாலும் அத்தனையும் ஒக்கும்! ஒக்கும் என்றிராதே அவற்றில் அஸம்பாவிதத்வத்தை உபபாதிக்கிறோம் கேண்மினென்று. தங்களுக்குண்டான பாண்டியத்யத்தையெல்லாம் பகவத் குணங்களை இல்லை செய்வதிலும் இறக்குவதிலுமே உபயோகப்படுத்துகிற வர்கள் பகவத் கீதைக்கு வெகு தூரத்திலே நிற்க வேண்டுமென்பது ஸ்வாமி திருவுள்ளமாகக் காண்கிறது.

701. இனி, எம்பெருமானார் அருளிச் செய்த ஸ்ரீபாஷ்யத்திலிருந்து சில விஷயங்களைக் காண்போம். வேதம் கர்ம காண்டமென்றும் ப்ரஹ்ம காண்டமென்றும் இரு வகுப்பாகவுள்ளது. பூர்வ பாகம் கர்மகாண்டமென்றும் உத்தரபாகம் ப்ரஹ்ம காண்டமென்றும் வழங்கப்படும். உபநிஷத்துக்களையே ப்ரஹ்ம காண்டமென்பது. பகவானுக்கு ஆராதந ரூபங்களான யஜ்ஞம் முதலிய கர்ம விசேஷங்களை விரிவாகக் கூறும் வேதபாகம் கர்ம காண்டமென்றும், அந்த கருமங்களினால் ஆராதிக்கப்படுகின்ற பகவானுடைய ஸ்வரூப ரூபகுணங்களை விரிவாகக் கூறும் வேதபாகம் ப்ரஹ்மகாண்டம் (அதாவது உபநிஷத்து) என்றும் சொல்லிற்றாயிற்று.

702. கர்ம காண்டத்தில் தோன்றும் சங்கைகளைப் பரிஹரிப்பதற்காக ஜைமினியென்னும் மஹர்ஷியெழுந்து பதினாறு அத்யாயங்களோடு கூடிய ஒரு சாஸ்த்ரத்தையியற்றினார். அதற்குப் பூர்வமீமாம்ஸை யென்று பெயர். இதில் பன்னிரண்டு அத்யாயங்களே ஜைமினி மஹர்ஷியால் இயற்றப்பட்டவை யென்றும், ஒரு பக்ஷமுண்டு. இதைப்பற்றி இங்கு விசாரம் அப்ரஸக்தம். "ஜைமிநீயம் ஷோடச லக்ஷணம்" என்பது பொதுவான வார்த்தை. வ்ருத்திக்ரந்தத்தில், பதினாறு அத்யாயங்களும் ஜைமிநி ப்ரோக்தமென்று கூறப்பட்டுள்ளது. (லக்ஷணமென்று அத்யாயத்திற்குப் பெயர்.)

703. ப்ரஹம காண்டமென்னும் உபநிஷத்பாகத்தில் தோன்றும் சங்கைகளைப் பரிஹரிப்பதற்காக வ்யாஸ மஹர்ஷியெழுந்து நான்கு அத்யாயங்கள் கொண்டவொரு சாஸ்த்ரத்தை இயற்றினார். அதற்கே சாரீரக மீமாம்ஸை யென்று பெயர். ஒவ்வொரு அத்யாயத்திலும் நான்கு பாதங்களுள்ளன. ஆகவே பதினாறு பாதங்கள் கொண்டது சாரீரக மீமாம்ஸை யென்றதாயிற்று.

704. இதில் ஒவ்வொரு விஷயத்தைப் பற்றி சர்ச்சை செய்து நிர்ணயிக்கும் பகுதிக்கு அதிகரணமென்று பெயரிடப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட அதிகரணங்கள் இந்த மீமாம்ஸையில் நூற்றைம்பத்தாறு உள்ளன. சில அதிகரணங்களில் ஒரே ஸூத்ரமிருக்கும். பல அதிகரணங்களில் பல ஸூத்ரங்களிருக்கும். மொத்தம் ஸூத்ரங்களின் லக்கம் ஐந்நூற்று நாற்பத்தைந்து என்று கண்க்கிடப்பட்டிருக்கின்றது. ஆக, நான்கு அத்யாயங்களையும் பதினாறு பாதங்களையும் நூற்றைம்பத்தாறு அதிகரணங்களையும் ஐந்நூற்றைம்பத்தைந்து ஸூத்ரங்களையும் கொண்டது ப்ரஹ்ம ஸூத்ர சாஸ்த்ரம் என்றதாயிற்று.

705. தத்வ ஹித புருஷார்த்தங்களை நாம் தெரிந்து கொள்வதற்கு உபநிஷத்துக்களே ஸாதனமாகும். அவ்வுபநிஷத்துக்களின் பொருள்களை ஸம்சய விபர்யயமற நிர்கர்ஷித்து விளக்கக் கூடியது ப்ரஹ்மஸூத்ரமே யாதலால் வேதாந்திகளுக்கு இதுவே புகலாயிற்று. ப்ரஹ்மஸூத்ரமென்கிற சாரீரக மீமாம்ஸை யின் பொருளை நிஷ்கர்ஷமாகவும், நிஷ்கல்மஷமாகவும் தெரிந்து கொண்டவர்களே வேதாந்திகளென்றும் ப்ரஹ்ம ஜ்ஞானிகளென்றும் சொல்லத் தகுதியுடையார்.

706. மஹர்ஷிப்ரணீதங்களான ஸூத்ரங்களின் பொருளை நம்போல்வார் சிறிதும் அறியகில்லார்களாதலால் நம் போன்ற அல்ப மதிகளிடத்தில் பரம கருணை கொண்ட பூருவர்கள் அந்த ஸூத்ரங்களின் அர்த்தத்தை விளக்கி பாஷ்யங்கள் இயற்றியுள்ளார்கள். த்வைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் என மூன்று மதங்கள் உலக ப்ரஸித்தமாக வழங்குமவை. இம்மூன்று மதங்களிலும் பாஷ்யங்கள் அவதரித்துள்ளன. அத்வைத மதத்திற்காக சங்கராசார்யர் பாஷ்யம் இயற்றினார். த்வைத மதத்திற்காக ஆனந்த தீர்த்தர் (மத்வாசார்யர்) பாஷ்யம் இயற்றினார். நமது விசிஷ்டாத்வைத மதத்திற்காக பகவத் ராமாநுஜாசார்யர் என்கிற ஸ்வாமி எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யமருளிச் செய்தார். வட இந்தியாவில் அதிக ப்ரஸித்தி பெற்றுள்ள வல்லபமதம் நிம்பார்க்க மதம் முதலிய மதங்களுக்காகவும் பாஷ்யங்கள் தோன்றியுள்ளன. சைவமதத்திற்காக நீலகண்ட பாஷ்யம் தோன்றியுள்ளது. இப்படி மற்றும் பல பாஷ்யங்களிருந்தாலும் மதத்ரயபாஷ்யமென்று மூன்று பாஷ்யங்களே நமது நாட்டில் குலாவப் பட்டுலாவுவன.

707. விசிஷ்டாத்வைதிகளென்றும் ஸ்ரீவைஷ்ணவர்களென்றும் ஸ்ரீராமாநுஜ தர்சநஸ்தர்களென்றும் வழங்கப்படுகின்ற நமக்கு ஸ்வாமியின் ஸ்ரீபாஷ்யமே ஜீவாது வென்பது சொல்லாமலே விளங்கும். உபநிஷத்துகளின் உண்மைப் பொருளை விளக்கி, ஸூத்ர காரருடையஉள்ளத்திற்கு அநுகுணமாக நிஷ்பக்ஷபாதமாய் நிரூபிக்கப் பட்டது ஸ்ரீராமாநுஜ பாஷ்யமே என்று மேனாட்டுப் புலவர்களும் மெச்சியுள்ளானர். அந்த ஸ்ரீபாஷ்யத்தின் உண்மைப் பொருளானது ச்ருதப்ரகாசிகை முதலிய வியாக்கியான நூல்களின் உதவியினால் உணரப்படவேண்டும். அதற்கு ஸாமான்ய சாஸ்திரங்களின் உதவி இன்றியமையாதது. அப்படிப்பட்ட சாஸ்த்ரஜ்ஞர்கள் நெடுநாள் குருகுல வாஸம் செய்து ஸ்ரீபாஷ்யத்தை யதிகரித்து பாஷ்யாதிகாரிகளென்று பேர்பெற்றுச் சிறந்த வேதாந்திகளாகித் தத்வ ஹித புருஷார்த்தங்களைத் தெளிவாக உணர்ந்து நிரதிசயானந்த சாலிகளாகின்றனர். அவ்வளவு அதிகாரம் வாய்க்கப் பெறாதவர்களையும் கைவிடமாட்டாத கருணை மிக்க நம் பூருவாசாரியர்கள் திவ்ய ப்ரபந்த தத்வ்யாக்யானங்களையும் ரஹஸ்ய தத் வ்யாகயானங்களையும் மற்றும் பல திவ்ய க்ரந்தங்களையுமருளிச் செய்துள்ளார்களாதலால் ஸ்ரீபாஷ்யத்தில் நேராக அவகாஹிக்க மாட்டாதவர்களும் இழவாமல் அதில் விவரிக்கப்பட்டுள்ள தத்வ ஹித புருஷார்த்தங்களை ஸதாசார்ய ஸகாசத்தில் உணரப் பெறுகின்றார்கள். அன்னவர்களது ஞானத்திலும் ஒரு குறையில்லை குற்றமில்லை யென்பது மாத்திரமேயல்லாமல் ஸ்ரீபாஷ்யாதிகாரிக ளைக் காட்டிலும் மிக விசதமான ஞானத் தெளிவு பெற்றவர்களாகவும் விளங்குகிறார்கள்.

708. ஆனாலும் ப்ரஹ்ம ஸூத்திரத்தில் என்ன விஷயம் எந்த விதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது? என்று தெரிந்து கொள்ளப் பலர்க்கு அபிலாஷையுண்டு. விஸ்தாரமாகத் தெரிந்து கொள்ளாவிடினும் ஸாரஸங்க்ரஹ மாகவாவது தெரிந்து கொள்ளவேணுமென்கிற விருப்பமுடையார்க்கு ஸாரமாகச் சில அதிகரணங்களை எடுத்துக் கொண்டு இஃது எழுதப்படுகிறது. ஸ்வாமி, ஸ்ரீபாஷ்யம், வேதாந்த தீபம், வேதாந்தஸாரம் என்கிற மூன்று திவ்யக்ரந்தங்களினால் ப்ரஹ்மஸூத்ரப்பொருள்களை விரிவாகவும் சுருக்கமாகவும் வெளியிட்டருளினார். அவற்றைத் தழுவி இஃது எழுதப்படுகிறது.

709. ஸூத்ரத்தில் முதல் அதிகரணம் ஜிஜ்ஞாஸாதிகரண மெனப்படும். "அதாதோ ப்ரஹ்ம ஜிஜ்ஞாஸா" என்பது ஸூத்ரம். அத:கர்ம விசாரம் செய்து முடிந்த பிறகு அத: = கர்மவிசாரம் முடிந்த காரணத்தினா லேயே, ப்ரஹ்மஜிஜ்ஞாஸா = இச்சைக்கு இலக்கான ப்ரஹ்ம விசாரம் (செய்யத் தக்கது) என்று ஸூத்திரத்தின் மேல் பொருள் அறிக. கர்ம விசாரத்தைச் செய்து முடித்தவர்கள் அந்தக் கருமங்களி னுடைய அற்பமும் அஸ்திரமுமான பலன்களில் நசையொழிந்து மோக்ஷ புருஷார்த்தத்தை விரும்புவர்களாதலால் அப்படிப்பட்டவர்க ளுக்கு ப்ரஹ்ம விசாரம் செய்யத் தக்கது என்றதாயிற்று. இதை இன்னமும் சிறிது விவரிப்போம். நன்றாக வேதமோதின ஒருவர் ஜைமினி மஹர்ஷியின் கர்ம மீமாம்ஸையில் சொல்லப்பட்ட ந்யாயங்களி னால் ஜ்யோதிஷ்டோமம் முதலிய யஜ்ஞங்களின் (கருமங்களின்) தன்மை இன்னபடிப் பட்டது, அவற்றையியற்ற வேண்டிய விதமின்னது, அவற்றின் பலனான ஸ்வர்க்கம் முதலியவற்றின் ஸ்வரூபம் இத்தகைத்து என்று இவ் விஷயங்களை அறுதியிடப் பெற்ற பின்பு ஸ்வர்க்கம் முதலிய அந்தப் பலன்கள் அழியக் கூடியவை என்று தெரிந்து கொண்டதன் பலனாக அவற்றைப் பெற வேணுமென்கிற விருப்பம் தொலைந்தொழியப் பெறுகிறார். பரப்ரஹ்ம ப்ராப்தியாகிற மோக்ஷ புருஷார்த்தத்தில் மேலெழுந்தவொரு உணர்ச்சியிருப்ப தினால், இதனைப் பெறவேணுமென்கிற விருப்பமும் அவர்க்கு உண்டாகின்றது. இப்படி ப்ரஹ்ம ப்ராப்தியில் விருப்பம் உண்டானவாறே, அந்த ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் இப்படிப்பட்டது, அதனைப் பெறுதற்கு உபாயமின்னது, பெற்று அநுபவிக்கும் பலன் இன்னபடிப் பட்டது என்றித்தகைய விஷயங்களை நிர்ணயிக்க வேண்டுமாதலால் இந்த நிர்ணயம் ப்ரஹ்ம மீமாம்ஸையிற் சொல்லப்பட்டுள்ள நியாயங்களினாலேயே விளையக் கூடியது என்றதாகத் தேறி நின்றது. "அதாதோ ப்ரஹ்மமஜிஜ்ஞாஸா" என்கிற இந்த ஸூத்திரத்திற்கு இவ்வளவே விஷயமாயிருக்க, இங்கு ஸ்ரீபாஷ்யம் மிக மிக வளர்ந்திருக்கின்றதே; அவ்வளவு விரிவுக்கு விஷயமென்ன? என்று பலர் அறிய விரும்பக் கூடும். கேண்மின், இந்த ஸூத்ரத்தில் மூன்றே பதங்கள் உள்ளன. (அத) என்கிற முதல் பதத்திற்கு 'அதற்குப் பிறகு' என்று நாம் அர்த்தம் சொன்னோம். பிறர் இங்ஙனே அர்த்தம் கொள்ளாமல் வேறு அர்த்தம் கொள்ளுகின்றனர். ஸாதந ஸம்பத்தியின் ஆநந்தர்யமே அத சப்தார்த்தமென்று சங்கர பாஷ்யத்தி லுள்ளது. அது பொருந்தாதென்று மறுக்க அவசியம் ஏற்பட்டது. ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தைப் பற்றிப் பிறர் கூறுவதும் அவசியம் மறுக்க வேண்டியதாயிற்று. இவ்விரண்டு விஷயங்களில் ப்ரஸக்தாநு ப்ரஸக்தமாகப் பல பல விஷயங்கள் பெருகின படியால்

இவ்விடத்து ஸ்ரீபாஷ்யம் மிக வளர்ந்தது. அவ்விரிவு இங்கு வேண்டா வென்று விடுக்கப்பட்டது. ஸூத்ரத்தின் மேல் இங்குத் தோன்றியுள்ள பூர்வப க்ஷத்தையும் ஸித்தாந்தத்தையும் ஸாரமாக வுணர்த்துகிறோம், உணர்க.

710. இவ்வதிகரணத்தின் பூர்வபக்ஷம் வருமாறு:– கர்ம மீமாம்ஸையில் அர்த்த வாதாதிகரணத்தில் "ஆம்நாயஸ்ய க்ரியார்த்தத்வாத் ஆநர்த்தக்யம் அததர்த்தாநாம் தஸ்மாதநித்யமுச்யதே" என்கிற வொரு ஸூத்திரத்தினால் ஒரு பூர்வபக்ஷம் கிளப்பப்பட்டது; அதாவது–வேத ஸாமாந்யமும் ஏதேனுமொருகார்யத்தைச் செய்யவேண்டியதாக வுணர்த்தித் தீர வேண்டிய நிர்ப்பந்தமுடையது; அதைச் செய் இதைச் செய் என்று கர்த்தவ்யார்த்தங்களை நியமேந போதிப்பதே வேதங்களின் க்ருதயம். அர்த்தவாத ரூபங்களான வேறு வாக்யங்களானவை கர்த்தவ்யார்த்த மொன்றையும் போதிக்காமையினாலே அப்படிப்பட்ட வாக்யங்களுக்கு ப்ராமாண்யம் ஸம்பவிக்க மாட்டாது. (இதைச் சிறிது விவரிப்போம்) "வாயவ்யம் ச்வேதமாலபேத பூதிகாம:" என்பது ஒரு வேத வாக்யம் 'வாயுர்வை க்ஷேபிஷ்டா தேவதா' என்பது. முன் சொன்ன கருமத்தில் ஆராத்யமான வாயுதேவதையின் ஒரு பெருமையைப் புகழ்ந்து கூறுவது இந்த வாக்யம். "வாயு மிகவும் சீக்கிரமாகப் பலனளிக்க வல்ல தேவதை" என்பது இந்த வாக்யத்தின் அர்த்தம். இப்படிப்பட்ட வாக்யங்களுக்கு அர்த்தவாத வாக்யமென்று பெயர். இவற்றில் கர்மவிதி ஒன்றுமில்லாமையால் இவை விதிவாக்யங்களல்ல. விதிவாக்யமா யிருந்து கொண்டே ப்ராமாண்யம் பெற வேண்டியது முறைமையாயிருக்க, யத்கிஞ்சித் கர்த்தவ்யார்த்தபோதகத்வ ராஹித்யத்தாலே விதிவாக்யமாகமாட்டாத அர்த்தவாத வாக்யங்கள் ப்ராமாண்யம் பெறமாட்டா – என்கிற பூர்வபக்ஷம் "ஆம்நாயஸ்யேதி" ஸூத்ரத்தினால் கிளப்பப்பட்டது.

711. பிறகு "விதிநாது ஏகவாக்யத்வாத் ஸ்துத்யர்த்தேந விதீநாம ஸ்யு:" என்கிற ஸூத்ரத்தினால் இதற்குப் பரிஹாரம் சொல்லப்பட்டது. எங்ஙனே யென்னில், அர்த்தவாத வாக்யங்கள் ஒரு காரியத்தைச் செய்யும்படி விதிக்காமற் போனாலும் ஸமீபத்திலுள்ள விதிவாக்யத்தில் விதிக்கப்பட்டதொரு க்ரியையில் அந்வயிக்கின்ற புகழ்ச்சியைத் தெரிவிப்பதனால் அந்த விதிவாக்யத்தோடு கூட ஏக வாக்யமாய்க் கொண்டு ப்ராமாண்யம் பெறத் தட்டில்லையென்று ஸித்தாந்தம் செய்யப்பட்டது ஜைமினி மஹர்ஷியால். ஆக, விதி வாக்கியங்க ளுக்கோ அவற்றுக்கு சேஷ பூதங்களான வாக்யங்களுக்கோ ப்ராமாண்யமுண்டே யல்லது வேறு வகையான வாக்யங்களுக்கு ப்ராமாண்யம் கிடையாது. உலகத்திலும் முதன் முதலாகச் சிறுவர்களுக்கு வ்ருத்த வ்யவஹாரத்தினாலேயே சக்தி க்ரஹணமுண்டாகிறது. (சக்திக்ரஹண மாவது– இன்ன பதத்திற்கு இன்னது அர்த்தமென்கிற வுணர்ச்சி.) வ்யுத்பந்நனான வொருவன் வேறொரு வ்யுத்பந்நனை நோக்கி 'காம் ஆநய' என்கிறான். அதைக் கேட்ட அவன் ஒரு கோவைக் கொண்டு போகிறான். மறுபடியும் அவன் "காம் நய, அச்வம் ஆநய" என்கிறான். அதைக் கேட்ட அந்த வ்யுத்பந்நன் கோவைக் கொண்டு போய்க் கட்டிவிட்டுக் குதிரையைக் கொண்டு வருகிறான். இவற்றைக் கண்டு கொண்டிருந்த வொரு சிறுவன் (காம்) என்றதற்கு இன்னது பொருள்;

அச்வமென்றதற்கு இன்னது பொருள், (நய) என்றதற்கு இன்னது பொருள்; (ஆநய) என்றதற்கு இன்னது பொருளென்று அங்கு நடந்த காரியங்களினால் தெரிந்து கொள்ளுகிறான். 'கோ' பதமானது கொண்டு வருதல் கொண்டு போதல் என்கிற இரண்டு க்ரியைகளில் அந்வயிக்கின்ற வஸ்துவை போதிப்பதனாலே பசுவைச் சொல்லு கின்றது, ஆநய என்கிற பதம் கொண்டுவருவதாகிற க்ரியையைச் சொல்லுமது என்றிப்படி, அந்தந்த பதங்களுக்கு சக்தியை க்ரஹிக்கின்றான். எங்கும் இப்படிப்பட்ட வ்யவஹாரங்களினா லேயே அவ்வோ பதங்களுக்கு அவ்வோ அர்த்தங்களில் சக்தி க்ரஹண முண்டாகிறது. ஆகவே இப்படிப்பட்ட வ்யவஹாரங்களெல்லாம் ஏதேனுமொரு கார்யார்த்த பரங்களாகவே காணப்படுதலால் உலகில் எல்லாப் பதங்களும் யத்கிஞ்சித் கர்த்தவ்யார்த்த பரங்களே யென்று நிச்சயிக்கிறான். ஆக இப்படிப்பட்ட வ்யுத்பத்திக்கு இணங்க எல்லாப் பதங்களும் கார்ய பரங்களேயாகும். (கார்ய பரங்களான வாக்யங்களுக்கே ப்ராமாண்யமுண்டு என்றபடி.) ஏவஞ்ச, கார்ய ரூபமல்லாத பரப்ரஹ்மத்தினிடத்தில் வேதாந்த வாக்யங்களுக்குத் தாத்பர்யமிருக்க முடியாமையினாலே வேதாந்த விசார ரூபமான ப்ரஹ்ம விசார சாஸ்த்ரம் ஆரம்பிக்கத்தக்கதன்று—என்று பூர்வபக்ஷம் ப்ராப்தமாயிற்று.

712. இதன்மேல் ஸித்தாந்தம் வருமாறு:– சிறுவர்களுக்கு முதல் வ்யுத்பத்தி வ்ருத்த வ்யவஹாரத்தினாலேயே உண்டாகிறது என்பது பிசகு; இது எல்லாருடையவும் அநுபவத்திற்கு விருத்தமானது. உலகில் அவரவர்களுக்கு முதல் வ்யுத்பத்தி உண்டாகிற விதம் வேறு வகையாகவே அநுபவ ஸித்தமாகவுள்ளது. எங்ஙனேயென்னில், தந்தை தாய் முதலியவர்கள் தம் தம் சிறுவர்களுக்கு வ்யுத்பத்தியை யுண்டுபண்ண வேண்டி கண்ணிற் காணும் பல பல பொருள்களை விரலால் சுட்டிக்காட்டி 'இதோ சந்திரன், இதோ கிளி, இதோ குதிரை, இதோ மாமா' என்றிப்படி ப்ரயோகித்து வருகிறார்கள். சிசுக்களும் பூர்வஜன்ம வாஸநையினால் காலக்ரமேண அவ்வோ பதங்களுக்கும் அவ்வோ அர்த்தங்களுக்குமுள்ள ஸம்பந்தத்தைத் திடமாக வுணர்ந்து வ்யுத்பத்தி பெறுகின்றன. ஒரு கார்யத்தில் அந்வயித்த வஸ்துவிலேயே முதன் முதலாக சக்தி க்ரஹணமுண்டாகிறதென்று மூதலிக்கப்பட்டது.

713. கார்யபரமான வாக்கியத்தி லிருந்தே சக்திக்ரஹணமுண்டாகிற தென்பதும் மிகவும் தவறு. 'தேவதத்தா! உனக்குப் பிள்ளை பிறந்தது' என்பதாக ஒரு வாக்கியத்தை எடுத்துக் கொள்வோம். இது ஸித்தார்த்தபரமான வாக்கியமே யொழிய, 'காமாநய, காம் நய' இத்யாதி வாக்யங்கள் போலே கார்யபர வாக்கியமன்று. இந்த வாக்கியத்தினாலும் சிறுவர்களுக்கு வ்யுத்பத்தி விளையக் காணாநின்றோம். தேவதத்தனுக்குப் பிள்ளை பிறந்தவுடனே வேறோரிடத்திலிருந்த அவனுக்கு இதைத் தெரிவிப்பதற்காக வொருவன் ஏவப்பட்டதையும் அவன் கூறினதைக் கேட்டு தேவதத்தனுக்கு முகவிகாஸ முண்டானதையும் நோக்கி "புத்ரஸ்தே ஜாத:" என்ற வாக்கியத்திற்கு இன்னது பொருளென்று உணரப்பெறுகிறான். ஆகவே கார்ய பரமான வாக்கியத்தி லிருந்தே சக்திக்ரஹண மென்கிற நியதி இல்லையென்றதாயிற்று. சில விடங்களில் ஸித்தபரமான

வாக்யத்திலிருந்தும் கார்ய அநந்விதவஸ்துக்களில் சக்தி க்ரஹண முண்டாகிறது; சிலவிடங்களில் கார்யபர வாக்கியத்திலிருந்தும் உண்டாகிறது என்று லோகாநுபவத்தினால் ஸித்திக்கிறபடியால் ப்ராபாகரர்கள் ஸகலபதங்களும் கார்யார்த்த பரங்களென்று கூறுவது யுக்தியற்றதென்று தேறிற்று. ஆகவே வாக்கியங்களுக்கு ஸித்தரூபமான ப்ரஹ்மத்தில் தாத்பர்யம் ஸம்பவிக்கலா மாகையாலே தத்விசாரசாஸ்த்ரம் ஆரம்பிக்கத்தக்கதே யென்று ஸித்தாந்தமானதாக முடிந்தது.

714. இங்கு இப்படிப்பட்ட பூர்வபக்ஷம் தோன்றி இதற்குப் பரிஹாரம் செய்வதாகிற விஷயம் அந்த ஸூத்ரத்தில் எங்ஙனம் கிடைக்கிறதென்று கேள்வி தோன்றும். கார்யத்தில் அந்வயியாத ப்ரஹ்மமாகிற ஸித்தவஸ்துவை ஜிஜ்ஞாஸ்யமாக இங்குக் கூறியிருப்பதனால் இதிலிருந்து இந்தப் பூர்வ பக்ஷஸித்தாந்தங்கள் நிர்ணயிக்கப் படக் குறையில்லை. வேதாந்த வாக்கியங்க ளெல்லாம் கார்யபரங்களாய்க் கொண்டு ப்ராமாண்யம் பெறுமேயல்லது ஸித்தபரங்களாய் கொண்டு ப்ராமாண்யம் பெறமாட்டாதென்கிற வாதம் ஸமஞ்ஜஸமா யிருந்தாலன்றோ வேதாந்த வாக்யங்களி னால் ஸித்தரூபமான ப்ரஹ்மத்தை விசாரிப்பது கூடாதென்று சொல்ல நேரும்.

715. முதலில் நாமெடுத்துக் காட்டிய பூர்வ மீமாம்ஸா ஸூத்ரங்களிரண்டினால் தேறினவர்த்தம் இப்போது விரோதிக்கிறதாக இனி நினைக்கக்கூடும். கார்யபரங்களல்லாத ஸித்தபரவாக்கியங் களுக்கு ஸ்வாதந்த்ர்யேண ப்ராமாண்யம் அஸம்பாவித மென்றன்றோ அங்கு ஸித்தாந்தம் செய்யப்பட்டிருக்கிறது; அதற்கு முரணாக இப்போது முடிந்ததே என்று சங்கிக்க நேரும். இந்த சங்கை வேண்டா. எல்லா வேத வாக்கியங்களும் கார்யபரங்களாய் கொண்டே ப்ராமாண்யம் பெறுமென்று பூர்வபக்ஷி சொன்னதை அப்படியே ஒப்புக் கொண்டு அப்யுகம்ய வாத முறையில் பரிஹாரம் காட்டினார் ஜைமிநிமஹர்ஷி. அதுவே அவருடைய அபிப்ராயமென்பது கிடையாது. கார்யபர மல்லாத அர்த்தவாத வாக்கியங்களும் விதி சேஷமாய்க் கொண்டு ப்ராமாண்யம் பெறுகின்றனவென்று சொன்னவளவால் ஸித்தபர வாக்யங்களுக்கு ப்ராமாண்யமே கிடையாதென்று சொன்னபடியாகாது. ஆகவே இந்த ஸூத்ரத்தில் செய்யப்படுகிற ஸித்தாந்தமானது பூர்வ மீமாம்ஸா அர்த்தவாதாதகரண ஸித்தாந்தத்திற்கு விருத்தமன்று என்றதாயிற்று.

716. இதில் (ஸம்ஸ்) என்கிற இரண்டு பதங்களினால் கர்ம விசாரத்திற்குப் பிறகு கர்மவிசாரம் முடிந்ததென்கிற காரணத்தாலேயே ப்ரஹ்ம விசாரம் செய்யத்தக்கதென்று கிடைப்பதனால் ப்ரஹ்ம விசாரத்தைக் குறித்துக் கர்ம விசாரம் நியமேந, பூர்வ வ்ருத்தமென்று தேறுகின்றது. இதைப்பற்றியும் சிறிது விவரிக்கப்படுகிறது. வேதமோதின வொரு புருஷன் வேதவாக்யங்களில் கர்ம பலத்தைப் பற்றியும் ஸ்திரமென்று சில விடங்களிலும் அஸ்திரமென்று சிலவிடங்களிலும் மேலெழுந்த வாரியாக வுணர்ந்து இவற்றில் எது உண்மையென்று நிர்ணயம் தெரிந்து கொள்ள விரும்புகிறான். அந்த விருப்பத்தினால் அதை நிர்ணயித்துத் தரக்கூடிய சாஸ்த்ரங்களில் ப்ரவர்த்திக்கிறான். கர்மபலனைப் பற்றின உண்மையை நிச்சயித்துத் தரவல்ல சாஸ்த்ரங்களில்

ப்ரவர்த்திக்கிறான். கர்மபலனைப் பற்றின உண்மையை நிச்சயித்துத் தரவல்ல சாஸ்த்ரங்களில் முந்துற முன்னம் ப்ரவர்த்திக்கிறான். அநாதி வாஸநையி னால் கருமங்களைச் செய்வது எளிதென்று பொதுவாகத் தோன்றியிருக்கும். ப்ரஹ்ம ஜ்ஞானத்தில் அப்யாஸமில்லாமையினாலே அது துஷ்கரமென்றும் தோன்றியிருக்கும். ஆகவே எளிதான உபாயத்தினால் அபிமதம் கைபுகுவதாயிருக்க அரிதாக உபாயத்தில் ப்ரவ்ருத்தி ஸம்பவிக்க மாட்டாதாகையாலே ப்ரஹ்மஜ்ஞானத்தின்பலனைப் பற்றி நிர்ணயிக்க வேணுமென்கிற விருப்பம் தடைப்பட்டு கருமபலனைப் பற்றி நிர்ணயிக்க வேணுமென்கிற விருப்பமே தலையெடுத்திருக்கும். இங்ஙனம் முன்னம் கரும விசாரம் செய்தவளவில் கரும பலன்கள் அஸ்திரம் என்கிற நிச்சய முண்டாகிறது. இப்படி நிச்சயமுண்டான வளவில் கர்ம விசாரேச்சை தொலைந்ததா கிறது. இந்த ப்ரதிபந்தகம் தொலையவே ப்ரஹ்ம விசாரத்தில் இச்சையும் அதில் ப்ரவ்ருத்தியும் அடுத்தபடியாக உண்டாகிறது. எனவே, ப்ரஹ்ம விசாரத்தை குறித்து கர்ம விசாரம் நியமேந அபேக்ஷித மென்றதாகறது. இதுவே பூர்வ வ்ருத்தமாக இருக்கத் தக்கதாதலால் (அத அத:) என்ற பதங்களுக்குப் பதவுரையில் நாம் கூறிய பொருளே பொருத்தமுடைத்தென்ற தாயிற்று. ஜிஜ்ஞாஸாதிகரணார்த்தஸாரம் இவ்வளவு போதும்.

717. (2) ஜந்மாத்யதிகரணம். ஜந்மாத்யஸ்ய யத: 1–1–2 என்பது ஸூத்ரம். ஜந்மாதி, அஸ்ய, யத: என்று மூன்று பதமாகவுள்ளது இந்த ஸூத்ரம். அஸ்ய– கண்ணால் காணப்படுகிற இந்த சேதந மிச்ரமான பிரபஞ்சத்திற்கு, ஜந்மாதி– உற்பத்தி, ஸ்திதி, ப்ரளயங்கள், யத:– எந்த வஸ்துவினிடத்தினின்று ஆகின்றனவோ. (அது தான் பரப்ரஹ்மம்) என்பதாக ஸூத்ரத்தின் பொருள். தைத்திரீயோபநிஷத் தில் ப்ருகுவல்லி யென்னும் ப்ரகரணத்தி லுள்ளதான "யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே, யேந ஜாதாநி ஜீவந்தி, யத் ப்ரயந்த்யபிஸம்விசந்தி, தந் விஜிஜ்ஞாஸஸ்வ, தத் ப்ரஹ்மேதி" என்னும் வாக்யமானது பரப்ரஹ்மத்திற்கு ஜகஜ் ஜந்மாதி காரணத்வ ரூபமான லக்ஷணத்தைச் சொல்லியிருக்கின்றது. உலகில் நாம் ஆடு மாடுகளுக்கு ஒவ்வொரு லக்ஷணத்தைக் கொண்டு இதர பேதத்தை நிச்சயிக்கிறோமோ அப்படியே ப்ரஹ்மம் கண்ணுக்குப் புலப்படாததாயிருந்தாலுங் கூட ஜகஜ்ஜந்மாதி காரணத்வ ரூபமான லக்ஷணத்தைக் கொண்டு சேதநாசேதநங் களிற் காட்டில் வேறுபட்டதென்று நிச்சயிக்க முடியுமாதலால் அப்படிப்பட்ட ப்ரஹ்மத்தைப் பற்றின விசாரம் கூடும் என்றதாயிற்று.

718. இங்கே பூர்வபக்ஷம் – ப்ரஹ்மத்திற்கு ஜந்ம காரணத்வம் முதலானவை லக்ஷணமாக ஸம்பவிக்க மாட்டாதென்று பூர்வபக்ஷம் ப்ராப்தமாகிறது. "யதோ வா இமாநி பூதாநி ஜாயந்–' இத்யாதியாக எடுத்துக் காட்டின உபநிஷத் வாக்யத்தில் அந்வயக்ரமம் எப்படிக் காண வேணுமென்றால், "யத: இமாநி பூதாநி ஜாயந்தே தத் ப்ரஹ்ம. யேந ஜாதாநி ஜீவந்தி தத் ப்ரஹ்ம. யத் ப்ரயந்தி அபிஸம்விசந்தி தத் ப்ரஹ்ம." என்று மூன்று வாக்யங்களாகப் பிரித்து அந்வயங் கொண்டு ஜந்ம காரணத்வம் ஒரு லக்ஷணமென்றும், ஸ்திதி காரணத்வம் மற்றொரு லக்ஷண மென்றும், லயகாரணத்வம் வேறொரு லக்ஷண மென்றும் ஆக வ்யாவர்த்தக லக்ஷணங்கள் மூன்று அங்கீகரிக்க வேண்டியதாகின்றது.

இப்படியாகுமளவில், ஒரே ப்ரஹ்மம் என்றல்லாமல் பல ப்ரஹ்மங்கள் என்பதாகத் தேறும். வ்யாவர்த்தகங்கள் பலவானால் வ்யாவர்த்யமும் பலவாக வேண்டுகையாலே.

719. இப்படியொரு நிர்ப்பந்த முண்டோ? 'தேவதத்தன் கறுத்தவனாயும் பருத்தவனாயும் யுவாவாயும் செந்தாமரைக் கண்ணனாயு மிரா நின்றான்' என்று ஒருவர் சொன்னால் கறுப்பு முதலிய வ்யாவர்த்தகங்கள் பலவாயிருப்பது கொண்டு வ்யாவர்த்யனான தேவதத்தனும் பல வ்யக்திகளாகத் தேறிவிடுவனோ? ப்ரத்யக்ஷமாக ஒரு தேவதத்தனையே நாம் காண்கிறோம். அவ்வொரு வ்யக்தினிடத்தில் கருமை, பருமை முதலான பலவும் கூடியிருக்கக் காண்கிறோம். இதுபோல ஒரு ப்ரஹ்மத்தினிடத்திலேயே ஜந்ம காரணத்வம் முதலானவை பலவும் கூடியிருக்கக் குறையில்லையே. இவற்றால் ப்ரஹ்ம வ்யக்தி பஹுத்வம் எப்படி ஆபத்தி பண்ண முடியும்? என்று மத்யே சங்கை தோன்றும். இதற்கு ஸமாதானம் கருமை பருமை முதலிய பலவற்றால் தேவதத்த வ்யக்தியில் பன்மை வந்து விட மாட்டாதென்பது வாஸ்தவமே; தேவதத்தன் கண்ணுக்குப் புலப்படுமவனாதலால் அவ்விஷயம் வேறு, ப்ரஹ்மம் அப்படி ப்ரத்யக்ஷமன்றே. அதுவோ அப்ரத்யக்ஷமா யிராநின்றது. ஜந்ம காரணத்வமும் லயகாரணத்வமும் ஒன்றிலேயே கூடுமென்று க்ரஹிப்பிக்க வல்ல பிரமாணமெதுவும் புலப்படவில்லை. லக்ஷணங்கள் எல்லாம் இதர பேதத்தை ஸாதித்துக் கொடுக்குமவை என்பது உத்ஸர்க்கத: ப்ராப்தமாயிரா நின்றது. ஜந்ம காரணத்வம் ஸ்திதி காரணத்வம் லய காரணத்வமென்னுமிந்த லக்ஷணங்கள் இதர பேதத்தை (வ்யாவ்ருத்தியை) ஸாதித்துக் கொடுக்குமளவில் இதற்கு அபவாதம் யாதொன்று மில்லாமையினாலே ஜன்ம காரணத்வமாகிற லக்ஷணமானது என்ன செய்யுமென்றால், தன்னைக் கொண்டு லக்ஷணீயமான ப்ரஹ்மத்திற்கு ஸ்திதி காரணபூதமான ப்ரஹ்மத்திற் காட்டிலும் லய காரணபூதமான ப்ரஹ்மத்திற் காட்டிலும் வேறுபாட்டைக் காட்டிக் கொடுத்தே தீரும். இப்படியே ஸ்திதி காரணத்வரூபமான லக்ஷணமும் ஸ்வலக்ஷ்யமான ப்ரஹ்மத்திற்கு ஜந்மகாரணபூதமான ப்ரஹ்மத்திற் காட்டிலும் வேறுபாட்டைக் காட்டிக் கொடுத்தே தீரும். இதற்காகப் பல லக்ஷணங்களைக் கொள்ளாமல் "ஜந்ம காரணத்வே ஸதி ஸ்திதி காரணத்வே ஸதி லய காரணத்வம் ப்ரஹ்மலக்ஷணம்" என்று கொள்கிறோமென்னில்; இவற்றுள் ஒவ்வொன்றே லக்ஷணமாகப் போருமாதலால் மற்ற விசேஷணங்கள் வ்யர்த்தமாக வேண்டி வரும். மேலும் ஜந்ம காரணத்வமும் லயகாரணத்வமும் விருத்தங்களாகையாலே ஓரிடத்தில் இவை கூடியிருக்கவும் மாட்டா.

720. இதற்கு மேல் ஒன்று சொல்லலாம்; "அதோ பக்ஷி உட்கார்ந்து கொண்டிருக் கிறதே; அவ்விடந்தான் தேவதத்தனுடைய கழனி" என்று ஒருவன் சொன்னால், தேவதத்தனுடைய கழனிக்கு பக்ஷியின் ஸம்பந்தத்தை லக்ஷணமாகச் சொன்னதாக ஆகிறது. இப்படிப்பட்ட லக்ஷணத்தினால் பக்ஷி யுறையுமிடமான கழனியில் தேவதத்த ஸ்வாமிகத்வம் தெரிவிக்கப்படுகிறது. அதுபோலவே இங்கும் ஜந்மகாரணத்வம் ஸ்திதி காரணத்வம் லய காரணத்வம் ஆகிற மூன்றையும் ஜ்ஞாந லக்ஷணங்களாகக் கொண்டு இவற்றால் ஒரே வஸ்து ப்ரஹ்ம பதார்த்தமாகத் தெரிவிக்கப்படுகிறது என்னலாம்.

721. இதுவும் பொருந்தாது. த்ருஷ்டாந்தத் தில் கழனியென்கிறவொரு வஸ்து ஏற்கெனவே அறியப்பட்டிருந்தது. அப்படி அறியப்பட்டிருந்தவதில் பக்ஷிவிசேஷத்தின் ஸம்பந்தத்தை யிட்டு தேவதத்த ஸ்வாமிகத்வம் தெரிவிக்கப்பட்டது. அது போல இங்கும் தெரிவிக்கப்பட வேண்டிய ப்ரஹ்மத்திற்கு ஏற்கெனவே அறிந்தவொரு தன்மை சொல்லித் தீர வேண்டும். அதுவோ ஒன்றும் சொல்ல முடியாததாயிருக்கின்றது. ஆகவே ஜந்மகாரணத்வம் முதலியவற்றுக்கு (பக்ஷிவிசேஷ ஸம்பந்தாதிவத்) ஜ்ஞாபகத்வமும் ஸம்பவிக்கமாட்டாது.

722. ஏன்? ப்ரஹ்மத்திற்கு ஏற்கெனவே அறிந்ததொரு தன்மை சொல்லமுடியாதா என்ன? நன்றாகச் சொல்லலாமே. "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம" என்கிற வாக்யத்தில் சொல்லப்பட்ட ஸத்யத்வம் முதலானவையே முன்னமறிந்த தன்மை என்னக் கூடாதோ வென்னில்; அங்கும் இந்த தோஷம் ஸமானமேயாகும். ஸத்யத்வாதிகள் ஜ்ஞாபகமாகும் போது ஏற்கெனவே யறிந்த தன்மையொன்று சொல்லியாக வேண்டும். ஜந்ம காரணத்வாதிகளைச் சொல்லுகிறோ மென்ன வேணும். அதைத் தெரிந்து கொள்ளாமல் ப்ரஹ்மபதார்த்தம் தெரிவிக்க முடியாததலால் அந்யோந்யாச்ரயம் அபரிஹார்யமாகும். ஆகவே ஜந்ம காரணத்வாதிகள் லக்ஷணமாகப் பொருந்தமாட்டாவென்று பூர்வபக்ஷம் ப்ராப்தமாகிறது..பரப்ரஹ்மம் ப்ரத்யக்ஷத்திற்கு விஷயமல்லாமையாலே அதற்கு ஒரு லக்ஷணமும் சொல்ல முடியாததலும், லக்ஷணத்தைக் கொண்டே எந்த வஸ்துவையும் அறிய வேண்டுமாதலாலும், லக்ஷணத்தின் அஸம்பவத்தினால் அறிய முடியாததான இந்த பரப்ரஹ்மத்தைப் பற்றி விசாரம் செய்வதெப்படி? என்கிற ஆக்ஷேபத்தைப் பரிஹரித்துக் கொண்டு "ஜந்மாத்யஸ்ய யத:" என்கிற இரண்டாவது ஸூத்ரம் தோன்றியுள்ளதென்று கூறிப் பூர்வபக்ஷத்தையும் விவரித்தேன். இனி ஸித்தாந்தம்;

723. ஒரு வஸ்துவுக்கு ஒரு லக்ஷணம் சொன்னோமானால் அந்த லக்ஷணமானது "மற்ற வஸ்துக்களிற் காட்டிலும் இந்த வஸ்து வேறுபட்டது" என்பதை நன்கு காட்டிக் கொடுக்குமென்று சொன்னோம். அப்படி வேறுபாட்டைக் காட்டுவதென்றால் என்ன? என்பதைச் சிறிது தெளிவாகத் தெரிந்து கொள்ள வேணும். விசேஷணங் களைக் கொண்டு நாம் வேறுபாட்டை யறிய வேணும். விசேஷ்யத்தில் ஏதோவொரு தர்மம் இருப்பதாக விசேஷணம் காட்டும்; அந்த தர்மத்திற் காட்டிலும் வேறுபட்டதான எந்த தர்மமும் அதில் இருக்கமாட்டாதென்று அதனால் தெரிந்து கொள்ளுகிறோமா? அல்லது அந்த தர்மத்திற்கு விருத்தமான வேறெந்த தர்மமும் அதில் இருக்கமாட்டாதென்று தெரிந்து கொள்ளுகிறோமா? என்று பரிசீலிக்க வேணும். விசேஷணத்தினா லேற்பட்ட தர்மம் தவிர வேறு எந்த தர்மமும் அதில் (விசேஷ்யத்தில்) இருக்கமாட்டா தென்று தெரிந்து கொள்ளுகிறோமென்று தேறுமாகில் முற்கூறிய பூர்வபக்ஷம் ஊர்ஜிதமாகும். உண்மையோ வென்னில்; அப்படியில்லை. ஒரு விசேஷணத்தினால் விசேஷ்யத்தில் ஒரு தர்மம் காட்டப்பட்டதேயானால் அதற்கு எதிரிடையான வேறு தர்மம் அதில் இருக்க மாட்டாதென்று நாம் தெரிந்து கொள்ளலாமே யன்றி அவிருத்தமான வேறெந்த தர்மமும் அதிலிருக்கமாட்டா தென்று நாம் தெரிந்து கொள்ள இயலாது. (உதாரணம்) "நீலோ

வ்ருஷப:" (கறுத்த எருது) என்கிறவொரு வாக்யத்தை யெடுத்துக் கொள்வோம். இதில் கருமை விசேஷணம். எருது விசேஷ்யம். நீல: என்கிற விசேஷணமானது இதர வ்யாவ்ருத்தியை (வேறுபாட்டை)க் காட்டுவதற்காகவே பிரயோகிக்கப்பட்டது. கறுப்பு நிறத்திற்கு விருத்தமான வெளுப்பு சிவப்பு முதலிய நிறங்கள் அந்த எருதினிடத்தில் இல்லையென்று இதனால் நாம் தெரிந்து கொள்ளலாமே யல்லது இதற்கு அவிருத்தமான த்ரவ்யத்வம் முதலிய தர்மங்களும் கூட அதில் இல்லையென்று நாம் தெரிந்து கொள்ளமுடியாது. லோகாநுபவம் அப்படியில்லை. ஒரு விசேஷ்யத்தில் பல பல தர்மங்கள் இருக்கலாம். விசேஷணத் தினால் அல்லது விசேஷணங்களினால் எந்தெந்த தர்மங்களின் ஸத்பாவம் ஏற்படுமோ அந்த தர்மங்கள் தவிர வேறு எந்த தர்மமும் அந்த விசேஷ்யத்தில் கிடையாதென்கிற ப்ரதிபத்தி ஒரு நாளும் ஒருவற்கும் உண்டாகமாட்டாது. அந்த தர்மங்களோடு முரண்படும்படியான தர்மம் இருக்கமாட்டா தென்கிற ப்ரதிபத்தியே விளையும். "யுவா நீலோ வாமந: பங்குச்ச தேவதத்த:" என்றால் யுவாவாயும் கறுத்தவனாயும் குள்ளனாயும் நொண்டியாயும் தேவதத்தனிருக்கிறான் என்று பொருள்படுகிறது. இதில் யுவா என்கிற விசேஷணமானது யௌவன முடையவனென்று காட்டி, யௌவன மென்கிற அந்த தர்மத்திற்கு விருத்தமான இளமையும் முதுமையுமில்லாதவன் என்று காட்டுமேயல்லது அதற்கு அவிருத்தமான நீலத்வம் வாமநத்வம் முதலிய தர்மங்களு மில்லாதவன் என்று காட்டமாட்டாதன்றோ? இப்படி ஒவ்வொரு விசேஷணத்தையு மெடுத்துக் கொண்டு விமர்சித்தறிக. விருத்தமான தர்மங்களும் ஏககாலத்தில் இருக்க முடியாதே யொழிய காலபேதத்தினால் அவையும் ஒரே வ்யக்தியினிடத்தில் இருக்கத் தடையில்லை. "நீலவஸ்த்ரதாரீ தேவதத்த:" என்றால் ஒரு காலத்தில் கறுப்புத் துணியை அணிந்தவனாயும் மற்றொரு காலத்தில் வெளுப்புத் துணியை யணிந்தவனாயு மிருப்பதில் விரோதமில்லாமையாலே நீல வஸ்த்ரதாரீ என்கிற இந்த விசேஷண மானது காலாந்தரத்தில் (அடுத்த க்ஷணத்திலேயே) ஸம்பவிக்கக் கூடிய ச்வேத வஸ்த்ரதாரணத்தைத் தவிர்க்க மாட்டாதன்றோ. விசேஷணங்களைப் பற்றி இங்ஙனே தெரிந்து கொள்ளக்கூடிய விஷயங்கள் பலவுள.

724. பிரகிருதத்தில் ஜந்மகாரணத்வம் ஸ்திதிகாரணத்வம் லயகாரணத்வமென்னும் இவை காலபேதத்தினால் ஒரு வ்யக்தியினிடத்திலேயே ஒன்று சேர்ந்திருக்கக் கூடியவை யாதலால் அவிருத்தங்களேயாகும். விலக்ஷண சக்தி யுக்தமான பர ப்ரஹ்மத்தினிடத்தில் ஏக காலத்திலேயும் இவை கூடும். ஆகவே ஜந்மகாரணத்வம் முதலிய லக்ஷணங்களி னால் பரப்ரஹ்மத்திற்கு பஹுத்வாபத்தி யென்பதில்லை. பர ப்ரஹ்மம் க்ஷேத்ரஜ்ஞர்களின் கருமங்களுக்குத் தக்கபடி ஸ்ருஷ்டி செய்யவேண்டிய காலத்தில் ஸ்ருஷ்டிப்பதும் பிரளயம் செய்ய வேண்டிய காலத்தில் அதை விதைப்பதும் அறுக்க வேண்டிய காலத்தில் அறுப்பதும் செய்வது போல் இதனைக் கொள்க.

அன்றியும், உத்தர நாராயண அநுவாகம் முதலானவற்றில் லக்ஷ்மீபதித்வம் முதலிய அஸாதாரண சின்னங்களினால் ப்ரதிபத்திக்கு விஷயமான வஸ்துவானது ஜந்ம காரணத்வம் முதலிய லக்ஷணங்களினால் ப்ரஹ்ம பதார்த்தமாக ஜ்ஞாபிக்கப்படுகிற

தென்றும் கொள்ளக் குறையில்லாமையாலே இரண்டாவது பக்ஷத்திலும் தோஷமில்லை. (முன்னே விவரிக்கப்பட்ட பூர்வபக்ஷத்தை யீண்டு நினைப்பது.) ஏவஞ்ச, ஜகஜ்ஜந்மாதி காரணத்வமானது விசேஷணமாகவும் உபலக்ஷணமாகவும் ப்ரஹ்மலக்ஷணம் ஆவதற்கு யாதொரு தடையுமில்லை யென்று தேறிற்று. இன்னமும் இங்கு விரிவாகத் தெரிவிக்க வேண்டுமவை பல வுண்டு. அவை சாஸ்த்ரஜ்ஞானிகளுக்கே க்ரஹிக்கவும் ரஸிக்கவுங் கூடியவை. ஆக ஜந்மாத்யதிகரண ஸாரார்த்தம் ஸம்க்ஷேபமாக விஜ்ஞாபித்தேன்.

725. இனி மூன்றாவதான சாஸ்த்ரயோநித்வாதிகரணம். ஜந்மாத்யதிகரணமென்கிற கீழதிகரணத்தில் பரப்ரஹ்மத்திற்கு ஜகஜ்ஜந்மாதி காரணத்வம் லக்ஷணமென்று தேறிற்று. இப்படிப்பட்ட லக்ஷணத்தோடு கூடிய பரப்ரஹ்மமானது ப்ரத்யக்ஷப்ரமாணத் தினால் தெரிந்து கொள்ளப்படாமற் போனாலும் அநுமாநப்ரமாணத்தினால் ஸித்திக்கக் குறையில்லாமையாலே அப்படி அநுமாநப்ரமாண ஸித்தமாகின்ற அந்தப் பரப்ரஹ்மத்தை வேதாந்த வாக்யங்களி னால் விசாரிக்க வேண்டிய அவச்யமில்லை என்றொரு ஆக்ஷேபந்தோன்ற, அதற்குப் பரிஹாரமாக இந்த சாஸ்த்ரயோநித்வ அதிகரணம் அவதரிக்கின்றது.

726. பரப்ரஹ்மமானது சாஸ்த்ரம் தவிர வேறொரு பிரமாணத்தினால் ப்ராப்தமாகக் கூடியதன்று என்றே கொண்டாலும் அந்த ப்ரஹ்மமானது ப்ரவிருத்தி நிவ்ருத்திகளுக்கு விஷயம் இல்லாமையினால் அப்படிப்பட்ட ப்ரஹ்மத்தை ப்ரதிபாதநம் செய்வதில் பலனொன்று மில்லாமையினால் அந்த ப்ரஹ்மத்தினிடத்தில் சாஸ்த்ரத்திற்கு ப்ராமாண்யம் ஸம்பவிக்க மாட்டாதாதலால் அந்த ப்ரஹ்மம் சாஸ்த்ர ப்ரதிபாத்ய மாவதற்கு வழியில்லை என்றொரு ஆக்ஷேபம் தோன்ற, அதற்குப் பரிஹாரமாக இந்த அதிகரணம் அவதரிக்கின்றது.

727. "தத் து ஸமந்வயாத்" (1–1–4) இந்த ஸூத்ரத்தில், 'ப்ரஹ்மண:' என்றொரு பதமும் 'சாஸ்த்ரேண' என்றொரு பதமும் அத்யாஹாரம் செய்து கொள்ள வேண்டும். (அதாவது வருவித்துக் கொள்ள வேண்டுமென்றபடி) தத் – கீழ் ஸூத்திரத்தில் சொல்லப்பட்ட சாஸ்த்ர ப்ரமாணகத்வமானது என்றபடி. புருஷார்த்தத்வேந ஸம்பந்தமே ஸமந்வயமாவது. பரப்ரஹ்மமானது சாஸ்த்ரத்தினால் புருஷார்த்தமாக ப்ரதிபாதிக்கப்படுகிறபடியினாலே அந்த ப்ரஹ்மத்திற்கு சாஸ்த்ர ப்ரமாணகத்வம் ஸம்பவிக்கக் குறையில்லை என்றதாக ஸூத்ரார்த்தம். இங்குப் பூர்வபக்ஷம்:– பரப்ரஹ்மத்தை சாஸ்த்ரம் ப்ரதிபாதிக்க வேண்டுமானால் அது வேறொரு ப்ரமாணத்தினால் அறியப்படாமலிருக்க வேணுமென்பது தவிர மற்றொரு தன்மையும் அதில் இருக்க வேணும். அது என்னென்னில்; தெரிந்து கொள்ள விரும்பக் கூடியதாயிருத்தல் என்கிற தன்மை ப்ரஹ்மத்தினிடத்தில் இருக்க முடியாதே. ஏனென்னில்; தெரிந்து கொள்ள வேணுமென்கிற விருப்பமானது உலகில் ப்ரயோஜநவத்தான விஷயத்தில்தான் உண்டாகும். இஷ்ட ப்ராப்தி அநிஷ்ட பரிஹாரம் என்கிற இரண்டோ இரண்டத்திலொன்றோ உலகில் ப்ரயோஜநமென்னத் தகுந்தது. இஷ்ட ப்ராப்தியானது ப்ரவ்ருத்தியினாலே விளையக்கூடியது. (யாகமென்கிற காரியத்தில் ப்ரவ்ருத்தியுண்டானால் ஸ்வர்க்கமென்கிற இஷ்டம் ப்ராப்தமாகிறது.) ப்ரவ்ருத்தியினால்

இஷ்ட ப்ராப்தியாவது போல, நிவ்ருத்தியினால் அநிஷ்டபரிஹார முண்டாகிறது. (மாம்ஸபக்ஷணமென்கிற காரியத்தில் நிவ்ருத்தி யுண்டானால் அநிஷ்டபரிஹார முண்டாகிறது) ப்ரக்ருதத்தில், பரப்ரஹ்மமானது ப்ரவ்ருத்திக்கோ நிவ்ருத்திக்கோ இலக்கன்றே. (வஸ்துவே கண்ணனுக்குத் தெரியாமையினால்.) ஆகவே ப்ரயோஜநவத்த்வம் சொல்ல முடியாது. ஆதலால் தெரிந்து கொள்ள விரும்பக் கூடியதாயிருத்தல் என்கிற தன்மை பரப்ரஹ்மத்திற்கு ஸம்பவிக்க முடியாதாகையாலே அந்த ப்ரஹ்மத்தை சாஸ்த்ரம் ப்ரதிபாதிக்கவல்ல தல்ல. ஆகவே சாஸ்த்ரத்தைக் கொண்டு ப்ரஹ்மவிசாரம் செய்யப்புகுவது ஒவ்வாது– என்று பூர்வபக்ஷம் ப்ராப்தமாக;

728. இதன் மேல் ஸித்தாந்தம் வருமாறு:– பரப்ரஹ்மத்திற்கு ப்ரயோஜநாந்தரவத்த்வம் ஸம்பவியாமற் போனாலும் பலபல வேதாந்த வாக்கியங்களினால் அதுதானே ஸ்வயம் ப்ரயோஜநம்– பரம புருஷார்த்தம் என்று அறிவிக்கப்படுகிறது. "புத்ரஸ் தே ஜாத:" (உனக்குப் பிள்ளை பிறந்தது) என்றும், "தவ க்ருஹே நிதிரஸ்தி" (உன் வீட்டில் நிதியுள்ளது) என்றும் சொன்னால் இந்த வாக்யங்களானவை பரமானந்தஹேதுவான புத்ரஜன்மத்தையும் நிதிஸத்பாவத்தையும் தெரிவிப்பது போல வேதாந்த வாக்யங்கள் பரமாநந்தஹேது பூதமும் பரமாநந்த ஸந்தோஹஸ்வரூபமுமான பரப்ரஹ்மத்தை ப்ரதிபாதனம் பண்ணுவது ஸமஞ்ஜஸமே யாகும். ஆவை அபௌருஷேயங்களாகை யாலே புருஷ புத்தியடியாக வரக்கூடிய ப்ரம ப்ரமாத விப்ரலிப்ஸைகள் அங்கு எண்ணத்தகாதவை. ஆகவே பொய் சொல்லி வஞ்சிக்கும் பேச்சுக்களல்ல வேதாந்த சாஸ்த்ரங்கள். அப்படிப்பட்டவற்றைக் கொண்டு ப்ரஹ்மவிசாரம் செய்வது பொருத்தமே யென்றதாயிற்று.

இந்த அதிகரணத்தின் ப்ரமேயத்தை யுட்கொண்டு பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவ உத்தர சதகத்தில் (21) "அத்ராஸ்தே நிதிரிதிவத்...ரங்கேச! த்வயி ஸகலாஸ் ஸமந்வயந்தே" என்கிற ச்லோகத்தை யருளிச் செய்துள்ளார்.

729. ஈக்ஷத்யதிகரணம். கீழே முடிந்திருக்கிற சதுஸ் ஸூத்ரியானது சாஸ்த்ராரம்ப ஸமர்த்தநபரமென்று நம் வேதாந்திகளின் ஸித்தாந்தம். சாரீரக மீமாம்ஸை யென்கிற இந்த சாஸ்த்ரம் ஆரம்பிக்க அவசியமில்லையென்று கிளர்ந்த சங்கைகள் கீழே நான்கு ஸூத்ரங்களினால் பரிஹரிக்கப்பட்டன வென்றபடி. முமுக்ஷுக்கள் விசாரித்தறிய வேண்டிய ப்ரஹ்மமானது முதல் ஸூத்ரத்திலே ப்ரஸ்தாவிக்கப்பட்டது. அந்த ப்ரஹ்மம் சேதநாசேதந விலக்ஷணமென்று விளங்க ஜகஜ்ஜந்மாதிகாரணத்வமாகிற லக்ஷணம் இரண்டாவது ஸூத்திரத்தில் கூறப்பட்டது. அந்த ப்ரஹ்மம் சாஸ்த்ரமொன்றிலேயே அறியக்கூடியது என்பது மூன்றாவதும் நான்காவதுமான இரண்டு ஸூத்ரங்களினால் மூதலிக்கப்பட்டது. இனி விசாரம் ஆரம்பிக்கப்படுகிறது. கீழே, பரப்ரஹ்மம் சாஸ்த்ரப்ரதிபாத்யம் என்று ஸித்தாந்தம் செய்ய நேர்ந்த போது பரப்ரஹ்ம அபுருஷார்த்தமென்கிற பூர்வபக்ஷம் தோன்றியிருந்தது; அபுருஷார்த்தமன்று, பரம புருஷார்த்தமேயென்று கீழே ஸமந்வயாதிகரணத்தில் நிரூபிக்கப்பட்டது. ஸத்வித்தையில் ப்ரதாநமென்கிற தத்வமே யன்றோ ஜகத்காரணமென்று காட்டப்பட்டிருக்கின்றது. அது அபுருஷார்த்தத்வேந ஹேயமென்று கபிலமஹர்ஷியினால் ஸாங்க்ய தந்த்ரத்தில் கூறப்பட்டிருக்கின்றதல்லவா?

ஆகவே, ப்ரஹ்மம் ஜகத் காரணமென்றும் அது புருஷார்த்தமென்றும் எங்ஙனே சொல்லக்கூடும்? என்கிற ஆக்ஷேபத்தைப் பரிஹரிக்க இவ்வதிகரணம்.

730. ''ஈக்ஷதேர் நாசப்தம்'' (1–1–5). (ஈக்ஷதே: ந அசப்தம்) என்று பதவிபாகம்; அசப்தமென்றது ப்ரதாநமென்றபடி. சப்தமாவது சாஸ்த்ரம்; சாஸ்த்ரத்தை ப்ரமாணமாகவுடையதல்லாமல் அநுமாநகம்யமானது ப்ரதாநம், ந–(அந்த ப்ரதாநமானது) ஸத்வித்யையிலுள்ளதாய் ஜகத்காரணத்தைச் சொல்லுமதான ஸச்சப்தத்தாலே வாச்யமன்று. ஏனென்னில்; ஈக்ஷதே: – அந்த ஸச்சப்த வாச்யவஸ்துவுக்கு ஈக்ஷணம் ஓதப்பட்டிருக்கையாலே என்பது ஸூத்ரத்தின் பொருள். சாந்தோக்ய உபநிஷத்தில் ''ஸதேவ ஸோம்ய! இதமக்ர ஆஸீத்'' என்றொரு வாக்யமுள்ளது. அது முதலான வாக்யத்தினால் சொல்லப்படுகிற வித்யை ஸத்வித்யையெனப்படும். அதில் ஸச்சப்தத்தாலே நிர்த்தேசிக்கப்பட்ட ஜகத்காரணவஸ்துவானது ஒன்று ஸங்கல்பித்ததாக அவ்விடத்திலேயுள்ள ''ததைக்ஷத பஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி''. இத்யாதி வாக்யத்தினால் சொல்லப்பட்டிருக்கிறபடியாலே ஸச்சப்த நிர்திஷ்டமான அந்த வஸ்துவானது பரப்ரஹ்மமாக இருக்கத் தக்கதேயல்லது ப்ரதாநமாக இருக்கத்தகாது என்பது ஸூத்ரத்தின் திரண்ட பொருள்.

பூர்வபக்ஷம்:– நாம் கண்ணால் காணும் ப்ரபஞ்சத்திற்கு இரண்டவஸ்தைக ளுண்டு, காரணாவஸ்தையென்றும் கார்யாவஸ்தையென்றும், ஸ்தூலமான நிலைமை கார்யாவஸ்தை, ஸூக்ஷ்மமான நிலைமை காரணவஸ்தை. அப்படிப்பட்ட காரணாவஸ்தையை ப்ரதிபாதிப்பதான வாக்யம். ''ஸதேவ ஸோம்ய இதமக்ர ஆஸீத்'' என்பதான சாந்தோக்யோபநிஷத் வாக்யம். அதில் ஸச்சப்தத்தாலோதப்பட்ட வஸ்துவானது ப்ரதாநமென்கிற த்ரிகுணத்ரவ்யமேயாக வடுக்கும். ஸத்வம் ரஜஸ்ஸு தமஸ்ஸு அகிய மூன்று குணங்களும் கூடிய கூட்டலாகிய ஜகத்துக்கு உபாதாந காரணம் எதுவோ; அதுவே ''ஸதேவ'' இத்யாதி ச்ருதியில் சொல்லப்பட்டிருப்பதனால் அந்த வஸ்து ஸத்வாதி குணத்ரயமாக இருக்க வேண்டிய அவச்யமுள்ளது. கார்ய வஸ்துவில் காணும் குணங்களெல்லாம் காரணவஸ்துவிலும் இருக்க வேண்டியது அவசியமாகையினாலே. ஆகவே ஸச்சப்தத்தால் குறிக்கப்பட்டுக் காரணபூதமான வஸ்து ப்ரதாநமேயாகும். ஆனால் ''ததைக்ஷத பஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி'' என்று அந்த வஸ்துவுக்கு ஈக்ஷணம் சொல்லப்பட்டிருக் கிறதே; அது எப்படி ஸம்பவிக்கும்? என்று கேள்வி பிறந்தால், சேதநவஸ்துவுக்கே அஸாதாரணமாயுள்ள முக்யமான ஈக்ஷணம் ஸம்பவிக்காமற் போனாலும், கார்யத்தில் உந்முகமாகையாகிற கௌணமான ஈக்ஷணமே. சொல்லப்படுகிறதென்று யாவரும் சொல்லித் தீரவேண்டுமே; அதே ப்ரகரணத்திலுள்ளதான ''ததைக்ஷத பஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி'' என்கிற வாக்யத்தினால் ஸச்சப்த நிர்திஷ்ட வஸ்துவுக்குத் தெரிவிக்கப்பட ஈக்ஷணமும் அவ்விதமாகவே கௌணமாக நிர்வஹிக்கக் குறையற்றதேயாம். ஆகவே ப்ரதாநமே காரண வஸ்துவாகக் கடவது.

731. இனி, ஸித்தாந்தம்;– சாந்தோக்ய உபநிஷத்தில் “ஸதேவ ஸோம்ய இதமக்ர ஆஸீத்” என்கிற வாக்யம் 6–2–1ல் உள்ளது. அது தன்னிலேயே மேலே 6–8–6ல் “ஸந்மூலாஸ் ஸோம்யேமா: ப்ரஜா: என்று தொடங்கி “ஸ ஆத்மா” என்கிறவளவாலே ப்ரஸ்துதமான ஸத்துக்கு சேதநத்வம் சொல்லியிருக்கையாலே “ததைக்ஷதபஹு ஸ்யாம் ப்ரஜாயேய” என்ற விடத்தில் சொன்ன ஈக்ஷணம் சேதநனுக்கு அஸாதாரணமாய் முக்யமான ஈக்ஷண மாகவே விவக்ஷிதமென்று விளங்குகிறது. ஆகவே ஸச்சப்தவாச்யமான ஜகத்காரண வஸ்து ப்ரதாநமென்ன வொண்ணாது. “தத் தேஜ ஐக்ஷத” இத்யாதிகளிலும் கௌணமான ஈக்ஷணம் விவக்ஷிதமன்று; முக்யமானதே விவக்ஷிதமென்று மேலே இரண்டாமத்யாயத்தின் இரண்டாவது பாதத்தில் உபபாதனம் செய்யப்படுகிறது.

732. மேலும் இந்த ப்ரகரணத்தில் (6–14–2ல்) “தஸ்ய தாவதேவ சிரம் யாவந் ந விமோக்ஷ்யே அத ஸம்பத்ஸ்யே” என்று ஓதப்பட்டிருக்கிறது. இதன் பொருளாவது ஸச்சப்தவாச்யத்தை உபாஸிப்பவனுக்கு அந்த ஸத்தைப் பெறுமதில் தேஹத்தில் நின்று விடுபடுமளவே தாமதம்; தேஹத்தில் நின்றும் விடுபட்டவுடனே ஸச்சப்த ப்ரோக்தமான காரண வஸ்துவை ப்ராபிக்கிறான் என்பதே. இதனால் ஸத்தையுபாஸிப்பவனுக்கு தேஹவியோகத் திற்குப் பிறகு மோக்ஷப்ராப்தி சொல்லியிருக்கையாலே மோக்ஷோபாய மான உபாஸநத்திற்கு இலக்கானது அந்த ஸச்சப்த நிர்திஷ்டமான வஸ்து– என்று நன்கு தெரிய வருகிறது. உபாஸநத்திற்கு லக்ஷ்யமாயிருக்குந் தன்மை ப்ரதாநத்திற்கு ஸம்பவிக்க மாட்டாது. ஆகவே காரண வாக்யத்திலுள்ள ஸச்சப்தத்தாலே ப்ரதாநம் விவக்ஷிதமென்கைக்கு ப்ரஸக்தியே யில்லை; அது விவக்ஷிதமாயிருந்தா லன்றோ அது அபுருஷார்த்தமாகையாலே ஹேயம் என்றெடுத்த வாதம் செல்லும். ஆகையாலே ஹேயத்வத்திற்கு இங்கு ப்ரஸக்தியே யில்லை. மோக்ஷோபாயத்வேந உபாதேயத்வமே விளங்காநின்றது.

733. இன்னமும்; ஸத்வித்யையின் தொடக்கத்தில் “யேநாச்ருதம் ச்ருதம்” இத்யாதியினாலே–ஒன்றைத் தெரிந்து கொண்டால் அதன் கார்யமான எல்லாவற்றையும் தெரிந்து கொண்டதாகு மென்பதை ப்ரதிஜ்ஞை பண்ணி, அவற்றுக்கு கார்ய காரணபாவத்தை உபபாதநம் பண்ணுவதற்காக “ஸதேவ ஸோம்ய இதமக்ர ஆஸீத்” என்று தொடங்கிற்று. ஆகவே எதைத் தெரிந்து கொண்டால் எல்லாம் தெரிந்து கொள்ளப்பட்டதாகுமோ அதுவே இங்கு ஸச்சப்தத்தினால் குறிக்கப்பட்டதாக வேண்டும். அது அசேதநமான ப்ரதாநமாக இருக்குமானால் அதைத் தெரிந்து கொண்டதனால் சேதநவஸ்துவைத் தெரிந்து கொண்டதாகுமா வென்று பார்க்க வேணும். இது ஸம்பாவிதமன்று. அந்த வஸ்து ப்ரதாநமன்றிக்கே பரப்ரஹ்மமாக இருந்தால் அஃதொன்றே ஸ்தூல ஸூக்ஷ்ம சேதநாசேதநங்களைச் சரீரமாக வுடையதாகையாலே கார்யத்வ காரணத்வங்களிரண்டும் அஃதொன்றுக்கேயுள்ள தென்னுமிடம் மேலே ப்ரக்ருத்யதிகரணத்திலே சொல்லப்படப் போகிறபடியாலே காரணமான அதனை அறிவதனாலே கார்யமானவதுவும் அறியப்பட்டதாகக் குறையில்லாமையாலே கீழ்க் கூறிய ப்ரதிஜ்ஞை உபபந்நமாகும்.

734. இன்னமும்; அதே சாந்தோயோபநிஷத்தில் மேலே ஸுஷுப்தியைச் சொல்லும் ப்ரகரணத்தில் (6–8–1ல்) "ஸதா ஸோம்ய கதா ஸம்பந்தோ பவதி" என்று, ஸுஷுப்தனுக்கு ஸச்சப்தத்தாலே குறிக்கப்பட்ட காரணவஸ்துவில் லயம் சொல்லி, உடனே "ஸ்வமபீதோபவதி" என்பதனால்– அந்த லயமானது ஜீவாத்மா தன்னில்தான் லயமடைந்தபடியென்றும் சொல்லிற்று. இது எப்போது பொருந்துமென்று பார்க்க வேணும். ஸச்சப்தத்தாலே குறிக்கப்பட்ட வஸ்துவானது ஜீவனுக்கு வாசகமான ஸ்வசப்தத்திற்கு வாச்யமாயிருந்தால் தான் பொருந்தும். (ஸச்சப்தவாச்யமும் ஸ்வசப்தவாச்யமும் ஒன்றாக இருந்தா லொழியப் பொருந்தமாட்டாதென்றபடி.) ஸச்சப்தவாச்யம் பரமாத்மாவாகவேயிருக்க வேணுமென்பது இதனாலும் தேறிற்று. ப்ரதாநம் இப்படியாக வழியில்லையே. எந்த வஸ்துவையும் சொல்லுகிற எந்த சப்தமும் பரப்ரஹ்மத்தைச் சொல்லி நிற்குமென்பது மேலே விளங்கும்.

735. இன்னமும் மஹோபநிஷத்து முதலானவற்றில் நாராயணாகிய பரப்ரஹ்மத்திற்கே ஜகத் காரணத்வம் கூறப்பட்டுள்ளது; ப்ரக்ருதத்தில் காரண வஸ்துவைச் சொல்லுமதான ஸச்சப்தம் ஸாமாந்ய சப்தமாகையாலே, ஸாமாந்யவிசேஷ ந்யாயத்தாலே இதற்கு விசேஷத்திலே பர்யவஸாநம் செய்து தீர வேண்டும். பரப்ரஹ்மத்தினிடத்திலே தான் அது ப்ராப்தமாகும். சாந்தோக்ய உபநிஷத்திலேயே "ஏஷ ஆத்மா அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யுர் விசோகோ விஜிகத்ஸோபிபாஸஸ் ஸத்யகாமஸ் ஸத்யஸங்கல்ப:" என்னுமிடத்தில் அபஹதபாப்மத்வம் முதலான குணங்களையுடைய நாராயணனுக்கே முமுக்ஷூபாஸ்யத்வம் ஓதப்பட்டிருக்கையாலே அப்பெருமானுக்கே காரணத்வம் ஸித்திக்கையாலே ப்ரதாநமென்பது ப்ரக்ருதத்தில் காரண வாசகமான ஸச்சப்தத்திற்கு வாச்யமாக வழியில்லை. ஆகவே ஸாங்க்யோக்த ப்ரதாநத்திற்கு இங்கு ப்ரஸக்திலேசமு மில்லை யென்றதாயிற்று. ஸத்வ ரஜஸ் தமோ குணமயமான ஜகத்துக்கு அப்படிப் பட்ட ப்ரதாநமே காரணமாயிருக்கத் தகும்– என்கிறவாதம் விலக்ஷணத்வாதிகரணத்தில் பரிஹரிக்கப்படும்.

இந்த ஈக்ஷத்யதிகரணத்தில் "ஈக்ஷதேர் நாசப்தம்" என்கிற தலையான ஸூத்ரம் தவிர "கௌணச்சேத் நாத்ம சப்தாத்" தந்நிஷ்டஸ்ய மோக்ஷோபதேசாத்" ஹேயத்வாவசநாச்ச" ப்ரதிஜ்ஞா விரோதாத்" கதிஸாமாந்யாத்" ச்ருதத்வாச் ச" (1–1–12) என்கிற ஏழு ஸூத்ரங்களு முள்ளன. அவற்றின் பொருளும் கீழே விவரிக்கப்பட்டு விட்டன.

736. இனி ஆனந்தமயாதிகரணம் பற்றி விளக்கப்படுகிறது. கீழே சென்ற ஈக்ஷத்யதிகரணத்தில்–ஜகத்காரண வஸ்துவுக்கு ஸங்கல்ப விசேஷம் ஓதப்பட்டிருத்தலால் அந்த ஸங்கல்பம் கௌணமன்றிக்கே முக்யமாகவே நிர்வஹிக்கப்பட வேண்டுமாதலால் அப்படிப்பட்ட ஸங்கல்பத்திற்கு ஆச்ரய பூதமான ஜகத்காரணவஸ்து அசேதமான ப்ரதானமாயிருக்க முடியாதென்று நிரூபிக்கப்பட்டது. இனி அசேதந வஸ்து ஜகத்காரணமாக வேண்டா; ஜீவனே ஜகத்காரணமாயிருக்கட்டுமே; அவனுக்கு ஸங்கல்பமாகிற ஈக்ஷணம் முக்ய்யமாகவே ஸம்பவிக்குமன்றோவென்று சங்கையுண்டாக; அதற்குப் பரிஹாரமாய் இந்த ஆனந்தமயாதிகரணம் அவதரிக்கின்றது.

737. ஆநந்தமயோப்யாஸாத் (1-1-13) ஆநந்தமய: அப்யாஸாத் என்று பதவிபாகம். இதற்கு மேலுள்ளதான அந்தரதி கரணத்தின் இரண்டாவது ஸூத்ரமான "பேதவ்யபதேசாச்சாந்ய" என்கிற ஸூத்ரத்திலிருந்து அந்ய: என்னும் பதமொன்று இங்கே வருவித்துக் கொள்ள வேண்டும். ஆகவே ஆநந்தமய:அந்ய: அப்யாஸாத் என்றதாயிற்று. ஆநந்தமய:- ஆநந்தமய சப்தத்தினால் குறிக்கப்பட்ட புருஷன், (அந்ய:) - ஜீவாத்மாவிற் காட்டிலும் வேறுபட்ட பரமாத்மாவேயாகக் கடவன்; ஏனென்னில்; அப்யாஸாத்-அளவு கடந்ததாகவோதப்பட்ட ஆனந்தமுடைமை யானது துக்கமிச்ரனான ஜீவாத்மாவுக்கு இணங்கமாட்டாமல் பரமாத்மாவுக்கே இணங்குமதாகையாலே என்பது ஸூத்ரத்தின் பொருள். தைத்திரீய உபநிஷத்தில் ஆநந்தவல்லியென்பது ஒரு பகுதி; அதில் ஆநந்தமயவித்யா ப்ரகரணத்தில் (1) "தஸ்மாத் வா ஏ தஸ்மாத் விஜ்ஞாநமயாத், அந்யோந்தர ஆத்மா ஆநந்தமய:" என்கிற வாக்யத்தினால் ஆநந்தமயனாக ஆத்மாவைப் ப்ரஸ்தாவித்து அதற்கு மேல் (2) "ஸைஷா ஆநந்தஸ்ய மீமாம்ஸா பவதி" என்று தொடங்கி (3) "தே யே சதம் ப்ரஜாபதேராநந்தா: ஸ ஏகோ ப்ரஹ்மண ஆநந்த: ச்ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய" என்கிற வாக்யத்தினால் முக்தனுக்கும் அப்படிப்பட்ட ஆனந்தமுடைமை சொல்லிற்று. அகாமஹதனென்றது விஷய விரக்தனென்றபடி. ச்ரோத்ரியனென்றது வேதாந்த ச்ரவணம் பண்ணினவனென்றபடி. வேதாந்த ச்ரவணம் செய்து ப்ரஹ்மோபாஸனத்தினால் முக்தி பெற்றவனென்று தேர்ந்த பொருள். நூறு மடங்காகப் பெருக்கப்பட்ட சதுர்முக ஆந்தமானது முக்தனுக்கு ஒரு ஆநந்தம் என்று சொல்லிற்றாயிற்று. இங்கு முக்தனுக்குச் சொல்லப்பட்ட ஆனந்த மானது பரப்ரஹ்மத்தின் உபாஸனத்தினால் விளைவது என்று (ச்ரோத்ரிய பதத்தினால்) சொல்லப்பட்டுள்ளது. ஆகவே முக்தாநந்தமானது உபாஸந ப்ரீதனான பகவானுடைய ஸங்கல்பத்தினால் உண்டு பண்ணப்பட்ட தென்னுமிடம் தேறுகின்றது. (முக்தாநந்தம் நிரூபாதிகமன்று. ஸோபாதிகம் என்றதாகத் தேறுகிறது.) "ஸ ஏகோ ப்ரஹ்மண ஆநந்த:" என்கிற விடத்திலோவென்னில், காரணமொன்றும் சொல்லப்பட்டிராமையினால் பரப்ரஹ்மத்தி னுடைய ஆனந்தமானது வேறொருவ ருடைய ஸங்கல்பாதீநமன்றிக்கே இயற்கையானதென்னுமிடம் நன்கு தெரியவருகிறது. நிரூபாதிகமான ஆனந்தம் உடைமை பரப்ரஹ்மத்திற்கேயொழிய வேறொருவற்குமில்லை யென்று தேறுதலால் அப்படிப்பட்ட ஆனந்தம் உடையதாக ஆனந்தமய சப்தத்தினால் நிர்தேசிக்கப்பட்ட வஸ்து ஜீவனிற் காட்டிலும் வேறான பரப்ரஹ்மமே என்றபடி.

738. தைத்திரீயோபநிஷத்திலுள்ள ஆனந்தவல்லியை 'ஆனந்தமயவித்யா' என்று வேதாந்திகள் வழங்குவர். அந்த வித்யையில் "கோஹ்யேவாந்யாத் க: ப்ராண்யாத், யதேஷ ஆகாச ஆனந்தோ ந ஸ்யாத், ஏஷ ஹ்யேவாநந்தயாதி" என்று ஓதப்பட்டிருக்கின்றது. இதன் பொருளாவது- கீழே சொல்லப்பட்ட ஆகாச சப்தவாச்யமான வஸ்துவானது நிரூபாதிகமாயும் அபரிச்சிந்நமாயுமிருக்கிற ஆனந்தத்தை உடையதல்லாமல் இருக்குமானால், பிரமன் முதற்கொண்டு எறும்பு வரையிலுமுள்ள ஜந்து ஸமூஹங்களில், கோ வா அந்யாத் = எந்த ஜந்து தான் மோக்ஷானந்தத்தையடைய முடியும்? ஏஷ ஏவ ஹி =

இந்த ஆனந்தமயனான ஆத்மாவேயன்றோ ஆநந்தயாதி–ப்ராக்ருதமாயும் அப்ராக்ருதமாயுமுள்ள எல்லா விதமான ஆனந்தத்தையும் விளைவிக்கின்றது. (ஆநந்தயதி என்கிற சொல் வடிவத்தில் யகாரம் நீண்டிருப்பது சாந்தஸ மென்றுணர்க.) இங்கே இப்படிச் சொல்லியிருப்பதும் தவிர உத்தர நாராயணாநுவாகத்திலும் "தமேவம் வித்வாந் அம்ருத இஹ பவதி, நாந்ய: பந்தா வித்யதே அயநாய" என்பதனாலும் இவ்வர்த்தமே நிலைநாட்டப் பட்டிருக்கின்றது. ஏவம் தம் வித்வாந்– இவ்விதமாக அந்த மஹாபுருஷனை உபாஸிப்பவன் அம்ருதோ பவதி–மோக்ஷாநந்தத்தைப் பெற்றவனாகிறான். அயநாய– அந்த மோக்ஷானந்த ப்ராப்தியின் பொருட்டு, அந்ய: பந்தா ந வித்யதே– அந்த மஹாபுருஷனைத் தவிர்த்து வேறு உபாயமில்லை என்பது இந்த ச்ருதிவாக்யத்தின் பொருள். "ஏஷ ஹ்யேவாநந்தயாதி" என்ற ச்ருதிவாக்யத் தில் அந்வயமுகேந தெரிவிக்கப்பட்ட அர்த்தமே "நாந்ய: பந்தா வித்யதே அயநாய" என்கிற ச்ருதி வாக்யத்தில் வ்யதிரேகமுகேந தெரிவிக்கப்பட்டிருக் கின்றது என்னுமித்தனையே வாசி. ஆக உபயச்ருதிகளும் ஏகார்த்தமாயிருக்கை யினாலே உத்தர நாராயணநுவாக வாக்யம் லக்ஷ்மீபதியையே விஷயமாகக் கொண்டிருப்பது போலவே ஆநந்தமய வித்யையிலும் அப்பெருமானே விஷயபூதன் என்னுமிடம் அறியவெளிது.

இன்னமும், ஆநந்தமய வித்யையில் "ஸ யச்சாயம் புருஷே, யச்சாஸவாதித்யே, ஸ ஏக:" என்கிற வாக்யத்தினால் ஆனந்தமயனையும் ஆதித்யமண்டலத்தி னுள்ளேயுள்ள புண்டரீகாக்ஷனையும் ஒன்றாகச் சொல்லியிருப்பதனாலே அந்த புண்டரீகாக்ஷனே ஆனந்தமயன் என்று தேறி நிற்கிறது. ஆக இப்படிப்பட்ட அடையாளங்களினால் ஆநந்த மய வித்யாவேத்யனும் புண்டரீகாக்ஷனுமான வன் பரம புருஷனேயென்று தேறும்.

739. பூர்வபக்ஷம்:– ஆநந்தவல்லியில் (ப்ரஹ்மவிதாப்நோதி பரம்) என்று ப்ரஹ்மத்தை ப்ரஸ்தாவித்து "ஸத்யம் ஜ்ஞானமநந்தம் ப்ரஹ்ம" என்று அந்த ப்ரஹ்மத்தின் லக்ஷணங்கூறி, "தஸ்மாத் வா ஏதஸ்மாதாத்மந ஆகாசஸ் ஸம்பூத:" இத்யாதி வாக்யத்தினால் அந்த ப்ரம்மம் ஆத்மாவென்னுமிடத்தையும் அதில் நின்றும் ஆகாசாதி பதார்த்தங்களின் உத்பத்தியையுஞ் சொல்லி, "தஸ்மாத் வா ஏதஸ்மாத் விஜ்ஞானமயாத், அந்யோந்தர ஆத்மா ஆநந்தமய:" என்றவளவால் உபக்ராந்தமான ஆத்மோபதேச பரம்பரையானது அநந்தமயனில் ஸமாப்தி செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே உபக்ரமிக்கப்பட்ட ப்ரஹ்மம் ஆநந்தமயனான ஆத்மாவேயென்று நிச்சயிக்கப்படுகிறது. அந்த ஆநந்தமய ஆத்மாவுக்கு "தஸ்யைஷ ஏவ சாரீர ஆத்மா" என்று உத்தர வாக்யத்தில் சரீரஸம்பந்தித்வமாகிற சாரீரத்வம் சொல்லப்பட்டிருக்கின்றது. கர்மபரவசனான ஜீவாத்மாவுக்கே கர்மபலாநுபவார்த்தமாக சரீர ஸம்பந்தம் ஸம்பவிக்கும்; அகர்மவச்யனான பரமபுருஷனுக்கு அது ஸம்பவிக்க நியாயமில்லை. ஆகவே சரீரஸம்பந்தமுடையவனாக ஓதப்பட்ட இந்த ஆநந்தமயனான ஆத்மா ஜீவாத்மாவென்றே நிச்சயிக்கலாகிறது.

இந்த பூர்வபக்ஷத்தின் மேல் ஸித்தாந்தம்: நிருபாதிகமான ஆனந்தம் உடைமை முதலிய குணங்கள் ஜீவாத்மாவுக்கு ஸம்பவிக்கமாட்டா வாகையாலும், ஸகல சராசரங்களையும் சரீரமாகக் கொண்டவனாக வோதப்படுகின்ற பரமாத்மாவுக்கு

அப்படிப்பட்ட ஸகல சரீரத்வமாகிற சாரீரத்வம் நன்றாக ஸம்பவிக்கக் கூடியதாதலால் பரமாத்மாவே நிருபாதிக ஆனந்தவானாகக் கடவன். ஆநந்தமய: என்றவிடத்திலுள்ள மயட் ப்ரத்யயத்திற்கு விகாரம் அர்த்தமாகையாலே விகாரமற்றவனான பரமாத்மாவுக்கு ஆநந்த விகாரத்வம் பொருந்தமாட்டாதென்கிற வாதமும் அனுபபந்நம்; மயட்டுக்கு விகாரமே அர்த்தம் என்கிற நிர்ப்பந்தமில்லை; "அந்நமயோ யஜ்ஞ:" என்று சொன்னால் அந்நவிகாரமென்று பொருளன்றே; இங்கு மயட்டுக் ப்ராசுர்யமேயன்றோ பொருள். (ப்ராசுர்யமாவது–மலிவு) அன்னம் மலிந்த வேள்வி என்பது தானே பொருளாகிறது. இப்படியே இங்கும் "ஆனந்தம் மலிந்தவன் பரமாத்மா" என்றே பொருள்படக் குறையில்லாமையாலே விகாரவாதம் அப்ரஸக்தம். அடுத்தபடியாக "யதோ வாசோ நிவர்த்தந்தே, அப்ராப்ய மநஸா ஸஹ, ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந், ந பிபேதி குதச்சந" என்று வாக்குக்கும் நெஞ்சுக்கு மெட்டாதபடி அப்ரமேயமான ஆனந்த முடையனாக வோதப்பட்ட பரமாத்மாவினிடத்திலேயே யன்றோ மலிந்த ஆனந்தமுடைமை தேறக் கூடியது.

740. இதற்கு மேல் ஒரு வாதம் தோன்றக் கூடும்; ஆநந்த ப்ராசுர்யமாவது ஆனந்தத்தினுடைய ஆதிக்யமே யாகும். ஆனந்தம் அதிகமென்று சொன்னால் ஆனந்த ப்ரதிகோடியான துக்கம் சிறிது உண்டென்று தோன்றியே தீருமல்லவா? (ஆதிக்யமென்பது ப்ரதியோகியை அபேக்ஷித்திருக்குமாகையாலே எதைக் காட்டிலும் அதிகமென்று கேள்வியுண்டாக, துக்கத்திற் காட்டிலும் அதிகமென்று சொல்லியாக வேண்டுமாகையாலே ஆநந்தமயனென்று கொள்ளப்பட்ட பரம புருஷனிடத்தில் துக்க ஸம்பந்தம் இசையப் பட்டதாகவேயாயிற்று என்றபடி.) ஏவஞ்ச, அகிலஹேயப்ரத்யநீக கல்யாணைகதாந மென்னப் படுகிற பரப்ரஹ்மத்தினிடத்தில் சிறிதளவுகூட ஹேயஸம்பந்தம் ஸம்பவிக்க மாட்டாதாகையாலே, ப்ரசுராநந்தசாலித்வ மென்று பரிஷ்கரிக்கப்பட்ட ஆநந்த மயத்வமும் அங்குச் சொல்லுவதற்கில்லை என்பதாக–. இதுவும் பிசகு. அந்த ஆனந்த ப்ராசுர்யத்தை விவரிக்கப் புகுந்த "ஸைஷா ஆநந்தஸ்ய மீமரம்ஸா பவதி" இத்யாதியான ஆநந்தமீமாம்ஸையில் "தேயே சதம் ப்ரஜாபதேராநந்தா:" என்கிற வளவாக ப்ரஸ்தாவிக்கப்பட்ட சதுர்முக பர்யந்த ஸகல ஜீவர்களின் ஆனந்தத்திற் காட்டிலும் நூறு மடங்கு அதிகமாயிருக்கையாகிற ப்ராசுர்யமே ஆநந்தமய சப்தத்தினால் விவக்ஷிதமாக விவரித்திருக்கையாலே ப்ரஸ்துதனான ஆநந்தமய ஆத்மாவில் ஆநந்தமயன் என்கிற சொல்லிலிருந்து துக்க ஸம்பந்தம் ப்ரஸங்கிக்க விரகில்லை.

741. "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம, யோ வேத நிஹிதம் குஹாயாம் பரமே வ்யோமந், ஸோச்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ, ப்ராஹ்மணா விபச்சிதேதி" என்கிற முந்தின வாக்யத்தில் ஜீவாத்மா ப்ரஹ்மத்தை யுபாஸித்து அந்த ப்ரஹ்மத்தையடைவதாகச் சொல்லியிருக்கையாலே, ஜீவாத்மா ப்ராப்தா வென்றும் பரமாத்மா ப்ராப்யனென்றும் இப்படி வாசி குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்கு மேல் ஒன்று சொல்லலாம்; பத்தாவஸ்தையிலுள்ள ஜீவன் ப்ராப்தா வாகிறான்; முக்தாவஸ்தையில் அவனே ப்ராப்யனாகிறான் என்று சொல்லக் குறையில்லாமையாலே ஜீவாத்மாவாகிய வொருவனுக்கே அவஸ்தா பேதத்தினால்

ப்ராப்த்ருத்வமும் ப்ராப்யத்வமும் கூடுமாகையாலே ஜீவாத்ம பரமாத்மாக்களுக்கு இத்தால் பேதம் ஸித்திக்க வழியில்லை யென்று. இந்த வாதமும் பிசகு. "ப்ரஹ்மணா விபச்சிதா" என்று ப்ராப்யமான ப்ரஹ்மத்திற்கு நிருபாதிகமான விபச்சித்த்வம் (அதாவது– ஸர்வஜ்ஞத்வம்) சொல்லப்பட்டிருக்கின்றது. அது ஜீவாத்மாவுக்கு முக்தாவஸ்தையிலும் ஸம்பவிக்கமாட்டாது. "விபச்சிதா ப்ரஹ்மணா" என்று சொல்லப்பட்ட விபச்சித்த்வமானது "தஸ்மாத் வா ஏதஸ்மாதாத்மந ஆகாசஸ் ஸம்பூத:" என்று அடுத்தபடியாகச் சொல்லப்படும் ஜகத்ஸ்ருஷ்டிக்கு உபயுக்தமான ஸர்வஜ்ஞத்வமன்றோ.

742. முண்டகோபநிஷத்தில் "யஸ் ஸர்வஜ்ஞஸ் ஸர்வவித், யஸ்ய ஜ்ஞாநமயம் தப: தஸ்மா தேதந் ப்ரஹ்ம நாம ருபமந்நஞ் ய ஜாயதே" என்று பரப்ரஹ்மத்திற்கு ஜகத் ஸ்ருஷ்டிக்கு வேண்டிய ஸர்வஜ்ஞத்வத்தைச் சொல்லி உடனே ஸ்ருஷ்டி கர்த்ருத்வத்தைச் சொல்லியிருப்பது போல இங்கும் மேலே சொல்லப்படபோகிற ஜகத் ஸ்ருஷ்டிக்கு உபயுக்தமான ஸர்வஜ்ஞத்வத்தை முன்னே சொல்லி உடனே ஸ்ருஷ்டி கர்த்ருத்வம் சொல்லுவதாக நன்கு தெரிய வருகிறது. ஆதலால் இங்கு விபச்சித் சப்தத்தினால் சொல்லப்படுகிற ஸர்வஜ்ஞத்வத்திற்கு உபாதியொன்றும் சொல்லப்படாமையினால் நிருபாதிகமான ஸர்வஜ்ஞத்வமே சொல்லிற்றாக விளங்குகிறது. அப்படிப்பட்ட நிருபாதிக ஸர்வஜ்ஞத்வம் முக்தாவஸ்தையில் கூட ஜீவனுக்கு ஸம்பவிக்க மாட்டாதாகையினாலே, ப்ராப்யமாக ஓதப்பட்ட ப்ரஹ்மம் பத்தாவஸ்தையிலும் முக்தாவஸ்தையிலு முள்ள ஜீவனிற் காட்டிலும் வேறுபட்ட தென்றே நிச்சயிக்கப்படுகிறது. ஆகவே நிருபாதிக ஸர்வஜ்ஞத்வத்தையுடைய இந்த ப்ரஹ்மத்திற்கே "தஸ்மாத் வா ஏதஸ்மாதாத்மந:" என்கிற மேல் வாக்யத்தில் ஆத்மத்வத்தையோதி, ஸ்தூலாருந்ததீந்யாயத்தின்படி அந்த ஆத்மா "அந்யோந்தர ஆத்மா ஆனந்தமய:" என்று உபஸம்ஹரிக்கப் படுவதாக விளங்குகின்றது. ஆதலால் இந்த ஆநந்தமயாத்மா ஜீவனல்ல என்று நன்கு தேறுகின்றது.

743. இனி அந்தரதிகரணத்தின் ப்ரமேயம் கூறப்படுகிறது. கீழ் ஆனந்தமயாதிகரணத்தில் ஆனந்தமயன் பரமபுருஷனேயென்று நிஷ்கர்ஷிக்கப் பட்டாலும், ஆனந்தமயனான புருஷன் ஜீவனாக இருக்கலாமென்று வேறொரு ப்ரகாரமாக சங்கையுண்டாக, அதைப் பரிஹரிக்கும் பொருட்டு இந்த அதிகரணம் ப்ரவர்த்திக்கிறது.

744. அந்தஸ் தத்தர்மோபதேசாத் (1–1–21) என்பது ஸூத்ரம். இங்கு "பேதவ்யபதேசாச்சாந்ய:" என்கிற மேல் ஸூத்திரத்திலிருந்து அந்ய: என்கிற பதம் வருவித்துக் கொள்ளப் படுகிறது. அந்த:– ஆதித்ய மண்டலத்தினுள்ளே உறையும் புருஷன். அந்ய:– ஜீவனைக் காட்டிலும் வேறுபட்ட பரமபுருஷன்; தத்தர்மோபதேசாத் –அந்த பரமபுருஷனுக்கே அஸாதாரணமாக வுரிய தர்மங்களை இங்கு ஓதியிருப்பத னாலே –என்று ஸூத்ரத்திற்குப் பொருள்.

745. சாந்தோக்ய உபநிஷத்தில் (அத ய ஏஷோந்தராதித்யே ஹிரண்மய: புருஷோ த்ருச்யதே) என்று தொடங்கியுள்ள பகுதிக்கு அந்தராதித்யவித்யை யென்று பெயர். அந்த வித்யாப்ரகரணத்தில் "ஹிரண்யகேச: ஆப்ரணகாத் ஸர்வ ஏவ ஸுவர்ண: தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ தஸ்ய உதிதி நாம, ஸ ஏவ ஸர்வேப்ய: பாப்மப்ய உதித:

உதேதி ஹ வை ஸர்வேப்ய: பாப்மப்யோ ய ஏவம் வேத.'' என்று ஓதப்பட்டுள்ளது. இங்கு ஆதித்ய மண்டலத்தினுள்ளே உறையும் புருஷனுக்கு ''யதா கப்யாஸம் புண்டரீக மேவமக்ஷிணீ'' என்பதனால் செந்தாமரை போன்ற திருக்கண்ணுடைமையைச் சொல்லியிருப்பதனாலும், அபஹதபாப்மத்வத்தில் பர்யவஸிக்குமதான ஸர்வபாப்மோதிதத்வம் சொல்லியிருப்ப தனாலும் ஸர்வபாப விநிர்முக்தத்வமாகிற மோக்ஷ புருஷார்த்த ப்ராப்திக்கு உபாயமான உபாஸநத்திற்கு விஷயபூதமான வஸ்துவென்று சொல்லியிருப்பதனாலும், அபஹத பாப்மத்வமாகிற லிங்கத்தினால் ''ஏஷ ஸர்வபூதாந்தராத்மா அபஹத பாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண:'' என்று ஸுபாலோபநிஷத்தில் அபஹத பாப்மாவாக வோதப்பட்ட நாராயணனை நினைப்பூட்டுவ தனாலும், மோக்ஷத்திற்கு உபாயமான உபாஸநத்திற்கு விஷயபூதமாகச் சொன்னதனாலும், ''தமேவம் வித்வாந் அம்ருத இஹ பவதி'' என்று புருஷ ஸூக்தத்தில் சொல்லப்பட்ட மஹாபுருஷனை நினைப்பூட்டுவதனாலும்,புண்டரீகாக்ஷத்வம் நாராயணனிடத்திலேயே ஸுப்ரஸித்தமாகை யாலும், ஆக இவ்வளவு உபபத்திகளைக் கொண்டு ஆதித்யமண்டலத்தினுள் உறையும் புருஷன் பரமபுருஷனென்றே நிர்ணயிக்கப்படுகிறது.

746. இங்கு பூர்வபக்ஷம்:– கீழ் ஆநந்தமயாதிகரணத்தில் ''தஸ்யைஷ ஏவ சாரீர ஆத்மா'' என்று ஆநந்தமய ஆத்மாவுக்கு சரீரஸம்பந்தம் சொல்லியிருக்கையாலே ஆனந்தமயன் சரீர ஸம்பந்தமுள்ள ஜீவனாகத் தானிருக்க வேணுமென்று பூர்வபக்ஷம் ப்ராப்தமான போது ''நிருபாதிகமான ஆனந்தமுடைமை'' என்பது முதலான ஹேதுக்களினால் ஜீவனிற் காட்டில் வேறுபட்டவனே ஆனந்தமயனென்று ஸாதிக்கப்பட்டது. அது பொருந்தாது. ஏனென்னில்; அவ்விடத்தில் அந்த ஆனந்தமயனுக்கு '' ஸ யச்சாயம் புருஷே யச்சாஸாவாதித்யே. ஸ ஏக:'' என்று ஆதித்யனென்கிற தேவதா விசேஷத்தோடு ஐக்யம் சொல்லியிருக்கை யாலும் ஆதித்யனாகிற அந்த தேவதா விசேஷத்திற்கு அந்தராதித்ய வித்யையில் கேசம் ச்மச்ரு நகம் கண் முதலியவற்றோடு கூடிய மிக ரமணீயமான சரீரமுடைமை சொல்லியிருக்கையாலும் அந்த சரீரமானது மிகுந்த புண்ய விசேஷ மாத்திரத்தினால் அமைந்ததென்னுமிடம் அங்கே ஸர்வ பாபராஹித்யம் சொல்லியிருப்பதனாலே ஸித்திக்கிறபடியாலும் அப்படிப்பட்ட சரீர ஸம்பந்தத்தையே ஆனந்தவல்லியில் சாரீர சப்தத்தினால் க்ரஹிப்பது உசிதமாயிருப்ப தனாலும், அப்படிப்பட்ட சரீரமுடைமை அகர்மவச்யமென்று அபிமானிக்கப்படுகிற பரப்ரம்மத்தினிடத்தில் ஸம்பவிக்கமாட்டா தாகையாலும் ஆதித்யனென்கிற ஒரு ஜீவனே மிகுந்த புண்ய விசேஷ வசத்தினால் ஐச்வர்ய விசேஷத்தை யடைந்தவனாகி ஜகத்காரண பூதனாக ஆனந்தவல்லியில் பிரதிபாதிக்கப் படுகிறான் – என்று.

747. இந்த பூர்வபக்ஷத்தின் மேல் ஸித்தாந்தம் வருமாறு:– இவ்விடத்தில் ஆதித்ய மண்டலத்திலுள்ளுறையும் புருஷனுக்கு மிகுந்த புண்ய விசேஷமடியாக வரும் சரீர விசேஷ ஸம்பந்தம் சொல்லப்படுவதன்று. ஏனென்னில் தஹரவித்யாப்ரகரணத்தில் ''ந ஸுக்ருதம் ந துஷ்க்ருதம் ஸர்வே பாப்மாநோதோ நிவர்த்தந்தே. அபஹதபாப்மா ஹ்யேஷ ப்ரஹ்மலோக:'' என்கிறவிடத்தில் சொல்லப் பட்ட அர்த்தமே இங்கு (அந்தராதித்ய

ப்ராப்த்ருத்வமும் ப்ராப்யத்வமும் கூடுமாகையாலே ஜீவாத்ம பரமாத்மாக்களுக்கு இத்தால் பேதம் ஸித்திக்க வழியில்லை யென்று. இந்த வாதமும் பிசகு. ''ப்ரஹ்மணா விபச்சிதா'' என்று ப்ராப்யமான ப்ரஹ்மத்திற்கு நிருபாதிகமான விபச்சித்த்வம் (அதாவது– ஸர்வஜ்ஞத்வம்) சொல்லப்பட்டிருக்கின்றது. அது ஜீவாத்மாவுக்கு முக்தாவஸ்தையிலும் ஸம்பவிக்கமாட்டாது. ''விபச்சிதா ப்ரஹ்மணா'' என்று சொல்லப்பட்ட விபச்சித்த்வமானது ''தஸ்மாத் வா ஏதஸ்மாதாத்மந ஆகாசஸ் ஸம்பூத:'' என்று அடுத்தபடியாகச் சொல்லப்படும் ஜகத்ஸ்ருஷ்டிக்கு உபயுக்தமான ஸர்வஜ்ஞத்வமன்றோ.

742. முண்டகோபநிஷத்தில் ''யஸ் ஸர்வஜ்ஞஸ் ஸர்வவித், யஸ்ய ஜ்ஞாநமயம் தப: தஸ்மா தேதந் ப்ரஹ்ம நாம ருபமந்நஞ் ய ஜாயதே'' என்று பரப்ரஹ்மத்திற்கு ஜகத் ஸ்ருஷ்டிக்கு வேண்டிய ஸர்வஜ்ஞத்வத்தைச் சொல்லி உடனே ஸ்ருஷ்டி கர்த்ருத்வத்தைச் சொல்லியிருப்பது போல இங்கும் மேலே சொல்லப்படபோகிற ஜகத் ஸ்ருஷ்டிக்கு உபயுக்தமான ஸர்வஜ்ஞத்வத்தை முன்னே சொல்லி உடனே ஸ்ருஷ்டி கர்த்ருத்வம் சொல்லுவதாக நன்கு தெரிய வருகிறது. ஆதலால் இங்கு விபச்சித் சப்தத்தினால் சொல்லப்படுகிற ஸர்வஜ்ஞத்வத்திற்கு உபாதியொன்றும் சொல்லப்படாமையினால் நிருபாதிகமான ஸர்வஜ்ஞத்வமே சொல்லிற்றாக விளங்குகிறது. அப்படிப்பட்ட நிருபாதிக ஸர்வஜ்ஞத்வம் முக்தாவஸ்தையில் கூட ஜீவனுக்கு ஸம்பவிக்க மாட்டாதாகையினாலே, ப்ராப்யமாக ஓதப்பட்ட ப்ரஹ்மம் பத்தாவஸ்தையிலும் முக்தாவஸ்தையிலு முள்ள ஜீவனிற் காட்டிலும் வேறுபட்ட தென்றே நிச்சயிக்கப்படுகிறது. ஆகவே நிருபாதிக ஸர்வஜ்ஞத்வத்தையுடைய இந்த ப்ரஹ்மத்திற்கே ''தஸ்மாத் வா ஏதஸ்மாதாத்மந:'' என்கிற மேல் வாக்யத்தில் ஆத்மத்வத்தையோதி, ஸ்தூலாருந்ததீந்யாயத்தின்படி அந்த ஆத்மா ''அந்யோந்தர ஆத்மா ஆனந்தமய:'' என்று உபஸம்ஹரிக்கப் படுவதாக விளங்குகின்றது. ஆதலால் இந்த ஆநந்தமயாத்மா ஜீவனல்ல என்று நன்கு தேறுகின்றது.

743. இனி அந்தரதிகரணத்தின் ப்ரமேயம் கூறப்படுகிறது. கீழ் ஆனந்தமயாதிகரணத்தில் ஆனந்தமயன் பரமபுருஷனேயென்று நிஷ்கர்ஷிக்கப் பட்டாலும், ஆனந்தமயனான புருஷன் ஜீவனாக இருக்கலாமென்று வேறொரு ப்ரகாரமாக சங்கையுண்டாக, அதைப் பரிஹரிக்கும் பொருட்டு இந்த அதிகரணம் ப்ரவர்த்திக்கிறது.

744. அந்தஸ் தத்தர்மோபதேசாத் (1–1–21) என்பது ஸூத்ரம். இங்கு ''பேதவ்யபதேசாச்சாந்ய:'' என்கிற மேல் ஸூத்திரத்திலிருந்து அந்ய: என்கிற பதம் வருவித்துக் கொள்ளப் படுகிறது. அந்த:– ஆதித்ய மண்டலத்தினுள்ளே உறையும் புருஷன். அந்ய:– ஜீவனைக் காட்டிலும் வேறுபட்ட பரமபுருஷன்; தத்தர்மோபதேசாத் –அந்த பரமபுருஷனுக்கே அஸாதாரணமாக வுரிய தர்மங்களை இங்கு ஓதியிருப்பத னாலே –என்று ஸூத்ரத்திற்குப் பொருள்.

745. சாந்தோக்ய உபநிஷத்தில் (அத ய ஏஷோந்தராதித்யே ஹிரண்மய: புருஷோ த்ருச்யதே) என்று தொடங்கியுள்ள பகுதிக்கு அந்தராதித்யவித்யை யென்று பெயர். அந்த வித்யாப்ரகரணத்தில் ''ஹிரண்யகேச: ஆப்ரணகாத் ஸர்வ ஏவ ஸுவர்ண: தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ தஸ்ய உதிதி நாம, ஸ ஏவ ஸர்வேப்ய: பாப்மப்ய உதித:

உதேதி ஹ வை ஸர்வேப்ய: பாப்மப்யோ ய ஏவம் வேத.'' என்று ஓதப்பட்டுள்ளது. இங்கு ஆதித்ய மண்டலத்தினுள்ளே உறையும் புருஷனுக்கு "யதா கப்யாஸம் புண்டரீக மேவமக்ஷிணீ'' என்பதனால் செந்தாமரை போன்ற திருக்கண்ணுடைமையைச் சொல்லியிருப்பதனாலும், அபஹதபாப்மத்வத்தில் பர்யவஸிக்குமதான ஸர்வபாப்மோதிதத்வம் சொல்லியிருப்ப தனாலும் ஸர்வபாப விநிர்முக்தத்வமாகிற மோக்ஷ புருஷார்த்த ப்ராப்திக்கு உபாயமான உபாஸநத்திற்கு விஷயபூதமான வஸ்துவென்று சொல்லியிருப்பதனாலும், அபஹத பாப்மத்வமாகிற லிங்கத்தினால் "ஏஷ ஸர்வபூதாந்தராத்மா அபஹத பாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண:'' என்று ஸுபாலோபநிஷத்தில் அபஹத பாப்மாவாக வோதப்பட்ட நாராயணனை நினைப்பூட்டுவ தனாலும், மோக்ஷத்திற்கு உபாயமான உபாஸநத்திற்கு விஷயபூதமாகச் சொன்னதனாலும், "தமேவம் வித்வாந் அம்ருத இஹ பவதி'' என்று புருஷ ஸூக்தத்தில் சொல்லப்பட்ட மஹாபுருஷனை நினைப்பூட்டுவதனாலும்,புண்டரீகாக்ஷத்வம் நாராயணனிடத்திலேயே ஸுப்ரஸித்தமாகை யாலும், ஆக இவ்வளவு உபபத்திகளைக் கொண்டு ஆதித்யமண்டலத்தினுள் உறையும் புருஷன் பரமபுருஷனென்றே நிர்ணயிக்கப்படுகிறது.

746. இங்கு பூர்வபக்ஷம்:– கீழ் ஆநந்தமயாதிகரணத்தில் "தஸ்யைஷ ஏவ சாரீர ஆத்மா'' என்று ஆநந்தமய ஆத்மாவுக்கு சரீரஸம்பந்தம் சொல்லியிருக்கையாலே ஆனந்தமயன் சரீர ஸம்பந்தமுள்ள ஜீவனாகத் தானிருக்க வேணுமென்று பூர்வபக்ஷம் ப்ராப்தமான போது "நிருபாதிகமான ஆனந்தமுடைமை'' என்பது முதலான ஹேதுக்களினால் ஜீவனிற் காட்டில் வேறுபட்டவனே ஆனந்தமயனென்று ஸாதிக்கப்பட்டது. அது பொருந்தாது. ஏனென்னில்; அவ்விடத்தில் அந்த ஆனந்தமயனுக்கு " ஸ யச்சாயம் புருஷே யச்சாஸாவாதித்யே. ஸ ஏக:'' என்று ஆதித்யனென்கிற தேவதா விசேஷத்தோடு ஐக்யம் சொல்லியிருக்கை யாலும் ஆதித்யனாகிற அந்த தேவதா விசேஷத்திற்கு அந்தராதித்ய வித்யையில் கேசம் ச்மச்ரு நகம் கண் முதலியவற்றோடு கூடிய மிக ரமணீயமான சரீரமுடைமை சொல்லியிருக்கையாலும் அந்த சரீரமானது மிகுந்த புண்ய விசேஷ மாத்திரத்தினால் அமைந்ததென்னுமிடம் அங்கே ஸர்வ பாபராஹித்யம் சொல்லியிருப்பதனாலே ஸித்திக்கிறபடியாலும் அப்படிப்பட்ட சரீர ஸம்பந்தத்தையே ஆனந்தவல்லியில் சாரீர சப்தத்தினால் க்ரஹிப்பது உசிதமாயிருப்ப தனாலும், அப்படிப்பட்ட சரீரமுடைமை அகர்மவச்யமென்று அபிமானிக்கப்படுகிற பரப்ரம்மத்தினிடத்தில் ஸம்பவிக்கமாட்டா தாகையாலும் ஆதித்யனென்கிற ஒரு ஜீவனே மிகுந்த புண்ய விசேஷ வசத்தினால் ஐச்வர்ய விசேஷத்தை யடைந்தவனாகி ஜகத்காரண பூதனாக ஆனந்தவல்லியில் பிரதிபாதிக்கப் படுகிறான் – என்று.

747. இந்த பூர்வபக்ஷத்தின் மேல் ஸித்தாந்தம் வருமாறு:– இவ்விடத்தில் ஆதித்ய மண்டலத்திலுள்ளுறையும் புருஷனுக்கு மிகுந்த புண்ய விசேஷமடியாக வரும் சரீர விசேஷ ஸம்பந்தம் சொல்லப்படுவதன்று. ஏனென்னில் தஹரவித்யாப்ரகரணத்தில் "ந ஸுக்ருதம் ந துஷ்க்ருதம் ஸர்வே பாப்மாநோதோ நிவர்த்தந்தே. அபஹதபாப்மா ஹ்யேஷ ப்ரஹ்மலோக:'' என்கிறவிடத்தில் சொல்லப் பட்ட அர்த்தமே இங்கு (அந்தராதித்ய

வித்யையில்) “ஸ ஏஷ ஸர்வேப்ய: பாப்மப்ய உதித:” என்பதனால் நினைப்பூட்டப்படுகிற படியினாலே ஸுக்ருதமும் துஷ்க்ருதமு மாகிற இருவகைக் கருமங்களும் அடியோடு இல்லாதவொரு வ்யக்தியே ஆதித்ய மண்டலத்திலுள்ளதாக ஸ்பஷ்டமாய் விளங்குகிறது. ஆகவே இங்கு உத்தேசிக்கப்படுகிற சரீரம் மிகுந்த புண்யவசத்தினாலாயது என்று சொல்வதற்குப் பொருத்தமில்லை. பின்னையோ வென்னில், “ஆதித்ய வர்ணம் தமஸ: பரஸ்தாத்” என்பது முதலான ச்ருதிகளில் ப்ரஸித்தமாய் ஸ்வேச்சை யினால் பரிக்ரஹிக்கப்பட்டதாய் அப்ராக்ருதமான சரீரமேயாகும்.

748. கர்மவச்யனுக்குத் தான் சரீரம் உடைமை கூடுமென்றாவது, அகர்ம வச்யனுக்கு சரீரமுடைமை கூடாதென்றா வது சொல்லப்போகாது. பகவான் அகர்மவச்யனாயிருக்கச் செய்தேயும் ஸத்ய ஸங்கல்பனான தன்னுடைய இச்சையினாலே சரீர பரிக்ரஹம் பண்ணக் குறையில்லை. இதற்குமேல் சொல்லக் கூடும் – த்ரிகுணாத்மக ப்ரக்ருதி பரிணாமரூபமான பூதஸங்காதந்தானே சரீரமென்பது; அபஹதபாப்மாவாயும் ஸத்யஸங்கல்பனாயுமிருக்கிற பரம புருஷன் இச்சித்தாலுங்கூட அந்த சரீரத்தின் ஸம்பந்தம் கூடாதே: அது ஹேயமாகை யாலே கர்மவச்யனான புருஷனுக்கோ வென்னில்: அவன் கர்மாநுகுணமான பலன்களை யநுபவிக்க வேண்டியிருப்ப தனாலே சரீரஸம்பந்தத்தை வெறுத்துத் தள்ளினாலுங் கூட அது தவிரமுடியாமல் வந்து சேர்ந்தே தீரும்; அகர்மவச்யனென்று இசையப்படுகிற பரம புருஷனுக்கு எந்த விதத்திலும் சரீர ஸம்பந்தம் யோக்யமாகாது– என்று சோத்யம் செய்யக் கூடும்.

749. பகவானுக்கு குணத்ரயமயமாய் ப்ராக்ருதமான தேஹம் உள்ளதென்று யாரேனுஞ் சொன்னால் கீழ்க் கூறிய ஆட்சேபம் பண்ணத்தகும். ஸ்வாபிமதமும் ஸ்வாநுரூபமும் அப்ராக்ருதமுமான சரீரம் பகவானுக்கு இசையப்படுகின்றதே யன்றி குணத்ரயமயமாய் ப்ராக்ருதமான தேஹம் உள்ளதாக இசையப்படவேயில்லை. வேதாந்தங்களானவை பகவானுக்கு ப்ராக்ருத ஹேய குணங்களையும், ஹேய தேஹ ஸம்பந்தம் அடியாக விளையக் கூடிய கர்மவச்யத்வஸம்பந்தத்தையும் நிஷேதித்து கல்யாண குணங்களையும் கல்யாண ரூபத்தையும் ஓதுகின்றன. பகவான் உபாஸகர்களிடத்திலுள்ள அநுக்ரஹாதி சயத்தினாலே அவரவர்களுடைய ப்ரதிபத்திக்குத் தக்கவாறு தன்னுடைய ஒளியுருவத்தையே ஸ்வேச்சையினாலேயே தேவமநுஷ்யாதி ஸமஸ்தாநமாக ஆக்குகிறானென்று உபநிஷத்துக்கள் ஓதுகின்றன. “அஜாயமானோ பஹுதா விஜாயதே” என்கிற ச்ருதியும் “அஜோபி ஸந் அவ்யயாத்மா பூதாநாமீச்வரோபி ஸந், ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாமி ஆத்மமாயயா” என்கிற கீதா ச்லோகமும் இங்கு அநுஸந்தேயங்கள். “பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம், தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகேயுகே” என்கிற கீதாச்லோகம் விசேஷித்து அநுஸந்தேயம்.

750. இவ்விடத்தில் உபயவேதாந்த ரஸிகர்களுக்கு ஒரு சிறந்த விஷயம் நினைப்பூட்டுகிறேன்; ஸ்வாமி ஸ்ரீபாஷ்யம் அருளிச் செய்யும்போது ஆழ்வார்களின் திவ்ய ஸூக்திகளை இடைவீடின்றித் திருவுள்ளத்தில் சிந்தனை செய்து கொண்டே யிருந்ததாக

முன்னோர்கள் மொழிந்திருப்பதுண்டு. அது உபய வேதாந்தங்களிலும் ஆழ்ந்த அறிவு பெற்ற மஹான்களுக்கே அறிய வெளிது. இதற்குச் சான்றாக எடுத்து காட்டக் கூடிய விடங்கள் பலவுண்டு. ப்ரக்ருதம் இந்த ஸூத்ரத்தின் பாஷ்யத்தில் பரம புருஷனுக்கு சரீர ஸம்பந்தம் கிடையாதென்று பூர்வ பக்ஷவாதத்தில் ப்ரஸக்தமானதை ஸ்வாமி கண்டிக்குமிடத்து ஸ்ரீராமகிருஷ்ணாதி விபவாவதாரங்களில் சரீர பரிக்ரஹம் பகவான் செய்தருளுகிறபடியை நிரூபித்து வருகையில் "பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம்" என்கிற கீதா ஸூக்தியையெடுத்துக் காட்டி "ஸாதுபரித்ராணமேவ உத்தேச்யம்; ஆநுஷங்கிகஸ்து துஷ்க்ருதாம் விநாச, ஸங்கல்பமாத்ரேணாபி ததுபபத்தே:" என்றுள்ளது ஸ்ரீபாஷ்ய ஸூக்தி, எம்பெருமான் அவதாரம் செய்தருள்வது ஸாதுக்களை ஸம்ரக்ஷிப்பதற்காகவும் துஷ்டர்களைத் தொலைப்பதற்காகவு மானாலும் ஸாதுக்களை ஸம்ரக்ஷிப்பது ஒன்றே உத்தேச்யம்; துஷ்டர்களைத் தொலைப்பதென்பது ஸங்கல்ப மாத்திரத்தினாலும் ஆகக் கூடியதாதலால் அது ஆநுஷங்கிகமேயொழிய ப்ரதானமன்று – என்பது மேலெடுத்துக் காட்டிய ஸ்ரீபாஷ்ய ஸூக்தியின் கருத்து. துஷ்டர்களைத் தொலைப்பது ஸங்கல்ப ஸாத்யமாகிறாப் போலே ஸாதுபரித்ராணமும் ஸங்கல்ப ஸாத்யமாகக் கூடாதோ? "துஷ்டர்கள் நஷ்டர்களாகக் கடவர்கள்" என்று ஸங்கல்பிப்பது போல, "ஸாதுக்கள் ஸம்ரக்ஷணம் பெறக் கடவர்கள்" என்று பகவான் ஸங்கல்பிக்க முடியுமன்றோ? அப்படியிருக்க, துஷ்டசிக்ஷணமே ஸங்கல்பத்தால் ஸாத்யமென்றும் சிஷ்ட பரிபாலனம் ஸங்கல்ப ஸாத்யமன்று என்றும் ஸ்ரீபாஷ்யகாரர் எதுகொண்டு ஸாதிக்கிறாரென்று ஆராயுமளவில், நம்மாழ்வாருடைய ஸுஸ்பஷ்டமான ஸ்ரீஸூக்தியைக் கொண்டே ஸாதிக்கிறாரென்று நன்கு விளங்குகின்றது. அதை விவரிப்போம்:

751. திருவாய்மொழியில் (3–1–9) "மழுங்காத வைநுதிய சக்கரநல்வலத்தை யாய் தொழுங் காதல் களிறளிப்பான் புள்ளூர்ந்து தோன்றினையே, மழுங்காத ஞானமே படையாக மலருலகில். தொழும்பாயார்க்கு அளித்தால் உன் சுடர்ச்சோதி மறையாதே" என்கிற பாசுரம் பரம போக்யமானது. எம்பெருமான் ஸ்ரீ கஜேந்திராழ்வானுடைய கூக்குரலைக் கேட்டு அரை குலையத் தலைகுலைய மடுவின் கரையிலே ஓடி வந்து விழுந்தானென்கிற இதிஹாஸம் ப்ரஸித்தமானது. எதற்காகவோடிவர வேண்டும்?" கருதுமிடம் பொருதுவரவல்ல திருவாழியாழ்வானைத் திருநாட்டிலிருந்தே ஏவினால் அவன் ஒரு நொடியில் யானையின் இடரைத் தீர்த்து வரமாட்டானோ? அவனுக்குத் தான் ச்ரமம் கொடுக்க வேண்டுமோ? ஸகல ஜகத்ஸ்ருஷ்டிஸ்திதிலயங்களுக்குக் கருவியாயுள்ள ஸங்கல்பத்தினால் யானையினிடரை அவலீலையாகத் தீர்திருக்கலபமே. இவ்விரண்டுபடியும் இன்றிக்கே அறப்பதறியோடி வந்தது எதற்காக? என்று நம்மாழ்வார் கேள்வி கேட்டுக் கொண்டு ஸமாதானத்தையும் தாமேயருளிச் செய்துள்ளார். "தொழுங் காதல் களிறளிப்பான் புள்ளூர்ந்து தோன்றினையே" என்கிற இரண்டாம் அடிதான் ஸமாதானம். கஜேந்திராழ்வான் தன்னெதிரே வந்து நின்ற பகவானை நோக்கி, "நாயம் களேபரஸ்யாஸ்ய த்ராணார்த்தம் மதுஸூதந, கரஸ்த கமலாந்யேவ பாதயோரார்ப்பிதும் தவ"

என்றான். (என்றேனு மொரு நாள் அழிந்தே போகக் கூடியதான இவ்வுடலுக்காக நான் கரையவில்லை; எம்பெருமானே! உன்னை ஸேவித்து உன் பொற்றாமரையடிகளில் இத்தாமரை மலர்களைப் பணிமாறுவதற்காகவே கரைந்தேன் என்றான்.) இப்படிப்பட்ட ஆவல் கொண்ட பக்த சிகாமணிகளின் ஆசையை ஸங்கல்பத்தினால் தலைக்கட்ட முடியாதென்பதையும் அப்பாசுரத்தின் பின்னடிகளின் ஆழ்வார் தாமே விவரித்துக் கூறியுள்ளார். நேரில் அவதரித்துத் திருமேனியைக் காட்டியே அன்பர்களைக் காக்க வேண்டும் – என்று ஆழ்வாரருளிச் செய்த அர்த்தத்தையே இங்கு ஸ்வாமி உயிராகக் கொண்டு பணித்தாராயிற்று.

752. இன்னமும் ஆதித்ய மண்டலத்தி னுள்ளுறையும் புருஷனைப் பற்றி அந்தர்யாமி ப்ராஹ்மணத்தில் சொல்லி வருகையில் "ய ஆதித்யே திஷ்டந் யஸ்ய ஆதித்யச் சரீரம் ய ஆதித்ய மந்தரோ யமயதி" என்றும், "யஸ் ஸர்வேஷு தேவேஷு திஷ்டந்" என்றும் சொல்லப்பட்டுள்ளது; ஆதித்யனென்கிற தேவதா விசேஷத்தை யும் சதுர்முகன் முதலான ஸகல தேவர்களையும் நியமிப்பவனாக அந்தப் புருஷனைச் சொல்லியிருக்கையாலே அவர்களிற் காட்டில் வேறுபாடு ஸ்பஷ்டமாகத் தெரிவதனால் ஆதித்ய மண்டலத்தினுள்ளே யிருக்கிற புருஷன் ப்ரஸித்தனான ஆதித்யனாகவோ சதுர்முகனாகவோ ருத்ரனாகவோ, சிறந்த புண்ய விசேஷத்தினால் ஐச்வர்ய விசேஷத்தைப் பெற்ற வேறு எந்த ஜீவனாகவோ இருக்க முடியாதென்பது தேறிற்று.

753. அடுத்தபடியாக ஆகாசாதிகரணம் விளக்கப்படுகிறது. கீழதிகரணங்களில் – ஜகத்காரணமான வஸ்துவானது ஸகல சேதநாசேதந விலக்ஷணமென்பது அவ்வோ லிங்க விசேஷங்களைக் கொண்டு நிர்ணயிக்கப்பட்டது; அது அஸங்கதமென்று ஓர் ஆக்ஷேபந் தோன்ற அதைப் பரிஹரிக்க இவ்வதிகரணம் எழுகின்றது.

754. "ஆகாசஸ் தல்லிங்காத்" (1–1–23) என்பது ஸூத்ரம். "பேதவ்யபதேசாச்சாந்ய:" என்கிற ஸூத்திரத்திலிருந்து அந்ய: என்கிற பதம் வருவித்துக் கொள்வது. ச்சாந்தோக்ய உபநிஷத்தில் "ஸர்வாணி ஹவா இமாநி பூதாநி ஆகாசாதேவ ஸமுத்பத்யந்தே" என்றவிடத்தில்ஆகாச சப்தத்தினால் சொல்லப்படுபவன், (அந்ய:) பூதாகாசத்திற் காட்டிலும் வேறுபட்ட பரமாத்மாவுக்கு அஸாதாரணமான லிங்கம் ச்ருதமாயிருப்பதனாலே – என்பது ஸூத்ரத்தின் பொருள்.

755. ச்சாந்தோக்யோபநிஷத்தில் "ஸர்வாணி ஹ வாஇமாதி பூதாநி ஆகாசாதேவ ஸமுத்பத்யந்தே ஆகாசம் ப்ரத்யஸ்தம் யந்தி ஆகாசோ ஹ்யேவ ஏப்யோ ஜ்யாயாத் ஆகாச; பராயணம்" என்னுமிந்த வாக்கியத்தினால் அங்குள்ள ஆகாசபதவாச்யமான வஸ்துவுக்கு ஸர்வபூதோத்பத்தி காரணத்வமும் ஸர்வபூத லய காரணத்வமும் ஸர்வஸ்மாத் ஜ்யேஷ்டத்வமும் பராயணத்வமும் முதலான தர்மங்கள் ஓதப்பட்டிருக்கின்றன. இதில் எல்லாவற்றிற் காட்டிலும் ஜ்யேஷ்டத்வமாவது குணங்களினாலும் ஸ்வரூபத்தினாலும் உத்க்ருஷ்டமாயிருக்கை. பராயணத்வமாவது சேதநர்களுக்குப் பரமப்ராப்யமாயிருக்கை. இப்படிப்பட்ட தன்மைகள் பரமாத்மாவுக்கே ஸம்பவிக்கக் கூடியவை பூதாகாசத்திற்கு ஸம்பவிக்க மாட்டா. ஸர்வபூதங்களினுடையவும் உத்பத்திக்கும் லயத்திற்கும்

காரணமாயிருக்கை, குணங்களாலும் ஸ்வரூபத்தாலும் ஸர்வபூதங்களிற் காட்டிலும் ஜ்யேஷ்டமாயிருக்கை குணங்க ளாலும் ஸ்வரூபத்தாலும் ஸர்வபூதங்களிற் காட்டிலும் ஜ்யேஷ்டமாயிருக்கை என்னும் இவை பூதாகாசத்திற்கு ஸம்பவிக்க மாட்டாதவையேயன்றோ. அசேதநமாயும் ஹேயமாயுமிருக்கின்றவது சேதநர்களுக்கு பரம ப்ராப்யமாவதற்கு அடியோடு ப்ரஸக்தியில்லையன்றோ.

756. பரமாத்வுக்கோவென்னில் இந்தத் தன்மைகளெல்லாம் நன்கு ஸம்பவிக்கக் கூடியவை. நாராயணோபநிஷத்தில் ''நாராயணாத் ப்ரஹ்மா ஜாயதே'' இத்யாதியினால் நாராயணனுக்கு ஸர்வபூதங்களினுடைய வும் உத்பத்தியைக் குறித்தும் லயத்தைக் குறித்தும், காரணத்வம் சொல்லப் பட்டிருக்கிறது. ''விச்வத: பரமம் நித்யம் விச்வம் நாராயணம் ஹரிம்'' இத்யாதிகளில் ''விச்வத: பரமம்'' என்பதனாலே எல்லாவற்றிற் காட்டிலும் எல்லாவிதத்திலும் பெருமை பேசப் பட்டிருக்கிறது. ''நாராயணம் மஹாஜ்ஞேயம் விச்வாத்மாநம் பாராயணம்'' இத்யாதிகளில் ''பராயணம்'' என்பதனாலே சேதநர்களுக்குப் பரமப்ராப்யத்வமும் அவனுக்கே சொல்லப்பட்டுள்ளது. ஆகவே ''ஸர்வாணி ஹ வை'' இத்யாதி ச்ருதியில் ஆகாச சப்தத்தினால் சொல்லப்படும் வஸ்து பரமபுருஷனே யென்பது தேறுகின்றது.

757.இங்குப் பூர்வபக்ஷம்: ஜகத்காரண வஸ்துவான ப்ரஹ்மம் அசேதந்திற் காட்டிலும் வேறுபட்டதென்பது ஈக்ஷணம் முதலிய லிங்கங்களினால் ஸித்திக்கிறது என்று சொல்லுவது அயுக்தம். ''யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே'' இத்யாதியினால், ப்ரஹ்மலக்ஷணம் சொல்லப்பட்டபோது, 'எதிலிருந்து இந்த பூதங்கள் உத்பத்தி அடைந்தன?' என்று ஜிஜ்ஞாஸை பிறந்தவளவில், ஏதேனுமொரு லிங்கத்தி னால் விசேஷநிர்ணயம் பண்ணுவதற்கு முன்னமே, அவிலம்பிதப்ரதீதிஜநகமாய்க் கொண்டு ப்ரபலச்ருதியாயிருக்கின்ற ஆகாசச்ருதியினால் பூதாகாசமாகிற விசேஷம் உபஸ்திதமாவதனால் பூதங்களின் உத்பத்தி காரணமான வஸ்துவை லிங்கத்தைக் கொண்டு நிர்ணயிக்க வேண்டிய ப்ரஸக்தியேயில்லை. பூதாகாசந்தான் காரணவஸ்து என்று ச்ருதியைக் கொண்டு நிச்சயித்தவளவில் அதில் ஈக்ஷணம் முதலானவை ஸம்பவிக்க மாட்டாதேயென்று தோன்றினால் அவற்றை அமுக்க்யமாகவும் நயிப்பித்துக் கொள்ள லாம்; ஆகவே ச்ருதியைவிட்டு லிங்கத்தைக் கொண்டு ஸாதிப்பது பிசகு—என்று.

758. இந்தப் பூர்வபக்ஷத்தின் மேல் ஸித்தாந்தம் வருமாறு:— ச்ருதியைக் காட்டிலும் லிங்கம் துர்ப்பலமென்றும் லிங்கத்திற்காட்டிலும் ச்ருதியே ப்ரபலமென்றுமிருந்தாலும் சிலவிடங்களில் ச்ருதியைவிட லிங்கத்திற்கு ப்ராபல்யம் ப்ராப்தமாவதுமுண்டு. எங்ஙனேயென்னில்; ''கங்காயாம் கோஷ:'' (கங்கையில் இடைச்சேரியுள்ளது) என்றால், கங்கை யென்கிற பதத்திற்கு முக்யமான பொருள் கங்காப்ரவாஹம்; அதில் இடைச் சேரியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இது ப்ரத்யக்ஷப்ரமாண விருத்தமாகையாலே அந்வயிக்கமாட்டாது என்று ''கங்கா பதஸ்ய கங்காதீரே லக்ஷணா'' என்று லக்ஷணை கொள்ளப்பட வேண்டுகையாலே, அயோக்யார்த்தகமான ச்ருதியிற்காட்டிலும் அபாதிதமான ப்ரமாணத்தினாலறியப்பட்ட லிங்கத்திற்கு ப்ராபல்யம் வேண்டியிருக்கிறதன்றோ.

ப்ரக்ருதத்தில் ஆகாச பதத்திற்கு முக்க்யார்த்தமான பூதாகாசத்தில் பரமப்ராப்யத்வமாகி பராயணத்வம் முதலானவற்றுக்கு அந்வயம் பொருந்த மாட்டாமையினாலே ஆகாசச்ருதியின் ப்ராபல்யம் உபயோகமற்றதாகிறது. ஆகவே, கீழே விவரிக்கப்பட்ட யோக்யார்த்த ச்ருதிமூலகமான லிங்கங்களின் அந்வய உபபத்திக்காக ஆகாசபதத்தை "ஆ–ஸமந்தாத், காசதே–ப்ரகாசதே" என்கிற வ்யுத்பத்தியினால் நாராயணன் என்கிற பரப்ரஹ்மத்தைச் சொல்லுமதாகவே கொள்ள வேணும்.

759. இனி, ப்ராணாதிகரணம். முன் அதிகரணத்தில் ஆகாசத்திற்குக் காரணத்வம் நிராகரிக்கப்பட்டது. இவ்வதிகரணத்தில் வாயுவுக்குக் காரணத்வம் சங்கித்துப் பரிஹரிக்கப்படுகிறது. "அத ஏவ ப்ராண:" (1–1–24) என்பது ஸூத்ரம். முன் ஸூத்திரத்திற் போலவே இந்த ஸூத்ரத்திலும் அந்ய: என்கிற பதம் வருவித்துக் கொள்ளப்பட வேண்டும். அத ஏவ – ப்ரஸித்தம் போல் நிர்தேசமிருப்பத னாலேயே, ப்ராண:–ச்ருதியிலுள்ள ப்ராண சப்தத்தினால் சொல்லப்படுபவன், அந்ய:– ப்ராணவாயுவைக் காட்டிலும் வேறுபட்டவன் என்பது ஸூத்ரத்தின் பொருள்.

760. ச்சாந்தோக்யோபநிஷத்தில் "ஸர்வாணி ஹ வா இமாநி பூதாநி ப்ராணமேவ அபிஸம் விசந்தி ப்ராணம் அப்யுஜ்ஜிஹதே ஸைஷா தேவதா ப்ரஸ்தாவமந்வாயத்தா" என்று ஓதப்பட்டுள்ளது. இமாநி ஸர்வாணி பூதாநி– இந்த ஸகல பிராணிகளும், ப்ராணமேவ அபிஸம் விசந்தி–ப்ராணனிடத்திலேயே லயமடைகின்றன; ப்ராணம் அப்யுஜ்ஜிஹதே – ப்ராணனிடத்தில் நின்றும் வெளிவருகிறன என்றபடி. இங்ஙனே சொல்லுமிடத்து 'ஹ வை' என்பதனால் இவ்வர்த்தம் ப்ரஸித்தமென்று காட்டப்படுகிறது. அந்த ப்ரஸித்தியை நாம் தெரிந்து கொள்ள வேணுமானால் "நாராயணாத் ப்ரஹ்மா ஜாயதே" என்கிற ச்ருதியிலிருந்தே தெரிந்து கொள்ள வேண்டியதாகும். அந்த ச்ருதிவாக்யத்தில் ஸர்வ பூதங்களுக்கும் நாராயணனிடத்திலிருந்தே உத்பத்தியும் நாராயணனிடத்திலேயே லயமும் ஓதப்பட்டிருப்பதனாலே. ஆக இவ்வகையில் நாராயணனே ப்ராணபதார்த்தமென்று நிச்சயிக்கப்படுமளவில் ப்ராண பதத்திற்கு ப்ராணவாயு பரத்வம் சங்கிக்க ப்ரஸக்தியில்லை. ப்ராணபதம் பரப்ரஹ்ம பரமாக எப்படியாகுமென்னில், 'ப்ராணயதி–ஜீவயதி' என்கிற வ்யுத்பத்தியினால்–என்று உணர்வது.

761. பூர்வபக்ஷம்:– கீழ் அதிகரணத் தில் நிரூபித்தபடி ஆகாச ச்ருதியை அயோக்யார்த்தகமென்று கொண்டாலும் ப்ராணச்ருதியை அப்படி கொள்ளமுடியாது; ஸர்வ பூதங்களினுடையவும் உத்பத்தி ஸ்திதிகளை ப்ராணாதீநமாகவே காண்கிறோமாகையாலே ப்ராணத்திற்குக் காரணத்வத்தைத் தெரிவிக்கும் ச்ருதியானது அயோக்யார்த்தகமல்லாமல் யோக்யார்த்தகமேயாதலால் ப்ராணவாயுவே ஜகத்காரணம்–என்று. இதன் மேல் ஸித்தாந்தம்; "ஸர்வாணி ஹ வா இமாநி ப்ராணமேவ அபிஸம் விசந்தி" இத்யாதி ச்ருதியானது முக்க்ய ப்ராண விஷயமாகில் சேதநஸ்வரூபத்தின் ஸ்திதியும் முக்க்ய ப்ராணாதீநமாக இருக்க வேண்டி வரும்; அப்படியில்லாமையாலே ஆகாச ச்ருதிபோல் இந்த ப்ராண ச்ருதியும் யோக்யார்த்தகமன்றிக்கே அயோக்யார்த்தகமேயாகும். ஆகவே பரமாத்மபரமாகவே இந்த ச்ருதி கொள்ளத்தக்கது.

762. இனி ஜ்யோதிரதிகரணம். ஆகாசாதிகரணத்தில் பூதாகாசம் காரணமன்றென்று மறுக்கப்பட்டது. பிறகு "ஆகாசாத் வாயு:" என்று அடுத்தப்படியாக உபஸ்திதமான வாயுவுக்குக் காரணத்வ மில்லையென்று மறுக்கப்பட்டது. இப்போது "வாயோரக்நி:" என்று அதற்கடுத்தபடியாக உபஸ்திதமான தேஜஸ்ஸுக்குக் காரணத்வம் சங்கித்து மறுக்கப்படுகிறது. "ஜ்யோதிச் சரணாபிதாநாத்" (1–1–25) என்பது ஸூத்ரம். ச்சாந்தோக்யோபநிஷத் தில் காயத்ரீ வித்யா ப்ரகரணத்தில் "அத யதத: பரோ திவோ ஜ்யோதிர் தீப்யதே" என்றவிடத்து ஜ்யோதிச் சப்தத்தினால் குறிக்கப்பட்ட வஸ்துவானது பௌதிகமான ஜ்யோதிஸ்ஸைக் காட்டிலும் வேறுபட்டது; அதற்குப் பாதமுடைமை சொல்லப் பட்டிருத்தலால், என்று ஸூத்ரத்தின் பொருள்.

763. ச்சாந்தோக்யத்தில் "அத யதத: பரோ திவோ ஜ்யோதிர் தீப்யதே விச்வத: ப்ருஷ்டேஷு ஸர்வத: ப்ருஷ்டேஷு அநுத்தமேஷு உத்தமேஷு லோகேஷு இதம் வாவதத் யதிதம் அஸ்மிந் அந்த: புருஷே ஜ்யோதி:" என்கிறவிடத்தில் உயர்வற வுயர்ந்த வொளியுள்ளதாக வோதப்பட்ட ஜ்யோதிஸ்ஸுக்கு "பாதோஸ்ய ஸர்வா பூதாநி த்ரிபாதஸ்யாம்ருதம் திவி" என்கிற முன் வாக்யத்தில் ஸர்வபூதங்களையும் பாதகமாகவுடைமை, த்யுலோக ஸம்பந்தம் அவ்விடத்தில் மூன்று பாதங்களுடைமை ஆகிய இவை சொல்லப்பட்டிருக்கின்றன. இதனால் "பாதோஸ்ய விச்வா பூதாநி, த்ரிபாதஸயாம்ருதம் திவி" என்கிற புருஷ ஸூக்த மந்த்ரத்தின் பொருள் நினைப்பூட்டப்படுகிறது. ஆகையால் புருஷ ஸூக்தத்தில் அங்கு ப்ரஸ்தாவிக்கப்பட்டு உடனே "வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம் ஆதித்யவர்ணம் தமஸஸ்து பாரே" என்று ஆதித்யன் போல் மிகச் சிறந்தவொளி யுள்ளவனாக ஓதப்பட்ட பரம புருஷனே இந்த ஜ்யோதிச் சப்தவாச்யனாக நிஷ்கர்ஷிக்கப் படுகிறது. சிறந்த சோதியுருவான திவ்யமங்கள விக்ரஹமுடைமையாலே பரமபுருஷனை ஜ்யோதிச் சப்த வாச்யனாகக் கொள்வது பொருந்தும்.

764. இங்குப் பூர்வபக்ஷம்: ச்சாந்தோக்யத் தில் 'அத யதத: பரோ திவோ ஜ்யோதிர் தீப்யதே" இத்யாதி வாக்யத்தில் சிறந்த வொளியுள்ளதாக வோதப்பட்ட ஜ்யோதிஸ்ஸானது ஆதித்யாதி ஜ்யோதிஸ்ஸேயாகும்: "யத் அத: பரோ திவோ ஜ்யோதி:" என்று (யச்சப்தத்தினால்) ப்ரஸித்தவந்நிர்தேசம் பண்ணி யிருப்பதனால், ஆதித்யாதி தேஜஸ்ஸுக்கே யன்றோ அப்படிப்பட்ட ப்ரஸித்தியுள்ளது. "இதம் வாவ தத் யதிதம் அஸ்மிந் அந்த: புருஷே ஜ்யோதி:" என்று ஜாடராக்நியோடு அதற்கு ஐக்யம் கூறியிருப்பதும் தேஜஸ்ஸென்கிற ஆகாரத்தாலே ஏகஜாதீயமாகிறபடியாலே ஆதித்யாதி தேஜஸ்ஸுக்கே தான் பொருந்தும். அப்படிப்பட்ட ஜ்யோதிஸ்ஸுக்கே மிகச் சிறந்த வொளியுடைமை சொல்லியிருக்கை யாலே அதுவே ஜகத்காரணமென்பது ஸித்திக்கிறது. ஏனெனில்; முண்டகோபநிஷத்தில் "யத் பூதயோநிம் பரிபச்யந்தி தீரா:" என்று பூதயோநியான அக்ஷரத்தை ப்ரஸ்தாவித்து, அதற்கு "ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ரதாரகம் நேமா வித்யுதோ பாந்தி குதோயமக்நி; தமேவ பாந்தமநுபாதி ஸர்வம் தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி" என்று மிகச் சிறந்த வொளியுடைமை சொல்லியிருக்கையாலே

ஜகத்காரணத்வமுள்ள விடத்தில் அப்படிப்பட்ட வொளியுடைமை நியதமென்பது தெரிகின்றதன்றோ. ஆகவே ஆதித்யாதி ஜ்யோதிஸ்ஸே ஜகத்காரணமாகக் கடவது–என்று.

765. (இதற்கு மேல் சிறியதொரு சங்கை) ச்சாந்தோக்யத்தில் ‘‘காயத்ரீ வா இதம் ஸர்வம்’’ என்று காயத்ரியை ப்ரஸ்தாவித்து ‘‘ததேதத் ருசாப்யுக்தம்’’ என்று அந்த காயத்ரியைப் பற்றியதாகச் சொல்லப்பட்ட ‘‘பாதோஸ்ய ஸர்வா பூதாநி’’ இத்யாதி மந்த்ரமானது பரப்ரஹ்மத்தைப் பற்றியதாக எப்படியாகும்? என்று சங்கிக்கக்கூடும்; இதற்குப் பரிஹாரம் சொல்லுகிறோம். ‘‘காயத்ரீ வா இதம் ஸர்வம்’’ என்று காயத்ரீ ப்ரஸ்தாவம் அங்கிருப்பது உண்மையே; ஆனால் காயத்ரீ சப்தத்தினால் காயத்ரீச்சந்தஸ்ஸு சொல்லப்படுவதாக நினைக்க வேண்டா; ஏனென்றால், உடனே ‘இதம் ஸர்வம்’ என்று ஸர்வாத்மத்வம் சொல்லப்பட்டிருக்கின்றது. அது காயத்ரீச்சந்தஸ்ஸுக்குப் பொருந்த மாட்டாதன்றோ. இவ்வளவே யன்று; அந்த ப்ரகரணத்தில்–பூதம் ப்ருதிவி சரீரம் ஹ்ருதயம் ஆகிய இந்நான்கையும் நான்கு பாதங்களாகவுடைமையும் சொல்லப்பட்டிருக் கின்றது. இதுவும் காயத்ரீ சந்தஸ்ஸுக்குப் பொருந்த மாட்டதன்றோ. ஆகவே காயத்ரீ சப்தத்தினால் காயத்ரிக்கு ஸமானமான பரப்ரஹ்மமே சொல்லப் படுவதாகக் கொள்ள வேணும். பரப்ரஹ்மத்திற்கு காயத்ரியோடு ஸாம்யம் எப்படிப் பொருந்துகிறதென்னில், நான்கு பாதங்களோடு கூடியது காயத்ரீ; கீழ்ச் சொல்லப்பட்ட பூத ப்ருதிவீ சரீர ஹ்ருதயங்களாகிற நான்கு பாதங்களையுடையது பரப்ரஹ்மம்; ஆக இவ்வகையினால் ஸாம்யமென்றுணர்க. ‘பரப்ரஹ்மம் காயத்ரீ ஸத்ருசம்’’ என்று அநுஸந்தானம் செய்வதற்காகவே காயத்ரீ சப்தத்தினால் அதைச் சொல்லிற்றென்று அறிவது. இதற்கு ஒரு த்ருஷ்டாந்தமுங் காணலாம்; சாந்தோக்யத்திலேயேயுள்ள ஸம்வர்க்க வித்யையில் ‘‘தே வா ஏதே பஞ்சாந்யே பஞ்சாந்யே’’ என்று தொடங்கி ‘‘ஸைஷா விராட்’’ என்று ஓதப்பட்டுள்ளது. அக்நி ஸூர்ய ஜல சந்த்ர வாயு வாக் சக்ஷுஸ் ச்ரோத்ர மநஸ் ப்ராணங்களாகிற பத்து வஸ்துக்களில் பத்தென்கிற ஸங்க்யையின் ஸாம்யத்தைக் கொண்டு பத்தக்ஷரங்களை யுடைய சந்தஸ்ஸுக்கு வாசகமான விராட் சப்தம் ப்ரயோகிக்கப்பட்டிரா நின்றதன்றோ. அதுபோலவே இங்கும் நான்கு பாதங்கள் உடைமையென்னுமிவ் விஷயத்தில் ஸாம்யத்தையிட்டு பரப்ரஹ்மத்தினிடத்தில் காயத்ரீசப்த ப்ரயோகமுள்ளதென்று கண்டு கொள்வது. ஏவஞ்ச, ‘‘பாதோஸ்ய ஸர்வா பூதாநி’’ என்கிறவிந்த மந்த்ரமானது. ‘‘காயத்ரீ வா இதம் ஸர்வம்’’ என்று முன்னே ப்ரஸ்துதமான ப்ரஹ்மத்தையே விஷயமாகவுடையதென்று அறுதியிடக் குறையில்லை.

766. (இதற்கு மேலும் ஒரு சிறிய சங்கை.) ‘‘பாதோஸ்ய ஸர்வா பூதாநி’’ என்கிற மந்த்ரமானது பரப்ரஹ்மபரமாகவே யிருக்கட்டும்; ஆனாலும் ‘‘அத யதத: பரோ திவோ ஜ்யோதி:’’ என்று சொல்லப்பட்ட ஜ்யோதிஸ்ஸானது பரப்ரஹ்மமேயென்று நிர்ணயிக்கப் போகாது; ஏனென்னில், முந்தின மந்த்ரத்தில் பரப்ரஹ்மத்தை த்யுலோக ஸம்பந்தியாகச் சொல்லிற்று; இவ்விடத்தில் ‘‘திவ: பரோ ஜ்யோதி:’’ என்பதனால் அந்த ஜ்யோதிஸ்ஸானது த்யுலோகத்திற்கு அப்பாற்பட்டதென்று சொல்லிற்று. பரப்ரஹ்மத்திற்கு இங்கு ப்ரத்யபிஜ்ஞை

யுண்டாகத் தகுதியில்லை; த்யுலோகஸம்பந்தி யானதும் த்யுலோகத் திற்கு அப்பாற்பட்டதும் ஒன்றாயிருக்க முடியாதன்றோவென்று.

இந்த சங்கைக்குப் பரிஹாரம் சொல்லுகிறோம். "வ்ருக்ஷாக்ரே ச்யேந: – வ்ருக்ஷாக்ராத்பரத: ச்யேந:" என்கிற இரண்டு வகையான வாக்யமும் ஒரே பொருளில் பர்யாயமாக ப்ரயோகிக்கப் படுவதுண்டு. மரத்தின் நுனியில் பறவையுள்ளது. மரத்தின் நுனிக்கப்பால் பறவையுள்ளது என்ற இவ்விரண்டு வகையான ப்ரயோகத்திற்கும் தாத்பர்ய பேதமில்லையன்றோ. அதுபோலவே இங்கும் "திவி–திவ: பர;" என்றவிரண்டு வகையான ப்ரயோகமும் ஒரே பொருளில் நிராபாதமாக ஸம்பவிக்கக் கூடுமாதலால் "த்ரிபாதஸ்ய அம்ருதம் திவி" என்று முன்னே ப்ரஸ்துதமான பரப்ரஹ்மத்திற்கு "அத யதத: பரோ திவோ ஜ்யோதி:" என்பதனால் ப்ரத்யபிஜ்ஞையுண்டாகக் குறையேயில்லை. ஜ்யோதிச் சப்தத்தினால் நிர்தேசிக்கப்பட்ட பரப்ரஹ்மத்திற்கு கௌக்ஷேய ஜ்யோதிஸ்ஸோடு ஐக்யம் சொல்லியிருப்ப தும் பொருந்தும்; ஒரு பல விசேஷத்தைப் பற்றி பரப்ரஹ்மஜ்யோதிஸ்ஸை கௌக்ஷேய ஜ்யோதிஸ்ஸாக அநுஸந்தானம் செய்யும்படி ஓதிற்றென்று கொள்ளக்கடவது.

767. இனி இந்த்ரப்ராணாதிகரணம் விளக்கப்படுகிறது. ஜ்யோதிஸ்ஸென்று வழங்கக் கூடியதான ஆதித்யாதிகளுக்கு ஜகத்காரணத்வம் கிடையாதென்று முன்னதிகரணத்தில் மூதலிக்கப்பட்டது. இப்போது, அக்நி ஆதித்யன் முதலியவர்களுக்கு அதிபதியாக ப்ரஸித்தனான தேவேந்திரனுக்கு ஜகத் காரணத்வத்தை ஆசங்கித்துப் பரிஹரிக்கப்படுகிறது. "ப்ராணஸ்ததாநுகமாத்" (1–1–29) இங்கு ப்ராணசப்தம் இந்த்ரனுக்கும் உபலக்ஷணம். "பேதவ்யபதேசாச் சாந்ய:" (1–1–22) என்கிற ஸூத்ரத்திலிருந்து அந்ய: என்கிற பதம் அநுவர்த்தித்து வருகிறது. ஆகவே, ப்ராண இந்த்ர பதங்களினால் நிர்தேசிக்கப்பட்டவன் ப்ரஸித்தனான இந்திரனிற் காட்டில் வேறுபட்டவன்; (ஏனென்னில்) இந்த்ராதிகளிற் காட்டில் வேறுபட்டவனுக்குரிய தன்மைகள் மேல் வாக்யங்களிலே ஓதப்பட்டிருப்பதனால்–என்று ஸூத்ரப் பொருள் தேறுகிறது.

கௌஷீதகியென்னு முபநிஷத்தில் ப்ரதர்தந வித்யா ப்ரகரணத்தில் "மனுஷ்யனுக்கு மோக்ஷோபாயமாக எது மிகவும் ஹிதமானதோ அதை யெனக்குச் சொல்ல வேணும்"என்று ப்ரதர்தநனால் கோரப்பட்ட இந்திரன் 'ப்ராணோஸ்மி ப்ரஜ்ஞாதமா தம் மாம் ஆயுரம்ருதமிதி உபாஸ்வ' என்று தன்னை உபாஸிக்கும் படி சொல்லுகையாலே இந்திரனுக்கு உபாஸ்யத்வம் ஓதப்பட்டதாயிற்று. மேல்அந்த ப்ரகரணத்திலேயே அந்த இந்திரனைக் குறித்தே 'ஸ ஏஷ ப்ரஜ்ஞாத்மா ஆநந்தோஜரோம்ருத: ஸ ந ஸாதுநா கர்மணா பூயாந்நோ ஏவாஸாதுநா கர்மணா கநீயாந்' என்று ஓதப்பட்டுள்ளது. இங்குச் சொல்லப்பட்டுள்ள நிருபாதிக ப்ரஜ்ஞத்வம், நிருபாதிக ஆநந்தசாலித்வம் அஜரத்வம், அம்ருதத்வம், முதலானவை களும், கருமபலன் ஸ்பர்சியாமையும், ஸர்வ பூதாதாரத்வமும் இங்ஙனமாக மற்றுஞ் சொல்லப்படுகிற இந்திரனென்கிற ஜீவனிடத்தில் அடியோடு ஸம்பவிக்க மாட்டா. ஆகவே உபக்ரமத்தில் 'மாமுபாஸ்வ' என்று மோக்ஷோபாயமான உபாஸனைக்கு இலக்காகச் சொல்லப்பட்டவன் இந்திரனாக இருக்க முடியாது; 'தமேவம் வித்வாந் அம்ருத இஹ பவதி, நாந்ய; பந்தா அயநாய வித்யதே' என்று பரமாத்மோபாஸநத் திற்கே மோக்ஷோபாயத்வம்

நிஸ்ஸந்தேஹமாக வேதாந்த ஸித்தமாய் இருப்பதாலும், மேலேயுள்ள, 'ஏஷஹ்யேவ ஸாது கர்ம காரயதி தம்' என்பதனால் 'யமாத்மாநமந்தரோ யமயதி' என்கிற அந்தர்யாமி ப்ராஹ்மண ச்ருதியின் பொருள் நினைப்பூட்டப் படுவதாலும், அந்த ச்ருதியானது ஸுபாலோபநிஷத்தோடு ஸமாநார்த்தகமாகி பரமாத்ம விஷயமாகை யாலும், முமுக்ஷுக்களுக்கு உபாஸ்யனாக இந்திரனால் சொல்லப்பட்டவன் ப்ராண– இந்த்ரபத நிர்திஷ்டனான ஜீவனாக இருக்கமுடியாது, இந்த்ர ப்ராண சரீரகனான பரமாத்மாவாகவே யிருக்கத் தகுதியுள்ளது என்றவாறு.

இங்கு, பூர்வ பக்ஷம்: – கௌஷீதகி உபநிஷத்தில், 'ப்ரதர்தநோ ஹ வை தைவோதாஸிரிந்த்ரஸ்ய ப்ரியம் தாம உபஜகாம' என்று தொடங்கி இந்திரனுக்கும் ப்ரதர்தநனுக்கும் ஒரு ஸம்பாஷணை நடந்ததாக எடுத்துக் காட்டி, 'மநுஷ்யனான எனக்கு எது மிகவும் ஹிதமானதோ அதை நீயே ஆராய்ந்து உபதேசிக்க வேணும்' என்று இந்த்ரனை நோக்கி ப்ரதர்தநன் கூற, அதற்கு இந்த்ரன் 'மாமேவ விஜாநீஹி ஏததேவாஹம் மநுஷ்யாய ஹிததமம் மந்யே, யந்மாம் விஜாநீயாத்' என்று தன்னை உபாஸிப்பதையே மநுஷ்யனுக்கு ஹிததமாக உபதேசித்து, தன்னுடைய பெருமையைச் சொல்லப் புகுந்து தான் எவ்வளவு அக்ருத்யங்கள் செய்தாலும் அக்ருத்யபலன் தன்னை வந்து அணுகாதென்பதான பெருமையைச் சொல்லி, 'ஸ யோ மாம் விஜாநீயாத்' இத்யாதியாலே, தன்னை உபாஸிப்பவனுக்கு அக்ருத்ய பலன் ஒட்டாதென்பதையும் சொல்லி, 'ப்ராணோஸ்மி ப்ரஜ்ஞாத்மா தம் மாம் ஆயுரம்ருதமிதி உபாஸ்வ' என்று தன்னை உபாஸிக்கும்படியும் சொன்ன தாகக் காண்கிறது. இங்கு 'த்வாஷ்ட்ரம் அஹநம்' என்று த்வாஷ்ட்ரனை நான் கொன்றேன் என்று சொல்லி யிருக்கையாலே இந்த லிங்கத்தினால் வக்தா இந்திரனே என்பது நன்கு தெரிகிறது. அவனை உபாஸிப்பது ஹிததமமென்றும் தெரிய வருகிறது. மோக்ஷத்திற்கு உபாயமான உபாஸனமே ஹிததமாகும், ஆகவே முமுக்ஷுக்களுக்கு உபாஸ்யன் இந்திரனே என்றதாகத் தேறுகின்றது. அப்படிப்பட்ட உபாஸ்யத்வம் ஜகத்காரணமாக வஸ்துவுக்கேயாகும். 'காரணம் து த்யேய: என்று ச்ருதியே ஓதியிருக்கையாலே. ஆகவே இந்திரனே ஜகத்காரணபூதன் என்று ஸித்திக்கின்றது என்று பூர்வபக்ஷம் ப்ராப்தமாக.

768. இதன் மேல் ஸித்தாந்தம் வருமாறு – 'தமேவம் வித்வாந் அம்ருத இஹ பவதி' இத்யாதிகளில் பரம புருஷனுக்கே உரியதாக ஓதப்பட்டிருக்கிறது முமுக்ஷூபாஸ்யத்வம். மோக்ஷத்தைக் குறித்து உபாயமாகின்ற உபாஸனைக்கு இலக்காகுந்தன்மை பரம புருஷனுக்குத் தவிர வேறொருவனுக்கும் பொருந்தாது என்பது தெரிந்திருக்க ஜீவர்களில் ஒருவனான இந்திரன் 'மாம் உபாஸ்வ' என்று அந்த முமுக்ஷூபாஸ்யத்வம் தனக்கு உள்ளதாக எப்படிச் சொல்லுகிறானென்று ஆராயவேணும். ஆராயுமளவில், மாம் உபாஸ்வ – என்னை சரீரமாகக் கொண்ட பரமாத்மாவை உபாஸிக்கக் கடவை என்றதாகவே பொருள் தேறும். மாம் என்றதற்கு ப்ரஸித்தனான இந்திரன் பொருளன்று. பரமாத்மாவே பொருள் என்று திண்ணமாக உணரலாகும். சரீரத்தைச் சொல்லும் சப்தங்கள் சரீரியளவும் செல்ல போதத்தை உண்டாக்குமென்கிற சாஸ்த்ர தத்வ மறிந்தே 'மாம் உபாஸ்வ' என்றான்.

ப்ருஹதாரண்யகோபநிஷத்தில் வாமதேவர் 'அஹம் மநுரபவம்ஸூர்யச் ச' இத்யாதியில் தன்னைச் சொல்லுகிற அஹம் சப்தத்தினால் பரமபுருஷனை வ்யவஹரித்திருக்கின்றார். அப்படியே இந்திரனும் இங்கு தன்னைச் சொல்லுகிற மாம் என்கிற சப்தத்தினாலும் ப்ராணவாசக சப்தத்தினாலும் பரமபுருஷனையே குறிப்பிடுகிறான் என்பது நிச்சயிக்கப் படுகிறது. அந்த ப்ரகரணத்திலுள்ள சப்தங்களெல்லாம் இந்த நிர்ணயத்திற்கு மிகவும் உபகாரங்களாயிருக்கின்றன. அந்த கௌஷீதகி உபநிஷத்திலேயே (3–9) 'தத்யதா ரதஸ்ய அரேஷு நேமிரர்ப்பிதா, நாபௌ அரா அர்ப்பிதா:, ஏவமேவ ஏதா பூதமாத்ரா: ப்ரஜ்ஞாமாத்ராஸு அர்ப்பிதா: ப்ரஜ்ஞாமாத்ரா: ப்ராணே அர்ப்பிதா ஸ ஏஷ ப்ரஜ்ஞாத்மா ஆநந்தோஜரோம்ருத:' என்றோதியுள்ளவிடத்தில் ப்ராண–ப்ரஜ்ஞாத்மா–அம்ருத சப்தங்களாலே, "ப்ராணோஸ்மி ப்ரஜ்ஞாத்மா தம் மாம் ஆயுரம்ருதமிதி உபாஸ்வ" என்று சொல்லுகிறவனை ப்ரத்யபிஜ்ஞாபனம் பண்ணி, பரமாத்மாவுக்கே அஸாதாரண மான சேதநாசேதந ஸகலாதாரத்வம் ரத–நேமி அர–நாபி த்ருஷ்டாந்தங்களினால் சொல்லப்பட்டிருத்தலாலும் 'ஸ ஏவ ப்ராண ஏவ ப்ரஜ்ஞாத்மா ஆநந்தோஜரோம்ருத:' என்பதனாலே ஸுபாலோப நிஷத்தில் ஐந்தாவது கண்டத்தில் சொல்லப்பட்ட 'தமாத்மாநமுபாஸீத அஜரம் அம்ருதம் அபயம்' இத்யாதியை நினைப்பூட்டுகை யாலும் மேலே 'ஏஷ எவ ஸாது கர்ம காரயதி' இத்யாதியாலே அந்தர்யாமி ப்ராஹ்மணத் தில் 'ய ஆத்மாநமந்தரோ யமயதி' என்றவிடத்தில் பரம புருஷனுக்கே அஸாதாரணமாக அறிந்து கொள்ளப் பட்ட, 'நல்வினை தீவினைகள் செய்விக்கை யாகிறவொரு பெருமை ஏஷ: என்கிற ஏதச் சப்தத்தினால் பராமர்சிக்கப்பட்ட ப்ரக்ருத வக்தாவினிடத்தில் ஓதப்பட்டிருக்கையாலும் 'மாம் உபாஸ்வ' என்ற இடத்து உபாஸ்யனாகச் சொல்லப் பட்டவன் பரமபுருஷனேயன்றி ப்ரஸித்தனான இந்திரனல்லன் என்பது திண்ணமாக நிர்ணயிக்கப் படுகிறது, த்வஷ்டாவின் மகனான த்வாஷ்ட்ரனைக் கொன்றேன் என்று இந்திரன் தன்னுடைய அஸாதாரண சேஷ்டிதமொன்றைச் சொல்லியிருக்கிறான். இது இந்த்ரனிடத்திலன்றிப் பரமாத்மாவினிடத்தில் பொருந்தாதென்பது வாஸ்தவமே. இதற்கு ஸமாதாநம் கேண்மின். இங்கு இந்த்ரன் தனக்கு அந்தர்யாமியான பரமாத்மாவை ஸ்வசரீரகனாகவும் ப்ராணசரீரகனாகவும் ஆநந்தத்வாதி குணவிசிஷ்டனாகவும் மூன்றுபடி உபாஸிக்க வேணும் என்று உபதேசிக்கவிரும்பியிருக்கிறான். ஆகவே தன் பெருமையைக் கூறிக் கொள்ளுதலும் தான் அநுஷ்டிக்கிற ப்ரஹ்மவித்யையின் பலனுரைத்தவாறு என்று கொள்க.

769. இனி ஸர்வத்ரப்ரஸித்யதிகரணம். முதல் பாதத்தின் ப்ரமேயமென்னவென்றால், 'ஸத் வித்யை முதலானவற்றில் அசேதந வஸ்துவோ, சேதனனோ ஜகத்காரணமாக ப்ரதிபாதிக்கப்படுவதால், வேறொரு வஸ்து சேதநனிடத்திலும், அசேதநத்திலும் அதிவ்யாப்தி சங்கித்துப் பரிஹரிக்கப்படுகிறது. இப்போது இவ்விரண்டாவது பாதத்தில் செய்யப்படுவதென்ன வென்றால், சேதநாசேதந லிங்கங்களில் ஸ்பஷ்டப்ரதிபாதநமில்லாத வாக்ய விசேஷங்களை யெடுத்து விசாரிக்கும் முகத்தால் அந்த சேதநாசேதநங்களில் அதிவ்யாப்தி பரிஹாரம் செய்யப்படுகிறது.

770. கீழ் இந்த்ரப்ராணாதிகரணத்தில் ப்ராண சரீரகனுக்கு ஜகத்காரணத்வமும் உபாஸ்யத்வமும் சொல்லிற்று. அவ்விரண்டும் சாண்டில்யவித்யையில் ஜீவாத்மாவுக்குச் சொல்லப்பட்டிருப்பதாகக் கொண்டு அவனே ஜகத் காரணமாக வேணும் என்கிற சங்கையைப் பரிஹரிக்க ப்ரவர்த்திப்பதாம் இவ்வதிகரணம். 'ஸர்வத்ர ப்ரஸித்தோபதேசாத்' (1–2–1) என்பது ஸூத்ரம். மேலே 'ஈக்ஷதி கர்மவ்யபதேசாத் ஸ:' (1–3–12) என்னும் ஸூத்ரத்திலிருந்து ஸாத்யவாசகமான ஸ: என்னும் பதம் இங்கு ஆகர்ஷித்துக் கொள்ளப் படுகிறது. ஆகவே ஸூத்ரார்த்தம் என்ன தேறுகின்றதென்றால், ஸர்வ வஸ்துக்களிலும் அவற்றிற்கு ஆத்மாவாக உபதேசிக்கப் படுபவன் ஸ: – அந்த பரம புருஷனே. ப்ரஸித்த உபதேசாத் – வேறிடத்தில் ப்ரஸித்தமானதை அநுவாதம் செய்கையினாலே என்றபடி.

771. சாந்தோக்ய உபநிஷத்தில் 'ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம தஜ்ஜலாந்' இத்யாதியாலே சாண்டில்யவித்யை சொல்லப்பட்டிருக்கிறது. ஜகத் காரணமன்று என்று ப்ராப்தமான வாதம் பரிஹரிக்கப்பட்டு சேதநாசேதந விலக்ஷணமான பரப்ரஹ்மமே ஜகத்காரணமென்று ஸமர்த்திக்கப்பட்டது. இத்தால், சிதசித் விலக்ஷணமான ப்ரஹ்மத்தினிடத்தில் ஜகத் காரணத்வ லக்ஷணத்திற்கு அஸம்பவம் பரிஹரிக்கப்பட்டதாயிற்று. இப்போது இரண்டு மூன்று நான்கு பாதங்களாகிற அத்யாய சேஷத்தினால் இந்த லக்ஷணத்திற்கு அங்கு 'தஜ்ஜலாந் இதம் ஸர்வம் ப்ரஹ்ம கலு' என்று அந்வயம். 'தஜ்ஜலாந்' என்பதானது இதம் என்பதற்கு ஹேதுகர்ப்ப விசேஷணம். அதில் தச்சப்தார்த்தம் ப்ரஹ்மம். தஜ்ஜம், தல்லம், ததந் என்று கொள்ள வேணும். தஜ்ஜம் – அந்த ப்ரஹ்மத்தினிடமிருந்து உண்டாகுமது; தல்லம் – அந்த ப்ரஹ்மத்தினிடத்தில் லயிப்பது; ததந் – அந்த ப்ரஹ்மத்திறகு அதீநமான ஸ்திதியையுடையது என்றபடி. 'தேந அநிதீதி ததந்' என்று வ்யுத்பத்தி காண்க. 'இதம் ஸர்வம் ப்ரஹ்ம' என்ற ஸாமாநாதிகரண்ய நிர்தேசத்தினால் ஜகத்துக்கும் ப்ரஹமத்துக்கும் தாதாத்ம்யம் சொல்லப்படுகிறது. ஆக, ப்ரஹ்மத்தினிடத்து உண்டாகிற படியாலும் ப்ரஹ்மத்தினிடத்தில் லயிக்கிறபடியாலும், ப்ரஹ்மத்திற்கு அதீநமான ஸ்திதியை யுடைத்தாகையினாலும் சேதநாசேதநாத்மகமான இதுவெல்லாம் ப்ரஹ்மமன்றோ என்பதாகப் பொருள் தேறி நின்றது. இங்கு ஸாமாநாதிகரண்ய நிர்தேசஸித்தமான அபேதமானது உபாதாந உபாதேயபாவரூப கார்ய காரணபாவத்தாலும் சரீராத்மபாவத்தாலுமாக இரண்டுபடியால் விவக்ஷிதம். அதில் தஜ்ஜத்வ தல்லத்வ ஹேதுகமான அபேதம் கார்ய காரண பாவ ப்ரயுக்தம். தததீநஸ்திதிகத்வ ஹேதுகமான அபேதம் சரீராத்ம பாவப்ரயுக்தம். மண்ணுண்டை தானே பானையாகப் பரிணமிப்பது போல ப்ரஹ்மந்தானே ஸ்வரூபேண ஜகத்தாகப் பரிணமிப்பது கிடையாது, ப்ரஹ்மம் நிர்விகாரமாகையாலே. 'முன்பு சிறுவனாயிருந்தவன் இப்போது யுவாவாக ஆகிவிட்டான். முன்பு யுவாவாக இருந்தவன் இப்போது கிழவனாகி விட்டான்' என்னும் லோக வ்யவஹாரங்களில், ஜீவாத்மாவுக்குத் தெரியவருகிற பரிணாமம் எப்படி சரீரத்வாராவோ அப்படியே பரப்ரஹ்மத்திற்கும் சேதநா சேதநரூப சரீரத்வாரா பரிணாமமென்று கொள்க. ஆக, ப்ரஹ்மமே ஸூக்ஷ்ம சேதநா சேதந சரீரகமும் ஸ்தூல சேதநா சேதந சரீரகமுமாகக் கொண்டு கார்ய காரண பாவத்தை யடைந்து நிற்கையாலும், பிரபஞ்சமும் ப்ரஹ்மமும் சரீர

சரீரி பாவத்தையடைந்து நிற்கையாலும் இவ்விருவகையினாலான அபேதம் சிலவிடங்களில் உபதேசிக்கப்பட்டுள்ளது.

அதைச் சிறிது விவரித்துக் காட்டுகிறோம். நாராயணோபநிஷத்தில் (ருக்வேத சிரஸ்ஸில்) 'நாராயணாத் ப்ரஹ்மா ஜாயதே, நாராயணாத் ருத்ரோ ஜாயதே, நாராயணாத் இந்த்ரோ ஜாயதே' என்று ப்ரஹ்மா, ருத்ரன், இந்திரன் முதலானவர்கள் நாராயணனையே உபாதாந காரணமாகக் கொண்டவர்களென்று ஓதப்பட்டிருப்பதை அடியொற்றி, யஜுர்வேத சிரஸ்ஸில் 'ப்ரஹ்மா ச நாராயண: சிவச் ச நாராயண: சக்ரச்ச நாராயண:' என்று அபேதம் சொல்லப்பட்டது. முன்னே காட்டின ருக்வேத சிரஸ்ஸின் வாக்யத்திலுள்ளதான ப்ரஹ்மா, ருத்ரன், இந்திரன் என்கிற க்ரமமே பின்னே காட்டின யஜுர்வேத சிரஸ்ஸிலும் அநுஸரிக்கப்பட்டிருப்பது கொண்டு இதனை எளிதாக அறியலாம். 'நாராயணாத் ப்ரஹ்மா ஜாயதே' இத்யாதி ஸ்தலங்களில் நாராயணனுக்கு சதுர்முகாதி சரீரத்வாரா பரிணாமம் விவக்ஷிதம். 'ஸ ப்ரஹ்மா ஸ சிவஸ்ஸேந்த்ரஸ் ஸோக்ஷர: பரமஸ் ஸ்வராட் என்னுமிடத்தில் பிரமன் முதலானார்க்கும் பரமபுருஷனுக்கும் சரீராத்ம பாவப்ரயுக்தமான அபேதம். இது எங்ஙனே தெரியவருகிற தென்னில் அதற்கு முன்னே 'அந்தர் பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ் ஸ்தித:' என்று பரமாத்மாவுக்கு ஆத்மதயா வ்யாப்தியைச் சொல்லி உடனே 'ஸ ப்ரஹ்மா ஸ சிவ:' என்று அபேதம் சொல்லியிருக்கையாலே சரீராத்ம பாவநிபந்தநமான அபேதமேயிது வென்று எளிதாக அறுதியிட முடிகிறது. இப்படி ஆங்காங்கு தனித்தனியாக ஓதப்பட்டுள்ள இரண்டு வகையிலான அபேதமானது 'ஸர்வம் கலு' என்பதனாலே சேர்த்துச் சொல்லப்படுகிறது. இருவகையான அபேதமும் ஸாக்ஷாத்தாகவும் பரம்பரயாவும் சரீராத்மபாவத்தை மூலமாகக் கொண்டதாதலால், 'ஸர்வமிதம் ப்ரஹ்ம' என்பதற்குக் காணப்படுகிற கார்யபூத தேவமநுஷ்யாதி சேதநாசேதநாத்மகமான ஜகத்தை சரீரமாகவுடையது பரப்ரஹ்மம் என்றதாகப் பொருள் தேறுகிறது.

772. இங்கே பூர்வபக்ஷம் வருமாறு. 'ஸர்வம் கலு இதம் ப்ரஹ்ம' என்று ப்ரஸ்தாவிக்கப்பட்ட ப்ரஹ்மத்தைப் பற்றி அவ்விடத்தில் மேலே 'ஏஷ த ஆத்மா அந்தர் ஹ்ருதயே' என்று ஓதப்பட்டுள்ளது. சரீரத்தினுள்ளேயிருக்கிற ஹ்ருதயத்திலிருப்பதாகச் சொல்லப்பட்டது. இதனால் அந்த ப்ரஹ்மத்திற்கு சரீரம் போகாயதந மென்றும், சரீர ஸம்பந்த நிபந்தனமான ஸுகதுக்கங்களுக்கு அது போக்தாவென்றும், அல்பமானதொரு ஸ்தானத்தையுடைய தென்றும் தெரிவிக்கப்பட்டதாகிறது. அவ்விடத்திலேயே 'அணீயாந் வ்ரீஹேர் வா யவாத் வா' இத்யாதியால் அந்த ப்ரஹ்மம் அணுபரிமாணமுடையதென்றும் சொல்லப்பட்டிருக்கி றது. ஆக, அல்பஸ்தானமுடைமை, அணுபரிமாணமுடைமை, ஸுகதுக்க போக்தாவாகை என்னுமிவை பரமாத்மாவுக்கு ஸம்பவிக்க மாட்டாதவை. ஜீவாத்மாவுக்கே ஸம்பவிக்கக் கூடியவை. ஆதலால் ஜீவாத்மாவே 'ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம' என்று உபக்ரமத்திலுள்ள ப்ரஹ்ம சப்தத்தினால் கொள்ளப்படவேண்டும். அந்த ஜீவாத்மா விசித்ர கர்மவிசேஷங்களடியாக தேவ மனுஷ்யாதிபாவம் பெற்றுப் பிறப்பதனால் 'ஸர்வமிதம் ப்ரஹ்ம' என்று சொன்ன அபேதம் உபபந்நமாகக் குறையில்லை. இந்த பூர்வபக்ஷத்தி மேல் ஸித்தாந்தம் வருமாறு:-

773. ஸித்தாந்தம் – 'ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம தஜ்ஜலாந்' என்றிருப்பதை அடியில் உபபாதித்திருக்கிறோம். தஜ்ஜத்வ தல்லத்வாதிகளை அநுவதித்து அதை ஹேதுவாகக் கொண்ட அபேதம் இங்கு ப்ரதிபாதிக்கப்படுகையாலே கருமமடியாக தேவமநுஷ்யாதி பாவத்தையடையும் ஜீவாத்மாவினுடைய தேவமநுஷ்யாதி பாவத்திற்கு தஜ்ஜத்வ தல்லத்வாதிகள் ஹேதுவாயிருக்க ஔசித்யமே கிடையாது. ஒரு சேதநனைப் பற்ற மற்றொரு சேதநன் ஆத்மாவாயிருப்பது ஸம்பவிக்கமாட்டாதாகையாலே 'ஸர்வமிதம்' என்று சொல்லப்பட்ட ஸர்வசேதந தாதாத்ம்யமானது ஒரு ஜீவனிடத்திலும் ஸம்பவியாது; ஆகவே

இங்கு ப்ரஹ்ம சப்தத்தாலே நிர்தேசிக்கப் பட்டவன் ஜீவனாக முடியாது. மேலே உபாஸ்யங்களாக வோதப்பட்டிருக்கிற மநோமயத்வாதி குணங்கள் ஜீவாத்மாவினிடத்தில் ஸம்பவிக்கமாட்டாவாகையாலும் இங்கே ஜீவாத்மா அப்ரஸக்தனே. இதைச் சிறிது விவரிப்போம். இங்கு உபாஸ்யங்களாகவோதப்பட்டவை மநோமயத்வாதி குணங்களென்று சொன்னோம். மநோமயத்வம், ப்ராணசரீரத்வம், பாரூபத்வம், ஸத்யஸங்கல்பத்வம், ஆகாசாத்மகத்வம் முதலானவையாம் அக்குணங்கள், இவற்றுள் மநோமயத்வமாவது, 'ந சக்ஷுஷா க்ருஹ்யதே நாபிவாசா மநஸா து விசுத்தேந' இத்யாதி ச்ருதிகளில் ப்ரஸித்தமான யோகபரிசுத்த மநோக்ராஹ்யத்வமாகும். இதனால் ஹேய ஸம்பந்தத்திற்கு உரித்தல்லாததென்று தேறும். ஹேய ஸம்பந்தத்திற்கு உரித்தாமது பரிசுத்த மநோக்ராஹ்யமாக ஆகாதன்றோ. இது ஜீவனுக்கு அஸம்பாவிதம்; இவன் ஹேய ஸம்பந்தத்திற்கு அர்ஹனாகையாலே. இனி, ப்ராண சரீரத்வமாவது, 'யஸ்ய ப்ராணச் சரீரம்' என்று அந்தர்யாமி ப்ராஹ்மண ஸித்தமாய் ப்ராணனுக்கு நியாமகத்வரூபமானது. பாரூபத்வமாவது, 'ஆதித்ய வர்ணம் தமஸ: பரஸ்தாத்' இத்யாதி ச்ருதி ப்ரஸித்தமான உயர்வற உயர்ந்த வொளியோடு கூடின விக்ரஹமுடைமை. ஸத்யஸங்கல்பத்வமாவது, பலித்தே தீரும்படியான ஸங்கல்பமுடைமை. ஆகாசாத்மத்வமாவது, 'யஸ்ய ஆகாசச் சரீரம்' என்று அந்தர்யாமி ப்ராஹ்மண ப்ரஸித்தமாய், ஆகாசத்திற்கு நியாமகத்வ ரூபமானது. ப்ரக்ருத ப்ரகரணத்திலோதப்பட்ட இவை முதலான குணங்கள் ஜீவாத்மாவுக்கு ஸம்பவிக்கமாட்டாதவை. அடுத்த ச்ருதியில் 'ஏவமித: ப்ரேத்ய அபிஸம்பவிதாஸ்மி' என்று ப்ரஹ்மத்திற்கு ப்ராப்யத்வமும் ஜீவனுக்கு ப்ராப்த்ருத்வமும் சொல்லப்பட்டிருக்கிறது. ப்ராப்தாவும் ப்ராப்யனும் வெவ்வேறு வ்யக்தியாக இருக்கவேண்டுமாதலால், இந்த ப்ரகரணத்தில் ப்ரஹ்ம சப்த நிர்திஷ்டமானது ஜீவனாக இருக்க முடியாது. இன்னமும், 'ஏஷ ம ஆத்மா அந்தர் ஹ்ருதயே' என்று உபாஸகனான ஜீவனை 'மே' என்று ஷஷ்ட்யந்த பதத்தினாலும், உபாஸ்யமான ப்ரஹ்மத்தை 'ஏஷ' என்று ப்ரதமாந்த பதத்தினாலும் நிர்தேசித்திருக்கிறது. இதனாலும் ப்ரஹ்ம சப்தம் ஜீவாத்மவாசகமாக இருக்க முடியாது. இன்னமும் 'ஈச்வரஸ் ஸர்வ பூதாநாம் ஹ்ருத்தேசேர்ஜுந திஷ்டதி, ப்ராமயந் ஸர்வபூதாநி யந்த்ராரூடாநி மாயயா' என்கிற பகவத் கீதா வசனத்தினால் ஜீவாத்மாவின் ஹ்ருதயத்திலிருப்பவன் ஈச்வரனென்று விளங்குகிறபடியால் அத்தோடும் விரோதிக்கும். ஆகவே, 'ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம' என்று ப்ரக்ராந்தமான ப்ரஹ்மமானது ஜீவனாக மாட்டாது. பரமாத்மாவேயாகவடுக்கும்.

இப்படியாகில், பரமாத்மாவை அபரிச்சிந்நனாக வோதியிருப்பதற்கு முரணாக இந்த ப்ரகரணத்தில் 'ஏஷ ம ஆத்மா அந்தர்ஹ்ருதயே அணீயாந் வ்ரீஹேர் வா' இத்யாதிகளில் சொல்லப்பட்டதால் ஹ்ருதயரூபமான அல்ப தேசத்திலிருப்பும் அதற்கீடாக அல்ப பரிமாணமுடைமையும் பொருந்தாதே; சரீர ஸம்பந்த ப்ரயுக்தமான ஸுகதுக்காநுபவமும் ப்ரஸக்தமாகுமே யென்னில், இவ்விரண்டு சங்கைகளுக்கும் பரிஹாரம் கேண்மின். பரமபுருஷன் ஸ்வத: அபரிச்சிந்நனாயிருக்கச் செய்தேயும் உபாஸகர்களின் அநுக்ரஹத்தின் பொருட்டு உபாஸகர்களின் ஹ்ருதயத்தில் ஸந்நிஹிதனாயிருந்து கொண்டு அல்ப பரிமாணனாயிருப்பது ஔபாதிகமாகும். அநுஸந்தாநார்த்தமாக இங்ஙனே ஓதப் படுகிறதத்தனை. சரீரத்தினுள் புகுந்திருக்குமளவால் கர்மபல போகம் ப்ரஸக்தமாகாது. ஜீவன் புண்யபாப ரூபங்களான கருமங்களைப் பண்ணி அவற்றின் பலனையநுபவிப்பதற்காகவே சரீரத்தில் புகுகிறபடியால் அவனுக்கு அந்த சரீர ஸம்பந்தம் ஸுகது:க்கபோகத்தின் பொருட்டு ஆகிறது. பரமபுருஷன் சரீரத்தினுள் புகுந்திருப்பது நியமனார்த்தமாகவும் ஸ்வேச்சையினாலாகவும். ஆகவே மேலே ப்ரஸங்கித்த இரண்டு சங்கைகளுக்கும் அவகாசமில்லை என்றுணர்க.

774. இனி முதலத்யாயம் – இரண்டாவது பாதத்தில் இரண்டாமதிகரணமான அத்த்ரதிகரணம் விளக்கப்படுகிறது. முன் அதிகரணமாகிய ஸர்வத்ரப்ரஸித்தியதிகரணத்தில் பரமபுருஷன் உபாஸகர்களின் சரீரத்தினுள்ளேயிருந்தாலும் கருமபலன்களை அனுபவித்தலென்பது அவனுக்குக் கிடையாதென்று சொல்லப்பட்டது. அப்படியானால் கர்மபல போக்தாவாகச் சொல்லப்பட்ட வ்யக்தி பரப்ரஹ்மமாக ஆவதற்கில்லை. ஜீவனாகவேயிருக்க வேண்டியதாகும் என்று சங்கை தோன்ற, அதைப் பரிஹரிக்க இவ்வதிகரணம் ப்ரவர்த்திக்கிறது.

775.அத்தா சராசரக்ரஹணாத் (1–2–9) என்பது ஸூத்ரம். அத்தா – போக்தாவென்று ஓதப்பட்டவன் (ஸ:) அந்த பரமபுருஷனே யாவன். எதனாலென்னில், சராசரக்ரஹணாத் – சேதநா சேதநாத்மகமான ஸகலப்ரபஞ்சமும் அந்த பரமபுருஷனுக்கு போஜ்யவஸ்துவாக ச்ருதியில் க்ரஹிக்கப்படுகையாலே என்பது ஸூத்ரத்தின் பொருள்.

கடவல்லியில் இரண்டாவது வல்லியில் "யஸ்ய ப்ரஹ்ம ச க்ஷத்ரஞ்ச உபே பவத ஓதந: ம்ருத்யுர் யஸ்யோபஸேசநம் க இத்தா வேத யத்ர ஸ:" என்கிற மந்த்ரம் ஓதப்பட்டுள்ளது. அதில் யச்சப்தத்தினால் நிர்தேசிக்கப்பட்ட ஒரு புருஷனுக்கு ப்ராஹ்மணவர்ணமும் க்ஷத்ரிய வர்ணமும் அன்னமாகிறதென்று சொல்லி ம்ருத்யு என்பவன் அந்த உணவுக்கு ஊறுகாயாகிறதாகவும் சொல்லிற்று. யாதொன்று மற்றவற்றை உண்பதற்குக் கருவியாயிருந்து தானும் உண்ணப்பட்டு முடிகிறதோ அதனை ஊறுகாயென்பது உலகவழக்கு. ஒரு மாங்காயை யெடுத்துக் கொள்வோம். அது தயிர்ச்சோற்றை உண்பதற்கு ஸாதனமாயிருந்து முடிவில் தானும் உண்ணப்படுவதாகவுள்ளதன்றோ. இதுதான் ஊறுகாயின் லக்ஷணம். ப்ரக்ருதத்தில், ப்ராஹ்மண க்ஷத்ரியர்களை உண்பதில் ம்ருத்யு உபஸேசநம் (ஊறுகாய்) என்று சொல்லுகையாலே, ம்ருத்யுவானவன் இதரவஸ்துகளை உண்பதற்கு ஸாதனமா யிருந்து தானும் முடிவில் உண்ணப்படுவதாக விளங்குகிறது.

ம்ருத்யுவானவன் உண்ணப் படுகிறானென்றால் இது ஸம்பவிக்கமாட்டாது. ஸம்ஹரிக்கப்படுகிறானென்பதே அதன் பொருள் என்க. இதர வஸ்துக்களை உண்பதற்கு ஸாதநமாயிருக்கை யென்றதும் ஸம்ஹார ஸாதநத்வமென்றதாகவே கொள்ளவேண்டும். ம்ருத்யுவுக்கு ஸகலசராசர ப்ராணிஸமுதாயத்தினுடையவும் ஸம்ஹாரத்தில் ஸாதனமாகையன்றி, ப்ராஹ்மணக்ஷத்ரிய மாத்ர ஸம்ஹாரத்தில் ஸாதனமாகையில்லை. ஆகவே எந்த புருஷனாலே ஸம்ஹார ஸாதனமான ம்ருத்யுவைக் கொண்டு ஸகல சராசரமும் ஸம்ஹரிக்கப்படுகிறதோ, அந்த ம்ருத்யுவும் ஸம்ஹரிக்கப்படுகிறானோ, அந்த புருஷன் யாதொரு ப்ரகாரத்திலிரா நின்றானோ, அந்த ப்ரகாரத்தை (அப்பெருமையை) யாரறிவார்? ஒருவருமிலர் என்பதாகப் பொருள் தேறிற்று.

இங்கு யச்சப்தத்தாலே நிர்தேசிக்கப் பட்ட புருஷனை "ருதம் பிபந்தௌ" என்கிற அடுத்த மந்த்ரத்தில் ப்ரஸ்தாவித்து, அவன் எளிதாக உபாஸிக்கக் கூடியவன் என்பது தெரிவதற்காக உபாஸகனான ஜீவனோடு கூட ஒரே ஹ்ருதய குஹையில் அவன் ஸந்நிஹிதனாயிருப்பதாகச் சொல்லி, உபாஸநத்திற்குப் பலனான ப்ராப்ய வஸ்து ப்ராப்திக்கு உபகரணமாக உபாஸகனை ரதியாகவும் அவனுடைய சரீரம் முதலானவற்றைத் தேர் முதலியனவாகவும் பரிகல்பநம் பண்ணி அப்படிப்பட்ட உபகரணத்தைக் கொண்டு ப்ராப்தவ்யமான வஸ்துவை உபதேசிக்கிற பிரகரணத்தில் "ஸோதவந: பாரமாப்நோதி தத் விஷ்ணோ: பரமம் பதம்" என்று முன் சொன்ன ரதம் முதலிய உபகரணங்களை உடையவன் விஷ்ணுவினுடைய பரமமான பதத்தை யடைகிறானென்று விஷ்ணுவை ப்ராப்யனாகச் சொல்லியிருக்கையாலே "யஸ்ய ப்ரஹ்ம ச க்ஷத்ரஞ்ச" என்கிற மந்த்ரத்தில் யச்சப்தத்தால் நிர்தேசிக்கப்பட்ட ஸம்ஹார கர்த்தா பரமபுருஷனேயென்று நிச்சயிக்கப்படுகிறது.

776. இங்கு பூர்வபக்ஷம் – "யஸ்ய ப்ரஹம ச க்ஷத்ரஞ்ச" என்னும் மந்த்ரத்தில் ப்ராஹ்மண க்ஷத்ரியாதி ஜாதீயர்களான ஸ்த்ரீபுமான்கள் பரஸ்பரம் போக்யபூதர்க ளென்று ஏற்படுகிறது. அதனால் யச்சப்தத்தினால் நிர்தேசிக்கப்படுகிற போக்தா ஜீவாத்மாவாகவே யிருக்கத் தக்கவனென்று தெரிகிறது. கருமத்தின் பலனான ஸ்த்ரீபோகம் முதலானவை ஜீவனுக்கே ஸம்பவிக்கு மாதலால். "ம்ருத்யுர் யஸ்ய உபஸேசநம்" என்று சொல்லியிருப்பதானது – ம்ருத்யுவானவன் ஜீவாத்ம ஸ்வரூபத்தைக் குறித்து பாதகனல்லன் என்றிவ்வளவு தெரிவிப்பதிலேயே நோக்குடையது. ஆகவே ஜீவன் தான் அந்த மந்த்ரத்தில் பிரதிபாதிக்கப்படுபவன் என்று.

இதற்கு மேல் ஸித்தாந்தம் வருமாறு:– "ம்ருத்யுர் யஸ்யோபஸேசநம்" என்பதில் சொல்லப்பட்ட உபஸேசநத்வம் அபாதகத்வரூபம் என்று கொள்வதில் மிகவும் அஸ்வாரஸ்யமுள்ளதனால், லோக ப்ரஸித்திக்கிணங்க யாதொன்று மற்றவற்றை உண்பதற்குக் கருவியாயிருந்து தானும் உண்ணப்பட்டு முடிகிறதோ அது தான் உபஸேசநம் என்று ஸ்வரஸமான பொருளே கொள்ள வேண்டுகையாலே கீழே விவரித்தபடி ம்ருத்யு ஸம்ஹார ஸாதனமாயும் ஸம்ஹரிக்கப்படுபவனாயுமிருக்கையே உபஸேசநமென்பதற்குப் பொருத்தமான பொருள். போக்யத்வமென்பது இங்குப் பொருளாக வழியில்லை. ஆகவே கருமபலன்களை அனுபவிப்பவனான ஜீவனுக்கு இங்கு ப்ரஸக்தியேயில்லை.

777. இனி அந்தராதிகரணம். முன் அதிகரணத்தில் "க இந்தா வேத யத்ர ஸ:" என்பதனாலே பரமாத்மா தெரிந்து கொள்ள முடியாதவனெனப்பட்டது. அப்படியானால், தெரிந்து கொள்ளக் கூடியவனென்று சொல்லப்பட்டவன் பரமாத்மாவாக இருக்க முடியாதேயென்கிற சங்கையைப் பரிஹரிக்க இவ்வதிகரணம் தோன்றுகிறது. "அந்தர உபபத்தே:" என்பது ஸூத்ரம். அந்தர – கண்களினுள்ளே யிருப்பவன், (ஸ:) – அந்த பரமபுருஷனே; உபபத்தே: – அங்குச் சொல்லப்பட்டிருக்கிற அபயத்வம், அம்ருதத்வம் முதலானவை அப்பரமபுருஷனிடத்திலேயே பொருந்தக் கூடியவையாதலால், என்பது ஸூத்ரத்தின் பொருள்.

சாந்தோக்யோபநிஷத்தில் உபகோஸல வித்யாப்ரகரணத்தில் "ய ஏஷோக்ஷிணி புருஷோ த்ருச்யதே: ஏஷ ஆத்மேதி ஹோவாச, ஏததம்ருதம் ஏததபயம் ஏதத் ப்ரஹ்ம" என்று ஓதப்பட்டுள்ளது. அங்கு "அக்ஷிணி புருஷோ த்ருச்யதே" என்பதனால் கண்ணில் உள்ளவனாக ஒரு புருஷன் ஏற்படுகிறான். அந்தர்யாமி ப்ராஹ்மணத்தில் "யச் சக்ஷுஷி திஷ்டந் சக்ஷுஷோந்தர:" என்ற வாக்யத்தினால் கண்ணிலுள்ளவனாகவும் நியாமகனாகவும் ஓதப்பட்ட பரமபுருஷன் அந்த "ய ஏஷ:" இத்யாதி வாக்கியத்தினால் நினைப்பூட்டப்படுகிறான். ஆகவே அக்ஷிபுருஷன் பரமபுருஷனாகவே யிருக்கத் தக்கவன் என்றதாயிற்று.

778. வைச்வாநராதிகரணம். சாந்தோக்யத்தில் வைச்வாநரவித்யா ப்ரகரணத்தில் (5–11–1), "கோ ந ஆத்மா? கிம் ப்ரஹ்ம?" என்று தொடங்கி, "ஆத்மாநமேவ ஏநம் வைச்வாநரம் ஸம்ப்ரதி அத்யேஷி தமேவ அபிவிமாநமாத்மாநம் வைச்வாநர முபாஸ்தே" என்று விடையும் காணப்படுகிறது. இவ்விடத்தில் பரமாத்மாவையே வைச்வாநர சப்தத்திற்குப் பொருளாக நிர்ணயிக்க முடியுமா முடியாதா? என்று ஸந்தேஹம். இங்கு பூர்வபக்ஷம் – வைச்வாநர சப்தத்திற்கு நான்கு பொருள்கள் காணப்படுகின்றன. அக்நி, மஹா பூதங்களில் மூன்றாவதான பூதம், தேவதா விசேஷம், பரமாத்மா; ஆக இந் நான்கு பொருள்களில் வைச்வாநர சப்த ப்ரயோகம் ஆங்காங்குக் காணப்படுகிறது. இந்த ப்ரகரணத்தில் பரமாத்ம பரமாகவே நிர்ணயம் செய்ய ஆவச்யகதையில்லாமையாலே முடியாதென்று பூர்வபக்ஷம் ப்ராப்தமாக, இதன் மேல் ஸித்தாந்தம் இங்ஙனேயாகிறது.

"வைச்வாநரஸ் ஸாதாரணசப்த விசேஷாத்" (1–2–25) என்பது ஸூத்ரம். ஸாதாரண சப்த விசேஷாத் வைச்வாநர: பரமாத்மா = ஸாதாரணமான வைச்வாநர சப்தத்தைப் பரமாத்ம அஸாதாரண தர்மங்களினால் விசேஷித்திருப்பதனால் இங்கு வைச்வாநரசப்தவாச்யன் பரமாத்மாவேயாகக் கடவன் என்று பொருள் தேறிற்றாயிற்று. தொடங்கும்போது, "கோ ந ஆத்மா?" என்று ஸகல ஜீவாத்மாக்களுக்கும் ஆத்மாவாயிருப்பவன் யாவனென்று ஜிஜ்ஞாஸையை வெளியிட்டு "யஸ் து ஏதமேவம் ப்ராதேசம் அபிவிமாநமாத்மாநம் வைச்வாநரமுபாஸ்தே ஸ ஸர்வேஷு லோகேஷு ஸர்வேஷுபூதேஷு ஸர்வேஷு ஆத்மஸு அன்னமத்தி" என்று வைச்வாநரோபாஸகனுக்குப் பரமபோக்யமான பரப்ரஹ்மத்தின் அநுபவம் பலனாக ஓதப்பட்டிருப்பது காண்கிறது. ஸகல லோகங்களிலும் ஸகல பூதங்களிலும் ஸகலாத்மாக்களிலும் இருப்பதான (யத் அந்நம்) பரம

போக்யமான யாதொரு பரப்ரஹ்மமுண்டோ, (தத் அத்தி) அதை அனுபவிக்கிறான் என்று அந்த ச்ருதிக்குப் பொருள். அந்நமத்தி = அனுபவிக்கப்படுகிறது போக்யமாகக் கொள்ளப்படுகிறது என்றவாறு. "ரஸோ வை ஸ: ரஸம் ஹ்யேவாயம் லப்த்வா ஆநந்தீ பவதி" என்று தைத்திரீயோபநிஷத் தில் ஓதப்பட்ட பரப்ரஹ்மாநுபவமே இங்கு ஓதப்பட்டதாகிறது. முமுக்ஷுக்களுக்கு ஹேயமான ப்ராக்ருதமான அந்நமன்று இங்கு அந்நமத்தி என்பதனால் விவக்ஷிதம்.

மேலும் "தத் யதா இஷீகதூலம் அக்நௌ ப்ரோதம் ப்ரதூயேத, ஏவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே" என்று வைச்வாநராத்மோபாஸகனுக்கு ஸகல பாபங்களும் தொலைவது பலனாகச் சொல்லப்பட்டுள்ளது. வைச்வாநராத்மாவுக்கு த்யுலோகம் முதலான த்ரைலோக்யத்தையும் சரீரமாகவுடைமையும் சொல்லப்பட்டுள்ளது. ஆக இத்தகைய அஸாதாரண தருமங்களினால் வைச்வாநராத்மா பரமாத்மாவேயென்று நிர்ணயிக்கக் குறையில்லை. இந்த வைச்வாநரசப்தம் ஜாடராக்நிபரமென்று சங்கிப்பதற்கு ஸ்வல்பஹேது இருந்தாலும், "ஸ ஏஷோக்நிர் வைச்வாநரோ யத்புருஷ:" என்று நிருபாதிக புருஷசப்த வாச்யத்வம் இங்கு ஸ்பஷ்டமாக ஓதப்பட்டிருக்கையாலே இது ஜாடராக்நிக்கு அஸம்பாவிதம். த்ரைலோக்ய சரீரகத்வமும் அஸம்பாவிதமென்பது புநருக்தம். ஜாடராக்நி விஷயகமாகத் தோன்றுகிற அக்நிசப்தமும் தச்சரீரக பரமாத்மபரமாகவே கொள்ளப்பட வேணும். ஏனென்னில், அதனிடத்தில் அஸம்பாவிதமான தருமங்கள் ஓதப்பட்டிருக்கையினாலே. "பகவாநிதி சப்தோயம் ததா புருஷ இத்யபி, நிருபாதீ ச வர்த்தேதே வாஸுதேவே ஸநாதநே" என்கிற ப்ரமாணமானது நிருபாதிகமான புருஷசப்தம் பரமாத்மாவுக்கு அஸாதாரணமென்று திடப்படுத்தியிருக்கையாலே "ஸ ஏஷோக்நிர் வைச்வாநரோ யத் புருஷ:" என்கிற ச்ருதி வாக்யம் ஜாடராக்நியை வ்யாவர்த்தித்தே தீரும். ஆக அக்நி சப்த ஸாமாநாதிகரண்யமானது வைச்வாநரத்துக்கு பரமாத்மத்வத்தை நிர்ணயிப்பதில் விரோதியாக ஆகமாட்டாது. தச்சரீரகத்வேந பரமாத்மோபாஸநம் இங்கு விதிவிஷயமென்று கொள்ளக்கடவது.

(விசேஷக் குறிப்பு) இவ்வதிகரணத்தில் "ஸாக்ஷாதப்யவிரோதம் ஜைமிநி:" என்கிற இருபத்தொன்பதாவது ஸூத்ரம் வேதாந்திகளால் விசேஷித்துக் குறிக் கொள்ளத் தக்கது. அக்நி வைச்வாநராதி சப்தங்களெல்லாம் தத்தச் சரீரகத்வேந பரமாத்மாவைத் தெரிவிப்பதாகக் கொள்ளுகிற ஒரு ப்ரகாரமிருக்கட்டும் (ஸாக்ஷாதபி அவிரோதம் ஜைமிநிராசார்யோ மந்யதே) அக்நி சப்தத்திற்கு (அக்ரம் நயதி) என்று வ்யுத்பத்தி கொண்டால் ஸாக்ஷாத்தாகவே பரமாத்மாவைச் சொல்லுமென்னத் தட்டில்லை. அபர்யவஸாந வ்ருத்த்யா பரமாத்மபர்யந்தத்வம் கொள்ளுவதிற்காட்டிலும், ஸாக்ஷாத்தாகவே கொள்ளக் கூடிய விடங்களில் இங்ஙனே கொள்ளலாமென்பதை ஸூத்ரகாரர் காட்டினாராயிற்று. சசீபதி: இத்யாதி விசேஷண யோகமில்லாத இந்த்ரசப்தம் காணுமிடங்களில், "இதி–பரமைச்வர்யே" என்பதைக் கொண்டு பரமேச்வரனான பரமாத்மாவை அர்த்தமாகக் கொள்ளுவதில் அஸம்பாவிதத்வம் ஒன்றுமில்லையன்றோ. இங்ஙனே பலவுங் காண்க.

779. பூமாதிகரணம் விளக்கப்படுகிறது. சாந்தோக்யத்தில் ஓதப்படும் வாக்யமொன்று, "யத்ர நாந்யத் பச்யதி நாந்யத் ச்ருணோதி நாந்யத் விஜாநாதி ஸ பூமா: அத யத்ர அந்யத் பச்யதி அந்யத் ச்ருணோதி அந்யத் விஜாநாதி தத் அல்பம்" என்பதாக. (இதன் பொருளாவது) எந்த வஸ்து அநுபவிக்கப்படும் போது வேறு எந்த வஸ்துவையும் கண்கொண்டு காணமாட்டானோ, காது கொண்டு கேட்கமாட்டானோ அறியவே மாட்டானோ அது பூமா; எந்த வஸ்து அனுபவிக்கப்படும்போது வேறு வஸ்து கண்ணுக்கும் காதுக்கும் அறிவுக்கும் விஷயமாகுமோ அது அல்பம் என்பதாம். இங்கு (பூமா) என்பது இமநிச்ப்ரத்யயாந்தமான சப்தமாதலால் 'பஹோர்பாவ: – பூமா' என்கிற வ்யுத்பத்தியினால் பஹுத்வமென்று பொருள் பெற்றதாகிறது. எனவே தர்மபரமான சப்தமிது என்று தேறிற்றாகிறது. ஆனாலும் மேலே 'யத்ர அந்யத் பச்யதி . . தத் அல்பம்" என்றிருப்பதனாலே அல்ப சப்தம் தர்மிபரமேயொழிய தர்மபரமல்லாமையாலே அதற்கு ப்ரதியோகியான (பூமா) என்பதும் தர்மிபரமாகவே கொள்ளத்தக்கதாகும். பெருமை என்று பொருளன்றிக்கே பெரிது என்று பொருள் தேறிற்றாகிறது. இந்த ப்ரகரணத்தில் "தரதி சோகமாத்மவித்" என்று தொடங்கி பூமவிஜ்ஞானத்தை உபதேசித்து "ஆத்மைவ இதம் ஸர்வம்" என்று ஆத்மாவையிட்டே உபஸம்ஹரித்திருக்கை யாலே (பூமாவென்று) மஹத்தாகச் சொல்லப்படுகிற வஸ்து ஆத்மாவென்று தேறுகிறது. இப்படி பூம குணவிசிஷ்டமாகச் சொல்லப்படுகிற ஆத்மா ப்ரத்யகாத்மாவா? பரமாத்மாவா? என்று ஸம்சயமுண்டாமளவில் ப்ரத்யகாத்மாவென்று பூர்வபக்ஷ முண்டாகிறது. ஏனென்னில், "ச்ருதம் ஹ்யேவ மே பகவத் த்ருசேப்யஸ் தரதி சோகமாத்மவித்" என்று ஆத்ம ஜிஜ்ஞாஸையினால் வந்து பணிந்த நாரத மஹர்ஷியின் பொருட்டு நாமம் முதல் ப்ராணமளவும் உபாஸ்யங்களாக ஸநத்குமாரரால் உபதேசிக்கப்பட்டவிடத்து, "அஸ்தி பகவோ நாம்நோ பூய:? அஸ்தி பகவோ வாசோ பூய:? (நாமத்துக்கு மேற்பட்டது உள்ளதோ? வாக்குக்கு மேற்பட்டதுள்ளதா?) இத்யாதிகளான வினாக்கள் செல்வதையும், "வாக் வாவ நாம்நோ பூயஸீ மநோ வாவ வாசோ பூய:" (நாமத்திற் காட்டிலும் வாக்கு மேம்பட்டது. வாக்கைக் காட்டிலும் மநஸ்ஸு மேம்பட்டது) இத்யாதிகளான விடைகள் செல்வதையும் காணா நின்றோம். இங்ஙனே காண்பது ப்ராணனுக்குக் கீழ்ப்பட்டவரை யிலுமே. ப்ராணனைச் சொல்லியான பிறகோவென்னில் வினாவுமில்லை. விடையுமில்லை. ஆகவே இந்த ஆத்மோபதேச மானது ப்ராணபர்யந்தமேயென்று தெரிகிறது. ஆகவே இங்கு ப்ராண சப்தநிர்திஷ்டன் ப்ராண ஸஹசாரியான ப்ரத்யகாத்மாவேயொழிய வாயுவிசேஷமாத்திரமன்று. மேலும் "ப்ராணோ ஹ பிதா ப்ராணோ ஹ மாதா" இத்யாதி வாக்யங்களும் ப்ராணனை சேதந வஸ்துவாகத் தெரிவிக்கின்றன. 'பூமா' என்று பெரிதாகச் சொல்லப்பட்ட வஸ்து இந்த ப்ராணனேயாகும். ஆக ப்ரத்யகாத்மாவே இங்கு பூமசப்த நிர்திஷ்டனாகக் கடவன் என்று பூர்வபக்ஷம்.

இதன்மேல் ஸித்தாந்தம் வருமாறு – பூமா ஸம்ப்ரஸாதாத் அத்யுபதேசாத் (1–3–7) (ஸம்ப்ரஸாதாத் அத்யுபதேசாத்) பூமா என்று அநல்பனாகச் சொல்லப்பட்டவன் பரமாத்மாவேயாவன். ஏனென்றால், ஸம்ப்ரஸாதாத் – ஜீவாத்மாவைக் காட்டிலும், அதி – அதிகமாக (அர்த்தாந்தரமாக), உபதேசாத் – தெரிவிக்கப்படுகையாலே என்று

ஸூத்ரத்திற்குப் பொருள் காண்க. சாந்தோக்யத்தில் (8–12–2) ''ஏஷ ஸம்ப்ரஸாதோஸ்மாச்சரீராத் ஸமுத்தாய பரம் ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேந ரூபேண அபிநிஷ்பத்யதே'' என்கிறவிடத்தில் ஜீவாத்மவாசகமாக ஸம்ப்ரஸாத சப்தமிருப்பதனால் உபநிஷத் ப்ரஸித்தி கொண்டு இங்ஙனே பொருளுரைக்கப்பட்டது. இது நிற்க, சாந்தோக்யத்தில் (7–15–1) ''ப்ராணோ வா ஆசாயா பூயாந்'' என்று ப்ரத்யகாத்மாவை ஆசையினும் அதிகனாகச் சொல்லி மேலே ''ப்ராணோ ஹ்யேவைதாநி ஸர்வாணி பவதி ஸ வா ஏஷ ஏவம் பச்யந் ஏவம் மந்வாந ஏவம் விஜாநந் அதிவாதீ பவதி, தஞ்சேத் . . . . .நாபஹ்நு வீத'' என்று பதினைந்தாவது கண்டம் தலைக்கட்டப் பட்டது. இங்கு ''அதிவாதீ பவதி'' என்றதற்குப் பொருள் யாதென்னில் தான் உபாஸிக்கும் வஸ்துவை உத்க்ருஷ்டமாகச் சொல்லுகிறா னென்பதாம். இது உபாஸ்யதேவதையின் அதிசயத்தில் பர்யவஸிப்பதாம். அதாவது தன்னாலே உபாஸிக்கப்படும் வஸ்து ஸர்வோத்க்ருஷ்டமானது என்று சொல்லுபவன் என்றது அந்த உபாஸ்ய வஸ்து உண்மையில் உத்க்ருஷ்டமானது என்று தெரிவித்தவாறாம். இவ்விடத்தில் (7–16–1) ''ஏஷ து வா அதிவததி யஸ் ஸத்யேந அதிவததி'' என்ற வாக்கியம் உற்று நோக்கத் தக்கது. இதில் (து) என்பது இருப்பதனாலே இதர வ்யாவர்த்தகமான அந்த துகாரம் வேறொரு அதிவாதி யிருப்பதாகக் காட்டிக் கொடுத்து ''யஸ் ஸத்யேநாதிவததி'' யென்று ஸத்யசப்த வாச்யமான பரப்ரஹ்மத்தை உபாஸிப்பவனுக்கு மேலும் அதிசயிதமான அதிவாதித்வத்தைச் சொல்லி, அவனுடைய அதிவாதித்வத்திற்கு அடியானதும் ஸத்யசப்தவாச்யமானதும் ப்ரத்யகாத்மாவிற்காட்டிலும் வேறுபட்டதுமான பரப்ரஹ்மத்தை ''ஸத்யம் த்வேவ விஜிஜ்ஞாஸிதவ்யம்'' (ஸத்ய சப்தவாச்யமான ப்ரஹ்மமே உபாஸிக்கத்தக்கது) என்று ஸநத்குமாரர் உபதேசித்துத் தலைக்கட்டி யிருக்கின்றார். இங்கு முந்தின பர்யாயங்களில் சொல்லப்படாத அதிவாதித்வம் சொல்லப் பட்டிருக்கையாலே உபக்ராந்தமான ஆத்மோபதேசம் ப்ராணசப்த வாச்யமான ப்ரத்யகாத்மாவில் தலைக்கட்டிற்றென்று ''ப்ராணனிற்காட்டிலும் மேம்பட்டது உள்ளதா? என்று நாரதர் கேளாதிருக்கவும் ஸநத்குமாரர் தாமாகவே அதிலும் மேம்பட்ட பரமாத்மாவை உபதேசிக்கிறார். ''ஏஷ து வா அதிவததியஸ் ஸத்யேநாதிவததி'' யென்று. ''ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம'' இத்யாதிகளில் ஸத்ய சப்தவாச்யத்வம் பரப்ரஹ்மத்திற்கு ப்ரஸித்தம். ''ஸததைக ரூபத்வேந நிர்விகாரத்வாத் ஸத்யத்வம்'' என்று வேதாந்திகளின் கோஷ்டிகளில் ப்ரஸித்தமானதே. ஆக பூமசப்தவாச்யன் ப்ரத்யகாத்மாவல்லன், பரமாத்மாவேயென்று ஸித்தாந்திதமாயிற்று.

780. முதலத்யாயம் – மூன்றாவது பாதத்தில் உள்ள தஹராதிகரணம் விளக்கப்படுகிறது. சாந்தோக்ய உபநிஷத்தில் ''அத யதிதமஸ்மிந் ப்ரஹ்மபுரே தஹரம் புண்டரீகம் வேச்ம தஹரோஸ்மிந்நந்தர ஆகாச: தஸ்மிந் யதந்தஸ் தத் அந்வேஷ்டவ்யம்'' இத்யாதி வாக்யத்தாலே ஓதப்பட்டிருப்பது தஹரவித்யை. இந்த வித்யாப்ரகரணத்தில் மேலே, ''ஏஷ ஆத்மா அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யுர் விசோகோ விஜிகித்ஸ: அபிபாஸஸ் ஸத்யகாமஸ் ஸத்யஸங்கல்ப:'' என்று குணாஷ்டகம் சொல்லப்பட்டுள்ளது. இது பரப்ரஹ்மத்திற்கே ஏற்குமாதலால் தஹர சப்தவாச்யமான வஸ்து பரப்ரஹ்மமேயல்லது

வேறன்று என்று இவ்வதிகரணத்தில் நிஷ்கர்ஷிக்கப்படுகிறது. "தஹரோஸ்மிந்நந்தர ஆகாச:" என்றோதப்பட்ட தஹராகாசம் பரமாத்மாவாக இருக்கமுடியாது. ஏனென்றால் இங்கு "தஸ்மிந் யத் அந்தஸ் ததந்வேஷ்டவ்யம்" என்றுள்ளது. அந்வேஷ்டவ்யமென்பதற்கு தேடத்தகுந்தது என்று பொருள். தியானிக்கத் தகுந்ததென்று பரமதாத்பர்யம். 'அந்த பரமபுருஷன் தியானிக்கத் தகுந்தவன்' என்றிருத்தல் ஒக்கும். அப்படியில்லை. 'அதற்குள்ளே யிருப்பது தியானிக்கத் தகுந்தது' என்றுள்ளதனால் பரமபுருஷபரத்வம் இங்குச் சொல்ல வொண்ணாது; ஆகாச சப்தத்திற்கு பூதாகாசத்தில் ப்ரஸித்தி அதிகமாக இருப்பதால் இங்கே தஹராகாசமாக ஓதப்பட்டிருக்கும் வஸ்து பூதாகாசமேயாகும் என்று பூர்வபக்ஷம் ப்ராப்தமாக, ஸித்தாந்தம் வருமாறு:–

ஸூ – தஹர: உத்தரேப்ய: (1–3–13) ப்ரக்ருத ஸ்தலத்தில் மேலேயுள்ள வாக்யத்தில் ஓதப்பட்ட தருமங்களினால் (அந்த தருமங்கள் பொருந்தவேண்டியதற்காக) தஹராகாச சப்தத்தினால் பரம புருஷனே சொல்லப் படுகிறானென்று நிஷ்கர்ஷிப்பதாக ஸூத்ரத்தின் பொருள் எளிதாக அறியத்தக்கது. "தஹரோஸ்மிந்நந்தர ஆகாச:" என்று தஹராகாசத்தை ப்ரஸ்தாவித்து "தஸ்மிந் யத் அந்த:" என்று அதனுள்ளேயிருப்பதாக வொன்றையும் ப்ரஸ்தாவித்து "தத் அந்வேஷ்டவ்யம்" என்று தச்சப்தத்தாலே ப்ரஸ்துதமான தஹராகாசமென்ன, அதனுள்ளேயிருக்கிற வஸ்துவென்ன ஆக இரண்டையும் எடுத்து இரண்டையும் உபாஸிக்கும்படி சொல்லிவிட்டு, அதனுள்ளேயிருப்பது எது? என்று கேட்டுக்கொண்டு "அஸ்மிந் காமாஸ் ஸமாஹிதா: ஏஷ ஆத்மா அபஹதபாப்மா. . . . . ஸத்யகாமஸ் ஸத்ய ஸங்கல்ப:" என்று ஓதப்பட்டிருப்பது ப்ரஸித்தம். இதனால் நாம் ஸ்பஷ்டமாகத் தெரிந்துகொள்வதென்ன வென்றால், முன்னே ப்ரஸ்தாவிக்கப்பட்ட தஹராகாசம் பரமாத்மாவென்றும், அதனுள்ளேயிருக்கும் வஸ்து அபஹத பாப்மத்வம் முதலிய எண்குணமென்றும், அந்த தஹராகாசமே "ஏஷ ஆத்மா அபஹதபாப்மா" என்று அஷ்டகுண யுக்தமாக ஓதப்பட்டதென்றும் தெரிந்துகொண்டோம். ஆகாச சப்தமிருப்பதால், பூதாகாச ப்ரதீதிதானேயுண்டாகுமென்கிற வாதமும் அயுக்தம். "ஆகாசோஹ வை நாமரூபயோர் நிர்வஹிதா" இத்யாதிகளில் ஆகாச சப்தம் பரமபுருஷனிடத்திலும் ப்ரஸித்தமாயிருப்பது காணலாம். ஆக, தஹராகாச சப்த நிர்திஷ்டன் பரமபுருஷனே என்றதாயிற்று. கூரத்தாழ்வான், ஸுந்தரபாஹுஸ்தவத்தில், "வந்தேய ஸுந்தரபுஜம் புஜகேந்த்ர போகஸக்தம் மஹாவநகிரி ப்ரணயப்ரவீணம், யம் தம் விதுர் தஹரமஷ்டகுணோபஜுஷ்டமாகாசம் ஔபநிஷதீஷு ஸரஸ்வதீஷு" என்கிற சுலோகத்தில் இவ்வதிகரணார்த்த ஸாரத்தை அமைத்திருப்பது உணரத்தக்கது.

781. ப்ரமிதாதி கரணம். இதுவும் முதலத்யாயம் மூன்றாவது பாதத்திலுள்ளது "அங்குஷ்ட மாத்ர: புருஷோ மத்ய ஆத்மநி திஷ்டதி, ஈசாநோ பூத பவ்யஸ்ய ந ததோ விஜுகுப்ஸதே" என்று கடவல்லியில் ஓதப்படுகிறது. கட்டை விரலளவான புருஷன் ஆத்மமத்யத்திலிருக்கிறானென்றும், அவன் பூதபவ்யங்களுக்கு ஈச்வரனென்றும் இதில் சொல்லிற்று. இந்த புருஷன் யாவன்? ஜீவபுருஷனாகவுமிருக்கமுடியாது, பரமபுருஷனாகவுமிருக்கமுடியாது. ஏனென்னில், ச்வேதாச்வதரோபநிஷத்தில் "வாலாக்ர

சதபாகஸ்ய சததா கல்பிதஸ்ய ச, பாகோ ஜீவஸ் ஸ விஜ்ஞேய:'' என்று அத்யந்தம் அணுபரிமாணனாகச் சொல்லப்பட்ட ஜீவாத்மாவுக்கு அங்குஷ்ட பரிமாணத்வம் ஸம்பவிக்கமாட்டாது. விபுவான பரமபுருஷனுக்கும் அங்குஷ்டமாத்ரத்வம் ஸம்பவிக்க விரகில்லை. ஆனால் ச்வேதாச்வதரோபநிஷத்தில் ''ப்ராணாதிபஸ் ஸஞ்சரதி ஸ்வகர்மபி: அங்குஷ்ட மாத்ரோரவிதுல்யரூப:'' என்று கர்மபரவச னான ஜீவனுக்கு அங்குஷ்டமாத்ரத்வம் சொல்லப்பட்டிருக்கக் காண்கிறதேயென்று ஒரு வாதம் எழும். கீழே உதாஹரித்த ''வாலாக்ரசதபாகஸ்ய'' இத்யாதியான (ச்வேதாச்வதரத்திலேயேயுள்ள) ப்ரமாணத் திற்கு விருத்தமானவிது எங்ஙனே சேருமென்று கேட்க நேரும். ஹ்ருதயத்தினுள்ளேயிருப்பதாகச் சொன்னபடியாலே ஹ்ருதயோபாதிகமாக நிர்வஹித்துவிடலாமென்னில், இந்த நிர்வாஹம் பரமபுருஷனிடத்திலுமொக்கும். உபாஸகாநுக்ரஹார்த்தமாக உபாஸகஹ்ருதயத்திலிருப்பதனால் ஹ்ருதயம் அங்குஷ்டபரிமாணகமென்று கொண்டு தது பாதிகமாகச் சொல்லலாமென்றபடி. ஏவஞ்ச, அங்குஷ்டமாத்ரத்வம் ஜீவாத்மபரமாத்மாக்களிருவர்க்கும் பொதுவென்று தேறும். பரமாத்மாவே இங்கு விவக்ஷிதனென்று எதுகொண்டு நிர்ணயிப்பதென்னில், ''ஈசாநோ பூதபவ்யஸ்ய'' என்று சொல்லப்பட்ட ஸர்வேச்வரத்வம் அஸங்குசிதமாகப் பரமபுருஷனிடத்தில் தான் ஸம்பவிக்கும். ''ய: ப்ருதிவ்யாம் திஷ்டந்'' இத்யாதியான அந்தர்யாமி ப்ராஹ்மணத்தில் ''ய: ப்ருதிவீம் அந்தரோ யமயதி'' இத்யாதி யாலே சொல்லப்பட்ட ஸர்வநியாமகத்வம் ஜீவனுக்கு ஸர்வாத்மநா அஸம்பாவிதமன்றோ? ஆக அங்குஷ்டமாத்ரப்ரமிதனான புருஷன் பரமபுருஷனேயென்று ஸித்தாந்திதமாயிற்று. அது ஸூத்ரத்தினால் விவரிக்கப்படுகிறது.

ஸூ – சப்தாதேவ ப்ரமித: (1–3–23) ப்ரமித: – அங்குஷ்ட பரிமிதனாகச் சொல்லப்பட்டவன் பரமாத்மாவேயாவன்; (ஏனென்னில்) சப்தாத் ஏவ ''ஈசாநோ பூதபவ்யஸ்ய'' என்றுள்ள சப்தத்தினாலேயே என்பது ஸூத்ரத்தின் பொருள். பரமபுருஷனுக்கு அங்குஷ்டமாத்ரத்வம் எப்படி ஸம்பவிக்குமென்ன அடுத்த ஸூத்ரம் அந்த சங்கையைப் பரிஹரிக்கிறது.

ஸூ – ஹ்ருத்யபேக்ஷயா து மநுஷ்யாதிகாரத்வாத் (1–3–24). இதன் பொருள் கீழே விவரிக்கப்பட்டதாயிற்று. இதில் மநுஷ்யாதிகாரத்வாத் என்று எதற்காகச் சொல்லப்பட்டதென்னில், அங்குஷ்ட சூந்யங்களான குதிரை, பாம்பு முதலான ஜந்துக்கள் விஷயத்தில் அங்குஷ்ட ப்ரமிதத்வம் சொல்லமுடியாதேயென்று சோத்யமுண்டாக, (மநுஷ்யாதிகாரத்வாத்) உபாஸநார்த்தமாக உபாஸகஹ்ருதயத்தில் இருப்பதனால் தானே அங்குஷ்டப்ரமிதத்வம் உபபாதிக்கப்பட்டது. அந்த உபாஸனத்திற்கு அதிகாரிகள் மநுஷ்யர்கள். அவர்களுக்கு அங்குஷ்டசாலித்வம் நிர்விவாதம் என்று தெரிவிப்பது ஸூத்ரகாராபிமதம்.

இங்கு விஷய வாக்யத்தில் ஈசாந: என்றுள்ளது ''சம்புரீச: பசுபதி: சிவச் சூலீ மஹேச்வர:'', ''ஈச்வரச் சர்வ ஈசாந:'' இத்யாதி கோசங்களினால் ஈசாந சப்தம் பசுபதியென்கிற தேவதாவிசேஷத்தில் ரூடமென்று அறிகிறோம். ஆக, ''அங்குஷ்டமாத்ர:

புருஷ:" என்னப்பட்ட புருஷன் நாராயணனல்லன், பசுபதியென்பவனே என்றொருவாதம் கிளரும். இங்கு தத்துவமுணர்த்துகிறோம். 'ஈசாந:' என்று மட்டும் இங்கில்லை. "பூதபவ்யஸ்ய ஈசாந:" என்றுள்ளது. அதனால் ஸர்வேச்வரத்வம் தெரிவிக்கப்படுகிறது. மேலே காட்டின கோசத்தில் ஈசாநபதம் போல் ஈச்வரபதமும் சம்புவினிடத்தில் ரூடமென்று தெரியவருகின்றது. அதுகொண்டு 'ஸர்வேச்வர:' எனவருமிடங்களில் பசுபதியை அர்த்தமாகக் கொள்வதில்லையன்றோ. மேலும் விஷ்ணுஸஹஸ்ரநாமத்தில் 'ஈசாந:' என்கிறவிது விஷ்ணு நாமங்களில் ஒன்றாகவும் ஓதப்பட்டுள்ளது. ப்ரக்ருத விஷயவாக்யத்தில், "பூதபவ்யஸ்ய ஈசாந:" என்று ஸ்பஷ்டமாகவிருப்பதால் ஸர்வேச்வரனான நாராயணனே ச்ருதிவிவக்ஷிதனென்பது நிஸ்ஸந்தேஹம்.

782. தேவதாதிகரணம் (இதுவும் முதலத்யாயம் மூன்றாவது பாதத்திலுள்ளது.) கீழே "ஹ்ருத்ய பேக்ஷயா து மநுஷ்யாதிகாரத்வாத்" என்கிற ஸூத்ரத்தில் பரமபுருஷனை உபாஸிப்பதில் மனுஷ்யர்களுக்கு மட்டுமே அதிகாரம் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. அதன் மேல் அது தேவர்களுக்குமுண்டென்கைக்காக இவ்வதிகரணம் தோன்றுகிறது. "ததுபர்யபி பாதராயணஸ் ஸம்பவாத்" (1–1–25) என்பது ஸூத்ரம். தத் – அந்த பரமாத்ம உபாஸநமானது, உபரி அபி – மநுஷ்யர்களிற் காட்டிலும் மேம்பட்டவர்களான தேவர்களிடத்திலும் ஸம்பவிக்கக் குறையில்லை. ஏனெனில், ஸம்பவாத் – எவன் அர்த்தியோ, எவன் ஸமர்த்தனோ அவன் அதிகாரி என்பது நியதமாதலால் தேவதைகளுக்கு உபாஸநத்தில் அர்த்தித்வமும் ஸாமர்த்தியமும் ஸம்பவிக்குமதாகையாலே "இதி பாதராயணோ மந்யதே" என்று ஸூத்ரத்தின் பொருள் அறியத்தக்கது.

ஒரு காரியத்தில் ஒருவர் அதிகாரியாக வேணுமானால் இரண்டு வேண்டும். இது நமக்கு வேணுமென்கிற அபேக்ஷை முதலது. அதற்குரிய ஆற்றல் இரண்டாவது. இவையே அர்த்தித்வ ஸாமர்த்தியங்களெனப்படும். இந்திரன் முதலான தேவர்களுக்கும் ஸாம்ஸாரிகமான தாபத்ரயமுண்டாகி வருந்துவதையும், அதற்குப் பரிஹாரம் தேடுவதையும் ச்ருதீதிஹாஸ புராணங்களில் காணா நின்றோம்.

ஆகையாலே அவர்களுக்கும் உபாஸனத்தில் அதிகாரமுண்டென்று கொள்ளக் குறையில்லை என்பது இவ்வதிகரணத்தின் ப்ரமேயம்.

இங்குத் தோன்றும் பூர்வபக்ஷப்ரகாரம் என்னவென்றால், தேவர்களுக்கு அர்த்தித்வமும் ஸாமர்த்தியமும் உண்டென்று கொள்ளவேணுமானால், அவர்களுக்கு தேஹமுண்டென்று முக்கியமாகச் சொல்லியாகவேண்டும். விவேகம், விமோகம் முதலான ஸாதநஸப்தகத்தாலே அநுக்ருஹீதமான பரப்ரஹ்மோபாஸனம் அனுஷ்டிக்கப்படவேண்டில் சரீரமில்லாமல் அது ஸாத்யமன்று. அவர்களுக்கு சரீரமுண்டென்று ஸாதிப்பதற்கு ஒரு ப்ரமாணமும் காணோம். ஆகவே அவர்களுக்கு அர்த்தித்வமும் ஸாமர்த்தியமும் ஸம்பவிக்கமாட்டாதென்று. இந்த பூர்வபக்ஷத்தைத் தள்ளுகிறது இந்த "ததுபர்யபி..." இத்யாதி ஸூத்ரம். "பராஸ்ய சக்திர் விவிதைவ ச்ரூயதே" இத்யாதி ச்ருதி வாக்கியங்களினால் அபரிமிதஜ்ஞாந சக்தியுக்தனாக ஓதப்பட்டுள்ள பரமபுருஷனிடத்தில்

அவர்களுக்கு அர்த்தித்வம் ஸம்பவிக்கக் குறையில்லை, ஸாமர்த்தியத்திற்கும் குறையில்லை. படுதரமான தேஹேந்த்ரியாதிகள் தேவர்களுக்கு உண்டென்பதைப் பல சாஸ்த்ரங்களினாலும் நாம் அறியா நின்றோம். உபநிஷத்துக்களில் ச்ருஷ்டிப்ரகரணங்களிலும் உபாஸன ப்ரகரணங்களிலும், இது ஸ்பஷ்டமாகவே காணப்படா நின்றது. ச்ருஷ்டி வாக்கியங்களெல்லாவற்றிலும் தேவதிர்யங் மநுஷ்ய ஸ்தாவரரூபேண நான்கு வகைப்பட்ட ச்ருஷ்டி செய்யப்படுவதாக ஓதப்பட்டிராநின்றது. தேவாதி பேதமானது தத்தத் கர்மாநுகுணமாக ப்ரஹ்மலோகம் முதலான பதினான்கு லோகங்களில் நேரும் பலன்களை அநுபவிப்ப தற்கு யோக்யமான தேஹேந்த்ரியாதி ஸம்பந்தத்தைப் பொறுத்ததாகவுள்ளது. ஆத்மாக்கள் இயற்கையாகவே தேவாதிகளாகவுள்ளனவல்ல. சரீர பேதத்தால் தான் தேவ மநுஷ்யாதி வ்யபதேசம் விளைகிறது. வேதங்களிலும் உபநிஷத்துக்களிலும் இதிஹாஸ புராணங்களிலும் பலபல தேவர்களைப் பற்றின பல்வேறு கதைகளைக் கண்டும் கேட்டும் வருகின்றோம். "வஜ்ரஹஸ்த: புரந்தர:" என்றும் "தேநேந்த்ரோ வஜ்ரமுதயச்சத்" என்றும் "தௌ ஹ த்வாத்ரிம்சதம் வர்ஷாணி ப்ரஹ்மசர்யமூஷது:" "தௌ ஹ ப்ரஜாபதிருவாச" இத்யாதி பரச்சத பரஸ்ஸஹஸ்ர வாக்யங்களினால் தேவர்களுக்கு சரீரமுடைமையையும் இந்த்ரியாதிபாடவமுடைமையையும் அறிகின்றோம்.

அன்றியும், இந்திரன் வாயு அர்யமா ப்ரஜாபதி முதலான பலபல தேவதைகளை உத்தேசித்துத் காம்யேஷ்டிகளின் விதிகளும் அந்த இஷ்டிகளால் பல ப்ராப்தியும் கருமகாண்டங்களில் நிரம்ப ஓதப்பட்டிருப்ப தால் அவர்களுக்கு சரீரமில்லையாகில் இதெல்லாம் பொய்யுரையாக ஆகவேண்டி வருமாதலால், தேவர்களுக்கு சரீரமில்லை யென்று ஸாதிக்கவே முடியாது. பிரமன், இந்திரன் முதலான தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் மற்றுமுள்ளார்க்கும் தேஹேந்த்ரியாதிகளும் ஸ்வபாவ பேதங்களும், ஸ்தான விசேஷங்களும், போக விசேஷங்களும், க்ருத்ய விசேஷங்களும் ஸ்பஷ்டமாக ஓதப்பட்டிருக்கையாலே அவர்களுக்கு சரீர ஸம்பந்தம் நிர்விவாதமாக உண்டென்று கொள்ளக் குறையில்லை யாதலால் அர்த்தித்வமும் ஸாமர்த்தியமும் மநுஷ்யர்களுக்குப் போல தேவர்களுக்கும் உண்டென்னத் தட்டில்லை. ஆக உபாஸநாதிகாரம் மநுஷ்யர்களுக்கு மட்டுமன்று தேவர்களுக்குமுண்டென்று ஸ்தாபிக்கப்பட்டதாயிற்று.

783. அபசூத்ராதிகரணம். இதுவும் முதலத்யாயம் மூன்றாவது பாதத்திலுள்ளது. இதன் கீழ் தேவதாதிகரண ப்ரமேயம் நிரூபிக்கப்பட்டது. பரமபுருஷனை உபாஸிப்பதில் மநுஷ்யர்களுக்குப் போலே தேவர்களுக்கும் அதிகாரமுண்டோ? என்கிற விசாரத்தில் அஃது உண்டென்று தேவாதிகரணத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. ஒரு காரியத்தில் ஒருவர் அதிகாரியாக வேணுமானால் இது நமக்கு வேணுமென்கிற அபேக்ஷையும் அதற்குரிய ஆற்றலுமாகிற இரண்டு வேண்டும். இவையே அர்த்தித்வ ஸாமர்த்தியங்களெனப்படுவன. இது மநுஷ்யர்களுக்குப் போல தேவர்களுக்கும் உண்டாதலால் அவர்களுக்கும் பரமபுருஷனை உபாஸிப்பதில் அதிகாரம் தடையற்றதென்று அவ்வதிகரணத்தில் நிரூபிக்கப்பட்டது. அந்த அர்த்தித்வ ஸாமர்த்தியங்கள் சூத்ரனுக்கும் ஸம்பவிக்கக் குறையில்லாமையாலே ப்ரஹ்மவித்யையில் அவனுக்கும் அதிகாரம் உண்டோவென்கிற

சங்கையில் இல்லை யென்று ஸ்தாபிப்பதற்காக இவ்வதிகரணம் ப்ரவ்ருத்தமாகிறது. ஏழு ஸூத்ரங்கள் கொண்டது இவ்வதிகரணம். அதில் முதல் ஸூத்ரம். "சுகஸ்ய ததநாதரச்ரவணாத் ததாத்ரவணாத் ஸூச்யதே ஹி" (1–3–33) என்பது சூத்ரம். சூத்ரனுக்கு வேதத்தில் அதிகாரமில்லையென்பது ஸித்தம். அன்றியும், யஜுர்வேதத்தில் ஏழாவது காண்டம் முதல் ப்ரச்நம் முதலநுவாகத்தில் "தஸ்மாத் சூத்ரோ யஜ்ஞே அநவக்ல்ப்த:" என்று சூத்ரனுக்கு யஜ்ஞாதிகாரமில்லையென்று ஸ்பஷ்டமாகவே மறுக்கப்பட்டிருக்கின்றது. இப்படியிருக்க சூத்ரனுக்கு ப்ரஹ்மவித்யையில் அதிகாரமுண்டா இல்லையா என்கிற விசாரத்திறகு ப்ரஸக்தியே கிடையாதென்று நினைக்கக் கூடும். கேண்மின் அக்நிவித்யாஸாத்யங்களான கருமங்களில் சூத்ரனுக்கு அதிகாரமில்லையாகிலும் பரப்ரஹ்மோபாஸனமென்பது மனோவ்ருத்தி மாத்திரமேயாதலால் அதில் அதிகாரம் கூடாமையில்லை. உபாஸனத்திற்கு சாஸ்த்ரோக்தங்களான கருமங்கள் அபேக்ஷிதமென்பதை ஒப்புக் கொள்வோம். அந்தந்த வர்ணாச்ரமங்களுக்கு ஏற்ற கருமங்களே அபேக்ஷிதமாதலால் சூத்ரனுக்குத் தன் வருணத்திற்கேற்றவாறு முந்தின வருணத்தவர்களுக்குச் செய்யும் சுச்ரூஷையே கருமமாதலால் அந்த கர்மாநுஷ்டானத்திற்குக் குறையில்லையே. இவனுக்கு வேதாத்யயனமும் வேதாந்த ச்ரவணமும் இல்லையாகிலும் இதிஹாஸ புராண ச்ரவணம் குறையற்றதேயன்றோ. "ச்ராவயேச் சதுரோ வர்ணாந் க்ருத்வா ப்ராஹ்மணமக்ரத:" என்று ப்ரமாணமுமுள்ளது. சூத்ரர்களான விதுராதிகள் ப்ரஹ்ம நிஷ்டர்களென்பதை இதிஹாஸபுராணங்களில் காணாநின்றோம். இவையெல்லாவற்றுக்கும் மேற்படச் சாந்தோக்யத்தில் ஸம்வர்க்கவித்யையில் சூத்ரனுக்கு (ஜாநச்ருதிக்கு) ப்ரஹமவித்யையில் அதிகாரம் காணப்படுகிறது. (எங்ஙனேயென்னில்) சுச்ரூஷுவாக வந்த ஜாநச்ருதியை ஆசார்யரான ரைக்வர் சூத்ர! என்று விளித்து அவனுக்கு ப்ரஹ்மவித்யையை உபதேசித்திருப்பதாகத் தெரியவருகிறது. "ஆஜஹாரேமாச் சூத்ர! அநேநைவ முகேந ஆலாபயிஷ்யதா:" என்கிற ரைக்வவாக்யத்தில் ஜாநச்ருதியென்பவன் சூத்ரனாக விளிக்கப் பட்டு அவனுக்கு ப்ரஹ்மவித்யோபதேசம் செய்யப்பட்டிருக்கின்றது. ஆகவே சூத்ரனுக் கும் ப்ரஹ்மவித்யாதிகாரமுண்டென்று பூர்வபக்ஷம் ப்ராப்தமாக, அஃது இல்லையென்று மறுக்கப்படுகிறது இவ்வதிகரணத்தில்.

784. சூத்ரனுக்கு ப்ரஹ்மவித்யாதிகாரம் ஸம்பவிக்கமாட்டாது. ஏன்? யோக்யதைக் குறுப்பான அர்த்தித்வ ஸாமர்த்தியங்கள் இரண்டனுள் ஸாமர்த்தியமென்பது கிடையாதாதலால். அர்த்தித்வமிருக்கலாம். அதனால் பயனில்லை. ஸாமர்த்தியமில்லாத அர்த்தித்வம் நிஷ்ப்பலம். வேதாத்யயனத்தில் அதிகாரமில்லையென்றபோதே இது ஸித்தம். இதிஹாஸபுராண ச்ரவணயோக்யதை யுண்டேயென்னில் அதனால் பாபக்ஷயம் முதலான பலன் ஸித்திக்குமேயல்லது உபாஸனம் ஸித்திக்கமாட்டாதென்பது உறுதி. ஸம்வர்க்க வித்யையில் சுச்ரூஷுவாக வந்த ஜாநச்ருதியை ஆசார்யரான ரைக்வர் சூத்ர! என்று விளித்து ப்ரஹ்மவித்யோபதேசம் பண்ணினாரென்பது பற்றிய தத்துவம் கேளீர். "சுகஸ்ய ததநாதரச்ரவணாத்" இத்யாதியான ப்ருக்ருத (ப்ரதம) ஸூத்ரத்தில் அந்த தத்துவமே

விளக்கப்பட்டுள்ளது. இவ்விடத்தில் சூத்ர! என்கிற ஸம்போதனமானது சோகமடைந்திருப்பவனே! என்னும் பொருளுடையதேயல்லது சூத்ரஜாதீயனே! என்னும் பொருளுடையதன்று என்பது ஸூத்ரத்தின் தேர்ந்த பொருள். ஜாநச்ருதியின் இதிஹாஸமுணர்ந்தால் இது விசதமாகும்.

785. அந்த இதிஹாஸம் வருமாறு: க்ஷத்ரியனான ஜாநச்ருதியென்பவன் அன்னதானங்களும் த்ரவ்யதானங்களும் விசேஷமாகச் செய்துகொண்டு பரமதார்மிகனாயிருந்து வந்தான். ஆனால் அவனுக்கு ப்ரஹ்மஜ்ஞானம் மட்டும் இல்லாமலிருந்தது. அவன் செய்த பல தருமங்களினால் மிக மகிழ்ச்சியடைந்த மஹாத்மாக்களிருவர் அந்த ஜாநச்ருதிக்கு ப்ரஹ்மஜ்ஞானத்தில் ருசியை உண்டாக்குவதற்காக இரண்டு ஹம்ஸங்களின் வடிவெடுத்து இரவில் அவனுக்கு அணித்தாகப் பறந்து செல்லுகையில் ஒரு ஹம்ஸம் மற்றொரு ஹம்ஸத்தை நோக்கிச் சொல்லிற்று. "அப்பா பல்லாக்ஷனே! இங்கே ஜாநச்ருதியென்கிற மஹானுடைய தேஜஸ்ஸானது வானளாவியிருக்கின்றது. அதில் நீ கொளுத்தாதபடி உன்னை நோக்கிக் கொள்" என்றது. இங்ஙனே ஜாநச்ருதியை ப்ரசம்ஸிததுச் சொன்ன வார்த்தையைக் கேட்ட மற்றொரு ஹம்ஸமானது, "அப்பா! இந்த ஜாநச்ருதியை ப்ரஹ்மவித்துக்களில் தலைவரான ரைக்வராக நினைத்து விட்டாயோ? இவன் மஹா தார்மிகனா யிருந்தாலும் ப்ரஹ்மஜ்ஞானமில்லாதவன் ஆகையாலே மஹாஜ்ஞானாதிகரான ரைக்வரை யொத்தவனாவனோ? என்று ஏளனமாகச் சொல்லிப் போயிற்று. இங்ஙனே தன்னையிழித்துக் கூறியதைக் கேட்ட ஜாநச்ருதி தனக்கு ப்ரஹ்மஜ்ஞானம் இல்லாமையினாலே இப்படி கர்ஹை உண்டாயிற்றென்று மனம் நொந்து ரைக்வரிடம் ப்ரஹ்மஜ்ஞானம் பெறவிரும்பி ரைக்வர் இருக்குமிடத்தைத் தெரிந்துவர ஒருவனை அனுப்பித் தெரிந்துகொண்டபின் தானே ரைக்வரிடம் சென்று தன் சக்திக்கியன்ற குருதக்ஷிணையை ஸமர்ப்பித்துத் தனக்கு ப்ரஹ்மோபதேசம் பண்ணவேண்டியவளவில் ரைக்வர் தமது யோக மஹிமையினால் கீழே நடந்த செய்தியை உணர்ந்து இவன் ஹம்ஸபக்ஷியின் அவஹேளன வாக்கியத்தைக் கேட்டு சோகத்தோடு ஓடிவந்திருக்கிறான் என்று அறிந்து வித்யோபதேசம் பெறுவதற்கு முக்கியமான நிர்வேதம் இவனுக்குள்ளதாகை யாலே இவன் உபதேச பாத்திரமே என்று கொண்டு சூத்ர! என்றழைத்திருப்பது சோகமுடையவனே! என்கிற பொருளைக் கொண்டுதானென்று அறுதியிடத் தட்டில்லை. "சோசதீதி சூத்ர:" என்று வ்யுத்பத்தி காண்க. இதன் மேல் ஒரு சங்கை தோன்றும். "யோகாத் ரூடிர் பலீயஸீ" என்பது நியாயமாகையாலே சூத்ரபதத்திற்கு சதுர்த்த ஜாதியில் ரூடியிருக்கையாலே அது பிரபலமன்றோ என்று. "க்ஷத்ரியத்வகதேச்ச" இத்யாதிகளான மேல் ஸூத்ரங்களினால் ஜாநச்ருதிக்கு க்ஷத்ரிய ஜாதீயத்வம் ஸ்பஷ்டமாகக் காண்கிறதென்று நிரூபிக்கப்படுவது கொண்டு தெளிக. ஸூத்ரத்தின் பொருளாவது "சுக் அஸ்ய ஸூச்யதே ஹி" – இந்த ஜாநச்ருதியென்னும் க்ஷத்ரியனுக்கு சோகமுள்ளமை ஸூசிதமாகிறது. (எதனாலென்னில்) தத் அநாதரச்ரவணாத் – அந்த ஹம்ஸபக்ஷியின் இழிவுரையைக் கேட்டதனால், ததா ஆத்ரவணாத் – அப்போதே ரைக்வரிடம் விரைந்தோடி

வருகையினாலே என்றபடி. ஆக சூத்ரனுக்கு ப்ரஹ்ம வித்யாதிகாரமில்லையென்று முடிந்தது.

786.வாக்யாந்வயாதிகரணம். (இது முதலத்யாயம் நான்காவது பாதத்திலுள்ளது.) ப்ரஹதாரண்யகத்தில் மைத்ரேயீ ப்ராஹ்மணமென்பது ஒரு பாகம். அதில் யாஜ்ஞவல்க்யரை நோக்கி மைத்ரேயியானவள் அம்ருதத்வோபாயம் சொல்லுமாறு கேட்கையில் அவர் "ந வா அரே பத்யு: காமாய பதி: ப்ரியோ பவதி, ஆத்மநஸ் து காமாய பதி: ப்ரியோ பவதி" என்று தொடங்கி "ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய:" என்று முடிவாகச் சொல்லியுள்ளார். இங்குள்ள ஆத்மா என்கிற பதம் கருமபலன்களை அநுபவிக்கிற ஜீவாத்மாவைச் சொல்லுவதன்று. "தமேவம் வித்வாந் அம்ருத இஹ பவதி" (புருஷஸூக்தே) இத்யாதிகளிற் சொல்லுகிற பரமாத்மாவையே நோக்கியது. அல்லாவிடில் மேல் வாக்யம் பொருந்தாது. அது பொருந்துவதற்காகப் பரமாத்மபரமாகத் தான் கொள்ள வேண்டும் – என்றறுதியிடுவது இவ்வதிகரணத்தின் ப்ரமேயம். இவ்வாத்மாவுக்கு ஸத்ய காமத்வ ஸத்யஸங்கல்பத்வாதிகளை மேலே சொல்லியிருக்கையாலே அது பரமாத்மாவுக்கே உபபந்நமாகக் கூடியதாகையாலே என்றதாயிற்று. பரமாத்மா விவக்ஷிதனானால் ஜீவாத்ம வாசகமான (ஆத்மா) என்கிற சப்தத்தை ப்ரயோகிப்பானேன்? பரமாத்மாவென்றே ப்ரயோகிக்கலாகாதா? என்கிற இக்கேள்விக்கு ஸூத்ரகாரரால் மேலே மூன்று ஸூத்ரங்களினால் ஸமாதானம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அடைவே ஆச்மரத்ய மதம், ஔடுலோமி மதம், காசக்ருத்ஸ்ந மதம் என மூவருடைய மதம் காட்டப்பட்டுள்ளது. (1) ஜீவாத்ம பரமாத்மாக்களுக்கு கார்யகாரண பாவம் ச்ருதியில் சொல்லப்பட்டிருக்கையாலே அதனால் அவர்களுக்கு அபேதம் ஏற்படுகிறது. அதைத் தெரிவிப்பதற்காகப் பரமாத்ம ஜீவாத்மாக்களுக்கு ஐக்யோக்தியுள்ளதென்று ஆச்மரத்ய மதம்.(2) இனி ஔடுலோமி மதம். கீழே காட்டிய ஆச்மரத்ய மதத்தில் ஜீவாத்மாவுக்கு பரமாத்மாவிடமிருந்து உத்பத்தியைக் கொள்ளுகையாலே "ந ஜாயதே ம்ரியதே வா விபச்சித்" இத்யாதி ப்ரமாணங்களோடு அது விரோதிக்கையாலும் மற்றும் அநேக தோஷ ப்ரஸங்கத்தாலும் ஆச்மரத்ய மதம் ஸாதுவன்றென்று கொண்ட ஔடுலோமியானவர் – முக்தி தசையில் ஜீவாத்மாவுக்குப் பரமாத்மாவோடு அபேதம் ச்ருதி ஸித்தமாயிருக்கையாலே முக்தி தசையில் பவிஷ்யத்தான ஜீவாத்மா பரமாத்ம அபேதத்தை அவலம்பித்து ஐக்யம் சொல்லிற்றாக நிர்வஹித்தார். (2) இனி காசக்ருத்ஸ்நமதம். கீழே விவரித்த ஔடுலோமி மதத்தில் மோக்ஷம் வரையில் ஜீவாத்மா பரமாத்மாக்களுக்கு பேதமுள்ளதென்றும், முக்தி தசையில் அபேதமென்றும் கொள்ளப்படுகிறவிது ப்ரமாண விருத்தம். வெவ்வேறுபட்ட பொருள்கள் ஒன்றோடொன்று சேருமேயொழிய ஐக்கியத்தை யடையமாட்டாவாதலால் இதையறிந்த காசக்ருத்ஸ்நர் பரமாத்மா ஜீவாத்மாவினுள் அந்தராத்மாவாக இருப்பதும், ஜீவாத்மாவுக்குப் பரமாத்ம சரீரத்வமும் ப்ரமாண ஸித்தமாகை யாலே ப்ரக்ருதத்தில் ஜீவாத்மா வாசியான ஆத்மசப்தம் பரமாத்மாவாசியாகு மென்று நிர்வஹித்தார். இங்ஙனே வரிசையாக மூன்று மதங்களை உதாஹரித்த ஸூத்ரகாரர் மேலே நான்காவது மதத்தைச் சொல்லாமையினால் காசக்ருத்ஸ்நமதமே ஸூத்ரகாராபிமதமென்பது நிஸ்ஸந்தேஹமாக

நிர்ணயிக்கப்படுகிறது. இது விசிஷ்டாத்வைதத்திற்கு மிக இணங்கினது. அத்வைதிகளும் காசக்ருத்ஸ்நமதமே ஸூத்ரகாராபிமதமென்று இசைந்து வைத்து 'அவஸ்திதே:' என்கிற பதத்திற்கு – பரமாத்மாவே ஜீவாத்மாவாக இருப்பதனாலேயென்று பொருள் கூறுகிறார்கள். ப்ரக்ருதத்தில் ஐக்கியத்தைப் பொருந்தவிடவேணும். இங்ஙனே பொருள் கொண்டாலும் ஐக்கியம் பொருந்திவிடுகின்ற தன்றோ. காசக்ருத்ஸ்நர் சரீராத்மபாவத்தை அவலம்பித்தே ஐக்கியத்தைப் பொருந்த விட்டாரென்று ஏதுக்கு ஒப்புக்கொள்ளவேணும் என்கிறார்கள் அவர்கள். இங்கு நாம் முக்கியமாகச் சொல்வதைக் குறிக்கொள்ள வேணும். 'அவஸ்திதி: ' என்கிற சப்தமானது "பூதலே கட: அவதிஷ்டதே. ப்ராஸாதே தேவதத்த: அவதிஷ்டதே" இத்யாதி வ்யவஹாரங்களிற் போல ஒரு வஸ்துவில் மற்றொரு வஸ்து இருப்பதைத்தான் சொல்லக்கடவது. 'ப்ருதிவ்யாம் திஷ்டந், அப்ஸு திஷ்டந், தேஜஸி திஷ்டந், வாயௌ திஷ்டந், ஆகாசே திஷ்டந், ஆத்மநீ திஷ்டந்" இத்யாதிகளான உபநிஷத் வாக்யங்களில் பலகால் காணப்படுகிற ஷ்டா தாது ப்ரயோகத்தை அடியொற்றியே 'அவஸ்திதே:' என்கிற ஸௌத்ரப்ரயோகம் உள்ளதென்பதை ப்ரமாணிகர்கள் உள்ளபடியுணர்வர். பரமாத்மாதானே ஜீவாத்மாவாக இருப்பதனாலென்கிற பொருள் ஏறிட்டாலும் ஏறமாட்டாது.

787. ப்ரக்ருத்யதிகரணம் (முதலத்யாயம் நான்காவது பாதத்திலுள்ளது.) கீழ்க்கடந்த வாக்யாந்வயாதிகரணத்தில் இரண்டாவதான "ப்ரதிஜ்ஞாஸித்தேர் ஸிங்கம் ஆச்மரத்ய:" என்கிற ஸூத்ரத்திலுள்ள ப்ரதிஜ்ஞா பதத்தினால் "ஏகவிஜ்ஞாநேந ஸர்வவிஜ்ஞாந ப்ரதிஜ்ஞையன்றோ ப்ரஸ்தாவிக்கப்பட்டது. அதனால் ஜகத்துக்கு உபாதாநகாரணம் பரமபுருஷனேயென்று தேறிற்றாகிறது. அது பொருந்தாதென்று பூர்வபக்ஷம் ப்ரஸக்தமாக அதை நிராகரித்து உபாதான காரணமும் பரமபுருஷனேயென்று ஸ்தாபிக்கத் தோன்றியது இவ்வதிகரணம். ப்ரக்ருதிச்ச ப்ரதிஜ்ஞா த்ருஷ்டாந்தாநுபரோதாத் (1–4–23) என்பது ஸூத்ரம்.

ப்ரக்ருதி: என்கிற பதம் உபாதாநகாரண வாசகம். ச என்பதனால் நிமித்த காரணத்வம் ஸமுச்சயிக்கப்படுகிறது. பரப்ரஹ்மம் ஜகத்துக்கு நிமித்தகாரணமென்பதில் ஆக்ஷேபம் இல்லாதவனை நோக்கிச் சொல்லுகிறது ஆகையாலே நிமித்தகாரணமாயிருப்பது போலவே உபாதாநகாரணமுமாகிறதென்று சொல்லிற்றாகிறது. இதற்கு இரண்டு ஹேதுக்கள் சொல்லப்படுகின்றன – (ப்ரதிஜ்ஞா த்ருஷ்டாந்தாநுபரோதாத்) என்று. ப்ரதிஜ்ஞை யாவது ஏகவிஜ்ஞாநேந ஸர்வ விஜ்ஞாந ப்ரதிஜ்ஞை; த்ருஷ்டாந்தமாவது – ம்ருத்பிண்ட கடாதி நிதர்சனம்.

ஆக இவ்விரண்டும் பொருந்தவேண்டு மானால் பரப்ரஹ்மத்திற்கு உபாதாந காரணத்வம் இருந்து தீரவேணும். உபாதாந காரணத்வம் இசையப்பட்டால் தான் ப்ரதிஜ்ஞா த்ருஷ்டாந்தங்கள் பொருந்தும் என்பது ஸூத்ரத்தின் பொருள். ஒரே மண்ணானது முதலில் பிண்டமென்கிற அவஸ்தையை யடைந்திருந்து பிறகு பானை என்னும் அவஸ்தையை அடையக் காணாநின்றோம். இதில் முந்தின அவஸ்தையோடு கூடின த்ரவ்யம் உபாதான மென்றும், பிந்தின அவஸ்தையோடு கூடின த்ரவ்யம் உபாதேயமென்றும், வழங்கப்படுகிறது. அங்கு முந்தின அவஸ்தை பிந்தின அவஸ்தை என்று சொல்லப்படுகிற

இரண்டவஸ்தைகளையும் உடைய த்ரவ்யம் ஒன்றேயாதலால் உபாதான வஸ்துவை யறிவதும் உபாதேய வஸ்துவை அறிவதும் ஒற்றுமைப்படுகிறபடியாலே உபாதானம் அறியப்பட்டால் உபாதேயமும் அறியப்பட்டதாகத் தேறுகிறது. அதுபோல ப்ரக்ருதத்தில் 'ப்ரஹ்மம் அறியப்பட்டால் ஜகத்தெல்லாம் அறியப்பட்டதாகிறது' என்று 'யேநாச்ருதம் ச்ருதம் பவதி' இத்யாதி ச்ருதியாலே ஓதப்படுவதால் ப்ரஹ்மம் ஜகத்துக்கு உபாதானமென்று அறியப்பட்டதாகிறது.

இதன்மேல் ஒரு கேள்வி வரும். த்ருஷ்டாந்தத்தில் ம்ருத்தென்கிற ஒரு த்ரவ்யத்திற்கே பிண்டத்வம், கடத்வம் என்கிற இரண்டவஸ்தையும் வருகிறபடியாலே பிண்டஜ்ஞானத்தாலே கடஜ்ஞான முண்டாவது பொருந்தும். தார்ஷ்டாந்திகத்தில் ஜகத்தும் ப்ரஹ்மமும் ஒன்றன்றிக்கே வெவ்வேறுபட்ட பொருள்களாகையாலே ப்ரஹ்மஜ்ஞானமும் ப்ரபஞ்சஜ்ஞானமும் ஒற்றுமைப்படாதாகையாலே ப்ரஹ்மஜ்ஞானத்தாலே ப்ரபஞ்சஜ்ஞானம் ஸம்பவிப்பதரிது. உபாதாந–உபாதேய பாவம் ஸம்பவிப்பதுமரிது. ஏனென்றால், ப்ரஹ்மம் நிர்விகாரமென்பது நிர்விவாதம்; விகாரமும் அவஸ்தாபத்தியும் பர்யாயமாகையாலே விகாரம் ஸம்பவிக்கமாட்டாதென்றபோதே உபாதாநத்வமும் ஸம்பவிக்கமாட்டாதென்று தேறுமே. ஆக இக்கேள்விக்கு ஸமாதான மென்னென்னில் கேண்மின். ப்ரஹ்ம ஜ்ஞானத்தாலே ப்ரபஞ்சஜ்ஞானமுண்டாவதாக ச்ருதி சொல்லியிருக்கையாலே அவற்றுக்கு உபாதாந–உபாதேய பாவமில்லாமல் அது ஸம்பவியாதாகையாலே அஃது இசையத் தக்கது. விகார சூன்யமான ப்ரஹ்மத்துக்கு விகாரரூபமான அவஸ்தை ஸாக்ஷாத்தாக ஸம்பவிப்பதன்று. சேதநாசேதநாத்மக ப்ரபஞ்ச மாகிற சரீரத்தின் வழியாய் விகாராச்ரயத்வம் ஸம்பவிக்கிறது–என்பதாக ச்ருதியின் அபிப்ராயம் ஸித்திக்கிறது. இதை நம் ஆசார்யர்கள் நன்கு உபபாதிக்கிறார்கள்.

பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த தத்வத்ரயத்தில் ஈச்வர ப்ரகரணத்தில் "இவன் தானே ஜகத்தாய்ப் பரிணமிக்கையாலே உபாதாநமுமாயிருக்கும்; ஆனால் நிர்விகாரனென்னும்படி யென்னென்னில், ஸ்வரூபத்துக்கு விகாரமில்லாமையாலே, ஆனால் பரிணாமமுண்டாம்படி யென்னென்னில், விசிஷ்டவிசேஷண ஸத்வாரகமாக. ஒரு சிலந்திக்குண்டான ஸ்வபாவம் ஸர்வ சக்திக்குக் கூடாதொழியாதிறே" என்றருளிச் செய்தவிடத்தில் மணவாளமாமுனிகளின் வியாக்கியானத்திலே விசதமாகக் கண்டுகொள்வது.

பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவ உத்தர சதகத்தில் "கார்யே அனந்தே ஸ்வதநு முகதஸ் த்வாம் உபாதாந மாஹு: ஸா தே சக்திஸ் ஸுகரமிதரச் சேதி வேலாம் விலங்க்ய, இச்சா யாவத் விஹரதி ஸதா ரங்கராஜாநபேக்ஷா ஸைவைசாநாத் அதிசய கரீ ஸோர்ணநாபௌ விபாவ்யா" என்ற ச்லோகத்தில் இவையெல்லாம் ஸாரமாக அருளிச் செய்தார். அவ்விடத்திலும் நம்முடைய வியாக்யானத்திலே தெளியக் காணலாம்.

788. இனி இரண்டாமத்யாயத்தின் தொடக்கத்திலுள்ள ஸ்ம்ருத்யதிகரணத் தின் ப்ரமேயம் விளக்கப்படுகிறது. "ஸ்ம்ருத்யநவகாச தோஷப்ரஸங்க இதிசேத் ந அந்யஸ்ம்ருத்யநவகாச தோஷப்ரஸங்காத்" (2–1–1) என்பது ஸூத்ரம். கீழ் முதலத்யாயத்தில்

வேதாந்த ப்ரதிபாதிதமான ஜகத் காரணவஸ்து சேதநாசேதநவிலக்ஷணமான பரப்ரஹ்மமென்று அறுதியிடப்பட்டது. பரப்ரஹ்மம் ஜகத் காரணமென்கிற பக்ஷத்தில் எத்தனைவகையான தோஷசங்கைகள் தோன்றக் கூடுமோ அவற்றையெல்லாம் எடுத்துக் கழிப்பதற்காக இரண்டாமத்யாயம் ஆரம்பிக்கப்படுகிறது. உலகில் ஓரிடத்தில் பெரிய கம்பமொன்றை நடுகிறவர்கள் நட்டுவிட்டு அதை ஆட்டிப் பார்ப்பது வழக்கம். எதற்காகவென்னில், அது அவிசால்யமாக வேணுமென்பதற்காகவே. அதுபோலவே இங்கும் கொள்க. முன்னத்யாயத்தில் பரப்ரஹ்மத்திற்குச் சொன்ன ஜகத் காரணத்வம் இவ்வத்யாயத்தில் நன்கு த்ருடீகரிக்கப் படுகிறதென்றதாயிற்று. இதில் முதற் பாதத்தில் ஸாங்க்யர் முதலானவர்களால் கிளப்பப்படும் தோஷங்கள் பரிஹரிக்கப்படுகின்றன. முன்னத்யாயத்தில் நிரீச்வரஸாங்க்யர்களும் ஸேச்வர ஸாங்க்யர்களும் நிரஸிக்கப்பட்டனர். அதில் நிரீச்வரஸாங்க்யன் கபில ஸ்ம்ருதி விரோதத்தைக் காட்டி ப்ரஹ்மம் ஜகத் காரணமன்றென்று வாதிப்பதொன்றுண்டு. அந்தவாதத்தை நிராகரிக்க இவ்வதிகரணம் எழுகின்றது. (ஸூ) "ஸ்ம்ருத்யநவகாச தோஷப்ரஸங்க இதிசேத்" – சேதநாசேதநவிலக்ஷணமான ப்ரஹ்மம் ஜகத் காரணமென்றுகொண்டால் ப்ரதாநம் காரணமென்று சொல்லுகிற கபிலஸ்ம்ருதி அப்ரமாணமாய்விடுமே யென்னில் "ந" – அப்படி சொல்லக் கூடாது. "அந்யஸ்ம்ருத்யநவகாசதோஷ ப்ரஸங்காத்" – ப்ரஹ்மகாரணத்வத்தைச் சொல்லுகிற மற்ற ஸ்ம்ருதிகள் அப்ரமாணமாய் விடுமாதலால் என்பது ஸூத்ரத்தின் பொருள். தங்கள் யோகமஹிமையினால் பராவரதத்வங்களை உள்ளபடி ஸாக்ஷாத்கரித்தவர்களான மநுபராசராதி மஹர்ஷிகளின் ஸ்ம்ருதி களை யெல்லாம் அப்ரமாணமாக்குவதிற் காட்டிலும் கபில ஸ்ம்ருதியொன்றை அப்ரமாணமாக்குவது தான் யுக்தம் என்பது கருத்து.

இங்கே பூர்வபக்ஷம் வருமாறு "ஸதேவ ஸோம்ய இதமக்ர ஆஸீத்" என்பது முதலான வேதாந்த வாக்யங்களுக்கு ஸ்வதந்த்ர ப்ரதாந காரணத்வத்தில் தாத்பர்யமா? அல்லது சேதநாசேதநவிலக்ஷண ப்ரஹ்ம காரணத்வத்தில் தாத்பர்யமா? என்று ஸந்தேஹம் வந்தால், வேதாந்த வாக்ய தாத்பர்யத்தை நிர்ணயிப்பதற்கென்றே தோன்றிய கபில ஸ்ம்ருதியை அநுஸரித்துத் தான் தாத்பர்ய நிர்ணயம் செய்யவேண்டும். இல்லையாகில் அந்த ஸ்ம்ருதிக்கு ஸர்வாத்மநா அப்ராமாண்யம் சொல்ல வேண்டிவரும். அப்படிச் சொல்லுவதற்கில்லை. வேதாந்தங்களில் ஆப்தராகச் சொல்லப்பட்டிருக்கின்ற கபில மஹர்ஷி அயதார்த்தவக்தாவாக இருக்க முடியாதாகையாலே அவரியற்றிய ஸ்ம்ருதிக்கு அப்ராமாண்யம் சொல்லவே முடியாது. ஆனால் ப்ரஹ்மகாரணத்வத்தைச் சொல்லுகின்ற மநுஸ்ம்ருதி முதலானவற்றுக்கு மாத்ரம் அப்ராமாண்யம் சொல்லி விடலாமோ என்று கேட்கக் கூடும். கர்மகாண்டத்தில் சொல்லப்பட்ட கருமங்களையும் மந்வாதி ஸ்ம்ருதிகள் விசதீகரிப்பனவாதலால் அந்த அம்சத்திலே அவற்றுக்கு ப்ராமாண்யம் கொள்ள இடமுள்ளது. ஆகவே அவற்றுக்கு ஸர்வாத்மநா அப்ராமாண்யமில்லை. கபில ஸ்ம்ருதியோவென்னில், கர்மகாண்டத்தில் அடியோடு ப்ரவேசியாமல் ஜ்ஞான காண்டத்தில் சொல்லப்பட்ட தத்துவங்களை விசதீகரிப்பதற்கென்றே தோன்றினதாகை யாலே அதற்கு

விருத்தமான ப்ரஹ்மகாரணத்வத்தைக் கொள்ளுமளவில், ப்ரதாந காரணத்வத்தைக் கூறுகின்ற அந்த கபிலஸ்ம்ருதிக்கு வேறு விஷயமில்லாமை யாலே, ஸர்வாத்மநா அப்ராமாண்யம் வந்து தீரும். ஆகையாலே அதற்கு ஒருவாறு ப்ராமாண்யம் கொள்ளுவதற்காகவும் நிரவகாசத்வ ஆபத்தியைப் பரிஹரிப்பதற்காகவும் அது சொன்ன ப்ரதாநகாரணத்வத்தில் தான் வேதாந்தங்களுக்கு தாத்பர்யம் கொள்ள வேணும்.

இந்த பூர்வபக்ஷத்தின் மேல் ஸித்தாந்தம் வருமாறு. கபில ஸ்ம்ருதியானது வேதாந்த வாக்கியங்களின் தாத்பர்ய நிர்ணயத்திற்கென்றே தோன்றினதாகை யாலே, அதை அநுஸரித்தே வேதாந்த தாத்பர்யம் அறுதியிடவேணுமென்பது யுக்தமென்றாலும் தங்களுடைய யோக மஹிமையினால் பராவரதத்வங்களை உள்ளபடி ஸாக்ஷாத்கரித்தவர்களான மநுமஹர்ஷி பராசரமஹர்ஷி முதலான பல மஹர்ஷிகளியற்றிய ஸ்ம்ருதிகளை உபேக்ஷிப்பது தகாது. ஒரு கபில மஹர்ஷியின் உக்தியைக் கொண்டு பல மஹாயோகிகளின் உக்திகளை உபமர்திப்பது யுக்தமாகாது. கபில ஸ்ம்ருதிக்கும் மந்வாதிகளின் ஸ்ம்ருதிகளுக்கும் பரஸ்பர விரோதம் நேர்ந்தால் "பூயஸாம் ஸ்யாத் பலீயஸ்த்வம்" என்கிற நியாயத்தாலே மந்வாதிஸ்ம்ருதிகள் பலிஷ்டங்களாகையாலே அவற்றோடு முரண்படுகின்ற கபில ஸ்ம்ருதிக்கு ப்ராந்தி மூலகத்வ நிர்ணயம் பண்ணுவதே பொருத்தமானது. மந்வாதி ஸ்ம்ருதிகளில் பரப்ரஹ்மத்திற்குத்தான் ஜகத்காரணத்வம் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே கபிலஸ்ம்ருதியைத் தள்ளி மநுபராசராதி ஸூக்திகளின்படியே ப்ரஹ்மமமே ஜகத்காரணமென்று கொள்வது தான் யுக்தம். "ருஷிம் ப்ரஸூதம் கபிலம்" என்று கபிலரை ஆப்தராகச் சொல்லியிருக்கையாலே அவருடைய உக்தியைத் தழுவியேயாகவேணுமென்றதும் அஸங்கதம். ச்ருதிஸ்ம்ருதிகளில் ப்ருஹஸ்பதியையும் கொண்டாடியிருப்ப தைக் காண்கிறோம். அவ்வளவால் அவரியற்றிய லோகாயதத்தைக் கொண்டு ச்ருதியின் பொருளை நிர்ணயிப்பாருண்டோ? இல்லையே.

789. இனி, க்ருத்ஸ்நப்ரஸக்தி யதிகரணத்தின் ப்ரமேயம் விளக்கப்படுகிறது. இதுவும் இரண்டாம் அத்யாயத்தின் முதற்பாதத்திலுள்ளது. "க்ருத்ஸ்நப்ரஸக்திர் நிரவயவத்வ சப்தகோபோவா" என்பது பூர்வபக்ஷ ஸூத்ரம். "ச்ருதேஸ் து சப்தமூலத்வாத்" என்பது ஸித்தாந்த ஸூத்ரம். ப்ரஹ்மம் ஜகத் காரணம் என்னும் வாதத்தில் ப்ரஹ்மமே ஜகத்தாகப் பரிணமிப்பதாய்த் தேறுகிறது. ப்ரஹ்மமோ நிரவயவமானது. அது ஜகத்தாகப் பரிணமிக்கும்போது ப்ரஹ்மம் முழுவதுமே காரியப் பொருளாகப் பரிணமிக்க வேண்டியதாகிறது. ஏகதேசேந பரிணமிக்கிறதென்னும் பக்ஷத்தில் ப்ரஹ்மம் நிரவயவமென்று சொல்லுகிற ச்ருதி விரோதிக்கும். ஆகையாலே ப்ரஹ்மம் ஜகத்காரணமாகவொண்ணாது என்கிற பூர்வபக்ஷமே முந்தின ஸூத்ரத்தின் பொருள். இதைச் சிறிது விவரிப்போம். கீழே உபஸம்ஹாராதிகரணத்தில் "க்ஷீரவத் ஹி" என்று க்ஷீர த்ருஷ்டாந்தம் கொடுக்கப் பட்டிருக்கிறது. க்ஷீரத்ருஷ்டாந்தம் பொருந்தாது. க்ஷீரம் ஸாவயவமாகையாலே அது போல ப்ரஹ்மமும் ஸாவயவமென்ன வேணும். அப்படிக்கொண்டால் நிரவயவத்வ ச்ருதி கோபிக்கும். நிரவயவமாகில் ப்ரஹமம் க்ருத்ஸ்நபாகத்தாலும் பரிணாமம் அடைந்ததாக வேணும். ஆகட்டுமே யென்னில்,

வேதாந்த ப்ரதிபாதிதமான ஜகத் காரணவஸ்து சேதநாசேதநவிலக்ஷணமான பரப்ரஹ்மமென்று அறுதியிடப்பட்டது. பரப்ரஹ்மம் ஜகத் காரணமென்கிற பக்ஷத்தில் எத்தனைவகையான தோஷசங்கைகள் தோன்றக் கூடுமோ அவற்றையெல்லாம் எடுத்துக் கழிப்பதற்காக இரண்டாமத்யாயம் ஆரம்பிக்கப்படுகிறது. உலகில் ஓரிடத்தில் பெரிய கம்பமொன்றை நடுகிறவர்கள் நட்டுவிட்டு அதை ஆட்டிப் பார்ப்பது வழக்கம். எதற்காகவென்னில், அது அவிசால்யமாக வேணுமென்பதற்காகவே. அதுபோலவே இங்கும் கொள்க. முன்னத்யாயத்தில் பரப்ரஹ்மத்திற்குச் சொன்ன ஜகத் காரணத்வம் இவ்வத்யாயத்தில் நன்கு த்ருடீகரிக்கப் படுகிறதென்றதாயிற்று. இதில் முதற் பாதத்தில் ஸாங்க்யர் முதலானவர்களால் கிளப்பப்படும் தோஷங்கள் பரிஹரிக்கப்படுகின்றன. முன்னத்யாயத்தில் நிரீச்வரஸாங்க்யர்களும் ஸேச்வர ஸாங்க்யர்களும் நிரஸிக்கப்பட்டனர். அதில் நிரீச்வரஸாங்க்யன் கபில ஸ்ம்ருதி விரோதத்தைக் காட்டி ப்ரஹ்மம் ஜகத் காரணமன்றென்று வாதிப்பதொன்றுண்டு. அந்தவாதத்தை நிராகரிக்க இவ்வதிகரணம் எழுகின்றது. (ஸூ) "ஸ்ம்ருத்யநவகாச தோஷப்ரஸங்க இதிசேத்" – சேதநாசேதநவிலக்ஷணமான ப்ரஹ்மம் ஜகத் காரணமென்றுகொண்டால் ப்ரதாநம் காரணமென்று சொல்லுகிற கபிலஸ்ம்ருதி அப்ரமாணமாய்விடுமே யென்னில் "ந" – அப்படி சொல்லக் கூடாது. "அந்யஸ்ம்ருத்யநவகாசதோஷ ப்ரஸங்காத்" – ப்ரஹ்மகாரணத்வத்தைச் சொல்லுகிற மற்ற ஸ்ம்ருதிகள் அப்ரமாணமாய் விடுமாதலால் என்பது ஸூத்ரத்தின் பொருள். தங்கள் யோகமஹிமையினால் பராவரதத்வங்களை உள்ளபடி ஸாக்ஷாத்கரித்தவர்களான மநுபராசராதி மஹர்ஷிகளின் ஸ்ம்ருதி களையெல்லாம் அப்ரமாணமாக்குவதிற் காட்டிலும் கபில ஸ்ம்ருதியொன்றை அப்ரமாணமாக்குவது தான் யுக்தம் என்பது கருத்து.

இங்கே பூர்வபக்ஷம் வருமாறு "ஸதேவ ஸோம்ய இதமக்ர ஆஸீத்" என்பது முதலான வேதாந்த வாக்யங்களுக்கு ஸ்வதந்த்ர ப்ரதாந காரணத்வத்தில் தாத்பர்யமா? அல்லது சேதநாசேதநவிலக்ஷண ப்ரஹ்ம காரணத்வத்தில் தாத்பர்யமா? என்று ஸந்தேஹம் வந்தால், வேதாந்த வாக்ய தாத்பர்யத்தை நிர்ணயிப்பதற்கென்றே தோன்றிய கபில ஸ்ம்ருதியை அநுஸரித்துத் தான் தாத்பர்ய நிர்ணயம் செய்யவேண்டும். இல்லையாகில் அந்த ஸ்ம்ருதிக்கு ஸர்வாத்மநா அப்ராமாண்யம் சொல்ல வேண்டிவரும். அப்படிச் சொல்லுவதற்கில்லை. வேதாந்தங்களில் ஆப்தராகச் சொல்லப்பட்டிருக்கின்ற கபில மஹர்ஷி அயதார்த்தவக்தாவாக இருக்க முடியாதாகையாலே அவரியற்றிய ஸ்ம்ருதிக்கு அப்ராமாண்யம் சொல்லவே முடியாது. ஆனால் ப்ரஹ்மகாரணத்வத்தைச் சொல்லுகின்ற மநுஸ்ம்ருதி முதலானவற்றுக்கு மாத்ரம் அப்ராமாண்யம் சொல்லி விடலாமோ என்று கேட்கக் கூடும். கர்மகாண்டத்தில் சொல்லப்பட்ட கருமங்களையும் மந்வாதி ஸ்ம்ருதிகள் விசதீகரிப்பனவாதலால் அந்த அம்சத்திலே அவற்றுக்கு ப்ராமாண்யம் கொள்ள இடமுள்ளது. ஆகவே அவற்றுக்கு ஸர்வாத்மநா அப்ராமாண்யமில்லை. கபில ஸ்ம்ருதியோவென்னில், கர்மகாண்டத்தில் அடியோடு ப்ரவேசியாமல் ஜ்ஞான காண்டத்தில் சொல்லப்பட்ட தத்துவங்களை விசதீகரிப்பதற்கென்றே தோன்றினதாகை யாலே அதற்கு

விருத்தமான ப்ரஹ்மகாரணத்வத்தைக் கொள்ளுமளவில், ப்ரதாந காரணத்வத்தைக் கூறுகின்ற அந்த கபிலஸ்ம்ருதிக்கு வேறு விஷயமில்லாமை யாலே, ஸர்வாத்மநா அப்ராமாண்யம் வந்து தீரும். ஆகையாலே அதற்கு ஒருவாறு ப்ராமாண்யம் கொள்ளுவதற்காகவும் நிரவகாசத்வ ஆபத்தியைப் பரிஹரிப்பதற்காகவும் அது சொன்ன ப்ரதாநகாரணத்வத்தில் தான் வேதாந்தங்களுக்கு தாத்பர்யம் கொள்ள வேணும்.

இந்த பூர்வபக்ஷத்தின் மேல் ஸித்தாந்தம் வருமாறு. கபில ஸ்ம்ருதியானது வேதாந்த வாக்கியங்களின் தாத்பர்ய நிர்ணயத்திற்கென்றே தோன்றினதாகை யாலே, அதை அநுஸரித்தே வேதாந்த தாத்பர்யம் அறுதியிடவேணுமென்பது யுக்தமென்றாலும் தங்களுடைய யோக மஹிமையினால் பராவரதத்வங்களை உள்ளபடி ஸாக்ஷாத்கரித்தவர்களான மநுமஹர்ஷி பராசரமஹர்ஷி முதலான பல மஹர்ஷிகளியற்றிய ஸ்ம்ருதிகளை உபேக்ஷிப்பது தகாது. ஒரு கபில மஹர்ஷியின் உக்தியைக் கொண்டு பல மஹாயோகிகளின் உக்திகளை உபமர்திப்பது யுக்தமாகாது. கபில ஸ்ம்ருதிக்கும் மந்வாதிகளின் ஸ்ம்ருதிகளுக்கும் பரஸ்பர விரோதம் நேர்ந்தால் "பூயஸாம் ஸ்யாத் பலீயஸ்த்வம்" என்கிற நியாயத்தாலே மந்வாதிஸ்ம்ருதிகள் பலிஷ்டங்களாகையாலே அவற்றோடு முரண்படுகின்ற கபில ஸ்ம்ருதிக்கு ப்ராந்தி மூலகத்வ நிர்ணயம் பண்ணுவதே பொருத்தமானது. மந்வாதி ஸ்ம்ருதிகளில் பரப்ரஹ்மத்திற்குத்தான் ஜகத்காரணத்வம் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே கபிலஸ்ம்ருதியைத் தள்ளி மநுபராசராதி ஸூக்திகளின்படியே ப்ரஹ்மமே ஜகத்காரணமென்று கொள்வது தான் யுக்தம். "ருஷிம் ப்ரஸூதம் கபிலம்" என்று கபிலரை ஆப்தராகச் சொல்லியிருக்கையாலே அவருடைய உக்தியைத் தழுவியேயாகவேணுமென்றதும் அஸங்கதம். ச்ருதிஸ்ம்ருதிகளில் ப்ருஹஸ்பதியையும் கொண்டாடியிருப்ப தைக் காண்கிறோம். அவ்வளவால் அவரியற்றிய லோகாயதத்தைக் கொண்டு ச்ருதியின் பொருளை நிர்ணயிப்பாருண்டோ? இல்லையே.

789. இனி, க்ருத்ஸ்நப்ரஸக்தி யதிகரணத்தின் ப்ரமேயம் விளக்கப்படுகிறது. இதுவும் இரண்டாம் அத்யாயத்தின் முதற்பாதத்திலுள்ளது. "க்ருத்ஸ்நப்ரஸக்திர் நிரவயவத்வ சப்தகோபோவா" என்பது பூர்வபக்ஷ ஸூத்ரம். "ச்ருதேஸ் து சப்தமூலத்வாத்" என்பது ஸித்தாந்த ஸூத்ரம். ப்ரஹ்மம் ஜகத் காரணம் என்னும் வாதத்தில் ப்ரஹ்மமே ஜகத்தாகப் பரிணமிப்பதாய்த் தேறுகிறது. ப்ரஹ்மமோ நிரவயவமானது. அது ஜகத்தாகப் பரிணமிக்கும்போது ப்ரஹ்மம் முழுவதுமே காரியப் பொருளாகப் பரிணமிக்க வேண்டியதாகிறது. ஏகதேசேந பரிணமிக்கிறதென்னும் பக்ஷத்தில் ப்ரஹ்மம் நிரவயவமென்று சொல்லுகிற ச்ருதி விரோதிக்கும். ஆகையாலே ப்ரஹ்மம் ஜகத்காரணமாகவொண்ணாது என்கிற பூர்வபக்ஷமே முந்தின ஸூத்ரத்தின் பொருள். இதைச் சிறிது விவரிப்போம். கீழே உபஸம்ஹாராதிகரணத்தில் "க்ஷீரவத் ஹி" என்று க்ஷீர த்ருஷ்டாந்தம் கொடுக்கப் பட்டிருக்கிறது. க்ஷீரத்ருஷ்டாந்தம் பொருந்தாது. க்ஷீரம் ஸாவயவமாகையாலே அது போல ப்ரஹ்மமும் ஸாவயவமென்ன வேணும். அப்படிக்கொண்டால் நிரவயவத்வ ச்ருதி கோபிக்கும். நிரவயவமாகில் ப்ரஹமம் க்ருத்ஸ்நபாகத்தாலும் பரிணாமம் அடைந்ததாக வேணும். ஆகட்டுமே யென்னில்,

க்ருத்ஸ்நமும் ஒரு கார்யப் பொருளாகப் பரிணமித்த போது மற்றொரு காரியப் பொருளாகப் பரிணமிக்க ப்ரஸக்தியில்லை. ஆகையாலே ப்ரஹ்ம காரணத்வ வாதம் ஒவ்வாது என்பதாகப் பூர்வபக்ஷம்.

இதன் மேல் ஸித்தாந்தமுணர்த்தும் ஸூத்ரம் – "ச்ருதேஸ்து சப்த மூலத்வாத்" என்பது. 'து' சப்தம் பூர்வபக்ஷத்தை வ்யாவர்த்திப்பிக்க வந்தது. ப்ரஹ்மம் நிரவயவமென்பதும், அது கார்யப் பொருளாகப் பரிணமிக்கிறதென்பதும் ஆகிய இரண்டும் ச்ருதிஸித்தமான அர்த்தங்கள். ப்ரஹ்மமோ சப்த ப்ரமாணமொன்றினாலேயே அறியப்படுமது. ஆகையாலே கீழே தோன்றின பூர்வபக்ஷம் யுக்தமன்று என்பதாக ஸூத்ரார்த்தம். இதைச் சிறிது விவரிப்போம். ஸாவயவமான வஸ்து தான் ஏகதேசத்தாலே பரிணமிக்க முடியுமென்றும், நிரவயவமான வஸ்துவானது அப்படி ஏகதேசத்தாலே பரிணமிக்கமாட்டாமல் க்ருத்ஸ்நாம்சத் தாலும் பரிணமித்தாக வேணுமென்றும் ஒரு நியதி சொல்லுவதானது லௌகிக பதார்த்த த்ருஷ்டியினால் தானே. இப்படியொரு வ்யாப்தி கல்பிக்க வேணுமானால் ப்ரப்ரஹ்மம் தவிர மற்ற வஸ்துக்களில் மாத்திரமே கல்பிக்கலாம். ப்ரஹ்மத்தினிடத்திலும் இந்த வ்யாப்தி கொள்ள அவசியமில்லை. ஏனென்னில், ப்ரஹ்மத்தை நாம் சாஸ்த்ரங்கொண்டே அறிகிறோம். அந்த சாஸ்த்ரமானது ப்ரஹ்மத்திற்கு நிரவயத்வத்தையும் பஹுபவநத்தையும் (அதாவது நாநா வஸ்துக்களாகப் பரிணமிப்பதையும்) ஓதியிருக்கின்றது. அது ப்ரஹ்மத்தினுடைய அநிர்வசநீயமான சக்தி விசேஷத்தைப் பொறுத்தது. அத்புத சக்தியுக்தமான ப்ரஹ்மத்தினிடத்தில் நாம் லௌகிக வஸ்து த்ருஷ்ட்யா சோத்யம் செய்வது தகாது. ஒன்று பாருங்கள். கண்ணுடையவன் தான் காணமுடியும். காதுடையவன் தான் கேட்கமுடியும். கண்ணிலாதான் காணகில்லான். செவியிலாதான் கேட்ககில்லான் என்று ஒரு வ்யாப்தி சொல்ல நினைத்தால் பரப்ரஹ்மந்தவிர மற்ற பேர்களிடத்தில் தானே இப்படிச் சொல்ல முடியும். "பச்யத்யசக்ஷுஸ் ஸ ச்ருணோத்ய கர்ண: அபாணிபாதோஜவநோ க்ரஹீதா" என்று ஓதப்படுகிற பரமபுருஷனிடத்திலே இந்த வ்யாப்தி பயன் பெறாதன்றோ. ஆகவே உலகில் காணும் நியாயத்தைக் கொண்டு ப்ரஹ்மத்தினிடத் தில் சோத்யம் செய்வது கூடாது.

வேதாந்திகள் இங்கு விசேஷித்துக் குறிக்கொள்ளவேண்டிய விஷயமுண்டு. பரப்ரஹ்மத்திற்கு ஜகதாத்மநா பரிணாமம் போலவே ப்ரதிவஸ்து பூர்ணத்வமும் ச்ருதிஸித்தமாயிருக்கின்றது. நிரவயவமான ப்ரஹ்மம் வஸ்துதோறும் எங்ஙனே பரிஸமாப்ய வர்த்திக்கமுடியும்? என்று சிலர் சோத்யம் செய்வதுண்டு. அந்த சோத்யமும் "ச்ருதேஸ்து சப்தமூலத்வாத்" என்கிற இந்த ஸூத்ரத்தினால் சிக்ஷிக்கப்பட்ட ந்யாயத்தினாலேயே மடிந்தொழிகின்றது. இவ்விஷயத்தை ஸ்ரீமத் வேதாந்த தேசிகன் ந்யாயஸித்தாஞ்ஜநத் தில் வெகு சதுரமாக அருளிச்செய்து முடித்திருக்கிறார். அப்படியிருந்தும் இதில் இன்னமும் சிலர் தெளிவுபெறாமல் கலங்கியிருக்கிறார்கள். பகவான் ஒரு வஸ்துவிலே பரிஸமாப்ய வர்த்தித்து விட்டால் அவ்வளவோடு பகவான் உபக்ஷீணனாய் விடுகிறபடியால் மற்றொரு பொருளில் வியாபிக்க எப்படி முடியுமென்று இந்த சோத்யத்தையே திருப்பித் திருப்பிச் செய்துகொண்டு காலங்கழிக்கிறார்கள். அந்தோ அன்னவர்கள் "ச்ருதேஸ்து

சப்தமூலத்வாத்'' என்கிற ஸூத்ரம் என்ன சிக்ஷிக்கிறதென்பதையும் இந்த ஸூத்ரத்தின் ஸ்ரீபாஷ்யத்தில் ஸ்வாமி என்ன அருளிச்செய்கிறாரென்பதையும் சிறிதும் நோக்கமாட்டிற்றிலர். ''சப்தைகப்ரமாணகத்வேன ஸகலேதர வஸ்து விஸஜாதீயத்வாத் அஸ்யார்த்தஸ்ய விசித்ரசக்தியோகோ ந விருத்யதே'' என்பது ஸ்ரீபாஷ்யஸூக்தி. இதைப் பற்றின விரிவுகளை நம்முடைய ப்ரஹ்மவ்யாப்தி பரிஷ்க்ரியா, அத்புதசக்தி முதலான க்ரந்தங்களிலே காண்க.

790. இனி, ப்ரயோஜநவத்த்வ அதிகரணத்தின் ப்ரமேயம் பற்றிப் பேசுவோம். கீழே விவரித்த அதிகரணத்திற்கு அடுத்த அதிகரணமே இது. பரமபுருஷன் ஸர்வசக்தியுக்தனாகையாலும் ஸத்ய ஸங்கல்பனாகையாலும் அவன் ஸங்கல்ப மாத்ரத்தாலே ஜகத்தை ஸ்ருஷ்டிப்பதாகச் சொல்லப்படுகிற விஷயம் ஸம்பாவிதமன்று. ஏனென்னில், ப்ரஹ்மம் ஜகத்தை ஸ்ருஷ்டிக்கும்போது ஏதேனுமொரு ப்ரயோஜனம் இருந்து தீரவேண்டும். உலகில் ஒருவன் ஒரு காரியத்தைச் செய்யும்போது நிஷ்ப்ரயோஜநமாகச் செய்யமாட்டான். ப்ரயோஜன மென்பது தன்னையுஞ் சேரும், பிறரையும் சேரும். ப்ரக்ருதத்தில் அவாப்தஸமஸ்தகாமனான பகவானுக்கு ஸ்ருஷ்டியினால் ஒரு ப்ரயோஜனமும் உண்டாக விரகில்லை. உண்டாகுமாகில் அவனை அவாப்தஸமஸ்த காமனென்னப் போகாது. ஸ்ருஷ்டியினால் பகவானுக்கு ப்ரயோஜனமில்லையாகிலும் நம் போன்ற ஜீவர்களுக்கு ப்ரயோஜனமாகிற தென்னவும் இடமில்லை. ஆத்யாத்மிகாதி துக்கங்களுக்கே ஹேதுவாகின்ற ஸ்ருஷ்டியானது ஜீவர்களுக்கு ப்ரயோஜனப்பட விரகில்லையன்றோ. பகவானுக்குப் பக்ஷபாதித்வம் நிர்தயத்வமாகிற தோஷங்களைச் சங்கிக்கச் செய்வதாயுமுள்ளது ஜகத் ஸ்ருஷ்டி. ஆகவே பகவான் ஸ்ருஷ்டி கர்த்தாவாக இருக்க முடியாதென்று பூர்வபக்ஷம் செய்வதாகவுள்ளது. இவ்வதிகரணத்தில் முதல் ஸூத்ரம் ''ந ப்ரயோஜநவத்த்வாத்'' என்பது. இங்கு 'ஸ்ருஷ்டே:' என்றொரு பதம் வருவித்துக் கொள்ள வேணும். ஸ்ருஷ்டியானது ப்ரயோஜனத்தோடு கூடியிருக்கவேண்டியதாகையாலே, ப்ரஹ்மம் ஸ்ருஷ்டி கர்த்தாவாக இருக்க முடியாதென்று ஸூத்ரத்திற்குப் பொருள். இதன்மேல் ஸித்தாந்த ஸூத்ரம் ''லோகவத்து லீலாகைவல்யம்'' என்பது. உலகில் ஸார்வபௌமனாயிருக்கும் ஓர் அரசன் ப்ரயோஜனாந்தரமொன்றையும் கணிசியாமலே லீலையாகவே பந்து விளையாடல் முதலியன செய்யக் காணாநின்றோம். அதனால் அவனுடைய அவாப்தஸமஸ்தகாமத்வத்திற்குக் கொத்தையொன்றுமில்லை. அதுபோலவே பரமபுருஷனும் லீலார்த்தமாகவே ஜகத் ஸ்ருஷ்டி பண்ணக் குறையில்லை யென்றபடி. ''மன்பல்லுயிர்களுமாகிப் பலபல மாயமயக்குகளால், இன்புறுமிவ் விளையாட்டுடையான்'' என்று நம்மாழ்வாரும், ''நாட்டைப் படையென்று அயன் முதலாத் தந்த நளிர்மாமலருந்தி வீட்டைப் பண்ணி விளையாடும் விமலன்'' என்று ஆண்டாளுமருளிச் செய்தவை இங்கே அநுஸந்தேயம். விஷமஸ்ருஷ்டி காண்பதனாலே பகவானுக்குப் பக்ஷபாதித்வமும் நிர்தயத்வமும் சங்கிக்க நேர்கிறதேயெனில், அந்த சங்கை ''வைஷம்ய நைர்க்ருண்யே ந ஸாபேக்ஷத்வாத் ததா ஹி தர்சயதி'' என்கிற அடுத்த ஸூத்ரத்தினால் பரிஹரிக்கப்படுகிறது. அந்தந்த ஜீவர்கள் செய்த கருமங்களுக்குத் தக்கபடி நீசோச்ச

ஸ்ருஷ்டிகள் ஏற்படுகிறபடியாலே பரமபுருஷனுக்கு வைஷம்யமோ நைர்க்ருண்யமோ ப்ரஸங்கிக்கமாட்டாதென்றபடி. இதன் மேலும் தோன்றுகிற சங்கைக்கு அடுத்த ஸூத்ரம் பரிஹாரம் உணர்த்துகின்றமை கண்டுகொள்வது. இங்கே வேறொரு சங்கையும் தத்பரிஹாரமும் கேண்மின். வெறும் லீலையாகவே ஜகத் ஸ்ருஷ்டி நடக்கிற தென்று சொல்லிவிடலாமா? அநேக சாஸ்த்ரங்களோடு இது விரோதிக்கிறதே. 'விசித்ரா தேஹ ஸம்பத்திரீச்வராய நிவேதிதும், பூர்வமேவ க்ருதா ப்ரஹ்மந்! ஹஸ்தபாதாதி ஸம்யுதா' இத்யாதி ஸம்ஸ்க்ருத சாஸ்த்ரங்களும், "சென்று சென்றாகிலுங் கண்டு சன்மங்கழிப்பா னெண்ணி ஒன்றியொன்றி உலகம் படைத்தான்" "உய்யவுலகு படைத்து" இத்யாதிகளான அருளிச் செயல்களும் சேதநருடைய உஜ்ஜீவநம் ப்ரயோஜநமாக ஜகத் ஸ்ருஷ்டி நடந்து வருவதாகத் தெரிவிப்பதால் இவற்றோடு விரோதம் ஸ்பஷ்டமாகிறதேயென்று சங்கிக்க நேரும். விரோதமில்லை. உபய ப்ரயோஜநமுண்டாயிருக்கச் செய்தேயும் 'லோகவத் து லீலாகைவல்யம்' என்று ஸூத்ரகாரர் சொன்னது ப்ராசுர்யத்தைப் பற்றவேயாம். இதைச் சிறிது விவரிக்கிறேன். தான் நினைத்தபடி செய்யவல்ல சக்திமானான எம்பெருமான் ஸகலாத்மாக்களையும் ஏககாலத்திலே முக்திபெறுவிக்க வல்லவனாயிருக்கச்செய்தேயும், ஸ்வாதீந ஸ்வரூபஸ்திதிகர்களான ஆத்மாக்களைக் கர்ம வ்யாஜேந கைகழிய விட்டு சாஸ்த்ரமர்யாதையிலே வரவர அங்கீகரிப்பதாக ஸங்கல்பித்து நடத்திப் போருகிறவிது, லீலாரஸேச்சையினால் ஆகையாலும், லீலா விபூதியென்றே இந்நிலத்திற்குப் பெயராயிருக்கையாலும் லீலாரஸப்ராசுர்யம் அறியத் தக்கது.

791. இனி இரண்டாமத்யாயத்தில் இரண்டாவது பாதத்தில் ஸர்வதாநுபபத்தி அதிகரணத்தின் ப்ரமேயம் நிரூபிக்கப்படுகிறது. ஸர்வசூந்யத்வ வாதிகளான பௌத்த ஏகதேசிகளின் பக்ஷம் இங்கு நிரஸிக்கப்படுகிறது. பரப்ரஹ்மமே ஜகத்காரணமென்று நன்கு நிலைநாட்டத் தோன்றிய இந்த அத்யாயத்தில் ஸர்வசூந்யத்வய வாதத்தை நிரஸிக்க என்ன ப்ரஸக்தியென்று சிலர் நினைக்கக் கூடும். ஜகத் காரணவஸ்து ப்ரதாநமா? பரமாணுவா? பரப்ரஹ்மமா? என்கிற விசாரம் எப்போது பொருந்துமென்னில், உண்மையில் ஜகதுத்பத்தியென்பதொன்று நிரூபிக்க முடியுமானால் அப்போது பொருந்தும். அடியோடு இல்லாதவொரு பிள்ளைக்கு மாதாபிதாக்களைப் பற்றி விசாரம் செய்வதுண்டோ? ஜகதுத்பத்தியே நிரூபிக்கமுடியாததாயிருக்க, எது ஜகத் காரணம் என்கிற சர்ச்சை எதுக்கு? உத்பத்தியானது பாவத்திலிருந்து அங்கீகரிக்கப்படுகிறதா? அபாவத்திலிருந்து அங்கீகரிக்கப்படுகிறதா என்று கேட்கிறோம். பாவத்திலிருந்து என்பது சேராது. மண்பிண்டத்திலிருந்து பானை முதலியன உண்டாகின்றனவென்றால் மண்பிண்டத்தை உபமர்த்தித்துக் கொண்டு தானே உண்டாகின்றன. எந்த காரியப் பொருளும் காரணப்பொருளை உபமர்த்தியாமல் உண்டாவதில்லை யென்பதைக் காணாநின்றோம். காரணாகாரத்தின் விநாசந்தானே உபமர்த்தமாவது. அதுதான் அபாவமே. ஆக பாவத்தில் நின்றும் உத்பத்தியில்லை யென்று தேறிற்று. அபாவத்தில் நின்றுங்கூட உத்பத்தியில்லை என்பது அநாயாஸமாகத் தெரியவரும். அபாவத்திலிருந்து பாவோத்பத்தி ஸம்பவிக்கமாட்டாதன்றோ. ஆக உத்பத்தியே நிரூபிக்க முடியாதிருப்பதால் உத்பத்திக்குப்

பிற்பட்டனவான விகாரங்கள் எதுவுமே கிடையாவென்பது ஸித்தம். லோக வ்யவஹாரமெல்லாம் ப்ரம மூலகமே. ஆக சூந்யமேதான் தத்துவம் என்பவர்கள் இங்கு நிரஸிக்கப்படுகிறார்கள். "ஸர்வதாநுபபத்தேச்ச" என்பது ஸூத்ரம். ப்ரமேயங்களோ ப்ரமாணங்களோ எதுவும் உண்டாகிலுமாம், இல்லையாகிலுமாம். பூர்வபக்ஷிக்கு அபிமதமான சூந்யத்வம் தேறாதாகையாலே மாத்யமிகதர்சநம் அஸமஞ்ஜஸம் என்றபடி. ஸர்வம் சூந்யம் என்று சொல்லுபவர்கள் தங்களுக்கு அபிமதமான இவ்வர்த்தத்தை ஸாதித்துத் தரும்படியான ப்ரமாணமொன்று உண்டென்று இசையும் பக்ஷத்தில் ப்ரமாண ஸத்பாவத்தை யிசைந்தபோதே ஸர்வசூந்யவாதம் தொலைந்தது. ப்ரமாணமில்லையென்னும் பக்ஷத்தில், ப்ரமாணமில்லாமையினாலேயே தங்களுக்கு அபிமதமான அர்த்தம் அஸித்தமென்று முடிந்தது. மேலும் 'ஸர்வம் சூந்யம்' என்கிற இந்த வார்த்தையினால் நாஸ்தித்வந்தானே விவக்ஷிதமாக வேணும். ஒரு ரூபத்தை விட்டு மற்றொரு ரூபத்தையடைவதே நாஸ்தி பதார்த்தமாகையாலே ரூபாந்தரத்தாலே அஸ்தித்வமே சொல்லப்பட்டதாக முடிகிறது. மண்ணுண்டையொன்று இருந்தது. அது நசித்தவளவிலே 'ம்ருத்பிண்டோ நாஸ்தி' என்று சொல்லுகிறான். இந்த வ்யவஹாரத்தில் பானையென்கிற அவஸ்தைதானே விஷயமாகிறது. உலகில் அஸ்தி நாஸ்தித்வங்களை வழங்குகிறவர்கள் 'இப்போது மண்ணுண்டை யிருக்கிறது. இப்போது மண்ணுண்டையில்லை. இங்கு மண்ணுண்டையிருக்கிறது, இங்கு மண்ணுண்டையில்லை என்றிப்படி இடத்தையும் காலத்தையும் உட்படுத்தியே வ்யவஹரிக்கிறார்கள். தேச காலங்களைச் சேர்க்காமல் வெறுமனே 'மண்ணுண்டை யில்லை' என்கிற ப்ரதீதியோ வ்யவஹாரமோ எங்கும் காண்பதில்லை. இப்போது ம்ருத் பிண்டமிருக்கிறது என்றோ இங்கு ம்ருத்பிண்டமிருக்கிறது என்றோ ஒருவன் வ்யவஹரித்தால் மண் என்னும் த்ரவ்யத்திற்கு பிண்டத்வாவஸ்தை விஷயம். 'இப்போது ம்ருத் பிண்டமில்லை' என்றோ 'இங்கு ம்ருத் பிண்டமில்லை' என்றோ வ்யவஹரித்தால் பிண்டத்வாவஸ்தையின் நாசமாகிய கடத்வாவஸ்தை விஷயம். ஆக நாஸ்தித்வ வ்யவஹாரம் பண்ணினாலும் கூட வேறொரு ஆகாரத்தாலே அஸ்தித்வமே தேறி நிற்கிறதென்பதை ஸர்வாநுபவ ஸாக்ஷிகமாகக் காணலாம். இன்ன வஸ்து இங்கில்லை என்றால் மற்றோரிடத்திலுள்ள தாகத் தேறியே தீரும். இப்போதில்லை யென்றாலும் மற்றொருபோதில் உண்டென்றதாகத் தேறியேவிடும். ஆகவே ஒரு படியாலும் ஸர்வசூந்யவாதம் ஸித்தியாது. ஸூத்ரத்தில் மேலே பொருள் காண்பது எங்ஙனே யென்னில், 'ஸர்வதா' ஸர்வப்ரகாரத்தாலும், 'அநுபபத்தே:' ஸ்வாபிமதமான ஸர்வசூந்யவாதம் உபபந்நமாகாமையினாலே என்றபடி. 'ஸர்வப்ரகாரத்தாலும்' என்றதை ஸ்ரீபாஷ்யாதிகளில் ஸ்வாமி விவரித்தருளும் போது "ஸதிதி ப்ரதிஜ்ஞாயாம் அஸதிதி ப்ரதிஜ்ஞாயாஞ்ச" என்றருளிச்செய்கிறார். சங்கர பாஷ்யத்தில் இவ்விதமாக அர்த்தம் செய்யப்படவில்லை. "தேவதத்த: ஸர்வதா அயோக்ய:, யஜ்ஞதத்த: ஸர்வதா மூர்க:" என்றால் இதற்கு எவ்விதமாகப் பொருள் கொள்கிறோமோ அவ்விதமாகவே சங்கராசாரியர் பொருள் கொண்டார். நம் ஸ்வாமி கொண்ட பொருள்தான் உண்மையில் ஸமஞ்ஜஸமானது. ஸ்வாமிக்கு இப்பொருள் தோன்றினது எதனால் என்னில், திருவாய்மொழியில் **(1–1–9)**

"உளனெனிலுளன் அவனுருவ மிவ்வுருவுகள், உளனலனெனில் அவன் அருவமிவ்வருவுகள் உளனெனவிலனென விவைகுண முடைமையின் உளனிருதகைமையோடொழிவிலன் பரந்தே" என்ற பாசுரங்கொண்டே இந்த ஸூத்ரத்தின் பொருளை ஸ்வாமி அறுதியிட்டருளினார் என்பது நிஸ்ஸந்தேஹம். அப்பாசுரத்தின் ஆறாயிரப்படியை ஸேவித்தால் இஃது எளிதிற் புலனாம். அப்பாட்டிற்குத் தமிழ் மொழியால் எழுதப்பட்டுள்ள பொருள்தான் ஸ்ரீபாஷ்யத்தில் வடமொழியாலெழுதப் பட்டுள்ளதென்க.

792. இனி மூன்றாமத்யாயத்திற் சிறிது செல்வோம். கீழ்க்கழிந்த இரண்டு அத்யாயங்களுள் முதலத்யாயத்தினால், ஜகஜ் ஜந்மாதி காரணமாய் ஸர்வ திவ்ய மங்கள விக்ரஹத்தைப் பரிக்ரஹித்து அப்ரமேயமான ஆனந்தத்தை உடையனாய் தன்னடி பணிந்தார்க்கும் அபரிமிதமான ஆனந்தத்தை அளிப்பவனாய் ஸம்ஸாரபந்தத்தில் நின்றும் விடுபட்ட முக்த புருஷர்களினால் அநுபவிக்கப்பட்டு கொண்டிராநின்றானென்றும் தெரிவிக்கும் முகத்தினால் ஸம்ஸாரிகளுக்கு பகவதநுபவ குதூஹலத்தை உண்டாக்குவதற்காக பரமபுருஷார்த்தமான பகவத் ஸ்வரூப ஸ்வபாவாதிகள் நிரூபிக்கப்பட்டன. பிறகு இரண்டாமத்யாயம் செய்ததென்னென்னில், முதலத்யாயத்தினால் நிரூபிக்கப்பட்ட அர்த்தம் ஸர்வாத்மநா அசைக்கமுடியாததென்று பரபக்ஷப்ரதிக்ஷேப பூர்வகமாக ஸாதித்ததுடன் ஸ்ரீபாஞ்சராத்ரமென்கிற பகவத் ப்ரணீத சாஸ்த்ர விசேஷத்தினால் தேறிய பொருளென்றும் நிரூபித்து, ஸகல சேதநா சேதநப் பொருள்களும் பரமபுருஷகார்ய பூதங்களேயென்பதை நன்கு சோதிக்கும் முகத்தால் கார்ய ஸாமாந்யமும் பரப்ரஹ்ம கார்யமே என்பதும் ஸ்தாபிக்கப்பட்டது. ஆக இரண்டத்யாயங்களாலும் புருஷார்த்த ஸ்வரூபம் நிச்சயிக்கப் பட்டதாகத் தேறிற்று. இப்படி புருஷார்த்த ஸ்வரூபம் நிச்சயிக்கப்பட்டாலும், அநாதிவாஸநா பலத்தாலே க்ஷுத்ர புருஷார்த்தங்களையே நச்சிக் கிடக்கும் ஸம்ஸாரிகளுக்குப் பரமபுருஷார்த்த ப்ராப்தியிற் பதற்ற முண்டாகாமைக்குக் காரணம் – தாங்கள் விரும்பிய புருஷார்த்தங்கள் அல்பாஸ்திரங்கள் என்பதை ஆராய்ந்துணராமையே யென்று கருதிய சாஸ்த்ரகாரர், அந்த ஸம்ஸாரிகளுக்கு இதர புருஷார்த்தங்களிற் வைராக்யத்தையும் பரமபுருஷார்த்தத்திற் மிகுந்த ருசியையு முண்டாக்குவதற்காக கர்மபலங்களெல்லாம் க்ஷயிஷ்ணுக்களென்றும் பரமபுருஷ உபாஸநபலமான அபவர்க்க மொன்றே நித்யபுருஷார்த்த மென்றும் தெரிவித்து, இவ்வழியாலே பரமபுருஷார்த்த ப்ராப்தியிலே த்வராதிசயத்தை உண்டாக்கவே பின்னிரண்டு அத்யாயங்களை அவதரிப்பிக்கி றார். ஏற்கெனவே கர்மவிசாரம் செய்து அதன் பலன்களை நச்வரங்களென்றறிந்து வைராக்யம் பெற்றவனுக்கே ப்ரஹ்ம மீமாம்ஸையில் அதிகாரமென்று ஜிஜ்ஞாஸா ஸூத்ரத்திலேயே நிரூபிக்கப்பட்டிருப்பதனால், மறுபடியும் வைராக்யத்தை உண்டாக்குவதற்காக இந்த ப்ரயத்நம் வீணல்லவோவென்று சிலர் சங்கிக்கவுங் கூடும். ஆகிலும் கேண்மின். பஞ்சாக்நி வித்யா நிரூபணத்தினால் விஷயங்களில் எப்படிப்பட்ட வைராக்யம் உண்டாகுமோ அது கர்ம விசாரத்தினால் உண்டாகமாட்டாதென்று கருதியே இங்கு புந: ப்ரயத்நம் கொள்ளப்படுகிறது. ஆகவே இது நிஷ்ப்பலமன்று, ஸபலமே. இந்த மூன்றாம் அத்யாயத்தில் முதல்பாதத்திற் பஞ்சாக்நி வித்யா

நிரூபணம் செய்து கர்மபலன்கள் எல்லாமும் நச்வரங்களென்றும் நரகதுல்யங்களென்றும் தெரிவிக்கப் படுகிறது. மூன்றாமத்யாயமானது பரமபுருஷப்ராப்திக்கு உபாயத்தைத் தெரிவிப்பதென்றும், நான்காமத்யாயமானது உபாய பலமான உபேயத்தைத் தெரிவிப்பதென்றும் நெஞ்சில் கொள்க.

793. உபயலிங்காதிகரணத்தில் ப்ரமேயம் நிரூபிக்கப்படுகிறது. இது மூன்றாமத்யாயத்தில் இரண்டாவது பாதத்திலுள்ளது. ஜீவாத்மாவானவன் ஜாக்ரத், ஸ்வப்ந, ஸுஷுப்தி மூர்ச்சாதி அவஸ்தைகளுக்கு ஹேதுவான நானா சரீரங்களை ஏற்றுக் கொண்டு அவ்வவஸ்தைகளில் ஸுகதுக்கங்களை அனுபவிக்கிறான் என்னுமிடம் கீழே நிரூபிக்கப்பட்டது. அப்படிப்பட்ட ஜீவனாலே அதிஷ்டிதமான சரீரத்திற் பரமாத்மாவும் ஸம்பந்தப்பட்டிருந்தாலும் தத்ப்ரயுக்தமான ஸுகதுக்காதி அபுருஷார்த்தலேசமும் தன்னிடத்திற் ஒட்டப் பெறாமலிருக்கிறான் என்பதையும் கல்யாண குணக்கடலாக இருக்கிறான் என்பதையும் நிரூபிக்க இவ்வதிகரணம் தோன்றியது. "ந ஸ்தாநதோபி பரஸ்யோபயலிங்கம் ஸர்வத்ர ஹி" என்பது இவ்வதிகரணத்திற்குத் தலையான ஸூத்ரம். பரஸ்ய – பரமபுருஷனுக்கு; ஸ்தாநத: அபி – ஜீவாதிஷ்டித நானா சரீரங்களிற் இருப்பு இருந்தாலும், ந – அபுருஷார்த்த ஸுகதுக்க ஸம்பந்தம் கிடையாது. இதற்கு ஹேதுவென்னெனில், ஸர்வத்ர ஹி உபயலிங்கம் – பரமபுருஷன் ஸர்வச்ருதி ஸ்ம்ருதிகளிலும் ஹேய ப்ரத்யநீகத்வம் கல்யாணைகதாநத்வம் என்கிற இரண்டு அஸாதாரண தர்மங்களோடு கூடியவனாக ப்ரதிபாதிக்கப்படுகையாலே என்பது ஸூத்ரத்தின் பொருள். இதைச் சிறிது விவரிப்போம். "அபஹதபாப்மா விஜர: விம்ருத்யு: விசோக: விஜிகித்ஸ: அபிபாஸ: ஸத்யகாம: ஸத்ய ஸங்கல்ப:" இத்யாதி ச்ருதிகளும், "பர: பராணாம் ஸகலா ந யத்ர க்லேசாதயஸ்ஸந்தி பராவரேசே" இத்யாதி ஸ்ம்ருதிகளிலும் பரமபுருஷன் இயற்கையாகவே ஹேயப்ரத்யநீகனாயும் கல்யாண குணாகரனாயு மிருக்கிறானென்று சொல்லப்படுகையாலே ஹேயப்ரதிபடனான அப்பரமபுருஷனிடத்தில் சரீரஸம்பந்தமானது அபுருஷார்த்த ஸுகது:க்காபத்திக்கு ஹேதுவாகமாட்டாது. அவன் அபஹத பாப்மாவெனப்படுகிறான். அபஹதபாப்மத்வமாவது இன்னது என்பதைக் கீழே ஆநந்தமயாதிகரணத்தில் விவரித்திருக்கிறோம். புண்யபாபரூப கருமங்களின் பலன் ஸ்பர்சிக்கப் பெறாதிருத்தலே அபஹதபாப்மத்வமாம். அதாவது புண்ய பாப ஸஜாதீயங்களான கருமங்களைத் தான் செய்தாலும் அவை பலன் கொடுக்கும்படியான சக்தியைப் பெறாதபடி அந்த சக்தியைத் தொலைத்திடுகையேயாம். ஹேயப்ரத்யநீகத்வ மென்பதும் இதுவே. இப்படி விலக்ஷணசக்தியுக்தனான பரமபுருஷனிடத்தில் ஹேயதேஹ ஸம்பந்தமுண்டானாலும் அது அபுருஷார்த்த ஸுகதுக்க ஸமுத்பாதகமாக ஆகமாட்டாது. ஹேயதேஹ ஸம்பந்தமானது கர்மாதீநமன்றிக்கே ஸ்வேச்சாக்ருதமாகையாலே. இதற்கு மேல் ஒரு சங்கை தோன்றும். பரமபுருஷனுக்கு தேஹ ஸம்பந்தம் கர்மப்ரயுக்தமன்றிக்கே ஸ்வேச்சாக்ருதமாகவேயிருக்கட்டும். ஹேயஸம்பந்தமானது வஸ்து ஸ்வபாவத்தாலே அபுருஷார்த்தாபாதகமாகியே தீருமன்றோ. மாம்ஸாஸ்ருக்பூய விண்மூத்ரவெள்ளத்தில் ஒருவன் ஸ்வேச்சையினாலே அமிழ்ந்தாலும் ஹேய ஸம்பந்தமுண்டாகித்தானே தீரும் –

என்று சங்கிக்கக் கூடும். இங்கு உணர வேண்டிய தத்துவமாவது ஹேயத்வமென்பது கர்மக்ருதமேயொழிய வஸ்து ஸ்வபாவ ப்ரயுக்தமன்று. ஸம்ஸார தசையில் எந்த வஸ்துவும் அநுகூலமாகத் தோன்றுவதும் ப்ரதிகூலமாகத் தோன்றுவதும் வஸ்து ஸ்வபாவத்தாலன்று. அப்படியாகில் எதுவும் எவனுக்கும் அநுகூலமாகவேயோ ப்ரதிகூலமாகவேயோ இருந்து தீரவேணும். இப்படி எங்கும் காணப்படவில்லை. இன்று அநுகூலமானதே நாளைக்கு ப்ரதிகூலமாகிறது. அதுதானே மற்றொருநாள் அநுகூலமாகிறது. ஆகவே எந்த வஸ்துவும் ஸம்ஸார தசையில் அநுகூலமாயிருப்பதும் பிரதிகூலமாயிருப்பதும் கர்மக்ருதமேயாதலால் அகர்மவச்யனான பரமபுருஷனுக்கு ஸர்வவஸ்துக்களும் தத்விபூதியாய்க் கொண்டு அநுகூலமாகவேயிருக்குமென்று கொள்ளக்கடவது. ஆகவே ஹேயபூத தேஹ ஸம்பந்தம் பரமபுருஷனிடத்தில் அபுருஷார்த்த பாதகமாகாதென்க. இந்த சாரீரக மீமாம்ஸையிலேயே முதலத்யாயத்தில் இரண்டாவது பாதத்தில் "ஸம்போகப்ராப்தி: இதிசேந் ந வைசேஷ்யாத்", "போக்த்ராபத்தேர் அவிபாகச்சேத் ஸ்யால்லோகவத்" என்கிற ஸூத்ரங்களில் பரமாத்மாவுக்கு ஜீவாதிஷ்டித சரீர ஸம்பந்தமிருந்தாலும் அகர்மவச்யனாகையாலே ஸுகது:க்காதி ரூப கர்மபல ஸ்பர்சமில்லை யென்னுமிடம் நிரூபிக்கப்பட்டேயிருப்பதால் இவ்வதிகரணம் அத்தோடு புநருக்தமாகிறதேயென்று சிலர் சங்கிக்கக் கூடும். அவ்விடத்துப் பூர்வபக்ஷ சரீரம் வேறு, இவ்விடத்துப் பூர்வபக்ஷ சரீரம் வேறு என்பதை ஸூக்ஷ்மேக்ஷிகையால் உணரவேணும். இங்கு விரிவுக்கு அஞ்சி நிற்கிறோம்.

794. இனி, மூன்றாமத்யாயத்தில் கடைசி பாதத்திலுள்ள ஸர்வாந்நாநுமத்யதிகரணம் பற்றிப் பேசுவோம். இதற்கு முந்தின அதிகரணத்திற் ப்ரஹ்மவித்யா நிஷ்டனுக்கு சமம் ஆவச்யகமென்று சொல்லிவ்று. போஜந நியமமாகிற சமவிசேஷம் ப்ரஹ்மவித்துக்கு உண்டா இல்லையா என்பதை விசாரித்து நிர்ணயிக்க இவ்வதிகரணம் தோன்றியது. "ஸர்வாந்நாநுமதிச்ச ப்ராணாத்யயே தத் தர்சநாத்" என்பது ஸூத்ரம். ச சப்தமானது அவதாரணப் பொருளது. ப்ராணவித்யா நிஷ்டன் எந்த அன்னத்தையும் புஜிக்கலாமென்று அனுமதிப்பது ப்ராணாபத்தசையைப் பற்றிதேயாம். ப்ரஹ்மவித்தான அதிகாரியின் விஷயத்தில் ப்ராணபத் விஷயமாகவே காண்கையாலே என்று ஸூத்ரார்த்தம். இங்கு பூர்வபக்ஷம் ; சாந்தோக்யத்தில் ஐந்தாவது ப்ரபாடகத்தில் ப்ராண வித்யா ப்ரகரணத்தில் "ந ஹ வா ஏவம்விதி கிஞ்சந அநந்நம் பவதி" என்று ஓதப்பட்டிருக்கிறது. ப்ராண வித்யா நிஷ்டனுக்கு அன்னமாகாதது எதுவுமில்லை யென்று இதற்குப் பொருள். ப்ராண வித்யா நிஷ்டனுக்கு நிஷித்தாந்ந போஜனமும் ஸர்வதாகூடுமென்றும், வித்யா மாஹாத்ம்யத்தினால் இதில் தவறில்லை யென்றும் சொல்லுவதாகத் தெரிகிறது. அற்ப சக்திகனான ப்ராண வித்யாநிஷ்டனுக்கே நிஷத்தாந்ந போஜனம் அனுமதிக்கப்படுமானால், ப்ரஹ்மவித்யா நிஷ்டனுக்கு அந்த அனுமதி கைமுதிக ந்யாய ஸித்தமே என்று பூர்வபக்ஷம். இதன் மேற் ஸித்தாந்தம் வருமாறு: ப்ரஹ்ம வித்யா நிஷ்டனான உஷஸ்தன் ப்ராணாபத் தசையில் ஒரு யானைப் பாகன் உண்டு மிகுந்த காறாமணியை புஜித்து அதனால் உயிர் தரிக்கப் பெற்றானென்றும், பிறகு அந்த ஆனைப்பாகன் கொடுத்த பானத்தை அவன் (உஷஸ்தன்)

ஏற்றுக்கொள்ளவில்லையென்றும் சாந்தோக்யத்திற் முதல் ப்ரபாடகத்தில் (கண்டம் 9) உஷஸ்த வ்ருத்தாந்த ப்ரகரணத்தில் காண்கிறது. இதனால் மஹா மஹிமசாலியான ப்ரஹ்மவித்துக்கும் நிஷித்தாந்நபக்ஷணம் ஆபத்விஷயமென்று தெரிவதனாலும், "ஆஹாரசுத்தௌ ஸத்வ சுத்தி: ஸத்வசுத்தௌ த்ருவா ஸ்ம்ருதி:" என்று ஆஹார சுத்தி ஆவச்யகமென்று தெரிவதாலும், "ப்ராணஸம்சயமாபந்நோ யோந்நமதி யத்ஸ்தத: லிப்யதே ந ஸ பாபேந பத்மபத்ரமிவாப்யஸா" என்று ப்ராஹ்மண ஸாமாந்யத்திற்கும் ஆபத்காலத்தில் ஸர்வாந்நமும் அநுமதிக்கப்படுவதாகக் காண்கையாலும், ப்ரஹ்மவித்தான அதிகாரி விசேஷத்திற்கும் ஸர்வாந்நாநுமதியானது, ஆபத்காலமாத்ர விஷயகமென்று ஸித்திக்கும்போது, அல்பசக்தியான ப்ராணோபாஸகனுக்குக் காணும் ஸர்வாந்ந அநுமதியும் ஆபத் விஷயகந்தானென்பது பற்றிச் சொல்லவேணுமோ?

795. இனி நான்காவது அத்யாயத்திற்குச் செல்வோம். பெரும்பாலும் உபாஸந பரமாகச் சென்றது மூன்றாமத்யாயம். அவிச்சிந்நஸ்ம்ருதி ஸந்தாநரூப த்யாநத்வாவஸ்தையை உடையதென்று சாஸ்த்ரம் சொல்லுகையாலே – என்னும் பொருளதான ஸூத்ரம் "ஆவ்ருத்திரஸக்ருதுபதேசாத்" என்பது முதல்ஸூத்ரம். இங்கு பூர்வபக்ஷம் "ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்க்ககாமோயஜேத" இத்யாதிகளிற் ஸ்வர்க்க ஸாதநமாக விதிக்கப் பட்ட யாகாதிக ஸக்ருத்கரணத்தாலேயே எப்படி ஸ்வர்க்காதிபல ஸாதநமாகிறதோ அப்படி இங்கும் "ப்ரஹ்மவிதாப்நோதிபரம்" இத்யாதிகளில் மோக்ஷ ஸாதநமாக விதிக்கப்பட்ட பகவச்சிந்தநரூபமான வேதநமும் ஸக்ருதநுஷ்டாநத்தாலேயே மோக்ஷ ஸாதநமாகக் கூடுமாதலால் அது ஒருகாலே செய்யப்படவேண்டுமென்று. இப்பூர்வபக்ஷத்தின்மேல் ஸித்தாந்தம் வருமாறு. வேதாந்தசாஸ்த்ரங்களில் மோக்ஷ ஸாதநமானதைச் சொல்லிவருமடைவுகளில் வேதநம், உபாஸநம், த்யாநம், த்ருவாஸ்ம்ருதி, ஸாக்ஷாத்காரம், பக்தி என்கிற சப்தங்க காணப்படுகின்றன. இவையெல்லாம் பர்யாயபதங்களென்று நிச்சயிக்கப்படுமிடத்து தைலதாராவத் அவிச்சிந்நஸ்ம்ருதி ஸந்தாந ரூபமானதென்றே அறுதியிடவேண்டியதாகிறது. ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் (6–7–91) "தத்ரூபப்ரத்யயே ச ஏகா ஸந்ததிஸ்சாந்ய நிஸ்ப்ருஹா தத்த்யாநம் ப்ரதமை:" உபாஸநத்தின் பலனை நிரூபிக்க அவதரிக்கிறது நாலாமத்யாயம். இதில் முதலதிகரணம் ஆவ்ருத்த்யதிகரணம். மோக்ஷத்திற்கு உபாயபூதமான பகவதுபாஸநம் அஸக்ருதாவ்ருத்தி ரூபம் (அதாவது) தைலதாராவத் அவிச்சிந்ந ஸ்ம்ருதி ஸந்தான ரூபம். ஏனென்னில் "ப்ரஹ்மவித் ஆப்நோதிபரம்" இத்யாதிகளில் விதிக்கப்பட்ட வேதநமானது "ஷட்பிரங்கை: நிஷ்பாத்யதே ந்ருப" இத்யாதி ச்லோகங்களும் "பக்த்யா த்வநந்யயா சக்ய:", "அஹமேவம் விதோர்ஜுந" இத்யாதி கீதாச்லோகங்களும் இதையே வற்புறுத்துகின்றன. மேலே ஆறாவதாக ஆப்ரயாணாதிகரணமுள்ளது. "ஆப்ரயாணாத் தத்ராபி ஹி த்ருஷ்டம்" என்பது ஸூத்ரம். மோக்ஷஸாதநமான ப்ரஹ்மோபாஸநமானது மரணாந்தமாக அநுஷ்டிக்கப்பட வேண்டும் என்று அதில் நிகமிக்கப் படுகின்றமையறிக.

796.இனி தததிகமாதிகரணத்தின் ப்ரமேயம் நிரூபிக்கப்படுகிறது. "தததிகம உத்தரபூர்வாகயோரச்லேஷவிநாசௌ தத்வ்யபதேசாத்" என்பது ஸூத்ரம். ப்ரஹ்மவித்யா

நிஷ்டனுக்கு ஸாக்ஷாத்காராவஸ்தையை யடைந்த ப்ரஹ்மவித்யா நிஷ்பத்தி யுண்டாகுமளவிற் ப்ரஹ்மவித்யா மஹிமையினாலே பூர்வபாபங்களுக்கு விநாசமும் உத்தரபாபங்களுக்கு அச்லேஷமுமாகும்; ச்ருதிகளிற் அப்படி சொல்லியிருப்பதனாலே – என்பது ஸூத்ரார்த்தம். ப்ரஹ்மஜ்ஞானத்திற்கு முன்பு செய்த பாபங்கள் நசித்துப் போய்விடும். பிறகு அபுத்திபூர்வகமாக நேரும் பாபங்கள் தாமரையிலையில் தண்ணீர் போல ஒட்டமாட்டா என்றபடி. சாந்தோக்ய ச்ருதியிற் உபகோஸல வித்யா ப்ரகரணத்தில் "யதாபுஷ்கரபலாசே ஆபோ ந ச்லிஷ்யந்தே ஏவமேவம் விதிபாபம் கர்ம ந ச்லிஷ்யதே" என்றும், அவ்விடத்திலேயே வைச்வாநரவித்யா ப்ரகரணத்தில், "யதேஷீகதூலமக்நௌ ப்ரோதம் ப்ரதூயேத ஏவம் ஹாஸ்ய பாப்மாந: ப்ரதூயந்தே" என்றும் ப்ரஹ்மவித்யையில் பல சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையாலே உத்தரபாபங்களுக்கு அச்லேஷமும் பூர்வபாபங்களுக்கு விநாசமும் சொல்லப்படுகிறதென்கை. இங்கு பூர்வபக்ஷம் "நாபுக்தம் க்ஷீயதே கர்மகல்பகோடி சதைரபி" என்று பலனை அநுபவித்தே கருமங்களைத் தொலைக்க வேணுமென்று ப்ரஹ்மவைவர்த்தத்தில் சொல்லியிருக்கையாலே கர்மபலன்களை அநுபவித்தே தீரவேண்டும். ப்ரஹ்ம வித்யையினாலேயே கருமங்கள் தீர்ந்து போவதாகச் சொல்லுவது ப்ரசம்ஸாபரமான வார்த்தையாமத்தனை என்று. இதன் மேல் ஸித்தாந்தம் வருமாறு. பூர்வபாபங்களுக்கு விநாசமும் உத்தர பாபங்களுக்கு அச்லேஷமும் ப்ரஹ்மவித்யா ப்ரபாவத்தாலே நேருவதாகப் பல உபநிஷத்துக்கள் கூறியிருப்பது அபலபிக்க முடியாதது. "நாபுக்தம் க்ஷீயதே கர்ம" என்ற வசனமும் யுக்தமானதே. அது ப்ரஹ்ம வித்துக்களல்லாத ஸாமாந்ய விஷயமாக ஒதுக்கத் தகும். ஆகவே இவை பரஸ்பரம் அவிருத்தங்களான வசனங்களேயாம். 'நெருப்பு வீட்டைக் கொளுத்தியே தீரும்' என்று ஒருவன் சொல்லுகிறான். 'பற்றியெரிகிற நெருப்பைத் தண்ணீர் அணைத்தே தீரும்' என்று மற்றொருவன் சொல்லுகிறான். இவற்றில் பரஸ்பர விரோதம் சிறிதேனுமுண்டோ? தண்ணீர் இல்லையானால் படர்ந்தெரிகிற நெருப்பு வீட்டைக் கொளுத்தியே தீருமென்றும், தண்ணீரையிட்டு அணைத்தால் நெருப்பு ஒய்ந்துவிடுமென்றும் அர்த்தமாக வில்லையோ. அதுபோல, ப்ரஹ்மவித்யை இல்லாதவளவில் கர்மங்கள் பலனைக் கொடுத்தேதீருமென்றும், ப்ரஹ்மவித்யை யுண்டாகில் கருமங்களின் சக்தி ப்ரதிஹதமாய்விடுமென்றும் எளிதாக அர்த்தமாகுமன்றோ.

797. இனி நிசாதிகரணத்தைப் பற்றிப் பேசுவோம். "நிசிநேதிசேந்ந ஸம்பந்தஸ்ய யாவத் தேஹபாவித்வாத் தர்சயதி ச" என்கிற ஒரு ஸூத்ரமே கொண்டது இவ்வதிகரணம். இரவில் இறந்தவனுக்கு ப்ரஹ்மப்ராப்தி உண்டா இல்லையா என்று விசாரிக்கப்படுகிறது. நிசிமரணத்தைப் பற்றி சாஸ்த்ரங்களிற் இழிவாகச் சொறலப்பட்டிருப்பதனால் பரமபுருஷார்த்தமான மோக்ஷமானது ஸம்பவிக்கமாட்டாது. பகலில் மரணமே சாஸ்த்ரங்களில் ப்ரசஸ்தமாகக் காண்கிறது. நிசாமரணம் இதற்கு விபரீதமானது. "திவா ச சுக்லபக்ஷச்ச உத்தராயணமேவ ச", "முமூர்ஷதாம் ப்ரசஸ்தாநி விபரீதம் து கர்ஹிதம்" என்று ஸ்பஷ்டமாக சாஸ்த்ரம் இருப்பதால் நிசிமரணம் அதமகதிக்கே ஹேதுவாகுமாதலால்

இரவில் இறப்பவனுக்கு ப்ரஹ்மப்ராப்தி ஸம்பவிக்கமாட்டாது என்று பூர்வபக்ஷம் ப்ராப்தமாக, இதன்மேல் ஸித்தாந்தம் வருமாறு: – ப்ரஹ்மவித்துக்களுக்கு கர்ம ஸம்பந்தம் தேஹமுள்ளவரைக்குமே யாதலால், நிசிமரணம் ப்ரஹ்ம வித்துக்களுக்கு கர்மபாதகமாகாது. இதைச் சிறிது விவரிப்போம். பாபகருமங்கள் ஆரப்தகார்யங்களென்றும் அநாரப்தகார்யங்களென்றும் இருவகைப் படும். இன்னமும் பூர்வபாபங்களென்றும் உத்தரபாபங்களென்றும் இருவகைப்படும். பலன் கொடுக்கத் தொடங்கிவிட்ட கருமங்கள் ஆரப்தகார்யங்களெனப்படும். இவையே ப்ராரப்தகர்மமென்று வழங்கப் பெறும். பலன் கொடுக்கத் தொடங்காத தீவினைகள் அநாரப்தகார்யங்களெனப் படும். ஸஞ்சிதகர்மமென்பது இதுவே. ப்ரஹ்மவித்யையை ஸம்பாதிப்பதற்கு முன்னே செய்யப்பட்ட பாபங்கள் பூர்வபாபங்களெனப்படும். அதற்குப் பிறகு புத்தி பூர்வமான பாபங்கள் நேருவதற்கு ப்ரஸக்தியில்லாமையாலே அபுத்திபூர்வமாகவும் அகதிகமாகவும் நேருமவை உத்தரபாப மென்னப்படுமென்று இதை முன்னமே சொன்னோம். இவற்றுள் அநாரப்த பாபங்களான கருமங்கள் ப்ரஹ்மவித்யா ஸம்பந்தமுண்டானவாறே தொலைந்து போயினவாதலாலும், உத்தரபாபங்கள் ப்ரஹ்மவித்துக்களிடத்திற் ஒட்டமாட்டாவென்று சொல்லப்படுகையாலும் ப்ராரப்தகர்மமொன்றே சேஷித்து நிற்கிறது. அக்கருமம் சரமதேஹத்தோடு கழியுமாதலால் பந்தஹேதுவாகமாட்டாது. ஆகவே ப்ரஹ்மவித்துக்களுக்கு நிசிமரணம் நேர்ந்தாலும் பரமபுருஷார்த்தமான ப்ரஹ்மப்ராப்திக்குக் குறையிற்லை யென்றதாயிற்று. "திவா ச சுக்லபக்ஷச் ச" என்று கீழே காட்டின வசனம் ப்ரஹ்மவித்துக்களல்லாதார் விஷயமென்றும் முடிந்தது.

798. இதற்கு மேலுள்ள தக்ஷிணாயந அதிகரணத்தின் ப்ரமேயமும் விவரிக்கப் படுகிறது. "அதச்ச அயநோபி தக்ஷிணே" என்கிற ஒரு ஸூத்ரமே கொண்டது இவ்வதிகரணமும். நிசிமரணமடைந்தாலும் ப்ரஹ்மப்ராப்திக்குக் குறையிற்லை யென்பதற்கு முந்தின அதிகரணத்தில் எந்தஹேதுசொல்லப்பட்டதோ, அந்தஹேதுவினாலேயே தக்ஷிணாயநத்தில் மரணமடைந்தவற்கும் ப்ரஹ்மப்ராப்தியிற் குறையிற்லையென்பது ஸித்தமே. ஆனாலும் இவ்வதிகரணத்தில் அதிகப்படியான சங்கை என்ன வென்றால் தைத்திரீய உபநிஷத்தில் "அத யோ தக்ஷிணே ப்ரமீயதே பித்ருணாமேவ மஹிமாநம் கத்வா சந்த்ரமஸஸ்ஸாயுஜ்யம் கச்சதி" என்று தக்ஷிணாயநத்தில் மரணம் அடைந்தவற்கு சந்த்ரப்ராப்தி சொல்லப் படுகிறது. சந்த்ரப்ராப்தி பெற்றவர்களுக்குப் புநராவ்ருத்தியும் சொல்லப்படுகிறது. பீஷ்மர் முதலான சில ப்ரஹ்மவித்துக்களும் உத்தராயண ப்ரதீக்ஷை பண்ணினதாகத் தெரிய வருகிறது. ஆக இக்காரணங்களினால் தக்ஷிணாயனத்தில் இறந்தவற்கு ப்ரஹ்ம ப்ராப்தி ஸம்பவிக்க ஔசித்யமில்லை என்பதாம். இதற்குப் பரிஹாரமாவது சந்த்ரப்ராப்தியினால் புநராவ்ருத்தியென்பது ப்ரஹ்மவித்துக்கள் அலாதார்க்கேயொழிய ப்ரஹ்மவித்துக்களுக்கன்று. சந்த்ரப்ராப்தி யுண்டானாலும் அது இடையில் இளைப்பாறும் ஸ்தானமாகுமத்தனை. பந்தஹேதுவான கருமம் தொலைந்துவிட்ட தென்கிற பூர்வோக்த ஹேதுவுக்குக் கண்ணழிவில்லாமையாலே ப்ரஹ்மப்ராப்தி அவர்ஜநீயமாகவே தேறும். பீஷ்மர் உத்தராயணப்ரதீக்ஷை

பண்ணினாரென்ற விஷயத்தில் அறியத்தக்கதொன்றுண்டு. அவர் மதுவித்யாநிஷ்டர். மதுவித்யா ப்ரபாவத்தினால் ஸ்வச்சந்தமரணத்வம் உள்ளது. அதனாலும் உத்தராயணத்தில் மேன்மையைக் காட்டவேண்டியும் அவர் உத்தராயணப்ரதீக்ஷை பண்ணினவளவாய் தக்ஷிணாயனத்தில் மரணமடைந்தவர்களுக்கு ப்ரஹ்மப்ராப்தியில் கண்ணழிவு சொல்ல முடியாது. ஆக இவ்வளவால், ப்ரஹ்மவித்துக்களுக்கு நிசிமரணமோ, க்ருஷ்ணபக்ஷ மரணமோ, தக்ஷிணாயந மரணமோ நேர்ந்தாலுங்கூட பரமபுருஷார்த்த ப்ராப்தியில் குறையில்லையெற்றதாயிற்று.

799. இனி, சாரீரகமீமாம்ஸையில் முடிவான அதிகரணமாகிய ஜகத்வ்யாபார வர்ஜாதிகரணத்தின் ப்ரமேயம் தெரிவிக்கப் படுகிறது. முக்த புருஷனுக்கு ஜகத் ஸ்ருஷ்டியில் அதிகாரமில்லையென்பதும் பரமபதத்தினின்று மீட்சியில்லையென்பதும் இவ்வதிகரணத்தில் தெரிவிக்கப்படுகின்றன. இவ்வதிகரணத்திற்கு "ஜகத்வ்யாபார வர்ஜம் ப்ரகரணாத் அஸந்நிஹிதத்வாச்ச" என்பது முதல் ஸூத்ரம். "அநாவ்ருத்திச் சப்தாத் அநாவ்ருத்திச் சப்தாத்" என்பது முடிவான ஸூத்ரம். முதல் ஸூத்ரத்தின் அர்த்தமாவது, முக்தனுடைய ஐச்வர்யம் ஜகந்நியமனத்தைத் தவிர்த்தேயாம். ஏனென்னில், பரப்ரஹ்மத்தைக் குறித்துச் சொல்லும் ப்ரகரணங்களிலேயே ஜகத் ஸ்ருஷ்டி முதலானவற்றைச் சொல்லி யிருக்கிறபடியாலும் அவற்றைச் சொல்லும் ப்ரகரணங்களில் ஜீவன் ப்ரஸ்துதனாக இல்லாமையாலும் என்பதாம். இங்கு பூர்வபக்ஷம் வருமாறு: முண்டகோபநிஷத்தில் "யதா பச்ய: பச்யதே ருக்மவர்ணம் கர்த்தாரமீசம் புருஷம் ப்ரஹ்மயோநிம் ததா வித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி" என்று முக்தனுக்குப் பரப்ரஹ்மத்தோடு ஸாம்யம் ஓதப்பட்டுள்ளது. இன்னமும் சாந்தோக்ய உபநிஷத்தில், "ஸ யதி பித்ருலோககாமோ பவதி ஸங்கல்பாதேவாஸ்ய பிதரஸ் ஸமுதிஷ்டந்தி" இத்யாதி வாக்யங்களாலே முக்த புருஷனுக்கு ஸத்ய ஸங்கல்பத்வமும் ஓதப்படுகிறது. இவ்விரண்டும் முக்தனுக்கு ஜகந்நியாமகத்வரூபமான ஜகதீச்வரத்வ மிருந்தாலொழியப் பொருந்தமாட்டாது. முக்தனுக்கு ஈச்வரத்வமில்லையானால் ப்ரஹ்மத்தோடு பரமஸாம்யமுண்டாவதாகச் சொல்வது சேராது. ஆகையாலே முக்தனுக்கும் பரப்ரஹ்மத்திற்குப் போலவே ஜகந்நியாமகத்வரூபமான ஈச்வரத்வத்தை அவசியம் இசைந்து தீரவேண்டும். ஆனது பற்றியே முக்தனைப் பற்றி ஓதுமிடங்களில் "ஸ ஸ்வராட் பவதி; தஸ்ய ஸர்வேஷு லோகேஷு காமசாரோ பவதி" என்றும், "ஸ இமாந் லோகாந் காமாந்நீ காமரூப்யநுஸஞ்சரந்" என்றும் சொல்லப் படுகிற ஸர்வலோக ஸஞ்சாரமும் காமாந்நித்வமும் காமரூபித்வமும் பொருந்துகின்றன. ஸர்வலோக ஸஞ்சாரமென்பது ஸர்வலோக நியமனத்திற்காகத்தானே. அது தவிர மற்றொரு பலனும் தேறுகின்றதில்லை யாகையாலே ஜகந்நியமனம் முக்தனுக்கு ஸித்தித்தே தீரும். காமாந்நித்வாதிகள் சொன்ன போதே லோகங்கள் அவனுக்கு அதீனமென்பது தேறி நிற்கும். ஆனால் இதற்கு மேல் ஒன்று சொல்லாம். முக்தனுக்கு ஸர்வலோக ஸஞ்சாரமானது ஆங்காங்கு போக்ய பதார்த்தங்களை அநுபவிப்பதற்காகவே யொழிய உலகங்களை நியமிப்பதற்காகவன்று என்று சொல்லலாம். இதுவும் சொல்ல முடியாது. விகாராஸ்பதங்களாகையாலே ஹேயங்களாயிருக்கின்ற

லோகங்களையும் அவற்றிலுள்ள பொருள்களையும் போக்யமாகக் கொள்ள ப்ரஸக்தியில்லை யன்றோ. அவை ஹேயங்களானாலும் ஸ்வாமியான பரமபுருஷனுடைய விபூதியாகையாலே அவற்றில் போக்யதாபுத்தி ஸம்பவிக்கலாமாகையாலே அவற்றை புஜிக்கைக்காகவே அவ்வோ லோகங்களில் ஸஞ்சாரம் ப்ராப்தமாகிறது என்கிற வாதமும் ஒவ்வாது. சாந்தோக்யத்தில் "ஸ ஸ்வராட் பவதி" என்று ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கையாலே முக்தனுக்கு வேறு யாரும் அதிபதியல்லரென்று நன்கு அறியலாகிறது. முக்திதசையில் முக்தனைக் குறித்து பரப்ரஹ்மம் சேஷியன்று என்று தேறுவதால் ஸ்வாமியின் விபூதிகளை அனுபவிப்பதற்காக ஸர்வலோக ஸஞ்சாரமென்பது பொருந்தாது. அது நியமநார்த்தமாகவே தான். ஆகவே முக்தனுக்கும் ஜகத் வ்யாபாரமுண்டு என்பதாகப் பூர்வபக்ஷம் ப்ராப்தமாகிறது.

இதன் மேல் ஸித்தாந்தம் வருமாறு : "யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே" இத்யாதியுபநிஷத் வாக்யத்தில் ஜகத்ஸ்ருஷ்ட்யாதி ரூபமான நியாமகத்வத்தைப் பரப்ரஹ்ம லக்ஷணமாகச் சொல்லியிருக்கையாலே அது பரப்ரஹ்மத்திற்கு அஸாதாரணமானதென்று விளங்குகிறது. அஸாதாரண தர்மந்தானே லக்ஷணமாயிருக்க முடியும். ஆகவே பரப்ரஹ்மத்திற்கு அஸாதாரணதர்மமாக ஓதப்பட்ட ஜகந்நியாமகத்வரூபமான ஜகதீச்வரத்வமானது முக்தனுக்கு ஸம்பவிக்கமாட்டாது. ஸம்பவிக்குமாகில் அது பரப்ரஹ்மத்திற்கு அஸாதாரண லக்ஷணமாக வழியில்லை. "பீஷாஸ்மாத் வாத: பவதே", "ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரசாஸநே கார்கி ஸூர்யாசந்த்ரமஸௌ வித்ருதௌ திஷ்டத:" இத்யாதி ச்ருதிகளாலும் ஜகந்நியாமகத்வம் பரப்ரஹ்மத்திற்கே அஸாதாரணமென்று காண்கிறது. "ஏக: சாஸ்தா ந த்விதீயோஸ்தி சாஸ்தா" என்று பரமாத்மா தவிர மற்றையோர்க்கு நியாமகத்வமில்லை யென்று ஸ்பஷ்டமாகவும் சொல்லப்படுகிறது. ஆகவே முக்தனுக்கு ஜகந்நியாமகத்வ ரூபமான ஜகதீச்வரத்வம் ஸம்பவிக்க மாட்டாது.

"பரமம் ஸாம்ய முபைதி" என்று பரமபுருஷனோடு முக்தனுக்கு வெறும் ஸாம்யம் சொல்லாதே பரமஸாம்யாபத்தி சொல்லியிருக்கையாலே அவனுக்குள்ளதெல்லாம் இவனுக்கும் ப்ராப்தமானாலொழிய பரமஸாம்யம் நிர்வஹிக்க வழியில்லையேயென்றதற்குச் சொல்லுகிறோம். "ததா வித்வான் புண்யபாபே விதூய நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி" என்றவிடத்தில் யாரோடே எந்த அம்சத்தில் ஸாம்யமென்று விசாரிக்குமளவில் "வித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி" என்ற சொற்செறிவால் என்ன கிடைக்கிறதென்னில், வித்யா ஸாத்யமான யாதொரு புண்பாப விதூநநமுண்டோ, அதனாலாகும் பலனில் ஸாம்யமென்று ஏற்படுகிறது. வித்யையென்பது ப்ரஹ்மப்ராப்தி ப்ரதிபந்தகமான புண்ணிய பாபரூபகருமத்திற்கு ப்ராயச்சித்தமானது. ஏவஞ்ச புண்பாபரூப கர்மவிதூநந ஸாத்யமான பலன் ப்ரஹ்மாநுபவமே யென்று தேறிற்று. அதில் தான் ஸாம்யம் விவக்ஷிதமாகும். முன்னே பரமபுருஷ ப்ரஸ்தாவமிருக்கையாலே அவனோடு தான் ஸாம்யமென்றும் நிச்சயிக்கப்படுகிறது. இந்த ஸாம்யத்தில் பாரம்யமாவது, ப்ரஹ்மாநுபவம் செய்யுமிடத்து தத்குணங்களிலும், தத்விபூதிகளிலும் ஏகதேசத்தையும் விடாமல் பூர்த்தியாக அனுபவிப்பதேயாம். ஆக ஸமஸ்த கல்யாண குண விபூதிவிசிஷ்ட

ப்ரஹ்மாநுபவத்தில் ஸாம்யமென்று தேறிற்று. இந்த ஸாம்யந்தான் "ஸோச்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்ரஹ்மணா விபச்சிதேதி" என்றவிடத்திலும் சொல்லப்படுகிறது. ஆக முக்தனுக்கு பரிபூர்ண ப்ரஹ்மாநுபவம் ஸித்தித்த போது ஆநந்த ஸாம்யமும் இந்த ச்ருதியினாலேயே ஸித்தம். "ஸ ஸ்வராட் பவதி" என்றதும் கர்மவச்யத்வமில்லாமையைச் சொல்லுகிறதத்தனை. "ஏஷ ஹ்யேவாநந்தயாதி" இத்யாதி ச்ருதிகளாலே முக்தனுடைய ஸத்தாஸ்திதி ப்ரவ்ருத்திகளெல்லாம் பரமபுருஷாதீநம் என்று தேறுகையாலும், முக்தனுக்கு ஸத்ய ஸங்கல்பத்வம் இயற்கையாயிருந்தாலும் கருமங்களினால் மறைந்திருந்தவது பரமபுருஷனுடைய அநுக்ரஹத்தாலேயே ஆவிர்ப்பவிப்பதாக ஓதுகையாலும் முக்தைச்வர்யம் முழுவதும் பகவத் அதீநமாயறுகையாலே பரமபுருஷனுடைய அஸாதாரணதர்மமான ஜகந்நியமநரூப ஐச்வர்யம் முக்தனுக்கு இல்லையென்று முடிந்தது. இப்படி முக்தனுடைய ஐச்வர்யம் பரமபுருஷாதீநமாகில் அந்த பரமபுருஷன் தான் ஸ்வதந்த்ரனாகையாலே அவன் தனது ஸங்கல்பத்தாலே ஒருஸமயம் முக்தனைப் பரமபதத்தில் நின்றும் இந்நிலத்திற்குத் திருப்பியனுப்பிவிடவுங் கூடுமாகையாலே மோக்ஷபுருஷார்த்தமும் அநித்யமாக வேண்டிவருமே என்கிற சங்கை அடுத்தபடியாக உண்டாகக் கூடியது. அந்த சங்கைக்குப் பரிஹாரமாக "அநாவ்ருத்திச் சப்தாத் அநாவ்ருத்திச் சப்தாத்" என்கிற சரமஸூத்ரமவதரிக்கிறது. சங்காபரிஹார ப்ரகாரம் யாதென்னில், அநந்யதா ஸித்தமான ச்ருதிவாக்கியங்களைக் கொண்டே அறியக்கடவதான பொருளை சாஸ்த்ரம் சொன்னபடியே தான் அறியவேண்டும். பரமபுருஷனொருவனுள னென்பதை நாம் எந்த சாஸ்த்ரங்கொண்டு அறிகிறோமோ அந்த சாஸ்த்ரமே முக்தர்களுக்கு மீட்சியில்லை என்பதையும் அறிவிக்கின்றது. "ஸ கல்வேவம் வர்தயந் யாவதாயுஷம் ப்ரஹ்மலோகமபிஸம்பத்யதே நச புநராவர்த்ததே நச புநராவர்த்ததே", "மாமுபேத்ய து கௌந்தேய புநர்ஜந்ம ந வித்யதே" இத்யாதி சாஸ்த்ரங்கள் காண்க.

800. ஆக முக்தர்களுக்கு மீட்சி யில்லையென்பதை ஸூத்ரகாரர் சாஸ்த்ரத்தைக் காட்டி ஸ்தாபித்தார். பகவானோ கேட்பாரற்ற ஸ்வதந்திரன். சாஸ்த்ரத்தையும் மீறிச் செய்வதற்கு அவன் அசக்தனல்லன். "ஸ்வாதந்த்ர்யமைச்வரமபர்யநுயோஜ்யமாஹு:" என்னப்பட்ட ஸ்வாதந்திரியத்தாலே ஈச்வரன் ஒன்று செய்யப்புகுந்தால் சாஸ்த்ரம் குறுக்கே நிற்குமோ? என்று சோத்யம் பண்ணினால் இதற்கு ஸூத்ரகாரர் சொன்ன ஸமாதானம் த்ருப்தியை விளைக்காது. சங்கராசார்யரும் தம்முடைய பாஷ்யத்தில் சாஸ்த்ரத்தை யெடுத்துக் காட்டினவளவோடு நின்று விட்டார். ஸ்வாமியெம்பெருமானார் ஆழ்வாரருளிச்செயற் கடலில் ஆய்ந்து அரும்பெரும் பொருள்களை யறிந்தவராகையாலே அவ்வருளிச் செயல் பரிமளம் கமழ இங்கு அருளிச் செய்திருக்கும் அர்த்தவிசேஷம் ஸ்ரீபாஷ்யத்திற்குச் சிகரமாக விளங்குகின்றது. அவ்வர்த்த விசேஷம் கேண்மின். ஈச்வரன் ஸ்வதந்திரனே யானாலும் உன்மத்தனல்லன். மூர்க்கனல்லன். அரஸிகனல்லன். ஸத்ய ஸங்கல்பனென்று பேர்பெற்றவன். தன்னுடைய மநோரதத்திற்கு மாறுபாடாக நடந்து கொள்பவனல்லன். ஒரு சேதனனைப் பெறுவதற்கு அப்பரமபுருஷன் என்ன பாடுபடுகிறான்!

எவ்வளவு க்ருஷி பண்ணுகிறான்! தெரியுமோ? அவன் ஸ்ருஷ்டி பண்ணுவதும் அவதாரங்கள் பண்ணுவதும் சேதநரை லபிக்கைக்காகவன்றோ. எவ்வளவோ தவப்பயனாக ஒரு சேதநன் வந்து சேர, அவனை லபித்த பின்பும் இழப்பனோ? என்னுமபிப்ராயத்தை "ந ச பரமபுருஷ: ஸத்யஸங்கல்ப: அத்யர்த்தப்ரியம் ஜ்ஞாநிநம்லப்த்வா கதாசிதாவர்த்தயிஷ்யதி" என்கிற இன்சுவையே வடிவெடுத்த திவ்யஸூக்தியாலே காட்டியருளி சங்காபரிஹாரத்தை மிகவழகாகத் தலைக்கட்டினார். இதில் "பரமபுருஷ: ஜ்ஞாநிநம் லப்த்வா" என்கிற ஸ்ரீஸூக்தி விந்யாஸமானது எம்பெருமானார் திருவுள்ளத்தில் திருவாய்மொழியமுதக்கடல் அலை யெறிகிறபடியை நன்கு காட்டுகின்றது. "யானொட்டி யென்னுள் இருத்துவமென்றிலன், தானொட்டி வந்தென் தனி நெஞ்சை வஞ்சித்து, ஊனொட்டி நின்று என் உயிரில் கலந்து, இயல்வானொட்டுமோ இனியென்னை நெகிழ்க்கவே" என்றும் "வாரிக்கொண்டு உன்னை விழுங்குவன் காணிலென்று ஆர்வுற்றவென்னையொழிய என்னில் முன்னம் பாரித்து, தானென்னை முற்றப்பருகினான், காரொக்குங் காட்கரையப்பன் கடியனே" என்றுமுள்ள திருவாய்மொழிப் பாசுரங்களின் திவ்யார்த்த ஸௌரபத்தோடே ஸ்ரீபாஷ்யம் தலைக்கட்டப்பட்டிருக்கின்றதென்பதை உபய வேதாந்த ரஸிகர்களே அறியவல்லார்.

திருவரங்கத்தமுதனார் அருளிச்செய்த இராமாநுசநூற்றந்தாதி

801. ஸகல சாஸ்த்ரங்களுக்கும் ஸங்க்ரஹம் திருவஷ்டாக்ஷரம். அதனுடைய பரம தாத்பர்யமாயும், ஆழ்வார்களுடைய திவ்யப்ரபந்தங்களின் ஸாரார்த்தமாயும் ஸ்ரீமதுரகவிகளுடைய உக்தியாலும் அநுஷ்டானத்தாலும் ப்ரகாசிதமாயும் சேதநர்கள் அனைவர்க்கும் இன்றியமையாத ஸ்வரூப புருஷார்த்தங்களில் நிஷ்க்ருஷ்டவேஷமாயும், பரம ரஹஸ்யார்த்தமாயும் இருப்பது சரமபர்வ நிஷ்டை. அஃதிருக்கும்படியைத் திருவரங்கத்து அமுதனார்க்கு எம்பெருமானார் தமது நிர்ஹேதுக க்ருபையினாலே கூரத்தாழ்வான் திருவடிகளில் ஆச்ரயிப்பித்தருளி, இவர் முகமாக உபதேசித்தருளினார். அங்ஙனம் உபதேச ப்ராப்தமான அந்தச் சீரிய பொருளை இவ்வமுதனார்தாம் அநவரதபாவனை பண்ணி, எம்பெருமானார் திருவடிகளை இடைவிடாது ஸேவித்துக் கொண்டு போந்தாராய், அவருடைய திருக்கல்யாணகுணங்களைத் தமது பத்திப்பெருங் காதலுக்குப் போக்குவீடாகப் பேசி அனுபவித்துத் தீரவேண்டும்படியான நிலைமை தமக்கு உண்டானபடியாலும், சரமபர்வ நிஷ்டையே சீரியதென்கிற பரமார்த்தத்தைச் சேதநர்க்கு எளிதில் உணர்த்த வேணுமென்கிற க்ருபாமூலகமான கருத்தினாலும் தாம் எம்பெருமானாருடைய திவ்யகுணசேஷ்டிதாதிகளை ப்ரேமத்துக்குத் தகுதியாகப் பேசுகிற பாசுரங்களாலே வெளியிடா நின்றுகொண்டு, முன்பு ஆழ்வார் திருவடிகளுக்கே அற்றுத் தீர்ந்த மதுரகவிகள் தமது நிஷ்டையைக் கூறும் முகத்தாலும் பிறர்க்கு உபதேசிக்கும் முகத்தாலும் உஜ்ஜீவநத்துக்கு உபயுக்தமான அர்த்தத்தை லோகத்திலே வெளியிட்டருளினது போல, இவர்தாமும் அவ்வகைகளாலே ஆசார்யாபிமானநிஷ்டர்க்கு அறிந்து கொள்ளத் தக்க அர்த்தங்களை யெல்லாம் மிக்க சுருக்கமும் மிக்க விரிவுமின்றி நூற்றெட்டுப் பாசுரங்கள் கொண்ட இந்த திவ்ய ப்ரபந்தமுகத்தால் அருளிச்செய்கிறார். (அப்பாசுரங்களின் பொழிப்புரை மட்டும் தரப்படுகிறது.)

801 பூமன்னுமாதுபொருந்தியமார்பன் புகழ்மலிந்த பா
மன்னுமாறனடிபணிந்துய்ந்தவன் பல்கலையோர் தாம்
மன்னவந்தவிராமானுசன் சரணாரவிந்தம் நாம்
மன்னிவாழ நெஞ்சேசொல்லுவோமவன்நாமங்களே. 1

ஓ மனமே! தாமரைப் பூவில் பொருத்தமுடையளாயிருந்த பிராட்டி, அப்பூவை விட்டு வந்து பொருந்துகைக்குறுப்பான போக்யதையை உடைய திருமார்பை உடையனான பெருமானுடைய திருக்கல்யாண குணங்கள் நிறைந்த தமிழ்ப் பாசுரங்களிலே ஊற்றமுடையவரான நம்மாழ்வாருடைய திருவடிகளை ஆச்ரயித்து உஜ்ஜீவித்தவரும் பலபல சாஸ்த்ரங்களை ஓதின மஹான்கள் நிலைபெறும்படி இவ்வுலகில் வந்தவதரித்தருமான எம்பெருமானாருடைய திருவடித் தாமரைகளை நாம் ஆச்ரயித்து வாழ்வதற்குறுப்பாக அவ்வெம்பெருமானாரது திருநாமங்களையே ஸங்கீர்த்தனம் பண்ணுவோம்.

802. கள்ளார்பொழில்தென்னரங்கன் கமலப்பதங்கள்நெஞ்சில்
கொள்ளா மனிசரைநீங்கி குறையல்பிரானடிக்கீழ்
விள்ளாதவன்பனிராமானுசன் மிக்கசீலமல்லால்
உள்ளாதென்னெஞ்சு ஒன்றறியேனெனக்குற்றபேரியல்வே. 2

தேன் நிறைந்த சோலைகளை உடைய தென் திருவரங்கத்திலே பள்ளி கொள்ளும்பெருமானுடைய தாமரை போன்ற திருவடிகளை தமது நெஞ்சிலே வையாத மனிதர்களை விட்டொழிந்து திருமங்கை மன்னனுடைய திருவடிகளிலே என்றும் விட்டு நீங்காத பக்தியை உடையரான எம்பெருமானாருடைய சிறந்த சீல குணத்தைத் தவிர வேறொன்றையும் எனது நெஞ்சானது நினைக்க மாட்டாது; இவ்வாறாக எனக்கு ஸித்தித்ததொரு சிறந்த ஸ்வபாவத்திற்கு ஒரு காரணத்தையும் அறிகின்றிலேன்.

803 பேரியல்நெஞ்சேஅடிபணிந்தேனுன்னை பேய்ப்பிறவிப்
பூரியரோடுள்ள சுற்றம்புலத்தி பொருவரும்சீர்
ஆரியன் செம்மை இராமானுசமுனிக்கன்பு செய்யும்
சீரியபேறுடையார் அடிக்கீழென்னைச்சேர்த்ததற்கே. 3

மிகவும் கம்பீரமான நெஞ்சே! உன்னை வணங்குகிறேன்: உன்னை வணங்குவது எதற்காக என்றால் ஆஸுரப் பிறப்பை உடையவர்களான நீசர்களோடு எனக்கிருந்த உறவைப் போக்கடித்து, ஒப்பற்ற குணங்களை உடையவரும் சிறந்த அனுஷ்டாநமுடையவரும் ஆச்ரிதரோடு ருஜுவாகப் பரிமாறுந் தன்மை வாய்ந்தவருமான எம்பெருமானார் திறத்தில் பக்தி பண்ணுவதையே பரம புருஷார்த்தமாக உடையவர்களான கூரத்தாழ்வான் போல்வாருடைய திருவடிகளின் கீழே பரமநீசனாயிருந்த என்னை கொண்டு சேர்த்த மஹோபகாரத்திற்காகவே உன்னை அடிபணிந்தேன்.

804. என்னைப்புவியில் ஒருபொருளாக்கி மருள்சுரந்த
முன்னைப் பழவினை வேரறுத்து ஊழிமுதல்வனையே
பன்னப் பணித்தவிராமானுசன் பரன்பாதமுமென்
சென்னித் தரிக்கவைத்தான் எனக்கேதும் சிதைவில்லையே. 4

காலம் முதலிய ஸகல பதார்த்தங்களுக்கும் காரண பூதனான எம்பெருமானையே எல்லாரும் விவேகித்து அநுஸந்திக்கும்படி ஸ்ரீபாஷ்ய முகத்தாலே அருளிச் செய்த ஸர்வோத்க்ருஷ்டரான எம்பெருமானார் இந்தப் பூமியிலே அபதார்த்தமாய்க் கிடந்த என்னை ஒரு பதார்த்தமாக்கி அஜ்ஞான மூலகங்களாய் மிகவும் அநாதிகளான எனது பாவங்களை வேரற நீக்கித் தமது திருவடிகளையும் எனது தலையிலே நான் உகந்து தரிக்கும்படியாக வைத்தருளினார். இவ்வளவு மஹாப்ரஸாதம் பெற்றேனான பின்பு அடியேனுக்கு எவ்விதமான ஹாநியும் இனி உண்டாக வழியில்லை.

805. எனக்குற்றசெல்வமிராமானுசனென்று இசையகில்லா
மனக்குற்றமாந்தர் பழிக்கில்புகழ் அவன்மன்னியசீர்
தனக்குற்றவன்பரவன் திருநாமங்கள் சாற்றும் என் பா
இனக்குற்றம்காணகில்லார் பத்தியேய்ந்தவியல்விதென்றே. 5

'நமக்கு ப்ராப்தமான ஸம்பத்து எம்பெருமானாரே' என்று அத்யவஸாயங் கொண்டிருக்க மாட்டாத துஷ்ட ஹ்ருதயர்களான மனிசர் இந்நூலைப் பழிப்பர்களாகில் அன்னவர்களுடைய பழிப்பே இதற்குப் புகழாய் விடும். அவ்வெம்பெருமானாருடைய நித்யஸித்தமான கல்யாணகுணங்களுக்குத் தகுதியான அன்பை உடையவர்களான மஹான்கள் இந்நூலானது பக்தியோடு கூடின ப்ரவ்ருத்தியை உடையதென்று திருவுள்ளம்பற்றி அவ்விராமாநுசனுடைய திருநாமங்களைச் சொல்லுகிற என்னுடைய இந்தப் பாசுர மாலைகளிலுள்ள குற்றங்களைக் காணமாட்டார்கள்.

806. இயலும்பொருளுமிசையத்தொடுத்து ஈன்கவிகளன்பால்
மயல்கொண்டுவாழ்த்தும் இராமானுசனை மதியின்மையால்
பயிலும்கவிகளில் பத்தியில்லாதவென்பாவிநெஞ்சால்
முயல்கின்றனன் அவன்தன் பெருங்கீர்த்திமொழிந்திடவே. 6

விலக்ஷரான கவிகள் ப்ரீதியினாலே சப்தமும் அர்த்தமும் நன்கு பொருந்தும் படியாக கவனம் பண்ணி வ்யாமோஹம் தலையெடுத்து துதிக்கும்படி நின்ற எம்பெருமானாரை வருணிக்கிற பாடல்களிலே பக்தியற்றதான என்னுடைய பாபிஷ்டமான நெஞ்சினாலே அவ்வெம்பெருமானாருடைய அளவற்ற கீர்த்திகளைப் பேசுவதாக புத்தி இல்லாமையினாலே ப்ரவர்த்திக்கிறேன்.

807. மொழியைக் கடக்கும்பெரும்புகழான் வஞ்சமுக்குறும்பாம்
குழியைக்கடக்கும் நம்கூரத்தாழ்வான்சரண்கூடியபின்
பழியைக்கடத்துமிராமானுசன் புகழ்பாடி அல்லா
வழியைக் கடத்தல் எனக்கினியாதும்வருத்தமன்றே. 7

வாய் கொண்டு வருணிக்க முடியாதபடி வாசாமகோசரமான பெரிய புகழை உடையவரும், கல்விச் செருக்கு, செல்வச் செருக்கு, குலச் செருக்கு எனும் மூவகை குறும்புகளாகிற படுகுழியைக் கடந்திருப்பவருமான கூரத்தாழ்வானுடைய திருவடிகளை நான் ஆச்ரயித்த பின்பு ஸர்வ பாப நிவர்த்தகரான எம்பெருமானாருடைய நற்குணங்களைப் பாடி ஸ்வரூபத்திற்குச் சேராத தீய வழிகளைத் தப்பிப் பிழைக்கையானது அடியேனுக்கு

இனிமேலுள்ள காலமெல்லாம் ஈஷத்தும் ப்ரயாஸ ஸாத்யமன்று; எளிதேயாம்.

808. வருத்தும் புறவிருள்மாற்ற எம்பொய்கைப்பிரான் மறையின்
குருத்தின் பொருளையும் செந்தமிழ்தன்னையும்கூட்டி ஒன்றத்
திரித்தன்றெரித்ததிருவிளக்கைத் தன்திருவுள்ளத்தே
இருத்தும்பரமன இராமானுசனெம்மிறையவனே. 8

வருத்தத்தை உண்டு பண்ணக்கூடிய பாஹ்ய விஷயங்களைப் பற்றின அஜ்ஞானமாகிற இருளைப் போக்குவதற்காக நமது குலத் தலைவரான பொய்கையாழ்வார் முற்காலத்தில் வேதாந்தங்களில் பதிந்து கிடக்கும் பொருள்களையும் செந்தமிழ்ச் சொற்களையும் கூட்டி இரண்டையும் ஒன்று சேரத் திரியாக்கி ஜ்வலிக்கச் செய்த முதல் திருவந்தாதியாகிய திருவிளக்கைத் தமது திரு உள்ளத்திலே வைத்துக் கொண்டிரா நின்ற மஹாவைபவசாலியான எம்பெருமானார் நமக்கு ஸ்வாமி.

809. இறைவனைக்காணும் இதயத்திருள்கெட ஞானமென்னும்
நிறைவிளக்கேற்றிய பூதத்திருவடிதாள்கள் நெஞ்சத்
துறையவைத்தாளுமிராமானுசன் புகழோதும்நல்லோர்
மறையினைக் காத்து இந்தமண்ணகத்தே மன்னவைப்பவரே.9

ஸர்வஸ்வாமியான எம்பெருமானை ஸாக்ஷாத்கரிப்பதற்கு உபகரணமான ஹ்ருதயத்திலுள்ள அஜ்ஞானமாகிற அந்தகாரமானது நசிக்கும்படியாக ஞானமாகிற பூர்ண தீபத்தை ப்ரகாசிப்பித்தருளி இரண்டாந்திருவந்தாதியை அருளிச் செய்த பூதத்தாழ்வாருடைய திருவடிகளைத் தமது திருவுள்ளத்திலே சாச்வதமாக ஸ்தாபித்து அவற்றையே அனுபவிக்கின்ற எம்பெருமானாருடைய திவ்ய குணங்களை இடைவிடாது அனுஸந்திக்கிற விலக்ஷண புருஷர்கள் தாம் இப்பூமண்டலத்திலே வேதங்களை ரக்ஷித்து என்றைக்கும் அழிவில்லாதபடி ப்ரதிஷ்டாபனம் பண்ண வல்லவர்கள்.

810. மன்னியபேரிருள் மாண்டபின் கோவலுள்மாமலராள்
தன்னொடு மாயனைக் கண்டமை காட்டும் தமிழ்த்தலைவன்
பொன்னடிபோற்றும் இராமானுசற்கன்பூண்டவர்தாள்
சென்னியில்சூடும் திருவுடையாரென்றும்சீரியரே. 10

ஒருவராலும் பேர்க்க முடியாதபடி நிலைத்து நின்ற அஜ்ஞானமாகிற பெருத்த இருளானது முற்பட்ட ஆழ்வார்களிருவரும் ஏற்றிய திருவிளக்காலே நன்றாக நீங்கின பின்பு திருக்கோவலூரில் ஆயனாரைப் பிராட்டியோடு கூடத் தாம் ஸேவித்தபடியை 'திருக்கண்டேன்' இத்யாதி ப்ரபந்த முகத்தாலே வெளியிட்டருளின தமிழுக்குத் தலைவரான பேயாழ்வாருடைய அழகிய திருவடிகளைப் புகழுமவரான எம்பெருமானார் திறத்தில் பக்தியை உடையவர்களது திருவடிகளை சிரோபூஷணமாகக் கொள்ளுஞ் செல்வமுடையயோர் தாம் என்றைக்கும் ஸ்ரீமான்கள்.

811. சீரியநான்மறைச் செம்பொருள் செந்தமிழாலளித்த
பாரியலும்புகழ்ப் பாண்பெருமாள் சரணாம் பதுமத்

தாரியல்சென்னி யிராமானுசன்தன்னைச் சார்ந்தவர்தம்
காரியவண்மை என்னால் சொல்லொணாதிக் கடலிடத்தே. 11

சிறந்த நால்வேதங்களிலுள்ள செவ்விய பொருள்களை அழகிய தமிழ்ப் பாசுரங்களினால் அருளிச்செய்தவரும், பூமியெங்கும் பொருந்தின புகழை உடையவருமான திருப்பாணாழ்வாருடைய திருவடிகளாகிற தாமரைப் பூவாலே அலங்கரிக்கப்பட்ட திருமுடியை உடையவரான எம்பெருமானாரை ஆச்ரயமாகப் பற்றினவர்களுடைய அநுஷ்டாந வைலக்ஷண்யமானது கடல் சூழ்ந்த பூமியில் (இப்படிப்பட்ட வைபவமுடையதென்று) என்னால் சொல்லித் தலைக்கட்ட முடியாதது.

812. இடங்கொண்டகீர்த்திமழிசைக்கிறைவன் இணையடிப்போது
அடங்குமிதயத் திராமானுசன் அம்பொற்பாதமென்றும்
கடங்கொண்டிறைஞ்சும் திருமுனிவர்க்கன்றிக் காதல்செய்யாத்
திடங்கொண்டஞானியர்க்கே அடியேனன்புசெய்வதுவே. 12

பூமியெங்கும் வியாபித்த கீர்த்தியை உடையரான திருமழிசைப் பிரானுடைய உபய பாதாரவிந்தங்கள் குடிகொண்டிருக்கப் பெற்ற திருவுள்ளத்தை உடையரான எம்பெருமானாருடைய மிகவும் அழகிய திருவடிகளை எக்காலத்திலும், இதுவே நமக்கு ஸ்வரூபம் என்கிற புத்தியோடே ஆச்ரயிக்கையாகிற செல்வத்தை உடையரான மஹான்களுக்குத் தவிர மற்றவர்களுக்கு அன்பு பூண்டிராத மிக்க உறுதியை உடையரான ஞானிகளுக்குத்தான் அடியேன் பக்தனாயிருப்பேன்.

813. செய்யும் பசுந்துளபத் தொழில்மாலையும் செந்தமிழில்
பெய்யும் மறைத்தமிழ்மாலையும் பேராதசீரரங்கத்
தையன் கழற்கணியும் பரன்தாளன்றி ஆதரியா
மெய்யன் இராமானுசன் சரணே கதி வேறெனக்கே. 13

(தொண்டரடிப்பொடியாழ்வாராகிற தம்மாலே) செய்யப்பட்டதாய், பசுமை தங்கிய திருத்துழாய் மயமாய் வேலைப்பாடுகளை உடைத்தான பூமாலைகளையும் அழகிய தமிழ்ப் பாஷையிலே உண்டாக்கப்பட்டதாய் வேதஸத்ருசமான திருமாலை, திருப்பள்ளியெழுச்சி என்கிற திவ்யப்ரபந்தங்களாகிற சொல் மாலைகளையும், நித்யஸித்தமான கல்யாண குணங்களை உடையரான ஸ்ரீரங்கநாதனுடைய திருவடிகளிலே சாத்தியவரான தொண்டரடிப்பொடியாழ்வார் என்கிற பெரியவருடைய திருவடிகளைத் தவிர மற்றொன்றையும் விரும்பாத ஸத்யசீலரான எம்பெருமானாருடைய திருவடிகளே அடியேனுக்கு விலக்ஷணமான ப்ராப்ய வஸ்துவாம்.

814. கதிக்குப்பதறி வெங்கானமும் கல்லும் கடலுமெல்லாம்
கொதிக்கத் தவம் செய்யும் கொள்கையற்றேன் கொல்லிகாவலன்சொல்
பதிக்கும் கலைக்கவிபாடும் பெரியவர்
பாதங்களே துதிக்கும்பரமன் இராமானுசனென்னைச்சோர்விலனே. 14

குலசேகரப்பெருமாளாலே அருளிச்செய்யப்பட்டதாய், சாஸ்த்ரச் சொற்கள் அமையப் பெற்றதான பெருமாள் திருமொழிப் பாசுரங்களைப் பாடுகின்ற பெரியோர்

திருவடிகளையே ஸ்தோத்ரம் செய்பவராய், உத்க்ருஷ்டரான எம்பெருமானார் என்னை விட்டு நீங்குகிறாரில்லை. (ஆதலால்) ப்ராப்யலாபத்துக்காக விரைந்து அத்யுஷ்ணமான காடுகளிலும் மலைகளிலும் கடல்களிலும் (நின்றுகொண்டு) எல்லா அவயவங்களும் கொதிக்கும்படியாகத் தபஸ்ஸு பண்ணும் ஸ்வபாவத்தை விட்டு ஒழித்தேன்.

815. சோராத காதல் பெருஞ்சுழிப்பால் தொல்லைமாலை யொன்றும்
பாராது அவனைப் பல்லாண்டென்று காப்பிடும் பான்மையன்தாள்
பேராதவுள்ளத்திராமானுசன்தன் பிறங்கியசீர் சாராமனிசரைச்
சேரேன் எனக்கென்னதாழ்வினியே. 15

ஒருநாளும் குறைவு படாத ப்ரேமத்தில் பெருஞ்சுழிப் படுகையாலே நித்யனான எம்பெருமான்படியைச் சிறிதும் நிரூபியாமல் அவ்வெம்பெருமானை நோக்கி 'பல்லாண்டு பல்லாண்டு என்று மங்களாசாஸநம் செய்வதை ஸ்வபாவாமாக உடையரான பெரியாழ்வாருடைய திருவடிகள் விட்டலகாத திருவுள்ளத்தை உடையரான எம்பெருமானாருடைய மிக்க திருக்குணங்களை தங்களுக்கு அனுபாவ்யமாகக் கொள்ளாத மநுஷ்யர்களைப் பற்ற மாட்டேன். இப்படிப்பட்ட உறுதி பிறந்த பின்பு அடியேனுக்கு என்ன குறை?

816. தாழ்வொன்றில்லா மறை தாழ்ந்து தலமுழுதும் கலியே ஆள்கின்ற
நாள்வந்து அளித்தவன் காண்மின் அரங்கர்மௌலி
சூழ்கின்ற மாலையைச் சூடிக் கொடுத்தவள் தொல்லருளால்
வாழ்கின்ற வள்ளல் இராமானுசனென்னும்மாமுனியே. 16

ஸ்ரீரங்கநாதனுடைய திருமுடியிலே சாத்தக் கடவதான பூமாலையை தனது திருக்குழலிலே அணிந்தவளான ஆண்டாளுடைய அவ்யாஜமான அருளாலே வாழ்பவரும் உதாரருமான ஸ்ரீராமாநுசமுனியானவர் (எப்படிப்பட்டவரென்றால்) ஒரு குறையுமில்லாதிருந்த வேதமானது குத்ருஷ்டிகளாலே இழிவு பெற பூமியெங்கும் கலியே ஸாம்ராஜ்யம் பண்ணுகிற காலத்திலே இங்கே வந்தவதரித்து அந்த வேதத்தை உத்தரிப்பித்து உலகத்தை ரக்ஷித்தருளினவர்.

817. முனியார் துயரங்கள் முந்திலும் இன்பங்கள் மொய்த்திடினும்
கனியார் மனம் கண்ணமங்கை நின்றானை கலைபரவும்
தனியானையைத் தண்டமிழ் செய்த நீலன்தனக்கு உலகில்
இனியானை எங்களிராமானுசனை வந்தெய்தினரே. 17

ஸகல சாஸ்த்ரங்களாலும் துதிக்கப் பெற்ற அத்விதீயமான மத்த கஜம் போன்ற திருக்கண்ணமங்கையிலே நிற்கும் பத்தராவிப் பெருமானைக் குறித்து இவ்வுலகில் ஸம்ஸாரதாப ஹரமான திவ்ய ப்ரபந்தத்தைச் செய்தருளின திருமங்கையாழ்வார் பக்கல் ப்ரேமமுடையவராய் எங்களுக்குத் தலைவரான எம்பெருமானாரை வந்து பணிந்த மஹான்கள் தாபத்ரயம் செறிந்தாலும் வருத்தப்பட மாட்டார்கள்; ஸுகங்கள் செறிந்தாலும் களிப்படைய மாட்டார்கள்.

818. எய்தற்கரிய மறைகளை ஆயிரமின்தமிழால்
செய்தற்குலகில் வரும் சடகோபனை சிந்தையுள்ளே

பெய்தற்கிசையும் பெரியவர்சீரை யுயிர்களெல்லாம்
உய்தற்குதவும் இராமானுசனெம்முறுதுணையே. 18

அதிகரிக்க முடியாதவற்றான வேதங்களை இனிய தமிழாலாகிய ஆயிரம் பாசுரங்களினால் அருளிச் செய்வதற்காக இவ்வுலகில் வந்துதித்த நம்மாழ்வாரைத் தமது ஹ்ருதயத்தினுள்ளே த்யானிப்பதற்கு இணங்கின ஸ்ரீமதுரகவிகளுடைய ஜ்ஞாநாதி குணங்களை ஸகலாத்மாக்களும் உஜ்ஜீவிக்குமாறு உபகரித்தருளா நிற்கிற எம்பெருமானார் எமக்கு உற்ற துணை.

819. உறுபெருஞ் செல்வமும் தந்தையும் தாயும் உயர்குருவும்
வெறிதரு பூமகள்நாதனும் மாறன்விளங்கியசீர்
நெறிதரும்செந்தமிழாரணமேயென்றிந்நீணிலத்தோர்
அறிதரநின்ற இராமானுசனெனக்காரமுதே. 19

சிறந்த பெரிய ஸம்பத்தும் மாதா பிதாக்களும் ஸதாசார்யனும் மணம் மிக்க பூவைப் பிறப்பிடமாக வுடைய பெரியபிராட்டியாருக்குக் கொழுநனான ஸர்வேச்வரனும் (ஆகிய எல்லாம்) நம்மாழ்வார் (தமக்கு) ப்ரகாசித்த பகவத் குணங்களின் அடைவே அருளிச் செய்த செந்தமிழ் வேதமேயென்று இப்பெரியவுலகிலுள்ளார் யாவரும் அறியும்படி நின்ற எம்பெருமானார் அடியேனுக்கு பரம போக்யர்.

820. ஆரப்பொழில் தென்குருகைப்பிரான் அமுதத்திருவாய்
ஈரத்தமிழினிசை யுணர்ந்தோர்கட்கு இனியவர்தம்
சீரைப்பயின்றுய்யும்சீலங்கொள்நாதமுனியைநெஞ்சால்
வாரிப்பருகும் இராமானுசனென்தன்மாநிதியே. 20

சந்தனச் சோலைகளை உடைய அழகிய திருக்குருகூரிலே (அவதரித்த) மஹோபகாரகரான ஆழ்வாருடைய பரமபோக்யமான திருப்பவளத்தில் பிறந்த ஈரச் சொல்லாகிய திருவாய்மொழியின் இசையை அறிந்தவர்களுக்கு இஷ்டராயிருப்பவர் களுடைய குணங்களை அப்யஸித்து ஸத்தை பெறும் சீலத்தை உடையரான நாதமுனிகளைத் தம் திருவுள்ளத்தாலே அபிநிவேசத்தோடு அனுபவிக்கின்ற எம்பெருமானார் எனக்கு அக்ஷயமான நிதி.

821. நிதியைப்பொழியும் முகிலென்று நீசர்தம் வாசல்பற்றித்
துதிகற்றுலகில் துவள்கின்றிலேனினி தூய்நெறிசேர்
எதிகட்கிறைவன்யமுனைத்துறைவன் இணையடியாம்
கதிபெற்றுடைய இராமானுசனென்னைக் காத்தனனே. 21

பரிசுத்தமான அனுட்டானமுடைய யதிகளுக்குத் தலைவரான ஆளவந்தாருடைய உபய பாதங்களாகிற ப்ராப்யத்தைப் பெற்று (அதனாலே) உலகத்தார்க்கெல்லாம் ஸ்வாமியாயிருக்கிற எம்பெருமானார் என்னை ரக்ஷித்தருளினார். (ஆனபின்பு) இனிமேல் 'நிதிகளை வர்ஷிக்கிற மேகமே' என்று ஸ்தோத்ரங்களைப் பண்ணிக் கொண்டு இவ்வுலகத்தில் நீசராயிருப்பவருடைய வாசலைப் பற்றி நின்று வருந்த மாட்டேன்.

822. கார்த்திகையானும் கரிமுகத்தானும் கனலும்முக்கண்
மூர்த்தியும் மோடியும் வெப்பும் முதுகிட்டு மூவுலகும்
பூத்தவனே யென்று போற்றிட வாணன் பிழை பொறுத்த
தீர்த்தனையேத்தும் இராமானுசனென்தன்சேமவைப்பே. 22

ஸுப்ரஹ்மண்யனும், கணபதியும், (அவர்களுக்குத் துணையாய் வந்த) அக்னியும், சிவனும், துர்க்கையும், ஜ்வரதேவதையும் முதுகுகாட்டி ஒடிப்போன பின்பு (அநந்யகதியான பாணாஸுரனானவன்) "மூவுலகங்களையும் திருநாபிக் கமலத்திலே உண்டாக்கின பெருமானே (என்னைக் காத்தருள்)" என்று போற்ற, (அந்த) பாணாசுரனுடைய அபராதத்தை க்ஷமித்தருளின பாவநனான ஸர்வேச்வரனை நித்யம் துதிக்கிற எம்பெருமானார் எனக்கு ஆபத்தநம்.

823. வைப்பாய வான்பொருளென்று நல்லன்பர் மனத்தகத்தே
எப்போதும் வைக்குமிராமானுசனை இருநிலத்தில்
ஒப்பாரிலாத வுறுவினையேன் வஞ்ச நெஞ்சில் வைத்து
முப்போதும் வாழ்த்துவன் என்னாமிது அவன்மொய்புகழ்க்கே. 23

விலக்ஷண பக்தி உடையவர்கள் "எம்பெருமானார்தாம் நமக்கு ஆபத் ரக்ஷகமான அக்ஷய தநம்" என்று கொண்டு தங்கள் ஹ்ருதயத்திலே எப்போதும் த்யாநிப்பதற்கு விஷயமான எம்பெருமானாரை இந்தப் பெரிய உலகத்திலே ஒப்பற்ற பாவியான அடியேன் என்னுடைய க்ருத்ரிமமான நெஞ்சிலே வைத்து, ஸர்வகாலமும் ஏத்தா நின்றேன். மிகப் பெரிய அவரை நீசனாகிய நான் வாழ்த்துகையாகிற இது அவ்வெம்பெருமானாருடைய சிறந்த கீர்த்திக்கு என்னாகுமோ? (அவத்யமாமே.)

824. மொய்த்தவெந்தீவினையால்பல்லுடல்தொறும்மூத்து அதனால்
எய்த்தொழிந்தேன்முனநாள்களெல்லாம் இன்றுகண்டுயர்ந்தேன்
பொய்த்தவம்போற்றும்புலைச்சமயங்கள்நிலத்தவியக்
கைத்தமெய்ஞ்ஞானத்து இராமானுசனென்னும்கார்தன்னையே. 24

கீழ்க்கழிந்த அநாதியான காலமெல்லாம் பல பல சரீரங்கள்தோறும் ஆத்மாவை மொய்த்துக் கொண்டிருக்கிற அதிக்ரூரமான கர்மத்தாலே கிழத்தனம் வருமளவும் வாஸம் செய்து அத்தாலே மிக்க பரிதாபம் அடைந்தேன். கபடமான அநுஷ்டானங்களை நடத்திப்போருகிற நீச மதஸ்தர்கள் இந்நிலவுலகத்திலே வேரற்று ஒழியும்படி நிரஸித்தருளின உண்மை ஞானம் உடையரான எம்பெருமானாகிற காளமேகத்தை இன்று அடியேன் ஸேவிக்கப் பெற்று சிறந்தவனானேன்.

825 காரேய்கருணையிராமானுச இக்கடலிடத்தில்
ஆரேயறிபவர்நின்னருளின்தன்மை அல்லலுக்கு
நேரேயுறைவிடம்நான் வந்துநீயென்னையுற்றபின் உன்
சீரேயுயிர்க்குயிராய் அடியேற்கின்றுதித்திக்குமே. 25

மேகத்தையொத்த கருணையை உடைய எம்பெருமானாரே! அடியேன் துக்கங்களுக்கு நேரே வாஸஸ்தானமாயிருப்பவன்; இப்படிப்பட்ட அடியேனை தேவரீர்

தாமாகவே ஸ்வீகரித்தருளின பின்பு, தேவரீருடைய கல்யாண குணங்களே ஆத்மாவுக்கு தாரகமாய், அடியேனுக்கு இன்று ரஸியா நின்றது; தேவரீருடைய க்ருபையின் ஸ்வபாவத்தை கடல்சூழ்ந்த இப்பூமண்டலத்தில் அறியக்கூடியவர்கள் யாருமிலை.

826 திக்குற்றகீர்த்தியிராமானுசனை என்செய்வினையாம்
மெய்க்குற்றம்நீக்கிவிளங்கியமேகத்தை மேவும்நல்லோர்
எக்குற்றவாளரெதுபிறப்பு ஏதியல்வாகநின்றோர்
அக்குற்றமப்பிறப்பு அவ்வியல்வேநம்மையாட்கொள்ளுமே. 26

என்னாலே செய்யப்பட்ட வினையாகிற நிலைநின்ற தோஷங்களைப் போக்கி (இவனுடைய தோஷங்களைப் போக்கப் பெற்றோம் என்னும் மகிழ்ச்சியாலே) உஜ்ஜீவகரான பரம உதாரராய் திசைகள் தோறும் விரிந்த புகழுடையவரான எம்பெருமானாரை பொருந்தியிருக்கின்ற விலக்ஷணர்கள் யாதொரு குற்றத்தை உடையவராகவும், யாதொரு ஜந்மத்தை உடையவராகவும், யாதொரு சரிதையை உடையவராகவும் முன்பு நின்றார்களோ அந்தக் குற்றமும் அந்த ஜந்மமும் அந்த சரிதையுமே நம்மை அடிமைப் படுத்திக் கொள்ளவற்று.

827 கொள்ளக்குறைவற்றிலங்கி கொழுந்துவிட்டோங்கியவுன்
வள்ளல்தனத்தினால் வல்வினையேன்மனம்நீபுகுந்தாய்
வெள்ளைச்சுடர்விடுமுன்பெருமேன்மைக்கிழுக்கிதென்று
தள்ளுற்றிரங்கும் இராமானுசவென்தனிநெஞ்சமே. 27

எம்பெருமானாரே! கொள்ளக் கொள்ளக் குறையாமல் தானே விளங்கி, மேன்மேலும் இளகிப் பதித்து வளர்ந்திருப்பதான தேவரீருடைய ஔதார்ய குணத்தாலே மஹாபாபியான எனது நெஞ்சிலே (தேவரீருடைய பெருமை பாராதே) வந்து புகுந்தருளிற்று. (வஸிஷ்டன் சண்டாள க்ருஹத்தில் புகுந்தாற்போலே) புகுந்தவிது, பரிசுத்தமாய் விளங்காநின்றுள்ள தேவரீருடைய ப்ரபாவத்திற்கு அவத்யாவஹம் என்று எனது துணையற்ற நெஞ்சானது தளர்ந்து ஈடுபடா நின்றது.

828 நெஞ்சில்கறைகொண்டகஞ்சனைக்காய்ந்தநிமலன் நங்கள்
பஞ்சித்திருவடிப்பின்னைதன்காதலன் பாதம்நண்ணா
வஞ்சர்க்கரியவிராமானுசன்புகழன்றியென்வாய்
கொஞ்சிப்பரவகில்லாது என்னவாழ்வின்றுகூடியதே. 28

நெஞ்சிலே கல்மஷத்தை உடையனாயிருந்த கம்ஸனை முடித்த ஹேயப்ரத்யநீகனாய், ஆச்ரிதர்பக்கல் அபிமானமுடையனாய், பஞ்சுபோல் மெல்லிய திருவடிகளை உடையளான நப்பின்னைப் பிராட்டிக்கு வல்லபனான கண்ணபிரானுடைய திருவடிகளை ஆச்ரயியாத ஆத்மாபஹாரக் கள்வர்களுக்கு துர்லபரான எம்பெருமானாருடைய குணங்களையொழி (மற்றொன்றை) என் வாக்கானது குலாவி ஏத்தமாட்டாது. இன்று (எனக்கு) நேர்ந்த வாழ்ச்சியானது ஆச்சர்யமானது.

829 கூட்டும்விதியின்றுகூடுங்கொலோ தென்குருகைப்பிரான்
பாட்டென்னும்வேதப்பசுந்தமிழ்தன்னை தன்பத்தியென்னும்

822. கார்த்திகையானும் கரிமுகத்தானும் கனலும்முக்கண்
மூர்த்தியும் மோடியும் வெப்பும் முதுகிட்டு மூவுலகும்
பூத்தவனே யென்று போற்றிட வாணன் பிழை பொறுத்த
தீர்த்தனையேத்தும் இராமானுசனென்தன்சேமவைப்பே. 22

ஸுப்ரஹ்மண்யனும், கணபதியும், (அவர்களுக்குத் துணையாய் வந்த) அக்னியும், சிவனும், துர்க்கையும், ஜ்வரதேவதையும் முதுகுகாட்டி ஓடிப்போன பின்பு (அநந்யகதியான பாணாஸுரனானவன்) ''மூவுலகங்களையும் திருநாபிக் கமலத்திலே உண்டாக்கின பெருமானே (என்னைக் காத்தருள்)'' என்று போற்ற, (அந்த) பாணாசுரனுடைய அபராதத்தை க்ஷமித்தருளின பாவநனான ஸர்வேச்வரனை நித்யம் துதிக்கிற எம்பெருமானார் எனக்கு ஆபத்தநம்.

823. வைப்பாய வான்பொருளென்று நல்லன்பர் மனத்தகத்தே
எப்போதும் வைக்குமிராமானுசனை இருநிலத்தில்
ஒப்பாரிலாத வுறுவினையேன் வஞ்ச நெஞ்சில் வைத்து
முப்போதும் வாழ்த்துவன் என்னாமிது அவன்மொய்புகழ்க்கே. 23

விலக்ஷண பக்தி உடையவர்கள் ''எம்பெருமானார்தாம் நமக்கு ஆபத் ரக்ஷகமான அக்ஷய தநம்'' என்று கொண்டு தங்கள் ஹ்ருதயத்திலே எப்போதும் த்யாநிப்பதற்கு விஷயமான எம்பெருமானாரை இந்தப் பெரிய உலகத்திலே ஒப்பற்ற பாவியான அடியேன் என்னுடைய க்ருத்ரிமமான நெஞ்சிலே வைத்து, ஸர்வகாலமும் ஏத்தா நின்றேன். மிகப் பெரிய அவரை நீசனாகிய நான் வாழ்த்துகையாகிற இது அவ்வெம்பெருமானாருடைய சிறந்த கீர்த்திக்கு என்னாகுமோ? (அவத்யமாமே.)

824. மொய்த்தவெந்தீவினையால்பல்லுடல்தொறும்மூத்து அதனால்
எய்த்தொழிந்தேன்முனநாள்களெல்லாம் இன்றுகண்டுயர்ந்தேன்
பொய்த்தவம்போற்றும்புலைச்சமயங்கள்நிலத்தவியக்
கைத்தமெய்ஞ்ஞானத்து இராமானுசனென்னும்கார்தன்னையே. 24

கீழ்க்கழிந்த அநாதியான காலமெல்லாம் பல பல சரீரங்கள்தோறும் ஆத்மாவை மொய்த்துக் கொண்டிருக்கிற அதிக்ரூரமான கர்மத்தாலே கிழத்தனம் வருமளவும் வாஸம் செய்து அத்தாலே மிக்க பரிதாபம் அடைந்தேன். கபடமான அநுஷ்டானங்களை நடத்திப்போருகிற நீச மதஸ்தர்கள் இந்நிலவுலகத்திலே வேரற்று ஒழியும்படி நிரஸித்தருளின உண்மை ஞானம் உடையரான எம்பெருமானாகிற காளமேகத்தை இன்று அடியேன் ஸேவிக்கப் பெற்று சிறந்தவனானேன்.

825 காரேய்கருணையிராமானுச இக்கடலிடத்தில்
ஆரேயறிபவர்நின்னருளின்தன்மை அல்லலுக்கு
நேரேயுறைவிடம்நான் வந்துநீயென்னையுற்றபின் உன்
சீரேயுயிர்க்குயிராய் அடியேற்கின்றுதித்திக்குமே. 25

மேகத்தையொத்த கருணையை உடைய எம்பெருமானாரே! அடியேன் துக்கங்களுக்கு நேரே வாஸஸ்தானமாயிருப்பவன்; இப்படிப்பட்ட அடியேனை தேவரீர்

தாமாகவே ஸ்வீகரித்தருளின பின்பு, தேவரீருடைய கல்யாண குணங்களே ஆத்மாவுக்கு தாரகமாய், அடியேனுக்கு இன்று ரஸியா நின்றது; தேவரீருடைய க்ருபையின் ஸ்வபாவத்தை கடல்சூழ்ந்த இப்பூமண்டலத்தில் அறியக்கூடியவர்கள் யாருமிலை.

826 திக்குற்றகீர்த்தியிராமானுசனை என்செய்வினையாம்
மெய்க்குற்றம்நீக்கிவிளங்கியமேகத்தை மேவும்நல்லோர்
எக்குற்றவாளரெதுபிறப்பு ஏதியல்வாகநின்றோர்
அக்குற்றமப்பிறப்பு அவ்வியல்வேநம்மையாட்கொள்ளுமே. 26

என்னாலே செய்யப்பட்ட வினையாகிற நிலைநின்ற தோஷங்களைப் போக்கி (இவனுடைய தோஷங்களைப் போக்கப் பெற்றோம் என்னும் மகிழ்ச்சியாலே) உஜ்ஜீவகரான பரம உதாரராய் திசைகள் தோறும் விரிந்த புகழுடையவரான எம்பெருமானாரை பொருந்தியிருக்கின்ற விலக்ஷணர்கள் யாதொரு குற்றத்தை உடையவராகவும், யாதொரு ஜந்மத்தை உடையவராகவும், யாதொரு சரிதையை உடையவராகவும் முன்பு நின்றார்களோ அந்தக் குற்றமும் அந்த ஜந்மமும் அந்த சரிதையுமே நம்மை அடிமைப் படுத்திக் கொள்ளவற்று.

827 கொள்ளக்குறைவற்றிலங்கி கொழுந்துவிட்டோங்கியவுன்
வள்ளல்தனத்தினால் வல்வினையேன்மனம்நீபுகுந்தாய்
வெள்ளைச்சுடர்விடுமுன்பெருமேன்மைக்கிழுக்கிதென்று
தள்ளுற்றிரங்கும் இராமானுசவென்தனிநெஞ்சமே. 27

எம்பெருமானாரே! கொள்ளக் கொள்ளக் குறையாமல் தானே விளங்கி, மேன்மேலும் இளகிப் பதித்து வளர்ந்திருப்பதான தேவரீருடைய ஔதார்ய குணத்தாலே மஹாபாபியான எனது நெஞ்சிலே (தேவரீருடைய பெருமை பாராதே) வந்து புகுந்தருளிற்று. (வஸிஷ்டன் சண்டாள க்ருஹத்தில் புகுந்தாற்போலே) புகுந்தவிது, பரிசுத்தமாய் விளங்காநின்றுள்ள தேவரீருடைய ப்ரபாவத்திற்கு அவத்யாவஹம் என்று எனது துணையற்ற நெஞ்சானது தளர்ந்து ஈடுபடா நின்றது.

828 நெஞ்சில்கறைகொண்டகஞ்சனைக்காய்ந்தநிமலன் நங்கள்
பஞ்சித்திருவடிப்பின்னைதன்காதலன் பாதம்நண்ணா
வஞ்சர்க்கரியவிராமானுசன்புகழன்றியென்வாய்
கொஞ்சிப்பரவகில்லாது என்னவாழ்வின்றுகூடியதே. 28

நெஞ்சிலே கல்மஷத்தை உடையனாயிருந்த கம்ஸனை முடித்த ஹேயப்ரத்யநீகனாய், ஆச்ரிதர்பக்கல் அபிமானமுடையனாய், பஞ்சுபோல் மெல்லிய திருவடிகளை உடையளான நப்பின்னைப் பிராட்டிக்கு வல்லபனான கண்ணபிரானுடைய திருவடிகளை ஆச்ரயியாத ஆத்மாபஹாரக் கள்வர்களுக்கு துர்லபரான எம்பெருமானாருடைய குணங்களையொழி (மற்றொன்றை) என் வாக்கானது குலாவி ஏத்தமாட்டாது. இன்று (எனக்கு) நேர்ந்த வாழ்ச்சியானது ஆச்சர்யமானது.

829 கூட்டும்விதியின்றுகூடுங்கொலோ தென்குருகைப்பிரான்
பாட்டென்னும்வேதப்பசுந்தமிழ்தன்னை தன்பத்தியென்னும்

வீட்டின்கண்வைத்தவிராமானுசன்புகழ்மெய்யுணர்ந்தோர்
ஈட்டங்கள்தன்னை என்நாட்டங்கள்கண்டின்பமெய்திடவே. 29

நம்மாழ்வாருடைய பாசுரங்கள் என்று ப்ரஸித்தமாய் வேதரூபமாய் செந்தமிழாயிருக்கிற திருவாய்மொழியை தம்முடைய பக்தியாகிற மாளிகையிலே ஸ்தாபித்தருளிய எம்பெருமானாருடைய கல்யாணகுணங்களை உள்ளபடி அறிந்திருக்குமவர்களுடைய கோஷ்டிகளை என் கண்களானவை ஸேவித்து ஸுகிக்கும்படியாக அமைக்க வல்ல (அவருடைய) க்ருபையானது என்றைக்கு வாய்க்குமோ?

830 இன்பந்தருபெருவீடுவந்தெய்திலென் எண்ணிறந்த
துன்பந்தருநிரயம்பலசூழிலென் தொல்லுலகில்
மன்பல்லுயிர்கட்கிறையவன்மாயனெனமொழிந்த
அன்பனனகன் இராமானுசனென்னையாண்டனனே. 30

அநாதியான இவ்வுலகத்தில் நித்யரான எல்லா ஆத்மாக்களுக்கும் சேஷியாவான் விஷ்ணுவே என்று (ஸ்ரீபாஷ்யமுகத்தாலே) அருளிச்செய்த பரமகாருணிகராய் நிர்த்தோஷரான எம்பெருமானார் என்னை அடிமை கொண்டருளினார். (ஆனபின்பு) ஆநந்தாவஹமான மோக்ஷம் வந்து ஸித்தித்தால் என்ன? அளவற்ற துக்கங்களைத் தருகிற பல நரகங்கள் வந்து சூழ்ந்து கொண்டால்தான் என்ன?

831 ஆண்டுகள்நாள்திங்களாய் நிகழ்காலமெல்லாம்மனமே
ஈண்டுபல்யோனிகள்தோறுழல்வோம் இன்றோரெண்ணின்றியே
காண்தகுதோளண்ணல் தென்னத்தியூரர்கழலிணைக்கீழ்ப்
பூண்டவன்பாளன் இராமானுசனைப்பொருந்தினமே. 31

நெஞ்சே! நாள்களாகவும், மாதங்களாகவும், வருஷங்களாகவும் (இப்படி) நடந்து செல்லுகிற ஸர்வகாலங்களிலும் திரண்டு பலவகைப்பட்ட யோனிகள்தோறும் தட்டித் திரிந்த நாம் இன்று ஒரு நினைவும் இல்லாதிருக்கச் செய்தே (அகஸ்மாத்தாக) கண்ணாரக் காணத்தக்க தோள்களை உடைய ஸ்வாமியான பேரருளாளனுடைய திருவடிகளில் அன்பு பூண்ட எம்பெருமானாரைச் சேரப்பெற்றோம். (என்ன பாக்யம்!)

832 பொருந்தியதேசும்பொறையும்திறலும்புகழும் நல்ல
திருந்தியஞானமும் செல்வமும்சேரும் செறுகலியால்
வருந்தியஞாலத்தைவண்மையினால் வந்தெடுத்தளித்த
அருந்தவன் எங்களிராமானுசனையடைபவர்க்கே. 32

(தருமநெறியைத்) திரஸ்கரிக்கின்ற கலியினாலே துக்கப்பட்ட பூமியைத் தமது நிர்ஹேதுக க்ருபையாலே வந்து உத்தரித்து ரக்ஷித்தவரும், சரணாகதியென்கிற அரிய தபஸ்ஸை அநுஷ்டித்தமவரும் எமக்கு ஸ்வாமியுமான எம்பெருமானாரை ஆச்ரயிக்குமவர்களுக்கு ஸ்வரூபாநுரூபமான தேஜஸ்ஸும் க்ஷமாகுணமும் ஜிதேந்த்ரியத்வமாகிற பலமும், கீர்த்தியும் பரமவிலக்ஷணமான அறிவும் பக்தியாகிற ஸம்பத்தும் தானே வந்து சேரும்.

833 அடையார்கமலத்தலர்மகள்கேள்வன் கையாழியென்னும்
படையோடுநாந்தகமும்படர்தாண்டும் ஒண்சார்ங்கவில்லும்
புடையார்புரிசங்கமுமிந்தப்பூதலம்காப்பதற்கென்று
இடையே இராமானுசமுனியாயினவிந்நிலத்தே. 33

தளங்கள் நெருங்கிய தாமரைப் பூவில் பிறந்த பெரியபிராட்டியார்க்கு வல்லபனான எம்பெருமானுடைய திருக்கையிலே விளங்காநின்ற திருவாழி என்கிற திவ்யாயுதத்தோடே நந்தகவாளும் ரக்ஷணத்தொழிலிலே பரந்திராநின்ற கதையும் அழகிய ஸ்ரீசார்ங்கமென்கிற வில்லும் ஒரு பக்கத்துக்குத்தானே ஆபரணமாகப் போரும்படியான அழகிய ஸ்ரீபாஞ்சஜந்யமும் (ஆக இப்பஞ்சாயுதாழ்வார்கள்) இந்தப் பூமியை ரக்ஷிக்கைக்காக இப்பூமண்டலத்திலே எம்பெருமானார் பக்கலிலே ஆயினர்.

834 நிலத்தைச்செறுத்துண்ணும்நீசக்கலியை நினைப்பரிய
பெலத்தைச்செறுத்தும் பிறங்கியதில்லை என்பெய்வினைதென்
புலத்தில்பொறித்த அப்புத்தகச்சும்மைபொறுக்கியபின்
நலத்தைப்பொறுத்தது இராமானுசன்தன்நயப்புகழே. 34

எம்பெருமானாருடைய கல்யாணகுணங்களானவை பூலோகத்தை ஹிம்ஸித்துத் தின்கிற நீசனான கலிபுருஷனுடைய இவ்வளவென்று நினைக்கமுடியாதபடி அளவற்றதான பராக்ரமத்தைத் தொலைத்தவளவிலும் பிரகாசிக்கவில்லை. (பின்னை எப்போது பிரகாசித்தன என்னில்) என்னாலே செய்யப்பட்ட பாவங்களை யமலோகத்தில் எழுதிவைத்த அந்த புஸ்தகக் கட்டுக்களை கொளுத்திவிட்டபின்பு விளக்கம் பெற்றன.

835 நயவேனோருதெய்வம்நானிலத்தே சிலமானிடத்தைப்
புயலேயெனக்கவிபோற்றிசெய்யேன் பொன்னரங்கமென்னில்
மயலேபெருகுமிராமானுசன் மன்னுமாமலர்த்தாள்
அயரேன் அருவினையென்னைஎவ்வாறின்றடர்ப்பதுவே. 35

வேறொரு தெய்வத்தை விரும்பமாட்டேன்; இவ்வுலகில் சில நீச மனிதர்களைக் குறித்து 'மேகம்போலே வர்ஷிக்கிற உதாரனே!' என்று (அதிவாதமாகச்) சொல்லி கவிகள் கட்டி ஸ்தோத்ரம் செய்யமாட்டேன். திருவரங்கம் என்று சொன்னவாறே அளவற்ற வ்யாமோஹத்தையடைகின்ற எம்பெருமானருடைய பொருந்திய திருவடித் தாமரைகளை மறக்கமாட்டேன். (ஆனபின்பு) கொடிய பாவங்கள் என்னை இன்று முதலாக எப்படி ஆக்ரமிக்கக் கூடும்?

836 அடல்கொண்டநேமியன்ஆருயிர்நாதன் அன்றாரணச்சொல்
கடல்கொண்டவொண்பொருள்கண்டளிப்ப பின்னும்காசினியோர்
இடரின்கண்வீழ்ந்திடத்தானுமவ்வொண்பொருள்கொண்டு அவர்பின்
படரும்குணன் எம்மிராமானுசன்தன்படியிதுவே. 36

(ஆச்ரித விரோதிகளை அழிக்கவல்ல) மிடுக்கை உடைய திருவாழியை ஏந்தினவனாய், ஸகலாத்மாக்களுக்கும் சேஷியான எம்பெருமான் அர்ஜுனனுக்கு ஸாரதியாயிருந்த அக்காலத்தில் வேதங்களாகிற கடலில் மறைந்து கிடந்த நல்ல

அர்த்தங்களை ஆராய்ந்து (கீதா மூலமாக) உபதேசிக்க, அதற்குப் பின்பும் பூமியில் உள்ளவர்கள் ஸம்ஸாரதுக்கத்தில் அழுந்திக் கிடக்க, (எம்பெருமானாராகிற) தாமும் (முன்பு ஸர்வேச்வரன் அருளிச்செய்த) அந்தச் சிறந்த அர்த்தங்களைக் கொண்டு அந்த ஸம்ஸாரிகளைப் பின்தொடரும் சீலமுடையர். அஸ்மத்ஸ்வாமியான எம்பெருமானாருடைய ஸ்வபாவம் இது.

837 படிகொண்டகீர்த்திஇராமாயணமென்னும்பத்திவெள்ளம்
குடிகொண்டகோயிலிராமானுசன்குணங்கூறும் அன்பர்
கடிகொண்டமாமலர்த்தாள் கலந்துள்ளங்கனியும்நல்லோர்
அடிகண்டுகொண்டுகந்து என்னையுமாளவர்க்காக்கினரே. 37

உலகமெங்கும் பரந்த புகழை உடைத்தான ஸ்ரீராமாயணமென்கிற பக்தி ஸமுத்ரம் நித்யவாஸம் பண்ணுகிற திவ்யஸ்தாநமாயிருக்கிற எம்பெருமானாருடைய திருக்குணங்களைப் பேசுகின்ற பக்திமான்களுடைய மணம்மிக்குச் சிறந்த பதாரவிந்தங்களில் நெஞ்சு பொருந்தி ஸ்நேஹித்திருக்கிற மஹாநுபாவர்கள் (இவ்வாத்ம வஸ்துவானது உடையவர்க்கு சேஷப்பட்டதென்கிற) மூலப்பொருளைத் தெரிந்து கொண்டு ஆதரித்து அடியேனையும், அவ்வெம்பெருமானார்க்கு ஆட்படுத்தினார்கள்.

838 ஆக்கியடிமைநிலைப்பித்தனையென்னையின்று அவமே
போக்கிப்புறத்திட்டது என்பொருளாமுன்பு புண்ணியர்தம்
வாக்கிற்பிரியாவிராமானுச நின்னருளின்வண்ணம்
நோக்கில்தெரிவரிதால் உரையாயிந்தநுண்பொருளே. 38

(ஸ்வாமிந்! நெடுநாளாக அஹங்காரியாய்க் கிடந்த) என்னை இன்றைத் தினத்தில் ஒரு பொருளாக்கி, சேஷத்வத்தில் நிலைநிறுத்தினீர். (இன்று இப்படிச் செய்தருளின தேவரீர்) முற்காலமெல்லாம் வீணாகப் போக்கி, வெளிவிஷயங்களிலே தள்ளிவிட்டு வைத்தது என்ன நிமித்தமாக? (தேவரீரை இடைவிடாது அநுபவிக்கும்) பாக்யசாலிகளுடைய வாக்கைவிட்டுப் பிரியாத எம்பெருமானாரே! தேவரீருடைய திருவருளிருக்கும்பரிசு நோக்குமளவில் அறியமுடியாததாயிரா நின்றது. இந்த ஸூக்ஷ்மமான விஷயத்தை தேவரீரே அருளிச் செய்ய வேணும்.

839 பொருளும்புதல்வரும்பூமியும் பூங்குழலாருமென்றே
மருள்கொண்டிளைக்கும்நமக்குநெஞ்சே மற்றுளார்தரமோ
இருள்கொண்டவெந்துயர்மாற்றித் தன்னீறில்பெரும்புகழே
தெருளும்தெருள்தந்து இராமானுசன்செய்யும்சேமங்களே. 39

த்ரவ்யம் என்று சொல்லிக் கொண்டும், புத்திரர்கள் என்று சொல்லிக் கொண்டும் க்ஷேத்ரம் என்று சொல்லிக் கொண்டும் அழகிய குழலை உடைய ஸ்த்ரீகள் என்று சொல்லிக் கொண்டும் (அர்த்தபுத்ராதிகளையே விரும்பி) அறிவு கெட்டு, வருந்திக் கொண்டு கிடக்கிற நமக்கு, அஜ்ஞானத்தோடு கூடிய க்ரூரமான துக்கங்களைப் போக்கடித்துத் தம்முடைய முடிவில்லாத சிறந்த கல்யாணகுணங்களையே சிந்திக்கக்

கடவதான ஞானத்தை அளித்தருளி, எம்பெருமானார் செய்கிற க்ஷேமங்களானவை, ஓ மனமே! மற்ற பேர்களுக்குச் செய்கிறமாதிரியோ? (அல்ல, விலக்ஷணம் என்றபடி.)

840 சேமநல்வீடும்பொருளும்தருமமும் சீரியநற்
காமமும்என்றிவைநான்கென்பர் நான்கினும்கண்ணனுக்கே
ஆமதுகாமம் அறம்பொருள்வீடிதற்கென்றுரைத்தான்
வாமனன்சீலன் இராமானுசனிந்தமண்மிசையே. 40

அனைவர்க்கும் க்ஷேமரூபமான சிறந்த மோக்ஷமும் அர்த்தமும் தர்மமும் மிகவும் சிறந்த காமமும், ஆக இப்படிச் சொல்லப்பட்டுள்ள இவை நான்கு புருஷார்த்தங்கள் என்று வைதிகர் கூறுவர்கள். இந்த நான்கு புருஷார்த்தங்களுள் காமமாவது எம்பெருமான் விஷயத்திலேயே உண்டாமது; தர்ம அர்த்த மோக்ஷங்கள் இந்தக் காம புருஷார்த்தத்திற்கு சேஷபூதங்கள் என்று வாமநாவதாரம் செய்த பெருமானோடு ஒத்த சீலத்தை உடையரான எம்பெருமானார் இவ்வுலகத்தில் அருளிச்செய்தார்.

841 மண்மிசையோனிகள்தோறும்பிறந்து எங்கள்மாதவனே
கண்ணுறநிற்கிலும்காணகில்லா உலகோர்களெல்லாம்
அண்ணலிராமானுசன் வந்துதோன்றியவப்பொழுதே
நண்ணருஞானம்தலைக்கொண்டு நாரணற்காயினரே. 41

நமக்கு நாதனான திருமால்தானே (இப்பூமியிலுள்ள மநுஷ்யாதி) யோனிகள் தோறும் அவதரித்து, எல்லாருடைய கண்ணுக்கும் தன்னை இலக்காக்கிக் கொண்டு நின்ற விடத்திலும், (அவனை நம்முடைய நாதன் என்று) காணமாட்டாதிருந்த இவ்வுலகத்தாரெல்லாரும் ஸர்வஸ்வாமியான எம்பெருமானார் இங்கே வந்தவரித்த வுடனே பெறுதற்கரிதான ஞானம் அதிகரிக்கப் பெற்று ஸ்ரீமந்நாராயணனுக்கு ஆட்பட்டனர்.

842 ஆயிழையார்கொங்கைதங்கும் அக்காதலளற்றழுந்தி
மாயுமென்னாவியைவந்தெடுத்தானின்று மாமலராள்
நாயகனெல்லாவுயிர்கட்கும்நாதன் அரங்கனென்னும்
தூயவன் தீதிலிராமானுசன்தொல்லருள்சுரந்தே. 42

லக்ஷ்மீபதியான பெரியபெருமாள் ஸகல ஆத்மாக்களுக்கும் சேஷி என்று உபதேசிப்பவரும், பரமபரிசுத்தரும் எவ்வகைக் குற்றமுமில்லாதவருமான எம்பெருமானார் (என்ன செய்தார் என்றால்) அழகிய ஆபரணங்களணிந்த ஸ்த்ரீகளுடைய கொங்கைத் தடத்தில் தங்கும் ஆசையாகிற சேற்றிலே அழுந்தி நசித்துப்போகிற என் ஆத்மாவை இன்று நிர்ஹேதுக க்ருபை பண்ணி வந்து உத்தரிப்பித்தருளினார்.

843 சுரக்கும்திருவுமுணர்வும் சொலப்புகில்வாயமுதம்
பரக்கும் இருவினைபற்றறவோடும் படியிலுள்ளீர்
உரைக்கின்றனனுமக்குயான்அறஞ்சீறுமுறுகலியைத்
துரக்கும்பெருமை இராமானுசனென்றுசொல்லுமினே. 43

இப்பூமியில் உள்ளவர்களே! நான் உங்களுக்கு (ஒரு ஹிதம்) சொல்லுகிறேன். (என்னவென்றால்) தர்மமார்க்கத்தில் சீற்றமுடைத்தாய் ப்ரபலமான கலியை ஓட்டிவிடும்

எம்பெருமானாருடைய திருநாமத்தைச் சொல்லுங்கள்; (அப்படிச் சொன்னால்) பக்திப் பெருஞ்செல்வமும், ஞானமும் மேன்மேலும் பெருகும். அந்தத் திருநாமத்தைச் சொல்லத் தொடங்கும்போதே வாக்கிலே அம்ருத ரஸம் வியாபிக்கும். மஹாபாவங்கள் அடியோடே போய்விடும்.

844 சொல்லார்தமிழொருமூன்றும் சுருதிகள்நான்குமெல்லை
யில்லாவறநெறியாவும்தெரிந்தவன் எண்ணருஞ்சீர்
நல்லார்பரவுமிராமானுசன் திருநாமம்நம்பிக்
கல்லாரகலிடத்தோர் எதுபேறென்றுகாமிப்பரே. 44

விசாலமான இப்பூமியில் உள்ளவர்கள் சொல் நிரம்பிய இயல் இசை நாடகம் என்கிற ஒப்பற்ற முத்தமிழையும் நான்கு வேதங்களையும் கணக்கில்லாத தரும சாஸ்த்ரங்களையும் மற்றும் எல்லாக் கலைகளையும் அறிந்தவராயும், எண்ணமுடியாத குணங்களை உடையவராயும், ஸத்துக்களால் துதிக்கப்படுபவராயுமிருக்கிற எம்பெருமானாருடைய திருநாமத்தை (என் வார்த்தையை) நம்பிக் கற்கின்றார்கள் இல்லை. (ஸ்ரீராமாநுஜ நாமஸங்கீர்த்தனமே புருஷார்த்தம் என்று அறியாதவர்களாய்) நமக்குப் புருஷார்த்தம் எது? என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள், ஐயோ!

845 பேறொன்றுமற்றில்லைநின்சரணன்றி அப்பேறளித்தற்கு
ஆறொன்றுமில்லைமற்றச்சரணன்றி என்றிப்பொருளைத்
தேறுமவர்க்குமெனக்குமுனைத்தந்தசெம்மைசொல்லால்
கூறும்பரமன்று இராமானுசமெய்ம்மைகூறிடிலே. 45

எம்பெருமானாரே! தேவரீருடைய திருவடிகளைத் தவிர உபேயம் வேறொன்றுமில்லை; தேவரீர் திருவடிகளாகிற அந்த உபேயத்தைத் தருவதற்கு அத் திருவடிகள் தவிர வேறு உபாயம் ஒன்றுமில்லை என்கிற இவ்வுண்மைப் பொருளைத் தெளிவாகத் தெரிந்து கொண்டிருக்கிற மஹான்களுக்கும் (இந்தத் தெளிவு சிறிதும் இல்லாத) எனக்கும் (வாசி பாராமல் ஸமமாகவே) தேவரீரைக் காட்டிக் கொடுத்த செம்மைக் குணமானது, உண்மை சொல்லில் வாய்கொண்டு சொல்லத் தரமன்று. (அனுபவித்து உருகுமித்தனை.)

846 கூறும்சமயங்களாறும்குலைய குவலயத்தே
மாறன்பணித்தமறையுணர்ந்தோனை மதியிலியேன்
தேறும்படியென்மனம்புகுந்தானைத் திசையனைத்தும்
ஏறும்குணனை இராமானுசனையிறைஞ்சினமே. 46

மனம்போனபடி சொல்லிக்கொண்டிருக்கிற ஆறுபாஹ்யமதங்களும் தலை மடங்கும்படி இப்பூமண்டலத்திலே நம்மாழ்வார் அருளிச்செய்த தமிழ்வேதத்தைக் கற்று அறிந்தவராயும் ஜ்ஞாநஹீநனான நானும் தெளியும்படியாக என் ஹ்ருதயத்திலே வந்து புகுந்தவராயும் எல்லாத் திக்குகளிலும் பரவிய திருக்குணங்களை உடையவராயுமிருக்கிற எம்பெருமானாரை வணங்கினோம்.

847 இறைஞ்சப்படும்பரன்ஈசனரங்கனென்று இவ்வுலகத்
தறம்செப்புமண்ணலிராமானுசன் என்னருவினையின்

திறம்செற்றிரவும்பகலும் விடாதென்தன்சிந்தையுள்ளே
நிறைந்தொப்பறவிருந்தான் எனக்காரும்நிகரில்லையே. 47

'எல்லாராலும் வணங்கத் தக்க பரதெய்வம் (எதுவென்றால்) ஈசனாகிய ஸ்ரீரங்கநாதனேயாம்' என்று இப்பூமண்டலத்திலே ஸாக்ஷாத் தர்மத்தை அருளிச் செய்யுமவராய், ஸர்வஸ்வாமியான எம்பெருமானார் என்னுடைய போக்கமுடியாத கர்மஸமூஹத்தைப் போக்கி ஸர்வகாலத்திலும் என் ஹ்ருதயத்தினுள்ளே பரிபூர்ணராகி, (இவ்விருப்புக்கு) ஒப்பில்லாத படி எழுந்தருளியிருக்கிறார். இப்படிப் பட்ட அருளப் பெற்ற எனக்கு ஒப்பாவார் ஆருமில்லை.

848 நிகரின்றிநின்றவென்நீசதைக்கு நின்னருளின்கணன்றிப்
புகலொன்றுமில்லை அருட்குமஃதேபுகல் புன்மையிலோர்
பகரும்பெருமையிராமானுச இனிநாம்பழுதே
அகலும்பொருளென் பயனிருவோமுக்குமானபின்னே. 48

மஹான்கள் பேசவேண்டும்படியான பெருமையை உடைய எம்பெருமானரே! என்னுடைய ஒப்பற்ற தாழ்மைக்கு தேவரீருடைய க்ருபையினிடத்தில் தவிர வேறு எவ்விடத்திலும் ஒதுங்க இடமில்லை. தேவரீருடைய அந்த க்ருபைக்கும் (என் போல்வாருடைய)அந்தத் தாழ்மையே சரணம். (ஆக இவ்வகையாலே) அடியேனால் தேவரீருக்குப் பயன், தேவரீரால் அடியேனுக்குப் பயன் என்று ஸித்தமான பின்பு இனிமேலும் நாம் வியர்த்தமாகப் பிரிந்திருக்கைக்குக் காரணம் என்ன?

849 ஆனதுசெம்மையறநெறி பொய்ம்மையறுசமயம்
போனதுபொன்றியிறந்ததுவெங்கலி பூங்கமலத்
தேனதிபாய்வயல்தென்னரங்கன்கழல்சென்னிவைத்துத்
தானதில்மன்னும் இராமானுசனித்தலத்துதித்தே. 49

தாமரைப்பூக்களிலுண்டான மகரந்தமானது ஆறாகப் பெருகப் பெற்ற கழனிகளை உடைய ஸ்ரீரங்கத்திலே எழுந்தருளியிருக்கிற பெரிய பெருமாளுடைய திருவடிகளை சிரஸாவஹித்துக் கொண்டு தாம் அத்திருவடிகளிலேயே ப்ரவணரா யிருக்கிற எம்பெருமானார், இப்பூமியிலே திருவவதரித்ததனால் ருஜுவான தர்மமார்க்கமானது ஸத்தை பெற்றது. பொய்யே நிறைந்து கிடக்கிற ஆறு சமயங்களும் நாசமடைந்தன. கொடிய கலியுகமும் மாண்டது.

850 உதிப்பனவுத்தமர்சிந்தையுள் ஒன்னலர்நெஞ்சமஞ்சிக்
கொதித்திடமாறிநடப்பன கொள்ளைவன்குற்றமெல்லாம்
பதித்தவென்புன்கவிப்பாவினம்பூண்டனபாவுதொல்சீர்
எதித்தலைநாதன் இராமானுசன்தன்னிணையடியே. 50

உலகமெங்கும் பரவின நித்ய கல்யாணகுணங்களையுடையவரும் யதிகளுக்குத் தலையான நாயகருமான எம்பெருமானாருடைய திருவடியிணைகள் (எப்படிப்பட்டவை என்றால்) உத்தமாதிகாரிகளுடைய திருவுள்ளங்களிலே பிரகாசிப்பவை. பிரதிபக்ஷிகளுடைய நெஞ்சானது பயப்பட்டுப் பரிதவிக்கும்படி மாறிமாறியிட்டு நடுக்கும்

தன்மையுடையன; அபாரமான வலிய தோஷங்கள் யாவும் அழுந்திக் கிடக்கிற என்னுடைய க்ஷுத்ரமான கவனமாகிய பாசுரங்களை (ஸ்தோத்ரமாகப்) பெற்றுக் கொண்டவை.

851 அடியைத்தொடர்ந்தெழுமைவர்கட்காய் அன்றுபாரதப்போர்
முடியப்பரிநெடுந்தேர்விடுங்கோனை முழுதுணர்ந்த
அடியர்க்கமுதமிராமானுசன்என்னையாளவந்து இப்
படியில்பிறந்தது மற்றில்லைகாரணம்பார்த்திடிலே. 51

முற்காலத்தில் திருவடிகளை அவலம்பித்து செருக்கிக் கிளர்ந்த பஞ்ச பாண்டவர்களுக்காக (பக்ஷபாதம் பூண்டு) பாரதயுத்தத்திலே (துரியோதனாதிகள்) மாளும்படியாக குதிரை பூண்ட பெரிய தேரை நடத்தின ஸர்வேச்வரனை (ஸ்வரூப ஸ்வபாவங்களில் ஒன்றுங் குறையாதபடி பூர்த்தியாகத் தெரிந்து கொண்ட பாகவதர்களுக்குப் பரமபோக்யரான எம்பெருமானார் இப்பூமண்டலத்தில் வந்து அவதரித்தது (எதற்காகவெனில்) அடியேனை ஆட்கொள்ளுகைக்காகவேயாம். ஆராய்ந்து பார்க்குமளவில் இது தவிர வெறொரு காரணமில்லை.

852 பார்த்தானறுசமயங்கள்பதைப்ப இப்பார்முழுதும்
போர்த்தான்புகழ்கொண்டு புன்மையினேனிடைத்தான்புகுந்து
தீர்த்தானிருவினைதீர்த்து அரங்கன்செய்யதாளிணையோடு
ஆர்த்தான் இவையெம்மிராமானுசன்செய்யுமற்புதமே. 52

(எம்பெருமானாரானவர்) (வேதபாஹ்யங்களான) ஆறு தர்சனங்களும் துடிக்கும் படியாக திருக்கண் செலுத்தினார். இப்பூமண்டலம் முழுவதையும் (தமது) கீர்தியினால் மூடிவிட்டார். நீசனான அடியேன் பக்கலிலே தாமாகவே (நிர்ஹேதுக க்ருபையினால்) வந்து புகுந்து பெரிய பாவங்களைப் போக்கியருளினார். பாவங்களைப் போக்கினது மன்றியில் ஸ்ரீரங்கநாதனுடைய அழகிய திருவடிகளோடே (என்னை) அந்வயிப்பித்தார். ஆகிய இக்காரியங்களெல்லாம் எமக்கு ஸ்வாமியான எம்பெருமானார் செய்தருளின ஆச்சரியச் செயல்களாம்.

853 அற்புதன்செம்மையிராமானுசன் என்னையாளவந்த
கற்பகம் கற்றவர்காமுறுசீலன் கருதரிய
பற்பல்லுயிர்களும்பல்லுலகுயாவும்பரனதென்னும்
நற்பொருள்தன்னை இந்நானிலத்தேவந்துநாட்டினனே. 53

என்னை ஆட்கொள்வதற்காக அவதரித்த உதாரரும் ஞானிகள் ஆசைப்படும் படியான சீலகுணத்தையுடையவரும் ருஜுவாயிருக்கும் தன்மை பொருந்தியவருமான எம்பெருமானார் நினக்கவும் முடியாதபடி எண்ணிறந்திருக்கிற ஆத்ம வர்க்கங்களும் (அவ்வாத்மாக்களுக்கு இருப்பிடமான) அளவிறந்த எல்லா உலகங்களும் எம்பெருமானுடைய ஸொத்துக்களாம் என்கிற ஸாரார்த்தத்தை இவ்வுலகத்திலே வந்தவதரித்து ஸ்தாபித்தருளினார்.

854 நாட்டியநீசச்சமயங்கள்மாண்டன நாரணனைக்
காட்டியவேதம்களிப்புற்றது தென்குருகைவள்ளல்

வாட்டமிலாவண்தமிழ்மறைவாழ்ந்தது மண்ணுலகில்
ஈட்டியசீலத்து இராமானுசன்தன்னியல்வுகண்டே. 54

இப் பூலோகத்தில் மேன்மேலும் திரட்டிக் கொண்ட சீலகுணத்தை உடையரான எம்பெருமானாருடைய ஸ்வபாவத்தைப் பார்த்து, (துஷ்டயுக்திகளாலே) நிலை நிறுத்தப் பட்டிருக்கிற க்ஷுத்ரமதங்களெல்லாம் ஒழிந்தன. ஸ்ரீமந்நாராயணனைப் பிரதிபாதித்த வேதங்களானவை (நமக்கு இனி ஒரு குறையுமில்லை யென்று) செருக்கடைந்தன. அழகிய திருக்குருகூரில் அவதரித்த உதாரரான ஆழ்வார் (அருளிச்செய்த) ஒரு குறையுமற்ற சிறந்த தமிழ் வேதமான திருவாய்மொழி வாழ்வு பெற்றது.

855 கண்டவர்சிந்தைகவரும்கடிபொழில்தென்னரங்கன்
தொண்டர்குலாவுமிராமானுசனை தொகையிறந்த
பண்தருவேதங்கள்பார்மேல்நிலவிடப்பார்த்தருளும்
கொண்டலைமேவித்தொழும் குடியாமெங்கள்கோக்குலமே. 55

கணக்கில்லாத ஸ்வரப்ரதாநங்களான வேதங்கள் இப்பூமியிலே ஓங்கி வளரும்படி செய்தருளினவரும், பரம உதாரரும், கண்டவர்கள் நெஞ்சைக் கவர்கின்ற மணம் மிக்க சோலைகள் சூழ்ந்த தென்னரங்கத்திற்குத் தலைவரான பெரிய பெருமாளுக்கு அடிமைப்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்களால் கொண்டாடப்படுபவருமான எம்பெருமானாரைப் பொருந்தி ஆச்ரயிக்கிற குலம் எங்களுக்கு ஸ்வாமியாகக் கூடிய குலமாம்.

856 கோக்குலமன்னரைமூவெழுகால் ஒருகூர்மழுவால்
போக்கியதேவனைப்போற்றும்புனிதன் புவனமெங்கும்
ஆக்கியகீர்த்தியிராமானுசனை அடைந்தபின் என்
வாக்குரையாது என்மனம்நினையாதினிமற்றொன்றையே. 56

க்ஷத்ரியகுலத்து அரசர்களை இருபத்தொரு தலைமுறையளவும் கூர்மை பொருந்திய ஒரு மழுவாலே (பரசுராமாவதாரத்தில்) தொலைத்தருளின எம்பெருமானைத் துதிக்கின்ற பரம பரிசுத்தரும், உலகமெங்கும் பரவின புகழை உடையவருமான எம்பெருமானாரை ஆச்ரயித்த பின்பு மேலுள்ள காலமெல்லாம் வேறு எந்த விஷயத்தையும் எனது வாக்கானது சொல்ல மாட்டாது. எனது மனமும் நினைக்க மாட்டாது.

857 மற்றொருபேறுமதியாது அரங்கன்மலரடிக்கு ஆள்
உற்றவரேதனக்குற்றவராக்கொள்ளுமுத்தமனை
நற்றவர்போற்றுமிராமானுசனை இந்நானிலத்தே
பெற்றனன் பெற்றபின்மற்றறியேனொருபேதைமையே. 57

ப்ரயோஜநாந்தரங்களைக் கணிசியாமல் அழகிய மணவாளனுடைய திருவடித் தாமரைகளுக்கு அடிமைப் பட்டவர்களையே தமக்கு ஆத்மபந்துக்களாகத் திருவுள்ளம் பற்றுகிற உத்தமபுருஷராயும், ப்ரபந்நர்களாலே புகழப்பட்டவராயு மிருக்கிற எம்பெருமானாரை இந்த லோகத்திலே அடியேன் ஆச்ரயிக்கப் பெற்றேன். ஆச்ரயித்தபின்பு (வேறு விஷயங்களை விரும்புகை முதலிய) எவ்வித அஜ்ஞாந கார்யமும் அறியமாட்டேன்.

858 பேதையர் வேதப்பொருளிதென்றுன்னி பிரமநன்றென்று
ஓதி மற்றெல்லாவுயிருமஃதென்று உயிர்கள்மெய்விட்டு
ஆதிப்பரனோடொன்றாமென்றுசொல்லுமவ்வல்லலெல்லாம்
வாதில்வென்றான் எம்மிராமானுசன்மெய்ம்மதிக்கடலே. 58

(வேதாந்தத்தைப் பிரமாணமாகக் கொள்ளாத) அவிவேகிகள் 'நாங்கள் சொல்லுகிற இதுதான் வேதத்தின் அர்த்தம்' என்று நிரூபித்துக் கொண்டு, பரப்ரஹ்மமானது எல்லாவற்றினும் விலக்ஷணம் என்று சொல்லி, 'அந்த ப்ரஹ்மம் தவிர மற்ற எல்லா ஜீவராசிகளும் அந்த ப்ரஹ்மமே' என்று சொல்லி, ஜீவாத்மாக்கள் தேஹத்தை விட்ட பின்பு ஸர்வகாரணபூதனான பரமபுருஷனோடே ஐக்கியத்தை அடைகின்றன என்று சொல்லுகிற அந்த கோலாஹலங்களையெல்லாம் தத்வஞானக் கடலாகிய எம்பெருமானார் வாதத்தில் நிரஸித்து வெற்றி பெற்றார்.

859 கடலளவாயதிசையெட்டினுள்ளும் கலியிருளே
மிடைதருகாலத்திராமானுசன் மிக்கநான்மறையின்
சுடரொளியாலவ்விருளைத் துரந்திலனேல் உயிரை
உடையவன் நாரணனென்றறிவாரில்லைஉற்றுணர்ந்தே. 59

நான்கு ஸமுத்ரங்களை எல்லையாக உடைய எல்லா இடங்களிலும் கலிபுருஷனாகிற அந்தகாரமே நெருங்கிக் கிடக்கிற காலத்தில் எம்பெருமானார் (திருவவதரித்து,) நான்கு வேதங்களின் அளவற்ற தேஜஸ்ஸைக் கொண்டு அந்த கலிதோஷத்தைப் போக்கியிராமற் போனால் எல்லா ஆத்மாக்களுக்கும் சேஷி ஸ்ரீமந்நாராயணனே என்று யாரும் தெரிந்து கொண்டிருக்க மாட்டார்கள்.

860 உணர்ந்தமெய்ஞ்ஞானியர்யோகந்தொறும் திருவாய்மொழியின்
மணந்தருமின்னிசைமன்னுமிடந்தொறும் மாமலராள்
புணர்ந்தபொன்மார்வன் பொருந்தும்பதிதொறும்புக்குநிற்கும்
குணந்திகழ்கொண்டல் இராமானுசனெம்குலக்கொழுந்தே. 60

ஆத்மகுணங்களால் விளங்குபவரும் (ஔதார்யத்தில்) காளமேகத்தை ஒத்தவரும் எங்கள் குலத்துக்குத் தலைவருமான எம்பெருமானார் (எங்கே எழுந்தருளி யிருப்பவர் எனில்) கற்றுணர்ந்த ஞானிகளுடைய கோஷ்டிகளெங்கும், திருவாய்மொழியின் பரிமளம் மிக்க இனி இசையுள்ள இடங்களெங்கும், பிராட்டி நித்யவாஸம் பண்ணுகிற அழகிய மார்புடைய திருமால் எழுந்தருளி யிருக்கிற திவ்யதேசங்களெங்கும் எழுந்தருளி யிருப்பர்.

861 கொழுந்துவிட்டோடிப்படரும்வெங்கோள்வினையால் நிரயத்து
அழுத்தியிட்டேனைவந்தாட்கொண்டபின்னும் அருமுனிவர்
தொழுந்தவத்தோனெம்மிராமானுசன்தொல்புகழ்சுடர்மிக்
கெழுந்தது அத்தால்நல்லதிசயங்கண்டதிருநிலமே. 61

அருமையான நிஷ்டையை உடைய மஹான்களாலே ஸேவிக்கப் பெற்றவராயும் ப்ரபத்தியாகிற தபஸ்ஸை உடையவராயுமிருக்கிற ஸ்வாமி எம்பெருமானாருடைய நித்யமான கல்யாண குணங்கள் மேன்மேலும் அதிகமாகப் பெருகுகின்ற க்ரூரமாய்

ப்ரபலமான துஷ்கர்மத்தால் ஸம்ஸாரமாகிற நரகத்திலே அழுந்திக் கிடந்த என்னை வந்து ஆட்படுத்திக் கொண்ட பின்பும் ஒளி குன்றாதே முன்னிலும் விசேஷமாக விளங்கா நின்றன. அதைக் கண்டு விசாலமான இப் பூமண்டலம் மிக்க ஆச்சர்யம் கொண்டது.

862 இருந்தேனிருவினைப்பாசம்கழற்றி இன்றுயானிறையும்
வருந்தேனினியெம்மிராமானுசன் மன்னுமாமலர்த்தாள்
பொருந்தாநிலையுடைப்புன்மையினோர்க்கொன்றும்நன்மைசெய்யாப்
பெருந்தேவரைப்பரவும் பெரியோர்தம்கழல்பிடித்தே. 62

ஸ்வாமி எம்பெருமானாருடைய சிறந்த திருவடித் தாமரைகளில் சேராத ஸ்வபாவத்தை உடையவர்களான நீசர்களுக்கு ஒருவிதமான உபகாரமும் செய்யாதே பெரியபெருமாளைப் போற்றுகின்ற ஆழ்வானாகிற மஹானுடைய திருவடித் தாமரைகளை இன்று ஆச்ரயித்த பின்பு புண்ணியம் பாவம் என்று இரண்டு வகையான பாவங்களினின்று விடுபட்டவனானேன். இப்படி நிர்மலனாகப் பெற்ற அடியேன் இனிமேல் கொஞ்சங்கூட வருத்தப்பட மாட்டேன்.

863 பிடியைத்தொடரும்களிறென்ன யானுன்பிறங்கியசீர்
அடியைத்தொடரும்படிநல்கவேண்டும் அறுசமயச்
செடியைத்தொடரும்மருள்செறிந்தோர்சிதைந்தோடவந்து இப்
படியைத்தொடரும் இராமானுசமிக்கபண்டிதனே. 63

பாஹ்யமான ஆறுமதங்களாகிற தூறுகளிலே படிவதற்குக் காரணமான அவிவேகம் நிறைந்த மூடர்கள் பங்கமடைந்து வெருவி ஓடும்படியாக இப்பூமியிலே வந்து அவதரித்து (நம்போல்வாரை விஷயீகரிப்பதற்குப்) பின்தொடர்கின்ற மஹா பண்டிதரான எம்பெருமானாரே! யானைப் பேடையைப் பின்பற்றித் திரிகின்ற ஆண்யானை போல அடியேன் ஸௌந்தர்யம் முதலிய குணங்கள் விளங்குகின்ற தேவரீரது திருவடிகளைப் பின்பற்றும்படி க்ருபை செய்தருள வேண்டும்.

864 பண்தரும்மாறன்பசுந்தமிழ் ஆனந்தம்பாய்மதமாய்
விண்டிடஎங்களிராமானுசமுனிவேழம் மெய்ம்மை
கொண்டநல்வேதக்கொழுந்தண்டமேந்திக்குவலயத்தே
மண்டிவந்தேன்றது வாதியர்காளுங்கள்வாழ்வற்றதே. 64

எங்களுக்கு விதேயமான ஸ்ரீராமாநுசமுனியாகிற மத்த கஜமானது நம்மாழ்வார் இசைகளாலே அருளிச்செய்த செந்தமிழான திருவாய்மொழியில் விளைந்த ஸந்தோஷம் பெருகுமதநீராக ஒழுகப்பெற்று ஸத்யவாதியான நல்ல வேதமாகிற பெரிய தடியைத் தூக்கிக்கொண்டு இப்பூமண்டலத்திலே உங்களை நெருக்கிக் கொண்டு வந்து மேலிடா நின்றது. துர்வாதிகளே! உங்களுடைய பிழைப்பு போயிற்று.

865 வாழ்வற்றதுதொல்லைவாதியர்க்கு என்றும்மறையவர்தம்
தாழ்வற்றதுதவம்தாரணிபெற்றது தத்துவநூல்
கூழற்றதுகுற்றமெல்லாம்பதித்தகுணத்தினர்க்கு அந்
நாழற்றது நம்மிராமானுசன்தந்தஞானத்திலே. 65

ஸ்வாமி எம்பெருமானார் அருளின ஞானத்தினால் நெடுநாளாக இருந்த துர்வாதிகளுக்கு வாழ்ச்சி அற்றுப் போயிற்று. வைதிகர்களுடைய குறை இனி ஒருநாளும் இல்லாதபடியாயிற்று. பூமண்டலமானது பாக்கியம் பெற்றது. தத்வபரமான சாஸ்த்ரங்கள் ஸந்தேஹமற நிச்சயமான பொருளைத் தெரிவிப்பவையாயின; பல்வகைக் குற்றங்களும் நிறைந்த ஸ்வபாவத்தையுடைய ஜநங்களுக்கு அந்தக் குற்றங்கள் தீர்ந்தன.

866 ஞானம்கனிந்தநலங்கொண்டு நாடொறும்நைபவர்க்கு
வானம்கொடுப்பதுமாதவன் வல்வினையேன்மனத்தில்
ஈனம்கடிந்தவிராமானுசன்தன்னையெய்தினர்க்கு அத்
தானம்கொடுப்பது தன்தகவென்னும்சரண்கொடுத்தே. 66

திருமால் மோக்ஷம் அளிப்பது (எப்படிப்பட்டவர்களுக்கு என்றால்) ஞானம் பக்திரூபமாகப் பரிபக்குவமாகி அந்த பக்தியினால் நித்யம் உருகுகின்றவர்களுக்கே யாம். மஹாபாபியான எனது ஹ்ருதயத்திலிருந்த கல்மஷங்களைப் போக்கடித்த எம்பெருமானார் நம்மைப் பற்றினவர்களுக்கு அந்த மோக்ஷஸ்தானத்தை அளிப்பது (எவ்விதமாக என்றால்) தம்முடைய க்ருபையாகிற ஸாதனத்தை (அவர்களுக்குக் கைம்முதலாகக்) கொடுத்து.

867 சரணமடைந்ததருமனுக்கா பண்டுநூற்றுவரை
மரணமடைவித்தமாயவன் தன்னைவணங்கவைத்த
கரணமிவையுமக்கன்றென்றிராமானுசன் உயிர்கட்கு
அரணங்கமைத்திலனேல் அரணார்மற்றிவ்வாருயிர்க்கே. 67

தன்னைச் சரணம் பற்றின தர்மபுத்ரருக்காக முற்காலத்திலே துரியோதனன் முதலிய நூறுபேர்களை சாகும்படி செய்த எம்பெருமான் தன்னை வழிபடுவதற்காகவே ஏற்படுத்திவைத்த இந்திரியங்களாம் இவை; உங்களுக்கு உரிமைப் பட்டவை அல்ல என்று இவ்வாறாக உபதேசித்து எம்பெருமானார் ஆத்மாக்களுக்கு ரக்ஷையைக் கற்பித்திலராகில் இந்த அருமை ஆத்மாக்களுக்கு வேறு ரக்ஷகராவார் ஆர்? (ஆருமில்லை.)

868 ஆரெனக்கின்றுநிகர்சொல்லில் மாயனன்றைவர்தெய்வத்
தேரினில்செப்பியகீதையின்செம்மை பொருள்தெரியப்
பாரினிற்சொன்னவிராமானுசனைப்பணியும்நல்லோர்
சீரினிற்சென்றுபணிந்தது என்னாவியும்சிந்தையுமே. 68

ஆச்சர்ய சேஷ்டிதங்களை உடைய எம்பெருமான் முற்காலத்தில் பஞ்சபாண்டவர்களுடைய தெய்வத் தன்மை பொருந்திய தேரின்மீது (இருந்து கொண்டு) அருளிச்செய்த பகவத்கீதையினுடைய ஸ்வரஸமான அர்த்தத்தை (அனைவரும்) எளிதாகத் தெரிந்து கொள்ளும்படி இப்பூமியிலே (கீதாபாஷ்ய முகத்தாலே) அருளிச்செய்த எம்பெருமானாரை ஆச்ரயித்திருக்கிற விலக்ஷண புருஷர்களுடைய கல்யாண குணங்களிலே எனது ஆத்மாவும் மனஸ்ஸும் சென்று சேர்ந்து விட்டன. சொல்லுமளவில், இக்காலத்தில் எனக்கு ஆர் ஒப்பாவார்?

869 சிந்தையினோடுகரணங்கள்யாவும்சிதைந்து முன்னாள்
அந்தமுற்றாழ்ந்ததுகண்டு அவையென்தனக்கன்றருளால்

தந்தவரங்கனுந்தன்சரண்தந்திலன் தானதுதந்து
எந்தையிராமானுசன்வந்தெடுத்தனனின்றென்னையே. 69

ஸ்ருஷ்டிக்கு முற்காலத்தில் சிந்தையும் இந்திரியங்களுமெல்லாம் அழிந்து, உபஸம்ஹாரத்தை அடைந்து அசேதநப்ராயமாயிருப்பதைப் பார்த்து (அப்படி அசேதந ப்ராயராய்க் கிடந்தவர்களில் ஒருவனான) எனக்கு அந்த கரண களேபரங்களை அக்காலத்தில் க்ருபையாலே உண்டாக்கின எம்பெருமானும் தனது திருவடிகளைக் காட்டிக் கொடுத்து உஜ்ஜீவிப்பிக்கவில்லை. (அக்குறை நீங்க) ஸ்வாமி எம்பெருமானார் தாமாகவே வந்து அந்தத் திருவடிகளைத் தந்தருளி இன்று என்னை ஸம்ஸாரத்தில் நின்றும் உத்தரிப்பித்தார்.

870 என்னையும்பார்த்தென்னியல்வையும்பார்த்து எண்ணில்பல்குணத்த
உன்னையும்பார்க்கில்அருள்செய்வதேநலம் அன்றியென்பால்
பின்னையும்பார்க்கில்நலமுளதே உன்பெருங்கருணை
தன்னையென்பார்ப்பர் இராமானுசவுன்னைச்சார்ந்தவரே. 70

எம்பெருமானாரே! (ஒரு குணமுமில்லாமல் குற்றமே நிறைந்திருக்கிற) என்னையும் நோக்கி, (இனிமேலும் எவ்வித நன்மையும் ஸம்பாதித்துக் கொள்ள முடியாமலிருக்கிற) என்னுடைய தன்மையையும் நோக்கி எண்ணிறந்த பல திருக்குணங்களையுடைய தேவரீரையும் நோக்குமளவில் (இப்போது போல எப்போதும்) அருள் செய்திருப்பதே நல்லது; இதுவொழிய, மேலும் ஆராயுமளவில் என்னிடத்தில் ஏதாவது நன்மையுண்டோ? (சிறிதும் இல்லை.) (நன்மையொன்றும் இல்லாவிடில் நாம் அருள் செய்யலாகாதென்று திருவுள்ளம் பற்றினால்) தேவரீரை ஆச்ரயித்தவர்கள் தேவரீருடைய கிருபையைப் பற்றி என்ன நினைப்பர்கள்? (இளப்பமாக நினையார்களோ?)

871 சார்ந்ததென்சிந்தையுன்தாளிணைக்கீழ் அன்புதான்மிகவும்
கூர்ந்ததுஅத்தாமரைத்தாள்களுக்கு உன்தன்குணங்களுக்கே
தீர்ந்ததென்செய்கைமுன்செய்வினை நீசெய்வினையதனால்
பேர்ந்தது வண்மையிராமானுச எம்பெருந்தகையே. 71

ஔதார்யமுடையவரும் எமக்கு ஸ்வாமியும் பெருந்தன்மையுடையவருமான எம்பெருமானாரே! எனது நெஞ்சு தேவரீருடைய உபய பாதங்களின் கீழ் அமர்ந்து விட்டது; பக்தியும் அந்தத் திருவடித் தாமரைகள் விஷயத்திலேயே மிகவும் அதிகரித்தது. எனது செயலும் தேவரீருடைய திருக்குணங்களுக்கே அற்றுத் தீர்ந்தது. முன்னே செய்த பாவங்களெல்லாம் தேவரீர் செய்தருளின (கடாக்ஷமாகிற) காரியத்தாலே தொலைந்தன.

872 கைத்தனன்தீயசமயக்கலகரைகாசினிக்கே
உய்த்தனன்தூயமறைநெறிதன்னை என்றுன்னியுள்ளம்
நெய்த்தவன்போடிருந்தேத்தும் நிறைபுகழோருடனே
வைத்தனனென்னை இராமானுசன்மிக்கவண்மைசெய்தே. 72

எம்பெருமானார் தமது ஔதார்ய குணத்தை அதிகமாகக் காட்டி தீயமதங்களி லிருந்து கொண்டு கலஹம் செய்கிறவர்களை ஒழித்துவிட்டார். பரிசுத்தமான வேத

மார்க்கத்தை பூமியிலே ஸ்தாபித்தருளினார் என்று அநுஸந்தித்து நெஞ்சு கனிந்து அந்த ப்ரீதியோடே கூடியிருந்து, (அவரை) ஸ்தோத்ரம் பண்ணுகிற புகழ் நிறைந்த மஹான்களோடே (என்னையும் ஒருவனாக எண்ணும்படி) என்னை வைத்தருளினார்.

873 வண்மையினாலும்தன்மாதகவாலும் மதிபுரையும்
தண்மையினாலும்இத்தாரணியோர்கட்கு தான்சரணாய்
உண்மைநன்ஞானமுரைத்த இராமானுசனையுன்னும்
திண்மையல்லாலெனக்கில்லை மற்றோர்நிலைதேர்ந்திடிலே. 73

தம்முடைய ஔதார்ய குணத்தாலும் பரமக்ருபையாலும் சந்திரனையொத்த திருவுள்ளக் குளிர்ச்சியாலும் இப்பூமியிலுள்ளவர்களுக்குத் தாமே ரக்ஷகராய்க் கொண்டு யதார்த்தமாய், விலக்ஷணமான ஞானத்தை உபதேசிக்கின்ற எம்பெருமானாரை சிந்திப்பதாகிற அத்யவஸாயமொன்று தவிர, ஆராயுமளவில் அடியேனுக்கு வெறொரு அத்யவஸாயமில்லை.

874 தேரார்மறையின்திறமென்று மாயவன்தீயவரைக்
கூராழிகொண்டுகுறைப்பது கொண்டலனையவண்மை
ஏரார்குணத்தெம்இராமானுசன்அவ்வெழில்மறையில்
சேராதவரைச்சிதைப்பது அப்போதொருசிந்தைசெய்தே. 74

(இப்பாவிகள்) வேதஞ்சொல்லுகிற வழியை நிரூபித்தறிகிறதில்லையென்று பாவிகளை எம்பெருமான் தண்டிப்பது கூர்மையான தனது திருவாழியாலே. மேகம் போன்ற ஔதார்யகுணமுடையவரும், (மற்றும்) பல நல்லகுணங்களுடையவருமான ஸ்வாமி எம்பெருமானார் அந்த சிறந்த வேதத்தில் அந்வயியாதவர்களை பங்கப் படுத்துவது (எப்படி என்றால்) அப்போதப்போது ஒவ்வொரு யுக்தியைக் கொண்டாம்.

875 செய்த்தலைச்சங்கம்செழுமுத்தமீனும் திருவரங்கர்
கைத்தலத்தாழியும்சங்கமுமேந்தி நங்கண்முகப்பே
மொய்த்தலைத்துன்னைவிடேனென்றிருக்கிலும்நின்புகழே
மொய்த்தலைக்கும்வந்து இராமானுசவென்னைமுற்றுநின்றே. 75

வயல்களில் சங்குகளானவை அழகிய முத்துக்ளை உண்டாக்குமிடமான திருவரங்க மாநகரில் எழுந்தருளியிருக்கும் பெருமான் தமது திருக்கையிலே திருவாழி திருச்சங்குகளைத் தரித்துக் கொண்டு நமது கண்ணெதிரில் வந்து நெருங்கி புத்தியயைக் கெடுத்து உன்னை விடமாட்டேன் என்று இருந்தாலும், எம்பெருமானாரே! தேவரீருடைய திவ்ய குணங்களே என்பக்கல் வந்து சூழ்ந்து கொண்டு ஆகர்ஷிக்கின்றன.

876 நின்றவண்கீர்த்தியும்நீள்புனலும் நிறைவேங்கடப்பொற்
குன்றமும் வைகுந்தநாடும் குலவியபாற்கடலும்
உன்தனக்கெத்தனையின்பந்தரும் உன்னிணைமலர்த்தாள்
என்தனக்குமது இராமானுச இவையீந்தருளே. 76

எம்பெருமானாரே! நிலைநின்ற புகழும் அதிகமான நீர்ப்பெருக்கும் நிறைந்துள்ள திருவேங்கடமென்னும் அழகிய திருமலையும் ஸ்ரீவைகுண்டமாகிய திருநாடும்

கொண்டாடத் தக்க திருப்பாற்படலும் தேவரீருக்கு எவ்வளவு ஆனந்தத்தை விளைக்குமோ தேவரீருடைய உபயபாதாரவிந்தங்கள் எனக்கும் அவ்வளவு ஆநந்தத்தை உண்டாக்கும். இப்படிப்பட்ட திருவடிகளை அடியேனுக்குத் தந்தருள வேணும்.

877 ஈந்தனனீயாதவின்னருள் எண்ணில்மறைக்குறும்பைப்
பாய்ந்தனன்அம்மறைப்பல்பொருளால் இப்படியனைத்தும்
ஏய்ந்தனன்கீர்த்தியினால் என்வினைகளைவேர்பறியக்
காய்ந்தனன் வண்மைஇராமானுசற்கென்கருத்தினியே. 77

(இதற்கு முன்பு ஒருவர்க்கும்) அருளாத விலக்ஷணமான க்ருபையை அடியேனுக்குச் செய்தருளினவரும், எண்ணிறந்த வேதவிரோதிமதங்களை அந்த வேதங்களின் அர்த்தங்களையே கொண்டு கண்டித்தவரும், தமது கீர்த்தியாலே இப்பூமியெங்கும் வியாபித்தவரும், எனது கருமங்களை வேரோடே அறும்படி போக்கினவரும், ஔதார்யமே வடிவு கொண்டவருமான எம்பெருமானார்க்கு இன்னமும் (செய்யத் தக்கதாகத்) திருவுள்ளத்தில் ஏதேனுமுண்டோ?

878 கருத்திற்புகுந்துள்ளில்கள்ளம்கழற்றி கருதரிய
வருத்தத்தினால்மிகவஞ்சித்து நீயிந்தமண்ணகத்தே
திருத்தித்திருமகள்கேள்வனுக்காக்கியபின் என்னெஞ்சில்
பொருத்தப்படாது எம்மிராமானுசமற்றோர்பொய்ப்பொருளே. 78

எம்பெருமானாரே! தேவரீர் நெஞ்சால் நினைக்கமுடியாத பரிச்ரமங்கள் பட்டு என்னை நன்றாக ஏமாற்றி, (எனது) நெஞ்சிலே வந்து புகுந்து உள்ளேயிருந்த ஆத்மாபஹார தோஷத்தைப் போக்கி சிக்ஷித்து இந்த லோகத்திலே திருமாலுக்கு ஆளாம்படி பண்ணின பின்பு இதற்கு மாறான வேறு எந்த தப்பு விஷயமும் என் மனத்தில் பொருந்தமாட்டாது.

879 பொய்யைச்சுரக்கும்பொருளைத்துரந்து இந்தப்பூதலத்தே
மெய்யைப்புரக்குமிராமானுசன்நிற்க வேறுநம்மை
உய்யக்கொள்ளவல்லதெய்வமிங்குயாதென்றுலர்ந்துஅவமே
ஐயப்படாநிற்பர் வையத்துள்ளோர்நல்லறிவிழந்தே. 79

பொய்யான விஷயத்தையே மேன்மேலும் வெளிப்படுத்துகிற (புறமதத்தவர்களின்) அர்த்தங்களைக் கண்டித்து, இப்பூமியிலே ஸத்யத்தை ரக்ஷிக்கிற எம்பெருமானார் எழுந்தருளியிருக்கும்போது (இவரைக் கணிசியாமல்) இப்பூமியில் உள்ளவர்கள் 'நம்மை உஜ்ஜீவிக்கச் செய்யக் கூடிய வேறு ஏதாவது தேவதை உண்டோ?' என்று (விசாரித்துக் கொண்டு) மனவருத்தத்தாலே உடம்பு உலர்ந்து (எம்பெருமானார் திருவடிகளே சரணம் என்றிருக்கையாகிற) நல்ல ஞானம் பெறாமல் வீணாக ஸம்சயப்படா நின்றார்கள். ஐயோ!

880 நல்லார்பரவுமிராமானுசன் திருநாமம்நம்ப
வல்லார்திறத்தைமறவாதவர்கள்யவர் அவர்க்கே
எல்லாவிடத்திலுமென்றுமெப்போதிலும்எத்தொழும்பும்
சொல்லால்மனத்தால் கருமத்தினால்செய்வன்சோர்வின்றியே. 80

ஸத்துக்களாலே கொண்டாடப்படுகிற எம்பெருமானருடைய திருநாமத்தை (தங்களுக்குத் தஞ்சமாக) நம்பியிருக்க வல்லவர்களுடைய படிகளை மறவாமல் எப்போதும் சிந்திப்பவர்கள் யாரோ, அப்படிப்பட்ட ஸ்ரீராமாநுஜபக்தர்களுக்கே ஸகல தேசங்களிலும் ஸகல அவஸ்தைகளிலும் ஸகலகாலங்களிலும் ஸகலவித கைங்கர்யங்களையும் மனமொழி மெய்களென்னும் த்ரிகரணங்களாலும் பிரியாதே யிருந்து செய்வேன்.

881 சோர்வின்றியுன்தன்துணையடிக்கீழ் தொண்டுபட்டவர்பால்
சார்வின்றிநின்றவெனக்கு அரங்கன்செய்யதாளிணைகள்
பேர்வின்றியின்றுபெறுத்துமிராமானுச இனியுன்
சீரொன்றியகருணைக்கு இல்லைமாறுதெரிவுறிலே. 81

தேவரீருடைய உபய பாதங்களின்கீழே சேராமல் அடிமைப்பட்டவர்கள் விஷயத்தில் பொருத்தமில்லாமல் இருந்த எனக்கு இன்றைத்தினத்தில் பெரிய பெருமாளுடைய சிவந்த திருவடியிணைகளை ஒருகாலும் விட்டு நீங்காதபடி சிரோபூஷணமாகத் தந்தருளின எம்பெருமானாரே! இப்படியான பின்பு ஆராயுமளவில் தேவரீருடைய சிறந்த திருவருளுக்கு ஒப்பு இல்லை.

882 தெரிவுற்றஞானம்செறியப்பெறாது வெந்தீவினையால்
உருவற்றஞாலத்துழல்கின்றவென்னை ஒருபொழுதில்
பொருவற்றகேள்வியனாக்கிநின்றான் என்னபுண்ணியனோ
தெரிவுற்றகீர்த்தி இராமானுசனென்னும்சீர்முகிலே. 82

தெளிவான ஞானத்தைச் சேரப்பெறாமல் மிகவும் கொடிதான கருமத்தாலே உபயோகமற்ற ஞானத்தை உடையனாய், (ஒன்றிலும் நிலையில்லாமல்) திரிகின்ற என்னை ஒரு க்ஷணகாலத்தில் ஒப்பற்ற பஹுச்ருதர்களாக ஆக்கியருளியவரும், ப்ரஸித்தமான புகழை உடையவரும் (ஔதார்யத்தில்) சிறந்த மேகமென்னத் தக்கவருமான எம்பெருமானார் என்ன தார்மிகரோ? (ஒப்பற்ற தர்மிஷ்டரென்றபடி.)

884 சீர்கொண்டுபேரறம்செய்து நல்வீடுசெறிதுமென்னும்
பார்கொண்டமேன்மையர்கூட்டனல்லேன் உன்பதயுகமாம்
ஏர்கொண்டவீட்டையெளிதினிலெய்துவன் உன்னுடைய
கார்கொண்டவண்மை இராமானுசஇதுகண்டுகொள்ளே. 83

எம்பெருமானாரே! சமம் தமம் முதலிய குணங்களை உடையராய், சிறந்த தருமமாகிய சரணாகதியோகத்தை அநுஷ்டித்து, பரமபுருஷார்த்தமான மோக்ஷத்தை அடைந்திடுவோம் என்றிருக்கிற ப்ரஸித்தமான ப்ரபாவத்தையுடைய ப்ரபந்நர்களுடைய கோஷ்டியில் நான் சேர்ந்தவனல்லேன்; தேவரீருடைய உபயபாதங்களாகிற பரமவிலக்ஷணமான மோக்ஷத்தை ஸுலபமாக அடைந்திடுவேன்; (ஔதார்யத்தில்) மேகத்தை வென்றிருக்கிற தேவரீருடைய ஔதார்யம் இப்படிப்பட்டது; தேவரீரே இதனைக் கண்டு கொள்ளலாம். (அடியேன் சொல்ல வேணுமோ?)

884 கண்டுகொண்டேனெம்பிராமானுசன்தன்னை காண்டலுமே
தொண்டுகொண்டேனவன்தொண்டர்பொற்றாளில் என்தொல்லைவெந்நோய்

விண்டுகொண்டேனவன்சீர்வெள்ளவாரியைவாய்மடுத்தின்று
உண்டுகொண்டேன் இன்னமுற்றனஓதிலுலப்பில்லையே. 84

ஸ்வாமி எம்பெருமானாரை இன்று (உள்ளபடி) தெரிந்து கொண்டேன். இப்படித் தெரிந்து கொண்டவளவிலே அவரது பக்தர்களுடைய அழகிய திருவடிகளில் அடிமைப்பட்டேன். (அதனால்) எனது பழைய கொடுவினைகளை நீக்கிக் கொண்டேன். அவருடைய கல்யாணகுண ப்ரவாஹமாகிற கடலை வாயார அநுபவிக்கப் பெற்றேன். இப்படியாக இன்னமும் நான் பெற்ற நன்மைகளை சொல்லத் தொடங்கினால் (அதுக்கு) ஒரு முடிவு கிடையாது.

885 ஓதியவேதத்தினுட்பொருளாய் அதனுச்சிமிக்க
சோதியை நாதனெனவறியாதுஉழல்கின்றதொண்டர்
பேதைமைதீர்த்தவிராமானுசனைத்தொழும்பெரியோர்
பாதமல்லாலென்தன்னாருயிர்க்கு யாதொன்றும்பற்றில்லையே. 85

அத்யயநம் பண்ணப்படுகிற வேதங்களின் உட்பொருளாயும் அந்த வேதங்களின் முடிவாகிய உபநிஷத்துக்களிலே மிகவும் விளங்குபவனாயுமுள்ள ஸ்ரீமந்நாராயணனை ஸர்வசேஷியென்று தெரிந்து கொள்ளாமல் கண்டவிடங்களிலும் அடிமை செய்து திரிகின்ற பாமரர்களுடைய அவிவேகத்தைப் போக்கடித்த எம்பெருமானாரை ஸேவிக்கின்ற மஹான்களுடைய திருவடிகளைத் தவிர எனது அருமையான ஆத்மாவுக்கு வேறு ஏதேனும் புகலிடமில்லை.

886 பற்றாமனிசரைப்பற்றி அப்பற்றுவிடாதவரே
உற்றாரெனவுழன்று ஓடிநையேனினி ஒள்ளியநூல்
கற்றார்பரவுமிராமானுசனைக் கருதுமுள்ளம்
பெற்றார்யவர் அவரெம்மைநின்றாளும்பெரியவரே. 86

உபயோகமற்ற மநுஷ்யர்களைப் பற்றி அந்தப் பற்றுதலை விடாமல் அவர்களையே உறவினர்களாகக் கொண்டு அவர்கள் பின்னே அலைந்து அவர்களிட்ட காரியங்களைச் செய்ய ஓடி இனிமேல் துவளமாட்டேன். சிறந்த சாஸ்த்ரங்களைக் கற்றவர்களாலே கொண்டாடப்படுகிற எம்பெருமானாரை அநுஸந்திக்கும்படியான நெஞ்சை உடையயோர் யாவரோ அந்த மஹான்களே நம்மை சாச்வதமாக அடிமைகொள்ளும் மஹாத்மாக்கள்.

887 பெரியவர்பேசிலும்பேதையர்பேசிலும் தன்குணங்கட்கு
உரியசொல்லென்றுமுடையவனென்றென்று உணர்வில்மிக்கோர்
தெரியும்வண்கீர்த்தியிராமானுசன் மறைதேர்ந்துலகில்
புரியுநன்ஞானம் பொருந்தாதவரைப்பொரும்கலியே. 87

ஞானசக்திகளால் நிறைந்த மஹான்கள் பேசினாலும், ஒன்றும் தெரியாதவர்கள் பேசினாலும் தனது திருக்குணங்களுக்கு ஏற்ற சொற்களை எப்போதும் உடையவர் என்று பலகாலும் சொல்லி சிறந்த ஞானிகள்அநுஸந்திக்கிற திவ்யகீர்த்தியை உடையவரான எம்பெருமானார் வேதங்களை ஆராய்ந்து இவ்வுலகத்தில் உபதேசித்தருளின நல்ல ஞானத்தில் சேராதவர்களை கலிபுருஷன் பீடிப்பான்.

888 கலிமிக்கசெந்நெல்கழனிக்குறையல் கலைப்பெருமான்
ஒலிமிக்கபாடலையுண்டுதன்னுள்ளம்தடித்து அதனால்
வலிமிக்கசீயமிராமானுசன் மறைவாதியராம்
புலிமிக்கதென்று இப்புவனத்தில்வந்தமைபோற்றுவனே. 88

நிலவளம் மிகுந்த செந்நெற்கழனிகளை உடைய திருக்குறையலூரில் அவதரித்தவராய், சாஸ்த்ரமென்னும்படியான திவ்யப்ரபந்தங்களை அருளிச்செய்த பெருமைவாய்ந்த திருமங்கையாழ்வாருடைய அதிசயித்த இசையை உடைய பெரிய திருமொழியை அநுபவித்துத் தமது திருவுள்ளம் பூரித்து அத்தால் மிடுக்கு அதிகரித்த சிங்கம் போன்ற எம்பெருமானார் வேதத்தில் துர்வாதங்கள் பண்ணுகிற குத்ருஷ்டிகளாகிற புலிகள் அதிகமாகிவிட்டன என்று (அவற்றை தண்டிப்பதற்காக) இவ்வுலகில் அவதரித்தபடியைப் புகழ்ந்திடக் கடவேன்.

889 போற்றரும்சீலத்திராமானுச நின்புகழ்தெரிந்து
சாற்றுவனேல் அதுதாழ்வதுதீரில் உன்சீர்தனக்கோர்
ஏற்றமென்றேகொண்டிருக்கிலும் என்மனமேத்தியன்றி
ஆற்றகில்லாது இதற்கென்னினைவாய்என்றிட்டஞ்சுவனே. 89

புகழ்ந்து தலைக்கட்ட முடியாத சீலகுணத்தையுடைய எம்பெருமானாரே! தேவரீருடைய திருக்குணங்களை உணர்ந்து பேசுவானாகில் (நீசனாகிய நான்) பேசுகிறவது (தேவரீருக்கு) அவத்யமாம். அப்படி நான் செய்வது தவிர்ந்தால் தேவரீருடைய திருக்குணங்களுக்கு மேன்மையாகும் என்று நான் தெரிந்து கொண்டிருந்தாலும் எனது நெஞ்சானது (தேவரீருடைய திருக்குணங்களைப்) புகழ்ந்தல்லது தரித்திருக்க மாட்டாது. இவ்விஷயத்தில் தேவரீர் என்ன நினைக்குமோ என்று பயப்படுகிறேன்.

890 நினையார்பிறவியைநீக்கும்பிரானை இந்நீணிலத்தே
எனையாளவந்தவிராமானுசனை இருங்கவிகள்
புனையார்புனையும்பெரியவர்தாள்களில் பூந்தொடையல்
வனையார் பிறப்பில்வருந்துவர்மாந்தர்மருள்சுரந்தே. 90

ஸம்ஸாரத்தை யொழிக்கும் உபகாரகராயும், இப்பெரிய பூமியிலே என்னை அடிமை கொள்வதற்கே அவதரித்தவராயுமுள்ள எம்பெருமானாரை சிந்தியாதவர்களாயும், (அவர் விஷயமாக) நல்ல பாடல்களைப் பாடாதவர்களாயும் (ஏதோ பாக்கியத்தாலே) பாடல்களைப் பாடுகிற மஹான்களின் திருவடிகளில் புஷ்ப மாலைகளை ஸமர்ப்பியாதவர்களாயுமுள்ள மனிதர்கள் அஜ்ஞானம் அதிகமாகப் பெற்று ஸம்ஸாரத்தில் கிடந்து துன்பப்படுவர்கள்.

891 மருள்சுரந்துஆகமவாதியர்கூறும் அவப்பொருளாம்
இருள்சுரந்தெய்த்தவுலகிருள்நீங்க தன்னீண்டியசீர்
அருள்சுரந்தெல்லாவுயிர்கட்கும்நாதன் அரங்கனென்னும்
பொருள்சுரந்தான் எம்பிராமானுசன்மிக்கபுண்ணியனே. 91

(சிவன் சொன்ன) சைவ ஆகமத்தைப் பிரமாணமாகக் கொண்டு வாதம் பண்ணுகிற பாசுபதர்கள் அதிகரிக்கப் பெற்று, (சிவனுடைய பரத்வவிஷயமாகச்) சொல்லுகிற நீசமான

அர்த்தங்களாகிற இருள் மேலிட்டு (அதனால்) கெட்டுப்போன உலகத்தவர்களுடைய அஜ்ஞாநாந்தகாரமானது போகும்படியாகத் தம்முடைய விலக்ஷணமான க்ருபையைப் பெருக்கி, 'எல்லாப் பிராணிகளுக்கும் ஸ்வாமி ஸ்ரீரங்கநாதனே' என்கிற அர்த்தத்தை வெளியிட்டவரான ஸ்வாமி எம்பெருமானார் சிறந்த புண்யாத்மா.

892 புண்ணியநோன்புபுரிந்துமிலேன் அடிபோற்றிசெய்யும்
நுண்ணருங்கேள்விநுவன்றுமிலேன் செம்மைநூற்புலவர்க்
கெண்ணருங்கீர்த்தியிராமானுச இன்றுநீபுகுந்துஎன்
கண்ணுள்ளும்நெஞ்சுள்ளும் நின்றவிக்காரணம்கட்டுரையே. 92

நல்ல சாஸ்த்ரங்களைக் கற்றுக் கவிசொல்ல வல்லவர்களுக்கும் அளவிடமுடியாத கீர்த்தியை உடைய எம்பெருமானாரே! புண்ணியமான ஒரு விரதத்தையும் அடியேன் அனுஷ்டிக்கவில்லை. தேவரீருடைய திருவடிகளை வாழ்த்துகைக்கு உறுப்பான ஸூக்ஷ்மமாய் அருமையான ச்ரவணத்தைச் (செய்ய வேணுமென்று வாயாலே) சொல்லவுமில்லை. (அப்படியிருந்தும்) இன்று அடியேனது கண்ணினுள்ளேயும் நெஞ்சினுள்ளேயும் புகுந்து எழுந்தருளியிருப்பதற்குக் காரணம் அருளிச்செய்ய வேணும்.

893 கட்டப்பொருளைமறைப்பொருளென்று கயவர்சொல்லும்
பெட்டைக்கெடுக்கும்பிரானல்லனே என்பெருவினையைக்
கிட்டிக்கிழங்கொடு தன்னருளென்னுமொள்வாளுருவி
வெட்டிகளைந்த இராமானுசனென்னும்மெய்த்தவனே. 93

அடியேன் பக்கல் வந்து நெருங்கித் தம்முடைய க்ருபையாகிற அழகிய வாளை உறையில் நின்றும் கழற்றி (அதனால்) எனது மஹாபாபங்களை வேரோடே அறுத்தொழித்த எம்பெருமானாரென்கிற மாமுனிவர் (எப்படிப்பட்டவர் என்றால்) துஷ்டர்களான குத்ருஷ்டிகள் தப்பான அர்த்தங்களை வேதங்களின் அர்த்தமாகக் கொண்டு சொல்லுகிற பிரட்டுப்பேச்சுக்களைக் கண்டித்தொழித்த மஹாநுபாவரன்றோ!

894 தவந்தரும்செல்வம்தகவும்தரும் சலியாப்பிறவிப்
பவந்தரும்தீவினைபாற்றித்தரும் பரந்தாமமென்னும்
திவந்தரும் தீதிலிராமானுசன்தன்னைச்சார்ந்தவர்கட்கு
உவந்தருந்தேன் அவன்சீரன்றியானொன்றுமுள்மகிழ்ந்தே. 94

எவ்வகைக் குற்றமும் அற்றவரான எம்பெருமானார் தம்மை வந்து அடைந்தவர்களுக்கு சரணாகதி நிஷ்டையைக் கொடுத்தருள்வர். பக்தியாகிற செல்வத்தையும் தமது அருளையும் கொடுத்தருள்வர். நிவர்த்திக்க முடியாத ஜந்ம ஸம்ஸாரங்களை உண்டாக்குகின்ற கொடுவினைகளைப் போக்கடித்தருள்வர். பரமபதமென்று சொல்லப்படுகிற வானுலகத்தை அளிப்பர். (ஆனபின்பு) அடியேன் அவ்வெம்பெருமானாருடைய திருக்குணங்களைத் தவிர்த்து வேறொன்றையும் மனக்காதலோடே விரும்பி அனுபவிக்க மாட்டேன்.

895 உண்ணின்றுயிர்களுக்குற்றனவேசெய்து அவர்க்குயவே
பண்ணும்பரனும் பரிவிலனாம்படி பல்லுயிர்க்கும்

விண்ணின்தலைநின்றுவீடளிப்பானெம்மிராமானுசன்
மண்ணின்தலத்துதித்து உய்மறைநாலும்வளர்த்தனனே. 95

எல்லா ஆத்மாக்களுக்கும் அந்தர்யாமியாயிருந்து கொண்டு ஹிதமானவற்றையே நடத்திக் கொண்டு அவ்வாத்மாக்களுக்கு உஜ்ஜீவனத்தையே பண்ணிக் கொண்டிருக்கிற எம்பெருமானும் (ஆத்மாக்களிடத்தில் எம்பெருமானாரைப் போல்) ப்ரீதி உடையவனல்லன் என்ன வேண்டும்படியாக ஸகல ஆத்மாக்களுக்கும் மோக்ஷத்தை அருள்வதற்காக ஸ்வாமி எம்பெருமானார் ஸ்ரீவைகுண்டத்தில் நின்றும் இப்பூதலத்திலே அவதரித்து எல்லார்க்கும் உஜ்ஜீவந ஹேதுவான நான்கு வேதங்களையும் குறைவின்றி வளரச் செய்தருளினார்.

896 வளரும்பிணிகொண்டவல்வினையால் மிக்கநல்வினையில்
கிளரும்துணிவுகிடைத்தறியாது முடைத்தலையூன்
தளருமளவும்தரித்தும்விழுந்தும்தனிதிரிவேற்கு
உளரெம்மிறைவர் இராமானுசன்தன்னையுற்றவரே. 96

அளவற்ற துன்பங்களை உண்டாக்கவல்ல கொடிய கருமங்களாலே பரம தர்மமான சரணாகதியில் மஹாவிச்வாஸம் கிடைக்காததனால் கெட்ட நாற்றங்களுக்கு இருப்பிடமான சரீரம் கட்டுக் குலையும் வரையில் ஒருவாறு தரித்திருந்தும் (சப்தாதி விஷயங்களிலே) போய் விழுந்தும் துணையின்றித் திரிகிற எனக்கு ஸ்வாமிகள் (யாரென்றால்) நம் எம்பெருமானாரை ஆச்ரயித்த மஹான்கள் இருக்கிறார்கள்.

897 தன்னையுற்றாட்செய்யும்தன்மையினோர் மன்னுதாமரைத்தாள்
தன்னையுற்றாட்செய்யஎன்னையுற்றானின்று தன்தகவால்
தன்னையுற்றாரன்றித் தன்மையுற்றாரில்லையென்றறிந்து
தன்னையுற்றாரை இராமானுசன்குணம்சாற்றிடுமே. 97

எம்பெருமானாரானவர் தம்மைப் பற்றியிருப்பார்களுடைய குணகீர்த்தனம் பண்ணும் ஸ்வபக்தர்கள் ஒருவருமில்லை என்று திருவுள்ளம் பற்றி அடியேனை இன்றைத் தினத்தில் தமது அருளாலே (என்ன செய்தார் என்றால்) தம்மையடைந்து கைங்கர்யம் பண்ணும் ஸ்வபாவமுடையரான ஸ்வபக்தர்களுடைய ஒன்றோடொன்று சேர்ந்த திருவடித் தாமரைகளை நான் அடைந்து ஆட்செய்யும்படி வைத்தருளினார்.

898 இடுமேயினியசுவர்க்கத்தில் இன்னம்நரகிலிட்டுச்
சுடுமே அவற்றைத்தொடர்தருதொல்லை சுழல்பிறப்பில்
நடுமேயினிநம்மிராமானுசன் நம்மைநம்வசத்தே
விடுமேசரணமென்றால் மனமேநையல்மேவுதற்கே. 98

நம் எம்பெருமானார் உமது திருவடிகளே சரணமென்று நாம் சொல்லி விட்டோமானால் (சிலர்க்கு) இனிதாகத் தோன்றுகிற ஸ்வர்க்கத்திலே நம்மைக் கொண்டு சேர்த்திடுவரோ? அல்லது நரகத்திலே கொண்டு தள்ளி தஹிக்கச் செய்வரோ? அந்த ஸ்வர்க்க நரகங்களைத் தொடர்ந்து கிடக்கிற அநாதியாயும் சுழன்று வருவதாயுமுள்ள ஜந்மத்திலே நிறுத்துவரோ? மேலுள்ள காலங்களில் நம்மை நாம் போகிற வழியே விட்டு

வைப்பரோ? (இவை செய்யமாட்டாரான பின்பு) ஒ நெஞ்சே! பேறு பெறும் விஷயமாக நீ கரையவேண்டா.

899 தற்கச்சமணரும்சாக்கியப்பேய்களும் தாழ்சடையோன்
சொற்கற்றசோம்பரும்சூனியவாதரும் நான்மறையும்
நிற்கக்குறும்புசெய் நீசரும்மாண்டனர்நீணிலத்தே
பொற்கற்பகம் எம்மிராமானுசமுனிபோந்தபின்னே. 99

தர்க்கம் பண்ணுகிற சமணர்களும், பேய்போலே பிடித்த பிடி விடாதே நிற்கிற பௌத்தர்களும், ருத்ரனுடைய சொல்லாகிய சைவாகமத்தைக் கற்ற தாமஸர்களான சைவர்களும் சூந்யவாதிகளும் நான்கு வேதங்களும் ஏங்கிக் கொண்டிருக்கச் செய்தே (அவற்றுள்) சேராத அபார்த்தங்களைப் பண்ணுகிற குத்ருஷ்டிகளும் ஒழிந்தார்கள். (எப்போது என்றால்) சிறந்த கல்பகவ்ருக்ஷம் போலே உதாரரான எம்பெருமானார் விசாலமான இப்பூமியிலே திருவவதரித்த பின்பு.

900 போந்ததென்னெஞ்சென்னும்பொன்வண்டு உனதடிப்போதிலொண்சீ
ராந்தெளிதேனுண்டமர்ந்திடவேண்டி நின்பாலதுவே
ஈந்திடவேண்டுமிராமானுச இதுவன்றியொன்றும்
மாந்தகில்லாது இனிமற்றொன்றுகாட்டிமயக்கிடலே. 100

எம்பெருமானாரே! எனது நெஞ்சாகிற அழகிய வண்டானது தேவரீருடைய திருவடிடத் தாமரைகளில் அழகிய குணங்களாகிற தேனைப் பருகி நித்யவாஸம் பண்ணவிரும்பி தேவரீரிடத்தில் வந்து சேர்ந்தது. அத் திருக்குணங்களையே அளித்தருளவேணும். இத்திருக்குணங்களைத் தவிர வேறொன்றையும் (நெஞ்சு) புஜிக்கமாட்டாது. இப்படியானபின்பு வேறொரு விஷயத்தைக் காட்டி மயக்கவேண்டா.

901 மயக்குமிருவினைவல்லியில்பூண்டு மதிமயங்கித்
துயக்கும்பிறவியில்தோன்றியவென்னை துயரகற்றி
உயக்கொண்டுநல்குமிராமானுச என்றதுன்னையுன்னி
நயக்குமவர்க்கிதிழுக்கென்பர் நல்லவரென்றுநைந்தே. 101

"அஜ்ஞாநத்தை விளைக்க வல்ல புண்ய பாபமென்னும் இரு கர்மங்களாகிற விலங்கில் அகப்பட்டுக்கொண்டு அறிவுகெட்டு ப்ரமிக்கச்செய்கிற ஸம்ஸாரத்திலே பிறந்த அடியேனை துக்கங்களைப் போக்கி உஜ்ஜீவிக்கச் செய்து அருள் செய்கின்ற எம்பெருமானாரே!" என்று தேவரீருடைய பாவநத்வத்தைப் பேசுகையாகிற இது தேவரீரை அநுஸந்தித்து உருகி எப்போதும் ஆசையுடன் இருப்பவர்களுக்கு தகாதது என்று ஸத்துக்கள் சொல்லுவர்கள்.

902 நையும்மனமுன்குணங்களையுன்னி எந்நாவிருந்தெம்
ஐயனிராமானுசனென்றழைக்கும் அருவினையேன்
கையும்தொழும் கண் கருதிடுங்காணக்கடல்புடைசூழ்
வையமிதனில் உன்வண்மைஎன்பாலென்வளர்ந்ததுவே. 102

(எம்பெருமானாரே) எனது நெஞ்சானது தேவரீருடைய திருக்குணங்களைச் சிந்தித்து கரைகின்றது. எனது வாக்கானது நிலைநின்று எமக்கு ஸ்வாமியான

எம்பெருமானாரே என்று அழைக்கின்றது. மஹாபாபியான என்னுடைய கைகளும் அஞ்ஜலி பண்ணுகின்றன. கண்களானவை (தேவரீரை) ஸேவிக்க ஆசைப் படுகின்றன. சுற்றிலும் கடல் சூழப்பெற்ற இப்பூமண்டலத்தினுள்ளே தேவரீருடைய ஔ தார்யகுணம் அடியேன்மீது (இவ்விதமாக) வளர்ந்தருளக் காரணம் யாதோ?

903 வளர்ந்தவெங்கோபமடங்கலொன்றாய் அன்றுவாளவுணன்
கிளர்ந்தபொன்னாகம்கிழித்தவன் கீர்த்திப்பயிரெழுந்து
விளைந்திடும்சிந்தையிராமானுசன் என்தன்மெய்வினைநோய்
களைந்துநன்ஞானமளித்தனன் கையில்கனியென்னவே. 103

முன்னொரு காலத்தில் கடூரமான கோபம் மேலிடப் பெற்ற ஒரு நரசிங்க மூர்த்தியாகி வாளை உடைய ஹிரண்யாஸுரனது செருக்கினால் நெறித்திருந்த பொன்போன்ற மார்வை கிழித்துப் பொகட்டவனான எம்பெருமானுடைய திருப்புகழ்களாகிற பயிர் வளர்ந்து விளையப்பெற்ற திருவுள்ளத்தை உடையரான எம்பெருமானார் எனது உடலைப் பற்றியிருக்கிற வினைநோய்களையெல்லாம் ஒழித்து கையிலங்கு நெல்லிக்கனி போலே ஸுலபமாக விலக்ஷணமான ஞானத்தைத் தந்தருளினார்.

904 கையில்கனியென்னக்கண்ணனைக்காட்டித்தரிலும் உன்தன்
மெய்யிற்பிறங்கியசீரன்றிவேண்டிலன்யான் நிரயத்
தொய்யில்கிடக்கிலும் சோதிவிண்சேரிலும்இவ்வருள்நீ
செய்யில்தரிப்பன் இராமானுசஎன்செழுங்கொண்டலே. 104

(ஔதார்யத்தில்) விலக்ஷணமான மேகம் போன்ற எம்பெருமானாரே! (தேவரீர்) எம்பெருமானை உள்ளங்கை நெல்லிக்கனிபோலே காட்டிக் கொடுத்தாலும் தேவரீருடைய திருமேனியில் விளங்குகிற ஸௌந்தர்யம் முதலிய குணங்களைத் தவிர வேறொன்றிலும் நான் கண்வைக்கமாட்டேன். ஸம்ஸார நரகக் குழியில் அழுந்திக் கிடந்தேனாகிலும் சோதிமயமான பரமபதத்தை அடைந்தேனாகிலும் (தேவரீருடைய) திருமேனியழகை அனுபவித்திருக்கைக்கு உறுப்பான கிருபையை தேவரீர் செய்தருளினால்தான் (ஸம்ஸாரத்திலோ மோக்ஷத்திலோ) கால்பாவி நிற்பேன்.

905 செழுந்திரைப்பாற்கடல் கண்துயில்மாயன் திருவடிக்கீழ்
விழுந்திருப்பார்நெஞ்சில்மேவுநன்ஞானி நல்வேதியர்கள்
தொழுந்திருப்பாதனிராமானுசனைத் தொழும்பெரியோர்
எழுந்திரைத்தாடுமிடம் அடியேனுக்கிருப்பிடமே. 105

அழகிய அலைகளையுடைய திருப்பாற்கடலில் பள்ளிகொண்டிராநின்ற ஸர்வேச்வரனுடைய திருவடிகளின் கீழே விழுந்து கிடக்கும் மஹான்களுரைடய ஹ்ருதயத்திலே பொருந்தி எழுந்தருளியிருக்கிற சிறந்த ஞானியாயும் நல்ல வைதிகர்களால் ஸேவிக்கப்பட்ட திருவடிகளை உடையராயுமிருக்கிற எம்பெருமானாரை ஸேவிக்கின்ற மஹாத்மாக்கள் உடம்பு இருந்தவிடத்தில் இராமல் கிளர்ந்து கோஷித்துக் கொண்டு கூத்தாடும் இடம் அடியேன் வஸிக்குமிடமாகும்.

906 இருப்பிடம்வைகுந்தம்வேங்கடம் மாலிருஞ்சோலையென்னும்
பொருப்பிடம்மாயனுக்கென்பர்நல்லோர் அவைதன்னொடும்வந்
திருப்பிடம்மாயனிராமானுசன்மனத்துஇன்றவன்வந்
திருப்பிடம் என்தனிதயத்துள்ளேதனக்கின்புறவே. 106

ஸர்வேச்வரனுக்கு வாஸஸ்தானம் (எவை என்றால்) பரமபதமும் திருவேங்கட மலையும் திருமாலிருஞ்சோலையென்கிற திருமலையும் (ஆகிய இவையாம்) என்று ஸத்துக்கள் சொல்லுவர்கள். (இவற்றை இருப்பிடமாக உடைய) ஸர்வேச்வரன் அந்த ஸ்ரீவைகுண்டம் முதலியவற்றோடேகூட வந்து எழுந்தருளியிருப்பது எம்பெருமானாருடைய திருவுள்ளத்திலேயாம். அவ்வெம்பெருமானார்தாம் இப்போது வந்து தமக்கு ஆநந்தமாக எழுந்தருளியிருப்பது அடியேனுடைய ஹ்ருதயத்திலேயாம்.

907 இன்புற்றசீலத்திராமானுச என்றுமெவ்விடத்தும்
என்புற்றநோயுடல்தோறும்பிறந்திறந்து எண்ணரிய
துன்புற்றுவீயினும்சொல்லுவதொன்றுண்டுஉன்தொண்டர்கட்கே
அன்புற்றிருக்கும்படி என்னையாக்கியங்காட்படுத்தே. 107

ஆநந்தபூர்ணராயெழுந்தருளியிருக்கிற ஸௌசீல்யகுணமுடைய எம்பெருமானாரே! தேவரீரிடத்தில் அடியேன் விஜ்ஞாபிக்கவேண்டிய விஷயம் ஒன்றுண்டு. (அஃது என்னவென்றால்) எலும்பிலே உறைந்து நலியக்கூடிய வியாதிகளுக்கு இருப்பிடமான சரீரங்களிலெல்லாம் பிறப்பதும் இறப்பதுமாகி எண்ணமுடியாத துன்பங்களை அநுபவித்து முடிந்துபோனாலும் எல்லாக் காலங்களிலும் எல்லா இடங்களிலும் தேவரீருடைய பக்தர்கள் விஷயத்திலேயே பக்தனாயிருக்கும்படி அடியேனைச் செய்தருளி அந்த பக்தர்களிடத்தில் அடியேனை ஆட்படுத்தியருளவேணும். (இதுவே அடியேனுடைய வேண்டுகோள்.)

908 அங்கயல்பாய்வயல்தென்னரங்கன் அணியாகமன்னும்
பங்கயமாமலர்ப்பாவையைப்போற்றுதும் பத்தியெல்லாம்
தங்கியதென்னத்தழைத்துநெஞ்சேநம்தலைமிசையே
பொங்கியகீர்த்தி இராமானுசனடிப்பூமன்னவே. 108

ஓ மனமே! பக்தியெல்லாம் நம்மிடத்திலே குடிகொண்டதென்று சொல்லும்படியாக வீறுபெற்று, பரந்த புகழை யுடையரான எம்பெருமானாருடைய திருவடித்தாமரைகள் நமது தலைமேலே நித்யவாஸம் பண்ணும்படியாக (நாம் செய்ய வேண்டிய காரியம் என்னவென்றால்) அழகிய கயல் மீன்கள் பாய்கிற கழனிகள் சூழ்ந்த தென்னரங்கத்தில் உறையும் பெருமாளுடைய அழகிய திருமார்பிலே நித்யவாஸம் பண்ணுகிறவனாய் சிறந்த தாமரைப் பூவில் பிறந்த பதுமை போன்றவளான ஸ்ரீமஹாலக்ஷ்மியை வாழ்த்துவோம்.

மணவாளமாமுனிகள் அருளிச்செய்த ஆர்த்திப்ரபந்தம்

909 வாழி யெதிராசன் வாழி யெதிராசன்
வாழியெதிராசனென வாழ்த்துவார் – வாழியென
வாழ்த்துவார் வாழியென வாழ்த்துவார் தாளிணையில்
தாழ்த்துவார் விண்ணோர் தலை. 1

எப்போதும் எம்பெருமானார்க்கே மங்களாசாஸனம் செய்பவர்கள் யாவரோ அவர்கள் வாழ வேண்டும் என்றிப்படி ஸ்ரீராமாநுஜபக்தர்களுக்கு மங்களாசாஸனம் செய்பவர்கள் வாழவேண்டும் என்றிப்படி ராமானுஜ பக்தபக்தர்களுக்கு மங்களாசாஸனம் செய்பவர்களது உபய பாதங்களிலே நித்யசூரிகள் தலையை வணங்கி நமஸ்கரிப்பர்கள்.

910 இராமானுசாய நமவென்று சித்தித்
திராமானுசரோடிறைப்போழ்–திராமாநு
சிந்திப்பார் தாளிணையிற சேர்ந்திருப்பார் தாளிணையை
வந்திப்பார் விண்ணோர்கள் வாழ்வு. 2

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: என்று இதையே அநுஸந்தானம் செய்து கொண்டு இருக்கமாட்டாத மனிதர்களோடு கூடி நொடிப்பொழுதும் ஸஹவாஸம் செய்ய முடியாதபடி சிந்தை கொண்டிருப்பவர்களது உபய பாதங்களில் அந்வயித்திருப்பவர்களது உபயபாதங்களைத் தொழுதேத்துமவர்கள் நித்யஸூரிகளையும் வாழ்விக்க வல்லவராவர்.

911 தந்தைநற்றாய் தாரம் தனயர் பெருஞ்செல்வம்
என்றனக்கு நீயே யெதிராசா – இந்த நிலைக்
கேராத விவ்வுடலை யின்றே யறுத்தருளப்
பாராததென்னோ பகர். 3

எம்பெருமானாரே! நல்ல தகப்பனாரும் தாயாரும் மனைவியரும் மக்களும் மஹத்தான ஸம்பத்துமாகிய எல்லாம் எனக்கு தேவரீரோவீர் என்று இங்ஙனே கொண்டிருக்கும் அத்யவஸாயத்திற்கு ஏற்றிருக்கமாட்டா இந்த ப்ராக்ருத தேஹத்தை இன்றைக்கே தொலைக்கத் திருவுள்ளம் பற்றாமலிருப்பது என்ன காரணத்தினாலோ? அருளிச்செய்ய வேணும்.

912 இந்தவுடற் சிறைவிட்டு எப்பொழுது யானேகி
அந்தமில் பேரின்பத்துளாகுவேன் – அந்தோ
இரங்காயெதிராசா என்னையினி யுய்க்கை
பரங்காண் உனக்குணர்ந்து பார். 4

எம்பெருமானாரே! ப்ராக்ருத சரீரத்தோடு வாழ்வதாகிற இந்தச் சிறையில் நின்று நீங்கி அடியேன் அர்ச்சிராதி மார்க்கத்தாலே சென்று ஒரு நாளும் முடிவில்லாத ப்ரம்மானந்த சாலியாக எப்பொழுது ஆகப்பெறுவேன்? ஐயோ! இரங்கியருள்கின்றீர் இல்லையே! அடியேன் வேறு புகலற்றேனான பின்பு என்னை உஜ்ஜீவிப்பித்தருள்வதானது தேவரீருக்கே அன்றோ பாரம். இதை ஆலோசித்துப் பாரீர்.

913 தன்புதல்வன் கூடாமல் தான் புசிக்கும் போகத்தால்
இன்புறுமோ தந்தை எதிராசா – உன்புதல்வன்
அன்றோ உரையாய் யான் ஆதலால் உன்போகம்
நன்றோ எனையொழிந்த நாள். 5

எம்பெருமானாரே! (உலகத்தில் பிதாவானவன் தன் புத்திரனோடு கூடியிராமல் தானொருவனே தனியாயிருந்து அநுபவிக்கின்ற போகத்தினால் ஆனந்திக்கலாகுமோ?

அடியேன் தேவரீரது புத்திரனல்லேனோ? அடியேன் உமது புதல்வனேயாதலால் உமது போகமானது என்னோடு கூடி அனுபவிக்கப் பெறாதபோது நல்லதாகுமோ?

914 வேம்பு முற்றக் கைப்பு மிகுவதுபோல் வெவ்வினையேன்
தீம்பு முற்றும் தேகமுற்றிச் செல்லுங்கால் – ஆம்பரிசால்
ஏற்கவே சிந்தித்தெதிராசா இவ்வுடலைத்
தீர்க்கவேயான வழி செய். 6

எம்பெருமானாரே! வேப்பம் பிஞ்சானது முற்ற முற்ற கைப்பு அதிகப்படுவது போல மஹா பாபியான அடியேனுடைய தேஹமானது முற்றி வருவதற்கேற்ப தீவினைகளும் முற்றி வாராநின்றன. ஸ்வரூபாநுரூபமாக முற்கோலிச் சிந்தித்து இந்த தேஹத்தைத் தீர்ப்பதற்கான உபாயம் செய்தருள்க.

915 அன்னை குடிநீர் அருந்தி முலையுண்குழவி
தன்னுடைய நோய்தன்னைத் தவிராளோ – என்னே
எனக்காவெதிராசா எல்லாம் நீ செய்தால்
உனக்கது தாழ்வோ உரை. 7

எம்பெருமானாரே! ஸ்தநந்தயப்ரஜையினுடைய வியாதியை (தவிர்க்க விரும்பிய) தாயானவள் தான் கஷாயம் குடித்துத் தவிர்க்க மாட்டாளோ? இது நான் சொல்ல வேணுமோ? அடியேனுக்காக எல்லா உபாயங்களையும் தேவரீரே அநுஷ்டித்தால் அது தேவரீர்க்குக் குறையாமோ? அருளிச்செய்ய வேணும்.

916 தன்குழவி வான்கிணற்றைச் சார்ந்திருக்கக் கண்டிருந்தாள்
என்பதன்றோ அன்னை பழியேற்கிறாள் – நன்குணரில்
என்னாலே என்னாசமேலும் எதிராசா
உன்னலேயாம் உறவை ஓர். 8

எம்பெருமானாரே! நன்றாக ஆராய்ந்து பார்க்குமளவில் நான் நசித்துப் போவது என்னாலேயானாலும், தேவரீரோடே உண்டாயிருக்கின்ற உறவைச் சிறிது ஆலோசித்துப் பார்க்க வேணும். தன்னுடைய குழந்தை பெரிய கிணற்றினருகே யிருக்க, அதை விலக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் என்கிற காரணத்தினால் அன்றோ தாயானவள் பழிக்குப் பாத்திரமாகிறாள்!

917 கூபத்தில் வீழுங் குழவியுடன் குதித்து அவ்
வாபத்தை நீக்குமந்த அன்னைபோல் – பாபத்தால்
யான் பிறப்பேனேலும் இனி எந்தை எதிராசன்
தான் பிறக்கும் என்னையுய்ப்பதா. 9

கிணற்றில் விழுங்குழந்தையுடனே தானும் குதித்து அந்த மரணாபத்தைத் தவிர்க்கின்ற அப்படிப்பட்ட வத்ஸலையான தாய்போல என் தீவினையினால் நான் ஸம்ஸாரக் கடலில் விழுந்து துவள்வேனாயினும் இனி அடியேனை உஜ்ஜீவனப்படுத்தும் பொருட்டு ஸ்வாமி எம்பெருமானார் இந்த ஸம்ஸார ஸாகரத்திலே தாமும் வந்து தோன்றினார்.

918 பூமகள்கோன் தென்னரங்கர் பூங்கழற்குப் பாதுகமாய்த்
தாமகிழும் செல்வச் சடகோபர் – தேமலர்த்தாட்
கேய்ந்தினிய பாதுகமாம் எந்தை இராமானுசனை
வாய்ந்தெனது நெஞ்சமே வாழ். 10

எனது மனமே! திருமகள் கொழுநனான ஸ்ரீரங்கநாதனுடைய திருவடிகளுக்குத் தாம் பாதுகையாயிருந்து கொண்டு மகிழ்கின்ற ஸ்ரீசடகோபருடைய தேன்மிக்க மலர் போன்ற திருவடிகளுக்குப் பொருந்தி ப்ரியமான பாதுகையாயிருக்கின்ற ஸ்வாமி எம்பெருமானாரை அடிபணிந்து மகிழ்வாயாக.

919 உன்னையொழிய ஒரு தெய்வம் மற்றறியா
மன்னுபுகழ்சேர் வடுகநம்பி – தன்னிலையை
என்றனக்கு நீதந்தெதிராசா எந்நாளும்
உன்றனக்கேயாட்கொள் உகந்து. 11

எம்பெருமானாரே! தேவரீரைத் தவிர வேறொரு தெய்வம் உண்டென்றறியாத சாச்வதமான கீர்த்தியை உடைய வடுகநம்பியினுடைய நிஷ்டையை தேவரீர் அடியேனுக்கு மகிழ்வுடனளித்து எக்காலத்திலும் உமக்கே ஆட்பட்டிருப்பேனாம்படி செய்துகொள்ளவேணும்.

920 தேசந்திகழுத் திருவாய்மொழிப்பிள்ளை
மாசில் திருமலையாழ்வார் என்னை – நேசத்தால்
எப்படியே யெண்ணி நின்பார் சேர்த்தார் எதிராசா
அப்படியே நீ செய்தருள். 12

எம்பெருமானாரே! (புகழால்) தேசந்தோறும் விளங்குகின்ற திருவாய்மொழிப் பிள்ளையென்கிற களங்கமற்ற திருமலையாழ்வார் என்னும் ஆசிரியர் பரமப்ரீதியுடனே அடியேன் திறத்தில் என்ன திருவுள்ளம் பற்றி தேவரீரைக் காட்டிக் கொடுத்தருளினாரோ அந்தத் திருவுள்ளம் நிறைவேறுமாறு தேவரீர் செய்தருள்க.

921 எதிராசன் வாழி எதிராசன் வாழி
எதிராசன் வாழியென்றென்றேத்தி – சதிராக
வாழ்வார்கள் தாளிணைக்கீழ் வாழ்வார்கள் பெற்றிடுவர்
ஆழ்வார்கள் தங்களருள். 13

அநவரதமும் எம்பெருமானார்க்கே மங்களாசாஸனம் செய்து ஒரு குறையுமின்றி வாழ்பவர்களான ஆழ்வான் போல்வாருடைய திருவடிவாரத்தின் கீழே வாழ்பவர்கள் தாம் ஆழ்வார்களுடைய பரமக்ருபையைப் பெறுவார்கள்.

922 அதிகாரமுண்டேல் அரங்கர் இரங்காரோ
அதிகாரம் இல்லாதார்க்கன்றோ – எதிராசா
நீ இரங்கவேண்டுவது நீயுமதிகாரிகளுக்
கேயிரங்கில் என் செய்வோம் யாம். 14

எம்பெருமானாரே! (கர்ம ஜ்ஞாந பக்தியோகாதிகளில்) யோக்யதை இருந்தால் எம்பெருமான் க்ருபை செய்ய மாட்டானோ? அப்படிப்பட்ட யோக்யதை அற்றவர்கள்

விஷயத்திலன்றோ தேவரீர் அருள் செய்யத் தகுவது. க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யர் என்று புகழ் பெற்ற தேவரீரும் யோக்யதை உள்ளவர்களுக்கே க்ருபைசெய்வதானால், அடியேன் செய்வதென்?

923 எம்பெருமானார் திருவடிகளே சரணம்
என்பதுவே நாவுரைக்கும் இத்தால் என் – அன்பவர்பால்
இப்போதளவும் யானொன்றுங்க காண்கின்றிலேன்
எப்போதுண்டாவதினி. 15

எனது நாவானது 'எம்பெருமானார் திருவடிகளே சரணம்' என்று சப்தமாத்ரத்தையே (ப்ரேமமின்றி) சொல்லாநின்றது. இந்த வெற்றுரையால் என்னாகும்? அவ்வெதிராசரிடத்தில் ப்ரேமம் இதுகாறும் சிறிதுமுண்டானதாக அடியேனுக்குத் தெரியவில்லை. அது இனிமேல் எந்நாளுண்டாகும்?

924 ஆகாததீதென்றறிந்தும் பிறர்க்குரைத்தும்
ஆகாததே செய்வனாதலால் – மோகாந்தன்
என்று நினைத்து என்னை இழழேல் எதிராசா
என்றுன்னடி சேர்வன் யான். 16

எம்பெருமானாரே! இது சாஸ்த்ர நிஷித்தம் என்று நான் தெரிந்து கொண்டிருந்தும் பரோபதேசங்கள் பண்ணியும் போந்தேனாகிலும் சாஸ்த்ர நிஷித்தங்களையே செய்து போருகிறேன். ஆகையினாலே என்னை மோஹாந்தனாகத் திருவுள்ளம் பற்றி விடலாகாது. அடியேன் எப்போது உமது திருவடியைச் சார்வேன்?

925 பொல்லாங்கனைத்தும் பொதிந்துகொண்டு நன்மையிலொன்று
இல்லா எனக்கும் எதிராசா – நல்லார்கள்
நண்ணும் திருநாட்டை நான் தருவேன் என்ற நீ
தண்ணென்றிருக்கிறதென். 17

எம்பெருமானாரே! தீதானவற்றையெல்லாம் மிகுதியாக மேற்கொண்டு நன்மைஎன்று பேர் பெற்றவற்றில் ஒன்றுகூட இல்லாத அடியேனுக்கும் நன்மை மிகுந்தவர்கள் அடையக் கூடிய திருநாட்டை அளிப்பதாக வாயோலை செய்து கொடுத்திருக்கிற தேவரீர் மெத்தென்றிருப்பது (தாமதிப்பது) என்ன காரணத்தினால்?

926 என்று விடிவதெனுக்கு எந்தாய் எதிராசா
ஒன்றும் அறிகின்றிலேன் உரையாய் – குன்றாமல்
இப்படியே இந்த உயிர்க்கென்றும் இருளே விளைக்கும்
இப்பவமாம் நீண்ட இரவு. 18

ஸ்வாமிந் எம்பெருமானாரே! ஒருநாளும் சுருங்காமல் இவ்வண்ணமாகவே எக்காலத்தும் இந்த ஆத்மாவுக்கு அஜ்ஞாநாந்தகாரத்தையே விளைக்கின்ற இந்த ஸம்ஸாரமாகிற காளராத்ரியானது என்வரையில் ஒய்வது எப்போதோ? இந்நாளில் ஒய்வதென்று சிறிதுமறிகிறிலேன். அந்நாளை தேவரீரே அருளிச்செய்ய வேணும்.

927 அல்லும் பகலும் யான் ஆக்கை வழியுமுழன்று
செல்லுமது உன் தேசுக்குத் தீங்கன்றோ – நல்லார்கள்

தந்தனயர் நீசர்க்காட்செய்யச் சகிப்பரோ
எந்தை எதிராசா இசை. 19

ஸ்வாமிந் எம்பெருமானாரே! அடியேன் இரவும் பகலும் தேஹம் இழுத்துக் கொண்டு போகும் வழியிலேயே சென்று திரிவதானது தேவரீருடைய தேஜஸ்ஸுக்கு நிறக் கேடல்லவோ? பெரியார்கள் தமது மக்கள் நீசர்க்கு இழிதொழில் செய்திருக்கும் இருப்பைக் கண்டு சகிப்பர்களோ?

928 போம்வழியைத் தருமென்னும் இன்பமெல்லாம் புசித்து வழிபோயமுத விரசையாற்றில் நான் முழுகி மலமற்றுத் தெளிவிசும்பை நண்ணி நலந்திகழ்மேனி தன்னைப் பெற்றுத் தாமமரர் வந்தெதிர்கொண்டலங்கரித்துச் சற்கரிப்ப மாமணி மண்டபத்துச் சென்று மாமலராள்கோன்மடியில் வைத்துகக்கும் வாழ்வு நமக்கு எதிராசனருளும் வாழ்வே.

'போம் வழியைத் தரும்' என்கிற அருளிச் செயலால் சொல்லப்படுகிற அர்ச்சிராதி மார்க்கப் பேரின்பம் எல்லாவற்றையும் அனுபவித்து அர்ச்சிராதி வழியே சென்று அம்ருதமயமான விரஜா நதியிலே நாம் தீர்த்தமாடி ப்ரக்ருதி மலங்கள் எல்லாம் கழியப் பெற்று, கலங்காப் பெருநகராகிய திருநாட்டைக் கிட்டி சுத்தஸத்வ மயமான அப்ராக்ருத தேஹத்தைப் பெற்று, நித்யஸூரிகள் வந்து எதிர்கொண்டு அழைத்துப் போய் ப்ரஹ்மாலங்காரங்கள் செய்து மரியாதைகள் பண்ண (அவற்றைப் பெற்று) திருமாமணி மண்டபத்திலே சென்று சேர்ந்தவளவிலே திருமகள் கொழுநனான எம்பெருமான் தன் மடியின்மீது வைத்துக் கொண்டு உகக்கும்படியான வாழ்வே நமக்கு எம்பெருமானார் அநுக்ரஹிக்கும் செல்வமாகும்.

929 திருமலையாழ்வார் திருவாய்மொழிப்பிள்ளை சீரருளால்
தருமதி கொண்டவர் தம்மையும் தாரகராகவெண்ணி
இருமனமே அவர்காயெதிராசர் எமைக்கடுகப்
பரமபதந்தனிலேற்றுவர் என்ன பயம் நமக்கே. 21

ஓ நெஞ்சே! திருமலையாழ்வார் என்கிற அஸ்மதாசார்யரானவர் தம்முடைய திருவருளாலே தந்தருளின ஞானத்தை ஸாதனமாகக் கொண்டு அவ்வாசிரியரையே ஸம்ஸாரத்தில் நின்று நம்மை உத்தரிப்பவராக அத்யவஸாயங் கொண்டு விசாரமற்றிரு. உடையவரானவர் அத் திருவாய்மொழிப்பிள்ளைக்காக நம்மை சீக்ரமாக திருநாட்டில் சேர்விப்பர். இதைப்பற்றி நாம் அஞ்சவேண்டுவது உண்டோ?

930 தீதற்ற ஞானத் திருவாய்மொழிப்பிள்ளை சீரருளால்
ஏதத்தை மாற்றும் எதிராசர் தம்மபிமானமென்னும்
போதத்தையேறிப் பவமாம் புணரிதனைக் கடந்து
கோதற்ற மாதவன் பாதக் கரையைக் குறுகுவனே. 22

களங்கமில்லாத ஞானத்தை உடையவரான திருமலையாழ்வாருடைய சிறந்த க்ருபையினாலே காமாதி தோஷஹரரான எம்பெருமானாருடைய அபிமானமாகிற படகில் ஏறி ஸம்ஸாரமாகிற பெருங்கடலைக் கடந்து அகிலஹேயப்ரத்யநீகனான பகவானுடைய திருவடிகளாகிற கரையை அணுகப் பெறுவேன்.

931 அடியார்கள் குழாங்கள் அழகோலக்கமிருக்க
ஆனந்தமயமான மாமணி மண்டபத்துப்
படியாதுமில் படுக்கையாயிருக்கும் அனந்தன்
பணாமணிகள் தம்மில் ஒளிமண்டலத்தினிடையில்
வடிவாரும் மாமலராள் வலவருகும் மற்றை
மண்மகளும் ஆய்மகளும் இடவருகுமிருக்க
நடுவாக வீற்றிருக்கும் நாரணனைக் கடுக
நானனுபவிக்கும் வகை நல்கு என் எதிராசா 23

அடியேனுக்கு ஸ்வாமியான யதிராஜரே! நித்ய முக்தர்களாகிற அடியார்களுடைய திரள் அழகான கோஷ்டியாக இருந்து ஸேவித்திருக்க ஆனந்தமே வடிவெடுத்ததான திருமாமணி மண்டபத்திலே எதுவும் உபமானமாகப் போராதபடி சயனமாக இருக்கிற ஆதிசேஷனுடைய படங்களிலுள்ள ரத்னங்களில் நின்று வீசிய காந்தி ஸமூஹத்தின் நடுவே வலது பக்கத்தில் அழகு பொருந்திய ஸ்ரீமஹாலக்ஷ்மியும் இடது பக்கத்தில் மற்றைத் தேவிமார்களான பூமிப்பிராட்டியும் நீளாதேவியும் வீற்றிருக்க, நடுவே எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானை விரைவாக நான் அனுபவிக்குமாறு செய்ய வேணும்.

932 இந்தவுடல் விட்டிரவி மண்டலத்தூடேகி
இவ்வண்டங்க கழித்திடையி லாவரண மேழ்போய்
அந்தமில் பாய் கடந்தழகார் விரைசதனிற் குளித்தங்கு
அமானவனால் ஒளிக்கொண்ட சோதியும் பெற்றமரர்
வந்தெதிர் கொண்டலங்கரித்து வாழ்த்தி வழிநடத்த
வைகுந்தம் புக்கு மணிமண்டபத்துச் சென்று
நந்திருமாலடியார்கள் குழாங்களுடன் கூடும்
நாளெனக்குக் குறுகும்வகை நல்கென்னெதிராசா. 24

எம்பெருமானாரே! இவ்வழுக்குடம்பை விட்டொழிந்து ஸூர்யமண்டலத்தைக் கீண்டு சென்று இந்த ப்ரஹ்மாண்டத்தைக் கடந்து நடுவிலுள்ள ஸப்தாவரணங்களையும் கடந்து முடிவில்லாததான மூலப்ரக்ருதியையும் கடந்து ரமணீயமான விரஜா நதியில் நீராடி அதன் பிறகு அமாநவகரஸ்பர்சத்தினால் தேஜோமயமான திவ்யதேஹத்தையும் பெற்று நித்யஸூரிகள் எதிர்கொண்டு வந்து ப்ரஹ்மாலங்காரங்கள் செய்து துதித்து அழைத்துக் கொண்டு செல்ல ஸ்ரீவைகுண்டம் சேர்ந்து திருமாமணி மண்டபத்தை அடைந்து பகவத் பக்தர்களான நித்யஸூரிகளின் கோஷ்டியோடே கூடி வாழும் நாள் அடியேனுக்கு ஸமீபித்ததாம்படி க்ருபை செய்தருள வேணும்.

933 என்று நிரேதுகமாக என்னை யபிமானித்து
யானுமதறிந்து உனக்கேயாயிருக்கும் வகை செய்தாய்
அன்றுமுதல் இன்றளவும் அனவரதம் பிழையே
அடுத்தடுத்துச் செய்வது அனுபவிப்பது இனிச் செய்யேன்

என்றுன்னை வந்திரப்பதாம் என் கொடுமை கண்டும்
இகழாதே இரவுபகல் அடிமைகொண்டு போந்தாய்
இன்று திருநாடுமெனக்கருள எண்ணுகின்றாய்
இனிக்கடுகச் செய்தருள வேண்டும் எதிராசா. 25

எம்பெருமானாரே! தேவரீர் அடியேனை நிர்ஹேதுகமாக அபிமானித்தருளி அவ்வபிமான விசேஷத்தை அடியேனுமறிந்து தேவரீருக்கே அநந்யார்ஹ சேஷமா யிருக்கும்படி எந்நாளில் செய்தருளினீரோ, அந்நாள் முதலாக இந்நாள் வரையிலும் ஓய்வின்றி இடையறாது அபராதங்களையே செய்வது, பச்சாத்தாபப்படுவது, இனிப் பிழை செய்யமாட்டேன் என்று சொல்லி தேவரீரிடம் வந்து க்ஷமை வேண்டுவது ஆக இப்படிப்பட்ட எனது கொடிய செய்கைகளைக் கடாக்ஷித்தும், உபேக்ஷியாமல் ஸர்வகாலத்திலும் என்பார் கைங்கர்யம் கொண்டருளினீர்; இப்போது பரமபதத்தையும் எனக்கருளத் திருவுள்ளம் பற்றியிருக்கிறீர். இப்படியான பின்பு அந்த முக்திதானத்தை விரைவாகச் செய்தருளவேணும்.

934 தென்னரங்கர் தமக்காமோ? தேவியர்கட்காமோ?
சேனையர்கோன் முதலான சூரியர்கட்காமோ?
மன்னியசீர் மாறனருள் மாரி தமக்காமோ?
மற்றுமுள்ள தேசிகர்கள் தங்களுக்குமாமோ?
என்னுடைய பிழைபொறுக்க யாவருக்கு முடியும்?
எதிராசா உனக்கன்றி யானொருவர்க்காகேன்
உன்னருளால் எனக்குருசிதன்னையும் உண்டாக்கி
ஒளிவிசும்பில் அடியேனை ஒருப்படுத்து விரைந்தே. 26

எம்பெருமானாரே! எனது அபசாரங்களைப் பொறுப்பதற்கு ஸ்ரீரங்கநாதனால் ஆகுமோ? பெரியபிராட்டியார் முதலான தேவிமார்களால் தானாகுமோ? ஸேனைமுதலியார் முதலான நித்யஸூரிகளால் தானாகுமோ? சிறந்த குணசாலிகளான நம்மாழ்வார் கலியன் முதலான ஆழ்வார்களால் தானாகுமோ? மற்றுமுள்ள நாதயாமுநாதிகளான ஆசார்யர்க ளால் தானாகுமோ? தேவரீராலன்றி வேறொருவரால் பொறுக்கலாகுமோ? அடியேன் தேவரீர்க்கே அநந்யார்ஹசேஷபூதன் தேவரீரது க்ருபையினாலே அடியேனுக்கு ப்ராப்ய ருசியை உண்டாக்கி வைத்து அடியேனைத் திருநாட்டில் விரைவாகச் சேர்த்தருளவேணும்.

935 இவ்வுலகில் இனியொன்றும் எண்ணாதே நெஞ்சே
இரவுபகல் எதிராசர் எமக்கினிமேல் அருளும்
அவ்வுலகை அலர்மகள்கோன் அங்கிருக்கும் இருப்பை
அடியார்கள் குழாங்கள்தமை அவர்களனுபவத்தை
இவ்வுயிரும் அதுக்கிட்டுப் பிறந்திழந்து கிடந்தது
என்னுமத்தை என்றுமதுக்கு இடைச்சுவராய்க் கிடக்கும்
வெவ்வினையால் வந்த உடல்விடும் பொழுதை விட்டால்
விளையும் இன்பந்தன்னை முற்றும் விடாமலிருந்தெண்ணே. 27

மனமே! இனி இவ்வுலகில் ஒன்றையும் பற்றிச் சிந்தியாதே. (பின்னை எதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்னில்) எம்பெருமானார் நமக்கு இனி அருளப்போகிற அவ்விபூதியையும் திருமகள் கொழுநனான பரமபுருஷன் எழுந்தருளியிருக்கிற படியையும் அங்குள்ள பாகவத கோஷ்டிகளையும் அவர்கள் அனுபவிக்கும் பரிசுகளையும் இவ்வாத்மவஸ்துவும் அப்படிப்பட்ட அனுபவங்களுக்கு இட்டுப் பிறந்து இழந்து கிடக்கிறபடியையும் அவ்வனுபவங்கட்கு எப்போதும் விரோதியா யிருக்கின்ற கொடிய பாவங்களாலுண்டான தேஹம் விமோசனமாகும் காலத்தையும் தேஹ வியோகமான பின்பு விளையப்போகிற பேரின்பத்தையும் ஆகிய இவை எல்லாவற்றையும் இரவும் பகலும் இடைவிடாமல் சிந்தித்துப் போரு.

936 பண்டு பலவாரியரும் பாருலகோருய்யப்
பரிவுடனே செய்தருளும் பல்கலைகள் தம்மைக்
கண்டதெல்லாமெழுதி அவை கற்றறிந்தும் பிறர்க்குக்
காதலுடன் கற்பித்தும் காலத்தைக் கழித்தேன்
புண்டரிகைகேள்வனுறை பொன்னுலகுதன்னில்
போக்க நினைவொன்றுமின்றிப் பொருந்தியிங்கே யிருந்தேன்
எண்டிசையுமேத்தும் எதிராசனருளாலே
எழில் விசும்பேயன்றி இப்போதென்மனம் எண்ணாதே. 28

பூருவாசாரியர்கள் பலரும் இந்நிலவுலகத்தோர் உஜ்ஜீவிக்குமாறு அன்போடு அருளிச்செய்த பல திவ்யக்ரந்தங்களில் எதைப் பார்த்தாலும் அதையெல்லாம் எழுதியும் அவற்றை ஆசார்யர்கள் பக்கலிலே அப்யஸித்தும் அந்தேவாஸிகளுக்கு ப்ரேமமுடன் போதித்தும் பொழுதைப் போக்கினேன். திருமால் நித்யவாஸம் செய்தருளுகிற நித்யவிபூதியிலே சென்று சேரச் சிறிதும் எண்ணமின்றிக்கே இவ்விபூதியிலே ஆசையுள்ளவனாயிருந்தேன். (இதுவரை இப்படி இருந்தேனாயினும்) இப்போதோ என்றால் எவ்விடத்திலுள்ளவர்களும் துதிக்கும்படியான எம்பெருமானாரது க்ருபையினாலே பரமபதந்தவிர வேறோன்றை என்னெஞ்சு சிந்திக்கமாட்டாதே இராநின்றது.

937 சாறுவாக மதநீறு செய்து சமணச் செடிக்கனல் கொளுத்தியே
சாக்கியக் கடலை வற்றுவித்து மிகு சாங்கியக்கிரி முறித்திட
மாறு செய்திடு கணாதவாதியர்கள் வாய்தகர்த்தற மிகுத்துமேல்
வந்த பாசுபதர் சிந்தியோடும்வகை வாது செய்த எதிராசனார்
கூறுமாகுரு மதத்தோடோங்கிய குமாரிலன் மதமவற்றின்மேல்
கொடிய தர்க்கசரம் விட்டபின் குறுகி மாயவாதியரை வென்றிட
மீறி வாதில்வரு பாற்கரன்மத விலக்கடிக்கொடியெறிந்து போய்
மிக்க யாதவமதத்தை மாய்த்த பெருவீரர் நாளும் மிக வாழியவே.

சார்வாக மதத்தை பஸ்மமாக்கியும் சமணமதமாகிற செடி நெருப்புப் பற்றி யெரியும்படி செய்தும், சாக்ய மதமாகிற ஸமுத்ரத்தை சோஷிப்பித்தும் மிகுந்த ஸாங்க்யமதமாகிய மலையைச் சேதித்தவளவிலே துர்வாதம் பண்ணுகிற கணாத

மதஸ்தர்களின் வாயைத் தகர்த்து, அதிகப்ரஸங்கத்துடனே மேல்விழுந்து வந்த சைவர்கள் சிதறியோடும்படி வாதப்போர் நடத்தியவரும் உலகில் பேசப்படுகிற குருமதமென்ன, ஓங்கியிருக்கின்ற குமாரிலமதமென்ன ஆகிய அப்படிப்பட்ட மதங்கள் மீது கடூரமான தர்க்கங்களாகிற அம்புகளைப் பொழிந்து பின்பு மாயா வாதிகளை அவர்களிருக்குமிடம் அணுகிச் சென்று வாதித்து ஜயித்திட்டு மிகைத்து வாதத்தில் வருகின்ற பாஸ்கரனுடைய மதமாகிற துர்க்கத்தைச் சேதித்து அப்பால் சென்று மிகைத்த யாதவமதத்தை த்வம்ஸம் பண்ணினவருமான மஹாவீரரான எம்பெருமானார் எந்நாளும் ஒரு குறையுமின்றி வாழவேணும்.

938 சீராரும் எதிராசர் திருவடிகள் வாழி
திருவரையில் சாத்திய செந்துவராடை வாழி
ஏராரும் செய்யவடிவெப்பொழுதும் வாழி
இலங்கிய முந்நூல்வாழி யிணைத்தோள்கள் வாழி
சோராத துய்ய செய்ய முகச்சோதி வாழி
தூமுறுவல் வாழி துணைமலர்க் கண்கள் வாழி
ஈராறு திருநாமமணிந்த வெழில் வாழி
இனிதிருப்போடெழில் ஞான முத்திரை வாழியே. 30

சீர்மை மிக்க எம்பெருமானாருடைய ஸ்ரீபாதங்கள் வாழ்க. திருவரையில் தரித்துள்ள காஷாய வஸ்த்ரம் வாழ்க. அழகு பொருந்திய திவ்யமங்கள விக்ரஹம் எந்நாளும் வாழ்க. திருமார்பிலே விளங்காநின்ற முப்புரியான ப்ரஹ்மஸூத்ரம் வாழ்க. இரண்டு திருத்தோள்களும் வாழ்க. ஒருநாளும் வாட்டமடையாத பரமபரிசுத்தமான செவ்விய திருமுகமண்டலச்சுடர் வாழவேணும். அழகிய புன்முறுவல் வாழ்க. மலர்போன்ற இரண்டு திருக்கண்களும் வாழ்க. த்வாதசோர்த்வ புண்ட்ரங்கள் சாத்திக் கொண்டிருக்குமழகு வாழ்க. பரமபோக்யமாக எழுந்தருளியிருக்கும் இருப்பும் ஞானமுத்ரையும் வாழ்க.

939 அறுசமயச் செடியதனை அடியறுத்தான் வாழியே
அடர்ந்து வரும் குதிட்டிகளை அறத் துறந்தான் வாழியே
செறுகலியைச் சிறிதுமறத் தீர்த்துவிட்டான் வாழியே
தென்னரங்கர் செல்வமுற்றும்திருத்திவைத்தான் வாழியே
மறையதனில் பொருளனைத்தும் வாய்மொழிந்தான் வாழியே
மாறனுரை செய்த தமிழ்மறை வளர்த்தோன் வாழியே
அறமிகு நற்பெரும்பூதூர் அவதரித்தான் வாழியே
அழகாரும் எதிராசர் அடியிணைகள் வாழியே. 31

ஆறு பாஹ்யமதங்களாகிற செடிகளை வேரோடு அறுத்தொழிந்த எதிராசர் வாழ்க. நெருங்கி வந்த குத்ருஷ்டிகளை அறவே யொழித்தவர் வாழ்க. செறுகின்ற கலிபுருஷன் சிறிதும் இல்லாதபடி தீர்த்தொழித்தவர் வாழ்க. ஸ்ரீரங்கநாதனுடைய ஸாம்ராஜ்யங்களை பரிஷ்கரித்தவர் வாழ்க. வேதார்த்தங்களை யெல்லாம் விசதீகரித்தருளினவர் வாழ்க. நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழியை வளர்த்த தாயானவர் வாழ்க.

மதஸ்தர்களின் வாயைத் தகர்த்து, அதிகப்ரஸங்கத்துடனே மேல்விழுந்து வந்த சைவர்கள் சிதறியோடும்படி வாதப்போர் நடத்தியவரும் உலகில் பேசப்படுகிற குருமதமென்ன, ஓங்கியிருக்கின்ற குமாரிலமதமென்ன ஆகிய அப்படிப்பட்ட மதங்கள் மீது கடூரமான தர்க்கங்களாகிற அம்புகளைப் பொழிந்து பின்பு மாயா வாதிகளை அவர்களிருக்குமிடம் அணுகிச் சென்று வாதித்து ஜயித்திட்டு மிகைத்து வாதத்தில் வருகின்ற பாஸ்கரனுடைய மதமாகிற துர்க்கத்தைச் சேதித்து அப்பால் சென்று மிகைத்த யாதவமதத்தை த்வம்ஸம் பண்ணினவருமான மஹாவீரரான எம்பெருமானார் எந்நாளும் ஒரு குறையுமின்றி வாழவேணும்.

938 சீராரும் எதிராசர் திருவடிகள் வாழி
திருவரையில் சாத்திய செந்துவராடை வாழி
ஏராரும் செய்யவடிவெப்பொழுதும் வாழி
இலங்கிய முந்நூல்வாழி யிணைத்தோள்கள் வாழி
சோராத துய்ய செய்ய முகச்சோதி வாழி
தூமுறுவல் வாழி துணைமலர்க் கண்கள் வாழி
ஈராறு திருநாமமணிந்த வெழில் வாழி
இனிதிருப்போடெழில் ஞான முத்திரை வாழியே. 30

சீர்மை மிக்க எம்பெருமானாருடைய ஸ்ரீபாதங்கள் வாழ்க. திருவரையில் தரித்துள்ள காஷாய வஸ்த்ரம் வாழ்க. அழகு பொருந்திய திவ்யமங்கள விக்ரஹம் எந்நாளும் வாழ்க. திருமார்பிலே விளங்காநின்ற முப்புரியான ப்ரஹ்மஸூத்ரம் வாழ்க. இரண்டு திருத்தோள்களும் வாழ்க. ஒருநாளும் வாட்டமடையாத பரமபரிசுத்தமான செவ்விய திருமுகமண்டலச்சுடர் வாழவேணும். அழகிய புன்முறுவல் வாழ்க. மலர்போன்ற இரண்டு திருக்கண்களும் வாழ்க. த்வாதசோர்த்வ புண்ட்ரங்கள் சாத்திக் கொண்டிருக்குமழகு வாழ்க. பரமபோக்யமாக எழுந்தருளியிருக்கும் இருப்பும் ஞானமுத்ரையும் வாழ்க.

939 அறுசமயச் செடியதனை அடியறுத்தான் வாழியே
அடர்ந்து வரும் குதிட்டிகளை அறத் துறந்தான் வாழியே
செறுகலியைச் சிறிதுமறத் தீர்த்துவிட்டான் வாழியே
தென்னரங்கர் செல்வமுற்றும்திருத்திவைத்தான் வாழியே
மறையதனில் பொருளனைத்தும் வாய்மொழிந்தான் வாழியே
மாறனுரை செய்த தமிழ்மறை வளர்த்தோன் வாழியே
அறமிகு நற்பெரும்பூதூர் அவதரித்தான் வாழியே
அழகாரும் எதிராசர் அடியிணைகள் வாழியே. 31

ஆறு பாஹ்யமதங்களாகிற செடிகளை வேரோடு அறுத்தொழிந்த எதிராசர் வாழ்க. நெருங்கி வந்த குத்ருஷ்டிகளை அறவே யொழித்தவர் வாழ்க. செறுகின்ற கலிபுருஷன் சிறிதும் இல்லாதபடி தீர்த்தொழித்தவர் வாழ்க. ஸ்ரீரங்கநாதனுடைய ஸாம்ராஜ்யங்களை பரிஷ்கரித்தவர் வாழ்க. வேதார்த்தங்களை யெல்லாம் விசதீகரித்தருளினவர் வாழ்க. நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழியை வளர்த்த தாயானவர் வாழ்க.

தர்மமார்க்கம் தழைத்தோங்கும்படியான ஸ்ரீபெரும்பூதூரிலே உதித்தவர் வாழ்க. அழகு பொலிந்த எம்பெருமானாருடைய உபய பாதங்களும் வாழ்க.

940 சங்கரபாற்கரயாதவ பாட்டபிரபாகரர் தங்கள் மதம்
சாய்வுறவாதியர் மாய்குவரென்று சதுமறை வாழ்ந்திடு நாள்
வெங்கலியிங்கினி வீறு நமக்கிலை என்று மிகத் தளர் நாள்
மேதினி நஞ்சுமை யாறுமெனத் துயர் விட்டு விளங்கிய நாள்
மங்கையராளி பராங்குச முன்னவர் வாழ்வு முளைத்திடு நாள்
மன்னிய தென்னரங்காபுரி மாமலை மற்றுமுவந்திடு நாள்
செங்கயல் வாவிகள் சூழ்வயல் நாளும் சிறந்த பெரும்பூதூர்ச்
சீமானிளையாழ்வார் வந்தருளிய நாள் திருவாதிரை நாளே. 32

அழகிய கயல்மீன்கள் நிறைந்த வாவிகளாலும் கழனிகளாலும் சூழப்பட்டு இடைவிடாத சிறப்புப் பொருந்திய ஸ்ரீபெரும்பூதூரிலே ஸ்ரீராமாநுஜர் அவதரித்தருளிய திருநக்ஷத்ரமாகிய திருவாதிரைத் திருநாள் எப்படிப்பட்டது எனில், சங்கரர் முதலானாருடைய மதங்கள் சைதில்யமடைய அப்படிப்பட்ட மதாந்தரஸ்தர்கள் யாவரும் தொலைந்திடுவர்களென்று கொண்டு நான்கு வேதங்களும் களிப்புப் பெறும் நாளாகும். வெவ்விய கலிபுருஷன் இந்நிலவுலகத்தில் நமக்கு இனிமேல் சாம்ராஜ்யமில்லை யென்று கொண்டு மிகவும் சோர்வடையும் நாளாகும். பூமிப்பிராட்டியானாவள் (இனி) நம் தலைச்சுமை ஒழியுமென்றுகொண்டு துயர் தீர்ந்து விளங்கும் நாளாகும். கலியன், நம்மாழ்வார் முதலான ஆழ்வார்களி னுடைய ஸந்தோஷம் தலையெடுக்கும் நாளாகும். அழகிய திருவரங்கம் திருமலை முதலான திவ்யதேசங்களெல்லம் உகக்கும் நாளாகும்.

941 இன்னமெத்தனைகாலம் இந்த வுடம்புடன் யானிருப்பன்
இன்ன பொழுதுடம்பு விடுமின்னபடியதுதான்
இன்னவிடத்தேயதுவுமென்னுமிவையெல்லாம்
எதிராசா நீயறிதி யானிவையொன்றறியேன்
என்னை யினியிவ்வுடம்பை விடுத்துன்னருளால்
ஏராரும் வைகுந்தத்தேற்ற நினைவுண்டேல்
பின்னை விரையாமல் மறந்திருக்கிறதென் பேசாய்
பேதமை தீர்த்தெனை யடிமைகொண்ட பெருமானே. 33

எம்பெருமானாரே! இன்னமும் எவ்வளவு காலம் இவ்வழுக்குடம்போடு அடியேன் இருப்பேன்? (என்பதென்ன), இவ்வுடம்பு இன்னகாலத்திலே விட்டு நீங்கும் (என்பதென்ன), இந்த தேஹவியோகம் இன்னபடியாக நேரும் (என்பதென்ன), அந்த தேஹ வியோகம் இன்ன ஸ்தலத்திலேயாகும் (என்பதென்ன) ஆகிய இவையெல்லா வற்றையும் தேவரீர் அறியக்கடவீர். அடியேன் இவற்றில் ஒன்றையும் அறிகின்றிலேன். அகவிருளைப் போக்கி அடியேனை ஆட்படுத்திக் கொண்ட ஸ்வாமி! இனி தேவரீர் கருணையினாலே எனக்கு இந்த தேஹம் தொலையும்படி செய்வித்து அழகிய திருநாட்டிலே என்னைச் சேர்ப்பிக்கத் திருவுள்ளமுண்டாகில் இன்னமும் மறந்து காலதாமதம் செய்வது என்? அருளவேணும்.

942 முன்னைவினை பின்னைவினை யாரத்தமென்னும்
மூன்றுவகையான வினைத்தொகையனைத்தும் யானே
என்னையடைந்தோர் தமக்குக் கழிப்பன் என்னும் அரங்கர்
எதிராசா நீயிட்ட வழக்கன்றோ சொல்லாய்
உன்னையல்லதறியாத யானிந்தவுடம்போடு
உழன்று வினைப்பயன் புசிக்கவேண்டுவதொன்றுண்டோ
என்னுடையவிருவினையை யிறைப்பொழுதில் மாற்றி
ஏராரும் வைகுந்தத்தேற்றிவிடாய் நீயே. 34

எம்பெருமானாரே! என்னுடைய பக்தர்களுக்கு பூர்வாகம், உத்தராகம், ப்ராரப்த கருமம் என்று சொல்லப்பட்ட மூவகையான பாவத்திரள்களையெல்லாம் நானே போக்கியருள்வேன் என்றருளிச்செய்த திருவரங்கநாதர் தேவரீருக்கு விதேயர் அன்றோ? அருளிச்செய்யவேணும். தேவரீரையன்றி வேறொருவரையும் தஞ்சம் என்றறியாத அடியேன் இவ்வழுக்குடம்போடே அலைந்து கருமபலன்களை அனுபவிக்க வேணுமென்பதொரு நிர்ப்பந்தமுண்டோ? எனது விசாலமான பாவங்களை க்ஷணகாலத்திலே தீர்த்து அழகிய திருநாட்டிலே தேவரீரே அடியேனைச் சேர்த்தருளவேணும்.

943 அருளாலேயடியேனை யபிமானித்தருளி
அநவரதமடிமை கொள்ள நினைத்து நீயிருக்க
மருளாலே புலன்போக வாஞ்சைசெய்யுமென்றன்
வல்வினையை மாற்றியுன்பால் மனம்வைக்கப் பண்ணாய்
தெருளாருங் கூரத்தாழ்வானும் அவர் செல்வத்
திருமகனார்தாமும் அருளிச்செய்த தீமைத்
திரளானவத்தனையுஞ் சேரவுள்ளவென்னைத்
திருத்தியுய்யக் கொள்ளும் வகை தேருமெதிராசா. 35

எம்பெருமானாரே! பரமக்ருபையினாலே அடியேனை ஒரடியானாகத் தேவரீர் திருவுள்ளம் பற்றி நிரந்தர கைங்கர்யங்கள் கொண்டருள நினைப்பிட்டிருக்க (அதற்கு மாறாக) அஜ்ஞானத்தினாலே இந்திரியங்களுக்குற்ற விஷயபோகங்களை அபேக்ஷித்திருக்கின்ற அடியேனுடைய பிரபல கருமங்களைத் தொலைத்து தேவரீர் திறத்திலேயே அடியேன் அநுரக்தனாயிருக்கச் செய்தருளவேணும். சிறந்த ஞானம் மிக்க கூரத்தாழ்வானும், அவ்வாழ்வானுடைய செல்வக் குமாரரான பட்டரும் நைச்யாநுஸந்தானமாகப் பேசின பாப ஸமூஹங்களானவனைத்தும் ஒன்று சேர்ந்து ஓர் உருவெடுத்திருக்குமடியேனை திருந்தி உஜ்ஜீவிப்பிக்கும் வகையைச் சிந்தித்தருள்வீராக.

944 வாசனையிலூற்றமோ மாளாத வல்வினையோ
ஏதென்றறியேன் எதிராசா – தீதாகும்
ஐம்புலனிலாசை அடியேன் மனந்தன்னை
வன்புடனே தானடரும் வந்து. 36

எம்பெருமானாரே, மிகக் கொடியதாகிய விஷய விருப்பமானது அடியேனது நெஞ்சை பலாத்காரமாகத் தானே மேல்விழுந்து வந்து நலியாநின்றது. (இதற்குக் காரணம்) அநாதி பாபவாஸநையின் கனமோ? ப்ராயச்சித்தங்களாலும் அநுபவத்தாலும் தொலையாத பிரபல கர்மமோ? இவற்றில் எது காரணமோ? அறிகின்றிலேன்.

945 இன்றளவுமில்லாத அதிகாரமேலுமெனக்
கென்றுளதாம் சொல்லாய் எதிராசா – குன்றா
வினைத்தொடரை வெட்டிவிட்டு மேலை வைகுந்தத்
தெனைக் கடுக வேற்றாததேன்? 37

எம்பெருமானாரே, அடியேனுக்கு இன்று வரையில் இல்லாததோர் பரிபக்குவ நிலைமை இனிமேல் என்றைக்கு உண்டாகும்? (இதுவரையிலுண்டாகாததா இனிமேல் உண்டாகப் போகிறது?) அருளிச் செய்ய வேணும். மாளாத பாபராசியை சேதித்துப் பொகட்டு, மேலான பரமபதத்திலே சீக்ரமாக என்னைச் சேர்த்தருளாதது என்னோ?

946 அஞ்சிலறியாதார் ஐம்பதிலும் தாமறியார்
என் சொலெனக்கோ எதிராசா – நெஞ்சம்
உனதாளொழிந்தவற்றையே யுகக்க வின்றும்
அனுதாபமற்றிருக்கையால். 38

எம்பெருமானாரே, ஐந்து வயதில் விவேகம் பெறாதவர்கள் ஐம்பது வயதிலும் விவேகம் பெறமாட்டார்கள் என்கிற பழமொழி எனக்காக விளைந்ததோ? (ஏனென்றால்) எனது மனமானது தேவரீருடைய திருவடிகள் தவிர மற்றவற்றையே விரும்ப, இவ்வளவிலும்கூட பச்சாத்தாபம் உண்டாகாதிருப்பதிருப்பதனால் (இப்படி நினைக்கிறேன் என்கை.)

947 வேம்பு கறியாக விரும்பினார் கைத்ததென்று
தாம் பொகடாதே புசிக்கும் தன்மைபோல் – தீம்பனிவன்
என்று நினைத்தென்னை யிகழாது எதிராசர்
அன்றறிந்து அங்கீகரிக்கையால். 39

வேம்பைக் கறியமுதாக விரும்பிக் கைப்பற்றினவர்கள் இது கசப்பாக இருக்கிறதென்று உபேக்ஷியாமல் உண்பது போல எம்பெருமானார், அடியேனை இவன் துஷ்டன் என்று கொண்டு கைவிடமாட்டார், அடியேனுடைய துஷ்டத் தன்மையை ஏற்கெனவே அறிந்து வைத்தும் அடியேனைக் கைக்கொண்டாராதலால்.

948 அவத்தே பொழுதை அடியேன் கழித்து இப்
பவத்தே இருக்குமது பண்போ – திவத்தே யான
சேரும்வகையருளாய் சீராரெதிராசா
போருமினி இவ்வுடம்பைப் போக்கு 40

சீர்மை பொருந்திய எம்பெருமானாரே, தேவரீருடைய குணானுபவங்களுக்கு இட்டுப் பிறந்த அடியேன் பொழுதைப் பாழாகப் போக்கி, இந்த ஸம்ஸாரத்திலேயே கிடப்பது தகுதியோ? அடியேன் திருநாடு சேரும்படி அருள் புரியவேணும். இதுவரை ஸம்ஸாரத்தில் சிறையிருந்தது போதும். இனி இவ்வழுக்குடம்பைத் தவிர்த்தருள வேணும்.

949 எனைப்போல் பிழை செய்வார் இவ்வுலகிலுண்டோ
உனைப்போல் பிழை பொறுக்கவல்லாருண்டோ – அனைத்துலகும்
வாழப்பிறந்த எதிராச மாமுனிவா
ஏழைக்கிரங்காயினி. 41

உலமெல்லாம் உஜ்ஜீவிப்பதற்கென்றே அவதரித்த எம்பெருமானாரே, இந் நிலவுலகத்தில் என்னைப் போல் அபசாரப்படுபவர்கள் வேறு யாரேனும் உளரோ? தேவரீரைப் போல் (அவ்வபசாரங்களை) க்ஷமிக்க வல்லார் வேறு சிலர் உளரோ? இனி, ஏழையான அடியேன் மீது இரங்கி அருளவேணும்.

950 ஐம்புலன்கள் மேலிட்டடரும் பொழுதடியேன்
உன் பதங்கள் தம்மை நினைந்தோலமிட்டால் – பின்பவைதாம்
என்னையடராமல் இரங்காய் எதிராசா
உன்னையல்லால் எனக்குண்டோ? 42

எம்பெருமானாரே, பஞ்சேந்த்ரியங்களானவை என்னை ஆக்ரமித்துக் கொள்ளும்போது அவற்றுக்கு ஆற்றாத அடியேன் தேவரீருடைய திருவடிகளைச் சிந்தித்துக் கூப்பிட்டால் அதன்பிறகும் அவ்விந்திரியங்களானவை அடியேனை மேலிடாதபடி க்ருபை செய்தருள்கின்றீர் இல்லையே. எனக்கு தேவரீரைத் தவிர வேறு ரக்ஷகர் உளரோ?

951 இந்த உலகிற் பொருந்தாமை யேதுமில்லை
அந்தவுலகிற்போக ஆசையில்லை – இந்தநமக்கு
எப்படியே தான் தருவர் எந்தை எதிராசர்
ஒப்பில் திருநாடு உகந்து. 43

இந்த ஹேயமான நிலத்தில் ஜிஹாஸை சிறிதும் உண்டாகவில்லை. அந்த நித்யவிபூதிக்குச் செல்ல விருப்பமும் உண்டாகவில்லை. இப்படிப்பட்ட நமக்கு ஸ்வாமி எம்பெருமானார் ஒப்பற்றதான பரமபதத்தை எவ்வாறு திருவுள்ளமுகந்து அளித்திடுவர்? (அவரை வெறுத்துப் பயனென்? குற்றம் நம்மதே.)

952 மாகாந்த நாரணனார் வைகும் வகையறிந்தோர்க்கு
ஏகாந்தமில்லை இருளில்லை – மோகாந்தர்
இவ்விடமேகாந்தம் இருளென்று பயமற்றிருந்து
செய்வர்கடாம் பாவத் திறம். 44

லக்ஷ்மீகாந்தனான ஸ்ரீமந்நாராயணன் ஸர்வவ்யாபியாயிருக்கும்படியைத் தெரிந்து கொண்டவர்களுக்கு ரஹஸ்யமான இடமென்றும் இருட்டான இடமென்றும் ஒன்றுமில்லை. மோஹத்தினால் குருடரானவர்கள் இது ரஹஸ்யமான இடம் இது இருட்டானவிடம் என்றுகொண்டு அச்சமற்றவர்களாகி பாபராசிகளைக் கூடுபூரிப்பர்.

953 நாராயணன் திருமால் நாரம் நாமென்னுமுறை
ஆராயில் நெஞ்சே அநாதியன்றோ – சீராரும்
ஆசாரியனாலேயன்றோ நாம் உய்ந்ததென்று
கூசாமல் எப்பொழுதும் கூறு. 45

மனமே, ஆராய்ந்து பார்க்குமளவில் எம்பெருமான் நாராயணன், நாம் நாரசப்த வாச்யம் என்கிற இந்த முறையானது நெடுநாள்களாக உள்ளதன்றோ. (இப்படி அநாதி ஸித்தமாயிருந்த உறவை அறியாமலிருந்த) நாம் ஸம்பந்தஜ்ஞானம் பெற்று உஜ்ஜீவிக்கப் பெற்றது ஆசார்யன் அருளடியாகவன்றோ என்று இடைவிடாது தைரியமாகச் சொல்லிக் கொண்டிரு.

954 திருவாய்மொழிப்பிள்ளை தீவினையோம் தம்மைக்
குருவாகி வந்துய்யக் கொண்டு – பொருவில்
மதிதானளித்தருளும் வாய்வன்றோ நெஞ்சே
எதிராசர்க்காளானோம் யாம். 46

மனமே, திருமலையாழ்வார் என்னும் ஆசிரியர் ஆசாரியராக வந்தவதரித்து, பாபிகளான நம்மை உஜ்ஜீவிப்பித்து ஒப்பற்றதான (சிறந்த) அறிவைத் தாமாகத் தந்தருளினதின் பயனாக அன்றோ நாம் எம்பெருமானார்க்கு அடிமைப்பட்டோம்.

955 இராமானுசாயநமவென்று இரவும் பகலும் சிந்தித்து
இராமானுசர்களிருப்பிடம் தன்னில் இறைப்பொழுதும்
இராமானுசரவர்க்கெல்லா அடிமையும் செய்யவெண்ணி
இராமானுசர்தம்மை மானுசரா என்கொல் எண்ணுவதே. 47

அநவரதமும் எம்பெருமானார்க்கே உரியோம் என்று எண்ணியிருக்க மாட்டாத மனிசர்கள்இருக்குமிடங்களிலே க்ஷணகாலமும் இருக்க மாட்டாத மனிதர்களுக்கு ஸகல கைங்கர்யங்களையும் செய்யக் கருதியிராத ஜனங்களை மனிதர்களாக எண்ணுவது எப்படி? (அவர்கள் பசுப்ராயர்களே.)

956 எண்ணாதென்னெஞ்சம் இசையாதென்நா இறைஞ்சாதுசென்னி
கண்ணானவை யொன்றும் காணலுறா கலியார் நலிய
ஒண்ணாதவண்ணம் உலகளித்தோன் எதிராசனடி
நண்ணாதவரை அரங்கேசர் செய்த நலம் நமக்கே. 48

கலிபுருஷன் ஹிம்ஸை செய்யமுடியாதபடி உலகங்களைக் காத்தருளினவரான எம்பெருமானாருடைய திருவடிகளைப் பணியாதவர்களை என் மனமானது ஸ்மரிக்க மாட்டாது; என் நாவானது பேசமாட்டாது; தலை வணங்காது; கண்களானவை ஈஷத்தும் காணமாட்டா. (இப்படிப்பட்ட அத்யவஸாயமுண்டான இது) நமக்கே அஸாதாரணமாக நம்பெருமாள் செய்த நன்மையாயிற்று.

957 நந்தாநரகத்தழுந்தாமை வேண்டிடில் நானிலத்தீர்
எந்தாதையான வெதிராசனை நண்ணுமென்றுமவன்
அந்தாதிதன்னை யநுசந்தியிமவன் தொண்டருடன்
சிந்தாகுலங்கெடச் சேர்ந்திரு முத்தியின் சித்திக்குமே. 49

இப்புவியிலுள்ளவர்களே! ஒய்வில்லாத ஸம்ஸாரமாகிற நரகத்திலே அழுந்தாமலிருக்கவேணுமென்கிற விருப்பம் உண்டாகில், எமக்குத் தந்தையான எம்பெருமானாரை ஆச்ரயிக்கக் கடவீர்கள்; அவர் விஷயமான நூற்றந்தாதியை நித்யமும்

அநுஸந்திக்கக் கடவீர்கள்; மனக்கேடுகள் எல்லாம் தீரும்படி அவருடைய பக்தர்களுடனே எப்போதும் கூடியிருங்கள். இப்படியெல்லாமிருக்குமளவில் வைகுந்தமாநகர் கையதாகும்.

958 அவத்தேயருமந்த காலத்தைப் போக்கி யறிவின்மையாலிப்
பவத்தே யுழல்கின்ற பாவியர்காள் பலகாலம் நின்று
தவத்தே முயல்பவர் தங்கட்கு மெய்தவொண்ணாதவந்தத்
திவத்தே யுமைவைக்கும் சிந்தியும் நீ ரெதிராசரென்றே. 50

அருமருந்தான காலத்தை பழுதாகக் கழித்து அவிவேகத்தினால் இந்த ஸம்ஸாரத்திலே மாறிமாறித் திரிகின்ற பாபிகளாயுள்ளவர்களே! நீங்கள் எம்பெருமானார் என்கிற திருநாமத்தையே சிந்தித்திருங்கள்; (அப்படியிருக்குமளவில் அவ்வெம்பெருமானார்) வெகுகாலம் நிலைநின்று தபஸ்ஸிலே முயற்சி செய்பவர்களுக்கும் கிடைக்கமாட்டாததான அந்தப் பரமபதத்திலே உங்களைச் சேர்த்திடுவர்.

959 என்றுளனீசன் உயிருமன்றே உண்டிக்காலமெல்லாம்
இன்றளவாகப் பழுதே கழிந்த திருவினையால்
என்றிகழ்வின்றி யிருக்கும் என்னெஞ்சம் இரவுபகல்
நின்றுதபிக்கும் எதிராசா நீயருள்செய்த பின்னே. 51

எம்பெருமானாரே! எம்பெருமான் என்று முதலாக வுள்ளானோ அன்று முதலாகவே ஜீவாத்மாவுமுண்டு; இவ்வநாதிகாலமெல்லாம் இப்போதளவும் பிரபல கருமத்தினால் வீணாகவே கழிந்து போயிற்று என்கிற அனுதாபங்கூட இல்லாமல் இருக்கின்ற என் மனமானது தேவரீர் க்ருபை செய்தருளினது முதலாக இரவும் பகலும் இடைவிடாது அனுதாபங்க கொள்ளா நின்றது.

960 ககனகிரிமேல் கரிய முகில்போல்
வினதை சிறுவன் மேற்கொண்டு – தனுவிடும்போது
ஏராரரங்கர் எதிராசர்க்காக என்பால்
வரா முன்னிற்பர் மகிழ்ந்து. 52

அடியேனுக்குச் சரீர வியோகமாகும்போது, ஸ்ரீரங்கநாதர் எம்பெருமானாருடைய அபிமானம் பெற்றவன் நான் என்கிற காரணமாக, மேரு மலையின்மீது ஒரு காளமேகம் படிந்தாற்போல வைநதேயனான கருடனை வாஹனமாகக் கொண்டு உகந்து வந்து என் முன்னே நிற்பர்.

961 இதத்தாலே தென்னரங்கர் செய்கிறதென்றறிந்தே
யிருந்தாலும் தற்கால வேதனையின் கனத்தால்
பதைத்தாலோ வென்னுமிந்தப் பாவவுடம்புடனே
பலநோவுமநுபவித்துப் பவத்திருக்கப் போமோ
மதத்தாலே வல்வினையின் வழியுமுழன்று திரிந்த
வல்வினையேன் றன்னை உனக்காக்கிக் கொண்ட
இதத்தாயும் தந்தையுமா மெதிராசா வென்னை
இனிக்கடுக விப்பவத்தினின்று மெடுத்தருளே. 53

அவிவேகத்தாலே பிரபல கருமத்தின் வழியே ஒழுகித் திரிந்த மஹா பாபியான என்னை தேவரீர் தமக்கு அடிமையாக்கிக் கொண்ட நன்மையை நோக்கும் தாயும் தந்தையுமான எம்பெருமானாரே! இனிமேல் அடியேனை சீக்ரமாக இந்த ஸம்ஸாரத்தில் நின்றும் கரைசேர்த்தருளவேணும். (இப்படிப் பட்ட துக்காநுபவங்கள்) எம்பெருமான் ஹிதபுத்தியினாலே உண்டாக்குமவை யென்று தெரிந்திருந்தாலும் தற்காலத்திலுண்டான பாதையின் மிகுதியினால் துடித்து, ஹா! ஓ! என்று கத்தும்படியான இந்த பாபிஷ்ட சரீரத்துடனே பல நோய்களையும் அனுபவித்துக் கொண்டு இந்த ஸம்ஸாரநிலத்தில் (இனியும்) இருக்கமுடியுமோ? (முடியாது.)

962 இன்னுமெத்தனைநாள் இவ்வுடம்புடன் இருந்து நோவுபடக் கடவேனையோ!
என்னையிதினின்றும் விடுவித்து நீர் என்றுதான் திருநாட்டினுளேற்றுவீர்?
அன்னையுமத்தனுமல்லாத சுற்றமும் ஆகியென்னையளித்தருள்நாதனே!
என்னிதத்தை யிராப்பகலின்றியே ஏகமெண்ணுமெதிராச வள்ளலே. 54

மாதா பிதாக்களாயும், மற்றுமுண்டானவுறவுகளாயும் இருந்துகொண்டு, என்னை ரக்ஷித்தருளாநின்ற ஸ்வாமியே! இரவுபகலென்கிற வாசியில்லாமல் எப்போதும் என்னுடைய ஹிதமொன்றையே சிந்திக்கின்ற மஹோதாரரான எம்பெருமானாரே! தேவரீருக்கு ஆட்பட்டபின்பும் எவ்வளவு காலம் இந்தப் பொல்லாத தேஹத்தோடே இருந்து துன்பப்படுவேன்? அந்தோ! பரமகாருணிகரான தேவரீர் இந்த ஸம்ஸார பந்தத்தில் நின்றும் என்னை முக்தனாம்படி பண்ணி என்றைக்குப் பரமபதத்திலே சேரச்செய்தருள்வீர்?

963 தென்னரங்கர் சீரருளுக்கிலக்காகப் பெற்றோம்
திருவரங்கம் திருப்பதியே யிருப்பாகப் பெற்றோம்
மன்னியசீர் மாறன்கலை உணவாகப் பெற்றோம்
மதுரகவி சொற்படியே நிலையாகப் பெற்றோம்
முன்னவராம் நங்குரவர் மொழிகளுள்ளப் பெற்றோம்
முழுதும் நமக்கவை பொழுது போக்காகப் பெற்றோம்
பின்னையொன்றுதனில் நெஞ்சுபேராமல் பெற்றோம்
பிறர்மினுக்கம் பொறாமையில்லாப் பெருமையும் பெற்றோமே. 55

ஸ்ரீரங்கநாதருடைய பரமக்ருபைக்கு லக்ஷ்யமாகும்படியான பாக்கியம் பெற்றோம். ஸ்ரீரங்கக்ஷேத்ரவாஸமே வாழ்ச்சியாகப் பெற்றோம். நற்குணங்கள் பொருந்திய நம்மாழ்வாருடைய அருளிச்செயல்களை நித்யபோக்யமாகக் கொள்ளப் பெற்றோம். மதுரகவிகளின் ஸ்ரீஸூக்தியின்படியே சரமபர்வ நிஷ்டையாய் இருக்கப் பெற்றோம். நமது பூருவாசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளையே சிந்திக்கப் பெற்றோம். நமக்கு அநவரதமும் அந்த ஸ்ரீஸூக்திகளே காலக்ஷேபமாகப் பெற்றோம். இவை தவிர வேறொன்றில் நெஞ்சு பெயர்ந்து செல்லாதபடி பாக்கியம் பெற்றோம். பிறர் உயர்த்திகளைக் கண்டு பொறாமையுறுதல் இல்லாத பெருமையும் பெற்றோம்.

964 உன்தனபிமானமே யுத்தாரகமென்று
சிந்தை தெளிந்திருக்கச் செய்த நீ – அந்தோ

எதிராசா நோய்களாலென்னை நலக்காமல்
சதிராக நின்றிருத்தாள் தா. 56

எம்பெருமானாரே! தேவரீருடைய அபிமானமே உஜ்ஜீவனநோபாயமென்று கொண்டு, மனம் தேறியிருக்கும்படி செய்தருளின தேவரீர் அடியேனை நோய்களால் வருத்தாமல் நலமாக தேவரீருடைய திருவடிகளைத் தந்தருளவேணும்.

965 தேசிகர்கள் போற்றும் திருவாய்மொழிப்பிள்ளை
வாசமலர்த்தாளடைந்த வத்துவென்னும் – நேசத்தால்
என்பிழைகள் காணா எதிராசரே அடியேன்
புன்பகர்வைக் கேளும் பொறுத்து. 57

ஆசார்யர்களால் துதிக்கப் பெற்ற திருமலையாழ்வாருடைய நறுமணம் மிக்க தாமரைமலர் போன்ற திருவடிகளைச் சார்ந்த வஸ்து இதுவென்று இக்காரணத்தினால் உண்டான அன்பினாலே எனது குற்றங்களைக் காணமாட்டாத எம்பெருமானாரே! என் பிழைகளை ஸஹித்திருந்த அடியேனது சிறிய விண்ணப்பத்தைக் கேட்டருள்வீராக!

966 எந்தை திருவாய்மொழிப்பிள்ளை யின்னருளால்
உன்றனுறவை யுணர்த்தியபின் – இந்தவுயிர்க்கு
எல்லாவுறவும் நீயென்றே யெதிராசா
நில்லாததுண்டோ வென்னெஞ்சு. 58

எம்பெருமானாரே! அஸ்மதாசார்யரான திருமலையாழ்வார் தமது பரமக்ருபையினாலே தேவரீருடைய ஸம்பந்தத்தை தெரிவித்தருளினது முதலாக இவ்வாத்ம வஸ்துவுக்கு ஸகலவித பந்துவும் தேவரீரே யென்று எனது நெஞ்சு அத்யவஸாயம் கொண்டிராமையுண்டோ?

967 எந்தை திருவரங்கர் ஏரார் கருடன் மேல்
வந்து முகங்காட்டி வழிநடத்தச் – சிந்தைசெய்திப்
பொல்லாவுடம்புதனைப் போக்குவதெந்நாள்கொலோ
சொல்லாயெதிராசா சூழ்ந்து. 59

எம்பெருமானாரே! நம் தந்தையான ஸ்ரீரங்கநாதர் அழகுபொலிந்த பெரிய திருவடியின்மீது எழுந்தருளி திருமுகமண்டலத்தை ஸேவை ஸாதிப்பித்து அர்ச்சிராதி மார்க்கத்தால் நடத்திக் கொண்டு போகத் திருவுள்ளம்பற்றி இந்தப் பொல்லாத சரீரத்தைக் கழித்தருள்வது என்றைக்கோ? (அதைத் தேவரீர்) ஆலோசித்து அருளிச் செய்வீராக.

968 இந்தவரங்கத் தினிதிரு நீயென்றரங்கர்
எந்தையெதிராசர்க்கீந்த வரம் – சிந்தை செய்யில்
நம்மதன்றோ நெஞ்சமே நற்றாதைசொம் புதல்வர்
தம்மதன்றோ தாயமுறைதான். 60

ஓ மனமே! ஸ்ரீரங்கநாதர் ஸ்வாமியான எம்பெருமானாரைநோக்கி, 'நீர் இந்த ஸ்ரீரங்கத்திலேயே சுகமாக வாழக்கடவீர்' என்று அருளிய அருள்மொழியானது ஆராயப்படுமளவில் அது நமக்கும் சொந்தமானதன்றோ? (அஃதெப்படியென்னில்)

பங்குமுறையின்படி வாய்த்த தந்தையினுடைய சொத்தானது புத்திரர்களுடையது அல்லவோ? (அப்படியே இதுவும்). (ஆர்த்திப்ரபந்தம் முற்றிற்று.)

மணவாளமாமுனிகள் அருளிச்செய்த உபதேசரத்தினமாலைப் பாசுரங்கள்

969 இன்றுலகீர் சித்திரையில் ஏய்ந்த திருவாதிரை நாள்
என்றையிலும் இன்றிதனுக்கு ஏற்றமென்தான் – என்றவர்க்குச்
சாற்றுகின்றேன் கேண்மின் எதிராசர் தம் பிறப்பால்
நாற்றிசையும் கொண்டாடும் நாள். (உபதேச ரத்தினமாலை 27)

உலகத்தவர்களே! இந்நாள் சித்திரை மாதத்தில் பொருத்தம் பெற்ற திருவாதிரை நக்ஷத்ரம். மற்றுமுள்ள தினங்களைக் காட்டிலும் இற்றை நாளுக்கு சிறப்பு என் கொல் என்று கேட்பவர்களுக்கு விடை கூறுகின்றேன். கேளுங்கள். யதிராஜரான உடையவருடைய திருவவதாரத்தினால் நாலு திசைகளிலுமுள்ளவர்கள் கொண்டாடுகின்ற நாளாமிது.

970 ஆழ்வார்கள் தாங்கள் அவதரித்த நாள்களிலும்
வாழ்வான நாள் நமக்கு மண்ணுலகீர் – ஏழ்பாரும்
உய்ய எதிராசர் உதித்தருளும் சித்திரையில்
செய்ய திருவாதிரை. (உபதேச ரத்தினமாலை 28)

மண்ணுலகத்தவர்களே! பொய்கையார் முதலான ஆழ்வார்கள் அவதரிக்கப் பெற்ற நாள்களை விட நமக்கு விசேஷித்து உஜ்ஜீவன ஹேதுவான நாள் (எது என்றால்) உலகமெல்லாம் உஜ்ஜீவிக்கும்படி எம்பெருமானார் திருவவதரிக்கப் பெற்ற சித்திரை மாதத்தில் சிறப்புடையதான திருவாதிரையேயாம்.

971 எந்தை எதிராசர் இவ்வுலகில் எந்தமக்கா
வந்துதித்த நாளென்னும் வாசியினால் – இந்தத்
திருவாதிரை தன்னின் சீர்மைதனை நெஞ்சே
ஒருவாமல் எப்பொழுதும் ஓர். (உபதேச ரத்தினமாலை 29)

மனமே! அஸ்மதாசார்யரான எம்பெருமானார் இந்நிலவுலகத்தில் நமக்காகவே வந்து தோன்றப் பெற்ற திருநாளென்கிற வைலக்ஷண்யத்தினால் இந்தத் திருவாதிரைத் திருநாளினுடைய சிறப்பை இடைவிடாமல் ஸதாகாலமும் சிந்தித்திரு.

972 ஓராண்வழியாய் உபதேசித்தார் முன்னோர்
ஏரார் எதிராசர் இன்னருளால் – பாருலகில்
ஆசையுடையோர்க்கெல்லாம் ஆரியர்காள் கூறுமென்று
பேசி வரம்பறுத்தார் பின். (உபதேச ரத்தினமாலை 37)

உடையவர்க்கு முன்னேயிருந்த ஆசாரியர்கள் ஒரொருவர் வழியாக அர்த்த விசேஷங்களை உபதேசித்துப் போந்தார்கள். அவர்களுக்குப் பிறகு சிறப்பு வாய்ந்த எம்பெருமானார் (தம்) பரமக்ருபையினாலே 'ஆரியர்களே!' (என்று தம் அடியார்களை விளித்து) நீங்கள் பூமண்டலத்தில் அர்த்தங்கள் கேட்க ஆசையுடையோர் எல்லார்க்கும் உபதேசியுங்கள் என்று நியமித்து முன்னோர்கள் வைத்துக் கொண்டிருந்த ஒரு வரம்பைப் போக்கிவிட்டார்.

973 எம்பெருமானார் தரிசனம் என்றே இதற்கு
நம்பெருமாள் பேரிட்டு நாட்டி வைத்தார் – அம்புவியோர்
இந்தத் தரிசனத்தை எம்பெருமானார் வளர்த்த
அந்தச் செயல் அறிகைக்கா. (உபதேச ரத்தினமாலை 38)

இந்த ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்தத்தை எம்பெருமானார் வளர்த்தருளினார் என்னும் அந்த விஷயத்தை "ஸ்ரீராமாநுஜதர்சனம்" என்றே திருநாமம் சாற்றி, இப் பூமண்டலத்திலுள்ளார் எல்லாரும் தெரிந்து கொள்ளும் பொருட்டு, ஸ்ரீரங்கநாதர் இந்த ஸித்தாந்தத்தை ஸ்தாபித்தருளினார்.

974 இந்த உபதேச ரத்தினமாலை தன்னை
சிந்தைதனில் நாளும் சிந்திப்பார் – எந்தை
எதிராசர் இன்னருளுக்கு என்றும் இலக்காகி
சதிராக வாழ்ந்திடுவர் தாம். (உபதேச ரத்தினமாலை 73)

உபதேசரத்தினமாலை என்னும் இந்தப் பிரபந்தத்தை அனுதினமும் உள்ளத்தினுள்ளே சிந்தனை செய்யுமவர்கள் ஸ்வாமி எம்பெருமானாருடைய பரம க்ருபைக்குப் பாத்திரமாகி ஒரு குறைவுமின்றிக்கே செல்வம் பொலிய வாழப்பெறுவர்.

மணவாளமாமுனிகள் அருளிச்செய்த யதிராஜ விம்சதி

975 ஸ்ரீமாதவாங்க்ரிஜலஜத்வய நித்யஸேவா
ப்ரேமாவிலாசய பராங்குசபாதபக்தம்
காமாதி தோஷஹரம் ஆத்மபதாச்ரிதாநாம்
ராமாநுஜம் யதிபதிம் ப்ரணமாமி மூர்த்நா. 1

அழகு பொலிந்த எம்பெருமானது திருவடித் தாமரையிணைகளை நிச்சலும் தொழுகையிலுண்டான ப்ரேமத்தினால் கலங்கின திருவுள்ளமுடையரான நம்மாழ்வாருடைய திருவடிகளில் அன்பு பூண்டவரும் தமது திருவடிகளைப் பணிந்தவர்களுக்குக் காமம் முதலிய குற்றங்களைக் களைந்தொழிப்பவரும், யதிகளுக்குத் தலைவருமான எம்பெருமானாரைத் தலையால் வணங்குகிறேன்.

976 ஸ்ரீரங்கராஜசரணாம்புஜராஜஹம்ஸம்
ஸ்ரீமத்பராங்குசபதாம்புஜப்ருங்கராஜம்
ஸ்ரீபட்டநாதபரகாலமுகாப்ஜமித்ரம்
ஸ்ரீவத்ஸசிஹ்நசரணம் யதிராஜமீடே. 2

ஸ்ரீரங்கநாதனுடைய திருவடித் தாமரையிலே ராஜஹம்ஸம் போன்று ஊன்றி இருப்பவரும், நம்மாழ்வாருடைய திருவடித் தாமரைகளில் வண்டுபோல் அமர்ந்திருப்பவரும், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார் முதலான ஆழ்வார்களாகிற தாமரைப் பூக்களை விகாஸப்படுத்துவதில் ஸூர்யன் போன்ற வரும், கூரத்தாழ்வானுக்குத் தஞ்சமாயிருப்பவரும் (அல்லது) கூரத்தாழ்வானைத் திருவடிகளாக உடையவருமான எம்பெருமானாரைத் துதிக்கிறேன்.

977 வாசா யதீந்த்ர! மநஸா வபுஷா ச யுஷ்மத்
பாதாரவிந்தயுகளம் பஜதாம் குரூணாம்

கூராதிநாதகுருகேசமுகாத்யபும்ஸாம்
பாதாநுசிந்தநபரஸ் ஸததம் பவேயம். 3

எம்பெருமானாரே! மநோவாக்காயங்களாகிற த்ரிகரணங்களாலும் தேவரீருடைய திருவடித் தாமரையிணையை ஸேவிப்பவர்களும், ஆசார்யபீடத்தை அலங்கரிப்பவர்களுமான கூரத்தாழ்வான், திருக்குருகைப்பிரான்பிள்ளான் முதலான தலைவர்களுடைய திருவடிகளையே சிந்திப்பவனாக எப்போதும் இருக்கக் கடவேன்.

978 நித்யம் யதீந்த்ர தவ திவ்யவபுஸ்ஸ்ம்ருதௌ மே
ஸக்தம் மநோ பவது வாக்குண கீர்த்தநேஸௌ
க்ருத்யஞ்ச தாஸ்யகரணம் து கரத்வயஸ்ய
வ்ருத்யந்தரேஸ்து விமுகம் கரணத்ரயம் ச 4

எம்பெருமானாரே! அடியேனுடைய நெஞ்சானது எப்போதும் தேவரீருடைய திவ்யமங்களவிக்ரஹ த்யானத்திலேயே ஆஸக்தமாகக் கடவது; எனது இந்த வாக்கானது தேவரீருடைய திருக்குணங்களைப் பேசுவதிலேயே ஊன்றியிருக்கக் கடவது. இரண்டு கைகளினுடைய செயலானது தேவரீருக்கு அடிமை செய்வதுதானே யாகக் கடவது. (இவ்வாறாக) மநோவாக்காயங்களாகிற மூன்று கரணங்களும் இதர விஷயங்களை அடியோடு நோக்காதிருக்கக் கடவன.

979 அஷ்டாக்ஷராக்யமநுராஜபதத்ரயார்த்த
நிஷ்டாம் மமாத்ர விதராத்ய யதீந்த்ரநாத!
சிஷ்டாக்ரகண்யஜநஸேவ்யபவத்பதாப்ஜே
ஹ்ருஷ்டாஸ்து நித்யமநுபூய மமாஸ்ய புத்தி: 5

எமது குலத் தலைவரான எம்பெருமானாரே! திருவஷ்டாக்ஷரமென்கிற பெரிய திருமந்த்ரத்திலுள்ள ப்ரணவ, நம:பத, நாராயணாய பதங்களில் தேறின அநந்யார்ஹ சேஷத்வம், அநந்ய சரணத்வம், அநந்ய போக்யத்வம் என்கிற அர்த்தங்களில் திடமான உறுதியை அடியேனுக்கு இவ்விருள்தருமாஞாலத்திலேயே, ருசி பிறந்த போதே ப்ரஸாதித்தருள வேணும். நீசனேன் நிறையொன்றுமிலேனான என்னுடைய புத்தியானது சிஷ்டர்களில் தலைவரான ஆழ்வான், ஆண்டான் போல்வார் தொழத்தகுந்த தேவரீருடைய திருவடித் தாமரைகளை இடைவீடின்றி அனுபவித்து, (அவ்வனுபவத்தின் பலனான கைங்கர்யத்தையும் பெற்று) மகிழ்ந்திருக்கக் கடவது.

980 அல்பாபி மே ந பவதீய பதாப்ஜபக்தி:
சப்தாதிபோக ருசிரந்வஹமேததே ஹா
மத்பாபமேவ ஹி நிதாநமமுஷ்ய நாந்யத்
தத் வாரயார்ய யதிராஜ தயைகஸிந்தோ. 6

அருட்கடலான ஆசார்ய சிகாமணியே! அடியேனுக்கு தேவரீருடைய திருவடித் தாமரைகளிற் பதிந்த பக்தியானது சிறிதளவுமில்லை; (அஃது இல்லாதது தவிர, சப்தாதி போக விஷயங்களில் ஊற்றமானது நாடோறும் வளர்ந்து செல்லாநின்றது. அந்தோ! (இதற்கென் செய்வேன்?) இதற்கு அடிக்காரணம் என்னுடைய

பாபமேயன்றோ; வேறொரு காரணமுமில்லை. அந்த எனது பாபத்தைப் போக்கியருளவேணும்.

981 வ்ருத்யா பசுர் நரவபுஸ் த்வஹமீத்ருசோபி
ச்ருத்யாதிஸித்தநிகிலாத்ம குணாச்ரயோயம்
இத்யாதரேண க்ருதிநோபி மித: ப்ரவக்தும்
அத்யாபி வஞ்சநபரோத்ர யதீந்த்ர வர்த்தே. 7

எம்பெருமானாரே! அடியேனோவென்றால் மநுஷ்யசரீரனாயிருந்தேனாகிலும் செய்கையினால் பசுவோடொத்திரா நின்றேன். இப்படிப்பட்டவனாயிருக்கச் செய்தேயும் "இவன் வேதம் முதலியவற்றில் தேறின ஸகல ஆத்ம குணங்களுக்கும் கொள்கலமானவன்" என்று அபிஜ்ஞர்களையும் ஆதரவோடு பரஸ்பரம் பேசுவிக்கும்படி இவ்வுலகில் இன்னமும் வஞ்சிக்குமவனாயிராநின்றேன்.

982 துக்காவஹோஹமநிசம் தவ துஷ்டசேஷ்ட:
சப்தாதிபோகநிரத: சரணாகதாக்ய:
த்வத் பாதபக்த இவ சிஷ்டஜநௌகமத்யே
மித்யா சராமி யதிராஜ ததோஸ்மி மூர்க்க: 8

எம்பெருமானாரே! கெட்ட நடத்தைகளையுடையேனான நான் சப்தாதி விஷய ப்ரவணனாய் ப்ரபந்நனென்று பேர் சுமப்பவனாயிருந்து கொண்டு, எப்போதும் தேவரீருடைய திருவுள்ளத்தைப் புண்படுத்துமவனாய், சிஷ்டர்களின் திரளினிடையே தேவரீருடைய திருவடிகளுக்கு அன்பன்போல க்ருத்ரிமமாகத் திரியா நின்றேன். ஆகையினால் மூர்க்கனாயிராநின்றேன்.

983 நித்யம் த்வஹம் பரிபவாமி குருஞ்ச மந்த்ரம்
தத்தேவதாமபி ந கிஞ்சிதஹோ பிபேமி
இத்தம் சடோப்யசடவத் பவதீய ஸங்கே
த்ருஷ்டச் சராமி யதிராஜ ததோஸ்மி மூர்க்க: 9

எம்பெருமானாரே! அடியேனோவென்றால், ஆசார்யனையும் மந்த்ரத்தையும் அதற்குள்ளீடான தேவதையையும் நித்யமும் பரிபவிக்கின்றேன். ஈஷத்தும் அஞ்சுகிறேனில்லை. அந்தோ! இங்ஙனம் போட்கனாயிருந்தேனாகிலும், குருமந்த்ர தேவதா விச்வாஸயுக்தன் போல தேவரீரடியார் திரளிலே துணிவுடையேனாயத் திரிகின்றேன். ஆதலால் மூர்க்கனாயிராநின்றேன்.

984 ஹா ஹந்த ஹந்த மநஸா க்ரியயா ச வாசா
யோஹம் சராமி ஸததம் த்ரிவிதாபசாராந்
ஸோஹம் தவாப்ரியகர: ப்ரியக்ருத்வதேவம்
காலம் நயாமி யதிராஜ ததோஸ்மி மூர்க்க: 10

எம்பெருமானாரே! யாவனொரு அடியேன் எப்போதும் மனம் மொழி மெய்களாகிற முக்கரணங்களாலும் மூவகைப் பட்ட அபசாரங்களையும் செய்கிறேனோ, அப்படிப்பட்ட நான் தேவரீருக்கு அப்ரியங்களையே செய்து கொண்டு ப்ரியத்தையே செய்பவன் போல

நின்று, இப்படியே காலத்தைக் கழிக்கின்றேன். ஆதலால் மூர்க்கனாயிரா நின்றேன். என்ன கொடுமை!

985 பாபே க்ருதே யதி பவந்தி பயாநுதாபலஜ்ஜா:
புந: கரணமஸ்ய கதம் கடேத,
மோஹேந மே ந பவதீஹ பயாதிலேசஸ்
தஸ்மாத் புந:புநரகம் யதிராஜ குர்வே. 11

எம்பெருமானாரே! பாவம் செய்தால் அச்சமும் அநுதாபமும் வெட்கமும் உண்டாகுமேயானால், மறுபடியும் பாவம் செய்கை எப்படி நேரிடும்? எனக்கோ, இந்த பாபகரணத்தில் அஜ்ஞாநத்தினால் அச்சமும் அநுதாபமும் வெட்கமுமாகிற இவை சிறிதும் உண்டாவதில்லை. ஆதலால் பாபத்தை அடுத்தடுத்துச் செய்து போராநின்றேன்.

986 அந்தர் பஹிஸ் ஸகலவஸ்துஷு ஸந்தமீசம்
அந்த:புரஸ் ஸ்திதமிவாஹ மவீக்ஷமாண:
கந்தர்ப்ப வச்யஹ்ருதயஸ் ஸததம் பவாமி
ஹந்த த்வதக்ரகமநஸ்ய யதீந்த்ர நார்ஹ: 12

எம்பெருமானாரே! எல்லாப் பொருள்களிலும் உள்ளோடு புறம்போடு வாசியற எங்கும் வியாபித்து நிற்கிற எம்பெருமானைப் பிறவிக்குருடன் முன்னே இராநின்ற பொருளைக் காணமாட்டாதவாறு போல, காணகில்லாதவனான அடியேன் எப்போதும் பரவச மநஸ்கனாயிராநின்றேன். அந்தோ! (ஆதலால்) தேவரீர் திருமுன்பே வருகைக்கும் அர்ஹதை உடையேனல்லேன்.

987 தாபத்ரயீஜநிதது:க்கநிபாதிநோபி
தேஹஸ்திதௌ மம ருசிஸ் து ந தந்நிவ்ருத்தௌ,
ஏதஸ்ய காரணமஹோ மம பாபமேவ
நாத த்வமேவ ஹர தத் யதிராஜ சீக்ரம். 13

எம்பெருமானாரே! தாபத்ரயத்தாலுமுண்டுபண்ணப்பட்ட துக்கங்களிலே வீழ்ந்து கிடக்கச் செய்தேயும், எனக்கு அபிலாஷமோவென்றால், துக்காஸ்பதமான சரீரத்தைப் பேணுவதிலேயாம். அந்த தேஹத்தைத் தவிர்த்துக் கொள்வதில் ருசி உண்டாவதில்லை. இப்படிப்பட்ட நிலைமைக்குக் காரணம் எனது பாவமேயாம். அந்தோ! ஸ்வாமிந்! அந்தப் பாபத்தை தேவரீரே கடுகப் போக்க வேணும்.

988 வாசாமகோசரமஹாகுணதேசிகாக்ர்ய
கூராதிநாதகதிதாகிலநைச்யபாத்ரம்
ஏஷோஹமேவ ந புநர் ஜகதீத்ருசஸ் தத்
ராமாநுஜார்ய கருணைவது மத்கதிஸ் தே. 14

எம்பெருமானாரே! வாய்க்கு நிலமல்லாத நற்குணங்களையுடைய ஆசார்ய ச்ரேஷ்டரான கூரத்தாழ்வான் அநுஸந்தித்த ஸமஸ்த நைச்யங்களுக்கும் பாத்ரமாயிருப்பவன் இவ்வுலகில் அடியேன் ஒருவனேயாவன்; இப்படிப்பட்ட தோஷத்தை உடையான்

வேறொருவனில்லை. (ஆதலால்) தேவரீருடைய திருவருளோவென்றால் என்னையே கதியாக உடையது.

989 சுத்தாத்ம–யாமுந–குருத்தம–கூரநாத–
பட்டாக்ய–தேசிகவரோக்தஸமஸ்த்நைச்யம்
அத்யாஸ்த்யஸங்குசிதமேவ மயீஹ லோகே
தஸ்மாத் யதீந்த்ர கருணைவது மத்கதிஸ் தே. 15

எம்பெருமானாரே! பரமபவித்திரரான ஆளவந்தார், ஆழ்வான், பட்டர் என்னுமிந்த ஆசார்ய சிகாமணிகள் அநுஸந்தித்துக்கொண்ட ஸகலவிதமான தாழ்வும் இவ்வுலகின்கண் இக்காலத்தில் என்னிடத்திலேயே குறையுறாது நிரம்பி யிருக்கின்றது. ஆதலால் தேவரீருடைய திருவருளே எனக்குப் புகல். (அல்லது) தேவரீருடைய திருவருள் என்னையே புகலாக உடையது.

990 சப்தாதிபோக விஷயா ருசிரஸ்மதீயா
நஷ்டா பவத்விஹ பவத்தயயா யதீந்த்ர
த்வத்தாஸதாஸகணநாசரமாவதௌ ய:
தத்தாஸதைகரஸதா அவிரதா மமாஸ்து. 16

எம்பெருமானாரே! எம்முடையதான சப்தாதி விஷயங்களை அநுபவிக்க வேணுமென்பது பற்றியுண்டான அபிநிவேசமானது தேவரீருடைய திருவருளாலே தொலைந்ததாகக் கடவது. யாவரொருவர் தேவரீ ருடைய பக்த பக்தர்களை எண்ணிக் கொண்டு போமளவில் சரமபர்வத்தில் நிற்கிறாரோ அவர்க்கு அடிமைப் படிருப்பது ஒன்றிலேயே ப்ராவண்யமானது எனக்கு அவிச்சிந்நமாக நடைபெறவேணும்.

991 ச்ருத்யக்ரவேத்யநிஜதிவ்யகுணஸ்வரூப:
ப்ரத்யக்ஷதாமுபகதஸ்த்விஹ ரங்கராஜ:
வச்யஸ்ஸதா பவதி தே யதிராஜ தஸ்மாத்
சக்தஸ்வகீயஜநபாபவிமோசநே த்வம். 17

எம்பெருமானாரே! வேதாந்தங்களில் கேட்டறியவேண்டும்படியான தன்னுடைய குணஸ்வரூபாதிகளைள உடையனாய், தன்வாசியறிந்து ஈடுபடுவாரில்லாத இந்த ஸம்ஸார மண்டலத்தில் எல்லார்க்கும் கண்ணெதிரே காட்சி தந்தருள்கின்ற ஸ்ரீரங்கநாதன் தேவரீருக்கு எப்போதும் விதேயனாயிராநின்றான். ஆதலால் தம்மடியார்களின் பாவங்களைத் தொலைத்தருள்வதில் தேவரீர் சக்தியுடையவராயிரா நின்றீர்.

992 காலத்ரயேபி கரணத்ரய நிர்மிதாதி
பாபக்ரியஸ்ய சரணம் பகவத்க்ஷமைவ
ஸா ச த்வயைவ கமலாரமணேர்த்திதா யத்
க்ஷேமஸ் ஸ ஏவ ஹி யதீந்த்ர பவச்ரிதாநாம் 18

எம்பெருமானாரே! வருங்காலம் நிகழ்காலம் கழிகாலம் என்கிற மூன்று காலங்களிலும் மனம் மொழி மெய்களாகிற மூன்று கரணங்களினாலும் கோர பாபங்களைச் செய்தவனுக்கு எம்பெருமானது பொறுமையொன்றே புகல். அந்த க்ஷமைதானும்

தேவரீராலேயே எம்பெருமான் பக்கலிலே பிரார்த்திக்கப்பட்டது என்பது யாதொன்று, அந்த ப்ரார்த்தனைதானே தேவரீரை அடிபணிந்தவர்களுக்கு சேமமாவது.

993 ஸ்ரீமந்யதீந்த்ர தவ திவ்யபதாப்ஜஸேவாம்
ஸ்ரீசைலநாத கருணாபரிணாமதத்தாம்
தாமந்வஹம் மம விவர்த்தய நாத தஸ்யா:
காமம் விருத்தமகிலஞ்ச நிவர்த்தய த்வம் 19

எமக்குத் தலைவரான ஸ்ரீராமானுஜரே! (அஸ்மதாசார்யரான) திருமலையாழ்வாருடைய திருவருள் மிகுதியினால் அளிக்கப்பட்ட அப்படிப்பட்ட தேவரீருடைய பாதாரவிந்த ஸேவையை, நாடோறும் அடியேனுக்கு வளரச் செய்தருளவேணும்; அந்த பவதீய பாதாரவிந்த ஸேவைக்கு எதிரிடையான எல்லா விருப்பங்களையும் தேவரீர் தவிர்த்தருளவேணும்.

994 விஜ்ஞாபநம் யதிதமத்ய து மாமகீநம்
அங்கீகுருஷ்வ யதிராஜ தயாம்புராசே
அஜ்ஞோயமாத்மகுணலேசவிவர்ஜிதச்ச
தஸ்மாதநந்யசரணோ பவதீதி மத்வா. 20

கருணைக்கடலான எம்பெருமானாரே! (அடியேனாகிற) இவன் (தத்வ ஹித புருஷார்த்தங்களில்) அறிவில்லாதவன். ஆத்மகுணங்கள் சிறிதும் இல்லாதவன்; ஆகையினாலே நம்மைத் தவிர்த்து வேறு புகலற்றவன் என்று திருவுள்ளம்பற்றி, இப்போது அடியேனுடையதான விண்ணப்பம் யாதொன்று உண்டோ அதனைத் தலைக்கட்டியருள்வதாக ஏற்றுக் கொள்ளவேணும்.

தாடீபஞ்சகம்

995 பாஷண்டத்ருமஷண்டதாவதஹநச் சார்வாக சைலாசநி:
பௌத்தத்தவாந்த நிராஸவாஸரபதிர் ஜைநேபகண்டீரவ:
மாயாவாதி புஜங்கபங்க கருடஸ் த்ரைவித்ய சூடாமணி:
ஸ்ரீரங்கசே ஜயத்வஜோ விஜயதே ராமாநுஜோயம் முநி: 1

பாஷண்டர்களாகிற வ்ருக்ஷங்களுக்குக் காட்டுத் தீ போன்றவரும், சார்வாக மதஸ்தர்களாகிற மலைகளுக்கு இடி போன்றவரும், பௌத்தர்களாகிற இருளுக்கு இரவி போன்றவரும், ஜைநர்களாகிற யானைகளுக்குச் சிங்கம் போன்றவரும், மாயாவாதிகளாகிற ஸர்ப்பங்களுக்கு கருடன் போன்றவரும், பரமவைதிகர்களுக்குச் சிரோமணியானவரும், ஸ்ரீரங்கநாதனுடைய ஸர்வாதிசயங்களையும் சேமித்தருளினவ ருமான இந்த ஸ்ரீராமாநுஜமுனிவர் ஸர்வோத்கர்ஷசாலியாக விளங்குகிறார். 1

996 பாஷண்டஷண்டகிரிகண்டந வஜ்ரதண்டா:
ப்ரச்சந்நபௌத்தமகராலய மந்ததண்டா:
வேதாந்தஸாரஸுகதர்சந தீபதண்டா:
ராமாநுஜஸ்ய விலஸந்திமுநேஸ் த்ரிதண்டா: 2

பாஷண்டத் திரள்களாகிற மலைகளைக் கண்டிப்பதில் வஜ்ரதண்டம் போன்றவையும், வைதிகமதஸ்தர்களென்று சொல்லிக்கொள்கிற ப்ரச்சந்ந பௌத்தர்களாகிற கடல்களைக்

கலக்குவதற்குரிய மத்துத்தடிகள் போன்றவையும், வேதாந்தஸாரப் பொருள்களை எளிதாகக் காட்டும் தீபதண்டங்கள் போன்றவையுமான எம்பெருமானாரது த்ரிதண்டங்கள் அழகியனவாய் விளங்குகின்றன.

997 சாரித்ரோத்தாரதண்டம் சதுரநயபதாலங்க்ரியாகேதுதண்டம்
ஸத்வித்யாதீபதண்டம் ஸகலகலிகதாஸம்ஹ்ருதே: காலதண்டம்
த்ரய்யந்தாலம்பதண்டம் த்ரிபுவநவிஜயச்சத்ரஸௌவர்ணதண்டம்
தத்தே ராமாநுஜார்ய: ப்ரதிகதகசிரோ வஜ்ரதண்டம் த்ரிதண்டம் 3

நன்னடத்தைகளை உத்தாரம் செய்யவல்ல வேத்ரதண்டம் போன்றதும், நல்ல நீதிமார்க்கத்தை அலங்கரிக்கவல்ல த்வஜதண்டம் போன்றதும், ஸத்வித்யை முதலான வேதாந்த வித்யைகளை நன்கு காண்பதற்குரிய தீபதண்டம் போன்றதும், ஸகலவித கலிகோலாஹலங்களையும், ஸம்ஹரிப்பதற்குரிய யமதண்டம் போன்றதும், தளர்ந்த வேதங்களுக்குக் கைப்பிடி கொடுக்கவல்ல தடிபோன்றதும், மூவுலகங்களையும் வென்று தாங்குகின்ற கொற்றக்குடைக்கு ஸ்வர்ணதண்டம் போன்றதும், ப்ரதிவாதிகளின் தலைமேல் விழும் வஜ்ரதண்டம் போன்றதுமான திவ்ய த்ரிதண்டத்தை ஸ்வாமிதாம் திருக்கையில் ஏந்தியுள்ளார்.

998 த்ரய்யா மாங்கல்யஸூத்ரம் த்ரியுகபதயுகாரோஹணாலம்பஸூத்ரம்
ஸத்வித்யாதீபஸூத்ரம் ஸகலகலிகதாஸம்ஹ்ருதே: காலஸூத்ரம்
ப்ரஜ்ஞாஸூத்ரம் புதாநாம் ப்ரசமதநமந: பத்மிநீ நாளஸூத்ரம்
ரக்ஷாஸூத்ரம் முநீநாம் ஜயது யதிபதேர்வக்ஷஸிப்ரஹ்மஸூத்ரம் 4

வேதமாதுக்கு மங்களஸூத்ரம் போன்றதும், ஷாட்குண்யபூர்ணனான பகவானுடைய அடியிணையைச் சென்று கிட்டுவதற்கான அவலம்பஸூத்ரம் போன்றதும், உபநிஷத்தாகிற திருவிளக்கு எரிவதற்கான திரிநூல் போன்றதும், ஸகல கலிகோலாஹலங்களையும் மாய்ப்பதற்கான காலபாசம் போன்றதும், பண்டிதர்களுடைய மேதையை வளர்க்கும் மீமாம்ஸா ஸூத்ரம் போன்றதும், யோகிகளின் உள்ளமாகிற தாமரையோடைக்கு நாளஸூத்ரம் போன்றதுமான யஜ்ஞஸூத்ரமானது ஸ்வாமியின் திருமார்பிலே திகழாநின்றது.

999 பாஷண்டஸாகரபடபாமுகாக்நி:
ஸ்ரீரங்கராஜ சரணாம்புஜ மூலதாஸ:
ஸ்ரீவிஷ்ணுலோகமணிமண்டபமார்ககதாயீ
ராமாநுஜோ விஜயதே யதிராஜராஜ: 5

பாஷண்டர்களாகிற கடலின் கொந்தளிப்பை அடக்கும் விஷயத்தில் படபாக்நி போன்றவரும் ஸ்ரீரங்கநாதனுடைய திருவடித்தாரைகளிலே பரமபக்தியுக்தரும், ஸ்ரீவைகுண்டத்திலுள்ள திருமாமணிமண்டபத்தைச் சேரும் வழியைத் தந்தருள்பவரும், யதிகளுள் மிகச்சிறந்தவருமான எம்பெருமானார் ஸர்வோத்கர்ஷசாலியாய் விளங்காநின்றார்.

திருமலை அனந்தாழ்வான் அருளிச்செய்த ஸ்ரீராமாநுஜ சதுச்லோகீ

1000 அநிசம் பஜதாம் அநந்யபாஜாம் சரணாம்போருஹமாதரேண பும்ஸாம்
விதரந் நியதம் விபூதிமிஷ்டாம் ஜய ராமாநுஜ ரங்கதாம்நி நித்யம் 1

எம்பெருமானாரே! (தமது) திருவடித்தாமரையை அன்போடு எப்போதும் ஆச்ரயித்திருக்கிற அநந்யகதிகளான அடியார்களுக்கு எந்த விபூதி இஷ்டமோ அந்த விபூதியைத் திண்ணமாக அளித்துக் கொண்டு திருவரங்கம் பெரியகோயிலிலே எஞ்ஞான்றும் வாழக்கடவீர்.

புவிநோ விமதாந் த்வதீயஸூக்தி: குலிசீபூய குத்ருஷ்டிபிஸ் ஸமேதாந்
சகலீகுருதே விபச்சிதீட்யா ஜய ராமாநுஜ சேஷசைலச்ருங்கே. 2

எம்பெருமானாரே! வித்வான்கள் போற்றத் தக்க தேவரீரது ஸ்ரீஸூக்தியானது வஜ்ராயுதம் போன்று இப்பூமியிலுள்ள குத்ருஷ்டிகள் உட்பட நமது ப்ரதிபக்ஷிகள் யாவரையும் பொடிபடுத்துகின்றது. (இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த ஸ்ரீஸூக்திகளை அருளிய தேவரீர்) திருவேங்கட மலையுச்சியில் பல்லாண்டு பல்லாண்டாக வாழ்ந்தருள வேணும்.

ச்ருதிஷு ஸ்ம்ருதிஷு ப்ரமாணதத்த்வம் க்ருபயாலோக்ய விசுத்தயா புத்த்யா
அக்ருதாஸ் ஸ்வத ஏவ பாஷ்யரத்நம் ஜய ராமாநுஜ ஹஸ்திதாம்நி நித்யம். 3

எம்பெருமானாரே! நிர்ஹேதுகக்ருபையினாலே ச்ருதிஸ்ம்ருதி ப்ரமாண உண்மையை ஆராய்ந்து மாசற்ற மதியினால் மிகச் சிறந்த ஸ்ரீபாஷ்யத்தை அனுக்ரஹித்தருளிற்று. (இப்படிப்பட்ட தேவரீர்) ஸ்ரீஹஸ்திகிரியிலே நித்யஸ்ரீயாக விளங்கவேணும்.

ஜய மாயிமதாந்தகார பாநோ ஜய பாஹ்யப்ரமுகாடவீ க்ருசாநோ
ஜய ஸம்ச்ரிதஸிந்துசீதபாநோ ஜய ராமாநுஜ யாதவாத்ரி ச்ருங்கே. 4

மயாவாதிகளின் மதங்களாகிற இருளுக்கு இரவி போன்றவரே! பாஹ்யர்கள் முதலானவர்களாகிற காட்டுக்குத் தீ போன்றவரே! அடியார்களாகிற கடலுக்குச் சந்திரன் போன்றவரே! எம்பெருமானாரே! தேவரீர் யாதவாத்ரியில் நித்யஸ்ரீயாக விளங்க வேணும்.

ராமாநுஜ சதுச்லோகீம் ய: படேந்நியதஸ் ஸதா
ப்ராப்நுயாத் பரமாம் பக்திம் யதிராஜபதாப்ஜயோ:

நித்யாநுஸந்தேயமாக நிருமிக்கப்பட்ட இந்த ராமாநுஜசதுச்லோகியை நியமத்துடன் நித்யாநுஸந்தானம் பண்ணுவார்க்கு எம்பெருமானாரது திருவடித் தாமரைகளிலே பக்தி மிகுதியே கைகண்ட பலனாகும்.

ஸ்ரீமதுபயவேதாந்த மஹாவித்வான் காஞ்சீ பிரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசார்ய ஸ்வாமி

எம்பெருமானாரைப் பற்றி எழுதியருளிய ஆயிரம் விஷயங்களின் தொகுப்பு நிறைவு பெற்றது.

பொருளடக்கம்

ஸ்ரீராமானுஜர் வைபவம்	1-84
ஸ்ரீமதே ராமானுஜாய நம:	85-104
பூ மன்னு மாது பொருந்திய	105-127
திருப்பாவை ஜீயர்	128-158
எம்பெருமானாரும் தனியன்களும்	159-169
எம்பெருமானாரும் திருக்கச்சி நம்பியும்	170-181
எம்பெருமானாரும் திருக்கோட்டியூர்நம்பி	182-192
எம்பெருமானாரும் ஆச்ரமஸ்வீகாரமும்	193-197
எம்பெருமானாரும் ஆண்டாளும்(விண்ணீல)	198-207
ஸ்ரீராமானுஜத் திருநாமம் (கண்ணனும் ராமானுஜரும்)	208-228
யதிராஜ ஸப்ததியில் எம்பெருமானார்	229-246
எம்பெருமானாரும் மாமுனிகளும்	247-256
எம்பெருமானாரும் பரகாலனும்	257-264
எம்பெருமானாரும் மார்கழி நீராட்டமும்	265-275
எம்பெருமானாரும் கீதாபாஷ்யமும் (லோக:)	276-285
ராஜஹம்ஸம்-ப்ருங்கராஜம்	286-303
எம்பெருமானாரும் மேகமும்	304-314
எம்பெருமானாரும் விபவாவதாரமும்	315-322
எம்பெருமானாரும் ஆண்டாளும் (ஆழிமழை)	323-343
எம்பெருமானாரும் கீதாபாஷ்யமும் (தஸ்யாஹம்)	344-350
எம்பெருமானாரும் யாதவப்ரகாசனும்	351-368
எம்பெருமானாரும் பகவச்சப்தமும்	369-374
எம்பெருமானாரும் கீதாபாஷ்யமும் (ப்ரீதிபூர்வகம்)	375-385
எம்பெருமானாரும் கீதாபாஷ்யமும் (யத்யதாசரதி)	386-391
எம்பெருமானாரும் (வாஸுதேவஸ்ஸர்வம்)	392-402
பரித்ராணாய ஸாதூநாம்	403-408
மந்மநாபவ - கப்யாஸம் புண்டரீகம்	409-422
விநதவிவிதபூதவ்ராதரக்ஷைக தீக்ஷே	423-430
அடியேனுள்ளான் - உடன்மிசை உயிரென...	431-437
நித்யக்ரந்தம்	438-439
வாத்ஸல்யம்	440-445
ஸ்வாதீநத்ரிவித...	446-450
கிரீடமகுடசூடாதவம்ஸ	451-457
யத்பதாம்போருஹ	458-464
துஷ்யந்தி ச ரமந்தி ச	465-469
உளனெனில் உளன்	470-472
எம்பெருமானார் தர்சனம்	473-487
எம்பெருமானாரைப் பற்றி இரு ச்லோகங்கள்	488-500
விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸாரம்	501-600
ஸ்ரீமத் பகவத்கீதாபாஷ்ய ஸாரம்	601-700
ஸ்ரீபாஷ்ய ஸாரம்	701-800
இராமானுசநூற்றந்தாதி	801-908
ஆர்த்திப்ரபந்தம்	909-968
உபதேச ரத்தினமாலையில் எம்பெருமானார்	969-974
யதிராஜ விம்சதி	975-994
தாடீ பஞ்சகம்	995-999
ஸ்ரீராமானுஜசதுச்லோகீ	1000

ஸ்ரீ உ.வே. மஹாவித்வான் பெருமாள் கோயில்
ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி